600 009

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

20th, 21st, 22nd, 23rd, 25th and 27th March 1963.

Volume XI (Nos. 1 to 6).

TABLE OF CONTENTS.

Wednesday, 20*th March* 1963.

	PAGES
I. Questions and Answers	1–15
II. Adjournment Motion *re* Police firing in Urappanur, Tirumangalam taluk	15–17
III. Calling attention to the condition of pupils admitted in the Government Hospital, Kumbakonam, with symptoms of food poisoning	17
IV. Government Motion—Change in the Order of Business	18
V. Voting on Demands for Grants for 1963-64—*cont.*	
Demand No. X—Administration of Justice Demand No. XI—Jails	18–37
Demand No. XXVII—Public Works—Works Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant Demand No. XLII—Capital Outlay on Public Works	37–82
VI. Papers laid on the Table of the House	82–83

Thursday, 21*st March* 1963.

I. Questions and Answers	85–106 169–184
II. Adjournment Motions *re* Police firing in Urappanur	106–108
III. Calling attention to the hardships due to fixation of Teacher-pupil ratio	108–109
IV. Voting on Demands for Grants for 1963-64—*cont.*	
Demand No. XX—Industries Demand No. XL—Capital Outlay on Industrial Development.	109–167
V. Papers laid on the Table of the House	167–168

PAGES

Friday, 22nd March 1963.

I. Questions and Answers 185–209

II. Calling attention to the fire accident in Sadayanpalayam, Salem district 209–210

III. Voting on Demands for grants for 1963-64—*cont.*

Demand No. XXVI—Irrigation .. ..
Demand No. XLI—Capital Outlay on Irrigation .. .. } 210–293

IV. Papers laid on the Table of the House 293

Saturday, 23rd March 1963.

I. Questions and Answers 297–322
414–417

II. Voting on Demands for Grants for 1963-64—*cont.*

Demand No. XIX—Co-operation .. ..
Demand No. XVII—Fisheries .. ..
Demand No. XXXV—Forest Department .. .. ..
Demand No. XLIV—Capital Outlay on Forests .. .. .. } 322–413

III. Papers laid on the Table of the House 413

Monday, 25th March 1963.

I. Questions and Answers 419–442
507

II. Calling attention to the hardship caused by the tannery at Chelanaickenpatti 442–443

III. Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1962-63 443–445

IV. Announcement—Final Supplementary Statement of Expenditure for 1962-63 445

V. Voting on Demands for Grants for 1963-64—*cont.*

Demand No. I—Land Revenue .. ..
Demand No. IX—District Administration and Miscellaneous. } 445–506

VI. Papers laid on the Table of the House 506

Wednesday, 27th March 1963.

I. Questions and Answers 509–529
592–594

II. Calling attention to the non-availability of silver lace plated with gold to the silk weavers 530

III. Government Motion—Election to the Committee of Privileges. 530–531

IV. Announcement—The Madras General Sales Tax Bill, 1963 .. 531

V. Government Bill—The Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 531

Wednesday, the 27th March 1963—cont.

VI. General Discussion on the Fnial Supplementary Statement of Expenditure for 1962-63 531–539

VII. Voting on Demands for Grants for 1962-63—*cont.*

Dema nd No. XXX—Road Transport Schemes .. .. ..
Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes 539–591

VIII. Papers laid on the Table of the House 591

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under those very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading 'Chair".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A. St.	Calling Attention (Statement.)
Consid.	Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee; (ii) Amendment to refer to Select/Joint Select Committee; (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee etc.
Consid. Cl.	Consideration of clauses of a Bill
D.E.E.	Demands for Excess Expenditure
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	Demands for Supplementary Grants.
G.A.	Governor's Address.
G D.	General Discussion.
H.A.H. Dis./H.H.D.	Half-hour discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R/Res.	Resolution.
St.	Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 20th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

காட்டுவளம் (திருத்துறைப்பூண்டி வட்டம்)

*298 கேள்வி.—**திரு. சி. எம். அம்பிகாபதி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலூகா உதயமார்த்தாண்டபுரம் கிராமத்தில் காட்டிலாகாவிற்குச் சொந்தமான நிலம் எத்தனை ஏக்கர் உள்ளது ?

(இ) என்னென்ன மரங்கள் அந்தக் காடுகளில் வளர்க்கப்படுகின்றன ?

(உ) காட்டிலாகாவிற்குச் சொந்தமான இடங்களில் தனி நபர்கள் எத்தனை பேர் தென்னைச் சாகுபடி செய்து வருகிறார்கள் ?

(எ) தென்னைக்குப் பதிலாக வேறு சவுக்கு போன்ற மரம் பயிரிட உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) 88·95 ஏகரா நிலம் காட்டு இலாகாவிற்குச் சொந்தமாக உள்ளது.

(இ) 72.50 ஏகரா நிலத்தில் காட்டுவளத் துறையினர் படிப்படியாக சவுக்கு மரங்களை வைத்து பயிரிட்டு வருகின்றனர். மீதி நிலத்தில் ஆக்ரமிப்பு நடந்துள்ளது.

(உ) ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலங்களில 8 பேர் தென்னைச் சாகுபடி செய்துள்ளனர்.

(எ) திட்டமிட்டுள்ளபடி இப்பகுதியில் சவுக்கு மரங்களை நடவேண்டும். ஆக்கிரமிப்பை அகற்றிய பின்னர், இந்த நிலங்களில் சவுக்கு மரங்களை நடுவது குறித்து முடிவு செய்யப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தென்னை சாகுபடி செய்தவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் நிலம் இல்லாதவர்களாக இருப்பதால், அவர்கள் தொடர்ந்து அந்த தென்னை மரங்களை அனுபோகம் செய்ய மரப் பட்டா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : எத்தனை வருஷங்களுக்கு முன்பாக அவர்கள் தென்னை சாகுபடி செய்து[illegible] டிருந்தாலும், அது காட்டு இலாகாவுக்குச் சேர்ந்த இடமாக இரு[illegible] கனம் அங்கத்தினர் சொல்லுகிற விஷயத்தை யோசித்துச் செய்ய[illegible] யிருப்பதால் சர்க்கார் ஆலோசனை செய்து பிறகு முடிவு செய்யலாம்.

திரு. க. ர. நல்லசிவம் : சவுக்கு சாகுபடி செய்வதற்கு தகுதியுள்ள நிலம் ஏறத்தாழ தென்னை சாகுபடிக்கும் லாயக்காகும் என்பது அனுபவம். ஆகவே, சவுக்கு சாகுபடி செய்வதற்குப் பதிலாக, சர்க்கார் ஃபாரெஸ்டு இலாகா மூலம் தென்னை சாகுபடி செய்தால் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சவுக்குக்கு அநேகமாகத் தண்ணீர் வேண்டியதில்லை. தென்னைக்குத் தண்ணீர் வேண்டும். நிலம் ஒரே மாதிரியாக இருந்தாலுங்கூட, தண்ணீர் இருக்கிற இடத்தைப் பார்த்துத்தான் தென்னங் கன்றுகளை நடமுடியும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தென்னை சாகுபடி செய்து 10 வருஷங் களுக்கு மேல் ஆகிவிட்டாலும், அது ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடம் என்ற காரணத்தினால் அந்தத் தென்னை மரங்களை அந்த இடத்தை விட்டு வெளி யேற்றப்படவேண்டிய நிலை ஏற்பட்டாலும், பயிரிட்ட பகுதிகளிலுள்ள தென்னை மரங்களை அவர்களுக்கு லீஸுக்குக் கொடுப்பது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நல்ல யோசனை. அதை ஏற்றுக்கொள்ளலாமா என்பது பற்றி பரிசீலனை செய்து பார்க்கலாம்.

திரு. கி. இரா. சம்பந்தம் : காட்டு இலாகாவிற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இடங்களில் பலன் தரக்கூடிய தென்னை மரங்களை அவர் கள் பயிரிட்டிருப்பதால், அவைகளை அவர்கள் தொடர்ந்து அனுபவித்து வரக்கூடிய நிலைமையிலே, அவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்க அரசாங் கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அவர்கள் சர்க்காருக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வளர்த்த மரங்களை சர்க்காருக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, பிறகு அவர்கள் சொல்லு கிற யோசனையைப் பற்றி பரிசீலனை செய்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும்.

திரு. எஸ். மாதவன் : விவசாயிகள் ஃபாரெஸ்டு இலாகாவுக்குச் சொந்தமான இடங்களில் பயிரிட்டதால், அவர்களை வெளியேற்றுவதை நிறுத்தி, விவசாயிகள் அந்த இடங்களில் புன்செய் தானியங்களைப் பயிரிடுவதற்கு அனுமதி தர அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் அங்கத் தினர் திரு மாதவன் அவர்களுக்குச் சொந்தமான நிலமாயிருந்தால் அவர் விட்டுவிடுவார் என்று எண்ணுகிறேன். சர்க்காருக்குச் சொந்தமான நிலமாக இருப்பதால் ஆக்கிரமிப்பை வெளியேற்றுவது கடமை.

திரு. கி. இரா. சம்பந்தம் : சவுக்கு மரங்களைவிட தேக்கு மரங்கள் தஞ்சை ஜில்லாவில் சில இடங்களில் வளர்க்கப்பட்டு, நன்றாக வளர்கின்றன. ஆகவே, தேக்கு மரங்கள் வளர்ப்பது பற்றி சர்க்கார் கவனிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தேக்கு மரங்களை கால்வாய் ஓரங்களிலும், ஆற்றுப் படுகைகளிலும் வைத்துக் கொண்டிருக்கிறோம். அங்கெல்லாம் அவை நன்றாக வளர்ந்துகொண் டிருக்கின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : திருத்துறைப்பூண்டியில் பல பகுதிகளில் முந்திரித் தோட்டங்கள் வைப்பதற்கு வசதி இருக்கிறது. ஆகவே, முந்திரிக் காடுகள் வைப்பது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தஞ்சாவூர் ஜில்லாவில் முந்திரி வைக்கவேண்டிய சில இடங்களில் முந்திரி வைத்துக் கொண்டிருக்கிறோம். தென்னை மரம் வைப்பது, அதனால் சர்க்காருக்குச் சொந்தமான இடங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவது ஆகிய விஷயங்களைப்பற்றிதான் இப்பொழுது கேள்வி போடப்பட்டது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சர்க்காரில் சவுக்குப் பயிர் செய்வதற்கு அதிகம் செலவாகிறது. கண்காணிப்பு கஷ்டமாக இருக்கிறது ஆகவே, தனிப்பட்டவர்களிடத்தில் சவுக்குப் பயிரிடுவதை ஒப்படைத்தால், நல்லவிதமாக அவர்கள் பயிர் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் அல்லவா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சர்க்கார் சவுக்கு வைப்பதற்கு அதிகச் செலவு ஆகிறது என்று சொல்லுவதற்கில்லை. ஒரு ஏகராவுக்கு ரூ. 90 லிருந்து ரூ. 100 வரை செலவு ஆகிக்கொண்டிருக்கிறது. ஏகராவுக்கு 3,000 முதல் 5,000 நாற்றுக்கள் வரை நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

Bus-stand (Tiruvannamalai)

*299 *Q.*—Sri A. Arumugam:
Sri C. Kothandarama Bagavathar: } Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state whether there is a proposal to construct a common bus-stand for Tiruvannamalai Municipal Town?

The Hon. Sri S. M. A. Majeed : A proposal to construct a central bus stand is under the consideration of the Tiruvannamalai Municipal Council.

ஒரு மத்திய பஸ் நிலையம் அமைக்கும் திட்டம் திருவண்ணாமலை நகராட்சியின் பரிசீலனையிலே இருந்து வருகிறது.

திரு. ஏ. ஆறுமுகம் : எப்பொழுது வேலை ஆரம்பமாகும் ரூபாயில், எந்த இடத்தில் நடைபெற இருக்கிறது, என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. சே. மா. அ. மஜீத் : எவ்வளவு ரூபாயில் என்பது பற்றி என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை. ஏற்கனவே உள்ள வண்டி நிலையத்தில் பஸ் நிலையம் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டு, அதற்கு R.T.O. அனுமதி வழங்கினார். இதற்கிடையில் அந்த இடத்தை மாற்ற வேண்டும் என்று பஸ் சொந்தக்காரர்கள் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்த தால், அந்த வேலை அப்படியே நின்றுவிட்டது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : பஸ் போக்குவரத்து அதிகமாக இருப்பதின் காரணத்தினால், அநேகமாக பஞ்சாயத்துகளிலெல்லாம் பஸ் நிலையம் கட்டவேண்டியிருக்கிறது. அவ்வாறு கட்டுவதற்கு எஸ்டிமேட் தயார் செய்வது, ஆர். டி. ஓ.-விடமிருந்து அனுமதி வாங்குவது, இது போன்ற காரணங்களினால் தாமதம் ஏற்பட்டு, பஞ்சாயத்து போர்டுக்கு வருவாய் குறைந்து விடுகிறது. ஆகவே, இது சம்பந்தமாக டைப் டிஸைன் பிளான் கொடுத்து எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் அரசாங்கம் உதவுமா ?

(இ) இதில் ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 12,054 (1—4—61-லிருந்து 31—3—62 வரை).

(இ) 961 பேர்கள் ஷெடியூல் ஜாதியார் கூட்டத்தார்.

திரு. எஸ். மாதவன் : இதில் எத்தனை பேர்களுக்கு வேலை வாங்கித் தந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த எண்ணிக்கையை நான் இப்பொழுது கொடுத்தேன், 961 பேர்கள் என்று சொன்னேன்.

* 301 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் வேலைக்காக 1962-63-ம் ஆண்டில் வேலை தேடும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(இ) மாவட்ட வாரியாக எத்தனை நபர்களுக்கு வேலை கொடுக்கப் பட்டுள்ளன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 227,401 (1—4—62-லிருந்து 31—1—63 வரை).

(இ) 1—4—62-லிருந்து 31—1—63 வரை மாவட்ட வாரியாக வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. முன்பு கனம் அங்கத்தினர் திரு. எஸ். மாதவன் கேட்ட கேள்விக்கு இப்பொழுதுதான் விடை அளிக்கப்படுகிறது.

கோயம்புத்தூர்	2,861
தென் ஆற்காடு	3,530
கன்னியாகுமரி	1,823
சென்னை	6,218
மதுரை	3,444
நீலகிரி	2,074
இராமநாதபுரம்	1,822
செங்கற்பட்டு	2,735
சேலம்	3,941
தஞ்சாவூர்	2,534
திருச்சிராப்பள்ளி	2,923
திருநெல்வேலி	2,289
வட ஆற்காடு	2,831
மொத்தம்	39,025

திரு. பி. முருகையன் : அப்படி பதிவு செய்துகொண்ட ஹரிஜனங்களில் எத்தனை பேர்களுக்கு இதுவரையில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனியாகக் கணக்கு இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : தாங்களாகவே வேலை தேடிக்கொண்டவர்களுக்கு நம்பர் கொடுத்து எண்ணிக்கையும் இதில் அடங்கி யிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் வேலை சிருஷ்டி செய்து கொடுத்தோம் என்று பெருமை பேசிக்கொள்ளவில்லை. எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்துகொண்டவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்தது என்பது பற்றித்தான் சொன்னேன். அப்படிச் சொன்னால் கனம் அங்கத்தினர் திருப்தி அடைவார்கள் என்றால், நான அப்படிச் சொல்லுகிறேன்.

புதிய பஸ் ரூட்கள் (அறந்தாங்கி)

* 302 கேள்வி.—**திரு. ஆ. துரை அரசன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி தாலூகாவில் புதிய பஸ் ரூட்களை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

திரு. ஆ. துரை அரசன் : அறந்தாங்கி வட்டத்திலே புதிய பஸ் ரூட்டுகளை எந்தெந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்துள்ளன.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாக வந்த கோரிக்கைகள் டெவலப்மெண்ட் விங்கினால் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனை செய்ததன் விளைவாக கீழ்க்கண்ட ரூட்கள் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டியின் பரிசீலனையில் இருக்கின்றன.

1. Thanjavur to Kottaipattinam (via) Aranthangi.

2. Thanjavur to Aranthangi (Express Bus Service).

3. Aranthangi to Kumbakonam (via) Pattukkottai, Madukkur, Mannargudi and Needamangalam.

4. Mimisal to Kumbakonam (via) Aranthangi, Kulavoipatti, Alangudi, Adanakottai, Gandharvakottai, Thirukkalar, Thanjavur, Ayyampet and Papanasam.

சென்னை நாகை எக்ஸ்பிரஸ் பஸ்

* 303 கேள்வி.—**திரு. பி. ஜயராஜ் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து சீர்காழி, மாயூரம், சிதம்பரம், சன்னநல்லூர், நாகூர், வழியாக் நாகைப்பட்டிணத்திற்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடுவதற்கு அரசாங்கத்திற்கு நோக்கம் உண்டா ?

(இ) அப்படியானால், எப்போது விடப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) சென்னையிலிருந்து நாகப்பட்டிணத்துக்கு செங்கற்பட்டு, திண்டிவனம், புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், சீர்காழி, மாயூரம், தரங்கம்பாடி, காரைக்கால், நாகூர் வழியாக சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து துறை எக்ஸ்பிரஸ் பஸ் விட உத்தேசித்துள்ளது. இதை அனுசரித்து, சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறை டைரக்டர் மோட்டார் வண்டிச் சட்டம், 1939-ன் (Chapter IV-A) அத்தியாயத்தின்கீழ் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த மார்க்கம் புதுச்சேரி மாநிலம் வழியாகச் செல்வதால், இந்திய அரசினரின் சம்மதத்தைக் கேட்டுள்ளோம். அவர்கள் இசைவு தந்து, டைரக்டர் வெளியிட்டுள்ள இத் திட்டம் ஏற்கப்பட்டால், சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறையினர் இந்த மார்க்கத்தில் பஸ் விடுவர்.

திரு. ஆ. துரை அரசன் : அதிராமபட்டினத்திலிருந்து அறந்தாங்கி வழியாக மதுரைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கோரிக்கைகள் நிறைய வந்திருக்கின்றன. அதில் இதுவும் ஒன்று என்பது தெரியாது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்பொழுது போகின்ற பஸ் தஞ்சை ஜில்லாவின் கீழ் பகுதியில் போவதால், கேள்வியில் குறிப்பிட்ட படி மாயூரம், நாகூர் வழியாகச் சென்றால், சௌகரியமாக இருக்கும். ஆகவே அவ்வாறு செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது புதிதாகப் போடப் பட்டிருக்கிற பஸ் மாயூரம், நாங்கம்பாடி, காரைக்கால், நாகூர் வழியாகத் தான் போகிறது.

திரு. ஆ. கு. சுப்பைய்யா : பட்டுக்கோட்டையிலிருந்து திருத்துறைப் பூண்டி, திருவாரூர், நன்னிலம், மாயூரம், வழியாக சென்னைக்கு பஸ் விடுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது அது ஆலோசனையில் இல்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : மாயூரம், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இந்த மார்க்கமாக கவர்ன்மெண்ட் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படி யிருந்தால், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பல கோரிக்கைகள் வந்திருக் கின்றன. என்னென்ன கோரிக்கைகள் வந்திருக்கின்றன என்பது ஞாபகம் இல்லை. ஆனால் அந்த விதமான முடிவு இப்பொழுது இல்லை.

திரு. ஆ. துரை அரசன் : சென்னையிலிருந்து தினம் புறப்படுகிற பஸ்கள் திருச்சி, தஞ்சையோடு நின்றுவிடுகின்றன. அதிலே ஏதாவது ஒரு பஸ்ஸை புதுக்கோட்டை வரை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ் போக்குவரத்து அமைப்பதில் பல விதிகளை அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. முக்கியமாக, தொழி லாளர்களுக்கு 8 மணி நேரம் வேலை, நடுவிலே ஓய்வு எல்லாவற்றையும் பார்த்துச் செய்ய வேண்டும். அதையெல்லாம் பார்த்து, சென்னையிலிருந்து திருச்சி வரை ஒரு கட்டம், திருச்சியிலிருந்து மற்ற இடங்களுக்கு வேறு பஸ்கள் விடுவது என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. சா. ராமசாமி : தஞ்சையிலிருந்து சென்னைக்கு வரும் பஸ்கள் குடந்தை, அணைக்கரை, விருத்தாசலம் வழியாகச் செல்லுகின்றன. ஜெயங் கொண்டம் வழியாக வந்தால் சௌகரியமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜெயங்கொண்டம் மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆனால் மற்ற பகுதியிலுள்ள மக்களுக்கு வசதிக் குறைவாக இருக்கும். புதிதாக பஸ்கள் விடவேண்டுமா என்று யோசனை செய்யலாமே ஒழிய, ஓடிக்கொண்டிருக்கிற மார்க்கத்தை மாற்றுவது சரி யல்ல.

திரு. டி. கார்ச்சா கவுடர் : உதகையிலிருந்து மதுரைக்கு ஒரு எக்ஸ் பிரஸ் பஸ் விட்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றி. உதகையி லிருந்து சேலத்திற்கும், உதகையிலிருந்து திருச்சிக்கும் எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடவேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா ? அப்படியானால் அவற்றின் நிலைமை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு மூன்று கோரிக்கை களில் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்தால் மற்ற கோரிக்கைகளும் பூர்த்தியாகும்.

திரு. கோ. சி. மணி : தஞ்சையிலிருந்து புறப்பட்டு பாண்டி வழியாக சென்னைக்கு மூன்று பஸ்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதிலே ஒரு பஸ்ஸை மாயூரம், சீர்காழி வழியாக விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது நாகையிலிருந்து சென்னைக்கு புதிதாக விடப்படுகிற பஸ், கனம் அங்கத்தினர் சொல்லுகிற மார்க்கமாகத்தான் செல்லும்.

Lingampatti Panchayat (bifurcation)

* 304 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Chief Minister be pleased to state when the proposal for the constitution of two panchayats of Lingampatti and Kulasekarapuram in the place of existing Lingampatti Panchayat, will be given effect to?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The proposal though approved could not be given effect to due to the enactment of the Madras Local Authorities (Extension of term of office of members) Act, 1962 which prohibits elections during the period of the emergency.

திரு. எஸ். மாதவன் : இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்ற பஞ்சா யத்துக்கள் எல்லாம் ரெவின்யூ கிராமம் என்ற அடிப்படையில் அமைக்கப்பட் டிருக்கின்றன. இதை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? எப்பொழுது செய்யப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிய பொதுத் தேர்தல்கள் வருவ வதற்கு முன்பு இவை எல்லாம் பரிசீலனை செய்யப்படும்.

சேலம் பெங்களூர் ரயில் பாதை (நிலம் ஒப்படை செய்தல்)

* **கேள்வி 305.—திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சேலம்-பெங்களூர் வரை போடப்பட இருக்கும் ரயில் பாதையில் ஓசூரிலிருந்து தர்மபுரி வரையில் பழைய ரயில் பாதை எடுக்கப்பட்டபின் மேற்படி நிலம் இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதை ரயில்வேக்கு மாற்றம் handover செய்ய இவ்வரசாங்கம் உத்தியோகஸ்தர்களை நியமித் துள்ளதா ?

(இ) அப்படியாயின், எப்போது மேற்படி வேலை முடியும் ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The work is expected to be completed by the end of May 1963.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தனிப்பட்டவர்கள் ஆக்கிரமிப்பு செய் திருக்கிற காரணத்தால், இந்த வேலை தாமதப்படுகிறதா ? அப்படி தாமதப்படுவதினாலே ரெயில் பாதை அமைக்கும் வேலையில் தாமதம் ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னிடத்தில் இருக்கிற விவரப்படி விசேஷமான தாமதம் ஏற்படவில்லை. இந்த வேலையை, நான் குறிப் பிட்டதுபோல, 1963-ம் ஆண்டு இறுதிக்குள் முடித்து விடலாமென்று அதிகாரிகள் நம்புகிறார்கள்.

திருமதி அ. கிருஷ்ணவேணி : மதுரை ஜில்லாவில் பெரும் பகுதியான மக்களுக்கும், வியாபாரம் பெருகுவதற்கும் மிகவும் வசதியாக இருக்கக் கூடிய, ஏற்கெனவே சர்க்கார் கவனத்தில் இருக்கிற, திண்டுக்கல்-கூடலூர் ரெயில் பாதை போடப்படுமா ? எப்பொழுது அந்த வேலை துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் இருக்கக்கூடிய நிலைமையை விவரமாகச் சொல்லுகிறேன்.

Joint Regional Transport Officer

(Tiruchirappalli and Madurai)

* 306 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to appoint Joint Regional Transport Officer in the heavy districts of Tiruchirappalli and Madurai during this year 1963?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Primary Health Centre (Thirupathur Panchayat Union)

* 307 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a Primary Health Centre in Tirupathur Panchayat Union, Ramanathapuram district; and

(*b*) if so, the amount allotted for the scheme?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (*a*) இல்லை.

(*b*) எழாது.

திரு. எஸ். மாதவன் : இந்த பிரைமரி ஹெல்த் சென்டரை அங்கே அமைப்பது பற்றி ஏற்கெனவே ஒரு மனு வந்திருக்கிறது என்றும், அது பரிசீலனையில் இருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீண்டும் அதைப் பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியனிலிருந்து என்ன மனு வந்திருக்கிறது ?

திரு. எஸ். மாதவன் : திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியனிலிருந்து பிரைமரி ஹெல்த் சென்டர் வைக்க வேண்டுமென்று மனு வந்திருப்பதாகவும், அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை மீண்டும் பரிசீலித்து துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் 18 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் சாங்ஷன் ஆகி விட்டது. 1962 செப்டம்பரிலே 3 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் சாங்ஷன் பண்ணியிருக்கிறோம். திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில், தற்பொழுது இருக்கிற அவசர நிலைமையை ஒட்டி, அதை "டெஃபர்" பண்ணியிருக்கிறோம்.

திரு. மு. பொ. வடிவேல் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு பிரதம சுகாதார நிலையம் அமைக்கப்படவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் தற்சமயம் அப்படி செயல் படவில்லை என்று நான் கருதுகிறேன். அதற்கு தேச நெருக்கடி நிலைமை காரணமா ? அவ்வாறு செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சுகாதார மானியம் வந்த பொழுது நான் சொல்லியிருக்கிறேன். 192 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் சாங்ஷன் ஆகி, 133 ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் நினைக்கிறபடி, தற்போதுள்ள அவசர நிலைமையை ஒட்டித்தான் "டெஃபர்" பண்ணியிருக்கிறோம்.

நாடகம், வில்லுப்பாட்டு (விளம்பரத் துறையில் செலவும்)

* 308 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடி நிலையை முன்னிட்டு விளம்பர இலாகாவினால் நாடகம், வில்லுப்பாட்டு ஆகியவற்றுக்குச் செய்யப்படும் செலவைக் குறைக்க உத்தேசம் உண்டா ?

(இ) ஒரு நாடகத்திற்கும், ஒரு வில்லுப் பாட்டுக்கும் செலவழிக்கப்படும் தொகை எவ்வளவு ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை, ஐயா.

(இ) பொதுவாக நாடகம் ஒன்றுக்கு ரூ. 250-ம், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு ரூ. 50-ம் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : சர்க்கார் செலவில் நடைபெறுகின்ற நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள் முதலியவைகளில் காங்கிரஸ் கட்சியினுடைய பிரசாரமும், மாற்றுக் கட்சிக்காரர்களை இழித்தும் பழித்தும் செய்யப்படுகிற பிரசாரமாக இருக்கிறதே, அதைப் பற்றிய புகார்கள் இந்த சர்க்காருக்கு வந்ததா ? அப்படி வந்தது என்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : இது சம்பந்தமாக எந்த விதமான புகாரும் வரவில்லை. இப்பொழுது காங்கிரஸ் கட்சி ஆட்சிதான் நடைபெறுகிறது. அரசாங்கம் கொண்டு வருகிற திட்டங்களை எடுத்துச் சொல்வதற்கும், அவைகளை விளக்குவதற்கும்தான் நாடகங்களில் நடித்துக் காட்டப்படுகின்றன.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், நெருக்கடியை எல்லோரும் உணர வேண்டும் என்பதைப்பற்றி சேலம் சிற்றுளி சுப்பிரமணியம் குழுவினர் "பொய்த் தந்தி" என்ற ஒரு நாடகத்தை விளம்பரப்படுத்த வேண்டும் என்று அதன் பிரதி அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டு, அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : இது சம்பந்தமாக தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்று சொன்னார் ; அதை யாரும் மறுக்கவில்லை. காங்கிரஸ் கட்சிப் பிரசாரம் நடைபெறக்கூடாது என்று சொல்லவில்லை. சர்க்கார் செய்கிற பிரசாரம் காங்கிரஸ் கட்சி பிரசாரமாக இருக்கக் கூடாது என்பதைப்பற்றிக் கவனிப்பார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்திற்கு என்று தனியாக குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இந்த விளம்பர இலாகா அல்ல. அரசாங்கம் திட்டங்களைத் தயாரிக்கிறார்கள். அவைகளைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்குத்தான் இது ஏற்பட்டிருக்கிறது. சர்க்காருடைய திட்டங்களை விளம்பரப்படுத்துகிற இலாகாதான் இது.

திரு. கோ. சி. மணி : இந்தக் குழுக்களில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் நியமிக்கப்பட்ட வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. கோ. பூவராகன் : அப்படி ஒன்றும் நியதி இல்லை. இது சம்பந்தமாக சில சட்டதிட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அனுசரித்து நடிக்கக் கூடியவர்கள்தான் அந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அதற்கு என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டதிட்டங்களுக்கு யார் உட்பட்டு நடக்கிறார்களோ அவர்கள் அந்தக் குழுவின் உறுப்பினராக இருக்கலாம். இதை அனுசரித்துத்தான் அதில் சேர்க்கப்படுகிறது.

திரு. மு. பொ. வடிவேலு : அரசாங்கத்தின் விளம்பரத் துறை பத்திரிகையின் மூலமாக விளம்பரம் செய்யப்படுகிறது. அப்படி இருக்கும் போது நாடகங்கள் மூலமாகவும், வில்லுப்பாட்டுக்கள் மூலமாகவும் மக்களிடத்தில் அரசாங்கத்தின் கருத்துக்களை பரப்புகிறதே, அப்படிப் பரப்புவதன் காரணம் என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும். சாதாரணமாக கிராமங்களில் வாழ்கிற மக்கள் பத்திரிகைகளைப் படிப்பது இல்லை. பத்திரிகைகளைப் படித்து விஷயங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் அவர்கள் இல்லை. கிராம மக்களுக்கு இது போன்ற திட்டங்களை விளம்பரப்படுத்துவதற்குத்தான் இந்த முறையைக் கையாண்டு வருகிறார்கள். மக்களிடத்தில் அரசாங்கத்தினுடைய திட்டங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதாக இருப்பதால் இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பாக எத்தனை வில்லுப்பாட்டுக் குழுக்களும், நாடகக் குழுக்களும் பணியாற்றி வருகின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : நாடகக் குழுக்கள் ஆறு இருக்கின்றன. வில்லுப்பாட்டுக் குழுக்களின் எண்ணிக்கை அடங்கிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. மு. பொ. வடிவேலு : இந்த நாடகக் குழுக்கள் சில சமயங்களில் கர்நாடக பாட்டுக்களைப் பாடும் போது பாடும் முறைகளை கேலியாகவும் கிண்டலாகவும் பாடுவதாக இருக்கிறது. அப்படிப் பாடுவதை மாற்றி அமைக்க முடியுமா ? அவர்களுக்கு சம்பளம் சரிவர கொடுக்கப்படவில்லை என்றும், மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறதே, அப்படிப்பட்ட புகார் ஏதாவது அரசாங்கத்துக்கு வந்திருக்கிறதா ?

MR. SPEAKER : Are they permanent employees of Government?

கனம் திரு. கோ. பூவராகன் : அப்படிப்பட்ட புகார் வரவில்லை. புகார் வந்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும். மாற்றி அமைக்கும் படியாக உத்தேசம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நாடகக் குழுக்களுக்கும், வில்லுப்பாட்டுக் குழுக்களுக்கும் ஆண்டொன்றுக்கு மொத்தம் எவ்வளவு செலவாகிறது என்பதைச் சொல்ல இயலுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : 1962–63-ல் 53 ஆயிரம் ரூபாய், 1963–64-க்கு 55 ஆயிரம் ரூபாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த நாடகக் குழு, வில்லுப்பாட்டுக் குழுக்கள் எல்லாம் அரசாங்கத்தினுடைய திட்டங்களைத்தான் பிரசாரம் செய்யவேண்டும் என்று இருக்கிறதா அல்லது தற்போது ஏற்பட்டிருக்கிற சீன ஆக்கிரமிப்பின் காரணமாக மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் பிரசாரம் செய்யப்படுகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஏற்கனவே இது திட்டம் சம்பந்தமாக இருந்தது. இப்பொழுது இதையும் சேர்த்திருக்கிறார்கள். இப்பொழுது தேசிய நெருக்கடி ஏற்பட்டிருப்பதால், சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருப்பதால் மக்கள் தேசிய நெருக்கடியை எப்படிச் சமாளிப்பது, எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி உதவி செய்ய வேண்டும், சேமிப்புப் பத்திரங்களை எப்படி வாங்குவது, ஆகியவற்றை யெல்லாம் சேர்த்திருக்கிறார்கள்.

திரு. எஸ். மாதவன் : கனம் தலைவர் அவர்களே, வில்லுப்பாட்டு நாடகக் குழுக்களில் மாணவ மாணவிகள் பங்கு கொள்ளக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அதில் கலந்து கொள்ளக்கூடாது என்று அதைத் தடுக்க அரசாங்கம் முயலுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : தடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை. கலந்து கொண்டதாக அரசாங்கத்திற்கு தகவல் ஒன்றும் வரவில்லை.

திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் தலைவர் அவர்களே, வானொலி நிலையங்களில் மாணவ மாணவிகள் பல நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வதுபோன்று அரசாங்கச் செய்தி துறையிலும் மாணவ மாணவிகள் பங்கெடுத்துக் கொள்வதற்கு வழி இருக்கிறதா ? பல அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : பொதுவாக எல்லா நிகழ்ச்சிகளிலும் இருக்க வேண்டும் என்பதல்ல. மற்ற நேரங்களில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆனால் அது படிப்புக்கு இடையூறாக இருக்கக் கூடாது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் விளம்பர இலாகாவில் நிறைய பணம் மோசடி செய்யப்படுகிறது என்ற புகார் கனம் அமைச்சருக்கு வந்துள்ளதா ? அப்படி வந்திருப்பின் அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : இது சம்பந்தமான தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. சா. கணேசன் : பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணாக்கர் மாணாக்கியர் (சிரிப்பு). இது சரியான தமிழ் என்றுதான் நான் கருதுகிறேன். அதனால் சிரிக்க வேண்டிய அவசியம் இல்லை.....

கனம் சபாநாயகர் : கேள்வியைக் கேளுங்கள். பதில் சொல்லிக்கொண்டிருந்தால் எப்படிக் கேள்வி கேட்பது ?

திரு. சா. கணேசன் : அவர்கள் பள்ளிகளில், கல்லூரிகளில் படிக்கிற காலத்தில் பிற இடங்களுக்கு அதாவது இம்மாதிரி நாடகம் முதலியவைகளுக்குச் செல்லக் கூடாது என்று கல்லூரிகளில் திட்டம் செய்யப்படுமா? அப்படி அமைத்து அதை அமுலாக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : இது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் கனம் கல்வி அமைச்சருக்கு எழுதி அனுப்பினால் அவர் பதில் சொல்லுவார்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : இந்தத் திட்டத்தின்படி நாடகக் குழுக்கள் இருப்பது போன்று இந்த மன்றத்திலுள்ள எம். எல். ஏ.க்கள் நாடகங்களை எழுதி அவற்றை நடிக்க முன் வந்தால் அதை அரசாங்கம் அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் அங்கத்தினர் நாடகத்தை எழுதி அதை அரசாங்கத்திற்கு அனுப்பி அது அதற்குள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருந்தால் அதற்கு அனுமதி கொடுக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : சினிமாக்கள் மூலமாக பிரசாரம் செய்ய அரசு முன்வருமா ? எதிர்க் கட்சியும் அதற்கு ஒத்துழைக்க முன் வந்தால் அதைப் பயன்படுத்திக் கொண்டு பிரசாரம் செய்ய அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : முன்பே தெரிவித்தேன். பல நடவடிக்கைகள் எடுக்கும் போது சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருந்தால் அவைகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்படும். சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அது யாரால் கொண்டு வரப்பட்டாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : நாமக்கல்லில் நடத்தப்படுகிற கருப்பையாவின் "முன்னேற்றப் பாதை" என்ற நாடகத்தில் எதிர்க்கட்சியை இழித்தும் பழித்தும் பேசுவதாக இருக்கிறது. இப்படி பல விவரங்கள் அதில் இருக்கின்றன. அதனால் அந்த நாடகத்தைப் பட்டியலிலிருந்து எடுத்து விட இந்தச் சர்க்கார் முயற்சிக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இதைப்பற்றி ஏற்கனவே நான் பதில் சொல்லி இருக்கிறேன். சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, மக்களுக்குத் திட்டங்களை நல்ல முறையில் ஊக்குவிக்கக் கூடியதாக இருந்தால் தான் அதற்கு இடம் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் தீட்டக்கூடிய திட்டங்களை மக்களை ஊக்குவிக்கக் கூடியதாக இருந்தால், அதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் தலைவர் அவர்களே, நாடகக் குழுக்களுக்குத் தரப்படுகிற ஊதியம் அந்தந்த இடத்திலேயே கொடுக்கப்படுகிறதா ? அல்லது முடிந்த பிறகு தான் கொடுக்கப்படுகிறதா ? கொட்டகை, விளக்குகள் முதலியவைகளுக்குக் கொடுக்கப்படுகிறதா ? ஆகவே, எந்தமுறையில் செலவு செய்யப்படுகிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : நாடகத்திற்கு 250 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மற்றவை அந்தந்த இடத்திற்குத் தகுந்தபடி மாறுபட்டிருக்கிறது.

திரு. எஸ். மாதவன் : அமைச்சர் அவர்கள், "இந்த நாடகத்தில் மாணவர்கள் பங்குபெறுவதைத் தடுக்க உத்தேசம் இல்லை" என்று சொன்னார்கள். டான்ஸ் ஆடுவதையாவது அரசாங்கம் தடுக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : விளம்பர இலாகாவைப் பொறுத்தவரையில் டான்ஸ் நிகழ்ச்சிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது ஒன்றுமில்லை. மேலும் விவரம் வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தனிக் கேள்வி போடலாம்.

திரு. எஸ். மணி : பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலிருக்கும் சமுதாய மன்றங்கள் இப்படிப்பட்ட பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்குத் தனிக் குழுவாக ஆரம்பித்து, அவர்கள் கட்டணம் வாங்குகிறார்கள். கட்டணம் வாங்குவதைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அது சம்பந்தமாக இப்பொழுது என்னிடத்தில் தகவல் இல்லை. சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தனிக் கேள்வி போடலாம்.

திரு. ஏ. ஆறுமுகம் : நாட்டிலே பல நல்ல திட்டங்கள் தீட்டி, கோடிக்கணக்கான பணத்தைச் செலவழிக்கும் நம்முடைய சர்க்காரின் விளம்பரம் இல்லாத குறை இருப்பதால், வில்லுப்பாட்டு, நாடகங்கள், சினிமாக்கள் மூலமாக அதிகமாக விளம்பரம் செய்ய சர்க்கார் ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலில் "தற்போது ஆறு நாடகக் குழுக்கள்தான் இருக்கின்றன" என்று கூறியிருக்கிறார்கள். மாவட்டத்திற்கு ஒன்று வீதம், ஒவ்வொரு ஜில்லாத் தலை

நகரிலும் இப்படி நாடகக் குழுக்களை அமைக்க உத்தேசம் உண்டா ? சமீபத்தில் எங்கள் மாவட்டத்தில் "படியளக்கும் பரந்தாமனார்" என்ற அழகான நாடகம் நடத்தப்பட்டது. நம்முடைய திட்டங்களை நல்ல முறையில் எடுத்துக் கூறும் வகையில் அந்த நாடகம் இருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நாடகக் குழு அமைத்தால் போக்குவரத்துச் செலவு கம்மியாகும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர்கள் கூட ஒரு நாடகக் குழு அமைக்கலாம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்களே !

கனம் திரு. கோ. பூவராகன் : ஒவ்வொரு விளம்பர அதிகாரியின் கீழ் ஒவ்வொரு குழு இருக்கிறது. அது அந்தந்த மாவட்டத்தில் நாடகங்களை நடத்திக் காண்பிக்கும். கனம் அங்கத்தினர் சொல்கிற நாடகக் குழு சம்பந்தப்பட்ட வரையில், அந்த மாவட்ட விளம்பர அதிகாரிக்கு எழுதியனுப்பினால் அவர் அதைப் பரிசீலனை செய்து, ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருந்தால் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

திரு. ஆ. துரை அரசன் : திட்டங்களை விளக்கிக் காட்டாமலேயே காட்டிவிட்டதாகச் சொல்லிப் பணம் வாங்கப்பட்டதாக ஏதாவது அரசினருக்கு புகார் வந்ததா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அது சம்பந்தமாக அரசினருக்கு ஒன்றும் புகார் வரவில்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தத் துறைக்கு அரசாங்க நிதியிலிருந்து செலவு செய்வதால், தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்படுகின்ற கதைகளும், வில்லுப்பாட்டுகளும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு, அப்படிப்பட்டவை மட்டும் காட்ட அனுமதிக்கப்படுகின்றனவா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அப்படித்தான் அனுமதிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றக் கூட்டத்திற்காக வந்திருக்கிற கனம் அங்கத்தினர்களுக்கு நல்லுணர்ச்சி ஏற்படுத்துவதற்கு சட்டமன்றத்திலே ஒரு நாளைக்கு வில்லுப் பாட்டு பாடுவதற்கு ஏற்பாடுசெய்யப்படுமா ? (சிரிப்பு).

கனம் சபாநாயகர் : இதற்குப் பதில் உண்டா ? (சிரிப்பு).

(பதில் இல்லை.)

Educational Concessions (poor students)

*309 *Q.*—Sri K. S. SAMBANDAM (on behalf of Sri V. SANKARAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to afford scholarships and other educational facilities to poor students, taking poverty-*cum*-merit alone into consideration; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. Apart from the Community concessions awarded under the Madras Educational Rules and special schemes like those for Political sufferers, Defence personnel, etc., all other fee concessions are given on the basis of poverty.

திரு. கே. ஏ. மதியழகன் : " பிராம்பலை அரூர மக்களவர்கள் நலன்களை இந்த சர்க்கார் புறக்கணிக்கிறது " என்பது கேள்வி கேட்ட கனம் அங்கத்தினருடைய அபிப்பிராயமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் . கனம் அங்கத்தினர் அவர்கள் அந்த அபிப்பிராயத்தைக் கொள்ளலாம். அதற்குப் பிரசாரமும் செய்யலாம். அவர்களுடைய பிரசாரம் அநீதியானது என்பது எனக்குத் தெரியும் .

மூங்கில் வளர்ப்பு (கொல்லி மலை)

* 310 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டு வேலு :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா —

சேலம் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியில் மூங்கில் காடுகளை வளர்க்கத் திட்டமுண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : ஆம், கொல்லி மலைப் பகுதியில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 50 எக்கர் நிலத்தில் மூங்கில் நடப்படுகிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இது வரையில் எத்தனை எக்கரில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : எங்கே பயிர் செய்யப்பட்டது என்பதைக் கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டும்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கொல்லி மலைப் பகுதியில் இதுவரை எத்தனை எக்கரில் மூங்கில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இது வரைக்கும் கொல்லி மலைப் பகுதியில் 150 எக்கர் வரைக்கும் மூங்கில் பயிர் செய்யப் பட்டிருக்கிறது.

Watr-supply (scarcity areas)

* 311 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM) :Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a special Investigation Division has been established for the purpose of assessing the problem of water-supply in the backward and scarcity areas; and

(*b*) the nature of assistance offered by the Centre in respect of such schemes?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) இது விஷயமாக இந்திய அரசாங்கத்துக்கும் கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. க. ர. நல்லசிவம் : இதைப்பற்றிய விவரம் சபைக்குக் கொடுக்கப் படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுதுதான் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். தகவல் கிடைத்த பிறகுதான் இங்கே வைக்க முடியும்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ)—(இ) தர்மபுரி டவுனுக்கு குடி தண்ணீர் திட்டம் ஒன்றை ஆராய்வதற்கு அனுமதிகொடுப்பது பற்றி அரசினர் ஆலோசித்து வருகின்றனர். பொதுச் சுகாதார பொறியியல் துறையினரும், நகராட்சிப் பணித்துறையினரும் இத்திட்டத்தை முழுதும் ஆராய்ந்த பிறகே இத் திட்டத்தின் விவரங்கள் தெரியவரும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *re* POLICE FIRING IN URAPPANUR, TIRUMANGALAM TALUK

SRI K. MOOKIAH THEVAR : 17-ந் தேதி காலையில் . . . .

MR. SPEAKER : I do not want all those things. Already two or three adjournment motion given notice of have been postponed and a short notice question will be taken up to-morrow. To-day we cannot discuss about it.

திரு. கே. மூக்கையா தேவர் : இரண்டே வார்த்தை. . . . . . .

கனம் சபாநாயகர் : இரண்டே வார்த்தையென்றால் சரி. 9-00 a.m.

திரு. கே. மூக்கையா தேவர் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் அவசரத் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்ட காரணத்தால், அதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர முடியவில்லை. " உடனடியாக பதில் கிடைக்கவில்லை " என்று அமைச்சர் அவர்களே சொன்ன காரணத்தால், மேலும் இதே நிலை இருந்து கொண்டிருக்கிறது. 20, 25 கிராம மக்கள் போலீசாரால் துன்புறுத்தப்பட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு, ஊரை விட்டே போய், ஊர் காலியாகக் கிடக்கிறது என்கிற தகவல் எனக்கு வந்திருக்கிறது. குண்டடி பட்டுச் செத்த குடும்பத்தின் பெண்டு பிள்ளைகள் சகலபேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவசரத் தீர்மானத்தை இங்கே எடுத்துக் கொள்ள நேரம் கொடுக்காத காரணத்தால், அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதற்காக காத்துக்கொண்டிருக்கிற காரணத்தால், அங்கே அவசர நிலைமை இருக்கிறது. தாங்கள் நேரம் கொடுக்காததால் இந்த நிலைமை நீடித்துக் கொண்டு போவதால் அங்கே அட்டகாசம் நடக்கிறது. . . . .

கனம் சபாநாயகர் : நான் " டிஸ்போசல் " பண்ணவில்லை என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா ?

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள், முதலில் போலீசார் மீது புகார் சொல்லப் போகிறாரோ என்று நினைத்தேன். இப்பொழுது அவர்கள் கூறிய புகார் தங்கள் மீது. ஆனால் போலீசாரைப் பொறுத்த மட்டில், போலீசார் என்ன நடவடிக்கை எடுக்கிறார்களோ, அதெல்லாம் இந்த அவசரப் பிரேரணைக்கு உகந்தது அல்ல. ஏதாவது குறிப்பிட்ட சம்பவம் நடந்தால் அதைச் சொல்லலாம். " போலீசார் சில பேரைக் கைது செய்கிறார்கள் " என்றால், அதற்குக் கேள்விகள் கேட்டால் விடை அளிக்கலாம். இதற்குப் பதிலாக, கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டுமென்று கண்டிக்கிறார்கள். ஆனால், இது அவசரப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று மட்டும் நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : The hon. Member cannot speak about the incident now. What is it that he wants to say now?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவசரப் பிரேரணைக்கு நோட்டீஸ் கொடுத்து இரண்டு மூன்று தினங்கள் ஆகின்றன. அதைப் பற்றி சபையில் விவாதிப்பதற்கு ஒன்று அனுமதி கொடுக்க வேண்டும், அல்லது நிராகரிக்க வேண்டும். முக்கியத்துவத்தை உணர்ந்தும் பின்னால் கவனிப்போம் என்று இரண்டு மூன்று தினங்களாக . . . .

கனம் சபாநாயகர் : அதை உணர்ந்தும்தான் பின்னால் வைத்திருப்பதாகக் கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா ?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : பின்னால் வைத்திருக்கிறதைத்தான் சொல்கிறேன். இம்மாதிரி சம்பவம் பற்றி விவாதிக்கப்பட வேண்டும் என்று சொல்வது இன்று மட்டும் புதிதல்ல. தூத்துக்குடி சம்பந்தப்பட்ட துப்பாக்கி பிரயோகம் பற்றியும், டால்மியாபுரம் சம்பந்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் ஏற்கனவே விசாரணைக்கு ஏற்பாடு செய்திருந்தபோதிலுங் கூட, இந்தச் சபை விவாதித்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் "ஷார்ட் நோட்டீஸ்" கேள்விக்குப் பதிலளிப்பதாகச் சொல்லுகிறார் என்றாலும், அதில் விஷயம் பூராவும் வெளிவராது. நேற்றைய தினம் ஐ.ஜி.ஆஃப் போலீஸ் மதுரையில் அளித்த ஒரு பேட்டியில், "போலீஸ் தலையிடாவிட்டால் இரண்டு பேருக்கும் பலமான சேதம் ஏற்பட்டிருக்கும்" என்று கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்ட மன்றத்தில் அனுசரிக்கும் நடைமுறைகளை நாம் கவனிக்க வேண்டும். இப்பொழுது கனம் அங்கத்தினர் எதற்காகப் பேசுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ஏதாவது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருந்தால் பேசலாம். தாங்கள் கொடுத்தத் தீர்ப்பு தவறு என்கிற முறையில் கனம் அங்கத்தினர் சொல்கிறார். எதற்காக அவர்கள் இப்பொழுது பேசுவது? இப்பொழுது அவர் பேசுவதற்கு என்ன இடம் இருக்கிறது? அவர்கள் கொடுத்த அவசரப் பிரேரணையை நேற்று எடுத்துக் கொள்வதற்குத் தாங்கள் அனுமதிக்கவில்லை. இந்த விஷயம் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரேரணைக்கு உகந்ததல்ல. இதற்கு மேல் தாங்கள் முடிவு செய்ய வேண்டுமே தவிர, இதற்காக ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் இப்பொழுது பேசுவது என்பது இந்த மன்ற நடை முறைக்கு உகந்ததல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : The whole point is that two or three hon. Members have given notice of an adjournment motion. If the hon. Member wants me to dispose of them, I will dispose of them immediately. A short notice question will be answered on this subject to-morrow and after that we shall consider whether there is any necessity for the adjournment motion to be taken up for consideration.

Sri T. L. SASIVARNA THEVAR rose.

Mr. SPEAKER :If the hon Member Sri T. L. Sasivarna Thevar wants me to dispose it of, I will immediately dispose it of. Because the Hon. Minister assured us that he would be giving some answers tomorrow, what I say is, let us wait and see what he is going to say. Any arrest or anything else arising out of that cannot be a matter of another adjournment motion. Therefore, as the Hon. Minister has put it, the hon. Member cannot accuse the Chair.

Sri T. L. SASIVARNA THEVAR : I am not accusing the Chair, Sir.

Mr. SPEAKER : The hon. Member Sri K. Mookiah Thevar said that because I was postponing it, so many things were happening. Saying such a thing amounts to insinuating the Chair.

Sri T. L. SASIVARNA THEVAR : No, Sir.

Mr. SPEAKER : The hon. Member cannot say ' No '. If the hon. Member wants it, I shall dispose of all the adjournment motions immediately. What does the hon. Member say?

(There was no reply from the hon. Member Sri T. L. Sasivarna Thevar).

Mr. SPEAKER : My advice is that we shall wait till the short notice question is answered by the Hon. Minister for Finance.

Now we shall go to the next item.

III.—CALLING ATTENTION TO THE CONDITION OF PUPILS ADMITTED IN THE GOVERNMENT HOSPITAL, KUMBAKONAM, WITH SYMPTOMS OF FOOD POISONING.

திரு. இராம. அரங்கண்ணல் : கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள சுந்தரப் பெருமாள் கோயில் உயர்துவக்கப் பள்ளியைச் சேர்ந்த 40 மாணவர்கள், 1963 மார்ச் 6-ம் தேதியன்று மதிய உணவு உண்டபிறகு உணவில் விஷம் கலந்திருந்த அறிகுறிகளுடன் கும்பகோணம் அரசினர் மருத்துவ மனை ஒன்றில் சேர்க்கப்பட்டதும் அவர்களின் துயரார்ந்த நிலையும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Mid-day meals consisting of ' Uppuma ' made of corn meal and milk prepared out of milk-powder was served on 4th March 1963 to 70 students of Sankara Aided Elementary School, Sundaraperumalkoil Village, Thanjavur district. The ' Uppuma ' was prepared with corn meal, vegetable oil, multi-purpose food, dried chillies, black-gram and mustard. About two hours after taking this "Uppuma" two students started vomiting and one complained of giddiness. All these students, numbering 40 in all who felt similar symptoms were taken to the Government Dispensary at Sundaraperumal Koil for treatment and all of them were given first-aid. These 40 students were subsequently admitted into the Government Hospital at Kumbakonam on the same day. Of these 39 students were discharged on the morning of the following day, i.e., 5th March 1963 as they were quite normal. The remaining one student was also discharged on 7th March 1963 after recovery. There were no casualities. Prompt medical attention was given to the students and the cause of food poisoning is under investigation.

[20th March 1963

IV.—GOVERNMENT MOTION.

CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That Demand No. X—Administration of Justice and Demand No. XI—Jails be taken up for discussion before Demand No. XXVII—Public Works (Works) Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and plant and Demand No. XLII—Capital outlay on Public Works and that time allotted for Demands Nos. X and XI be reduced to one hour."

MR. SPEAKER : The question is :—

"That Demand No. X—Administration of Justice and Demand No. XI—Jails be taken up for discussion before Demand No. XXVII—Public Works (Works) Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and plant and Demand No. XLII—Capital outlay on Public Works and that time allotted for Demands Nos. X and XI be reduced to one hour."

The motion was put and carried.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64 (*cont.*)

DEMAND X—ADMINISTRATION OF JUSTICE AND DEMAND XI—JAILS

THE HON. SRI M. BHAKTAVATSALAM : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,41,82,800 under Demand No. X—Administration of Justice."

"That the Government be granted a sum not exceeding Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails"

SRI K. R. NALLASIVAM : I move the following cut motion :—

"That the allotment of Rs. 1,41,82,800 under Demand No. X—Administration of Justice be reduced by Rs. 100".

SRI M. R. KRISHNAMOORTHI : Sir, I move the following cut motion—

"That the allotment of Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, it has already been agreed that for both these Demands, the time-limit may be one hour. For the other Demand, viz., Public Works (Works) the time-limit may be three hours.

MR. SPEAKER : Very well, Sri A. P. Dharmalingam may now speak.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, நீதியையும் தண்டனையையும் ஒன்றாகக் கலந்து விவாதிக்கின்ற நேரத்தில் எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி. நீதி ஏழை எளியவர்

களுக்கும் கூட சுலபமான வகையில் அதிகச் செலவு இல்லாமல் கிடைக்க
வழி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தண்டிக்கப்படு
கிறவர்கள் அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்று சொல்லிவிட
முடியாது. அதேபோல விடுதலை பெறுகின்ற அத்தனை பேர்களும் குற்ற
மற்றவர்கள் என்று சொல்லிவிடமுடியாது. பொதுவாக நியாயம் வேறு
சட்டம் வேறு. சட்டத்தின் உதவியைப் பெற முடியாதவர்கள் பணச்
செலவு செய்ய வசதி இல்லாதவர்கள் பல சமயங்களில் தங்கள் பேரில்
அநியாயமாகச் சுமத்தப்பட்ட குற்றங்களில் இருந்து விடுதலை பெற
முடியாது போவதைப் பார்க்கிறோம், பல பேர் வழக்குகளை நடத்த இயலாத
நிலைமையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இது இந்த மன்றத்
தில் உள்ள பலருக்கும் தெரியும். எத்தனையோ நில பிரபுக்கள் விவ
சாயிகளின் மீது வழக்குத் தொடர்ந்து உயர்நீதி மன்றங்கள் வரை
வருகிறார்கள். அவர்களுடைய கொடுமைகளில் இருந்து தப்பித்துக்கொள்ள
பண வசதியின்றி, கோர்ட்டுகளில் வழக்காட இயலாது பல கொடுமை
களுக்கு விவசாயிகள் இன்றையதினம் உள்ளாகிறார்கள். பல சமயங்
களில் வழக்காட வசதி இல்லாத நிலையினாலேயே அவர்கள் சொல்வதை
ஒப்புக்கொண்டு கொடுப்பதை வாங்கிக்கொண்டு நீதியை விற்றுவிட வேண்-
டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஏழை எளிய விவசாயிகள்
ஹைகோர்ட் வரை வந்து தம் பக்கத்தில் உள்ள நியாயத்தை நிலை
நாட்டிக்கொள்ள அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். வேறு
பல வழக்குகளில் அரசாங்கமே வக்கீல்களை இலவசமாக நியமித்துக்
கொடுப்பது போல இவர்களுக்கு வழக்கறிஞர்களின் உதவி கிடைக்க வழி
செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பொதுவாக சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஒருவன் திருடன்
என்று ஒரு முறை தண்டிக்கப்பட்டுவிட்டால் அப்புறம் அவன் ஆயுள்
முழுவதும் போலீஸ் கண்காப்பிலேயே வைக்கப்படுவதும், வேறுபல வழக்கு
களில் பொய்யாகக் குற்றஞ் சாட்டப்பட்டு சிறைக்கு அனுப்பப்படுவதும் மிக
அநியாயமாக இருக்கிறது. இதைத் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குற்றம் செய்
தவன் என்பதற்காக ஒருவன் சிறையில் தள்ளப்படுவானேயாகில் மீண்டும்
வெளி வரும்போது சமுதாயத்தோடு சேர்ந்து பிழைக்க வழியில்லாதவனாக
வரக்கூடாது. திரும்பும்போது வாழ்க்கையில் மறு மலர்ச்சி உடையவனாக,
நல்ல பழக்கங்களில் உறுதிப்பாடு உடையவனாக, மீண்டும் குற்றம் செய்
யாது சமுதாயத்தில் ஒருவனாக தொழில் செய்து பிழைக்கும் நிலையில்
வெளிவரத்தக்க சூழ்நிலையை உண்டாக்கவேண்டும். சிறை அத்தகைய
நற்பண்புகளை அவனிடம் ஏற்படுத்தக்கூடிய வகையில் அமையவேண்டு
மென்பதை நான் இந்த நேரத்தில் வற்புறுத்திச் சொல்ல விரும்புகி
றேன்.

சிறைக்குச் சென்று திரும்பியவர்களில் எத்தனையோ பேர்கள் நல்ல
வர்களாக, சமூகத்திற்கு அரும்பணியாற்றக்கூடிய சீர்திருத்தவாதிகளாக
மாறியிருப்பதைப் பார்க்கிறோம். அரசியல்வாதிகள் மட்டும் அல்ல.
வேறு பலரும் கூட இவ்வாறு ஒரு நல்ல தன்மை உடையவர்களாக மாற
சிறைச்சாலை தக்க வழிவசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் புதுக் கைதியை பழையக் கைதிகளோடு சேர்க்கக்கூடாது. அவ்
வாறு சேர்ப்பதனால் அந்தப் பழைய கைதிகளிடமுள்ள கெட்ட பழக்கங்
களுக்கு இவன் ஆளாக நேரிடும்.

அதுபோலவே சிறையில் குறிப்பிட்ட சில மதத்தைச் சேர்ந்தவர்கள்
கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அம் மதத்தைச் சேர்ந்த பாதிரி
மார்கள் நல்ல நெறியைக் காட்ட அடிக்கடி சிறைக்கு வந்து சொற்பொழிவு
ஆற்றுகிறார்கள். மற்ற மதத்தைச் சேர்ந்துள்ள கைதிகளுக்கு அவ்வசதி
கிடையாது. அப்படிப்பட்ட வசதி கிறிஸ்துவர்களுக்கு ஞாயிறு, முகம்மதியர்
களுக்கு வெள்ளி என்று வைத்துக்கொண்டிருப்பது போல இந்துக்களுக்
கும் பல அறிஞர் பெருமக்களை சிறைக்கு அழைத்து நற்பண்புகளை சொற்
பொழிவுகளின் மூலம் ஊட்டுவதற்கு—செய்யப்பட வேண்டும் என்று

தெரிவித்துக்கொள்கிறேன். இன்றும் சிறையில் சீர்திருத்த நாடகங்
களேயும் சினிமாப் படங்களேயும் அவர்களுக்குப் போட்டுக்காட்டலாம். இதனுல்
எல்லாம் அவர்கள் மனம் மாற்றம் அடைவதற்கும், அவர்கள் திருந்து
வதற்கும் வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிற உணவு மிகமிக
மோசமாக இருந்து வருகிறது. "எங்களுக்குத் தெரியாதா?" என்று நீங்கள்
கேட்கலாம். இப்போது இருக்கிற சிறையில் கொடுக்கப்படுகிற உணவில்
கற்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த உணவை உண்பதன் காரணமாகப்
பல கெடுதல்கள் ஏற்படுகின்றன. சாமான்கள் கணக்கில் அதிகமாக
எழுதப்பட்டிருந்தாலும், உணவு வழங்கப்படுகிற நேரத்தில் போதிய அளவு
நல்ல முறையில் வழங்கப் படுவதில்லே. சிறைச்சாலேகளுக்குக் கைக்குத்தல்
அரிசி கொடுக்கப்படுகிறது. கைக்குத்தல் அரிசி குடல் குத்தல் அரிசியாகத்தான்
இருக்கிறதே தவிர, உண்பதற்கு ஏற்ற முறையில் இல்லே. திருச்சி சிறைச்
சாலேக்கு வேண்டிய கைக்குத்தல் அரிசியை வேதாரண்யம் கைக்குத்தல்
அரிசி சொசைடியிலிருந்து வாங்குகிருர்கள். பக்கத்தில் தஞ்சையில் திருச்சி
-யில் மண்ணச்சநல்லூர் மார்க்கட்டில் அரிசி வாங்குவதை விட அதிக
விலே கொடுத்து வேதாரண்யத்திலிருந்து கைக்குத்தல் அரிசி வாங்கப்
படுகிறது. அதை விடக் குறைந்த விலேக்கு உயர்ந்த ரக அரிசியை மண்
ணச்சநல்லூர் மார்க்கட்டில் கொடுக்க தயாராக இருக்கிருர்கள். அப்படி
யிருந்தும் கூட்டுறவு முறைக்கும் ஆக்கம் தரவேண்டுமென்ற எண்ணத்
தாலோ வேறு காரணத்தாலோ வேதாரண்யத்திலிருந்து வாங்கிக் கொண்
டிருக்கிருர்கள். அறுவடைக் காலங்களில் நெல்லேக் கொள்முதல் செய்து
வைத்துக்கொள்ளலாம் என்ற அதிகாரம் சில சிறைச்சாலேகளுக்கு இருக்
கிறது. மதுரை, புதுக்கோட்டை போன்ற சிறைச்சாலேகளுக்கு அந்த அதிகாரம்
வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சி சிறைச்சாலேயைப் பொறுத்த வரையிலு
மாவது அந்த அதிகாரத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1961-62-லே கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் சிறைச்சாலேகளுக்கு சப்ளே
செய்யப்பட்டதால் மூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது என்ற
காரணத்தால், டெண்டர் பெறப்பட்டு கண்ட்ராக்டர்களுக்குக் ஒப்பந்த மூலம்
கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். அப்படி இருந்தும் இன்னும் சில சிறைச்
சாலேகளுக்கு கூட்டுறவு சொசைடி மூலம் பண்டங்கள் வாங்க அனுமதி
வழங்கப்பட்டிருப்பதாக அறிந்தேன். கோயம்புத்தூர் சிறையில் சில சாமான்
மட்டும், எல்லாச் சாமான்களேயும் அல்ல, கூட்டுறவு ஸ்தாபனங்கள்
வழங்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. தனிப்பட்ட
ஒருவருக்காக அந்த சொசைடியிலிருந்து சில சாமான்களே வழங்க அனு
மதி கொடுத்திருப்பது தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து உடையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வெள்ளேக்காரன்
காலத்தில் கட்டம் போட்ட உடையும், குல்லாயும் கொடுக்கப்பட்டு வந்தன,
நம்முடைய சுதந்திர சர்க்கார் வந்த பிறகு வெள்ளேக்கால் சட்டையும்
அரைக் கை சட்டையும் கொடுக்கப்டுகிறது. வெள்ளேக் குல்லாயும் கொடுகி
கப்படுகிறது. வெள்ளேக்காரனுக்கு அடிமையாக இருந்த காலத்தில் குல்லா
கொடுத்தார்கள். இப்போது குல்லா அவசியமில்லே. உடையும் அவரவர்
களுக்குப் பொருத்தமானபடி தைக்கப்படவில்லே. பருமனுன ஆளுக்
கும் ஒல்லியான ஆளுக்கும் ஒரே அளவு உடைதான் கொடுக்கப்படுகிறது.
ஆகவே, கொடுக்கப்படுகிற உடைகள் ஆட்களுக்குத் தகுந்த மாதிரி இருக்க
வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறைகளிலே பள்ளிக்கூடம் என்று ஒன்றிருக்கிறது. பள்ளிக்கூடத்தில்
படிக்கிருர்களா என்றுல் இல்லே. சிறையில் இருந்தவர்கள் இன்னின்ன
வகுப்பில் தேறினுர்கள் என்ற கணக்கு முன்பு வந்தது. இப்போது வருவ
தில்லே. நான் சிறையில் இருந்தவரை பார்த்தேன். ஆசிரியர் இருக்கி
ருரே தவிர அங்கு போய்ப் படிக்கிறவர்களே காணேம். மேலும் இடம்
போதவில்லே என்பதால் அதை சிறையாக மாற்றிவிட்டார்கள். நல்ல இட
வசதி செய்து கொடுத்து அவர்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார நிலேமை சிறைச்சாலேகளில் மிக மிக மோசமாக இருந்து வரு
கிறது. பொதுவாகக் கொசுத் தொல்லே மிகவும் அதிகம். கொசுவை
அழிக்க மருந்து அடித்தால் ஈ வந்து விடுகிறது. சாக்கடை வசதிகளும்
செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலேகளில் மருத்துவ வசதிகளும் சரியானபடி இல்லே. யாராக
இருந்தாலும் சரி, சிறைச்சாலேயிலே மரியாதை கொஞ்சம் கம்மிதான்.
அங்கு கொடுக்கப்படுகிற வைத்தியத்தை நினேத்துப் பார்க்கிறபோது வேதனே
யாகத்தான் இருக்கிறது. சிறைசசாலேயில் நான் ஒரு புத்தகத்தைப் படித்
துக்கொண்டிருந்தேன். பெருமதிப்புக்குரிய நேரு அவர்கள் சிறைச்சாலே
டாக்டரைப் பற்றி, அங்குள்ள கொடுமையைப் பற்றி எழுதியிருக்கிருர்.
ஒரு நாய்க்கு வைத்தியம் பண்ண சர்க்காருடைய விதிகளிலே "ப்ரொவி
ஷன்" இல்லேயே என்று வேதனேப்பட்டு எழுதியிருக்கிருர். ஆனுல் இப்
போது சிறைச்சாலேயிலே மனிதன் நாயைவிடக் கேவலாக மதிக்கப்படு
கிருன். டாக்டர்கள் நோயுற்ற கைதிகளின் கையதைத் தொட்டுப் பார்த்து,
அவனுடைய உடல் நிலேயைப் பரீட்சித்துப் பார்த்து மருந்து கொடுப்ப
தில்லே. எல்லோரையும் வரிசையாகக் கொண்டு போய் நிறுத்தி விடு
வார்கள். கம்பிக்கு மறு பக்கம் இருந்து கொண்டு தொண்டையை
வலிக்கிறது, வயிற்றை வலிக்கிறது என்று சொன்னுல் ஏதோ ஒரு
மருந்தைக் கொடுப்பார்கள். அதுவும் சிறைக் கைதியில் ஒருவரே கம்பவுண்ட
ராக இருந்து மருந்து கொடுப்பாகள். வயிற்று வலிக்கு கொடுத்த
மருந்தைச் சாப்பிட்ட உடன் அவர்களுக்கு தலேவலி உண்டாக்கிவிடும்.
சமுதாயத்திலே ஒதுக்கப்பட்ட இனம் என்ற வகையிலே சிறைக் கைதிகள்
நடத்தப்படுகிருர்கள். ஆகவே, நல்ல மருத்துவ வசதி செய்து கொடுக்க
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கி
றேன்.

கைதிகளுக்கு ஏதாவது குறைகள் இருக்கின்றனவா என்பதை அறிந்து
கொள்ள செவ்வாய்க் கிழமை தோறும் சிறை அதிகாரிகள் டி. எம். ஓ.
ஆகியோர் ரவுண்டு வருவார்கள். ஆனுல் ஒருவரும் இருக்கக் கூடிய
குறைகளேச் சொல்வதே இல்லே. யாராவது தப்பித் தவறி கையை உயர்த்தி
குறைகளே பற்றிச் சொல்லி விட்டால் அந்த டி. எம். ஓ. போனவுடன்
அவனுடைய கை அவனுக்குச் சொந்தமாக இருக்காது. இவை எல்லாம்
மேலதிகாரிகள் கவனத்திற்கோ, அரசாங்கத்தின் கவனத்திற்கோ வரு
வதே இல்லே. அவர்கள் தங்களுடைய குறைகளே எடுத்துச் சொல்வதிலி
ருந்தும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிருர்கள். வெல்பேர் ஆபிசர் என்று
ஜெயிலில் ஒருவரைப் போட்டிருக்கிருர்கள். அவருடைய வேலே என்ன
வென்று பார்த்தால் இண்டர்வியூ கண்டக்ட் பண்ணுவதுதான். கைதிகளு
டைய வெல்பேரில். அவர் அக்கறை காட்டுவது கிடையாது. இவைகளே 9-30
யெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். a.m.

ஆயுள் கைதிகளாக இருக்கிறவர்கள் நல்ல வேலே செய்து நல்லவர்கள்
என்று பெயர் வாங்கினுலும் ஆயுள் பூராவும் சிறையிலேயே இருக்க வேண்
டிய நிலேமை இருக்கிறது. தண்டனேயில் மூன்றில் இரண்டு பங்கைக்
கழித்த பிறகு, தண்டனேயை குறைப்பது பற்றிப் பரிசீலனே செய்ய போர்டு
இருக்கிறது. லோகல் சப்-இன்ஸ்பெக்டர்களின் சிபாரிசின் பேரில் போர்டு
க்கு சிபாரிசு பண்ணவேண்டுமென்று விதி இருக்கிறது. அந்த சப் இன்ஸ்
பெக்டர் யார் யாரை விசாரிப்பது, எங்கெங்கு விசாரிப்பது, எப்படிப்பட்டவர்
களே விசாரிப்பது என்பதைப் பற்றி தெளிவாக விதி இல்லே.
அவர் ஸ்டேஷனுக்கு வந்து முன்னுலுள்ள ரிக்காடை பார்க்கிருர்கள்.
ஆனுல் ஊரில் போய் விசாரிப்பதில்லே. முக்கியமானவர்களே விசாரிப்ப
தில்லே. அவர்களுக்குத் தோன்றியதை அனுப்புகிருர்கள். அவர் தண்
டிக்கப்பட்ட காலத்தில் இருந்த இன்ஸ்பெக்டர் வேறு இடத்திற்கு மாற்றப்
பட்டு விடுகிருர் அல்லது உயர்ந்த உத்தியோகத்திற்கு போய் விடுகிருர்.
புதிதாக வந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் இப்போது பள்ளியில் படித்துக்
கொண்டிருந்திருப்பார்கள். ஆகவே புதிதாக வருகிறவர்களைக் [illegible]
பிரயோஜனமில்லே. அதோடு அவர்கள் சரியாக எழுதுவதும் [illegible]

அப்படி எழுத வேண்டுமென்றால் வேறுவிதத்தில் கவனிக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் கவனிப்பதற்கு ஏழைகளால் முடிவதில்லை, அவன் குற்றம் செய்வதற்குக் காரணமாக இருந்தவர்கள், அவர்களே ஏதோ ஆத்திரத்தால் செய்து விட்டால் என்று அவர்கள் விட்டு விட்டாலும் போர்டு அதைப் பாஸ் செய்வதில்லை. ஆகவே சப் இன்ஸ்பெக்டர் சிபார்சு செய்து அதனால் விட வேண்டுமென்று சொல்வதை மாற்றி நாம் ஜனநாயகத்தில் இருப்பதால் வேறு முறைகளைக கொண்டுவந்து இன்னின்ன மாதிரி விசாரித்து செய்யலாம் என்று செய்தால் வசதியாக இருக்கும்.. அடுத்து, ஆயுள் கைதிகள் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருக்கக்கூடியவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள் வெளியே வர ஜாமீன் கொடுக்கவேண்டும், அப்படி அவர்களுக்கு ஜாமின் கொடுக்க ஆள் இல்லாவிட்டால் அவர்கள் சிறையில்தான் இருக்கவேண்டியிருக்கிறது. அப்படியே அவர்கள் வெளியே வந்து சேர்ந்தாலும் சின்னத் தகராறுகளுக்காக அவர்களைப் பிடித்து மறுபடியும் ஜெயிலுக்கு அனுப்பி விடுகிறார்கள். இன்று ராமநாதபுரம் மாவட்டம், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 17 ஆண்டுகளாக இருக்கக் கூடியவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். ஆயுள் தண்டனை பெற்றவர்கள்தான் தண்டனைக்குரியவர்கள். ஆனால் பலயிடங்களில் அவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. பிள்ளைகள் அல்லது மனைவி எந்த குற்றமும் செய்யவில்லை. அவர்களும் தண்டனையை அனுபவிக்கும் முறையில் இருக்கக்கூடாது. அந்த ஒரு ஆள்தான் அக்குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை இருப்பதின் காரணமாக, அவன் சிறை செல்வதால் அவன் அனுபவிக்கும் கொடுமையை விட வெளியே இருக்கும் அவன் குடும்பத்தார் அதிகக் கொடுமையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கைதிகள் உள்ளே நல்ல வேலை செய்கிறார்கள். அதற்கு அவர்களுக்குப் போதிய கூலி கிடையாது. சாப்பாடு கொடுக்கப்படுகிறது என்று கூறலாம். ஆனால் அவர்கள் செய்கிற வேலையின் அளவிற்குக் கொடுப்பதில்லை. ஆகவே நான் சொல்வது வெளியில் இருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கு சர்க்கார் ஒரு பாதுக்காப்பு அளிக்க வேண்டும். பிள்ளைகள் படிக்க வசதி செய்து தர வேண்டும். சிறையில் இருப்பவர்கள் குற்றம் புரிந்தாலும் வெளியே உள்ள, குற்றம் யாதும் செய்யாத அவர்கள் குடும்பத்தினர் தவிக்கும் நிலை மாற்றப்படவேண்டும். சிறைக்குள்ளே இந்தக் கைதிகள் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். திருச்சி, மதுரை ஜெயிலில் பர்னீச்சர் செக்ஷன், வீவிங் செக்ஷன் இவற்றில் அவர்கள் நன்கு வேலை புரிகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் கூலியின் ஒரு பகுதியை அவர்கள் குடும்பத்தினருக்குக் கொடுக்க வேண்டும். ப்ரொபேஷன் ஆபீசர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் சரியாக வேலை செய்வதில்லை. ஆகவே சிறையில் உள்ளவர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க சர்க்கார் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பரோலில் விடுவதை எடுத்துக்கொண்டால், வேண்டியவர்கள் என்றால் மூன்று நான்கு நாட்களுக்குள் கூட்டி வருகிறார்கள். அதுவும் ஆண்டுதோறும் வருகிறார்கள். ஆனால் பலருக்கு வருடக்காணக்காக பரோலில் வர முடியவில்லை. பரோலில், விட, எந்தக் குற்றத்திற்காக யார் தண்டனை வாங்கிக் கொடுத்தார்களோ அந்த இலாகாவினரைக் கேட்பது, முறையல்ல. அவர்களிடம் வேண்டியவர்கள் சொன்னால் விட்டு விடுகிறார்கள். இல்லாவிடில் மூன்று ஆண்டுகள் கூடப்போக முடிவதில்லை. தேர்தல் நேரத்தில் எங்கள் ஜெயிலிலிருந்து போய் விட்டு ஒருவர் இப்போது வந்து விட்டார். ஆயுள் தண்டனை பெற்றவர்கள், கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் கூட வருடந்தோறும் பரோலில் போய் வருகிறார்கள். ஆகவே எல்லாக் கைதிகளுக்கும் இந்த வசதி வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்..

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : கனம் அங்கத்தினர் அவர்கள் " எங்கள் ஜெயில்" என்று சொல்கிறார்களே, அவர்கள் ஜெயில் எங்கேயிருக்கிறது என்று அறிய ஆசைப்படுகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : 'எங்கள் ஜெயில்' என்றால் எங்கள் மாவட்டத்திலுள்ள திருச்சி ஜெயிலைத்தான் கூறுகிறேன். மதுரை, தஞ்சாவூர், மற்றும் எங்கு தண்டிக்கப்பட்டாலும் திருச்சிக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. அடுத்து ஜெயிலில் 60 வயதிற்கு மேற்பட்ட கிழவர்கள் ரொம்பப்பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வெளியில் வந்து ஒன்றும் செய்ய முடியாது. 40 வயதில் தப்பு செய்து 60 வயதில் வெளியில் வந்தால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே அவர்கள் இறக்கும் போதாவது, வீட்டில் வந்து சாவதற்கு வேண்டிய வசதி வாய்ப்பு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சிறை வார்டர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதனால் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. அதை இந்த மன்றத்தில் கூற நான் விரும்பவில்லை. அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக்கொடுத்தால் மற்றவர்களுக்கு நலமாயிருக்கும். ஆகவே அவர்கள் சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்பட்டு அவர்கள் குழந்தைகளுக்குப் படிப்பு வசதி, மருத்துவ வசதி எல்லாம் செய்துகொடுக்க வேண்டுமென்று கூறி இந்த அளவோடு உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. க. ர. நல்லசிவம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கிராமங்களில் முன்பெல்லாம் கிராம நீதிமன்றங்கள் என்று இருந்தன. இன்று ஓரளவு நாடு பூராவும்; கிராமங்கள் பூராவும், அதிகாரங்கள் பிரித்துக்கொடுக்கும் நிலை இருப்பதால் இப்போது கிராமங்கள்தோறும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தினால் நிச்சயமாக அவை பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே சர்க்கார் இதை ஆலோசித்து ஒரு ஜில்லாவிற்கு மூன்று நான்குநா, கிராமங்கள் வீதம் கொடுத்து மாதிரியாகப் பார்த்து பின்னர் ராஜ்யம் பூராவிற்கும் விஸ்தரித்துக்கொள்ளலாம். இன்று நீதிமன்றங்கள் எப்படி இயங்குகின்றன என்று பார்த்தால், அன்னிய மொழியில்தான் நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்றுதான் பார்க்கிறோம். இன்று நீதி பெறுகிற மக்களில் 98 சத விகிதத்தினருக்கு ஆங்கிலம் அடியோடு தெரியாது. நீதி வழங்குகிறவர்களும், நீதியை எடுத்துக் கூறுபவர்களும், நீதி பெறுகிறவர்களும், இந்த மூன்று சாராரும் தமிழை நன்கு அறிந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். வேண்டுமானால் உயர்நீதி மன்றத்திலுள்ள நீதிபதிகளில் சிலர் வெளி மாநிலத்தவராக இருக்கலாமே தவிர மீதியுள்ள "நீதிமன்றங்களில் இருப்பவர்கள் வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள் அல்லது வேறு மொழி பேசுபவர்கள் வரக்கூடிய சூழ்நிலை இன்று இல்லை. இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியா அல்லது ஆங்கிலமா என்பதைப் பற்றிக் கவலையில்லை. இன்று தமிழ் எல்லாத் துறைகளிலும் வர வேண்டுமென்று சொன்னபோதிலும் நீதித்துறையைப் பொறுத்தவரை தமிழ் அல்லாத வேறு மொழி இருப்பதினால் பெரும் பாதகம் மக்களுக்கு ஏற்படுகிறது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். நீதித் துறையில் உள்ள நடவடிக்கைகள் அநேகமாக ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி, முழுப் பயிற்சி இல்லாத காரணத்தினால் நியாயத்தை எடுத்துச் சொல்கிறவர்கள் வகையில்லாது கஷ்டப்படுகிறார்கள். இன்று வழக்கறிஞர்கள் ஆங்கிலத்தில் முழுப் பயிற்சி இல்லாது தங்கள் உள்ளத்தில் எழுகிற உணர்ச்சியை, எண்ணங்களை எடுத்துச் சொல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள். 100-க்கு 50 பேர்களும் இப்படி இருக்கிறார்கள், விவாதத்தின் பாற்பட்ட வார்த்தைகளை ஆங்கிலத்தில் முழுமையாக எடுத்துக் கூற முடியாமல். சில விஷயங்களில் எப்படி நம் தமிழக மாநிலம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறதோ அதேபோல் நீதித்துறையிலும் தமிழில் எல்லாவற்றையும் கவனிப்பது என்று வைத்தால் சிக்கல்கள் ஏற்படாது பிற மாநிலங்களுக்கு நாம் இதிலும் ஒரு வழிகாட்டியாக இருக்கமுடியும். இப்போது வழக்கறிஞர்கள் தங்கள் எண்ணங்கள் அல்லது உணர்ச்சிகளை வெளிப்படுத்த தமிழிலும் சொல்ல முடிவதில்லை, ஆங்கிலத்திலும் சொல்ல முடிவதில்லை. காரணம் மொழித் தகராறுதான். ஒன்று. ஆங்கிலத்திலேயே அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்றால் ஆங்கிலத்தில் ஆழ்ந்த பயிற்சி தேவை. அதற்கு அவர்கள்

வாழ்நாள் பூராவும் நீண்டுகொண்டு போகலாம். தமிழில் உள்ள சில வார்த்தைகளுக்கு ஆங்கிலத்தில் எதிர் வார்த்தைகள் கூற முடியாது. அதேபோல் ஆங்கிலத்தில் உள்ள சில வார்த்தைகளுக்கு தமிழில் எதிர் வார்த்தை கூற முடியாது. இதைச் சொல்லக் காரணம் ஒரு சில வழக்கறிஞர்கள், தமிழில் எப்படிக் கூறுவது என்று நினைக்கிறார்கள். மனம் இருந்தால் நிச்சயமாக வழியுண்டு. ஆகவே ஆங்கிலத்தை அகற்றி விட்டுத் தமிழை இத்துறைக்குக் கொண்டுவருவது என்று முடிவு செய்து விட்டால் காரியங்கள் தானாக நடக்கும்.

இன்னொன்று சொல்லப்படுகிறது. விஞ்ஞானத் துறையில் ஆங்கிலம் இல்லாவிட்டால் நாம் முன்னேற முடியாது என்று சொல்லப்படுகிறது. அதற்கு வேண்டுமானால் ஆங்கிலத்தை இரண்டாவது, மூன்றாவது பட்சமாக வைத்துக்கொள்ளலாம். நீதித் துறையைப் பொறுத்த வரையில் எல்லாவற்றையும் தமிழிலேயே நடத்தலாம். நான் முன்பே பேசியிருக்க வேண்டிய விஷயம், சட்ட சபையில் வரக் கூடிய சட்டங்களெல்லாம் ஆங்கிலத்தில் வருகின்றன. இங்கே உள்ளவர்களில் எவ்வளவு பேர்கள் ஆங்கிலம் தெரிந்தவர்கள் என்பதை நம்மைப் பற்றிய விவரம் உள்ள புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியும். இங்கே சட்டம் இயற்றப்பட்ட பிறகு வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் நீதியை வழங்க அதைப் பயன்படுத்துகிறார்கள். இருக்கக்கூடிய சிக்கலை அனுபவ பூர்வமாகப் புரிந்துகொள்ள வேண்டும். எதற்கெல்லாமோ மாகாத்மா காந்தியடிகளின் பெயரைப் பயன்படுத்துகிறோம். மாகாத்மா காந்தியடிகளைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறோம். நாட்டுமொழி தான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், நாட்டு மொழி தான் சட்ட சபையில் இருக்க வேண்டும், கோர்ட்டுகளில் இருக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னவைகளை ஆயிரம் வகைகளில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோமே தவிர மொழியைப் பற்றி ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அதற்காக நாம் ஆயிரம் காரணம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு நான் நேரடியாகச் சொல்ல விரும்புகிறேன், பெருமையாகச் சொல்ல விரும்புகிறேன், எவ்வளவோ பேர்கள் ஆங்கிலம் தெரியாதவர்கள் இருந்து காரியங்களை ஒழுங்காகச் செய்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அப்படி இருந்தும் இன்னும் இதைத் துவக்கவில்லை. ஒரே ஆண்டிலே தமிழைக் கோர்ட் மொழியாக ஆக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இரண்டு ஆண்டு, நான்கு ஆண்டு, ஐந்து ஆண்டு என்று திட்டமிட்டு, இத்தனை ஆண்டுகளில் தமிழில் வந்து விடும் என்று சொல்லக் கூடிய துணிவு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலை பற்றிக் கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். வேறு ராஜ்யங்களில் இருக்கின்ற வசதிகளை நம் கைதிகளுக்கும் செய்ய வேண்டும். வேறு ராஜயங்களில் உள்ள ஜென்மக்கைதிகளுக்கும், அதிக கால தண்டனை அடைந்த கைதிகளுக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த முறையில் சம்பளம் கொடுத்தால் அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றப் பயன்படும். குறைந்த சம்பளமாக இருந்தால், சில ராஜ்யங்களில் உள்ளேயே கடை வசதி செய்து அங்கேயே டீ குடித்துக்கொள்ளலாம், வேறு சாமான்கள் வாங்கிக்கொள்ள்லாம். அந்த மாதிரி வசதிகள் இருக்கின்றன. உள்ளபடியே சிறைச்சாலை விஷயத்தில் இப்போது மாற்றங்களைச் செய்திருக்கிறோம். அதோடு இன்னும் சில மாற்றங்கள் செய்தால் பயனுள்ளதாக இருக்கும்.

கல்வித் துறையில் ஒரு சிலருக்குத் தான் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது மற்றவர்களுக்கும் கல்வி வசதி கிடைக்க முடியாத அளவுக்கு சூழ்நிலையும் அங்கு இருக்கக் கூடிய அதிகாரிகளாலும் செய்யப்படுகிறது.

பரோல் பற்றிச் சொன்னார்கள். ஜென்மக் கைதிகள் இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒரு முறை எல்லோருமே வருவதற்கான முறையை ஏற்படுத்த முடியுமா என்று பரிசீலனை செய்ய வேண்டும்.

அதோடு ஜென்மக் கைதிகளை பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் அவர்கள் ராணுவத்தில் சேர்த்துக்கொண்டார்கள். ஒழுங்காக இருக்கக் கூடிய ஜென்மக் கைதிகளை ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். நான் கூட எனது நண்பர்களுக்கெல்லாம் எழுதினேன், அவர்களை ராணுவத்தில் சேர்த்துக் கொள்வதாகச் சொன்னால் சேர்ந்துவிடுங்கள் என்று. எனக்குச் சில நண்பர்களும் எழுதியுள்ளார்கள், சேர்த்துக்கொள்ளத் தயாராக இருந்தால் நாங்கள் சேர்கிறோம் என்று. இதையும் அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, அவர்களுக்குக் கஞ்சி கொடுக்கிறார்கள். அதை வேறு உருவமாக, தோசையாக, கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. கொடுக்கக்கூடிய கஞ்சி சுத்தமாக இருப்பது கிடையாது. ஆகையால் சுத்தமான கஞ்சியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நீதி நிர்வாகம், சிறைச்சாலை மான்யக் கோரிக்கைகளை அனுசரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் நீதித் துறையிலே எல்லாமே தமிழிலே இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது சட்டங்களெல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. சட்டத்தை ஆங்கிலத்தில் செய்வது தான் சுலபமாக இருக்கிறது. அதோடு இல்லாமல் ஜட்ஜ்மெண்ட்டுகள் அலகாபாத், ஒரிஸ்ஸா, பெங்கால், கல்கத்தா போன்றவைகள் கூட ஆங்கிலத்தில் இருப்பதால், இப்போது அவ்வளவு சீக்கிரமாக மொழி பெயர்த்துச் செய்ய முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நம் மாநிலத்தில் ஹைகோர்ட் ஒன்று இருக்கின்றது. அங்கே அப்பீல்களெல்லாம் தாக்கலாகிச் செவ்வனே முடிவு பெற்று வருகின்றன. இருந்தாலும் அப்பீல்களைச் சீக்கிரமாகப் பைசல் செய்ய திருச்சியில் அல்லது மதுரையில் ஹைகோர்ட் பெஞ்ச் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நீதி நிர்வாகத் துறையில் நம் மாநிலம் முன்னேறி வருகிறது. ஹைகோர்ட்டோடு அல்லாமல் மாவட்டங்கள் தோறும் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுகள், தாலூகாதோறும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் இயங்கி வருகின்றன. க்ரிமினல் குற்றவாளிகளை விசாரிப்பதற்காக மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் எல்லா ஜில்லா, தாலூகா தலைநகரங்களிலும் இருக்கின்றன. கோர்ட் கட்டடங்கள் பழமையாக இருக்கின்றன. அவைகளைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சில ஊர்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் கட்டட வசதி இல்லாமல் தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இருந்துக்கொண்டிருக்கின்றன. அது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொரு கோர்ட்டிலும் வழக்கறிஞர்கள் தங்க பார் ரூம் இல்லாமல் இருக்கின்றது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருக்கும் கோர்ட்டுகளில் நாற்காலிகள், மேஜைகள் எல்லாம் பழமையாக இருக்கின்றன. அவைகளைப் புதிதாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட்டுகளில் வழங்கப்படுகிற ஃபாரங்கள், ரிஜிஸ்டர்கள் முதலிய பேப்பர் எல்லாம் நல்ல முறையில் இல்லை. நிப் குத்தி பொத்துக்கொள்கிறது. ஆகையால் நல்ல ஸ்டேஷனரி கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நீதி நிர்வாகத்தில் ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் சில சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். செக்ஷன் 145-ன்படி விசாரிக்கிறதில் ஆர்டி[illegible] மனுச் செய்து, அவர்கள் போலீஸ் இலாகாவுக்கு அனுப்பி

[திரு. இ. நாராயணசாமி பிள்ளை] [20th March 1963

போலீஸ் இலாகாவிலிருந்து ஆர்.டி.ஓ.வுக்கு அனுப்பி அங்கிருந்து எஸ்.டி.எம்.க்கு அனுப்பப்படுகிறது. இது கஷ்டமாக இருக்கிறது. ஆர்.டி.ஓ. போஸ்ட் ஆஃபீஸ் மாதிரி கருதப்படுறதே தவிர நீதி வழங்கப்படவில்லை. ஒன்று, ஆர். டி. ஓ. விசாரித்து முடிவு செய்ய வேண்டும். இல்லை என்றால், எஸ். டி. எம். -ல் கொடுத்து, அவர்கள் போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு எண்டார்ஸ் செய்து அனுப்பி அவர்களிடமிருந்து ரிப்போர்ட்டைப் பெற்று அந்த இடத்தில் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட, ஆர்.டி.ஓ.க்களுக்கு சில ஆஃபீஸ்கள் புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதிகளே இல்லாமல் இருக்கிறது. அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு தாலூகாவில் இருக்கும் வழக்காடுகிறவர்கள் மற்ற தாலூகா, டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. விருத்தாசலம் தாலூகாவில் இருக்கிறவர்கள் கள்ளக்குறிச்சி டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. அந்தந்த ரெவின்யூ இலாகாவில் டி. எம். கோர்ட்டில் விசாரிக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த காப்பீஸ் எழுதுவதில் கோர்ட்டுகளில் சரியாக எழுதப்படவில்லை. அது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. டைப்ரைட்டர் வைத்து டைப் அடித்துக் கொடுக்கும்படிச் செய்ய வேண்டும். அல்லது நல்ல கையெழுத்து எழுதுகிறவர்களாக வைத்து எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்த சப்-கோர்ட்டுகள் இரண்டும் அநேகமாக எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தென் ஆற்காட்டில் கடலூரில் இருக்கின்றன. ஒன்றைப் பிரித்து விருத்தாசலத்தில் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும்.

அதோடு, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் எல்லாம் விருத்தாசலம் தாலூகாவில் ஒரே இடத்தில் இருக்கின்றன. ஏற்கெனவே திட்டகுடியில் இருந்தது, ரெவின்யூ இலாகாவில் இருந்தபோது, திட்டகுடியில் ஏற்படுத்த முடியாவிட்டாலும், மாதத்திற்கு 2 முறை அல்லது 3 முறை விருத்தாசலத்திற்கு சப்-மாஜிஸ்ட்ரேட் சென்று விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த டெபுடி தாசில்தார், லோன் தாசில்தார் க்ரிமினல் வழக்குகளை விசாரிக்க அனுமதி கொடுக்கிறார்கள். அதிலே தாமதம் ஆகிறது. ஆகையால் சப்-மாஜிஸ்ட்ரேட்டே விசாரிக்க வழி வகைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலை பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏழைக்கும் பணக்காரருக்கும் சமமான நிலையில் நீதி வழங்கப்படுகிறது. குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கவும், மறு முறை குற்றங்கள் செய்யாமல் சீர்திருத்தம் செய்யவும்தான் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள். ஏற்கெனவே இருந்ததைவிட நம் காங்கிரஸ் அரசாட்சி ஏற்பட்ட பிறகு, சுதந்திரம் ஏற்பட்ட பிறகு, கைதிகளுக்கு நல்ல வசதிகள் கொடுத்திருக்கிறார்கள். நல்ல சாப்பாடு கிடைக்கிறது. நல்ல 'சாப்பாடும், நல்ல வசதிகளும் இருப்பதால் வெளியில் இருப்பதைவிட உள்ளே இருப்பது நலமாக இருக்கிறது என்று மறுபடியும் குற்றம் செய்ய முன் வருகிறார்கள் என்று நினைக்கிறேன். சாப்பாடு வசதியைக் குறைத்தால் கூடத் தேவலை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலைகளில் இருப்பவர்களின் குடும்பங்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று ஒரு நண்பர் பேசினார். இதைப்போல் வசதி செய்துகொடுத்துக்கொண்டே இருந்தால் " நாம் ஒருவர் சிறைச்சாலைக்குச் சென்றால் பரவாயில்லை, நம்முடைய குடும்பத்தை அரசாங்கம் காப்பாற்றும் என்று நினைத்து, மறுபடியும் குற்றம் செய்து

20th March 1963] [திரு. இ. நாராயணசாமி பிள்ளை]

கொண்டே இருப்பார்கள். ஆகவே, அம்மாதிரி வசதி செய்து தரக் கூடாது என்று நினைக்கிறேன். மொபசலில் சப் ஜெயில் சூபரிண்டெண்டாக டெப்யூடி தாசில்தாரைப் போட்டிருக்கிறார்கள். இதனால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்த வேலையையும் சப்-மாஜிஸ்டிரேட்டிடமே கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும். சில சமயங்களில் கைதிகள் வீட்டிற்கு லெட்டர் எழுதவேண்டுமென்றால் கோர்ட்டிலேதான் சப்—மாஜிஸ்டிரேட்டிடம் கார்டு கேட்கவேண்டியிருக்கிறது. டெப்யூடி தாசில்தாரைக் கேட்க முடிவதில்லை. அதே மாதிரிதான் கைதிகளுடைய குடும்பத்தினர்கள் கைதிகளைப் பார்க்க அனுமதி வேண்டுமென்றால், டெப்யூடி தாசில்தாரைப் பார்த்து அனுமதி வாங்கமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால், டெப்யூடி தாசில்தார் " காம்ப் " போய்விடுகிறார். ஆகவே, இந்த வேலையை சப்—மாஜிஸ்டிரேட்டிடமே ஒப்படைத்து விட்டால், கைதிகளுக்கு நலமாக இருக்கும்.

ஜெயில்களில் நல்ல சாப்பாட்டு வசதி இருப்பதினால், கைதிகள் தேகத்தில் முறுக்கு ஏறி கம்பிகளைக்கூட உடைத்துவிடுகிறார்கள். ஆகவே, ஜெயில்களிலுள்ள கம்பிகள் சரியாக இருக்கின்றவா என்று அவ்வப்பொழுது பார்த்துச் சரி செய்யவேண்டும்.

சிறு பிள்ளைகள் குற்றம் செய்தால் அவர்களைச் சீர்திருத்துவதற்கு வேண்டி பள்ளிகளை அமைத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்திருக்கிறார்கள். அதுவும் பாராட்டுக்குரியது. இந்த இரண்டு மான்யங்களையும் நான் முழுமனதுடன் ஆதரித்து, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். மாதவன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் நாம் கைதிகளைப் பழிவாங்கும் எண்ணத்தைக் கைக்கொள்ளக் கூடாது என்பதைப் பண்பட்ட அரசியல்வாதிகள் அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்வார்கள். சிறைச்சாலைகளில் கைதிகள் பழிவாங்கப்படவேண்டும் என்ற உணர்ச்சி எந்த அரசாங்கத்திற்கும் இருக்கக் கூடாது என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக, கைதிகளுக்கு எப்பொழுது விலங்கு பூட்டப்படவேண்டுமென்பது பற்றி விதிகள் தெளிவாகக் கூறுகின்றன. அந்த விதிகளை மாற்றி அமைக்கக் கூடிய முறையில், சட்டத்திற்குப் புறம்பான முறையில், கைதிகளுக்கு விலங்கு போடக்கூடிய சூழ்நிலை நம்முடைய அரசாங்கத்தில் இருக்கிறது என்பது மிகவும் வருத்தப்படக்கூடிய ஒரு சூழ்நிலையாகும். காந்தி அடிகளுக்கு விலங்கு போடப்பட்ட பொழுது, சிறைச்சாலை அதிகாரி அவரைப் பார்த்து "நீங்கள் வெட்கப்படுவீர்கள், விலங்கை மறைப்பதற்கு ஒரு புத்தகத்தைத் தருகிறேன். அதை வைத்து மறைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறியதாக அவருடைய வாழ்க்கைக் குறிப்பிலே காணப்படுகிறது. அண்மையிலே நமது உயர்நீதி மன்றம் எப்பொழுது விலங்கு பூட்டப்படவேண்டும் என்பது பற்றி தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறது. "**There was no authority to impose any fetters on a prisoner unless he was a refractory, violent or dangerous prisoner**" இதைப்பற்றி 462-வது விதி, நமது மாமன்றத்திலே செய்யப்பட்ட விதிகளில் ஒன்றாக அமைந்து இடக்கிறது. அதை மாற்றி, அந்த விதிக்கு புறம்பாக ஒருவருக்கு விலங்கு பூட்டப்படுகிறது என்றால், அரசாங்கத்திற்குப் பழி வாங்குகிற உணர்ச்சி இருக்கிறது என்ற கருத்துதான் மக்களிடையே ஏற்படும். உதாரணமாக, தலைவர் அவர்களே, நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கும் நண்பர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இது போன்று பலாத்காரத்தைத் தூண்டக்கூடியவரா ? இதை அரசாங்கம் பரிசீலனை செய்துபார்க்க வேண்டும். அவரை விலங்கிட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயல் இந்த அரசாங்கத்தில் நடைபெற்றிருக்கிறது என்றால், அது எவ்வளவு தூரம் வருத்தப்படக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசியலில் பழிவாங்கும் உணர்ச்சி என்று நான் சொல்லுவதைவிட, இது போன்ற முறையை அதிகாரிகள் கைக்கொள்ளாதபடி அரசாங்கம் மிகவும் கவனித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. எஸ். மாதவன்] [20th March 1963

அதுபோல சிறைச்சாலைக்கு உள்ளே செல்லுகிறவர்கள் மீண்டும் உயி
ரோடு திரும்புவார்களா என்று சந்தேகப்படக்கூடிய அளவில் நான்
சிறைச்சாலைகளுக்குள் சுகாதாரம் பேணிக் காக்கப்படுகிறது. 1930-ல் சர்தார்
வல்லபாய் படேல் அவர்கள், 'ஒரு நாள் காலை நான் ஜெயிலில்
எழுந்திருந்து பார்த்தபொழுது ஒரு பெரிய க்யூ வரிசை நின்றுகொண்டி
ருந்தது. அந்த க்யூவில் நானும் போய் நின்றுகொண்டு லெட்ரினுக்குப்
போகக்கூடிய சூழ்நிலை இருந்தது' என்று பிரிடிஷ் ஏகாதிபத்திய ஆட்சி
யின்போது இருந்த நிலைமையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், 30
வருஷங்கள் சென்றபிறகு, 15 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி இந்த நாட்டில்
ஆண்டதற்குப் பின்னாலே, 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதி நானும்
அதே காட்சியைத் தான் சிறைச்சாலையிலே காணக்கூடிய ஒரு சூழ்நிலை
ஏற்பட்டிருக்கிறது. இதனால் சிறைச்சாலைகளில் எந்த அளவுக்கு சுகாதாரம்
பேணிக் காக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். சிறைச்சாலை
களுக்குச் சென்றவர்கள் மீண்டும் உயிரோடு திரும்பிவரவேண்டுமென்ற
ஒரு கொள்கை நிச்சயம் அரசாங்கத்திற்கு இருக்கும் என்று நான் நினைக்
கிறேன். அதற்கு மாறாக, சிறைச்சாலைகளில் சுகாதார வசதி மிகவும்
குறைவாக இருப்பதை நம்முடைய அரசாங்கம் நன்றாகக் கவனிக்கவேண்
டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிறைச்சாலைகளில
எப்படிப்பட்ட நிலைமையில் சுகாதார வசதிகள் பேணிக் காக்கப்படவேண்டும்
என்பதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளில் ஒரு விதியாவது
சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்பது சந்தேகத்திற்குரிய விஷயம்தான்.
மதுரை, திருச்சி சிறைச்சாலைகளைப் பொறுத்த அளவில் நான் உறுதியாகச்
சொல்லுவேன். அங்கெல்லாம் விதிகள் புறக்கணிக்கப்பட்டு சுகாதார வச
திகள் நிச்சயம் சரிவரச் செய்யப்படவில்லை என்பதை நான் இங்கே திட்ட
வட்டமாகச் சொல்லிக்கொள்ளுவேன். விதி செய்துவிட்டால் மட்டும்
போதாது. அந்த விதிகளைப் பின்பற்றி சிறைச்சாலைகளில் நல்ல முறையில்
சுகாதார வசதிகளைச் செய்துதர அரசாங்கம் முன்வர வேண்டும் என்று
கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1956-ல் இந்த மன்றத்தில் செய்திருக்கிற விதியின்படி ஒரு கைதிக்கு
62 நயா பைசா மதிப்புள்ள உணவு தரப்படவேண்டும். இந்த விதி இந்த
மன்றத்தினால் இயற்றப்பட்ட போதிலும், ஒரு நாளைக்கு ஒரு தனி மனித
னுக்கு இன்றைய சூழ்நிலையில் 62 நயா பைசா சாப்பாடு எப்படிப்போதும்
என்பதைக் கொஞ்சம் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறைச்
சாலைகளில் உள்ள குறைகளைப் பற்றி இந்த மாமன்றத்திலுள்ளவர்கள்
தெரிந்துகொள்ள வேண்டும், சிறைச்சாலைகளுக்குச் சென்று அங்குள்ள
குறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும், அதற்கு வேண்டிய வசதி
களை நமது அரசாங்கம் செய்துதர வேண்டும் என்று கேட்கப்பட்டபொழுது,
1954-ல் காங்கிரஸ் கட்சி சார்பிலே, இந்த சட்ட மன்றத்திலேயுள்ள எந்த சட்ட
மன்ற உறுப்பினர் சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்வையிடவேண்டு
மென்று விரும்பினாலும் உடனே அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறேன்
என்று அன்று இருந்த ஜெயில் நிர்வாக அமைச்சர் அவர்கள் உறுதி
அளித்திருக்கிறார். ஆனால், இந்த அரசாங்கத்திற்கு நான் அது பற்றி
எழுதியபோது, "சட்டமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்று
பார்வையிட அனுமதிக்க மாட்டோம்", என்று இந்த அரசாங்கம் எனக்குப்
பதில் அனுப்பியிருக்கிறது. இந்த அரசாங்கம் கொடுத்த உறுதியை இதே
அரசாங்கம் மாற்றி அமைக்கக்கூடிய சூழ்நிலை இந்த ஆட்சியிலே
இருக்கிறது என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நீதித் துறையைப் பொறுத்தவரையில், நீதி எளியவர்களுக்கு மிகக்
குறைந்த செலவில் கிடைக்கக் கூடிய ஒரு நிலை இன்றைய ஜனநாயக
ஆட்சியில் இருக்கிறதா என்று நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.
உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள
அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ரிட் மனுக்களை உயர் நீதிமன்றத்
தில்தான் கொடுக்க முடியும். பெரும்பாலான இன்றைய சட்டங்களைப்
பொறுத்தவரையில் ரிட் மனுக்கள் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இந்த
நாட்டிலே நிலவி வருகிறது. அப்படி இருக்கும்பொழுது ரிட் மனுக்கள்

20th March 1963] [திரு. எஸ். மாதவன்]

சென்னைக்கு வந்துதான் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதை மாற்றி
அமைக்கவேண்டும். மதுரையில் உயர் நீதி மன்ற பெஞ்ச் ஒன்று அமைக்கக்
கூடிய முறையிலே இந்த அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே சமயத்தில் உயர் நீதி மன்றத்திற்கு நீதிபதிகள் எங்கேயிருந்து
தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதை இது வரையில் அரசாங்கம் பரி
சீலித்து என்ன முடிவுக்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள
ஆசைப்படுகிறேன். இதுவரையிலே சென்னையில் தொழில்செய்யும் வழக்க
றிஞர்களைத்தான் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கும் முறை இந்த நாட்டில்
பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தில் வேறு பகுதியிலுள்ள
வழக்கறிஞர்கள் திறமையற்றவர்கள் என்று அரசாங்கம் கருதுகிறார்களா ?
அவர்களுக்கு வாய்ப்பு தரக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா ?
எந்த நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றினர்
களோ அதே நீதிமன்றத்தில் அவர்கள் நீதிபதிகளாக வேலை செய்யக்
கூடிய ஒரு சூழ்நிலையைத்தான் உண்டாக்கவேண்டும் என்று இந்த அர
சாங்கம் கருதுகிறதா ? மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு அம்மாதிரி
வாய்ப்பு கொடுப்பதற்கு ஏன் தயங்கவேண்டும் ? அதற்காக இந்த
அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். இந்தக் கருத்தை
இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்து, வலியுறுத்தி
அமுல் நடத்துவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நீதிமன்றங்கள் விரைவிலே வழக்குகளை முடிப்பதற்கு
அரசாங்கம் என்ன ஆலோசனை எடுத்திருக்கிறது ? இதுபற்றி ஏற்கனவே பல
முறை இந்த சட்ட மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "டிலேய்ட் ஜஸ்டிஸ்
இஸ் நோ ஜஸ்டிஸ்" என்பது தெளிவாக ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மை.
நீதிமன்ற படிக்கட்டுகளில் ஏறி இறங்கிப் பல ஆண்டுகள் கழித்துத்தான்
நீதி பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இந்த நாட்டிலே நிலவி வருகிறது.
அதை மாற்றியமைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால்
ஏழைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்
கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல ஆண்டுகளுக்குப் பின் 10-00
னால்தான் ஒரு சிறிய தகராறைத் தீர்த்துவைக்கக்கூடிய சூழ்நிலை இருக் a.m.
கிறது. சாதாரண கீழ்க்கோர்ட்டுகளில் கூட அந்த நிலை இருக்கிறது.
அதை மாற்றி அமைக்க, மிக விரைவிலே ஏழைகளுக்கு நீதி கிடைப்பதற்கு
வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். காங்கிரஸ் ஆட்சி வந்த
தற்குப் பின்னாலே, ஏழை மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். அதற்காக
இலவசமான முறையிலே சர்க்காரிலே வழக்கறிஞர்களை அமர்த்தித்தர
வேண்டும் என்ற ஒரு கொள்கை அனுஷ்டிக்கப்படவேண்டும் என்ற ஒரு
கருத்து பரவலாகச் சொல்லப்பட்டு வருகிறது. அந்தக் கருத்தை அமுல்
நடத்துவதற்கு இதுவரையில் இந்த அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்
கொண்டிருக்கிறது ? நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். கல்டி
வேடிங் டெனன்ட்ஸ் புரோடெக்ஷன் சட்டத்தை விவசாயிகளுக்கு நன்மை
கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலே உருவாக்கியிருக்கிறோம். ஆனால்,
நடைமுறையில் பார்க்கும்பொழுது, விவசாயிகள் நீதி மன்றத்திற்குப்போக
முடியாத சூழ்நிலையிலே, அந்த நிலச்சுவான்தார்கள் விவசாயிகளைப் பழி
வாங்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்
திருக்கிறது. இந்த சட்டத்தின் கீழ் நீதி மன்றங்களிலே உழவர்களின்
சார்பாக வழக்காடுவதற்கு, அரசாங்கமே வழக்கறிஞர்களை ஏற்படுத்தித்
தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்
கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே,
இந்த விவாதத்தில் கலந்து கொண்ட கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது
போல, நீதி பரிபாலனம், அதோடு சிறைகள் பரிபாலனம், இவை இரண்
டையும் சேர்த்து இங்கே விவாதம் நடைபெறுவது மிகவும் பொருத்தமா
னது. நீதி வழங்குவதற்காகத்தான் சிறைகள் அமைக்கப்பட்டிருக்கின்
றன. தண்டிக்கப்பட்டவர்கள் சிறையிலே வைக்கப்படுகிறார்கள். சிறைக

ளில் இருக்கிற வசதியைப் பற்றியும், சிறைகளில் இருக்கிற குறைகளைப் பற்றியும், கனம் அங்கத்தினர்கள் அவரவர்களுடைய அனுபவத்தைக் கொண்டு குறிப்பிட்டார்கள். இப்பேர்ப்பட்ட அனுபவம் நல்லதுதான். அவ சியம் என்று நான் சொல்ல மாட்டேன். இந்த அனுபவம் வரவேற்கத் தக்கது. அதைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நேராக எல்லாவற்றையும் தெரிந்துகொண்டால்தான் நல்லது. ஆதி சங்கரர் கூட பல அனுபவங்களைப் பெறுவதற்காகத் தன் உடலை மாற்றிக்கொண்டு வேறு உடலிலே புகுந்து அந்த அனுபவத்தைப் பெற்றூர்கள் என்று கூறுவ துண்டு. இப்படி சிறையிலே இருக்கக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது ஒரு விதத்தில் நல்லது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்வார் கள் என்று நினைக்கிறேன்.

இந்த விவாதத்திலே சிறைவாச அனுபவம் உள்ள சில கனம் அங்கத் தினர்கள் பேசினூர்கள். இந்த மன்றத்திலே சில வழக்கறிஞர்கள் இருப் பது பெருமை அளிக்கக் கூடியது. அவர்கள் கோர்ட்டு விஷயங்களைக் பற்றிப் பேசினூர்கள். மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பதில்லை. கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் ஒரு வழக்கறிஞர். நீதி வழங்குவதைப் பற்றிப் பேசினூர்கள். சிறையைப்பற்றி அவருக்குப் போதிய அனுபவம் இல்லை. குறைந்த அனுபவம்தான் (சிரிப்பு) மத்திய சிறையில் போய்க் கொஞ்ச நாட்கள் இருந்து பார்க்கும் நிலைமை ஏற்படவில்லை (சிரிப்பு).

திரு. அ. பெ. தர்மலிங்கம் : மத்திய சிறையில் ஒரு மாதம் இருந் திருக்கிறூர்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது அண்டர் ட்ரயலாக இருந்தமுறை யிலே. தீர்ப்பு அளிக்கப்பட்டபோது விடுவிக்கப்பட்டார்கள். நான் கோர்ட்டை குறை கூறவில்லை. தண்டனை அடைந்த பிறகு இரண்டு, மூன்று மாதங் கள் சிறையில் இருந்தால் நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கும். (சிரிப்பு) இப்பொழுது சிலர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறூர்கள். அவர்களைப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. சிறை பரி பாலனத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று நீண்ட காலமாகவே வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்போதைக்கப்போது பல குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் பரிசீலனை செய்து, சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறூர்கள். சமீ பத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குழு இந்த ஆட்சியினூல் அமைக்கப் பட்டது. நீதிபதியாக இருந்த ஒருவர் அடங்கிய குழு நன்ருக ஆராய்ந்து பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறூர்கள். அவைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அமுல் நடத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

சிறையிலே இருப்பவர்களுக்கு வசதிகள் போதவில்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தாங்கள் நேராகக் கண்ட தையோ, அல்லது கைதிகளிடமிருந்து கேட்டதையோ பற்றிக் குறிப்பிட்டார் கள். நேராகக் கண்டது என்று சொன்னூல், அதற்கு நீண்ட கால அனு பவம் வேண்டும். ஆகவே, அங்கே இருக்கிற கைதிகள் சொன்னதை வைத்துக்கொண்டு சொல்லியிருக்கிறூர்கள். சிறையிலே இருப்பதற்கு யாருக் கும் விருப்பம் இருக்காது. அது கொடுக்க வேண்டும், இது கொடுக்க வேண்டும் என்றுதான் சொல்லுவார்கள். குற்றம் செய்து விடுகிறூர்களோ தவிர, அதற்குப் பிறகு எவ்வாறு தப்பித்துக் கொள்ளுவது என்றுதான் பார்க்கிறூர்கள். சிறைக்குச் சென்று விட்டால், எப்பொழுது வெளியிலே வர முடியும் என்றுதான் பார்க்கிறூர்கள்.

ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டவர்களுக்குத் தாராளமாக ரெமிஷன் கொடுத்து, அவர்களை வெளியிலே அனுப்புவதில்லை என்று குறிப்பிட்டார் கள். அதற்கு ஒரு அட்வைசரி போர்டு இருக்கிறது. போலீஸார் சொல்லு வதை மாத்திரம் கேட்கவில்லை. போலீஸார் சொல்லுவதையும் கேட்க வேண்டியிருக்கிறது. எனக்குத் தெரியும். ஆயுள் தண்டனை கொடுக்கப் பட்ட ஒருவருக்கு ரெமிஷன் கொடுத்து, அவர் வெளியிலே போய், மறுபடி யும் ஒரு கொலை செய்ய நேர்ந்ததை நான் பார்த்திருக்கிறேன். சில

சமயங்களிலே, முன்னதாகவே **premature release** செய்ய வேண்டு மென்று விசாரணை செய்யும்பொழுது, அவருக்கே அது நல்லதல்ல என்று புலப்படுகிறது. அட்வைசரி போர்டு தாராளமாக நடப்பதில்லை என்று சொன்னூர்கள். அட்வைசரி போர்டு தாராளமாக சிபார்சு செய்கிறூர்கள் என்றுதான் எனக்குப் புலப்படுகிறது. அவர்களுக்கும் சிபாரிசு இருக்கும். அந்த சிபாரிசை வைத்துக்கொண்டு ரொம்பவும் தாராளமாகச் செய்கிறூர் கள் என்று தோன்றுகிறது. ஆயுள் தண்டனை பெறுகிறவர்களுக்கு ரெமி ஷன் கொடுக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் பெரோல் கொடுக்க வேண்டுமென்று யோசனை தெரி விக்கப்பட்டது. அந்த யோசனையைப் பரிசீலனை செய்து, அதை ஏற்றுக் கொள்ளுவது முறையல்ல என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது பெரோல் கொடுப்பதிலே தாராளமாகக் கொடுக்கிறோம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்ப்பதில்லை. சிறையிலிருக்கும்பொழுது பெரோ லுக்காக நம்மைச் சார்ந்தவர்கள் எவ்வளவு தூரம் முயற்சி செய்தார்கள், அதிலே எவ்வளவு தூரம் ஏமாற்றம் இருந்தது என்பதெல்லாம் தெரியும். அரசியல் கைதிகளாக இருந்தாலும், சில காரணங்களுக்காகத்தான் பெரோ லிலே விட முடியும். அவ்வாறு தகுந்த காரணங்கள் இருந்தால் பெரோல் கொடுக்கிறோம். பெரோல் கொடுத்து, அதை நீடிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறூர்கள். வேறு சில காரணங்களுக்காக, பெரோல் கொடுக்கக் கூடாது, அதை நீடிக்கக் கூடாது என்று இருந்தால் ஒழிய, மற்றபடி தாராளமாகப் பெரோல் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சாப்பாட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆங்கிலத்திலே, "**The proof of the pudding is in the eating**" என்ற ஒரு பழமொழி இருக்கிறது. கனம் திரு. மாதவன் அவர்கள் 'சட்ட மன்ற உறுப்பினர்கள் சிறையைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை' என்று சொன்னூர் கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் யாராயிருந்தாலும், சிறையைச்சுற்றிப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கப்படும். ஆனூல் அவருக்கு வேண்டியவர் கள் சிலர் சிறையில் இருக்கும்பொழுது, அந்த சமயத்தில் அவர்களைப் பார்க்க வேண்டுமென்பதற்காகக் கேட்டார்கள்.. அதற்கு விதிகள் இருக்கின் றன. அந்த விதிகளின்படி இன்டர்வ்யூ செய்யலாம். வழக்கறிஞர் என்ற ஹோதாவில் போய்ப்பார்க்கலாம். அவர்களுக்கு வேண்டியவர்கள் இருக்கிறூர்கள், அவர்களைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று சொன்ன சமயத்தில்தான் அனுமதி அளிக்கப்படவில்லையே தவிர, பொதுவாக எந்த சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், சிறையைப் பார்ப்பதற்கு அனு மதி கொடுக்கப்படும்.

வாரந்தோறும் எடையைக் கணக்கிடுகிறூர்கள். பொதுவாக சிறையிலே இருப்பவர்களுக்கு எடை குறைவதில்லை. அப்படிக் குறைந்தால் உடனே கவனிக்கப்பட்டு வருகிறது. உடனடியாக சிறையிலுள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறூர்கள். அப்படியும் குணமாகவில்லை என்ருல், வெளியிலே உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்படுகிறூர்கள். இதெல்லாம் கவனிக்கப் பட்டு வருகிறது. சிறையிலே கிடைக்கிற உணவு ருசி இல்லாமல் இருக்க லாம். ஆனூல் போதாமல் இருக்கிறது என்று சொன்னூல் அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. கணிசமான அளவு கொடுக்கிறூர்கள். கொடுக்கப் படும் உணவு ஆரோக்கியமானது, சுத்தமானது, சத்து நிறைந்தது என் பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். எனக்கே அப்பேற்பட்ட உணவு வீட்டிலே கிடைப்பதில்லை. (சிரிப்பு). ஏதோ வீட்டிலே கொடுக்கிறூர் கள், அதைச் சாப்பிடுகிறோம். ஆனூல் சிறையிலே என்னென்ன சத்து இருக்க வேண்டுமென்பதைக் கணக்குப் பார்த்துக் கொடுக்கிறூர்கள். கைக் குத்தல் அரிசிக்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள். கைக்குத்தல் அரிசி வேதாரண்யத்திலிருந்து திருச்சிக்கு வர வேண்டும் என்பதல்ல. சப்ளை செய்வதற்கு கண்டிராக்டர்கள் இருக்கிறூர்கள். கைக்குத்தல் அரிசியை உபயோகிக்க வேண்டுமென்று இருக்கிறது. நெல் அறைக்கப்படுகிறது. கைக்குத்தல் அரிசி ஆரோக்கியமானது என்ற காரணத்தினூல்தான் கொடுக்கப் படுகிறது. ஆனூல், நன்ருக அது அளிந்த பிறகு வடிக்க வேண்டும்.

போகாமல் இருந்தால்தான் கொஞ்சம் கஷ்டம் ஏற்படும். ஆனால் மில் அரிசி மாதிரி அதிகமாகச் சாப்பிட்டால் அஜீர்ணம் ஏற்படும். கைக்குத்தல் அரிசி சாப்பிடுவதன் காரணமாக எடை ஏறிக்கொண்டு வருகிறது. குறையவில்லை. ஆனால், கைக்குத்தல் அரிசியை முதலில் சாப்பிடுகிறவர்களுக்கு அது மருந்து சாப்பிடுவதுபோல் இருக்கும். சாப்பிட்டுப் பழக்கப்பட்டுவிட்டால் அதையே சாப்பிடும்படியாகத் தோன்றும். நான்கு நாட்கள் சாப்பிட்டுப் பழக்கப்பட்டு விட்டால் பிறபட்டு அதையே தான் சாப்பிடும்படியாகத் தோன்றும். அதன் பிறகு கைக்குத்தல் அரிசி வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். யாருக்கோ உதவி செய்யவேண்டும் என்பதற்காகக் கைக்குத்தல் அரிசியை உபயோகப்படுத்துகிறோம் என்பது இல்லை. கைக்குத்தல் அரிசி நல்லது என்பதற்காகத் தான் அது உபயோகப்படுத்தப்படுகிறது.

இதற்கு முன்பு கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வாங்குவதாகத் தான் இருந்தது. பல பொருள்களை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்குவதாகத் தான் இருந்தது. இப்பொழுது அதை மாற்றி விட்டு டெண்டர் முறையில் வாங்குவதாக இருக்கிறது. யார் குறைந்த தொகைக்குக்கொடுக்கிறார்களோ அவர்களிடமிருந்து வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. போட்டி போட்டு யார் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்களோ அவர்களிடமிருந்து வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குறைந்த விலைக்கு யார் நல்ல பொருளாக சப்ளை செய்கிறார்களோ அவர்களிடமிருந்து வாங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவு மூலமாக வாங்குவதாக இருந்தாலும், அதை நல்ல முறையில் கண்காணித்துத்தான் வாங்கப்படுகிறது. மார்க்கெட் ரேட்டுக்கு யார் குறைவாகக் கொடுக்கிறார்களோ அவர்களிடமிருந்து தான் வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கோவை கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் நடந்துகொண்டு வருகிறது. டெண்டருக்கு விடும்போது யார் குறைந்த விலைக்கு சப்ளை செய்வதாகச் சொல்லுகிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. குறைந்த விலைக்கு சப்ளை செய்வதுடன் நல்ல தரமாகவும் இருக்க வேண்டும். அந்த முறையில் கோவை கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் கொடுத்து வருகிறது.

அடுத்தபடியாக, சிறைச்சாலைகளில் வைத்திய வசதியைப்பற்றிச் சொன்னார்கள். மத்திய சிறைச்சாலையைப் பொறுத்த மட்டில் சுகாதாரம் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. வேண்டிய வசதிகளையும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். டி.எம்.ஓ. அடிக்கடி வரவேண்டும் என்றும், ஒரு வாரத்திற்கு ஒரு முறையாவது வரவேண்டும் என்றும் சொன்னார்கள். அப்படி வரவேண்டிய அவசியம் இல்லை. எப்பொழுது அவசியம் ஏற்படுகிறதோ அப்பொழுது வந்து கொண்டுதானிருக்கிறார்.

அடுத்தபடியாக, கை தூக்குவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி எங்களுக்கும் தெரியும். நான் கூட கை தூக்கி இருக்கிறேன். தண்டனை அடைந்த பல விதமான கைதிகள் அங்கே இருக்கிறார்கள். சிறையிலுள்ள அதிகாரிகள் தவறு செய்யக்கூடாது என்று இருக்கிறது. இருந்தாலும் சில கைதிகள் சிறையில் முறைக்கிறார்கள். உத்தரவுகளை மறுக்கிறவர்களும் இருக்கிறார்கள். இப்படிப் பலவிதமானவர்கள் இருக்கிறார்கள். பலவிதமான தண்டனை அடைந்தவர்கள் இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் கண்காணிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆயுள் தண்டனை அடைந்தவர்களும் இருக்கிறார்கள். சிறையை விட்டு வெளியே சென்றுவிட்டு மறுபடியும் தண்டனை அடைந்து சிறைக்கு வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுடன் அதிகாரிகள் பழக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சிலருக்கு சிறையை விட்டுச் சென்றாலும் மறுபடியும் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இதையெல்லாம் சீர்திருத்தவேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களில் சிலர் முறைக்கிறார்கள். சரியானபடி நடந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். இவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால்

சிறையில் கலகம்தான் ஏற்படும். வேண்டிய "டிசிப்ளின்" இருக்காது. சிறைக்கு வருகிறவர்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இருக்கிறோம். அவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் இல்லை.

அடுத்தபடியாக மருந்து கொடுப்பதைப்பற்றிப் புகார் சொன்னார்கள். அதாவது கார்மினேடிவ் மிக்ஸ்சர்தான் கொடுக்கிறார்கள் என்று. அங்குள்ள கம்பவுண்டர் கார்மினேடிவ் மிக்ஸ்சர்தான் கொடுக்கிறார் என்றும் சொல்லுகிறார்கள். சாதாரணமாக சிறையில் இருக்கக் கூடியவர்களுக்கு அதிகப்படியாக சாப்பிட்டு விட்டு அஜீர்ணம்தான் ஏற்படுகிறது. அதனால் தான் கார்மினேடிவ் மிக்ஸர் கொடுக்கிறார்கள். சில இடங்களில் கம்பவுண்டர்களே இஞ்செக்ஷன் செய்வதாகக் கூடச் சொல்லுகிறார்கள். ஆனால் இங்கு அப்படி இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன், நான் சிறையில் இருக்கும்போது எனக்கு அங்குள்ள கம்பவுண்டர் தான் ஊசி போட்டார்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினருக்கு அந்தக் கம்பவுண்டர் மீது நம்பிக்கை இருந்திருக்கும் போலிருக்கிறது. அப்படி நம்பிக்கை இருந்து போட்டுக்கொண்டால் அதைப்பற்றி மகிழ்ச்சிதான். நல்ல பழக்கப்பட்ட கம்பவுண்டர்களும் இருக்கிறார்கள். பல இடங்களில் அப்படிப் பழக்கப்பட்ட கம்பவுண்டர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஊசி போடுவதில் தவறு ஒன்றும் இல்லை. அவர்களுக்கு ஊசி போடுவதற்கு அனுமதிதான் கொடுக்கப்படுவது இல்லை. அனுமதியாகக் கொடுக்கக் கூடாது என்பதுதான், ஆனால் ஊசி போடுவதில் தவறு ஒன்றும் இல்லை.

சிறையில் வைத்திய வசதி, மருந்து வசதிகள் இல்லை என்று சொன்னார்கள். வேண்டிய வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஹெட்க்வார்டேர்ஸ் ஆஸ்பத்திரிக்குச் சென்றுகூட வைத்தியவசதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சிறையில் ஹிந்துக்களுக்கு மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ரிலிஜியஸ் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இல்லை என்று சொல்லப்பட்டது. அவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பல இடங்களில் மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்ஸுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிறையில் நாடகங்கள் நடத்துவது பற்றி குறிப்பிட்டார்கள். இப்பொழுது அது நடந்து வருகிறது. சிறையிலேயே நல்ல ஆற்றல் படைத்த அனுபவம் பெற்ற நாடக அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். வெகு நாள் அனுபவம் உள்ளவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் நாடகங்களை நடத்திக்கொண்டுதான் வருகிறார்கள்.

விலங்கு போடுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறைச்சாலை விதிகளின்படி அதைப் போட வேண்டியதாக இருக்கிறது. ஹைக்கோர்ட்டின் தீர்ப்புப்படிதான் அதைப் போடுகிறார்கள். ஓர் இடத்திலிருந்து வேறு இடங்களுக்குக் கைதிகளை அழைத்துச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது விலங்குகளைப் போட்டு அழைத்துச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. ஹைக்கோர்டின் தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தப்படிதான் விலங்குகள் போடப்படுகின்றன. ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்குக் கொண்டுபோகும்போதும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகும்போதும், கோர்ட்டுகளுக்குக் கொண்டுபோகும்போதும், விலங்குகளைப் போட்டுக்கொண்டு போக வேண்டியதாக இருக்கிறது. அவர்களைக் கொண்டுபோகக்கூடியவர்களுக்கு இந்தப்பொறுப்பு ஏற்பட்டிருப்பதால் அவர்கள் அவ்வாறு கொண்டு போகிறார்கள். கொண்டுபோகக்கூடியவர்களுடைய பொறுப்பாக இருக்கிறபடியால் ஜாக்கிரதையாகக் கொண்டு போகவேண்டும் என்பதற்காகத்தான் விலங்குகளைப் போட்டுக் கொண்டுபோகிறார்கள். எப்பொழுதும் விலங்கைப் போடுவது என்பது இல்லை.

அடுத்தபடியாக நீதிபரிபாலனத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். நீதி துரித
மாகத் தரப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். காலதாமதம் ஆகி
றது என்றும் சொன்னார்கள். மற்ற மாகாணங்களில் நடப்பதைக்காட்டி
லும் நமது தமிழ் மாகாணத்தில் வழக்குகள் விரைவில் தீர்க்கப்படுவதைக்
கண்டு பெருமைப்பட வேண்டியதாக இருக்கிறது. விசேஷமாக குற்ற
விசாரணைகளைப் பொறுத்த மட்டில் ரொம்பவும் துரிதமாக முடிகின்றன.
மற்ற சிவில் விவகாரங்களும் அவ்வளவு கால தாமதம் ஆவதில்லை என்
றும் சொல்லலாம். நல்ல முறையில் நீதி மன்றங்கள் பணியாற்றி வரு
கின்றன என்றே சொல்லலாம். ரிட் மனுக்களுக்கு சென்னைக்கு வர
வேண்டியதாக இருக்கிறது என்றும், அதனால் ஏழைகளால் இங்கு வர
முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். மதுரையிலேயே ரிட் மனுக்களை விசா
ரிக்க ஹைகோர்டு பெஞ்சு ஒன்றை அமைத்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள
வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள
வில்லை. ஹைகோர்ட்டுக்கு வருவதாக இருந்தால் ஏழைகளுக்குச் செல
வாகிறது என்று சொன்னார்கள். அதனால் நீதி சுலபமாகக் கிடைக்க ஏற்பாடு
செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். இது ஒரு முக்கியமான
பிரச்னை. இதைப்பற்றி நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருடன் பரி
சீலனை செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக வழக்கறிஞர்களும்
ஒத்துழைக்க வேண்டியதாக இருக்கிறது. வழக்கறிஞர்கள் ஏழைகளிட
மிருந்து குறைவான பீஸ் வாங்கி வழக்குகளை நடத்த முன்வரவேண்டும்.
வழக்கு அறிஞர்களும் ஏழைகளுக்குச் சலுகை காட்ட முன்வரவேண்டும்.
இதில் வழக்கறிஞர்கள் அக்கறை எடுத்துக்கொண்டால் மேற்கொண்டு அர
சாங்கம் அதில் அக்கறை செலுத்தும்.

நீதி மன்றங்களில் நடவடிக்கைகள் நடத்தப்படும் மொழியைப்பற்றி
கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள். சாதாரண
மாக கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் தமிழில்தான் நடைபெறுகின்றன.
ஹைகோர்ட்டில் கூட ஆங்கிலத்தில் நடக்க வேண்டும் என்று யாரும் வற்
புறுத்தவில்லை. வழக்கறிஞர்கள் தமிழில் வாதம் செய்தால் அதைப்
பற்றி ஆட்சேபணை இல்லை. வாதங்கள் முழுவதையும் தமிழில் வாதிக்க
லாம். ஹைகோர்டில் ஒரிஜினல் சைட் எங்கும் தமிழில்தான் எல்லா
நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. வழக்கறிஞர்கள் வாதங்களைத் தமி
ழில் நடத்தினாலும், அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. சில வாதங்க
ளில் வழக்கறிஞர்கள் சில நுட்பமான விஷயங்களையும் சொல்ல வேண்டிய
தாக இருக்கிறது. அப்பொழுது ஆங்கிலத்தில் சொன்னால்தான் நலமாக
இருக்கும். தமிழில் நடப்பதாக இருந்தாலும் அதை மொழி பெயர்க்க
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சாட்சியங்களையெல்லாம் தமிழில் நடத்து
கிறார்கள். அவையும் மொழி பெயர்க்கப்படுகின்றன. வழக்கு அறிஞரு
டைய சாமர்த்தியத்தினால் சில சமயங்களில் சாதாரண கேஸ்களும் வெற்றி
யடையக்கூடியதாக இருக்கின்றன. நல்ல கேஸ்களும் தோற்றுப்போகக்
கூடியதாக இருக்கிறது. அதற்கெல்லாம் காரணம், வாதங்களை எடுத்துச்
சொல்லுவதிலும் நீதிபதிக்கு மனதில் பதியும்படியாகச் சொல்வதிலும்
தான் இருக்கிறது. வழக்கறிஞர்களுடைய சாமர்த்தியத்தினால் சில சாதாரண
கேஸ்களும் வெற்றி பெறக்கூடியதாகப் போய் விடுகின்றன.
மொழியில் ஒன்றும் இல்லை. வாதங்களை எடுத்துச் சொல்வதில் இருக்
கிறது. பலவீனமான கேஸாக இருந்தாலும், திறமையாகப் பேசி வெற்றி
பெறலாம். சட்ட நுணுக்கங்களைத் திறமையாக எடுத்துச் சொல்ல வேண்
டும். கேட்கிற நீதிபதியினுடைய மனதிலே படும்படியாகவும் சொல்லவேண்
டும். கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுக்கும் அனுபவம் இருக்கும்—
கனம் அங்கத்தினர்களுக்கும் தெரியும். நீதிபதியின் மனதிலே படும்
படியாகச் சொல்வது முக்கியம். நீதி மன்றத்தில் தமிழில் பேசுவதை
நான் ஆட்சேபிக்கவில்லை. தமிழில் பேசலாம். தமிழில் பேசும்போது,
சட்ட நுணுக்கத்தை எடுத்துக் கையாண்டு நாம் ஏதோ அர்த்தத்தை
வைத்துச் சொன்னால், அது சில சமயங்களில் நீதிபதிக்குப் புரியாமல்
போகலாம். சட்டத்தைப் பொறுத்தவரையில், ரொம்ப "ப்ரிஸைஸ்" ஆக
இருக்க வேண்டும். ஒருவரும் பாதிக்கப்படக் கூடாது. அதைத்தான் முத
லிலே கவனித்துக்கொள்ள வேண்டும். "தமிழில் பேசி வழக்கை நடத்தி

விட்டேன்" என்று சொல்வது மட்டுமல்ல, வழக்கிலும் வெற்றி பெற
வேண்டும். சட்ட இயல் (ஜூரிஸ்ப்ருடன்ஸ்) பற்றிய ஒரு தமிழ்ப் புத்தகம்
நம்முடைய நீதி இலாகாவைச் சேர்ந்தவர் போட்டிருக்கிறார். இம்
மாதிரி புத்தகங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் போதிய புத்த
கங்கள் வரவேண்டும். இந்தியன் பீனல் கோட், ஸிவில் ப்ரொஸீஜர் கோட்,
ட்ரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராபர்டி ஆக்ட், இம்மாதிரி சட்டங்களிலிருந்து செக்
ஷன்களை நாம் எடுத்துச்சொல்வது என்பது ஒன்று. அதைப் புரிந்து
கொள்ளவேண்டியவர்கள் புரிந்துகொள்ளுகிறார்களா என்றும் பார்க்க
வேண்டும். இரண்டும் வேண்டும். இரண்டும் இருந்தால்தான் நீதி தவ
றாமல் பார்த்துக் கொள்ள முடியும். கட்சிக்காரருக்கும் நன்மை
கிடைக்க வேண்டும். அதற்குத் தக்கபடி, எவ்வளவு தூரம் தமிழில்
செய்ய முடியுமோ அதைத் தமிழில் செய்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.
கிராமக் கோர்ட் (வில்லேஜ் கோர்ட்) பற்றிச் சொல்லப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, கோர்ட்
களில் தமிழில் நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு அஸ்திவாரமாக 1957-ம்
ஆண்டு நம்முடைய சர்க்கார் ஒரு சட்டச் சொல் அகராதி தயாரிப்பது
பற்றி ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தது. ஏழு ஆண்டுகள் ஆகப்போகின்றன.
"கோர்ட்களிலும் சட்டக் கல்லூரியிலும் தமிழைக் கொண்டுவருவதற்கு
இந்தச் சட்டச் சொல் அகராதி ஒரு அஸ்திவாரமாக அமையும்" என்று
அந்த உத்தரவில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு,
மூன்று ஆண்டுகள் கழித்துக் கேட்டால், "இன்னும் ஆகவில்லை"
என்பார்கள். இப்பொழுது அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதைத்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை செய்துகொண்டு
இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழில் இப்போதே சட்டக் கல்லூரி
யிலும், நீதி மன்றங்களிலும் செய்யலாம் என்று திரு. கணபதியா
பிள்ளை அவர்கள் சென்ற ஆண்டு ஓரிடத்தில் குறிப்பிட்டார்கள். அதைக்
கொண்டுவருவதற்கு எந்த அளவுக்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டச் சொல் அகராதி தயாரிப்ப
தற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு அது நடைபெற்றுக்கொண்டிருந்தது.
நான் சமீபத்தில் அதைப்பற்றிக் கவனித்தபோது, வாரத்திற்கு ஒருமுறை
அந்தக்குழு கூடி, ஏதோ ஒரு சொல், இரண்டு சொல், மூன்று சொல்
முடிவுசெய்துவிட்டு—நான் யாரையும் குறை சொல்லவில்லை—தேநீர்
அருந்திவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். இது ரொம்பத் தாமதமா
கிறது என்றுதான் நான் இப்பொழுது சொன்னேன். சட்ட இயல் ஒரு
சிறந்த நூல். நம்முடைய நீதி இலாகா அதிகாரி ஒருவர் அதை ஆக்கி
யிருக்கிறார் என்று நான் சொன்னேன். அந்த அதிகாரியையே காரிய
தரிசியாகப் போட்டு, அவர்கள் முதலில் இதையெல்லாம் தயார் செய்து
விட்டும். டைரக்டர் ஆஃப் லீகல் ஸ்டடீஸ் அவர்கள் சட்டம் நன்கு
தெரிந்தவர்கள். தமிழ் தெரிந்தவர். அவரை வைத்துக்கொண்டு இதை
முதலில் தயார் செய்துவிடுவோம். அந்த நிலையில் அதைக் குழுவில்
வைக்கலாம். அப்பொழுது வேகமாக வேலை நடக்கும் என்று சொல்லி
அப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்துக்கொண்டு
வருகிறார்கள். நான் சமீபத்தில் விசாரித்தேன், சட்டச் சொல் அகராதி
தயாரிப்பதில் வேகமாக அபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்று
சொன்னார்கள். ரொம்ப அவசரப்பட்டாலும் தகுந்த வார்த்தைகளாகத்
தயாரிக்கமுடியாமல் போய்விடும். நான் முன்பே கூறியிருக்கிறேன், நம்
முடைய க்ளாஸரியில் கூட, "ஸ்டேஷனரி ஸப்-மாஜிஸ்ட்ரேட்" என்ப
தற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் போடப்படவில்லை என்று,
"லிடரல்" ஆகப் போட்டுவிட்டார்கள். இதிலெல்லாம் அவசரப்படவும்
கூடாது. ஆக, சட்டச் சொல் அகராதி தயாரிக்கும் வேலையெல்லாம்
நடந்துகொண்டு வருகிறது என்பதைத்

[திரு. எம். பக்தவத்சலம்] [20th March 1963

கிராமக் கோர்ட் என்றும்போது, பஞ்சாயத்தையே கிராமக் கோர்ட்டாக வைப்பது நல்லதல்ல. இவர்களிடத்தில் நீதி பரிபாலனத்தைக் கொடுப்பது நல்லது அல்ல என்பது இந்த சர்க்காரின் அபிப்பிராயம் ஆகும். பஞ்சாயத்து கோர்ட்டாக இயங்குவது என்கிற அதிகாரத்தைப் பஞ்சாயத்துச் சட்டத்திலேகூட நாம் எடுத்துவிட்டோம். கிராமத்திலே நீதி வழங்குவதற்கு வேறு என்ன வழி என்று கவனிக்க வேண்டியிருக்கிறது. தேர்தல் நடத்தி, அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு நீதி பரிபாலனப் பொறுப்பை ஒப்புவிக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

திரு. க. ர. நல்லசிவம் : பஞ்சாயத்து அங்கத்தினர்களை வைத்து பஞ்சாயத்து கோர்ட் ஏற்படுத்தவேண்டுமென்று நான் சொல்லவில்லை. முன்பு சில முறைகள் இருந்தனவே, அந்த முறைகளின் அடிப்படையில் . . . . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்தலில் வந்தவர்களுக்கு இந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல் வேறு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். கிராம முன்சீபை விலேஜ் கோர்ட்டாகப் போடலாம் என்பதுதான் இப்பொழுது அரசாங்கத்தின் யோசனை.

கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள், "ஹைகோர்ட் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கும்போது, சென்னை நகரத்தில் உள்ள வழக்கறிஞர்களிலிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள்" என்று கூறினார்கள். வெளியிலே இருக்கும் வழக்கறிஞர்களில் சிலர் ஜில்லா நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். முன்பு வெளியிலே வழக்கறிஞர்களாக இருந்து, ஜில்லா நீதிபதிகளாகப் பணியாற்றினவர்கள் ஹைகோர்ட் நீதிபதியாக வரலாம். ஆனால், பொதுவாக வழக்கறிஞர்களை ஹைகோர்ட் நீதிபதியாகப் போடக்கூடாது என்பதில்லை. இங்கிலாந்தில் எடுத்துக்கொண்டால்கூட, உயர் நீதி மன்றங்களுக்கு லண்டனில் இருக்கிறவர்களைத்தான் பெரும்பாலும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். வெளியிடங்களிலே உள்ளவர்களை அவ்வளவாக எடுத்துக்கொள்வதில்லை. அந்த முறைதான் இங்கு கையாளப்படுகிறது. சீஃப் ஜஸ்டிஸ் பரிசீலனை செய்து சிபார்சு செய்யவேண்டும். அவர்கள் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

தங்களுடைய நேரத்தை அதிகமாக நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். "சிறைக்குச் செல்கிறவர்கள் திரும்பி வருவதில்லை" என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் பழைய கதை. ஆஸ்பத்திரிக்குச் செல்கிறவர்கள் திரும்பிவரமாட்டார்கள் என்ற ஒரு தவறான எண்ணம் முன்பு இருந்தது. அந்த எண்ணம் இப்பொழுது போய்விட்டது. ஆஸ்பத்திரிகளில் இப்பொழுதெல்லாம் பெரிய கூட்டம் இருப்பதைப் பார்க்கிறோம். எவ்வளவுதான் "பெட்"களை நாம் அதிகமாக்கினாலும், வராண்டாக்களில் கட்டில்கூட இல்லாமல் நோயாளிகள் சிகிச்சைக்காக வருவதைப் பார்க்கிறோம். அத்தகைய எண்ணம் இப்பொழுது வந்துவிட்டது. அதுபோல சிறைக்குப்போவது ஒரு நல்ல முறையாகத்தான் இருக்கிறது. சிறையிலே எல்லா வசதிகளும் கொடுக்கவேண்டும், ஹ்யூமன் கன்ஸிடரேஷன் இருக்கவேண்டும் என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. பல வசதிகள் அளிக்கப்படவேண்டியதுதான். அந்தவரையில் வசதிகள் பெருகிக்கொண்டிருக்கின்றன. பொதுவாக சிறையிலுள்ளவர்களுக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால் நான் ஒன்று சொல்லவிரும்புகிறேன். சிறையே சொர்க்கலோகமாகவும் இருந்துவிடக்கூடாது. அதை கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன். சொர்க்கலோகமாக இருந்தால் என்ன ஆகும்? இப்பொழுதேகூட, பலருக்கு வீட்டிலே இருக்கிறதைவிட சிறையில் வசதி இருக்கிறது. இருந்தாலும் அதைச் செய்துகொடுக்கிறோம். ஆட்சேபிக்கவில்லை. ஆனால் சிறையே சொர்க்கலோகமாகப் போவது நல்லதல்ல. அப்படியிருந்துவிட்டால் குற்றங்கள் பெருகும். அந்த வரம்புக்கு உட்பட்டு, சிறையிலே உள்ளவர்களுக்கு வசதிகளை அளிக்கவேண்டும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக்கொள்ளுகின்றேன்.

20th March 1963]

The cut motion of Sri K. R. Nallasivam was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,41,82,800 under Demand No. X—Administration of Justice.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails be reduced by Rs. 100.

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXVII—PUBLIC WORKS—WORKS.

DEMAND NO XXVII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

DEMAND NO. XLII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,73,66,600 under Demand No. XXVII—Public Works—Works.'

'That the Government be granted a sum not exceeding Rs. 1,98,74,100 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.'

'That the Government be granted a sum not exceeding Rs. 4,68,70,800 under Demand No. XLII—Capital Outlay on Public Works.'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

'That the allotment of Rs. 5,73,66,600 under Demand No. XXVII—Public Works—Works, be reduced by Rs. 100'.

SRI SAW GANESAN : Sir, I move—

'That the allotment of Rs. 1,98,74,100 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100.'

SRI A. P. DHARMALINGAM : Sir, I move—

'That the allotment of Rs. 4,68,70,800 under Demand No. XLII—Capital Outlay on Public Works be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

10-30 a.m. ***திரு. து. ப. அழகமுத்து :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையின்மீது வந்துள்ள வெட்டுப் பிரேரணையையொட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற ஆசைப்படுகின்றேன்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பெரும்பாலும் ரோடு ஓரத்திலேயே காட்டுவதற்கு இந்தப் பொதுப்பணித்துறை பெருமுயற்சி செய்துள்ளது. அதுபோல போக்குவரத்து சாலைகள் சம்பந்தப்பட்டதுறையிலும் நகர ஓரங்களில்தான் இந்த வளர்ச்சியைக் காண முடிகிறது. வெளிநாட்டார் வந்து பார்க்கக்கூடிய அளவில் நகர்ப்புற ரோடுகள், மெயின் ரோடுகள் மட்டும் அழகாகக் காட்சியளிக்கின்றனவே தவிர, சற்று உள்ளே சென்று பார்த்தால் கிராமப்புற ரோடுகள் மோசமாகத்தான் இருக்கின்றன. குறை கூறவேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. கிராமப்புறங்களில் உள்ள ரோடுகள் வளர்ச்சி அடையவேண்டுமென்பதற்காக இவ்விலாகா அதிக கவனம் செலுத்தவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப் பணித்துறை மிகவும் முக்கியமான துறை. இத்துறையில் வீண் செலவு அதிகமாக இருக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டுதான் கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பொதுப் பணித்துறையைப் பற்றிக் குறிப்பிடும்போது சமுதாயத்திற்கு இந்தத் துறை விரோதி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால் இந்தத் துறை மூலமாக மிகப் பெருவாரியான தொகை செலவு செய்யப்படுகிறது. அவ்வாறு செலவு செய்யப்படுகிற பணம் பொதுமக்கள்—ஏழை மக்கள் கொடுக்கிற வரிப்பணம் என்பதை மனதில் வைத்துச் செலவு செய்யப் படுவதில்லை. அப்படி நினைவில் வைக்காத காரணத்தினால் பலவகையில் பணம் வீணாகிறது. இப்படி ஆகிற வீண் செலவுகளைக் குறைத்து இந்த இலாகா நல்ல பணிகள் புரிவதில் அக்கறை காட்டவேண்டுமென்ற நோக்கத்தோடு இதைக் கூறுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள்கூட வெட்டுப் பிரேரணை கொடுத்திருப்பவர்கள் நல்ல பல கருத்துக்களை சொல்லவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள்.

போலீஸ் இலாகாவினருக்காக தாத்தையங்கார்பேட்டையில் விடுதிகள் கட்டப்பட்டன. 524 சிமிண்டு மூட்டைகள் காணாமற்போனதென காண்டிராக்டருக்கு கொடுக்கவேண்டிய பில்லில் குறைத்து பணம் கொடுத்தார்கள். நான் காண்டிராக்டருக்காகப் பேசவில்லை. அந்த காண்டிராக்டர் தகராறு செய்தபிறகு அடுத்த பில்லில் 524 சிமெண்ட் மூட்டைக்குரிய பணத்தை சேர்த்துக் கொடுத்தார்கள். எப்படியோ கணக்குகளை ஒழுங்குபடுத்திச் சரி செய்து காட்டிவிட்டார்கள். காண்டிராக்டர் துறையூர் கே. கே. வேலுசாமி உடையார் என்பவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். இதுபற்றி அவர் உண்ணாவிரதமிருக்கப்போவதாக அரசாங்கத்திற்குப் புகார் செய்திருக்கிறார். அதன்மீது அமைச்சர் அவர்கள் இதுகாறும் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார் என்று தெரியவில்லை. 10,000-க்கு உட்பட்ட வேலைகளை சரியானபடி டெண்டர் விடாமல் தங்கள் ஆட்கள் பேரால் கண்டிராக்ட்களை போட்டுக்கொண்டு வேலையை பொதுப்பணித்துறை அதிகாரிகள் செய்கிறார்கள் என்றும் இந்தத் துறை வியாபாரத் துறையாக மாறிவிட்டது என்றும் அவர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளார். அதன்மீதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவில்லை.

பொதுப்பணித்துறை வேலைகள் சரிவர நடக்கிறதா என்று பார்த்தால் சரியாக நடக்கவில்லையென்று சொல்வேன். என்னுடைய தொகுதிக்கு அடுத்த தொகுதியாகிய திரு. முத்தையா அவர்கள் தொகுதியில் தண்டலை புத்தூர் என்ற கிராமத்தில் ப்ரைமரி ஹெல்த் செண்டர் கட்டிடம் கட்டினார்கள். ஆனால் இன்றைக்கு அந்த ஆஸ்பத்திரி அந்தக் கட்டிடத்தில் இருக்கக் கூடாது, அந்தக் கட்டிடம் மிக மோசமாக இருக்கிறது என்று பொதுப் பணித்துறையினரே இப்போது நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடம் இடிந்து விழக்கூடிய நிலையில் வேலைகள் அங்கங்கே மிக மோசமாக நடக்கின்றன.

அதுவும் ஒரு வேலைக்கு இவ்வாண்டு பணம் ஒதுக்கினால் அவ்வேலை அவ்வாண்டு ஆரம்பமுதலே நடைபெறுவதில்லை. அவ்வாண்டு கடைசி வரை ஒரு வேலையும் செய்யாமல் இருந்துவிட்டு ஆண்டுக் கடைசியில் பணம் லாப்ஸ் ஆகிவிடப்போகிறதே என்று அவசர அவசரமாக வேலை செய்கிறார்கள். அதன் மூலம் வேலை சரிவர நடைபெறுவதற்கே இடமில்லாமல் போவதோடு பணமும் வீண் விரயமாகிறது.

மேலும் ஒரு எஸ்டிமேட் போட்டால் அந்த எஸ்டிமேட்படி வேலை நடைபெறுவதில்லை. அடிக்கடி எஸ்டிமேட்டை மாற்றுகிறார்கள். அதற்குக் காரணம் நமக்குத் தெரியவில்லை. அத்துறையில் அவர்கள்தான் நிபுணர்கள். ஆகவே அவர்கள் சொல்வதையே கேட்டுக்கொள்ளவேண்டியிருக்கிறது. இப்படி எஸ்டிமேட் போட்டது மாற்றப்படாதிருக்கவும் வழிவகை செய்யவேண்டும். தாமதமாக வேலை நடப்பதற்கு காரணம் கேட்டால் "டெக்னிகல் டிலே" என்கிறார்கள். அதற்கும் அவர்கள்தான் பிர்மா.

அதற்கு அடுத்தாற்போல இவ்விலாகாவினர்களுக்கு ஜீப் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஜீப்கார்களை வைத்துக்கொண்டு இவர்கள் வீணாகச் சுற்றுகிறார்கள். சினிமா கொட்டகை முதல் எங்கே வேண்டுமானாலும் நாம் இந்த ஜீப்கார்களைப் பார்க்கலாம். இதனால் ஏராளமாகச் செலவாகிறது. ஆகவே இப்படி அவர்களுக்கு ஜீப்கார்கள் கொடுப்பதை நிறுத்திவிட்டு உயர்தர அதிகாரிகளுக்கு கார் அலவன்சு கொடுத்துவிடலாம் என்பது என் அபிப்பிராயம்.

இன்னும் என்னுடைய தொகுதியில் நடந்துவருகிற ஒரு வேலையைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் காணாமல்போன இலந்தப்பட்டி, மணச்சநல்லூர் ரோடு வேலை நடந்துவருவதாக அவர் குறிப்பிட்டிருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போல காணாமல்போன ஆலத்தூர், அரியலூர் ரோடு வேலை இன்னும் நடைபெறாமல் இருக்கிறது. ஆலத்தூரில் இருந்த பஞ்சாயத்து யூனியனை கொளகாணத்துக்குக் கொண்டு போய் இருக்கிறார்கள். ரோடு சரியாக இல்லாத காரணத்தினால் யூனியன் கூட்டத்திற்குப் போவதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் இருக்கிற காரணத்திற்காகவாகிலும் ஆலத்தூர்—அரியலூர் பாதை வசதி உடனடியாகச் செய்துகொடுக்கவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் ஆளும் கட்சியில் உள்ள கனம் உறுப்பினர் கொழந்தை கவுண்டர் சேர்வராயன் மலையில் உள்ள 64 கிராமங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் போல என் தொகுதியில் உள்ள பச்சைமலையில் 32 கிராமங்கள் இருக்கின்றன. இங்கே ரோடு வசதியே இல்லை. ஏற்காடு மலையிலாவது ஏற்காட்டிலிருந்து சேலத்திற்கு பாதை இருக்கிறது. இங்கே பாதையே இல்லாத காரணத்தினால் மலைமேலுள்ள மக்கள் கீழே வருவது என்றால் தலையில் சுமையோடு முள்ளிலும் கல்லிலும் வரவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக பாதை வசதியைச் செய்துதரவேண்டுமென்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். தண்டாயுதபாணி : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் பெருவழித் துறை, பொதுப்பணித்துறை சம்பந்தப்பட்ட மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த இலாகா இன்றியமையாத பணியைச் செய்து வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். போக்குவரத்துக்குத் தேவையான சாலைகள், பாலங்கள் முதலியவற்றை நிர்மாணிப்பதும் எல்லாத் துறைகளுக்கும் தேவையான கட்டடங்களைக் கட்டுவதும் இந்த இலாகாவினரின் பணியாகும் என்பது அனைவரும் அறிந்ததாகும். இந்தத் துறையின் கீழ் இருக்கும் சாலைத் திட்டங்களைப் பொறுத்த வரை, தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், பெரிய மாவட்டச் சாலைகள், பஞ்சாயத்து யூனியன் சாலைகள், பஞ்சாயத்துச் சாலைகள் என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தேசிய

சாலைகள் மத்திய சர்க்கார் உதவியைக்கொண்டு பராமரிக்கப்படுவதாகவும், மாநில நெடுஞ்சாலைகளும், பெரிய மாவட்டச் சாலைகளும் சர்க்காரால் பராமரிக்கப்படுவதாகவும், பஞ்சாயத்து யூனியன் சாலைகள், பஞ்சாயத்துச் சாலைகளைப் பராமரிக்க நீலைக்கு 40 நயா பைசே வீதம் கொடுக்கப்படுவதாகவும் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்துடன் இந்தத் துறையானது சிறிய வகையில் பணியாற்றி வருவதை நான் பாராட்டுகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரை சாலை அமைப்பிலும், சாலைப் பராமரிப்பும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற ஆசைப்படுகிறேன். இந்த மாகாணத்திலேயே சாலைகளைப் பொறுத்தவரையில் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்ற ஜில்லா தஞ்சை ஜில்லாவாகும். அதை யாரும் மறுக்கமுடியாது. அதற்குப்பல காரணங்கள் உண்டு. முதல் காரணம் எங்கள் ஜில்லாவில் "குவாரி" —கருங்கல் ஜல்லி இல்லை. திருச்சி ஜில்லாவிலிருந்துதான் கொண்டுவரவேண்டும். சாலை பராமரிப்புக்காக இந்த அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் ரூபாய் மூன்று கோடி எண்பத்தி இரண்டு லட்சத்தில், எல்லா ஜில்லாக்களுக்கும் ரோடு போட வேண்டுமென்ற வகையிலே சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை அடுத்த ஜில்லாவிலிருந்து கருங்கல் ஜல்லி வரவேண்டிய நிலை இருப்பதால் அதிகச் செலவு ஏற்படுகிறது. அப்படியிருந்தும் தஞ்சை ஜில்லாவுக்கு அதிகமான தொகை ஒதுக்கப்படவில்லை. குறைந்த தொகையை வைத்துக் கொண்டு அந்த ஜில்லாவிலே உள்ள சாலைகளைப் பராமரிப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். இண்டஸ்ட்ரியல் ஏரியாவைப் பொறுத்தவரை தனியாக அபிவிருத்தி செய்ய வழிவகைகள் செய்திருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் அந்தமாதிரிப் பகுதிகளும் இருப்பதாகத் தெரியவில்லை. தேசிய நெடுஞ்சாலை 1,090 மைலிலும் எங்கள் ஜில்லாவில் வரக்கூடிய பகுதி குறைவாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் மனதில் கொண்டு எங்கள் ஜில்லாவுக்கு சாலை பராமரிப்பிற்காக அதிகத் தொகை ஒதுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாகாணத்தில் மொத்தமுள்ள 25,867 மைல் நீளமுள்ள சாலைகளில், பஞ்சாயத்தின் பொறுப்பிலே 9,847 மைல் நீளமுள்ள சாலைகள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்களின் பொறுப்பில் உள்ள சாலைகளைப் பஞ்சாயத்துக்களால் பராமரிக்க முடிவதில்லை. அவர்களுடைய நிதி வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு முறை கப்பி போட வேண்டுமென்றால் பஞ்சாயத்து யூனியன் உதவியுடன்தான் போடவேண்டியிருக்கிறது. மறுபடியும் கப்பி போடவேண்டுமென்றால் முடிவதில்லை. பஞ்சாயத்து சாலைகளைப் பஞ்சாயத்து யூனியன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் உள்ள சாலைகளின் நீளமும் அதிகமாக இருக்கிறது. 1960–61, 1961–62, 1962–63 ஆகிய மூன்று ஆண்டுகளில் 3,000 மைல் நீளமுள்ள பஞ்சாயத்துச் சாலைகளை அரசினர் மேற்கொண்டுள்ளனர். ஆனால் 1963–64-ல் 500 மைல் நீளமுள்ள சாலைகளைத்தான் அரசினர் மேற்கொள்ள முடிவு செய்திருக்கின்றனர். பஞ்சாயத்து யூனியன் சாலைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்போது, அந்த அளவுக்குப் பஞ்சாயத்துச் சாலைகளைப் பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்யவேண்டும். அந்த மாதிரி விதி அமைத்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகிற 40 ந.பை. மானியத்தைப் பற்றிப் பல முறை சொல்லியிருக்கிறேன். ஜனத் தொகைக் கணக்குப்படி ஒரு நபருக்கு 40 ந.பை. வீதத்தில் கொடுக்காமல் மைலுக்கு 750 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை கொடுத்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். இப்போது குறிப்பாக எம்.டி.ஆர். ரோடு

ஸ்டேட் ஹைவேஸ் ரோடுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு மைலுக்கு 4,000 ரூபாய் வீதம் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்குக் கொடுக்காவிட்டாலும் கூட, மைலுக்கு 750 முதல் ஆயிரம் ரூபாய் கொடுக்க வழி செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக எனது தொகுதியைப் பொறுத்தவரை ஒரத்தநாட்டிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் வழியில் தெலுங்கன்குடி, வடசேரி பகுதிகளில் பாதை வசதியே கிடையாது. நான் அதைப்பற்றி ஜில்லா அபிவிருத்திக் கூட்டத்திலும் எடுத்துச் சொன்னேன். துரிதமாக நடவடிக்கை எடுத்து அந்தச் சாலையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக "கோஸ்டல்" ரோடைப் பற்றித் தஞ்சை ஜில்லாவாசிகள் அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறோம். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. முத்துப்பேட்டையைச் சார்ந்த நசுனின் ஆற்றில் பாலம் கட்டுவது பற்றிய பரிசீலனை 1959-ஆம்ஆண்டு நடந்தது. கோஸ்டல் ரோடு வரும் என்ற காரணத்தால் குறுகிய அளவில் பாலம் கட்டினால் பலன் இல்லை என்று கருதி, கோஸ்டல் ரோடு போடும்போது பெரிய பாலமாகக் கட்டுவார்கள் என்ற எண்ணத்துடன் அது கைவிடப்பட்டது. இன்னும் அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. கோஸ்டல் ரோடைக் கட்டவில்லை யென்று சொன்னாலும்கூட பாலத்தையாவது கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணன் ஆற்றைக் கடக்க நீந்திப் போன அனுபவம் அமைச்சர் அவர்களுடைய கவனத்தில் இருக்குமென்று கருதுகிறேன். அதிலே ஒரு பாலம் கட்ட மூன்று லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டம் தயார் செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். "டிடெய்ல்டு பப்ளிக் ஒர்க்ஸ்" பட்ஜட் புத்தகத்தில் 67-வது பக்கத்தில் "**Construction of Ventilated Causeway across Kannanur at M 13/16** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை 52,000 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆற்றிலே இதற்கு முன் ஒரு "காஸ்வே" அமைக்கப்பட்டு வெள்ளம் வந்த சமயத்தில் ஆற்றில் அடித்துக் கொண்டுபோய்விட்டது. மூன்று லட்சத் திட்டமானது 52,000 அளவுக்கு இப்போது குறைந்து விட்டது. இதைப் பற்றிப் பரிசீலனைசெய்து தக்க விதத்தில் பாலத்தை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, தஞ்சாவூர் டிவிஷனில், மணக்காடு அதிராமபட்டினம் சாலையில் கண்ணன் ஆற்றில் வேறு ஒரு பாலத்தைப் புதுப்பிக்கவும், சாலையை அகலப்படுத்தவும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த வேலை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இந்த ஆண்டாவது அதை மேற்கொள்ளச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து நான் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தம் உரையில் பொதுப்பணித் துறை என்பது தமிழ் நாட்டு மக்களின் விரோதி என்று ஒருவர் சொல்லியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு நான் சொல்ல விரும்புவது, யார் எந்தக் கண் கொண்டு பார்க்கிறார்களோ அதுதான் அவர்கள் கண்களுக்குத் தெரியும். அதுமாதிரி அவர் கண்களுக்கு தெரிந்திருக்கலாம். அந்த நிலை இன்று மாறி பொதுப் பணித்துறை இலாகா தமிழ் நாட்டு மக்களின் நண்பனாக மாறியிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். இத்துறையை நிர்வகித்து வரும் அமைச்சர் அவர்களையும், இதில் பணியாற்றுகிற அதிகாரிகளையும், மற்றும் பொறியியல் வல்லுநர்களையும் இந்த சட்டசபை [illegible] இந்தியா முழுவதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை [illegible] கொண்டுதான் ஆகவேண்டும். இத்துறை அதிவேகமாக [illegible]

வருகிறது என்பதை அமைச்சர் அவர்களின் புள்ளி விவரங்களிலிருந்தே
அறிந்து கொள்ளலாம். சுதந்திரம் அடைவதற்கு முன்னர் நம் ரோடுகள்
எந்நிலையில் இருந்தன ? சுதந்திரம் அடைந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு
நம் ரோடுகள் எந்நிலையில் இருக்கின்றன ? என்பதை ஒவ்வொருவரும்
மனசாட்சியுடன் உற்று நோக்கினால் நாம் பெருமளவில் முன்னேறியிருக்
கிறோம், என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். முன்பு புழுதி
எழும்பிக்கொண்டிருந்த ரோடுகள் எல்லாம் இன்று தார் ரோடுகளாக
மாறியிருக்கின்றன. கரடுமுரடான ரோடுகளில் எல்லாம் இன்று கான்க்ரீட்
போடப்பட்டு அவை அழகான ரோடுகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. இதை
யாரும் ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. ரிசர்ச் வொர்க்கும் இந்த
இலாகாவில் நடந்து வருகிறது. ஆல் ப்ரூப் போட் போட மண்ணுடன்
எண்ணெயையும் சோப்பையும் கலந்து ரோடு போட்டால் ஆல் ப்ரூப்
ரோடாக மாற்றலாம் என்ற குறிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது. நெய்வேலி
யில் தார் உற்பத்தி செய்கிறோம். இப்போது பரிசீலனை செய்து கொண்
டிருக்கிறார்கள். இந்தத் தார் நமக்கு கிடைத்து விட்டால் அநேகமாக
தமிழ் நாட்டிலுள்ள எல்லா கிராமங்களிலும், மூலை முடுக்குகளிலும் தார்
போடும் வாய்ப்பு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனது மாவட்டத்
தைப் பொறுத்தவரை நான் சிலவற்றை அமைச்சர் அவர்களின் கவனத்
திற்கு கொண்டு வர விரும்புகிறேன். எங்கள் நீலகிரி மாவட்டம் ஒரு
மலைப்பிரதேசம். கீழே மற்ற இடங்களில் ஒரு மைல் ரோடு போட 20,000
ரூபாய் செலவானால் என்ஜினியர்களின் ஸ்பெஸிபிகேஷன்படி எங்கள்
மாவட்டத்தில் ஒரு மைல் ரோடு போட 1 லட்சம் ரூபாய் ஆகிறது என்று
சொல்கிறார்கள். இருபத்து நான்கு அடி அகலத்தில்தான் ரோடுகள்
வெட்டவேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. இந்த உத்தரவு
மலைப்பிரதேசமாகிய எங்கள் நீலகிரி மாவட்டத்திற்கு இடைஞ்சலாக இருக்
கிறது. எங்கள் மாவட்டத்தில் ரோடுகள் 12 அடி இருந்தால் போதும்.
அமைச்சர் அவர்கள் அந்த உத்தரவை மாற்றி விட்டால் அதனால் செலவும்
குறையும், மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்பதை எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் ரோடுகள்,
பஞ்சாயத்து ரோடுகள் என்று இரண்டு விதமாக பிரித்திருக்கிறார்கள்
பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்கு ஜனத்தொகை அடிப்படையில் நபர்
ஒருவருக்கு 40 ந.பை. வீதம் மான்யம் கொடுக்கிறார்கள். அநேகமாக ஒரு
பஞ்சாயத்து யூனியனில் 60,000 பேர்கள் இருப்பார்கள். ஆகவே 25,000
ரூபாய்தான் கிடைக்கிறது. இந்த 25,000 ரூபாயை வைத்துக் கொண்டு எங்கள்
மாவட்டத்தில் கால் மைல் அளவு கூட ரோடு போட முடியாது. ஆகவே
இந்தத் தொகை செலவு செய்யப்படாமல் பஞ்சாயத்து யூனியன் வைத்துக்
கொண்டிருக்கிறது. நீலகிரியைப் பொறுத்த வரையில் அது மலைப்பிரதேசமாக
இருப்பதால் தலைக்கு ஒன்று அல்லது இரண்டு ரூபாயாவது சாங்க்ஷன் செய்ய
உத்தரவிடவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
அடுத்தபடியாக, நீலகிரியில் அணைகள் கட்ட, ரோடுகள் வெட்ட தொகைகள்
ஒதுக்கப்பட்டிருக்கின்றன. உப மான்யக் கோரிக்கை இந்த சபையில் சமர்ப்
பிக்கப்பட்டபோது கேரள ராஜ்யத்தை தமிழ் நாட்டுடன் இணைக்கும் விதத்
தில் கூடலூரிலிருந்து சுல்தான்பத்ரிவரை ரோடு விஸ்தரிக்க பத்து லட்சம்
ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருப்பதாக காணப்படுகிறது. அதற்காக,
அமைச்சர் அவர்களுக்கு எங்கள் ஜில்லா மக்கள் சார்பில் நன்றி தெரிவித்
துக் கொள்கிறேன். கிராமப்புறச் சாலைகள் மிகவும் மோசமான
நிலையில் இருக்கிறது. கிராமப் புற ரோடுகளையும் நாம் சரி செய்துதான்
ஆகவேண்டும். முக்கியமாக நீலகிரியைப் பொறுத்தவரையில், ரோடுவெட்டி
மெட்டல் செய்து தார் போடாவிட்டால் அடுத்த மழையில் அது கெட்டு
விடுகிறது. அப்படிக் கெட்டுப் போய் வண்டிகள் போக முடியாதபடி ரோடு
கள் அழிந்து போவதைப் பார்க்கிறோம். ஆகவே நீலகிரியைப் பொறுத்த
வரை தனிக் கவனம் செலுத்தி எல்லா ரோடுகளையும், கிராமப் புறங்களை
இணைக்கும் ரோடுகளையும் அடுத்த ஆண்டிற்குள் சரி செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். கூடலூர் காட்டில் வசிக்கும் ஆதிவாசி
கள், மலைஜாதி மக்கள் மெயின் ரோட்டிலிருந்து அநேக மைல் தொலைவில்
வசிக்கிறார்கள். அவர்களை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அதேபோல்
வைப்பது சரியா ? ஆகவே அவர்களுக்காக, மெயின் ரோட்டிற்கும்

அவர்கள் வசிக்கும் காடுகளுக்கும் இடையே ரோடு வெட்டிக் கொடுக்க
ஸ்பெஷல் கிராண்ட் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, நெடுஞ்சாலைகளை எடுத்துக்கொண்
டால் மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்கு போகும் ரோட்டை
நாஷனல் ஹைவேஸ்க்கு மாற்றினால் நன்றாயிருக்கும். உதகை உல்லாசப்
பிரயாணிகள் வந்து தங்கும் இடமாதலாலும், இந்தியாவிலுள்ள எல்லா
மாநிலத்தினரும் இந்த ரோடை உபயோகப்படுத்துவதாலும் அதற்கு ஏதா
வது வழிவகையை அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நினைக்
கிறேன். வெய்யில் காலத்தில் அங்கு தார் உருகி விடுகிறது ஆகையால்
எல்லா, ஹெயர் பின் பெண்ட்ஸ்களில் கான்க்ரீட் போட ஏற்பாடு செய்ய
வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு
தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்
கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன் :** கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்
களே, பொதுப் பணித்துறை மான்யக் கோரிக்கையின் மீது எதிர்தரப்பி
லிருந்து கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் என்
கருத்துக்கள் சிலவற்றை கூற முன்வருகிறேன். என் தொகுதியாகிய செய்
யாற்றில், திருவெற்றிபுரத்தின் அருகில் செய்யாற்றின் மீது 14 லட்சம் ரூபாய்
அளவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அப்பாலம் கட்டப்பட்டமையால்
ஆற்றுக்கு அப்பால் இருக்கிற ஊர்கள் திருவெற்றிபுரத்திற்கு நெருக்கத்தில்
வந்துவிட்டன, என்றாலும் திருவெற்றிபுரத்தின் ஒரு பகுதி முக்கால் மைல்
தொலைவிற்கு அப்பால் போய்விட்டதென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப்
பகுதி மக்கள் அத்தனை பேரும் நெசவாளிகள். 20, 30 சேலைகளை மூட்டை
யாகக் கட்டிக்கொண்டு வெளியூர்களுக்கு சென்று விற்று வருவார்கள்.
இதுவரை பஸ் தெருக்கோடியில் சென்றுகொண்டிருந்ததால் மூட்டையைத்
தூக்கவேண்டிய சிரமம் இல்லாமல் அவர்கள் பஸ்ஸில் ஏறிச் சென்று
கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு முக்கால் மைல் சுற்றிவர
வேண்டியிருப்பதால் அவர்கள் மிகவும் அவதிக்கு உள்ளாகிறார்கள். மேலும்
அந்த ஊரில் இருப்பவர்களின் நிலங்கள் எல்லாம் ஆற்றுக்கு அப்பால்
இருக்கிற அனக்காவூர், அத்திகுளம் கிராமங்களில் இருக்கின்றன. அதனால்
அவர்களுக்கு உரிய 100 வண்டிகள் அதற்குரிய மாடுகள் ஆகியவை
நாள்தோறும் ஆற்றைக் கடந்து செல்லவேண்டும். இந்த பாலத்தை
சுற்றி வரவேண்டிய நிலை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அப்பாலத்
தில் சுங்கம் வசூலிக்கும் ஒரு நிலை இருக்கிறது. அதனால் அவர்கள்
இப்போது பழைய வந்தவாசி பாதை வழியாக ஆற்று மணலைக்
கடந்து செல்கிறார்கள். வண்டிகளுக்கும் மாடுகளுக்கும் கஷ்டம் ஏற்படு
கிறது. ஆகவே அப்பாலத்தோடு இணைக்கும் ஒரு இணைப்பாதையைப் போட
வேண்டுமென்று அப்பகுதி மக்கள் பல விண்ணப்பங்கள் கொடுத்திருக்
கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அந்தப் பாலத்தில் சுங்கம்
வசூலிக்கப்படுகிறது. சுங்கம் வசூலிக்கும் முறை நம் மாநிலத்தில்
இரண்டு இடங்களில் தான் இருப்பதாக நான் அறிகிறேன். அது மட்டும்
அல்ல. இதே செய்யாற்றில் இன்னும் சிறிது மேலாக ஒரு சிறிய பாலம்
அமைத்திருக்கிறார்கள். அங்கு சுங்கம் வசூலிக்கவில்லை. ஆற்காடு,
செங்கல்பட்டு போன்ற இடங்களில் பாலாற்றின்மீது இதைவிட பெரிய அளவில்
பாலங்கள் கட்டியிருக்கிறார்கள். அங்கும் சுங்கம் வசூலிப்பதாகத் தெரிய
வில்லை. ஆக செய்யாற்றிலும் பாலாற்றிலும் கட்டப்பட்டிருக்கும் அப்
பாலங்களில் வசூலிக்காத நிலையில் இந்த இடத்தில் மட்டும் வசூலிப்பது
அப்பகுதி மக்களுக்கு வேதனை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இதை 11-00 a.m.
அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். மேலும் திருவெற்றிபுரத்
திற்கு சாமான்கள் ஏற்றிச் செல்ல டி.வி.எஸ். லாரிகள் வந்துக்கொண்டிருந்
தன. மூன்று லாரிகள் வந்துகொண்டிருந்தன. அந்த லாரிகளுக்கு
லாரி ஒன்றுக்கு, மாதம் ஒன்றிற்கு 100 ரூபாய் சுங்கம் வசூல் செய்வதால்
இப்போது அவர்கள் ஒரு லாரியை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற
லாரிகளை நிறுத்தியிருக்கிறார்கள். அந்த காரணத்தினால் எங்கள் ஊரில்
இருக்கிற வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற ஒரு நிலைமையும்
இருக்கிறது. அதையும் மனதில் கொண்டு சுங்கம் வசூலிக்கும்
அருள் கூர்ந்து நீக்கிவிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. பாலம் அமைப்பதற்கு முன் அங்கு ஒரு காஸ்வே இருந்தது. அந்த காஸ்வேயில் இப்போது வண்டி சென்றால், சுங்கம் வசூலிக்கின்ற முறை இருப்பதால் வண்டிகள் போவதை தடை செய்கிறார்கள். அப்படி இல்லாமல் காஸ்வேயில் கூட வண்டிகள் செல்ல லாம் என்று அனுமதி கொடுத்தால் நன்றாக இருக்கும். அப்படி அனுமதி கொடுக்கும்போது அந்தக் காஸ்வேயில் ஆங்காங்கு இருக்கும் சில சீர்கேடுகளைப் போக்கி, சீர்திருத்தம் செய்து தரவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வருகிற 23-ம் தேதியன்று செய்யாற்றில், செய்யாறு நலே நகரத்தில் அமைந்திருக்கிற மருத்துவ மனையை நம் மாநில கவர்னர் மேன்மை தங்கிய விஷ்ணுராம் மேதி அவர்கள் திறக்க இருக்கிறார்கள். சட்டடம் கட்டித் தந்ததற்காக செய்யாறு தொகுதியின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் தேசிய நெருக்கடியைக் காரணம் காட்டி அம்மருத்துவ மனையோடு கட்ட விருந்த டாக்டர்களும் நர்சுகளும் தங்க வேண்டிய விடுதிகள், மெட்டர் னிடி வார்டு, சுற்றுச் சுவர் எல்லாம் நிறுத்தப்பட்டிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். உடனடியாக அவைகளையும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய நண்பர் திரு. அழகமுத்து அவர்கள் கூறியதையொட்டி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த பொதுப்பணித் துறையில் சர்க்கார் மதிப்பீடு (எஸ்டிமேட் வால்யூ) மிக மிக அதிகம் என்பது என் எண்ணம். ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். திருவெத்திபுரம் பஞ்சாயத்தில் நானும் ஒரு உறுப்பினன். அந்தப் பஞ்சாயத்தின் சார்பில் ஒரு சிறு கால்வாய் கட்டவேண்டியிருந்தது. அதை கண்ட்ராக்டரிடம் விடாமல் பஞ்சாயத்தே பொறுப்பேற்றுச் செய்தது. அப்படிச் செய்த நேரத்தில் அதை ஒரு உறுப்பினர் பால் ஒப்படைத்தது. அந்த உறுப்பினர் பஞ்சாயத்து கொடுத்த திட்டத்தைக் காட்டிலும் அதிக அளவில் அந்த கால்வாய்க்கு நீளமும் கனமும் கொடுத்துக் கட்டினர். சிமெண்டை கள்ள மார்க்கெட்டில் வாங்கினர். அப்படியும் அதைக் கட்டி முடிக்க 105 ரூபாய்தான் ஆகியது. ஆனல் பஞ்சாயத்துப் பொறியியல் துறையினர் அளந்து பார்த்து 135 ரூபாய் மதிப்புப் போட்டு 135 ரூபாய் கொடுத்தார்கள். அந்த 30 ரூபாய் பஞ்சாயத்திற்குத் தான் செலவாயிற்று. அது வேறு விஷயம். இந்த நிலையில் பஞ்சாயத்து போட்ட திட்டத்தால் உறுப்பினருக்கே 30 ரூபாய் லாபம் என்றல், தனிப்பட்ட கண்ட்ராக்ட ருக்கு விட்டால் இன்னும் 30 ரூபாய் அவர் சம்பாதித்து விடுவார். சர்க்கார் மதிப்பீடு இந்த நிலையில் 50 சதவீதம் அதிகமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். பொதுப்பணித் துறையில் பெருவாரியாகச் செலவிடும் நேரத்தில் மதிப்பீட்டை நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சில ஊர்கள் இருக்கின்றன. கால் வழி யாக அல்லது வேறு வாகன வழியாகப் போகமுடியாத ஊர்களும் இருக்கின்றன. அத்தி, ஆளப்பிறந்தான், நாமா பள்ளம் என்ற அந்த இடங்களுக்கெல்லாம் நல்ல பாதை போட்டுக்கொடுக்க அரசியலார் கடமை பட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். சில இடங்களில் பாதை அகலக் குறைவாக இருக்கிறது. அந்தப் பாதையில் கார் செல்லவேண்டு மென்றல் கார் திரும்ப முடியாது. கார் திரும்ப முடியாது என்ற காரணத்தினல் சென்ற தேர்தல் காலத்தில், அங்கே செல்லுகிற காரை திருப்ப முடியாத நிலையில், அப்படியே தூக்கித் திருப்பி வைக்க எந்தக் கார் வசதியாக இருக்கும் என்று பார்த்து மாரிஸ் மைனர் 8-ல் அதுவும் டோராக இருந்தால் நலமாக இருக்கும் என்று அந்தக் காரை வைத்துக் கொண்டு தேர்தல் நடத்தினேம். அந்தப் பகுதிக்குப் போகும்போது அந்தத் தொகுதி மக்கள் காரைத் தூக்கி வைத்துத்தான் எங்களை வழியனுப்பியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலை எனது தொகுதியில் இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தைத் ஆதரித்து நான் சில வார்த்தை கள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக இந்த ஹைவேஸ் இலாகாவானது நம்முடைய மாகாணத் தில் மட்டுமல்ல, நம்முடைய இந்தியாவிலேயே மிகச் சிறந்த முறையிலே நம் மாகாணத்தில் இருக்கக்கூடிய ரஸ்தாக்களையெல்லாம் நல்ல முறையில் பரிபாலித்து வருகிறது என்பதை நான் தைரியமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு முன் பேசிய, எதிர் கட்சியிலே இருக்கக்கூடிய சில அங்கத்தினர்கள் ஹைவேஸ் இலாகாவில் இருக்கக் கூடிய அதிகாரிகளிடத்தில் ஜீப் இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். என்னைப் பொருத்த வரையிலும், உண்மையிலேயே வேறு பல இலாகாக் களில் இருக்கும் ஜீப்புகளைக் குறைத்து இந்த இலாகா உத்தியோகஸ்தர் களுக்குக் கொடுத்தால் இன்னும் நல்ல முறையில் ரோடுகள் அமையும் என்பதில் நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை என்று சொல்லிக்கொள் கிறேன். எனது தொகுதியைப் பொருத்தவரையில், மேட்டூர் கால்வாய் கசிவு நீரினல் சேதாரம் அடைந்த ரஸ்தாக்களை எல்லாம் நல்ல முறை யிலே செப்பனிட்டு அங்கு வேலை நடந்துகொண்டிருக்கின்றது. அந்த வேலை முடிவு அடையக்கூடிய தருவாயில் இருக்கிறது. அதற்காகப் போட்டிருக்கக் கூடிய அந்த சப்-டிவிஷனது வருகிற மார்ச் மாதத் துடன் முடிவதாகக் கேள்விப்படுகிறேன். அந்த டிவிஷனை வருகிற ஆகஸ்ட் மாதம் வரையில், மேட்டூர் வாய்க்காலில் மறுபடியும் தண்ணீர் வரும் வரை நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென் ரல், இன்னும் பல வேலைகள் குறைபாடாக இருக்கின்றன. அதை நீடித்துக்கொடுத்தால் நல்ல முறையில் அமையும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுவும் தவிர, அந்த ரஸ்தாக்களில் இன்னும் சில பாகங்கள் மராமத்து வேலை செய்யப் படாமல் இந்த திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருக்கின்றன. மேட்டூரிலிருந்து காவேரிக்கு கீழ்புறக் கரையிலே வேலை நடக்கிறது. சில இடங்களில் துண்டு துண்டாக விடப்பட்டு வேலை நடந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக கல்லடங்கத்திலிருந்து பூமுடியூர்வரை ஒரு மைலும், பூலாம்பட்டியிலிருந்து மேட்டூர் வரை ரஸ்தா போடப்படாமல் இருக்கிறது. அதைப் போட்டுக் கொடுத்தால் மேட்டூரிலிருந்து திருச்சியை அங்கு சேர்ப்பதற்கு வழிவகை ஏற்படுகிறது. குறிப்பாக காவேரியில் வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது, இந்தக் கரையிலிருந்து பார்க்க அந்த ரஸ்தா மிக முக்கியமானது என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். நம் அமைச்சர் அவர்களும், அவர்களுடன் பிரதமஎன்ஜினியரும் அந்த இடத்தைப் பார்த்தால் அவர்களுக்கு நன்கு புரியும். வேலை பூர்த்தியாவ தற்கு முன் அதை அவசியம் பார்க்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காலம் சென்ற மதிப்பிற்குரிய டாக்டர் சுப்பராயன் அவர்கள் நம் மத்திய சர்க்காரில் அமைச்சராக இருந்தபோது நம் மாநிலத்தையும், மைசூர் மாநிலத்தையும் இணைக்கக்கூடிய முறையில் மேட்டூரிலிருந்து, மாதேச்வரன் மலே வழியாக ரஸ்தாவை உண்டாக்கக் கூடிய முறையில் மத்திய சர்க்காரில் அவர்கள் அங்கு கஷ்டப்பட்டு நம்முடைய மாகாணத்திற்கு அவர்கள் காலத்திலேயே அந்த வேலைக்காகவும், காவே ரிக்கு மத்தியிலே அம்மாப்பேட்டை என்ற இடத்தில் பாலம் அமைக்கவும் 31 லட்சம் ரூபாய் ப்ளானிங் கமிஷனிலிருந்து அனுமதி வாங்கி நம் மாநில சர்க்காருக்குச் செய்வதற்கு அனுமதி கொடுத்து விட்டார். நம் மாநில சர்க்கார் அத்துடன் வேறு 5-6 திட்டங்களைச் சேர்த்து அனுப்பி ஞர்கள். கிட்டத்தட்ட அந்த எல்லா திட்டங்களும் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் சுமாருக்கு இருப்பதால், இரண்டு வேலைக்கு மட்டும் அனுமதி கொடுத் திருந்தும் இங்கிருந்து மத்திய சர்க்காருக்கு அந்த வேலையை விட்டுவிட்டு வேறு வேலைகள் எடுத்துக்கொள்ள, சர்க்கார் உசிதம் போல் வரிசைக் கிரமத்தில் எடுத்துக்கொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு கிட்டத்தட்ட ஒரு வருஷமாக 31 லட்சம் ரூபாய் சாங்ஷன்

வேலை செய்யாமல், வருஷம் முடிகின்ற தருவாயில் இருக்கிறது. உடனடியாக சர்க்கார் அந்த வேலையை எடுத்துச் செய்தால் குறிப்பாக இந்த ஆண்டில் நம் மேட்டூரில் நீர்த்தேக்கம் குறைந்த காரணத்தினால் பாலத்தைக் கட்டுவதில் ஒப்பன் பவுண்டேஷனைப் போட்டு இந்த ஆண்டு செய்தால் பல லட்சக் கணக்கான ரூபாய் குறையும் என்பதையும் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதே மாதிரி சென்ற மாதேஸ்வரம் திருவிழாவின்போது சேலம் ஜில்லா கலெக்டர் செல்லக்கூடிய கும்பலைப் பார்த்தார். கிட்டத்தட்ட 4–5 லட்ச மக்கள் ரஸ்தாவின்றிப் போகிறார்கள் என்பது வருந்தக்கூடிய விஷயம் என்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறிப்பாக அமைச்சர் கக்கன் இந்த இலாகாவை ஏற்றுக்கொண்டிருந்தபோது, எங்கள் ஜில்லா அமைச்சர் மத்திய சர்க்காரில் இருந்ததால் ஈ. அண்டு ஐ. ஸ்கீமில் மிக அவசர அவசரமாகக் கொடுக்கப்பட்டும் வேலை செய்யப்படாமல் இருப்பதுபற்றி வருந்துகிறேன். உடனடியாக அதை எடுத்துச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காவேரி மத்தியில் பள்ளிப்பாளையம் பக்கத்தில் பாலம் அமைத்திருக்கிறார்கள். பை–பாஸ் ரஸ்தா இல்லாத காரணத்தினால் பாலம் இருக்கிறதா இல்லையா என்று சந்தேகப்படக் கூடிய முறையில் அமைந்திருக்கிறது. அதற்கு ஒரு பை–பாஸ் ரஸ்தா அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செங்கோட்டுக்கும், பரமத்துக்கும் இடையே உள்ள ரஸ்தா மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அந்த ரஸ்தா சரிவர பராமரிப்புச் செய்யப்படவேண்டுமென்பதை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நமது மாகாணத்தில் மிகவும் மோசமான ஒரு ரஸ்தா இருக்கிறது என்றால், அதைத்தான் சொல்லலாம். ஆகவே, அதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொழில் வளம் பெருகக்கூடிய இடமாயிருப்பதால் மேட்டூரை சுற்றியிருக்கக்கூடிய ரஸ்தாக்களை நல்ல முறையில் சீரமைக்கவேண்டும். சூரமங்கலத்திலிருந்து மேட்டூருக்கு நல்ல ரோடு அமைக்கவேண்டும். தாரமங்கலம், ஜலகண்டபுரம், மூலக்காடு கணவாய் வழியாக அமைத்தால் நல்ல ஏற்பாடாக இருக்கும். 10 மைல் குறைவாகவும் இருக்கும். சூரமங்கலத்திலிருந்து மேட்டூருக்கு நேராகப் போவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். இந்த ரஸ்தா போடுவதற்கு முன்னால் இந்தப் பகுதிகளை ஒரு முறை பார்த்துவிட்டுச் செய்தால், அதற்கு வேண்டிய தொகையையும் குறைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூரில் அலுமினியம் இண்டஸ்டிரி வைத்திருக்கிறார்கள். சேலம் பாக்ஸைட்டை லாரிகளில் கொண்டுவருவதற்கு திட்டம் இருக்கிறது. ரஸ்தா அகலம் மிகவும் குறுகலாக இருக்கிறது. இதை உடனடியாக அகலப்படுத்தவேண்டும் என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய ரஸ்தாக்களில் பாலங்களைக் கட்டி முடித்துவிட்டு, அதன் பிற்பாடு ஜெல்லி போட்டால், நலமாக இருக்கும். ஜெல்லி போட்ட பிறகு பாலங்களைக் கட்டினால், ரஸ்தாவை மறுபடியும் சீக்கிரமே பழுது பார்க்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, முதலில் பாலத்தை கட்டிவிட்டு பிறகு ஜெல்லி போட்டால்தான் சர்க்காருக்கு அதிக நஷ்டம் ஏற்படாது என்ற யோசனையையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மேட்டூரில் இருக்கக்கூடிய வெஸ்டு மெயின் ரோடு டவுன் ஷிப் கமிட்டிக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த ரோடு மிகவும் பழுதடைந்து இருக்கிறது. மைசூருக்கு செல்லக்கூடிய ரஸ்தா அது. வெஸ்டு மெயின் ரோடை ஹைவேஸ் டிபார்ட்மெண்டாரே எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும்

மேட்டூர் காவேரிப் பாலத்தை எடுத்துக்கொண்டால் அது இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டு பராமரிப்பில் இருக்கிறது. அந்தப் பாலம் கட்டப்பட்டது முதல் இது வரையில் எந்த விதமான ரிப்பேரும் செய்யப்படவில்லை. மேட்டூர் சர்பிளஸ் பாலத்து ரஸ்தாவும் இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டுக்குக் கீழ் இருப்பதால், அது இதுவரையில் ரிப்பேர் செய்யப்படாததினால், ரஸ்தா சரியான முறையில் கவனிக்கப்படாமல் மோசமான நிலையில் இருக்கிறது. ஹைவேஸ் டிபார்ட்மெண்டார் இந்த சர்பிளஸ் பிரிட்ஜ் ரஸ்தாவையும் எடுத்து பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரவு செலவு திட்டத்திலேயே மேட்டூர்–கோவை ரஸ்தா நன்றாகச் செப்பனிடப்படும் என்று பட்ஜெட் உரையிலேயே சொல்லப்பட்டிருந்தது. இதுவரையிலும் அதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. மேட்டூரைச் சுற்றியிருக்கக் கூடிய ரஸ்தாக்களை யெல்லாம் நல்ல முறையில் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருப்பதின் காரணமாக போக்குவரத்து மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது என்பதையும் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

குளத்தூரிலிருந்து குருவரெட்டியூருக்குப் போகக்கூடிய ரஸ்தாவை ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொள்ளவேண்டும். இது சேலம், கோவை ஜில்லாக்களை இணைக்கக்கூடிய பாதையாக இருக்கிறது. இடப்பாடி, பூளம்பட்டி பாதையில் நீண்டகாலமாக பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ரோடையும் ஹைவேஸ் டிபார்ட்மெண்டாரே நேரில் எடுத்துக் கொண்டு நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. அ. ராமச்சந்திர ராயர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற முன்வந்துள்ளேன். தென் ஆர்க்காடு ஜில்லா கடலூர் கடற்கரை துறைமுகம் நல்ல முறையில் கண்காணிக்கப்பட்டு, செப்பனிடப்பட்டு விஸ்தரிக்கப்படுவதும் கண்டு மன மகிழ்ச்சி அடைந்து, அதை வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியில் பரங்கிப்பேட்டை பழைய துறைமுகம். இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாவது இதை சரியான முறையில் சீர்தூக்கிப் பார்த்து இந்தத் துறைமுகத்தையும் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளாற்றில் பரங்கிப்பேட்டையில் இருந்து சிதம்பரத்திற்குப் போக ஆற்றைக் கடப்பதற்கு ஒரு "ப்ளோட்டிங் பிரிட்ஜ்" போட்டால் நலமாக இருக்கும். சீக்கிரம் இந்த பாலத்தைக் கட்டிக் கொடுத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். ஏனென்றால், விவசாயிகள் அக்கரையில் நிலங்களை வைத்துக்கொண்டு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி பாலம் கட்டுவதின் மூலம் அவர்களுக்கு அனுகூலம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விருத்தாசலம் தாலூகா புவனகிரி–விருத்தாசலம் ரோடில் ஸ்ரீமுஷ்ணத்திற்கும்–களத்தூருக்கும் ஒரு நீர் மூழ்கிப் பாலம் கட்டிக்கொடுத்தால், மணலைக் கடப்பதற்கு விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். புவனகிரி–குறிஞ்சிப்பாடி ரோடு பஸ் ரூட் முக்கியத்துவம் வாய்ந்த ரோடு. இந்த நெடுஞ்சாலையில் உள்ள பரமனாறு பாலத்தைக் கண்காணித்து கூடிய சீக்கிரம் கட்டித்தரவேண்டும். புவனகிரி–குரிஞ்சிப்பாடி பஸ் ரூட்டில் வெகு நாட்களாக ஹைவேஸ், டிபார்ட்மெண்டில் ரோடுக்கு தார் போடாமல் இருப்பது வருந்தத்தக்கது. புவனகிரி–கிருஷ்ணபுரம் ரோடு நாளது வரையில் கண்காணிக்கப்பட்டு அகலப்படுத்தப்படாமல் இருக்கிறது. இது இப்பொழுது யூனியனிடம் இருக்கிறது. அதை ஹைவேஸ் டிபார்ட்மெண்டார் எடுத்துக்கொண்டு அந்த ரோடை அகலப்படுத்தி "ப்ளூ மெடல்" போடுவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிருஷ்ணபுரம் பஞ்சாயத்துக்கு நிதி வசதி இல்லாமல் இருப்பதால் மெயின் ரோடிலிருந்து பள்ளிக்கூடத்திற்குப் போகும் பாதை செப்பனிடப்படாமல் இருக்கிறது. சேறும், உளையுமாக இருப்பதால் மிகவும்

கஷ்டமாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனிடமிருந்து பொதுப்பணித் துறையினர் அதை எடுத்துக்கொண்டு அந்த வேலையை பூர்த்தி செய்து விட்டு, அதற்குள்ள சார்ஜ் அவர்களிடமிருந்து "கிளைம்" செய்து கொள்ளலாம்.

அடுத்தபடியாக, [illegible] யூனியனிலிருந்து சிதம்பரம் நகரத்திற்குப் போக நடுவில் ரயில் பாதையைக் கடக்க வேண்டியிருக்கிறது. ரயில் பாதையை கிராஸ் செய்வதற்குக் மேம்பாலம் ஒன்று அமைத்துத் தந்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நமது பொதுப்பணித் துறையானது சென்ற 15 ஆண்டு காலமாக, நாம் சுதந்திரம் அடைந்த பிறகு ரோடுகள் வசதி, கட்டட வசதி செய்து கொடுப்பதற்கான திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றிக்கொண்டு வருவது நமக்குக் கண்கூடாகத் தெரிந்த விஷயம். அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக அந்த இலாகாவை கண்காணிக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உற்சாகத்துடன் அதிக அக்கறையோடு ஆங்காங்குச் சென்று நேரில் குறைகளை கவனித்து அவைகளை நிவர்த்தி செய்து வருவது பாராட்டுதலுக்குரியது. இந்த ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் ஆங்காங்கு நல்ல முறையிலே கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு, நல்ல ரோடு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று நம்பு கிறேன்.

புவனகிரியில் இதுவரையில் "ஒன்வே டிராபிக்" இருந்துகொண்டு வந்தது. இப்பொழுது போலீஸார் அதை எடுத்துவிட்டார்கள். காரணம், அருகாமையில் உள்ள ரோடு சரியான முறையில் இல்லாததினால் அதை எடுத்துவிட்டார்கள். "ஒன்வே டிராபிக்" இருந்ததினால் புவனகிரிக்கு ரொம்பவும் சௌகரியமாக இருந்தது. ஆகவே, ஹைவேஸ் டிபார்ட்மெண்டார் இதை நல்ல முறையில் கண்காணித்து இந்த ரோடை போட்டுக கொடுக்கும்படி ரொம்பவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சபையிலே பேசிய அங்கத்தினர்கள் சிலர் இந்தத் துறையினர் தங்கள் தொகுதியிலே பிரமாதமான வேலைகளைச் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், எனது தாலூகாவைப் பொறுத்தவரைக்கும் இந்தத் துறையிலே அதிகமான வேலைகள் செய்யப்படவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறையிலே கட்டப்படுகிற கட்டடங்கள் மிக மிக மோசமாக இருக்கின்றன. பழங்காலத்துக் கட்டடங்களையும் இப்பொழுது கட்டப்படுகிற கட்டடங்களையும் பார்க்கும்பொழுது, இந்தக் கட்டடங்கள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன என்பது நன்கு தெரியும். குறிப்பாக எனது தொகுதியைச் சேர்ந்த திருவாடானை யூனியன் கட்டடம் திறப்பு விழா ஆகி ஒரு வருடத்திற்குள்ளாக பழுது பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு, மெயின்டினென்ஸ் எஸ்டிமேட் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். கட்டடம் கட்டும் போதே நல்ல முறையில் கண்காணித்துக் கட்டியிருந்தால், ஒரு வருஷத்திற்குள் ரிப்பேர் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்குமா என்பதைப் பார்க்கவேண்டும்.

மற்றொரு கட்டடமும் அதைப் போலத்தான். அதை நான் குறிப்பிட விரும்பவில்லை. கட்டடம் கட்டிக் கொண்டிருக்கும்போதே மழைக்கு மழை கரைந்து கொண்டிருக்கிறது கரையக் கரைய, செமண்டை வைத்து ஒட்டிக்கொண்டே இருக்கிறார்கள்.

கனம் திரு. வெ. ராமையா : அந்தக் கட்டடத்தின் பெயரைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களிடம் தனியாக எழுதிக் கொடுக்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் கட்டடத்திலே இருக்கும் குறைகளைச் சொல்லுவதினால், அந்தக் கட்டடத்தைக் குறிப்பிடும் படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : அது தேவகோட்டை யூனியன் கட்டடம். கரைந்து கரைந்து போய்க்கொண்டே இருக்கிறது. ஒட்டி வைத்துக் கொண்டு போகிறார்கள். இப்பொழுது அதை நேரடியாக நான் காண்பிக்க முடியும். இந்தக் கட்டடங்கள் தரக் குறைவாகப் போவதற்குக் காரணம், கண்டிராக்டர்களைக் கண்டித்து வேலை வாங் காமல இருப்பதுதான். பெரும் பகுதி ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்த காண்டிராக்ட் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். என்ஜினியர்களும், உதவி என்ஜினியர்களும் சூபர்வைசர்களும் அவர்களைக் கண்டித்து வேலை வாங்க முடியாததன் காரணமாக, இந்தக் கட்டடங்கள் இவ்வளவு மோச மாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எனது தொகுதியில் சுந்தரபாண்டியிலிருந்து திருப்பாலக்குடி வரை கோஸ்டல் ரோடு இருக்கிறது. இடை இடையே பாலம் இல்லாமல் இருப்ப தனால் அதிலே போகின்ற பஸ்கள் சிறிய மழை பெய்த உடனே நின்று போகக் கூடிய நிலையில் இருக்கின்றன. அந்த ரோடை உடனடியாக எடுதது, அந்தப் போக்குவரத்தை சீர்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருவாடானையிலிருந்து எம்பல் வரை ஒரு ரோடு போடுவதற்கு என்ஜி னியர்கள் பார்வையிட்டார்கள். இன்னும் அந்த ரோடைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யாமல் இருக்கிறது. அந்த ரோடை அமைத்துவிட்டால் ராமநாதபுரத்திலிருந்து புதுக்கோட்டையையும், புதுக்கோட்டையிலிருந்து திருச்சியையும் வெகு சீக்கிரத்தில் இணைக்கக்கூடிய நிலை ஏற்டும். 10 அல்லது 12 மைல் தூரமுள்ள இந்த ரோடைப் போட்டால், நல்ல ஒரு இணைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே இதை சீக்கிரமாகப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனது தொகுதியிலே, அனுமந்தக்குடி—ஊரியூர் ரோடு சாங்ஷன் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அது கண்ணமாங்குடி யூனியன் வழியாக போகிறது. அந்த ஊருக்கு பஸ் ரூட் கொடுக்கப்பட்டிருக் கிறது. தேர்தல் காலத்திலே கொடுக்கப்பட்டு, இப்பொழுது பஸ் போகாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஊரிலே யூனியன் ஆபீஸ் இருக்கிற காரணத்தினால், அதை வைத்தாவது, எமெர்ஜென்ஸி என்று சொல்லி நிறுத்திவிடாமல், இந்த ரோடைப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

காரைக்குடிக்கும் தேவகோட்டைக்கும் இடையிலே, காரைக்குடி முனிசி பல் எல்லையில் இருக்கிற ரோடு மிக மிக மோசமாக இருக்கிறது. எப் பொழுதுமே அந்த ரோடு கவனிக்கப் படாமல் இருக்கிறது. அது முனிசிபல் எல்லையைச் சேர்ந்தது. அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. தேவகோட்டைக்கு அந்தப் பக்கம் நன்றாக இருக்கிறது. அதே மாதிரி காரைக்குடிக்கு இந்தப் பக்கமும் நன்றாக இருக்கிறது. காரைக்குடி முனிசிபல் எல்லையில் மோசமாக இருக்கிறது. போக்கு வரத்து நிறைந்த இடம். ஆகவே அதை உடனடியாகச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிற்பட்ட கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ. 34 லட்சம் ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் என்னுடைய திருவாடானைத் தொகுதியிலே திட்ட வேலை எதுவும் செய்யப் படவில்லை. 1½ லட்சம் ரூபாய் செலவிலே ஒரே ஒரு ரோடு கொடுக்கப் பட்டது. அதுவும் ஒரு காங்கிரஸ்காரரின் ஒத்தை வீட்டுக்காக கொடுக்கப்பட்டதே தவிர, மக்களுக்குப் பிரயோசனப்படுவதாக இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கிழக்கு ராமநாதபுரத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ரூ. 27 லட்சத்திலே, திருவாடானைத் தாலுகாவிற்குப் பெரும் பகுதியை செலவு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு நபர் ஒன்றுக்கு 40 ந. பை. வீதம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது போதாது. பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு அதிகமாக ஒதுக்கிக் கொடுத்து நல்ல முறையில் பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொண்டி பாலங்களைத் துறைமுகம். அது இப்பொழுது ஒரு நல்ல துறைமுகமாக அபிவிருத்தியாகாமல் இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொடுக்கப்பட்ட அறிக்கையிலே, ஊர் - திருப்புனவாசல் சாலையை உயர்தர சாலையாக அமைக்க ரூ. 7.75 லட்சம் செலவு செய்யப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ரோடிலே அபிவிருத்தி செய்வதற்காக செலவு செய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆவுடையார் கோவிலி லிருந்து திருப்புனவாசல் வரை செப்பனிட்டால்தான் பஸ் போக்குவரத்து ஏற்படும். ஆகவே ஆவுடையார் கோவிலிலிருந்து திருப்புனவாசல் வரை நல்ல முறையில் உடனடியாகச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதுவயல்—அறந்தாங்கி ரோட்டில், புதுவயல் தாண்டியதும் 10 மைல் தூரத்திற்கு மிகவும் மோசமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கும் இது தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். உடனடியாக இவற்றை எல்லாம் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. வி. எல்லம நாயுடு :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குடியிருப்புக்கு அடுத்தபடியாக, மக்களுக்குப் போக்குவாத்து மிகவும் இன்றியமையாத ஒன்று. நல்ல முறையிலே பல ரோடுகளைச் செப்பனிடும் பல வேலைகளைச் செய்தும் வருகின்ற இந்த இலாக்காவினரையும், அமைச் சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். அதோடு என்னுடைய தொகுதி யிலே செய்ய வேண்டிய சில வேலைகளையும், செப்பனிடப்பட வேண்டிய சில மராமத்து வேலைகளையும் குறிப்பிட விரும்புகிறேன்.

பஞ்சாயத்துகளுக்கு உள்ள நிதி வசதியையும், இதர வசதிகளையும் வைத்துக்கொண்டு பார்க்கும்பொழுது, ஒரு மைலுக்கு மேற்பட்டுள்ள ஒவ் வொரு கிராமச் சாலையையும் யூனியனுக்கே விட்டுவிடுவது நலமாக இருக்கு மென்று நான் கருதுகிறேன். அதுபோன்று யூனியன்களுக்கு என்று கொடுக்கப்பட்டுள்ள சில பஸ் மார்க்கங்கள் சில இடங்களிலே யூனியன் பராமரிப்பில் இருக்கிறது. யூனியனுக்குக் கொடுக்கப்பட்ட நிதியிலிருந்து, இந்தச் சாலைகளைப் பராமரிப்பது கஷ்டமாக இருக்கிறது. இந்த ஆண்டில் மருதமலையிலிருந்து மருதுபாளையம் போன்ற பஸ் மார்க்கங்களை பெரு வழித் துறையினர் எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

11 30 a.m. அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். அது மட்டுமல்ல, இன்னும் சில ரோடுகள் இருக்கின்றன. கோவையிலிருந்து மாம்பட்டி வழியாக குப்பனூர் போகும் ரோடு, கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம் ரோடிலிருந்து தொண்டாமுத்தூர், நரசிபுரம் வழியாகப் போகும் ரோடு. இவை யூனி யனுக்குச் சொந்தமானவை. இவைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு நடத்த வேண்டும். இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும். பல பாலங்கள் கட்ட வேண்டியதாக இருக்கின்றன. கோவையி லிருந்து மேட்டுப்பாளையம் போகும் ரோடிலிருந்து தொண்டாமுத்தூர் போகும் ரோடில் சங்கனூர்பள்ளம், வடிவள்ளிபள்ளம் ஆகியவைகளுக்கு அங்கே பெரிய பாலம் அமைத்துத் தர வேண்டும். அப்பொழுதுதான் அங்கு போக்குவாத்துக்கு சுலபமாக இருக்கும். இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெருவழித்துறையில், குறிப்பாக சிறுவாணி ரோடு, கோயம்பட்டத்தூர் ரோடு கேரளாவைச் சேர்க்கும் ரோடு, இந்த இரண்டு மாகாணங்களுக்கும் தொடர்பு ஏற்படக்கூடிய ரோடு. அதைப் போட்டுக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொளளுகிறேன். கோயம்பத்தூர் சிறுவாணி ரோடையும் அவற்றில் பாலங்கள் கட்டும் வேலையையும் சிறிய கல்வர்ட்கள் கட்டுவதாக வும் இருக்கிறது. அவற்றைப் பெருவழித் துறையில் எடுத்துக்கொண் டால் நலமாக இருக்கும். காட்டிலாகா அமைச்சர் அவர்களும் இப் பொழுது இங்கே இருக்கிறார். சிறுவாணி மலைமீது ரோடுகள் இல்லாத காரணத்தால் அங்கு போக முடியவில்லை. ஜீப்புகள் முதற்கொண்டு போக முடியவில்லை. ஆகவே அங்கு ரோடு போட்டுக்கொடுத்து போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை நல்ல முறையில் போட்டுக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளு கிறேன். அதைப்போலவே அட்டப்பாடி ரோடு, இதுவும் ஒரு இன்றியமை யாத ரோடு. அங்கே பல பாலங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் துரிதமாக முடித்துக் கொடுக்கும்படி யாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது பாரஸ்ட் ஏரியாவில் இருப்பதால் மலை மேல் வண்டிகள், லாரிகள் போக முடியாமல் இருக்கின்றன. ஆகவே அந்த ரோடுகளைப் போட்டுக் போவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. பெரியநாயக்கன்பாளையம் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். வட்டாரத்தில் மேட்டுப்பாளையம் ரோடிலிருந்து பிளிச்சி கிராமம், ஒன்னி பாளையம், கரிச்சிபாளையம் போக வேண்டிய ரோடு இருக்கிறது. இப்படிப் பட்ட பெரிய கிராமங்களுக்குப் போவதற்கு வசதி கிடையாது. வண்டிகள் போவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த ரோடைப் போட்டால் கோயம்பத்தூர் அவினாசி தாலுகாவை இணைக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இந்த ரோடையும் எடுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மூன்றாவதாக சிறிய சிறிய கல்வர்ட்களைக் கட்ட வேண்டியதாக இருக் கிறது. தொண்டாமுத்தூர் நரசிபுரம் வழியாக வெள்ளியங்கிரிக்கு ஒரு ரோடு போகிறது. அங்கே ஒரு ஆண்டவன் கோவில் இருக்கிறது. அநேகம் யாத் திரிகர்கள் போகிறார்கள். அது மலைப் பிரதேசத்தில் இருக்கிறபடியால் யாத்திரிகர்கள் சௌகர்யமாக போக அங்கு ஒரு ரோடைப் போட்டுக் கொடுக்கும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது பாரஸ்ட் இலாகாவினிடம் இருப்ப தாகத் தெரிய வருகிறது. ஆகவே ஆலயத்திற்குப் போவதற்கு யாத்திரி கர்களுக்கு வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு. பி. முருகையன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக் கின்ற மானிய கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரே பணையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுப்பணித்துறை நிர்வாகம் புதுக்கோட்டைப் பகுதி யில் சில இடங்களில் சரியானபடி நடவாமல் காலதாமதம் ஏற்படுகிறது. கிராமப் புறங்களில் ரோடு போடும்போது பட்டா நிலங்களில் ரோடுகளை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பண விரயமும், காலதாமத மும், தகராறுகளும் அதிகரிக்கின்றன, பல ரோடுகள் குறுகலாக இருக் கின்றன. அங்கு எல்லாம் நில ஆர்ஜிதம் செய்வதற்குக் கால தாமதம் ஏற்படுகிறது. ரோடுகள் போட பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்திருப்ப தால் ரோடுகளைப் போட முடியாமல் பல தகராறுகள் இருக்கின்றன. இவ்வாறு நான் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் கனம் விவசாய அமைச்சர் ரோடுகளை நான் சுற்றிப் போடச் சொல்வதாக சாடையாகக் காட்டுகின்றார்.

கனம் திரு. பூ கக்கன் : ரோடுகள் போடுவதாக இருந்தால் சில இடங்களில் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புறம்போக்கு நிலத்தில் இப்படி இருக்கக் கூடாது. கூடாது.

திரு. பி. முருகையன் : புறம்போக்கு நிலங்கள் இருக்கும்போது பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்து ரோடு போடக்கூடாது என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குன்னண்டார்கோவில் பகுதியில் செங்களூர்ப் பகுதிகளில் இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும், அங்கு வேண்டிய பராமரிப்பு கிடையாது. ஆதனக்கோட்டை-ஆலங்குடி, ஆலங்குடி-அரிமளம் ரோடுகள் நல்ல முறையில் இல்லை. அவற்றைச் சீர்படுத்த வேண்டியதாக இருக்கிறது. தேசிய நெருக்கடியின் காரணமாகவோ என்னவோ அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் இதைப்பற்றி தீர்மானம் கொடுத்தும், D.D.C.-ல் தீர்மானம் போட்டு அனுப்பியும் அது இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இப்படிப்பட்ட ரோடுகளில் போகும் பஸ்களில் பிரயாணம் செய்வோர்கள் பல துன்பப் படுகிறார்கள். இதை கனம் அமைச்சர் அவர்கள் நேரடியாக கவனித்து அதை நல்ல முறையில் கவனித்து செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தட்டாமலைப்பட்டிக்கு பக்கத்தில் மகாராஜசமுத்திரம் என்ற இடத்தில் பாலம் கட்டுவதற்கு ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கு திட்டமிடப்பட்டு இருப்பதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் திட்டம் இது வரைக்கும் எந்தக் காரணத்தாலோ எடுத்து நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தட்டாமலைப்பட்டி வழியாக தஞ்சாவூர் செல்லும் ரோட்டில் கல் பரப்பப்பட்டு சுமார் ஒரு வருட காலமாக ரோலர் விடாமல் அப்படியே கிடக்கிறது. தேசிய நெருக்கடியை உத்தேசித்து காலதாமதம் செய்யாமல் உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டிக்கொடுக்கும்படியாகக் கேட்பதோடு பேட்டை ரோட்டையும் பழுது பார்த்துக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக ஆலங்குடி தாலூகா அலுவலகத்திற்கு மின்சார வசதி வழங்கப்பட வேண்டும் என்று பல முறை இதைப்பற்றிச் சொல்லியும் தீர்மானங்கள் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் கொண்டு வந்தும் அது கவனிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அந்தத் தாலூகா அலுவலகத்தில் வேலை செய்யும் பணியாட்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்வதோடு அங்கு மின்சார வசதி இல்லாத காரணத்தால் அங்குள்ளவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிருர்கள். இதனை உடனடியாகச் செய்து கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வல்லநாட்டுக் கண்மாய்க்கு சுமார் ஏழு மைல் நீண்ட கரை இருக்கிறது. ஏரியில் முழு அளவிற்கு மழை காலங்களில் தண்ணீர் பெருகுகிற காரணத்தால் அங்குள்ள ஆயக்கட்தார்கள் நாலைந்து மைல்கள் சுற்றிச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அதனால் அங்கு ஒரு பாலத்தைக் கட்டிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். வல்லத்திராகோட்டையிலிருந்து ஆயக்கட்டுக்குச் செல்லும் ரோட்டில், வல்லத்திராகோட்டைக்கு அருகில் ஒரு பாலத்தைக் கட்டிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆலங்குடி காம்பக்குடி பகுதியில் இருக்கிற மருத்துவ கட்டிடங்கள் நல்ல முறையில் இல்லை. காம்பக்குடியில் தாய் சேய் நல விடுதியையும் இணைத்து 5 படுக்கைகள் கொண்ட வார்டுகளையும் அவைகளுக்கு நல்ல கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பகுதி ரொம்பவும் மருத்துவத் துறையில் பிற்போக்கான நிலைமையில் இருப்பதால் காம்பக்குடி மருத்துவ விடுதிகளை விரைவில் கட்டிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். சிமெண்ட் பற்றாக்குறை காரணமாக பல கட்டிடங்கள் பஞ்சாயத்து யூனியனுல் கட்ட முடியாமல் இருக்கிறது. இதைக் கவனித்து சிமெண்டை உரிய காலத்தில் வழங்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிக் கொடுத்து அந்த வேலைகளை விரைவில் ஆரம்பிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக புதுக்கோட்டை பகுதியில் உள்ள திருப்பூர் அருகில் குண்டாற்றில் ஒரு பாலம் கட்டினுல் தெண்பரத்தில் உள்ள பல கிராமங்களில உள்ள மக்களுக்குப் போக்கு வரத்திற்கு சௌகரியம் ஏற்படும்;

ஆகையால் பாலம் ஒன்று கட்டிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வதற்கு உடனடி அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக திருச்சி மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி இல்லை. காம்பக்குடி உயர்நிலைப் பள்ளியில்மட்டிலும் தலைமை ஆசிரியருக்கு தங்குவதற்கு வீடு இருக்கின்றது. மற்ற தலைமை ஆசிரியர்களுக்கு வீடு இல்லாமல் இருக்கிறது. அங்குள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றும் அதைப்போலவே மற்ற தலைமை ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுவதோடு, ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் இப்படிப்பட்ட வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கூற ஆசைப்படுகிறேன். புதுக்கோட்டை பகுதியில் உள்ள சில கண்ட்ராக்டர்களுக்கும் அங்குள்ள அதிகாரிகளுக்கும் முடித்த வேலையை அளவெடுக்கும்போது சில தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. செய்த வேலைகளுக்கு பில் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட தகராறுகளை நிவர்த்தி செய்து, நல்ல முறையில் இதைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப் புறங்களில் சில சாலைகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. இவைகளை நல்ல முறையில் செப்பனிட்டு, நன்கு பராமரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு நேரமில்லாத காரணத்தால் என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

***திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பொதுப் பணித்துறை, பெருவழித்துறை பற்றிய மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களை நான் கூற முன்வந்துள்ளேன். பொதுவாக, சுதந்திரம் பெற்ற பிறகு ரோடுகளெல்லாம் நல்ல முறையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதுவும், அரசாங்கத்தால் ஏற்றுக்கொண்ட ரோடுகள் எல்லாம் நல்ல முறையில் தார் போடப்பட்டு, நன்ருகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்தப்பட்ட பிறகு, அவர்ளுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்டு ரோடுகளைக் கொடுத்தவுடன் அவர்களால் அவற்றைச் சரிவரப் பராமரிக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது.

குறிப்பாக, தஞ்சை ஜில்லாவில் எந்த விதமான கருங்கல் வசதியும் கிடையாது. சிவப்புக் கப்பிகூடக் குறைந்து விட்டது. எதற்கெடுத்தாலும், திருச்சியிலிருந்தோ, தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள மைலத்திலிருந்தோ கற்கள் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் எங்கள் ஜில்லாவில் இருக்கிறது. ஆகையால், ரோடு போட எந்தக் காண்டிராக்டரும் முன் வருவதில்லை. என்னுடைய பகுதியில் நல்லடை ரோடு இருக்கிறது. நான்கு ஆண்டுகளாகக் காண்டிராக்டுக்கு விட்டும் ஒருவர் காண்டிராக்ட் எடுத்து, பிறகு விட்டு விட்டார். பின் ஒருவர் எடுத்து நடத்தியிருக்கிருர். அதன் காரணமாக அங்கே ரோடுகள் போட அதிக ரேட் கொடுக்கும் நிலைமையைக் கொண்டுவர வேண்டும். மற்ற ஜில்லாக்களுக்கு ஒதுக்கும் தொகையைவிட தஞ்சை ஜில்லாவுக்கு அதிகப்படியாகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலை (ஈஸ்ட் கோஸ்டல் ரோடு)-யைப்பற்றி ஒவ்வொரு பட்ஜெட் விவாதத்தின் போதும், இந்த மானியம் வரும்போது சொல்லப்பட்டு வருகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலை என்று சொல்லும் போது, இது ஏதோ புதிதாக எடுத்து, அதற்கு செலவு அதிகமாக இருக்கும் என்று எண்ணுவதற்கு இடமில்லை. இருக்கும் ரோடுகளையெல்லாம் ஒன்[illegible] சேர்க்கும் நிலைமையில்தான் இருந்து வருகிறது. அதைச் சேர்த்து [illegible] காரே மெயின்டினன்ஸ் செய்தால் கடற்கரையோரமாக [illegible] சாதகமாக இருக்கும். ஒரு பாதுகாப்புச் சாலையாகவும் [illegible] கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். கடற்கரையோரமாக [illegible]

கிறது. அதைக் கண்டு பிடிக்க ஜீப்புகள் கூடிக்கரையோரமாகப் போக முடியாத நிலைமை இருக்கிறது. இதை உத்தேசித்து, இணைப்பு வேலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பி.டபிள்யூ.டி., ஹைவேஸ் என்று இரண்டு அமைப்புகள் இருந்தாலுங் கூட, இரண்டும் எப்போதுமே ஒத்துவராத நிலைமை இருந்து வருகிறது. ஒரு ரோடை ஹைவேஸ் எல்லை வரையில் போட்டுவிட்டு அத்துடன் அவர்கள் விட்டு விடுகிறார்கள். பி.டபிள்யூ.டி. கரை அப்படியே இருந்து விடுகிறது. அதைக் கேட்டால், "இன்னும் அது செய்யப்படவில்லை" என்று சொல்லப்படுகிறது. இதனால் தாமதம் ஆகிறது. உடனடியாக இணைப்பு வேலை செய்யவேண்டும். பி.டபிள்யூ.டி. கரையாக இருந்தாலும், அதை ஹைவேசுக்குக் கொடுத்துத் தங்கு தடை இல்லாமல் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். திருக்களாச்சேரி-சங்கரன்பந்தல்-மங்கநல்லூர் ரோடு, கொண்டத்தூர்-பாகசாலை ரோடு, காலமநல்லூர்-சின்னங்குடி ரோடு, திருவிளையாட்டம்-தில்லையாடி ரோடு இன்னும் முற்றுப் பெறாமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. அவற்றில் திருக்களாச்சேரி-மங்க நல்லூர் ரோட்டை சீக்கிரத்திலே மாற்றியமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த மாநிலத்திலிருக்கும் ட்ராவலர்ஸ் பங்களாக்கள் நல்ல முறையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும், சில இடங்களில் அன்று வைத்த மாடத்தைப்போல் இன்னும் அப்படியே இருக்கின்றன. சீர்காழியி லிருக்கும் பங்களா ஒரு மண்டபம் மாதிரி இருக்கிறது. வௌவால் அடைவதற்குத்தான் தகுதியாக இருக்கிறது. மாயூரம் ட்ராவலர்ஸ் பங் களாவும் அப்படியேதான் இருக்கிறது. இதையெல்லாம் சீக்கிரத்திலே சீர் திருத்தி அமைக்கவேண்டிய வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்த பங்களாக்களில் தங்குவதற்கு ப்ரையா ரிடி, அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் தான் இருக்கிறது. ஒரு எம்.எல்.ஏ. தொகுதி வேலையாகத் தங்கியிருந்தாலும்கூட, யாராவது அதிகாரி வந்து விட்டார் என்றால், உடனே காலி செய்து விட்டு விட வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. எம்.எல்.ஏக்களும் பொது மக் களுக்குத் தொண்டாற்றுவதற்காகத்தான் அங்கே தங்கியிருக்கும் நிலைமை இருப்பதால், அவர்களுக்கு தம் ப்ரையாரிடி முறையில் மாற்றியமைத்துக் கொடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மைனர் இரிகேஷன் வேலைகளை இதுவரை பி.டபிள்யூ.டி. தான் செய்து வந்தது. அதைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கப்போவதாக ஏற் கனவே சொல்லப்பட்டது. அந்த முறையில் நடந்தால் அது நல்ல முறை யில் கண்காணிக்கப்படமாட்டாது என்று நான் கருதுகின்றேன். சில இடங் களில் சிறு அணை கட்ட வேண்டுமானாலுங்கூட இஞ்ஜினீர் வந்துதான் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. சின்ன நதிகளில்கூட சிறு அணைகள் கட்ட வேண்டுமானால், அதற்கு இஞ்ஜினீரின் உதவி தேவை இருப்பதால், அந்த வேலைகளை பி.டபிள்யூ.டி.-யிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டு மென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நெடுஞ்சாலைகளெல்லாம் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. காரில் போகிற பிரயாணிகளும், நடந்து செல்கிறவர்களும், ஆங்காங்கு தங்கிச் சாப்பிடவும், தண்ணீர் அருந்தவும் ஷெட்டும், அவின்யூவும் சில இடங்களில் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை இன்னும் எல்லா இடங்களிலும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், மூன்று நான்கு ரோடுகள் டிஸ்ட்ரிக்ட் போர்டு அமைப்பில் இருந்து இப்போது பஞ்சாயத்து யூனியனுக்கு விடப்பட்டிருக்கிறது. அவர்களால் மெயிண்டினன்ஸ் செய்ய முடியாத நிலைமையினால், அந்த இடங்களில் ஜனங்கள் மிகவும் கஷ்டப் படக்கூடிய நிலைமை இருக்கிறது. பொதுவாக, தஞ்சை ஜில்லாவில் நிறைய நெல் மற்ற இடங்களுக்கு கொண்டு போக வேண்டியிருக்கிறது. பார வண்டிகள் ஏராளமாகப் போவதன் காரணமாக மிகவும் சீக்கிரத்திலேயே

எங்கள் ஜில்லாவில் ரோடுகள் வீணாகப் போகின்றன. திருக்களாச்சேரி- சங்கரன்பந்தல்-மங்கநல்லூர் ரோடு, கொண்டத்தூர்-பாகசாலை ரோடு, காலமநல்லூர்-சின்னங்குடி ரோடு, திருவிளையாட்டம்-தில்லையாடி ரோடு இன்னும் பூர்த்தியாகவில்லை. அமைச்சர் அவர்களிடம் சொன்ன தற்கு, நெருக்கடியை உத்தேசித்துத் தள்ளி வைத்திருப்பதாகச் சொன் னார்கள். அவை தள்ளி வைக்கக்கூடிய ரோடுகள் அல்ல. உதாரணமாக சின்னங்குடி-காலமநல்லூர் ரோடு வெகு காலமாக சாங்ஷன் செய்யப் பட்டு, நிலம் அக்வையர் பண்ணுகிற சமயத்தில் நின்றுவிட்டால் மீனவர் கள் பாதிக்கப்படுவார்கள். அவற்றைக் கூடிய சீக்கிரத்தில் போட்டுக்கொடுக் கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ரோடுகளின் ஓரத்தில் "ரோட் ஸைன்" இருக்கிறது. அதில் மஞ்சள் கலரைப் பெயிண்ட் செய்து, கருப்பு எழுத்துக்கள் எழுதுகிறார்கள். அவை சரியாகத் தெரிவதில்லை. ஏற்கெனவே இருந்ததுபோல, வெள்ளை யில் கறுப்பு மையினால் எழுதினால் நலமாக இருக்கும். அதை மறுபடி யும் மாற்றியமைத்தால் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ரோடுகள் பிரிவதற்கு ஒரு பர்லாங்குக்கு முன்னால் ஒரு போர்டு எழுதி வைத்திருக்கிறார்கள். எந்த இடத்தில் நான்கு ரோடுகள் பிரிகின்றனவோ அந்த இடத்தில் எங்கெங்கே போக வேண்டுமென்ற குறிப்பு இருக்கவேண் டும். ஏராளமான டூரிஸ்டுகள் போகும்போது, எந்தப் பக்கம் திரும்புவது என்று தெரியாமல், ரோடுகள் கூடுமிடங்களில் வந்து, அங்கிருக்கும் போலீஸ்காரரை எந்தப் பக்கம் திரும்ப வேண்டுமென்று கேட்க வேண்டி யிருக்கிறது. ஆகையால், ரோடுகள் பிரிகிற இடங்களில், பழைய நாளில் கைகாட்டி வைத்திருந்ததுபோல, போர்டுகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

*SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Deputy Speaker, Sir. I rise to speak in support of the various Demands moved by the Hon. Minister for Public Works. Sir, in any developing economy, power and transport should precede. I am very happy to state that in our State these two wings have developed very well. I have travelled very extensively both in our State and in other States including Northern States by car and I can say without any fear of contradiction that the roads that are developed in our State are in excellent condition when compared to the roads in other States. I should therefore like to congratulate the Hon. Minister for Public Works and the various officers connected with these Works on doing very good and excellent services.

I would like to give a suggestion to the Government. If the Hon. Minister could give statistics of the volume of traffic that has passed on these roads, both lorry and passenger traffic, that would give us an opportunity to study and appreciate how far these developments have been taken advantage of both by the passenger and commercial traffics. I hope there will not be any very insurmountable difficulty in giving these statistics. Last night I was reading in a daily that the amount of tax paid by bus-owners in the private sector in this State, for about nine months in the year, was to the tune of Rs. 5 crores and over. This goes to a considerable extent to show how roads are being utilised, how transport has developed and how they were co-operating with Government. Although the roads have developed to a tremendous extent, the development of cannals is almost nil. It is not a very happy situation, because when we are trying to develop the economy of [illegible]

country, we should try to see that all means of transport are being developed so that cheaper commodities could be transported by canal. We have been told that the Hon. Minister went recently on a survey of Buckingham Canal. I do hope that he would submit a statement of his observations and how he is going to develop this canal. It will be a very good thing if this canal is developed because it is a useful canal capable of transporting goods at cheap cost. Development of this canal to a considerable extent might result in the stoppage of bad water and the odour which is a source of constant nuisance to the citizens of Madras City.

I am very happy to learn that the traffic Engineering Cell which was created conducts speed and filed surveys in Madras City roads and suggests improvements in traffic. This has done good work and the congestion at places like Mount Road and other places have to a considerable extent minimised. Yet we cannot say that the congestion has been altogether removed. Some years ago there was a proposal to construct fly-over roads at Poonamallee High Road and also construct sub-ways at Mount Road. I do not know at what stage these two matters stand. I think those proposals should be considered and proper steps taken to see that traffic congestion is minimised to the extent it can be done because day by day the number of vehicles that are coming to this City is increasing because of various factors like growth of industries in and around the City. So there is more and more growth of economic activity and due to that there is enormous amount of traffic, both passenger and lorry traffic. Therefore if proper steps are not taken now, it would become weildy after a couple of years and I am sure Government will find that they will have to spend much more than that what they have to spend now. In this connection I am also to state that the Commissioner of Police, Madras has given a Master Plan about a couple of years ago. I do not know at what stage that plan also, stands and how far the Government have considered his recommendations.

Coming to minor ports, I am very happy to note that Government have taken over the development of two important minor ports, viz., Cuddalore and Nagapattinam. As a matter of fact, I have been one of those who had been suggesting that minor ports should be developed because the major port of Madras has almost touched the extreme end in handling cargo. They are now handling more than about three million tons of cargo and if bunch of steamers come there congestion is being created resulting in loss to shipping and trade there. It is a national loss. If the minor ports are developed and kept in a very effective manner, these steamers specially those that come with homogenous cargo could be diverted to those ports and thereby not only those ports will be developed but also the problem of utilising more wagons and other forms of transport could be solved. Other minor ports which are also playing a very useful and important role should also be developed. The Hon. Minister has said about the development of two other ports, viz., Colachel and another port. May I suggest to the Hon.

Minister that a small and suitable Committee be formed so that this Committee can go and make a survey of what are the minor ports that can be developed economically and usefully to our best advantage I am making this suggestion because now we are putting forth all our efforts to export more and more cargo particularly to overseas markets. The idea is to export even at the sacrifice of internal demand so that we can earn more the much-needed foreign exchange to buy capital machinery and other important things. No doubt minor ports have their own restrictions but in spite of that they can certainly play a very useful and important part in our economy. If Cuddalore port is not developed then we could not handle 3 lakhs tons of iron ore for our export. If our minor ports are developed I am sure the trade also will develop. For developing any minor port, it is very essential that there should be large number of boats at that port as otherwise it will not be possible for steamers to work their cargo and complete quickly. In this connection I may say that Mysore and Andhra are giving finance to boat-owners to construct small boats. The Government advance money first and then collect it by instalments. I would like our Government to consider such a proposal so that those who want to construct boats can make use of the help and opportunity given to them and develop the boat building industry.

* **திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,
இன்றைய தினம் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்துள்ள மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை
ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்
கள் கொடுத்துள்ள அறிக்கையின்படி இந்த மானியத்தில் நெடுஞ்சாலைத்
துறையினர், மாவட்டத் துறையினர், பஞ்சாயத்துத் துறையினர் என்று
தனித்தனியாக 3 பிரிவுகள் செயல்படும் வகை இருக்கிறது. என்றாலும்
மற்ற இரண்டு துறைகளிடம் உள்ள ரோடுகளைக் காட்டிலும் பஞ்சாயத்து
யூனியன் துறையில் இருக்கும் சாலைகளின் நீளம்தான் போக்குவரத்துக்கு
அதிகமாக இருக்கிறது என்பதை அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்
கிறார்கள். ஆனால் இந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கு பஞ்சாயத்து யூனி
யன்களுக்கு ஜனத்தொகை அடி படையில் ஒரு நபருக்கு 40 காசு வீதம்
மானியம் அளிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அந்த வகையில் காட்டு
மன்னார் கோயில் பஞ்சாயத்து யூனியன் 80 ஆயிரம் மக்கள் ஜனத்
தொகை கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 25 ஆயிரம்தான்
மானியம் கொடுக்கின்றார்கள் ஆனால் 30 மைல்களுக்கும் மேற்பட்ட
ரோடுகளை அவர்கள் பராமரிக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக அதில்
இரண்டு பஸ் ஓடும் சாலைகள். காட்டுமன்னார் கோவிலிலிருந்து கொள்ளிடக்
கரை வரைக்கும், காட்டுமன்னார் கோவிலிலிருந்து மின்தருட்டி வரைக்கும்
பஸ் போகிற இரண்டு சாலைகளை அந்த பஞ்சாயத்து யூனியன் மராமத்து
செய்ய வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு சாலைகளுக்குமே 12 ஆயிரம்
செலவு செய்கிறார்கள். இப்போது அந்த ரோடுகள் எல்லாம் நன்றாக இல்லை.
இப்படிச் செலவு செய்தும் மழை காலங்களில் பஸ்கள் ஓடாமல் நின்று
விடுகின்றன. சாலை அப்படி இருக்கிறது. அதனால் மக்களுக்குக் கஷ்டம்
ஏற்படுகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படும்
மானியத் தொகையை அதிகப்படுத்த வேண்டும் அல்லது பொதுப் பணித்
துறையினரே எடுத்துக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அணைக்கரையிலிருந்து கடல் கரை வரை இடது கொள்ளிடக் கரையில்
22 மைல் நீளச் சாலையிருக்கிறது. அந்த ரோடு மண் ரோடு; போக்கு
வரத்துக்குச் சரியாக இல்லை. வெள்ள நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்ட
நிதியில் 40 லட்சம் ரூபாய் மீதி இருப்பதாகவும் அறிகிறேன். அந்த

பணத்தைக் கொண்டு சிகப்புக் கப்பி போட்டு இந்தச் சாலையை போக்குவரத்துக்கு நல்ல முறையில் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று அணைக்கரையிலிருந்து காட்டுமன்னார்குடி வரை வெட்டாற்றங்கரைச் சாலை 12½ மைல் நீளமுள்ளது. அந்தச் சாலையை நல்ல முறையில் அமைத்துத் தந்தால் அந்தப் பகுதியிலுள்ள 40, 50 கிராம மக்களுக்குப் போக்குவரத்துக்கு வசதியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் என்னுடைய தொகுதியிலுள்ள பல கிராமங்கள் இராஜன்வாய்க்கால் அருகில் அமைந்திருப்பதால், கொள்ளிடக் கரையிலுள்ள உட்கிராமங்களுக்குச் செல்லப் போக்குவரத்து வசதி இல்லை. அந்தப் போக்குவரத்து வசதியைப் பெருக்கும் வகையில் பாலங்கள் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்கள் வசதியற்ற நிலையில் இருப்பதால் அவர்கள் பங்குத் தொகையைக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கமே முழுச் செலவையும் ஏற்று போக்குவரத்து வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள முட்டம் கிராமத்தில் கிட்டத்தட்ட 2,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ ஐயாயிரம் கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றால் கொள்ளிடக்கரைக்குச் செல்லவேண்டும். அதற்கு இராஜன் வாய்க்காலைக் கடந்து செல்லவேண்டுமென்று சொன்னால் அதிலே ஆறு அடி தண்ணீர் போய்க்கொண்டிருக்கும். அதன் காரணமாக அங்குள்ள மக்கள் மிகுந்த தொல்லைக்குட்பட்டிருக்கிறார்கள். அங்கு ஒரு பாலம் கட்டவேண்டுமென்று சொன்னால் 80,000 ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அந்தத் தொகையை அந்த ஊர் மக்கள் செலுத்த முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமே அந்தச் செலவை ஏற்று பாலத்தைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்குடியிலிருந்து சிதம்பரம் வழியாக சென்னைக்கு வரும் வழியானது மிகவும் குறுகலான ரோடாகவும், வளைவுகள் மிகுந்ததாகவும் இருப்பதால் பல பஸ் விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. சாலையை நேராகவும் அகலமாகவும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீமுஷ்ணம் பக்கத்தில் உள்ள கிராமங்களுக்குச் செல்ல போக்குவரத்து வசதி இல்லாமல் இருப்பதால், கார்களோ, சைக்கிள்களோ கூடப் போக முடியாத நிலைமை இருக்கிறது. அந்தக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமானால் காடு வழியாகத்தான் செல்லவேண்டியிருக்கிறது. அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உரிமை கொடுத்து, நிதி வசதி கொடுத்து அந்தக் கிராமங்களுக்கு நல்ல போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக் காலத்தில் கொள்ளிடக்கரையில் பல கிராமங்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை இருந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அது பற்றிக் கவனித்து கரைக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் லட்சத்துக்கு மேற்பட்ட செலவு செய்து இரண்டு திட்டங்களை நிறைவேற்றித் தந்தார்கள். அதற்காக எங்கள் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, சாலை வசதிகளையும், மதகுகளையும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பெருவழித்துறை, பொதுப்பணித்துறை சம்பந்தப்பட்ட மானியங்களை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நம் மாநிலத்தில் இந்தப் பெருவழித்துறை இலாகாவானது மிகவும் நல்ல முறையில் பணியாற்றி வருவதை நாம் கடந்த பல ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம். தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், பெரிய மாவட்டச் சாலைகள், பஞ்சாயத்து யூனியன் சாலைகள், பஞ்சாயத்துச் சாலைகள் என்ற பிரிவுகளாகப் பிரித்து அவற்றை அபிவிருத்தி செய்தும், பராமரித்தும் வருவதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிற அதிகாரிகளுக்கு ஜீப் வசதி மிகவும் அத்தியாவசியமானது என்பதைக் கூற விரும்புகிறேன். அவர்கள் காடுகளிலும், மேட்டிலும், பள்ளத்திலும் ரோடு வசதி இல்லாத இடங்களுக்கு எல்லாம் ஜீப்பிலே சென்று பாதை வசதியை ஏற்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்குமான பணிகளிலே ஈடுபடுகிறார்கள். அந்த அதிகாரிகளுக்கு ஜீப் இல்லாவிட்டால் இந்த வேலை இவ்வளவு முன்னேற்றத்தைக் கண்டிருக்க முடியாது. ஏதோ போகிற வழியில் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் இறக்கி விட்டுச் செல்லுவதிலோ, சினிமாக் கொட்டகைகளிலே இறக்கி விட்டுச் செல்லுவதிலோ குற்றம் ஒன்றுமில்லை. அதைப் பெரிய குற்றமாகக் கருதி பூதக் கண்ணாடி வழியாகப் பார்க்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டை வண்டியில் காதவழிதூரம் போய்க் கொண்டிருந்த காலம் இருந்தது. அது ஒரு காலத்தில் பொறுத்தமாக இருந்திருக்கலாம். கிராமப் புறங்களில் நல்ல முறையில் பாதை வசதியை அமைத்துத்தர வேண்டும். இப்போது கிராமப் பகுதிகளில் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. உணவுப் பண்டங்களையெல்லாம் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு போக வேண்டுமானால் நல்ல ரோடுகளும், பாலங்களும் அமைக்கப்பட வேண்டும். ஆகவே, கிராம ரோடுகளிலே முக்கிய கவனம் செலுத்தி பராமரித்து வருவது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் கிராம ரோடுகளை பராமரிப்பதற்காக நபர் ஒன்றுக்கு 40 பை வீதம் கொடுப்பது போதாது. பஞ்சாயத்து யூனியன் சாலைகளை மாவட்ட சாலைகளாகவும், நெடுஞ்சாலைகளாகவும் எடுத்துக் கொண்டு பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, நெல்லை ஜில்லாவைப் பொறுத்த வரை, ராஜபாளையம், தென்காசி ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது. தென்காசி அம்பாசமுத்திரம் வழியாகத் திருநெல்வேலிக்குப் போகும் பாதையானது பள்ளம் நிறைந்ததாக இருக்கிறது. வெஸ்டர்ன் காட்ஸ் பக்கம் அடிக்கடி மழை பெய்கிற காரணத்தால் ரோடுகள் அடிக்கடி பழுதடைந்து விடுகிற நிலைமை இருக்கிற காரணத்தால் அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் நெல்லை ஜில்லாவுக்கு மந்திரியவர்கள் வந்திருந்தபோது ஒரு குறையை எடுத்துச் சொன்னோம். மந்திரியவர்கள் தனியாக வந்திருந்தால் அந்த அளவுக்கு பயன் ஏற்பட்டிருக்காது. மந்திரி, பிரதானிகள் புடை சூழ வந்திருந்தார்கள். சீப் இஞ்ஜினியர், ஹைவேஸ் இஞ்ஜினியர், பி. டபிள்யூ. டி. இஞ்ஜினியர் எல்லோரும் மந்திரியவர்கள் பக்கத்தில் இருந்தார்கள். டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் எங்கள் குறைகளை எடுத்துச் சொன்னோம். தாம்பிரபரணி நதியின் மேல் உள்ள சுலோசன முதலியார் பாலத்தை அமைச்சர் அவர்களுக்குக் காட்டினோம். இரண்டு மணி வெயில் என்றும் பாராமல் அமைச்சர் அவர்களே நடந்து வந்து அந்தப் பாலத்தைப் பார்த்தார்கள். அதிலே ஒரு பஸ்தான் ஒரு சமயத்தில் போகக்கூடிய வசதி இருக்கிறது. ஆண்கள் நடந்து போகும்போது பஸ் வந்துவிட்டால் சுவர் மீதாவது ஏறி நின்று கொள்கிறார்கள். ஆனால் பெண்கள் அந்தப் பாலத்தில் நடந்து போவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏதாவது பஸ் இடையில் வந்துவிட்டால் பெண்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். அமைச்சர் அவர்கள் அதனை நேரிலே கண்டார்கள். அந்தப் பாலம் 100 வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட பாலம். பெரிய நிலச்சுவான்தாரான வெங்கு பாஷா என்பவர் ஒரு லட்சத்திற்குமேல் செலவு செய்து தர்மத்திற்காக, பொது ஜன உபயோகத்திற்காகக் கட்டிக் கொடுத்ததாகக் கூறுகிறார்கள்.

அவர் பெரிய பணக்காரராகயிருந்த காலத்தில் லண்டனில் அவர்கள் ராணியின் அரண்மனையில் விருந்து உண்டு கொண்டிருந்தாராம். அப்போது அவர்களுக்கு ஒரு அதிர்ஷ்டச் சீட்டு விழுந்தது என்றும் அப்பணம் பூராவையும் தர்மத்திற்காக இப்பாலம் அமைக்க செலவிட்டாராம். அன்று கட்டிய பாலம் இன்றும் மக்களுக்கு பயன்படுகிறது. ஆனால் அது நெடு நாட்களாகி, ஒடுக்கமாயிருப்பதால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இப்பாலத்தில் யானை போக அனுமதிக்கப்படுவதில்லை. ஒருசில இடங்களில் அது பலஹீனமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது பழுதடைந்துவிட்டால் அதிகச் செலவாகும். இரு பக்கத்திலும் நடைபாதை, சைக்கிளில் போகிறவர்களுக்கும், நடந்து செல்கிறவர்களுக்கும் அமைத்துக் கொடுத்து பக்கத்தில் "பை-பாஸ்" போட்டால் வசதியாக இருக்கும். அடுத்தபடியாக நெல்லை ரெயில்வே சந்திப்பில் ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது அதிக தூரம் போகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அந்த ரயில்வே கேட்டை மூடிவிட்டால் இரண்டு பக்கத்திலும் ஐந்து ஐந்து பஸ்கள் நின்றுவிடுகின்றன. பஸ்கள் முன்பிருந்ததுபோல் அல்ல இப்போது இருப்பது. ஒவ்வொன்றும் அரை பர்லாங்க், ஒரு பர்லாங்க் நீளம் இருக்கின்றன. ஆகவே பஸ்கள் நின்றால் அந்தப் பக்கத்தில் அரை மைல் இந்தப் பக்கத்தில் அரை மைல் என்று நிற்கின்றன. பஜாரின் நீளமே ஒரு மைல்தான். ஆகவே அங்கு ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த இலாகா அமைச்சர் அவர்களுக்கும் அரசாங்க சிப்பந்திகளுக்கும் இதில் பாடுபடுகிறவர்களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கோ. சி. மணி:** மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது எடுத்திருக்கிற 27-வது மான்யக் கோரிக்கையான பொதுப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டு அனுமதி கோரியிருக்கிற 5,73,66,600 ரூபாய் பற்றிய பிரச்னையில் எதிர்க் கட்சியினராகிய நாங்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் மனிதனுக்கு இமை எவ்வளவு அவசியமோ அதே அவசியந்தான் இந்த இலாகாவிற்கும் இருக்கிறது என்பதை உள்ளபடியே நான் மனமார உணர்ந்து ஒத்துக்கொள்கிறேன். புனிதமான இந்த இலாகாவில் அமைச்சர் அவர்களும், உயர்தர அதிகாரிகளும் எண்ணியிருக்கிற அளவிற்கு செயல்கள் நடைமுறையில் நடந்திருக்கிறதா என்று பார்த்தால் ஓரளவு ஐயப்பாட்டோடுதான் இங்கு இதுபற்றி எடுத்துச் சொல்லும் கட்டத்தில் நாங்கள் எல்லாம் இருக்கிறோம். காரணம், இந்த இலாகா சரியாக இருந்தால்தான் பல்வேறு இதர இலாகாக்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட முறையில் இயங்க முடியும். இந்த இலாகா எடுத்துக்கொண்டிருக்கிற வேலைத் திட்டங்கள், நெடுஞ்சாலைகள், பஞ்சாயத்து சாலைகள், யூனியன் சாலைகள் என்று வெவ்வேறாக பிரிக்கப்பட்டு தொகை ஒதுக்கப்பட்டு பணிகளை திறமையோடு ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படித் திறமையாக பணியாற்றினாலும், கீழ் மட்டத்தில் நடக்கிற சில பல தில்லுமுல்லுகள், சில பல நடவடிக்கைகள் காரணமாக ஏற்படுகிற பல குறைபாடுகள் போக்கப்படாத குற்றத்தை நான் இங்கு சுமத்த விரும்புகிறேன். குறிப்பாக ஆற்றோரங்களிலும், குளக்கரையோரங்களிலும் கட்டப்பட்டிருக்கிற ரிவெட்மெண்ட்ஸ் எப்படியிருக்கின்றன என்பதை கிராமப் பகுதியில் பிறந்தவர்களாகிய என் போன்றோர் கட்டாயம் அறிந்திருக்க முடியும். தஞ்சை சாலையில் வாழ பழக்கடைக்கும் சுந்தரபெருமாள் கோவிலுக்கும் இடையே இரண்டு ஆறுகள் இருக்கின்றன. குடமுருட்டி ஆறும் திருமலைராஜன் ஆறும் அந்தச் சாலையையும், பாலத்தையும் அரிக்காமல் இருக்க ஒரு ரிவெட்மெண்ட் கட்டப்பட்டது. அதை 1959-ம் ஆண்டில் ஆரம்பித்து 1960-ல் கட்டி முடித்தார்கள் என்று கருதுகிறேன். ஆனால் 1960-ல் கட்டி முடிக்கப்பட்ட அந்த ரிவெட்மெண்ட் 1961-62-ல் பார்க்கும்போது அதில் பாதி சரிந்தும் பாதி ஆற்றுக்குள்ளேயும் கிடக்கிறது. அமைச்சர் அவர்கள் தஞ்சைக்குச் செல்லும்போது இதை தயவு செய்து ஏறெடுத்துப் பார்க்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இப்படி ஒரு கட்டடம், சிமெண்ட் போட்டுக் கட்டப்பட்டதாகச் சொல்லப்படும் கட்டடம், சாலை பழுதடைவதைத் [illegible]

கட்டப்பட்ட கட்டடம் கட்டி முடிந்த இரண்டு ஆண்டிற்குள்ளாக பழுதடைந்து ஒரு பகுதி ஆறிலும், ஒரு பகுதி தொத்திக்கொண்டும் நிற்பதைப் பார்ப்பவர்கள் எப்படி இந்த இலாகாவைப் பாராட்ட முடியும்? அடுத்து நெடுஞ்சாலைகளை எடுத்துக்கொண்டாலும் அவற்றில் பல வளைவுகள் இருக்கின்றன. பன்னெடுங்காலமாகவே இருக்கின்றன. நான் பிறந்து நடக்க ஆரம்பித்த காலத்தில் இருந்த வளைவுகள் இன்றும் அப்படியே இருக்கின்றன. காரைக்காலிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் திருநாகேஸ்வரத்திற்கு மேற்கே ஊருக்குள் நுழையுமிடத்தில் திரும்பினால் அங்கு "எல்" போட்டால் எப்படியிருக்குமோ அப்படியே இருக்கிறது அச்சாலை. அதுவும் அகலமாக இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. ஒரு லாரி அளவிற்குத்தான் அந்த சாலையின் அகலம் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் அமைந்திருக்கிறது. அவற்றிற்கு இரண்டு பக்கத்திலும் நெருங்கியவிதத்தில் வீடுகளும் இருக்கின்றன. ஆகவே ஏதாவது சிறு தவறு ஒன்று ஏற்பட்டால் லாரி அல்லது பஸ்ஸில் போகிறவர்களுக்குத்தான் அபாயம் என்றில்லை. இரண்டு பக்கங்களிலும் உள்ள வீடுகளில் வாழ்பவர்களுக்கும் அபாயம் நேரிடும். குடந்தையிலிருந்து சீர்காழி செல்லும் பாதையில் திருவிடைமருதூரில் மகாலிங்கசாமி கோவிலின் மேற்கு வாயில்படிக்கு எதிரில் ஒரு வளைவு இருக்கிறது. அங்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அங்கிருக்கிற மகாலிங்கசாமிக்குக்கூட ஆபத்து வந்தாலும் வரலாம். ஒரு மகாலிங்கசாமி அல்ல பல சுவாமிகளுக்கும் ஆபத்து வரலாம். நெடுஞ்சாலைகளில் நடுவில் குடி இருக்கிற சில பல ஆண்டவன்கள் தொல்லை கொடுத்து வருகிறார்கள். குறிப்பாக அவர்களிடம் நெருங்க இந்த இலாகா அச்சப்படுகிறது என்றுதான் நான் கருதுகிறேன். நெடுஞ்சாலைகளில் சில சிறிய தேவதைகளின் கோவில்கள் இருக்கின்றன. அவை பாழாகாமல் இருக்க பக்கத்தில் ஒரு கல்லையும் நட்டு வைத்து வருகிறார்கள். சில சாலைகளை அபிவிருத்தி செய்தாலும் அவை ஒரே திணுசாகத்தான் காட்சி அளிக்கின்றன. ஆடுதுறையிலிருந்த அணைக்கரை போகும் சாலை திருமங்கலக்குடி-திருப்பனந்தான் வழி செல்லும் சாலை இவைகள் ஒரு ஆண்டு காலம்கூட சரியாக இருப்பதில்லை, பாதை போடப்பட்டும். காரணம் ஒரே கண்ட்ராக்டர்தான் வேலையை எடுத்துச் செய்வதாகக் கேள்விப் பட்டேன். எப்போது இவை செம்மையாக்கப்படுமோ? தெரியவில்லை. அங்கு தேர்தல் காலத்தில் ஜல்லி போடப்பட்டது. ஆனால் இன்னும் அதில் தார் ஊற்றவில்லை. தார் போட நவீன விஞ்ஞான முறைப்படி இயந்திரங்கள் வைத்து போட்டாலும் சாலை ஓர மரங்களை, அதன் கிளைகளை வெட்டி தார் உருக்குகிறார்கள். அம்மரங்கள் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. வருவாயை அதன் மூலம் நம்பியிருப்பவர்கள் என்ன செய்வார்கள்? இது கவனிக்கப்பட வேண்டும். கட்டடங்கள் பொறுத்தவரை போலீஸ் இலாகாவினருக்காக கட்டடங்கள் கட்டிக் கொடுக்க முடிவு செய்தும் இந்த இலாகாவின் தாமதத்தால் அத்திட்டம் நிறைவேறாமல் வேலைகள் தடைபடுகின்றன. குற்றாலத்திலுள்ள போலீஸ்காரர்களுக்கு வீடுகட்டும் திட்டம் வகுக்கப்பட்டு அதில் சில தகராறுகள் ஏற்பட்டு இப்போது அதை பெரிய பணக்காரர்கள் வீடு கட்டிக்கொள்ள நகர விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. என் தொகுதியில் திருவிடைமருதூர் போலீஸ் ஸ்டேஷன் போலீஸ்காரர்களுக்கு மட்டும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்ற ஸ்டேஷன்களில் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. ஆதலால் அவர்கள் வீடு வசதியின்றி கஷ்டப்பட வேண்டியிருக்கின்றது. ஆகவே, இந்நிலை மாற்றப்படவேண்டும். அடுத்து, மண் சாலையை எடுத்துக்கொண்டால், சிகப்புக் கப்பி என்று சொல்லி அதைக் கொட்டி சாலை போடுகிறார்கள். அந்த சிகப்பு மண் என்று சொன்னால் உண்மையைச் சொல்லுகிறோம் என்ற நிலைக்கு ஆளாகலாம். ஆனால் அதை சிகப்பு கப்பி என்று சொல்லி அதைப் போட ஆரம்பித்து, அதைப் போட்ட பிறகு கட்டுபோட்ட சக்கரமுள்ள வண்டிகள் நாலைந்து தடவை அச்சாலை வழி சென்று வந்தால் போதும். ஒரு மனிதன் நடந்து போனால் வேஷம் போட்டவன் போல் மாறிவிடுவான். அந்த சிகப்பு மண்கூட இன்ன இடத்திலிருந்துதான் இந்த [illegible]

எடுத்துவரவேண்டுமென்று கூறுகிறார்கள். உதாரணமாகச் சொன்னால் வல்லத்திலிருந்து நாகபட்டணத்திற்கு வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து மண்மணலோ கல்லோ எது கிடைக்கிறதோ அதை அனுப்புகிறார்கள். இம்முறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. நெ. சா. இராமலிங்கம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த இலாகாவை நல்ல முறையிலே, திறமையாக, நிர்வகித்து நம் ராஜ்யத்திற்கு கௌரவத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நமது அமைச்சர் அவர்களையும், நமது இலாகாவையும் நான் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் இந்த இலாகாவிற்கு இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்கவேண்டும் என்றும், இன்னும் அதிக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

துர்ப்பாக்கிய ஜில்லா தஞ்சை ஜில்லா. துர்ப்பாக்கியம் என்றால் ஒரு விதத்தில் அல்ல, பல விதங்களில். குறிப்பாக, சாலைகளைப் பொறுத்த வரையில் மற்ற ஜில்லாக்களிலெல்லாம் சாலைகளுக்கு ஒதுக்கப்படுகிற பணம் சாலைகளுக்குச் செல்லுகிற நேரத்தில், தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் முக்கால்வாசிப் பணம் ட்ரான்ஸ்போர்ட்டுக்கே போகிறதே தவிர சாலைக்குப் போவது மிகமிகக் கொஞ்சம். ஆகவே, எனக்கு முன் பேசிய எனது ஜில்லா அங்கத்தினர் சொல்லியது போல, ட்ரான்ஸ்போர்ட்டுக்குத் தனியாக பணம் ஒதுக்கிவிட்டு, சாலைக்கு மற்ற ஜில்லாக்களுக்கு ஒதுக்குவதைப் போல ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எங்கள் ஜில்லாவில் கீழ் கடற்கரை நீண்டு கிடக்கிறது. சீர்காழி தாலூகாவிலிருந்து அறந்தாங்கி தாலூகா முடிய இருக்கிறது. அந்தப் பகுதியில் ஆயிரக் கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வசதியும் கிடையாது. சாலை வசதி இல்லாவிட்டாலும் வேறு வசதி இருக்கிறதா என்று பார்த்தாலும் ரயில் வசதி ஒன்றும் கிடையாது. ஆகையால் அந்தச் சாலைக்கு ஈஸ்ட் கோஸ்ட் ரோடு என்று சொல்லுகிற சென்னையிலிருந்து ராமேஸ்வரம் வரை போகக்கூடிய சாலையாக அமைப்பதற்கு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறோம். அந்த மாதிரி பல நேரங்களில் சொல்லியும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடைப் பற்றி இந்த அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தினால் சீக்கிரம் உத்திரவு வரக்கூடிய நிலை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நான் அமைச்சர் அவர்களையும் இந்த அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன். இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி எப்படி கன்னியாகுமரியிலிருந்து பம்பாய் வரையில் மேற்கு கோஸ்ட் ரோடு போட்டார்களோ அதே மாதிரி சென்னையிலிருந்து ராமேஸ்வரம் வரை போட ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு நாமும் உதவி செய்யவேண்டும். அதற்காக நாம் கட்டவேண்டிய பாலங்களைக் கட்ட வேண்டும்.

எனது தொகுதியில் வளவனாறு பாலம் டெண்டர் விடப்படும் நிலையில் இருக்கிறது. நெருக்கடி காரணமாக அதைக் கைவிட உத்தேசித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்தப் பாலம் கைவிடப்பட்டால் மக்கள் கஷ்டப்படுவதுடன், ஈஸ்ட் கோஸ்ட் ரோடை எடுத்துக்கொள்வதிலும் கால தாமதம் ஏற்படும். லோகல் இம்பார்ட்டன்ஸ் ஏற்பட்டால்தான் இந்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன் வருவார்கள். நெருக்கடி என்று சொல்லி ஈஸ்ட் கோஸ்ட் ரோடையும், வளவனாறு பாலத்தையும் கட்டாமல் விட்டு விட வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன். நமது ஒப்பற்ற பிரதமர் சில நாட்களுக்கு முன் இந்த நெருக்கடி நிலை 50 வருஷங்கள் வரை நீடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். மக்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றுதான் அப்படிச் சொல்லியிருக்கிறார். எனக்குத் தோன்றிய வரையில் இன்னும் 8—10 வருஷமாவது இருக்கும் என்று நினைக்கிறேன். சுதந்திரம் அடைந்து இத்தனை வருஷங்களாகியும்,

இன்னும் 10 வருஷங்கள் அந்தப் பகுதி மக்களுக்கு எந்த சௌகரியமும் இல்லை என்றால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள், வருத்தப்படுவார்கள். அதை கவனத்தில் வைத்து இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடையும் இந்த வளவனாறு பாலத்தையும் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும் என் தொகுதியில் வேதாரண்யம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. கப்பி போடுமுன் அங்கே மணலாக இருப்பதால் முதலில் மண் அடிக்கவேண்டியிருக்கிறது. அதனால் செலவு அதிகமாக ஆகிறது. அதோடு வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியனுக்கு மற்ற பஞ்சாயத்து யூனியன்களை விட அதிகமான அளவுக்கும் சாலைகள் இருக்கின்றன. அவர்களுக்குப் போதிய நிதி வசதி கிடையாது. இங்கு சட்டம் செய்திருக்கலாம். பஞ்சாயத்து யூனியனுக்கு சாலைகளைக் கொடுத்து சட்டம் செய்திருந்தாலும், எல்லா விதிகளுக்கும் விலக்கு இருப்பது போல, அவர்களுக்கு கொஞ்சம் அதிகமாகத் தொகை கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். வேதாரண்யம் பகுதியில் வேதாரண்யம் செங்கதாது சாலை, முக்கியமான சாலை. அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வேலை செய்யவேண்டும். அங்கு பல மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் திருத்துறைப்பூண்டி போன்ற இடத்திற்கு வரவேண்டியிருக்கிறது. நெருக்கடி நேரத்தில் காய்கறிப் பஞ்சம், விறகுப் பஞ்சம் எல்லாம் இருப்பதால் இந்த ரோடைப் போட்டுக்கொடுத்தால் நல்ல ருசியான காய்கறிகள் கிடைக்கவும் விறகு போன்றவைகள் கிடைக்கவும் வசதி இருக்கும். ஆகையால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மைனர் போர்ட்ஸ் பற்றிச் சில வார்த்தைகள். நாகப்பட்டணம் துறைமுகத்தைப் பற்றிப் பல தடவைகள் பேசியிருக்கிறோம். அது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில அபிவிருத்திகள் அடைந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் அதிக அபிவிருத்தி அடையக் கூடும். மந்திரி அவர்களுடைய அறிக்கையில் பல துறைமுகங்களை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் எடுத்து அரைகுறையாகச் செய்வதைவிட ஒவ்வொன்றாக எடுத்து, கனம் அங்கத்தினர் ஹாஜா ஷெரீப் சொன்னது போல, ஒரு கமிட்டி அமைத்து எந்தெந்தத் துறைமுகத்தை எந்தெந்த வரிசையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற முறையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருந்துகொண்டிருக்கக்கூடிய மானியத்தின் மீது சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு விரும்புகிறேன்.

இந்தச் சாலைகளை ஒப்படைத்திருப்பதில் 5,000 மைல்கள் நீளம் உள்ள சாலைகளை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கு நபர் ஒன்றுக்கு 40 பைசா வீதம் மானியம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அந்த ஜில்லாவிலே இருக்கக் கூடிய ரோடுகளைப் பராமரிப்பதற்கு அந்த பஞ்சாயத்து யூனியன்களுக்கும் போதுமான வருமானம் கிடையாது. அதே சமயத்தில் அவர்கள் கப்பிகள் வாங்கவேண்டுமென்றால், வெகு தொலைவிலிருந்து, அல்லது அடுத்த மாவட்டங்களிலிருந்துதான் வாங்கிக்கொண்டு வந்து கூடப் போட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே கொடுக்கக்கூடிய 40 பைசா போதாத நிலை இருக்கிறது. குறைந்த பட்சம் ஒரு ரூபாயாவது தஞ்சை மாவட்டத்தைப் பொருத்த வரையில் கொடுக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[illegible] பிரதேசசாலைகளின் ஆறுகள் இடை இடையே ஓடிக்கொண்டிருப்பதால் கிராமங்களில் பிரேதங்களை எடுத்துச் செல்லும்போது ஆற்றைக் கடந்து [illegible] செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி ஆற்றைக் கடந்து செல்[illegible]

போது மழை காலங்களில் ஆறுகளில் வெள்ளம் வந்து விட்டால் அப்போது பிரேதங்களை எடுத்துச் செல்ல மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே பிரேதங்களை எடுத்துச் செல்லவேண்டி பாலம் அமைத்து நடைபாதைகளைப் பே டுவதற்கு அனுமதிக்கவேண்டும்.

கந்தப்பரிச்சான் ஸைஃபன் என்று ஒரு கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது.
12-30 p.m. அமைச்சர் அவர்களுக்கும் அது பற்றிய புகார் வந்திருக்கிறது. அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் லட்சக்கணக்கான ரூபாய்களை சர்க்காரிலிருந்து அங்கிருக்கக்கூடிய மக்களுக்காகச் செலவு செய்யப்படுகிறது. செலவு ஆகக் கூடிய தொகை அந்த மக்களுக்குப் பிரயோஜனப்படுகிறதா என்று பார்த்தாகவேண்டும். அப்படிப் பார்க்கிற போது அந்தக் கட்டிடத்திலே அதிகமான மணலை சிமெண்டோடு சேர்த்துக் கட்டுவதால் கட்டிடம் தெறித்து விடுகிறது. இம்மாதிரி பல வேலைகள் அதிகமான மணல் கலப்பதன் காரணமாகக் கெட்டு விடுகிறது என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன். வேலை செய்ய சிமெண்ட்டும் கிடைப்பது கிடையாது. அதிகாரிக்கு யார் வேண்டியவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் சிமெண்ட் பர்மிட் கொடுக்கிறார்கள். அம்மாதிரி பாரபட்சம் காட்டக்கூடாது என்று அரசாங்கம் உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார்குடி—முத்துப்பேட்டை சாலை மிகவும் குறுகியதாக இருக்கிறது. கீழத் தஞ்சையை எடுத்துக்கொண்டால் சாலைகள் பள்ளப் பிரதேசத்தில் சென்று கொண்டிருக்கின்றன. மழை காலத்தில் அங்கே பஸ்கள்கூட ஓடாது, வண்டிகளைக்கூட ஓட்டமுடியாதபடி தண்ணீர் தேங்கி விடும். சாலைகளை ரிப்பேர் செய்ய, சாலைகளை உயர்த்த வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். ரோடுகளை வெட்டி வயல்களில் சேர்த்து விடுகிறார்கள். ரோடுகளை அளந்து எந்த அளவு ரோடு அகலம் இருக்கவேண்டும் என்று சர்வே செய்து சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்குக் கொடுக்க உத்தரவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆலங்குடியிலிருந்து ஆலத்தம்பாடி வழியாக தட்டாங்கோவில் போகக் கூடிய ரோடு ஆற்றங்கரை வழியாகப் போகிறது. அதைப் பற்றி பல ஆண்டு காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அதையும் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாமணி—கள்ளமேடு சாலையை ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொண்டு வேலை செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்வதோடுகூட, தலைஞாயறு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கிராமங்களுக்குப்போக ஆறுகளைக்கடந்து வருகிற நிலைமை இருக்கிறது. தண்ணீர் அதிகமாகப் போகக்கூடிய காலங்களில் அந்த ஆறுகளையெல்லாம் தாண்டி வரக் கூடிய நிலைமை இருக்கிறது. சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வேதாரண்யம் சேனலுக்குப் பாலம் கட்ட திட்டங்கள் போட்டாகிவிட்டது, கட்டுவார்கள் என்று. இந்த அறிக்கையில் பார்க்கும்போது அந்த மாதிரித் திட்டங்கள் போட்டு நடத்துவதாகத் தெரியவில்லை. இந்த மாதிரி ஆங்காங்கு ஆறுகளைக் கடந்து வரவேண்டிய பிரதேசங்களில் பாலங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், தாராளமாக சிமெண்ட் வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு எனது வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மான்யத்தை நான் ஆதரிக்கிறேன். மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் ரோடுகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து நாம் எல்லோரும் பெருமைப்படலாம். தேசிய நெடுஞ்சாலைகளும் மாநிலநெடுஞ்சாலைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் ரயில்வே ரோடுகள் குறுக்கே இருப்பதால், லெவல் கிராஸிங் அடிக்கடி மூடப்பட்டு அதனால் போக்கு வரத்திற்கு தாமதம் ஏற்படுகிறது. இரவு நேரங்களில் கார்கள் அதிக நேரம் நிற்க வேண்டியிருக்கிறது. கோவில்பட்டியில் ஒருபை-பாஸ் ரோடு

போட வேண்டுமென்று வெகு நாட்களாக திட்டம் இருந்தும், அந்தக் குறை இன்னும் நிவர்த்தி செய்யப்படவில்லை. தேசிய நெடுஞ்சாலைகளிலே லெவல் கிராஸிங் இருக்கும் இடங்களில் எல்லாம் ஓவர் பிரிட்ஜ்கள் அமைக்கப்படவேண்டும். குறிப்பாக, கோவில்பட்டி, நச்சநல்லூர், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் லெவல் கிராஸிங்குகளில் ஓவர் பிரிட்ஜ்கள் கட்டிக்கொடுத்தால், அங்குள்ள மக்களுடைய போக்குவரத்திற்கு எவ்வித பாதகமும் ஏற்படாமல் சௌகர்யமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பெரிய மாவட்டச் சாலைகளும் ஓரளவுக்கு சர்க்காராலேயே நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பாளையங்கோட்டை, திருத்து, உடையார்ப்பட்டி-சீவலப்பேரி ஆகிய ரோடுகளின் அகலம் மிகவும் குறைந்திருக்கிறது. ஒரு பர்லாங்குக்கு முன்னாலேயே வண்டி வந்தால், இரண்டு வண்டிகள் போக இடம் இல்லாமல், ஒரு வண்டியை நிறுத்தி வைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ரோடுகளையெல்லாம் அகலப் படுத்தவேண்டும். அதற்கான காரியங்களை இந்த சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீவலப்பேரி சிற்றாரில் ஒரு தாம்போதி கட்டவேண்டுமென்று 1955-ம் வருடத்திலேயே திட்டம் போடப்பட்டு, ஜில்லா போர்டார் இட்டத் தட்ட ரூ. 75,000-க்கு எஸ்டிமேட் தயார் செய்து, அதற்காக ரூ. 10,000 செலவு செய்துவிட்டார்கள். சிற்றாறைக் கடந்து போக மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த ரோடு சர்க்காருக்கு மாற்றப்பட்டதன் காரணத்தினாலே, செய்த வேலை அப்படியே நிறுத்தப்பட்டு விட்டது. அப் கடந்த பட்ஜெட்டில் அதற்காக ரூ. 75,000 ஒதுக்கியிருந்தார்கள். அப்பொழுது செலவு செய்யப்படவில்லை. இந்த ஆண்டும் அதற்காக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தொகையும் செலவு செய்யப்படுமா என்பது சந்தேகமாய் இருக்கிறது. இப்பாலம் கட்டப்படுமேயானால் ஒரு வருஷத்தில் 500 டன் உணவு உற்பத்தி பெருகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகையால், இது கட்டப்படுவது மிகவும் அவசரமும் அவசியமும் ஆனதாகும். சீப் என்ஜினியர் சமீபத்தில் அந்த இடத்தை பார்வையிட்டிருக்கிறார். தாம்போதிகட்ட ஆரம்பித்தபோது ஒரு பிள்ளையார் கோவில் இடையிலே தடங்கலாக இருப்பதாகக் கூறப்பட்டது. நான் அந்தக் கிராமத்திற்கு சமீபத்தில் சென்றிருந்தேன். அந்தக் கிராம வாசிகள் "இந்தப் பிள்ளையார் கோவில் இப்பொழுது வைக்கப்பட்டது. முன்னால் வைத்ததில்லை. நாங்கள் வேண்டுமானால் அதை அப்புறப்படுத்தி விடுகிறோம்", தாம்போதி மிகவும் முக்கியம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அதை சாக்காக வைக்காமல், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த ஆண்டில் அதை நிறுத்திவிடாமல் கட்டி முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது, பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகிற பணம் போதாது. அவர்கள் அதை வைத்துக்கொண்டு பாலங்கள் ஒன்றுமே கட்ட முடியவில்லை. முதலிலே போட்ட ரோடுகள் அப்படி அப்படியே நின்று விடுகின்றன. இன்னும் பாலங்களைக் கட்டவேண்டுமென்றால், அந்தக் காரியங்களுக்கு சர்க்கார் அதிகப்படியான மான்யம் கொடுக்கவேண்டும், அல்லது அவர்களே அப்பாலங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டும். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. ர. முனிரத்னம் : மதிப்பிற்குரிய மாமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள பொதுப் பணித் துறை மான்யத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுப் பணித் துறை இலாகாவிலே நடைபெறுகிற காரியங்கள் நல்ல முறையில் குறிப்பிட்ட காலத்திலே சரியான முறையிலே பயன்படும்படி நடைபெறுவது இல்லை. அவர்கள் வழங்குகிற சிமெண்டு முதலிய வசதிகளும் அந்த கிடையாது. அவர்கள் வழங்குகிற சிமெண்டு முதலிய வசதிகளும் அந்த மாதிரிமுறையில் தான் இருக்கின்றன. உதாரணமாக, என்னுடைய தொகுதி

யில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆற்காடு—திண்டிவனம் நெடுஞ் சாலையில், ஆற்காட்டிலிருந்து 10 மைலில் ஒரு பாதை நெடுஞ்சாலை இலாகாவினால் எடுத்துக்கொள்ளப்பட்டு, சென்ற ஆண்டில் 3 மைல் தார் போட அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான வேலையைக் குத்தகைக்கு விட்டார்கள். குத்தகை எடுத்து ஓர் ஆண்டு காலம் ஆகியும், அந்தப் பணி இது வரையிலே முடியாத நிலையில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்த்து ஏன் அந்தப் பணி முடியவில்லை என்று கேட்டால், "குத்தகைக்காரர்கள் காலதாமதம் செய்தால் அதற்கு நாங்கள் என்ன செய்கிறது?" என்று அவர்கள் கூறுகிறார்கள். குத்தகைக்காரர்களைப் பார்த்துக் கேட்டாலோ, அவர்கள் "சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் கொடுக்கவேண்டிய ரோடு ரோலர் போன்ற இயந்திரங்களை எங்களுக்குக் காலாகாலத்தில் தருவதில்லை. அவர்களைக் கேட்டால் எல்லைப்புறத்திற்குப் போய்விட்டன, இயந்திரங்கள். நாங்கள் என்ன செய்வது? என்று கூறுகிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். இப்படி இவர்கள் அவர்கள் மீதும், அவர்கள் இவர்கள் மீதும் பழியைப் போட்டுக்கொண்டு காலத்தை வீணாக்கிக் கொண்டு போகிறார்கள். அதனால், பொது மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை கொஞ்சம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் பராமரிப்பிலுள்ள பாதைகளை பஞ்சாயத்து யூனியன் பராமரிக்க முடியாமல் இருப்பதால், அவைகளை நெடுஞ்சாலை இலாகாவினர் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பல தீர்மானங்கள் போட்டுக் கேட்டும், அதற்கு அவர்கள் நெருக்கடி நிலை காரணத்தையும், மற்ற காரணங்களையும் காட்டி இப்பொழுது முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது ஜனத்தொகையை கணக்கெடுத்து நபர் ஒன்றுக்கு 40 நயா பைசா வீதம் தருவதாக கனம் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள். அது வரவேற்கத்தக்கது என்றாலும், அந்தத் தொகை போதாது. ஜனத்தொகை அடிப்படையில் 60 நயா பைசா என்று கணக்குப் போட்டு அனுமதிக்கவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும் அல்லாமல் சென்னை-சித்தூர் ரோடில் உள்ள சில பாலங்களை இடித்து வருகிறார்கள். அவைகளெல்லாம் இடிக்கக்கூட முடியாத நல்ல பாலங்கள். இடித்தால் கடப்பாரையின் கூர் மழுங்கிவிடும்படியான நல்ல பாலங்கள். அப்படியிருக்கும்பொழுது அந்தப் பாலங்களை இடித்துக் கொண்டு வருகிறார்கள். அந்தப் பாலங்களை இடித்து விட்டு புதியதாக வேறு பாலங்களை மாற்றி அமைக்கப்போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஒரு வேளை அவைகளையெல்லாம் அகலப்படுத்தவேண்டுமென்றால், அவைகளையெல்லாம் அப்படியே வைத்துக்கொண்டு அகலப்படுத்தியிருக்கலாம். அப்படி மிச்சமான பணத்தை பின்தங்கியுள்ள பகுதிகளுக்குச் செலவிட்டால் அது பொது மக்களுக்கு ஏற்றதாக அமையும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பொதுப்பணித் துறையினர் கட்டிடங்கள் கட்டுவதற்கும் பாலங்கள் அமைப்பதற்கும், ஆங்காங்கு ஏரிகளில் மதகுகள் கட்டுவது போன்ற வேலைகள் செய்வதற்கும் கண்டிராக்டர்களை நியமிக்கிறார்கள். அவர்களுக்கு சிமெண்டு பெர்மிட்டுகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு சிமெண்டு பெர்மிட்டுகள் வழங்குவதில் அரசினர் மிக மிக கவனமாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் அந்த கண்டிராக்டர்கள் சிமெண்டை சரியான முறையிலே குறித்த அளவிலே பயன்படுத்துவது கிடையாது. அதில் சிறிதளவு பயன்படுத்திவிட்டு, மீதியை வைத்துக் கொண்டு கள்ள மார்க்கெட்டில் வியாபாரம் செய்கிறார்கள். உண்மையை அறிய விரும்பினால், சென்னையிலே இருக்கிற செம்புதாஸ் தெரு, ஏரபாலு செட்டித் தெரு முதலிய இடங்களுக்குச் சென்றால், சிமெண்டு வேண்டுமென்றால் அங்கு இருக்கிற தரகர்கள் 200, 300 மூட்டைகள் வேண்டுமென்றாலும், மூட்டை ஒன்றுக்கு ரூ. 14 வீதம் கொடுத்தால், எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கித் தருவதாகச் சொல்லுகிறார்கள். நாமும் அதற்குச் சரி என்று ஒத்துக்கொண்டு சொன்னோம் என்றால், அவர்கள் நம்மை பெரிய கண்டிராக்டர்களிடம் அழைத்துச் சென்று சிமெண்டு வாங்கித்

தருகிறார்கள். அப்படி அவர்கள் வாங்கித் தருகிற சிமெண்டில் பாதி சாம்பல் கலந்திருக்கிறது. அதை வாங்கிக்கொண்டு வந்து கிராம மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, இந்தக் குறைகளையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்யவேண்டுமென்றும், இந்தப் பொதுப் பணித் துறையை கிராமப் பகுதிகளுக்கு நன்றாக விஸ்தரிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. சா. கணேசன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே இன்றைய தினம் கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிற கோரிக்கை சுமார் ரூ. 12 கோடிக்கு மூன்று கோரிக்கைகளின் மூலமாகவும். அதை நான் வரவேற்கிறேன். அவற்றின் மீது பல உடன் உறுப்பினர்கள் கூறினார்கள், பிற மாநிலங்களை ஒப்பிட்டு நோக்கும்போது நமது மாநிலம் ரோடு முதலியவற்றிலே மேம்பட்டு நிற்கிறது என்று கூறினார் கள். அதையும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்காக சம்பந்தப் பட்டவர்களுக்கு எல்லாம் எனது பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளு கிறேன். ஆனால் அதே காலத்திலே திருப்தி அடைந்து விடக்கூடாது என்றும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். இருக்கின்ற குறைகளை நாம் கணிக்க வேண்டும். எவ்வளவோ சிறப்பாக நடைப்பெற்றாலும் இந்தத் துறையிலே தவறுகள் நிரம்ப இருக்கின்றன என்பதை நாம் மறைத்து விடவோ அல்லது மறந்து விடவோ கூடாது, முடியாது என்பதையும் புலப் படுத்திக் கொள்ள விரும்புகிறேன். வீண் விரயங்கள் இன்னும் ஏற்படு கிற நிலையை நாம் காண்கிறோம். தவறுகளும் அப்படித்தான். இவற்றை எல்லாம் திருத்துவதற்கு, போக்குவதற்கு முயல வேண்டுமென்று முதலி லேயே விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

அதோடு இப்பொழுது மேற்கொள்ளுகிற ஒரு நெறி வரவேற்கத்தக்க தாக இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தேசீய நெடுஞ்சாலைகள் அல்லாத பிற சாலைகளிலே போக்குவரத்து அதிக மாக இருக்கின்ற பகுதிகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கொள்கையைக் கடைபிடிக்க முன்வந்திருப்பதைத் தான் நான் குறிப்பிடுகிறேன். இந்த நிலை மிக மிக இன்றியமையாதது. ஏதோ காரணத்திற்காகப் பிரிக்கப்பட்டு இருந்தது என்று சொல்லுவது இப் பொழுதுள்ள பிற நடை முறைகளுக்குப் பொருந்தாத ஒரு முறை என்பதை அரசாங்கம் நன்றாகக் கண்டு அந்த நெறியிலே மாற்றம் காண முயன்றது வரவேற்கத் தக்கது. அன்று ஒரு முனிசிபாலிடி ஒரு ஜில்லா போர்டு என்ற ஒரு அமைப்புக்கு அவற்றை விட்டுவிட்டு இருப்போமானால் அவர் களுக்கு அன்று வந்த வருமானத்திலிருந்து அன்று ஏற்பட்ட தேய்மானத் தையும், மற்ற செலவினங்களையும் சரிக்கட்டிக் கொள்ள முடிந்தது. இப் பொழுது சில முனிசிபாலிடிகளுக்கு டோல் கேட்டின் மூலமாகவும் லைசென்ஸ் மூலமாகவும் கிடைத்த வருமானத்திற்கு நஷ்ட ஈடு போல் ஒரு தொகை கொடுக்கிறோம் என்று சொன்னாலும் அதை அன்று கணித்த ஒரு தொகையின் அளவிலேதான் கொடுக்கிறோம். அன்று விற்பனையான பெட்ரோலைப் போல் இன்று 10 மடங்கு அதிகமாக விற்பனையாகிறது. இன்றுள்ள விகிதாசாரப்படி கொடுத்து வந்தால் இன்றும் அவர்களை அந்தச் சாலைகளைப் பராமரிக்க வேண்டுமென்று சொல்லுவது பொருத்த மாக இருக்கும், நியாயமாகவும் இருக்கும். ஆனால் இன்று ஏராளமான போக்குவரத்து நடைபெறுகின்ற காரணத்தால் அதன் மூலமாக தேய் மானமும், செலவினங்களும் பெருகி அதற்கு ஈடு செய்யக்கூடிய திராணி அற்ற நிலையிலே ஸ்தல ஸ்தாபனங்களை ஆக்கிவிட்டு முன்னர் செய்தது போல அவர்கள்தான் பராமரிக்க வேண்டுமென்று சொல்லுவது நியாய மாக இருக்காது என்பதை உணர்ந்து இந்த நிலையிலே முக்கிய சாலைகளை அரசாங்கம் தன் நேரடி பராமரிப்புக்கு மேற்கொள்ளுவதை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். ஸ்தல ஸ்தாபன ரோடுகளை எல்லாம் அதி லும் மிக இன்றியமையாத தொடர்பு சாலைகளாக இருக்கின்றனவற்றை எல்லாம் உடனடியாக அரசாங்கம் மேற்கொண்டு விட வேண்டுமென்று எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். காரைக்குடி-தேவக்கோட்டை ரோடு காரைக்குடி முனிசிபல் எல்லைக்கு அந்தப் பக்கம்

நன்ருக இருக்கிறது என்றும் காரைக்குடிக்கு இந்தப் பகுதியும் நன்ருக இருக்கிறது என்றும் ஆனல் நடுவிலே இருக்கிற பகுதியிலே பள்ளங்களும் படுகுழிகளும் இருக்கின்றன என்றும் தெரிவித்தார். இது உண்மை. கிட்டத்தட்ட 1½ மைல் தூரம் அவ்வாறு இருக்கிறது. அவையனை கூட வருமானம் இல்லாத நிலையிலே ஒரு முனிசிபாலிடி. இதை நிர்வகிக்க வேண்டுமென்று சொன்னல், அது எப்படி சாத்தியமாக இருக்கும்? முனிசிபல் எல்லையில் இருப்பதால், விளக்குகள் வேறு போட வேண்டியிருக் கிறது.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே நகராட்சி மன்றமாக உயர்த்தப்பட்ட காலத்திலே, 10 மைல் சுற்றளவுக்குக் கூட முனிசிபல் லிமிட்டிலே இருக்க வேண்டுமென்று நிலை கேட்டார்கள். நேற்று இதைப் பற்றிப் பேசியிருந்தால், விளக்கமாகச் சொல்லியிருப்பேன்.

திரு. சா. கணேசன் : ஆகவே அந்தப் பகுதிகளை அரசாங்கம் நேரடியாக எடுத்துக்கொண்டு விடுவது அதாவது மக்கள் வசிக்காத, நகரத்தை ஒட்டி யிருக்கிற ரோடுகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொண்டு விடுவது பயன் உள்ளதாக இருக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் புலப் படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்த முறை மிகவும் துரிதமாகச் செயல்பட வேண்டுமென்றும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது பெரும்பாலும் ரோடுகளைக் கண்டிராக்ட்டுக்கு விட்டு, ரோடு போட்டு முடிந்த பிறகு, "நின்ற வரையில் நெடுஞ் சுவர்" என்ற நிலையிலே போய்விடுகிறது. ஆகவே, கன்ட்ராக்டர்களிடம் ஒரு குறிப்பிட்ட காலத் திற்கு "காரண்டீ" வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். தார் ரோடு போட்டால் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் வரையிலும், சிமெண்ட் ரோடு போட்டால் குறைந்த பட்சம் 8 அல்லது 10 ஆண்டுகள் வரையிலும் காரண்டீ வாங்கிக்கொண்டு, அதற்கு எத்தகைய இடையூறும் ஏற்படுமேயானல், அந்தப் பொறுப்பு முழுவதையும் அந்த குறிப்பிட்ட கண்ட்ராக்டர் ஏற்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையைப் போட வேண்டும், அதற்கு மேலே, கண்ட்ராக்டர்கள் டேவணித் தொகை கட்டி இருக்கிருர்கள். அதைத் திருப்பிக்கொடுப்பது என்ருல், அந்தக் கால ஈட்டிற்குப் பிறகு தான் திருப்பிக் கொடுக்கப்படும் என்று கூட வரையறை செய்யவேண்டும் என்ற ஆலோசனையையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போட்ட ரோடுகளிலே பெரும் பள்ளங்கள் உடனடியாக ஏற்படுவதில்லை. சிறிய பள்ளம் ஏற்பட்டு, வண்டிகள் விழுந்து, ஒரு சாணுக இருப்பது ஒரு கெஜமாக ஆகிவிடுகிறது. ஆகவே, மூன்று அல்லது நான்கு மைல் களுக்கு ஒரு குடும்பம் வீதம் வைத்து, பெரிய ரோடுகளிலே அவர்களைக் குடி இருத்தி விட்டு, அவ்வப்போது ஏற்படுகின்ற ரிப்பேர்களை எல்லாம் அவர் களே பழுது பார்க்க வேண்டுமென்று சொல்லி, அவர்களுக்கு வேண்டிய சிறிய கருவிகள் சாதனங்கள் கொடுத்து, அதாவது மண்வெட்டி, கூடை, குடம் போன்றவைகளைப் கொடுத்து, மாதச் சம்பளத்திலே போட்டு விட்டால் நல்ல பயன் விளையும். மொத்தத்திலே பார்க்கும்பொழுது ஏற்படுகிற செலவும் மிகக் குறைந்துவிடும். எப்பொழுதும் பள்ளமே இல்லாமல் இருக்கும். இதை நான் புதிதாக இங்கே சொல்லவில்லை. கனம் அமைச் சர் திரு. ராமைய்யா அவர்களுக்கும் நன்ருகத் தெரியும். புதுக்கோட்டை யில் திவானுக இருந்த சேஷய்ய சாஸ்திரி, 60 ஆண்டுகளுக்கு முன்னர் செய்து காட்டியதைத் நான் நான் இப்பொழுது சொல்லுகிறேன். இவற்றை எல்லாம் மனதிலே கொண்டு, காரியங்கள் செய்வது மிகவும் பயன் உள்ள தாகவும், நன்மை பயப்பதாகவும் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ரோடுகள், கட்டிடங்கள், இவற்றின் வேலை முடிந்த பிறகு இலாகாவி லரே சரி பார்த்து, அதற்கு ஒரு சான்று கொடுப்பதோடு முடிந்து விடுகிறது. அதாவது புகார்கள் வருமேயானல்—அந்த இலாகாவிலே இருக்கின்ற பெரிய அதிகாரிகள் ஆகட்டும், வேறு அதிகாரிகளாக இருக்கட்டும், இனத்தைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை—சம்பந்தப்பட்டவர்களை விட்டுவிட்டு, வேறு அதற்கு தகுதி உடைய பிறரைக் கொண்டு, திடீரென்று ஒரு இடத்தை

உடைத்து, டெஸ்ட் பண்ணி, எவ்வளவு மண் இருக்கிறது, எவ்வளவு சிமெண்ட் இருக்கிறது என்று கணித்து விடுவது மிகவும் சுலபம். ஒரு மூட்டை சிமெண்டுக்கு நான்கு மூட்டை மணல் கலக்க வேண்டுமென்ற அடிப்படையிலே காண்ட்ராக்டுக்கு விட்டிருந்து, உடைத்த பின்னர் பார்க்கிற பொழுது, ஒரு மூட்டைக்கு ஏழு பங்கு அல்லது எட்டுப்பங்கு மணல் கலக்கப் பட்டிருக்கிறது என்ற நிலை கண்டுபிடிக்கப்படுமேயானல், அப்படிப்பட்டவர் களுக்குக் கடுமையான தண்டனை விதிப்பதற்கான நெறிமுறைகளை வகுக்க வேண்டுமென்றும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

அதற்கு மேலே, தனிப்பட்ட பிராந்தியங்களைப்பற்றி எல்லாம் பல அன்பர்கள் சொன்னுர்கள். காரைக்குடி–தேவகோட்டை ரோடு, அதிலே இருக்கிற தேனுற்றுப் பாலம், இவற்றைப் பற்றி எல்லாம் கூட சிலர் சொன்னுர்கள். இந்தப் பாலம் காரைக்குடிக்கு மட்டும் தேவையானது அல்ல. திருச்சியிலிருந்து தொண்டி வரை போகிற முக்கியமான வழியில் நடுவிலே இருக்கிறது. 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிய பாலம் இது. இது ஒரு கார்தான் போகலாமென்ற நிலை இருந்துகொண்டி ப்பது அவ்வளவு நல்லதல்ல. மேலும் அப்பாலம் உறுதி குலைந்தும் போ யிருக்கிறது.

கல்லலுக்கும் வெற்றியூருக்கும் இடையிலே இருக்கிற ஆற்றிற்குப் பாலம் இல்லை. நேரம் இல்லாத காரணத்தால் விஷயங்களை விளக்காமல், அந்தந்த விஷயத்தை மட்டும் சுட்டிக் காட்டிச் செல்கிறேன். மித்திரா வயலிலிருந்து காரைக்குடிக்கு, சுமார் 8 மைல் தூரத்திற்கு ஒரு ரோடு சுலபமாகப் போடலாம். வெள்ளச் சேதம் வருகிறபொழுது பெரும் துயரத்தை அனுபவிக்கின்ற பகுதி அது. இப்பொழுது கண்டனூரிலிருந்து காலேஜ் பகுதி வரை ரோடு போட்டதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். சில காலமாக கல்லூரி மாணவர்கள் சைக்கிளிலே வந்து கொண்டு இருந்தார் கள். இப்பொழுது மண்ணைப் போட்டு, ரூ. 20,000, ரூ. 30,000 என்று செலவு செய்த பிறகு சைக்கிள் கூட வரமுடியாத நிலைமை ஏற்பட்டிருக் கிறது. காரணம் என்ன ? எங்கே தவறு ? யாரால் தவறு ? இப்படிப் பல ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டியதாக இருக்கிறது. கண்டனூர்–மாத்தூர் ரோடிலிருந்து காலேஜுக்குப் போட்ட புதிய ரோடு ஏன் இப்படி ஆயிற்று ? செலவிட்ட பணம் எங்கு போயிற்று ? என்பதைச் சர்க்கார் விசா ரிக்கவேண்டும். இதற்கு மேலே அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. காரியங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதை மாத்திரம் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அதேமாதிரி அறந்தாங்கி–புதுவயல் வழியில் உள்ள ஆற்றுக்குப் பாலம் வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சிலர் சொன்னுர்கள். ஏராள மான வண்டிகள் வந்து போய்க்கொண்டிருக்கிற வழி அது. அந்த வழி யில் குறுக்கிடும் ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றைக் கடக்க வேண்டிய தாக இருக்கிறது. அதற்குப் பாலம் கிடையாது. அதனல் பலர் கஷ்டப் படுகிருர்கள். பாலம் இல்லாமல் இருப்பதால் தொடர்பு அற்றுப் போய் விடுகிறது என்பதையும் நாம் மனத்தில் கொள்ள வேண்டும். அதற்கு தக்க வழிவகையைஅரசாங்கம் செய்யவேண்டும். விரைவில் அங்கே ஒருபாலத்தைக் கட்ட முயல வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அங்குள்ள ரோடு சமமானதாக ஆக்கப்பட வேண்டும் என்பதையும் புலப்படுத்திச் கொள்ளுகிறேன். சீர்காழியிலிருந்து சிதம்பரம் போகக் கூடிய பாதையில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தைக் கடக்கும்போது வண்டிகளுக்குச் சுங்கம் வசூலிக்கிருர்கள். அது அனவசிய மானது, நீதியற்றது. மாகாணத்தில் எங்கு பார்த்தாலும் சுங்கம் என்பதை வசூலிப்பதை எடுத்துவிட்ட பிறகு இங்கு மட்டும் சுங்கம் வசூலிப்பது சரியாக இல்லை. பல சுங்கச் சாவடிகளை நாம் இப்பொழுது அகற்றி விட்டோம். பல இடங்களில் சாவடிகளை அமைத்து பல ஸ்தாபனங்களால் சுங்கம் வசூலிக்கப்பட்டு வந்ததை யாவரும் அறிவார்கள். அதை இப் பொழுது எடுத்து விட்டார்கள். ஆனல் இப்பொழுது புதியதாக சுங்கம் வசூலிக்க அரசாங்கம் இங்கே ஆரம்பித்திருக்கிறது. இது நல்ல காரியம் அல்ல. இதனல் எத்தனை வருமானம் வரப்போகிறது ? பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் ரூபாய் ஒரு ஆண்டிற்குக் கிடைக்கப் போகிறது.

இந்த வரியை வைத்துக்கொண்டு நம்முடைய திட்டங்களை நிறைவேற்றிவிட முடியுமா? இந்தப் பணம் வந்துதானு நம்மைக் காப்பாற்றப் போகிறது? இதை எடுத்து விட்டால் அங்கு நிர்ப்பந்தம் இல்லாமல் நடை இல்லாமல் போய்க்கொண்டிருப்பார்கள். இது பயன்படக் கூடியதாக இல்லை. இதை வைத்துக் கொண்டிருப்பது நெறியாக இல்லை. இதை மனதில் கொள்ள வேண்டும். ஆகவே இதை எடுத்துவிட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். பல கனம் அங்கத்தினர்கள் எத்தனையோ ரோடுகளைப் பற்றிச் சொன்னார்கள். திருவாடானை தொண்டி பகுதியில் பல இடங்கட்கு ரோடுகளை இனிமேல்தான் அமைக்க வேண்டியதாக இருக்கிறது. அங்கே சில பகுதிகள் பெரும் பள்ளமும், படுகுழியுமாகவே இருக்கின்றன. ஒரு கார் அந்த இடங்களில் போகும்போது கார் குழியிலே விழுந்துவிடுமோ என்ற அச்ச நிலை ஏற்படுகிறது. அந்த இடங்கள் எல்லாம் ரொம்பவும் பிற்போக்கான பகுதி. கனம் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்குப் பல முறை சென்று நேரில் பார்த்திருப்பார்கள். அவர் நேரில் கண்டறிந்தவரானபடியால் அவைகளுக்கு நல்ல வழிவகை செய்வார் என்று நினைக்கிறேன். அதற்கு வேண்டிய முயற்சியைத் துரிதமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பின்னர் இன்னொரு முக்கியமான விஷயம். இதைப்பற்றி ஒரு கனம் உறுப்பினர்கூடச் சொல்லி இருக்கிறார். இப்பொழுது சர்க்யூட் ஹௌஸ், "தமிழகம்" போன்ற இடங்களில் வந்து தங்குவதற்கு உரிமை வரிசை வகுக்கப்பட்டிருக்கிறது. நமது சட்டசபை அங்கத்தினர்களைப் பொறுத்த வரைக்கும் வரிசையில் இடம் வகுக்கப்பட்டிருக்கின்றது. அதைப் பார்த்தால் கனம் அங்கத்தினர்களுக்குக் கௌரவக் குறைவு ஏற்படுவதாக இருக்கிறது. வரிசைக் கிரமத்தில் அவர்களுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரிசை எப்படி வழங்கப்பட்டிருக்கிறது என்றால் "Ministers of Government of India, Ministers of State Governments of India (any State Government), High Personages (Indian and Foreign), Foreign Tourits, Indian Tourists from outside Madras State, Parliamentary Secretaries to Ministers, Heads of Departments, All Gazetted Officers of Government, Non-official Presidents of District Boards or Panchayats, Members of State and Union Legislature." இதைப் பார்க்கும்போது சட்டசபை அங்கத்தினர்களுக்கு எந்த வகையிலும் அந்த இடங்கள் பயன்படக் கூடியதாக இருக்கிறதா? எந்த அளவிலும் அவர்களுக்குப் பிரயோஜனம் இல்லாமல்தான் இருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை. கேவலப் படுத்தவேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்யூட் ஹௌஸிலும் சரி, தமிழகத்திலும் சரி, எங்களுக்கு இடமேகூட வேண்டாம். பக்கங்களிலுள்ள சத்திரத்திலோ அல்லது ஹோட்டலிலோ நாங்கள் தங்கிக் கொள்ளுகிறோம். தமிழகத்தில்தான் தங்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. எங்கு இடம் கிடைக்கிறதோ அங்கு நாங்கள் தங்கிக் கொள்ளுகிறோம். ஆனால் எம். எல். ஏ.-க்களுக்கு இப்படிப்பட்ட முறையில் ஸ்தானம் கொடுப்பது என்பது எங்களுக்கு அவமானத்தையும், கேவலத்தையும் கொடுப்பதாகவே இருக்கிறது. எங்களை அவமானப்படுத்தாமல் விட்டு விடுங்கள் அது போதும் என்றுதான் சொல்லுகிறோம்.

இப்பொழுது நகரங்கள் எல்லாம் வளர்ந்துகொண்டே வருகின்றன. சென்னை, காரைக்குடி போன்ற நகரங்கள் இப்பொழுது வளர்ந்துகொண்டே வருகின்றன. இப்படி வளர்ந்து வரும் காரைக்குடிக்கு டூரிஸ்டு ஹோமோ, ஸர்க்யூட் ஹௌஸோ கிடையாது. யார் வந்தாலும் தங்குவதற்கு இடமே கிடையாது. தனிப்பட்டவர்களிடம் கேட்டு அவர்களிடமே உதவி பெற வேண்டியதாயிருக்கிறது. தங்குவதற்கு வேண்டிய கட்டிடங்களை கட்டிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்திய ஜனாதிபதி முதல் பல பெரியவர்களும் அதிகாரிகளும் வந்துகொண்டே இருக்கிறார்கள். காரைக்குடிக்கு வந்தால் அவர்களுக்கு தங்குவதற்கு கட்டிடம் இல்லை. பக்கத்திலுள்ள ஏதோ ஒரு தனிப்பட்டவரின் கட்டிடத்தைப் பிடித்துக்கொடுத்து

அதில் தங்க வைக்க வேண்டியதாக இருக்கிறது. மேற்கொண்டு இப்படிப் பட்ட நிலைமை ஏற்படாத வகையில் கவனம் செலுத்த வேண்டும். ஆகவே பெரிய நகரங்களில் டூரிஸ்ட் ஹோம்களை கட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் இப்பொழுது ரஸ்தாக்களில் மரங்களை நட்டுக்கொண்டு வருகிறார்கள். இப்படி ரஸ்தாக்களிலும் சாலைகளின் ஓரங்களிலும் மரங்கள் வைப்பதை நாம் ரொம்பவும் அக்கறையுடன் மேற்கொள்ள வேண்டும். அவசியமாக மேற்கொள்வதுடன் மரங்களும் செழிக்க வேண்டும். அப்படி மரங்கள் கெடாமல் செழிக்க வேண்டுமென்றால் நாலைந்து மைல்களுக்கு ஒரு குடி வீதம் ரோடு பழுது பார்க்கும் சிப்பந்திகளை குடி வைக்கவேண்டும். அப்படி குடி வைக்கப்பட்டவர்கள் மரங்களையும் செடிகளையும் வைத்து அவைகளுக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். அப்படி தண்ணீர் ஊற்றி பட்டுப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி வைத்து வளர்த்தால் போக்குவரத்துப் பாதை, மாகாணம் பூராவும் ஒரு நெறியாக சிறப்பானதாக இருக்கும். எனவே சாலை ஓரங்களில் 4 மைலுக்கு ஒன்றாகக் குடிசைகளை அமைத்து தண்ணீர் ஊற்றுகிறவர்களுக்கு வசதி செய்து கொடுத்து, அவர்கள் மூலமாக தண்ணீர் ஊற்றச் சொல்ல வேண்டும். இதையெல்லாம் தீவிரமாகச் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று இந்த விவாதத்தின் மீது பல கனம் அங்கத்தினர்கள் நல்ல பல கருத்துக்களையெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். அத்துடன் இந்த விவாதத்தைக் கடைசியாக முடிக்கும்போது சுதந்தரா கட்சி தலைவர் அவர்கள் சட்டசபை அங்கத்தினர்களுக்கு தங்குவதற்கு விடுதிகளை கொடுக்கக்கூடிய மரியாதையைக் குறித்து கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேரும் நினைத்ததை அவர்கள் அழுத்தமாகச் சொன்னார்கள். எவ்வளவு அழுத்தமாகச் சொன்னார் என்பதை என்னால் உணர முடிகிறது. சென்ற ஆண்டு இப்படிப்பட்ட ஒரு பிரச்னை வந்தபோது அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முறையில், கனம் அங்கத்தினர்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் புது ஏற்பாட்டினுடைய நகல் அவருக்குக் கிடைக்கவில்லை என்று தோன்றுகிறது. அப்படிக் கிடைக்காமல் இருந்தாலும் அதை விரிவாக எல்லோருக்கும் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வரக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் திரும்பி வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட எல்லாக கனம் அங்கத்தினர்களும் நல்ல கருத்துக்களைச் சொன்னதுடன் ஒவ்வொரு கனம் அங்கத்தினருடைய பகுதியில் இருக்ககூடிய தேவைகள், கஷ்டங்கள் இவைகளைப்பற்றி அதிகமாக வலியுறுத்திச் சொன்னார்கள். அவர்களுடைய கஷ்டங்கள், அவர்களுடைய தேவைகள் எல்லாவற்றையும் நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். எந்த இடத்திற்குச் சென்றாலும், போக்குவரத்து வசதிகள் அதிகமாக ஏற்படவேண்டும் என்றுதான் சொல்லுகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக போக்குவரத்துத் துறை என்னுடைய பொறுப்பில் இருந்தது. அப்பொழுது எந்த இடத்திற்குச் சென்றாலும் அங்கேயெல்லாம் பஸ் வேண்டும் என்றும், எந்தச் சமயத்தில் எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் பாதை வசதி வேண்டும் என்றும் சொல்லி வந்தார்கள். ஹைவேஸ் இலாகாவினர் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் வசதி செய்து கொடுக்கப் பட்டு வந்தது. அப்பொழுது பஸ் விடக்கூடிய அதிகாரம் என்னிடத்தில் இருந்தது. பஸ் வேண்டும் என்று எங்கு சென்றாலும் அங்கு பஸ் விடக்கூடிய உத்தரவுகளைப் போட்டுக்கொண்டிருந்தேன். இது கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது எந்த கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கேயுள்ள மக்களுக்குப் போக்குவரத்து வசதி வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். போக்குவரத்து வசதி ஏற்பட வேண்டும் என்ற நினைப்பும் வெகு வேகமாகவே சமீப காலத்தில்

வளர்ந்து வருகிறது. இன்னும் அதிகமாக வளர்ந்து வரும் என்பதில் எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் கிடையாது. அதன காரணமாகத்தான் இந்தச் சபையில் கனம் அங்கத்தினர்கள் பேசும்போதெல்லாம் எந்த ஜில்லாவிற்குச் சென்றாலும், எந்த அபிவிருத்திக் குழுவுக்குச் சென்றாலும் அங்கு பேசும்போதெல்லாம் இதைத்தான் வலியுறுத்திப்பேசி வருகிறார்கள். அதிகமான ரோடுகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத்தான் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

1-00 p.m. குறிப்பாக, இப்பொழுது பஸ்கள் ஓடக்கூடிய ரோடுகளையெல்லாம் அரசாங்கம் தயக்கம் இல்லாமல், காலங் கடத்தாமல் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது ஒவ்வொரு அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் தீர்மானத்தைப் பார்த்தாலும், எவ்வளவு வேகமாக இந்த பஸ் ரோடுகளை அரசாங்கத்தி னுடைய பார்வைக்கு எடுத்துக் கொள்ளுகிறார்களோ, அவ்வளவுக்கு நன்மை தரும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இப்பொழுது அதிகமாகப் போக்குவரத்து வசதிகள் வேண்டும் என்கிற ஒரு கோரிக்கை அதை உணரக் கூடியவர்கள் சொல்லக்கூடிய கருத்து, உண்மையிலேயே மாநிலத்தின் வளர்ச்சியை நல்ல முறையில் எடுத்துக் காட்டுகிறது என்று சொன்னால் ஒன்றும் மிகை இல்லை. இதிலே இன்னும் தீவிரமாகக் கவனம் செலுத்தவேண்டும் என்பதிலே எனக்குச் சந்தேகமே கிடையாது.

குறிப்பாக, இந்த ரோடு பராமரிப்பு வேலைகளை எடுத்துக்கொண்டால் ரோடுகளின் சரித்திரத்தை எடுத்துக்கொண்டால் யார் யார் எந்தெந்த ரோடுகளை அமைப்பது என்ற நிலையிலேகூட மாறுதல் செய்தால் நன்றாக இருக்குமோ என்றுகூட நான் நினைக்கிறேன். பஞ்சாயத்துக்கள் சில ரோடுகள் அமைக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் சில ரோடுகளை அமைக்கின்றன. இன்னும் சில முக்கியமான ரஸ்தாக்களை அரசாங்க இலாகாவே அமைக்க வேண்டிய நிலைகளையெல்லாம் நாம் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது இப்பொழுது ஏற்பட்ட ஒரு பழக்கம் இல்லை. இதுதான் ரோடுகள் போடக்கூடிய சரித்திரம் என்றால் மிகை அல்ல.

தாலூகா போர்டு இருந்தபோது ஒவ்வொரு தாலூகா போர்டும் ஏராளமான ரோடுகளை அந்தக் காலத்தில் போட்டிருக்கிறார்கள். அந்தத் தாலூகா போர்டுகள் மறையும்போது ஜில்லா போர்டுகள் ஏற்பட்டு அவற்றினுடைய நிர்வாகக் காலத்தில் தாலூகா போர்டு போட்ட ரோடு களைக்கூடப் பராமரிக்காமல் விட்டுவிட்டார்கள். அவர்களால் அன்றைக் கிருந்த நிதி நிலையில் அந்த ரோடுகளைப் பராமரிக்க முடியாமல் போய் விட்டது. இன்றைக்கு எல்லா ஜில்லா போர்டு ரோடுகளையும் பராமரித்துவிட முடியுமா என்று பார்த்தால் ரோடுகள் அமைந்த காலத்தில் எப்படிப் போக்குவரத்து இருந்ததோ அதே நிலையில் இருக்கும் பட்சத்தில் நாம் இந்த ரோடுகளுக்குக் கொடுக்கும் மானியம் செலவுத் தொகை கட்டுபடியாக இருக்கும் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் நிலைமை அப்படி அல்ல என்பதை கிராமப் புறங்களிலிருந்து வரக்கூடிய கனம் அங்கத்தினர்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள். எந்த ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் ஜீப்களும், லாரிகளும் வரக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை எவ் வளவு துரிதமாகப் பக்கத்துச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமோ அவ்வளவு வேகமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் அவர் களுடைய அவா. அது மிகவும் அவசியம் என்பதை உணருகிறேன். விவசாய உற்பத்தி செய்யக்கூடியவர்கள் பண்டங்களை நகர்ப்புறங்களுக்கு எடுத்துச் சென்று, அதிகமான விலை கிடைக்கும் பட்சத்தில் அது விவசாயி னுடைய வருமானத்தை உயர்த்தும் என்பதிலே சந்தேகம் இல்லை. இந்த எண்ண அடிப்படையில் தான் ரோடு அமைப்புக்காக இருபதாண்டுத் திட்டம் தீட்டப்பட்டது. திட்டம் தீட்டியவர்களுடைய எண்ணம், நினைப்பு, ஆசை எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போட்டுவிடவேண்டும் என்பது தான். அதுவும், 5,000 ஜனத்தொகை இருக்கும் கிராமங்களுக்கெல்லாம் நல்ல கப்பி ரஸ்தாக்கள் அமைக்கவேண்டும் என்று அவர்கள் அசைப்பட்

கிறார்கள். அப்பொழுது திட்டத்தை உருவாக்கியவர்கள் இதை ஒரு பெரிய காரியமாக நினைத்தார்கள். இதைச் செய்து முடித்துவிட்டால் போதும் என்று நினைத்தார்கள். ஆனால், ஐந்தாறு வருஷங்களுக்கிடையில் ஏற் பட்டிருக்கும் வளர்ச்சியைப் பார்க்கும்போது, எல்லாக் கிராமங்களுக்கும் ரோடு போடுவது மட்டுமல்ல ; அவை யெல்லாம் நல்ல ரோடுகளாகவும் அமையவேண்டும். போடும் ரோடுகளைத் தார் ரோடுகளாகப் போட்டுவிட்டால் கூட நமக்குச் சந்தோஷமாக இருக்கும் என்ற நினைப்பு மட்டும் அல்ல ; நம்முடைய தேவை, ஆசை எல்லாம் அப்படியே அமைந்திருக்கின்றன. இதையெல்லாம் நாம் முறையாகப் பரிசீலித்துப் பார்க்கும்போது, இன்னும் ஏராளமாகச் செய்யவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். அதே நேரத்தில் ஏராளமாகச் செய்துகொண்டிருக்கிறோம். பஞ்சாயத்துக் கள் நல்ல ரோடுகள் ஏராளமாகப் போடுவதைப் பார்க்கிறோம். பஞ்சாயத்து யூனியன்களும் ரோடுகள் போடுவதைப் பார்க்கிறோம். அதேபோல், அர சாங்கத்தின் இலாகாவும் ரோடுகள் போடுவதைப் பார்க்கிறோம். ஆனால் இதையெல்லாம் தனித் தனியாக ஒவ்வொரு கட்டத்தில் போட்டு, அன் றைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் ரோடுகளை அமைத்து விட்டால் மொத்தமாகப் போக்குவரத்து வளர்ச்சிக்குத் தகுந்த முறையில் அமையுமா என்றெல்லாம் நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். குறிப்பாக, முன்பு தாலூகா போர்டு இருந்த காலத்திலே ஏராளமாக ரோடு கள் போட்டார்கள். பிறகு, ஜில்லா போர்டுகள் அமைந்தபோது அந்த தாலூகா போர்டுகள் அமைத்த ரோடுகளை ஜில்லா போர்டு நிர்வாகம் மேற்கொள்ள முடியாமல் போனதற்குக் காரணம் என்ன ? சிறு சிறு பகுதிகளை எடுத்துக்கொண்டு, அதற்காக ஒரு குழு அமைத்து அவசியம் என்று அவர்களுக்குத் தோன்றுகிறபடி ரோடுகளை அமைத்துவிட முடியும். ஆனால், இப்பொழுது ரோடு அமையக்கூடிய முறை, ரோடின் தேவை, அதிலே போகக்கூடிய பெரும் வாகனங்களின் நிலை, எல்லாவற்றையும் பார்க்கும்போது, சாதாரணமாகப் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியன் களும் இந்த வேலையில் ஈடுபட்டுச் செய்துவிட்டால் மட்டும் போதாது. நிபுணர்கள் செய்தால்தான் நல்ல விதமாக, விரயம் இல்லாமல் கொஞ்சம் காலம் கடந்தாலும்கூட, மக்களுடைய போக்குவரத்துக்கும், பண்டங்களி னுடைய போக்குவரத்துக்கும் தேவையான நல்ல ரஸ்தாக்களை அமைக்க முடியும். குறிப்பாக, கிராமப்புறங்களில் ஏன் அகலமான ரோடுகளைப் போடவேண்டும் என்று கேட்டுவிடலாம். பதினெட்டு அடி ரோடு போட்டால் போதாதா ? என்றும் கேட்டுவிடலாம். அந்தக் கருத்தைச் சொல்கிறவர் கள் இன்னொரு நிலையையும் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். கிராமப் புறங்களில் ஒரு புறம் ரோடு போட்டுக்கொண்டிருக்கும்போது, அந்த ரோடுக்கு வேண்டிய கப்பிகளை ஏற்றிச் செல்கிற லாரி, அதைத் தாண்ட முடியாத காட்சியைப் பல இடங்களில் பார்த்திருக்கலாம். இன்றைக்கிருக் கும் நிலைக்குத் தகுந்த முறையில் ரோடுகள் அமையவேண்டும் என்று நினைக்கும்பொழுது, ஏதோ பஞ்சாயத்து போட்டுவிட்டால் போதும், பஞ்சா யத்துக்களே பார்த்துவிடுவார்கள் என்ற நிலை இன்றைக்கு இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில், ஒரு நிபுணர் செய்யவேண்டிய வேலை யாகவே இதை பாவித்து, நினைத்து இதை இன்னும் கவனமாக இலாகாவே பொறுப்பேற்று நடத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அதற்கு நல்ல அறிகுறியாக, எந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சி லுக்குச் சென்றாலும், அவர்களுடைய முக்கியமான கோரிக்கை, மிக்க தீவிரமாகக் கவனிக்கப்படவேண்டும் என்று நினைப்பது, இன்றைய அளவில் இருக்கும் எல்லா பஸ் ரோடுகளையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டுவிட வேண்டும் என்ற விருப்பத்தைச் சொல்லுகிறார்கள். அப்படிப் பார்க்கும் போது, அவர்களுடைய கோரிக்கைக்குத் தகுந்த முறையில் அரசாங்கம் இந்த வருஷம் 500 மைல் தூரமுள்ள பஸ் ரோடுகளை எடுத்துக் கொள்வதாக முடிவு செய்திருக்கிறது. இதுதான் கடைசி முடிவாக இருக்க முடியாது. நிதி வசதி உயருமானால், இந்த இலாகாவினுடைய முயற் சிக்குத் தகுந்த முறையில் இன்னும் அதிகமாக இந்த வேலையைக் கூட எடுத்துக்கொள்ள முடியும். அதற்கு வேண்டிய சூழ்நிலையை இந்த இலாகா உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கிருக்கும் நிலையில் இந்த மாநிலத்தில் குறைந்தபட்சம் 2,000—2,500 மைல் தூரத்திற்கு பஸ் ரூட்டுகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் எடுத்துக்கொள்ள

வேண்டும். இதை இரண்டு, மூன்று வருஷ காலத்தில், படிப்படியாக
செய்யலாம் என்றால், அதற்குள்ளே இன்னும் எத்தனையோ பஸ் ரூட்கள்
புதிதாக ஏற்பட்டுவிடும். இது ஒரு சிக்கலான பிரச்சினையாகப் போய்க்கொண்டி
ருக்கிறது. ஒரு பக்கத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் ரோடுகள் கொடுக்க
வேண்டும். அதே நேரத்தில் அந்த ரோடுகள் அத்தனையையும், முன்பு
நான் சொன்னதுபோல, நடை பாதையாக ஏற்படுத்திவிட்டால் மட்டும்
போதாது, மாட்டு வண்டி போகக்கூடிய பாதை மட்டும் போட்டால் போதாது.
கிராமங்களில் இருக்கும் பண்டங்கள் சந்தைகளுக்கு வரும் முறையில்
நல்ல வாகனங்கள் வரத் தகுந்த சூழ்நிலை ஒன்றாகச் சேர்ந்து, இன்றைக்கு
உருவாகிக்கொண்டிருக்கும் காரணத்தால்தான் நமது பழைய கால நினைப்
பைக் கூட மாற்றி, ரோடுகள் போடுவதையெல்லாம் அரசாங்கத்தின் பொறுப்
பில் எடுத்துக்கொள்ளலாமா என்ற சூழ்நிலையில், அதை எடுத்துக்கொள்
வது என்று இப்பொழுது சொல்லிவிட்டால், மற்ற அமைப்புக்கள் என்னைக்
கண்டிப்பாகத் தாக்கும் என்பதிலே எனக்குச் சந்தேகமே இல்லை—அவர்
களுடைய உரிமைகளுக்குள்ளே நான் போவேனோ என்ற சந்தேகம் வந்து
விடக்கூடும். இப்பொழுதிருக்கும் நிலையில் இது பரிசீலனைக்குரிய ஒரு
விஷயமாக மாறிக்கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால், பஞ்சாயத்து போடக்
கூடிய ரோடு வாகனங்கள் செல்வதற்குப் பயன்படாமல் போகும். இதை
ஒரு தேசிய பிரச்சினையாகவே கருதி, அதற்கு வேண்டிய முழு வேலையை
யும் கவனிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நினைப்பு. அதற்கு
ஒரு நல்ல அறிகுறியாக இந்த வருஷத்திலிருந்து ஹைவேஸ் இலாகாவிலே
ஒரு இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள், ப்ளானிங் சர்க்கிளை அமைத்திருக்கிறோம்.
அவர்கள் நல்ல முறையில் செயல்படத் தொடங்கி விட்டார்கள். அவர்கள்
இன்றைக்கு எடுத்துக்கொள்வதெல்லாம், இப்பொழுது போக்குவரத்துக்குத்
தகுதியாக இருக்கும் ரஸ்தாவை எப்படித் தயாரிக்க வேண்டும், தேவைக்
குத் தகுந்தமுறையில் எப்படித் திருத்தியமைப்பது, பாலங்கள் எப்படிக்
கட்டுவது என்ற முறையில் அவர்கள் ஆராய்ந்து, அதற்குள்ள முடிவுகளை
அரசாங்கத்திற்குச் சொல்கின்றார்கள். கிராமப்புற ரோடுகளையும், பஞ்சா
யத்து யூனியன் ரோடுகளையும் இப்பொழுதிருக்கும் தேவைக்குத் தகுந்த
முறையில், இப்பொழுதுள்ள வாகனங்களின் அமைப்புக்குத் தகுந்த முறை
யில் அமைப்பதற்கு என்ன வகைகள் கண்டுபிடிக்க வேண்டும் என்ற
முறையில் அவர்கள் ஆராய்வதற்கு இன்னும் விசேஷமாக ஒரு பிரிவு
வேண்டுமென்றாலும், அதையும் அமைக்கவேண்டும் என்பதுதான் என்
னுடைய கருத்தாகும்.

ஒரு விஷயத்தைப்பற்றி நாம் பெருமைப்படலாம். கனம் அங்கத்தினர்
கள் மற்ற மாநிலங்களிலுள்ள ரோடுகளைக் காட்டிலும் இங்கேயுள்ள
ரோடுகள் மிகச் செம்மையாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள்.
ஆனால் இன்னும் ஐந்து வருடங்கள் கழித்துப் பார்த்தால் நிச்சயமாக
இந்த அங்கத்தினர்களே நம்முடைய மாநிலத்தில் உள்ள ரோடுகள்
பிரயோசனமில்லை, மிக்க நெரிசலாக இருக்கின்றன என்று குறிப்பிடுவார்
கள். காரணம், அப்படி நம் மாநிலத்தில் பிரமிக்கத்தக்க அளவில்
தொழில்கள் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன. இந்த அளவில்
தொழில் வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டேபோனால் நம் ரஸ்தாக்களில் எந்த
ஒரு வண்டியும் வேகமாக ஓடவே முடியாது போய்விடும். வாகனங்களின்
எண்ணிக்கை அவ்வளவு நாளுக்குநாள் பெருகிக் கொண்டே இருக்கின்றன.
சில புள்ளிவிவரங்களை இதுசம்பந்தமாக நாம் பார்க்கவேண்டும். நம்
முடைய ராஜ்யத்தில் ஓடிக்கொண்டிருந்த லாரி, பஸ் போன்ற வாகனங்
களின் எண்ணிக்கை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிப்பதற்கு
முன்பாக 37,614 ஆக இருந்தது. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்
தில் ஒரு ஆண்டுதான் முடிந்திருக்கிறது. முன்பு இருந்ததைவிட இரட்டிப்பு
மடங்கு வாகனங்கள் பெருகியிருக்கின்றன. அதாவது 65 ஆயிரம் வாகனங்க
ளுக்கு மேல் பெருகியிருக்கின்றன. என்னுடைய கணக்குப்படி இந்தத்
திட்டம் முடிவதற்குள் இது 75 ஆயிரம், அல்லது 80 ஆயிரம் ஆகக் கூட
பெருகக் கூடும். ஆகவே இப்படி தொழில் வளர்ச்சி அடைந்து கொண்டு
போவதற்கும், வாகனங்கள் பெருகிக்கொண்டு போவதற்கும் ஏற்ற முறையில்
நாம் நம்முடைய ரோடுகளைச் செம்மையாக ஆக்கவேண்டும். அகலமாக
விஸ்தரிக்க வேண்டும். மேலும் அவற்றை நல்லமுறையில் பராமரித்தாக

வேண்டும். ரோடுகளை ஏன் அகலப்படுத்த வேண்டும் என்று சொல்கிறேன்
என்பதை கனம் அங்கத்தினர்களே உணர்வார்கள். வேறு பல
சந்தர்ப்பங்களில் கனம் அங்கத்தினர்கள் பேசும்போதுகூட லாரிகளில் இரவு
நேரத்தில் விளக்கை அணைப்பது இல்லை, நடு ரோடுகளில் போகிறார்கள்,
லாரிகள் வருகின்றன என்றால் ரோடில் கார்களில் போவதே பயமாக
இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மிகப் பளுவான சாமான்களை ஏற்றி
யிருக்கும் லாரிகளை ஓட்டிச் செல்லும்போது ரோடு ஓரங்களில் போகப் பயப்
படுகிறார்கள். ஆகவே நடு ரோடுகளில் போகவேண்டியிருக்கிறது. இன்னும்
நம்முடைய தொழில் துறை வளர்ச்சி அடைந்து அதிகமாக லாரி சர்வீஸ்
ஏற்படுமானால் இப்போது நாம் அகலமாக இருக்கிறது என்று கருதக்கூடிய
சென்னை—திருச்சி ரூட் ரோடுகளே கூட அகலக் குறைவானதாக நமக்குத்
தோன்றலாம். இதையும் அகலப்படுத்தவேண்டிய நிலைமை ஏற்படலாம்.
ஆகவே நிச்சயமாக இண்டஸ்ட்ரியல் பெல்ட் எங்கே ஏற்படுகிறதோ அங்கே
ரோடுகள் நல்லமுறையில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்பதை
இங்குள்ள கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்
என்று நம்புகிறேன். இன்றையதினம் எப்படி தஞ்சை மாவட்டத்தில்
அங்கங்கே உள்ள கிராமங்களில் இருந்து ரோடுகள் மெயின் ரோடில்
வந்து இணைக்கப்படாத காரணத்தினால் அறுவடை ஆன நெல்லை இரண்டு
ரூபாய் குறைவாகவே அந்தந்த இடத்திலேயே விற்கவேண்டிய நிலைமை
இருக்கிறதோ அதுபோலத்தான் தொழில்கள் வளருகின்ற இடத்தில் ரோடு
கள் அமைக்கப்படவில்லை என்றால் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்
படுகிற பொருள்களின் விலையை குறைவாகவே விற்கவேண்டிய நிலைமை
ஏற்படும். ஆகவேதான் இப்போது இண்டஸ்ட்ரியல் பெல்ட் ஏரியாக்களில்
உள்ள ஹைவேஸ், கிராம இணைப்புச் சாலைகள் ஆகியவற்றில் தீவிர கவனம்
செலுத்தப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி : சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் இந்த
மன்றத்தில் பேசும்போது சேது ரஸ்தாவைப் பற்றிக் குறிப்பிட்டு, அதற்கு
5 கோடி ரூபாய் தேவை என்றும், அதற்காக மத்திய சர்க்காரிடம் கேட்டி
ருக்கிறோம் என்றும் குறிப்பிட்டார்கள். இவர்களுடைய கோரிக்கை மத்திய
சர்க்கார் அலுவலகங்களில் தூங்குகிறதா ? மாநில சர்க்கார் அலுவலகம்
அதை நினைத்து நினைத்து ஏங்குகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் கொஞ்சம் அவசரப்
பட்டுவிட்டார். அதைப்பற்றிச் சொல்லத்தான் நான் வந்து கொண்டிருந்
தேன். இராமநாதபுரம் மாவட்ட உறுப்பினர்களை விசாரித்திருந்தாலே
அவர்கள் சொல்லியிருப்பார்கள். சேது ரஸ்தா விஸ்தரிப்பு மிகவும்
அவசியமானது. அதனால் நம்முடைய மாநிலப் பொருளாதார முன்
னேற்றம் மட்டும் ஏற்படாது, இந்த தேசம் ஒரே நாடு என்பதை விளக்கும்
ஒரு சின்னமாக கன்னியாகுமரியில் இருந்து காசி வரைக்கும் ஒரே
ரோடாக இணைந்து விளங்கும் பெருமை உடைய திட்டம் அது. அதற்கு
எடுக்கவேண்டிய முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள்
எல்லாம் அங்கே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவ்விஷயத்தில்
நாம் ஒன்றே ஒன்று தீர்மானிக்கவேண்டும். மற்ற எல்லா ரோடுகள்
சம்பந்தப்பட்ட வேலைகள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு ரோடுகளின்
அபிவிருத்திக்காக நாம் ஒதுக்கிய தொகை எல்லாவற்றையும் ஒரேமூச்சாக
அந்த சேது ரஸ்தா விஸ்தரிப்பிலே ஈடுபடுத்த வேண்டுமா ? அது
ஒன்றுக்கே ப்ரையாரிடி கொடுக்க வேண்டுமா ? அல்லது நான் முன்னே
குறிப்பிட்டதுபோல அங்கங்கே தொழில் வளர்ச்சி அடைந்து வந்து கொண்டி
ருக்கிற பகுதிகளில் ரோடுகளை விஸ்தரித்து அங்கங்கே உள்ள கிராமங்கள்
மெயின் ரோடுகளோடு இணைக்கப்படும் சாலைகளைப் போடுவது ஆகிய விஷய
ங்களில் கவனம் செலுத்திக்கொண்டு சேது ராஸ்தா திட்டத்தையும்
மெள்ளமெள்ளப் பூர்த்தி செய்வது அவசியமா என்பதை நாம் முடிவு
செய்யவேண்டும். கனம் அங்கத்தினர்கள் இதுபற்றி நன்கு கவனித்து
யோசனை சொல்லவேண்டும் சேது ரஸ்தா த்திட்டம் ஒன்றில் மட்டும் நம்முடைய
பொருளாதார வசதிகளையெல்லாம் செலவிட்டுவிட்டால் போதும் என்று
யாரும் சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நாம் அப்படி சொன்
னால் அதில் மத்திய சர்க்காருக்கு எவ்வித ஆட்சேபணையும் இடையாது

என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் நம்முடைய தொழில்
வளர்ச்சி, கிராமப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றையும் அடிப்படை
யாக-கொண்டு ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு அந்தத் திட்ட அடிப்படையில்
தான் காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கிறோம். சேது ரஸ்தா சம்பந்த
மான விஷயம் மத்திய அரசாங்க அலுவலகத்தில் தூங்கிக்கொண்டிருக்கவும்
இல்லை, அதை நினைத்து நினைத்து நம் மாநில அரசாங்கம் ஏங்கிக்
கொண்டிருக்கவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று கூடச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்
தேவைக்கு, வருங்காலத்தில் நம்முடைய வளர்ச்சிக்கு ஏற்றபடி இன்றே
நம்முடைய திட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பதைப்பற்றி
எல்லாம் பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுக்க ஒரு இன்வெஸ்டிகேஷன்
சர்கிள் என்று ஏற்படுத்தினோம். நல்லமுறையில் அவர்கள் பிரதான
வேலைகளைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து சில பல யோசனைகளை அரசாங்கத்
திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் உள்ள விவசாயி
களின் கஷ்டத்தைப் போக்கவேண்டுமென்றால் அந்த மாவட்டத்தில் உள்ள
அந்த அந்த வட்டார ரோடுகளை, ஆற்றுக் கரையோரங்களில்,
வாய்க்கால்களின் ஓரங்களில் வாய்க்கால்களுக்கான பாலங்கள் இவற்றை
யெல்லாம் அமைத்துக்கொடுக்க அவர்கள் திட்டத்தைப் பார்த்தால் நமக்கே
பயமாக இருக்கும். தஞ்சை ஜில்லா ரோடுகள் சம்பந்தபட்ட மட்டில் 43
புது ரோடுகள் போட வேண்டியதாக இருக்கிறது. இத்திட்டத்திற்கு 17
கோடி ரூபாய் ஆகும் என்று சொல்கிறார்கள். இதைப்பார்த்து நாம்
அஞ்ச வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. யாரும் அஞ்ச
வேண்டாம். நிச்சயமாக நாளைக்கு நல்லதொரு அபிவிருத்தி ஏற்படும்
போது இந்தத் திட்டத்தையே சுலபமாக நம்மால் நிறைவேற்ற சந்தர்ப்பம்
ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது போலவே, இன்வெஸ்டி
கேஷன் சர்க்கில் பலப்படுத்தப்பட்டு கிராமங்களை இணைக்கக்கூடிய ரோடுகள்
விரயமில்லாமல், நஷ்டமில்லாமல் அமையப் புதிய புதிய வழிகள் செய்ய
வேண்டும். கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக கிராமப்புறங்களிலுள்ளவர்
களுடைய மனோவேகம், தங்களுடைய கிராமத்திற்கு எப்படியாவது ரோடு
போட்டுவிட வேண்டுமென்பதுதான். அதற்காக மக்கள் பங்கு கூடக் கொடுக்
கத் தயாராக இருந்தார்கள்.

பஞ்சாயத்து ஆட்சி வந்த பிறகு, பஞ்சாயத்து யூனியன் பொறுப்பேற்றுக்
கொண்டு அரசாங்கம் கொடுக்கக்கூடிய பணத்தை வைத்துக் கொண்டு
எப்படி அந்த ரோடுகளை அபிவிருத்தி செய்வது என்பதுதான் இப்போது
இருக்கக்கூடிய பிரச்னை. மக்களுடைய பங்குத் தொகையை எப்படி
வாங்குகிறார்கள் என்பது எனக்கு இன்னும் சரியாகப் புலப்படவில்லை.
எல்லாப் பணத்தையும் இப்போது அரசாங்கம் செலவு செய்யும் காரணத்
தால் தீவிரமாகப் பரிசீலனை செய்து நல்ல முறையில் ரோடுகளை அமைக்க
வருகிற ஆண்டில் முயற்சிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்காக நாம் ஒரு குறிப்பிட்ட தொகையை
ஒதுக்கியிருக்கிறோம். அதோடு அல்லாமல் மாவட்ட பெரிய நெடுஞ்சாலை
களின் பொறுப்பை மாகாண அரசாங்கம் ஏற்று நடத்தி வருகிறது.
அதேபோல் தேசீய நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்கு மத்திய அரசாங்கம்
உதவி வருகிறது. சி.ஆர்.எப். பண்டிலிருந்து அலொகேஷன் கிடைக்கிறது.
அதோடு மட்டுமல்லாமல் பொருளாதார முன்னேற்றத்திற்கு உகந்த முறை
யில் மற்ற மாகாணங்களை இணைக்கக் கூடிய வகையில் அமையக் கூடிய
ரோடுகளையும் மத்திய அரசாங்கம் ஏற்று நடத்தி வருகிறது.

கனம் அங்கத்தினர் அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள் பேசும்போது
மத்திய அரசாங்கத்தில் காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்கள்
அமைச்சராக இருந்தபோது விசேஷமாக அவருடைய பகுதிக்கு ரோடு
அமைக்கக் கூடிய வகையில், "எகனமிக் இம்ப்ரூவ்மெண்ட்" அடிப்
படையில் முயற்சி எடுத்து மத்திய அரசாங்கத்திலிருந்து பணம் வாங்கி
னார்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலிருந்து வரக்கூடிய
பணம் மாகாணத்தின் சார்பாக வருகிறதே தவிர, தனிப்பட்ட முறையில்
மந்திரிக்காகவோ, அங்கத்தினருக்காகவோ வருவதில்லை. அந்த முறையில்

மாகாண அரசாங்கம் எந்த இடத்தில் அந்த ரோடைப் போடவேண்டும்
என்று நினைக்கிறதோ அந்த இடத்தில்தான் போடப்படுகிறது. மத்திய
அரசாங்கம் இந்த ரோடைத்தான் போடவேண்டுமென்று சொன்னால்
நம்முடைய ஹைவேஸ் இலாகாவுக்கு வேலை இருக்க முடியாது. எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் டெல்லி சென்று அவர்களுடைய பகுதிக்காகப்
பணம் வாங்கிக் கொண்டு வந்தாலும்—அவர்களால் முடியாது என்று
தெரிந்தாலும் சொல்கிறேன்—எந்த ஒரு ஸ்கீமும் மாகாண அரசாங்க
அடிப்படையில்தான் அமைக்க முடியுமே தவிர, ஒரு குறிப்பிட்ட பிரமுக
ருக்காக எதுவும் அமைக்கப்படுவதில்லை. என்னுடைய ஆசையெல்லாம்
ரோடு அமைப்பானது தேவைக்குத் தகுந்த முறையில் குறிப்பிட்ட பிரமுகர்
களின் வற்புறுத்தல் இல்லாமல் "இன்டிபென்டன்ட்" ஆக இன்வெஸ்டி
கேட் பண்ணி அமைக்கவேண்டும் என்பதுதான். இல்லாவிட்டால் பெரும்
பணம் விரயமாகி விடும். சில வருஷங்களுக்கு முன் நான் கிருஷ்ணகிரி
யில் ஒரு பகுதிக்குச் சென்றிருந்தேன். பஸ்ஸே ஓடாத இடத்தில் ஐந்தாறு
மைலுக்கு தார் ரோடு போட்டிருக்கிறார்கள். அது எப்படி ஏற்பட்டது
என்ற சர்ச்சைக்குள்ளே நான் போகவிரும்பவில்லை, அவசியமும்
இல்லை. இன்னொரு பகுதியில் பஸ்ஸே ஓடாத தெருவுக்கு நீண்ட
தொரு பெயரைக் கொடுத்து விட்டு, மூன்று நான்கு லட்சம் செலவு செய்து
பாலம் கட்டியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அங்கு இருக்கக்
கூடியவர்கள் வற்புறுத்திச் சொல்லியிருக்கலாம். அந்தப்பாலத்திற்காக
வாவது அந்த வழியில் ஒரு பஸ்ஸை விடுங்கள் என்று அதிகாரிகளைக்
கேட்டுக் கொள்ளலாமா என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. ஓரிருவர்
முயற்சியின் காரணமாக இந்த நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, திட்ட
அடிப்படையிலேயே ரோடுகளைப்போட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரி
கள் பொறுப்பாக நடந்து கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நமக்கு
இருக்கக் கூடிய கொஞ்சப் பணமும் விரயமாகிவிடும்.

சமீபத்திலே ஒரு இடத்தைப் பார்த்தேன். வட ஆற்காடு ஜில்லாவிலே
ஒரு ரோட்டின் பெயர் மிக நீளமாக இருந்தது. அதைப்பற்றிய விவரங்
களை நான் பார்த்தபோது எனக்குச் சிறிது அச்சம் ஏற்பட்டது. ஆகவே,
நேரிலேயே அந்த இடத்தைப் போய்ப் பார்த்தேன். அதைப் போய்ப்
பார்த்தால் இரண்டு பக்கத்திலும் எந்த விதமான தொடர்பும் இல்லாமல்
நல்ல ரஸ்தா ஒன்றினைப் போட்டிருக்கிறார்கள். இந்தமாதிரி விர
யங்களையெல்லாம் தடை செய்யவேண்டும். இந்தமாதிரி விரயங்களை
யெல்லாம் தடுக்க "இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள்" உபயோகமாக
இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இலாகாவினுடைய
மேற்பார்வையில் ஆராய்ச்சிக் கூடம் (ரிசர்ச் ஸ்டேஷன்) ஒன்றும் அமைக்கப்
பட்டிருக்கிறது. அதிலே நல்ல ஆராய்ச்சிகளையெல்லாம் நடத்தி வருகிறார்
கள். மாநிலத்தில் இருக்கக்கூடிய பெரும்பகுதி பாலங்களைப் பார்த்தால்
"ஆர்ச் பிரிட்ஜஸ்" என்ற வகையில் 100, 200 வருஷங்களுக்கு முன்பு
அமைக்கப்பட்டவை. இந்த ஆராய்ச்சிக்கூடத்தில் ஆராய்ச்சி நடப்பதற்கு
முன்பு இந்தப் பாலங்கள் எல்லாம் பெரிய பாரத்தைத் தாங்காது என்று
நினைத்துக் கொண்டிருந்தோம். இந்தப் பாலங்களை இடித்து விடவேண்டு
மென்று கூட முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் நடந்த ஆராய்ச்சி
யின்படி மேற்கொள்ளப்பட்ட புது முடிவு, இந்தப் பாலங்கள் அத்தனையும்
குறைந்த பட்சம் 30 அல்லது 40 டன் எடையுள்ள வாகனங்களையும், சாமான்
களையும் தாங்கும் என்பதாகும். அதன் காரணமாக இன்றைக்கு பல
கோடி ரூபாய் மிச்சப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்னொன்று, நெய்வேலியில் கிடைக்கக்கூடிய தார், ரோடு போடுவதற்கு
பயன்படுமா என்ற சந்தேகம் இருந்தது. அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்
பட்டு அந்தத் தாரை ரோடு போடுவதற்குப் பயன்படுத்த முடியும் என்ற
சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதிகமாக தார் ரோடு
கள் போடவேண்டுமென்று கேட்கிற கனம் அங்கத்தினர்களை நான் திரும்பிக்
கேட்பதெல்லாம், "தயவு செய்து ஆராய்ச்சி முடியும்வரை பொறுத்துக்
கொள்ளுங்கள்" என்பதாகும். நெய்வேலியில் அதிகமாக தார்
கிடைக்கும் வரையில் பொறுத்துக் கொண்டால் எல்லா ரோடுகளையும்
தார் ரோடுகளாகச் செய்து விடலாம்.

வருகிற ஆண்டில் எடுக்க விரும்பும் முயற்சி எல்லாம் எவ்வளவு அதிகமாக ரோடுகளை அகலப்படுத்தவேண்டுமோ அதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பது. அதற்கு அந்நியச் செலாவணி தேவைப்படாது. கருங்கல் அத்தனையும் தஞ்சை ஜில்லாவில் கிடைக்கவில்லையென்றாலும் திருவெரும்பூர் பகுதியில் கிடைக்கும் கல்லையும், புதுக்கோட்டை பகுதியில் கிடைக்கும் கல்லையும் தஞ்சைக்குக் கொண்டு போவதன் மூலம் அந்தப் பகுதியில் இருக்கும் பஞ்சத்தையும் ஓரளவு போக்க முடியும். தஞ்சைப் பகுதியிலும் நல்ல ரோடுகளைப் போட முடியும்.

நேற்று முன்தினம் பேசும்போது திருநெல்வேலி ஜில்லா கனம் அங்கத்தினர் திரு. பொன்னுசாமி நாடார் அவர்கள், "எங்கள் ஜில்லாவில் சிமெண்ட் பாக்டரி இருப்பதால், எங்கள் பகுதியிலுள்ள ரோடுகளையெல்லாம் சிமெண்ட் ரோடுகளாகப் போடவேண்டும்" என்று சொன்னார்கள். எந்த முடிவை அரசாங்கம் மாற்றிக்கொண்டாலும் இனிமேல் புதிதாக சிமெண்ட் ரோடு போடுவதில்லை என்ற முடிவை அரசாங்கம் நிச்சயமாக மாற்றிக் கொள்ளாது. இந்த நெருக்கடி நேரத்தில் மட்டுமல்லாது, மற்ற நேரத்திலும்கூட சிமெண்ட் ரோடு போடுவதை அரசாங்கம் அனுமதிக் காது. நம்முடைய நாட்டில் சிமெண்ட் அதிகமாக உற்பத்தி ஆகி விட்டாலும் வெளிநாடுகளுக்கு அனுப்பலாம். வெளிநாடுகளுக்கும் அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டால் அப்போது வேண்டு மானால் சிமெண்டு ரோடுகளைப் பற்றி யோசித்துப் பார்க்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பூர் பிளானை அமைக்க நிபுணர்கள் கூடியிருக்கும்போது அதை வரவேற்கக் கூடிய முறையிலே அன்றைக்கு இருந்த பெரியவர் ஒருவர் "ரோடுகளை அமைப்பதற்காகப் போடக்கூடிய திட்டமானது உடனடியாகப் பலன் தராவிட்டாலும், இருபது வருஷங்கள் முடியும்போது ரோடுகளைப் பார்க்கக் கூடியவர்கள் உங்களுடைய முயற்சியை நல்ல விதமாகப் பாராட்டு வார்கள்" என்று கருத்தை வெளியிட்டார்கள்.

1-30 p.m. MR. DEPUTY SPEAKER: How much time does the Hon. Minister still require to finish his reply?

THE HON. SRI V. RAMAIAH: Ten more minutes. The Chair gave me forty-five minutes and now I have taken only about thirty minutes.

MR. DEPUTY SPEAKER: I hope the House has no objection to sit till the Demands are disposed of.

கனம் திரு. வெ. ராமையா: .... அவர்கள் இம்மாநாட்டைத் துவக்கியபோது சொன்ன கருத்தை நினைக்கும்போது, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், ஹைவேஸ், நாஷனல் ஹைவேஸ் இவை எல்லாம் போடுகிற ரோடுகளை இன்னும் பத்து ஆண்டுகள் கழித்துப் பார்க்கிறவர்கள் அவை மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தக்க முறையில் அமைக்கப்பட்டிருக்கும் ரோடுகள் என்று சொல்லவேண்டும், சொல்வார்கள். ஏதோ போட்டோம், நஷ்டமாகிவிட்டது என்றில்லாமல், இந்த ரோடுகளை அமைக்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களுடையது என்று விட்டுவிடாமல் இவ்விலாகா அப்பொறுப்பை ஏற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. புது ரோடுகள் போடவேண்டும், சிறு பாலங்கள் அமைக்கப்படவேண்டும், பெரிய பாலங்கள் அமைக்கப்படவேண்டும் என்றெல்லாம் கேட்கப்பட்டன. அவற்றை உடனடியாக கட்டிவிட முடியும் என்று நான் வாக்குறுதி அளிக்கத் தயாராயில்லை. இன்வஸ்டிகேஷன் சர்க்கிள் மூலம் பரிசீலனை செய்து என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அவை எடுக்கப்படும். வேகமாக முயற்சிகள் எடுக்கப்படவேண்டு மென்பதுதான் என் ஆவல் கூட. அடுத்தபடியாக, இந்த ஆண்டு விசேஷமாக ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறேன். சிறிய துறைமுகங்கள் அபிவிருத்தி அடையவேண்டுமென்ற முறையில்—அதற்காக ஆண்டுதோறும் மானியம், தொகைகள் கொடுக்கப்பட்டு வந்தாலும்—இந்த ஆண்டு பொது அறிக்கை

யோடு அதைச் சேர்க்காது தனியாகக் கொடுக்கக் காரணம், அங்கத்தினர்கள் இதில் விசேஷ கவனம் செலுத்துவார் என்ற ஆசையினால்தான். அப்படி ருந்தும் இந்தப் பக்கத்தை யாரும் போய் பார்க்கவில்லை. இது எல்லோ ருடைய கண்ணிலும் படக்கூடியது அல்ல. தங்கள் தங்கள் ஊரில் ஒரு சிறு துறைமுகம் வேண்டுமென்று யாரும் கேட்கப் போவதில்லை. கனம் அங்கத்தினர் திரு. ஹஜா ஷெரிப் அவர்கள் இந்த அறிக்கையைப் பார்த்து பாராட்டுதல் தெரிவிக்கும்போது சிறிது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், எல்லாத் துறைமுகங்களையும் ஒரே சமயத்தில் எடுத்துக்கொண்டு அரைகுறையாக விட்டுவிட்டால் அதிக நஷ்டம் ஏற்படுமே என்ற அச்சத்தை தெரிவித்தார்கள். அதற்காக ஒரு சிறிய கமிட்டி அமைத்தல் நலம் என்றார்கள். அப்படி அதற்கு ஒரு கமிட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் இதற்குத் தேவையான பூர்வாங்க விவரங்களைத் தெரிந்துகொண்டு எந்தெந்த துறைமுகங்களில் என்னென்ன செய்யவேண்டுமென்று விவரமாகச் செல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களை நடைமுறையில் கொண்டுவரும் நிலையில் இந்த ஆண்டு துவக்கத்தில் ஒரு ஸ்பெஷல் மெகானிகல் சர்க்கிள் ஏற்பாடு செய்து எதை எதைச் செய்யவேண்டும், எப்படி எப்படிச் செய்யவேண்டுமென்று துறைமுக வேலைகளைச் செய்வதற்காக தேவைப்பட்ட புள்ளி விவரங்களை முதலில் கடலூர் துறைமுகத்திற்கான அபிவிருத்தி செய்வதற்கான சூழ்நிலை சேகரம் செய்து கொடுத்து அதை அபிவிருத்தி திட்டம் அங்கீகரிக்கப்படும் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. விரைவில் அத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டவுடன் அத்திட்ட என்பதில் சந்தேகமில்லை. அத்திட்டம் அங்கீகரிக்கப் பட்டவுடன் அத்திட்ட வேலை தொடங்கப்பட்டு முடிந்தால் அது கடலூர் பகுதி மக்களுக்கு மட்டு மல்ல, பக்கத்திலுள்ள மற்ற ஜில்லாக்களுக்கும் ஏற்றுமதி பண்டங்களை ஏற்றுமதி செய்ய வசதியாக இருக்கும். இன்னும் நல்ல துறைமுகங்கள் பல இருக்கின்றன. திரு. இராமச்சந்திர ராயர் அவர்கள் பரங்கிப்பேட்டை துறைமுகத்தைப்பற்றிச் சொன்னார்கள். எனக்கு ஞாபகம் இருக்கிறது. இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பிக்குமுன் மலேயா தேசத்தில் இருந்து வந்த கப்பல்கள் அங்கு நின்று பாஞ்சர்களை இறக்கி விட்டுப் போகும் பழக்கம் இருந்தது. எல்லாப் போக்குவரத்தையும் ரயிலால் செய்து விட முடியாது, ரோடுகளில் செய்து விட முடியாது, அதற்கு இதுபோன்ற சிறுசிறு துறைமுகங்களும் தேவை. இவை நன்கு பரிசீலிக்கப்பட்டு அபி விருத்திக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்படும். அடுத்தபடியாக கட்ட டங்கள் சம்பந்தப்பட்டது. இந்த அரசாங்கத்திற்குத் தேவையான கட்ட டங்களை எல்லாம் மராமத்து இலாகா மூலம்தான் கட்டி வருகிறார்கள். ஏராளமான கட்டிடங்கள் கட்டி வருகிறார்கள். அப்படிக் கட்டும்போது தரக் குறைவு பொதுவாக இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று நான் தைரியமாகச் சொல்லமுடியும். ஆங்காங்கே சிலயிடங்களில் குறைபாடுகள் இருக்கலாம். அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அக்குறைபாடுகளை இல்லாமல் செய்து விட முடியும். திருவாடானைப்பகுதி கனம் அங்கத்தினர் அவர்களுக்கு கட்டடத்தின் பேரில் குறை இருக்காது, தனியாகப் பேசிப் பார்த்தால் தெரியும் அது. அக் கட்டட வேலை செய்பவர் அவர் கட்சிக்கு புறம்பான கட்சியைச் சார்ந்தவராக இருக்கலாம், அதனால்தான் கோபம். எந்த இடத்தில் பஞ்சாயத்து யூனியன் கட்டடம் கட்டி இடிந்து விழுந்தது? அப்படி விழுந்ததாக நான் கேள்விப் பட்டதில்லை. தேவகோட்டையில் அந்நிலை இருக்கமுடியாது, இரண்டு மாதங்களுக்கு முன்பு அரசியலில் பெரிய மனிதர் ஒருவர் திடீரென்று என் அறைக்குள் வந்தார். 'மெரினாவில் போடப்பட்டிருக்கிற ஸ்லாப்ஸ் கான்கிரீட்டால் போடவில்லையா, களிமண்ணால் போட்டிருக்கிறார்களே பார்த்தீர்களா' என்று கேட்டார். இவ்வளவு பெரிய மனிதர் தெரியாமல் சொல்வாரா என்று நினைத்து அவர்மேல் இருந்த நம்பிக்கை காரணமாக அங்கு சென்று பார்த்தேன். அவர் உல்லாசமாக நடந்து போகும்போது ஒரு இடத்தில் அங்கு சிறிது பாசி ஏற்பட்டு அவர் கண்களுக்கு களிமண் மாதிரி பட்டிருக்கிறது. கடப்பாறையால் கூட அதை இடிக்க முடியவில்லை. கான் கிரீட்டால் செய்யப்பட்டது, அது. அதேபோல் அரைகுறையாகத் தெரிந்து கொண்டு இந்த சபையில் வந்து தேவகோட்டையில் உள்ள ஒரு கட்டடம் இடிந்து விழுந்திருக்கிறது என்றால் அங்கு அந்நிலை இருக்கமுடியாது. இம்மாநிலத்தில் கட்டடங்கள், பிறர் பாராட்டும் வகையில் கட்டப்படுகின்றன.

அவை வேகமாக கட்டப்பட வேண்டும் என்பதும் என் ஆசை. நல்லதாக
இருக்கவேண்டும், வேகமாக கட்டப்படுதல் வேண்டும். சென்ற ஆண்டு
சுதந்திரா கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள், அல்லது நானே சொன்ன
தாக ஞாபகம். எல்லாம் சிமெண்டில் கட்டவேண்டுமென்ற நினைப்பு மாற
வேண்டும். கிராமங்களில் என்ன பொருள்கள் கிடைக்கின்றனவோ அதை
பயன்படுத்தி புதுக்கட்டடங்கள் கட்டப்படவேண்டுமென்று சென்ற தடவை
வலியுறுத்திச் சொன்னார்கள். செட்டிநாட்டு பகுதிக்குச் சென்று பார்த்தால்
அங்குள்ள பெரிய கட்டடங்கள் எல்லாம் கூட சிமெண்ட் இல்லாத கட்டடங்கள்
தான் என்று சொன்னால் மிகையாகாது. அற்புதமாக கட்டியிருக்கிறார்
கள். அதுவும் அவை சாதாரண கிராமத் தொழிலாளர்களை வைத்துக்
கொண்டு கட்டப்பட்ட கட்டடங்கள். அதே போன்று பெரிய கட்டடங்களைக் கூட,
கிராம ரீதியில் உள்ள கட்டடங்களைக் கட்டவேண்டுமென்று அதிகாரிகளிடம் பேசி
பல முடிவுகள் எடுத்திருக்கிறோம். சென்னை நகரை எடுத்துக்கொண்டால்
ஹௌசிங் போர்ட் புதிதாகக் கட்டக்கூடிய கட்டடங்களில் அதிகமாக சுண்
ணாம்புக் கட்டடம் கட்டுவது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள். தேசீய
விஸ்தரிப்புத் திட்டப் பகுதியில் எங்கெங்கு சுண்ணாம்பு உற்பத்தி செய்யக்
கூடிய சுக்கான் கிடைக்கிறதோ அப்பகுதிகளில் சுண்ணாம்பு உற்பத்தி
செய்யவேண்டிய தொழில்களை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டி
ருக்கிறோம். மன்னார்சநல்லூர் பஞ்சாயத்து யூனியனில் முன்னோடி திட்ட
மாக இதை ஆரம்பிக்க திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். ஹைவேஸ்
அண்ட் ரூரல் வொர்க்ஸ் அவர்கள் கட்டும் கட்டடங்களிலும் சுண்ணாம்பை
பயன்படுத்திக் கொள்ள முயற்சி எடுக்கவேண்டும். சிமெண்டை குறைத்துக்
கொள்ளவேண்டுமென்று உத்தரவுகள் போட்டிருக்கிறோம். அதற்குத்
தகுந்த முறையில் பல நல்ல கட்டடங்களைக் கட்டத் தொடங்கி விட்டார்கள்.
என்னிடத்திலே அவர்கள் சொன்னது, கோயம்புத்தூர் ஜில்லாவிலே சிங்க
நல்லூர் தொழிலாளர் காலனியை, பூராவையும் சுண்ணாம்பைக் கொண்டே
கட்டியிருக்கிறார்களாம். பல இடங்களில் இம்மாதிரி கட்டி வருகிறார்கள்.
சுண்ணாம்பைக் கொண்டு கட்டுவதற்கு எஞ்ஜினியர்கள் மிகவும் உற்சாகமாக
இருக்கிறார்கள். அப்படிக் கட்டவேண்டுமென்று சட்ட சபை அங்கத்தினர்கள்
கேட்டுக்கொண்டார்கள் என்று உணர்ந்தவுடன் அவர்கள் அதற்கு வேண்
டிய தீவிர முயற்சிகளை எடுத்துக்கொள்ள முற்பட்டுவிட்டார்கள். அந்த
முறையில் சிமெண்ட் பிரச்னையைப் போக்குவதற்கு முயற்சி எடுத்திருக்கி
றார்கள் என்று சொன்னால் அது மிகையல்லை. அதே நேரத்தில் தனியார்
கட்டக் கூடிய கட்டடங்களையும் சுண்ணாம்பிலேயே கட்டவேண்டும். கனம்
சுதந்திரா கட்சித் தலைவர் இருக்கக் கூடிய இடத்தில்தான் சுண்ணாம்புக்
கட்டடங்கள் முன்பு கட்டப்பட்டு வந்தன. இப்போது அங்கு சிமெண்ட்
கட்டடம் வந்தாயிற்று. இது போன்று மாறுமல் பழைய மாதிரியே
கட்டடங்களை சுண்ணாம்பிலேயே கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

திரு. சா. கணேசன் : அவன் என்றால் காரணம் நாங்கள் அல்ல. உங்
கள் துறையும், உங்கள் துறையில் இருக்கிற எஞ்ஜினியர்களும்தான்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது அரசாங்கத் துறையும், அர
சாங்க எஞ்ஜினியர்களும் அவர்கள் மனதை மாற்றிக்கொள்ளத் தொடங்கி
விட்டார்கள். அந்தப் பகுதியிலுள்ளவர்கள் அதைப்போலவே கட்டடங்களைக்
கட்ட தீவிர முயற்சி எடுக்கவேண்டும்.

இன்னும், இது வரையில் பெரியவைதயெல்லாம் பொதுவாகப் பேசியிருக்
கிறேன். ஒவ்வொரு கனம் அங்கத்தினருக்கும் பதில் சொல்லக் கூடிய
முயற்சி எடுத்தால் இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். அதோடுமட்டுமல்லாமல்
ஏராளமான வெட்டுப்பிரேரணைகள் வந்திருக்கின்றன. இதற்கெல்லாம் சபைக்
குச் சொல்லக் கூடிய உறுதி, அவைகளையெல்லாம் தீவிரமாக பரிசீலனை செய்து
அடுத்த வருஷம் வரும்போது இந்த மான்யக் கோரிக்கை வரும்போது,
இப்போது சொன்ன குறைகள் ஓரளவு தீர்க்கப்பட்டன என்று கனம் அங்கத்
தினர்கள் பேசக் கூடிய முறையில் இந்த இலாகா நடக்கும் என்று சொல்லி
கொள்கிறேன். சென்ற வருஷம் நான் கொஞ்சம் கடுமையாகவே இந்த
இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் மத்தியில் பேசிப் பழகி வந்திருக்கிறேன்.
ஏனென்றால் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம்

விவாதத்தைத் துவக்கி வைக்கக் கூடிய முறையில் கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து, அவர்கள் பேசினார்கள். அவர் வேறு எந்த முறையிலே ராஜாஜியைப் பின்பற்றினாலும், பின்பற்றாவிட்டாலும், இந்த இலாகாவைத் திட்டக் கூடிய முறையில் பின்பற்றினார். ராஜாஜி அவர்கள் சொன்னார்களாம், " இது பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்ட், எனிமி நெ. 1" என்று. அந்த முறையில் விவாதத்தைத் தொடங்கும்போது சொன்னார்கள். அந்த சர்ச்சைக்குள் நான் போக விரும்பவில்லை. கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து அவர்கள் நினைப்பதுபோல் இது பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்டாக இருந்திருந்தால் சென்னை ராஜ்யத்தில் இவ்வளவு நல்ல வேலைகள் நடந்திருக்க முடியாது. மற்ற கனம் அங்கத்தினர்கள் சொன்ன மாதிரி இந்த இலாகா நன்றாகச் செயல்படாதிருந்தால், சென்னை ராஜ்யத்தில் எந்தவித அபிவிருத்தியும் நடந்திருக்காது என்று சொல்ல முடியும். எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும் இந்த இலாகாவின் முன்னோடியான வேலை அவசியமாக இருக்கிறது. மற்றொரு கனம் அங்கத்தினர் சொன்னதைப் போல எந்தக் கண்ணோடு பார்க்கிறோமோ அந்த முறையில்தான் தெரியும். குறை சொல்லவேண்டுமென்றால் குறையே சொல்லிக் கொண்டிருக்கலாம். கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து அவர்களுக்குத் தெரியும், ஏராளமான நல்ல வேலைகள் நடந்திருக்கிறது என்பது. எதையும் மிகைப்படுத்திச் சொல்லி இலாகாவில் செயல்படக்கூடியவர்கள் மனதை நோகச்செய்து விடுவது லாபமாக இருக்காது. குறிப்பாக எஞ்ஜினியர்களைப் பொறுத்த வரையில் நாம் இப்போது புது முறைகளில் ஈடுபடும்போது, நான் அதிகமாகத் தொந்திரவு கொடுத்திருக்கிறேன். அந்தத் தொந்திரவுகளைத் தாராளமாக நல்ல மனதோடு ஏற்றுக்கொண்டு செயல்பட்டதற்கு இந்த விவாதத்தில் கூறப்பட்ட நல்ல வார்த்தைகளால் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படும் என்று நானும் கனம் அங்கத்தினர்களோடு சேர்ந்து நல்ல முறையில் ஒத்துழைப்பு கொடுத்ததற்காக அவர்களுக்கு நன்றியைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : அமைச்சர் அவர்கள் கூறும்போது, தஞ்சை ஜில்லாவிலே வாய்க்கால் கரைகள் ரோடுகளாக ஆக்கப்படுவதாக சொன்னார்கள். ராஜ்யம் பூராவும் இதுபோன்று செய்யலாமா? பஞ்சாயத்து யூனியனோ, பஞ்சாயத்தோ ரோடு போடுவதற்காக தொகைகளைக் கேட்டால் சர்க்கார் அதற்கு அனுமதி கொடுப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பஞ்சாயத்து யூனியனோ, பஞ்சாயத்தோ கேட்டால் கொடுக்க கொஞ்சம் கூடத் தயக்கம் கிடையாது. கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். இது தஞ்சைக்கு மட்டுமல்ல. எல்லா இடத்திலும் செய்ய வேண்டும் என்பதுதான் எண்ணம். இப்போது ஆரம்ப நிலையில் இருக்கிறோம். சில ஜில்லாக்களில் இந்த வாய்க்கால் வழியாகப் போக கூடிய அவசியமே இருக்காது. லோயர் பவானி திட்டத்தை எடுத்துக் கொண்டால் போக்குவரத்துக்கு லாயக்கான வழியாக அமைக்க வேண்டியதாக இருக்கிறது. ஜன நெருக்கடி இதில் அமைந்திருக்கிறதா என்று பார்த்தால் ஜனத்தொகை அதிகமாகக் கிடையாது. தஞ்சையில் அப்படி அல்ல. அங்கே வாய்க்கால் கரையிலேயே கிராமங்கள் அமைந்திருக்கின்றன. இப்போது, இதுபோல மணிமுத்தாறு ப்ராஜெக்டைப் பார்க்கும்போது மைல் கணக்காக எந்த வித கிராமத்தையும் பார்க்க முடியாது. ஏதோ ஒரு திட்டம் தஞ்சைக்கு வருகிறது என்றால் உடனே லோயர் பவானிக்கு செய்துகொடுங்கள், மணிமுத்தாறுக்கு செய்துகொடுங்கள் என்று கேட்பது முறையல்ல. எங்கு அவசியமோ அங்கெல்லாம் செய்யப்படும்.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 5,73,66,600 under Demand No. XXVII—Public Works—Works be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,73,66,600 under Demand No. XXVII—Public Works—Works.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,98,74,100 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,98,74,100 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 4,68,70,800 under Demand No. XLII—Capital Outlay on Public Works be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 4,68,70,800 under Demand No. XLII—Capital Outlay on Public Works.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

1 49 p.m. The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

128. *Notification issued with Memo. No.* 115469-*UI*/61-12.
Revenue, dated 21st December 1962 amending the rules published
with Revenue Department Notification S.R.O. No. A-450 of 1961,
at pages 517–518 of Part V of the Fort St. George Gazette, *dated*
the 3rd May 1961, relating to grant of pension and gratuity to
Executive Officer under the Madras Hindu Religious and Charitable
Endowments Act, 1959. [Laid on the Table of the House under
section 116 (3) of the Madras Hindu Religious and Charitable
Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]

129. *Notification issued with G.O. P. No. 4563, Revenue, dated*
13th December 1962 amending the rules published with Revenue
Department Notification S.R.O. No. A-805 of 1961, at pages 840–

846 of Part V of the Fort St. George Gazette, *dated the 2nd August*
1961 under the Madras (Transferred Territory) Incorporated and
Unincorporated Devaswoms Act, 1959. [Laid on the Table of the
House under section 29 (3) of the Madras (Transferred Territory)
Incorporated and Unincorporated Devaswoms Act, 1959 (Madras
Act 30 of 1959).]

130. *Notification issued with G.O. Ms. No. 321, Local Adminis-*
tration, dated 12th February 1963 regarding the dissolution for a
period of one year of Sholavandan Panchayat in the Madurai district.
[Laid on the Table of the House under section 179 (4) of the
Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

131. *Notification issued with Memo. No. 114083-M2/62-1,*
dated 11th December 1962 exempting from liability to entertain-
ments tax with effect from 24th October 1959, the film shows run
for the benefit of the service personnel and their families living
within the prohibited areas of the Air Force Stations at Tambaram
and Avadi . [Laid on the Table of the House under section 16(4)
of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of
1939).]

B. Reports, Notifications and other papers.

* 72. *Notification issued with G.O. Ms. No. 2, Legislative*
Assembly, dated 5th January 1963 amending Rule 14 of the Madras
Legislature Travelling Allowance Rules, 1955 published with Public
(Elections-III) Department Notification No. 26, dated the 18th
July 1955, at pages 131–138 of the Rules Supplement to Part II
of the Fort St. George Gazette, *dated the 27th July 1955, under*
the Madras Payment of Salaries and Removal of Disqualifications
Act, 1951 (Madras Act XX of 1951).

† 73. *Policy note and speech of the Hon. Minister for Infor-*
mation relating to Demand No. V—Registration Department
(Tamil).

† 74. *A Review of Industrial Development in Madras State,*
1962–63 (English).

† 75. *Speech of the Hon. Minister for Municipal Administra-*
tion, while moving Demand No. XXIX—Public Works—Grants-in-
aid (English and Tamil).

† 76. *Housing in Madras State for 1962–63 (English).*

† 77. *Speech of the Hon. Minister for Works while moving*
Demand No. XXVII—Public Works, Demand No. XXVIII—
Establishments and Tools and Plants and Demand No. XLII—
Capital Outlay on Public Works (English and Tamil).

---

* Placed on the table of the House on 1[illegible]th March 1963.
† Circulated to Members on 18th March 1963.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 21st March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Police firing (Urappanur, Madurai district)

* 2 *S.N.Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was any police firing near Thirumangalam in Madurai district on 16th March 1963; and

(*b*) the number of persons who died as a result of the police firing?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes; there was such an incident on 17th March 1963.

(*b*) Three.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம் ; சம்பவம் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதியில் நடந்தது.

(இ) மூன்று.

* 3 கு. கா. கேள்வி. —**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதி மதுரைக்கருகில் உள்ள மேல் உரப்பனூரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் எத்தனை பேர்கள் ?

(இ) அவர்களில் பெண்கள், சிறுவர்கள் எத்தனை பேர் ?

(உ) துப்பாக்கிப் பிரயோகம் நடக்குமுன் என்னவிதமான எச்சரிக்கைகள் செய்யப்பட்டன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) மூவர் இறந்தனர் ; ஒன்பது பேர் காயமடைந்தனர்.

(இ) காயமடைந்தவர்களில் ஒருவர் பெண்மணி. சிறுவர்கள் யாரும் காயமடையவில்லை. இறக்கவும் இல்லை.

(உ) கலைந்து போகாவிடில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படும் என்று ஒலிபெருக்கிமூலம் எச்சரிக்கை செய்யப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகத்தை அறிவிக்கும் பொருட்டு ஒலிபெருக்கிமூலம் ஊதுகுழலும் ஊதப்பட்டது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Three persons died. Nine persons were injured.

(*b*) Among those injured, one is a woman. No children were involved.

(c) The crowd was warned through a loud-speaker that the police would open fire if they did not disperse. A whistle was also blown through the loud-speaker to indicate that the police would open fire.

* 4 *S.N.Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that there was shooting by the police at Mela Urappanur, Madurai district on the 17th March 1963;

(*b*) whether any petition was presented to the District Superintendent of Police, Madurai Urban, on the afternoon of the 16th instant requesting him to take necessary action to prevent a breach of the peace and to prevent the Counter-petitioners mentioned in the petition from giving the signal for fishing? And if so, what action was taken on it;

(*c*) whether it is a fact that a large police party was stationed at Mela Urappanur whereas the Counter-petitioners who wanted to give the signal for fishing and who wanted police protection are at Kila Urappanur on the opposite side of the kanmoi? And if so, why?

(*d*) whether it is a fact that till this year the police were themselves giving the signal by firing a rifle for fishing to start; and

(*e*) whether it is a fact that early in the morning on 17th March 1963 at about 4 a.m. the Armed Police entered the houses of the residents of Mela Urappanur and threatened to shoot them if they did not go for fishing to the tank which was a mile away?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Government have no information about this.

(c) There has been trouble in previous years also on this issue. Police force had therefore been stationed as a precautionary measure.

(*d*) This might have been done informally, as a measure of compromise between the two parties. But on this occasion, there was a decision by the Court in favour of one of the parties, and therefore the police could not have interfered with that right.

(*e*) No.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) இது பற்றிய தகவல் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

(உ) முந்தின வருடங்களில்கூட கலவரங்கள் இருந்திருக்கின்றன. முன்னெச்சரிக்கையாகப் போலீஸ் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது.

(எ) இரண்டு தரப்பினருக்குமிடையே சமரசம் உண்டாக்குவதற்காக உத்தியோகப் பூர்வமில்லாமல் இவ்வாறு செய்திருக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இந்தச் சமயத்தில் ஒரு தரப்பின் சார்பில் கோர்ட் உத்தரவு இருந்தது. அதனால் அந்த உரிமையில் போலீசார் தலையிட முடியவில்லை.

(ஐ) இல்லை.

திரு. எஸ். மாதவன் : பல ஆண்டு காலமாக இந்தக் கலவரம் அங்கே தொடர்ந்து நடைபெற வாய்ப்பு இருந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியிருந்தும், போலீஸார் தகுந்த பாதுகாப்புடன் அங்கே செல்லவில்லை என்பதும், துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்னால் கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்படவில்லை என்பதும் அரசாங்கத் திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால், ஒரு மாவட்ட நீதிபதியை வைத்து விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல கேள்விகள் கேட்கப்பட்டிருக் கின்றன. கலவரம் செய்வதற்கு வாய்ப்பு இருந்தது என்று நான் சொல்ல வில்லை. கனம் அங்கத்தினர் அவ்வாறு குறிப்பிட்டார்கள். பல ஆண்டு களாக, ஆண்டுதோறும், கலவரங்கள், குழப்பங்கள், வேற்றுமைகள், கட்சிகள் இருந்தன. அவ்வப்பொழுது போலீஸார் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். முன் எச்சரிக்கையாக போலீஸ் பாதுகாப்பு இருந்தது. போலீஸ் எச்சரிக்கையும் செய்திருக்கிறார்கள் என்று நான் முன்பே விடையிலே குறிப்பிட்டிருக்கிறேன். போலீஸ் 'நீங்கள் கலைந்து போகவேண்டும். இல்லையென்றால் சுடவேண்டியிருக்கும்' என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. தடியடிப் பிர யோகம் செய்யப்போவதாக முன் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அது பலன் அளிக்கவில்லை. ஆதலால், தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார் கள். அதுவும் பலன் அளிக்கவில்லை. அவைகளையெல்லாம் பொருட் படுத்தாமல் ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஏராளமான பேர்கள், 1,000 பேர்கள் போலீஸ்காரர்களையும், மற்றவர்களையும், எதிர்க்கட்சியினரையும் தாக்குவதற்கு முன்நோக்கி வந்தார்கள். கற்களையும் வைத்துக்கொண் டிருந்தார்கள். பிறகு அபாயம் அதிகமாக ஏற்படக்கூடும், அதைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக, அதற்கு மேலே சுடக்கூடிய நடவடிக்கை களை போலீஸார் எடுத்துக்கொண்டார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து இந்தச் சம்பவம் நடைபெறும் என்று ஏற்கெனவே தெரிந்திருக்கலாம் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இந்த சம்பவம் நடக்காமல் இருப்ப தற்காக போலீஸார், சம்பந்தப்பட்ட முக்கியமான நபர்களை தடுப்பு நடவடிக் கையாக ஏன் கைது செய்யவில்லை ? அப்படிக் கைது செய்துவிட்டு, போலீஸ்காரர்களை அதிகமாக அங்கு கொண்டு வந்து இதனை ஏன் அடக்க முன்வரவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தச் சம்பவம் எல்லாம் நடக்கும் என்று போலீஸ்காரர்கள் எதிர்பார்த்தார்கள் என்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால், கலவரம் ஏற்படுகிறது, இதனால் சில விபத்துக்கள் ஏற்படலாம், இதைத் தவிர்க்கவேண்டும் என்று கருதி போலீஸ் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 17-ம் தேதி இது நடைபெற்றது. 15-ம் தேதி இரு சாராரையும் அழைத்துப் பேசி 'நீங்கள் ஒத்துப்போகவேண்டும். தகராறு செய்யக்கூடாது' என்றெல்லாம் ஏற்பாடு செய்தார்கள். அதற்கு மேலும் அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று தோன்றியது. 16-ம் தேதி தாலூகா மாஜிஸ்டிரேட்டை வைத்துக் கொண்டு தடை உத்தரவு போட்டார்கள். தடை உத்தரவு போட்ட பிறகு, மறுநாள் 17-ம் தேதி விடியற்காலையில் 4-மணிக்கு டெப்யூடி சூபரிண்டெண்டெண்டு ஆப் போலீஸ், தாலூகா மாஜிஸ்டிரேட் ஆகியோர்கள் அங்கு வந்து ஆஜராகியிருந்தார்கள். அப்பொழுதே அவர்கள் பார்த்தார்கள். ஏராளமான பேர்கள் வேல், கம்பு, அரிவாள், கற்கள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு தயாராக இருப்பதைப் பார்த் தார்கள். அதற்குப் பிறகு எச்சரிக்கை செய்தார்கள். இப்பொழுது அங்கத்தினர் இப்படிக் கூறுகிறார்கள். கைது செய்திருந்தால், ஏன் கைது செய்தார்கள், கைது செய்ததனால் ஆத்திரம் ஏற்பட்டது, சம்பவம் நடந்தது என்றெல்லாம் எத்தனையோ அங்கத்தினர்கள் எத்தனையோ முறை இந்த மன்றத்தில் கூறியிருக்கிறார்கள். கைது செய்வதா அல்லது தடை உத்தரவு போடுவதா, எப்பொழுது கைது செய்வது இவைகளெல்லாம் [illegible]

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : 16-ம் தேதி போடப்பட்ட 144 தடை
உத்தரவின் ஷரத்துக்கள் எவை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்
பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூட்டம் சேரக்கூடாது என்பதுதான்
ஷரத்து.

திரு. கே. மூக்கையா தேவர் : முதலில் போலீஸ் பந்தோபஸ்து
வேண்டும் என்று கேட்ட நபர் கோர்ட்டு உத்தரவுப்படி தான் பெற்ற உரி
மையைக் காப்பாற்றுவதற்காக போலீஸ் உதவியை நாடுமுர். அதற்காக
போலீஸ்காரர்கள் மைக் வைத்து வண்டியில் வந்து மீன் பிடிக்கவேண்டு
மென்று சொல்லியிருக்கிருர்கள். அதற்கு மாருக வரக்கூடாது என்று
144 உத்தரவு போடுவது நியாயமா ? எந்த சட்டத்தை அனுஷ்டித்து
அவ்வாறு செய்யப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோர்ட்டு உத்தரவு, போலீஸார்
உத்தரவு பற்றி தெரிவிக்கப்பட்டது. கோர்ட்டு உத்தரவை மீறி போலீஸார்
வேறு எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியாது. ஆனுல்,
கோர்ட்டு உத்தரவு இருந்தால், அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதை
எதிர்த்து மேல் கோர்ட்டுக்கு வேண்டுமானுல் அப்பீல் செய்து கொள்ளலாம்.
கோர்ட்டில் அப்பீல் செய்யாமல், 'அதை நாங்கள் எதிர்க்கிறேம்' என்று
சொல்லுகிறபொழுது, தடை உத்தரவு போட்டு தடுக்காமல் வேறு எந்த
நடவடிக்கையும் பந்தோபஸ்தை ஒட்டி எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, துப்பாக்கிப்
பிரயோகம் செய்துதான் கூட்டத்தை, கலவரத்தை அடக்கவேண்டும்
என்ற சூழ்நிலை எப்பொழுது ஏற்பட்டது ? அப்படி ஏற்படும் என்று எந்த
நேரத்தில் போலீஸார் முடிவு செய்தார்கள் ? அவ்வாறு துப்பாக்கிப் பிர
யோகம் செய்யவேண்டிய சூழ்நிலைக்குக் காரணம் கலவரத்தின் மிகுதியா
அல்லது போதுமான அளவுக்கு போலீஸ் அங்கு கொண்டு வந்து சேர்க்கப்
படாததா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கலவரம் ஏற்படக்கூடும் என்பதை
எதிர்பார்த்து, போலீஸார் போதிய அளவுக்குப் படைகளை வைத்துக்கொண்
டிருந்தார்கள். எவ்வளவு கூட்டம் சேர்ந்தார்களோ—வேல், கம்பு, அரிவா
ளோடு 1,000 பேர் வந்தார்கள் என்ருல்—அந்த அளவுக்கு போலீசார்
வந்தார்கள் என்பதில்லை. நிலைமையைச் சமாளிப்பதற்கு வேண்டிய பந்
தோபஸ்தை வைத்துக்கொண்டுதான் இருந்தார்கள். முன் எச்சரிக்கை
செய்தார்கள். ஊதுகுழல் மூலம் தெரிவித்தார்கள். ஒலி பெருக்கி மூலம்
தெரிவித்தார்கள். கூட்டம் கலைந்து போக வேண்டும், இல்லாவிட்டால்
நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று சொன்னுர்கள். அதனுல்
பலன் ஏற்படவில்லை. தடையைமீறி வந்துகொண்டிருந்தார்கள். அதற்குப்
பிறகு தடியடிப் பிரயோகம் நடந்தது. லதி சார்ஜ் நடந்தாலும், அதைப்
பொருட்படுத்தாமல், எதிர்நோக்கி வந்து கற்களை வீசி எறிந்தார்கள்.
போலீசாரைத் தாக்குவதற்கு எதிர்நோக்கி வந்தார்கள். மக்களுக்
குள்ளும் ஒருவருக்கொருவர் கலவரம் ஏற்படும்போல் இருந்தது. அடி
பட்ட ஒரு ஹெட் கான்ஸ்டேபிள் இன்னும் ஆபத்தான நிலையில் இருக்கிருர்.
அந்த நிலையிலேதான் அவர்கள் மறுபடியும் எச்சரிக்கை செய்தார்கள்.
அதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. அதற்கு மேலே இன்னும்
பெரிய விபத்துக்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்குச் சுட வேண்டியிருந்தது.
எனக்கு வந்த தகவல்படி 12 ரவுண்டுகள் சுட்டிருக்கிருர்கள். ஒவ்
வொன்ருகச் சுட்டு, அதனுல் பயந்து போய் விடுவார்கள் என்று போலீசார்
நினைத்தார்கள். முதலில் சுட்டதிலே விபத்து ஒன்றுமில்லை. யாரும் உயிர்
துறந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஒன்றிரண்டு பேர் அடிபட்டிருக்க
லாம். சுட ஆரம்பித்த பிறகும் அதையும் பொருட்படுத்தாமல், மேலும்
மேலும் பலாத்காரத்தில் இறங்கியதைப் பார்த்துத்தான் சுடவேண்டி
யிருந்தது. எவ்வளவுக்கு அவசியமோ, அந்த அளவக்குத்தான் சுட்டார்

அடிபட்டிருக்கிருர்கள். இந்த மன்றத்திலே எல்லாம் கேட்பதினுலே நான்
சொல்லுகிறேன். அடிபட்டு விழுந்த ஒருவரைத் தூக்கிப் பார்த்ததில்
மடியிலே கற்கள் இருந்ததாகக்கூடப் புலப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினுல்,
மூன்று பேர் இறந்துவிட்டார்கள். அதனுல் பீதி ஏற்பட்டு, பல கிராமங்
களிலே உள்ள மக்கள் வெளியேறிப் போய் விட்டதாகத் தகவல் கிடைத்
திருக்கிறது. அந்த மக்களை எல்லாம் திரும்ப அவர்கள் வீடுகளுக்குக்
கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?
அங்கு நிறுத்தியிருக்கக்கூடிய போலீஸ் படையை வாபஸ் பெறுவதற்கு
ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறு
கிறபொழுது, மக்கள் பயந்து போவதுண்டு. இப்பொழுது அமைதி நிலவு
கிறது. சீக்கிரத்திலே திரும்ப வந்து விடுவார்கள். போலீஸ் படையை
எப்பொழுது எடுப்பது என்பதை அங்குள்ள நிலைமையைப் பொறுத்து,
அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும். இப்பொழுது அவசரப்பட்டு எடுத்து
விட்டால், மீண்டும் கலவரம் ஏற்படலாம். இதற்கெல்லாம் இங்கிருந்து
உத்தரவுபோட முடியாது.

திரு. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்
பொழுது, எந்த அளவுக்கு நடவடிக்கை தேவையோ, அந்த அளவுக்குத்
தான் எடுக்கப்பட்டது என்று சொன்னுர்கள். செத்தவர்களுடைய குடும்
பத்தைச் சார்ந்த மனைவி, மக்கள் அத்தனை பேரையும் கைது செய்திருக்
கிருர்கள். அதோடு காயம் பட்டவர்களைத் தேடுகிறேம் என்று சொல்லி,
ஆண்கள் அத்தனை பேரையும் தேடி கைது செய்கிற காரணத்தால், பலர்
ஊரை விட்டுப் போய் விட்டார்கள். அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்
களைக் கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவசியம் என்ன என்று நான்
கூற முடியாது. மேலும் அமைதியை நிலைநாட்டுவதற்கு, மேலும் சம்
பவங்கள் நடைபெருமல் இருப்பதற்கு, என்னென்ன நடவடிக்கைகள்
அவசியமோ, அதை போலீசார் செய்யத்தான் வேண்டும். இதிலே நாம்
குறுக்கிடுவது நல்லதல்ல. அவர்கள் அத்துமீறி நடந்துகொண்டார்கள்
என்று குறிப்பிட்ட புகார்கள் வந்தால், அவை விசாரிக்கப்படும்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : சம்பந்தப்பட்ட கண்மாய்க்கும்
மேல் உரப்பனூருக்கும் எவ்வளவு தூரம் ? கூட்டம் போடக் கூடாது என்று
144-வது பிரிவின்கீழ் தடை உத்தரவு போடப்பட்டதாகச் சொன்னுர்கள்.
ஆனுல் அங்கே வந்தவர்கள் மீன் பிடிப்பதற்காக வந்திருந்தார்கள். மீன்
பிடிப்பதற்காக வரக்கூடாது என்று சொல்லுவது 144-வது பிரிவுக்கு
விரோதமில்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் கூடி இருந்தாலும் சட்ட
விரோதம்தான். தகராறு ஏற்பட்டதற்குக் காரணம் வெள்ளைக் கொடியை
யார் காட்டுவது என்பது. வெள்ளைக் கொடியைக் காட்டுவதிலே ஜில்லா முனி
சீப் கோர்ட் உத்தரவு இருக்கிறது. அதை சப்-கோர்ட் ஊர்ஜிதம் செய்
திருக்கிறது. அதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று மற்றெரு கட்சி
சொல்லிற்று. அம்மாதிரித் தகராறு இருந்தது. இரு சாராரும் இரண்டு
பக்கத்திலேயும் இருந்தார்கள். ஒரு சாராரே இருந்தார்கள் என்பதில்லை.
யார் கூட்டம் போட்டாலும் கலைய வேண்டுமென்று சொன்னுர்கள். மேலும்
பலாத்காரத்தில் இறங்கினுல் மேலும் நிலைமை க்ஷீணித்து விடும்
என்று கருதி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது.

கனம் சபாநாயகர் : முதலிலே சம்பந்தப்பட்ட பாயிண்டுகளைப் பற்றி கேள்விகள் கேட்கவேண்டும். மதுரை ஆஸ்பத்திரியில் நடந்தது பற்றி பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாகக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம். கொந்தளிப்பு, கலவரம் ஏற்பட்டிருக்கிற நிலையிலே கண்டிப் பாகத்தான் இருப்பார்கள். மேலதிகாரிகளிடம் அனுமதி கேட்டுக்கொண்டு போகலாம்.

திரு. மு. கருணாநிதி : நிகழ்ச்சி நடந்தபோது அந்த இடத்திலே இருந்த போலீசாரின் எண்ணிக்கை எவ்வளவு ? பொது மக்களுடைய எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில், பொது மக்களுடைய எண்ணிக்கை சுமார் 1,500 பேர் இருக்கலாம். மொத்தம் 1,000-1,500 பேர் டெட்லி வெப்பன்களை வைத்துக்கொண்டு தாக்குவதற்கு வந்ததாகத் தகவல் வந்திருக்கிறது. போர் முரசு கொட்டிய தாக தகவல் வந்திருக்கிறது. போர் முரசு (வார் கிரை) கொட்டி, அதுவும் டாம் டாம் மூலம், நாம் போய் சண்டை போட வேண்டும், தாக்க வேண்டு மென்று சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

" On 16th March 1963, two sections of the armed reserve and necessary local police were stationed in the village to ensure proper enforcement of the prohibitory order. They had some force even earlier and strengthened it after the prohibitory order was issued ".

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : வெள்ளைக் கொடியை வீசுவது சம்பந்தமாகத் தான் தடை உத்தரவு போடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அப்படிச் சொல்லவில்லை.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : அப்படியானால், 144-வது பிரிவின் படி தடை உத்தரவு போட்டதன் அடிப்படை நோக்கம் என்ன ? அந்த ஆர்டரை வாசித்தால் நலமாயிருக்கும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆர்டரை வாசிக்க வேண்டிய அவசியமில்லை. வெள்ளைக் கொடி வீசுவதைப் பற்றித் தகராறு இருந்தது. உத்தரவு போட்டார்கள். அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம், அனுமதிக்கப் போவதில்லை என்று ஒரு கட்சியினர் கூறுவதற்கு வந்தார்கள். வெள்ளை வீசுவதைப்பற்றி கோர்ட் உத்தரவு இருக்கிறது. கோர்ட் உத்தரவை மீறுவ தாக இருக்கிறார்கள், ஒருவரையொருவர் தாக்குவதாக இருக்கிறார்கள், அத னால் விபத்துக்கள் ஏற்படும் என்று கருதித் தான் கூட்டம் போடக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இல்லை என்று சொல்லவில்லை. என்னிடம் இருக்கக்கூடிய தகவலைத்தான் எடுத்து சொல்லுவேன். தகவல் இல்லை என்றால் தகவல் இல்லை என்று தான் சொல்லுவேன். நான் முன்பு சொன்னது போல 15-ம் தேதி போலீசார் சமரசப்படுத்தி " தகராறு செய்யக் கூடாது " என்று சொல்லப்பட்டது. அதை இரு சாராரும் ஏற்றுக் கொண்டார்கள். பின் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தடுக்க வேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்ததாகத் தெரிந்தது. ஆகையால் தான் தடை உத்தரவு போட்டார்கள். " கூட்டம் போட வேண்டாம் " என்றுதான் தடை உத்தரவு போட்டார்கள்.

திரு. சா. கணேசன் : கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது " போர் முரசு கொட்டிக்கொண்டு வந்தார்கள் " என்று குறிப்பிட்டார். வேட்டையாடுவதற்காகவோ அல்லது மீன் பிடிப்பதற்காகவோ செல்லுகிற போது அங்கே இருக்கின்ற ஆதி திராவிட சகோதரர்கள் எல்லோரும் உடன் சேர்ந்து செல்லுவார்கள். அவர்கள் அப்படிப் போகிறோம் என்பதை எல்லோருக்கும் தெரிவிப்பதற்காக அம்மாதிரி பறை முதலியவற்றை கொட்டிக்கொண்டு போவது நெடுங்காலமாகத் தொடர்ந்து வருகின்ற சம் பிரதாயம் என்பதையும் அதை போலீசார் திரித்துப் " போர் முரசு " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த நெடுங்காலப் பழக்கம், எனக்கும் கொஞ்சம் தெரியும். போலீசார் அதை திரித்துக் கூறவில்லை. ஆனால் அங்கே அவர்கள் முரசு கொட்டிக்கொண்டுபோய் தாக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு டாம்டாம் அடித்துக்கொண்டு போனார்கள். அதனால் போர் முரசு என்று கூறுவது சரியான வருணனை என்று சொல்ல வேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, கூட்டம் போடக்கூடாது என்பதற்காக 144-வது உத்தரவு போடப்பட்டது என்று சொல்லப்படுகிறது. மீன் பிடிக்க மக்கள் கூடத்தான் செய்வார்கள். அந்த நிலையில் மீன் பிடிக்கும் நிகழ்ச்சியை 144 தடை உத்தரவு தடுத்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூட்டம் போடக்கூடாது என்றால் அன்று மீன் பிடிப்பதும் கூடாது என்று தான் அர்த்தம்.

திரு. மு. கருணாநிதி : போலீசாரைத் தடுப்பதற்கான ஆயத்தமுடன் மக்கள் வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. எட்டு வயது சிறுவன் ஒருவன் இறந்திருக்கிறான். அந்தச் சிறுவனும் அந்தக் கூட்டத்துடன் போர் முரசுக் கொட்டிக்கொண்டு வந்தானா என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசாரை தடுப்பதற்காக வந் தார்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்களே ஒருவருக்கு ஒருவர் எதிர்த்து வந்தார்கள். அவர்களை போலீசார் தடுத்ததால் போலீசார் மீது அது திரும்பியது. சிறுவன் ஒருவன் இறந்தான் என்று சொல்லுகிறார். குழந்தை யாரும் இறக்கவில்லை என்று தான் சொன்னேன்.

' Under Section 144, Criminal Procedure Code, restraining the interested persons in Mela Urappanur from interfering with the right conferred on Sri Velusamy Thevar of Keela Urappanur by the Sub-Court and to prevent them from causing any disturbances.'

தாலுகா மாஜிஸ்ட்ரேட் அதற்கு மேல் தடை உத்தரவு போட்டார்.

திரு. கே. ஏ. மதியழகன் : வெள்ளை வீசும் உரிமை என்று சொல்லப் படுகின்ற உரிமை கடந்த தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற கனம் தினகரசாமி தேவர் அவருடைய குடும்பத்தினரின் உரிமைதானா? அதனால்தான் இந்த விவகாரங்கள் இவ்வளவு கடுமையாக ஏற்பட் டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதல் பகுதியை நான் ஏற்றுக் கொள்வேன். இரண்டாவது பகுதியை ஏற்றுக்கொள்ள முடியாது. "அதனுல்தான்" என்பதை ஒரு காலமும் ஏற்றுக்கொள்ள முடியாது. கனம் அங்கத்தினர் இப்படித்தான் எப்பொழுதும் குத்தலாக பேசுவது உண்டு. "அதனுல் தான்" என்ருல் என்ன எனபது புரியவில்லை.

நானே விவரங்கள் கூறுகிறேன். 1952 தேர்தலில் அவருக்கு அந்த உரிமை இருந்தது. அது அவருடைய குடும்பத்தினுடைய உரிமை. அப்பொழுதே அவருக்கு இப்படி வெள்ளை வீசக்கூடியதான உரிமை இருந்தது. ஆனுல் அது தேர்தல் பிரச்னையில் வரவில்லை. அதற்கு முன்னுல் இருந்திருப்பார். ஆனுல் கனம் அங்கத்தினருக்கு அவ்வளவு விவரம் தெரிந்திருக்காது. அதனுல் தான் நான் சொல்லுகிறேன். 1952-வது தேர்தலில் தன்னுடைய உரிமையைக் கொடுத்து விட்டு வோட்டு வாங்குவதற்காக நின்ருர் என்று கனம் அங்கத்தினர் ஒரு மோட்டிவை கற்பிக்கலாம். அம்மாதிரி நான் சொல்லமாட்டேன். அப்படி அவர் தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுக்கிறேன் என்று சொன்னதாக வைத்துக்கொண்டாலும்கூட, அவர் தோல்வி அடைந்தார். ஆனுல் பின்னுல் கோர்ட்டுக்கு அவருடைய குடும்பம் சென்றது. அப்பொழுது மற்ரெருவர் அவருடைய பங்காளி ஒருவர் (தம்பி என்று நினைக்கிறேன்) வேலுசாமி தேவர் கோர்ட்டுக்குப் போனுர். அந்த உரிமை அவருக்குக் கிடைத்தது. ஒருவர் தன்னுடைய பரம்பரை பாத்தியதையை அடியோடு விட்டு விட முடியாது. அவர் விட்டு விட்டாலும் "எனக்கு பாத்தியதை உண்டு" என்று மற்ரெருவர் வாதாடலாம். அப்படியே அவர் வாதாடினுர். அதை ஜில்லா முன்சீப் ஏற்றுக் கொண்டார். பின்னுல் அதை சப் ஜட்ஜு ஊர்ஜிதம் செய்தார். அந்த முறையில் பண்ண வேண்டும் என்றுதான் வேலுசாமி தேவர் வந்தார். போலீசாரைப் பொறுத்தமட்டில் அமைதியை நிலைநாட்டி இருக்கிருர்களே தவிர போலீசார் வேலுசாமி தேவருக்கோ அல்லது தினகரசாமி தேவருக்கோ உதவி செய்ய வேண்டும் என்பது அல்ல. அதில் போலீசாருக்கு ஒரு சங்கடம் இருக்கிறது. கோர்ட் உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவின்படி தான் அவர்கள் நடந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. உரிமைக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியவர்களும் போலீஸ்காரர்கள்தான்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இந்தத் துப்பாக்கி பிரயோகத்தில் கனம் அமைச்சர் அவர்களுடைய நோக்கத்தையும் வைத்துக் கொண்டு போலீசார் பழி உணர்ச்சியுடன் நடந்து கொண்டார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் மறுக்கிருர்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது கனம் அங்கத்தினருடைய பாணி என்பதை இந்த மன்றம் நன்ருக உணர்ந்திருக்கிறது. கனம் அங்கத்தினருடைய பாணி எல்லோருக்கும் தெரியும் (**திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்களுக்கும் கனம் அமைச்சருக்கும் ஒரு வித பாணி இருக்கிறது).

MR. SPEAKER : Let the Hon. Minister answer the question.

SRI K. A. MATHIALAGAN : Sir, he is not answering my question.

MR. SPEAKER : But the hon. Member should not interfere. When the hon. Member has put the question and the Hon. Minister is answering it, he should have patience to hear the answer. Also when he put the question most touchingly because of political, motive, the whole thing is aggravated, and he must have the patience to hear the answer. He cannot get up immediately because the Hon. Minister says something.

SRI K. A. MATHIALAGAN : I submit to your ruling, Sir.

கனம திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறியதுபோல் போலீசாரைப் பொறுத்தமட்டில் அரசியல் வகையிலோ அல்லது வேறு வகையிலோ ஒரு சாராருக்கு சலுகை காட்ட வேண்டும் என்ற எண்ணம் அடியோடு கிடையாது. போலீஸ்காரர்களுடைய லட்சியம் எல்லாம் அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்பதுதான். கோர்ட் உத்தரவு செய்திருப்பதால் அந்த உத்தரவுக்கு விரோதமாக நடந்து கொள்ளக் கூடாது என்பது தான்.

திரு. மு. கருணுநிதி : நீதி மன்றம் உரிமையை வழங்கி இருந்தாலும், பரம்பரை பாத்தியதையைக் கூறிக்கொண்டு வெள்ளை வீசுவது என்ற பயங்கரமான காட்டுராஜா முறை இருப்பதை, இந்த அரசாங்கம் இப்படிப் பட்ட கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காகவாவது, அதைத் தடுக்க முன் வருவார்களா· என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னைப் பொறுத்த மட்டிலும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிற கருத்தை நான் முற்றிலும் ஏற்றுக் கொள்ளுகிறேன். அதை நான் திருப்பிச் சொன்னுல் கோர்ட் உத்தரவை அவமதிப்பதாகும். அதை தவிர்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனுல் அரசாங்கமும் கோர்ட் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள்தான்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : கனம் அமைச்சர் அவர்கள் முதலில் சொல்லும்போது 144 உத்தரவு போட்டது யாருமே கூட்டம் போடாமல் தடுப்பதற்குத் தான் என்று சொன்னுர். இப்பொழுது உத்தரவை வாசிக்கும் சந்தர்ப்பத்தில் மீன் பிடிப்பதை தடுப்பதற்குத்தான் தடை உத்தரவு போடப்பட்டது என்று சொன்னுர். எதை உறுதியாக எடுத்துக்கொள்வது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோர்ட்டார் உத்தரவு இருந்ததால் அந்த உத்தரவுக்கு மாறுபட்ட வகையில் 144 உத்தரவு கூட போடுவதற்கு இல்லை. போலீசாருடைய உத்தரவு அந்த இடத்தை விட்டு எல்லோரும் அகல வேண்டும் என்பது தான். ஆனுல் கோர்ட் உத்தரவை மீறுவதற்கு உத்தரவு போட்டால் அது தவருக இருக்கும். யாராக இருந்தாலும் அவர்கள் கூட்டம் போடக் கூடாது என்றுதான் உத்தரவு போட்டார்கள்.

திரு. க. ர. நல்லசிவம் : துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததற்குப் பின்னுல், 9-00
அதிலே காயம் பட்டவர்களில் பல பேரைப் போலீசார் கைது a.m.
செய்திருப்பதாகத் தகவல் வருகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தினுல் காயம் பட்டவர்கள் அத்தனை பேரும் குற்றம் செய்தவர்களாகக் கணக்கு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "எல்லோரையும் கைது செய்தார்கள்" என்று சொல்வதற்கில்லை. யார் யார் குற்றம் செய்திருக்கலாம் என்ற சந்தேகம் இருந்ததோ, அவர்களைக் கைது செய்திருக்கிருர்கள். இப்பொழுது ரெவினியூ டிவிஷினல் ஆபீசர் விசாரணை செய்கிருர். அந்த விசாரணை முடிந்த பிறகுதான், போலீசார் ஏதாவது தவறுதல் செய்து இருக்கிருர்களா என்பது புலப்படும்.

திரு. கே. மூக்கையா தேவர் : மேல் உரப்பனூரில் இம் மாதம் 17-ந் தேதியன்று காலை ஐந்து மணிக்கே வண்டியில் 'மைக்' கட்டி, ஊர் ஊராகப் போய், "அவசியம் மீன் பிடிக்கத்தான் போகவேண்டும்" என்று வற்புறுத்தப் பட்டதா ? அதற்கு மாருக ஜனங்களெல்லாம், எங்களைக் கலக்காமல் வெள்ளை வேட்டி காட்ட நீங்கள் ஏற்பாடு செய்துவிட்டீர்கள் என்று நேற்றே உங்களிடம் சொன்னேம், "நாங்கள் வரமுடியாது" என்று சொல்லியும், போலிசார் அவர்களை வற்புறுத்தி, லதி சார்ஜ் செய்துதான் ஊரை விட்டே விரட்டியிருக்கிருர்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 17-ந் தேதி காலையில் சொமங்கலில் லதி சார்ஜ் செய்தார்கள் என்று சொல்வது முழுத் தவறு.

திரு. இரா. நெடுஞ்செழியன் : போலீஸ் படையினர் போயிருந்ததாகக் கூறப்படுகிறது. இரண்டு "செக்ஷன்கள்" என்றால் போலீஸ்காரர்கள் எத்தனை பேர் என்கிற விவரம் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எண்ணிக்கை விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. ஜில்லாவில் சாதாரண போலீஸ் இருக்கிறது. ரிசர்வ் போலீஸ் இருக்கிறது. அதற்கு முன்பே எவ்வளவு போலீஸ் படையினரைக் கொண்டுபோக வேண்டுமோ அவ்வளவு கொண்டுபோயிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : சம்பவம் நடந்த அன்று, அந்த நிகழ்ச்சி நடந்த இடத்திலிருந்த மேலதிகாரிகள் யார் யார் என்பதைக் கூற இயலுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாலுக்கா மாஜிஸ்ட்ரேட், டெபுடி சூபரின்டெண்டெண்ட் ஆஃப் போலீஸ், இன்ஸ்பெக்டர், மற்ற அதிகாரிகள் எல்லாம் இருந்தார்கள்.

திரு. கே. மூக்கையா தேவர் : கோர்ட்டுத் தீர்ப்பின்படி வெள்ளை வேட்டி காட்டும் உரிமையை நிறைவேற்றவேண்டும். போலீசார் முயற்சி செய்யவேண்டியது—மீன் பிடிக்கும் ஆட்கள் அத்தனை பேரும் கிராமங்களிலிருந்து வந்தால்தான் மீன் பிடிக்க அடையாளம் காட்டுகிற மரியாதையைக் காப்பாற்ற முடியும். போலீசார் அவர்களை வரவொட்டாமல் செய்தால் எப்படி மரியாதையைக் காப்பாற்றுகிறதை நிறைவேற்றியதாகும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோர்ட்டிலே ஒரு சாரார் அல்லது ஒருவர் உத்தரவு வாங்கியிருக்கிறார். அந்த உத்தரவின்படி நடத்துவதற்கு முற்படுகிறார். அதை ஆட்சேபிக்கிற யாராயிருந்தாலும் "கோர்ட் உத்தரவு இருக்கிறது, ஆட்சேபிப்பது கூடாது" என்ற வகையில் போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். இதற்கு முன்பு, வீடு வீடாகப் போனார்கள் என்று சொன்னது தவறு.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : ஸ்தலத்தில் இரண்டு கண்டின்ஜெண்ட் போலீஸ் இருந்தது என்றால், மொத்த எண்ணிக்கையில் எத்தனை போலீஸ் காரர்கள் இருந்தார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுதான் நான் முன்பு சொன்னது. "நம்பர்" என்னிடம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஒவ்வொரு உயிரும் புனிதமானது. எல்லா உயிர்களையும் காப்பாற்றுவதற்கு இந்த அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது. அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினால் 17-ந் தேதி காலை மூன்று பேர் மாண்டிருக்கிறார்கள். பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நம்முடைய அமைச்சரவைக்கு இருக்க, 21-ந் தேதி காலை வரையில் இவ்வளவு பெரிய முக்கியமான பாதுகாக்கவேண்டிய விஷயத்தில் அமைச்சர் அவர்கள் இங்கே இந்த விவகாரங்களைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கலாம். எங்களது கேள்விகளுக்குப்பின்தான் இதைப்பற்றி விவரம் சொல்கிறது என்று இருக்கிற நிலையில் இது பொறுப்பை மீறியதாகாதா ? அவர்களுக்கிருக்கும் கடமையைச் சரியான முறையில் இந்த மன்றத்திற்குச் செலுத்துவதற்கு அவர்கள் கடமைப் பட்டிருக்கவில்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொரு உயிரும் புனிதமானது என்பதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எல்லா உயிர்களையும் பாதுகாக்கவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எவ்வளவு தான் கவலையோடு கவனித்தாலும், 100 உயிர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்குச் சில சமயங்களில் தவிர்க்கக்கூடாத வகையில் ஒன்றிரண்டு உயிர்கள் தியாகம் செய்யவேண்டியிருக்கின்றன. ஆனால், இதைக்கூடத் தவிர்ப்பதற்கு ஆராய்ச்சியெல்லாம் நடத்தப்படுகிறது. எல்லா நாட்டிலும் ஆராய்ச்சி நடக்கிறது. நம்முடைய நாட்டிலும் மத்திய அரசாங்கமும், இந்த அரசாங்கமும் ஆராய்ச்சி செய்துகொண்டு வருகிறது. 1,000 1,500 பேர்கள் வேல்கம்பு, அரிவாள், கல் எடுத்துக்கொண்டு, புறாத்தரை

முறையில் இறங்கினாலும், ஒரு உயிர்கூட பலி ஏற்படாமல் தவிர்ப்பதற்கு, ஒரு உயிரைக்கூட சுடாமல் தவிர்க்கக் கூடுமா என்று மேலும் ஆராய்ச்சியில் இருக்கிறது. இன்னும் முடிவு ஏற்படவில்லை. ஆனால், இது விவரங்களை இந்த அரசாங்கம் எப்பொழுது சொல்வது என்கிற பொறுப்பைப்பற்றி கனம் அங்கத்தினர் எந்த அபிப்பிராயம் வேண்டுமானாலும் கொள்ளலாம். ஆனால், இந்த அரசாங்கத்திற்குப் பொறுப்புணர்ச்சி இருக்கிறது. எப்படி, இந்த மன்றத்தில், எந்த எந்த வகையில், எப்பொழுதெல்லாம் தகவல் கொடுக்கவேண்டும் என்று தெரிந்தேதான் மந்திரிசபை இயங்குகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகி இறந்தவர்களின் தாய்மார்களுடைய முதுகிலும், மணி என்பவருடைய முதுகிலும் குண்டு பாய்ந்தது என்பது உண்மையா ? அவர்கள் ஓடுகின்ற சமயத்தில் துப்பாக்கியைக் கொண்டு துரத்திச் சென்று சுட்டார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது உண்மை அல்ல.

திரு. எஸ். மாதவன் : மூன்று பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஒன்பது பேர் காயமுற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அரசியல் காரணம் இருக்கிறது என்று கருத்து இருப்பதால், மாவட்ட நீதிபதியை நியமித்து விசாரிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்திற்கு அவ்வாறு உத்தேசம் இல்லை. அதற்கு அவசியம் உண்டு என்று அரசாங்கம் கருதவில்லை.

திரு. மு. கருணாநிதி : துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டவர்களுடைய சவங்களை உரியவர்களிடத்தில் போலீசார் ஒப்படைத்துவிட்டார்களா ? அல்லது அவர்களே இறுதிக் கடன்களைச் செய்து முடித்துவிட்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்க்வெஸ்ட் விசாரணை செய்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : நெருக்கடியான சமயத்தில் இம்மாதிரியான ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருப்பதால், இதை விசாரணை செய்வதற்கு வேறு உத்தியோகச்சார்பற்றவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து, விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய விசாரணை செய்வதற்கு அவசியம் இல்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இதிலே எத்தனை போலிஸ்காரர்கள் அடிபட்டார்கள் என்று சொல்லமுடியுமா ? ஹெட்கான்ஸ்டபிள் ஒருவருக்குத்தான் அடி என்று சொல்லப்பட்டது. அவ்வளவுதானா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரங்களெல்லாம் என்னிடம் இல்லை. அதெல்லாம் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் விசாரணைக்குப் பிறகு தான் விவரங்கள் தெரியும்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : கலவரத்திற்குப் பிறகு ஐ. ஜி. ஸ்தலத்திற்குப் போனாரா ? போய், கவர்ன்மெண்டுக்கு அறிக்கை சமர்ப்பித்தாரா ? அந்த அறிக்கை சபை முன் வைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஐ. ஜி. போய் வந்ததாகத் தெரிகிறது. ஐ. ஜி. ஒன்றும் அறிக்கை அனுப்பவேண்டியதில்லை. ஸ்தலத்திலே இருக்கும் அதிகாரிகள்—கலெக்டர், டி. எஸ். பி.—விவரங்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

பத்திரிகையில் வந்தது. மதுரை போலீஸ் சூபரின்டென்டெண்ட் திரு. செந்தாமரை சொல்லியிருக்கிறார். அவர்களையாவது சட்ட மன்ற உறுப்பினர்கள் போய்ப் பார்க்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் சபாநாயகர் : எதற்காக ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களைப் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : காயம்பட்டவர்கள் மதுரை ஆஸ்பத்திரியில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களைப் பார்க்க அனுமதிக்கப்படுமா ?

கனம் சபாநாயகர் : சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

கனம் சபாநாயகர் : குறுகிய கால அறிவிப்புக் கேள்வி முடிவடைகிறது. 313–ஆம் எண்ணுள்ள கேள்வி இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

மதுவிலக்கு

* 313 **கேள்வி—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுவிலக்கு திட்டத்தை அமுல் நடத்த இப்போதைய தண்டனை காலத்தை மேலும் கடுமையாக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No.

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. சி. ம. அம்பிகாபதி : மதுபானம் உற்பத்தி செய்பவர்களுக்கும், மது அருந்துபவர்களுக்கும் தண்டனை அளவு குறைவாக இருக்கும் காரணத்தால், மேலும் அதே தொழிலில் ஈடுபடக்கூடிய நிலை இருக்கிறது என்பதால், அரசாங்கம் அதை உயர்த்த முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது போதுமானதண்டனை விதிக்கப்படுகிறது. அரசாங்கம் எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுத்து, திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதையும், மதுபானம் தயாரிப்பதையும் தடுக்கமுடியுமோ அந்த வகையில் காரியங்கள் செய்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் தண்டனை அளவு போதும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : மது விலக்குக் குற்றத்திற்காகக் கொடுக்கப்படும் தண்டனை மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. உதாரணமாக வடாற்காடு மாவட்டத்தில் வெறும் அபராதம் போடுகிறார்கள். சேலத்திலே சிறைத்தண்டனை கொடுக்கிறார்கள். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அது ஆங்காங்கு தீர்ப்பு சொல்கிற நீதிபதியைப் பொறுத்தது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சாராயம் காய்ச்சுவதை ஒரு தொழிலாகக் கொண்டு அதிலிருந்து அதிக வருவாய் பெறுவதால், திரும்பத் திரும்ப மதுவிலக்குக் குற்றங்களைச் செய்கிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு அதிக அபராதமும் சிறைத்தண்டனையும் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது அதிக அபராதமும் தண்டனையும் கொடுக்கத்தான் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. என். மகாலிங்கம் : மதுவிலக்குச் சட்டம் சுமார் பதினைறு ஆண்டுகளாக பூரணமாக அமலில் இருந்து வருகிறது. அதைப்பற்றி பல அபிப்பிராய பேதங்கள் இருப்பதனால் சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட

ஒரு கமிட்டி நியமித்து அச்சட்டம் எவ்வாறு அமல் நடத்தப்படுகிறது, எந்த அளவு வெற்றி பெற்றுள்ளது, எந்த அளவு தோல்வியுற்றுள்ளது என்பதை எல்லாம் விசாரணை நடத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே ஒரு ப்ரொஹிபிஷன் கமிட்டி என்று நியமித்தோம். அவர்கள் யோசனைப்படியே தான் இப்போது அந்தச் சட்டம் தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது. குற்றம் செய்பவர்களையும் கண்டுபிடித்துத் தண்டிக்க தக்க வழி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது மேலும் ஒரு கமிட்டி நியமிப்பது அவசியம் என்று அரசாங்கம் கருதவில்லை.

SRI N. RAMACHANDRA REDDY : May I know, Sir, whether it is a fact that only poor people are being harassed and punished under prohibition offences, whereas the rich people, even though they are boozing without permits, they are not apprehended ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏழைகள் குடித்தாலும், பணக்காரர்கள் குடித்தாலும் குடித்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி : வேறு மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிகப் பெரியவர்களும் கூட இந்த மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கருதுகிறார்களே. அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டு இத்திட்டத்தைக் கைவிட்டுவிடுவார்களா ? அல்லது கைவிடமாட்டார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : யார் சொன்னாலும் இத்திட்டம் கைவிடப்படாது.

டிரைபல் பிளாக்குகள்

* 314. **கேள்வி—திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் டிரைபல் பிளாக்குகள் (Tribal Blocks) ஏற்படுத்துவதைப் பற்றி மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு ஏதேனும் செய்துள்ளனரா ?

(இ) ஆம் என்றால், எங்கெங்கு ஆரம்பிப்பதற்கு உத்தேசம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம், செய்துள்ளனர்.

(இ) சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏற்காடு, கொல்லிமலை வட்டாரங்களில்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) In Yercaud and Kolli Hills Blocks of Salem district.

திரு. எஸ். ஆறுமுகம் : வடாற்காடு ஜில்லாவில் உள்ள ஜவ்வாது மலைகளில் உள்ள கிராமங்களைச் சேர்த்து ஒரு டிரைபல் ப்ளாக்காக ஏற்படுத்த முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கத்தின் திட்டப்படி மலை சாதியினர்களுக்கு என்று ஒரு தனிக் குழு அமைக்கவேண்டுமென்றால்

" Scheduled areas in the basis of a total population of 25,000 tribal population and an area of 200 square miles per block, and for non-scheduled areas with a tribal population of 55 per cent. and more. "

எந்த அளவில் ஜனத்தொகை இருக்கவேண்டும். இதன் படி பார்த்தால் வேறு எந்த மாவட்டத்திலும் மலைசாதியினர்களுக்கு என்று ப்ளாக் அமைக்கக்கூடிய ஜனத்தொகை இல்லை. சேலம் மாவட்டத்தில் மட்டும் ஏற்காடு கொல்லி மலைப் பிராந்தியத்தில் இவ்வாறு ப்ளாக் அமைக்க இருக்கிறோம்.

திரு. து. ப. அழகமுத்து : பச்சை மலையில் ஜனத்தொகை அதிகமாக இருப்பதனால் அதை ஒரு ப்ளாக்காக ஏற்படுத்த முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேலம் மாவட்டத்தைத் தவிர மற்ற எந்த இடத்திலும் மலைசாதியினருக்கு என்று ப்ளாக் ஏற்படுத்தக் கூடிய ஜனத்தொகை அந்தச் சமூகத்தாரிடம் இல்லை.

திரு. ஜி. டி. பெருமாள் ராஜு : தாளவாடி மலைப் பிரதேசத்திலுள்ள மலைசாதியினருக்கு என்று தனியாக டிரைபல் ப்ளாக் ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு நம் மாநில சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்காரின் திட்டத்தின்படி இந்த மாநிலத்தில் சேலத்தில்தான் ப்ளாக் ஏற்படுத்த முடிவு செய்யப் பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் எதிலும் அந்த அளவு ஜனத் தொகை மலைசாதியினர் கிடையாது.

திரு. ஜே. மாதா கவுடர் : இப்போது இருக்கிற முறைப்படி வேறு எந்த இடத்திலும் ட்ரைபல் ப்ளாக் என்று ஏற்படுத்த ஜனத்தொகை இல்லை என்று இருப்பதனால் இந்த ஜனத்தொகை அளவைக் குறைக்க மத்திய அரசாங்கத்திற்கு நம் மாநில சர்க்கார் சிபார்சு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நீலகிரியைப் பொறுத்த வரையில் பன்னிரண்டாயிரம் பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் ப்ளாக் ஏற்படுத்த முடியவில்லையென்றாலும் ஏற்கனவே வட்டார திட்டங்களின் மூலம் கவனம் செலுத்தப்படுகிறது.

போலிஸ் ஸ்டேஷன் வல்லம் (செஞ்சி தாலூகா)

***315 கேள்வி—திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா வல்லம் கிராமத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் திறக்க உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் எப்போது திறக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

பஞ்சாயத்து யூனியன்கள்

316. கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இப்போது தாலூகாவுக்கு மூன்று என்ற விகிதத்தில் இருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள், தாலூகாவுக்கு இரண்டு அல்லது ஒன்று என்ற விகிதப்படி குறைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to reduce the number of Panchayat Unions.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன்களை அதிகப் படுத்தினால் செலவு அதிகமாகும். கனம் அங்கத்தினர் கருத்து நிறை வேற்றப்படவேண்டுமென்றால் பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கை இப்படியேதான் இருக்க வேண்டும்.

திரு. சி. ம. அம்பிகாபதி : தாலூகாவுக்கு மூன்று ப்ளாக் என்று இருப்பதை ரேஞ்சுக்கு ஒரு ப்ளாக் என்று ஏற்படுத்த முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இருக்கின்ற எண்ணிக்கையை அதிகப் படுத்துவதற்கில்லை.

புலவர் கா. கோவிந்தன் : பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கையை குறைக்கவேண்டுமென்பது என் கேள்வி. அதிகப் படுத்தவேண்டுமென்று கேட்பதாக நினைத்து கனம் அமைச்சர் பதில் சொல்வதாகத் தெரிகிறது. இவற்றைக் குறைக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டம் சரியாக நடைபெற வேண்டுமென்றால் இதைக் குறைக்கவும் முடியாது. அதிகப்படுத்தவும் வேண்டாம். ஏதாவது குறிப்பிட்ட மாவட்டம் சம்பந்தப்பட்டவரை என்றால் அவ்வப்போது அது பரிசீலனை செய்யப்படும். அதுவும் பஞ்சாயத்து பொது தேர்தல் வருகிற காலத்தில் ஜனவிகிதாசார கணக்கு எடுக்கப்படும். அப் போது இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

அரசாங்க சைக்கிள் தொழிற்சாலை (தஞ்சாவூர்)

*** 318 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சையில் உள்ள அரசாங்க சைக்கிள் தொழிற்சாலையின் மூல தனமும் உற்பத்தி இலக்கும் என்ன ?

(இ) 1963–ம் ஆண்டு ஜனவரி மாதம் 1–ந் தேதி வரை எத்தனை சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1. (*a*) The capital invested in the Cycle Assembly Unit, Thanjavur, is as follows :—

(1) Land and Buildings, Rs. 1,27,426.

(2) Machinery and Equipment, Rs. 3,15,498.

(*b*) *Targeted production*.—The ultimate target is to assemble 5,000 cycles per annum when the unit goes into full production. During the year 1962–63 it is expected to assemble 1,000 cycles. The production will be increased to 3,000 cycles per annum during 1963–64.

2. The number of bicycles assembled so far upto 1st January 1963 is 372.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஏறக்குறைய 5 லட்சம் ரூபாய் முதலீடு செய்து இந்தத் தொழிலை ஆரம்பித்திருக்கிறோம். ஆனால் சென்ற ஆண்டு க்கு 300 சொச்சம் சைக்கிள் தான் உற்பத்தியாகியிருக்கிறதென்றால் இதில் என்ன குறைபாடு, எங்கே இருக்கிறது ? ஐந்தாயிரம் சைக்கிள் உற்பத்தி செய்யவேண்டுமென்பது நம்முடைய இலக்காக இருந்தும் இவ்வளவு குறைவாக உற்பத்தி செய்யப்பட்டிருப்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விளக்கம் கொடுக்கத் தேவையே இல்லை. எந்தத் தொழிலாக இருந்தாலும் அப்படித்தான் இருக்கும். இயந்திரங்கள் எல்லாம் கொண்டு வந்து வைத்தவுடன், அவ்வளவு

லேயே போட்ட டார்ஜட்படி எந்தத் தொழிற்சாலையிலும் உற்பத்தி நடக்காது. போட்ட இலக்குப்படி உற்பத்தி தொடங்க குறைந்தது மூன்றாண்டாவது ஆகும்.

திரு. கோ. சி. மணி : இந்தத் தொழிற்சாலையில் சைக்கிள் சம்பந்தமான எல்லா உறுப்புகளும் உற்பத்தி செய்யப்படுகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சைக்கிள் அசெம்பிளி யூனிட் தான். சில பாகங்களை மட்டும் இங்கேயே தயார் செய்துகொள்கிறார்கள். வேறு சில பாகங்களை வெளியிடங்களில் இருந்து கொண்டு வருகிறார்கள். இவ்வாறு செய்வதுதான் இத்தொழில் கட்டுப்படியாகக் கூடிய நிலைமையை உண்டாக்கும்.

திரு. ஆ. கு. சுப்பையா : வருஷம் ஒன்றுக்கு எத்தனை சைக்கிள் உற்பத்தியாகக் கூடும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவ்வாண்டு 375 சைக்கிள் உற்பத்தியாகியிருக்கிறது. அடுத்த ஆண்டு கணக்கு அடுத்த வருஷத்தில் வரும்.

திரு. கோ. சி. மணி : ஒரு சைக்கிள் அடக்க விலை என்ன ?

கனம திரு. ஆர். வெங்கட்டராமன் : வெளியில் சொல்லக் கூடாது. வெளியில் விற்கிற விலையைவிட 25 ரூபாய் குறைவானது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : அரசாங்கம் இங்கே அதிகமாக சைக்கிள் உற்பத்தி செய்வதற்கும், உற்பத்தியானதை விற்பனை செய்வதற்கும் என்ன செய்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உற்பத்தி முழு அளவுக்கு வந்த பிறகு கவனிக்கப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி : இப்போது சைக்கிளுடைய பாகங்கள் வெளியில் இருந்து தருவிக்கப்பட்டு இங்கே அசம்பிள் ஆவதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கேயே அந்த பாகங்களையும் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அம்மாதிரி செய்வது கட்டுபடியாகாது. சில பாகங்களை லார்ஜ் இண்டஸ்ட்ரியில் உற்பத்தி செய்து இது போன்ற ஸ்மால் இண்டஸ்ட்ரியில் அசம்பிள் செய்வதுதான் தொழில் கட்டுபடியாகக் கூடிய நிலைமையில் செயல்படுவதற்கு உதவும்.

திரு. மு. கருணாநிதி : ஒரு சைக்கிளின் அடக்க விலையைச் சொல்வதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லாபமாவது ஒரு சைக்கிளுக்கு எவ்வளவு என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் முன்பே சொன்னேன். வெளியில் விற்கிற விலையைக்காட்டிலும் 25 ரூபாய் குறைவானது அடக்க விலை என்று.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அந்தத் தொழிற்சாலையில் ஆண்களுக்கான சைக்கிள் மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுகிறதா ? லேடீஸ் சைக்கிளும் உற்பத்தி செய்யப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேவை ஏற்பட்டால் லேடீஸ் சைக்கிளும் செய்யப்படும்.

137884

திரு. எம். எஸ். மணி : இங்கே உற்பத்தியாகிற சைக்கிள்களுக்கு விளம்பரம் செய்வதற்காக ஒவ்வொரு சட்டசபை உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு சைக்கிள் இனாமாக வழங்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நாளைக்கு இந்த யூனிட் நஷ்டத்தில் வேலை செய்கிறதாக சொல்லாமல் இருந்தால் அப்படிக் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தாலும் அது சலுகை என்ற குற்றமாக வரக்கூடும்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, சைக்கிள்களுடைய விலை 25 ரூபாய் குறைவு என்று சொன்னால், நாம் செய்கின்ற நேரத்திலே மற்ற இடங்களில் இருப்பதைவிட குறைவா, அல்லது வாங்குகின்ற மக்களுக்கு 25 ரூபாய் குறைவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : "செல்லிங் பிரைசிலே" 25 ரூபாய் குறைவு.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இவ்விதமான சிறு தொழில்களை ஆரம்பிக்கும்போது பின் தங்கிய நீலகிரி மாவட்டத்தில் இத்தகைய தொழில்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றி டிமாண்டில் பேசுங்கள்.

Alleged beating of perason (Vyasarpadi Police Station)

* 319 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received any complaint from any person alleging severe beating and ill-treatment by the Vyasarpadi Police on 26th January 1963; and

(b) if so, the action take on it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A writ petition was filed in the Madras High Court on behalf of one David of Vyasarpadi, Madras City, alleging severe beating by the Vyasarpadi Police Officials while he was in their custody, seeking an order of release from police custody under Section 391 (1) Cr.P.C. The High Court, while disposing of the writ petition, directed the Chief Presidency Magistrate to make an enquiry into the incident. He has since taken up the enquiry, which is now in progress. Apart from this, no representation was received by the Government on the incident.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத் தீர்ப்பிலே, "டேவிட் என்ற நபரை ரிமாண்ட் செய்த கமிஷனர் சட்டபடி நடக்கவில்லை" என்று கூறப்பட்டிருப்பது உண்மையா ? அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தீர்ப்பின்படி சீப் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடத்துகிறார். விசாரணை முடிந்த பிறகு மேலும் விவரங்கள் கூற முடியும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞர். ஹைகோர்ட்டில் தீர்ப்பு கூறப்பட்டது. அவர்கள் தெரிவித்த கருத்துப்படி சிப் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கிறார். அந்த விசாரணை முடிந்த பிறகு மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முந்திரித் தொழிற்சாலை (விருத்தாசலம்)

* 320 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலத்தில் முந்திரி தொழிற்சாலை ஒன்று அமைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கம் நிறுவும் உத்தேசம் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை ஜில்லாவில் முந்திரிச் சாகுபடி அதிகமாக இருக்கும் காரணத்தால் அங்கு ஒரு முந்திரி தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முந்திரித் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆலோசனை இல்லை.

Additional Sub-Court, Erode

* 321 *Q.*—SRIMATHI PARVATHI ARJUNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have been consulted by the High Court for opening an Additional Sub-Court at Erode in view of large volume of work there;

(*b*) if so, what advice has been given;

(*c*) whether the Government have received any representation from Erode Bar to open additional Sub-Court to cope up with the large volume of work at Erode : and

(*d*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

(*c*) & (*d*) Yes. A representation, dated 14th February 1963 from the Bar Association, Erode, has since been received. The High Court has been consulted in the matter, and its remarks are awaited.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் ஒரு கோர்ட் இருந்தது. இப்போது ராணிப்பேட்டைக்குச் சென்று வரவேண்டியிருக்கிறது. அதை மாற்றியமைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளை ஏற்படுத்துவதுபற்றியும், மாற்றுவது பற்றியும் ஹைகோர்ட்டுடன் ஆலோசனை செய்து அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. மு. பொ. வடிவேலு : வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் ஒரு சப்-கோர்ட் வைக்க ஹைகோர்ட் சிபாரிசு செய்திருக்கிறது என்று அறிகிறேன். அரசாங்கம் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறதா ?

இருக்கின்ற கோர்ட்டை வேறு இடத்திற்கு மாற்றவேண்டுமென்று சொன்னால் ஹைகோர்ட்டுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. க. ர. நல்லசிவம் : கோயம்புத்தூர் ஜில்லா பொதுவாக இரண்டாகப் பிரிக்கப்படக் கூடிய அளவுக்கு பெரிதாக இருக்கிறது. ஈரோட்டைப் பொறுத்தவரை ஜில்லா அளவுக்கு வேலை நடந்து வருவதன் காரணமாக கோர்ட்டுக்கு மிக அதிகமாக வேலை இருப்பதால், அங்கு ஒரு கோர்ட் ஏற்படுத்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சப்-கோர்ட் ஈரோட்டில் இருக்கிறது. இப்போதுள்ள நெருக்கடி நிலைமையில் இன்னொரு சப்-கோர்ட் வேண்டாமென்பதை ஹைகோர்ட் கூட ஏற்றுக் கொண்டது.

திரு. எஸ். முருகையன் : வட ஆற்காடு ஜில்லாவில் வேலூர் நகரத்தில் மூன்று சப்-கோர்ட்டுகள் இருக்கின்றன. ஒரு சப்-கோர்ட்டை திருப்பத்தூருக்கு மாற்றவேண்டுமென்று வேண்டுகோள் அனுப்பப்பட்டிருக்கிறது. திருப்பத்தூரில் அதற்கான கட்டடங்கள் எல்லாம் இருக்கின்றன. அரசாங்கம் அதை கவனிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்றுக்கு மேல் ஒரு ஸ்தலத்தில் சப்-கோர்ட் இருந்தால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வசதி இருந்தால் அது கவனிக்கப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்த கருத்து கூட அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஹைகோர்ட்டைக் கலந்தாலோசித்து வேண்டுவன செய்யப்படும்.

Cement

* 322 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to state the measures the Government have taken to supply the required quantities of cement to Municipalities, Local Bodies and Public Institutions for their works?

THE HON. SRI V. RAMAIAH : Every quarter application is made to the Government of India for the quantity of cement required by this State and the full requirements of cement by Municipalities, Local Bodies and Public Institutions are included therein. Supply is made on the actual quantity allotted by the Government of India.

திரு. வை. சங்கரன் : ஒரு சில தொழிற்சாலையிலே எக்ஸ்பான்ஷன் ஸ்கீமாக, இண்டஸ்ட்ரியல் லேபர் காலனி போன்றவைகளைக் கட்டுவதற்கு வேண்டிய சாங்ஷன் எல்லாம் செய்யப்பட்டுவிட்டாலும்கூட, சிமிண்ட் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. உதாரணமாக மதுரை விசாலாட்சி மில்ஸ் நிர்வாகத்தினர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, பாதகம் ஏற்படாத வகையிலே சிமெண்ட் சப்ளை செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தலைவர் அவர்களே, தனியார் நடத்தக் கூடிய தொழிற்சாலைகள் விஸ்தரிப்பு வேலைகளுக்காக சிமெண்ட் பற்றாக் குறையாக இருப்பதாகக் குறைபடுகிறார். மாகாணத்தில் நடக்கக்கூடிய பெரும் தொழில்களுக்குக்கூட சிமெண்ட் பற்றாக்குறையாகத்தான் இருந்து வருகிறது. பப்ளிக் செக்டாருக்கும் இப்பொது சிமெண்ட் பற்றாக் குறையாக இருந்தபோதிலும் தனியாருக்கு வேண்டிய கோட்டாவையும் அரசாங்கம் கொடுத்துத்தான் வருகிறது.

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கக்கூடிய முறையின் காரணமாகத்தான் சாதாரண மக்களுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை ரத்து செய்து விட்டால் சிறு கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று நினைக்கிறவர்கள், இனி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இந்த முறைதான் நீடிக்கவேண்டும். இன்னும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம் எல்லாம்.

* 323 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) 1961-62-ல் சிமெண்டில் கலப்படம் செய்ததாக தமிழ் நாட்டில் எத்தனை பேர்கள்மீது வழக்குகள் போடப்பட்டன ?

(இ) விதிக்கப்பட்ட தண்டனையின் விவரம் என்ன ?

(உ) சிமெண்டில் கலப்படம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் என்ன தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

(உ) சிமெண்ட் அத்தியாவசியமான பொருள் என்றும் கலப்படம் செய்வது சட்டப்படி குற்றம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Municipal Chairman (Salem)

* 324 *Q*.—**Sri R. S. VEERAPPA CHETTIAR** : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that a No-Confidence Motion has been passed against the Chairman of the Salem Municipality, and of the filing of a writ by the Chairman in the High Court of Judicature at Madras for stay; and

(*b*) if so, the orders passed by the Government to transact the business of the Salem Municipal Council?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) சேலம் நகரசபை தலைவர் ரிட் மனுவை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்ததால் நகரசபை அலுவல்களை செயல்படுத்த அரசினர் ஆணை தேவையில்லை. ஏனெனில், சென்னை மாவட்ட நகரசபை சட்டப்படி நகரசபை உதவித் தலைவர், நகரசபை அலுவல்களை தலைவரில்லாத சமயத்தில் செயல்படுத்த கடமைப்பட்டிருக்கிறார்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நகரசபைத் தலைவர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் கேஸ் தொடர்ந்திருக்கிறபடியால் அவர்களுக்கு நகரசபைத் தலைவர் ஸ்தானம் உண்டா ? இல்லையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 19-2-1962-ல் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement[a] containing the required particulars is placed on the table of the House.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு சபைமுன் வைக்கப்பட்டுள்ள பதிலில், அரியலூரிலிருந்து பெரம்பலூர், துறையூர் வழியாகச் சேலத்திற்கு ஒரு இருப்புப்பாதை போடவேண்டுமென்ற தீர்மானத்திற்கு சர்க்கார் பதிலில் . . . .

'In these circumstances, it is considered that no useful purpose will be served by addressing the Government of India for the construction of the railway line recommended by the District Development Council.'

என்று கூறப்பட்டிருக்கிறது. அதில் "**no useful purpose will be served**" என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பிரயாணம் செய்யும் எண்ணிக்கையையும், பார்சல் அனுப்புகின்ற அளவையும், தொழில் வளர்ச்சி இல்லாமல் பிற்போக்காக இருக்கின்ற நிலைமையையும் வைத்து ரயில்வே லைன் போடுவது ஜனங்களுக்கு உபயோகமாக இருக்கும் என்ற காரணத்தால் மீண்டும் புனராலோசனை செய்து இந்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெவலப்மென்ட் கவுன்சிலில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்போது தீர்மானம் அவசியமில்லையென்று யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள். தீர்மானத்தை யார் பிரேரேபித்தாலும் சரி என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது காரிய சாத்தியமா, நடைபெறுமா, 9-30 a.m. வழிவகை இருக்கிறதா என்பது பரிசீலனை செய்யப்படுவதில்லை. அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்று பார்க்கும்போது குறிப்பிட்ட ரெயில்வே லைனைப் பொறுத்தமட்டில், அதைவிட அவசியமான, அவசரமான அளவுக்கு ரெயில் இணைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது. இதைவிட அவசரமாகச் செய்ய வேண்டிய வேறு பல ரயில்வே இணைப்புகள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட இருக்கிறது. அதை அரசாங்கமும் உணருகிறது, மற்ற உறுப்பினர்களும் உணருவார்கள். ஆகவேதான் அந்த இணைப்பு சாத்தியமில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். மாதவன் : மற்ற மாநிலங்களைவிட இந்த மாநிலத்தில் தான் புது ரயில்வேப் பாதைகள் அதிகமாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது உண்மையா ? அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாநிலங்களில் ஏற்கெனவே எவ்வளவு ரயில்வே பாதைகள் இருக்கின்றன என்பதை ஒப்பிட்டுப் பார்த்துத் தான் இங்கு குறைவாக எடுத்துக் கொள்ளப்படுகிறதா என்று குற்றம் சாட்ட முடியும். ஆனால் பிற்போக்கான மாநிலங்கள் சில உண்டு. அங்கு கொஞ்சம் அதிகமாக ரெயில்வேப் பாதைக்ள் எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. எம். தண்டாயுதபாணி : மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் போடும் தீர்மானங்களும் அதற்கு மேல் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளும் அந்தந்த ஜில்லா அங்கத்தினர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கிடைக்க சர்க்கார் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லா அபிவிருத்திக்குழு இது பற்றி கேட்டால் அப்போதைக்கப்போது அரசாங்கத்தினால் என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அபிவிருத்திக் குழுவிற்குத் தெரிவிக்கலாம்.

[21st March 1963

(b) if so, the steps taken to eradicate the same?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) Plant protection measures have been taken in those areas by the Agriculture Department. It is reported that the disease is under control.

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) அவ்விடங்களில் விவசாயத் துறையினர் வாழைச் செடிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். இந்த நோய் இப்போது கட்டுப்பட்டு விட்டதெனத் தெரிகிறது.

திரு. வை. சங்கரன் : இந்நோயால் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அவற்றின் விவரங்களை புள்ளி விவரங்களோடு கூறமுடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : புள்ளி விவரம் என்னிடம் இல்லை. மதுரை ஜில்லா திண்டுக்கல் தாலூகாவில், திருச்சி ஜில்லாவில் முசிறியில் தொட்டிப் பாளையம் ப்ளாக்கில், திருநெல்வேலியில் தென்காசியில் இந்நோய் இருப்பதாகத் தெரிகிறது. அதைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. க. ர. நல்லசிவம் : கோவை ஜில்லாவில் இந்த வியாதி வாழையை அடியோடு ஒழித்துவிடும் நிலையில் பரவி இருக்கிறது. ஆகவே இந்த வியாதி எங்கெங்கு இருக்கிறதோ அங்கு சோதனை செய்து உடனுக்குடன் அதைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மாநிலத்தில் எங்கு நோயிருந்தாலும் தடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. வை. சங்கரன் : இந்த நோயைத் தடுக்க கன்று நட்ட இரண்டு மூன்று மாதங்களுக்குள் அடியில் தண்ணீர் ஊற்றவேண்டுமென்று கூறப்படுகிறது. ஆகவே பிரசாரம் மூலம், அதோடு கன்று வைத்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் மருந்து போன்றவை அடிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வாய்க்காலை சரியாக வைக்காததாலும், தோட்டங்களை சரியாகக் கவனிக்காததாலும் தான் இந்த நோய் வருகிறது என்ற தகவல் தான் என்னிடம் இருக்கிறது. சரியாக வைத்துக்கொண்டால் நோய் வராது.

திரு. க. ர. நல்லசிவம் : பொதுவாக திருச்சி, கோவை ஜில்லாக்கள் பொறுத்தவரை தோண்டி ஒழுங்காகக் காரியங்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் சொல்வது சரியல்ல என்று நினைக்கிறேன். ஆகவே இதுபற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்து அதன் உண்மைக் காரணங்களைத் தெரிந்து கொள்ள நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : காரியங்களை நன்கு செய்திருக்கிறார்கள். சரியாகக் கவனிக்காத இடத்தில்தான் நோய் வந்திருக்கிறது.

MR. SPEAKER : Questions are over.

21st March 1963]

திரு. கே. மூக்கையா தேவர் : உரப்பனூர் துப்பாக்கி பிரயோகம் சம்பந்தமாக ஏற்கனவே தங்களிடத்தில் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறேன். அது சம்பந்தமாக கூறுகிய காலக் கேள்வி வந்த பிறகு அதைப் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள். இது முக்கியமான விஷயமாக இருப்பதால் அதிகமாக விவரங்களை அமைச்சர் அவர்களும் தெரிவிக்கமுடியவில்லை. நாங்களும் தெரிவிக்க முடியவில்லை. முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். இதை விட ஒரு அவசரமான பிரேரணை இருக்கமுடியாது. ஆகவே இதைக் கவனித்து சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் என்னிடமிருக்கும் தகவல்களை எல்லாம் கொடுத்திருக்கிறேன். அவசரப் பிரேரணை என்று கோரினால் மட்டும் இதைவிட புதிய தகவல்கள் கொடுக்க முடியாது. ஆகவே இதில் அவசரப் பிரேரணைக்கு இடமில்லை. அரசாங்கம் ஏதோ தவறு செய்து விட்டது என்றால் சென்ஷர் மோஷன் வேண்டுமானால் கொண்டு வரலாம். அவசரப் பிரேரணைக்கு இதில் கொஞ்சம்கூட இடமில்லை.

MR. SPEAKER : When the Appropriation Bill is taken up, hon. Members can talk on this. I have given more than 30 minutes for the short-notice questions on this subject. Since hon. Members would have an opportunity to discuss this question when the Appropriation Bill is taken up for discussion in this House, I rule all the adjournment motions on this question out of order.

திரு. சா. கணேசன் : இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை தாங்கள் தள்ளி விட்டதால் ரூல் எண் 40-ன் கீழ் ½ மணி நேரம் விவாதம் நடத்துவதற்காவது நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு விண்ணப்பித்துக்கொள்கிறேன். வெறும் வினாக்கள் போட்டு விடைகள் பெறுவதால் மட்டும் விஷயங்களை விளக்கி விடுவது என்பது சாத்தியம் இல்லாத ஒன்று என்பதை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற கருத்திலேதான் இதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். ஆகவே கருணை கூர்ந்து ½ மணி நேர விவாதத்திற்கு அனுமதி தர வேண்டுமென்று மீண்டும் வேண்டிக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னிடமுள்ள தகவல்களை எல்லாம் கேள்வி நேரத்தில் நான் தெரிவித்து விட்டேன். அதற்கு மேல் என்னிடம் தகவல் இல்லை. ஆர். டி. ஓ. என்கொயரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். என்கொயரி முடிந்த பிறகு மேலும் ஏதாவது தகவல் கிடைக்கலாம் என்றும் சொன்னேன். ஆகவே ½ மணி நேர விவாதத்திற்கு இதில் இடமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The proviso to Rule 40 says :—

"Provided that on request made to the Speaker at question time . . . . ."

Sri V. KRISHNAMOORTHI rose.

MR. SPEAKER : Let us not make noise.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆர்.டி.ஓ. விசாரணை முடிந்து முடிவு எப்போது வரும் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் தாமதிக்க மாட்டார்கள். ஆனால் முடிவு வந்ததும் தெரிவிக்கவேண்டுமென்றால் மற்றொரு அவசரக் கேள்வி கேட்டால் நான் அது கிடைத்ததும் அதைச் சமர்ப்பிக்கலாம். அதற்கு மேல் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : இந்த மன்றத்தில், விசாரணை இருக்கிறபோதுகூட இரண்டு துப்பாக்கிப் பிரயோகங்கள் சம்பந்தமாக விவாதிக்க அனுமதி பெற்று நடந்திருக்கிறது. இது முக்கிய விஷயமாக இருப்பதால் சில கருத்துக்களை கூற வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்களின் தகவலை வைத்து குற்றச்சாட்டு சொல்ல முடியாது. ½ மணி நேரசாவகாசம் கொடுத்தால் சொல்லமுடியும். அமைச்சர் அவர்களின் பதிலை தெரிந்து கொண்டு ஒரு முடிவிற்கு வரமுடியும்.

கனம் சபாநாயகர் : குற்றச்சாட்டு சொல்வதற்கு என்று "டிஸ்கஷன்" அனுமதிக்க முடியுமா ?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : விவாதிக்க ½ மணி நேரம் கொடுக்க வேண்டும்.

MR. SPEAKER : I do not think it is necessary.

SRI R. S. VEERAPPA CHETTIAR : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. the Minister for Finance.

திரு. சா. கணேசன் : மன்னிக்க வேண்டும், இப்போது விவாதம் தேவையில்லை என்று கனம் சபாநாயகர் முடிவு செய்து விட்டார்களா ?

கனம் சபாநாயகர் : ஆம்.

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் கடமையைத் தொகுதி மக்களுக்குச் செய்ய முடியாத நிலையில், எங்கள் அதிருப்தியை புலப்படுத்த வேறு வழி இல்லாத நிலையில், நாங்கள் வெளிநடப்பு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று பணிவோடு தெரிவித்துக்கொண்டு, வெளி நடப்பு செய்கிறோம்.

(அதைத் தொடர்ந்து சுதந்திரா கட்சித் தலைவரும் அந்தக் கட்சி உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியே சென்றார்கள்).

III.—CALLING ATTENTION TO THE HARDSHIPS DUE TO THE FIXATION OF TEACHER PUPIL-RATIO.

SRI R. S. VEERAPPA CHETTIAR : I wish to call the attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, viz., the hardships and difficulties faced by the teachers of Elementary schools and the public as a result of the fixation of teacher-pupil ratio and by the implementation of the order of the Government in this regard.

between schools under private management and those under local authorities should be removed. The Government accepted these recommendations. After further consideration the Government issued orders fixing a uniform ratio of 1 : 35 based on attendance to take effect from 1st March 1958. While protection was also given to existing teachers who may be found surplus by the application of this teacher-pupil ratio, it was laid down that additional teachers can be appointed only on the basis of the revised teacher-pupil ration.

Under section 65 (*e*) of the Madras Panchayats Act, 1958, the statutory responsibility for Elementary Education has been vested with the Panchayat Unions. The Panchayat Unions have to make financial provision for the expenditure on Elementary Education for which the Government grants are payable on fixed proportions. They have to draw up a five-year plan of activities and resources for their areas. In that connection, the Government ordered that with a view to financial control, the Panchayat Union should be treated as a unit and appointment of teachers provided for at the teacher-pupil ratio of 1 : 40 of children on rolls in the respective Panchayat Unions. The appointment of teachers in individual schools continued to be regulated by the earlier teacher-pupil ratio of 1 : 35 of average attendance, within this overall ceiling for the Panchayat Unions. Specialist teachers like Physical Training Instructors, Pre-Vocational Instructors, Tamil Pandits, etc., are appointed, wherever necessary, according to the rules in force, outside the teacher-pupil ratio. Even in applying this ratio the Government had issued instructions that teachers found surplus should be absorbed in the vacancies that arise.

The expenditure on Primary Education which was of the order of Rs. 10·14 crores in 1960–61 has risen to Rs. 14·48 crores in the Budget Estimate for 1963–64. The cost of establishment on teaching staff is the main constituent item of this large expenditure. Apart from the amounts earmarked by Government, Panchayat Unions and Municipalities raise local revenues to meet the expenditure on Elementary Education in their respective areas. Though a lower teacher-pupil ratio will be welcome from the academic point of view, it would not be possible for some years to come in view of the heavy financial commitments involved. Certain representations regarding the practical difficulties in applying the teacher-pupil ratio have been received by Government and they are under consideration.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963–64—*cont.*

DEMAND No. XX—INDUSTRIES.

DEMAND No. XL—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,23,20,700 under Demand No. XX—Industries."

I will move the other Demand also, Sir,

On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,88,15,300 under Demand No. XL—Capital Outlay on Industrial Development."

கனம் சபாநாயகர் அவர்களே, தொழில் மான்யக் கோரிக்கை சம்பந்தமாக, விவரங்கள் எல்லாவற்றையும் அச்சிட்டு கனம் அங்கத்தினர்களுக்கு கூடுமான வரையில் விவரமாகவே கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு ஒரு சில புள்ளிவிவரங்கள் மாத்திரம் இப்போது கொடுத்து விட்டு மான்யக் கோரிக்கைக்கு பதில் அளிக்கும்போது கொள்கை சம்பந்தமாகவோ, அல்லது மற்ற வ சம்பந்தமாகவோ எழுப்பப்படுகின்ற பிரச்னைகள் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு ஃபாக்டரி என்ற முறையிலே தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் வெகு சந்தோஷத்துடன் கடந்த பட்ஜெட் விவாதத்தின் போது தெரிவித்தேன். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாள் ஒன்றுக்கு இரண்டு தொழிற்சாலைகள் என்ற விகிதப்படி நம் ராஜ்யத்திலே ஏற்படவேண்டும் என்பது நமது லட்சியம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1961-ம் வருஷ இறுதியிலே நம்முடைய ராஜ்யத்தில் 5,803 ஃபாக்டரிகள் ஃபாக்டரீஸ் சட்டத்தின் கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவையாக இருந்தன. 1962-ம் வருஷ இறுதியில் ஒரு வருஷத்தில், அதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முதல் வருஷத்தில், ஃபாக்டரீஸ் சட்டத்தின் கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 6,490 ஆக உயர்ந்தது. ஆக, ஒரு ஆண்டில் 687 புது ஃபாக்டரிகள் நம் ராஜ்யத்தில் நிறுவப்பட்டிருக்கின்றன. அதையொட்டிப் பார்க்கின்ற பொழுது நாள் ஒன்றுக்கு இரண்டு ஃபாக்டரிகள் என்ற நிலைமை வரும் காலத்தில், வரும் ஆண்டுகளிலே, ஏற்படுத்த முடியும் என்கிற நம்பிக்கை உண்டாகின்றது.

அடுத்தபடியாக, சில முக்கியமான துறைகளிலே உற்பத்தி கணிசமான முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிமெண்ட்டை எடுத்துக்கொள்வோமானால் 1958-ம் வருஷம நம்முடைய ராஜ்யத்தில் 7 லட்சத்து 48 ஆயிரம் டன்கள்—இந்தக் கணக்குகளையெல்லாம் நியரஸ்ட் தௌஸண்ட் அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்—உற்பத்தி செய்யப்பட்டன. 1962-ம் வருஷத்தில் 12 லட்சத்து 89 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. அதை புள்ளி விவரக் கணக்குப்படி சொன்னால் 100 என்று 1958-ம் வருஷத்தில் இருந்தது 172 ஆக உயர்ந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதைத் தவிர மூன்று பெரிய சிமெண்ட் ஃபாக்டரிகள் நம் ராஜ்யத்தில் வருவதற்கு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சங்கரியில் நாள் ஒன்றுக்கு 600 டன் உற்பத்தி செய்கிற தொழிற்சாலை ஒன்று, கரூரில் நாள் ஒன்றுக்கு 500 டன் உற்பத்தி செய்கிற தொழிற்சாலை ஒன்று, இதைத் தவிர மூன்றாவது தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதற்கு லைசென்ஸ் இன்னும் வழங்கப்படவில்லை, பரிசீலனையில் இருந்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு லைஸென்ஸுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதைத் தவிர 75 ஆயிரம் ஸ்பிண்டில்கள் நம் ராஜ்யத்தில் இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

துணி உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும்கூட, இதற்கு முன் நம் ராஜ்யத்தில் நூற்பு ஆலைகள்தான் வைப்பது என்று சம்பிரதாயமாக இருந்தது. மில்களில் துணி உற்பத்தி செய்வது அவ்வளவு வழக்கமல்ல. அதற்கு மாறாக, கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நூற்பு ஆலைகளை காம்போஸிட் மில்லாகச் செய்ய அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். 1958-ம் வருஷத்தில் 1 லட்சத்து 11 ஆயிரம் மீட்டர் அளவில் துணி உற்பத்தி இருந்தது. 1962-ம் வருஷத்தில் 1 லட்சத்து 49 ஆயிரம் தௌஸண்ட் மீட்டர்ஸ் அளவுக்கு அது உயர்ந்திருக்கிறது. புள்ளிவிவரக் கணக்குப்படி 1958-ம் வருஷம் 100 என்று இருந்தால் 1962-ல் 134·7 ஆக உயர்ந்திருக்கிறது.

அதேபோல சர்க்கரையை எடுத்துக்கொள்வோமானால் 1958-ம் வருஷம் நம் ராஜ்யத்தில் 68,000 டன் உற்பத்தி செய்யப்பட்டது. 1962-வது வருஷத்தில் 1 லட்சத்து 26 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. புள்ளி விவர அளவிலே 100 என்பது 184·3 அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இன்னும் இரசாயனப் பொருள்களை எடுத்துக்கொள்வோமானால், சூபர் பாஸ்ஃபேட்டை எடுத்துக்கொள்வோமானால், 1958-ம் வருஷம் 60 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. 1962-ம் வருஷம் 1 லட்சத்து 6 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. புள்ளி விவர அளவில் பார்த்தால் 100 ஆக இருந்தது 176 ஆக உயர்ந்திருக்கிறது.

அதுபோல சைக்கிள் உற்பத்தியை எடுத்துக்கொள்வோமானால், 1958-ல் 2,04,000 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1962-ல் 2,77,000 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. கணிசமான அளவுக்கு ஸ்டோரேஜ் பாடரீஸ் போன்ற புதுத் தொழில்கள் செய்வதிலும், இன்னும் எலக்டிரிஸிடி சம்பந்தமாக டிரான்ஸ்பார்மர்ஸ் முதலியவைகள் செய்வதிலும் தமிழகம் பெரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1958-ல் நம்முடைய ராஜ்யத்தில் ஸ்டோரேஜ் பாடரீஸ் 23,000 தான் செய்யப்பட்டது. ஆனால், 1962-ல் 83,000 ஸ்டோரேஜ் பாடரீஸ் செய்யப்பட்டிருக்கிறது. புள்ளி அளவிலே சொன்னால் 100 என்பது 359 ஆக உயர்ந்திருக்கிறது. அதுபோல, பவர் டிரான்ஸ் பார்மர்ஸை எடுத்துக்கொள்வோமானால், 77,000 கே.வி.எ. பவர் டிரான்ஸ்பார்மர்ஸ் நம்முடைய ராஜ்யத்தில் 1958-ம் வருஷத்தில் செய்தோம். இன்று 424,000 கே.வி.எ. டிரான்ஸ்பார்மர்ஸ் செய்திருக்கிறோம், 1962-ம் வருஷத்தில். அதைப் புள்ளி விவர அளவிலே சொன்னால் 100 என்பது 550 ஆக உயர்ந்திருக்கிறது. பொதுவாக, எல்லாத் துறைகளிலும் தமிழ் நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் உற்பத்தியானது கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை நான் சொல்ல முடியும்.

சிறு தொழில்கள் வளர்ச்சியில்கூட நமக்கு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கை மூலம் மாத்திரம் அல்ல, பொதுவாக நம்முடைய ராஜ்யத்தில் தனியார் துறையிலே ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில்கள் மூலமாகவும் நாம் அறிந்துகொள்ள முடியும். மத்திய சர்க்கார் இடத்திலிருந்து, நாஷனல் ஸ்மால் இண்டஸ்டிரீஸ் கார்பரேஷனிலிருந்து சிறு தொழில்கள் வைப்பதற்கு இயந்திரங்களையெல்லாம் கடன் தவணையில் வாங்கிக் கொடுக்கிறார்கள். அதைப் பார்க்கப்போனால், அகில இந்தியாவிலும் ரூ. 1,30,00,000-க்கு மெஷின்கள் சப்ளை செய்யப்பட்டதில் ரூ. 10,00,75,000, மெஷின்கள் சென்னை ராஜ்யத்திற்கு மாத்திரம் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போன்றவைகளெல்லாம் நம்முடைய ராஜ்யத்திற்குத் தேவையான அளவு கிடைக்கவில்லை. அகில இந்தியாவிலும் பற்றாக்குறை இருக்கிறது. அதேபோல், "நான்-பெரஸ் மெடலே" எடுத்துக்கொள்வோமானால், காபர், ஸிங்க், அலுமினியம், லெட் போன்றவைகள் நமக்கு சரிவர கிடைக்கவில்லை. அதனால், நமக்கு இருக்கிற கபாசிடி, உற்பத்தி செய்யக்கூடிய அளவு எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்கு நாம் உற்பத்தி செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிற கபாசிடி அளவுக்கு, இன்ஸ்டால்டு கபாஸிடி அளவுக்கு, நம்முடைய ராஜ்யத்தில் ப்ரொடக்ஷன் வரவில்லை. வராததற்கு காரணம் இந்த விதமான ராமெடீரியல் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவது குறைபாடு, நம்முடைய ராஜ்யத்தில் போதுமான அளவு நிதி கிடைப்பதில்லை, காபிடல் கிடைப்பதில்லை. அந்தக் குறைப்பாட்டினால் நான் பல கம்பெனிகள்கூட ஆரம்பிக்க முடியாத நிலையில் இருந்திருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் முதல் பாராவிலோ, இரண்டாவது பாராவிலோ சொல்லியிருக்கிறோம். மொத்தம் 494 லைசென்ஸ்களில் 22 லைசென்சுகள்தான் நாம் அமைக்க முடியாமல் சரெண்டர் செய்யவேண்டிய, விட்டுவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். 22 லைசென்ஸ்களை நாம் விட்டுவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றால், அதற்குப் போதிய நிதி வசதி நம்முடைய ராஜ்யத்தில் எழுப்ப முடியாத காரணம்தான். அந்த மாதிரி பார்க்கும்பொழுது, நம்முடைய ராஜ்யத்தில் நாம் வைத்திருக்கிற மெட்ராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்டு கார்ப்பரேஷன் செய்த பெரிய உதவியின் காரணமாகத்தான் இவ்வளவு வளர்ச்சி ஏற்படக்கூடிய நிலைமை உண்டாயிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திலும், அகில இந்தியாவிலும் இருக்கக்கூடிய மற்ற ராஜ்யங்களிலும் எந்த அளவுக்கு நிதி கார்பரேஷன்கள் உதவி செய்திருக்கின்றன என்று கணக்குகள் இருக்கின்றன. அதைப் பார்க்கிறபொழுது, சென்னை ராஜ்யத்தில் இருக்கக்கூடிய மெட்ராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்டு கார்பரேஷன் கம்பெனிகள் ஆரம்பிப்பதற்கு ரூ. 7 கோடி அளவுக்கு நிதி உதவி செய்திருக்கிறது. அதே சமயத்தில் பம்பாய் ராஜ்யத்தில் பார்க்கப்போனால் ரூ. 4,72,00,000 அளவுக்குத்தான் அங்கே நிதி உதவி செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திற்கு அடுத்தபடியாக பம்பாய் வருகிறது. இந்த நிதி உதவியை இன்னும் அதிகமாக செய்வதற்கான வழிவகைகளை நாம் செய்யவேண்டும். ஆகவே, நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய தொழில் விஸ்தரிப்புக்காக இன்னும் நல்ல தீவிரமான முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI S. MADHAVAN: Mr. Speaker, Sir, I move—

"That the allotment of Rs. 5,23,20,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100."

SRI M. S. MANI: Mr. Speaker, Sir, I move—

"That the allotment of Rs. 5,88,15,300 under Demand No. XL—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

70 பேர்கள், 80 பேர்கள் என்ற விதத்தில் இருக்கிறார்கள். ஆனால், விவசாய நிலமோ நாம் நினைத்தபடி பெருகிவிடாது. இருக்கிற நிலங்களை வைத்துக்கொண்டு புதிய விஞ்ஞான முறைகளைக் கையாண்டு, விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்தாலும், மகசூல் திடீரென்று பெருகிவிடாது. நிலமும் பெருகாது, விவசாயத்திலிருந்து கிடைக்கிற விளைவும், மகசூலும், உடனடியாக அதிகரித்து விடாது. அதே சந்தர்ப்பத்திலே, விவசாயத்தைப் பொறுத்த வரையிலே பருவக் கோளாறினாலும், மழை தவறுவதினாலும், காலாகாலத்தில் மழை இல்லாததினாலும், அறுவடை மூலம் தாங்கள் எண்ணிய பலனை எண்ணியபடி அடையமுடியாமல் போய்விடுகிறது. ஆகவே, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே, நாம் விவசாயத்தை மட்டும் விருத்தி செய்து பயனில்லை. நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் முன்னேறவேண்டுமானால், நம்முடைய மக்களுடைய சராசரி வருமானம் பெருகவேண்டுமானால், நம்முடைய நாடு தமிழகம் குறிப்பாக தொழில் வளம் மிக்க ஒரு நாடாக நிச்சயம் ஆக்கப்படவேண்டும். நாங்கள் "வடக்கு வாழ்கிறது", "தெற்கு தேய்கிறது" என்று சொல்லுகிற நேரத்திலே, வாதத்தற்கு வேண்டுமானால், அமைச்சர் அவையில் உள்ளவர்களும், ஆளும் கட்சியில் உள்ளவர்களும் இல்லை, "வடக்கு வாழவில்லை, தெற்கு தேயவில்லை" என்று சொல்லலாம். ஆனால், இந்த மாமன்றத்தில் பேசுகின்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரவர் தொகுதியிலே இன்னென்ன தொழிற்சாலைகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன, இருந்தாலும் அதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை, ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று சொல்லக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். எங்களுக்கு சமாதானம் சொல்லுவதற்கு நீங்கள் வேண்டுமானால் ஒரு சில புள்ளிவிவரங்களைக் கொடுத்தாலும்கூட, நிச்சயம் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுகின்ற முறையைப் பார்க்கவேண்டும். எனக்குப் பின்னால் பல அங்கத்தினர்கள் பேச இருக்கிறார்கள். எல்லோரும் இந்த மான்யக் கோரிக்கையை வரவேற்பார்கள். அதற்குப் பின்னால் நமது தமிழகத்தில் தொழில் வளம் மிகுந்திருப்பதாகச் சொல்லுவார்கள். இருந்தாலும், அவரவர்கள் தொகுதியில் தொழில் வேண்டும், தொழில் வேண்டும் என்று கேட்பார்கள். ஆகவே, நீங்கள் உங்கள் வாதத்திற்கு வேண்டுமானால், வடக்கு வாழவில்லை, தெற்கு தேயவில்லை, ஆகவே, அகில இந்திய ரீதியிலே நாம் இருப்போம், இந்திய அமைப்பிலே இருப்போம் என்று சொன்னாலும், உண்மை நிலைமையைப் பொறுத்து, தமிழகத்தைப் பார்த்தால் தமிழகம் தொழில் வளத்தில் இன்னும் போதிய அளவு முன்னேறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏதோ நாங்கள் சொல்லுகிறபொழுது, நெய்வேலி நிலக்கரித் திட்டம், பெரம்பூர் கோச் பாக்டரி ஆகியவைகளைக் காட்டிவிட்டால் மட்டும் போதாது. எதிர்த் தரப்பில் இருக்கிற நாங்கள் நாட்டுப் பிரிவினையை ஒட்டி காட்டப்பட்ட ஒரு காரணமாக ஒரு சில புள்ளிவிவரங்களை நாங்கள் தருகிறோம் என்று நிச்சயம் நீங்கள் நினைத்துவிடக்கூடாது. 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் என்று நான் நினைக்கிறேன். சுதேசமித்திரன் பத்திரிகையில் ஒரு கார்டூன் வெளிவந்திருந்தது. ஒரு கரவை மாடு, அந்தக் கரவை மாட்டுக்கு தீனி போடுகிறவர்கள் தமிழர்கள் என்று வர்ணிக்கப்பட்டும், பால் குடிப்பவர்கள் வடநாட்டுக்காரர்களாக வர்ணிக்கப்பட்டும் இருந்தது. இதிலிருந்து நிச்சயம் தமிழகம் பின்னணியில் இருக்கிறது என்று தாராளமாகச் சொல்ல முடியும்.

படம் இருந்தது. நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், வட நாட்டிலே பெரிய, பெரிய தொழிற்சாலைகளும், அணைக்கட்டுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே அநேகம் தொழிற்சாலைகள் வரவேண்டும், தொழில் வளம் மிக்கதாக இருக்கவேண்டும் என்பதற்காகத் நான் சொல்லுகிறேன். நமது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள், சென்ற விவாதத்திலே எங்களுக்குப் பதில் அளிக்கின்ற முறையில், இந்தியா ஒரு நாடாக இருந்தால்தான் இன்று உற்பத்தியாகிற பண்டங்களை அங்கு அனுப்பலாம், அவர்கள் அதிகமாக உற்பத்தி செய்தாலும், தங்களுடைய தேவைக்குப் போதுமானதைக் கூட வைத்துக்கொள்ளாமல் இந்த அமைப்பின் கீழ், மற்ற மாநிலங்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். நாமும் செய்கிறோம் என்ற விதத்திலே சொன்னார்கள். உலகத்திலே மற்ற நாடுகளுடன் நாம் வாணிபத் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அதற்காக நாம் அந்த நாடுகளுடன் ஐக்கியம் ஆகி விட்டோம் என்று சொல்ல முடியாது. ஒரு நாட்டுடன் ஐக்கியமாக இணைந்திருந்தால் தான், வாணிபத் தொடர்பு இருக்க முடியும் என்ற நிலைமை இல்லை. மற்ற நாடுகளைக் காட்டிலும் நாம் தொழில் வளர்ச்சி பெற்றிருந்தால், நாம் உற்பத்தி செய்யும் பண்டங்களை அவர்களுக்கு அனுப்பி, நமக்குத் தேவையான பொருள்களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, அகில இந்தியத் தத்துவம் இருக்கவேண்டும் என்பதற்கு இந்த ஒரு காரணத்தை மட்டும் காட்ட முடியாது.

இப்பொழுது தொழில் மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெறுகிறது என்றாலும், ஹிந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுமோ என்ற நிலை உருவாகி வருகிறது. அகில இந்தியத் தத்துவத்திலே ஆர்வம் கொண்டவர்கள்கூட, ஹிந்தித் திணிப்பால் நாட்டிலே பிரிவினை ஏற்படும் என்பதை வற்புறுத்தி வருகிறார்கள். நமது மாநில அரசாங்கம் இதை நிச்சயமாகத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி மத்திய அரசுக்கு ஆலோசனை கூற வேண்டும். இந்த முறையிலே சீக்கிரத்தில் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாடு விவசாயத் துறையிலிருந்து தொழில் துறைக்கு மாற்றப்படவேண்டுமென்று சொன்னால், நம்முடைய நாடு தொழில் வளமாக்கப்படவேண்டுமானால், நாட்டில் இருக்கிற கனி வளங்கள் அனைத்தையும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இப்பொழுது அவ்வாறு பயன்படுத்தப்படவில்லை. சேலத்தில் இருக்கும் இரும்பைப் பற்றி பல ஆண்டுகளாக ஆராய்ச்சி நடந்துகொண்டு வருகிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கவர்னர் பெருமான் அறிக்கையிலும், நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட் உரையிலும், சேலம் இரும்பைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிடுகிறபொழுது, சேலத்தில் ஒரு இரும்புத்தொழிற்சாலை ஏற்பட்டுவிட்டதுபோன்ற உணர்வு நமக்கு வந்துவிடும், நாமும் பாராட்டி விடுவோம். ஆனால் நமது தொழில் அமைச்சர் அவர்கள், சேலத்தில் உள்ள இரும்புக் கனியையும், நெய்வேலியில் இருக்கும் பழுப்பு நிலக்கரியையும் ஜெர்மனி நாட்டிற்கு அனுப்பி, ஆராய்ச்சி செய்யப்பட்டு, அந்த ஆராய்ச்சி நல்ல பலன் தக்க விதத்திலே இருக்கிறது, அந்த இரும்புத் தொழிற்சாலை ஏற்பட்டுவிடும் என்ற முறையிலே சொல்லுவார்கள். அதே நேரத்தில் சேலத்தில் இருக்கும் இரும்பைப் பொறுத்த வரையில் விரிவான முறையில் ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கு தஸ்தூர் கம்பெனியிடம் ஒப்படைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. நமது தொழில் அமைச்சர் அவர்கள் மேல் சபையிலே பேசும்போது, சேலம் இரும்புத் தொழிற்சாலை லாபகரமாக இருக்குமா, இருக்காதா என்ற கேள்வியைக் கிளப்பி, அது வருமா, வாராதா என்ற சந்தேகத்தையும் உண்டாக்கி இருக்கிறார். அந்த சந்தேகம் போக்கப்படவேண்டும். சென்ற ஆண்டு விவாதத்தில் உரை நிகழ்த்தும்போது, நமது தொழில் அமைச்சர் அவர்கள், மின்சாரப் பற்றாக் குறையைப் பற்றியும், நில ஆர்ஜிதம் செய்வதில் உள்ள தாமதத்தைப் பற்றியும் தண்ணீர் வசதிக் குறையைப் பற்றியும், லைசென்சு வழங்குவதில் மத்திய அரசாங்கத்தில் ஏற்படும்

தாமதத்தைப் பற்றியும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக் குறையைப் பொறுத்த வரையில், ரூ. 58 கோடியில் அமையவிருக்கிற ஹோகனேகல் திட்டத்தை நிறைவேற்றினால், 840 மெகாவாட்ஸ் மின்சாரம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. குந்தாத் திட்டம், மேட்டூர் டனல் திட்டத்திலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை விட, ஹோகனேகலிலிருந்து அதிகமான அளவுக்கு நமக்கு மின்சாரம் கிடைக்கும். ஆகவே மைசூர் அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து, நமது தொழில் வளர்ச்சிக்கு முக்கியமாகத் தேவைப்படுகிற மின்சாரத்தைப் பெறும் வகையில், நமது முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் ஈடுபட்டு, இந்தத் திட்டத்தை துரிதப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் துறையையும், பொதுத் துறையையும் பார்க்கும் பொழுது, தனியார் துறை தான் நமது மாநிலத்திலே பெருகி வருகிறது. பொதுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பொருளாதாரக் கொள்கையைப் பற்றிச் சொல்லும்பொழுது, ஆளும் கட்சியினர் பொதுத் துறையையும், தனியார் துறையையும் சேர்த்து வளர்ப்போம் என்ற முறையில் சொல்லுகிறார்கள். ஆட்டையும், புலியையும் ஒரே இடத்தில் வைத்து, இரண்டையும் வளர்க்கிறோம் என்று சொன்னால் எப்படியிருக்குமோ, அது போலத்தான் இருக்கிறது. தனியார் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதினால், பொதுத்துறை முன்னேறவில்லை. ஆகவே பொதுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஏழ்மை நிலையிலிருந்து நல்ல முறையில் நம்முடைய மாநிலம் முன்னேறுவதற்கு, தொழில் அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் இரும்புத் தொழிற்சாலை திட்டத்தையும், ஹோகனேகல் மின்சாரத் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், பெண்ணகரத்தில் ஒரு சிமென்ட் தொழிற்சாலை அமைக்க நல்ல சூழ்நிலை இருப்பதால், அங்கே ஒரு சிமென்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. நா. மகாலிங்கம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

அகில இந்திய ரீதியில் பார்க்கும்பொழுது, சமீப காலத்தில் நம்முடைய சென்னை ராஜ்யத்தில், மற்றவர்கள் பார்த்து வியக்கும்படியாக தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. மிகவும் பிற்போக்காக இருந்த சென்னை மாநிலம், இன்றையதினம் தொழில் வளர்ச்சியில் அகில இந்தியாவிலே நான்காவது ஸ்தானத்தை வகிக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, நாம் உண்மையிலேயே பெருமைப் படவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அளவுக்கு நமது ராஜ்யத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு காரணம் நமது அரசாங்கம் நல்லமுறையில் திட்டமிட்டு, வேண்டிய உதவிகளைச் செய்து வந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மதராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்பொரேஷன் மூலம், இத்தகைய ஸ்தாபனங்களுக்குக் கடன் வழங்கியும், மூலதனம் வழங்கியும் தொழில்கள் ஏற்படுவதற்கு நல்ல உதவிகளைச் செய்து வந்திருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கும் ஸ்தாபனங்களிலே இந்த ஸ்தாபனம் முதலிடம் வகிக்கிறது என்று சொன்னால், அது நமது ராஜ்யத்திற்குச் சேர்ந்த பெருமை என்று எடுத்துக் கொள்ளலாம். நல்ல தொழில் நடத்தவேண்டுமென்று சொன்னால், பணம் மட்டும் போதாது. மின்சாரம் வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் காலத்தில் நம்முடைய ராஜ்யத்தில் 5 லட்சம் கிலோவாட்ஸ் உற்பத்தி செய்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் 7 லட்சம் அதிகமாக, 12 லட்சம் கி. வா. உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறோம். அந்த பெருந் தொகை மின்சார உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு திட்டமிட்டு, திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறோம்.

கூட, நம்முடைய ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சியின் காரணமாக மின்சாரப் பற்றாக்குறை அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. இன்னும் நான்காவது, ஐந்தாவது திட்டங்களில் எவ்வளவு மின்சாரம் வேண்டும் என்பதைப் பார்க்கும்பொழுது, நமது ராஜ்யத்திலே நீர் மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கு அதிகமாக வாய்ப்பு இல்லை என்பது தெரிகிறது. மைசூர் ராஜ்யத்துடன் தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஹோகனேகல் திட்டத்தை எடுத்து நிறைவேற்றும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மைசூர் ராஜ்யத்தில் 40 லட்சம் கி. வாட்ஸ் உற்பத்தி செய்ய நீர் வசதி உள்ளது. ஆயினும் அவர்களுக்கு அவ்வளவு தேவையின்மையால் திட்டமிடமாட்டார்கள். சென்னை ராஜ்யம் அவர்களுடன் சேர்ந்து பொதுத் திட்டம் அமைத்து மின்சாரம் பெற முயற்சிக்க வேண்டும். அங்கிருந்து நமக்கு வேண்டிய மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். இதைப் பற்றி அடுத்த திட்டத்தில் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப் போலவே கேரள ராஜ்யத்திலும் எவ்வளவு உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டு பிடித்து அவர்களிடமிருந்தும் நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய அளவில் திட்டம் வகுக்க வேண்டும். இப்படி அண்டையில் இருக்கக்கூடிய ராஜ்யங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அங்கு உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்தை இங்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய பணத்தை கொடுத்துக்கொண்டு வரலாம். பக்கத்திலுள்ள கேரள ராஜ்யத்திலிருந்து சுமார் இருபது லட்சம் கிலோ வாட்ஸ் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கு வேண்டிய திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த முறையில் அவர்களுடன் சேர்ந்து திட்டங்களை அமைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி பக்கத்து ராஜ்யத்தில் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை இங்கு வாங்கி இன்னும் அதிகப் படியான தொழில்களை ஆரம்பிக்க இங்கு ஏற்பாடு செய்யவேண்டும். பக்கத்து ராஜ்யங்களுடன் காமன் கிரிட் என்ற முறையில் ஏற்படுத்தி மத்திய அரசாங்கம் அதற்கு உதவி அளிப்பதாகத் தெரிய வருகிறது. இப்படி மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு அடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் பக்கத்திலுள்ள ராஜ்யங்களிலுள்ள மின்சாரத்தை இங்கு கொண்டு வந்து பல தொழில்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய ராஜ்யத்தில் எவ்வளவோ பெரிய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நமது ராஜ்யத்தில் பெரிய தொழில்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் உதவி வருகிறார்கள். சுமார் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்து பெரிய தொழில்களை ஆரம்பிக்கிறவர்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். சென்னையில் பைனான்ஸ் கார்பொரேஷன் என்று அமைத்து அதன் மூலமாக பண உதவி செய்து வருகிறார்கள். அது ரொம்பவும் பாராட்டப்படக் கூடியதுதான். இப்பொழுது ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்ரேஷனுக்கு வேண்டிய நிதி இருக்கிறது. ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆண்டுக்கு ரூ. 530 கோடி பிரீமியம் தேசத்தில் பெறுகிறார்கள். அதில் 130 கோடி தென் ராஜ்யங்களிலிருந்து செலுத்தப்படுகின்றது. ஆனால் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்பொரேஷன் இந்த நிதியை எந்த அளவுக்கு தொழில்களுக்கு கொடுத்து உதவி செய்து வருகிறது என்று பார்த்தால் அது குறைவாகத்தான் இருக்கிறது. ஆயுள் இன்ஷூரன்ஸ் இன்னும் அதிகப்படியாக முதலீடு செய்து தொழில் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தொழில் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆயுள் இன்ஷூரன்ஸ் நிதிகளை தொழிலில் முதலீடு செய்யும் ஸ்தாபனம் பம்பாயில் மட்டும் உள்ளது. அதற்குப் பதிலாக டில்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் ஸ்தாபனம் அமைத்து தொழில்களிலும் இதர துறைகளிலும் முதலீடு செய்ய சென்னை அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால் நமது ராஜ்யத்தில் இன்னும் அதிகப் படியான தொழில்களை ஆரம்பிக்க வசதி ஏற்படும். பல தொழில்களை

ஆரம்பிப்பதற்கு ஷேர் வாங்க வேண்டுமென்றால், அதுவும் முடியவில்லை. காரணம் இப்பொழுது ஷேர் மார்க்கெட் மிகவும் டல்லாக இருக்கிறது. அதனால் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றால் சர்க்கார் ஸ்தாபனங்கள் முதலீடு செய்து தொழில்களை ஆரம்பிக்கச் சொல்லவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சமீப காலத்தில் அலுமினியம் போன்ற பல தொழிற்சாலைகளை ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். அதைப்போலவே சோடா ஆஷ் போன்ற தொழிற்சாலைகளையும் ஆரம்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் அதிகமாக இல்லை. கெமிகல் இண்டஸ்ட்ரீஸை அதிகமாக ஆரம்பிக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். எங்கே கனிப் பொருள்கள் கிடைக்கிறதோ அதன் பக்கத்திலேயே அந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும். எண்ணெ சத்துக்கள் எங்கே அதிகமாகக் கிடைக்கிறதோ அங்கே அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும். அங்கு கிடைக்கக்கூடிய கழிவுப் பொருள்களை வைத்துக்கொண்டு மற்ற தொழில்களையும் ஆரம்பிக்கலாம். இப்பொழுது தஞ்சைக்கு பக்கத்தில் எண்ணெ சுரங்கங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது எங்கே இருக்கிறதோ அதை ஆராய்ச்சி செய்து அதைத் தோண்டி எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது ராஜ்யம் தொழில் துறையில் ரொம்பவும் பிற்போக்காக இருக்கிறது என்று சில அரசியல் கட்சிகள் சொல்லி வருகின்றன. அப்படிச் சொல்வது சரியல்ல. விவரங்களை அறிந்து கொண்டு சொல்லுகிறார்களா அல்லது விவரங்களை அறிந்துகொள்ளாமல் சொல்லுகிறார்களா என்பது தெரியவில்லை. நமது ராஜ்யம் தொழில் துறையில் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறது என்று சொல்லலாம். மற்ற ராஜ்யங்களில் முன்னேற்றமடைந்திருப்பதையும் நமது ராஜ்யத்தில் முன்னேற்றமடைந்திருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது ராஜ்யம் எவ்வளவோ அதிகமாக முன்னேற்ற மடைந்திருப்பது தெரிய வரும். புள்ளி விவரங்களைக் கொடுத்தாலும் அதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் நமது ராஜ்யம் தொழில் துறையில் மிகவும் பிற்போக்காக இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால் ஒவ்வொரு ராஜ்யத்தையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் எந்த அளவில் தொழில் துறையில் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள் என்று பார்த்தால், முதலாவதாக மேற்கு வங்காளம், அடுத்தபடியாக மகாராஷ்டிரம், அதன் பிறகு பஞ்சாப், நான்காவது சென்னை மாகாணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தொழில் துறையில் நமது ராஜ்யம் நான்காவது ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் இங்கு எந்த அளவில் தொழில் துறையில் முன்னேற்ற மடைந்திருக்கிறது என்பது தெரிய வரும். இங்கு முன்னேற்ற மடையவில்லை என்று அலங்கார வார்த்தையாக வேண்டுமானால் சொல்லலாம். மற்றப்படி வேறு ஒன்றுக்கும் அது பிரயோசனம் இல்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நமது ராஜ்யத்தில் மனித வருமானம் குறைவாக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. நம்முடைய மாகாணத்தில் சதுர மைலுக்கு ஜனத் தொகை 680 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் சராசரி ஜனத்தொகை சதுர மைலுக்கு 365 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இங்கு சதுர மைலுக்கு அதிகப்படியான ஜனங்கள் இருப்பதால் இங்கு குறைவான வருமானம் வருகிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மனிதருக்கு அதிகப்படியான வருமானம் வரக்கூடிய அளவில் தொழில் வளர்ச்சி அடையவில்லை. சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டால் சென்னையில் நல்ல முறையில் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் அதைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் அந்த அளவில் தொழில் வளர்ச்சி அடையவில்லை. வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய

நகரத்தில் சென்ற பத்து வருடத்தில் இஞ்சினியரிங் துறையில் போதிய வளர்ச்சி அடைந்திருக்கிறது. சென்ற கால அனுபவத்தைப் பார்த்தால் சென்னை நகரில் தொழில் வளர்ச்சி அடைந்திருப்பது நன்றாகத் தெரிய வரும். ஆனால் சென்னைக்கு சுற்று வட்டாரங்கள் ரொம்பவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. ஆகவே சென்னைக்கு சுற்று வட்டாரங்களில் தொழில் வளர்ச்சி அடைவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அம்மாதிரிப் பார்த்தால், சென்னையைச் சுற்றியிருக்கும் வட்டாரங்கள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன. அதற்கு, சிறு தொழில்களை இன்னும் அதிகமாக இந்தப் பிரதேசங்களிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைச்சர் அவர்கள் பேசும்போது கூட, " சில தொழில்கள் நம்முடைய இராஜ்யத்தில் சரியாக நடைபெறவில்லை, அதற்குக் காரணம் மூலப்பொருள்கள் சரியாகக் கிடைக்கவில்லை " என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய இராஜ்யத்தில் மூன்று உயர் ரக உருக்குத் தொழிற்சாலைகள் (அலாய் ஸ்டீல் ப்ளாண்ட்ஸ்) ஏற்படுத்துவது என்று ஏற்கனவே லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன. பம்பாயிலுள்ள ஒரு ஸ்தாபனத்திற்கும், கோவையிலுள்ள ஒரு ஸ்தாபனத்திற்கும், சென்னையில் உள்ள ஒரு ஸ்தாபனத்திற்கும் அந்த லைசென்ஸ்கள் கொடுத்திருந்தார்கள். உருக்குத் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரையில், வெகு சீக்கிரமாக வெற்றிகரமாக அவற்றை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். உருக்கை அனுசரித்துத்தான் அநேக சிறு கைத் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் அமைய முடியும் ; பல புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். ஏற்கனவே அனுமதி பெற்றிருக்கும் மூன்று தொழிற்சாலைகளும் அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே உற்பத்திக்கும் வரும்படியான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற சில ஆண்டுகளாக நம்முடைய சென்னை சர்க்காரும் தொழில் அமைச்சர் அவர்களும் நல்ல முறையில் வேலை செய்து, நம்முடைய ராஜ்யத்தைத் தொழில் துறையில் மிகவும் சிறப்பாக முன்னேற்றியிருக்கிறார்கள். ஆகவே, தொழில் மானியத்தை நான் ஆதரித்து, தொழில் இலாகாவை பாராட்டி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

கனம் உதவி சபாநாயகர் : அதிகப்படியான கனம் அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புவதால், கனம் அங்கத்தினர்கள் சுருக்கமாகப் பேசி, ஏழு அல்லது எட்டு நிமிடங்களுக்குள் உரையை முடித்துக்கொள்ளவேண்டும்.

***திரு. ர. ஜீவரத்னம் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடை ராஜ்ய கைத்தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

சமயங்களில் நமது அமைச்சர் அவர்கள் சற்றுக் கருணையோடு எங்களுடைய வடாற்காடு மாவட்டத்திற்கும் அவர்களை அழைத்து வந்து, அந்த மாவட்டத்திலும் ஏதாவது தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இடம் இருக்கிறதா என்று பார்க்கச் சொல்லி, அமைக்க முடியுமா என்று பரிசீலனை செய்து அமைக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எங்கள் மாவட்டத்திற்கு ஒரு நூற்பு ஆலை வேண்டுமென்று நான் கடந்த ஆண்டு பட்ஜெட் விவாதத்தின்போது கேட்டுக்கொண்டேன். அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு கூட்டுறவு நூற்பு ஆலைக்கு அனுமதி கொடுத்தார்கள். அதற்காக அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். ஒரு நூற்பு ஆலை போதாது. இன்னும் இரண்டு நூற்பாலைகளாவது எங்கள் ஜில்லாவுக்குக் கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மூன்று சிமெண்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டும் என்றும், இரண்டுக்கு ஏற்கனவே இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாகவும், ஒன்று பாக்கியாக இருக்கிறது என்றும் சொல்லப்பட்டது. தயவு செய்து அந்த மூன்றாவது சிமெண்ட் தொழிற்சாலையை எங்கள் மாவட்டத்தில் ஏதாகிலும் ஒரு பக்கத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய சுண்ணாம்புப் படிவம், இன்னும் இதர வசதிகளும் செய்யாறு, வந்தவாசியைச் சுற்றிலும் ஏராளமாக இருக்கின்றன. நான் சொல்வது உண்மையா, இல்லையா என்பதை ஆராய்ச்சி செய்து பார்க்கும்படியாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எங்கள் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை நிறுவுவதற்கு வேண்டிய மூங்கில்கள் ஏராளமாக இருக்கின்றன. ஜவ்வாது மலைப் பிராந்தியத்தில் மூங்கில்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. பெரிய அளவில் இல்லாமற் போனாலும், சிறிய அளவிலாவது ஒரு காகிதத் தொழிற்சாலையை எங்கள் மாவட்டத்தில், எங்காவது ஒரு பதியில் நிறுவவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சேத்துப்பட்டி வட்டாரத்தில் இரும்புக்கனி இருப்பதாகத் தெரிகிறது. தோண்டிப் பார்த்ததில் கிடைத்ததாகக் கைத்தொழில் இலாகா உதவி டைரக்டர் சமீபத்தில் சொன்னார்கள். அம்மாதிரி ஏதாவது வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று ஆராய்ச்சி செய்து பார்க்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வடாற்காடு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் கடந்த ஆண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். ஸ்டீல் ரோலிங் மில் ஒன்றை எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. அதன் மீது சற்றுத் தாராள மனப்பான்மையுடன் இருந்து, கடைசி பட்சம் ஸ்டீல் ரோலிங் மில்லாவது எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் ஜில்லா விவசாயிகள் நிறைந்த ஜில்லா. விவசாயத்தைத் தவிர வேறு எந்த விதமான வசதியும் எங்கள் ஜில்லாவில் இல்லை. ஆறு இருந்தும் ஜலம் இல்லாத நிலையில் பாலாறு ஓடுகிறது. அதை நாங்கள் சொல்லித்தான் தீரவேண்டும். அதேபோல், கோட்டை இருந்தும், அரசன் இல்லை என்கிற நிலைமை இருக்கிறது, அதிகாரம் அந்த அளவில் இருக்கிறது. கோயில் இருந்தும் மூர்த்தி இல்லாததாக இருக்கிறது. நிதி அமைச்சர் அவர்களிடமும் நாங்கள் கோரிக்கை விட்டிருந்தோம், கோயிலில் மூர்த்தியை ஏற்படுத்த வேண்டியது பற்றி. அம்மாதிரி ஜில்லாவாக இருக்கிறது. முப்பது லட்சம் மக்கள் இருந்தும் தொழில் இல்லாத நிலைமையில் நாங்கள் இருக்கிறோம். இந்தக் குறையைப் பூர்த்தி செய்யும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன். நம்முடைய சர்க்காரிலிருக்கும் மும்மூர்த்திகள் தயவு செய்து மனது வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். முதலமைச்சர் அவர்கள் ருத்திரரைப் போன்றவர்கள். நிதி அமைச்சர் அவர்கள் விஷ்ணுவைப் போன்றவர்கள். தொழிலமைச்சர் அவர்கள் பிரும்மாவைப் போன்றவர்கள். உலக சிருஷ்டிக் கர்த்தாக்கள் போன்ற இவர்கள் மூவரும் எங்கள் ஜில்லா மீது கருணை கொண்டு,

பல தொழில்களை அங்கே நிறுவி அங்குள்ள மக்களும் சுபீட்சமாக இருக்கவேண்டும், நல் வாழ்வு வாழவேண்டும் என்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

உரத் தொழிற்சாலை ஒன்றை நம்முடைய ராஜ்ஜியத்தில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டும், அது ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அந்த உரத் தொழிற்சாலையை எங்கள் மாவட்டத்தில் ஆரம்பிக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒரு தொழிலும் டைாற்காடு மாவட்டத்தில் இடையாது. அதற்கு ஆவன செய்யவேண்டும், எங்களுடைய பசிப் பிணியையும், பஞ்சப் பிணியையும் மும்மூர்த்திகள் தீர்த்துவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, எனக்கு முன்னே பேசிய கனம் உறுப்பினர் திரு. மகாலிங்கம் அவர்கள் "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்கிற வாதத்தை ஒப்புக் கொள்ள மறுத்தார்கள். சில நாட்களுக்கு முன், நம்முடைய கனம் உறுப்பினர்களுடைய பார்வைக்கு, "தொழிற்துறை முன்னேறுகிறது" என்ற புத்தகம் அளிக்கப்பட்டது. அது, இந்திய அரசாங்க நிறுவனங்களின் விளம்பரத்திற்காக அளிக்கப்பட்ட புத்தகம் ஆகும். அதில், 1943-ஆம் ஆண்டு முதல் 1958-ஆம் ஆண்டு வரையில் துவக்கப்பட்ட நிறுவனங்களைப் பற்றிய விளம்பரங்கள் இருக்கின்றன. அதில் 13 நிறுவனங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 171 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நிறுவப்பட்ட அந்த நிறுவனங்களில் ஒன்று கூட தமிழ் நாட்டில் இல்லை என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதை விடுத்து, இப்பொழுது நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்குப் பின்னால் வந்திருக்கிற நெய்வேலித் திட்டத்தையும், இண்டி டெலிப் பிரிண்டர் திட்டத்தையும், நீலகிரி கச்சாப்படத் தயாரிப்புத் திட்டத்தையும் திருச்சி கன ரகக் கொதி கலன் திட்டத்தையும், ஆவடி பாதுகாப்புச் சாதனத் திட்டத்தையும் எடுத்துக் கூறுவார்கள்.

நூற்றெழுபத்தோரு கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை விளம்பரப் படுத்துகிற ஒரு வெளியீட்டில் தமிழ் நாட்டைப் பற்றிக் குறிப்பிடக் கூடிய அளவுக்கு ஒன்றும் இல்லை என்று சொன்னால், இப்போது இங்கு இவற்றை நிறுவும்போது இன்னும் எத்தனை கோடி ரூபாய் மதிப்புள்ள தொழில்களை வட நாட்டில் நிறுவியிருப்பார்களோ என்றே எண்ண வேண்டியிருக்கிறது. ஆக, "வட நாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது" என்பதிலே வாதம் இல்லாமல் இல்லை என்பதைக் கனம் உறுப்பினர்கள் உணர வேண்டும். நாங்கள் இப்படிச் சொல்வதால், பொறாமைக் காரணமாகக் கூறுகிறோம் என்று சொல்லாமல் தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக வரும் குற்றச்சாட்டு என்பதை ஆளுங் கட்சியில் இருக்கும் தோழர்கள் ஏற்றுக் கொண்டு, அதற்காகப் போராடி, நம்முடைய தமிழ் நாட்டை வாழ்விக்க அவர்களும் துணை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் நல்ல தெளிவு உணர்ச்சியோடு இருக்கிறார்கள். ஆனால், அவர்களிடத்தில் நன்னம்பிக்கை இல்லை என்று தான் நான் நினைக்கிறேன். எங்காவது நிலக்கரி கிடைத்தது, இரும்பு கிடைத்தது என்று அங்கத்தினர்கள் கூறினால், "கறுப்பாக இருப்பதெல்லாம் இரும்பாகி விடாது, கரியாக இருப்பதெல்லாம் நிலக்கரியாகி விடாது" என்ற நினைப்பு அவர்களுக்கு இருக்கிறது. அந்த நினைப்போடு எந்தப் பொருளையும் அணுக வேண்டாம் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருவள்ளுவர் ஓரிடத்தில்,

DEMAND NO. XX—INDUSTRIES AND
DEMAND NO. XL—CAPITAL OUTLAY ON
INDUSTRIAL DEVELOPMENT

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உழவர்களைப் பார்த்துச் சொன்ன ாக நான் படித்தேன்.

புலவர் கா. கோவிந்தன் : எந்தக் கண்கொண்டு பார்க்கிறோமோ ந்தக் கண்கொண்டு அதற்குப் பொருள் காணலாம். நிலத்தை உழுது ட்டுந்தான் பயன் கொள்ளலாம் என்று நினைக்க வேண்டாம். நிலத்தில் றைந்து கிடக்கும் பொருள்களைப் பெரிய அளவில் பெற்று வளம் பறலாம் என்று அமைச்சர் அவர்களுக்கு உணர்த்தி, அந்தத் றையிலே பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 10-30

அடுத்து எனக்கு முன்னே பேசிய வடாற்காடு மாவட்ட உறுப்பினர் திரு. ீவரத்தினம் அவர்கள் வடாற்காடு பற்றி வாதாடினார்கள். அதற்காக ன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது ன்கிற பொதுக் குறை எங்களுக்கு இருப்பது போலவே இந்த மாவட்டத் தைப் பொறுத்த வரையில் வடக்கே வாழ்கிறது, தெற்கே தேய்கிறது ன்று குறிப்பிட விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் கொடுத் ிருக்கிற புத்தகத்தில் வடாற்காடு சம்பந்தமாக 12 திட்டங்கள் 92 லட்சம் ரூபாயில் வகுக்கப்பட்டிருக்கிறது. வேலூருக்கு இரண்டு, ஆம்பூருக்கு ஒன்று, ாட்பாடிக்கு நான்கு, அரக்கோணத்திற்கு இரண்டு, விண்ணமங்கலத்திற்கு ன்று, குடியாத்தத்திற்கு ஒன்று, வாலாஜாபாத்திற்கு ஒன்று என்று ந்தத் திட்டங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்படியெல்லாம் அந்த ாவட்டத்தில் வடக்கு பகுதிக்கே பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவே விர தெற்குப் பகுதிக்கு ஒதுக்கப்படவில்லை. தெற்கு வட்டத்திலேயும் ட செய்யார் ரெவின்யூ டிவிஷன் மிக மிகப் பின் தங்கியிருக்கிறது. தெற்குப் பகுதியும் அந்த மாவட்டத்தில் வளம்பெறத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக கைத்தறித் தொழிலைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், "இப்போது கைத்தறித் தொழில் எந்த அளவு வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் உணர்வார் ள். அதற்காகக் கண்காட்சி வைத்து 5 நையா பைசா கூடக் கழிவு கொடுக்கப்படும்" என்று சொன்னார்கள். தமிழர்கள் புத்தாடை கட்டி கிழ்வெய்துகிற ஒரே ஒருநாள் தைத் திங்களில் வரும் பொங்கல் விழாவாகும். அந்த தைத் திங்களிலேயே கைத்தறி ஆடை அதிகம் செலவாக வில்லையென்றால்—கண்காட்சியை வைத்து நடத்துவதனால் மட்டும் நம் மாநிலத்திலேயே அதிகப்பயன் விளையும் என்று நான் கருதவில்லை. கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல தமிழகத்தில் உற்பத்தியாகிற கைத்தறி ஆடைகளை தமிழகத்திலேயே கண்காட்சி வைத்துக் காட்டுவதனால் மக்கள் அதைப் பார்த்து ஏராளமாக வாங்குவார்கள் என்று நினைப்பது சரியாகாது. காரணம் கண்காட்சியில் மதுரை சேலை, கோயம் புத்தூர் சேலை ஆகியவை போன்று இந்த மாநில ஆடைகளே தான் இருக்கும். இதை முன்னே அவர்கள் பார்த்திருப்பார்கள். ஆகவே இந்தக் கண்காட்சியை வேறு நாடுகளில் வைத்தால்—குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் நம்முடைய வண்ணம் மாறும் கைத்தறி ஆடைகளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாகக் கேள்விப்படுவதனால்—அங்கெல்லாம் கண்காட்சி சாலை வைத்து நம்முடைய கைத்தறித் துணிக்கு மார்க்கெட் தேடுவது தான் பயனுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு காலத்தில் வெளிநாட்டில் இருந்து பொன்னைக் கொண்டு வந்து, இந்நாட்டில் கொட்டிய மரக்கலங்கள் இங்கிருந்து மிளகையும், கைத் தறித் துணிகளையுமே ஏற்றிச் சென்றன என்று தெரிகிறது. மிளகுக்கு முதல் இடம் இருந்தால் அடுத்தது நம் நாட்டுத் துகில்கள் தாம் இடம் பெற்றிருந்தன.

அடுத்து நூல் விலையேற்றத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நூல் விலை ஏற்றத்தினால் இன்று பெரும் அளவு கைத்தறிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கைத்தறிகள் நசித்துப் போகாமல் காப்பாற்றப்படுவதற்கு கரை போட்ட வேஷ்டி, கரை போட்ட சேலை இவற்றை கைத்தறிக்கே ஒதுக்கி வைத்துவிடவேண்டும். மில்கள் இவற்றை உற்பத்தி செய்யாது தடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யலாமே என்றால், அமைச்சர் அவர்கள் மில்காரர்களுக்கு அனுகூலமாக—"அப்படிச் செய்தால் அவர்கள் மில் துணி உடையில் கைத்தறி போல் சாயம் ஏற்றி கைத்தறித் துணியுடன் போட்டியிட ஆரம்பிப்பார்கள்" என்று சமாதானம் சொல்லிவிடுகிறார்கள். எப்படியோ இவர்கள் நினைப்பு மில்காரர்களுக்கு அனுகூலம் செய்வதாகவே இருக்கிறது. இப்படிப்பட்ட கருத்துக்களினால் கைத்தறிகளை வாழ்விக்க முடியாது. மேலும் இன்றைக்கு கைத்தறிகளின் அழிவுக்கு மில்கள் மாத்திரம் பகையாக இருக்கவில்லை. விசைத்தறிகள் வேறு பெரும் போட்டியாக இருக்கின்றன. இன்றையதினம் நம்முடைய மாகாணத்திலுள்ள கைத்தறிக் கூட்டுறவு இயக்கத்தை எடுத்துக்கொண்டால் விசைத்தறியாளர்களே ஆட்சிக்குழுவில் அதிகம் இருப்பார்கள். இந்த விசைத்தறிகள் தாம் பெரும் போட்டியாக கைத்தறிகளுக்கு இருக்கின்றன. கைத்தறி கூட்டுறவு இயக்கத்தில் வீவிங் மெம்பர்கள் தாம் இருக்க வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியை நல்ல முறையில் கடைப்பிடித்து உண்மையான கைத்தறியாளர்களுக்கு ஒரு நல்வாழ்வு அளிக்கவேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். நம் நாடு தொழில் துறையில் முன்னேறவில்லை என்று சிலர் சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையையும், இப்போதுள்ள நிலைமையையும் பார்த்தால் எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள முடியும். திருநெல்வேலியில் இருந்து சென்னைக்குக் கார் மார்க்கமாகவோ, ரயில் மார்க்கமாகவோ வந்தால் வழி நெடுக இரு மருங்கும் எத்தனை தொழிற்சாலைகள் வளர்ந்திருக்கின்றன என்பதை எல்லோரும் காண முடியும். நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். நம் நாட்டு மக்கள் விவசாயத்தையே நம்பி இருந்தார்கள். தொழில் வளர்ச்சி விவசாய மக்களுக்கும் ஒரு புது வாழ்வு அளிக்க பயன்படும். அவர்களுடைய தொழிலை லாபமுடையதாகப் பாதுகாக்கவும் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆனால் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். எத்தனைதான் தொழில் துறையில் வளர்ந்தாலும் அதனால் ஏழை எளிய மக்களுடைய பொருளாதார வாழ்வு சீர்படுவதற்கு வழி வகுக்கவில்லையென்றால் நன்மையாக இருக்காது. ஏழைகளாக உள்ளவர்களுக்கு தொழிலில் ஈடுபடவும், தொழிலிலே பயிற்சி அடையவும், புதுத் தொழில்களை ஆரம்பிக்கவும் தக்க வசதி அளிக்கப்பட வேண்டும். புதுத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஏழை எளியவர்களுக்குப் போதுமான ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்படுவதில்லை. இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்டுமெண்டு கார்ப்பரேஷன் உதவி பெற்று ஹரிஜனங்கள் தொழில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இண்டஸ்டிரியல் எஸ்டேட்டிலோ அல்லது காலனியிலோ ஒரு யூனிட்டை எடுத்து நடத்த முன்வந்தால் போதுமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அவர்களிடத்தில் பொருளாதார வசதியோ குறைவு. பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் ரூபாய்கள் மதிப்புப் பெருமான சொத்துக் காட்டவேண்டுமென்றால் அவர்களால் முடியாமல் போகிறது. ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமானால் கூட 20 ஆயிரம் பெருமான சொத்தை அடைமானம் வைக்க வேண்டும் என்

களுக்கே லைசென்சு கிடைக்கிறது. ஆகவே சாதாரண ஏழை, எளிய ஹரிஜன, விவசாய மக்கள் ஒரு தொழிலை ஆரம்பிக்க முன்வந்தால் அவர்களுக்கு தொழில் வைக்கக் கடன் உதவி அளிப்பதோடு, அவர்கள் அடமானம் வைப்பதற்கு சொத்து இல்லாவிட்டாலும் அவர்களுக்கு சர்க்கார் ஒரு உத்தரவாதம் அளித்து சொத்து அடமானம் வைக்காமலே தொழிலைத் துவங்க லைசென்சு வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் திருநெல்வேலி மாவட்டத்தில் பல தொழில்கள் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கின்றன். கனிப் பொருள்கள் கிடைக்கவும் வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பற்றி கனம் உறுப்பினர் பாலகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை உன்னிப்பாக அமைச்சர் அவர்கள் கவனித்து அதைப் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய நாட்டில் சோஷலிஸ சமுதாயம் உருவாக்கப்பட வேண்டுமென்றால் தொழில் துறையில் பிற்பட்ட ஏழை எளிய ஹரிஜன மக்களுடைய நிலையையும் உயர்த்தி ஈடுபடச் செய்வதற்கான மார்க்கங்களைக் கண்டுபிடித்தாகவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தொழில் இலாகாவை ஏற்றுக் கொண்ட பிறகு நம்முடைய ராஜ்ஜியத்திலே மிக நல்ல முறையிலே, விரைவாக தொழில்களை யெல்லாம் ஏற்படுத்தி ராஜ்யத்திற்கு ஒரு சுபிட்சத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு பாக்டரி விதம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு நாளைக்கு இரண்டு பாக்டரிகள் வீதம் ஆரம்பிக்க முடியுமென்றும் அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதிலிருந்து உண்மையிலேயே நம்முடைய தமிழகத்தில் தொழில் வளம் இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி, எதிர்க்கட்சிக்காரர்கள் புரிந்து கொள்ள முடியும் என நம்புகிறோம். சில வருஷங்களாகப் பாடி வரக் கூடிய பல்லவியான "தென்னாடு தேய்கிறது, வட நாடு வாழ்கிறது" என்பது அரசியலுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு பல்லவி என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த அளவுக்குத் தொழில் முன்னேற்றம் தமிழகத்தில் ஏற்பட்டபிறகும் கூட இதே பல்லவியை அவர்கள் பாடுவார்களேயானால் உண்மையிலேயே அது வருந்தத்தக்க நிலைமை ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய ராஜ்ஜியத்திலே பெரும் தொழில்கள், சிறிய தொழில்கள் குடிசைத் தொழில்கள் என்று வகை வகையாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. கைத்தறித் தொழிலுக்கு நம்முடைய அரசாங்கம் மிக அதிகமான அளவில் ஆதரவு கொடுத்து வருகிறது. இன்றைக்கு இந்தத் தொழில்களுக்கெல்லாம் பாதுகாப்பு இருக்கிறதென்றால் அதற்குக்காரணம் நம்முடைய மாகாண சர்க்காரின் முயற்சியும் ஆதரவுந்தான் என்று நான் கூறினால் அது மிகையாகாது. கைத்தறிக்காக அவ்வப்போது இந்திய சர்க்கார் ரிபேட் கொடுத்து வருகிறார்கள். அந்தப் பணம் அங்கிருந்து வருவதற்குத் தாமதமானாலும் நம்முடைய சர்க்கார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பல லட்சக்கணக்கான ரூபாயை அள்ளி அள்ளிக் கொடுத்திருப்பது பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

போர் சுமார் ஒரு லட்சம் பேர் இருப்பார்கள். மேலும் இந்த நைஸ்ரகத் தொழிலே நம்பி வாழ்கிறவர்கள் 2½ லட்சம் பேர் இருப்பார்கள். இந்தத் துணிகளைத் தயாரிப்பதற்கு 60-ஆம் நம்பர் குப்ரஸா என்று சொல்லக்கூடிய ஜெர்மன் பம்பர் பட்டு உபயோகிக்கப்படுகிறது. இந்த ரகப் பட்டு இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவதில்லை. சமீப காலத்திலிருந்து இந்தப் பட்டு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. முன்பு, உண்மையாக உபயோகிப் பவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. அதுவும் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப்பட்டாலும் கூட ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் மூலமாகப் பட்டு வழங்கப்படும் என்று நம்முடைய சென்னை ராஜ்ய கைத்தறி இயக்குநர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்திருந்தும் கூட இந்த வருஷத்தில் சிறிது கூடப் பட்டு கிடைக்க வில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தொழிலும் கைத்தறித் தொழில் தான். பம்பர் பட்டு கிடைக்க வில்லையென்று சொன்னால் அதிலே வேலை செய்கிற நெசவாளர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். வெளிநாட்டுலிருந்து இறக்குமதி செய்வது தற்போது நிறுத்தப்பட்டிருந்தாலும் கூட, கொஞ்சம் பட்டாவது இறக்குமதி செய்து அவர்களுக்குக் கொடுத்தால் தான் நைஸ் ரகங்கள் எல்லாம் காப்பாற்றப்படும், அந்த தொழிலாளிகள் காப்பாற்றப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணிகளுக்கு விசேஷ ரிபேட் கொடுக்கப்படுகிறது. பொருள்காட்சிக்குச் சென்று பார்த்தோம். ஆனால், நைஸ் ரகத் துணிகளுக்கு, பம்பர் நூல் கலந்து தயார் செய்யப்பட்ட துணிகளுக்கு ரிபேட் கொடுப்பதில்லை. பட்டு கலந்த அந்தச் சரக்குகளுக்கும் ரிபேட் கொடுத்தால் அதுவும் நல்ல முறையில் விற்பனை ஆவதற்கு வசதி யாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது தங்கக் கட்டுப்பாட்டின் காரணமாக சில்க் தறிகளுக்கும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சில்க் தறிகளிலே ஜரிகை பார்டர்கள் வைத்து நெசவு செய்யப்பட்டு பட்டுச் சேலைகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் தங்கம் கிடைக்காததன் காரணமாக அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்குக் கஷ்டம் வரும் என்று நினைக்கிறேன். ஜரிகை சேலை தயார் செய்கின்றவர்களுக்கு 500 கிராம் தங்கம் கொடுக்கப் படும் என்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஐநூறு கிராம் தங்கத்தை வைத்துக் கொண்டு மூன்று அல்லது நான்கு நாட்கள் தான் வேலை செய்ய முடியும். ஆகவே, அவர்களுக்கு மாதம் முழுவதும் வேலைக் கிடைக்கக் கூடிய வகையில் ஜரிகை மார்க்குகள் வாங்கிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் மலையாள ராஜ்ஜியத்திற்காக, முண்டு என்று சொல்லக்கூடிய பட்டுத் துணி ஜரிகைக் கரைப் போட்டு அதிகமான அளவில் தயாரிக்கப் படுகிறது. ஜரிகை மார்க் கிடைக்கவில்லையென்று சொன்னால் அந்தத் தொழிலாளர்களுக்குக் கஷ்டம் ஏற்படும். ஆகவே, ஜரிகை மார்க்குகள் அந்தந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையிலே அமைசசர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

சூரத்திலே ஜரிகை மார்க் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அது போன்ற தொழிற்சாலையை நம்முடைய ராஜ்ஜியத்திலும் வைத்து, தங்கத்தை மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கி ஜரிகை மார்க்கைத் தயார் செய்து கொடுத்தால் நம்முடைய கைத்தறித் தொழிலாளர்களுக்கு மிகுந்த உதவி யாக இருக்கும். ஆகவே, அந்தத் தொழிற்சாலையை நம்முடைய ராஜ்யத் திலும் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாம் பரிசீலனையில்தான் இருக்கிறது என்று கருதுகிறேன். உடனடியாக பரிசீலனையை முடித்து நிதி கார்ப்பரேஷன் செயல்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு முறையிலே சேராத நெசவாளர்களுக்கு உதவி செய்வதற் காக மார்க்கெட்டிங் சொஸைடி மதுரை நகரத்தில் ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த சொசைடியையும் கூட்டுறவு சொஸைட்டி என்ற அளவிலேதான் அவைகளை நடத்த வேண்டும். ஆகவே, அந்த சொசைடிகளில் இருந்தும் கூட நம்முடைய ராஜ்ய சொசைடிகள் துணிகளை வாங்கிக் கொள்ள அமைச்சர் அவர்கள் ராஜ்ய சொஸைடி தலைவர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அந்தத் துணிகளையும் வாங்கிக் கொள்ளும்படிச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, கூட்டுறவு நூற்பு மில் களுக்குக் கொடுத்தது போக 75,000 கதிர்கள் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். மதுரை ஜில்லாவுக்கு கொடுக்கப்பட்ட நூற்பு மில்லுக்கு மேலும் 12,000 கதிர்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எ. சுவாமிதாஸ் :** மதிப்பு மிக்க உதவி சபாநாயகர் அவர்களே, சென்னை மாநிலம் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையை விட இப்போது தொழில் துறையில் மிகவும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. தொழில் துறையில் நாம் மிகவும் முன்னேறியிருக்கிறோம். இப்போது நாம் எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகளை பார்க்க முடிகிறது. இந்த அளவில் சென்னை மாநிலம் முன்னேறிக் கொண்டிருந்தாலும் எங்கள் கன்னியா குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழில்துறையில் நாங்கள் இன்று எந்தளவும் முன்னேறவில்லை என்பதை இந்த மன்றத்தில் நான் கூறித்தானகவேண்டும். அங்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு தொழில் ஸ்தாபனம் மணவாளக்குறிச்சி மணல் கம்பெனி. அங்கு இல்மினைட், சிர்கன், மானேஸைட் போன்ற மினரல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதற்காக அங்கு இரண்டு ஆலைகள் உள்ளன. ஆனால் இப்போது ஒரு ஆலை மூடப்பட்டு விட்டது. ஒரு ஆலைதான் இன்று அங்கு இயங்கிக் கொண டிருக்கிறது. அதை மனதில் வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் மூடி யிருக்கிற ஆலையைத் திறந்து வைத்து அத்தொழிலை முன்னேற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல நிபுணர்கள், மணவாளக்குறிச்சியில் உள்ள மணலில் இருந்து அணு சக்தி உற்பத்தி செய்வதற்குரிய தோரியம் நமக்கு கிடைக்கலாம் என்று கருதுகிறார்கள். ஆகவே அணு சக்தி உற்பத்தி செய்வதற்குரிய தோரியம் அங்கு கிடைப்பதாக இருக்குமாயின் அதையும் மனதில் வைத்துக் கொண்டு மணவாளக்குறிச்சியில் உள்ள மணலை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தொழில் துறையில் எங்கள் மாவட்டம் மிகவும் பின்னணியில் இருக்கிறது என்று கூறினேன். அங்கு வேறு எந்தத் தொழிலும் இல்லை. குடிசைத் தொழிலாக அங்கு நெசவுத் தொழில் மட்டுமே இருக் கிறது. அங்குள்ள நெசவாளர்களைப்பற்றி நான் ஒன்று கூற ஆசைப்படு கிறேன். நெசவாளர்களை முன்னேற்றுவிக்க வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு ரிபேட் கொடுக் கப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒரு சில கூட்டுறவு சங்கங்களில் செய்கிற தில்லுமுல்லுகளை நான் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறாமல் இருக்க முடியாது. துணியை விற்கிறார்களா என்றால் இல்லை. ஆனால் துணிகளை விற்றதாக பொய் கணக்கு எழுதி ரிபேட்டை மட்டும் அரசாங்கத்திலிருந்து பெற்று விடுகிறார்கள். அப்படி ரிபேட்டைப் பெற்று அந்த கூட்டுறவு சங்கத்தை நடத்துகிறவர்கள்தான் அந்தப் பணத்தால் லாபம் அடைகிறார்களே தவிர அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிற நெசவாளி களுக்கு அது கிடைப்பதாக இல்லை. ஆகவே இதையும் பரிசீலனை செய்து அரசாங்கம் கொடுக்கிற மான்யங்கள், ரிபேட் போன்றவை தொழிலாளர் களுக்கு போய் சேருகிறதா என்பதை நன்கு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் மிகுதியாகக்

கூடிய மூலப்பொருள்கள், ரப்பர், மூங்கில், மரவள்ளிக்கிழங்கு இவற்றை பயன்படுத்தி அங்கு ஏதாவது தொழில் ஆரம்பிக்க முடியுமா என்று ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரப்பர் தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்குரிய ஏற்பாடு இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஏனெனில் அரசாங்கமே அங்கு ரப்பர் மரங்களைப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். மூங்கிலும் அங்கு ஏராளமாகக் கிடைப்பதால் அங்கு ஒரு காகித தொழிற்சாலை ஏற்படுத்த வசதியிருக்கிறது. அதோடு மரவள்ளிக் கிழங்கில் இருந்து மாவு எடுத்து சவ்வரிசி போன்றவை செய்ய முடியும் என்று கருதுகிறார்கள். இந்தத் தொழில்களை அங்கு தனியார் யாராவது ஆரம்பிப்பார்களா என்று பார்த்தால் எங்கள் மாவட்டத்தில் அத்துணைய பணம் படைத்தவர்கள் இல்லை. ஆகவே தனியார் துறையில் நடத்த வாய்ப்பில்லை. ஆகவே அரசாங்கமே முன் வந்து இவற்றை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக தேக்கு மரம் அங்கு ஏராளமாக கிடைக்கிறது. அதைப் பயன் படுத்தி அங்கு ஒரு ப்ளைவுட் பாக்டரி அமைக்க வசதி வாய்ப்பு இருக்கிறது. அதையும் பயன்படுத்தி அரசாங்கமே அதை அமைக்கலாம் என்று கருதுகிறேன். பெரிய ஆலை என்று சொல்கிற அடிப்படையில் ஒரு நூற்பாலை எங்கள் மாவட்டத்திற்கு வழங்கியிருப்பதாக அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அம்மாவட்ட மக்கள் சார்பில் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நூற்பாலையை நிறுவ வேண்டுமென்ற எண்ணத்தோடு 1½ ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கூட்டத்தை கூட்டுவித்தார்கள். அப்படி கூட்டுவித்த கூட்டத்திலிருந்து ஒருவரை சீப் ப்ரமோட்டராக நியமித்தார்கள். அந்த சீப் ப்ரமோட்டர் தலைமையில் அந்த ஆலை நடத்துவதற்குரிய விதத்தில் ஷேர் காப்பிடல் பிரிவு செய்தார்கள். ஏறத்தாழ பொது மக்களிடமிருந்து 3 லட்சம் பிரிவு செய்யப்பட்டது. இப்போது அரசாங்கத் தரப்பிலிருந்து ஒரு சீப் ப்ரமோட்டரை நியமித்திருப்பதாக கேள்விப்படுகிறேன். அப்படி நியமிக்கப்பட்ட சீப் ப்ரமோட்டரைப் பற்றி இந்த மன்றத்தில் குறிப்பிட வேண்டிய தேவை இல்லாமல் இருந்தாலும் கூட, அரசாங்கத் தரப்பில் சீப் ப்ரமோட்டர் நியமிக்கப்படுவதாக இருந்தால் அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசித்து செய்வது நல்லது. இப்போது நியமிக்கப்பட்டிருக்கிற சீப் ப்ரமோட்டர் அவ்வளவு செல்வாக்கு வாய்ந்தவர் அல்ல. ஆகவே அந்த ஆலை வளர்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். ஆகவே இதை மனதில் வைத்துக் கொண்டு மறுபரிசீலனை செய்து நல்ல ஒருவரை, செல்வாக்குள்ள ஒருவரை, நல்ல திறமை உள்ள ஒருவரை, சுயநலப்பற்று அற்ற ஒருவரை சீப் ப்ரமோட்டராக நியமித்து அந்த ஆலை இயங்க வழிகோல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குவேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. அங்கு சுருங்கிய நிலப்பகுதியில் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். கிட்டத்தட்ட 10 லட்சம் மக்கள் அங்கு வாழ்கிறார்கள். அங்கு பெண்களுக்கு வேலையே கிடையாது. எல்லோரும் எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி இருக்கிறார்கள். ஆகவே அங்கு பெண்கள் தொழில் செய்வதற்குரிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க—தஞ்சையில் சைகிள் அசெம்ப்ளிங் தொழிற்சாலை ஏற்படுத்தியிருப்பதைப் போல்—ஒரு ரேடியோ அசெம்ப்ளிங் தொழிற்சாலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு தனியார் யாராவது அம்மாவட்டத்திற்குள் ஆலை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கவேண்டும். கூட்டுறவு ஆலைகளுக்குத்தான் அனுமதி வழங்க வேண்டுமென்று அரசாங்கக் கொள்கையிருந்தாலும்கூட எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதற்கு விதிவிலக்கு அளித்து தனியார் யாராவது நடத்த முன் வந்தால், அதற்கு அவர்கள் அனுமதி கோரினால் அனுமதி வழங்கி வேலை வாய்ப்பு ஏற்படும்படியான நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்னர் ஒரு தடவை நான் குறிப்பிட்டேன், வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று. எல்லா மாவட்டங்களும் முன்னேற வேண்டியதுதான். ஆனால் எங்கள் கன்னியா குமரி மாவட்டத்திற்கு ஒன்றும் செய்து தரவில்லை என்று குறையாகச் சொல்லவில்லை, எங்களுக்குள்ள தேவையை மனதில் வைத்து அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்ட நிலையை மனதில் வைத்துக் கொண்டு [illegible]

மீண்டும் இந்த மன்றத்தில் கூறுகிறேன், எங்கள் மாவட்டத்தை நீங்கள் கடைக்கண் பார்வையோடு நோக்கி கருணை காட்டி எங்களுக்கு வேண்டியதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்** : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் தொழில்துறை மானியக் கோரிக்கையை வரவேற்று சில கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன்.

" இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் "

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். நமக்கு ஒன்றும் இல்லை, எந்த நலமும் நமக்கு கிடையாது. ஆகவே ஒன்றுமே செய்ய இயலாது என்ற நிலையில் ஒரு விவசாயி எண்ணி உட்கார்ந்திருப்பானானால் அவனைப் பார்த்து அந்நிலம் சிரிக்குமாம், இவன் எங்கே பிழைக்கப் போகிறான் என்று. நம்நாடு ஒரு ஏழை நாடு. நாம் சுதந்திரம் பெற்றபோது ஒரு நலமும் இல்லாத நிலையில் சுதந்திரம் பெற்றோம். நமக்கு எவ்வித வசதியும் இல்லை என்று எண்ணி அசந்து போய் உட்காராமல் அதற்கு மாறாக நாம் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி வந்திருக்கிறோம். குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு தொழில் பேட்டை, ஒரு தொழில் நிலையம் என்று ஐந்து ஆண்டுகளில் பல தொழில் நிலையங்களை ஏற்படுத்திய பெருமை நம் சர்க்காரைச் சாரும் என்பதை யாரும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடக்கிற இந்தக் காலத்தில் விதி செய்த சதியைக்கூட பொருள்படுத்தாமல் ஒரு நாளைக்கு இரண்டு தொழிற்சாலைகளாக வருகிற ஐந்தாண்டுகளில் ஏற்படுத்த இருக்கிறது என்று தொழில் அமைச்சர் கூறுகிறபோது வள்ளுவர் கூறியிருக்கும் வாக்குத்தான் என் ஞாபகத்திற்கு வருகிறது.

" ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர் "

என்ற வள்ளுவர் பெருந்தகையார் வாக்கிற்கிணங்க விதி செய்த சதியைக் கூட நாம் பொருட்படுத்தாமல், கலங்காமல், அசந்திருக்காமல் தொழில் துறையை முன்னேற்ற முன்வந்து விதி செய்த சதியைக்கூட புறமுதுகிட்டு ஓட்டும்படியான நிலையில் நாம் பணியாற்றக் கூடியதைக் குறித்து அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதைக் கண்டு இந்த தமிழக மாமன்றம் பெருமைப் படத்தான் வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடுகூட தொழில் அமைச்சர் அவர்களால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையை நாம் படிக்கும்போது, பொதுவாக நம்முடைய தமிழகம் தொழில் துறையிலே அடைந்திருக்கிற முன்னேற்றத்தைத் தொகுத்துக் கூறியிருக்கிறார், தனிப்பட்ட முறையில் அதை நாம் காண இயலாது, காண்பதற்கு வாய்ப்புக்கூட இல்லை; எல்லாவற்றையும் தொகுத்து அச்சிட்டுக் கொடுத்தால்தான் பரந்த அளவில் காணக்கூடிய முறையில் நமக்கு உதவிகரமாக இருக்கிறது; அந்த முறையில் தனியார் துறை என்றும், சர்க்கார் துறை என்றும், கூட்டுறவுத் துறை என்றும் ஆகிய மூன்று துறைகளிலேயும், தொழிலை முன்னேற்றக் கூடிய பல வழிவகைகளைக் காணக் கூடிய முறையில் கொடுக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையைக் காணும்போது மிகவும் பெருமைப்படக் கூடிய அம்சமாக இது விளங்குகிறது என்பதை நான் இந்த மாமன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 11-00 a.m.

பின்பு, வெள்ளையர் ஆட்சிக்கு முன்பு நம் தமிழகத்தில் தொழில்கள் எப்படி இருந்தன, தொழில்கள் இருந்தனவா என்பது பற்றி கம்பர் கூறுகிற ஒரு பாட்டினைக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

சாதாரணமாக தொழிற்சாலைகள் அல்லது தொழில் என்று சொல்லும் போது, ஆண்டவன் அல்லது இயற்கை என்று கூறுகிற ஒன்றினால் [illegible] கப்பட்டிருக்கிற, அல்லது சமைத்துக் கொண்டிருக்கிற, பெரிய [illegible]

நிலையங்களையும், அதிலிருந்து உருவாகின்ற உற்பத்திப் பொருள்களையும் நாம் மறந்து விடுகிறோம். காரணம் என்ன என்றால் இது விஞ்ஞான உலகம். அறிவிலுடைய ஒரு மமதை, செருக்கு அதிகமாக உள்ள காலம். அந்த அறிவுச் செருக்கினால், செருக்கு என்பது இரண்டு வகைகளாகச் சொல்வார்கள்; ஒன்று, செல்வச் செருக்கு என்றும், இரண்டாவது கல்விச் செருக்கு என்றும இரண்டு கூறு படுத்திக் கூறுவது நூல்களின் மரபு. அந்த வகையை எடுத்துப் பார்ப்போமானால் அறிவுச் செருக்கு என்று சொல்லக்கூடிய விஞ்ஞானச் செருக்கினால் இயற்கையில், ஆண்டவன் சிருஷ்டியில் ஏற்படுகிற தொழில்களையும், அதனால் விளைகிற விளைவுகளையும் மறந்துவிடுகிறோம். காரணம் என்ன என்றால், அறிவுச் செருக்கு, மனித நிலையை அழிக்கக்கூடிய தன்மையில் அணுகுண்டு தொழிற்சாலைகளைக்கூட ஆக்கிக்கொண்டிருக்கும் நிலையில் இருப்பதைக் காண்கிறோம். கம்பர் அப்படிச் சொல்லவில்லை. அவர் சொல்லுகிறார்—

“ கலம் சுரக்கும் நிதியம் கணக்கிலா
நிலம் சுரக்கும் நிறைவளம் நன்மணி
பிலம் சுரக்கும் பெறுதற்கு அரியதம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம் ”

என்று கூறுகிறார். ஒழுக்கம் என்று சொல்லப்படுகிற ஒன்று; நிறை பேருள்ளம் என்று சொல்லப்படுகிற ஒன்று, “ உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் ” என்று வள்ளுவர் கூறிய மனப்பான்மை ஆக்குகிற ஒன்று, இந்த உலகத்திலே இருக்கிறது என்பதைக் கம்பர் பெருமான் சுட்டிக் காட்டுகிறார். அந்தத் தொழில் பேட்டைகள் நம்முடைய நாட்டில் இருந்ததால்தான் நம்முடைய இந்தப் பெரிய நாட்டிலே மகாத்மாஜி அவர்கள் உருவானார்கள், மனிதருள் மாணிக்கம் என்று போற்றப்படுகிற நேருஜி அவர்கள் உருவானார்கள், தமிழகத்தின் தலை சிறந்த தலைவர் என்று போற்றப்படுகிற அன்பார்ந்த காமராஜ் அவர்கள் உருவானார்கள் என்று கூறிக்கொள்கிறேன். அதைத்தான் கூறுகிறார் கம்பநாட்டார்—

“பெறுதற்கு அரியதம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்”

என்று கூறுகிறார்.

மக்கள் சமுதாயம் என்கிற ஒரு அமைப்புக்கு நல்ல குலங்கள் என்கிற தொழில் சாலைகள், ஒழுக்கம் என்றும் நிறைபேருள்ளம் என்றும் சொல்லுகிற ஊதியத்தைக் கொடுத்து அதிலிருந்து பண்பட்ட மனித சமுதாயத்தை உருவாக்குகின்றது “ குலம் ” என்று சொல்லப்படும் தொழிற்சாலைகள் அதைத்தான் மறந்து விடுகிறோம். காரணம் அறிவுச் செருக்குத்தான்.

“ கலம் சுரக்கும் நிதியம் ” என்று சொல்லுகிறார். அந்தக் காலத்தில் கப்பல்கள் ஏராளமாகத் தமிழகத்தில் இருந்தன. கப்பல்கள் தமிழகத்தில் இருந்தன என்று சொல்லும்போது, கப்பல்கள் கட்டுவதற்கு உண்டான தொழிற்சாலைகள் இருக்கத்தான் இருந்திருக்கவேண்டும். இல்லையென்றால் கப்பல்கள் வர முடியாது. இப்படி கப்பல்கள் கட்டக் கூடிய தொழிற்சாலைகள் அமைந்திருப்பதோடு, அந்தக் கப்பல்களிலே ஏற்றிக்கொண்டு செல்லுகிற பண்டங்கள் நிறைய உற்பத்தி ஆகியிருக்க வேண்டும். அப்போதுதான் கப்பல்களுக்கு உபயோகம். வருமானம், நிதி, அவைகளினின்று வரவேண்டுமானால், பண்டங்கள் நிறைய உற்பத்தியாகியிருக்க வேண்டும். உற்பத்தி செய்யக் கூடிய தொழில்கள் நிறைய அமைந்திருக்க வேண்டும். இதைக் குறிப்பாக உணர முடிகிறது. (மணி அடிக்கப்பட்டது) ஒரு அடி தான் பாக்கியிருக்கிறது. (சிரிப்பு.)

“ நிலம் சுரக்கும் நிறைவளம் ”, ஏகப்பட்ட தானியங்கள், கணக்கிலா தானியங்களை அந்தத் தொழில்கள் கொடுத்தன, நிலங்கள் என்று சொல்லக் கூடிய அந்தத் தொழிற்சாலைகள் என்று கூறுகிறார். தொழில்கள் கொடுத்தன என்றால் சும்மா கொடுக்க முடியாது. அரசாங்கம் அதற்கு உண்டான சூழ்நிலையை சிருஷ்டி செய்து கொடுத்திருக்கவேண்டும். விவசாயப் பெருமக்கள், விவசாயத் தொழிலாளர்கள் நன்றாகப் பாடுபட்டிருக்க வேண்டும். இரண்டும் இல்லாவிட்டால் நிலம் வளத்தைக் கொடுத்திருக்க முடியாது. அந்த நிலையில் தமிழகம் இருந்தது என்பதை கம்பர் கூறுகிறார். அதற்குப் பின்பு முக்கியமான ஒரு அம்சம் “ நன்மணி பிலம் சுரக்கும் ”, அந்தக் காலத்திலே சுரங்கங்கள் வாயிலாக கணக்கிலா புதைபொருள்களை எடுத்து உபயோகப் படுத்தி வந்தார்கள் என்பது “ நன்மணி பிலம் சுரக்கும் ” என்று கூறுவதிலிருந்து தெரிகிறது. இரும்பு என்பதோ, தங்கம் என்பதோ, மணிகள் என்பதோ நம் நாட்டிற்குப் புதிது அல்ல. அன்றே இருந்திருக்கிறது நம் தமிழகத்தில் கனிப்பொருள்கள். அதைக் காட்டித்தான் “ நன்மணி பிலம் சுரக்கும் ” என்று கூறுகிறார். கம்பர் வாக்கைக் காணும்போது நம் தமிழகத்திற்கு தொழிற்சாலைகளோ அல்லது தொழில்களோ புதிய பண்பாடு அல்ல என்பதும், அவைகள் அன்றும் இருந்தன என்பதையும், அந்தப் பண்பாட்டினை நம்முடைய இந்த நல்ல அரசாங்கம் அரும்பாடுபட்டு வளர்க்கிறது என்கிற நிலைமையைக் காணும் நிலையில் பணியாற்றுகிறது என்று பெருமையோடு சொல்லிக்கொண்டு, அதோடு கடைசியாக இந்த பாலிடெக்னிக் என்ற அருமையான நிறுவனத்தைப் பெண்களுக்கு என்று ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு நம் தமிழக சர்க்காரை மனதாரப் பாராட்டிக் கொண்டு (சிரிப்பு) என்னுடைய இந்த உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வை. சங்கரன்** : *கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாநிலத்திலே பல நல்ல சிறு தொழில்கள், ஒரு சில கன ரகத் தொழில்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே தொழிலிலே நல்ல அனுபவம் மிக்க ஒருவரைத் தொழில் துறைக்கு அமைச்சராகக் கொண்டிருக்கும் காரணத்தினால் இன்றைக்கு நம்முடைய நாட்டிலே தொழில் துறை வேகமாக முன்னேறிவரும் நிலையில நம் மாநிலம் முதலாவதாக நிற்கிறது. அதோடு நம் நாட்டிலுள்ள பல துறைகளிலே கூட நம் தொழில் துறை முன்னணியில் நிற்கிறது. இதைப் பற்றி யாரும் இரண்டு வித அபிப்பிராயம் சொல்லமுடியாது. அந்த முறையில் தொழில துறை வேகமாக முன்னேறும் வகையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிற அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது டிஃபென்ஸ் பர்ப்பஸஸ் சம்பந்தமாக பல பொருள்களை உற்பத்தி செய்ய சிறு தொழில்கள் ஆரம்பிக்க ஜாபிதா வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த சமயத்தை நல்ல வாய்ப்பாகக் கொண்டு பல தொழில்கள் நம் மாநிலத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் பல தொழிற்சாலைகளை ஸ்விட்ச்-ஓவர் செய்து டிஃபென்ஸ் பர்ப்பஸஸுக்காகச் செய்வதற்குத் தீர ஆலோசித்து நல்ல முறையில் ஊக்குவிக்க வேண்டும். பல தொழில்கள் இன்றைக்கு டிஃபென்ஸ் பர்ப்பஸஸுக்கு வேண்டிய தொழில்களாக மாற்றப்படுமானால் அவைகளுக்கு கணிசமான உதவி அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளும் அங்கு கிடையாது. மதுரை மாவட்டத்தில் சீக்கிரம் நல்ல கனரகத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அதை முன்நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கொடைக்கானல் ஒரு உல்லாச வாசஸ்தலமாக இருந்தாலும் கூட, நாளுக்கு உல்லாசப் பிரயாணிகள் வந்தாலும்கூட, நல்ல கனரகத் தொழிற்சாலைகள் அங்கு ஏற்பட்டால்தான், மேலும் அந்த உல்லாச வாசஸ்தலம் மக்கள் அங்கு விஜயம் செய்து உண்மையான வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, கொடைக்கானலில் ஒரு சில கனரகத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பங்களூரில் நல்ல சீதோஷ்ணம் நிலை காரணமாக பல கனரகத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் கோவையையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

"ரா மெடீரியல்" அதிகமாகக் கிடைக்காவிட்டாலும் கூட, மியூஸிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் போன்றவைகளைச் செய்யும் கைநுட்ப தொழில்களை ஆரம்பித்து, அம்மாதிரி பொருள்களை செய்ய முன்வர வேண்டும். அது விஷயத்தில் நம் ராஜ்யம் முன்நிலையில் இல்லை என்றுதான் நினைக்கிறேன். அப்படிச் செய்வதால் இன்னொரு பிரச்னையையும் தீர்க்கலாம். கைநுட்ப வேலையில் தேர்ச்சி பெற்ற பொற்கொல்லர்களை அதுமாதிரி தொழிலில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்தவர்களாவோம். தனியார் தொழிற்சாலைகள் எத்தனையோ இருக்கின்றன. சர்க்கார் உதவி பெற்று அந்தத் தொழில்களெல்லாம் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. தனியார் தொழிற்சாலை நடத்துபவர்களை ஸ்தல அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பிரத்தியேகமாக நேராக அணுகி பொற்கொல்லர்களுக்கு அவர்கள் தொழிற்சாலைகளில் வேலை கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினால், அவர்கள் கண்டிப்பாக பொற்கொல்லர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த முறையில் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 50-லிருந்து 100 பேர்கள் வரையில் வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியும். ஸ்தல அதிகாரிகளை வைத்து அம்மாதிரி வலியுறுத்த வேண்டுமென்று, "ப்ரெஷர்" கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொள்கை அளவிலே எடுத்துக்கொண்டால், பல இடங்களில் தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றால், அவைகளுக்கு வேண்டிய "ரா மெடீரியல்" வேண்டும். கண்டிப்பாக "ரா மெடீரியல்" கிடைக்கக் கூடிய இடத்தில்தான் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும், என்று பொதுவாக இருந்தாலும், "அண்டெவலப்டு ஏரியாஸ்" "எகனா மிகலி பாக்வேர்டு ஏரியாஸ்" இந்த இடங்களில் அதிகமாக தொழிற் சாலைகள் ஆரம்பித்தால் நலமாக இருக்கும். "ரா மெடீரியல்" முக்கியத் துவம் இல்லாத தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது என்றால், ராமநாதபுரம் மாவட்டம் போன்ற பின்தங்கிய பகுதிகளில் அதிகமாக ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூடுமானவரையில் நகரத்திற்கு வெளியிலேதான் தொழிற் சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். நகரத்திற்குள்ளே தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டால், அதனால் பல பிரச்னைகள் வருகின்றன, பல தொழில் தகராறுகள் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, புதிய தொழிற்சாலைகள் நகரத்திற்கு வெளியேதான் ஆரம்பிக்கப்பட வேண்டும். தொழிற்சாலைகள் நகரத்திற்கு வெளியே பல மைல்கள் தள்ளி அமைந்திருப்பது நலம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் பொறுத்த வரையிலும், தொழில் அமைச்சர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர், நான் அவர்களுக்கு அதிகம் யோசனை சொல்ல வேண்டியது அவசியமில்லை என்றாலும், சிறிய தொழில் களை நடத்துவதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டுமே தவிர, சர்க்காரே சிறிய தொழில்களை எடுத்து நடத்த முன்வந்தால், அது ஓரளவுக்கு காம்பெடிஷன் செய்வது போல் ஆகி விடுகிறது. மேலும், சர்க்காருக்கு தனியார் போட்டி போட இயலாத சில தனி அனுகூலங்கள் [illegible]

ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் ஏற்படுத்துவதற்கு தனியார்களை ஊக்குவிக்க வேண்டுமே தவிர, சர்க்காரே அதை எடுத்து நடத்துவது என்றால், கம்பீட் செய்யககூடிய நிலைமையில் கொண்டு போய் விடுகிறது. அப்படியே எடுத்துக்கொண்டாலும் "அல்ரெடி டெவலப்டு இண்டஸ்டிரீஸ்"-களை எடுத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக "சப்பல்ஸ்" செய்வது, தீப்பெட்டி செய்வது, அப்பளம் செய்வது இது போன்ற தொழில்களை எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏற்கனவே தனியார் துறையிலே நன்றாக டெவலப் ஆகியிருக்கிற தொழில்களை விட்டுவிட்டு, நமக்கு அவசியமாக தேவையாக உள்ள வேறு தொழில்களை எடுத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக மெஷின் பார்ட்ஸ் சொல்லலாம். ஏற்கனவே வளர்ச்சி அடைந்துள்ள பல தொழில்கள் நாட்டில் இருக்கின்றன. அந்தத் தொழில் களுக்கு வேண்டிய உப பொருள்கள், உபகரணங்கள் இவைகளை தயார் செய்தால், மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "பார்ம் இம்ப்ளிமெண்ட்ஸ்" "டெக்ஸ்டைல் பார்ட்ஸ்" இது போன்ற தொழிற்சாலைகள் ஒரு சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்று முக்கியமாக தொழில்களுக்கு வேண்டிய உருப்புகள், உப உருப்புகள் போன்ற பல சாமான்கள் தயாரிப்பதற்கு சர்க்கார் முன்வர வேண்டும். நேரடியாக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரிஸை எடுத்து நடத்த போட்டி போடும் மனப்பான்மை இல்லாமல் இருக்கவேண்டும்.

ஏற்கெனவே போதுமான தொழில் நுணுக்கக்கல்வி பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. பயிற்சி அளிப்பது பற்றி நல்ல முறையில் விளம்பரப்படுத்த வேண்டும். டெக்னிகல் இன்பர்மேஷன் கொடுப்பதற்கு ஜெர்னல் போட்டு வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த டெக்னிகல் இன்பர்மேஷன் எல்லோருக்கும் தெரியும் வகையில் நல்ல முறையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக என் நகரத்திலேயே விக்ரகங்கள் செய்வது போன்ற பல கைநுட்ப தொழில்கள் இருக்கின்றன. நல்ல வேலைப்பாடு அமைந்த முறையில் பர்னிசர் செய்து, மேலும் அது போல பல கைநுட்ப வேலைகள் நிறைந்த பொருள்களை செய்து ஒரு சில தனிப்பட்ட நபர்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள். அம்மாதிரி பல நகரங்களில், பல தொழில்கள் இருக்கின்றன. 4, 5 பேர்கள் சேர்ந்தும் செய்கிறார்கள். தனித்தனியாகவும் செய்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கமும், உதவியும் அளித்தால், அந்தத் தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாக இருக்கும். அந்தந்தப் பகுதிகளில் அஸிஸ்டெண்டு டைரக்டர் ஆப் இண்டஸ்டிரீஸ் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அதிகாரத்திற்குப்பட்ட நகரங்களுக்குள் சென்று இது போன்ற வேலைப்பாடு உள்ள கைநுட்பம் உடைய தொழிலாளர்களைச் சந்தித்து, அவர்களுடைய பட்டியலை தயாரித்து, அவர்களுக்கு எந்தெந்த வகையிலே உதவி அளிக்க முடியும், சப்ஸிடி கொடுக்க முடியுமா, அவர்களிடையே கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த முடியுமா என்றெல்லாம் பார்த்து உதவி செய்ய வேண்டும். தொழிலாளர்கள் அவர்களாக விவரங்கள் தெரிந்து கொண்டு அதிகாரிகளை அணுகுவது எளிதல்ல. ஆகவே, அதிகாரிகளே முன்வந்து இம்மாதிரி தொழிலாளர்களுக்கு உதவி அளித்தால், மேலும் மேலும் இந்த கைநுட்பத் தொழில்கள் வளர்வதற்கு ஏதுவாக இருக்கும். அதிகாரிகளே முன்வந்து இவர்களுக்கு வேண்டிய வசதிகளையும், உதவிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "பவுண்டரி வொர்க்ஸ்" சம்பந்தமாக "கோக்" கரி பற்றாக்குறை இருக்கிறது. விவசாயிகளுக்கு பார்ட்-டைம் எம்ப்ளாய்மெண் டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நெல் விலை குறைந்திருப்பதால், விவ சாயிகளுக்கு பார்ட்-டைம் ஜாப் கொடுப்பதற்கு வழிவகைகள் செய்யவேண் டும். அதற்காக கிராமங்களில் மேலும் குடிசைத் தொழில்களை ஆரம்பித்து, அந்தத் தொழில்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

சர்க்கரை மில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கேசு விலே குறைந்து விட்டது. வெல்லம் தயாரிப்பதில் அதிக விலை கிடைக்கிறது. அதனால் கரும்பை ஆலைக்குப் கொண்டு வருவதில்லை. அதனால் ஒன்றிரண்டு சர்க்கரை மில்கள்கூட மூடப்பட்டு விட்டன. அவைகளையெல்லாம் திரும்பவும் ஆரம்பிப்பதற்கு வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக, சர்க்கரை, சிமெண்டு இதுபோன்ற வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களுக்கு நாட்டில் பற்றுக்குறை ஏற்பட்டால், அதனால் மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும். இவைகளையெல்லாம் பூரணமாக நம்முடைய தேவைக்கேற்ற அளவுக்கு தயாரிப்பதற்கு, சீக்கிரம் தன்நிறைவு பெறுவதற்கு அதிக தொழிற்சாலைகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. ர. சம்பங்கி :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, தொழில்துறை மானியத்தின்மீது கொண்டுவந்திருக்கிற வெட்டுப்பிரேரபணையை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். ஆம்பூருக்கு அடுத்த விண்ணமங்கலம் என்ற ஒரு கிராமத்தில் ரோமம் பதனிடும் தொழிற்சாலை "வூல் ப்ரொஸெஸிங் செண்டர்" என்ற பெயர் வைத்து, இன்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னுலே 1960-ம் ஆண்டில் கவர்னர் திரு. மேதி அவர்களால் துவக்கப்பட்ட தொழிற்சாலையைப்பற்றி நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். தொழில் துறை சென்னை மாநிலத்திலே மிகவும் வளர்ந்திருக்கிறது என்று எனக்கு முன்னல் பேசிய உறுப்பினர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருக்கிற காரணத்தினுலே, வளர்ந்திருக்கிறதோ இல்லையோ, வளர்ந்திருக்கிறது என்று சொல்ல கடமைப்பட்டவர்கள். ஆகவே அவ்வாறு சொன்னுர்கள். தொழில் துறை வளரவேண்டுமென்ற கருத்தைக்கொண்டவர்கள்தான் நாங்களும். தொழில்துறையில் போடப்படுகிற மூலதனம் பாழாகிவிடக்கூடாது, நாட்டினுடைய பணத்தில் எதிர்க்கட்சியில் வீற்றிருக்கிற எங்களுக்கு அக்கரை இருக்கிறது என்ற காரணத்தினுலே, விண்ணமங்கலத்தில் அமைக்கப்பட்டிருக்கிற ரோமம் பதனிடும் தொழிற்சாலை எந்த அளவுக்கு செயல்பட்டு வருகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். விண்ணமங்கலத்திலிருந்து நான் குடியிருக்கிற ஆம்பூர் 5 மைல் என்ற காரணத்திலே, அதைப்பற்றி எனக்குத் தெரிந்ததை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்னுலே சுமார் ரூ. 16 லட்சம் மூலதனத்தோடு ஆரம்பிக்கப்பட்ட அந்த தொழிற்சாலை இன்று எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று பார்த்தால் 4, 5 உயர்தர அதிகாரிகளை வைத்துக்கொண்டு, மீதி இருக்கிறவர்களை 30, 50 பேர்களை தினக்கூலிகளாக வைத்துக்கொண்டு தொழிற்சாலை என்று சொல்லி நடத்திக் கொண்டிருக்கிறுர்கள். அந்தத் தொழிற்சாலையை மாற்றி அமைக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் இங்கே சொல்லக்கூடும். ரோமம் பதனிடும் தொழிற்சாலை "வூல் ப்ரொஸெஸிங் செண்டர்" என்று சொல்லிக் கொண்டு ரூ. 16 லட்சம் மூலதனம் போட்டுவிட்டு, ரோமத்தை மெஷின்களில் கழுவி அதை லோகல் மார்க்கெட்டிலேயே விற்கிறுர்கள், வாங்கின இடத்திலேயே விற்க முற்படுகிறுர்கள். சர்க்கார் போட்டிருக்கிற மூலதனத்தை வைத்துக்கொண்டு உள்நாட்டில் வாங்குகிற அந்தப் பொருள்களையும் கழுவி, சுத்தப்படுத்தி, மேல் நாடுகளுக்கு எங்கேயாவது அனுப்புகிறுர்களா என்று பார்த்தால், இல்லை. அந்தத் துறையிலே அனுபவம் வாய்ந்தவர்கள் எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தில் நிறைய பேர்கள் இருக்கிறுர்கள். அவர்களெல்லாம் தனியார் துறையிலே அந்தத் தொழிலை செய்துவருகிறுர்கள். தனியார் துறையிலே செய்து வருபவர்கள் போட்டிருக்கிற மூலதனம் எவ்வளவு என்று கேட்டால், ரூ. 5,000 10,000 தான். அவ்வளவு போதும் அந்தத் தொழிலுக்கு மூலதனம். ஆனால், அதே தொழில் தான் இன்று சர்க்காரினுல் ரூ. 16 லட்சம் மூலதனத்தில் அங்கே செய்யப்பட்டுவருகிறது. இந்தத் தொழில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டது என்றுலும், அதிலே முன்னேற்றம் எதுவுமில்லை. இந்த நெருக்கடியான சூழ்நிலையில், அங்கேயுள்ள ரோமம் பதனிடும்

தொழிற்சாலையை ஒரு கம்பளித் தொழிற்சாலையாக ஆக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். மத்திய அரசாங்கத்தினுலும், நமது மாநில அரசாங்கத்தினுலும், மைசூர் அரசாங்கத்தினுலும் ரூ. 16 லட்சம் செலவில் நிர்மாணித்த இந்தத் தொழிற்சாலைக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இப்பொழுது ரோமத்தைப் பதனிடுகிறுர்கள். அதை நூலாக்கி, ஒரு கம்பளித் தொழிற்சாலையாக இதை ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏறக்குறைய தென்னகத்திலே, கம்பளித் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், பின்னி மில் ஒன்று தான் இருக்கிறது. அது கூட இப்பொழுது கம்பளி உற்பத்தி செய்வதில்லை என்று அறிகிறேன். சுமார் 200 தறிகள் அமைத்தால், கிட்டத் தட்ட 2,000 பேர் வாழ்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தர முடியும். நாள் ஒன்றுக்கு 4,000 கம்பளிகளையும், 2,000 கீழ் விரிப்புகளையும் தயாரிக்க முடியும். வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜீவரத்னம் அவர்களும், புலவர் கோவிந்தன் அவர்களும் அந்த மாவட்டத்திலுள்ள குறைகளை எடுத்துச் சொன்னுர்கள். அதைவிட, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் அவர்கள், சென்னைக்கு அடுத்திருக்கிற அண்டை மாவட்டங்களிலே தொழில்கள் பெருகவில்லை என்று சொன்னுர். வட ஆற்காடு மாவட்டம் அவல நிலையில் இருக்கிறது. அந்த மாவட்டத்தை அரசாங்கம் கைதூக்கி விட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் வேண்டுமென்று முன்னுரையில் குறிப்பிட்டார்கள். நமது மாநிலத்திலேயே, வட ஆற்காடு மாவட்டத்தில் தான் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. கம்பளித் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருள் ஆட்டு ரோமம். இன்றைக்கு வடக்கில் இருக்கிற லூதியானு, பானிபட், பாம்பே போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யபடுகிறது. வட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்ற காரணத்தைக் கொண்டு, வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று நான் சொல்லுவதாக நினைத்துக் கொள்ளக் கூடாது. சென்னை மாநிலத்தில் இருக்கிற அத்தனை ரெயில்வே ஸ்டேஷன்களிலும் எந்த அளவுக்கு ரோமம் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது என்று கேட்டால் விவரங்கள் தெரியும். ஆகவே விண்ணமங்கலம் ரோமம் பதனிடும் தொழிற்சாலையை, ஒரு கம்பளி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக ஆக்கி, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் தொழிற்சாலை என்ற பெயரால் ஆம்பூரில் ஒரு சர்க்கரை தொழிற்சாலை அமைந்திருக்கிறது. அந்த ஆலையின் கழிவுப் பொருளான மொலாஸஸை வேறு எங்கோ கொண்டு போய்ப் பயன் படுத்துகிறுர்கள். எங்களுடைய மாவட்டத்திலே பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆண்டு ஒன்றுக்கு 1½ லட்சம் டன் கரும்பு அறைக்கப் படுவதாக, கூட்டுறவு மானியம் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தினசரி 200 டன்னுக்கு மேலான கரும்புச் சக்கை வெறும் எரிபொருளாக ஆக்கப்படுகிறது. இதை வைத்துக் கொண்டு, உப தொழிலாக ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும். திரு. ஜீவரத்னம் குறிப்பிட்டதுபோல், காகிதத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூங்கில் போன்ற மற்ற மூலப் பொருள்கள் எங்கள் மாவட்டத்தில் இருக்கின்றன. இன்றைய தினம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஈரோடுக்கு அருகிலுள்ள தொழிற்சாலைக்கு எங்கள் மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டத்திலேயே ஒரு காகிதத் தொழிற்சாலையை அமைத்தால், ஏற்றுமதிச் செலவு குறையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த காகிதத் தொழிற்சாலையை என்னுடைய மாவட்டத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

நம்முடைய மாகாணத்தில் குடிசைத் தொழிலிலிருந்து பெரிய தொழிற்சாலைகள் வரை நல்ல வகையில் அமைந்திருக்கின்றன என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது. மற்ற மாகாணங்கள் பார்த்து வியக்கத் தக்க அளவிலே நாம் வளர்ச்சி அடைந்திருக்கிறோம். கனம் அமைச்சர் அவர்கள் "தொழில் வளர்ச்சி" என்ற குறிப்பேட்டை அங்கத்தினர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் நன்றாகப் படித்துப் பார்த்தேன். எந்தத் தொழில் வளரவில்லை, தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கம் இன்னும் என்னென்ன சலுகைகளைக் கொடுக்க வேண்டும், என்ன கொடுப்பதற்குத் தவறியிருக்கிறார்கள் என்றெல்லாம் யோசித்துப் பார்த்தேன். அப்படிப் பார்க்கும்பொழுது, எந்த விதமான குறையையும் காண முடியவில்லை. ஒரு வேளை எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அதைப் படித்துப் பார்த்தார்களோ என்னமோ, தெரியவில்லை. தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை, வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று சொன்னால், உண்மைக்கு நேர் புறம்பாக அவர்கள் பேசுகிறார்கள் என்று நான் சொல்ல வேண்டும். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலே, இதை எதிர்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்று நான் நினைக்க வேண்டும்.

இப்பொழுது பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருகின்றன. எவ்வளவோ முன்யோசனைகள் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நல்ல கருத்துக்கள் வேண்டும், நல்ல ஒரு திட்டத்திற்கு வர வேண்டும். எந்தத் தொழில் ஆரம்பிக்கிறோமோ, அதில் உற்பத்தியாகும் பொருள்கள் மக்களிடம் விலையாகப் போகுமா என்று யோசனை செய்ய வேண்டும். இந்த யோசனைகளை எல்லாம் செய்துதான் பெரிய தொழிலை ஆரம்பிக்க வேண்டும். நல்ல யோசனைகளைக் கொடுப்பதற்கும், உதவிகளைச் செய்து கொடுப்பதற்கும் அரசாங்கம் முன் வந்திருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களையும், அந்த இலாகாவைச் சேர்ந்த பெரிய உத்தியோகஸ்தர்களையும் நான் பாராட்டுகிறேன். அப்படி அவர்கள் கொடுத்து வரும்பொழுது, சில குறைகளும் காணப்படுகின்றன. அவற்றையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றால், அதற்குப் பெரிய முதலீடு போட வேண்டும். வெளி நாடுகளிலிருந்து மெஷின்கள் வாங்குவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அன்னியச் செலாவணி பெற வேண்டும். அதிலே கால தாமதம் ஏற்படுகிறது. நம்முடைய மாகாணத்திற்குப் பல அயல் நாட்டு நிபுணர்கள் வந்து, நன்கு கவனித்து, ஒரு நல்ல செய்தியைக் கொடுத்து விட்டுப் போய் இருக்கிறார்கள். இந்தியாவிலேயே நல்ல ஒரு தொழில் வளர்ச்சியைப் பெற்றிருக்கும் ஒரு மாகாணம் இருக்குமேயானால், அது சென்னை மாகாணம் தான் என்ற அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அயல் நாட்டுச் செலாவணி பெறுவதற்கு நாம் ஏதாவது முயற்சி எடுக்க முடியுமா, அப்படி முயற்சி எடுத்தால், மத்திய அரசாங்கத்துக்கும் நமக்கும் ஏதாவது சங்கடங்கள் ஏற்படுமா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அப்படியில்லா விட்டால் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன், ஃபைனான்ஸ் கார்ப்பொரேஷன்களைப் போல, நாமும் வாங்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது
11-30 a.m. என்று சொன்னாலும் கூட, நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அது மிகவும் வருந்தத் தக்கது. ஒரு வருஷத்திலோ அல்லது பத்து வருஷங்களிலோ, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்று சொல்ல முடியாது. இப்பொழுது உலகத்திலே பிரமிக்கத் தக்க அளவுக்குத் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள நாடு எது என்றால், அமெரிக்கா என்று தான் சொல்ல வேண்டும். அங்கே கூட வேலை இல்லா திண்டாட்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி நாற்பது லட்சம் பேர்கள் வேலை இல்லாமல் இருப்பதாக ஜனாதிபதி கென்னடி அவர்கள் சொல்லி இருக்கிறார். பதினைந்து ஆண்டு காலமாகவே இப்படி இருக்கிறது என்றும் சொல்லி இருக்கிறார். தொழில் துறையில் நல்ல முறையில் முன்னேற்றமடைந்த நாடுகளிலே கூட வேலை இல்லாத் திண்

டாட்டம் இருக்கிறது என்றால் இங்கு இருப்பதற்குக் கேட்பானேன் தொழில் துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளிலே இப்படி இருக்குமானால் நம்முடைய தேசத்தில் எப்படி இருக்கும்? இப்படிப்பட்ட நிலைமை. இங்கு இல்லாமல் அதைச் சீக்கிரத்தில் "நிவர்த்தி" பண்ண வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சில தொழில்களில் முதலீடு போட்டிருந்தும் கூட "ரா மெடீரியல்ஸ்" அவர்களுக்குக் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்படி மூலப் பொருள்கள் கிடைக்காததன் காரணமாக அந்தத் தொழில் மிகுந்த கஷ்டத்தை அடைந்திருக்கிறது. அவர்கள் போட்ட செலவைத்தான் அவர்கள் அடைந்து வருகிறார்கள். இதை அரசாங்கம் பார்த்து, அவர்களுக்கு மூலப் பொருள்கள் கிடைக்கும்படியான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். எந்தவிதமான கஷ்டமும் இன்றி அதைக் கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தத் தொழில் வளர்ச்சியின் காரணமாக, அதிலும் முக்கியமாக மதுரையில் ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில் வளர்ச்சியின் காரணமாக, சுமார் ஏழாயிரம் ஏக்கர் நிலம் ரெட்ஹில்ஸ் பக்கத்தில் அரசாங்கம் வாங்கப் போவதாகவும் அதற்கு அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அதற்கு இடையில் ஆந்திரா கிருஷ்ணா தண்ணீரை இங்கு கொண்டு வரப் போவதாகவும் சொல்லப்படுகிறது. அதைக் கேட்டு நான் ரொம்ப மகிழ்ச்சி அடைந்தேன். தொழில்கள் வளர வேண்டுமானால் அதற்குத் தண்ணீர் ரொம்பவும் அவசியம். தற்போது பத்து அல்லது பன்னிரெண்டு வருட காலமாகத் தொழில் வளர்ச்சி அடைந்து வருவதால் அதற்கு வேண்டிய தண்ணீர் வசதியும் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, இப்பொழுது வாங்கப் போகிற ஏழாயிரம் ஏக்கர் நிலத்தில் தொழிற்சாலையை ஆரம்பிக்கும்போது அதற்கு வேண்டிய தண்ணீர் வசதியையும் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். தொழில் உற்பத்திக்குத் தண்ணீர் வசதி அவசியமாக இருக்கிறது.

கனம் பொள்ளாச்சி அங்கத்தினர் மின்சாரப் பற்றுக்குறையைப் பற்றிச் சொன்னார். அதிகப்படியான தொழில்கள் ஆரம்பித்து வருவதால் மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பற்றுக்குறையை நீக்குவதற்கு இப்பொழுது நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்திலே மின்சார உற்பத்தி செய்யப் போவதாக இருக்கிறது. அங்கே இரண்டாவது திட்ட காலத்தில் அதிகப்படியாக உற்பத்தி செய்யப் போவதாகச் சொல்லப்படுகிறது. அங்கேயிருந்து மின்சாரம் கிடைத்தாலும் கூட மகாபலிபுரத்தில் ஒரு அணுசக்தி நிலையத்தை ஏற்படுத்தி அங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யலாம் என்றும் தோன்றுகிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஸ்தாபனம் கூடிய சீக்கிரம் வருவதாக இல்லை. அதைக் கூடிய சீக்கிரம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அரசாங்கம் முன்கூட்டியே செய்ய வேண்டும்.

பெரிய பெரிய தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டிருப்பவர்களுக்குச் சில கஷ்டங்கள் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கக்கூடிய ஃபைனான்ஸ் சூபர் டாக்ஸ் காரணமாக ரிசர்வ் பாங்குகள் கடன் கொடுக்க முடியவில்லை. பல தொழில் அதிபர்களுக்கு, ரிசர்வ் பாங்க்குக்குச் சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் அவர்களால் கடன் உதவி செய்ய முடியவில்லை. அதனால் ரிசர்வ் பாங்கு மற்ற பாங்குகளுக்கும் பணம் கொடுக்க முடியவில்லை. ஆகவே தொழில் துறையில் இப்படிப்பட்ட சங்கடங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மத்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ள சூபர் டாக்சேஷன் ஸ்டாக்கரால் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி நான் ஏற்கனவே பட்ஜெட் விவாதத்தின் போது சொல்லி இருக்கிறேன். [illegible] இலாக்கா அமைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். [illegible]

நாட்டிலிருந்து கிடைக்கக் கூடிய தொகையை பெற்றுக்கொண்டு அதை வைத்துக்கொண்டு இங்கே பல தொழில்களை ஆரம்பிக்கலாம். இதைப்பற்றி நமது அரசாங்கம் மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்களுக்கு எழுதி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிச் செய்தால் இந்த ராஜ்யத்தில் தொழில் துறையில் நல்ல வளர்ச்சி ஏற்படுவதற்கு இடம் ஏற்படும்.

அடுத்தபடியாக, தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் என்ன உதவி செய்தாலும் அந்தத் தொழிலை ஆரம்பிக்கிறவர்கள் அதில் 25 சத விகிதமாவது பணம் போட வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது ஒரு கோடி ரூபாய்க்கு முதலீடு செய்வதாக இருந்தால் குறைந்தது இருபது அல்லது இருபத்து ஐந்து லட்சம் ரூபாயாவது தொழில் அதிபர்கள் போட வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட "இன்சென்டிவ்" அவர்களுக்கு வேண்டும். அந்த முறையில் இன்சென்டிவ் ஏற்பட்டால் நிறைய தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு இடம் ஏற்படும் என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சேம்பர் ஆப் காமர்ஸிலுள்ள சிறு தொழில் அதிபர்கள் தொழில் செய்ய முன் வருகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்வதோடு, அவர்களுக்கு சில யோசனைகளையும் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் மீது அக்கறை எடுத்துக்கொண்டு பல யோசனைகளைச் சொல்வதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு பல வழிகளில் வசதிகள் செய்து வருகிறார்கள். சில இடங்களில் எவ்வளவு வளர்ச்சியை எதிர்பார்க்கிறோமோ அந்த அளவில் வளர்ச்சி அடைவதாகத் தெரியவில்லை. வளர்ச்சி அடையவில்லை என்று சில இடங்களில் கூக்குரல் கிளப்புகிறார்கள். இப்படிப்பட்ட தப்பு அபிப்பிராயத்தைச் சொல்லி வருகிறார்கள். இப்படித் தப்பு அபிப்பிராயத்தை பரப்புவதற்கு அரசாங்கம் இடம் கொடுக்கக் கூடாது என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய புத்தகத்தில் பல பெரிய தொழில்கள் ஆரம்பிப்பதைப்பற்றி சொல்லி இருக்கிறார். என்னென்ன பெரிய தொழில்கள் இங்கே வர வேண்டும் என்ற கருத்தைச் சொன்னால் மக்களுக்கு நன்மையைச் செய்தவராவார் என்று சொல்லிக் கொண்டு, தொழில் துறையில் பிரம்மாண்டமான தொழில் வளர்ச்சியைக் கொண்டு வந்ததற்கு கனம் அமைச்சர் அவர்களையும் அந்த இலாகாவைச் சார்ந்த அதிகாரிகளையும் உத்யோகஸ்தர்களையும் மனமார வாழ்த்தி என் உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

3-00 a.m. * திரு. கோ. ராஜாராம் : மதிப்பிற்குரியத் துணைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் துறை அமைச்சரால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். 1962–63-ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைப்பற்றிய குறிப்புகள் தொழிலமைச்சர் திறமைக்கு எடுத்துக் காட்டு என்ற முறையில் கனம் அமைச்சருக்கு எனது பாராட்டுதல்கள். அடுத்தபடியாக தென் பகுதி மாநிலங்கள் தொழில் துறையில் பின் தங்கி இருக்கின்றன, புறக்கணிக்கப்படுகின்றன, தேய்கின்றன என்ற வாதத்திற்கும் தென் மாநிலங்கள் தொழில் துறையில் மேலும் வளர்ச்சி அடைய வேண்டும் முன்னேறவேண்டும், தொழில் துறை வளர்ச்சிக்கான வாய்ப்புகள் வசதிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதுகிற எண்ணத்திற்கும் கொள்கிற ஆசைக்கும் நிறைய இடைவெளி உண்டு, வேறுபாடு உண்டு, மாறுபாடு உண்டு. இந்த கருத்தின் அடிப்படையில் தொழில்களை மேலும் பெருக்க வேண்டும் என்ற கருத்தில் என்னுடைய மாவட்டத்தைப்பற்றி சில சொல்ல விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டம் ஒரு பிற்பட்ட மாவட்டம். மிக மிக பிற்பட்ட மாவட்டம். வளங்கள் பல குறைந்த மாவட்டம், நீர்வளம் குறைவு, நில வளம் குறைவு, பொருள் வளம் குறைவு, ஆனால் பண பலமோ, வளமோ இல்லாத எங்கள் மாவட்ட மக்களுக்கு நிறைய மண வளம் உண்டு. மணவளம் மட்டும்தான் மூலதனம் என்று கருதிய எங்களுக்கு

கனி வளமும் அங்கே நிறைய உண்டு என்ற செய்தி அடிக்கடி மகிழ்வூட்டுகின்றன. கனி வளத்தில் முதன்மையானது நிலக்கரி. நெய்வேலி நிலக்கரித் திட்டம் முழுமை பெறுமானால் எங்கள் மாவட்டத்திற்கு மட்டும் அல்ல இந்த மாநிலத்திற்கு மட்டும் அல்ல நம்முடைய இந்திய நாட்டிற்கே தொழில் துறையில் பெருமை தருவதாக அமையும் என்பதை அனைவரும் உணருகிறார்கள். நெய்வேலி திட்டத்தால் உருவாக்கப்படுகிற மின்சாரத்தில் பங்கு கேட்டு ஒரு குரல் இப்போதே கேரள சட்ட மன்றத்தில் ஒலித்ததை நாம் கேட்டோம்; படித்தோம். பெருமை மிகுந்த நெய்வேலி நிலக்கரித் திட்டம் எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது என்பதைப்பற்றி பெருமை கொண்டு மகிழ்ச்சி அடைகிறோம், இன்பங்கொள்கிறோம். ஆனால் தொழிற்சாலை அங்கு அமைந்ததே என்ற காரணத்தால் மகிழ்ச்சியுறுவதோடு கூட அமைந்த காரணத்தால் மாவட்ட மக்கள் அதனால் நல்ல பலனை அடைகிறார்கள், பயனைப் பெறுகிறார்கள் என்ற திருப்தியும் தேவை என எதிர்பார்ப்பதும் எண்ணுவதும் நியாயமாகும். இதைக் குறிப்பிடும் போது சில குறைபாடுகள் முணுமுணுப்பாகவும் சலசலப்பாகவும் காதில் விழுந்தது. சில நாட்களுக்கு முன்னால் கூட ஆங்கில வாரப் பத்திரிகை யொன்றில் "Dig up lignite—Dig the communalism" என்ற தலைப்பிட்டு, பல கருத்துக்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்தக் கட்டுரையில "நெய்வேலி தொழில் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சிலர் மட்டும் பயன் அடைகிறார்கள்" என்று கூறப்படுகிறது. அந்தக் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவோ சரியென்று சொல்லவோ நான் தயாராக இல்லை. ஆனால், நெய்வேலி தொழில் திட்டத்தினால் மாவட்ட மக்களும் சகல மக்களும் பயன்பெறும் வகையில் அது ஒரு காமதேனுவாகவும், கற்பகத் தருவாகவும் ஆவதற்கு, நம்முடைய பண்புடைய அமைச்சர் அவர்கள் ஆலோசனையைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இரும்பைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இங்கு இல்லையென்றாலும், செய்தியைத் தெரிந்து கொள்ளுவார்கள் என்று கருதுகின்றேன். எங்கள் மாவட்டத்தில் நிலக்கரியோடு இரும்பும் கிடைக்கிறது என்று நான் முன்பே ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறேன். செஞ்சித்தாலூகாவில் தாழங்குணம் கிராமத்தில் இரும்பு மூன்று லட்சம் டன் அளவுக்குக் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. அதற்கான விவரங்கள் இரும்பு வளக் கனி அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட அக்கறை காட்ட வேண்டும். ஏனென்றால் ஏதோ டில்லி பாதுஷாவின் குதிரையை அடக்கிய ஆர்க்காடு நவாபின் சேனையைக் கலக்கிய தேசிங்கு ராஜன் சரித்திரத்தையும் சந்தப் பாட்டுக்களையும் படித்தவர்கள் மட்டும்தான் செஞ்சியை அறிவார்கள். சரித்திரப் பிரசித்திபெற்ற கோட்டை கொத்தளங்களைப் பார்ப்பதற்கு மட்டும்தான் செஞ்சிக்கு வருவார்கள் என்ற நிலை மாறி, நெய்வேலி என்றால் நிலக்கரியும், ஆக்ரா என்றால் தாஜ் மகாலும், சென்னை மாநிலம் என்றால் முதலமைச்சர் காமராஜும் நினைவுக்கு வருவது போல, செஞ்சி என்றால் தாழங்குணமும் என்றால் இரும்பும், இரும்புத் தொழிற்சாலையும் நினைவுக்கு வருகின்ற ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். அந்த நிலை பிறந்தால் இரும்பு உருக்காலை சேலத்திலா? நெய்வேலியிலா? என்ற பிரச்சினைக்குக் கூடத் தீர்வு காண முடியும் என்று நான் கருதுகிறேன். மக்கள் சபையில் அமைச்சர் மாளவியா அவர்கள் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் குறிப்பாக எங்கள் மாவட்டத்திற்கும் மாநிலத்திற்கும் தரப்பட்ட நற்செய்தியாகும். எட்டு லட்சம் டன் எடையுள்ள உலோகப் படிவங்கள் செம்பு, ஈயம் துத்தநாகம் எங்கள் மாவட்டத்தில் கிடைப்பதாக அந்தச் செய்தி கூறுகிறது. அந்த செய்தி முழு உருவம் பெறுமானால் மேலும் நல்ல பல தொழிற்சாலைகளை எங்கள் மாவட்டத்தில் பெற முடியும். இதனால் மாநிலத்திற்கு நல்ல பலன் விளையும் என்று கூறிக் கொள்கிறேன். அதனால் நம் மாநிலத்திற்கும் நல்ல பயன் விளையக் கூடிய நிலைமை இருப்பதனால் இந்தத் துறையில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் [illegible] கொள்கிறேன்.

அடுத்து இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட் செஞ்சி தாலுகாவில் அமைப்பதற்கு நான் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறேன். இப்பொழுதும் கூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் மூன்று இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்கப்படும் என்றும் அதில் ஒன்று புதுக்கோட்டையிலும் மற்றொன்று தூத்துக்குடியிலும் ஆரம்பிக்கப்படும் என்றும், மூன்றாவதைப் பற்றிக் குறிப்பிடும்போது "the location of the third one is under consideration" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். "under consideration" என்பதற்கு பதிலாக திட்டமாக இன்றைக்கே "the third one will be located in Gingee" என்று குறிப்பிட்டு விட்டால் எங்கள் குறையும் தீர்ந்துவிடும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ரீதியில் எங்கெங்கே என்ன என்ன தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்று கொடுக்கப்பட்டிருக்கிற லிஸ்டில் கடலூர் கண்ணுக்குத் தெரிகிறது. விருத்தாசலம் வருகிறது. மிகவும் மகிழ்ச்சி. ஆனால் இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் எங்கள் பகுதி, வட பகுதி தாழ்ந்து இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். வடபகுதி வாழ்வதற்குத் தக்க திட்டங்கள் இந்த மாவட்டத்தில் உருவாகவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக கோஆப்பரேடிவ் ஸ்பின்னிங் மில் எங்கள் பகுதியில் ஏற்படுத்தியதற்கு இந்த அரசைப் பாராட்டி குறிப்பாக முதல் மந்திரி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் துறை மானியத்தின் மீது கடந்த ஆண்டு பேசும்போது இந்த மானிய விவாதத்தை இரண்டு நாளைக்கு வைத்துக் கொள்ள வேண்டும், அப்போது தான் சொல்ல வேண்டிய பிரச்னைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு நேரமும், வாய்ப்பும் இருக்கும் என்று குறிப்பிட்டபோது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் இரண்டுநாள் இதற்கு ஒதுக்க அடுத்த ஆண்டு முதல் ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்கள். அதுபோல இவ்வாண்டு இந்தத் தொழில்துறை மானியத்திற்கு இரண்டு நாள் ஒதுக்கியிருந்தால் நான் மிகவும் மகிழ்ந்திருப்பேன். அவர்களுக்கும் மிகவும் நன்றி செலுத்தி இருப்பேன். இருந்தாலும் அடுத்த ஆண்டு முதலாவது தொழில் துறை மானியத்திற்கு 2 நாள் ஒதுக்கி வைப்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பெரும்பாலான கருத்துக்களைச் சொல்லக்கூடிய அங்கத்தினர்கள் கூடச் சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்வது போல நானும் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என்பதை உங்கள் மூலமாக சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டே நான் தொழில் அமைச்சர் மீது ஒரு குற்றச் சாட்டைச் சாட்டினேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பப்ளிக் செக்டார் தொழில்களுக்காக மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த 32 கோடி ரூபாயில் இந்த மாநிலம் பெறவேண்டிய பங்கில் ஒரு காசுகூடப் பெறவில்லை என்று சொன்னேன். அதேபோன்று இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ப்ரைவேட் செக்டார் பல்வகைகளிலும் வளர்ச்சி அடைவதற்கு வேண்டிய வழிவகைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டிருப்பது கண்ணுக்குத் தெரிகிறதே தவிர பொதுத்துறையில் குறிப்பிட்ட பெரிய தொழில்கள் எதுவும் ஆரம்பிக்கப்படுவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதைப்பற்றி யெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லும்போது வீணை கோபமும், தாபமும் சொல்கின்ற கருத்தை உணராமல் சமாதானம் சொல்கின்ற தன்மையும், உண்மையில் தொழில் துறையில் இந் நாடு வளம் பெறுவதற்குச் சரியானதல்ல என்று சொல்வேன்.

காரணம் நான் சொல்வேன். இன்றைய தினம் இந்த அரசாங்கம் பின்பற்றுகிற தொழில் கொள்கை முதலாளிகளுக்கு ஒரு அரணாக இருக்கிறதே தவிர, குறிப்பிட்ட எழெட்டு குடும்பங்களிடையே தனியார் தொழில்

அமைவதற்கும், லாபம் பகிர்ந்து கொள்வதற்கும் வழிகோலுவதாக இருக்கிறதே தவிர மாநிலத்தின் பொது வருமானம் பெருகுவதற்கோ, செல்வ வளம் சீராக நாட்டு மக்களிடையே தேங்குவதற்கோ வழிவகுப்பதாக இல்லையென்று சொல்வேன். கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பத்துப் பதினைந்து குடும்பங்கள், செட்டிநாடடைச் சேர்ந்த நான்கைந்து குடும்பங்கள், விருதுநகர், தூத்துக்குடியைச் சேர்ந்த இரண்டு மூன்று குடும்பங்கள், தஞ்சை ஜில்லாவில் இருந்து வாழ்வு பெறுவதற்காக வந்து சென்னையில் குடியேறி தொழில் துவங்கியிருக்கிற இரண்டு குடும்பங்கள் ஆகியவற்றின் மானியமாகவே தான் இந்தத் தொழில்துறை இருக்கிறதே தவிர ஏழை எளியவர்களுடைய துன்பத்தைத் துடைக்கவோ, பொருளாதாரத்தைப் பெருக்கவோ வழிவகுப்பதாக இல்லை என்று நான் சொல்வேன். நண்பர் திரு. மகாலிங்கம் அவர்களுக்கு வேண்டுமானால் உத்தரப்பிரதேசத்தைவிட நம் மாநிலம் வளர்ந்துவிட்டதாகத் தோன்றலாம். ஆனால் நான் என்னுடைய கருத்தைாகச் சொன்னால் கூட ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் தானே, அப்படித்தான் சொல்வார்கள் என்று நினைக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் இப்படித்தான் ஏதாவது சொல்வார்கள் என்று சொல்லக்கூடும். ஆனால் நாகபுரி பல்கலைக் கழகத்தில் கடந்த பட்டமளிப்பு விழாவில் பேசும்போது திரு. காட்கில் அவர்கள் நாம் தொழிற்துறைக் கொள்கையைப் பற்றி எடுத்துக் கூறியுள்ள கருத்தை நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குத் தங்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த ஜனவரி 20-ம் தேதி அவர்கள் சொல்லுகிற நேரத்தில் "The notable feature of the existing industrial policy is its declared reliance on capital formation in the private sector." என்று சொல்லிவிட்டு, மேலும் இதைப்பற்றி பேசுகையில் "The dominance of this resurgent group of large capitalists is the most important and significant change in India since Independence" என்று சொல்லி ஒரு முக்கியமான ஆபத்தைச் சுட்டி காட்டியிருக்கிறார்கள்.

"As the recent Pay Commission pointed out, the relative position of Government and business in this regard has changed within the short span of eight years between 1948 and 1956. The direction of effort of those who want to get into the top salariat has consequently been changed. Their goal is no longer to get into the highest official ranks but into the highest ranks of managers and technicians employed by large Indian and foreign businesses in India. This applies, among others, to sons and relatives of the highest officials as well as of prominent politicians. The pattern of behaviour of officials on retirement has changed simultaneously. Formerly, these usually sought no employment and almost never employment with Indian business. To-day the most highly placed officials very readily find highly rewarding positions within business."

அவர் குறிப்பிட்டுள்ளதுபோலத்தான் நம் தொழிற்துறை அமைந்திருக்கிறது. இதனால் நம்முடைய ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் சின்னாபின்னப்படுகிற நிலைமையில் தான் இது அமைந்துள்ளது என்று வற்புறுத்துகிறேன்.

கம்பெனியார் ஆரம்பிப்பார்கள் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே 1½ கோடி ரூபாய் மூலதனத்தில் நடைபெறும் டால்மியா சிமெண்ட் ஆண்டொன்றுக்கு 42 லட்சம் ரூபாயும், தாழையூத்து சிமெண்டில் 27 லட்சமும் நிகர லாபம் அடைந்துள்ளனர். இவர்களுக்கேதான் மேலும் வசதி செய்து கொடுக்கப்படுகிறதேத் தவிர இந்தத் தொழிலை ஏன் பொதுத் துறையில் ஏற்று நடத்தக் கூடாது ?

அதே போல் சர்க்கரைத் தொழிலை எடுத்துக் கொண்டால் ஒன்பது பாக்டரிகள் இருக்கின்றன. சேலத்தில் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை ஆரம்பமாகப் போகிறது என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். கள்ளக்குறிச்சியிலும், மதுரையிலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அமைக்க மனை தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாகக் கூறியிருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு முன்னாலே கொத்தாரி ஷுகர் கெமிகல்ஸ் லிமிடெட்டால் ஒரு சர்க்கரை ஆலை திருச்சிராப்பள்ளியிலே உள்ள காட்டூரிலே ஆரம்பமாகி இருக்கிறது. கூட்டுறவு முறையிலே சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காக ஒரு கோடி ரூபாய் கடனுக்கு மனு போடப்பட்டிருக்கும்போது அமைச்சர்கள் இன்று மாலையிலே ரயில் ஏறிச் சென்று தனியார் துறையிலே ஆரம்பிக்கப்பட இருக்கக் கூடிய ஆலைக்கு ஆசீர்வாதம் செய்து விட்டு வர இருக்கிறார்கள். இப்படி தனியார் துறை விரிந்துகொண்டே போகிறது. ஏன் இவற்றையெல்லாம் பொதுத் துறையிலே, கூட்டுறவுமுறையிலே ஆரம்பிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. கோயம்புத்தூரில் பவானி பக்கத்தில் தனியார் துறை சர்க்கரை ஆலை ஒன்று ஏற்பட இருக்கிறது. அதை கூட்டுறவுத் துறையிலே துவக்கக் கூடாதா ? பர்டிலைசர் உற்பத்தித் தொழிற்சாலை எண்ணூரிலே ஒரு தனியார் துறையிடமும், கடலூரிலே ஒரு தனியார் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரிலே பயனீர் பர்டிலைசர் பாக்டரி என்ற தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பாரி கம்பெனி வேறு இன்னொரு இரசாயன உர உற்பத்திச் சாலை துவக்க இருக்கிறது. எங்கள் கழகத்தின் சார்பில் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சிந்திரி தொழிற்சாலையைப் போன்று தென்னகத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று சொன்ன நேரத்திலே இவர்கள் கோபித்தார்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வேன்—ஏன் இந்த இரசாயன உர தொழிற்சாலைகளையெல்லாம் பொதுத் துறையிலே ஆரம்பிக்கக் கூடாது ? ரசாயன உரங்களிலே கலப்படம் இருக்கிறது என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் வருகின்றன. தனியார் துறையிலே லாப நோக்கத்தோடு எதையும் செய்யக்கூடும். காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, போகிற போக்கு தனியார் துறையை நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறது. இயந்திர செங்கற் தொழிற்சாலை பொதுத் துறையில் 2 ஆரம்பிப்பதாக குறிப்பு உள்ளது. தனியார் துறைக்கும் 2 லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுத் துறை தூங்கிக்கொண்டிருக்கும். தனியார்துறை செங்கற் தொழிற்சாலை துவக்க விழாக்களில் அமைச்சர்கள் வாழ்த்து வழங்குவார்கள். நூற்பு ஆலைகளின் நிலையும் அதே நிலைதான். நூற்பு ஆலையைப் பற்றி ஒரு கேள்வி கேட்கிறபோது, "தொழிலைப் பற்றித் தெரியவில்லை, தொழிலை நடத்தி இருந்தால் தெரியும்" என்று பதில் சொல்லுகிறார்கள். நான் பெரிய தொழில் அதிபர் அல்ல. அதனால் தொழிலைப் பற்றி கேட்கக் கூடாதா ? தனியார் நூற்பு ஆலைகளுக்கு கதிர்களுக்காக லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை என்று சொன்னேன். பாராளுமன்றத்தில் 1962-ஆம் மேமாதம் 16-ம் தேதி அன்று ஒரு கேள்விக்கு மத்திய அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலைப் பார்த்தால், பல மாகாணங்களுக்கு தனியார் துறை மில்களுக்கு கதிர்கள் கொடுத்திருக்கிறார்கள். உத்திரப் பிரதேசத்துக்கு 1,42,000 கதிர்கள், பஞ்சாபுக்கு 1,98,000 கதிர்கள், குஜராத்துக்கு 1,82,000 கதிர்கள் என்று இப்படி வரிசையாகப் பல மாகாணங்களுக்கு தனியார் துறையினருக்கு கதிர்கள் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய சென்னை மாகாணத்திலிருந்து 324 விண்ணப்பங்கள் போயிருந்தும் ஒருவருக்குக் கூட கதிர்கள் கொடுக்கப்படவில்லை. நான் தனியார் துறைக்காக வாதாடவில்லை. இதிலேகூட ஏன் வடக்கு [illegible]

வஞ்சகம். வடக்கே இருக்கின்ற ஆலைகளுக்குப் பெருத்த அளவில் கதிர்களைக் கொடுத்திருக்கும்போது ஏன் இந்த மாகாணத்திற்கு மட்டும் 'கதிர்கள் ஒதுக்கப்படவில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நீங்கள் சொல்வது தவறு.

Sri K. A. Mathialagan : Statement showing statewise position about allocation of spindles vido answer to unstarred question No. 1358, dated 16th May 1962.

மத்திய அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பாராளுமன்றத்தில் பதில் அளிக்கும்போது கொடுத்த புள்ளிவிவரங்களை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். இதிலேகூட இந்த மாநிலம் வஞ்சிக்கப்படுகிறது. தொழில் பேட்டைகளின் நோக்கமே பின்தங்கிய பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்கும் தொழிலை பரவலாக்குவதற்கும் தான் என்று கூறப்படுகிறது. கிண்டியிலும், விருதுநகரிலும் இருந்து விட்டால் போதுமா ? பின்தங்கிய ராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கு அமைச்சர் என்ன சமாதானம் சொல்லுகிறார்?

அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே இண்டஸ்ட்ரியல் யூனிட்டுகளின் லாப நஷ்டக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். லாப நஷ்டக் கணக்கை மூன்றாவது வருஷத்தில்தான் பார்க்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மூன்றாவது வருஷக் கணக்கைப் பார்த்தால் 12 யூனிட்டுகளிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சிராமிக் செண்டர் விருத்தாசலத்திலே 30,000 ரூபாய் நஷ்டம், ஜெனரல் பர்ப்பஸ் எஞ்ஜினியரிங் ஓர்க்ஷாப்பிலே 12,000 ரூபாய் நஷ்டம், பிரஷர் டை காஸ்டிங் யூனிட் கிண்டியிலே 1,21,000 ரூபாய் நஷ்டம், கவர்ன்மெண்ட் லாக் யூனிட், திண்டுக்கலிலே 9,000 ரூபாய் நஷ்டம், ஹாண்ட்லூம் பார்ட்ஸ் யூனிட் சேலத்திலே 30,000 ரூபாய் நஷ்டம், போல்ட்ஸ் அண்டு நட்ஸ் யூனிட், ஈரோட்டிலே 1,000 ரூபாய் நஷ்டம், பிராஸ்வேர் யூனிட், கும்பகோணத்திலே 1,000 ரூபாய் நஷ்டம். இந்த நஷ்டக் கணக்குகள் எல்லாம் மூன்று வருஷங்கள் கழிந்த பிறகு ஏற்பட்டவை. நான் ஒன்றே ஒன்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். **Five officers of the Industries Department are now undergoing training abroad in specialised fields** என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய அதிகாரிகளில் ஐந்து பேர் வெளி நாடுகளிலே பயிற்சி பெற்று வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த அதிகாரிகள் என்னென்ன துறையிலே பயிற்சி பெறுகிறார்கள், எந்தெந்த நாடுகளில் பயிற்சி பெறுகின்றனர், அவர்களுடைய பெயர்கள் என்னென்ன என்பதை இந்த மன்றத்திலே அறிவிக்க அமைச்சர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை 12-00 noon.
மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் மதியழகன் அவர்கள் சாதாரண பல்லவியை ஆரம்பித்து, அனுபல்லவியில் நின்று சரணத்திற்கு வந்து முடித்திருக்கிறார்கள். முன்பெல்லாம் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கறது என்றே குற்றம் சாட்டுவார்கள் ஆனால் இன்றைக்கு தென்னகத்தில் பல தொழில்கள் வந்திருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். குறிப்பாக தென்னகத்தில் ஆரம்பிக்கப்படுகிற தொமில்கள் எல்லாம் எட்டு முதலாளிகளின் கையில் தானே இருக்கின்றன, பத்து முதலாளிகளின் கையில்தானே இருக்கின்றன என்று அவர் சொன்னாலும் இந்த அளவுக்காவது இங்கே ஆரம்பிக்கப்படுவதை அவர் ஒப்புக்கொள்வது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாண்டும் வடக்கே வாழ்கிறது, தெற்கே தேய்கிறது என்று பல்லவியிலேயே நிற்காமல் இந்த அளவு அனுபல்லவிக்கு வந்ததற்கு நன்றி.

தொழில் துறையில் தமிழ்நாடு நல்ல வளர்ச்சி கண்டு வருகிறது
என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்
களைப் பார்த்தாலே தெரியும். நம் மாநிலத்தில் 4 கோடி மக்கள்
இருக்கிறார்கள் என்றால் 80 சத விகிதம் பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுக்
கொண்டிருந்தார்கள். மீதி 20 சத விகிதம் மக்கள்தான் தொழில்
துறையில் ஈடுபட வாய்ப்பு இருந்தது. இப்போது அதிகமான பேர்கள்
தொழில் துறையில் ஈடுபட வாய்ப்பு பெருகியிருக்கிறது. வேலையில்லாத் திண்
டாட்டம் குறைந்து வருகிறது. மூன்றாவது திட்டம் முடிந்துவிடுமானால் 5 பேர்
களுக்கு ஒரு தொழிற்சாலை என்ற வேகத்தில் தொழில்துறை வளர்ந்து
விடும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. இரண்டாவது
ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு வருஷத்தில் 365 தொழிற்சாலை
என்று வளர்ந்திருக்கிறது என்றால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
துவங்கிய முதல் வருஷத்திலேயே 2 மடங்காகப் பெருகியிருக்கிறது குறிப்
பாக 687 தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றால் இதுபற்றி யாரும்
சந்தேகப்படவேண்டியதே இல்லை. நான்காவது திட்டம் நிறைந்து பூர்த்தியாகி
விடுமானால் வேலையில்லாமல் இந்த நாட்டில் ஒருவர் கூட இருக்க முடியாது,
ஆள் கிடைக்கவில்லை என்ற குறைதான் இருக்கலாம். வறுமை என்
பதே இல்லாமல் போய்விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாத் தொழில்களையும் சர்க்காரே ஏன் ஏற்று நடத்தக் கூடாது,
தனியார் துறைக்கு ஏன் விடவேண்டும் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள்.
சென்ற ஒரு வருடத்தில் தனியார் துறையில் உள்ள பண வசதியையும்,
சர்க்கார் உதவியையும் வைத்துக்கொண்டு 687 தொழிற்சாலைகள் ஆரம்பிக்
கப்பட்டன என்றால் தனியார் பண வசதியின்றி சர்க்கார் தம்மிடம்
உள்ள பணத்தைக்கொண்டு மட்டும் தொழில்கள் ஏற்படுத்த முன்வந்
திருந்தால் 60 தொழில்களுக்கு மேல் ஏற்பட்டிருக்க முடியாது என்பதை
கனம் அங்கத்தினர்கள் உணர வேண்டும். இன்றையதினம் தனியார்
மூலதனம் தொழில் துறைக்கு வரவழைக்கப்படுகிறது. இந்நாட்டில் பல
தொழில்கள் வளர்வதற்கும், பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்
படுவதற்கும் ஈடுபடுத்தப்படுகிறது. அதே சமயம் நம்முடைய தேசீய வரு
மானம் அதிகரிக்கவும் வழி செய்யப்படுகிறது. எட்டு முதலாளிகள்
லாபம் அடைந்து போகிறார்களே என்றால் அந்த எட்டு முதலாளி
களும் தம் இஷ்டப்படி கொள்ளை அடிக்க அனுமதிக்கப்படுவதில்லை. லாபத்
தில் ஒரு பங்கு தொழிலாளர்களுக்கே போனசாக வழங்கவும் வகை
செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று வருமானத்திற்கு ஏற்றவகையில்
சர்க்காருக்கும் அவர்கள் வரி கட்ட வேண்டியிருக்கிறது.

ஆகவே இன்றைக்கு நாம் கவனம் செலுத்த வேண்டிய ஒரே ஒரு
பிரச்சனை, நம் நாட்டில் தொழில்கள் வளரவேண்டும் என்பதுதான்.
ஆகவே யார் என்ன சொன்னாலும் இன்றையதினம் நம்முடைய அர
சாங்கம் செம்மையாக வகுத்துக்கொண்டு, முன்னேறி வருகிற தொழில்
கொள்கை நல்ல முறையில் உறுதியாகப் பின்பற்றப்படவேண்டுமென்று
நான் கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படு
கிறேன்.

அடுத்து, இன்னொரு யோசனையையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
தொழில், தொழில் பயிற்சி, வேலை தேடித்தரும் ஸ்தாபனம்—இண்டஸ்
ட்ரி—இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங்—எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ்ஜ்—ஆகிய
இந்த மூன்றையும் ஒன்றாக இணைத்து—ஒரே இலாகா இந்த மூன்று பிரிவு
வேலைகளையும் கவனிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
இதுபற்றி ஏற்கனவே நான் அமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறேன். அப்
போதுதான் இந்த வேலைகள் செம்மையாக நடைபெறக்கூடும். தயவு
செய்து அதைப் பரிசீலனை செய்தால் நலம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் இப்போது பலருக்கு தொழில் கல்வி கொடுக்
கப்பட்டு வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்
3,750 பேர்களுக்கு தொழில் கல்வி கொடுக்கும் நிலை ஏற்படும் என்று

குறிப்பை கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதற்காக
மகிழ்ச்சி அடைகிறோம். நீலகிரி மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் ஏற்
படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிக அதிகமான
உயரத்தில் இருப்பதால் அங்கே தொழில்களை ஏற்படுத்த முடியாது என்
றாலும் பாக்டரி போன்றது இல்லாவிட்டாலும் ஏதாவது வேறு தொழிற்
சாலை அமைய முடியுமா என்பதை நன்கு பரிசீலித்து தக்க ஏற்பாடு
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்
கிறேன். வணக்கம்.

*** திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்
களே, நமது தொழில்துறை அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானி
யத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். கோயம்
புத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் பல்வேறுஎன்ஜியரிங்தொழில்கள்
ஏற்பட்டிருக்கிற ஒரு காரணத்தினால் அங்கே அடிக்கடி நிலக்கரி பற்றாக்
குறை ஏற்படுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் நன்கு உணர்
வார்கள். அதற்குக் காரணம் நமக்குக் கிடைக்கக்கூடிய நிலக்கரியானது
வட நாட்டில் இருந்து வருகிறது. போக்குவரத்துக் குறைவு இருப்பதனால்
அவ்வப்போது மூன்று நான்கு மாதத்திற்கு திடீரென்று நிலக்கரி
கிடைக்காமல் வேலை தடைப்படுகிறது. ஆகையால் இனி அப்படிப்பட்ட தடை
ஏற்படாதபடி போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்தி நிலக்கரியை தட்டு
இல்லாமல் கொடுப்பதற்கு தக்க வழிவகைகளை மேற்கொள்ள வேண்டு
மென்று நான் மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நமது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள்
சொல்கிறபோது இன்னும் 75 ஆயிரம் கதிர்கள் நூற்பு ஆலைகளுக்குக்
கொடுப்பதற்கு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதி
கோவை மாவட்டத்திலேயே ஒரு நூற்பு ஆலை கூட இல்லாத பகுதி.
அந்தப் பகுதியில் புதியதாக நூற்பு ஆலை ஒன்றையாவது ஆரம்பிக்க
வேண்டும். ஏதாவது ஒரு தொழிற்சாலை அந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்
படவேண்டும் என்று இந்த இடத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒருசில
கஷ்டங்கள் இருக்கின்றன. பித்தளை தகடு, கம்பிகள், குழாய்கள் போன்
றவை பத்து டன் வேண்டுமென்று அவர்கள் கேட்டால் அவர்களுக்கு ½ டன்
கொடுக்கப்படுகிறது. இவற்றை வைத்துக்கொண்டு தொழிற்சாலை ஆரம்
பிப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்த கோட்டாவை அதிகப்
படுத்த வேண்டும். அப்போதுதான் சிறு தொழில்கள் வளர்ச்சி அடைய
முடியும். இன்னும் கடன் கொடுத்த தொகைக்கு வட்டியை அதிகப்
படுத்த இருப்பதாகத் தெரிகிறது. அப்படிச் செய்வதால் சிறு தொழில்
கள் நசித்துவிடக்கூடும். ஆகவே 2, 2½ சத விகிதத்திற்கு மேல் வட்டியை
அதிகப்படுத்தக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இன்றைக்கு இந்த மாநிலத்தில் தொழில் ஆரம்பிக்க லைசென்சு
பெற்றவர்கள் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகவே தொழிலை ஆரம்பிக்காமல்
இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இத்தனை காலத்திற்குள் தொழில்
ஆரம்பிக்கவேண்டுமென்ற ஒரு வரையறை லைசென்சு கொடுக்கிறபோதே
விதிக்கவேண்டும், அவ்வாறு அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தொழிலை
ஆரம்பிக்கும்படியாகவும் வற்புறுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய ராஜ்யத்தில் பஸ், லாரி, கார் போக்
குவரத்துகள் அதிகப்பட்டிருக்கின்றன, வாகனங்களின் எண்ணிக்கை அதிகப்
பட்டிருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்
கள். இன்னும் வருங்காலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகப்
படுவதற்கும் வாய்ப்பு இருப்பதனால் நம் நாட்டிலேயே அந்த வாகனங்
களின் ஸ்பார் பார்ட்ஸை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை
யும் ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் பேசும்போது இந்த நாட்டில் தொழில்கள் ஒரு எட்டு பணக்காரர்களின் கையிலேயே இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதுவும் குறிப்பாக கோவை முதலாளிகளிடம் அதிகம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். கோயம்புத்தூரைச் சேர்ந்தவர்கள் உழைப்பாளிகள், ஊக்கம் உடையவர்கள். ஔவையார் குறிப்பிடும்போது

நாடாகொன்று ! காடாகொன்று !
அவலலொன்று ! மிசையாலொன்று !
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லைவாழிய நிலவே !

என்று அந்த அந்த நாட்டிலே உள்ள மக்களின் முயற்சியைப் பொறுத்தே அந்த நாடு வளம் பெறுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்படி இன்றையதினம் கோயம்புத்தூரில் உள்ளவர்கள் முயற்சி உடையவர்களாக தம்மிடம் உள்ள பணத்தை எல்லாம் தொழில் துறையில் ஈடுபடுத்தி பாடுபடுகிறார்கள், நாட்டிலே பல தொழில்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக லாபகரமாக இருக்கக்கூடிய தொழில்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டுவிட வேண்டுமென்று சொன்னால் அப்போது இது மக்கள் ஆட்சியாக இருக்காது, ஒனநாயக ஆட்சியாக இருக்காது.

ஆகவே அந்த ஒரு கொள்கை நமக்கு ஆகாது. எனது தொகுதியில் ஒரு பெரிய இரும்புத் தொழிற்சாலையில்—டெக்ஸ்டூல் கம்பனியில்—6,000 ரூபாயில் கார் உற்பத்தி செய்கிறார்கள். இரண்டு கார்கள் உற்பத்தி செய்யப்பட்டு பரீட்சார்த்தமாக வெளியில் வந்திருக்கின்றன. அதை பரிசிலனை செய்து எந்தமாதிரி அதை மாற்றியமைக்க வேண்டுமென்று ஆலோசனைகள் கூறினால் வருங்காலத்தில் குறைந்த வருமானம் உள்ளவர்கள்கூட கார் வசதி பெற முடியும். இன்று 12,000 ரூபாய்க்கு குறைந்து ஒரு கார் வாங்கினால் அதை ஓட்ட முடியாது. நாள்தோறும் ரிப்பேர் செய்யவேண்டியிருக்கும். ஆகவே இதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அதை ஊக்குவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரம் அடைந்த 15 ஆண்டுகளில் நம் மாநிலம் பிற மாநிலத்தவர்கள் மெச்சத்தக்க முறையில் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் நம் தொழில் அமைச்சர் அவர்களும், நம் முதல் அமைச்சர் அவர்களும் இந்த இலாகாவைச் சார்ந்தவர்களும்தான் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவையைப் பொறுத்தவரையில் நான் சொல்ல வேண்டுமென்றால் கிடு கிடுவென்று வளர்ந்தது, ஆனால் இப்போது ஒரு மந்தமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்று அங்கு பல தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டுமென்று அங்குள்ளவர்கள் விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்யவேண்டும், பராமுகமாக இருந்து விடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். தொழில் வளர்ந்தால்தான் செல்வம் வளர முடியும். செல்வம் இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் வளராது. கோவையில் பம்ப் செட்ஸ் உற்பத்தி செய்கிறார்கள் என்றால் தஞ்சைக்கு கொடுக்காமலா இருக்கிறார்கள் ? நிறைய ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகவே எங்கு உற்பத்தியானாலும் மாநிலம் முழுவதும் அது செலவு செய்யப்படுகிறது என்று எடுத்துச் சொல்லி என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. மு. கருணாநிதி : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழில்துறை மான்யத்தின்மீது எதிர்கட்சி நண்பர்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என் கருத்துக்களை இங்கு கூற விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய ஆளுங்கட்சி அம்மையார் அவர்கள் கோவை மாவட்டத்தில் தொழில்துறை வளர்ச்சி அடைய ஆரம்பித்து தற்போது ஒரு மந்தமான நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அவர்கள் அவர்களது மாவட்டத்தைப்பற்றிமட்டும் குறிப்பிட்டார்கள்.

நாங்கள் இந்த மாநிலத்தைப் பொறுத்தே குறிப்பிடுகிறோம். அவ்வளவுதான். "மந்தநிலை ஏற்பட்டிருக்கிறது தொழில் வளர்ச்சியில்", என்று அம்மையார் அவர்கள் கூறிய அந்த வாக்கியத்தின் அடிப்படையில்தான் என் பேச்சு இங்கு அமைகிறது என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய எங்கள் தோழர்கள் அனைவரும் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற வார்த்தையை இங்கு பயன்படுத்திய நேரத்தில் ஆளும் கட்சியில் உள்ள நண்பர்கள் எல்லாம் இது பழைய பல்லவி, ஒருவர் பல்லவியை ஆரம்பித்தார், மதியழகன் அனுபல்லவிக்கு வந்திருக்கிறார் என்று நண்பர் மாதா கவுடர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் பல்லவி, அனுபல்லவி என்ற நிலைமையிலே இருக்கிறோம். ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் டெல்லிக்குப் போய் சண்டை போடாமல் சரணம் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதற்காக வருந்துகிறேன்.

தொழில் துறை மான்யத்தின்மீது பேசுகிற நேரத்தில் பின்தங்கிக் கிடக்கிற தமிழகத்தை முன்னுக்கு கொண்டு வருவதற்கு மேலும் பல தொழில் நிலையங்களை உருவாக்கவும், தொழில் துறையில் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்றுதான் நாங்கள் கூறுகிறோம். வடக்கு தெற்கு என்று பேசுகிற காரணத்தினால் வடக்கு என்ற திசையின்மீதே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கோபம் என்று யாரும் கருதி விடக் கூடாது.

எங்கள் கழகத் தோழர் சீராமுலு அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் இங்கு பேசியபோது குறிப்பிட்டார்கள், "தெற்கு சேலம் வாழ்கிறது, வடக்கு சேலம் வாடுகிறது", என்று. இன்றையதினம் பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த ராஜாராம் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் "தெற்குப் பகுதி வாழ்கிறது, வடக்குப் பகுதி வாடுகிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆகவே இந்தப் பிரச்னை ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் எழுகிற பிரச்னையே தவிர திசையைப் பொறுத்து ஏற்படுகிற நிலை அல்ல.

தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிற தென்னகம் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதற்காக எடுத்துக்கொள்ளப்படுகிற முயற்சிகள் இவை என்பதை மனதில் கொள்ளவேண்டும். நம் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். நேற்று திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசியபோது அதற்குப் பதில் கூறிய அமைச்சர் "பிரசங்கங்களால் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது", என்று குறிப்பிட்டார்கள். சட்ட மன்றம் என்று ஒன்று கூட்டி இங்கு விவாதம் நடைபெறுவதற்குக் காரணமே இங்கு சொல்லப்படுகிற கருத்துக்கள் அமைச்சர்களின் உள்ளத்தில் பதிந்து அந்தந்த வட்டார உறுப்பினர்கள் இங்கு எடுத்துக் கூறும் குறைகளுக்கு பரிகாரம் காணப்படவேண்டும் என்பதுதான். அவற்றைத் தொகுத்து நம் மாநில அமைச்சர்கள் டெல்லியில் இருப்பவர்களிடம் எடுத்துச் சொல்லி ஆவன செய்யவேண்டுமென்பதற்காகத்தானேயன்றி வேறு அல்ல.

அப்படி என்ன தமிழகம் பின்தங்கிக் கிடக்கிறதா என்று கேட்பவர்களுக்கு சில புள்ளிவிவரங்களை என்னால் தர முடியும். பம்பாய் மாநிலத்தில் இருப்பவர்களில் சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை 43. அவர்களால் பாதுகாக்கப்படவேண்டியவர்கள் 57 பேர்கள். தமிழகத்தில் சம்பாதிப்பவர்கள் 31. அந்த 31 பேர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் 69 பேர்கள் இருக்கிறார்கள். இதை மறந்துவிடக் கூடாது. தமிழகத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற விவசாயியின் ஆண்டு வருவாயை விட வட மாநிலங்களிலுள்ள உழவனின் வருவாய் ஏறத்தாழ 200 ரூபாய் அதிகமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மூன்றுவது திட்ட இறுதியில் தொழில்துறை வருமானம் இந்தியாவில் கிழக்குப் பகுதியில் 54·60 சதவிகிதமாக உயரும். அகில இந்திய தொழில்துறை வருமானமும் 34·94 சதவிகிதமாக உயரும். ஆனால் தென்னகத்தில் 17·90 சதவிகிதம்தான் இருக்கும். இது சமநிலையில்லாத முறையில் பிரதேசங்களை வளர்ப்பதன் போக்கு. இது இன்ஸ்டிட்யூட் ஆப் பப்ளிக் ஒப்பினியன் பொருளாதார அறிக்கையில் இருப்பதாகும்.

குறிப்பாக பிரதேச வருமானம் எப்படியிருக்கிறது என்று பார்ப்போமானால் 1950–51 லிருந்து 1965-66 வரை உள்ளதை கவனிப்போம். ஆந்திராவை எடுத்துக்கொண்டால் 73·31 சத விகிதம், கேரளாவில் 63·53 சத விகிதம். தமிழகத்தில் 79·61 சதவிகிதம், மைசூரில் 82·01 சத விகிதம், ஒரிசாவில் 229·37 சதவிகிதம், பஞ்சாபில் 189·75 சத விகிதம், பம்பாயில் 177·03 சத விகிதம் இருக்கின்றன. தமிழகத்தின் வருமானம் 79·61 சத விகிதம்தான். இது பொருளாதார அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பிரதேச வாரியாக தொழிற்துறையில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு நபரின் சராசரி வருமானம் எவ்வளவு என்று பார்க்கலாம். ஆந்திராவில் 31·24 சத விகிதம், கேரளாவில் 12·70 சத விகிதம், மைசூரில் 29·56 சத விகிதம், ஒரிசாவில் 166·77 சத விகிதம், டெல்லியில் 60·19 சத விகிதம், தமிழகத்தில் 39·99 சத விகிதம் என்ற நிலையைக் காண்கிறோம். தமிழகத்தைவிட குறைந்திருக்கிற வட மாநிலங்களின் புள்ளி விவரங்களோடு ஒப்பிடாமல் அதிகமாக உள்ள மாநிலங்களோடு ஒப்பிடுகிறீர்களே, இது உங்கள் பிரசாரத்திற்காக அல்லவா என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும்.

> " தம்மின் மெலியாரை நோக்கித்
> தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்க ! "

என்று காட்டப்படுகிற தத்துவப் பொன்மொழியை அரசியல் துறையில் இழுக்க வேண்டாம். சராசரி வருமானம் பிற மாநிலங்களில் எவ்வளவு உயர்வாக இருக்கிறது, தமிழகத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவது, நாம் எந்தளவு பின்தங்கிக் கிடக்கிறோம் என்பதை எண்ணி நம் தொழில் வளத்தையும், பொருளாதார வளத்தையும் பெருக்கிக் கொள்வதற்காகத்தான். "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பது பேராசைக்காரனிடம் கூற வேண்டிய உபதேசமே தவிர, பெரும் பசிக்காரனிடம் சொல்லும் பழமொழியாக இருத்தல் கூடாது. " கிட்டாதாயின் வெட்டனமற " என்பதை டெல்லியைக் கேட்டுப்பார்த்து அவர்கள் தர மறுத்த பிறகு நீங்கள் கையாளும் அறிவுரையாகக்கொள்ளாமல் " முயற்சி திருவினையாக்கும் " என்ற மூனைப்புடனும், " ஊழையுமுப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது ஏற்றுபவர்" என்று கனம் உறுப்பினர் ஈரோட்டார் கூறிய குறள் வழிக்கிணங்கவும் செயல்படவேண்டும் எனக் கூறுவேன். தமிழகத் தொழில் துறை வளர டெல்லியிடம் மேலும் போராடுங்கள்.

தொழில் வளர்ச்சிக்கு தொழிலாளருடைய நலன் மிக மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். தொழிலாளருடைய வளமும், தொழிலாளருடைய நலமும் பாதுகாக்கப்பட்டால்தான், அவர்களுடைய உரிமைகள் ஒழுங்காக அளிக்கப்பட்டால்தான், தொழிலாளர்களுடைய வாழ்வில் நிம்மதி இருந்தால்தான், தொழில் துறையில் நாம் எதிர்பார்க்கிற உற்பத்தி பெருகவும், நாடு பொருளாதாரத்தில் முன்னேறவும் வழிவகை காண முடியும். இந்தியாவில் மண்ணியல், சுரங்க இயல், கனி இயல் ஆகியவற்றிற்கான சங்கத்தின் அறிக்கை கூறுகிறது, இந்தியத் தொழிலாளிக்கும் வேறு நாடுகளில் இருக்கிற தொழிலாளிக்கும் உள்ள திறமையைப்பற்றி. அந்த அறிக்கையில், ஒரு நாளுக்கு ஒரு ஆங்கில நாட்டுத் தொழிலாளி 6 டன்னும், ஜெர்மானிய நாட்டுத் தொழிலாளி 8·99 டன்னும், அமெரிக்கத் தொழிலாளி 21·68 டன்னும், இந்தியத் தொழிலாளி 2·7 டன்னும்தான் அகழ்ந்து எடுக்கிறார்கள் என்று சுரங்க இயல், மண் இயல், கனி இயல் சங்கத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது. இதை நான் சொல்லுவதற்குக் காரணம், இந்தியத் தொழிலாளி ஏன் இந்த அளவுக்குத் திறமைக் குறைவாக உற்பத்தியை—அது மண் இயல், கனி இயல், சுரங்க இயல் துறையில் மாத்திரம் அல்ல, பஞ்சாலை ஆகட்டும், சணல் தொழிற்சாலையில் ஆகட்டும், அல்லது காகிதத் தொழிற்சாலையில் ஆகட்டும், படைப்புத் திறன் ஏன் இந்தியத் தொழிலாளிக்குக் குறைந்திருக்கிறது என்

பதை ஆராயவேண்டும் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான். அவனுடைய உடல் வலு சரியாக இல்லை. உடல் வலுவைப் பேணிப் பாதுகாக்கின்ற அளவுக்கு ஊதியம் இல்லை என்று காரணம் காட்டப்படுகிறது. அதையும் உடனடியாக ஆய்ந்து அறிந்து அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இன்றைய தினம் நெருக்கடி நிலைமையை உத்தேசித்து சிலபல தொழிலாளர்களுடைய கோரிக்கைகள், நியாயமான கோரிக்கைகளாக இருந்தால்கூட, அவைகளை நெருக்கடி நிலைமையிலே கூடுமான வரையில் ஒத்தி வைப்பது என்று தொழிற் சங்கங்களெல்லாம் முடிவு எடுத்திருக்கின்றன. அதற்கு தொழிலதிபர்களும் ஒத்துழைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் தொழிலதிபர்கள் சொன்னபடி நடக்கவில்லை. நேற்றைய தினம் கூடிய தமிழ்நாடு இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸ் நிர்வாகக் குழுவின் தீர்மானத்தை எடுத்துப் பார்த்தால் இந்த பல்வேறு வரிகளின் மொத்தச் சுமையும் ஏழைத் தொழிலாளர்கள்மீதே விழும் என்று குறிப்பிட்டு, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், ராஜ்யத்தில் தொழில் உறவு முறை மோசமடைந்து வருவதாக நிர்வாகக் கமிட்டி கருதி, தொழில் அமைதித் தீர்மானத்தைப்பற்றி தொழில் அதிபர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை என்று தமிழ்நாடு இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரஸ் குற்றம் சாட்டுகிறது.

கடைசியாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில், சென்னையில் உள்ள பி. அண்ட் சி. மில்லில் சிக்கனச் சீரமைப்பைத் தொடர்ந்து, ஆட்குறைப்பு செய்யப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டுவிட்டு, ஜவுளித் தொழில் ஊதிய போர்டு சிபாரிசுக்கு ஏற்பவோ, சிக்கனச் சீரமைப்புபற்றிய தேசீய உடன்பாட்டுக்கு ஏற்பவோ, சிக்கனச் சீரமைப்பு இல்லை என்று, பி. அண்ட் ஸி. மில் நிர்வாகம் இந்தச் சீரமைப்பின் பேரால் பல தொழிலாளர்களை இன்றைய தினம் வேலையை விட்டு நீக்கியிருப்பதைக் கண்டிக்கிற வகையில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. தொழிலாளர் வாழ்வு பாதிக்கப்பட்டால், தொழிலாளர்களுடைய உள்ளம் வாடுவதற்கான நிலைமைகள் தோன்றுமேயானால், நாம் எதிர்பார்க்கிற உற்பத்தி அதுவும் இந்த நெருக்கடியான நிலையில் நாம் எய்த முடியுமா, நாம் அடைய முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனக்கு முன் பேசிய கனம் மதியழகன் அவர்கள் தொழில் துறை பெரும்பாலும் தனியார்துறை வசமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த மாமன்றத்தில் 1957-ம் ஆண்டிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்ற நேரத்திலிருந்து, பொதுத் துறையை வளர்க்க வேண்டுமென்றும், தனியார் துறைக்கு ஆக்கம் அளிக்கிற போக்கினை அரசினர் திரும்பப் பெறவேண்டும் என்றும் வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். எந்த தனிப்பட்ட முதலாளியும் நாட்டில் இருக்கிற ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தொழிலை உருவாக்க வேண்டும் என்ற லட்சிய நோக்கத்தோடு ஆரம்பிப்பதில்லை. லாப நோக்கத்தோடு, தனக்கு எவ்வளவு லாபம் கிட்டும் என்று லாபக் கணக்கைப் பார்த்துக்கொண்டுதான் முதலாளி வர்க்கத்தினர், தனியார் துறையில் தொழிலில் ஈடுபடுகிறார்கள். தனியார் தொழில்களுக்கு அரசாங்கம் எல்லாச் சலுகைகளையும் தந்து, தனியார் துறையை மேலும் மேலும் ஊக்கப்படுத்திக்கொண்டு போவதும், கேட்டால், இதற்குப் பெயர்தான் ஆவடி சோஷலிஸம் என்று கூறுவதும், இந்த கலப்பட பொருளாதாரம்தான் காங்கிரஸ் கட்சியின் தத்துவம் என்று கூறுவதும், உள்ளபடியே முற்போக்கு சக்திகளால் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலை அல்ல என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தனியார் துறைக்கு அரசினர்மூலம் தரப்படுகிற கடன் அல்லது நிதிக் கார்ப்பொரேஷன்மூலம் தரப்படுகின்ற உதவிகள் எப்படி எப்படி தரப்படுகிறது என்றால் யாரோ சில வேண்டியவர்களுக்கு, அதிகாரத்திலே இருப்பவர்களுக்கும் அந்த முதலாளிகளுக்கும் உள்ள தொடர்பு, சொந்தம், பந்தம், பாசம், இவைகளை வைத்துத்தான் தரப்படுகிறது என்று

சொன்னால் அதை இந்த அமைச்சரவை உளமார மறுக்க முடியாது என்று நான் கூறிக்கொள்வேன். அந்த நிலை இங்கு மாத்திரம் இல்லை. இந்தியாவிலேயே, இந்த நிதிக் கமிஷன்பற்றி ஆராய்வதற்காக, திருமதி சுசேதா கிருபலானி, 1955-ம் ஆண்டில் என்று கருதுகிறேன், அப்போது போடப்பட்ட குழுவுக்குத் தலைவராக இருந்த அவர்களை இதைச் சொல்லி யிருக்கிறார்கள். வேண்டியவர்களுக்கு இப்படிப்பட்ட உதவிகள் தரப்பட்டு, தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சலுகைகள் தரப்படுகின்றன என்று அவர் கள் அந்தக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

ஆகவே தனியார்துறை நீக்கப்பட்டு, பொதுத் துறைக்கு இந்த சர்க்கார் தங்களை இழுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் மிக மிகப் பணிவன் போடு இங்கே கேட்டுக்கொள்வேன்.

அமைச்சர் சொல்லலாம், தனியார் துறையில் பணம் இருக்கிறது அவர்களிடத்தில், நாமும் கொஞ்சம் பணம் கொடுக்கிறோம், ஆகவே தொழில் துறையை விருத்தி செய்யக்கூடிய நிலையில் அவர்களுடைய முதலீடு உள்ளது, உதவி செய்யக்கூடிய நிலையில் உள்ளது நாங்கள் தரும் பணம் என்று.

நான் அவர்களுக்கு யோசனை வழங்குவேன். அமைச்சர் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். என் அர சாங்கம் ஒரு தொழிலுக்கு 50 சதவீதம் முதலீடு செய்து, மிச்சம் உள்ள பணத்தைப் பொது மக்களிடத்தில் வசூலிக்கக் கூடாது ? பொது மக்கள் பங்கெடுத்துக்கொள்ள மாட்டார்களா ? பங்குதாரர்களாகச் சேர மாட்டார்களா ? இன்றைய தினம் பொது மக்கள் பங்குதாரர்களாகச் சேர வில்லையா ? தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்கிற தொழில்களில் பொது மக்கள் பங்கெடுத்துக்கொண்டு, பங்கு எடுத்துக்கொண்டு, அவர்களையே நம்பிப் பங்குப் பணம் போடுகிற நேரத்தில், நம்பிக்கையும், நாணயமும் நிறைந்த சர்க்காரை நம்பிப் பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறார்களா ? பொது மக்கள் பணம் சரி பகுதி அல்லது நிர்ணயிக்கிற பகுதி பொது மக்களிடத்திலிருந்து பெற்று, அரசினர் இன்ன சதவீதம் தருவது என்று நிர்ணயித்து பொது மக்களும் அர சினரும் சேர்ந்தாவது பொதுத் துறைத் தொழில்களை நடத்தலாம். இப் படி ஒரு முறையையும் இத்துடன் அரசினர் எல்லாத் துறைகளையும் எடுத்து நடத்துவது என்ற இன்னொரு முறையையும் இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் குறிப்பிட்டார்கள், தனியார் துறையில் அவர்கள் நடத்துகிற பெரிய தொழில்களில் பெரும் லாபம் அடைந்தாலும், பெருமளவுக்கு வரி போட்டுப் பிடுங்கிக்கொள்கிறோம் என்று தெரிவித்தார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கிறோம்; நேராக மூக்கைத் தொடுவதற்கு பதில் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறோம் என்கிற வாதமாகத்தான் எங்களுக்குத் தெரிகிறது. ஆகவே தொழில் துறையைப் பொறுத்தவரையில் பொதுத் துறைக்கு, தீவிர மாக, அவசர அவசரமாக இந்தத் துறை மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக பொருளாதாரத் திட்டத்தை அகில இந்திய ரீதியில் வைத் திருக்கிற காரணத்தினால்தான் சில பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. முன்னேற முடியாத காரணத்தை எடுத்துக் கூறும்போது, எங்களால் மாத்திரம் சொல்லப்படுகிற கருத்து அல்ல, அமைச்சராக வீற்றிருந்து, தற்சமயம் ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கிற மதிப்புக் குரிய ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், நேற்று அல்ல, சென்ற கிழமை அல்ல, 1955-ல் சொல்லியிருக்கிறார். " நம் ராஜ்யத்தில் எவ்வளவு வரி போட முடியுமோ, அந்த அளவுக்குப் போட்டாகிவிட்டது. மத்திய சர்க்காரிட மிருந்து கிடைப்பது அதிகமாயில்லை. மத்திய சர்க்காரிடம் உதவி வேண்டும்

என்று கேட்பது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் குறைவு. தலை விதி என்று நினைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்து விடுகிறோம். மத்திய சர்க்காரிடம் இதை வற்புறுத்த வேண்டும். அழுகிற பிள்ளைக் குத்தான் ஏதாவது கிடைக்கும். ஆகையினால் தமிழ் நாட்டு மக்கள் அதிகக் கூச்சல் போட வேண்டும். அப்போதுதான் ஏதாவது கிடைக்கும். நமது மந்திரிகள் மத்திய சர்க்காரிடம் சண்டை பிடித்து வெற்றி காண வேண்டும் " என்று 1955-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் நாள் ஓமந்தூர் 12-30 p.m.
ராமசாமி ரெட்டியார் கூறியிருக்கிறார்.

ராஜா சர் முத்தையா செட்டியார், காங்கிரஸ் கட்சிக்கு இன்றைக்கு மிக மிக வேண்டியப் பிரமுகர், அவர் சொல்லியிருக்கிறார், " இங்குக் உட்கார்ந்துகொண்டு பேசிப் பிரயோசனமில்லை, டில்லிக்குச் செல்லுங்கள், அங்கு சென்று சண்டை போடுங்கள், டில்லிக்குச் செல்லுங்கள், டில்லி சலோ, டில்லி சலோ " என்று இந்த மன்றத்தில் பல தடவை குறிப் பிட்டிருக்கிறார்.

அவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால், நாங்கள் மாத்திரம் தான் சொல்லுகிறோம் என்பதில்லை. அந்தந்த மாவட்டத்திற்கு, அந்தந்தப்பகுதி களுக்கு இன்னின்ன தொழிற்சாலைகள் வேண்டும் என்று எதிர் கட்சி யைச் சேர்ந்த அங்கத்தினர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் களும் உங்களைப் பார்த்து தைரியமாகக் கேட்கிறபோது, அந்த தைரியத்தை பெற்று, டில்லி சென்று, தெளிவாக, தைரியமாக வாதாடி, தமிழகம் வாழ்வதற்கு, -தமிழகத்தில் தொழில்கள் சிறப்பதற்கு, தொழில்கள் மூலம் தமிழகம் வளம் பெறுவதற்கு, தமிழக மக்களுடைய வாழ்க்கை நலம் பெறுவதற்கு, உறுதுணையாக இந்த அமைச்சரவை போராட வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*** திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழில் துறை மான்யத்தின்மீது என்னுடைய கருத்துக்களை உங்கள் மூலமாக நான் இப்பொழுது சமர்ப்பித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே பொது வளங்கள் நிரம்ப இருக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக் கிறார்கள். சில இல்லாமல் இருக்கலாம். எல்லாம் எங்கும் உண்டு என்பது உலகில் எங்கும் இல்லை. ஆனால், தமிழ் நாட்டிலே இன்றிய மையாத வளங்களிலே பல உண்டு என்பதை மறுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன், ஒப்புக்கொள்ள முடியாது என்று எதிர்ப் பக்கத்தில் இருந்தால்.

அதற்கு மேலே, தொழில் புரிகின்ற செயல் திறனும், அறிவுத் திறனும் உடைய மக்களும் இங்கு அதிகம் என்பதை பல கணிப்புகளின் மூலம் நாம் உணர்ந்திருக்கிறோம். இந்த நிலையிலே தொழில் துறை மிக சிறப்பாக வளர்வதற்கான அடிப்படையிலே நாம் செய்ய வேண்டிய கடமை இப்பொழுது செய்யப் பெற இல்லை என்று நான் சொல்லவில்லை, துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லுகிறேன். நில நிதி கணக்கீடு (ஜியலாஜிகல் சர்வே) அதை மிக துரிதப்படுத்த வேண்டும். எங்கெங்கே, என்னென்ன, எவ்வளவு, எவ்வளவு கிடைக்கும் என்பதை அனுமானிக் கின்ற முறையிலே செய்யப்படவேண்டிய ஒரு கணக்கீடு. அது ஏதோ கொஞ்சம் நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், தக்க அளவிலே, தேவைக்குத் தக்க விரைவிலே, துரிதத்திலே அது செல்லவில்லை. இது அதை மிகத் துரிதப்படுத்தி, மிக அக்கறையுடன் கணிக்க வேண்டும். இது என்னுடைய முதல் வேண்டுகோள்.

என்று ஒவ்வொன்றையும் கேட்டால் அது தீமை. அனுபவிக்கின்றதை ஜில்லாவாரியாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், உற்பத்தியை ஜில்லாவாரியாக பகிர்ந்துகொள்ளுவது என்பது பயன் தரமுடியாத ஒன்று, பயன்தராத ஒன்று எங்கெங்கே, என்னென்ன வாய்ப்பு, வசதிகள், சூழ் நிலைகள் இவை உண்டோ, அதற்குத் தகுந்தவாறு அமைறையைச் செய்ய வேண்டும். அதைவிட்டுவிட்டு, உற்பத்தியில் ஏதோ பாகப் பிரிவினை போடுவது என்பது நெறியான முறை ஆகாது என்று நான் புலப்படுத்திக் கொள்ளு கிறேன். அப்பொழுதுதான் உற்பத்திச் செலவு குறையும்; ஆகவே, விலை குறையும்; அதோடு மட்டுமின்றி, பிற நாட்டு மோதல்களுக்கு, போட்டி களுக்கு ஈடுகொடுத்து தன்னைக்காத்து நிற்கவும் முடியும் என்பனவற்றை நான் புலப்படுத்திக்கொள்கிறேன். தொழில் துறையிலே பெரும் விரயம் போக்குவரத்துச் செலவுகள் (டிரான்ஸ்போர்டேஷன் சார்ஜ்) மிக அதிகமாக ஆகும். பழைய காலத்தில் ஒரு பழமொழி உண்டு. "சுரைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்" என்று. அது பொய் அல்ல; உண்மை. தற்கால பொருளாதார விஞ்ஞான ரீதியிலே கணிக்கின்ற பொழுதும் அந்த உண்மை நமக்குப் புலப்படும். ஆகவே, சாத்தியக் கூறுகளை, சூழ்நிலைகளை கணித்தே நம்முடைய தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டும். அதற்கு வேறு எந்தச் சலுகைகளையும் கொடுக்கப்படாது என்று உறுதி கொண்டுவிட வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மூன்றாவதாக, விவசாயப் பகுதி, தொழில் துறை பகுதி என்றெல்லாம் நமது நாட்டு நிலங்களில் பகுதிகள் பிரிக்கப்படவேண்டும். கோவையில் இருப்பவர்கள் ஒன்றைக் கேட்டார்கள். அதை எண்ணிக்கொண்டு நானும் கேட்டால் அது பைத்தியக்காரத்தனம். அங்கிருக்கிற சூழ்நிலைக்குத் தகுந்தபடி அங்கு இருக்க வேண்டும். நீலகிரியில் ஒன்றைக் கேட்பார் கள். அங்கே உருளைக் கிழங்கு விளைவிக்கிறார்கள் என்றால் காரைக்குடி யிலும் உருளைக் கிழங்கு விளைவிக்க வேண்டும் என்றால் பலன் தருமா? பிரயோசனம் இல்லை. அந்த சூழ்நிலைக்கு, சீதோஷ்ண ஸ்திதிக்கு, பூவுண வுசார தரத்திற்கு, அங்கு இருக்கிற தொழில் வள மூலப்பொருள்கள் கிடைக்கின்ற தன்மைக்கு, தொழில் துறைக்கு வேண்டிய நீர் முதலியவை கிடைக்கின்ற தன்மைக்கு ஏற்ப, அவையவை அங்கங்கே அமைக்கப்பட வேண்டும். விவசாயப் பகுதிகளிலே நிறைய தொழில் துறைகளைக்கொண்டு போய் திணித்துவிட்டால், விவசாயம் தடைப்பட்டுவிடும் என்பதை நாம் மறக்கக் கூடாது என்று புலப்படுத்திக்கொள்கிறேன். விவசாயத் துறை யில் தொழில் துறையே ஏற்படக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அங்கே விவசாயிகள் வேலை அற்று இருக்கிறபொழுது ஒய்வு ஏற்று இருக்கிறபொழுது, என்னென்ன தொழில்கள் அவர்களுக்கு ஆக்கத்தை கொடுக்குமோ அவற்றை அங்கே செய்ய வேண்டும். வேறு தொழிற் சாலைகளை அமைப்பதன் மூலம் விவசாயத்தை உதறித் தள்ளிவிட்டு உதா சீனம் செய்துவிட்டு, வருயபடி நேரிடும். அப்படி தொழில் துறையில் ஏற்படக்கூடிய ஒரு கவர்ச்சியை அங்கு உண்டாக்கிவிடக்கூடாது. அப்படி உண்டாக்கினால், இன்று இல்லாவிட்டால், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகாவது இந்த நாடு அதனுடைய தீமையான பலனை அனுபவித்தே தீரவேண்டும் என்பதைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். அப்படி அந்தந்தத் துறைக்குத் தகுந்தமாதிரியான தொழிலை, விவசாயப் பகுதியிலே விவ சாயத்தைக் கெடுக்காத தொழிலை ஏற்படுத்துவதுதான் நன்மை பயப்பதாக இருக்கும். வெறும் நன்மை மட்டுமல்ல, தீமை அல்லாத நன்மை பயப்பதாகவும் இருக்கும் என்றும் நான் புலப்படுத்திக்கொள்கிறேன்.

வத்தை ஏற்றுக்கொண்டுவிடுவது என்பதில் பலன் உண்டா என்பதை இன்றும் வெளி நாட்டு நிலைகளையும், பல ஆண்டுகளாக அந்தத் துறையை பின்பற்றி வந்து, இன்று விடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிற நாடு களையும் கண்டு நாம் கவனித்துக்கொண்டு மேலே செல்ல வேண்டும் என்று நான் விஞ்ஞாபனப்படுத்திக் கொள்கிறேன். முதல் என்பது சாதா ரணமான ஒன்று அல்ல. நாங்களும், நீங்களும் போட்டுவிடலாம் என்று எண்ணுவது அவ்வளவு எளிதா என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதல் என்பது இன்றியமையாத ஒன்று. அது எவ்வளவுக்கு வருகிறதோ, அவ்வளவுக்கு பலன் உண்டு. ஆகவே, முதலாளிகளே முழுவதும் அடித்துக்கொண்டு போவதற்கு நாம் விட்டுவிடக்கூடாது. அதில் தனி கவனம் செலுத்த வேண்டுமென்று நான் சொல்லிக் கொள் கிறேன். முதல் இங்கு நிறைய வந்து விழும்படி வரி விகித முறைகள் அமையவேண்டும், பிற சலுகைகள் அமைய வேண்டும், அதற்கு வேண் டிய வாய்ப்புகள் கிடைக்கின்றனவையாக அமையவேண்டும். அதைச் செய்து விட்டால் தொழில் துறைக்கு வேண்டிய மூலதனம் முழுவதும் பிற நாடுகளிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் வரும். அதில் துளி யும் ஐயம் இல்லை. தொழில் துறையிலே எப்படி இப்பொழுது பங்கு தாரர்கள் (ஷேர் ஹோல்டர்ஸ்), லாபத்திலே பங்கு பெறுகிற உரிமையை உடையவர்களாக இருக்கிறார்களோ, அதைப்போல உழைப்பைக் கொடுத்து, அந்தத் தொழில் துறையின் மூலம் உற்பத்தியைப் பெருக்குகிற தொழி லாளர்களும் கிடைக்கிற லாபத்திலே பங்குப் பணம் பெறுகிற, டிவி டெண்டு பெறுகிற உரிமை உடையவர்களாக இருக்க வேண்டும். 'ப்ராகிரஸ் ஷேரிங்' என்று சொல்லுவார்கள். எல்லாவற்றிலும் அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். முதலாளிகளுக்கு எவ்வளவு உரிமைகள் இருக்கின்ற னவோ, தொழிலாளிகளுக்கும் அவ்வளவு உரிமைகள் இருக்க வேண்டும். முதலாளிகள் எந்த விதத்தில் லாபப் பணத்தில் பங்கு பெறமுடியுமோ, அதைப்போல தொழிலாளிகளும் லாபப் பணத்தில் பங்கு பெறவேண் டும் என்று ஒரு விகிதாசார நெறியை அமைத்துவிடுவோமானால், யாரு டைய ஆதிக்கம் என்ற நிலையெல்லாம் அற்றுப்போய்விடும், மாநிலம் வளரும், மாநில மக்களுடைய தரம் உயரும், நிலை உயரும், ஒழுக்கம் உய ரும் என்று நான் புலப்படுத்திக் கொள்கிறேன்.

அதற்கு மேலே, ஒன்றுமட்டும் நான் அழுத்தமாகச் சொல்ல விரும்பு கிறேன். பலரும் கூறிய கருத்துத்தான். அரசாங்கம் பிறர் வராத துறை களையெல்லாம் தாங்கள் ஏற்று நடத்த வேண்டும், பிறர் வரமுடியாத துறைகளையெல்லாம் தாங்கள் ஏற்று நடத்த வேண்டும். அரசாங்கம் என்ற சொல், கவர்ன்மெண்டு என்ற சொல் ஆட்சி புரிவது என்ற பொருளுடை யது தானே தவிர, தொழில் அல்லது வாணிபம் செய்வது என்ற பொரு ளுடையது அல்ல. அதற்காக அது கூடவே கூடாது என்று நான் சொல்ல வில்லை; இப்பொழுது போகிற போக்குப்படி அரசாங்க ஈடுபாடு எல்லா வற்றிலும் கூடாது. அரசாங்கம் கவனிக்க வேண்டும், ஆள வேண்டும், தவறுகளைக் கண்டுபிடிக்க வேண்டும், குற்றவாளிகள் தண் டிக்கப்படவேண்டும். இம்மாதிரி அதிகாரங்கள் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டுமே தவிர, அரசாங்கம் தானே ஈடுபட்டுவிட்டால், முழுமையும் செம்மையாக நடவாது என்பதை இன்று இல்லாவிட்டாலும், இன்னும் சில ஆண்டுகளிலாவது நாடு உணரத்தான் போகிறது. ஆகவே அரசாங்கம் பிற துறைகளை எல்லாம் மேற்கொள்ள வருகிறவர்களுக்கு கொள்ளையடிக்க முடியாத திட்டங்களுடன் விட்டுவிட்டு, பிறர் வந்து தலையிட முடியாத பெரும் தொழில்கள், தாங்கள் தலையிட மாட்டோம் என்று பிறர் மறுக்கிற தொழில்கள், இவைகளை ஏற்று நடத்த வேண்டும். மற்றவற்றை, என்னைப் போல், மற்றவர்களைப் போல் இருக்கிறவர்களிடம் விட்டு விட்டு, முதலாளிகள் கொள்ளை அடிக்க முடியாத நிலையை உண்டாக்க வேண்டும். காந்தி மஹான் கடைப்பிடித்து வந்த "டிரஸ்டிஷிப்" முறையை ஒவ்வொருவரும் உணர்ந்து செய்வதற்கு, இந்த நெறி, இந்த முறை, இந்த வழி, மிகச் சிறந்ததாக அமையும். இவற்றை, விருப்பு, வெறுப்பு இல்லாமல், தாங்கள் ஒரு கொள்கையை மேற்கொண்டு விட்டோம் என்பதற்காக பிடிவாதம்

காட்டாயல், அலசி, ஆய்ந்து பார்த்து, நன்மை என்று கண்டால், அதைக் கடைப்பிடித்து, நாட்டிற்கு நலத்தையும், வளத்தையும் தாவேண்டும், என்று கூறிக்கொண்டு அமைகிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே ! கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இம்மன்றத்தின் முன் வைத்துள்ள தொழில் மானியக் கோரிக்கையின்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையையொட்டிச் சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

தமிழகம் விவசாயத்தை நம்பி வாழ்கிற ஒரு பெரிய பகுதி ஆகும் என்பதையும், இந்தத் தமிழகத்தில் தொழில் துறையிலே வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகளும், கூறுபாடுகளும் பல இருக்கின்றன என்பதையும் உறுப்பினர்கள் பலர் சுட்டிக் காட்டி, அந்தத் தொழில் துறையில் வாய்ப்புகளைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் காணவேண்டுமென்று வற்புறுத்திக்கூறி இருக்கின்றனர். ஏறத்தாழ 100-ல் 70-க்கு மேற்பட்டவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். விவசாயத்தின் மூலமாக வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு ஏற்ற வருமானம் கிடைப்பதில்லை என்பதை உலக நாடுகளிலே ஏற்படுகின்ற நிலைமைகள் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன. இப்பொழுது விவசாயத் தொழிலை, குறைந்த எண்ணிக்கையுடையவர்களைக் கொண்டு நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைக் கண்டு, மற்றவர்களைத் தொழில் துறைக்கு ஈர்க்கவேண்டும். தொழில் துறையை வளர்ப்பதன் மூலமாகத் தனிப்பட்டவர்களின் வாழ்க்கை வருமானத்தை உயர்த்தவும், நாட்டினுடைய பொது வருமானத்தை உயர்த்தவும் வழி காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அந்த முறையில் பார்த்தால் தமிழகத்திலே தொழில் துறை வளம் பெறுவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்கான முழு அதிகாரங்களும் உரிமைகளும் தேவை. அந்த அதிகாரங்களையும், உரிமைகளையும் கொண்டு பயன்படுத்துவதற்கு நிதி வசதி பெருக்கப்பட வேண்டும். நிதி வசதிகளைப் பெறுவதற்கான வழிமுறைகள் அத்துணையையும் காணவேண்டியவர்களாக இருக்கிறோம். அவற்றை வற்புறுத்திக் கூறுகின்ற முறையிலேதான் உறுப்பினர்கள் கருத்துக்கள் பலவற்றை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். மேலும்மேலும் தொழில்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நமக்கு இருக்கும் வாய்ப்புகளும், வசதிகளும், நாம் கொடுக்கிற வரி இனங்களும், மற்றவைகளும், அதன் மூலமாக நாம் திரும்ப மத்திய அரசிடமிருந்து பெறுகிற மான்யமும், நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களையும் உரிமைகளையும் ஒருசேர வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் பெறவேண்டிய வளர்ச்சிகள் அத்துணையையும் பெறுவதற்கு இல்லாமல் இருக்கிறோம் ; மத்திய அரசிடமிருந்து பெறவேண்டிய உரிமைகளும், அதிகாரங்களும், மான்யங்களும், நமக்குரிய பங்கு தொகைகளும் பலபல இருக்கின்றன ; பல்வேறு நிலைகளிலே இந்த மாநிலம் புறக்கணிக்கப்படுகிற நிலையிலே சில பல முயற்சிகள் இந்தியப் பேரரசினால் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டிய பொறுப்பினை அமைச்சரவை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாம் தொழில் துறையில் வளர்ச்சி பெறாமல் தடையாக இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். தொழில்வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையாகக் கருதப்படுகிற இரும்புத் தகடுகளும், இரும்புக் கம்பிகளும் இந்த மாநிலத்திற்குப் போதுமான அளவு கிடைக்கவில்லை ; அவைகள் கிடைக்காத காரணத்தினால் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான வழிவகைகள் இருந்தும், அவை மேற்கொள்ளப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். இரும்புத் தகடுகள், இரும்புக் கம்பிகள் நமக்குப் போதுமான அளவுக்கு கிடைக்கவில்லை என்றால் அதே நிலைதானா அகில இந்தியாவில் இருக்கும் எல்லா மாநிலங்களுக்கும் ? என்பதை நாம் ஆராய வேண்டும். நமக்குப் பற்றாக்குறையாக இருப்பதைப் போலவே தானா இந்தியாவில் இருக்கிற

பிற மாநிலங்களிலும் நிலைமைகள் இருக்கின்றன ? இரும்புத் தகடுகள், இரும்புக் கம்பிகள் கிடைக்கிற நிலையில் அகில இந்தியாவிலும் பற்றாக்குறையான நிலைமை இருக்கிறதா ? அல்லது சில பல மாநிலங்கள் வசதிகளை அதிகமாகப் பெற்று, இந்த மாநிலம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது இந்தியப் பேரரசு தேவையை நிறைவேற்றித் தராத அளவுக்கு இருக்கிறதா ? என்பதைக் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கிக்காட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

இங்கே என் ஒரு பெரிய உருக்குத் தொழிற்சாலை உருவாக வில்லை ? சேலத்தில் இரும்பு இருக்கிறது என்று கண்டுபிடித்தும், வேறுபல இடங்களிலே, வட ஆற்காட்டிலே ஜவ்வாது மலையிலும், நீலகிரி மலையிலும், ராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களிலும் ஆங்காங்கு இரும்புக்கனி வளங்கள் கிடைக்கின்றன என்று கூறப்பட்டும், இவற்றையெல்லாம் பயன்படுத்தி என் ஒரு இரும்புத் தொழிற்சாலை உருவாக்கக் கூடாது ? சேலத்திலே கிடைக்கிற இரும்பைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருந்தும், அந்தச் சேலம் இரும்புத் தொழிற்சாலையை உருவாக்குகின்ற முயற்சி இன்னும் பரிசீலனைக் கட்டத்தில்தான் இருந்துகொண்டிருக்கிறது. வடக்கே சுமார் ரூ. 850 கோடி அளவிலே நான்கு பெரிய உருக்கு ஆலைகள் வைப்பதற்குக் காரணம் என்ன ? அவ்வளவு பெரும் தொகைகளை இந்தியப் பேரரசினர் என் வடக்கே மட்டும் ஈடுபடுத்தி இருக்கிறார்கள் ? என்று கேட்கும்போது, வடக்கே மூலப்பொருள்கள் கிடைக்கின்றன, வடக்கேதான் அவற்றை உருவாக்க முடியும், அப்படி மூலப் பொருள்கள் கிடைக்கின்ற இடத்திலேதான் 850 கோடியை முடக்க முடியும், அகில இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களும் அவற்றில் பணத்தை முடக்குவதில் பங்குபெறத்தான் வேண்டும், அவற்றிலிருந்து பெறப்படுகின்ற பலன்கள் இந்திய மாநிலங்கள் அத்துணைக்கும் கிடைக்கும் என்றெல்லாம் காரணம் சொல்லப்படுகிறது. பெரிய உருக்குத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு, உற்பத்திச் செய்யப்பட்டாலும், இரும்புத் தகடுகளும், இரும்புக் கம்பிகளும் பற்றாக்குறையாக இருக்கும் நிலையில்தான் இந்த மாநிலம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற மாநிலங்கள் அளவுக்கு மீறிய இரும்புத் தகடுகளையும், கம்பிகளையும் பெறுகின்றன என்ற உண்மைதான் கனம் அமைச்சர் அவர்கள் கூறிய புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது,

(கனம் திரு. ந. சண்முகசுந்தரம் தலைமை)

இதைப் பெறுவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது ? ஏன்கொடுக்க மறுக்கிறார்கள் ? ஏன் இந்த மாநிலம் புறக்கணிக்கப்படுகிறது ? என்பதற்கான காரணத்தைக் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்லுவார்கள் என்று நான் நம்புகிறேன். சேலம் இரும்புத் தொழிற்சாலையைப்பற்றி நாம் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். இன்னமும் அது ஆராய்ச்சிக் கட்டத்தில் இருக்கிறது, பரிசீலனைக் கட்டத்தில் இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளே நிறைவேற்றப்படுமா என்று தெரியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம்.

நான் - ஃபெரஸ் மெடல், அதாவது செம்பு, துத்தநாகம், அலுமினியம் போன்றவற்றைக் குறித்துக் கனம் அமைச்சர் அவர்கள் முன்னுரையில் சொல்லுகிற பொழுது, இந்த மாநிலத்திலுள்ள தேவையான அளவுக்குப் பங்கு கிடைக்கவில்லை என்று எடுத்துக் கூறினார்கள். இதே நிலையில்தானா மற்ற மாநிலங்களும் இருக்கின்றன ? என்பதை ஆராய வேண்டும். நாம் பெற வேண்டிய பங்கினைப் பெற்றோமா ? என்பதையும் ஆராய வேண்டும். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மாநிலங்களுக்கென்று ஒதுக்கிவைக்கின்ற தொகையிலிருந்து, இந்த மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய சதவிகிதப் பங்குத் தொகை கிடைத்துவிட்டது என்று சொல்லுகிறார்களே தவிர, இந்திய பேரரசு தானே செலவழிக்கின்ற பெருந் தொகையைப் பொறுத்துச் சதவிகிதக் கணக்குப் போட்டுப் பார்க்கிறபோது, இந்த

மாநிலத்திற்குத் தேவையான தொகை கொடுக்கப்பட்டதா? என்று ஆராய்கிறபொழுது, அந்த வகையிலே இந்த மாநிலம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தேவையை நிறைவேற்றுகிற வகையிலே, தொகை கொடுக்கப் படவில்லை என்பது தெரியவரும். இரும்புத் தகடுகளும், இரும்புக் கம்பிகளும் கிடைக்கவேண்டிய அளவுக்கு, முறைப்படி கிடைக்கவில்லை. செம்பு, துத்தநாகம், அலுமினியம், இவையெல்லாம் கிடைக்கவேண்டிய அளவுக்கு கிடைக்காத நிலையில்தான் இருக்கின்றன. இவற்றிற்கான காரணங்களை ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சிறு தொழில்களைப் பொறுத்து, ஓர் அளவுக்கு மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சிறிதளவு அதிக நிதி இந்த மாநிலத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சிறு தொழில்களுக்காக 4 கோடியே 4 லட்சமும், தொழிற் பேட்டைகளுக்காக 1 கோடியே 31 லட்சமும் ஒதுக்கப்பட்டுத் தொழில்கள் வளர்ந்து வருகின்றன என்று சொல்லப்படுகிறது. வடநாட்டில் பெரும் பெரும் கனரகத் தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அதற்கான புள்ளிவிவரங்களைக் காணலாம். பெரும் பெரும் தொழிற்சாலைகளை ஆண்டுக்காண்டு உருவாக்குகின்ற நிலைமையில் வடபகுதியில் உள்ள மாநிலங்கள் இருக்கின்றன. தென்னாட்டில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஏன் இல்லை என்றால் இங்கே மூலப் பொருள்கள் இல்லை, ஆகவே பெரிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு வழி இல்லை என்று சொல்லப்படுகிறது. பெரிய பெரிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களும், வசதிகளும், காரணங்களும், வட மாநிலங்களிலே இருக்கின்றன என்று சொல்லும்பொழுது, சிறு சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், இவற்றை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள், வசதிகள், காரணங்கள் ஏராளமாக இங்கே இருக்கின்றன. இந்த மாநிலத்திற்கு, மற்றைய மாநிலங்களை போல் பெரிய பெரிய தொழிற்சாலைகள் வராவிட்டாலும், அதிகமான அளவுக்கு சிறு தொழிற்சாலைகள், நடுத்தரத் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். சிறிய சிறிய தொழிற்சாலைகளையாவது உருவாக்க ஏன் மூலதனத்தை அதிகமாக ஒதுக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். தென்னாட்டில் பெரிய தொழிற்சாலைகளுக்காக மூலதனத்தை முடக்க யாரும் முன்வருவதில்லை. அப்படியே ஓரிருவர் முன்வந்து முடக்கினாலும்கூட, லைசென்சு வாங்குவதற்கு அவர்கள் பெரும் பொருள் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. லைசென்சு வந்த பிறகுகூட தொழிலை ஆரம்பிப்பதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆரம்பத்திலேயே அதில் வரக்கூடிய நஷ்டம், கழிவு எல்லாம் போக, அதில் லாபம் என்று சம்பாதிக்கக்கூடிய நிலைமை, ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தான் ஏற்படுகிறது. இந்த நிலைமை நீடிக்காது இருக்க வேண்டுமானால், இப்பொழுதுள்ள குறைபாடுகளை போக்க வேண்டுமென்றால், அதற்கான முயற்சிகளை ஆக்க முறையில் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பெரும் தொழிலை ஆரம்பித்து நடத்த வேண்டும் என்கிற முயற்சியுடன்கூட, அங்கங்கேயே சிறு சிறு தொழில்களையும் ஆரம்பித்து நடத்த வேண்டும் என்கிற முயற்சியும் மேற்கொள்ளப் படவேண்டும். அரசினர் அங்கங்கேயே சிறு சிறு தொழில்களை ஆரம்பித்து நடத்த முயலுதல் வேண்டும்.

அண்மையில் நான் செய்தித் தாள்களின் மூலமாகக் கனம் தொழில் அமைச்சரும் மற்ற சிறு தொழில்களின் பிரதிநிதிகளும் டில்லிமாநகரில் கூடினர் என்றும் சிறு சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு எத்தகைய வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்ந்தனர் என்றும் கேள்விப்பட்டேன். சிறு சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக நமது மாநில அரசு என்ன என்ன ஆலோசனைகளைக் கூறிற்று? அவற்றிற்கு அவர்கள் அளித்த பதில் என்ன? அம்மாநாட்டின் மூலமாக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் என்னென்ன? என்பவற்றை யெல்லாம் இந்த மன்றத்தினர்க்குச் சொல்ல வேண்டும் என்பதாக நான் தங்கள் மூலமாகக் கனம் தொழில் அமைச்சரை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

லைசென்சு கொடுக்கிற தன்மையைப் பொறுத்த வரைக்கும் கூட நாம் ஒரு பொருளைக் கவனிக்க வேண்டும். நமது மாநிலத்தில் சிறிய-நடுத்தரத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகத் தனியார்க்கு 494 லைசென்சுகள் வழங்கப்பட்டன. அதில் சில லைசென்சுதாரர்கள்தான், குறிப்பிட்டபடி இங்கே தொழில்களை நிறுவி இருக்கிறார்கள். இருபத்திரண்டு பேர்கள் லைசென்சுகளை திருப்பிக் கொடுத்து விட்டார்கள் என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தம்முடைய முன் உரையில் கூறி இருக்கிறார். அவ்வாறு இந்த லைசென்சுகளை தொழிலை ஆரம்பிப்பதற்கு இல்லை என்று திருப்பிவிட்டதற்குக் காரணம் என்ன? வேறு யாருக்காவது அந்த லைசென்சுகளை வழங்கினார்களா? அப்படி வழங்கியவர்களும் திருப்பிவிட்டு விட்டார்களா? அவ்வாறு திருப்பி விடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன? என்பவற்றை ஆராய்ந்து அறிந்து இந்தத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு இடையூறாக உள்ளனவற்றைக் களைவதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தனியார் துறையில் இந்தத் தொழில்களை ஏற்று நடத்துவதற்கு யாரும் முன் வரவில்லை யென்றால் அவற்றைப் பொதுத் துறையிலாவது எடுத்து நடத்துவதற்கான பொறுப்பினை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உருக்கு தொழில் சம்பந்தமாக சிலருக்கு இங்கே அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. அதுபற்றி நான் ஒன்று கேள்விப்பட்டேன். இப்பொழுது மூன்று உருக்குத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவற்றில் ஒன்று மகேந்திரா அண்ட் மகேந்திராவால் ஆரம்பிக்க இருந்த தொழிற்சாலை. இப்படி மகேந்திரா அண்ட் மகேந்திரா கம்பெனிக்கு லைசென்சு வழங்கப்பட்டதாகவும், அவர்கள் அந்த லைசென்சின் பேரில் இந்த மாநிலத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்காமல், இங்கே லைசென்சு வாங்கிக்கொண்டு, அதை பயன்படுத்திக்கொண்டு, பம்பாயில் போய் அதை உருவாக்குகின்ற நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது இந்த மாநில அரசாங்கத்தின் அனுமதி பெற்று அங்கு ஆரம்பிக்கப்படுகிறதா? அல்லது இந்த மாநில அரசாங்கத்தின் ஆட்சேபனையையும் மீறிப் பேரரசின் தலையீட்டினால் அவ்வாறு துவக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதா? என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்படி அந்தக் கம்பெனியாருக்கு அந்தத் தொழிற்சாலையை நம் மாநிலத்தில் ஆரம்பிப்பதற்கு வசதி இல்லை என்று சொன்னால் அவர்களுக்கு என்ன வசதி இங்கு இல்லை என்பதைத் தெரிவித்தார்களா? அவர்கள் ஆரம்பிக்கவில்லை யென்றால், லைசென்ஸைத் திருப்பிக் கொடுத்திருக்கலாமே! இம்மாநிலத்தைச் சேர்ந்த வேறு ஒருவருக்காவது இம்மாதிரி ஒரு தொழிற்சாலையை இங்கே ஏற்படுத்த அனுமதி வழங்கியிருக்கலாமே! அவர்கள் அந்த தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்திருக்கலாமே! அல்லது இந்த அரசினரே அதை ஏற்று நடத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கலாமே! என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இப்படி இந்த மாநிலத்தில் ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு லைசென்சு பெற்று, அவர் அந்தத் தொழிலை இங்கே ஆரம்பிக்காமல், வேறு ஒரு மாநிலத்திற்கு சென்று ஆரம்பிப்பதற்கு இந்த அரசினர் அனுமதி வழங்கக் கூடாது என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அவர் இப்படி வேறு ஒரு மாநிலத்தில் ஆரம்பிப்பதாக இருந்தால், அவருடைய லைசென்சு ரத்து செய்துவிட வேண்டும். ஆரம்பிக்கப்படாமல் விடப்படுகிற தொழிற்சாலைகளை ஏற்று நடத்த அரசினரே முன்வரவேண்டும். அதற்காக "டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன்" ஒன்றை அரசினர் ஏற்படுத்தவேண்டும்.

தெரிவிக்கப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் தொழில்களை ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்றதாக இரும்புக் கட்டிகள் கிடைக்காது இருக்கிற நிலைமையில் நம்முடைய தேவைக்கு ஏற்றபடி இரும்புக் கட்டிகள் கிடைப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இரும்பு எங்கெங்கே கிடைக்கிறதோ, எங்கெங்கே நம்முடைய மாநிலத்தில் கனி வளங்கள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்க முயற்சி எடுக்க வேண்டும். இரும்புக் கனி கிடைக்கவில்லை என்ற ஒரு நிலை மட்டுமே நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்காமலிருப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடாது. இரும்புக் கனியே இல்லாத ஜப்பான் பிறநாடுகளிலிருந்து இரும்புக் கனிகளை வரவழைத்து, இரும்புக் கட்டிகளை வரவழைத்துப் பல தொழில்களில் அவைகளை ஈடுபடுத்தி, அவர்களுடைய தொழில் உற்பத்தியைப் பெருக்கி இருப்பதோடு, அகில உலக நாடுகளோடு போட்டி போடக்கூடிய வளர்ச்சியையும் பெற்றிருக்கிறது.

தொழில்கள் வளரவேண்டுமென்றால், இரும்புக் கனிகள் நமக்குத் தேவைபடுகிறது. இரும்புக் கனிகளை இங்கேயே வெட்டி எடுக்கலாம்; தேவைக்கு வெளியிடங்களிலிருந்தும் வரவழைத்துக்கொள்ளலாம். இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளை உருவாக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பும், அவசியமும் இங்கே இருக்கின்றன.

லைசென்சுகள் பெற்றவர்கள் யாராவது தொழில்களை நடத்த முடியவில்லை என்று அந்த லைசென்சைத் திருப்பிவிட்டால், அதை அரசினர் அப்படியே விட்டுவிடுகிறார்களா? என்பதை அறிய விரும்பிகிறேன். வேறு எந்தத் தனியார் கம்பெனியாவது அந்தத் தொழிலை ஆரம்பிக்க முன்வந்தால், அந்த லைசென்சை அவர்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது அந்த லைசென்சை பயன்படுத்தி நமது அரசினர் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஏற்படுத்திப் பொருள்களை உற்பத்தி செய்ய முன்வருவார்களா? என்றும் அறிய விரும்புகிறேன். இப்பொழுது "மதராஸ் இன்வெஸ்ட்மெண்ட் கார்போரேஷன்" என்று ஏற்படுத்தி புதுத் தொழில்களை ஆரம்பிப்பதற்காகக் கடன் உதவி செய்ய வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதைப்போலவே "மதராஸ் இண்டஸ்ட்ரியல் கார்ப்போரேஷன்" என்று ஒன்றை நிறுவி, தனியார் நடத்துவதற்கு முன்வராத தொழிலை, இந்தக் கார்போரேஷனே எடுத்து நடத்துவதற்கு ஆன ஒரு முயற்சியை மேற்கொள்ளக் கூடாதா? என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர் மகாலிங்கம் அவர்கள் கூறியதுபோல் இன்றைக்கு ஆயுள் இன்ஷூரென்சு கார்போரேஷனில் முடக்கப்பட்டிருக்கின்ற 500 கோடி ரூபாயின் தென்னகத்தின் பங்கு 130 கோடி ரூபாய் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு தென்னகத்தில் தொழிற்சாலை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். அந்தத் தொகையை இங்கேயே பயன்படுத்தும் உரிமையைப் பெற்று அதன் மூலம் இந்த மாநிலத்தில் வசதிகளைப் பெருக்க திட்டமிட வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே திரு ஹாஜா ஷெரிப் சொன்னதுபோல் வெளிநாடுகளிலிருந்து கடனுதவி பெற்று வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பெற்றும் இங்கே தொழில்களை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்க அரசினர் முன்வர வேண்டும்.

தீட்டவேண்டும். கைத்தறியைப் பொருத்தமட்டில், கேரள மாநிலத்திலே ரூபாய் ஒன்றுக்கு 15 புதுக்காசு கழிவு (ரிபேட்) தரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த முறையிலே, இங்கேயும் இன்னும் கொஞ்சம் அதிகம் ஊக்குவிக்கத்தக்க நிலைமைகளை மேற்கொள்ள அரசு முன்வருமானால், நலமாக இருக்குமென்று தெரிவிததுக்கொள்ளுகின்றேன்.

மேலும், இங்கே உற்பத்தியாகி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற பொருட்களின் அளவு மிகமிகக் குறைவாக இருக்கிறது. அண்மையில், இந்தியப் பேரரசின் அமைச்சராக இருக்கும் திரு. மனுபாய் ஷா அவர்கள், இங்கே வந்து, ஸதர்ன் ரீஜனல் எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கமிட்டியினுடைய ஆரம்ப விழாவில் பேசுகின்ற போது, தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற பொருட்களிலே 600 கோடி ரூபாய் பெறுமானம் அளவுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டாலும் அதிலே மூன்றிலொரு பங்கைத்தான் தென்னக மாநிலங்கள் ஏற்றுமதி செய்கின்றன. மூன்றிலொரு பங்கான 200 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதிப் பொருள்களை இந்தத் தென்னக மாநிலங்கள் அனுப்பியும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தென்னக மாநிலத்திலிருந்து அனுப்பும் அளவு, இரண்டு கோடி ரூபாய் பெறுமானத்திற்கும் குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

'While the South contributes a third of the Rs. 600 crores export trade of the country, its performance on export of manufactured articles is absolutely negative, very very poor, not even amounting to about Rs. 2 crores'.

என்று கூறியிருக்கிறார். 600 கோடி ரூபாயில் 200 கோடி ரூபாய் அளவுக்குத் தென்னக மாநிலங்கள் அனுப்பியும், உற்பத்தி ஆக்கப்பட்ட பொருள்கள் இரண்டு கோடி ரூபாய் பெறுமான அளவுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உற்பத்தி பொருட்களை அதிகமாக்கி, ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை ஏராளமாக உருவாக்கவேண்டிய பொறுப்பில் இந்த மாநிலம் இருக்கிறது. இந்த மாநிலத்திற்கும் இயற்கைச் செல்வங்கள், விளைபொருள்கள் இவற்றைப் பயன்படுத்திச் சிறு தொழில்கள், பெருந் தொழில்கள் நடுத்தரத் தொழில்கள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். வடக்கே இருக்கும் கன ரகத் தொழில்களை ஈடுகட்டும் அளவுக்குச் சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் ஆகியவற்றை ஏற்படுத்த வாய்ப்பு வசதிகள், அதிகாரங்கள், உரிமைகள் ஆகியவற்றைப் பெற்று, அந்த முறையில் இந்த மாநிலத்தினுடைய வருவாயை மிகச் செய்யவும், தொழில்களை மேலும் ஊக்குவிப்பதற்கும் எல்லா முயற்சிகளையும் இந்த மாநிலம் எடுக்கவேண்டும். அதற்காக உரிமை பெறுவதிலும், அதிகாரம் பெறுவதிலும், மானியம் பெறுவதிலும், அதிகமான அளவுக்கு மற்ற மாநிலங்களைப் போல, இந்தியப் பேரரசினிடம் சண்டை தொடுத்தாவது, உரிமைக்காக வாதாடியாவது, அந்த மானியங்களைப் பெற, பெருமுயற்சியைக் கனம் தொழில் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் எடுக்கவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்ட கனம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மானியக் கோரிக்கை விவாதம் நடத்துவது, கனம் அங்கத்தினர்கள் அவரவர்களுக்கிருக்கும் நல்ல அரிய யோசனைகள் எல்லாவற்றையும் சொல்லவேண்டுமென்பதற்காகவும், அவற்றிலிருக்கும் நல்ல கருத்துக்களை அடுத்த ஆண்டுக்குள்ளாக உதையெல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டு, அடுத்த ஆண்டுக்குள்ளாக அதை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவும் இந்த விதமான மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறுகிறது. அதே முறையில்தான் இந்த மானியக் கோரிக்கை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட எல்லாவிதமான நல்ல யோசனைகளையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று முதன் முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்த யோசனைகள் சொல்லுகிறபோது, அவற்றை மூன்று முறையாகப் பிரிக்கலாம். ஒன்று, கொள்கை அளவில் சொல்லப்பட்ட யோசனைகள். இரண்டு, நமக்கு இன்னும் அதிகமான தேவைகள் இருக்கின்றன என்பதை வற்புறுத்தும் முறையில் சொல்லப்பட்ட யோசனைகள். மூன்று, நடக்கிற நிர்வாகத்தில் ஏற்பட்ட குறைபாடுகளைக் குறித்துச் சொல்லப்பட்ட யோசனைகள். இந்த மூன்று முறைகளிலே இருக்கும் யோசனைகள் எல்லாவற்றையும்விட நான் பொதுவாகப் பதில் அளிக்க விரும்புகிறேன். தனித் தனியாக நபர்களைக் குறித்துச் சொல்லவில்லையென்றால், ஒரோ அவர்கள் சொன்ன கருத்துக்களிலே நன்மை இல்லை என்றோ, அல்லது அவை தேவைப்படவில்லை என்றோ நான் கருதவில்லை. பொதுவான வகையிலே பதில் சொல்லலாம் என்ற காரணத்தால், தனிப்பட்ட முறையில் கனம் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் நான் பதில் இப்பொழுது சொல்லவில்லை.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

கொள்கை அளவில் எடுத்துக்கொள்ளும்போது, இந்த நிர்வாகம்—காங்கிரஸ் நிர்வாகம்—எந்தத் தேர்தல் அறிக்கையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறதோ, அந்தக் கொள்கையைத்தான் நிறைவேற்றுமே தவிர, எதிர்க் கட்சியின் கொள்கையை ஒருநாளும் நிறைவேற்றாது. எதிர்க் கட்சியினர் தங்களுடைய கொள்கையைச் சொல்வதற்குச் சட்டசபையை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்; தேர்தலை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அது தவறு என்று சொல்லவில்லை. ஆனால், அவர்களுடைய கொள்கையை நாங்கள் நிறைவேற்றவில்லை என்று குற்றச்சாட்டாகச் சொன்னால், அது குற்றச்சாட்டு ஆகாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களும், திரு. கருணாநிதி அவர்களும், "நீங்கள் சோஷலிசம் என்று சொன்னீர்களே, சோஷலிசம் என்று சொல்லி, தனியார் துறையை வளர்த்துவிட்டீர்களே, பொதுத் துறையை ஏன் அதிகரிக்கவில்லை? இதெல்லாம் உங்கள்மீது குற்றச்சாட்டு" என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர்கள் இண்டஸ்ட்ரியல் பாலிஸி ரிஸல்யூஷனைச் சரியாகப் படித்திருப்பார்களானால், எந்தெந்தத் தொழில்கள் சர்க்கார்த் துறையில் நடத்துவது என்றும், எந்தெந்தத் தொழில்கள் தனியார் துறையில் நடத்துவது என்றும், எந்தெந்தத் தொழில்களைக் கூட்டுறவுத் துறையில் நடத்துவது என்றும் திட்டவட்டமாக அதிலே சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். அந்தக் கொள்கையிலே நாங்கள் தவறி இருக்கிறோம் என்று எடுத்துக் காட்டினால் அது குற்றச்சாட்டாகும். ஆனால், அந்தக் கொள்கையிலே நாங்கள் தவறவில்லை. எந்த கொள்கை அடிப்படையில் தேர்தல் அறிக்கை விட்டு, எந்த அடிப்படையில் நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்கு நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ, அந்தக் கொள்கையில் சற்று கூடப் பிழை செய்யாமல், அதிலிருந்து தவறாமல் நிறைவேற்றுகிறோம் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சில தொழில்களைத் தனியார் துறைக்கு விடும் நேரத்தில், அவர்களுக்கு அதிக லாபம் வருகிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. அதுவும் சொல்லப்போனால் தமிழ்நாட்டில் வைக்கும் தொழில்கள் பலவற்றிற்கு அதிகமாக லாபம் வந்திருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். அதை நான் பெருமையாக எடுத்துக் கொள்கிறேன். டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையில் லாபம் வந்தது, இந்தியா சிமெண்ட் தொழிற்சாலையில் லாபம் வந்தது என்று சொன்னால், நல்ல வேளையாக, தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் தொழில் நஷ்டமில்லாமல் லாபகரமாக நடக்கிறது என்பதை எதிர்க் கட்சியினர் ஒத்துக் கொள்கிறார்களே, அந்த அளவுக்கு நான் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் துறையில் லாபம் அதிகமாக வருகிறது என்கிற காரணத்திற்காக அந்தத் தொழிலை நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வதோ, அவர்களுக்கு லாபம் வராத முறையில் பல இடையூறுகள்

தீங்குகள் செய்துவிடவேண்டுமென்று சொல்வதோ சரியாகாது. எந்தெந் தத் தொழில்களை நாம் தனியார் துறைக்கு ஒதுக்கியிருக்கிறோமோ அந்தத் தொழில்கள் தனியார் துறையில்தான் நடக்கும். அதற்கு வேண்டிய எல்லாவிதமான ஆக்கமும் ஊக்கமும் உதவியும் இந்த சர்க்கார், தங்களுடைய கொள்கையின் அடிப்படையில் செய்யும் என்று நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த முறையில்தான் இன்றைக்கு நாங்கள் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாகப் பணம் அதிகமாகக் கொடுக்கிறோம். எவ்வளவு சக்தி இருக்கிறதோ அந்தச் சக்திக்குச் சற்று அதிகமாகக்கூட உதவிகள் செய்து கொடுத்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் ஏதோ பழைய ரிபோர்ட் ஒன்றைப் படித்துவிட்டு சற்றுக் குழப்பிக்கொண்டுவிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் 1954-ம் வருஷத்திய ரிபோர்ட்டை வைத்துக் கொண்டு குறிப்பிட்டார் என்று நினைக்கிறேன். டில்லியில் இருக்கக்கூடிய இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்ட வரையில், மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனுக்கும் அதற்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை. மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் தவறான முறையில் கடன் கொடுத்துவிட்டார்கள் என்றோ, அல்லது வேண்டியவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்றோ சொல்லவில்லையென்றால், நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அவர்கள் பேசியதிலிருந்து, ஒரு தவறான அபிப்பிராயம் ஏற்படக்கூடும். அவர்கள் சொன்னதிலிருந்து, மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்தான் வேண்டியவர்களுக்குக் கொடுத்த நிலை இருக்கிறது என்கிற மாதிரி புலப்பட்டது. அவ்வாறு இருக்குமானால்—நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன்—அது ஆதாரமற்றது, அது அர்த்தமற்றது.

திரு. மு. கருணாநிதி : முதலாளிகள் இந்த அரசினருக்கு வேண்டியவர்கள் என்ற நிலையில்தான் எடுத்துச் சொல்லப்பட்டது. தனியார் துறையில் உள்ள சில தனிப்பட்ட முதலாளிகளுக்கு இத்தகைய சலுகைகள் வழங்கப்படுவதால், முதலாளிகள் இந்த அரசுக்கு எப்படி வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில்தான் சொல்கிறோம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த அரசுக்கு முதலாளிகளும் வேண்டியவர்கள், தொழிலாளிகளும் வேண்டியவர்கள். பொது மக்களும் வேண்டியவர்கள். அதுதான் இந்த அரசினரின் அடிப்படை. முதலாளிகளை வெறுத்துக்கொள்ளும் அரசு இது அல்ல. கனம் அங்கத்தினர் திட்டவட்டமாகச் சொல்லமுடியுமா என்று கேட்கிறேன்—முதலாளிகளே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று அவர்கள் சொல்ல முடியுமா? அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் அப்படிப் போட்டிருக்கிறார்களா? அப்படிப் போடுவார்களா?

திரு. கே. ஏ. மதியழகன் : "முதலாளித்துவம் கூடாது" என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பிரகடனப்படுத்திய வாசகங்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : "பார்ப்பனரை வெறுக்கவில்லை, பார்ப்பனீயம் கூடாது என்று சொன்னேன். முதலாளியை வெறுக்கவில்லை, முதலாளீயம் கூடாது என்று சொன்னேன்" என்று அவர்கள் சொல்வது ரொம்ப நாளாகக் கேள்விப்பட்டதுதான். இந்தவிதமான "ஈயங்கள்" எல்லாவற்றையும் நாங்கள் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறோம்.

கனம் அங்கத்தினர் சொல்கிற போது முதலாளியே இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதுதான் தங்கள் கருத்து என்று சொல்லிவிட்டால் அது கம்யூனிஸ்டு சமுதாயமாகத்தான் இருக்கும். அதை மக்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அவர்கள் அதிகாரத்தில் இருந்து அத்தகைய

ஒரு கொள்கைப்படி தொழில் திட்டங்களை வகுக்கலாம். ஆனால் எங்களுடைய தொழில் கொள்கை என்ன என்பதை முன்பே விளக்கியிருக்கிறோம். எங்கள் தொழில் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்குக் காரியங்களைச் செய்திருக்கிறோம். எனக்கு இப்போது நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் அதைப்பற்றி அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை.

ஒன்றை இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் விளக்கினார்கள். நாங்கள் அதிகாரத்திற்கு வந்தால் முதலாளிகளை இல்லாமல் செய்துவிடுவோம் என்று தெரிவித்தார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய கொள்கை இன்றைக்குத் தெளிவாகிவிட்டது. அவர்களுடைய கொள்கையை நாங்கள் நிறைவேற்றவில்லை, எதிர்க்கட்சியினர் கொள்கையை காங்கிரஸ்கட்சி நிறைவேற்றவில்லை என்பது எப்படி ஒரு குற்றச்சாட்டாகும்? நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை இந்த சமுதாயத்தில் இருக்கிற எல்லோரும் இந்த சமுதாயத்தை உருவாக்கக் கூடிய ஒரு பொறுப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதுதான். எல்லோரும் தங்கள் தங்களுக்குரிய பங்கைச் செலுத்தவேண்டும். யாரும் யாரையும் ஏமாற்றி அதிக லாபத்தை அடைய இடம் இருக்கக்கூடாது. பொதுவாக உழைப்புக்கேற்ற ஊதியம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் பல தொழில்கள் கொள்கைகளும், வரிக் கொள்கைகளும் இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே அரசாங்கத்தினுடைய தொழில் கொள்கை என்ன என்று பார்த்து அதில் அவர்கள் தவறியிருக்கிறார்களா என்று கனம் அங்கத்தினர்கள் ஆராய்ந்தால் நிச்சயமாக இந்த அரசாங்கம் தான் வகுத்துக் கொண்ட தொழில் கொள்கையில் சிறிதும் தவறவில்லை என்பதை உணர்வார்கள். தம் கொள்கையில் இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்று யாரும் சொல்ல முடியாது. தன்னுடைய கொள்கை அடிப்படையில் அது ஒழுங்காகத்தான் செயல்பட்டு வருகிறது.

SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Deputy Speaker, Sir, on a point of order. I would like to know whether the statement made by the hon. Member, Sri Mathialagan that according to their policy there would be no capitalism, is accepted by the hon. the Leader of the Opposition or is it his individual opinion?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no point of order, Sir.

MR. DEPUTY SPEAKER : There is no point of order.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அதே கொள்கைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்பதை நான் வற்புறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் பர்காபிடா இன்கம் குறைவாக இருக்கிறது என்று கணக்குச் சொன்னார்கள். இந்தக் கணக்குகளை எல்லாம் படித்துப் புரிந்து கொள்வதற்கே சற்றுப் பயிற்சி வேண்டும். எந்தெந்த ராஜ்யங்களில் ஜனத் தொகை குறைவாக இருக்கிறதோ அந்த அந்த ராஜ்யங்களில் புதிதாகத் தொழில் வளர்ச்சி எதுவுமே ஏற்படாவிட்டாலும் கூட அங்கே உயர்வான வாழ்க்கைத்தரம் இருப்பதாக பர்காபிடா இன்கம் கணக்குப் பார்த்தால் காட்டும். உதாரணமாக இந்த பர்காபிடா இன்கம் கணக்கு—மொத்த வருமானத்தை எடுத்து—அந்த இடத்திலிருள்ள மொத்த ஜனத்தொகையைக் கொண்டு வகுத்து சராசரி ஒரு நபருக்கு இத்தனை வருமானம் என்று கொடுப்பது ஆகும். மலைப் பிரதேசங்களில் காட்டுப் பிரதேசங்களில் ஜனத் தொகை குறைவாகத் தான் இருக்கும்.

அந்த இடத்து பர்காபிடா இன்கமைப் பார்த்தால் மற்ற இடத்தை விட அதிகமாக இருப்பது போலத் தோன்றும். காரணம் ஜனத் தொகை அந்தப் பிரதேசங்களில் குறைவாக இருப்பதுதான். அந்தப் பிரதேசத்திலுள்ளவர்களின் பர்காபிடா இன்கமை எடுத்துப் பார்த்து அங்கே உள்ளவர்கள் உயர்ந்த வாழ்க்கைத்தரம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. தவறு என்று சொல்ல விரும்புகிறேன்.

நம் ராஜ்யத்தை மட்டுமே கூட எடுத்துப்பார்க்கலாம். நீலகிரியில் உள்ளவர்களுடைய பர்காபிடா இன்கம் சென்னையில் உள்ளவர்களுடைய பர்காபிடா இன்கமைவிட அதிகமாக இருக்கும். காரணம் நீலகிரியில் தோட்டம், காடுதான் அதிகம். ஜனத் தொகை குறைவு. அந்தத் தோட்டங்களின் வருமானத்தை எல்லாம் எடுத்து, அங்குள்ள குறைந்த ஜனத் தொகை அளவைக் கொண்டு வகுத்தால் நிச்சயமாக அதிக பர்காபிடா இன்கம் தான் வரும். அதனால் நீலகிரியில் உள்ளவர்கள் மிக உயர்ந்த வாழ்க்கைத் தரம் உடையவர்கள் என்ற முடிவுக்கு நாம் வரக்கூடாது. சென்னையில் உள்ளவர்களுடைய வாழ்க்கைத்தரம் எவ்வளவுதான் உயர்ந்திருந்தாலும் இங்குள்ள 20 லட்சம் ஜனங்களைக் கொண்டு வகுத்துப் பார்த்தால் இங்கே பர்காபிடா இன்கம் குறைவாகத்தான் இருக்கும். அதனால் இங்குள்ளவர்கள் பொருளாதாரத்துறையில் மிகவும் கீழ் நிலையில் இருப்பதாக முடிவுக்கு வருவதும் சரியில்லை.

அடுத்தாற்போல் கனம் மதியழகன் அவர்கள் இரண்டு விவரங்கள் கூறினார்கள். அப்போது அவர்கள் கொடுக்கிற விவரம் சரியல்ல என்று சொன்னேன். எதாவது ஒன்றை ஒரு கருத்துக்கு ஆதாரமாகச் சொல்ல முற்படுகிறபோது அது பற்றிய விவரங்களை முழுதும் படித்து நன்கு தெரிந்து கொண்டு சொல்லவேண்டும். இங்கே கைத்தறிக்கு கதிர் கொடுப்பது பற்றி பார்லிமெண்டில் மத்திய அமைச்சர் ஒரு கேள்விக்குக் கொடுத்திருக்கக்கூடிய பதிலைக் குறிப்பிட்டார்கள். கேள்வி என்ன, அதற்கு அமைச்சர் அளித்த பதில் என்ன என்ற இந்த இரண்டையும் சேர்த்துப் படித்துப் பார்த்திருந்தால் அவரே சரியான ஒரு முடிவுக்கு வந்திருக்கக் கூடும். காரணம் என்ன? பார்லிமெண்டில் கேட்கப்பட்ட கேள்வி கதிர்கள் வேண்டுமென்று ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் வந்திருக்கக் கூடிய விண்ணப்பங்கள் எவ்வளவு, அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என்பதுதான். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு ஸ்பிண்டில்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றிய கேள்வி அல்ல அது. 'Statement showing Statewise position about applications for licences for spindles and action taken thereon.' ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு ஸ்பிண்டில்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டிருக்கும் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலாக கனம் மதியழகன் அதை எடுத்துக் கொண்டு "நமக்கு ஒன்றும் வரவில்லை, ஸீரோ என்று போட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். மேலும் கொஞ்சம் பார்த்திருந்தால் ஆந்திராவுக்கும் இல்லை, கேரளாவுக்கும் இல்லை, மைசூருக்கும் இல்லை என்கிற விவரம் அதில் இருப்பதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். அதைத் தெரிந்து கொண்டு இருந்தால் கூட "பார்த்தீர்களா, தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது" என்று தான் தவறாகப் புரிந்து கொண்டதை தன் கருத்துக்கு ஆதாரமாகவே பேசியிருப்பார்கள்.

உண்மை இன்றைக்கு என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்பிண்டில் வேண்டுமென்றால் தனியார் இந்த அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். இந்த அரசாங்கம் சிபார்சு செய்து மத்திய அரசுக்கு அனுப்புகிறார்கள். அதன் பேரில் அவர்கள் வழங்குகிறார்கள். இந்த விண்ணப்பங்களைப் பொறுத்த வரையில் சென்னை சர்க்கார் சிபார்சு செய்யவில்லை. காரணம் ஏற்கெனவே நம் மாநிலத்தில் மு[illegible]காக ஒதுக்கப்பட்ட ஸ்பிண்டில்களை கூட்டுறவு சங்கங்களுக்கு என்று [illegible] ... 75 ஆயிரம் ஸ்பிண்டில்கள்தான் [illegible]லேயே பெற்றுவிட்டோம்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்காக ஒதுக்கப்பட்டது. அவ்வளவையும் வாங்கி விட்டோம். இன்னும் அதை விட அதிகமாகப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க நம மாநிலத்திற்கு ஒதுக்கவே யில்லை என்று தவருக—கேட்ட கேள்வி என்ன, அதற்கு அளித்த பதில் என்ன என்று பார்க்காமல்—பதிலைமட்டும் பார்த்து கனம் மதியழகன் தவருன கருத்துக்கு வந்துவிட்டார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : என்னுடைய கருத்து தவறும் அல்ல, கனம் அமைச்சர் சொல்வதும் தவறு அல்ல. நமக்கு 75 ஆயிரம் ஸ்பிண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ருர்களே அது வந்து விட்டதா ? அது எப்போது நமக்குக் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் மறுபடியும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுக்கு அந்த 75 ஆயிரம் ஸ்பிண்டில் களும் கிடைத்துவிட்டது. அவர்களிடத்தில் யார் யாருக்குக் கொடுப்பது என்று இருந்த அதிகாரம் இப்போது நமக்கே மாற்றப்பட்டுவிட்டது. அதனால்தான் அந்த விவரங்கள் எதுவுமே தெரிந்து கொள்ளாமல் அவர் சொன்னுர் என்று குறிப்பிட்டேன்.

அடுத்தாற்போல சில யூனிட்டுகள் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று கனம் மதியழகன் அவர்கள் சொன்னுர்கள். சில யூனிட்டுகள் நஷ்டத்தில் வேலை செய்கின்றன என்பதை நானே புள்ளி விபரத்தில் கொடுத்திருக் கிறேன். நஷ்டத்தில் வேலை செய்வதாக நான் கொடுத்திருக்கிற யூனிட்டுகளை எல்லாம் கவனித்துப் பார்த்தால் தெரியும், அவை ட்ரேய்னிங் சென்டர் களாக இருக்கும். சர்வீஸ் சென்டர்களாக இருக்கும். என்ஜினீயரிங் காலேஜ் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று சொல்வதுபோல இருக்கும் இந்த டிரைனிங் சென்டர்கள் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று சொல்லுவது. மற்றவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகவே ஏற்படுத் தப்பட்டிருக்கும் இந்த சென்டர்களில் நோக்கம் லாபம் அடைவது அல்ல. அதைப்போலவே ப்ரஷர் டை காஸ்டிங் யூனிட் நஷ்டத்தில் வேலை செய் திருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது என்ருல் அங்கே சாயம் தோய்த்துக் கொடுக்கும் வேலை மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகவேதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விண்ணமங்கலம் டானிங் அண்டு பினிஷிங் யூனிட் ஒன்றே ஒன்றுதான் உண்மையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒன்று அதிலும் கூட ஆயிரம், இரண்டாயிரம் நஷ்டம் என்பது ஒரு பெரிய நஷ்ட மாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதை விட நான் சொன்னுல் உடனே கனம் மதியழகன் அவர் கள் வருத்தப்பட்டுக்கொள்கிருர்கள். ராஜ்ய சர்க்காருக்கு இந்தத் தொழில்களை வைத்து நடத்துவதனுல் ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டம் 5 லட்சம் என்று அவர்கள் சொன்னுர்கள். ராஜ்ய சர்க்காருக்கு மொத்தம் இந்த யூனிட்டுகள் எல்லாவற்றிலுமாக வந்திருக்கக்கூடிய லாபம் 11 லட்சம். இந்த சில யூனிட்டுகளினுல் வந்திருக்கக்கூடிய நஷ்டம் 5 லட்சம். ஆக மொத்தத்தில் ராஜ்ய சர்க்காருக்கு லாபமா ? நஷ்டமா ? மொத்த லாபம் 11 லட்சம், நஷ்டம் 5 லட்சம் என்ருல் இதை யாரும் நஷ்டம் என்று சொல்லமாட்டார்கள். சர்க்கார் 31 யூனிட்டுகள் நடத்துகின்றன என்ருல் அந்த 31 யூனிட்டுகள் சம்பந்தமாகச் செலவான தொகை எவ்வளவு, வருமானம் எவ்வளவு, லாபமா நஷ்டமா என்று மொத்தத் தில் லாபமாக இருக்கிறது என்ருல் லாபம் என்று ஒத்துக் கொள்ளலாம், நஷ்டம் என்ருல் நஷ்டம் என்று வலியுறுத்தலாம் . அது ஒப்புக்கொள்ளக் கூடியது. ஆனுல் அங்கங்கே இருக்கக்கூடிய நான்கைந்து டிரைனிங் சென்டர், சர்விஸ் சென்டர் இவற்றில் வரக்கூடிய நஷ்டத்தை மட்டும் எடுத்து, இந்த ர்க்காருக் 5 லட்சம் நஷ்டம் என்று குற்றம் சாட்டுவது அறிவுக்குப் பொருந்தாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர் தான் கொடுத்திருக்கும் அறிக்கையில் 53-ம் பக்கத்தைப் புரட்டிப்

பார்த்திருப்பார்களேயானுல் நமக்கு லாபம் 11·53 லட்சம் என்பதையும் நமக்கு ஏற்பட்ட நஷ்டம் 5·61 லட்சம் என்பதையும் ஆக மொத்தத்தில் 5·92 லட்சம் லாபமே வந்திருக்கிறது என்பதையும் உணர்ந்து கொள்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மொத்தம் உள்ள 31 யூனிட்டுகளில் 12 யூனிட்டுகளில் நஷடம் வந்திருக்கின்றன என்பதற்கு கனம் அமைச்சர் சமாதானம் கூறினுலும், பதினெட்டு யூனிட்டு களில் லாபம் வந்திருக்கிறது என்று கொடுத்திருக்கிற புள்ளிவிவரத்தில் மதுரை டெக்ஸ்டைல் மில்ஸ் பார்ட்ஸ் யூனிட்டில் இரண்டாயிரம் ரூபாய் லாபமும், மெட்ராஸ் பி ஸ்ட் மெடலில் யூனிட்டில் ஆயிர ரூபாய் லாபமும்தான் இவ்வளவு திறமையான தொழில் அமைச்சர் இருக்கும்போதே பெற முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு தொழிற்சாலையைச் சர்க்கார் நடத்தினுலும் சரி, தனியார் நடத்தினுலும் சரி, முதல் மூன்று நான்கு வருஷங்களில் லாபம் வரும் எனறு நினைக்க முடியாது. அப்படி நினைக்கிறவர்கள் தொழில் அனுபவம் இல்லாதவர்களாகத்தான் இருப்பார்கள். யார் தொழிலில் இறங்கினுலும் முதல் வருஷத் திலேயே லாபம் வரும் என்று நினைத்துக் கொண்டு தொழிலில் இறங்கவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். "மெஷின் ரன் இன்" என்று சொல்லும் வகையில் சரியாக ஓட ஆரம்பிக்க வேண்டும். மெஷின் கள் பொறுத்தப்பட்டவை சரியாக இருக்க வேண்டும். சில பாகங்கள் முதலில் செய்யப்படும். இன்னும் சில பாகங்கள் அடுத்த படி செய்யப் படும். ஆகவே, தொழிலிலே லாபத்தை அடைய வேண்டுமென்ருல் நிச்சயமாக மூன்று அல்லது நான்கு வருஷங்கள் ஆகும். எல்லாத் தொழில் களையும் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டுமென்று கொள்கையைச் சொல் கிறவர்கள், முதல் வருஷத்திலேயே நஷ்டம் வந்துவிட்டது என்று சொல்லிக் கொண்டிருப்பார்களேயானுல், சர்க்கார் எப்படித் தொழில்களை நடத்த முடியும் ? சர்க்கார் தொழில்களை ஏற்று நடத்தவேண்டு மென்ற கொள்கையைக் கொண்டிருக்கிறவர்கள் இதனுடைய அடிப்படையைப் புரிந்து கொள்ளவேண்டும். தனியார் துறையிலே எந்த அளவுக்குக் காலம் பிடிக்கிறதோ அதே அளவுக்குச் சர்க்கார் துறையிலும் காலம் பிடிக்கிறது. விதையைப் போட்டுவிட்டு உடனே வேரைத் தோண்டுவது போல் இந்த வருஷம் நஷ்டம், நஷ்டம் என்று பேசிக் கொண்டிருப்பார்களானுல், கொஞ்சநஞ்சம் செய்கிற வேலைகூடத் தடைப்பட்டுவிடும். அதனுல் சர்க்கார் துறை வேலைகள் சரியானபடி நடக்கவில்லை என்ற தப்பான அபிப் பிராயம் ஏற்பட்டு விடும்.

அடுத்தபடியாக, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் பாக்வேர்ட் ஏரியாக் களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிருேம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன சில முக்கியமான கருத்துக் களுக்குப் பதில் கூற நான் விரும்புகிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில புள்ளி விவரங்களையெல்லாம் நல்ல முறையிலே சேகரித்து இங்கே எடுத்துக் கூறினுர்கள். எப்படியோ அந்தப் புள்ளிவிவரங்களை யெல்லாம் கொண்டு வந்துவிட்டார்கள். முதலாவதாக அவர்கள், நம் முடைய ராஜ்யத்திலேயே சில பொருள்கள் பற்ருக்குறையாக இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டி இருக்கிருர்கள். இரும்புத் தகடுகள், "நான், பெரஸ்" மெடல் போன்றவை பற்ருக்குறையாக இருக்கின்றன என்பதை நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அதையும் அவர்கள் சுட்டிக்காட்டி ஞர்கள். அந்தப் பற்ருக்குறை, நம்முடைய ராஜ்ஜியத்தில் மட்டுமா, அல்லது மற்ற ராஜ்யங்களில் இருக்கின்றதா என்று கேட்டார்கள். அதற்கு நான், மத்திய சர்க்காரிலே, மாநில நிதியமைச்சர் அவர்கள் கூடிய மகா நாட்டில் கொடுத்த புள்ளி விவரங்களைக் கொடுக்க விரும்புகிறேன். இந்தியா வுக்கே மொத்தமாக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீசுக்காக ஒதுக்கப்பட்ட

செப்புத் தகடுகள், ஏப்ரல் 1962 முதல் மார்ச் 1963 வரை, மொத்தத்தில் 1/8 தான் கிடைத்திருக்கிறது. இந்தியா பூராவுக்குமே எட்டில் ஒரு பங்குதான் கிடைத்திருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அந்நியச் செலாவணி இல்லாத நிலைமையில் வெளிநாடுகளிலிருந்து இவற்றைத் தருவிக்க முடியவில்லை. இதுதான் பற்றாக்குறைக்குக் காரணம் என்பதை முக்கியமாக உணர்ந்துக்கொள்ளவேண்டும். இந்தியாவிலே "காப்பர்" கனிப் பொருள் அதிகமாகக் கிடைக்கவில்லை. இந்தச் செம்பானது உலகத்திலேயே "ஷார்ட் சப்ளை"யாகத்தான் இருக்கிறது. அதனால்தான் நமக்கும் அந்தப் பொருள் குறைவாகக் கிடைத்திருக்கிறது. "சிங்க்" இந்தியா பூராவுமே 33 சதவிகிதம்தான் கிடைக்கிறது. ஆகவே, இந்தத் தட்டுப்பாடு நம்முடைய ராஜ்யத்திற்கு மாத்திரம் ஏற்பட்ட குறைபாடு என்று சொல்ல முடியாது. இது அகில இந்தியாவிலும் ஏற்பட்டிருக்கும் குறைபாடு. அதை நாம் நெருக்கடி இருக்கும் வரை சமாளித்துத்தான் தீர வேண்டும். இந்தியா பூராவிலுமே இந்த உலோகங்கள் எல்லாம் பற்றாக்குறைவாக இருக்கும் காரணத்தால் நம்முடைய ராஜ்யத்திலும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சேலத்திலுள்ள கனிப் பொருள்கள் என்னவாயிற்று என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். அது இன்னும் பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டார்கள். பரிசீலனைக் கட்டம் முடிந்து பிராஜக்ட் ரிப்போர்ட் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அந்த பிராஜக்ட் எந்த மாதிரி அமையவேண்டும், எந்த இடத்தில் அமைக்க வேண்டும், எவ்வளவு செலவாகும் என்பதைப்பற்றி எழுதுவதுதான் பிராஜக்ட் ரிப்போர்ட். அது ஒரு "புளூ பிரிண்ட்" மாதிரி. இப்போது பரிசீலனைக்கட்டம் முடிந்து இரண்டாவது கட்டத்திற்கு வந்து விட்டது. சற்றேறக்குறைய அக்டோபர் மாதத்தில் ரிப்போர்ட் வந்து விடும் என்று நினைக்கிறேன். அந்த ரிப்போர்ட் வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைப்பற்றிச் சந்தேகம் எதுவும் இல்லையென்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல், புதிதாகத் தொழில் நடத்த முன்வந்தவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்துவிட்ட பிறகு, அவர்கள் லைசென்சை, சரெண்டர் செய்து விட்டார்களானால், அதைச் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டுமென்று யோசனையைத் தெரிவித்தார்கள். அதைப் பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம்முடைய ராஜ்யத்திலே லைசென்ஸ் வாங்கப்பட்ட புதிய தொழில்களை யாராலும் நடத்த முடியவில்லை என்று சொன்னால், அதை அரசாங்கம் ஸ்டேட் இண்டஸ்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக எடுத்து நடத்த முடியுமா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அந்த விதமான முயற்சிகளை சர்க்கார் மேற்கொள்வது பற்றிப் பரிசீலனை செய்து என்ன முடிவு எடுத்தார்கள் என்பதை அடுத்த ஆண்டு அறிக்கைக்குள் தெரிவிக்கிறேன்.

மகேந்திரா அண்டு மகேந்திரா கம்பெனியார் நம்முடைய ராஜ்யத்திலிருந்து தொழிலுக்கான லைசென்ஸைப் பெற்றுக் கொண்டு பம்பாய்க்குச் சென்று தொழிலை ஆரம்பித்திருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். நம்முடைய ராஜ்யத்திலே அவர்கள் அலாய் ஸ்டீல் பிளாண்டை வைப்பதாகச் சொல்லி இருந்தார்கள். அதற்காக நம்முடைய ராஜ்யத்தில் முயற்சி எடுத்துக்கொண்டு அவர்களுக்கு லைசென்ஸ் முதற்கொண்டு வாங்கிக் கொடுத்தோம். அவர்களுக்கு லைசென்ஸ் வாங்கிக் கொடுத்த பிறகு, அந்தத் தொழிலை இந்த ராஜ்யத்தில் ஆரம்பிக்க வசதி இல்லையென்று சொல்லி பம்பாய் ராஜ்யத்திற்கு மாற்றிக் கொண்டார்கள். அது இந்த ராஜ்யத்திற்கு சம்மந்தம் இல்லையென்பதைத் தெரிவித்தோம். ஆனால் அகில இந்திய ரீதியிலே இவையெல்லாம் நிர்ணயிக்கப்படுகிற காரணத்தால்—என்ன காரணம் என்று நான் சொல்ல முடியாது மத்திய சர்க்கார்தான் சொல்ல முடியும்—அவர்கள் பம்பாய்க்கு மாற்றிக்கொ

எங்களுக்குச் சற்று தெளிவாகத் தெரிகிறது. இனி யார் வந்து லைசென்ஸ் கேட்டாலும் அவர்களுக்கு ரெகமண்ட் பண்ண வேண்டாமென்ற யோசனைக்கு நாங்கள் வந்திருக்கிறோம். இந்த ராஜ்யத்திலேயே தொழிலை ஆரம்பிப்பார்களா என்று பார்த்து, செய்வார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டால்தான் ரெகமெண்ட் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு வந்திருக்கிறது. அதைக் கண்டிஷனாகப் போட முடியாது. நாங்கள் சிபாரிசு செய்வதைப் பற்றித்தான் சொல்ல முடியும். ஒரு ராஜ்ஜியத்தில் பற்றாக்குறை இருக்கிறதென்று சொல்லி அந்த ராஜ்யத்தில் லைசென்சு பெற்று பின்பு மற்ற ராஜ்யத்திற்கு மாற்றிக்கொள்வது என்பது இந்தச் சர்க்காரைப் பொறுத்த அளவில் உசிதமல்ல என்று நினைக்கிறது.

திரு. மு. கருணாநிதி : "சம்மதம் இல்லை" என்ற அதிருப்தியை இந்த அரசினர் மத்திய அரசினருக்கு தெரிவித்தார்களா? அதைத் தெரிவித்த பிறகும் உங்களுடைய அதிருப்தியை இந்திய சர்க்கார் மதிக்கவில்லையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கேட்கின்ற கேள்வியிலேயே தேள் கொடுக்கிலே இருக்கின்ற விஷம் இருக்கிறது. விவரம் மாத்திரம் கேட்டிருந்தால் தெளிவாகச் சொல்வேன். விஷம் இருக்கின்ற காரணத்தால் விஷத்திற்கு மருந்து போட வேண்டியிருக்கிறது.

இந்த சர்க்காருக்குச் சம்மதம் இல்லையென்று சொன்னோம். இந்த விதமாக சென்னையிலே ஆரம்பிக்கப்பட வேண்டிய தொழிலை பம்பாய்க்கு மாற்றுவதில் எங்களுக்குச் சம்மதமில்லையென்று திட்டவட்டமாக எழுதி இருக்கிறோம். ஆனால் இண்டஸ்ட்ரியல் லைசென்ஸ் கொடுக்கின்ற பொறுப்பானது இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ரெகுலேஷன் ஆக்ட் பிரகாரம் மத்திய சர்க்காருடைய பொறுப்பு. அதனால் மாகாண சக்காரை மதிக்கவில்லை என்று அர்த்தமல்ல. அவர்களுடைய உரிமையை அவர்கள் செலுத்துகிறார்கள். நம்முடைய உரிமையை நாம் செலுத்துகிறோம்.

அவர்களுக்கு என்ன விவரங்கள் இருந்ததோ எங்களுக்குத் தெரியாது. அது தவறு என்று கூட சொல்ல முடியாது. விவரங்கள் தெரியாமல் தவறு என்று சொல்லுவது சரியல்ல. அவர்களுக்குள்ளே 1-30 p.m.
விவரங்களை வைத்துக் கொண்டு அவர்கள் முடிவு எடுத்தார்கள், எங்களைப் பொறுத்த வரையில் மாற்றக் கூடாது என்று சொன்னோம். இந்த முறையில் சற்று கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். ரீ ரோலிங் மில்ஸ் சம்பந்தமாக பிரச்னை இருக்கிறது என்பது வாஸ்தவம். ராஜ்ய சர்க்கார் தீவிர முயற்சி எடுத்துக் கடந்த ஐந்தாண்டுகளில் 12-க்கு மேல் ரீ ரோலிங் மில்ஸ் ஆரம்பித்தோம். நம் ராஜ்ய சர்க்காருக்கே ஒரு ரீ ரோலிங்க் மில் வைக்கவேண்டுமென்ற முடிவு செய்தோம். அம்முடிவு எடுக்கப்பட்டு அதற்காக பட்ஜெட்டில் போட்டோம். அது பற்றி திரு. மதியழகன் அவர்கள் கூட சொன்னார்கள். அதில் போட்டிருந்தீர்களே, அது என்னவாயிற்று என்று கேட்டார்கள். ரீ ரோலிங்க் மில்லை ஏன் ஏற்படுத்தவில்லை என்பதற்காக கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அவர்கள் செகரட்டரி பதில் அளித்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். நம் ராஜ்யத்தில் பில்லட்டுக்கள் கிடைக்கவில்லையென்று அவர்களே சொன்னார்கள். அப்படி பில்லட்ஸ் கிடைக்காத காரணத்தினால் ரீ ரோலிங் மில் அமைக்க கஷ்டப்படுகிறது என்று அவர்கள் சொன்னார்கள். அது போக ராஜ்ய சர்க்கார் இப்போது ஒரு ஸ்டீல் காஸ்டிங் மில்லும் அதோடு ரீ ரோலிங் மில்லும் வைத்துக் கொள்ளலாம் என்று யோசனை இருக்கிறது. ஸ்டீல் காஸ்டிங் மில்லுக்காக தஸ்தூர் கம்பெனியிடம் ஒரு ரிப்போர்ட் எழுதிக் கொடுத்திருக்கிறோம். ஸ்டீல் காஸ்டிங் மில் ஏற்படுத்திவிட்டால் நம் ராஜ்யத்தில் அப்பற்றாக்குறை சமாளிக்கப்பட்டுவிடும். பொதுவாக இன்னும் சில விஷயங்களுக்கு ஐந்து நிமிடத்தில் பதில் சொல்லி முடித்து விடுகிறேன். நம் ராஜ்யத்தில் ஆரம்பிக்கிற தொழில்களுக்கு எல். ஐ. சி. நிதி சரியான முறையில் கிடைக்கவில்லை என்று

திரு. மகாலிங்கம் அவர்கள் சொன்னார்கள். இந்தப் புகார் எனக்கு சில மாதங்களாக வந்துகொண்டிருக்கின்றன. அதற்கான புள்ளி விவரம் தயாரித்து, நம் ராஜ்யத்தில் எவ்வளவு இன்வெஸ்டுமெண்ட் செய்கிறார்கள் பிற ராஜ்யங்களில் எவ்வளவு செய்கிறார்கள் என்று பார்த்து ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால் அதை நான் எல்.ஐ.சி.யிடத்திலும் மத்திய சர்க்காரிடத்திலும் எடுத்துக் கூறி அதை நிவர்த்திப்பதற்கான முயற்சிகளை செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சங்கரன் அவர்கள் பேசும்போது ஒரு நல்ல உயர்ந்த கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தாவது, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், தனியார் துறையில் வைத்து நடத்துகிற தொழில்களுடன் போட்டியிடும் அளவிற்கு தொழில்களை சர்க்கார் வைக்கக் கூடாது என்று சொன்னார்கள். சர்க்கார் கொள்கையும் அதுதான். ஆனால் சில பண்டங்களுக்கு ஏராளமான தேவை ஏற்படுகிறது. சில சமயங்களில் தொழிலாளர்களுக்கு நாம் வேலை தேடிக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்காகத்தான் அப்படி சர்க்கார் அவற்றை வைக்கிறார்களே தவிர தனியார் துறைக்கு போட்டியில்லாத முறையில்தான் வைக்கிறோம். பின்னர் பவுண்டரி கோக் கிடைக்கவில்லை என்றும் இந்த கோக் ஓவன் பிளாண்ட் கிடையாது. இந்தியாவிலேயே பி.ஃபீ. ஹார்ட் கோக் சரியான முறையில் கிடைப்பதில்லை. அகில இந்தியாவிலேயே தட்டுப்பாடு இருக்கிறது. பின்னர் புலவர் அவர்கள் விசைத்தறி பற்றி சொன்னார்கள். நம் ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் நான் திட்டவட்டமாக சொல்ல விரும்புகிறேன். விசைத்தறியை இந்த ராஜ்யத்தில் புகுத்த வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். அது மட்டுமல்ல. விசைத்தறிகள் பொறுத்தவரை மில்ஸ்க்கு எந்தவிதமான எக்ஸைஸ் டியூட்டி போடுகிறார்களோ அதுமாதிரி போட்டு யாருக்கு வேண்டுமானாலும் கொடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னோம். நம் ராஜ்யத்தை பொறுத்தமட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு யாருக்குக் கொடுத்தாலும் வரவேற்கிறோம், ஆனால் நெசவுத் தொழிலில் ஈடுபடாதவர்களுக்கு கொடுத்து புது போட்டியை ஏற்படுத்தினால் அதனால் கைத்தறி நெசவாளர்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறோம். புலவர் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். "போற்றினும் போற்றுவர்......"(சிரிப்பு) பின்னால் உள்ளதை நான் குறிப்பிட விரும்பவில்லை.........(குறுக்கீடு)...." பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்" (சிரிப்பு).

திரு. இரா. நெடுஞ்செழியன் : கேரளாவில் 15 காசு ரிபேட் கொடுத்தது என்னிடம் இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துத்தான் சொன்னேன். ஆர்டனரி ரிபேட் ஐந்து காசு, ஸ்பெஷல் ரிபேட் 10 காசு என்று போட்டு 15 காசு ரிபேட் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் குறிப்பிட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் உத்தரவுகள் தான் எனக்குத் தெரியும். அந்தந்த ராஜ்யங்களிலுள்ள நடைமுறைகள் எல்லாம் தெரியாது. 'சர்க்கார் உத்தரவுபடி ஆர்டனரி ரிபேட் 5 காசு, 5 காசு ஸ்பெஷல் ரிபேட் என்றுதான் இப்போது கொடுக்கிறோம்.

SRI K. A. MATHIALAGAN : ' Five officers of the Industries Department are now undergoing training in specialised fields of engineering. என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்தெந்த நாடுகளில் இருக்கிறார்கள், எந்தெந்த துறையில் இருக்கிறார்கள், அவர்கள் பெயர் என்ன, இங்கு என்னென்ன உத்தியோகங்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN :—

Sri Venkatasan, Industrial Engineering, United States.
Sri Pandit, Tool and Die Design, Canada.

Sri Pavithran, Tool and Die Design, Canada.
Sri Ramakrishnan, Pressure and Die Casting.
Sri Somasundaram, Lock Manufacture.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 5,23,20,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,23,20,700 under Demand No. XX—Industries."

The Demand was put and carried and the grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 5,88,15,300 under Demand No. XL—Capital Outlay on Industries be reduced by Rs. 100."

The Cut Motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,88,15,300 under Demand XL—Capital Outlay on Industries."

The Demand was put and carried and the Grant was made. 1-39 p.m.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

132. *Notification issued by the Food and Agriculture Department amending the Madras Private Forests (Assumption of Management) Rules, 1962, published in the Fort St. George Gazette, dated the 13th February 1962. [Laid on the table of the House under section 19 (4) of the Madras Private Forests (Assumption of Management) Act. 1961 (Madras Act 55 of 1961).]*

133. *Notification issued with G.O. No. 1586, Revenue, dated 14th December 1962, amending the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Rules, 1961, published with Revenue Department Notification S.R.O. No. A-1196 of 1961, at pages 1245–1247 of Part V of the Fort St. George Gazette, dated*

the 6th December 1961. [*Laid on the table of the House under section 14 (4) of the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961 (Madras Act 38 of 1961).*]

134. *Notification issued with G.O. Ms. No. 718, Industries, Labour and Co-operation (Industries), dated 5th February 1963, amending Rule VII of the Madras Small-Scale and Cottage Industries Loans and Subsidy Rules 1956, published with Industries, Labour and Co-operation Department Notification No. 34 of 1956, dated the 20th August 1956, at pages 439–453 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 29th August 1956.* [*Laid on the table of the House under section 19 of the Madras State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923).*]

B

* 78. *Supplemental Speech of the Hon. Minister for Public Works on working of Minor Ports (English and Tamil).*

* Circulated to members on 19th March 1963.

APPENDIX.

[*Vide* **Answer to Starred Question No. 325 on page 105.**]

STATEMENT SHOWING THE RESOLUTIONS PASSED BY THE TIRUCHIRAPPALLI NORTH DISTRICT DEVELOPMENT COUNCIL DURING 1960 AND 1961 AND THE ACTION TAKEN THEREON BY GOVERNMENT.

Serial number and date. (1)		*Gist of Resolution.* (2)	*Action taken by Government.* (3)
1	5th March 1960.	Resolved to recommend to Government for the location of an Agricultural Depot at Chettikulam.	The question is being examined in Food and Agriculture Department in consultation with the Collector.
2	Do.	Resolved to request the Government to revive the old scheme of supplying iron tyres required for the country carts, spade and crowbars required by the agriculturists and to stock them in the Blocks for sale to the villagers.	All the 13 district and marketing societies have been registered as registered stockists at district level for distribution of iron and steel materials under the agricultural quota. The question of appointing sub-stockists at taluk and village level is under consideration.
	Do.	Resolved to request the Government to take up maintenance of Ponneri tank and all channels from it by Public Works Department for carrying out the repairs to bring 1,000 additional acres under irrigation and to construct a sloping wall for a length of one furlong on both the banks of Ponneri channel.	In Memo. No. 2316J/60-9, Public Works Department, dated 23rd February 1961 the Collector has been informed that the channel will have to be repaired by ryots under Kudimaramath.
	Do.	Resolved to request the Government to consider new channel from the Cauvery taking off above Jaddarpalayam to feed Nagayanallur and other tanks in Musiri taluk and also other tanks in Udayarpalayam taluk and Perambalur taluk.	As the lands for which irrigation facilities are asked for lie on a higher contour and as no more extension of ayacut undee Cauvery is desirable the request is not feasible.
	Do	Resolved to recommend to Government to take up the scheme of providing irrigation facilities from Adavathar east to Iriyanar from the New Kattalai High Level Channel.	The request is not feasible since the orders fixing the ayacut of New Kattalai High level channel have been issued and since any further extension of the ayacut is not possible.
	Do.	Resolved to reqnest Government to extend the electricity to the villages as the villagers are prepared to guarantee the minimum return required by the Department. (1) Thayanur .. .. (2) Kumaravayalur Harijan Colony. (3) Pirattiyur	In Memo. No. 1802P/60-6, Public Works, dated 10th July 1962, the Collector, Tiruchirappalli, has been informed that the position

Serial number and date. (1)	*Gist of Resolution.* (2)	*Action taken by Government.* (3)
6 5th March 1960—*cont.*	(4) Somarasampettai Harijan Colony. (5) Easanai .. .. .. (6) Elambalur .. .. (7) Avukkur .. .. .. (8) Neikuppai .. .. (9) Songeri .. .. .. (10) Ammapalayam .. .. (11) Ladapuram .. .. (12) Palayam .. .. .. (13) Kanavoil .. .. (14) Koneripalayam .. .. (15) Sholaganathapuram .. (16) Alaribadi	in regard to the extension of supply of electricity to the villages mentioned in the resolution of the District Development Council meeting, Tiruchirappalli North, held on 5th March 1960 is as follows :— (1) Extension of supply to the villages Kumaravayalur, (Somara) sampettai, Thayanur, Pirattiyur, Palayam, Ladapuram, Ammapalayam and Elambur. The Licensee, Messrs. South Madras Electricity Supply Corporation Limited has reported that no requisition was received for extension of supply to the Harijan Colonies in Kumaravayalur and Somarasampettai villages where their supply mains already exist. Extension of supply to Thayanur will be considered when the Extension to Pirattiyur village materialises which has been included in the priority list for application for loans from Government if the parties agree to a 15 per cent return on the capital cost subject to the availability of funds and materials. Extension of supply to Palayam, Ladapuram, Ammapalayam and elambur villages have also been included in the priority list of the Licensee for loan assistance from the Government subject to the condition that the parties agree to a 15 per cent return on the capital cost and subject to the availability of funds and materials. (2) *Extension of supply to the other remaining villages* :—As the areas of these Villages, viz., Avukkur, Neikuppai, Kanavoor, Koneripalayam, Esanai, Senjevi, Alambadi and Chockanathapuram have been ceded to the Madras State Electricity Board the Board has to be contacted for necessary further action in the matter.
7 Do.	To request the Government to restrict the water cess to Rs. 15 and Rs. 7—8—0 for I and II crops for the new tube wells in Jayankondam taluk for the first and second crops.	The Government, Food and Agriculture Department, Madras have intimated in their Memo. No. 66609/F. III/5. 60, dated 6th April 1961 that this suggestion is not acceptable as even the present system is not workable on a no-loss-no-profit basis.
8 Do.	Resolved to request the Govrnment to convert the rural dispensary at Manachanallur into a Hospital.	In Government Memo. No. 67549 H3/61-10, Health, dated 16th January 1963 orders have been issued that the request for taking over the rural dispensary at Manachanallur and to run it as a Government Hospital will not be complied with.

Serial number and date. (1)	*Gist of Resolution.* (2)	*Action taken by Government.* (3)
9 5th March 1960	To request the Government to extend the Local Development Works Schemes for a further period of two years in areas where Community Development Programme has not been introduced.	The question does not arise now.
10 Do.	To recommend to the Government that Local Development Works schemes relating to school buildings, roads, etc., should also be sanctioned along with the schemes for the drinking water-supply at least for the next budget year and that the provision for the compulsory contribution of 10 per cent by the people in such cases should be removed so as to facilitate Panchayats to undertake such schemes.	The question dose not arise now.
11 . 7th May 1960	Resolved to address the Government to sanction the scheme of forming a new tank across Kallarodai near Visvagudi village in Perambalur taluk, although it is somewhat costly and uneconomical as this is a backward area and starved for irrigation facilities.	The proposal was dropped in March, 1960 in view of the poor financial return and food production value. However the proposal of the Collector of Tiruchirappalli to reconsider the proposals in view of the fact that the scheme benefits a very backward area starved of irrigation facilities is under consideration of the Board of Revenue (Food Production).
12 Do.	To include the proposal of construction of an overbridge near Uthamarkoil on Tiruchirappalli-Salem Road in the Third Five-Year Plan, as suggested by the General Manager, Southern Railway, Madras and as the over bridge at Bikshandarkoil has already been included.	The overbridge required is in lieu of the level crossing at M. 4/8 of Tiruchirappalli-Salem Road near Uthamarkoil Railway Station. The rough cost of the overbridge and approaches would be Rs. 2 lakhs and 5 lakhs respectively. Due to the limited finance under the Third Five Year Plan, this work was not proposed under any scheme.
13 Do.	Including the work of forming a metal road from lower Anicut to Tirumalavadi on the bank of Coleroon in the Third Five Year Plan as it is an important road.	This is a bank road running on the left bank of the Coleroon river and is being maintained by Public Works Department as an earthern road. The length of the road is 30 miles and the rough cost for metalling would be Rs. 20 lakhs including construction of cross drainage—work being a canal bank road, the metalling has to be taken up only as a Government work under Highways Department. The work has not been included under any approved scheme. It will become important only after the causeway across Coleroon at Thirumanur sanctioned under Central Road Fund is constructed during Third

Serial number and date. (1)		*Gist of Resolution.* (2)	*Action taken by Government.* (3)
			Plan Period. The metalling is therefore, not urgent and it has to be considered during the Fourth Plan.
14	7th May 1960.	Resolved to recommend to Government to sanction an Industrial School for North Tiruchirappalli district.	It has been decided to establish 2 Industrial Training Institutes in Tiruchi district during the Third Plan period. Of the 2 Industrial Training Institutes mentioned above, one has been established at Ariyalur with effect from February 1962 and another is proposed to be set up at Tiruchirapalli in November 1962.
15	Do.	Resolved to address the Government to present the members of District Development Council a Tamil book containing the rules and regulations of the District Development Councils.	In Memo. No. 91301/L3/60-1, Rural Development and Local Administration dated 17th June 1960 the Collector has been informed that Tamil translation of the Act are not available for supply and as the Tamil translation has already been published in *Fort St. George Gazette* there is no need to supply copies to members.
16	Do.	Resolved to request the Government to sanction a regular bridge across Coleroon at Tiruvanmur instead of a regulator and a causeway separately.	The construction of a causeway at a cost of Rs. 14·00 lakhs has been sanctioned under C. R. F. allocations. The question of providing regulator-*cum*-bridge in lieu of the causeway was examined in consultation with Chief Engineer I and was found that it was not feasible. Hence only an independent road bridge, viz. submersible bridge at an increased cost of Rs. 33 lakhs is considered necessary for the site conditions. The Chief Engineer (Highways and Rural Works) has included this work in C. R. F. Scheme under the Third Plan. The draft scheme is under consideration of the Government.
17	7th July 1960.	Resolved to request Government to direct the Director of Agriculture to send power drills for putting down Artesian wells and sub-artesian wells in Jayankondam taluk.	As the Director of Agriculture is himself competent to send the power drills no directions were issued by Government.
18	Do.	Resolved to request Government to expedite grant of loan to the South Madras Electric Supply Co., Ltd. Tiruchirappalli.	In G. O. No. 2701, Public Works Department, dated 24th September 1960 a sum of Rs. 11,35,795 has been sanctioned to the South Madras Electric Supply Co., Ltd., for taking up the rural electrification works in Tiruchirappalli district during 1960-61.
19	23rd September 1960.	Resolved to request Government to sanction more exploratory tube wells in Sendurai and Jayankondam firkas.	The Government of India is being addressed to include in their programme the sinking of tube wells in Sendurai and Jayankondam firkas of Tiruchirappalli district in their Second exploration work in this State during 1963-64.
20	23rd September 1960.	Resolved to request the Government to introduce the benefit of Midday Meals Scheme to High School Students also.	In Memo. No. 106524 E Spl./62-, Education and Public Health Department, dated 29th November 1962, Collector has been informed that the suggestion is not acceptable to Government
21	Do.	Resolved to request Government to start a Polytechnic school in Ariyalur division.	The matter is under consideration of Government in the Education and Public Health Department.
22	Do.	Resolved to request Government to appoint Physical Education Teachers and Tamil Vidwans to all Higher Elementary Schools.	In G. O. Ms. No. 334, Education, dated 14th February 1961 orders have been issued for the appointment of Tamil Pandits in Higher Elementary Schools with effect from the school year 1961-62. In G. O. Ms. 1057, Education, dated 11th May 1962 orders have been issued regarding the appointment of Physical Training Instructors in Higher Elementary and Senior Basic Schools under Private Management.
23	Do.	Resolved to address Government to form a railway line from Ariyalur to Salem through Perambalur Turaiyur and Namakkal.	In connection with formulation of the Third Five-Year Plan this Government recommended the construction of the following new railway lines :— (1) Virudhunagar - Aruppukkottai Madukulathur-Kilakarai line. (2) Salem - Bangalore. (3) Manamadurai-Tuticorin. (4) Tirunelveli-Cape Comerin. (5) Chinnasalem-Chinglepet. (6) Theni-Gudalur line. (7) Salem-Truchi (via) Karur. The Planning Commission tentatively allocated funds for 1,200 miles of new railway lines during the Third Plan. As these 1,200 miles do not include any of the above lines, this Government after a sustained and careful scrutiny have urged the Government of India to take up the construction of at least the following for lines :— (1) Salem-Bangalore. (2) Virudhunagar—Aruppukkottai—Mudukulathur — Kilakarai line. (3) Manamadurai–Tuticorin line. (4) Tirunelveli-Cape Comorin line. The final decision of the Government of India is awaited. In the circumstances it is considered that no useful purpose will be served by addressing the Government of India for the construction of the Railway line recommended by the District Development Council, Trichirapalli North.

Serial number and date. (1)		Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
24	23rd September 1960.	Resolved to recommend to Government to take up Kumbakonam — Jayankondam — Virudachalam road under State Highways.	The road from Kumbakonam-Jayakondam and on to Virudachalam comes in the Districts of Thanjavur, Tiruchirappalli and South Arcot and it is already a Government MDR. The request of the District Development Council is to upgrade this road as a State Highways as it leads to Nagapattinam Port on one side and Neyveli Lignite Project on the other. As there are already alternative routes proposed to be upgraded as State Highways under second All India Road Development Plan, viz., (1) Villupuram to Adiramapattinam (via) Sathiathope and Kumbakonam and (2) Tiruchy-Chidambaram (via) Jayankondam and Sathiathope and (3) Nagapattinam, Thanjavur, Tiruchy (existing State Highways) serving the needs of the Region, the proposal to classify the above as State Highways was not considered necessary.
25	23rd September 1960.	Resolved to address Government to open an Ambar Unit for Jayankondam area.	The matter is being examined in consultation with the State Khadi and Village Industries Board.
26	18th November 1960.	Resolved to address Government to allot the amount required from out of 10 lakhs of rupees placed at the disposal of the Cheif Engineer (H), Madras for 1961–62 for the purpose of maintaining the Panchayat and Panchayat Union Roads in G.O. Ms. No. 650, Local Administration dated 9th April 1960.	The sum of Rupees ten lakhs sanctioned in G.O. Ms. No. 650, Local Administration, dated 9th April 1960 is for improvement to the non-bus route roads of District Boards in 1960 61 so as to bring that at Government cost to a tolerably good condition before they are handed over to Panchayat Unions or Panchayats. Out of this a sum of Rs. 1,14,899, has been allotted to Tiruchirappalli district. As the improvements to be caried out are in the nature of repairs to be executed by the Highways and Rural Works Department debiting the entire expenditure to "50 d. repairs—Highways Department-Miscellaneous" the question of setting about a sum of Rupees 1·5 lakhs to the seven Panchayat Unions formed in the Tiruchirappalli district separately does not arise and the Collector has accordingly been informed that the request cannot be complied with.
27	17th January 1961.	Resolved to urge on Government the urgent need for the inclusion of Marudaiyur Scheme in the Third Five-Year Plan and commence work in 1961 giving top priority as usual for pro-	The scheme has been deferred in view of its prohibitive cost and poor return. (G.O. Ms. 1577 Public Works Department dated 19th June 1961.)

Serial number and date. (1)		Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
		viding irrigation and developing the backward taluk of Jayankondam.	
28	17th January 1961.	Resolved to request to give the required opinion to Railways to undertake the Scheme of constructing an over-bridge on the bridge on the Level crossing in Coleroon road at Lalgudi.	The level crossing referred to is situated at M. 0/2 of Sirudaiyur Lalgudi road in charge of Lalgudi Panchayat. An over-bridge is necessary for the communication between the two towns, Sirudaiyur and Lalgudi on either side of the level crossing. The rough cost of construction of an over-bridge would be Rupees 2 lakhs. This work was not proposed to be taken up under any scheme since more important works had to be taken up yet.
29	17th January 1961.	Resolved to include the Ellakurichi Ferry ghat of Udayarpalayam taluk in the list of Ferry leases with the approval of Government.	The matter is under consideration of Government in the Public Works Department in consultation with the Board of Revenue.
30	18th November 1960.	Resolved to request Government to open a new Sub-Registrars' Office at Sendurai.	In G.O. Ms. No. 29 Revenue, dated 2nd January 1962 Government have sanctioned the opening of a Sub-Registry office at Sendurai.
31	27th February 1962.	Resolved to press on Government to implement the scheme of extension of Marudaiyur Channel Scheme up to Kudikadu village so as to get irrigation facilities when executing the Marudaiyur Reservoir Project the execution of which in Third Five Year Plan is reiterated.	The scheme has been deferred in view of its prohibitive cost and poor return (G.O. Ms. No. 1577 Public Works Department dated 19th June 1961).
32	27th Feburary 1961.	As Jayankondam Taluk has many High Schools and as it is far removed from the Tiruchi Town where college facilities are available, it is resolved to recommend to Government to treat this taluk specially for this purpose and allow two High Schools to be upgraded with XIth standard if necessary Tiruchi Town being derived that facilities for the present to accommodate the above proposal in favour of Jayankondam taluk.	The Collector has been informed in Memo. No. 80979, E3/62-1 Education dated 5th Septembor 1962 that no action is necessary on the resolution as the Government have dropped the proposal of opening higher secondary schools in the State.
33	27th February 1961.	Resolved to urge on Government strongly to sanction one itenerant unit for leprosy relief work for Jayankondam taluk and as that would take some time it was further resolved to allow the Perambalur itenerant unit to do work every month in Perambalur and Jayankondam taluks alternatively.	The Collector has been informed that as the Perambalur Unit is a control unit doing intensive leprosy control work on the principles of the National Lebrosy Control Scheme it will not be possible for the unit to work in two taluks as requested by the District Development Council. Proposals for opening of a survey, education and

Serial number and date. (1)	Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
33—*cont.* 27th February 1961 —*cont.*		treatement unit at Udayarpalayam under the Third Plan are under consideration and till the unit is tarted the patients suffering from leprosy may underg treatment in any of the ho pitals and dispensaries (General medical institutions) in their areas as general me lical institutions should also treat leprosy patients.
34 27th February 1961.	Resolved to request the Government to san tion an additional Radio Supervisor for Jayankondam taluk as the present arrang ments of making two or three supervisors at diff rent stations attending to some portions of the taluk is not satisfactory.	As the question regarding reorg nising the Radio Maintenance Organisation w s under consideration at the time, no action was taken in regard to the appointment of a Radio Supervisor.
35 27th February 1961.	Resolved to request Government to remove the difference in the charges for electric-current supplies and also the rates per horse power in the Electricity Board area and licensee area. Resolved also to request *Government to* direct supply of current in a fortnight in respect of over head tank.	The Government have intimated in their Memo. No. 3721/B/61-2, dated 19th November 1961. that as the Peramba ur Taluk is not a backward area the agricultural consumers in the Departmental areas in Perambalur taluk h ve to pay a *special* guarantee of Rs. 45/- per horse power per annum. The Government have further informed that the consumers of Jayankondam in Udayarpalayam taluk will have to pay only Rs. 35/- per horse power per annum as it has been declared as backward area.
36 27th February 1961.	As Gypsum is available *in* large quantities in Tiruchy District resolved to request Government to start another f rtiliser producing factory under contemplation and to take necessary steps for the same.	Government do not propose to start a *fertiliser factory* in the public sector. The Assistant Director of Industries and Commerce Tiruchirappalli has already inf rmed the collector of Tiruchirapalli that the exploitation of gypsum available in Tiruchirappalli will be costly and it cannot be *utilised* for the manufacture of chemical fertilisers.
37 27th February 1961.	Resolved *to* request Government to instruct the Khadi and Village Industries Board to sanction three Ambar Charka Units *one* for Jayankondam, one for Manapparai and the third for Turaiyur.	The matter is being examined in consultation with the State Khadi and Village Industries Board in the Food and Agricultural Department.
38 25th March 1961.	Some Blocks like Tiruverambur, Manikandam, etc. grouped in "A" stand to lose on account. heir population, their ryots being residents of Towns like Tiruchy	In Memo. No. 76427/L/Spl./61-5. Rural Development and Local Administration, dated 11th September 1961 Government have issued orders approving the allocation of

Serial number and date. (1)	Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
38 25th March 1961 —*cont.*	etc., Hence the criteria of per capi.a Land Revenue appears to work hardship. For grouping these blocks resolved to adopt a different criteria with the area taken into consideration.	Blocks made by the Collector an accepted by the District Development Councils.
39 25th March 1961.	Resolved to request the Government to instruct Director of Public Instruction Madras to issue orders to the Officers of the Education Department in modification of Director of Public Instruction's circu ar D. Dis/713/61, D—8, dated 8th February 1961 to notify the dates of monthly teachi g Association meetings to the concerned Panchayat Union Commissioners so th t the latter or their Social Education Organisers or both may attend the Teachers meetings if they desire.	Necessary instructions in the matter have been iss ed in the proceedings of the Director of Public Instruction Rc. No. 548/B1/61 dated, 11th May 1962.
40 25th March 1961.	Resolved to request Government to set apart atleast one crore out of Special Minor Irrigation programme grant for Third Five-Year Plan for the Execution of the plans and estimates and proposals sent by the Special Minor Irrigation Programme staff for several schemes sponsored for the district and ready for execution. Resolved also that one of the list of Four schemes referred in A or B priority in this District ordered to be taken in the Third Five-Year Period.	It has been found not feasible to take up any scheme in Tiruchirappalli District during the Third Plan.
41 25th March 1961.	Resolved to request the Government to instruct the Medical Stores Depot, Madras to intimate immediately those Medicines included in the indent of Local Fund Dispensaries but not available in Medical Stores Depot, Madras to enable prompt local purchase.	The Collector has been informed that the procedure suggested by the District Development *Council* is already *in force.*
42 17th April 1961.	Resolved to report to Government that this District being very backward all the four Irrigation Schemes which are likely to confer substantial benefit on this District be taken up for execution in the Third Five Year Plan.	It has been found not feasible to take up any scheme in Tiruchirappalli District during the Third Plan.
43 17th April 1961.	To request Government to sanction express Bus Service for 1 and for item 3 modified as Trichy to Chidambaram *(via)* Ariyalur, Jayankondam,	The Transport Commissioner recommended the proposal of the Planning and Development wing to open the new route Tiruchirappalli to Chidambaram

Serial number and date. (1)		Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
43	17th April 1961 —*cont.*	Andimadam as both these proposals are pending with Government.	(via) Lalgudi, Dalmiapuram, Kilapalur, Ariyalur, Jayankondam, Meensurutti, Kamaragudi, Sathiatope and Keevapalayam (198 miles) with two express buses. The Transport Commissioner was asked to follow the procedure laid down in G.O. Ms. No. 2467, Home dated 20th July 1962 viz, of notifying the proposal in the district Gazettes, hearing the objectors and to forward the record of hearing together with his remarks thereon. He has taken action accordingly. His final report is awaited.
44	17th April 1961.	To request Government to instruct Chief Engineer to consider the proposal of constructing a new channel so as to fill up the tanks of Pidaramangalam and Nagayanallur during Rainy season connecting from Nagayanallur vaikal (via) Oduvathur, Nagappa Mudaliputhur, Moogipatti, Karukamadai, Ganapathipalayam and Seethapatti in Musiri Taluk as a partial contribution scheme from ryots.	The Chief Engineer. (1) has reported that as the lands for which irrigation facilities are asked for, lie on a higher contour and as no more ayacut under Cauvery is considered desirable the request is not feasible. The matter is under consideration in consultation with the Board of Revenue.
45	17th April 1961.	To resolve that new Panchayats formed recently should be helped with some reasonable advance to meet their day to day expenses.	In G.O. Ms. No. 1186 R.D. and L.A. dated 21st April 1961 Government have sanctioned a sum of Rs. 100 as advance to the new Panchayats formed during 1960, to enable them to meet the initial administration expenditure.
46	17th April 1961.	To request Government to start a Heavy Industry under State Sector in Tiruchirappalli District and in this view the proposed Heavy Electrical Industry if organised at Tiruchirappalli for which suitable site and other conditions are already available will be useful.	Active steps are being taken by the Government of India to sept up a high pressure boiler manufacturing unit on the out skirts of Tiruchirapalli at an estimated cost of Rs. 25 to 30 crores.
47	17th April 1961.	To request (Government to reconsider their order deferring opening of Sub-Registrar's office at Sendurai this year particularly in view of the fact that private building is made available for housing the office.	In G.O. Ms. No. 29, Revenue, dated 2nd January 1963, Government have sanctioned the opening of a Sub-Registry office at Sendurai.
48	29th May 1961.	To request Government to sanction the proposal about metalling Sendurai Unjini Udayarpalayam road for one lakh required for this work sent by the Divisional Engineer (Highways), Tiruchirappalli North about three months back.	This has been included in the Central Road Fund schemes under consideration of Government.

Serial number and date. (1)		Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
49	29th May 1961.	To recommend to Government to fix Andanallur as the Head Quarters of Srirangam Block as resolved by Block Advisory Committee.	Collector has been requested to place it before the Panchayat Union Council and forward its views to Government.
50	22nd June 1961.	Resolved to remind Government about the opening of a Leprosy Clinic at Udayarpalayam taluk as resolved at the district Development Council meeting held on 27th February 1961.	In G.O. No. 23 Health dated 3rd January 1963 orders have been issued sanctioning the establishment of a Survey Education and Treatment unit at Udayarpalayam.
51	22nd June 1961.	Resolved to request Government to amend Estate Abolition Act to embrace ll cases and take over Inam Padavur Village under Ayan.	The matter is under consideration of Government. Necessary legislation has been introduced in the Legislative Assembly and has been referred to a Joint Select Committee.
52	22nd June 1961.	Resolved that in the case of the loan-*cum*-subsidy scheme if the bore is a failure that the cost of the same may be borne by the Government or half the cost of the bore be treated as a loan and recovered in 20 instalments.	The Government, Food and Agricultural Department, Madras have intimated in their Memo.No. 93478/F/III (3) 61/3, dated 1st November 1961 that the ryots may be asked to avail the concession admissible as per Rule 18 (revised) of the rules for the levy of fees for the hire of power drills and borings.
53	22nd June 1961.	Resolved to recommend to Government the distribution of pesticides through selected Co-operative Societies on condition that they should make separate storage facilities. Also resolved to request the Government to continue the existing pattern of subsidy for some time to come.	The Government, Food and Agricultural Department, Madras, have intimated in their Memo No. 35894/FV/62-2, dated 30th April 1962 that the question of the sale of pesticides, etc., through the medium of Co-operatives is separately under the consideration of the Government and that final orders issued in the matter will be communicated. They have reported that existing pattern of subsidy is being continued throughout the Third Five-Year Plan period.
54	22nd June 1961.	Resolved to recommend the proposal to Government for sanction of permitting the Uppiliyapuram Panchayat Union to take up for execution of the construction of the proposed anicut across Talugai river Koppampatti on half grant loan basis.	The proposals are yet to be finalised by the Chief Engineer (I), Madras.
55	22nd June 1961.	Resolved to recommend to Government to permit the Panchayat Union Commissioner, Lalgudi, to divert village works grant provided for water supply works in the Lalgudi Panchayat Union area for the construction of drainage channels in villages as the entire area is covered by National Water Supply and Sanitation	In Memo. No. 147491/P7/71-2, R.D. and L.A.; dated 26th October 1961, the Collector has been informed that the amount available under the village works grant cannot be utilised for constructing drainage works.

Serial number and date. (1)		Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
56	22nd June 1961.	Resolved to request Government to advice Madras University to enlarge the authorised strength of all Colleges in Trichirappalli District in view of the hardship to Students in seeking admission in colleges in 1961.	In Memo. No 3844/E4/62-2, Education, dated 15th March 1962, the Collector has been informed that the managements of Colleges concerned may seek permission of the University for any temporary increase required in the Colleges.
57	22nd June 1961.	Resolved to propose the following distribution to aim an equitable and fair distribution of entertainment tax.	
		1. *Municipal Limits:*—To accept 75 per cent of the net collection to be given to the Municipality and the balance to be apportioned among the adjoining Panchayat Unions.	The matter is under consideration of Government in the R.D. and L.A. Department.
		2. *Town Panchayats*:—To accept the proposal of 75 per cent of the net income to be given to the Town Panchayats the balance to be given to the Panchayat Union.	
		3. *Village Panchayats*:—Resolved to give 50 per cent of the net collection to the panchayats and 50 per cent to the Panchayat Union Council.	
58	10th August 1961.	Resolved to request the Government to start both the Colleges, i.e (1) Agricultural College, (2) Veternary College in Tiruchirappalli district proposed in the Third Five Year Plan.	The matter is under consideration of Government in Food and Agricultural Department.
59	10th August 1961.	Resolved to request the Government to start one Poultry Unit in Udayarpalayam.	Usually sanction is accorded before the beginning of the official year for starting of new poultry extension centres in the State stipulating the number of centres with reference to the provision available in the plan. The resolution of the District Development Council, dated 10th August 1961 was communicated to the Director of Animal Husbandry for consideration as soon as it was received in December 1961, as the exact place of selection for loncating the centre is being made by him. He will no doubt take into consideration the requirements of the Tiruchirappalli district also when finalising the future programme.
60	10th August 1961.	Resolved to request the Government to advance loan to South Madras Electric	A sum of Rs. 25/- lakhs was provided in the Budget Estimate for 1961-62 for being advanced

Serial number and date. (1)		Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
60	10th August 1961 —*cont.*	applies for, so that extension of electricity in the entire district may be quickly done uniformly both in the Electricity Board and the license areas.	Licensees for rural electrification. Out of this amount a loan amount of Rs.11,28,330 was initially sanctioned to the South Madras Electric Supply Co., in G.O. Ms. No. 2619 P.W.D. dated 16th October 1961 for taking up rural electrification schemes in 1961-62, Out of the paid amount an amount of Rs. 9,78,580 is for taking up rural electricity extension schemes to Tiruchirappalli District. A further loan of Rs. 1,835 lakhs was subsequently sanctioned to the South Madras Electric Supply Co. in G.O. Ms. No. 884 P.W., dated 23rd March 1962 for taking up works in Perambalure and Tiruchirappalli taluks in Tiruchirappalli District.
61	10th August 1961.	Recommend to Government about the formation of a road from Kilakavattankurichi village in Kilapalur Thirumalavadi Road to Dalmiapuram touching the villages of Karaivatti Sannadur Palangapatham and Dalmiapuram.	The proposed road formation branches at Keelakavattankurichi villlage in Kilapalur Tirumalaivadi Road and loads to Dalmiatouching the villages of Karaivetti Semnavar and Palaganatham. A major portion of the formation up to Palagapa tham is a committed work of Second Five-Year Plan and the Chief Engineer. (Highways and Rural Works) has submitted proposals for making a provision of Rs. 17,000 for completing the work in the Third Plan. The proposals are under consideration of Government. The remaining bit of formation work from Palaganatham to Dalmiapuram has to be taken up under the Village. Works Grant Programme by the concerned Panchayat Unions.
62	10th August 1961.	Resolved to request Government to allow the power drills to be used in the District and particularly in areas where there is water scarcity even for drinking purposes though those areas may be away from river margin.	Instructions have been issued to the Chief Engineer (Highways and Rural Works) for lending the power drills available under the National Water-supply and Sanitation (Rural Scheme) to the State Rural Water-supply works.
63	10th August 1961.	To support the special committee's recomendation of locating the Central Bus Stand at East Boulevard Road and recommended to Government.	The District Revenue Officer, Tiruchirappalli has reported that the Tiruchirappalli, Municipal Council Regional Transport Authority and the Local Officers have agreed to have the Central bus-stand at the Municipal vacant site near Murugan Talkies.
64	10th August 1961.	Government to be addressed to include Udayarpalayam taluk in the Central Government Desilting Scheme.	In G.O. Ms. No. 3734, Food and Agricultural, dated 28th October 1961 orders have been issued extending the scheme to the entire State.

Serial number and date. (1)		Gist of Resolution (2)	Action taken by Government. (3)
65	10th August 1961.	Government to be pressed again for allotting additional funds for housing scheme in Tiruchirappalli district.	In Memo. No. 195284/HW/11/61-4, dated 7th February 1962 the Collector has been instructed to renew his proposal in the matter to the Director of Harijan Welfare for consideration in the year 1962-63.
66	26th October 1961.	To request Government expedite the execution of the causeway work undervented causeway sanctioned in mile 3/3 of Vikaramangalam, Kadambur Road in Udayarpalayam Taluk in 1962-63.	The proposal has been dropped as the Divisional Engineer (Highways and Rural Works), has recently reported that the District Development Council has not recommended the work for execution now.
67	26th October 1961.	Resolved to request Government to have the work of forming a motorable road with causeway across the Odai between Samayapuram and Kariamanicken (via) Akkasaipalli Devimangalam, Kanayakudi included in the list of works for execution in 1962-63 and to request Government to increase the allotment for carrying out these works.	The work of improvement to the road including construction of causway and widening culverts, etc., at a cost of Rs. 4·2 lakhs has been included under the Central Road Fund Scheme which is under the consideration of Government.
68	26th October 1961.	Resolved to request Government to reduce the standards for the works of construction of a Pucca bridge across Koolaiyar near Thinniam at an estimated cost of Rs. 30,000 in that place and to permit a width of 12 feet instead of 24 feet and to allow this work to be done by the State Highways Department during 1962-63.	This bridge works is required across Koolayar river so as to connect Ambil and Thinnayam (via) Peruthika and it is under the Jurisdiction of Lalgudi Panchayat Union. The rough cost of the bridge with 24 feet roadway will be Rs. 1·50 lakhs. The District Development Council wants to reduce the standard by providing 12 feet width of roadway so that the work may be executed at lesser cost. The rough cost of the bridge with 12 feet roadway will be Rs. 60,0 0. This is not included in the finalized list of committed works of Second Five-Year Plan. Hence the work has to be proposed only under new works of Third Plan under the Head "Other Roads" if possible by the District Development Council with reference to procedure indicated in paragraph 11 of G.O. Ms. No. 3428, R. D. & L.A., dated 19th December 1961. It is not desirable to reduce the road width to 12 feet.
69	26th October 1961.	Portions of road between Kannarkudi and Vandalaikudalur and Thoppali at Dalmiapuram have to be taken up as new schemes in the Third Five-Year Plan.	As this is a new road formation this has to be taken up only by the concerned Panchayat Union under the village works programme.

Serial number and date. (1)		Gist of Resolution. (2)	Action taken by Government. (3)
70	26th October 1961 —cont.	Sikdathambur and (2.) Thottiam.	Development Officers Thottiam and Thuraiyur under the Land Improvement and Agricultural loans Act, no special allotment under Block Schemetic budget was considered necessary.
71	28th December 1961.	Resolved unanimously to adopt the three resolutions which were passed at the Panchayat Conference Madras held on 8th and 9th October, 1961 as per G.O. Ms. No. 2443 R D. and L.A. Department dated 7th September 1961.	No orders required.
72	28th December 1961.	Resolved to move Government to raise the allotment for (1.) Tiruchirappalli Drainage Scheme, (2.) Tiruchirappalli water supply Improvement Scheme to 80 lakhs to enable the completion of these two schemes during the next five year commencing from 1962-63 as the estimated amount is Rs. 53·80 plus 25 lakhs or 78·80 or 79 lakhs respectively.	Action has already been taken to provide adequate funds both for Water-supply and drainage schemes in Tiruchirapalli Municipality and the Collector has been informed accordingly in Memo. No. 16653/H6/62-1 Health dated 20th June 1962.
73	28th December 1961.	Resolved to urge on Government to advance adequate loan to the South Madras Electricts Supply Co.. to enable the letter to extend electricity to the villages in Tiruchirappalli, Kulitalai, Perambalur, and Lalgudi Taluks mentioned in Government's reply to question No. 4302 on the floor of the Assembly on 14th December 1961.	In G.O. Ms. No. 824, P.W.D., dated 23rd March 1962 the Government have sanctioned a loan of Rs. 1,94,114 to the South Madras Electric, Supply Corporation Limited, for talking up rural electrification works in Tiruchirappalli district.
74	28th December 1961.	To press Government to extend irrigation from New Kattalai High-Level Channel to Valavandakottai, etc., villages mentioned in the original project report as they are commanded by the canal.	It may not be possible to includes these villages under ayacut of Kattalai High-Level Channel as the ayacut has already been fixed.
75	28th December 1961.	Recommended to Government about taking up the maintence of Samayapuram Manachanallur Road by Highways Department widened and tarred.	The Samayapuram-Manachanallur Road has since been taken over by the Government under the bus route road scheme for 1962-63 for maintenance and improvement.
76	28th December 1962.	To approve the proposal for changing the nomenclature of work of constructing a bridge at mile 9/7 of V. Kalathur—Kaikalathur road.	The change of nomenclature has been approved in Government Memo. No. 7704/P3/62-2, dated 12th February 1962.
77	28th December 1961.	Government to be addressed through Inspector-General of Police about establishing a police out-post at Veppur	The question is being examined by Government in the Home Department in consultation with the Inspector-General of Police.

Serial number and date.		Gist of Resolution.	Action taken by Government.
	(1)	(2)	(3)
77	28th December 1961—*cont.*	as there is no police station within a radius of 15 miles in Veppur block.	
78	28th December 1961.	Resolved to request Government to approve the proposal of recommending to the Panchayat Union to increase the Union, or the erstwhile subsidy to C. class practitioners in the Rural Dispensaries from Rs. 8·31 nP to Rs. 35 as in other Districts so that a good number of Rural Dispensaries need not be kept vacant.	As this is a matter for consideration by the Panchayat Union Co ncil the Collector has been asked to remit the resolution to the Panchayat Union Council concerned.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 22nd March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Water and Drainage Board

* 317 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether any suggestion has been made by the Union Government for the establishment of Water and Drainage Boards;

(*b*) if so, the details of the proposal and the atcion taken so far?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM (*a*) & (*b*) The National Water-supply and Sanitation Committee (1960-61) set up by the Government of India recommended the setting up of Water and Drainage Boards' either Sttae-wise or on a region wise basis, clothing them with adequate statutory powers to promote and finance Water Supply and Sewerage schemes for all urban local bodies.

In view of the National emergeny, the proposal has been deferred.

T. B. Sanatoirum (Ramanathapuram district).

* 326 *Q.*—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have taken over the administration of the T.B. Sanatorium in Amaravathi Pudur in Thirupathur taluk, Ramanathapuram district; and

(*b*) whether any discrimination is shown to this Sanatorium in regard to the supply of diet and medicine when compared to other Sanatoriums in the State?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இதைப்பற்றி அரசாங்கத்துக்குத் தகவல் இல்லை.

திரு. சா. கணேசன்: இந்த ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இல்லை என்பதும், மருந்து கிடைப்பதில்லை என்பதும், அதனலே நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள் என்பதும் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நம்பு

கிறேன். இதை அரசாங்கமே எடுத்துக் கொள்வதற்கு எந்த விதமான தடையும் இல்லை என்பதையும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். எங்க இன்றியமையாத, அந்த ஜில்லாவில் ஒன்றே ஒன்றாக இருக்கிற அதை அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தக் கேள்வி வருகிற வரையிலும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அதற்கு அப்புறம் வந்திருக்கிறது. இதில் என்ன டிபிகல்ட்டி என்று கேட்டால், ராமநாதபுரம் சானடோரியம் கவர்னிங் பாடி என்ன செய்திருக்கிறார்கள் என்றால் மெயின்டினென்ஸ் அண்ட் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சரைத் தவிர 4 லட்சம் பில்டிங்ஸுக்காகக் கொடுத்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இன்ஸிஸ்ட் செய்திருக்கிறார்கள். ஆகவே அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். மாதவன்: 4 லட்சம் ரூபாய் தேவைப்படுவதால் காலதாமதம் ஏற்படுகிறது என்று அமைச்சர் சொல்லுகிறார்கள். ஒரு இடைக்கால ஏற்பாடாக ஆண்டிற்கு இவ்வளவு என்று கொடுத்து உதவ அரசாங்கம் முன் வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தத் தொகை சம்பந்தப்பட்ட மட்டில் ஒழுங்காக ஒரு நிர்ணயத்துக்கு வராமல் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்?

திரு. சா. கணேசன்: இந்த நிர்வாகக் கமிட்டி என்ன தெரிவித்திருக்கிறார்கள் என்பது நேரடியாக எனக்குத் தெரியாது. நேற்று இங்கே ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் வந்திருந்தார். நான் அவரோடு இதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, எந்த விதமான தடங்கலும் இதற்குக் கிடையாது. 4 லட்சம், 2 லட்சம் கொடுத்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலைமையே கிடையாது, இப்போதே எடுத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் தெரிவித்தார்கள். . . .

கனம் சபாநாயகர்: The Hon. Member Sri Saw Ganesan cannot base his question on the talks he had with the Collector and on the opinion expressed by the Collector.

திரு. சா. கணேசன்: ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இருந்தால் அரசாங்கம் அதை உடனடியாக எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார், இந்த சானடோரியத்திற்கு 1959-60-ல் மெயிண்டினன்ஸுக்கு 10,000 ரூபாய் கொடுத்திருக்கிறது ஏற்கெனவே; கனம் அங்கத்தினர் கூறுவது போல 4 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கவர்னிங் பாடி இன்ஸிட் செய்யவில்லை என்றால் அதைப் பற்றி பரிசீலனை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு. கரு. சீமைச்சாமி: அந்த ஆஸ்பத்திரியின் நிர்வாகச் செலவுக்குப் பணம் இல்லாததால் கிழக்கு ராமநாதபுரம் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஆண்டு தோறும் பணம் கொடுத்து வருகிறோம். அப்போதும்கூட அதை நடத்த முடியவில்லை. பிப்ரவரி மாதத்தில் தேவகோட்டையில் நடந்த டிஸ்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட்டத்தில்கூட இதை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நான் முதலிலேயே சொன்ன மாதிரி அது கொஸ்டினுக்குப் பிறகு தான் வந்திருக்கிறது.

MR. SPEAKER: The question alone is the first information.

சுவாமி விவேகாநந்தருக்கு சிலை நிறுவுதல்

* 328 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைக் கடற்கரையில் சுவாமி விவேகாநந்தர் சிலையை நிறுவ உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால், எப்பொழுது?

கனம் திரு. வெ. ராமையா: (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழாது.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, சமுதாயத்திலே நல்லதொரு புரட்சி உண்டாக்கிய பெரியார் அவர்களுக்கு உருவச் சிலை அமைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

MR. SPEAKER: How does the question arise?

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கேள்விக்கும், இந்த உப கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

கனம் சபாநாயகர்: நானே சொல்லி விட்டேனே அப்போதே.

Water-supply (*Tiruchirappalli*)

* 329 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) when the proposal to construct four over-head reservoirs for boosting water-supply in elevated areas in Tiruchirappalli Municipality was sanctioned;

(b) the details of the scheme, including the estimated cost; and

(c) the present stage of the progress of the scheme?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM : (a) In November 1958.

(b) Improvements in the distribution of water-supply system for the Western and Southern areas of the Municipality and the construction of four Service Reservoirs for boosting water-supply in Palakarai, Worraiyur District I, Worraiyur District II and cantonment areas are being taken up, at an estimated cost of Rs. 31·58 lakhs.

(c) The work of construction of Service Reservoirs in Palakarai and Worraiyur District I is in progress. The Superintending Engineer has been asked to expedite the execution of the works.

Common irrigation wells (Ramanathapuram district)

*330 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any scheme to provide common irrigation wells in Ramanathapuram district ; and

(b) the present stage of the proposal to construct common irrigation wells in Thirupathur taluk, Ramanathapuram district?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) Detailed proposals called for from the Collector of Ramanathapuram for sinking six community irrigation wells in Tiruppathur taluk as a Pilot Project are awaited.

(அ) ஆம்.

(இ) திருப்பத்தூர் தாலுக்காவில் முன்னோடித் திட்டமாக ஆறு பொது பாசனக் கிணறுகள் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விவரமாகத் திட்டம் தயாரித்து அனுப்பும்படி ராமநாதபுரம் ஜில்லா கலெக்டரைக் கேட்டிருக்கிறோம். அது இன்னும் கிடைக்கவில்லை.

திரு. சா. கணேசன் : இந்தப் பாசனத்திற்காகக் கிணறு தோண்டும் போது ஏரிகளின் உள்வாயிலே குழாய்க் கேணிகளை, ஆழக் கேணிகளை அமைப்பது பயன் உள்ளதாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா? இது வரையில் இந்த மாதிரி யோசனை இல்லாவிட்டாலும் இந்த யோசனையை இப்பொழுதாவது சேர்த்துக் கவனிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது அவர்கள் ஓரளவு பரிசீலனை செய்திருக்கிறார்கள். ரிப்போர்ட்தான் வரவில்லை. புறம்போக்கு இடத்தில்தான் வெட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கண்மாயில் வெட்டினால் தண்ணீர் வரும்போது கிணறுகளில் மணல் மூடி, கிணறுகள் தூர்ந்துவிடும். ஏற்கெனவே பரிசீலனை செய்து

தான் புதுக்கோட்டைப் பகுதியில் கிணறு வெட்டிப் பரிசீலனை செய்து பார்த்தோம். அதில் ஒரு முடிவு தெரியவில்லை. இப்போது கனம் அங்கத்தினர் சொல்லுவதால் இதையும் பரிசீலனை பண்ண யோசிக்கலாம்.

திரு. மு. சண்முகம் : பொதுப் பாசனக் கிணறுகள் நம் மாநிலத்தில் மிந்தெந்த இடத்தில் நடைமுறையில் இருக்கின்றன? அவைகள் திருப்திகரமான முறையில் நடைபெறுகின்றனவா?

கனம் திரு. பூ. கக்கன் : திருப்பத்தூர் தாலூகாவில் 6 நீர்ப் பாசனக் கிணறுகள் வெட்டி பரீட்சார்த்தமாகச் செய்யலாம் என்று கலெக்டரிடமிருந்து ரிப்போர்ட் கிடைத்திருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know, Sir, whether the river pumping scheme is also in relation to the common irrigation wells scheme which has been already in our State?

THE HON. SRI P. KAKKAN : The hon. Member, Sri C. Chiranjeevulu Naidu, may put a separate question.

திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் சபாநாயகர் அவர்களே, பொதுப் பாசன ஆழக் கிணறுகள் வெட்டும்போது சொந்தப் பாசனத்திற்காகவும் குடி தண்ணீருக்காகவும் இருக்கிற கிணறுகளில் இருக்கும் ஊற்றும் கீழே இறங்கிவிடும் என்று சொல்லுகிறார்களே அதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு கிணறு இருக்கும்போது, பக்கத்தில் ஒரு கிணறு வெட்டினால் அதனுடைய ஊற்றுக் கண் பாதிக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Dairy Plant

* 331 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the site purchased by the Madurai City Co-operative Milk Supply Union at Paravai village near Madurai for the location of a Dairy Plant was held unsuitable by three members of the Food and Agricultural Organisation and UNICEF team of experts; and

(b) if so, what are the findings of the team on this matter?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) F.A.O.—UNICEF team visited the site purchased by the Madurai Co-operative Milk Supply Union and observed that the sub-soil conditions were unsatisfactory due to drifting sand at 10 feet level. The water table was only 55 inches below ground level as could be seen from the test pits. Special raft foundations or pile foundations would be necessary to support the dairy building. The increase in the cost of the building because of this was estimated at 25 per cent. During monsoon period, the water table would rise further, creating seepage problems. The highways bridge adjacent to the site is about [illegible]

higher than ground level while the adjacent Railway bridge was found to be higher by about 12 feet. The road level at the western end of site is 5 feet higher than the site. From the information given by the Railway Divisional Office, Madurai, it was clear that the flood level on the site in 1919 was at least 6 feet above the ground level. The team has therefore held that the site has unsatisfactory subsoil conditions and is liable to get flooded.

The advantages in selecting the alternative site at Sathamangalam are that:

(a) the cost of construction of building in this site will be less as the sub-soil conditions are good; and

(b) the distribution cost of milk will also get reduced considerably since this site is only one mile away from Madurai city.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், பால் பண்ணைக்காக முதலில் வாங்கப்பட்ட நிலம் வாங்கும்முன் பரிசீலனை செய்து வாங்கப்படவில்லையா ? ஏன் ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் வாங்கப்பட்டது பற்றிய தகவல் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்க முடியும்.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், நிலம் வாங்கியது தவறுதலாகச் செய்யப்பட்டது என்றும், அதிக விலை கொடுத்து வாங்கி விட்டார்கள் என்றும், தகுதி இல்லாத நிலத்தை வாங்கி விட்டார்கள் என்றும் தெரிகிறதே, அதற்கு அவர்கள் மீது ஏதாவது விசாரணை நடந்ததா ? விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : விசாரணை ஒன்றும் நடக்கவில்லை. ஆற்றோரம் பக்கமுள்ள நிலத்தை வாங்கிவிட்டார்கள் என்பது தான் அதில் உள்ள தவறு. அதையும் கால்நடை அபிவிருத்திக்கு உபயோகப் படுத்தலாம் என்று இப்பொழுது ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது. முதலில் பார்த்த அதே நிபுணர்கள்தான் இதை யும் பார்த்திருக்கிறார்கள். இந்த இடத்தில் கட்டடம் கட்டினால் விலை ஜாஸ்தி ஆகும்; அதிக தூரமாக இருக்கும். மேலும் வைகை யில் வெள்ளம் வரும்போது, இது பாதிக்கப்படும்.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், இரண்டாவது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலம் கண்மாய் மூலம் பாசனம் பெறும் நிலங்கள். அவர்கள் 'தங்களுக்குத் தண்ணீர் பெறும் உரிமை எங்களுக்கு இருக்கிறது, ஆகவே வேறு வழிகள் செய்யவேண்டும்' என்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது சாத்தமங்கலம் குளம்; இது நீர் பாசனக் குளம் தான். கண்மாயை ஹௌஸிங் போர்டு அக்வயர் பண்ணுவதால் குளம் பயன் படாதுதான்.

கனம் திரு. பூ. கக்கன் : மக்களுக்கு வீடுகளும் கட்டித்தர வேண்டி இருக்கிறது. உணவு உற்பத்தியை அதிகப் படுத்தி, 10 கலம் விளையும் நிலத்தில் 20 கலம் விளைவித்தால், சில நிலங்களை வீடு கட்ட எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பெரிய நகரத்திலும் மக்களுக்கு வீடுகள் கட்டியும் உதவி செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், பொதுவாக தரிசு நிலங்களை எடுத்துச் செய்யலாம். கிழக்கு இராமநாதபுரத்தில் அப்படி இலட்சக்கணக்கான ஏக்கர்கள் இருக்கும் போது, இந்த நிலத்தை இலட்சக்கணக்கான ரூபாய்கள் கொடுத்து அக்வயர் செய்ய வேண்டுவதை விட்டுவிட்டு வேறு ஏற்பாடுகள் செய்வார்களா ? இலட்சக்கணக்காகச் செலவழித்து ஆர்ஜிதம் செய்வதற்குப் பதிலாக, பல வான்களில் பாலைக் கொண்டு வந்து சப்ளை செய்ய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்கென்று அவுசிங் போர்டு இதைச் செய்கிறது. பால் சப்ளை பற்றி என் சக அமைச்சர் அவர்களுக்குத் தனிக் கேள்வி போட்டால் அவர்கள் விவரங்கள் கொடுப்பார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த நிலம் தரிசாக இருக்கிறது. இதை நிலம் இல்லாதவர்களுக்குச் சாகுபடிக்கென்று கொடுக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது அங்கே பால் பண்ணை வைக்கப்போகிறோம்; மாடுகளுக்காக வேண்டி ஏற்பாடுகள் செய்கிறோம். அங்கே கால் நடை அபிவிருத்தி செய்யலாம் என்று அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

திரு. க. தா. பெருமாள் ராஜு : ஸார், இப்பொழுது ஈரோடிலிருந்து பால் சப்ளை செய்ய ஒரு வான்தான் இருக்கிறது. அது ஈரோடு, சித்தோடு, திங்களூர் முதலிய பத்து இடங்களுக்குப் போகவேண்டி இருப்பதால் தாமதம் ஏற்படுகிறது. பால் சப்ளைக்காக இன்னொரு வான் போட்டு, சொஸைடியில் ஏற்பாடு செய்து மக்களுக்குச் சௌகரியம் செய்து கொடுக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது மதுரையில் பால் பண்ணைவைப்பது பற்றியது. அங்கத்தினர் கூறிய விஷயமாகத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பால் பண்ணை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அரசாங்கம் கருதுகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : துரிதமாக ஆரம்பிக்கப்படும் தெரிவிக்கிறேன்.

Sethusamudram Project

* 332 Q.—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state the action taken on the various recommendations of Dr. A. R. Mudaliar Committee on Sethusamudram Project?

The Hon. Sri RAMAIAH : The action taken is as follows:

(1) Hydrographic survey of the area and borings along the canal alignment have been completed;

(2) Land survey, half a mile, on either side of the alignment will be taken up by the Government of India;

(3) Arrangements for taking tide wave and current observations and for installation of a subsidiary meteorological observatory are under way;

(4) Based on the results of the borings, an estimate amounting to Rs. 15 crores drawn up by the Chief Engineer, P.W.D. (General) will be sent to Government of India after examination.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், தூத்துக்குடி துறைமுகம், சேதுசமுத்திரம் இரண்டும் இணைப்புத் திட்டங்களாக இருப்பதால், இதை முன்னால் நிறைவேற்றினால் தான் உபயோகமாக இருக்கும் என்று கருதப்படுகிறதே, அது பற்றி சர்க்கார் அபிப்பிராயம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ரிபோர்ட்டை நன்றாகப் பரிசிலனை செய்த பிறகு, தூத்துக்குடி, சேதுசமுத்திரம் இரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், இவை இரண்டையும் தனித்தனியே செய்வதால் எந்தக் கஷ்டமோ நஷ்டமோ ஏற்பட்டுவிடாது என்றும் சர்க்கார் கருதுகிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : சேதுசமுத்திரத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகள் என்னென்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த ரிபோர்ட்டைப் பரிசிலனை செய்த பிறகு, இப்பொழுது கிழக்குக் கோடியிலிருந்து, மேற்குப் பகுதிக்குப் போக கப்பல்கள் பல நூறு மைல்கள், சிலோனைச் சுற்றிப் போக வேண்டியிருக்கிறது. அதற்கு இது ஒரு குறுக்கு, ஷார்ட் கட், பாதையாக அமையும் என்று ஒரு கருத்தைச் சொன்னதால்தான் அதைத் தீவிரமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதில் சேதுசமுத்திரம் முதல் கட்டம். பின்னால் தூத்துக்குடியை எடுப்போம். அதற்கான முன்னேற்பாடுகள் நடக்கின்றன. பூர்வாங்க வேலைக்குப் பிறகு, அது பற்றிய ரிபோர்ட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பிய பிறகு, மேற்கொண்டு ஏற்பாடுகள் செய்யப்படும்.

Sri R. V. SWAMINATHAN : May I know whether our Government have came to the conclusion that this is a very important scheme and that the scheme should be taken up, and if so, whether the Government propose to recommend to the Government of India to allot funds for it?

The Hon. V. RAMAIAH : The first stage is more or less over. We have already come to the conclusion that this is an important link. Now the progress is that our Public Works Department has gone in for these boring operations. They have made a study and our Chief Engineer (General) has got a report which envisages a sum of Rs. 15 crores. As soon as this is processed, we will again send it to the Government of India and the Government of India on their part have also made certain studies which only their machinery could do.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சேதுசமுத்திரம் திட்டத்தை அமுல் நடத்தினால், கப்பல்கள் சுமார் 220 மைல்கள் குறைவாகப் பிரயாணம் செய்தால் போதும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சூயஸ் கெனாலில் போல, இங்கேயும் ஒரு ஸெஸ் விதித்துச் செய்தால் சர்க்காருக்கு வருமானம் அதிகமாக வரும். இந்த ஆலோசனையை மத்திய சர்க்காருக்குச் சொல்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதெல்லாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது என்னென்ன செய்யவேண்டுமென்று யோசிக்கும்போது இதையும் மனதில் வைத்துச் செய்வார்கள்.

திரு. சி. பொன்னுசாமி : இங்கிலாந்திலிருந்து வந்த சர்வே கோஷ்டியினர் அங்கே பவளம் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள் என்பது உண்மை தானா? அதை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தூத்துக்குடிக் கடல் ஓரத்தில் பவளம் மட்டுமல்ல, முத்தும்கூட இருக்கிறது. அந்த ஆராய்ச்சிக்கு இப்பொழுது நாம் போகவில்லை. சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற வேண்டும். அதற்கு வேண்டிய எல்லா வேலைகளையும் இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த வேலை நடக்கும்பொழுது பவளம் வந்தால், அதை விட்டுவிடமாட்டோம். அதையும் எடுப்போம்.

Sri R. V. SWAMINATHAN : May I know whether Government have got any figures about the total cost of the scheme? May I know whether a revised estimate has been made and how much the scheme will cost? May I also know whether the Madras Government have expressed to the Central Government what their contribution should be and how much the State Government have to spend on this scheme?

(The hon. Member Dr. B. Natarajan was heard to remark something.)

The Hon. Sri V. RAMAIAH : Just now I have stated that the estimate prepared by the Chief Engineer (General) is Rs. 15 crores for Sethusamudram Project. Based on the results of boring operations, the estimate is Rs. 15 crores. There seems to be a slight difference of opinion. If the hon. Member Dr. B. Natarajan is having some information, he can meet and tell me that. As far as I understand from the papers available with me, the project

itself will cost only Rs. 15 crores. I do not know what will be the ultimate cost. If the hon. Member Dr. B. Natarajan has any more information to give, he can give that to me and I will look into it.

திரு. சா. கணேசன் : இந்தத் திட்டம் எத்தனை ஆண்டுக் காலத்துக்குள்ளே நிறைவேற்றப்படும் என்ற ஒரு வரையறை செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தக் கட்டத்துக்கே நாம் இன்னும் போகவில்லை.

DR. B. NATARAJAN : On a point of personal explanation, Sir, If I remember correct, since Ramaswamy Mudaliyar Committee had estimated, the cost of the project has become something over Rs. 40 crores. Since then costs of materials have gone up. So the revised estimates should be very much higher. I think there was reference to this in the Madras Techno Economic Survey Report also. What I say is, this Rs. 15 crores is alright by way of preliminary estimates rather than for the project as a whole, which might take several crores to complete.

THE HON. SRI V. RAMAIAH : There seems to be some difficulty. But as far as facts are with me, the Ramaswamy Mudaliyar Committee has made an estimate of only Rs. 7·9 crores for this project. Later on when a study was made it came to a much higher figure. Now we have made a study and from details available, the report of the Chief Engineer (General) shows that the revised estimate should be Rs. 15 crores. Nowhere in my papers do I find the figure of Rs. 30 to Rs. 40 crores. May be the hon. Member is linking up the estimate for improvement of Tuticorin port also. Then it will be a higher figure. I am talking only for Sethusamudram Project.

திரு. கே. மூக்கையா தேவர் : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் காரணமாக மிகவும் பின்தங்கிய பகுதியாகிய ராமநாதபுரம் ஜில்லாப் பகுதியிலே வேலை வாய்ப்பும், வியாபாரப் பெருக்கமும் ஏற்படும் சாத்தியக் கூறு இருக்கிறதா? அது ஆராயப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தத் திட்டத்தை நினைத்துப் பார்த்தால் ஏதோ ஒரு குறிப்பிட்ட சிறு பின்தங்கிய பகுதிக்கு மட்டும் இது பலனளிப்பது அல்ல. இது ஒரு தேசிய திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், பாரத தேசத்திற்கே ஒரு பெரிய நன்மை ஏற்படும் என்பதில் சந்தேகம் கிடையாது.

Rehabilitation Centre (Thambaram)

* **333 கேள்வி.—திரு. முனு. ஆதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பரம் டி. பி. சானடோரியத்தைச் சேர்ந்த **(Rehabilitation)** சென்டரில், 1960-61-ஆம் ஆண்டுகளில் எத்தனை பேர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ?

(இ) அவர்களுக்கு எந்த விதமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன ?

(உ) எவ்வளவு ஆண்டுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும் ?

(எ) இப் பயிற்சிக்கான திட்டம் யாது ?

(ஐ) இப் பயிற்சி பெற்றுத் தேறியவர்கள், தனியே தொழில் துவங்க அரசாங்கம் உதவித் தொகை வழங்குகிறதா ? எவ்வளவு ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 1960-ல் 20 பேர். 1961-ல் 73 பேர்.

(இ) அச்சுக் கோர்த்தல் (அச்சகப் பிரிவு), யந்திர வேலை (அச்சகப் பிரிவு), பைண்டிங் (அச்சகப் பிரிவு), பிரம்பு வேலை, ஆய்வுக்கூடப் பயிற்சி.

(உ) பொதுவாக இரண்டு முதல் மூன்றாண்டுகள் வரை பயிற்சியளிக்கப்படுகிறது. இது சானடோரியத்தில் தங்கியிருப்பவர்களின் உடல் நிலையையும் அவர்களை மருத்துவப் பரிசீலனையில் வைக்க வேண்டிய அவசியத்தையும் பொறுத்ததாகும்.

(எ) முன்பு காச நோயாளிகளாயிருந்தவர்கள் சானடோரியத்தில் தங்கிப் பெற்ற உடல் வலுவைக் கட்டிக் காப்பதும், ஒவ்வொரு நோயாளிக்கும் அவரவர் உடல் நிலைக்கேற்ப வேலை கொடுத்தலும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும். இவ்வாறு வேலைப் பயிற்சி பெறுவதால், அவர்கள் இக் காலனியை விட்டு வெளியே சென்றபின் மற்றவர்களை நம்பியிராமல், தாங்களாகவே ஏதாவது ஒரு தொழில் புரிந்து சுதந்திரமாக வாழ முடியும்.

(ஐ) இல்லை.

திரு. முனு. ஆதி : அவர்கள் நோய் தீர்ந்து சுகம் அடைந்த பிறகு சிறு தொழில்களில் அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கிறார்கள். அவர்கள் பயிற்சி முடிந்ததும் அவர்களை வெளியே அனுப்பிவிடுகிறார்கள். வெளியே அவர்களை யாரும் வேலைக்கு எடுத்துக்கொள்வதில்லை. ஆகவே, இந்தத் தொழில்களை அரசாங்கமே ஏற்று அதிகமாக உற்பத்தி செய்து, அங்கே அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : சானிடோரியத்தில் நிரந்தரமாக வைத்து இவர்களுக்கு வேலை கொடுப்பதற்குச் சாத்தியப்படாது. அவர்களுடைய 'ஜெனரல் கண்டிஷன்—கம்ப்ளீட்லி ப்ரீ ப்ரம் டியூபர்குளோஸிஸ்' என்று ரிப்போர்ட் வந்த பிறகு, அவர்களை எங்கெங்கே வேலைக்கு வைக்க முடியுமோ அங்கெல்லாம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தப் பயிற்சி இப்பொழுது தாம்பரம் சானிடோரியத்தில்தான் நடைபெறுகிறது.

Small-pox (Ramanathapuram district)

* 334 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU (on behalf of Sri V. SANKARAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any areas in Ramanathapuram district have been declared as affected by small-pox;

(b) if so, from when, and

(c) the steps taken by the Government to check the spread of this epidmic?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Yes.

(b) From the middle of July 1962.

(c) Panchayat Union Councils are empowered to take preventive and control measures against the outbreak of epidemics in their areas. Immediately on receipt of a report of the incidents of small-pox, the District Health Officer, Ramanathapuram, visited the infected areas and initiated preventive and control measures on behalf of the panchayat unions concerned. The panchayat unions appointed extra vaccination staff and carried out a mass vaccination and re-vaccination drive, besides taking other measures such as disinfection, isolation of cases, etc. Health Inspectors from State Epidemic reserve were deputed to augment the local staff. An ambulance van has also been diverted for small-pox duty at Paramakudi.

SRI R. V. SWAMINATHAN: The Hon. Minister while answering the first part of the question, viz., whether any areas in Ramanathapuram district have been affected by small-pox, said 'yes'. Am I to take it that it refers to the whole district or only some areas? If only some areas have been affected, may I know the names of those areas?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The areas affected by small-pox in Ramanathapuram district are as follows: Sivaganga, Tiruvadanai, Paramakudi, Ramanathapuram and Mudukulathur. Major number of cases were reported from Paramakudi. That is the reason why effective control and preventive measures have been taken in Paramakudi.

(b) if so, when?

THE HON. SRI V. RAMAIAH: (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்தப் பாலமானது மிகவும் குறுகலாக இருப்பதினாலும், பாலத்தின் மீது நாள் தோறும் ஆயிரக்கணக்கான பஸ்கள், லாரிகள் போவதால் இதை அகலப் படுத்துவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா: போக்குவரத்து வசதியைப் பொறுத்து எல்லாக் குறுகிய பாலங்களையும் அகலப்படுத்த வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமும், திட்டமும் கூட நிதி வசதிக்குத் தகுந்த முறையிலே எதை உடனே செய்யவேண்டும், எதைக் கொஞ்சம் தாமதம் செய்து செய்ய வேண்டும் என்ற முறையில் பல முடிவுகள் எடுக்கிறோம். இந்தத் திட்டம் இப்பொழுது எடுப்பதாக இல்லை.

* 336 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to widen and straighten the narrow bridge near Thoppur village on the Banares-Cape Comorin road; and

(b) if so, when?

THE HON. SRI V. RAMAIAH: (a) No.

(b) Does not arise.

Municipalities (Accounting system)

* 337 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to place on the Table of the House the list of the Municipalities in which accounts were found to be unsatisfactory during audit for the years 1958–59 and 1959–60; and the steps taken for improving the accounting system in the future?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 1958-59, 1959-60-ம் ஆண்டுகளில் தணிக்கை செய்தபொழுது கணக்குகளைத் திருப்திகரமாக வைத்து வரவில்லையென்று தெரிந்த முனிஸிபாலிடிகளின் பட்டியல் ஒன்று சபையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி முனிசிபாலிடிகளில் தற்பொழுது இருந்துவரும் கணக்கு முறைகளில் குறைபாடு எதுவும் இல்லை. ஆனால், அவை கணக்குகளை வைத்து வருவதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றத் தவறுவதனால்தான் குறைபாடுகள் எழுகின்றன. தணிக்கை ஆட்சேபணைகள், உதவிப் பரிசோதகரின் குறிப்புகள் ஆகியவற்றின் மூலம் கணக்குகளில் உள்ள குறைபாடுகளைக் கவனித்து அவை நீக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய குறைபாடுகள் மறுபடியும் ஏற்படாதபடி தகுந்த உத்தரவுகளும் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்றன.

திரு. சா. கணேசன் : 1958-59-ல் 15 முனிசிபாலிடிகளில் இவ்விதமாகத் தவறு நடந்தது என்று காணப்படுகிறது. 1959-60-ல் அந்த எண்ணிக்கை 27 ஆகப் பெருகியிருக்கிறது. அந்த 15 முனிசிபாலிடிகளில் 10 முனிசிபாலிடிகள் மீண்டும் திருந்தியதாகத் தெரியவில்லை. மறுபடியும் அந்த 27 எண்ணிக்கைக்குள்ளே அவைகளும் வந்துவிடுகின்றன. இம்மாதிரி நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் அந்த முனிசிபாலிடிகளில் உள்ள மானேஜர், அக்கௌண்டண்டுகள் ஒழுங்காக இல்லை என்பதுதான் என்பதை அரசாங்கம் உணர்கிறதா? அப்படி உணர்ந்தால், மானேஜர்கள், அக்கௌண்டண்டுகளை 3, 4, வருஷங்களுக்கு ஒரு முறை இடம் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 1962-ம் ஆண்டில் கோடைக்கானலில் மாநிலத்திலுள்ள கமிஷனர்கள் மகாநாடு நடத்தி, சர்க்காருடைய கவனத்திற்குச் சில சிபார்சுகளை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக சீப் எலக்டோரல் ஆபீஸர் இம்மாதிரி உள்ள தணிக்கைகளை எப்படி விருத்தி செய்வது, குறைகளை எப்படி நீக்குவது என்பதற்குப் பல அபிப்பிராயங்களைக் கூறியிருக்கிறார்கள். கன்கரெண்டு ஆடிட் ஸிஸ்டத்தை முதல் கிரேட் முனிஸிபாலிடிகளுக்குப் புகுத்தலாமா என்றும், பஞ்சாயத் யூனியன் ஆடிட் செய்வது போல மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இரண்டாவது, மூன்றாவது கிரேட் முனிசிபாலிடிகளை ஆடிட் செய்யலாமா, ஸ்பெஷல் ஸ்குவாட் போட்டு இந்தத் தணிக்கைகளை சீர்திருத்தம் செய்யலாமா என்றெல்லாம் பல திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அப்பொழுது கனம் அங்கத்தினர் தெரிவித்த அபிப்பிராயத்தையும் சேர்த்துப் பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

9-00 a.m. **திரு. ஆ. தங்கவேலு** : கணக்குகள் சரியாகக் கொடுக்கவில்லை என்ற பட்டியலிலுள்ள முனிசிபாலிடிகளில் எந்த நகராட்சி மன்றம் முதல் பரிசு வாங்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனியாகக் கேள்வி போட்டால், பதில் அளிக்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் அமைச்சர் அவர்கள் வழங்கிய பதிலில், திருநெல்வேலி, திண்டிவனம், புதுக்கோட்டை, நாகப்பட்டிணம், பொள்ளாச்சி, குறிச்சி போன்ற முனிசிபாலிடிகளில் 1958-59-ல் கணக்குகளில் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதேமாதிரி 1959-60-லும் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த முனிசிபாலிடிகளிலுள்ள கணக்கு வைப்பவர்களை மாற்றுவதற்கான யோசனை இருக்கிறதா? தொடர்ந்து அவர்களையே வைத்திருப்பதனால் தானே, இம்மாதிரி ஏற்படுகிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்த பிறகு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : 1959-ல் எந்த முனிசிபாலிட்டிகள் சரியாகக் கணக்குகள் கொடுக்கவில்லையோ, அவைகள்தான் 1960-லும் சரியாகக் கணக்குகள் கொடுக்கவில்லை. உதாரணத்திற்கு, நாகப்பட்டிணம், புதுக்கோட்டை முனிசிபாலிடிகளைச் சொல்லலாம். தொடர்ந்து அதே அக்கவுண்டண்டுகள் இருப்பதால், இந்த நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்களை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : திரு. சா. கணேசன் எழுப்பிய கேள்வியும் அதுதான். இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்த அபிப்பிராயமும் சேர்த்துப் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Polio vaccine

* 338 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to manufacture live virus polio vaccine in the State; and

(*b*) if so, the place chosen for the purpose?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (ஆ) இது விஷயமாக அரசாங்கத்தினிடம் தகவல் ஏதுவுமில்லை.

திரு. எஸ். மாதவன் : இந்த மருந்தைக் கண்டுபிடித்தவர், சென்னை மாநிலத்தில் இதை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று மத்திய அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்திருப்பதாகக் கூறியிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : இதைப்பற்றித் தகவல் ஒன்றுமில்லை. சென்னையில் உற்பத்தி செய்வதில் கஷ்டம் இல்லை. இங்கே கிண்டி இன்ஸ்டிட்யூட் இருக்கிறது. தகவல் இல்லாத காரணத்தினால் பதில் அளிக்க முடியவில்லை.

Vanamahotsava

* 339 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the year in which Vanamahotsava festival was inaugurated;

(b) the expenditure incurred annually in connection with the celebrations; and

(*c*) the results it has produced?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 1950.

(*b*) A sum of Rs. 1,000 is sanctioned annually for each district for expenses connected with the Vanamahotsava festival. The particulars of actual expenditure incurred in each year are not readily available.

(*c*) The particulars of number of trees planted and survived from 1957 to 1960 are given below :

Year.	Number of trees planted.	Number of trees survived.
1957	*2,634,576*	*1,390,067*
1958	*3,292,925*	*1,462,875*
1959	*2,680,328*	*1,208,682*
1960	*4,610,140*	*1,382,929*
1961	*3,548,697*	Particulars not available.

(அ) 1950-ம் ஆண்டு.

(இ) வன மகோற்சவ விழாச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 அனுமதிக்கப் படுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் செய்த செலவு விவரங்களை உடனே கொடுப்பதற்கில்லை.

(உ) 1957 முதல் 1960-ம் ஆண்டு வரை நட்ட மரங்கள், பிழைத்த மரங்கள் ஆகியவைப்பற்றி விவரங்கள் வருமாறு :—

ஆண்டு.	நட்ட மரங்கள்.	பிழைத்த மரங்கள்.
1957	2,634,576	1,390,067
1958	3,292,925	1,462,875
1959	2,680,328	1,208,682
1960	4,610,140	1,382,929
1961	3,548,697	புள்ளி விவரங்கள் இப்பொழுது இங்கு இல்லை.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : நட்டுப் பிழைத்த மரங்களிலே வெட்டப்பட்ட மரங்கள் எவ்வளவு என்ற கணக்கு இருக்கிறதா? (சிரிப்பு).

கனம் திரு. பூ. கக்கன் : வெட்டப்பட்ட மரங்களுக்குக் கணக்கு இல்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் கூறின பதிலில் வைத்த மரங்கள், பிழைத்த மரங்களுக்குத் தகவல் கொடுத் தார்கள். பிழைத்த மரங்களிலே பலன் தரக்கூடிய மரங்கள் எவ்வளவு என்பதற்குக் கணக்கு இருக்கிறதா?

கனம் சபாநாயகர் : பலன் என்றால், எதைப்பற்றி கனம் அங்கத்தினர் கேட்கிறார்கள்? நிழல் தருகிறதைப்பற்றியா அல்லது காய், கனிகள் கொடுப்பதைப்பற்றியா?

கனம் திரு. பூ. கக்கன் : பிழைத்த பெரிய மரங்கள்தான் நிழல் தரும், பலன் தரும். சில கன்றுகளாக இருக்கின்றன. அவை நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

திரு. கரு. சிமைச்சாமி : பொதுவாக, வைத்த மரங்களில் பாதிக்கு மேல் செத்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவ்வாறு செத்துவிட்டதற்குக் காரணம் என்ன?

கனம் சபாநாயகர் : வேர் காய்ந்துபோய் இருக்கும். (சிரிப்பு).

கனம் திரு. பூ. கக்கன் : குழந்தைகள்கூட செத்து விடுகின்றன. செத்ததற்காக மறு கல்யாணம் பண்ணாமல் இருக்க முடியுமா? (சிரிப்பு).

(The hon. Member, Sri Saw. Ganesan, was found clapping his hands in the Chamber.)

MR. SPEAKER : Probably, the hon. Member, Sri Saw Ganesan, forgets that he is sitting in the Assembly and participating in the deliberations of the House.

கனம் திரு. பூ. கக்கன் : சில மரங்கள் நோய்கள் கண்டு செத்து விடுகின்றன. அதற்காக மரம் நடுவதை நிறுத்திவிட முடியுமா?

திரு. ஜே. மாதா கவுடர் : கிராமப்புறங்களிலுள்ள சாலை மரங்களில் ஆடுமாடுகளை மேய விடுவதனால், பெரும்பாலான மரங்கள் செத்து விடுகின்றன. காங்க் கூலிகளை நம்பி இந்த மரங்களை வைப்பதனால், சேதம் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, இதற்கென்று வாச்மென்களை நியமித்து, தண்ணீர் ஊற்றிக் காப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ரோடுகளில் வேலை செய்கின்ற சிப்பந்திகள் இதையும் கவனித்து வருகிறார்கள். வெயில் காலங்களில் தனியாக ஆட்களைப் போட்டு, தண்ணீர் ஊற்றவேண்டுமென்றால், அதையும் செய்து வருகிறோம். மற்ற இடங்களில் காங்க் கூலிகளே செய்து வருகிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்களுடைய பதிலில், ஒவ்வொரு வருஷமும் இலட்சக்கணக்கான மரங்களை—முப்பது லட்சம், நாற்பது லட்சம் என்கிற அளவில்—வைப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மரங்கள் பூராவும் தழைத்திருந்தால் தமிழ்நாடே ஒரு காட்டுப் பிரதேசமாக மாறியிருக்காதா?

கனம் திரு. பூ. கக்கன் : காட்டுப் பிரதேசமாக மாறியிருக்காது. குளிர்ந்த பிரதேசமாக இருக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : செடிகள் நடுவதற்கு மட்டுமே முயற்சி எடுக்கப்படுகிறதா? அல்லது நட்ட செடிகளையெல்லாம் காப்பாற்றுவதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுகின்றனவா? அப்படி எடுக்கப்படுகின்றன என்றால், என்னென்ன முயற்சிகள்?

கனம் திரு. பூ. கக்கன் : நடுகிற செடிகளைக் காப்பாற்றுவதற்காகத்தான் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. செடிகள் பத்திரமாகக் காப்பாற்றப்படுவதற்காக, செடியைச் சுற்றிலும் மூன்

வேலிகள் பல இடங்களில் கைக்கொடுகின்றன. கட்டாந் தரையாக இருக்கும் ஊருகில் இடங்களில் சில செடிகள் தழைத்திருக்காமல் பட்டுப்போய் இருக்கலாம். மண் வளம் செழிப்பாக இருக்கிற இடங்களில் செடிகள் நன்றாக தழைத்திருக்கின்றன. சிற்சில இடங்களில் சில குறைகளும் இருக்கின்றன என்றும் தெரிகிறது.

திரு. ம. கமலநாதன் : மரம் நடு விழாவா ? செடி நடு விழாவா ? மரத்தைப் பிடுங்கி நட முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : செடிகளை வைத்துத்தான் மரமாக்க வேண்டும். அதனுல்தான் 'மரம் நடு விழா' என்று சொல்கிருேம்.

திரு. எம். எஸ். மணி : அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து நட்ட மரங்களைவிட, பட்ட மரங்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. பட்டுப் போகாமலிருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : நட்ட செடிகளெல்லாம் நன்ருகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையில்தான் தண்ணீர் விடுவதும். வேலி போடுவதும், இதெல்லாம் நடந்துகொண்டு வருகிறது. நான் சற்று முன்பு சொன்னபடி, சில இடங்களில் செடிகளுக்கு ஏற்படும் நோய் காரணமாகவோ, அதிக வெயில் காரணமாகவோ நட்ட செடிகளில் சில செத்துப் போகின்றன. செடிகளைக் காப்பாற்ற எவ்வளவோ பிரயத்தனம் செய்கிருேம். என்ருலும், சில சமயங்களில் சேதம் ஏற்படுகிறது. சில வருஷங்களில் நட்ட மரங்களைக் காட்டிலும் பட்ட மரங்கள் ஜாஸ்தி இல்லை.

திரு. மு. சண்முகம் : செடிகளை நடுவதற்குச் செலவினங்கள் குறிப்பிடப்பட்டது. இது அமைச்சர்கள் ஆங்காங்கு சென்று செடி நடுவதற்காக ஏற்பட்ட செலவா ? அல்லது ஆங்காங்கு பிரதேசவாரியாக உள்ளவர்கள் செடிகளை நட்டு வன மகோற்சவ விழா கொண்டாடுவதற்கு அரசினர் செய்த செலவா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த விவரம் என்னிடம் இல்லை. ஜில்லாவாரியாக நிதி ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. கருணாநிதி : 'செடி நடுவதற்குத்தான் அரசினருடைய உத்தரவு இருக்கிறதே தவிர, அதை வளர்ப்பதற்கு உத்தரவு எதும் வரவில்லை' என்று சில அதிகாரிகள் கேட்கிற நேரத்தில், கூறுகிருர்களே, அது சர்க்காருக்குத் தெரியுமா ? அது உண்மைதானு ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த அதிகாரியும் அம்மாதிரி சொல்லியிருக்கமாட்டார். எந்த அதிகாரியாவது சொல்லியிருக்கிருர் என்ருல், அவர் மரத்தைப் பாதுகாப்பதற்குரிய அதிகாரியாக இருக்கமாட்டார்.

திரு. மு. பொ. வடிவேல் : பஞ்சாயத்து யூனியன் இரண்டு பங்கும், பஞ்சாயத்து ஒரு பங்கும் போட்டுச் செடி வளர்க்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனுல், சில பஞ்சாயத்துக்களுக்குப்

போதுமான வருமானம் இல்லாத காரணத்தால்; தண்ணீர் ஊற்றப் படுவதும் திடீரென்று நிறுத்தப்படுகிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அப்படியானுல், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய இலாகா மந்திரி என்ற முறையில் கனம் அங்கத்தினருக்கு நான் சொல்கிறேன்—மரம் நடுவிழாவில் அதிகமாகப் பங்குகொண்டு, அவற்றை வளர்ப்பதில் பஞ்சாயத்துக்கள் முதலில் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்களே கூடுதலாகச் செலவழித்து, செடிகளைக் காப்பாற்றி, ஊருக்கு நன்மை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : முன்பெல்லாம் மரம் நடுகின்ற விஷயங்களைத் தனிப்பட்டவர்கள் கவனித்துவந்தார்கள். முன்பு 2- C பட்டா வழங்கியதன் காரணமாக கிராமங்களில் பலதரப் பட்ட பலன் தரும் மரங்கள் இப்பொழுது அதிகமாக வளர்ந்திருக் கின்றன. அதுபோலவே, புறம்போக்கு நிலங்களில் தனியார் மரம் நட்டால் 2- பட்டா வழங்க அரசாங்கமும் முன்வருமா ? சாலையோரங்களில் பழ மரங்கள்—புளிய மரங்கள் போன்றவை—வைக்கும் வகையில் 2-C பட்டா தரவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ? அப்படி உத்தரவு பிறப்பித்தால், மரங் களை அதிகமாக வளர்க்கவும், அதன் மூலம் அரசாங்கத்திற்கு இம் மாதிரி மரங்களை வளர்க்கச் செலவு ஏற்படாமலும் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிருர்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : 2-C பட்டா பல இடங்களில் கொடுக் கப்பட்டு, விவசாயப் பெருமக்கள் மரங்களை நட்டு வருவது கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். சில இடங்களில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்ததனுல் அவர்கள் பாதுகாத்து இருக்கலாம். அதற்காகத்தான் பஞ்சாயத்துச் சட்டப்படி, பஞ்சா யத்து யூனியனில் உள்ள புறம்போக்கு இடங்களில் எல்லாம் மரங் களை நட்டு, நல்லமுறையில் வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. வெறும் நிழல் கொடுக்கும் மரங்கள் மட்டுமல்ல. பசுந்தாள் உரத்திற்கேற்ற மரங்களும் உண்டாக்க வேண்டும் என்பதற்காக, தனிப்பட்டவர்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுப்பதோடு பஞ்சாயத்துக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ர. சம்பங்கி : 'சர்க்கார் நட்ட மரங்கள் இவ்வளவு, பிழைத்த மரங்கள் இவ்வளவு' என்ற கணக்கை அமைச்சர் அவர் கள் தந்தார்கள். அதிலும் குறிப்பாக, அமைச்சர்கள் நட்ட மரங்கள் எத்தனை ? அவற்றில் பிழைத்த மரங்கள் எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : அமைச்சர்கள் பலவிடங்களில் சென்று மரம் நடு விழாவில் கலந்துகொள்ளுகிருர்கள். நாங்கள் நட்ட மரங்களில் எத்தனை செத்தது, எத்தனை பிழைத்தது என்பதற்கான

திரு. சா. ராமசாமி: அதிக மரங்கள் நடுகின்ற தனிப்பட்டவருக்கோ பஞ்சாயத்துக்கோ பரிசு கொடுக்கப்படும் என்கிற திட்டம் இருக்கும் காரணத்தால், சில இடங்களில் அதிகமான மரங்களை நட்டதாகத் தவருன கணக்குக் கொடுக்கப்படுகிறது, நட்ட மரங்கள் பூராவும் இரண்டு, மூன்று ஆண்டுகள் நன்ருக வளர்ந்த பிறகு, மரங்களை உயிரோடு காட்டுகிறவர்களுக்குத்தான் பரிசுகள் தரப்படும் என்ற திட்டம் கையாளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்கிற யோசனை நல்ல யோசனைதான். அம்மாதிரி இருந்தால், மூன்று ஆண்டுகள் காத்திருந்துதானே சன்மானம் வாங்க வேண்டும் என்று நினைத்து சிலர் மரம் நட முன்வராமல் இருந்துவிடக்கூடும். இப்பொழுதிருக்கும் முறையே நல்லது.

திரு. கோ. சி. மணி: நடப்பட்ட மரங்கள் பட்டியலில், சாலை ஓரங்களில் நடப்பட்ட ஆல மரக் கிளைகளும், தென்னம் பிள்ளைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய இலாகாவினுல் எந்த எந்த இடங்களில் மரங்கள் நட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ, அந்தப் புள்ளி விவரம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாலை ஓரங்களில் ஆலங் கிளைகள் நடுவது போன்றதை பி. டபிள்யூ. டி. கவனிக்கிருர்கள். விவசாய இலாகா சம்பந்தப்பட்ட மட்டில்தான் நான் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறேன்.

புலவர் திரு. கா. கோவிந்தன் : நட்ட மரங்கள், பட்ட மரங்கள் பற்றிக் கணக்கை அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். தமிழகம் முழுவதும் அரசாங்கப் பொறுப்பில் இருக்கக்கூடிய மொத்த மரங்களின் எண்ணிக்கை கொடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த எண்ணிக்கை விவரம் என்னிடம் இல்லை. எண்ணிக்கையைச் சேகரிக்கவே சர்க்காருக்கு அதிகச் செலவாகும்.

திரு. எஸ். பொன்னுசாமி : இப்படி நடப்படும் மரங்களில் பனை மரம் சேர்க்கப்பட்டிருக்கிறதா ? செலவு இல்லாமலே அதிகப்படியாக லாபம் கொடுக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? பனை மரம் வளர்க்க ஊக்கம் அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த எந்த இடங்களில் எந்த எந்த மரத்தை வைத்தால் பலன் தரும் என்று பார்த்துத்தான் மரங்கள் வைக்கிருர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : வன மகோற்சவ வாரத்தில் தனிப்பட்ட நபர்களும், பஞ்சாயத்து யூனியன்களும், வன இலாகாவினரும், ஆகிய இம்மூன்று துறைகளிலும், நட்ட மரங்களின் கணக்கைத்தான் கனம் அமைச்சர் அவர்கள் தந்திருக்கிருர்களா ? அல்லது, அரசாங்கத்தின் மூலமாக மட்டும் இந்த அளவு மரங்கள் நடப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : வன மகோற்சவ விழாவிலே நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கையும், பிழைத்த மரங்களின் எண்ணிக்கையும்தான் நான் கொடுத்தேன். எந்த எந்தப் பகுதியில், எந்த எந்த இலாகாவால் எத்தனை எத்தனை மரங்கள் நடப்பட்டன என்று விவரம் வேண்டுமானுல், கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்கலாம்.

SRI C. CHIRANJEEVULA NAIDU : Sir, as goats are mostly proving to be a menace to the growth of the trees, is there any proposal under the consideration of the Government to regulate the grazing of these goats and specify the places of grazing and also vest powers with the panchayat unions to regulate the grazing of goats?

கனம் திரு. பூ. கக்கன் : வெள்ளாடுகளை மேய்க்க இடம் ஒதுக்குவதுபற்றி பஞ்சாயத்து யூனியன்கள் முடிவு செய்வார்கள். ஆனுல், இதுபற்றி அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. ஆர். ரங்கசாமி : மரம் நடு விழாவில், வேப்ப மரம், ஆல மரம் போன்ற அனுவசியமான மரங்களை, பிற்பாடு வரும்படி தராத மரங்களை உண்டாக்குவதற்குப் பதிலாக, பயன் தரும் மரங்களை நடுவதற்குச் சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பலன் தரக்கூடிய மரங்களை நடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துவருகிறது. பழ மரங்கள், இலைகளைத் தரக்கூடிய மரங்கள், பசுந்தாள் தரும் செடிகள் ஆகியவற்றை வளர்ப்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அவற்றைத் தவிர, புளிய மரம், வேப்ப மரம், ஆல மரம் வளர்க்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு. ர. சம்பங்கி : அந்தந் தொகை செலவழிக்கப் படுகிறதே ஒழிய, பட்டம் பார்த்து நடப்படுவதில்லை. அதனுல் செடிகள் வளராமல் போகின்றன. பட்டம் பார்த்து நடுவதற்குச் சர்க்கார் பஞ்சாயத்துக்களுக்கு யோசனை கூறுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பட்டம் பார்த்து நடும்படியாகத்தான் சொல்லப்படுகிறது. வன மஹோத்ஸவ உற்சவம்கூட பட்டம் பார்த்துத்தான் கொண்டாடுகிறேம்.

திரு. சா. கணேசன் : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளியில் இருந்து தேய்பிறையாகக் கணக்கு வருகிறதே தவிர வளர்வதை காணேம்.

கொள்ளலாம் என்பதைச் சிந்தித்து, பலன் தரக்கூடிய நிலைமை ஏற்படச் செய்யும் வகையில் அரசாங்கம் போதிய அக்கறை செலுத்துமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக்கொண்டுதான் வருகிறது.

கனம் சபாநாயகர் : அமாவாசைக்கு பிறகு வளர் பிறை வரும்.

திரு. சா. கணேசன் : அப்படி என்றால் முழுவதும் பட்டுப்போன பிறகா ?

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : மரம் நடுவதற்கு பயிற்சி பெற்றவர்களை வைத்து நடாமல், மந்திரிகள் போகிற போக்கில் மரங்களை நடுவதால்தான் அவை பட்டுப் போகின்றன என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் மரம் நடும் விழாவில் கலந்து கொண்டே இருக்க மாட்டார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. காரணம் மந்திரிகள் போவதற்கு முன்னாலேயே அங்கே விவசாயத்தில் நல்ல அனுபவம் பெற்ற விவசாய இலாக்கா அதிகாரிகள் அங்கு இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் முன்னிலையில்தான் மந்திரிகள் மரம் நடுகிறார்கள்.

திரு. எஸ். முருகையன் : செடிகள் பாதுகாப்புக்காக வேண்டி மாவட்ட ரீதியாக ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்த தொகை எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்த தொகை இங்கு இல்லை. இருந்தாலும் 1960-லே ஜில்லா வாரியாகச் செலவு செய்த கணக்கு இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

ராமநாதபுரம்—679.75.	சேலம்—521.16.
கன்னியாகுமரி—540.60.	கோயம்புத்தூர்—425.
தஞ்சாவூர்—608.12.	திருநெல்வேலி—420.25.
நீலகிரி—438.99.	வட ஆற்காடு—700.76.
செங்கல்பட்டு—1,000.	திருச்சி—887.95.
சென்னை—556.87.	

தென் ஆற்காடு, மதுரை மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் விவரங்கள் இல்லை.

மரமும் பட்டுப்போவதால் நூறு மரம் நட்டு நூற்றில் ஒரு மரம் பட்டு விட்டது பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்து இருக்கிறதா ? இதை தவிர்க்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு மரத்தில் இருந்தே நூறு கிளைகள் வெட்டுவதற்கு எந்த அதிகாரியும் முற்பட மாட்டார்கள்.

திரு. டி. பி. ஏழுமலை : கனம் சபாநாயகர் அவர்களே, நட்ட மரம் பட்ட மரம் கணக்குப்பற்றிக் கேட்பதில் அக்கறை காட்டிய எதிர்க் கட்சிக்காரர்கள் நட்ட மரம் எவ்வளவு என்று கணக்கு வைத்து இருக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எதிர்க்கட்சிக்காரர்கள் நட்ட மரம் என்று எப்படி கணக்கு எடுக்க முடியும் ?

தேசிய பெருஞ்சாலைகளிலுள்ள மரங்கள்.

* 340 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் அமைந்துள்ள தேசிய பெருஞ்சாலைகளில் வைக்கப்பெற்றுள்ள மரங்கள் முறையே ஆண்டுதோறும் குத்தகைக்கு விடப்படுகின்றனவா ?

(இ) ஆம் என்றால், இதனால் 1960, 61, 62 ஆண்டுகளில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ)

ஆண்டு. (1)	வருமானம். (2) ரூ.
1959-60	90,316·09
1960-61	1,06,904·37
1961-62	1,17,945·70

திரு. முனு. ஆதி : தேசியப் பெரும் சாலைகளிலுள்ள மரங்களை பஞ்சாயத்துக்களுக்கே குத்தகைக்குக் கொடுத்துவிட்டால் அதிலிருந்து அவர்களுக்கு வருமானம் அதிகரிக்கக்கூடும் என்பதை அரசாங்கம் உணருகிறதா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கக்கூடிய மரங்களைச் பஞ்சாயத்துக்களுக்குத்தான் கொடுத்திருக்கிறோம். அதனால்தான் நமக்கு வருமானம் குறைவாக இருக்கிறது.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, 10, 15 ஆண்டுகளுக்கு முன் சர்க்கார் மரங்களை என்ன குத்தகைக்கு விட்டார்களோ அதே குறைந்த தொகைக்குத்தான் இப்போதும் விடப்பட்டு வருகிறது. சாதாரணமாக இப்போது ஒரு விலை

புளி ரூ. 5-க்கு மேல் விற்கிறது. ஆகவே காலத்தை ஒட்டி மீண்டும் பரிசிலனை செய்து அந்தக் குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த உப-கேள்வி இதில் வராது. இது தேசிய நெடுஞ்சாலையிலுள்ள மரங்கள் பற்றிய வருமானத்தை குறிப்பிட்டது.

Vaigai Canal scheme

* 341 *Q.*—SRI V. SANKARAN :
SRI C. SRINIVASAN :
SRI K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the details of the proposed Vaigai Canal Scheme ; and

(*b*) when the scheme is proposed to be taken up and the approximate time limit within which the scheme will be completed?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) : After examination of the scheme, as originally proposed, in all its aspects, the Chief Engineer (Irrigation) has been asked to re-investigate it. The re-investigation is in progress. Details of the scheme will be available after the completion of the re-investigation and finalisation of proposals.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், 1962-63-லே வேலை துவங்கப்படும் என்று சென்ற ஆண்டில் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். ஆனால், எந்தவிதமான வேலையும் நடைபெறவில்லை. 1963-லேயாவது வேலை துரிதமாக நடப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தத் திட்டத்தைப்பற்றி இன்னும் ஒருசில நிமிஷங்களில் பேசப் போகிறோம். கனம் அங்கத்தினர் தன் யோசனையை சொல்லலாம். நானும் அதற்கு என் பதிலை அளிக்கிறேன். 1962-63-லே இதை எடுத்துக் கொள்வதாக நான் சொன்னதும் உண்டு. ஆயினும் ஏனோ, தானோ என்று இதை செய்து விடக்கூடாது, இதனால் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதிகப் பயன் ஏற்படக்கூடிய வகையில் இந்த வைகைத் திட்டம் அமையவேண்டும். ஆகவே இதை நன்றாகச் செய்ய வேண்டுமென்று நானேதான் தலையிட்டு, அதனால் அதிகமான பகுதிகள் நன்மை அடைய வேண்டுமென்ற வகையில் அந்தத் திட்டத்தை அமைக்க பரிசீலனை செய்யும்படி சொன்னேன்.

SRI R. V. SWAMINATHAN : May I know from the Hon. Minister what the Government expects from this scheme? May I know from the original investigation what is the benefit that they expect? May I also know what the cost of the scheme?

THE HON. SRI V. RAMAIAH : I am not in a position to say now what would be the cost. But our approach is that the Vaigai system as it is now should be perfected so that every drop that comes into Vaigai will be used. For that a real study has to be made. It has not been made for quite a long time. So investigation has to be done thoroughly so that extra acreage could be brought under cultivation, much more than the existing acreage under irrigation. That is our approach.

திரு. க. ர. நல்லசிவம் : இதை நஞ்சைத் திட்டமாகப் போடும் உத்தேசமா அல்லது புஞ்சைத் திட்டமாகப் போடும் உத்தேசமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : புஞ்சைத் திட்டங்கள் எல்லாம் நஞ்சைத் திட்டங்களாக மாறிக்கொண்டு இருக்கின்றன. இதை 'பர்பெக்ட்' பண்ண வேண்டும் என்பதுதான் நோக்கம்.

Stadiums for Municipal Towns

* 342 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether there is any proposal for the construction of Stadiums in Municipal owns; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI S. M. A. MAJID : (அ) No.

(இ) Does not arise.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE FIRE ACCIDENT IN SADAYANPALAYAM, SALEM DISTRICT. 9-30

SRI K. S. SUBRAMANIA GOUNDER : Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Works to a matter of urgent public importance, viz., the fire accident on 19th February 1963 in Sadayanpalayam, Konasamudram village, Salem district causing damages to more than 70 houses belonging to poor people rendering them homeless and the consequent sufferings caused to the public.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the night of 19th February 1963, there was a fire accident in Sadayanpalayam hamlet of Konasamuduram village, in Sankari taluk in which 64 houses were destroyed by fire. It is reported that about 9 p.m. on 19th February 1963 a spark came off from the oil lamp burning in the house of one Arakkaran and set fire to the roof accidentally. As there was wind then, the fire spread over easily to the neighbouring houses with the result that 62 houses were destroyed by fire and two houses were partly damaged. There was no loss of human life and the value of the property damaged in the fire accident is estimated to be about Rs. 26,700. The fire broke out

only accidentally and no foul play is suspected. The Tahsildar, Sankari, and the Block Development Officer, Konganapuram, made door to door collection of foodgrains and distributed them to the victims immediately. Out of 64 victims, 59 victims were given cash and clothing grants amounting to Rs. 2,280 and no relief was given to the remaining five victims as they are not entitled to any relief. The question of granting loans to such of the victims for reconstructing their houses is being examined by the Commissioner, Konganapuram Panchayat Union. I may, therefore inform the Member that necessary relief measures were taken to redress the sufferings of the victims of the fire accident.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

DEMAND NO. XXVI—IRRIGATION.
DEMAND NO. XLI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,24,89,300 under Demand No. XXVI—Irrigation'.

திரு. கோ. சி. மணி: கனம் சபாநாயகர் அவர்களே, என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 5,24,89,300 under demand No. XXVI—Irrigation be reduced by Rs. 100."

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 7,39,35,300 under Demand No. XLI—Capital Outlay on Irrigation.'

திரு. எஸ். முருகையன்: கனம் சபாநாயகர் அவர்களே, என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 7,39,35,300 under Demand No. XLI—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

I have got a list of 35 names with me. All of them want to speak on these Demands. As no one is prepared to give up his chance, I request each hon. Member to speak only for five or six minutes.

*** திரு. கோ. சி. மணி:** மாமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற மானியம் பாசனத்திற்கான செலவும், பாசன மூலதனச் செலவு என்ற முறையிலும் 5,24,89,300 ரூபாயும், 7,39,35,300 ரூபாயும் முறையே கோரப்பட்

டிருக்கின்றன. இப்படிப்பட்ட தொகைகளைச் செலவழித்து நாட்டிலே இருக்கக் கூடிய மிக முக்கியமான பிரச்னையான உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி வகுக்கும் முறையிலே திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. குறிப்பாக, பாசனத் திட்டம் என்பது மிக அவசியமானதொரு திட்டமாக இருந்தாலும் நடைமுறையில் எந்த அளவுக்குத் துரிதமாகச் செயல்படுத்தப்படுகிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். குறிப்பாக இந்தத் திட்டங்கள் அவசியமான திட்டங்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல் அவசர காலத்திலே நிறைவேற்றப்படக் கூடிய திட்டங்களாகவும் அமைந்திருக்கின்றன. ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கிற பகுதிகளிலே ஓடிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக நாலைந்து மாதங்கள் தண்ணீர் ஓடுகின்றன. ஐந்தாறு மாதங்கள் தண்ணீர் வற்றிவிடுகின்றன. பாசனத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பிறகு அவை சரியான படி பரிபாலிக்கப்படுவதில்லை. திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு அவை அப்படி அப்படியே விட்டுவிடப்படுகிறபடியால், பல இடங்களில் பாசன வசதிகள், குறிப்பாக சிறு பாசனத் திட்டங்கள் மிகவும் சீர்கேடுற்றிருக்கின்றன.

ஆரம்ப காலத்தில் 1934-35-ல் கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதிலிருந்து இன்று வரையில் பார்த்தால் பழைய திட்டங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதே இல்லை. தூர் எடுக்கவேண்டிய இடங்கள், அகலப்படுத்த வேண்டிய இடங்கள், அப்படி அப்படியே இருக்கின்றன. ஆறுகள் ஆரம்ப காலத்தில் இருந்த நிலையிலேயே இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த நான்கு ஐந்து ஆண்டு காலமாக புகார்களை எழுதி அரசாங்கத்திற்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறோம். சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் செப்பனிடப்படவில்லை என்ற புகார் மனுக்கள் என்னுடைய தொகுதியிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன. என்னுடைய தொகுதியில் அம்மையப்பன், வாண்டையாயிருப்பு, மாவத்திருப்பு, பரவஊர், திருவள்ளியங்குடி, பாலாறு, திருக்கோடிக்காவல், கீழமருத்துவக்குடி, சிற்றிடையாநல்லூர், மகாராசபுரம், உத்தரை, வானாபுர வட்டம், ஆலமங்குறிச்சி ஆகிய கிராமங்களிலிருந்து அரசாங்கத்துக்கு நீர்ப்பாசனம் சம்பந்தமாய் மகசர்கள் அனுப்பப்பட்டுள்ளன. சிறுபாசனத்திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டும், மதகுகளைப் பழுது பார்த்துத் தரவேண்டும், 'பெட் டாம்கள்' இல்லை, ஐந்தாறு கிராமங்களுக்கு வாய்க்கால் இல்லை என்று பல புகார் மனுக்களை அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவற்றின் பேரில் எந்தவிதமான பரிசீலனையும் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 1958-ம் ஆண்டுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி நிலம் முதல் போகம், இரண்டாம் போகம் ஆகிய நிலங்களின் கணக்கை எடுத்துக்கொண்டால், நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்திற்கு

ஏற்கெனவே 10 ஏக்கர் இரண்டு போக சாகுபடி நடந்து கொண்டிருந்த நிலமாக இருந்தால், இப்போது அது 30 ஏக்கர் என்ற அளவுக்கு மாறியிருக்கிறது. அது மூன்று பங்காகக் கூடி இருக்கிறது. இப்போது இருபோக சாகுபடி, முப்போக சாகுபடி கூட நடந்து வருகிறது. 1935-ல் விடப்படுவதாகக் கருதப்பட்ட தண்ணீர் கல்லணையில் வரலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றையதினம் முழுத் தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. அப்படி வருவதற்கான அகலம் ஆறுகளிலே நிச்சயமாகக் கிடையாது.

என்னுடைய தொகுதியில் வீர சோழர் என்ற ஆறு காவேரியில் பிரிந்து வருகிறது. மணச்சேரி என்ற ஊரில் அந்த ஆறு பிரிகிறது. அந்த ஆற்றில் 1,401 கன அடி தண்ணீர் விடுவதாக நமது இலாகாவினர் தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆற்றுப் பாசனத்திலிருந்து 66,150 ஏக்கர் சாகுபடி செய்யப்பட வேண்டுமென்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆறு மணஞ்சேரியில் 51-வது மைல் 6-வது பர்லாங்கில் பிரிகிறது. இந்த ஆறு ஆரம்பிக்கிற இடத்தில் 130 அடி இருக்கவேண்டுமென்று 1934-35 கணக்கில் பதிவேட்டில் காணப்படுகிறது. இப்போது அதை அளந்து பார்த்தால் 100 அடி இருப்பதே சந்தேகமாக இருக்கிறது. நான் அதை இரண்டு வாரங்களுக்கு முன்னால் அளந்து பார்த்தேன். அந்த ஆற்றின் 62-வது மைல் 4-வது பர்லாங்கில் 90 அடி அகலம் இருக்கவேண்டும். தற்போது அதை அளந்து பார்த்ததில் 68 அடி அகலந்தான் இருக்கிறது. அந்த ஆற்றின் 67 மைல் 1 பர்லாங்கில் 90 அடி இருக்கவேண்டும். அதற்குப் பிறகு 70 அடியாவது இருக்கவேண்டும். அந்த இடங்களை அளந்து பார்த்தால் 55, 60 அடிதான் இருக்கின்றன. இதெல்லாம் எங்கே போயிற்று? அதையெல்லாம் தனிப்பட்ட சொந்தக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கு இப்போது வாழைக் கொல்லைகள் காட்சியளிக்கின்றன, மிளகாய் தோப்புகள் காட்சியளிக்கின்றன, சவுக்குத் தோப்புகள் காட்சியளிக்கின்றன. ஆக அங்குள்ள ஆறுகளில் இட நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றன. அப்படியே குடகுமலையில் மழை பெய்து மேட்டூரில் தண்ணீரை தேக்கி காவேரியில் திறந்துவிட்டாலும் அந்த தண்ணீர் வரவேண்டிய அளவிற்கு அந்த ஆற்றில் பழைய அகலம் இல்லை. அடிக்கடி அங்கு தூர் எடுக்கிறார்கள் என்று கூறினாலும், அது எப்படி எடுக்கிறார்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு காண்ட்ராக்டரிடம் வேலையை ஒப்படைத்து இவ்வளவு ஆழம் தோண்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் அதிலிருந்து மணலை எடுத்து அதை கரைகளிலேயே கொட்டி விடுகிறார்கள். அப்படி இரு கரைகளிலும் மணல் கொட்டப்பட்டு ஒரு மழை வந்தால் அம்மணல் திரும்பவும் ஆற்றில் விழுந்து அது இன்னும் அதிகப்படியாய் மேடிட்டு விடுகிறது. ஆகவே அகற்றப்படுகிற மணலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர்ப்புறத்திற்கு பக்கத்தில் கொட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் அதை கட்டடங்கள் கட்டக் கூட உபயோகித்து விலைக்கு வாங்கிக் கொள்வார்கள். அதோடு அந்த

ஆற்றில் மேடாகாமலும் பார்த்துக் கொள்ளலாம். அடுத்து, கரைகள் அரிக்கப்பட்டு அவை பாழ்பட்டுப் போகாமல் இருப்பதற்காக ரிவெட்மென்ட்ஸ் கட்டப்படுகின்றன. அப்படி ரிவெட்மென்ட் கட்டப்படும்போது பத்தடி அகலம் இருந்த கரை ஐந்தடி அரிக்கப்பட்டிருந்தால் அந்தக் கரையை மீண்டும் பத்தடியாக்கி கரையை வலுப்படுத்த ஆற்றிலுள்ள மணலை அள்ளிக்கொட்டி அகலப்படுத்தி அந்த மணல் மேல் கல்லை அடுக்கி ரிவெட்மென்ட் கட்டுகிறார்கள். அப்படிப்பட்ட ரிவெட்மென்ட் கட்டப்பட்டது. அதன் அடியில் இருக்கிற மணல் அரிக்கப்பட்டு அந்த ரிவெட்மென்ட் மணல் எல்லாம் கரைந்து தொத்திகூடாக நிற்கிறது. அந்த ரிவெட்மென்டுக்கு அடியில் ஆளே குடியிருக்கலாம் போல் இருக்கிறது. ஆகவே நான் கூறுவது என்னவெனில் அந்த மண்ணோடு சேரக்கூடிய மண்ணைக் கொண்டு, நல்ல மண்ணைக் கொண்டு போட்டு பின்னர் ரிவெட்மென்ட் கட்டப்படவேண்டும். இதில் அரசு போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ரெகுலேட்டர்கள் பழைய காலத்தில் கட்டப்பட்டதும் இருக்கிறது, புதிதாகக் கட்டப்பட்டதும் இருக்கிறது. அந்த ரெகுலேட்டர்களை காலாகாலத்தில் பழுது பார்ப்பதில்லை. தண்ணீர் நின்றவுடன் உடனடியாக, ஏற்பட்டிருக்கிற பழுதைப் பார்த்து நிவர்த்திப்பதில்லை. நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்கவேண்டும், சிறிய பாசனத் திட்டத்தின் கீழ். இப்போது அப்படி எடுத்துக் கொள்ளப்படுவதில்லையென்று நான் குறை கூற விரும்புகிறேன். மாயவரம் வட்டத்தில் வீரசோழன் ஆற்றில் மஞ்சளாறு பிரிகிறது. 67-வது மைலில் பிரிகிறது. அப்படிப் பிரிகிற இடத்தில் ஒரு தலைப்பு இருக்கிறது. அந்த தலைப்பில் 58-ல் என்று நினைக்கிறேன், நான்கு கண்மாய்கள் உள்ள புதிய ஒரு ரெகுலேட்டர் கட்டப்பட்டது. கட்டி ஒரு ஆண்டு முடிந்ததும் அந்தப் பலகையை இழுத்தால் மேலே ஏறுவதில்லை. அப்படி ஏறினாலும் அது கீழே இறங்குவதில்லை. இப்போது கீழே இறங்கி அப்படியே இருக்கிறது. அடுத்த ஆண்டு அதைப் பழுது பார்த்தார்கள். அதற்கு அடுத்த ஆண்டு, நான் ஒரு 25 நாட்களுக்கு முன்பு பார்த்தேன், அப்படியே கிடக்கிறது. அதேபோல் மஞ்சளாற்றில் மல்லியம் புகைவண்டி நிலையத்திற்கு எதிர்த்தாற்போல் அசக்காடு, மல்லியம், மரையூர் போன்ற ரெவின்யூ வில்லேஜஸ் இருக்கின்றன. அங்கு சுமார் 700 ஏக்கர்களுக்கு மேல் தண்ணீர் பாயக்கூடிய அளவில் ரெகுலேட்டர் இருக்கிறது. அதில் மூன்று கண்வாய்கள் இருக்கின்றன. அதில் ஒரு கண்வாய் பழுதடைந்திருப்பதால் தண்ணீர் அதன் வழி பாயாது எக்கல் அடித்து அது மேடாகிக் கிடக்கிறது. 3½ ஆண்டு காலமாக அது பழுதடைந்து கிடக்கிறது, அதை இன்னும் பழுது பார்க்கவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் அதில் போதிய கவனம் செலுத்தி அதைப் பழுது பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சிறிய கலுங்குகள், மதகுகள், பெட் டாம்ஸ் போன்றவை கட்டுகிறார்கள். அவை எந்த நோக்கத்துடன் கட்டப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறுவதாக இல்லை. காரணம் தண்ணீர் இன்மைதான். அதேபோன்றுதான்.

நிலைமையும். பலகை இருந்தால் கம்பி இல்லை, கம்பி இருந்தால் பலகை இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. என் தொகுதியில் இருக்கும் குறைகளை நாங்கள் அடிக்கடி எடுத்துக் கூறி வருகிறோம், அவற்றை கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். ஆடுதுறையில் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் கீழ் ஒரு விவசாயப் பண்ணை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலுள்ள பல சிற்றூர்களுக்கே தண்ணீர் சரியாக வராததால் சாகுபடி பாதிக்கப்படுகிறது. அதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். தண்டாயுதபாணி : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன். இந்த மான்யம் மிக இன்றியமையாத ஒன்று. நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் உணவு உற்பத்தியைப் பெருக்க வழி செய்வது இந்த மான்யம் என்று சொன்னால் அது மிகை யாகாது. நாம் எதிர்பார்த்தபடி ஆண்டுதோறும் பாசன வசதியைப் பெருக்கி நம் உணவு உற்பத்தியை நல்லமுறையில் பெருக்கி வருவதற்கு இந்த இலாகா நல்லமுறையில் பணி செய்திருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் பெரிய நீர்த்தேக்கங்களை எல்லாம் பெருமளவு நாம் கட்டி முடித்துவிட்டோம். அதோடு நாம் திருப்தி அடைந்து பாசன வசதியைப் பெருக்குவதை நிறுத்திவிடவில்லை. விசேஷ நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பத்து லட்சத்திற்கு உட்பட்ட வேலைகளை நாம் நிறைவேற்றி வருகிறோம். அடுத்தபடியாக, பெரிய ஏரிகள், குளங்கள் இவற்றை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி பாசன வசதி செய்து வருகிறோம். மூன்று இரிகேஷன் ப்ளானிங் சர்க்கிள் அமைத்து நதிதீரங்களில் நல்ல முறையில் ஆராய்ந்து ஒரு சொட்டு நீர் கூட பாழாகாமல் அதைப் பயன்படுத்த முயற்சி செய்து வருகிறோம். எனக்கு முன் பேசிய தஞ்சை ஜில்லா அங்கத்தினர் அவர்கள் ஓல்ட் டெல்டா பற்றி விரிவாகக் கூறினார்கள். என் பகுதியைப் பொறுத்த வரை, ஒரத்த நாடு, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி போன்றவை பழைய பாசன வசதி பெறாது 1932-ல் கல்லணையிலிருந்து ஒரு கால்வாய் பிரித்து பாசன வசதி கொடுக்கப்பட்டபோது 3 லட்சத்து ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அப்படி உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தபோதிலும் எதிர்பார்த்தபடி அப்பாசனத்திற்கு அப்பகுதி நிலங்கள் வாராததால் இடையே மேட்டூரில் ஒரு புதுக் கால்வாய் ஏற்படுத்தி பாசனவசதி ஏற்படுத்திக் கொடுத்திருப்பது எல்லோருக்கும் தெரியும். கல்லணைக் கால்வாய் பகுதியில் 3 லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் வருவது இன்னும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இப்போது ஒரு க்யூசெக் தண்ணீர் 60 ஏக்கருக்கு பாயும் என்று கணக்கிடப்படுகிறது. கல்லணை கால்வாய்

வசதி அளிக்கும் என்ற அடிப்படையில் திட்டமிட்டு வழங்கப்பட்டது. இப்போது அங்கு ஆயக்கட்டிற்குள்ள நிலத்திற்கு மேல் நிலங்கள் சாகுபடி செய்யப்படுவதால் போதுமான தண்ணீர் வசதி அங்கு இல்லை என்று கூறி போதிய தண்ணீர் கொடுக்க வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இதிலே நான் முன்பு சொன்னதைப் போல ஒரு க்யூசெக் வாட்டர் 73 ஏக்கருக்குப் பாய்வது என்ற நிலைமையை மாற்றி இப்போது அமைக்கும் திட்டங்களின் அடிப்படையில் ஒரு க்யூசெக் வாட்டர் 60 ஏக்கருக்குப் பாய்வதற்கு வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும்.

இரண்டாவதாக, கல்லணைக் கால்வாய் தலைப்பிலே மண் தூர்ந்து போதுமான அளவு தண்ணீர் எடுக்கவில்லை என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதை நிவர்த்தி செய்து கொடுத்தால் பாசன வசதி பெருக வாய்ப்பு இருக்கிறது. அடுத்து, கல்லணைக் கால்வாயில் அடிக்கடி மண் தூர்ந்து விடுவதால் தலைப்பை மாற்றி வேறு இடத்தில் கட்டுவதற்கு திட்டம் இருப்பதாக நான் கருதுகிறேன். அதை மாற்றிக் கொடுத்தால் கூட நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விசேஷ பாசனத் திட்ட அடிப்படையில், எங்கள் தாலூகா கடைநிலைப் பகுதியாக இருப்பதாலும், கல்லணைக் கால்வாயினால் போதுமான அளவு சப்ளை செய்யப்படாத காரணத்தினாலும், அந்தப் பகுதியில் ஓடக் கூடிய காட்டாறுகளின் குறுக்கே 2 லட்சம் ரூபாய், 3 லட்சம் ரூபாய் செலவழித்து அணைகளைக் கட்டினால் அந்தப் பகுதிகள் நல்ல முறையில் பாசன வசதி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பட்டுக்கோட்டை தாலூகாவைப் பொறுத்த வரையில் நசுவாணியாற்றை அமைச்சர் கூட பார்த்திருக்கிறார். அதைப் பரிசீலனை செய்து நிறைவேற்றிக் கொடுத்தால் பாசன வசதிக்கு நலமாக இருக்கும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் பாட்டுவனாச்சி திட்டம் நிறை வேற்றப்பட்டு, ஏதோ ஒரு கோளாறினால் சரியானபடி இயங்கவில்லை. அதைப்பற்றி மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டம் குறித்த அளவுக்கு, எதிர்பார்க்கிற அளவுக்குப் பலன் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

நாம் சுதந்திரம் அடைந்த பிறகு இந்த 14 ஆண்டுகளில் அநேக பாசன வசதிகள் பூர்த்தி அடைந்திருக்கின்றன என்று நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். 1951-ம் வருஷத்திலிருந்து முதல் ஐந்தாண்டுத் திட்டம் என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்றும் திட்டங்களைப் போட்டு காரியங்களைச் செய்து அநேக அணைக்கட்டுத் திட்டங்கள் பூர்த்தி அடைந்திருக்கின்றன. பாக்கி இருக்கக் கூடிய அணைகளும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பூர்த்தி அடையும் என்று நம்புகிறேன். அது மாத்திரமல்லாமல் இப்போது 50 ஏக்கர் பாசனம் உள்ள நிலங்களுக்கும் வாய்க்கால் வெட்டிக்கொள்ளவும், அவைகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவும் திட்டங்கள் இதில் இருப்பது வரவேற்கத்தக்கது. இப்போது சமீபத்தில் 50 ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு உள்ளவைகளுக்கு 50 சதவிகிதம் சர்க்காரினால் மான்யம் ஒதுக்கப்படுகிறது என்று நான் தெரிந்து கொண்டு அதை வரவேற்கிறேன்.

எனது தொகுதியில் இப்போது எமனேரி என்கிற வெல்லிங்டன் ரிஸர்வாயர் என்ற நீர்த்தேக்கத்தில் கழிவு ஜலத்தை ஆலந்துறை அணைக்கட்டில் தேக்கி வெல்லிங்டன் வாய்க்கால் மூலமாகப் பாசனத்திற்குக் கொடுத்தால் 5,000 ஏக்கர் வரையிலும் பாசன வசதி ஏற்பட்டு அதனால் உணவு உற்பத்தி அதிகமாகும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது சேத்தியாத்தோப்பு அணைக்கட்டில் வீரமுடையா நத்தம் வாய்க்கால் பாசனத்திற்கு ப்ரபோஸல் இருக்கிறது. அதை வெட்டிக்கொடுத்து பாசனத்திற்கு வசதி செய்து கொடுத்தால் இரு புறங்களிலும் 500 ஏக்கர்கள் பாசன வசதி பெறும். அதையே இன்னும் கொஞ்சம் நீட்டி வெட்டிக்கொடுத்தால் இன்னும் சில, அதாவது துரிஞ்சிக்கொல்லை, நெல்லிக்கொல்லை முதலிய கிராமங்களுக்கு பாசன வசதி ஏற்படும். சேத்தியாத் தோப்பு அணைக்கட்டிலிருந்து பிரிந்துவரும் வடவாறு வாலாஜா டாங்கில் விழுகிறது. அதை அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் கொடுத்தால் பாசன காலத்தில் தங்கு தடை இல்லாமல் பாசன வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வாலாஜா டாங்க் பாசனங்களில் உள்ள நிலங்கள், சுமார் 20 மைல் கிழக்கே உள்ளவைகள் எல்லாம் வடிகால் இல்லாமல் நீர்த்தேக்கம் ஏற்பட்டு அறுவடை காலத்தில் அறுவடை செய்ய முடியாமல் இருக்கிறது. அதனால் கஷ்டம் ஏற்படுகிறது, நஷ்டமும் ஏற்படுகிறது. வடிகால் வசதிகளை பக்கத்தில் உள்ள பரமனாற்றில் ஏற்படுத்திக் கொடுத்தால் அங்கு நல்ல உற்பத்தியும் ஏற்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதி புவனகிரியில் குறியரமங்கலம் என்ற கிராமம் இருக்கிறது. அந்த இடத்தில் 150 ஏக்கருக்கு வடிகால் வசதி இல்லாமல் நிலங்கள் பாழடைந்து நஷ்டத்துடன் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு வடிகால் வசதியை வெள்ளாற்றில் வெட்டிக்

கொடுத்தால் நல்ல முறையில் பலன் அளிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விதமாக அநேக சௌகரியங்களை அங்கு செய்துகொடுத்தால் உணவுப் பற்றுக்குறை நீங்கும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. நா. சௌந்தரபாண்டியன்:** மதிப்புக்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நீர்ப்பாசன மான்யங்களின் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நமது மாநிலம் நீர்ப்பாசனத்துறையில் நல்லதொரு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நீர்ப்பாசனத்தில் நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்துவரும் கவனமும், அதை ஒழுங்குபடுத்த எடுத்திருக்கும் முயற்சியும் பாராட்டத் தக்கது.

நீர்வளம் குன்றியிருக்கும் நாங்குனேரி தாலூகாவைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாங்குனேரி தாலூகாவின் வட பகுதியானது மணிமுத்தாறு திட்டத்தின் கீழ் நன்மை அடைந்து வருகின்றது. தென் பகுதியைப் பொறுத்த வரை திசையன்விளையின் ஒரு பகுதி மணிமுத்தாறு திட்டத்தால் பயன் அடைந்து வருகின்றது. அங்கே அமைக்கப்பட்ட கால்வாய்கள் நல்ல முறையில் செப்பனிடப்படவில்லை. அதை செப்பனிட்டுத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கு பல குளங்கள் திட்டத்தில் சேர்க்கப்படாமல் விடப்பட்டு இருக்கின்றது. அந்தக் குளங்களை இந்தத் திட்டத்தில் சேர்த்தால் அந்தப் பகுதி விவசாயத்தில் நல்ல முன்னேற்றம் அடையும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திசையன்விளை பகுதியில் உள்ள புலிமான்குளம் கண்மாய் 70 ஏக்கர் நஞ்சை, 70 ஏக்கர் இரண்டாம் போக நிலமும் (water rate land) ஆக 140 ஏக்கர் நிலம் இருக்கின்றது. கண்மாய் பல காலமாகப் பழுது பார்க்கப்படாமல் தூர்ந்து இருக்கின்றது. 1958-ல் திசையன்விளையில் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த மாநாட்டில்கூட சொல்லப்பட்டது. அப்பொழுதிருந்த சூபரிண்டெண்டிங் என்ஜினியர் திரு. கோயில் பிள்ளை அவர்கள் எஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது, வேலை சீக்கிரத்தில் நடைபெறும் என்று சொன்னார்கள். இது வரையில் அந்த வேலை துவங்கப் பெறவில்லை. நல்ல முறையில் பயன்படும்படி அந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டு, புலிமான்குளம் அணைக்கட்டு இவைகளை செப்பனிட்டு விட்டால் அந்தத் தண்ணீர் நல்ல முறையில் விவசாயத்திற்கு பயன்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வடமலை சானல் இப்போது பொதுப்பணித் துறையினாலும், ராதாபுரம், வள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் களாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மூன்று நிர்வாகங்களின் கீழ் பராமரிக்க வேண்டியதாக இருப்பதால் நல்ல முறையில் அது நிர்வகிக்கப்படவில்லை. மாவட்ட அபிவிருத்தி மன்றமும், பஞ்சாயத்து யூனியன்களும் தீர்மானம் போட்டு பொதுப்பணித் துறை நேரடியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். இதை நீர்ப்பாசனத் துறையில் மேற்கொண்டு பராமரித்தால் வள்ளியூரின் கிழக்குப் பகுதியும், ராதாபுரத்தின் வடக்குப் பகுதியும் நல்லதொரு நீர்ப்பாசன வசதி பெறும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வள்ளியூர் பெரிய குளம் பல ஆண்டுகளாக பரா மரிக்கப்படாமல் தூர்ந்து தண்ணீர் கட்ட முடியாமல் இருக் கிறது. அதை செப்பனிட்டு, நல்ல முறையில் கரையை பலப் படுத்தி முக்கியமாக தூர் வாரல், நில மீட்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக காளிசாம்பன் அணை. இது பணகுடி மலையில் இருக்கிறது. பூர்வாங்கமாக நடவடிக்கை எடுத்து நல்ல முறையில் செப்பனிட்டால் நல்ல பயன் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலப்பாரை சானல் திட்டம். இத்திட்டம் 1957-ம் வருஷத்தில் எடுக்கப்பட்டது. ஆனாலும் சில காலம் தாமதப்பட்டிருந்தது. தற்போது பூர்வாங்க சர்வே நடந்து கொண்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்தி, அந்தத் திட்டம் வந்தால் சுமார் 15,000 ஏக்கர் பாசனத்திற்கு வந்து ராதாபுரம் தொகுதி மக்கள் பயனடைவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் துரிதப்படுத்தி நல்ல முறையில் செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-00 a.m. பிராந்தநேரி கழிவுத் தண்ணீரை பயன்படுத்துவது பற்றி ஒரு திட்டம் 1957-லிருந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அது ஒரு சிறிய திட்டம்தான். இருந்தாலும் கடந்த 5, 6 ஆண்டுகளாக எந்த முடிவும் செய்யப்படாது இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இந்தத் திட்டத்தை சீக்கிரமாக முடிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நாங்குநேரி தாலூகாவிலுள்ள பச்சை ஆற்றின் மூலம் பயிர் செய்துவந்த சுமார் 4,000 ஏக்கர் நிலங்கள், இப்பொழுது மணிமுத்தாறு திட்டத்தால் பயன் பெறுகின்றன. அதனால் இந்த ஆற்றின் தண்ணீர் தாமிரபரணியில் விழுந்து ஒரு பயனுமின்றி கடலில் விழுகிறது. ஆகவே, பச்சை ஆற்றில் உள்ள

தேவநல்லூர் அணைக்கட்டை உயர்த்தியோ, அல்லது அதற்கு மேலே ஒரு புது அணையைக் கட்டியோ அதன் மூலம் நாங்குநேரி குளத்திற்கும், மணிமுத்தாறு திட்டத்தில் விட்டுப்போன மற்ற குளங்களுக்கும் அந்தத் தண்ணீர் பயன்படும் வகையில் ஏற்பாடு கள் செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். களக்காட்டு மலையிலுள்ள நட்டேரியான் கால் வாய், குடமாடி நீர்த்தேக்கங்களை செப்பனிட்டு கால்வாய்களை செம்மைப்படுத்துதல் மிகவும் அவசியம் என்று சொல்லிக் கொள்கிறேன். காளிச்சாம்பான் அணையை பழுதுபார்த்தால், குறிப்பாக பெருங்குடி, பணகுடி, வேப்பிளாங்குளம், தளக்கர் குளம் முதலிய கிராமங்கள் பயன் அடையும். அத்துடன் நிலப் பாறைத் திட்டத்தை உடனடியாக நல்ல முறையிலே இந்த 1963-64-ஆம் ஆண்டிலேயே எடுத்து அந்தத் தொகுதி மக்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. அ. ராகவ ரெட்டி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். நம் மாநிலத்தில் செய்ய வேண்டிய மராமத்து வேலைகள் அநேகமாக பூர்த்தி ஆகிவிட்டது, சிறு வேலைகள்தான் இருக் கின்றன என்று ஏற்கெனவே சொல்லியிருந்தேன். இந்தச் சிறு வேலைகளைச் செய்யும்போது இப்பொழுது சில பிராந்தியங்களில் புட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மெண்டு என்று ஏற்படுத்தி, ஏராள மான ஏரிகளை பி.டபிள்யூ.டி.-யிலிருந்து எடுத்து இந்த இலாகாவில் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த இலாகா அதிகாரிகள் பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர்கள்தான். என்றாலும், அவர்கள் இங்கே நடக்கும் நடத்தையே வேறுவிதமாக இருக் கிறது. உதாரணமாக, ஒரே இடத்தில் இரண்டு விதமாக நடக் கிறது. ஒரே இடத்தில் ஒரு பப்ளிக் ஓர்க்ஸ் ரிவெட்மெண்டாக இருந்தால் அதற்கு ரூபாய் 30 ரேட் என்றால், இந்த புட் ப்ரொ டக்ஷன் டிபார்ட்மெண்டிலே அதற்கு ரூபாய் 50, 60 என்று போட்டு சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படுத்தி, பணத்தை வீணாக்கு கிறார்கள் என்று நான் நமது உணவு அமைச்சர் கனம் கக்கன் அவர்களிடம் சொல்லி இருந்தேன். அவர்களும் சிரமம் என்று பாராமல் அதைப் பற்றி விசாரித்து அது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நடை முறையிலே ஏராளமான ஏரிகளை அவர்கள் எடுத்துக்கொண்டு இம்மாதிரி சர்க்கார் பணத்தை வீணாக்குகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், புட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டே தேவை யில்லை. இது பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்டிலேயே இணைக்கப் பட்டிருந்தால் நல்லபடியாக நடக்கும் என்று சர்க்காருக்கு யோசனை சொல்ல விரும்புகிறேன். இந்த இலாகாவில் மேற்பார்வை இல்லாததுதான் குறை என்றும் நினைக்கிறேன். இது சம்பந்தப் பட்ட வகையில் ரெவின்யூ அதிகாரிகளிடம் சொல்ல வேண்டியிருக் கிறது. அவர்களுக்கு என்ஜினீயரிங் விஷயங்கள், அதிகமாகத் தெரியாத காரணத்தினால் தவறுகள் நடக்கின்றன.

என்னுடைய தொகுதியில் ஆரணியாறு திட்டம் 12 வருஷங்களுக்கு முன்னால் எடுக்கப்பட்டும், பல காரணங்களால் நாளது வரை அது எடுக்கப்படவில்லை. இந்த ஆண்டாவது அதை எடுக்கும்படி உத்தரவு போடவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். என் தொகுதியாகிய கும்மிடிபூண்டி வட்டாரத்தில், 50 கிராமங்களுக்கு மேல் நீர் பாசன வசதியில்லாமல் இருக்கிறார்கள். இதுபற்றி பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். தயவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு, உடனடியாக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பப்ளிக் ஒர்க்ஸ் அதிகாரிகளிடம் இதுபற்றி நேராகச் சொல்லியிருந்தும், இந்த விஷயமாக இதுவரையில் எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. அப்படியே விட்டுவிடாமல், எவ்வளவு பணம் செலவானாலும் செய்வோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது, இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். செங்கல்பட்டு ஜில்லாவிலும் குறைகள் அதிகமாக இருக்கின்றன. அவைகளையும் கவனித்து, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

SRI A. KUNJAN NADAR: Mr. Speaker, Sir, it is stated in the Hon. Minister's speech that this State has almost exhausted all potential sources of irrigation. As far as Kanyakumari district is concerned, this Government have not even made a beginning. The Kanyakumari district is a compact and geographically a very suitable area to have a planned irrigation scheme. But still there has been no proper investigation regarding the existing irrigation system and the irrigation potential of that area. The only investigation was done sixty or seventy years ago by the then Chief Engineer, Mr. J. H. Horsley, an European Engineer, who conceived and constructed the Pechipara Dam. There is the Kodhayar system of irrigation and that Engineer had reported that there was a possibility of constructing subsidiary dams including Mukkudal Dam and the Perunchani Dam which had already been constructed. Then also there is the Pattanamkal, which is the original right bank channel of the Pechipara Dam and that scheme had been included in the First and Second Five-Year Plans. We are now in the middle of the Third Plan and there is no provision for constructing the Pattanamkal Dam though it is a medium scheme. The reason, as far as I can know, is that big vested interests are against this scheme and they are prepared to shell out lakhs of rupees to fill the pockets of anybody who says a word against the scheme. For the last half a century, it is being postponed though the Government say that there is no irrigation scheme capable of working there. I say that if the irrigation potential of the Kanyakumari district is properly pooled and utilised, there would be excess water which can be made available for the Tirunelveli district.

the Kerala State, the Neyyar lake is partly in Tamil Nad and the left bank channel of the Neyyar irrigates parts of Tamil Nad. Sir, the Neyyar is a perennial river and there is an inexhaustible source of water in the Neyyar. There used to be floods in the Kerala State due to this river. I myself am owning estates on either banks of the river.

I know the havoc done by Neyyar floods. If that water is diverted by somebody somewhere else, the people of that area would be glad and would welcome such a scheme. If some engineer comes with me I shall point out from where we could divert the surplus water, so that it would irrigate Tirunelveli district. There is also another scheme which was in the minds of engineers previously. Of course it was not properly investigated. The Neyyar lake and Pechipara lake lie in the same contour line, in the same level and the flyover distance between these two lakes is very short. If a tunnel could be constructed through the intervening hole, these two lakes could be connected and the excess water could be made use of by this State. Regarding Neyyar I have to state one more thing to this Assembly. Previously Neyyar was in my constituency. The Neyyar river flows through the middle of my previous constituency. That constituency we claimed as Tamil area and two elections were contested on that issue. At that time all the political parties of Kerala combined all their strength to oppose me and at that time the candidate who opposed me had to lose his deposit. This happened on both the elections. At that time even our Chief Minister came there to support the Kerala candidate. When the States Re-organisation Committee Report came, I led a deputation to this Government and met senior Ministers of this State including the Chief Minister and Sri Bhaktavatsalam and others.

MR. SPEAKER: The hon. Member is going away from the subject.

SRI A. KUNJAN NADAR: I pointed out how the waters of Pechipara lake could be utilised. Our claim was to Neyyatinkara, Deviculam and Peermade. The Kerala Ministers wanted half of Shencottah taluk because they had estate interests there. In exchange they were prepared for the whole of Neyyatinkara being included in my constituency, for Tamilnad. But without consulting us . . . . . .

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

விவசாயத்திற்கு ஜீவநாடியாக இருப்பது பாசன வசதிகள். பல இடங்களில் வாய்க்கால்கள் மேடிட்டு இருப்பதினால், முன்போல் குடிமராமத்து என்ற முறையில் கிராமங்களில் வாய்க்கால் வெட்டுகள் நடப்பு இயலாமல் இருப்பதினால், இப்பொழுது கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலமாகவும், பஞ்சாயத்து யூனியன் பிளாக் டெவலெப்மெண்டு திட்டத்தின் மூலமாகவும் இவைகளை எடுத்துச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டம் அமுலாக்கப்பட்டிருப்பதால் தானிய உற்பத்தி பெருகுவதற்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். சில வாய்க்கால்களில் ஷட்டர்ஸ், ஸ்லூயிஸஸ் இல்லாமல் தற்சமயம் அடைத்துக்கொண்டிருக்கிறது. பாபநாசம் தாலூகாவில் தற்சமயம் அம்மாதிரி அடைத்துக்கொண்டிருப்பதால், பாய்கின்ற நேரங்களிலும், வடிகின்ற நேரங்களிலும் கஷ்டமாக இருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம் ஷட்டர்ஸ், ஸ்லூயிஸ்கள் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவில் வெண்ணாற்றுப் பாசனம் மிக அதிகமாக இருக்கிறது. பாபநாசம் தாலூகாவில் ஜாஸ்தி. வெண்ணாறு அதிகமாக மேடிட்டு இருப்பதினால், சில இடங்களில் கரைகள் மிக பழுதாக இருக்கின்றன. அந்த இடங்களில் ரிவெட்மெண்டு செய்தும், கரைகளை உயர்த்தியும் கொடுக்கும்படியாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் சிறு வாய்க்கால்களிலும் சரி, பெரிய வாய்க்கால்களிலும் சரி 'சார்' என்று சொல்லப்படுவதை மீன்பிடிப்பவர்கள் போடுவதினால், பாய்கின்ற சமயத்திலும், வடிகின்ற சமயத்திலும் அதனால் இடைஞ்சல் ஏற்படுகிறது. முன்பு கவர்ன்மெண்டு உத்தரவுப்படி இம்மாதிரி போடக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அவைகளை கண்டிப்பாக போடாமல் இருக்கும்படிச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். கனம் பொது பணித்துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் தஞ்சை ஜில்லாவுக்கு விஜயம் செய்த சமயத்தில் பாசன, வடிகால் வசதிகள் சம்பந்தமாக எல்லா முக்கிய அதிகாரிகளையும், மற்றும் உள்ளவர்களையும் கூட்டி ஆலோசனை செய்து இருக்கிறார்கள். அவைகளை உடனடியாக செய்து கொடுக்க வேணுமாய் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் சில இடங்களில் வடிகால் வசதிகள் இல்லாமல் பெருத்த நஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, பாபநாசம் தாலூகாவில் சேர்மாநல்லூர் என்ற கிராமத்தில் சுமார் 100 ஏகரா நிலம் வரையில் வடிகால் வசதி இல்லாமல் பல வருஷங்களாக அங்கு சேதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை உடனடியாகக் கவனித்து

செய்து, வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவை பொறுத்தவரைக்கும் இதற்கு முன்னால் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டு வடிகால் வசதி சம்பந்தமாக அவர் பரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு ஒரு ரிபோர்ட் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. அதையும் அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவற்றையெல்லாம் செய்து கொடுத்தால், அதி தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் தஞ்சை ஜில்லாவில் நெல் உற்பத்தி மிகவும் அதிகமாக கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என்று சொல்லிக்கொண்டு, இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் எல்லா நதிகளின் மூலமும் எந்த அளவுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியுமோ அந்த அளவுக்கு நாம் ஏற்பாடு செய்துள்ளோம் என்பதைப் பற்றி நாம் உண்மையிலேயே பெருமைப்பட வேண்டும். இருந்தபோதிலும், ஏற்கனவே தண்ணீர் பாயக்கூடிய இடங்களிலே இன்னும் கஷ்டங்களை போக்குவதற்கும், அதே போல் விவசாயிகளுக்கு அதிக சௌகரியம் செய்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, சேலம் ஜில்லாவிலே, மேட்டூர் கால்வாய் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, அது தற்பொழுது பள்ளிப்பாளையத்தில் நிறுத்தப்பட்டு விடுகிறது. அதை ஜேடர்பாளையம் வரைக்கும் நீடிப்பதற்கு லெவல் இருந்தும், ஏதோ மைசூர் அரசாங்கத்துடன் இருக்கும் எக்ரிமெண்ட் காரணம் என்று சொல்லி பள்ளிப்பாளையத்துடன் நிறுத்திவிட்டார்கள். அம்மாதிரி நிறுத்தியிருப்பது நியாயத்திற்குப் பொருத்தம் அல்ல என்பதைத் தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேட்டூரிலிருந்து காவேரி ஆற்று இரு கரைகளிலும் பள்ளிப்பாளையத்திலிருந்து ஜேடர் பாளையம் வரைக்கும்தான் நஞ்சை நீர்ப்பாசனம் இல்லாமல் இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அந்த இடத்திலே தண்ணீர் பாய்வதற்கு லெவல் இல்லாமல் இருந்திருந்தால், அந்த சரகத்திலே உள்ள மக்கள் வருந்த மாட்டார்கள். தண்ணீர் பாய்வதற்கு எல்லாவிதமான வசதிகள் இருந்தும், லெவல் இருந்தும், தண்ணீர் கொடுக்கப்படவில்லை. ஆதலால், இதை அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதில் சில கஷ்டங்கள் இருந்தாலும், இன்னொரு அக்விடக்ட் போட்டாவது தண்ணீரை ஜேடர்பாளையம் வரை கொண்டுபோவது மிகவும் சிறந்ததாக இருக்கும். அதற்காக சற்று செலவு ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல், இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால், அதனால் நல்ல பலன் ஏற்படும். மற்ற இடங்களை விட நல்ல முறையில் சாகுபடி செய்து அதனால் நிச்சயமாக விளைச்சல் பெருகும்.

மேட்டூர் வாய்க்காலிலும் சரி, கீழ் பவானி வாய்க்காலிலும் சரி, தண்ணீர் கொடுக்காத சமயங்களில், அங்கு இருக்கக் கூடிய கிணறுகளிலிருந்து விவசாயம் செய்வதற்கு எலக்ட்ரிக் மோட்டார்களை வைப்பதற்கு அனுமதி கொடுத்தால், உண்மையிலேயே இப்பொழுது எவ்வளவு விவசாயம் செய்கிறார்களோ, அந்த அளவுக்கு இன்னொரு போகம் விவசாயம் செய்ய முடியும். ஆகவே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ராஜா குமாரபாளையம் வாய்க்காலைப் பொறுத்தவரையில், 2—10—1961-ல் இருந்த அன்ஆதரைஸ்டு பம்பு செட்டுகளுக்கெல்லாம், அனுமதி கொடுப்பது என்ற அளவிலே, நீண்ட நாளைக்குப் பிறகு ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். இதிலே சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். கடைசி 4 மைல்கள் தூரம் இருக்கக்கூடிய பம்பு செட்டுகள், எவ்வளவு நாட்களுக்கு முன்னதாக வைத்திருந்தாலும், அதற்கு அனுமதி கொடுப்பதில்லை என்ற அளவிலே சர்க்கார் உத்தரவு அமைந்திருக்கிறது. அது நியாயமானது அல்ல. 2—10—1961-ம் தேதியிலும், அதற்கு முன்னரும் வைத்திருக்கக்கூடிய பம்பு செட்டுகளுக்கு, டெயில் எண்டாக இருந்தாலும்கூட, அனுமதி கொடுக்கக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், அந்த ராஜாகுமாரபாளையம் வாய்க்காலைப் பொறுத்த வரையில் கரைகளையும் பலப்படுத்த வேண்டும். இன்னும் தண்ணீர் அதிகமாக போகக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்து, 2—10—1961-க்கு முன்னதாக வைத்திருக்கப்பட்ட எல்லா பம்பு செட்டுகளுக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மோகனூர் வாய்க்காலுக்கு பெட் ரெகுலேடர் இல்லை. அதனால் அந்த வாய்க்காலிலே தண்ணீர் நிரந்தரமாகப் போவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதனால் அந்த சரகத்திலுள்ளவர்களுக்கு தொடர்ந்து சிரமம் இருக்கிறது. எப்படி ஜேடர்பாளையத்தில் பெட் ரெகுலேட்டர் போடப்பட்டதோ, அதுபோல் மோகனூரிலும் ஒரு பெட் ரெகுலேட்டர் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு கொடிக்கால், வாழை, கரும்பு போன்றவற்றை நிரந்தரமாக மகசூல் செய்கின்ற காரணத்தால் ஒரு பெட் ரெகுலேட்டர் தேவைப்படுகிறது. இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொன்னியாறு, திருமணிமுத்தாறுத் திட்டம் நீண்ட நாளாகப் பேசப்பட்டு வருகிறது. இன்வெஸ்டிகேஷனுக்காக எஞ்ஜினியர் போடப்பட்டதாவும் சொல்லப்பட்டது. அதனுடைய முடிவு என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. சீக்கிரம் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தண்ணீர் நிரந்தரமாகப் பாய்வது குறைவாக இருந்தால், பல ஏரிகளிலிருந்து தண்ணீர் கொடுக்க முடியும். அது மட்டுமல்ல. அந்தப் பகுதி[illegible]

வாட்டர் லெவலை அதிகப்படுத்துவதற்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே, இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சங்கரி தாலூகாவில் அச்சம்பள்ளி ஏரி, குண்டானேரி ஆகிய இரண்டு ஏரிகளுக்கும் நிரந்தரமாக தண்ணீர் கொடுக்கும்படிச் செய்ய வேண்டும். சேலம் ஜில்லாவில் காவிரி ஆற்றிலிருந்து நீரை நேரடியாக பம்பு செய்வதற்கு ஏற்பாடு செய்து, அதன் மூலமாக கூட்டுறவு farming சொசைடிகளை ஏற்பாடு செய்தால் ஒவ்வொரு யூனிட்டிற்கும் 250 முதல் 500 ஏக்கரா வரை பாய்வதற்கு வசதி ஏற்படும். அரசாங்கத்திற்கு எந்தவிதமான செலவும் இல்லாமல் காவிரியிலிருந்து தண்ணீர் எடுத்து 10,000 முதல் 20,000 ஏக்கர் வரை பாயக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்ய முடியும். இதை உடனடியாக செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. மா. இராசாங்கம்:** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நீர்ப்பாசன மானியக்கோரிக்கை மீது கொண்டு வரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஒட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் உரையில், கனம் அங்கத்தினர்கள் வெட்டுப் பிரேரணைகள் மீது பேசும்பொழுது நான் இது வரையில் கொடுத்துள்ள பின்னணியை மனத்தில் கொண்டு பேச வேண்டும் என்றும், அதற்கு மேலே ஏற்கெனவே உள்ள பாசன அமைப்புகளினால் நாம் அமைதி அடைந்துவிடவில்லை என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், அவைகளை இன்னும் திறனுள்ளவைகளாகவும் பயனுடையனவாகவும் ஆக்க முடியுமா என்று ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றில் பெரியாறு சேர்த்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை ஒட்டி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஜமீன்தார்கள் முன்பு வைத்திருந்து, இப்பொழுது அவர்கள் கையில் இல்லாத குளங்களின் பராமரிப்பு மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லுகிற இந்த நேரத்தில் நாம் இதை உன்னிப்பாக கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இரசக்கநாயக்கனூர் ஜமீனைச் சேர்ந்த இரண்டு, மூன்று குளங்களில் தண்ணீர் ஆழம் குறைவாக இருப்பதாலும், மலைப் பிரதேசங்களிலிருந்து தண்ணீர் வருகின்ற ஓடைகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாலும், ஓடைகளில் வருகின்ற தண்ணீரை ஒரு சில நிலச்சொந்தக்காரர்கள் பறித்து தங்களுக்குத் தட்டிக் கொண்டு போகிற காரணத்தால், குளத்திற்கு வரவேண்டிய தண்ணீர் குறைந்து போகிறது. அப்படி குறைந்து போகிற காரணத்தால், ஒரு போகம் விவசாயம் செய்கிறவர்கள் கூட, அதைச் சரியாக செய்ய முடியவில்லை. ஆகவே, சம்பந்தப்பட்ட இரண்டு மூன்று குளங்களுக்கு அதிகத் தண்ணீர் வந்து சேரக்கூடிய முறையிலே இந்த வாய்க்கால்களை செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1963-64-ல் சிறு பாசனங்களுக்கான மொத்தச் செலவு 246 லட்சத்திற்கு உயர்த்தப்படும் என்றும், பூர்த்தி பெற இருக்கும் வேலைகளின் எண்ணிக்கை 760 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கையில் மேலும் மூன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்று ஆறுகள் அடங்கிய ஒரு சிறு பாசனத் திட்டத்தை ஒட்டி நான் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுக்கும் நன்றாக தெரியும். பெரியாறு நீர்ப் பாசனத்தைப் பொறுத்தவரையில், மலைப்புறங்களுக்கு நடுவிலே இருக்கிற காரணத்தால், மேற்கு மலைக்கும் கிழக்கு மலைக்கும் இடையே ஏராளமான சமவெளிப் பிரதேசங்கள் பாசனத்திற்கு இலாயக்காக இருந்தும், அங்கே சிறு சிறு ஆறுகள் இருந்தும், உபயோகப்படுத்தாமல் தண்ணீர் ஆற்றில் போய் கலக்கிறது. அப்படி மூன்று ஆறுகள் உள்ளன. அவைகள் சுருளியாறு, வறட்டாறு, கூத்தனாச்சியாறு. இந்த மூன்று ஆறுகளையும் சிறு பாசனத் திட்டத்தின்படி பாசனத்திற்கு வசதி செய்து கொடுத்தால்—இந்த நெருக்கடி நிலையில் தங்கள் உதவித் தொகையை 50 சதவிகிதம் மத்திய சர்க்கார் உயர்த்திருக்கிறார்கள் என்ற சந்தர்ப்பத்தை ஒட்டியாவது செய்து கொடுத்தால்—ஏறத்தாழ 2,000 எக்கர் நஞ்செய் நிலம் பயன்படும் என்ற கருத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தப் பிரதேசத்தில் பருவ மழை காலம் தவறாமல் பெய்கின்ற வாய்ப்பு இருப்பதாலும், வருடம் பூராவும் தண்ணீர் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதாலும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தால், நிச்சயமாக பலன் இல்லாமல் போகாது. கட்டாயமாகப் பலன் தரும் என்ற நோக்கத்தோடுதான் நான் இதைச் சொல்லுகிறேன்.

10-00 a.m. அடுத்தபடியாக, சிறு பாசனத் திட்டத்தையொட்டி, பெரியாற்றுப் பாசனத்திலிருந்து கூடுகிற குறவனூற்றுப் பாலத்திலிருந்து வாய்க்கால் வெட்டி, ஒட்டங்குளம் பாசனத்தில் சேர்த்து, பாசனத்திற்கு சிறு வாய்க்கால் மூலம் உபயோகப்படுத்தியிருப்பது அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். மந்தைவெளி மலையிலிருந்து வரும் மந்தை வாய்க்கால் காரணமாக ஒட்டங்குளம் நிறையப்பெற்று, விவசாயம் ஒரு போகம் விளைந்து, இரண்டாம் போகம் சரியான முறைப்படி விளையாத காரணத்தால், இந்த வாய்க்கால் அங்கே இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த வாய்க்கால் இணைக்கப்பட்டிருப்பது, ஒரு மாத காலத் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக இவ்வளவு செலவு செய்து, அந்த ஒரு மாதத் தண்ணீர் தட்டுப்பாட்டை போக்குவதற்கு மட்டுமே நின்றுவிடக்கூடாது. அதற்குப் பக்கத்தில் இருக்கும் நிலங்களுக்கும் அது பயன்பட வேண்டும். அப்படிப் பயன்பெறக்கூடிய அளவுக்கு நிலங்கள் பக்கத்தில் இருக்கின்றன. ஆகவே, மந்தை வாய்க்காலோடு நின்றுவிடாமல், ஒட்டங்குளம் பாசனத்திற்கு இரண்டாம் போகத்திற்கு ஏற்படும் இடைஞ்சலைத் தவிர்ப்பதோடு, இடையில் இருக்கும் மற்ற சமவெளிகளுக்கும் அதைப் பயன்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்

இர்ரிகேஷன் ப்ளானிங் சர்க்கிளை ஒவ்வொரு பக்கமும் அனுப்பி, அதைப்பற்றி புள்ளி விவரங்கள் விசாரித்து நல்ல விவரங்கள்

தெரிந்துகொள்வதாக அறிக்கையில் இருக்கிறது எனக்கும் தெரியும். அப்படிப்பட்ட ப்ளானிங் சர்க்கிளை எங்கள் பகுதிக்கும் அனுப்பி, நான் மேலே சொன்ன துணை வாய்க்காலுக்கு மேலும் நிறையத் தண்ணீர் வரச் செய்து, அதன் மூலம் எவ்வளவு அதிக நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க முடியும் என்பதை ஆராய வேண்டும். அத்துடன் அங்கே கைவிடப்பட்ட பதினெட்டாங்கால் வாய்க்கால் வேலையையும் ஆராய்ந்து, அதில் செய்வதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து, வழிவகை இருக்கிறதென்று தெரிந்த பிறகாவது, அதைக் கையாளவேண்டும் என்று கேட்டு, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, தலைவருக்கு நன்றி தெரிவித்து, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. க. மாரப்ப கவுண்டர்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நமது நாடு, சுதந்திரம் அடைந்த பிறகு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக நமது அரசாங்கம் பாசன வசதி சம்பந்தமாகப் பல திட்டங்களை நமது ராஜ்யத்தில் செய்து முடித்திருக்கின்றார்கள். குறிப்பாக, கோயம்முத்தூர் ஜில்லாவில்கூட பல தாலூகாக்களில் அம்மாதிரி பாசன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். அம்மாதிரி செய்து கொடுத்திருக்கும் ஒரு ஜில்லாவில்கூட, அவனாசி தாலூகா விடப்பட்டிருக்கிறது. அந்த தாலூகாவிலும் நல்ல பல திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதற்குப் பல வழிகள் இருந்தும்கூட, நாளதுவரை எந்த ஒரு பாசன வசதியும் செய்து கொடுக்காமல் அந்தத் தாலூகா விடப்பட்டிருக்கிறது.

நான் இந்த மன்றத்திற்கு வந்து ஐந்தாறு வருஷங்கள் ஆகின்றன. இந்த ஆறு வருஷங்களில் எனது தாலூகாவின் நிலைமைகளை அரசாங்கத்திற்கு நான் விவரமாக எடுத்துக் கூறி வந்திருக்கின்றேன். இதற்கு முன்பு மராமத்து இலாகா அமைச்சராக இருந்த அமைச்சர் அவர்களுக்கும், இப்பொழுது இந்த இலாகாவை நிர்வகித்துக்கொண்டிருக்கும் அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தாலூகா விஷயம் நன்கு தெரிந்திருக்கிறது. முன்பு இந்த இலாகாவை நிர்வகித்த அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தி, அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஒரு நல்ல ஏற்பாட்டை இப்பொழுதிருக்கும் அமைச்சரவர்கள் எங்களது தாலூகாவிலிருக்கக்கூடிய விவசாயிகளின் நன்மையைக் கருதி எவ்வளவு சீக்கிரத்தில் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செய்துகொடுக்க உண்டான ஏற்பாடுகள் செய்து கொடுக்கும்படி நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக எங்களது தாலூகாவைப் பொறுத்த வரையில், பல குளங்கள், சுமார் 20, 30 வருஷங்களாகக் கெட்டுப் போய்; அந்தக் குளங்களையெல்லாம் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள்

பட்டா நிலங்களாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்து, இன்று விவசாயப் பூமிகளாக மாறியிருக்கின்றன. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். ஏற்கனவே இருந்தது போல குளங்களாகச் செய்யப்படவேண்டும். அம்மாதிரி குளங்களில் தண்ணீர் நிறையுமானால் பல விவசாயப் பூமிகளிலுள்ள கிணறுகளுக்கு ஊற்றுக்கள் ஏற்படுவதற்கு நல்ல வசதியாக இருக்கும். நமது அமைச்சர் அவர்கள் தங்களது இலாகா அதிகாரிகளை அனுப்பி வைத்து, அப்படி மாறியுள்ள நிலங்களையெல்லாம் ஆர்ஜிதம் செய்து, பழையபடி குளங்களை அமைத்து, அக்கம்பக்கத்திலுள்ள கிணறுகளுக்கு ஊற்று வசதி உண்டாவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டும்.

நொய்யல் ஆறு என்கிற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் பழைய காலத்தில் நான்கைந்து அணைகள் இருந்திருக்கின்றன. அவை இப்பொழுது அழிந்து போயிருக்கின்றன. அந்த அணைகளையெல்லாம் கட்ட வேண்டுமென்று பல தடவை நான் அதிகாரிகளிடம் கூறிக்கொண்டிருக்கிறேன். இருந்தாலுங்கூட, இன்னும் அதற்குண்டான ஏற்பாடுகள் ஒன்றும் செய்யப்படவில்லை. ஆகையால், மேற்படி அணைகளைக் கட்டுவதற்கு உண்டான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. கு. கோபால கவுண்டர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நீர்ப்பாசன மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். செஞ்சி தாலூகா மலைப் பிரதேசம் என்பது கனம் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். எங்கள் தாலூகாவில் ஒரு கிணறு வெட்டவேண்டுமானால் பத்து, பன்னிரண்டு அடி வெட்டியவுடனே பாறை வரும். ஒவ்வொரு விவசாயியும் நாலாயிரம், ஐயாயிரம் ரூபாய் செலவு செய்து கிணறு வெட்டினாலும், அது ஃபெய்ல்யூராகப் போய்க் கஷ்டப்படக்கூடிய நிலைதான் காணப்படுகிறது. செஞ்சி தாலூகாவில் வராக நதியின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டால், அதனால் சுமார் ஏழு கிராமங்களிலுள்ள ஆயிரம் ஏக்கராக்களில் நஞ்சை சாகுபடி செய்ய முடியும். முன்பு திரு. ஓ. பி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, பிறகு அது கைவிடப்பட்டது. இந்தத் திட்டத்தை சென்ற 'பீரியட்'டிலேயே எடுத்துக்கொள்ளும்படி நான் வற்புறுத்திவந்தேன். அந்தத் திட்டத்தை 1965-ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்போவதாக பி.டபிள்யூ.டி.யிலிருந்து எனக்குப் பதில் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தை 1964-ம் ஆண்டிலேயே எடுத்துக்கொண்டு நிறைவேற்றி எங்கள் தாலூகா விவசாயிகளை நல்ல முறையில் முன்னேற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆனால், அந்தத் திட்டத்தில் ஐம்பது ஏக்கருக்குக் கீழ்ப்பட்ட ஏரிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆழப்படுத்தும் திட்டத்தில் பல ஏரிகள் எங்கள் ஜில்லாவில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த ஏரிகளை ஆழப்படுத்துவதோடுகூட அவற்றின் கோடிகளை உயர்த்திக்கொடுக்கும்படியும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பல ஓடைகளில் சிறிய அணைக்கட்டுகளைக் கட்டிக்கொடுத்தால் பல ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டுபோக வசதியாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நந்தன் வாய்க்காலில் சுமார் 100 ஆண்டுகளாகத் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அது பாசனத்திற்கு லாயக்காக இருந்தது. அந்த வாய்க்காலை நல்ல முறையில் ரிப்பேர் செய்வதற்கு நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது பதினைந்து மைல் தூரம் இருக்கிறது. காட்டிலும், மலைப் பிரதேசத்திலும் அது இருப்பதால், அதிகாரிகள் அங்கே போவதற்கு வழி வகை இல்லாததால், அவர்கள் அதை எடுத்துக்கொள்வதற்கில்லை என்று பதில் சொல்லி விடுகிறார்கள். அதற்கென்று ஸ்பெஷல் ஸ்டாப் போட்டு, நந்தன் வாய்க்காலை எடுத்துக்கொண்டு செப்பனிட்டால், 40, 50 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கக் கூடும். அந்தத் திட்டத்திற்காக ஸ்பெஷல் ஸ்டாப் போட்டு, எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில ஏரிகளுக்கு வரத்து வாய்க்கால்களைச் செப்பனிட்டு சீர்திருத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அணிலாடு கிராமத்தில் ஒரு ஓடை இருக்கிறது. அங்கு ஒரு அணை கட்டிக்கொடுக்கும்படி அந்தக் கிராமத்தார்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அந்த அணையைக் கட்டினால், 15 ஏரிகளுக்கு பயனளிக்கும். ஆகவே, அந்த அணையைச் சீக்கிரமாகக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கடலை அணைக்கட்டை கட்டி, ஏரிகளுக்கு தண்ணீர் போகின்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும். அந்த அணையைக் கட்டுவது பற்றி ஒரு மாதத்திற்கு முன்பு ஸ்பெஷல் இரிகேஷன் டிபார்ட்மென்ட் பரிசீலனை செய்திருக்கிறார்கள். அந்த அணை கட்டப்படுமானால், இருபது கிராமங்களுக்கு மேல் பயன் அடையக் கூடும் என்று கூறி, என் உரையை முடிக்கின்றேன்.

* **திரு. தா. சின்னசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்த நீர்ப்பாசன மானியத்தின்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகள் விரும்புகிறேன்.

[திரு. தா. சின்னசாமி] [22nd March 1963

எங்கள் தென்னூற்காடு மாவட்டம் இறைத்துப் பிழைக்கிற பகுதி. ஆனாலும் எங்கள் கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் ஒரு கிணற்றை வைத்துக்கொண்டு பல இடங்களுக்கு தண்ணீர் இறைத்து வாழவேண்டியிருக்கிறது. நீர்ப்பாசனம் என்பதை நாங்கள் சொப்பனத்தில்கூட கண்டது இல்லை. எங்கள் பகுதியில் பல கிணறுகள் வறுமைக்கணக்காக தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஹங்காநதி திட்டத்தில் ஆறு மைல் தூரம் கால்வாய் வெட்டினால் எங்கள் பகுதிக்கு கொஞ்சம் திருப்பி விட்டு பயன்பெறச் செய்ய முயற்சிக்க வேண்டும். குறிப்பாக ஆத்தூரிலிருந்து கிழக்குப் புறமாக விருத்தாசலத்திற்கு மேற்கே, பெரம்பலூர் தாலூகாவிற்கு வடக்கே மிக மோசமாக இருப்பதால் அந்த பகுதி பாசனவசதி பெறக்கூடிய வகையில் இந்த திட்டத்தின்கீழ் வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பின்தங்கிய பகுதிக்கு ஏதாவது சலுகை காட்டவேண்டுமென்றால் அது என்னுடைய பகுதிக்குத்தான் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக நம்முடைய தமிழக அரசாங்கம் ஜனநாயக முறையில் அமைந்தது. எதிர்க்கட்சியிலே உள்ள நாங்கள் சில பல குறைகளை எடுத்துச் சொல்கிறோம். நாங்கள் இப்படி குறை கூறுகிறோம் என்று பல அங்கத்தினர்கள் எங்களை குறை சொல்லுகிறார்கள். எங்களுடைய குறையெல்லாம் தமிழக அரசாங்கத்திற்கு ஒன்பது அமைச்சர்கள் இருந்தும் எங்கள் தொகுதியைப் போன்ற பல இடங்கள் இன்னும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்றனவே, அவற்றில் கவனம் செலுத்தக் கூடாதா என்பதுதான். தூண்டா விளக்கு, சுடர் விளக்கு எரிவது போல, எதிர்க் கட்சிக்காரர்கள் குறைகளை எடுத்துச் சொல்லாது போனால் இந்த அரசாங்கத்தின் செயல்கள் தடைபட்டுப் போகும். விளக்கைப் பிரகாசமாக எரியச் செய்ய உதவி செய்யும் தூண்டுகோல் போலவே எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் இருக்கிறோம். ஆகவே எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் சொல்லக்கூடிய விஷயங்களை இந்த அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டும். இன்றைக்கு ஆளும் கட்சியிலுள்ளவர்கள் எதிர்க்கட்சியாக வந்தாலும் எதிர்க்கட்சிக்காரர்களாக எண்பது பேர்களாவது இருக்கவேண்டும். கர்ச்சா கவுடர் அவர்கள் சொன்னார்கள் நாங்கள் வந்த பிறகுதான் ரோடு போட்டோம் என்று. ரோடு போட்டது மட்டும் போதாது. நீர்ப்பாசன வசதியற்ற அத்தனை பிரதேசங்களும் நீர்ப்பாசன வசதியுள்ளவையாகச் செய்யப்படவேண்டியதவசியம். அதேபோலவே சுகாதார வசதியும் செய்துதரப்பட வேண்டும். தாய் குலத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் சுகாதார அமைச்சராக வந்து இருப்பதை

22nd March 1963] [திரு. தா. சின்னசாமி]

எங்கள் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. எங்கள் பகுதியில் சிறு சிறு அணைகளைக் கட்டி தென்னூற்காடு பெரம்பலூரிலிருந்து வடபுறம், விருத்தாசலத்திற்கு மேற்கேயுள்ள பகுதி வளம்பெற அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ரா. ராஜகோபாலசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த சபையிலே சமர்ப்பித்திருக்கிற நீர்ப்பாசன மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் முதல் இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களிலே நீர்ப்பாசனத் துறையிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துரைத்திருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே நடுத்தர பாசனத் திட்டங்கள் தொடங்கப்பட்டு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

இப்பொழுது நமது ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் நீர்ப்பாசனத் திட்டங்கள் நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும் இந்த சமயத்தில் பொதுப்பணித் துறை இலாகாவிலே நிர்வகிக்கப்பட்டுவரும் நீர்ப்பாசனத் திட்டங்களில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. காரணம் என்னவென்றால் சில அதிகாரங்கள் பொதுப் பணித் துறையினரிடத்திலும் சில அதிகாரங்கள் ரெவின்யூத் துறையினரிடத்திலும் இருப்பதால், சமயத்தில் சில உத்திரவுகள் பிறப்பிப்பதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது. இதனால் குறிப்பிடப்பட்ட காரியம் நடக்காமல் போய்விடுகிறது. காலதாமதமும் ஆகிறது. அதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அதை மாற்றி இப்போது நமது இந்தியாவில் இதர ராஜ்யங்களில் உள்ளதுபோல நீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பாசனம் ஏற்பட்டபிறகு அதிகாரங்கள் எல்லாம் பொதுப்பணித் துறையினரிடம் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும். நீர்ப்பாசனம் நல்ல முறையில் செயல்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறையையும்; ரெவின்யூத்துறையையும் நிர்வகித்து வருவதால் இந்த மாறுதல்கள் செய்வதற்கு மிகவும் சுலபமாக இருக்கும் என சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இதைச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பரம்பிக்குளம் திட்டம். இப்பொழுது நல்லபடியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப்பொழுது பரம்பிக்குளம் திட்டத்தினால் உடுமலைப் பேட்டை பொள்ளாச்சி, தாராபுரம் பூராவும் இரண்டு லட்சத்து நாற்பத்தாறாயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி கிடைக்கிறது. உடுமலையிலிருந்து சிறிது தூரத்தில் திருமூர்த்தி அணை உருவாகிக்கொண்டு இருக்கிறது. அந்த இடத்திலிருந்து புறப்படும் மெயின் வாய்க்கால் ஒரு லட்சத்து எண்பது

ஆயிரம் ஏக்கராவுக்குப் பயன்படுகிறது. உடுமலைப் பேட்டை அணைப் பகுதியில் உள்ளவர்கள் தங்கள் பூமிகளை அணைகட்டுவதற்காக கொடுத்தும் வாய்க்கால் வெட்டுவதற்கு கொடுத்தும் தெற்கு பகுதியில் உள்ள மக்கள் தண்ணீர் பாய வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். வாய்க்கால் தண்ணீரையும் பாசனம் செய்ய முடியாமல் சும்மா பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இது பற்றி இஞ்சினியரிங் இலாகாவினரை கேட்டால் இவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க சற்று செலவு அதிகமாகும் என்று சொல்கிறார்கள். பெரிய திட்டங்களுக்கெல்லாம் செலவு செய்யும் இந்த சமயத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த சிறு செலவுகளை எல்லாம் பொருட்படுத்தாமல் எல்லோருக்கும் சமமாக தண்ணீர் பங்கீடு செய்து, உடுமலைப்பேட்டைப் பகுதி மக்களையும் திருப்தி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, என் பகுதியிலே அமராவதி அணை முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது திட்டத்தில் பூர்த்தியாகியிருக்கிறது. இதனால் என் பகுதியிலும், தாராபுரம் பகுதியிலும் தண்ணீர் பாய்ந்துகொண்டு இருக்கிறது. தாராளமாக நஞ்சை விவசாயம் செய்துவருகிறார்கள். இந்த அமராவதி அணையில் தண்ணீர் மிகவும் அதிகமாகயிருக்கிறது. இந்த அமராவதியில் பாயும் வாய்க்காலுக்கு சிமண்ட் கான்கிரீட் போட்டால் இப்போது பாயும் நஞ்சை பூமிகளும் மேலும் பத்தாயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் அதிகமாக பாயும். உடுமலை, தாராபுரம் பகுதிகளிலும் பல பிரதேசங்கள் பயனடையலாம்.

11–00 a.m. உடுமலைத் தொகுதியில் வடபூதிநத்தம், தென்பூதிநத்தம் என்ற இரு கிராமங்கள் இருக்கின்றன. அங்கு ஏழு குளங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் சுமார் மூவாயிரம் ஏக்கருக்கு மேல் இருபோக நஞ்சை நிலங்களாக இருக்கின்றன. சென்ற 20 ஆண்டுகளாக அந்தக் குளங்கள் செப்பனிடப்படாமல், மேடிட்டு தண்ணீர் சரிவர நிலங்களுக்குப் போகாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குளங்களை ஆழப்படுத்தி, செப்பனிட்டு தண்ணீர் பாசனவசதி நல்ல முறையில் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி அணைக்கு மேலே அமராவதியாறு மின்சாரத் திட்டம் அமைய வேண்டியிருக்கிறது. இது நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் சீக்கிரம் நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. க. தெ. பெருமாள் ராஜு**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கோவை ஜில்லாவில் எந்த விதத்திலும் பாசன வசதி அற்றவைகளாகிய அந்தியூர், தாளவாடி போன்ற சில பகுதிகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் இந்த ஏரியாக்கள் பாசனவசதி பெற முடியாது. இந்தப் பிர்க்காவிலே சில திட்டங்கள் இருக்கின்றன. பர்கூர் மலைப் பிரதேசத்தில் தடக்கரை, தாமிரக்கரை என்ற குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களைச் செப்பனிட்டு குடிப்பதற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தியூர் பிர்க்காவில் பர்கூர் மலை பகுதியில் உள்ள காக்காயனூர் பள்ளத்தைத் திருப்பி மணியாச்சித் திட்டமாக நிறைவேற்றுவது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டது. இதற்கு முன் மராமத்து அமைச்சராக இருந்தவர்கள் அந்த இடத்திற்கே வந்து பரிசீலனை செய்து ஆவன செய்ய உத்தரவிடுவதாகக் கூறினார்கள். இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அரப்பன் கோட்டை வாய்க்காலில் அத்தான்-பெருமுகை வாய்க்கால் என்ற ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதை இன்னும் இரண்டு, மூன்று மைல்களுக்கு அதன் நீளத்தை அதிகப்படுத்தினால் அந்தியூர் பிர்க்காவில் கீழ்புறத்தில் உள்ள வேம்பத்தி குளத்தை நிரப்பி பாசன வசதிகளை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூகலூர் பிர்க்காவில் சாந்திபாளையம் கிராமத்திலே வேப்பம் பாளையம் குளம் என்ற ஒரு குளம் இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டு வந்தது. அந்தக் குளத்தை வெட்டி பாசனத்திற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாளவாடி குடிக்கத் தண்ணீர் அற்ற பிரதேசமாக இருக்கிறது. குளிக்கக்கூடத் தண்ணீர் கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கு சிறு சிறு குட்டைகள் நிறைய இருக்கின்றன. அவற்றில் சிலவற்றையாவது செப்பனிட்டுக் கொடுத்தால், குடிதண்ணீர் வசதி, பாசன வசதி ஏற்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தடப்பள்ளி, அரப்பன்கோட்டை வாய்க்காலில் தூர் எடுப்பது தாமதமாகிக் கொண்டிருக்கிறது. துரிதமாகத் தூர் எடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆர். நாராயணன்**: கனம் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பெரம்பலூர் தாலுக்காவும், உடையார்பாளையம் தாலுக்காவும் மிகவும் பிற்போக்கான நிலைமையில் உள்ளது. அந்த வட்டாரத்தில், வதிட்டபுரம், மாத்தூர் பொன்பரப்பி இவைகளில் நீர்ப்பாசன வசதி எதுவும் இல்லை. குடி தண்ணீர் வசதியும் உடையார்பாளையம், பொன்பரப்பி வட்டத்தில் மிகவும் குறைவு. ஆகவே, பெரம்பலூர் தாலுக்காவில் துறையூருக்கு மேல்புரம் ஒரு வாய்க்கால் வெட்டி காவேரி நீரை கோனேரி ஆற்றின் வழியாக வெள்ளாற்றில் விட்டால் பெரம்பலூர்

வட்டத்திலும், உடையார்பாளையம் வட்டத்திலும் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய தண்ணீர் வசதி ஏற்பட வழி பிறக்கும். அந்த வகையில் அரசாங்கம் ஒரு பரிசீலனைக்கு கொண்டுவர திட்டத்தைத் தீட்டியிருப்பதாகத் தெரியவருகிறது. அந்தத் திட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றினால் இந்த வட்டாரத்திலுள்ள அநேக இடங்களுக்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்ய நீர்ப்பாசன வசதி கிடைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி ஜில்லாவிலே இருந்த மாவட்ட கலெக்டர் அவர்கள் என்னுடைய பகுதியிலே சுற்றுப்பயணம் செய்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய வட்டாரத்தின் நிலைமைகள் நன்றாகத் தெரியும் என்று கூற விரும்புகிறேன். அந்த வட்டாரத்தில் வடகலூர் பிர்காவில் சில ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் போக வாய்க்கால் வெட்டி வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அத்தியூர், அகரம்சீகூர்க்கும் இடையே வாய்க்கால் தகராறு ஏற்பட்டு கோர்ட் வரை போகக் கூடிய நிலைமை ஏற்பட்டது. இப்போது கழிவு நீரை அகரம்சீகூர் ஏரிக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நீரை சிலர் அணை கட்டித் தேக்கி கொள்ளாமல் அனுப்பினால் அகரம்சீகூர் ஏரிக்கு தண்ணீர் கிடைக்கும். இப்போது அகரம்சீகூர் ஏரியில் தண்ணீர் இல்லாத காரணத்தாலும் வாய்க்காலில் கொண்டம் கட்டுவதாலும் அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். நாம் திட்டங்களைச் சரியாகப் போட்டாலும், அங்குள்ள அதிகாரிகள் அவற்றைச் சரிவர நிறைவேற்றுவதில்லை. அந்த வட்டத்தில் 7, 8 ஏரிகள் இருக்கின்றன. ஆனால் போதுமான தண்ணீர் வாய்க்கால் இல்லை. வெள்ளாற்றில் மொட்டணைக்கட்டி அந்த ஏரிகளுக்கு வாய்க்கால் மூலமாகத் தண்ணீர் கொண்டு போனால் இரு போகம் சாகுபடி செய்ய முடியும். அங்கு ரெகுலேட்டர்கள் அமைக்காமல் இருப்பதால் தகராறுகள் ஏற்பட்டு வருகின்றன. சின்னாறு நீர்த்தேக்கத்தை ஐந்து லட்சம் செலவில் கட்டினார்கள். அந்தத் தேக்கத்தினால் 716 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது 200 ஏக்கருக்குத்தான் அதன் மூலம் தண்ணீர் பாய்வதாகப் புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். இங்கு P.W.D. அதிகாரிகள் சரிவர நடக்காத காரணந்தான் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. அகரம்சீகூர் ஏரியையும், கைப்பெரம்பலூர் ஏரியையும் ஒன்றாக இணைத்தால் 4,500 ஏக்கர் பாசன வசதி பெறும். அதனால் மக்களுக்கு நல்ல பலன் ஏற்படும். அதனைச் செய்து, முன்பு சொன்ன திட்டத்தை பெரம்பலூர், உடையார்பாளையம் தாலுக்காக்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் உதவி சபாநாயகர்
1-00 a.m. அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த கோரிக்கையை ஆதரித்து, நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய

எல்லாப் பெரிய திட்டங்களையும் அரசாங்கம் எடுத்திருக்கிறது. என் நிலக்கோட்டை தாலூக்காவில் நான் கேட்டுக் கொண்டிருந்த பல திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக சென்ற முறை இருந்த கனம் அமைச்சர் அவர்களையும் இந்த இலாகா அதிகாரிகளையும் பாராட்டுவதோடு அத்தொகுதி மக்கள் சார்பில் என் நன்றியையும் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நம் மாநிலத்தில் 37,000 கண்மாய்கள் மூலம் 20.7 லட்சம் ஏக்கர்கள் பாசனவசதி பெறுவதாக இருக்கிறது. எவ்வளவோ கவனித்த போதிலும் இன்று பல கண்மாய்கள் மணல் மேடிட்டு, தண்ணீர் தேக்கி வைக்க முடியாது மேடிட்டு, பாசன வசதி பெற முடியாமல் இருக்கின்றன. ஆகவே மணல் மேடிட்ட இடங்களை பார்த்து அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்க்கவேண்டுமென்று கூறவில்லை, அவர்கள் நினைத்தாலே போதும் சீக்கிரம் முடிந்து விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது—மணல் வாரிகளைக் கொண்டு அவற்றை ஆழப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலக்கால் கண்மாயில் சம்பல் புல் வளர்ந்து தண்ணீர் தேக்கப்பட முடியாமல் இருக்கிறது. அப்புல் வளர விடாமல் தடுத்தால் இன்னும் பல ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் பாசன வசதி அடைய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். குடகனாறு திட்டத்தை எடுத்து வேலை செய்திருக்கிறார்கள். இரண்டு அமைச்சர்களுக்கும் தெரியும். விரைவில் அதில் தண்ணீர் வர வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியில் இரு போக சர்குபடி என்ற பிரச்னை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அது அந்த ஜில்லா பூராவிற்கும் இருந்து கொண்டிருக்கிறது. ரிக்கார்டில் ஒரு போக சாகுபடி என்றுதான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் அங்கு இரண்டு போகம் சாகுபடி செய்கிறார்கள். அப்படி சாகுபடி செய்து அதற்குள்ள தீர்வையும் செலுத்தி வருகிறார்கள். ஆனால் ரிக்கார்ட் பூர்வமாக இரண்டு போக சாகுபடி என்று இல்லாததால் தண்ணீர் கிடைக்க காலதாமதமாகிறது. அதுபற்றிக் கூறியதில், ரிப்போர்ட் வந்தவுடன் பரிசீலனை செய்து கொடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதால் அதில் நம்பிக்கை இருக்கிறது. ஆகவே அதை சீக்கிரமாகவே பரிசீலனை செய்து இரண்டு போகத்திற்கும், மற்றவர்களுக்கு கிடைப்பது போல் ஜூன் மாதத்திலேயே தண்ணீர் கிடைக்க வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, திருமங்கலம் கால்வாய்க்கு இப்போது லைனிங் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை முடித்துக் கொடுத்தால் 2,000 ஏக்கர்களுக்கு தண்ணீர் வசதி கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அத்தண்ணீர் என் தொகுதியில் ஒரு ஆயிரம் ஏக்கருக்கு உபயோகப்படும். மன்னாடிமங்கலம், குருசத்துறை, காடுப்பட்டி ஆகிய இடங்களுக்கு சிறுமலைப் பகுதியில் மழைக் காலத்தில் மழைத் தண்ணீர் அதிகமாக வரும். அந்த நீர், சில்லக்குளம் கண்மாய், ரெட்டி கண்மாய், வடுகன் கண்மாய் இவைகள் வழியாக வடகரைக் கண்மாய் போய் சேரும். இது கடந்த பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்தது.

ஆண்டுகள் வரை தண்ணீர் வடகரை கண்மாய்க்குத் தண்ணீர் போகவிடாமல் தனி நபர் வாய்க்காலை அழித்து விட்டார். ஆகவே விரைவில் வாய்க்கால், முன்போலவே ஒதுக்கி தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்தி, 300, 400 ஏக்கர் நிலங்களில் உள்ள பயிர்கள் தண்ணீரில் மூழ்கி விடாமல் பாது காத்துக் கொள்வதற்குப் புதிய அணைபோட வேண்டும். பின்னர் மழை காலத்தில் வெள்ளம் வந்தால் சோளவந்தான் ஊருக்குள்ளேயே தண்ணீர் வந்து விடுகிறது. அதற்கு அங்கு ஒரு ரிவெட்மெண்ட் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தியாகிகளுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வாட்டர் பெர்மிட் கொடுக்கப்படவில்லை. ஆகவே ஏழை தியாகிகளுக்கு அந்த வாட்டர் பெர்மிட் கொடுத்து உதவ வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சிறுமலையிலிருந்து வரும் தண்ணீரை போட்டிரில் தேக்கி 500 ஏக்கருக்கு பாசன வசதி அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம்: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து அதை நிர்வகிக்கும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் சில விஷயங்களை கொண்டு வர விரும்புகிறேன். சமீபத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் ராமையா அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தாம்பரபரணி பாசனம், மணிமுத்தாறு பாசனம், தென்காசியில் உள்ள திட்டங்கள் ஆக ஜில்லா முழுமையையும் அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். இதற்கு முன்னர் அமைச்சர் கக்கன் அவர்கள் இந்த இலாகாவை நிர்வகித்து வந்தபோது பல ஆண்டுகளாக அங்குள்ள விவசாயிகள் படும் துயரத்தை அறிந்து, அதிகாரிகளை வைத்து சாங்கோபாங்கமாக விசாரித்து அதற்கு என்று ஒரு தனி சூப்பரண்டென்டிங் என்ஜினியரைப் போட்டு தாம்பரபாணி ஸிஸ்டத்தை ஸ்டடி லேஸ் செய்து அதில் போடுகிற தண்டத் தீர்வையை நீக்குவதற்காகவும், மணிமுத்தாறு பாசனத்தில் இப்போது கொடுப்பதை விட எந்தளவு அதிகமாக கொடுக்கமுடியும் என்பதற்காக ஒரு ஸ்பெஷல் டிவிஷனை அமைத்தார்கள். அதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாமபரபரணி பாசனத்தில் 80,000 ஏக்கர்கள்தான் இருப்பதாக யாதாஸ்துகளில் இருக்கும். ஆனால் 1 லட்சத்து 7,000 ஏக்கர் சாகுபடி செய்யப் படுகிறது. இதை அமைச்சர் அவர்கள் நேரிடையாகப் பார்த்திருப்பார்கள், அதிகாரிகள் யாதாஸ்தும் அப்படியே இருக்கும் என்று நினைக்கிறேன். ஒருபுறம் விவசாய அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், மறுபுறம் பாசன வசதி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டும், பெருக்கவேண்டுமென்று கூறுகிறோம். குறிப்பாக யுத்த காலத்தில் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவது மக்கள் கடமை என்றும் கூறுகிறோம். இன்று விவசாயம் கெட்டுப் போகவில்லை. ஒருபுறம் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்கிறோம், ஆனால் ரெவன்யூ அமைச்சர் அவர்கள் அபராதம் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இதற்கு என்ன சொல்வது என்று

எனக்குப் புரியவில்லை. களக்காடிலிருந்து திருச்செந்தூர் வரை 20 மடங்கு தண்டத் தீர்வை போடப்படுகிறது, இரண்டு மடங்கு தான் போடுகிறோம் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் தாலூகாவில் தண்டத் தீர்வை போடுவது, 15, 20 ஆண்டுகளாக போட்டுக்கொண்டு வருகிறார்கள். மணிமுத்தாறு திட்டம் கொண்டு வரப்பட்டபோது ஒரு உறுதி கொடுத்தோம். அரசாங்கம் உறுதி கொடுத்தது, நானும் உறுதி கொடுத்தேன். அதற்கு ஒரு கோடி கேட்டதற்கு மக்கள் 1 கோடி 20 லட்சம் கொடுத்தார்கள். மணிமுத்தாறு திட்டம் வந்தால் தண்டத் தீர்வை அகற்றப்படும், இரு போக நஞ்சையாக மாற்றுவோம் என்று அரசாங்கச் சார்பில் திட்டவட்டமாக உறுதி அளிக்கப்பட்டது. மணிமுத்தாறு வந்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன. 22,000-க்கு மேல் 10,000 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கலாம் என்று அதிகாரிகள் கணக்கிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆக மேலும் 10,000 ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுக்க அந்த அளவு தண்ணீர் இருக்கிறது. விசேஷ அனுமதி கொடுத்து சென்ற ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டும் 2,000-க்கு மேற்கொண்டு 10,000-க்கு தண்ணீர் கொடுத்து இரண்டு போகம் விளைவித்திருக்கிறார்கள். ஆக இப்படி இரண்டு போகம் விளைவிக்க தண்ணீர் கொடுக்க தண்ணீர் இருக்கிறது. அப்படியிருந்தும் தண்டத் தீர்வை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும்.

அடுத்தபடியாக ராமநதி என்ற ஒரு திட்டம் தென்காசி தாலூகாவில். எல்லாம் முடிந்து விட்டன. கடனா நதித் திட்டம், ராமநதித் திட்டம் ஆகிய இரண்டும் பரிபூர்ணமாக அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய நிலைமையில் என்ன காரணத்தினாலோ, பார்ட் 1-ல் சேரவில்லை, பார்ட் 2-ல் சேர்ந்தது என்று ஏதோ சொல்லிக்கொண்டு எடுத்துக் கொள்ளப்படவில்லை. கடனா நதித் திட்டம் 80 லட்சம் ரூபாய் திட்டம். ராமநதித் திட்டம் 30 லட்சம் ரூபாய் திட்டம். இதெல்லாம் சிறிய சிறிய திட்டங்கள்; சில சில லட்சம் ரூபாயில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பயன் அடையக்கூடிய திட்டங்கள், இன்று பெரிய திட்டங்கள் போட்டு நிறைவேற்றுகிறோம் என்று சொன்னால் அதை வரவேற்கிறோம்; கோயம்புத்தூரில் நடக்கட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. ஜில்லா வாரியாக ஆங்காங்கு இருக்கிற, பரிசீலனை செய்து முடிவு பெற்ற எல்லாத் திட்டங்களுக்கும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, நம்பூதிரிபாட் அரசாங்கம் கேரளாவில் இருந்தபோது அவர்கள் ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரித்தார்கள். பம்பா நதி போன்ற நதிகளிலிருந்து அவர்களுக்கு மின்சாரமும், நமக்குப் பாசனத்திற்கு தண்ணீரும் கிடைக்கக் கூடிய முறையில் அவர்களே மாஸ்டர் ப்ளானைத் தயாரித்தார்கள் அந்த மாஸ்டர் ப்ளானைப் பார்த்தேன். அது நம் அரசாங்கத்திற்கும் வந்திருக்கலாம். அவர்கள் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மாஸ்டர் ப்ளானை இம்ப்ளிமெண்ட் செய்தால் லட்சக்கணக்கான ஏக்கர்களுக்கு, ராமநாதபுரம் ஜில்லா வரண்ட பிரதேசம், கோவில்பட்டி, சங்கரன்கோவில் தாலூகா, வரண்ட முதுகுளத்தூர் ஆகிய இடங்களுக்கு செழுமை தரக்கூடிய அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது. அமைச்சர் ராமைய்யா அவர்கள் ஹைலெவலில் எடுத்துக்கொண்டு, மாஸ்டர் ப்ளானை எப்படி இம்ப்ளிமெண்ட் செய்வது, அதற்கு மத்திய அரசாங்கத்தை எப்படி நாடுவது என்று பார்க்கவேண்டும். அதோடு சொல்லுகிறேன், தேசத்தில் பிரிவினை சக்தி ஒழியவேண்டுமானால் இர்ரிகேஷன், பவர் இரண்டையும் தேசம் முழுமைக்கும் ஒன்றாக ஆக்கவேண்டும் என்பதை அமைச்சர் ராமைய்யா ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அந்த அளவில் மத்திய அரசாங்கம் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு நாம் சும்மா இருக்கக்கூடாது.

டொட்டஹில்லிலே 7,000 ஏக்கர் நிலத்தை 30,000 விவசாயிகளிடமிருந்து எடுக்கவேண்டாமென்று கனம் அங்கத்தினர் கோவிந்தராஜுலு அவர்களும் கனம் அங்கத்தினர் ஏழுமலை அவர்களும் சொன்னார்கள். தண்ணீர் கிடைத்தால் நில ஆர்ஜிதம் செய்வதை நிறுத்தி விடுகிறோம் என்று சொன்னார்கள். இன்னும் அது நிறுத்தப்படவில்லை. 3 கோடி ரூபாய் செலவு செய்யப்பட இருக்கிறது. இப்போது நமக்கு கிருஷ்ணா தண்ணீர் கிடைக்கப் போகிறது. மூன்று கோடி ரூபாய் வீணாகச் செலவு செய்யப்படுவதை நிறுத்தி, லாண்ட் அக்விஸிஷன் ப்ரொஸீடிங்ஸை நிறுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் மதிப்புக்குரிய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தண்ணீர் குறைவாகக் கொடுத்து நஞ்சை சாகுபடி செய்வதற்கு எதிர்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது உண்மைதான், சந்தேகம் கிடையாது. அனுபவத்தையும், புதிய கண்டுபிடிப்புகளையும் நாம் கருத்தில் கொண்டு காரியத்தைச் செய்தால், நம் ராஜ்யத்தைப் பொருத்த வரையில் இன்னும் அதிகமாகப் பெருக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இன்றைக்கு தஞ்சாவூரைப் பொருத்த வரையிலும், மற்றும் பல்வேறு ஜில்லாக்களில் பழைய பாசன வசதி இருக்கிறதே அவைகளைப் பொருத்தவரையில் நெல்லுக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்கிற முறையையும், கொடுத்திருக்கிற தண்ணீரை எத்தனை ஏக்கர்களுக்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்று கிடைத்திருக்கிற அனுபவத்தையும், கண்டுபிடிப்புகளையும் வைத்துப் பார்த்தால் இன்னும் பலமடங்கு நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் இங்கே நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூட இதைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறைந்த தண்ணீரைக் கொண்டு அதிக நிலங்களுக்குத் தண்ணீரைக் கொடுக்க முடியும் என்று எஞ்ஜினீயரிங் இலாகா பரிசீலனை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இதை நாங்கள் நேரடியாகப் பார்க்கிறோம். கீழ் பவானிப் பிரதேசத்தைப் பொருத்த வரையில் அது புஞ்சைத் திட்டம். புஞ்சைத் திட்டம் என்று சொன்னவுடனே, புஞ்சைத் திட்டம் என்று சொல்லி புஞ்சை வேளாண்மைதான் வைக்க வேண்டும் என்று கிடையாது. புஞ்சைக்குக் கொடுக்கும் தண்ணீரை வைத்துக்கொண்டு நஞ்சை விவசாயம் செய்கிறார்கள் என்றால் இந்த மாநிலத்தில் இருக்கின்றவர்கள் பாராட்டுவது மாத்திரமல்லாமல், தேசத்தினுடைய பாராட்டுக்களுக்கே உரியவர்கள். தஞ்சையைப் பொருத்த வரையில் 12 லட்சம் ஏக்கர்கள் காவேரியால் பாய்கிறது என்று சொன்னால், நிச்சயமாகச் சொல்லுகிறேன் . . . .

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கடைசியாக பதில் சொல்லத் தயாராக இருந்தாலும், ஒரு தவறான கருத்தை கனம் அங்கத்தினர் அவர்கள் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்லுவதால் இப்போதே அதற்கு பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். லோயர் பவானித் திட்டத்தைப் பொருத்த வரையில் புஞ்சைக்குக் கொடுக்கும் தண்ணீரைக் கொண்டு நஞ்சை சாகுபடி செய்வதாகவும், அதற்காக தேசமே பாராட்டவேண்டும் என்றும் சொல்கிறார்கள். அப்படி ஒன்றும் இல்லை. புஞ்சை சாகுபடி செய்வதற்கு பதில் நஞ்சை சாகுபடி செய்கிறார்கள். நஞ்சைக்கு வேண்டிய தண்ணீரை எடுத்துக் கொள்கிறார்கள்.

திரு. க. ர. நல்லசிவம்: முன்பு 2,000 க்யூசெக்ஸ் தண்ணீர் கொடுக்கப்பட்டது. அதை வைத்துக்கொண்டு மாத்திரம், மீதியுள்ள நிலங்களில் அந்த அளவுக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை, அதைக் கொண்டே விவசாயம் செய்து வருகிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். நான் ஒன்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ கேட்டதைக் கொண்டு, அல்லது தத்துவத்தை வைத்துக்கொண்டு சொல்லவில்லை. என்னைப் பொருத்த வரையில் நானே நேரடியாக மூன்று விதமான நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறேன். காளிங்கராயன் வாய்க்கால், அதிலிருந்து தண்ணீர் பாய்ச்சக் கூடிய நிலங்கள், லோயர் பவானியில் தண்ணீர் எடுத்துக் கொள்ளும் நிலம் ஆகிய மூன்று நிலங்களிலும் நானே சாகுபடி செய்துகொண்டிருக்கிறேன். தஞ்சையில் இப்போது இருக்கிற வாய்க்கால்கள், காளிங்கராயன் பகுதியில் தண்ணீர் நின்று கொண்டிருக்கிறது. இதில் ஏற்படக் கூடிய விளைச்சல் குறைகிறது. அதே காளிங்கராயன் வாய்க்காலில் இருந்து தண்ணீரை இறைத்து தோட்டங்களில் பாய்ச்சும்போது உற்பத்தி அதிகமாக வருகிறது, அந்தப் பக்கம் வரும்போது அமைச்சருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதை நான் அவருக்குக் காட்ட முடியும். மூன்றாவதாக, லோயர் பவானியைப் பொருத்த வரையில், நாங்கள் அஞ்சினோம், எஞ்ஜினீயர்கள் கருத்துக்கு எதிர்ப்பாக கிளர்ச்சி கூட நடத்தினோம். ஆனால் அனுபவத்தில் பார்க்கிறோம். 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் எடுத்து 1½ மடங்கு உற்பத்தி அதிகமாகிறது. கனம் அமைச்சர் திரு. மன்றாடியார் கூட எடுக்கிறார், அவரைக் கேட்டால் கூடச் சொல்லுவார். நாங்கள் சொல்வதெல்லாம் அதுதான். ஏதோ வீர தீர சாகசம் செய்தோம் என்று சொல்லவில்லை. இந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு பவானி ஆறு, காவேரி, தாம்பரபரணி, மணிமுத்தாறு ஆகிய ஆறுகள் விஷயத்தில் வருகிற காலத்தில் போடுகிற திட்டங்களை புஞ்சைத் திட்டமாகப் போட்டாலும் 100-க்கு 20 சத விகிதம் அதிகம் ஏற்படும்; நஞ்சை சாகுபடியே ஏற்படும் என்று கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், இலாகாவின் கவனத்திற்கும் கொண்டு வருவதற்காக திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன். இதை நாங்கள் இன்றைக்கு நேரடியாகப் பார்க்கிறோம். விவசாயிகள் உணருகிறார்கள். விவசாயிகள் நீங்கள் சொல்லுவதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தாங்களாகவே நேரடியாக அனுபவத்தில் பார்த்தால்தான் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். வருகிற காலத்தில், நமது மாநிலத்தில் இன்னும் பெருமளவுக்கு நீர்ப்பாசன வசதிக்கு இடம் இல்லை என்று சொல்லக்கூடிய நேரத்தில், இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரையில் எந்த செய்தியையும் நான் பார்த்ததில்லை, கேட்டதும் இல்லை. அதற்குத் துணிவு வேண்டும். இன்றைக்கு நடக்கலாம் அல்லது நடக்காமல் இருக்கலாம். உண்மையாக அரசாங்கம் இதைக் கருத்தில் வைத்துக்கொண்டு இதன்மீது இருக்கிற உரிமையைச் சொல்லவேண்டும். எதிர்க் கட்சிகள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டும்போது இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டு எதிர்க் கட்சிகள் அவர்களுடைய பொருளாதார, மொழித்துறையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை மட்டும் கூறுகிறார்கள். ஆனால், இந்த நீர் பாசனத் துறையில் நமக்கு இருக்கும் உரிமை பற்றி அவர்கள் கவனம் செலுத்துவதேயில்லை. அதைக் கருத்தில் கொள்வது கிடையாது. இன்றைக்கு இமயத்தில் சைனாக்காரன் படையெடுக்கிறான் என்றால், நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடுகிறோம். அங்கிருந்து பனியின் மூலம் வெள்ளப் பெருக்கெடுக்கும் கங்கை, சிந்து முதலிய நதிகளின் தண்ணீரிலும் நாம் உரிமை கொண்டாடுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஆகவே, இம் மாதிரி ஆறுகளை இணைப்பது பற்றி பரிசீலனை செய்து, இன்றைக்கு இல்லாவிட்டாலும், என்றைக்காவது கிடைக்கும் என்ற நோக்கத்தில், அதுபற்றி அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் மற்றவர்களும் ஒத்துழைத்து ஆவன செய்யவேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. செ. சதாசிவம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்தும், என் தொகுதியில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லி ஒரு சில காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்வதற்காகவும் இப்பொழுது எனக்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

என்னுடைய பகுதி மிகவும் வரண்ட பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மக்கள் அங்கே விவசாயம் செய்யப் போதுமான வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். அமராவதியைப் பொருத்தவரையில் அதன் பெரும் பகுதி கோயம்புத்தூர் ஜில்லாவிலேயே பயன் படுத்தப்படுகிறது. கடைசியில், கரூர் தாலூகாவிற்கும் உபயோகிக்கப்பட்டு வந்தது. ஆனால், அந்த ஆற்றில் அணை கட்டியபிறகு, அந்த அணையின் பூரண நன்மையையும் கோயம்புத்தூரில் உள்ள மக்களே அடைகிறார்கள். கரூர் தாலூகாவிற்கு ஒரு செண்டு நிலத்திற்குக்கூட புதிய பாசனம் ஏற்படவில்லை. ஆனால், அமராவதியில் இப்போது உபரித் தண்ணீர் இருக்கிறது. கோயம்புத்தூர் அதிகத் தண்ணீரை உபயோகிக்கிறார்கள் என்று நான் குறைகூறவரவில்லை. ஆனால் கரூர் தாலூகாவையும் கவனிக்கவேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். ஆற்றில் ஏராளமான தண்ணீர் இருக்கிறது. ஆனால், எங்கள் தாலூகாவில் உள்ள I. F. C. வாய்க்கால்களின் கடைகோடி மக்கள் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். காரணம் வாய்க்கால்கள் சரியானபடி பராமரிக்க போதிய பணம் இல்லாததே. பரம்பிக்குளம்-அளியார் திட்டத்தினால் 7,000

ஏக்கராக்கள் பாசனவசதி பெற்றபிறகு, ஏராளமான கழிவுநீர், ஊற்று நீர் இருக்கிறது. அதற்கு இப்பொழுதே திட்டம் வகுத்து, அமராவதியின் உபரித் தண்ணீரை எங்கள் பகுதியாகிய கரூர் தாலுகாவிற்கே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். எங்கள் தாலுகாவில் உள்ள வெங்கக்கல்பட்டி அணையின் மறுபுறத்தில் இருந்து ஒரு வாய்க்கால் பிரித்து பாசன வசதி செய்ய S.M.I.P. இலாகாவில் பூரா சர்வேயும் செய்து நிருத்தி வைக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாக அமுலாக்க வேண்டும். அமராவதி அணை கட்டிய காலத்தில் 10 ஆண்டு களுக்கு பின் மின்சாரம் உற்பத்தி செய்ய கொஞ்சம் தண்ணீரை உபரியாக வைக்கப்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். இப் போது 10 ஆண்டுகள் சென்று விட்டபடியால் அப்படி உபரித் தண்ணீர் இருந்தால் அதை எங்கள் பகுதிக்கு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். லோயர் பவானி வந்த காலத்தில், எங்கள் பகுதிக்கு அதனால் அதிக நன்மையில்லை. கோயம்புத்தூர் ஜில்லா வுக்குத்தான் கொடுக்கப்பட்டது. ஒரு சிறு பகுதிதான் எங்களுக் குக் கொடுக்கப்பட்டது. அந்த திட்டம் போட்ட காலத்தில் எங்கள் பகுதியும் சேர்த்து சர்வே செய்யப்பட்டது. ஆனால், அமலாக்கும் நேரத்தில் கைவிடப்பட்டது. மங்கலப்பட்டி வாய்க் காலில் இருந்து பிரியும் கவுர் மூலம் கார்வழிதுக்காச்சி கிராமங் கள் பாயும் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. லோயர் பவானி யிலும் அதிகத் தண்ணீர் இருக்கிறது. அதை ஈரோடு பகுதிக்கு கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. எங்கள் பகுதி யும் பிற்பட்ட பகுதி. ஆகவே, தயவுசெய்து எங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அமராவதி, நொய்யல், குடகனாறு முதலிய ஆறுகளில், உடனடி யாக பம்பிங் ஸ்கீம் மூலம் பம்புகள் வைத்து பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே, 2—10—1961 தேதிக்கு முன் உள்ள பம்பிங் ஸ்கீம்களை ரெகுலரைஸ் செய்து பர்மிட் கொடுக்க கலெக்டருக்கு உத்தரவு அனுப்பியிருக் கிறார்கள். அமராவதியிலிருந்தும், நொய்யலிலிருந்தும் தண்ணீர் கொண்டு வர தனிப்பட்ட முறையில் விவசாயிகள் ரூ. 20,000 வரை செலவுசெய்து, தண்ணீர் எடுக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இப்போது மேற்படி ஆறுகளில் தண்ணீர் இல்லை என்ற பிரச்னையே கிடையாது. ஆகவே 2—10—1961-க்கு பிறகும் வைத்த பம்பு செட்டுகளுக்கும் உடனடியாக பர்மிட்டுகள் வழங்கி, மின்சார மோட்டார் வைத்து விவசாயத்தை பெருக்க, ஆவன செய்ய வேண்டும். கனம் அங்கத்தினர் நல்லசிவம் சொன்னதுபோல், தண்ணீரைக் குறைத்து அதிகமாக உற்பத்தி செய்யமுடியும் என்று எங்கள் பகுதி விவசாயிகள் எடுத்துக் காட்டியிருக்கிறார் கள். நம் மாகாணத்தில் ஒரு ஆற்றின் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வீணாகாமல், விஞ்ஞான ரீதியில் பயன் படுத்தக்கூடிய முறை யை ஆராய ஒரு தனி இலாகா நிறுவி, அதன் மூலமாக நல்ல வசதி கள் செய்துகொடுக்க திட்டம் இட்டு இருப்பது கண்டு மகிழ்ச்சி. அதிலே அமைச்சரவர்கள் என் பகுதியையும் மனதில் கொண்டு,

மேற்படி ஆறுகளில் உள்ள உபரித் தண்ணீரின் உபயோகத்திற் கான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் 11-30 a.m. அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நீர்ப்பாசன மான்யக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். கேள்வி நேரத்தில் வைகை கால்வாய் திட்டத்தைப்பற்றி கேட்டபொழுது "அதைப்பற்றி மான்ய விவாதத்தில் நீங்கள் பேசலாம்" என்று சொன்னார்கள். வைகை கால்வாய் திட்டம் முக்கியமான ஒரு பெரிய திட்டம். 'அந் தத்திட்டத்தை நல்ல முறையில் ஒரு எடுத்துக் காட்டாகச் செய்ய வேண்டும் என்பதற்காக நாங்கள் அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்' என்று அமைச்சர் அவர்கள் கூறினார் கள். நான் அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், இந்தத் திட்டம் நீண்ட நாட்களுக்கு ஆராய்ச்சியிலேயே இருந்து விடாமல், உடனடியாக அதை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை அமுல் நடத்தினால் 20,000 ஏக்கர் பாசன வசதி பெறும் என்று தெரியவருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வைகை அணைக்கட்டுத் திட்டம் எடுத்துக் கொண்டபொழுது கிழக்கு ராமநாதபுரத்து மக்கள் தங்களுக்கு நல்ல காலம் வந்துவிட்டது, தமக்கு இருக்கும் கஷ்டம் தீர்ந்து விட்டது என்று நினைத்தார்கள். வைகை அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வரும்பொழுது வைகை ஆற்று இரு கரைகளிலும் உள்ள சில கண்மாய்கள்தான் பாசன வசதி பெறுகிறதேதவிர, வைகை ஆற்றிலிருந்து உள்ளே உள்ள சில கண்மாய்களுக்கு எல்லாம் பாசன வசதி கிடைப்பதில்லை. சாதாரணமாக தண்ணீர் வேண்டும் பொழுது திறந்துவிடுகிற தண்ணீர் அளவு போதவில்லை என்று கலெக்டர் மூலமாக கேட்டால்கூட, வைகை அணைக்கட்டிலிருந்து கிழக்கு ராமநாதபுரப் பகுதிக்கு 4 ரீச்சாகப் பிரித்து தண்ணீர் விடுகிறார்கள். மானாமதுரைப் பாலத்திலிருந்து மதுரைப் பாலம் வரையில் 4-வது ரீச். ஒரு ரீச்சுக்கு தண்ணீர் வருவதற்குள் 7 நாள் தாண்டி விடுகிறது. 4-வது ரீச்சுக்கு தண்ணீர் வருவதற்கு 28 நாள் ஆகிவிடுகிறது. ஆடி மாதக் கடைசி வரையில் ஆகிவிடு கிறது. திறந்து விடுகிற தண்ணீரின் அளவு அதிகமாக இருக்கு மானால் 4 ரீச்சிலுள்ள எல்லா கண்மாய்களுக்கும் தண்ணீர் கிடைப் பதற்கு ஹேதுவாக இருக்கும். 4 ரீச் வைத்து ஒவ்வொரு ரீச்சுக்கும் 7 நாட்களாக பிரித்துவிடுகிறார்கள். அதன் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. இதை மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். கலெக்டருடன் பேசி, அல்லது அந்தப் பிராந்தியத்தி லுள்ள விவசாய மக்களைக் கூட்டிப் பேசி இதற்கு என்ன செய்ய வேண்டுமென்று பரிசீலனை செய்து தக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் 30-ம் தேதி திருபுவனம் பிராந்தியத்திற்கு வருவதாக இருக்கிறது. அப்

பொழுது இதைப் பற்றி பேசினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கு அதிகப்படியான பாசன வசதிபெற வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன். சாதாரணமாக, முன்பு வைகை அணைக்கட்டு கட்டுவதற்கு முன்னால் ஆற்று நிறைய தண்ணீர் வரும். ஒரு கண்மாய்க்குப் பாய்ந்து கலுங்கு வழியாக வழிந்தோடி அடுத்த கண்மாய்க்கு தண்ணீர் போவது வழக்கம். இப்பொழுது தண்ணீர் அளந்து சீராக விடப்படுவதினால், ஒரு கண்மாயிலிருந்து அடுத்த கண்மாய்க்கு வழிந்து போவது சாத்தியமில்லை. அதனால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலங்களில் மகசூல் கிடைப்பதில்லை, சாவியாகப் போய்விடுகிறது. ஆகவே, இதை கவனித்து பல கால்களை வெட்டி, அந்தப் பகுதிகளுக்கு வேண்டிய பாசன வசதி செய்துகொடுக்கவேண்டும். இப்பொழுதிருக்கும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்களுடைய பிராந்தியமும் வரண்ட பிராந்தியம். என்னுடைய பிராந்தியமும் வரண்ட பிராந்தியம். தண்ணீரே வரமுடியாத பகுதி இருக்கிறதே, அந்தப் பகுதிகளுக்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? இளையங்குடியில், மங்கள நாட்டில் 400, 500 ஏகர்கள் இருக்கின்றன. திருவாடானை, முதுகளத்தூர் முதலிய பகுதிகள் வானம் பார்த்த பூமி. அந்தப் பகுதிகளுக்கெல்லாம் எந்த முறையில் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது? அந்தப் பகுதி மக்களுக்கும் சில வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் . அவர்களும் வரி கொடுக்கிறார்கள். அதிகமான வரி போடப்பட்டு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அப்படியிருக்கும்பொழுது கிழக்கு ராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கு, தண்ணீர் வசதி இல்லாத பகுதிகளுக்கு நிச்சயமாக ஒரு போகமாவது விளைவதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அதற்கு வேண்டிய வசதியை செய்துகொடுக்க வேண்டும். அரசாங்கம் போடும் வரியைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆனால், ஒரு போகம்கூட விளையவில்லை என்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? இதை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தப் பிராந்தியங்களில் குழாய்க் கிணறுகள் 'ட்யூப் வெல்ஸ்' அதிகப்படியான அளவிலே சர்க்கார் செலவிலே வைத்துக் கொடுக்க வேண்டும். கண்மாய் கரையிலே உள்கையில் குழாய் கிணறுகள் தோண்டி, அதற்கு மின்சார வசதி செய்துகொடுத்து, பாசன வசதி ஏற்படும்படிச் செய்யவேண்டும். பஞ்சாயத்து போர்டோ அல்லது அங்குள்ள டெப்யூடி தாசில்தாரோ அதனுடைய நிர்வாகத்தை வைத்துக்கொள்ளலாம். தேசிய நெருக்கடி சமயத்தில் நாம் அதிகமாக உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். தண்ணீர் வசதி இல்லாமல் எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும்? ஆகவே, இதற்கான சாத்தியக்கூறுகளை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் சென்ற அமைச்சர் அவையிலே பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபொழுது கிரிதுமால் ஸ்கீம் என்ற ஒரு ஸ்கீமை எடுத்துக்கொள்ளுவதாக யோசனை இருந்தது. 1960-ம் ஆண்டு மே மாதத்தில் மானாமதுரைக்கு அருகே இருஞ்சிறையில் ஒரு மகாநாடு நடந்தது. அதில் முதல் அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அப்பொழுது விவசாய அமைச்சர் அவர்கள் பேசியதைப்பற்றி சில பத்திரிக்கைக் குறிப்புகளைப் படிக்கிறேன். (கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் அதையெல்லாம் படிக்கவேண்டாம். 'டைம்' ஆகிவிடும்). மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த கிரிதுமால் ஸ்கீமை சேர்ப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். வைகை ஆற்றிலிருந்து பிரிந்து செல்கிறது கிரிதுமால் நதி. ஆகவே இதைப் பார்த்து பரிசீலனை செய்து, சர்வே செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் பல ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மங்களநாடு வரண்ட பிரதேசம். மானாமதுரையிலிருந்து கால்கள் சென்றிருக்கின்றன. ஹிந்து முஸ்லிம் சச்சரவு காரணமாக இளையாங்குடி வழியாக போகும் சுப்பன்கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிற இடமே தெரியாமல் போய் விட்டது. அதை சர்வே செய்து, அதற்கு வேண்டிய ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

சாதாரணமாக, நிலங்களை ஜாரி செய்துகொடுக்கும்பொழுது கண்மாய் நீர்ப்பாசன வசதி கிடைக்கக்கூடிய இடங்களில்தான் ஜாரி செய்து கொடுக்க வேண்டும். புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்கு ஜாரி செய்து கொடுக்கும்பொழுது, சாகுபடிக்கு வேண்டிய தண்ணீர் வசதியையும் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். கண்மாய் தண்ணீர் வரக்கூடிய இடமாகப் பார்த்து ஜாரி செய்து கொடுக்க வேண்டும். பாசன வசதிக்கு ஏற்பாடு செய்துகொடுத்து, அதிகமான நிலத்தை ஜாரி செய்து கொடுத்தால், விவசாயிகளுக்கு நலமாக இருக்கும்.

சாதாரணமாக, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வீடுகளுக்காக ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அதனால், உணவு உற்பத்தியைப் பொருத்த வரையில் சீர்கேடான நிலை ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது நாட்டின் தற்காப்பை அரசாங்கம் எப்படி காக்கத் தவறியதோ, அதுமாதிரி ஒன்று இரண்டு ஆண்டுகளுக்குள் உணவுப் பஞ்சம் வந்து சமாளிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கண்மாய் மராமத்து நல்ல முறையில் நடக்கிறது. சிவகங்கை புட் ப்ரொடக்ஷன் யூனிட் சிறந்த முறையில் சேவை செய்கிறது. கால்வாய் மராமத்து செவ்வனே செய்யப்பட வேண்டும். கால்வாய் மராமத்தில் மேலும் கவனம் செலுத்தி, நல்ல முறையில் அவைகளை மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. எஸ். சின்னய்யன்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நீர்ப்பாசன மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். நமது அரசாங்கம் 15 ஆண்டுகளுக்கு முன்னால், சுதந்திரம் அடைவதற்கு முன் அரசாங்கம் பின்பற்றி வந்த கொள்கையை அடியோடு மாற்றி, மக்களுடைய நன்மையையே அரசாங்கத்தினுடைய நன்மையாகக் கருதி, மக்களுடைய க்ஷேமத்தையே அரசாங்கத்தினுடைய க்ஷேமமாகக் கருதி, லாப சதவிகிதம் என்ற கொள்கையை மாற்றி, மக்களுடைய லாபம் என்றத் திட்டத்தை மனதிலே வைத்து, நல்ல முறையிலே இந்த நீர்ப்பாசனத் துறை பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையிலே, வரண்ட பிரதேசமாக இருக்கக்கூடிய, எந்த வாய்க்கால் வசதியும் இல்லாத சேலம் ஜில்லாவிலே, அதிலும் குறிப்பாக நாமக்கல் தாலுகாவிலே எந்தவிதமான ஒரு வாய்க்கால் வசதியும் கிடையாது. ஏரிகளுக்கு தண்ணீர் வருவதற்காவது ஏதாவது வசதி இருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

'தானந் தவமிரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா தெனின்'

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். வானம் பெய்யவில்லை என்றால், தானமும், தவமும் மக்கள் மத்தியில் இருக்காது, அரசாங்கத்தின் மத்தியிலும் இருக்காது. மழை இல்லாத காரணத்தினால் எங்கள் பகுதி மிகவும் வரண்டு போயிருக்கிறது. எங்கள் பகுதிக்கு ஏதாவது ஒரு நல்ல திட்டமாக உருவாக்கித்தரவேண்டும், கண்ணும் கருத்துமாக இருந்து அந்தக் காரியத்தைச் செய்துதரவேண்டும் என்று மிகப் பணிவோடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் தாலுகாவில் எல்லா இடங்களையும் மந்திரி அவர்கள் பார்த்திருக்கிறார்கள். எந்தக்கால்வாய் மூலமாக எந்த ஏரிக்கு தண்ணீர் கொண்டுபோகலாம் என்பதையெல்லாம் பற்றிக் கூட கவனம் செலுத்தியிருக்கிறார்கள். எங்கள் பகுதியைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு விளக்கமாகத் தெரியும். ஆகவே, கனம் அமைச்சர் அவர்கள் நாமக்கல் தாலுகாவை மனதிலே வைத்து, ஏரிகளுக்கு தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் என். புதுப்பட்டி என்ற கிராமத்தில் உப்பாற்றுவாரி திட்டத்தை நிறைவேற்றினால் நலமாக இருக்கும். உப்பாற்றுவாரி என்று ஒரு வாரி வருகிறது. அந்த வாரியை தடுத்து ஏரிகளுக்கு தண்ணீர் விட்டால் 2, 3 ஏரிகள் நிரம்பும்; கிட்டத்தட்ட 140,200 ஏகர் பாய்வதற்கு வசதி ஏற்படும். அதோடு, ஏரிகள் நிரம்பினால், கிணறுகளில் நிறைய தண்ணீர் வரும். கிணற்று பாசனத்தின் மூலம் அதிகமாக விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும். இந்த உப்பாற்று வாரியிலே அணைக் கட்டு கட்டுவதற்கு எஸ்டிமேட்டு தயாரிக்கப்பட்டு, இப்பொழுது ஏதோ கோளாறு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதைத்

துரிதப்படுத்தி, இந்த உப்பாற்றுவாரியிலே, அணைக் கட்டி, ஏரிகளிலே தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற இரண்டு மூன்று ஆண்டு காலமாகவே, வடவத்தூர் ஏரி போன்ற ஏரிகளைப் பழுது பார்ப்பதற்கு எஸ்டிமேட்டுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அப்படித் தயாரிக்கப்பட்டிருந்தும், இன்னும் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. கனம் அமைச்சர் அவர்களே, இதிலே அக்கறை காட்டி, இந்த ஏரிகளை எல்லாம் உடனடியாக மராமத்து செய்து, அவைகளில் தண்ணீர் தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நேரம் குறைவாக இருப்பதால் நான் பொதுவான முறையிலே தான் பேசுகிறேன். எங்கள் பகுதியில் செய்யவேண்டிய மராமத்து வேலைகளைப் பற்றி எல்லாம் எங்கள் ஜில்லாத் தலைவர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர் குறிப்பிட்ட எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. அ. தியாகராஜன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சிக்காரர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூபாய் 800 லட்சம் ஒதுக்கியிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனது தொகுதியாகிய புதுக்கோட்டைப் பகுதியிலே பல ஆறுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் கூறும்போது, ஆற்றிலே வருகின்ற ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட வீணாக விடப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதை நான் பாராட்டுகின்றேன். அதே சமயத்தில் வெள்ளாற்றில் ஓடுகிற தண்ணீர் பயன்படுத்தப்படாமல் வீணாகக் கடலில் போய் விழுகிறது. அதற்கு ஒரு திட்டத்தைப் போட்டு அந்த ஆற்றிலே சுந்தரம்பட்டியில் இருக்கும் ஒரு அணையைக் கட்டினால், அதன் மூலமாக புதுக்கோட்டைப் பகுதிக்கும், திருமயம் பகுதிக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். சுந்தரம்பட்டியில் இருக்கிற சிறிய அணைக்கட்டை விரிவு படுத்தி நல்ல முறையில் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அண்மையில் திருச்சி மாவட்ட டெவலப்மெண்ட் கவுன்சிலிலிருந்து, கட்டளை வாய்க்காலிலிருந்து அதிகப்படியான தண்ணீரை 51 மைல் நீளத்திற்கு புதுக்கோட்டைப் பகுதிக்கு கொண்டு வர வேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார்கள். அதற்காக ரூபாய் 63 லட்சம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டது. அப்படி 51 மைல் நீளம் விஸ்தரித்தால், சுமார் 5,212 ஏக்கருக்கு மேல் நீர்ப்பாசன வசதி பெறமுடியும்.

சொன்னார்கள். இதை அமைச்சர் அவர்கள் நன்கு கவனித்து, இந்தக் கட்டளை வாய்க்கால் தண்ணீரை புதுக்கோட்டைப் பகுதிக்கு கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்று சொல்லு வார்கள். அதைப் போன்று, இந்தக் கட்டளை வாய்க்கால் பிரச்னை சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொண்டமான் கால்வாய்த் திட்டம் இருந் தது. இப்பொழுது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இல்லை என்று சொல்லப்பட்டது. கட்டளை வாய்க்கால் திட்டத்தை விரிவு படுத்தினால் போதும், வாய்காலிலிருந்து நேரடியாக தண்ணீர் கிடைக்கவில்லை என்றாலும், கண்மாய்களில் நிரப்பிக் கொடுத்தால், புதுக்கோட்டை பகுதி பூராவுக்கும் பாசன வசதி ஏற்படும். கனம் அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டையில் பிறந்தவர் என்ற காரணத்தால் நான் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதைச் சீர்தூக்கிப் பார்த்து, வரண்ட பிரதேசமாக இருக்கிற காரணத்தால் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குழாய்கள் மூலமாக தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப் படும் என்று சொன்னார்கள். அமைச்சர் கனம் ராமய்யா அவர்கள் திருமயம் தொகுதிக்கு குழாய் மூலம் என் காலத்திலேயே காவேரித் தண்ணீரை கொண்டு வந்தே தீருவேன் என்று சொன்னார்கள் அப்படியாவது தண்ணீர் கொண்டு வருவதற்கு வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இளிக்குடிக்குப் பக்கத்திலே வெள்ளாற்றைத் தடுத்துக் கொடுத் தால் அப்பகுதியில் உள்ள பேயால், வலைப்பட்டி, வேப்பங் கண்ணிப்பட்டி முதலியவைகட்கும் நல்ல முறையில் பயன் படும். அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியிலே வேம்பனூர் கண்மாய் இருக்கிறது. அங் கிருந்து வெள்ளாறு பிரிகிறது. இந்தக் கண்மாய் நீரை தளிஞ்சிக் கண்மாயில் விட்டால் அங்கிருந்து பல பகுதிகளுக்கு வந்து, 7, 8 கண்மாய்கள் பெருகுவதற்கு வழிவகை ஏற்படும். இதைப் பரி சீலனை செய்துபார்த்து, எஞ்ஜினியர்கள் எஸ்டிமேட் தயாரித்து அனுப்பியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் இது சம்பந்தமாக கனம் முதல் அமைச்சர் அவர்க ளிடத்தில் ஒரு மகசர் கொடுத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், கேள்வி நேரத்தில் பதில் சொல்லும்பொழுது, அந்தமாதிரி மகசர் ஒன்றும் வரவில்லை என்று சொன்னார்கள். அதையும் கவனித்துப் பார்த்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மணப்பாறைக்குப் பக்கத்தில் கருப்பூரில் ஒரு குளம் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டு, உடைப்பு ஏற்பட்டது. அதை உடனடி யாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். எஸ்டி

மேட் போடப்பட்டது என்று சொல்லுகிறார்கள். அதையும் நிறை வேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். உளவயல் கால்வாயிலிருந்து கரம்பக்குடிப் பகுதிக்கு தண்ணீர் கொடுப்ப தற்கு வாய்ப்பு இருக்கிறது. அதையும் செய்து தர வேண்டு மென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எங்கள் கோபித் தாலூகாவிலே 1958-ல் மாகாண காங் கிரஸ் மகாநாடு நடந்தது. அப்பொழுது முன்னாள் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இருந்தார்கள். அந்த மகாநாட்டிற்கு ஒரு மாதத்திற்கு முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் கோபி தாலூகாவிற்கு வந்தார்கள். அவர்கள் வந்தபொழுது, அந்த கீழ் பவானி ஆயக்கட்டைச் சார்ந்த விவசாயிகள், ஐந்து நாளைக்கு ஒரு தரம் தண்ணீர் கொடுப்பதினால் புஞ்செய் தானியம் சாகுபடி செய்வது கஷ்டமாக இருக்கிறது என்றும் புஞ்செய் வெள்ளாமை செய்தால் அதிக தான்யம் கிடைப்பதில்லை என்றும் விண்ணப் பித்துக் கொண்டார்கள். அவர் மறுபடியும் 15 நாட்கள் கழித்து வருகிறேன், அதற்குள் ஒரு சப்-கமிட்டி ஏற்படுத்தி, ஒவ்வொரு கிராமத்திலும் என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்து, அதைக் கவனித்துச் செய்கிறேன் என்று சொன்னார்கள். அதன்படி 15 நாட்கள் கழித்து வந்தார். ஒரு சப்-கமிட்டி ஏற்படுத்தி, ஒவ் வொரு கிராமத்திற்கும் "டர்ன் ஸிஸ்டம்" நல்லதா, புஞ்செய் தானியத்திற்கு தண்ணீர் கொடுப்பது நல்லதா என்று எல்லா ஊர் களிலும் போய்க் கேட்டார்கள். நிதி அமைச்சர் அவர்களும் சில கிராமங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். சப்-கமிட்டியில் இருந்த எல்லோரும் தனித்தனியாக ரிப்போர்ட் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி ரிப்போர்ட் கொடுத்தார்கள். "டர்ன் ஸிஸ்டம்." இருப்பதுதான் நல்லது, அப்பொழுதுதான் பாசன வசதி செய்ய முடியுமென்று சொன்னார்கள். அதற்குப் பின்னர் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலில் இந்த மாதிரி டர்ன் ஸிஸ்டம் இருப்பது நல்லது என்று தீர்மானித்தோம். இப்பொழுது இந்த ஸிஸ்டம் இருப்பதால், நல்ல முறையில் பயிர்செய்ய முடிகிறது. எனக்கு முன்பு பேசிய திரு. நல்லசிவம் அவர்கள் நான்கு நாளைக்கு ஒரு தரம் தண்ணீர் கொடுத்தால் போதும் என்று சொன்னார். ஆனால், அவர் ஈரோட்டுக்குக் கிழக்கே இருக்கிறார். அவர்களுடைய ஊர்கள் எல்லாம் கீழாக இருக்கின்றன. ஈரோட்டுக்கு மேற்கேயும் தெற்கேயும் மேடாக இருப்பதால் நான்கு நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் கொடுத்தால் நெற்பயிர் வரண்டுவிடும். 1958-ஆம் ஆண்டில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் வந்து பார்த்ததில், 'டர்ன் ஸிஸ்டம்' தான் நல்லது என்று சொல்லி, டர்ன் சிஸ்டம்தான் நடந்து கொண்டு வருகிறது. கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர் கள் சொல்வது மாதிரி பக்கத்தில் காலிங்கராயன் வாய்க்கால் போவதாலும், தெற்கேயும் மேற்கேயும் மேடாக இருப்பதாலும், அவருடைய ஊர்ப்பக்கம் கசிவு இருக்கலாம். அதனால், நான்கு

நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் கொடுத்தால் போதும் என்று சொல்கிறார். ஆனால், ஈரோட்டுக்கு மேற்கே லோயர் பவானி அணை வரையிலும் நான்கு நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் கொடுத்தால் நெல் விவசாயம் வரமுடியாது. பூமி வெடித்துப் பயிர்கள் வரண்டுவிடும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். டர்ன் சிஸ்டம்தான் சிறந்தது என்று நான் அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கீழ் பவானி வாய்க்காலிலுள்ள உபரித் தண்ணீரை அந்தந்த இடங்களில் அணை கட்டி, பாசனத்திற்குக் கொடுத்தால் இன்னும் இருபதாயிரம், முப்பதாயிரம் ஏக்கர்களில் அதிகம் நெல் சாகுபடி செய்ய முடியும். இப்பொழுது ஆயக்கட்டில் தொடர்ந்து மூன்று வருஷங்களாக நெல் பயிர் செய்யாமல் இப்போது நெல் சாகுபடி செய்தால், தண்டத் தீர்வை விதிப்பதற்கு அரசாங்கத்தில் உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. அதை நீக்கும்படி நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அதோடு, கீழ் பவானி வாய்க்கால் பாசனத்திலுள்ள பயிர்களுக்கு பயிர் வாரியாக தீர்வை விதிப்பதை ஒருமுக வரியாகத் தீர்வை விதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

* திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விருமபுகிறேன். உடையார்பாளையம் தாலுக்காவில் நீர்ப் பாசன வசதி மிக மிகக் குறைவாக உள்ளது. அங்குள்ள ஆவி ஏரி பள்ளம் இல்லாமல் இருக்கும் காரணத்தால, அதில் தண்ணீர் தேங்கியிருப்பதில்லை. அந்த ஏரியை உடனடியாக ஆழப்படுத்தி, அதில் தண்ணீர் தேங்கியிருக்கும்படிச் செய்தால், பொது மக்கள் குளிப்பதற்கும், பாசனத்திற்கும் வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, பொன்னேரி என்கிற ஒரு ஏரி இருக்கிறது. அதிலும் தண்ணீர் சரியாகத் தேங்குவது கிடையாது. அதையும் உடனடியாக ஆழப்படுத்தினால், 30, 40 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளு கின்றேன்.

உடையார்பாளையம் தாலுக்காவில், நான் மேலே குறிப்பிட்ட ஆவி ஏரி, பொன்னேரி ஆகிய இரண்டு ஏரித் திட்டங்களையும் அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு கவனித்து, அவற்றை ஆழப்படுத்தித் தண்ணீர் தேங்கச் செய்வதற்கான ஏற்பாடு களைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

கொள்ளிடத்திலிருந்து ஜெயங்கொண்டாம் வரை குழாய்கள் அமைத்து, அதன் மூலம் தண்ணீர் கொண்டுவரப்போவதாகக் கேள்விப்படுகிறேன். அந்தத் திட்டத்தையும் உடனடியாக நிறை வேற்றி, ஜெயங்கொண்டாம் மக்களுக்குக் குடி தண்ணீர்ப் பிரச்சி னையைப் போக்குவதற்கு உதவவேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அத்துடன், என்னுடைய தொகுதியாகிய ஜெயங்கொண்டத்தில் பொதுக் கிணறுகள் வெட்டி, தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் போட்டிருக்கிறார்கள். அந்த ரோடுகள் வசதியாக இல்லை. உடனடியாக அங்கு சரளை போடுவதற்குப் பஞ்சாயத்து யூனியன் முன்வரச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

உடையார்பாளையம் தாலுக்காவில் காட்டாறுகள் ஏராளமாக உள்ளன. அந்தக் காட்டாறுகளில் வரும் தண்ணீரை ஏரிகளுக்குக் கொண்டுவந்து தேக்கினால், அதுவும் பாசனத்திற்கு வசதியாக இருக்கும்.

உடையார்பாளையம் தாலுக்காவில் ஹரிஜன மக்கள் வாழும் இடம் மோசமாக இருக்கிறது. அந்த ஹரிஜனங்களுக்கு எல்லா வசதிகளும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவருக்கு நன்றி தெரிவித்து, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நம்முடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

தேசீய நெருக்கடியை முன்னிட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக நம்முடைய மத்திய அரசாங்கத்திலிருந்து ஐம்பது சதவிகிதம் மானியக் தொகை கொடுப்பதற்கேற்ற திட்டம் இப்பொழுது வந்திருப்பதற்காக நான் என்னுடைய பாராட்டு தலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டாவது, என்னுடைய தொகுதியைப் போன்று இருக்கக்கூடிய வறண்ட பிரதேசங்களுக்கு, பஞ்சப் பிரதேசங்களுக்கு இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை விரைவிலே அமல் நடத்துவதற்கேற்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்யவேண்டு மென்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

‘ஏற்கெனவே கீழ் பவானித் திட்டமாக உருவாய்விட்டது, இனித் தண்ணீர் இல்லை’ என்று இன்ஜினீர்களும் அமைச்சர்களும் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். அதனால் நான் இந்த இடத்திலே என் தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது.

இன்றைக்கு நாம் இப்பொழுது 13 கோடி ரூபாய் மானியத்திற்கு வோட்டளிக்கப் போகிறோம். இந்தப் பதின்மூன்று கோடி ரூபாயை ஒரு பாத்திரத்தில் வைத்து, அந்த 13 கோடி ரூபாயையும் கழுவி, கழுவிய தண்ணீரைக் கொண்டாவது எங்களுடைய தொகுதி மக்கள் கண்ணீரைத் துடைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களானால், அதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பதின்மூன்று கோடி ரூபாயில் ஒரு ரூபாய் கூட—பெரிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கோ, விசேஷ நீர்ப்பாசனத் திட்டத்திற்கோ, சிறிய குளம் குட்டைகளைச் செப்பனிடுவதற்கோ—என்னுடைய தொகுதியில் கடந்த ஆறு ஆண்டுக் காலமாக செலவழிக்கப்படவில்லை என்ற ஏக்கத்தினால் என்னுடைய உள்ளத்திலே ஏற்பட்டிருக்கிற குமுறலை நான் இங்கே சொல்லாமலிருக்க முடியாது.

என் தொகுதி மக்கள் இரண்டு முறையும் எனக்கு வோட்டளித்திருக்கிறார்கள். நீர்ப்பாசனம் இருந்தால் உணவு உற்பத்தி பெருகும். மின்சாரம் கொடுப்பார்கள். அந்த இடத்தில் பார்க்கும்போது, நீர்ப்பாசனத் துறையில் ஸைபர். ஒரு கிணறு வெட்டவேண்டுமானால் 120 அடி வெட்ட வேண்டியிருக்கிறது. நூற்றிருபது அடி ஆழத்திலே கிணறு வெட்டவேண்டும். கீழே பார்த்தால் தலை கிறு கிறுத்து கிணற்றிலே விழக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையில் எப்படி நாங்கள் உணவை உற்பத்தி செய்ய முடியும் என்று சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். எந்தத் திட்டமோ எனக்குத் தெரியாது—மேல் பவானித் திட்டமோ, குந்தாத் திட்டமோ எதுவாக இருந்தாலும்—நான் கேட்டுக்கொள்ளுவது என்னுடைய தொகுதி மக்களுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதியை எப்படியாவது செய்துகொடுத்துவிட வேண்டும்—அது சிறிய குளம் குட்டைகளாக இருந்தாலும் சரி.

சங்கனூர் பள்ளத்தைப் பற்றி ஆறு ஆண்டுக் காலமாக இந்தச் சபையிலே நான் சொல்லி வருகின்றேன். ஐப்பசி மாத மழை வந்தவுடனே ஓரத்திலிருக்கும் எல்லாத் தோட்டங்களையும் மணல் மேடாக்கிவிடும். அந்த மணலைப் போக்குவதற்கு விவசாயிகள் ஒவ்வொருவரும் ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதற்குத் தடுப்புச் செய்வதற்கு இந்த அரசாங்கம் காலதாமதம் செய்கிறது.

ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது. திட்டம் உருவாகி, ரெவினியூ போர்டுக்கோ, டிபார்ட்மெண்டுக்கோ இன்னும் வரவில்லை. கோயம்புத்தூர் ஜில்லாவில் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இப்படியிருக்கும்போது இங்கே 13 கோடி ரூபாய்க்கு நான் வோட்டளித்துவிட்டுக் கோயமுத்தூருக்குச் செல்வேனானால் என்னுடைய தொகுதி மக்கள் என்னை என்ன என்று நினைப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கீழ் பவானித் திட்டத்தில் கடை கோடியில் (டெயில் எண்டு) உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் ‘எக்ஸ்ஸெம்ப்ஷனை’ ஆண்டு தோறும் தொடர்ந்து கொடுக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக 1962-ம் வருஷம் புஞ்சையாக இருந்த பூமியை நஞ்சையாக மாற்ற சிலருக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். 12-00 noon.
அனுமதி பெறாமலேயே சிலர் விஷயம் தெரியாது நஞ்சையாக்கி இருக்கிறார்கள். இந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் தண்டத்தீர்வை விதிக்கிறார்கள். அப்படியின்றி இந்த பூமியை நஞ்சையாக ஆக்கக்கூடாது என்று முன்கூட்டியே தண்டோரா மூலமாக எல்லோரும் அறியும்படியாக விளம்பரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக எங்கள் ஜில்லாவிலே பரம்பிக்குளம் திட்டமானது நல்லமுறையிலே உருவாக்கப்பட்டு வருகிறது. சௌகரியமாகவும் வேலை நடந்து வருகிறது. அதனைப் பார்க்கும்போது என்னுடைய தொகுதியைப் பற்றிய வரையிலும் எனக்கு குறை இருந்தாலும் கூட அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் என்ற முறையில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பாகப் பார்க்கப்போனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலே செய்து இருக்கக்கூடிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பஞ்சத்தை, பட்டினியைப் போக்குவதற்கு திட்ட காலத்திலே நல்ல முறையில் உதவி செய்ததற்கு அமைச்சர் அவர்களையும் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டையும் பாராட்டிக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் நம்முடைய நாட்டிலே பஞ்சத்தை போக்குவதற்கு நீர்ப்பாசன திட்டங்களானது பொதுப்படையாக நல்ல பணி செய்து இருக்கிறது.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட வரையில் எந்த வேலையும் நடைபெறவில்லை என்று குறிப்பிட்டேனே தவிர, நாடு முழுவதும் பொதுவாகப் பார்த்தால் நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் நல்ல முறையில் நிறைவேறி இருக்கின்றன. ஒரு சிறிய அளவு தண்ணீர் கூட வீணாக்கப்படவில்லை. ஆகவே இத்தகைய சிறப்பான பணியை புரிந்து கொண்டிருக்கிற கருணையுள்ளம் படைத்த நமது அமைச்சர் அவர்கள்—பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள், அப்படியிருக்க என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை

எனக்கு இருக்கிறது. இந்தத் திட்டக்காலத்திலேயே என்னுடைய தொகுதி பயன்பெறத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. ஆறுமுகம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானிய கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சியினர் கொடுத்திருக்கிற வெட்டுப்பிரேரணையை ஆதரித்துப் பேசுகிற நோக்கில் நான் என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டமட்டும் உள்ள சில குறைகளை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றையதினம் பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கும் கனம் திரு. ராமையா அவர்கள் முன்பு மின்சார அமைச்சராக இருந்தபோது என்னுடைய சேலம் வட்டத்திற்கு வந்து இருந்தார்கள். அப்பொழுது என்னுடைய தொகுதியில் சில வசதிகளை நீர்ப்பாசனத்திற்காகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அந்த நோக்கில் அமைச்சர் அவர்கள் அவைகளைச் செய்து தருவதாக வாக்குறுதியளித்தார்கள். ஆனால் பிறகு பரிசீலனை செய்து பார்த்ததில் இந்த இடங்கள் பிரயோசனம் இல்லை என்று தள்ளிவிட்டார்கள். இப்பொழுது மீண்டும் பரிசீலனை செய்து பார்த்ததில் அங்கு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவது சாத்தியமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நல்ல காரியங்களைக்கூட மிந்தாத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள் கொஞ்சம் தாமதப்படுத்துகிறார்கள். நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவேண்டுமென்று நான் இந்த நோக்கிலே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லப்போனால் சாமி வரம் கொடுத்தால் கூட பூசாரி வரங்கொடுக்கமாட்டான் என்று சொல்வார்கள். அதைப்போல இன்றையதினம் அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று விரும்பினால் கூட சிறிய அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள். ஆகவே என்னுடைய வட்டாரத்தில் சில நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினால் 500 ஏக்கரா மின்னக்கல் ஏரிகளால் நிலங்களுக்குப் பாசனவசதி ஏற்படும்.

அடுத்து பூலாவரி கிராமத்திலுள்ள ஒரு பெரிய ஏரிக்கு கால்வாய் வெட்டிக்கொடுக்க வேண்டுமென்று அங்குள்ள பொது மக்களும் பஞ்சாயத்தும், ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு பல முறை தெரிவித்திருந்தும்கூட, அதற்கு இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அமைச்சர் அவர்களும் சேலம் மாவட்டம் மிக வரண்ட பிரதேசம் என்று நன்றாகத் தெரியும். ஆகவே இந்த மாவட்டம் பிற்போக்கான நிலைமையில் இருக்கிற காரணத்தால், இம்மாவட்டத்தில் சேலம் தாலுக்கா, ராசிபுரம் தாலுக்கா போன்ற பகுதிகளுக்கு ஒரு திட்டத்தை உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் போரிங் செட்டுகளும் போட்டுத்தர வேண்டும். அவ்வாறு போரிங் செட்டுகள் போடுவதற்கு செலவு அதிகமானால் பாசன வசதியுள்ள நிலங்களுக்கு எந்த அளவுக்கு வரி போடுகிறார்களோ அதே வரியை இந்த போரிங் செட்டு அமைத்துக்கொடுக்கிற பிரதேசத்திற்கும் விவசாயிகளிடத்தில் வசூலிக்கலாம். ஆகவே இவ்வாறு போரிங் செட்டு மூலமாகவும் பொது ஊற்றுக் கிணறு மூலமாக பாசன வசதி அளிக்கவேண்டும்.

அடுத்து கிராமங்களில் உள்ள ஏரிகளை இன்றையதினம் காட்டிலாகாவினர் எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதைச் சிறிது சீர்தூக்கிப் பார்த்து ஏரிகளை மராமத்து செய்து அதை நீர்ப்பாசன வசதிக்கு பயன்படுமாறு செய்து விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஏரிகளை காட்டிலாகாவினர் எடுத்துக்கொள்ளாமல் ஒரு ஏற்பாட்டை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய தாணிப்பாடி தொகுதியில் சாத்தனூர்த் திட்டம் வந்திருப்பது எங்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம் என்று நான் முன்பே கூட சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டத்தின் இரண்டாவது நிலைக்காக 8.45 லட்ச ரூபாய் ஒதுக்கி இப்பொழுது வேலை நடைபெற்று வருகிறது. இன்னும் கூடிய சீக்கிரத்தில் இத் திட்டம் நிறைவேறிவிடும் என்று நம்புகிறேன். இந்த இரண்டாவது நிலை காரணமாக தண்ணீர் அளவு இரண்டு மடங்காகி அதிகமான அளவுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்குமென்று கருதுகிறேன். இத்தகைய நிலை இருப்பதினால் தென் பெண்ணை ஆற்றின் தென்கரையிலே உள்ள நிலங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பார்களேயானால் பஞ்ச பூமியாக இருக்கிற தாணிப்பாடி போன்ற பகுதி கொஞ்சம் வளமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் பருவ காலத்தில் தண்ணீர் விடுவதில்லை என்றும் டிசம்பர், ஜனவரி மாதத்திலேயே தண்ணீரை தடுத்து விடுகிறார்கள் என்றும் தெரிகிறது, அதனால் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. குறிப்பாக இந்த மாதம் கூட 31-ம் தேதி யோடு தண்ணீரை நிறுத்திவிடப் போகிறார்களாம். அதற்கு ஒரு சட்டமும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எந்த ஒரு சட்டமாக இருந்தாலும் அது விவசாயிகளின் நன்மைக்காகத்தான் இருக்க வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட சட்டம் இருக்குமானால் அந்த சட்டத்தை திருத்தி, விவசாயிகளுக்கு 30—4—1963 வரையிலாவது தண்ணீர் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திருவண்ணாமலையில் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து குழாய் மூலமாக அங்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டிருக் கிறார்கள் என அறிகிறேன். அதை பரிசீலித்து உடனடியாக நிறை வேற்றுவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையிலிருந்து உற்பத்தியாகும் செய்யாற்றில் பரமநத்தம் கிராமத்தின் மேற்குப் புறத்தில் அணை கட்டினால் செங்கம் தாலுக்காவில் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும். அது பற்றிச் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தந்தப்புதுப் பாளையத்திற்கு மேற்குப் பக்கத்தில் நாலைந்து பர்லாங் தூரத்தில் காட்டின் மத்தியில் புத்தேரி என்ற ஏரி பழைய காலத்தில் இருந்ததாகவும், இப்போது தூர்ந்துவிட்டதாகவும், அந்த ஏரியைப் புதுப்பித்துக் கொடுத்தால் புதுப்பாளையம் வட்டத்தில் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படுமென்றும் பஞ்சாயத்து தீர்மானம் போட்டுச் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்போது மராமத்து அமைச்சராகவும் தற்போது விவசாய அமைச்சராகவும் இருக்கக்கூடிய கனம் கக்கன் அவர்கள் அங்கு வந்த சமயத்தில் அவருக்குக் கொடுத்த வரவேற்புரையிலும் அதைப்பற்றி கூறியிருக்கிறார்கள். இப்போது இருக்கும் மராமத்து அமைச்சர் அவர்கள் அந்தக் குறையைத் தீர்த்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலே இருக்கின்ற ஏரிகளை ஆழப்படுத்துவதற்காக இப்போது தூர் எடுக்கிறார்கள். மழை பெய்தவுடன் அவை தூர்ந்து விடுவதால் மூன்று, நான்கு மாதங்கள் வருகிற தண்ணீர் கூட நின்று போய்விடுகிறது. அந்த ஏரிகளை நல்ல முறையில் ஆழப்படுத்தி பாசன வசதி செய்து தருவதோடு அங்குள்ள கால்வாய்களையும், ஓடைகளையும் புதுப்பித்துக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கிணறுகளை வெட்டுவதற்காக 97 லட்சம் ரூபாய் கடனாக வும், 16 லட்சம் ரூபாய் மானியமாகவும் கொடுத்திருக்கிறார்கள். பம்ப் செட் வாங்கிக் கொடுக்க 22.16 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கிறார்கள். இந்தச் சலுகைகளையெல்லாம் வசதிபடைத்த

வர்கள் மட்டும் அனுபவித்துக் கொள்ளாமல் ஏழைகளாக இருக் கிறவர்களுக்கு, குறைந்தபட்சம் ஐந்து ஏக்கர், அதற்குக் கீழே வைத்திருக்கிற விவசாயிகளுக்கு அந்த வசதிகள் கிடைக்க சர்க்கார் வழி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய பாசனத் திட்டங்களைப் பராமரிப்பதற்காக 27 லட்சம் ரூபாய் மானியமாகப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப் படுகிறது. இந்தப் பணம் மிகவும் குறைவாக இருக்கும் காரணத் தால் இதை அதிகப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் 'மைனர் இரிகேஷன்' வேலைகளை சர்க்காரே எடுத்துக்கொண்டால் நலமாக இருக்குமென்று தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சா. ராமசாமி: தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையை யொட்டி என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், செங்கால் ஓடை, சிந்தாமணி ஓடை, குஞ்சுவெளி கிடங்கு ஓடை, கல்லகம் ஓடை, கிழப்பழூருக்கு வடக்கே உள்ள மாணிக்கவாசக ஓடை, சேனாபதி கருப்பூருக்கு தென்புறமுள்ள ஓடை முதலிய திட்டங்களை உடனடி யாக மேற்கொண்டு அமல் நடத்தினால் ஒவ்வொரு திட்டத்தின் மூலமாக அருகிலுள்ள ஏரிகளுக்கு விடுவதன்மூலமும், நேரிடைப் பாசனமாகவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிராகக் கூடிய நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கும் மருதையாறு திட்டம் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்தத் திட்டம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை முடிவாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குவாதட்டை ஏரிக்குத் தண்ணீர் வரத்துவரும் காக்காப் பாளையம் அணைக்கட்டு சரியானபடி அமைக்கப்படாததால் தண்ணீர் பக்கத்தில் சிதறிச் செல்கிறது. அதிலே தண்ணீர் அவ்வாறு சிதறி செல்லாதவாறு அணைக்கட்டைச் சரியானபடி கட்டிக் கொடுத்தால் நலமாக இருக்கும். ஸ்தல பாசன மானிய மாகப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியம் வழங்கப்பட்டிருக் கிறது. யூனியனுக்கு ஐம்பது அல்லது அறுபது எரிகள் உள்ள இடங்களில் ஏரிக்கு 100 ரூபாய் கூட கிடைப்பதில்லை. அந்தத் தொகை குறைவாக இருப்பதால் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீரை பொன்றுை வாய்க்காலில் தடையில்லாமல் செல்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புள்ளம்பாடி வாய்க்கால் திட்டத்தில் பல கிளை வாய்க்கால்கள் இருக்கின்றன. ஆண்டி ஓடை தேக்க ஏரியிலிருந்து யசனைக்கு மேல்புரமாக செல்லும் வாய்க்காலுக்கு அந்தப் பகுதி மக்கள 'மதிகெட்டான் வாய்க்கால்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் அதற்குச் செலவாகியிருந்தும் அந்தக் கிளைவாய்க்காலினால் ஒரு ஏக்கர் நிலம் கூடப் பாசன வசதி பெற முடியாத நிலையில் இருக்கிறது. அந்த ஓடையை மேடான பகுதிக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து கோயில்எசனை, இலந்தக்கூடம் நிலங்களில் இருந்து சுமார் 1,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புள்ளம்பாடி வாய்க்காலில் ஏலாக்குறிச்சி வண்ணார் ஏரி மூலம் நரியனூர் வரை உள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இதற்காக மக்களிடமிருந்து வந்துள்ள கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆறு, வாய்க்கால் மூலம் பாசனம் செய்து வருவதில் பாசனத்தின் கடைசிப் பகுதியாக இருக்கும் கிராமங்களுக்கு தண்ட நீர்த் தீர்வை விதிக்கப்படும் நிலைமையைப் பரிசீலித்து தண்ட நீர்த் தீர்வையை விதிக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசன வாய்க்காலுக்காகவும், ஐந்தாண்டு திட்டங்களுக்காகவும், இதர வேலைகளுக்காகவும் மதகுகளையும், கட்டடங்களையும் கட்டுகின்ற நேரத்திலே அவைகளை அவசர அவசரமாக திட்ட வேலைகளை முடிக்க வருஷ கடைசியாகிய மார்ச் மாதத்திலே கட்டி முடிக்கவேண்டுமென்பதற்காக அவசரப்படுவதால் நல்ல முறையில் அவை நிறைவேற்றப்பட முடியாத நிலைமை இருந்து வருகிறது. மார்ச் மாதத்தில் வேலை முடியாவிட்டாலும் கூட, 'பைனல்' பில் போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். அது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வி. எல்லம நாயுடு: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கோவை ஜில்லாவிலே பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் முடிவடைந்து விட்டன என்று சொல்லப்படுகிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் சற்று யோசிக்க வேண்டும். 'எல்லா மக்களுக்கும் எல்லா தொகுதிகளுக்கும் நாங்கள் ஏகமனதாக வேலை செய்கிறோம். எந்த விதத்திலும் பாகுபாடு கிடையாது, மக்களுக்கு கிடைக்கக் கூடிய நீர் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் 30 ஆண்டுகளுக்கு மேலாகத் திட்டமிடப்பட்டு வந்த மேல்

பவானித் திட்டமானது கீழ் பவானித் திட்டமாக மாற்றப்பட்டதை யோசிக்க வேண்டும். மேல் பவானித் திட்டம் மாறினாலும் கூட அவனாசி தாலுகாவும் மற்ற பிரதேசங்களும் பாசனம் பெற வேண்டும் என்ற வகையிலே யோசித்துவருவதாகத் தெரிகிறது. அதன் காரணமாக கோவை, பல்லடம் தாலுக்கா, அவனாசி தாலுக்காவும் பாசன வசதி பெறும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டு மென்று தொகுதி மக்களுடைய சார்பில் கேட்டுக் கொள்கிறேன். பல்லாயிரக் கணக்கான மக்கள் வாக்களித்து இங்கு வந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதியிலே செய்யவேண்டிய காரியங்களுக்காக அரசாங்கத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்களுடைய குறைகள் பூர்த்தியாகும் முறையிலே மேல் பவானித் திட்டத்தை மறுபடியும் பரிசீலித்துப் பார்த்து உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லையென்றாலும் குந்தா கழிவு நீர்த் திட்டமாகவாவது மாற்றி கோயம்புத்தூர் தாலுகா, தொண்டமத்தூர் தாலுகா, சர்க்கார்சாமன்குளம், பெரியநாயக்கள் பாளையம் பிர்காக்களும் பல்லடம் போன்ற பகுதிகளுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்பது நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே நொய்யல் நதித் திட்டத்தையும் சேர்த்திருக்கலாம். முன்பு கல்வி மந்திரியாக இருந்த கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் நொய்லாறு-சிறுவாணிக்கு இடையில் அணைக்கட்டித் தேக்கி அந்தத் தண்ணீரைக் கொண்டு கோவைக்குத் தண்ணீர் தரவேண்டுமென்ற வகையிலும் பல்லடம் தாலுகா போன்ற பகுதிகள் பாசன வசதி பெறவும், குடி தண்ணீர் வசதி பெறவுமான வகையில் திட்டத்தைத் தயாரித்தார்கள். அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, ஏன் வேலையைத் தொடங்கவில்லை? அதை உடனடியாக ஆரம்பித்து அந்தப் பகுதி மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காஞ்சிமா நதி என்கிற நீலி ஆற்றுக்கு குறுக்கே அணை கட்டி நொய்யல் வடக்குப் பகுதி பிரதேசங்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போதே குறிப்பிட்டேன். மசனுவிரும்பு, முண்டந்துரை, சங்கனூர் பள்ளம் மேல் பகுதி போன்ற இடங்களில் உள்ள சிறு நீர்ப்பாசனத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு கோவை மாவட்ட உறுப்பினர்கள் ஒரு விண்ணப்பம் கொடுத்தார்கள். கோவைக்காக ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரித்து, மேற்கு மலைச்சாரலில் உள்ள விவசாயத்திற்கு தகுதியில்லாத இடங்களில் நீரைத் தேக்கி விவசாயத்திற்கு கொண்டு வர வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின்மீது கொண்டு வரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் எந்தவிதமான வடிகால் வசதியும் இல்லாததால் குறிப்பாக திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 12,000 ஏக்கரும் மன்னார்குடியில் 8,000 ஏக்கர் நிலங்களும் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அப்பிரதேசத்திலுள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். நல்லாறு, அடப்பாறு, வடவாறு, போன்றவைகள் தூர்ந்து போயிருக்கின்றன. கடலோரப் பகுதியாக இருப்பதால் தூர் ஏற்பட்டு தண்ணீர் வடியாத அளவு, கடைமடைக் கிராமங்கள் வடிகால் வசதி இன்றி கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்நிலையை மாற்ற அரசாங்கம் விசேஷ ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த தாலூகாவில் மேட்டுக் கிராமங்கள் இருக்கின்றன. பாசன வசதி செய்து கொடுத்தால் அங்குள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கமுடியும். தலைஞாயிறு பகுதியில் கள்ளிமேடு, வள்ளப் பள்ளம், கோவில்பத்து, வானமாதேவி என்ற இடங்களும் வேதாரண்யம் பகுதியில் ஆதனூர் கிராமம் போன்றவைகள் இருக்கின்றன. அங்கு பம்பிங் ஸ்கீம் ஏற்படுத்திக் கொடுத்தால் தண்ணீர் ஆறுகளிலிருந்து எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும். அதே போல் மன்னார்குடித் தாலூக்காவில் பாளையங்கோட்டை கிராமத்தில் பாசன வசதி செய்து கொடுத்தால் 300 ஏக்கர் நிலம் பாசன வசதிக்கு கொண்டு வர முடியும். பள்ளப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு உதவி செய்யும் முறையில் இந்த வேலைகளை அரசாங்கம் செய்து கொடுப்பார்களேயானால் விவசாயிகள் அரசாங்கத்திற்கு மிகவும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். இதை ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இலவு காத்த கிளி என்று சொல்வார்களே அதுபோல் அவர்கள் காத்து நிற்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அங்குள்ள மக்களுக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல விஷயத்தைப் பற்றி சேப நேரம் இல்லாததால் ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மற்ற இடங்களில் தண்ணீர் தேவை என்று சொல்லும் நேரத்தில் தஞ்சையில் மட்டும் தண்ணீர் அதிகமாக தேங்குவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு வடிகால் வசதி செய்து கொடுக்கவும், சிறிய நீர்பாசன திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பாசனத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை நான் நிறைமனதோடு வரவேற்கிறேன். "வித்திவான்

நோக்கும்' புன்புலமாக இருந்த, நான் வாழுகின்ற பகுதியாகிய ஈரோடு பகுதியை

"காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் எற்றி
பூ மாண்ட தீந்தேன் தொடைகீறி, வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி, வாழைப் பழங்கள் சிந்தும்"

என்று திருத்தக்க தேவரும்,

"தண் தலை மயில்களாடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக், குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினிகாட்டத், தேம் பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ"

என்று கம்பரும்,

"அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம் தீம்பட்ட தென வெரீஇ
புள்ளினம் தம், கைச் சிறகால் பார்ப்பு ஒடுக்கும் கௌவை
உடைத்து"

என முத்தொள்ளாயிரமும்

கூறியதற்கிணங்க என்பகுதியை நீர் வளமுடையதாக ஆக்குவித்தமைக்கு தமிழ்நாடு அரசாங்கத்தை, என்ஜினியரிங் இலாகாவை குறிப்பாக நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அடுத்தபடியாக, சந்திரனுக்கு களங்கம் இருப்பதுபோல் எனக்கும் சில குறைகள் இருக்கின்றன. என் பகுதியில் காளமங்கலம் கிராமம் 3,000 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அதே போல் ஊத்துக்குழியும் 3,000 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த இரண்டு கிராமங்களும் கீழ் பவானி ஆயக்கட்டு பகுதியில் சேர்க்காமல் விடப்பட்டிருக்கின்றன. ஈரோடு நகரத்திற்கு அருகாமையில் உள்ள குரங்கன் பள்ளம், பெரும் பள்ளம் ஆகிய பள்ளங்களில் அணை கட்டித் தடுத்து இவற்றிற்கு பாசன வசதி செய்து கொடுக்கலாம். பரிசீலனையில் இருக்கும் இவ்விரு திட்டங்களையும் கூடிய விரைவில் நிறைவேற்றிக் கொடுக்குமாறு அமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். மொசுக்கரடு என்ற பகுதியில் 700 ஏக்கர் பரப்பளவுள்ள பகுதி கீழ்பவானி ஆயக்கட்டுப் பகுதியில் இருந்து விலக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் தண்ணீர் வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, பெருந்துறைக்கும் ஏதாவது செய்து கொடுத்தால் புண்யமாக இருக்கும் என்றும் சொல்லிக் கொள்கிறேன். கீழ் பவானி ஆயக்கட்டுப் பகுதிகளில் இப்போது நடைமுறையில் இருக்கிற தண்ணீர் பாய்ச்சக் கூடிய ஒரு முறையை ஊர்ஜிதம் செய்து அதே என்றும் நிலவுமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கீழ்பவானி ஆயக்கட்டுப் பகுதியில் கிஸ்தி வசூல் செய்வது பயிர் அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது. அதை மாற்றியமைத்து ஏக்கர் அடிப்படையில் வசூலிக்கும் முறையை வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சென்ற மூன்று ஆண்டுகளில் நெல் பயிரிடப்படாத இடங்களில் இந்த ஆண்டு பயிரிடப்பட்டிருக்கிறது.

பெரும்பாலும் ஏழை விவசாயிகள்தான் இப்படி பயிரிட்டிருக்கிறார்கள். ஆகவே அதற்குத் தண்டத் தீர்வை போடும் முறையை அரசாங்கம் கைக் கொள்வதை விடுத்து அதிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆக, அந்தப் பகுதியில் வாழுகின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், "வெண்மை அங்கு கண்டேன், கால் வண்மை இங்கு கண்டேன்" என்ற கம்பர் கூற்றுக்கு ஒப்ப இல்லாமல் இரண்டு வண்ணங்களையும் ஒருங்கே காணக் கூடிய முறையில் நன்றாக உழைக்கக்கூடிய விவசாய மக்கள் என்று கூறிக்கொண்டு மீண்டும் ஒரு முறை அரசாங்கத்திற்கும், இலாகாவிற்கும், அமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அரும் பணியை இவர்கள் காலத்தில் கூடிய வரையில் செய்துகொடுக்க வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை விண்ணப்பித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

12-30 p.m. * திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி: மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நீர்ப்பாசன மான்யத்திற்குத் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக நீர்ப்பாசன இலாகாவைப் பொருத்த வரையில் குறிப்பிடுவது சிறு பாசனத் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றித்தான். சிறு பாசனத் திட்டத்திற்கு 1963-64-ம் ஆண்டுக்கு 246 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அமைச்சருடைய அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த சிறு பாசனத் திட்டத்தை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி பஞ்சாயத்து யூனியனிடம் இந்தத் திட்டம் ஒப்படைக்கப்படுமானால், என்ன மான்யம் கொடுக்கப்படும், என்னென்ன சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படும் என்று சரியாக விளக்கங்கள் இல்லை. சிறு பாசனத் திட்டம் பஞ்சாயத்து யூனியனிடத்தில் ஒப்படைக்கப்பட்டால் நல்ல முறையில் திட்டங்கள் உருவாக்க முடியாது, மக்களுக்கு நல்ல முறையில் சௌகரியங்கள் கிடைக்காது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே பொதுப் பணித் துறையிலே மேற்கொண்டால் தான் சிறு பாசனம் நல்ல முறையில் சீர்பெற முடியும். அப்போதுதான் நல்ல முறையில் உணவு உற்பத்தி பெருகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

போயிருக்கிறது. நடுத் திட்டின் சுற்றுப்புறத்தில்தான் தண்ணீர் தங்கும் நிலை இருக்கிறது. சிதம்பரம் வட்டாரத்தில் இந்த ஏரித் தண்ணீரைக் கொண்டு இரு முறை சாகுபடி செய்யக் கூடிய முறையானது குறைந்து இப்போது ஒரு முறை சாகுபடி செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிலிருந்து பிரிந்து செல்லக் கூடிய கால்வாய்கள் கூட, தூர்ந்து போய், மழை காலத்தில் கிழக்குப் புறத்தில் உள்ள அநேக கிராமங்கள் வடிகால் வசதி இல்லாமல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, தரம் குறைந்து விளைவு ஏற்பட்டு, மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை உணர்ந்து இந்த முறையாவது வீராணம் ஏரி பற்றி உறுதிமொழியாவது சொன்னால் மக்களிடம் சொல்ல வாய்ப்பாக இருக்கும், ஆகையால் அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அந்த வகையிலே என்னுடைய தொகுதியின் நீர்வளம் பற்றிச் சொன்னாலும், வெள்ளத்தால் பாதிக்கக்கூடிய நிலைமையும் இருக்கின்றது. முக்கியமாக உடையார் பாளையம் வட்டத்திலுள்ள மேட்டுப் பாங்கான நிலத்தில் மழையின் காரணமாக காட்டு வாரி ஓடை உற்பத்தியாகி காட்டுமன்னார்கோயில் தொகுதியிலுள்ள 10 கிராமங்கள் வழியாகப் போகும்போது, மழை காலத்தில் வெள்ளம் வந்து 5,000 ஏக்கர் நிலம் வரை மிகவும் கெட்டுப் போயிருக்கிறது. நிலத்துக்கு உடையவர்களும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களும் மனுக்களை இங்கே அமைச்சர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஓடையை ஜெயங்கொண்டான் பகுதியில் ஒரு தடை போட்டு அதை ஒரு ஏரியாக அமைத்தால் ஜெயங்கொண்டான் பகுதியிலுள்ள விவசாயிகள் நல்ல முறையில் வாழ முடியும். அதோடு எனது தொகுதி மக்களும் வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வாய்க்கால் வெட்டு வேலை அநேகமாக தடைப்பட்டிருக்கிறது. 1957-ல் வீராநந்தபுரம் கிராமத்திற்கு புங்கனேரி வாய்க்கால் என்ற ஒரு வாய்க்கால் சாங்ஷன் ஆகி, இன்னும் வெட்டப்படாமல் குறையாக இருக்கிறது. அதை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்ய அதிகாரிகளுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் எனது தொகுதியிலுள்ள ராஜன் வாய்க்கால் சிதம்பரத்துக்கு குடி தண்ணீருக்கும், மற்றும் அநேக கிராமங்களுக்கு பாசனத்திற்கும் உதவியாக இருக்கிறது. மணல் மேடாக இருக்கிற காரணத்தினால் தண்ணீர் அதிகமாகி விட்டால் சிதம்பரம் பகுதியிலுள்ள கிராமங்கள் வெள்ளத்தால் சீரழியக் கூடிய நிலையில் இருக்கின்றன. ஆகவே ராஜன் வாய்க்காலை ஆழப்படுத்தி ஆவன செய்ய கேட்டுக்கொள்ளுகிறேன். சிறு பாசனத் திட்டங்களை இந்தப் பகுதிகளில் பெருக்கி, பஞ்சாயத்துக்கு இந்தப் பொறுப்பைக் கொடுப்பதை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது

*** திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த சேலம் ஜில்லாவிலே என்னுடைய தொகுதி 1957-லிருந்து ரிஸர்வ் சீட்டாக ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே பனைமரத்துப்பட்டி ஏரி என்று 1911-ல் வெட்டி 50 வருஷங்களுக்கு மேலாக அந்த ஏரித் தண்ணீரை குடி தண்ணீருக்காக ராசீபுரம் விட சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஏரிக்கு பல இடங்களிலிருந்து தண்ணீர் வருகிறது. இப்போது மார்ச் ஏப்ரல் மாதத்தில் தண்ணீர் குறைவாக இருக்கிறது. கல்லூத்து கிராமம் என்னும் இந்த இடத்திலிருந்து 3 மைலில் ஒரு ஓடை ஓடுகிறது. அதனுடைய தண்ணீர் வீணாக ஃபாரஸ்ட்டில் போகிறது. அங்கேயிருந்து ஒரு வாய்க்கால் பறித்து ஊர் பக்கத்தில் கொண்டு வந்தால், புதூர் ஆற்றில் கொண்டு வந்து சேர்த்தால் அப்போது பனைமரத்துப்பட்டி ஏரிக்கும், மணலூர் ஏரிக்கும் வர முடியும். அந்த இடத்திற்கு நமது அமைச்சர் பழையகோட்டை பட்டகார் அவர்கள் வந்தார்கள். அவர் அந்த ஏரியைப் பார்த்திருப்பார் என்று நினைக்கிறேன். கிணறுகள் விவசாயம் செய்ய முடியாமல் வரண்டு இருக்கிறது. மணலூருக்கு பாதித் தண்ணீர் பனமரத்துப்பட்டி ஏரிக்கு பாதித் தண்ணீர் வருகிறது. லப்பம்பட்டி கிராமத்தில் அதைத் தடுத்து விடுகிறார்கள். மணலூர் ஏரிக்கும் தண்ணீர் வருகிறது. லப்பம்பட்டி ஏரிக்கு பாதித் தண்ணீர் வந்தால் நல்லபடி அவர்கள் விவசாயம் செய்வார்கள். பனமரத்துப்பட்டி ஏரிக்கு வாய்க்கால் பறித்து தண்ணீர் வந்தால் ராசீபுரம் பொது மக்களுக்கும் வசதி ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் கொடுத்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, எல்லா மந்திரிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*** திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிற மான்யம் மிக இன்றியமையாதது, மானியங்களுக்குள் தலையாயது என்று கூட நான் சொல்ல ஆசைப்படுகிறேன். உணவுக்கு, உணவு உற்பத்திக்கு அடிப்படையான ஒரு சிறந்த சாதனம் நீர் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆகவே இந்த மான்யம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நான் புலப்படுத்த வேண்டுமென்பது அவசியம் இல்லாத ஒன்று. அதிலும் தற்போது நெருக்கடி காலம். யுத்த பயம் சூழ்ந்து இருக்கிற நேரம். இந்த நேரத்திலே, நம்முடைய சுதந்திரம் காக்கப்பெறுவதற்கு என்ன என்ன நாம் மேற்கொள்ளவேண்டும் என்று கருதுகிறோமோ, அவற்றை எல்லாம் செம்மையாக நிறைவேற்றுவதற்கு அடிப்படையாக அமைந்திருக்கிற ஒன்று உணவே என்று சொன்னால் அது மிகையாகக் கூறியதாக மாட்டாது. யுத்தத்திற்கு இன்றியமையாதது பயிற்சி பெற்ற படை என்பதிலே யாருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது.

யமையாததாக இருக்கக்கூடியது உணவு என்பதையும் யாரும் மறுக்க மாட்டார்கள். அதற்கு அப்புறம் தான் உடை, வாகனம், கருவிகள் அல்லது ஆயுதங்கள்.

ஆகவே, யுத்தத்தில் நாம் செம்மையாக, பரிபூரணமாக வெற்றி பெறவேண்டுமானால், அந்தத் தன்மையை நிலையாகப் பெறவேண்டுமானால், நம் உணவு நிலை செம்மையாக அமையவேண்டும். அந்தக் கண்ணோட்டத்தோடு; இந்த மானியத்தை அணுகவேண்டும் என்று முதலிலேயே விண்ணப்பிக்கிறேன். உணவுப் பெருக்கம் ஏற்பட விவசாயிகளுக்கு எத்துணை ஆக்கமும், ஊக்கமும், ஆர்வமும் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கு நம் காப்புநிலை அமைகிறது என்பதை மறந்துவிட முடியாது. இந்த நீரை விவசாயிகளுக்கு செம்மையாக பயன் உள்ள அளவிலே கொடுக்கும் போது அதற்கான பொறுப்பு ஆட்சியைச் சேர்ந்தது என்பதை நான் சொல்ல வேண்டும் என்பது இல்லை. ஒன்றை மறந்துவிடக் கூடாது. கவனித்து, ஆழ்ந்து பார்க்கும் போது எங்காவது ஒன்றுக்கு வகை செய்கிறோம் என்றால் மற்றொன்றுக்கு வகை செய்யவில்லை என்பதும் பலப்படுகிறது. பல இடங்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்கிறோம் என்றால், இன்னும் பல இடங்களுக்கு பாசன வசதி கொடுக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது என்பதும் அதில் அடங்கியுள்ளது. இதை மனதில் கொள்ள வேண்டும். ஒரு அணை கட்டுகிறோம். அங்கிருந்து நீர் மட்டும் அல்ல, இரண்டு முக்கியமாக—பெரும்பாலாக என்றும் சொல்லலாம்—கிடைக்கின்றன. நீரும் மின்சாரமும் கிடைக்கின்றன. ஆகவே, பாசனத்திற்கு விடும் நீர் வாய்ப்புள்ள பகுதிகளுக்குச் செல்லும். நீர் பள்ளத்தை நோக்கிச் செல்லும். ஆனால், மின்சாரம் பள்ளத்தை நோக்கிமட்டும் செல்வதில்லை. ஆகவே நீர் பள்ளமான பகுதிகளுக்குச் செல்லட்டும். மேட்டுப்பாங்கான பகுதிகளில் உள்ளவர்கள், மின்சாரத்தின் பயனை அடையலாம். ஆக மேட்டுப்பாங்கான இடத்தில் உள்ளவர்கள் மின்சாரத்தைப் பெறுவதற்கு முதல் உரிமை உடையவர்கள் என்று வரையறை செய்ய வேண்டும் என்று கூடச் சொல்லுவேன். இரண்டு வாய்ப்பும் உள்ளவர்கள் இரண்டையும் அடைவார்கள். ஆனால் ஒன்று கிடைக்காதவர்கள் மற்றொன்றைப் பெறமுடியும். அப்படிச் செய்தால்தான் நம் விவசாயம் செம்மையாக அமையும் என்பதை மனத்தில் கொள்ளவேண்டும்.

உள்ளவைகளாகச் செய்த அருமைப்பாட்டை நாம் காணுகிறோம். அது அக்காலத்து பொறி இயல் திறமை. அதை வரலாற்று நிபுணர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அதை நாம் அறிவோம். குறிப்பாக திருவாடானைப் பகுதியை எடுத்துக் கொண்டால்—என்னுடைய தொகுதிக்காகச் சொல்லவில்லை, என் தொகுதியைப் பற்றி மட்டும் பேசவில்லை, அது என் தொகுதியும் இல்லை, பொதுவாகச் சொல்லுகிறேன்—அங்கே தஞ்சாவூர் போன்று நல்ல வளம் உள்ள பூமி இருக்கிறது. ஆனால், நீர் இல்லாததுதான் குறை. அங்கு மேற் பெரியாற்றில் இருந்து நாம் நீர் கொடுக்க முடியுமானால், சுமார் ஒரு லட்சம் ஏக்கராக்கள் வளம் கொழிக்கமுடியும். இதை நாம் மனதில் கொள்ள வேண்டும். நீர் மற்றொரு ராஜ்யத்திலிருந்து பெற வேண்டியிருக்கும் சந்தர்ப்பங்களில் அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. ஆனால், அந்த நீர் அவர்களுக்கும் பயன்படுவதில்லை; கடலில் சென்று விரயம் ஆகிறது. அந்த நீரை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அவர்களுக்குத் திரும்ப வேண்டும் என்று சொல்லும் போது அவர்களுக்கே அந்த நீரை கொடுத்து விடுகிறோம் என்று கூட ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டாலும் செய்துகொள்ளலாம். அப்படி நமது மாநில அரசு நமக்கும் அவர்களுக்கும் வேண்டும்போது உபயோகமாகும் முறையில் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டால், நன்மை பெரிதாக இல்லாவிட்டாலும், ஓரளவு கிடைக்கிறது என்று நாம் ஆறுதல் அடையலாம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்னும் பல பாசனத் திட்டங்களில் முதலில் இருப்பவர்களுக்குக் கிடைக்காமல் போய் கடைசியில் இருப்பவர்களுக்கு நிறையக் கிடைக்கிறது. அல்லது முதலில் இருப்பவர்களுக்கு அதிகமாக வந்து பயிர்களை அழித்து விடுகிறது. அது எவ்வளவு தூரம் சரி அல்லது தவறு என்று நான் வாதாட வரவில்லை. ஆனால், நீர் விரயம் ஆகாமல் தடுக்க வேண்டும். மிகுதியும் கேடு; குறைவும் கேடு; "காய்ந்து கெடுத்தது, பெய்ந்து கெடுத்தது" என்பதும் நமக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்தைப் பற்றி சிந்திக்கும்போது பல நிலங்கள் திடீரென்று ஒரு நாள் வெள்ளம் வந்து பயிரெல்லாம் அரித்துக் கொண்டு போகப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்தவர்கள் கவனிக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

நேற்று ஒரு விஷயம் வரும்போது கனம் அமைச்சர் சொன்னார்கள், ஏரியின் உள்வாயில் கிணறுகள் தோண்டப்பட்டிருக்குமானால், ஏரியில் நீர் நிறைந்திருக்கும் போது அக்கிணறுகள் தூர்ந்து போக வாய்ப்பு இருக்கிறது என்று. நான் சொல்லுகிறேன், தூர்ந்து போகமாட்டாது என்று. காரணம் ஏரிக்கரை மட்டத்திற்குக் குறையாமல் நாற்புறமும் கிணற்றுக்கு வரிச் சுவர் வைத்து விடுவதே. ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துச் "சப்மெர்சிவ்" பம்புகளும் பொருத்திவிட்டால் இந்தப் பிரச்சனையே எழ மாட்டாது. அப்படி ஏரியின் உள்வாயில் தோண்டும் குழாய்க்கிணறுகள் போடமுடியுமானால் அந்தத்

திறந்துவிட்டு பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்க முடியும். அது சம்பந்தமாக சர்வே சாத்தியம் என்று பணிவோடு சொல்ல விரும்புகிறேன். அம்மாதிரி பரீட்சார்த்தமாகவாவது ஒரு சில இடங்களிலே செய்து பார்க்கவேண்டும். அதனால் பிரமாதமான கஷ்டம் ஒன்றும் வராது. பிரமாதமாக வெளிநாட்டு செலவாணியும் தேவையில்லை. ஓரளவுக்கு ஒரு சில குத்துகிற கருவிகள் வெளிநாட்டில் இருந்து தேவையாக இருக்கலாம். மற்றப்படி பெரும் அளவான கருவிகள், சாதனங்கள் நம் நாட்டுப் பொருள் களைக் கொண்டே செய்யலாம். இது அசாத்தியமான ஒன்று அல்ல. பலன் நிச்சயமாக இருக்கும். எங்கள் காலேஜ் காம்பசில் உள்ள குழாய்க்கிணறு ஒன்றரை லட்சம் காலன் தண்ணீர் கொடுக்கிறது. ஆகவே, அந்த வகையில் முயற்சி எடுத்துக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு மேலே, விவசாயிகளுக்கு இப்பொழுது விதிக்கின்ற மின்சாரக் கட்டணமானது மிக அதிகமாக இருக்கிறது என்று ஒரு புகார் எங்கும் பரவலாக இருக்கிறது. அது போக, அதற்கான தொகையைக் கட்டவேண்டிய நிலை மிகக் குறைந்த காலத் தவணையாக அமைந்திருக்கிறது. பம்ப் செட்டு முதலியவைகளுக்காகக் கொடுக்கிற கடனை விரைவிலே திருப்பிக் கொடு என்று சொல்லுவதிலே அவர்களுக்கு நிரம்ப சிரமம் ஏற்படுகிறது என்றெல்லாம் ஏராளமானவர்கள் உண்மையாகவே சொல்லுகிறார்கள். விவசாயிகளுக்கு ஐந்து மாதங்கள் மழைக் காலத்திலே தண்ணீர் எடுக்க முடிகிறது என்று சொன்னால், நான்கு ஏக்கருக்குத் தான் அது பூரணமானதாக அமைகிறது. வேனிற்காலத்திலே அதே முறையிலே அவர்கள் பாடுபடுகிறபொழுது ஒரு ஏக்கருக்குத் தான் தண்ணீர் போதியதாக அமைகிறது. ஆகவே, இதையெல்லாம் மனத்திலே கொள்ளவேண்டும். எவ்வளவு சிரமம் வருகிறது என்று இப்படியெல்லாம் மொத்தமாகக் கணக்கிட்டுப் பார்த்தால், ஏக்கர் ஒன்றுக்கு தண்ணீருக்காக செலவழிக்கிற பணம் குறைந்தபட்சம் ரூ. 100 வருகிறது என்பது நம்முடைய கணக்குக்கு உட்படாத ஒன்று அல்ல, எலோருக்கும் புலப்படக்கூடிய ஒன்றுதான் இதையும் மனதில் கொண்டு விவசாயிகளின் சிரமத்தையும் மதித்து பத்து வருஷம் தவணை என்பதை இருபதாண்டு, முப்பதாண்டு என்று வரையறை செய்து அந்த அளவுக்குத் தவணையை நீட்டி அதற்கு வழிவகை செய்தால், விவசாயிகளுக்கு இருக்கிற சிரமம் தீரும். மேலும் விவசாய உணர்ச்சி, ஆர்வம் பெருகும் என்பதையும் நான் புலப்படுத்திக் கொள்கிறேன். இந்த மாதிரி, இன்று போகிற நிலையிலே விவசாயிகளுக்கு ஏற்படுகிற ஆர்வம் குறைந்துவிடும். ஆர்வம் குறைந்து விடுமானால், அந்த வகையிலும் நமக்கு ஆக்கம் விளைவது தடைப்படும். அதற்கு மேலே நான் கடுமையாகச் சொல்ல விரும்பவில்லை. நம்முடைய வளர்ச்சி, நம்முடைய ஆக்கம், நம்முடைய சிறப்பு இவைகளுக்குத் தடை ஏற்படும் என்பதை நாம் மனத்தில் கொண்டு, அதற்குத் தக்க நிலையிலே பாட்டாளி

மக்கள் இரவு, பகல், மணி, நேரம், என்று பாராமல் பாடுபடுகின்ற மக்கள், தன்னைத்தானே வேலை வாங்கிக் கொண்டு, தன்னைத்தானே கண்காணித்துக்கொண்டு தனக்குத் தானே தலைவனாய் இருக்கக்கூடிய தனிப் பெரும் தொழிலாளியாகிய விவசாயிகளின் ஆக்கத்திலே கொஞ்சம் அலுப்புத் தட்டிப்போய் விடுவது கூட ஒரு தேசத்தின் நன்மைக்கு உகந்ததாக அமைய மாட்டாது. இதை அமைச்சர் அவை அறியாது, உணராது என்று நான் சொல்லவில்லை, நன்றாக உணரும், நன்றாக அறியும். அந்த நிலையிலே, பிற துறையிலே என்ன சிரமங்கள் இருந்தாலும், இந்தத் துறையிலே மற்ற சிரமங்களையெல்லாம் சர்க்காரே ஏற்றுக்கொண்டு, இங்கே இந்தத் துறையிலே அவ்வளவு வசதிகளையும் செய்து, மக்களுக்கு சிரமமே இல்லை என்ற நிலையை ஆக்க வேண்டும். அப்படி ஆக்குவதன் மூலமாக, நாட்டில் விலைவாசி உள்பட அனைத்தும் சீர்பெறும்; வளம் பெருகும்; ஆறுதல் ஏற்படும். மக்கள் வாழ்க்கையிலே சிக்கல் இல்லாமல், எடுத்தவை எல்லாம் பிரச்னையாக இருக்கிறது என்ற நிலை மாறி, ஒரு திருப்தி ஏற்படும். அந்த திருப்தி ஏற்படத்தக்க நிலையிலே இந்தக் கருத்துக்களையெல்லாம் அரசாங்கம் ஏற்று, நல்ல வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள நீர்ப்பாசனக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரபணைகளை ஒட்டிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தும், அது எப்படி இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் தங்களுடைய உரையிலே கூறியிருக்கிறார்கள். கரிகால்பெருவளத்தான் காலத்திலிருந்து இன்றுவரையிலே நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்கான வசதிகள் பலவும் கையாளப்பட்டு வந்திருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறிகிறோம். செய் பொருள்களை அதிகமாக உற்பத்தி ஆக்கித் தருவதற்கும், தொழிற்சாலைகளை மிகப்படுத்துவதற்கும் மின்சாரம் எப்படி அடிப்படையாக அமைந்திருக்கிறதோ, அப்படியே விளைபொருள்களை உற்பத்தி ஆக்குவதற்கும் நீர்ப்பாசனம் மிக இன்றியமையாத தேவையாக அமைந்திருக்கிறது.

(திரு. ந. சண்முகசுந்தரம் தலைமை.)

நமது மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் நாம் பெறக்கூடிய வசதிகள் அனைத்தையும் பெற்றுவிட்டோம், மேலும் வாய்ப்பு, வசதி இல்லாத அளவுக்கு நாம் பயன்படுத்த வேண்டிய வகைகள் அத்தனையையும் பயன்படுத்திவிட்டோம் என்ற அளவில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நமது நீர்ப்பாசன ஆதாரங்கள் அத்தனையையும் நாம் ஏற்கனவே முழு அளவுக்கு பயன்படுத்திவிட்டோம் என்பது உண்மைதான். மூன்றாவது ஐந்தாண்டுத்

திட்டத்தில் நாம் உத்தேசித்துள்ள திட்டங்களின் மூலம் நமது நீர்நிலைகளின் கடைசி துளியையும் பயன்படுத்திவிட்டோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிலைமைகளைப் பார்க்கிறபொழுது, அது உண்மையாகத்தான் இருக்கிறது. பயன்படுத்தவேண்டிய அளவுக்கு, நீரை எந்த அளவிலே பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன் படுத்துவதற்கான முழு முயற்சிகளையும் நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். விளைபொருள்களை பெருக்குவதற்கான அளவுக்கு, மேலும் நீரைப் பெருக்குவதற்கு நமக்கு வசதிகள் இல்லை என்றாலும், விளைநிலத்தை பெருக்குவதற்கான வசதிகள் தமிழகத்தில் இருக்கின்றனவா என்று பார்த்தால், விளைநிலங்கள் ஆகக்கூடிய அளவுக்கு நிலப்பாங்கு இருக்கத்தான் செய்கின்றன. நிலப்பாங்கு அதிகம் இருந்தாலும், அதை விளைநிலங்கள் ஆக்குவதற்கு தேவைப்படுகின்ற நீர் இல்லை என்ற குறை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. சிறு சிறு தொழில்களை உற்பத்தி ஆக்குவதற்கும், செய் பொருள்களை உற்பத்தி ஆக்குவதற்கும், தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும் வாய்ப்புகள் இருந்தாலும், அதற்குத் தேவைப்படுகின்ற நீர் மின்சாரத்தைப் பெருக்குவதற்கான வகைகளையும் நாம் முடிந்த அளவுக்கு செய்துகொண்டிருக்கிறோம். தமிழகத்தில் நீர் மின்சாரத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்பு இல்லை என்றாலும் தென் மண்டலத்தைப் பொறுத்தவரையில் பார்க்கிறபொழுது, அந்த வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்ற உண்மையும் நமக்குப் புலப்படுகிறது. அதுபோலவே தமிழகத்தைப் பொறுத்த வரையிலே விளைநிலமாக ஆக்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், விளை நிலங்களாக ஆக்குவதற்கேற்ற நீர் வசதிகளைப் பெருக்க தமிழகத்தைப் பொறுத்த மட்டில் வாய்ப்பு இல்லை, அத்தகைய வாய்ப்புகள் தமிழகத்தை ஒட்டியிருக்கிற பிற மாநிலங்களில் இருக்கின்றன. எனவே, தென் மண்டலத்தைப் பொறுத்த வரையில் மின்சாரத்தைப் பெருக்குவதற்காக எப்படி இணைப்பு ஏற்படுத்துவதன் மூலம் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள முடியும் என்று கருதப்படுகிறதோ, அதேபோல, நீரைப் பொறுத்துத் தென் மண்டலத்தில் ஒரு இணைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியை தீவிரமாக மேற்கொண்டால் ராமநாதபுரம் திருநெல்வேலி, மதுரை, கோவை மாவட்டங்கள் போன்ற பகுதிகளும், சேலம் மாவட்டம் போன்ற பகுதிகளும் நீர்ப்பாசனத்தின் கீழே கொண்டுவரப்பட்டு, விளைநிலங்கள் பெருகுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பது உறுதி.

மேற்குத் தொடர்ச்சி மலையிலே பெய்கிற மழை நீரைப் பெரும் ஆறுகள் ஏந்திச் செல்லுகின்றன. அந்த நீரில் ஏறத்தாழ 85 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பகுதி ஆறாகிக் கடலில் போய் கலக்கிறது. அந்த அளவுக்குத் தான் நிலைமை அமைந்திருக்கிறது என்ற உண்மையை நாம் அறிகிறோம். அந்த நீர் கேரள மாநிலத்திலுள்ள விளைவைப் பெருக்கும் அளவுக்கு அமைந்திருக்கிறதா என்றால், அங்கு அமைந்திருக்கின்ற நிலப்பாங்கு கடலிலே சேர்க்கும் நிலையில்,

வாக மாற்றுவதற்கு ஏற்ற வகையில் அமையவில்லை. இந்த நிலையில் தென்மண்டலக் குழுவினர் முயற்சி வெற்றி பெறத்தக்க அளவுக்கு முயல்வார்களேயானால், அந்த ஆறுகளை திருப்பி விடுவதன் மூலம் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பும், வழியும் ஏற்படும். மேற்குத் தொடர்ச்சி மலையிலே குடைவுகள் போட்டு, நீர்த்தேக்கம் அமைத்து, அதன் மூலம் மேற்கு நோக்கிப் போகின்ற ஆற்றைத் திருப்பி விடுவதன் மூலம், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் விளை நிலங்கள் ஆக்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதன் மூலம் உற்பத்தியாகிற மின்சாரம் கேரள மாநிலத்திற்கும் பயன்படும். அவர்கள் பயன்படுத்தியதுபோக, நாமும் அதில் பங்கு பெறுவதற்கு வழிவகை ஏற்படும்.

அதே போன்று, ஹொகேனகல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த முயற்சி வெற்றி பெற்றால் அதன் மூலம் நீர்த்தேக்கம் ஏற்பட்டு, நீரைப் பயன்படுத்திக்கொள்கிற வாய்ப்பு, வசதி ஏற்படும். நீர்த்தேக்கம் ஏற்பட்டால், அந்த நீரை பயன்படுத்துகிற வகையிலே, ஒரு கால்வாயை வெட்டித் தென்பண்ணையாற்றில் கலக்கச் செய்யலாம். அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி ஆக்கும் நிலைமை ஏற்பட இருக்கிறது. நீர்த்தேக்கத்தினால் பலன் ஏற்படும் வகையில் கால்வாய் வெட்டித் தென்பெண்ணையாற்றில் அந்த நீரைவிட்டால், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், சாத்தனூர் நீர்த்தேக்கம் ஆகியவற்றில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத அளவுக்கு என்றென்றும் நீர்தேங்கும் அளவுக்கு வசதிகள் செய்துகொள்ள முடியும்.

ஆந்திர மாநிலத்தைப் பொறுத்த அளவில், கிருஷ்ணா, கோதாவரியின் நீர் ஏறத்தாழ 45 சதவிகிதம், இப்பொழுது இருக்கிற நிலைமையில் பயன்படாமல் கடலில் கலப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்திற்குத் தேவையான அளவிற்குப் பயன்படுத்திவிட்டு, மீதப்படும் தண்ணீரைத் தமிழகத்திற்குத் தருவது என்று முடிவு செய்வதால், தமிழகத்திற்கு 20 லட்சம் முதல் 30 லட்சம் எக்ரா வரை பாசன வசதி அளிக்கக்கூடிய வகையிலே, தாங்களும் பயன் படுத்திக்கொண்டது போக மீதித் தண்ணீரைக் கொடுப்பதற்கு வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. அந்த முறையில் அண்மையில் இருக்கிற மூன்று மாநிலங்களும் உடன்பாடு செய்துகொள்ள முயற்சி எடுத்துக்கொள்வதன் மூலம் மேலும் விளைவைப் பெருக்குவதற்கான வசதிகள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்றன. அந்த முயற்சியில் கவனம் செலுத்துகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை எவ்வளவு தீவிரப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு தென் மண்டலக் குழுவின் மூலமாக தீவிரப்படுத்த வேண்டும். அதை விரைவிலே கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1-00 p.m.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மண் வளத்தைப் பார்த்தால், நெல் விளைவைப் பொறுத்தும் சரி, கரும்பு விளைவைப் பொறுத்தும் சரி, நிலக்கடலை விளைவைப் பொறுத்தும் சரி, அகில இந்திய சராசரியை விட அதிகமாக உற்பத்தியை ஆக்கித் தரக்கூடிய அளவுக்கு மண் வளம் தமிழகத்திலே அமைந்திருக்கிறது என்று புள்ளி விவரங்கள் எடுத்துத் தெரிவிக்கின்றன. அகில இந்திய சராசரியை விடத் தமிழகத்திலே அதிக அளவு நெல் விளையும் மண்வளம் இருக்கிறது. இங்கே இருக்கிற ஒரு பெரும் குறைபாடு என்னவென்றால், மண்வளம் இருக்கிறது. பயன்படுத்துவதற்கான நிலங்கள் இருக்கின்றன. நிலவளத்தை பெருக்கி பயன்படுத்துவதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. ஆனால் அதற்குத் தேவைப்படுகிற நீர் மட்டும் இல்லை. அந்த நீரைப் பெறுவதற்கான வழிகள் அண்டை மாநிலங்களில் இருக்கின்றன. அண்டை மாநிலங்களுக்கு நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இல்லை, ஆகவே அதைத் தமிழகத்திற்குப் பயன்படுத்துவதற்கான முயற்சியில் தென்மண்டலக் குழு தனது பணியினைச் செலுத்துதல் வேண்டும்.

சிறிய பெரிய பாசனத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு இயலும் என்பதையும், அதற்கான வாய்ப்புக் கூறுகள் ஆங்காங்கே இருக்கின்றன என்பதையும் மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான முறையில் அதிகத் தீவிரத்தை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். இப்பொழுது புதிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் சில பல பகுதிகளுக்கு நன்மை ஏற்படுகிற நிலைமை ஏற்பட்டாலும் கூட, அதிலே வருகின்ற லாபக் கணக்கைப் போட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு செலவழிக்கப்படுகின்ற தொகை, அதன் மூலம் கிடைக்கிற [illegible], வருவாய் மூலம் 4 சதவிகிதம் வட்டி கட்டுகிற அளவுக்காவது இருக்கிறதா என்று கணக்குப் போட்டு, அதற்குப் பிறகு அத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அப்படி நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களுக்கு நான்கில் ஒரு பங்குத் தொகையை அங்கே இருக்கிற நிலம் உடையவர்கள், அதன் மூலம் பயன்பெறுகிறவர்கள், செலுத்துவார்களேயானால், அத்தகைய திட்டங்கள் விரைவாக நிறைவேறுவதற்கு வழிஏற்படுமென்று அரசினர் கூறுவதாகவும் ஆங்காங்கே சொல்லப்படுகிறது. இந்த நீர்ப்பாசன இலாகாவைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட வட்டிக் கணக்கைப் போட்டுப் பார்த்து, அதன் மூலம் நிலங்கள் உடனடியாக பலனைத் தருகிறதா என்று கணக்குப் போடாமல் நீண்ட காலத்திற்குப் பிறகு நல்ல பலனைத் தரக் கூடிய அளவில் இருக்கிறதா என்று பார்த்து, அந்த முறையிலே தடங்கல் செய்யாமல், சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசினர் வழிவகை காண வேண்டும்.

இங்கு தமிழகத்தில் மண் வளம் மிக உயர்ந்திருக்கிறது. ஆனால் உழவர்களின் நிலைமை மிகவும் தாழ்ந்திருக்கிறது. ஒரு ஆளுக்குக் கிடைக்கிற நிலத்தை கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது, [illegible] இந்தியாவிலே இருக்கிற சராசரியை விட தமிழகத்தைப் [illegible]

வரையில் சராசரி குறைந்திருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது. உழுகின்ற மக்களைப் பொறுத்தவரையில் கணக்கிட்டுப் பார்த்தால், ஒரு ஆளுக்கு அகில இந்தியாவிலே சராசரி 1.18 ஏக்கர் கிடைக்கிறது என்றால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 0.71 ஏக்கர்தான் கிடைக்கிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது. சம்பாதிப்பவர்களுடைய கணக்கைப்பார்த்தாலும், அகில இந்திய ரீதியை விட, தமிழகத்தின் சராசரி நிலைமை குறைந்து காணப்படுகிறது. அகில இந்திய ரீதியிலே 41 சதவிகிதம் பேர்கள் பயன் பெறுகிறார்கள் என்றால், தமிழகத்திலே 30 சதவிகிதம் பேர்கள் தான் பயன் பெறுகிறவர்களாய் இருக்கிறார்கள். உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுடைய தனியார் வருமானத்தை கணக்கிட்டு பார்த்தால், அகில இந்தியாவிலே ரூ. 113 வருமானம் கிடைக்கிறது என்றால், தமிழகத்தின் வருமானம் ரூ. 94 என்ற அளவிலேதான் இருக்கிறது. எதற்காக இதையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறேன் என்றால், உழுகின்றவர்களின் நிலைமை தமிழகத்தில் இப்படி இருக்கிற காரணத்தால், வட்டிக் கணக்குப் பார்த்து, நான்கு சதவிகிதம் கிடைக்குமா என்ற நோக்கத்தோடு இல்லாமல், சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக நீண்ட காலத்திலாவது பலன் ஏற்பட வழி செய்யவேண்டும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக் கூறுகள் இல்லை. ஆனால், சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அண்டை மாநிலங்களிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே, இந்தியப் பேரரசிடமிருந்து மேலும் அதிக மானியத் தொகையை வாங்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். நம்முடைய தமிழகத்தில் கணக்கிட்டுப் பார்த்தால், ஏரி, குளம், ஆகியவற்றின் மூலம் பாசன வசதி பெறும் விளைநிலங்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது. 1957-58-ல் கொடுக்கப்பட்ட கணக்குப்படி ஏரி, குள பாசனத்தின் மூலமாக 40 சதவிகித நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கால்வாய்கள் மூலமாக 36 சதவிகித விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கிணற்றுப் பாசனத்தின் மூலம் 22 சதவிகிதமும், வேறு பல்வேறு நீர் ஊற்றுக்களின் மூலமும், வேறு பல வசதிகள் மூலமாகவும் 2 சதவிகிதம் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. எனவே, ஏரி, குளப் பாசனத்தின் மூலமாக மொத்த விளை நிலங்களில் 40 சதவிகிதம் பாசன வசதி பெறுகிறது. ஏரி, குளப் பாசன வசதியை மேலும் பெருக்குவதற்கு, இருக்கிற வசதிகள் குறைந்து போகாமல் இருக்க வேண்டும். அவைகளில் தூர் மண்டுவதன் மூலம், அவைகள் வலு இழக்காத அளவுக்கு நிரந்தரமாக அவைகளைக் காப்பாற்றித் தீர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியது போல, வாய்க்கால்கள் மேடிட்டு விட்டதன் காரணமாக, வந்து சேர வேண்டிய மழை நீர் தடைப்பட்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தூர் காலாகாலத்தில் அள்ளப்படாத காரணத்தால், நிறைந்திருக்க வேண்டிய அளவு நீர் நிறைந்து

இருக்காத தன்மை ஏற்பட்டிருக்கிறது. அவற்றைச் செம்மைப்படுத்தாதன் காரணமாக, அதிலிருந்து பெற வேண்டிய முழுப் பலனையும் நாம் நுகர முடியாத நிலையில் இருக்கிறோம். நாற்பது சதவிகித பாசன வசதி அளிக்கின்ற ஏரி, குளங்களைச் செப்பனிடுவதிலே அதிக அக்கறைச் செலுத்தி, அதிகமாக மானியத் தொகை வழங்கி, அவைகளைச் செம்மைப்படுத்தி, இருக்கின்ற வசதிகளை நிலைப்படுத்துவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏரி, குளங்களில் நீர் தேங்கியிருப்பதைப் பொறுத்துத்தான், கிணறுகளிலே நீர் ஊறுவதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படும். ஏரி, குளங்கள் வறண்டு போன காரணத்தால், அவற்றை ஆக்கிரமித்து, விளைநிலங்களாக மாற்றி, ஏரி இருந்த இடமே தெரியாத வகையிலே காட்சி அளிக்கிற அளவுக்கு, சிலபல இடங்கள் மாறிவிடுகின்றன. அத்தகைய நிலைமைக்கு ஆளாகிவிடாமல், அதையெல்லாம் தடுத்து, நிறுத்தி, பயன்படுத்திக் கொள்ளுகிற முயற்சியில் அரசினர் ஈடுபடுதல் வேண்டும்.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களை எப்படி ஆங்காங்கே மேற்கொள்ளலாம் என்பதற்கான காரணங்களைப் பல உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக ஒன்று கூறுகிறேன். தென் பெண்ணை ஆற்றுக்குக் குறுக்கே 'படாதலால்' என்ற இடத்தில் ஒரு அணையைக் கட்டி அதன் மூலம் நீர்த் தேக்கம் பெறுவதற்கான முவற்சி எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி நீர்த் தேக்கம் செய்து, அதன் மூலமாகப் பாய்கிற நீர், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் மூலமாகப் பயன்படுகிற நிலங்களுக்குத்தான் மேலும் பயன்படுகிறதாம். அதிலிருந்து தனிக் கால்வாய் வெட்டிக் கொண்டு போனால், கிருஷ்ணகிரித் தேக்கத்தினால் பயன்படாத வட பகுதிக்கும் அது பயன்படக் கூடுமென்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. அதைத் தீவிரமாகப் பரிசீலனைசெய்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான வழி வகைகளை அரசினர் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறு பாசனத் திட்டங்களில் குடகனாறுத் திட்டமும் ஒன்று. சில பல ஆண்டுகளாகவே அது வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அத்திட்டத்தினால் ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலத்தை பாசனத்திற்கு கொண்டு வரமுடியும். இந்தப் பிரதேசம் பஞ்சப் பிரதேசமாகக் கருதப்படுகிறது. மேலும் 6 அல்லது 7 ஏரிகள் அதன் மூலம் நீர் நிறைந்து பாசன வசதி ஏற்படக் கூடும் என்ற கருத்து இந்த மன்றத்திலே சென்ற 5, 6 ஆண்டு காலமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. அதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். இந்தத் திட்டம் எந்த அளவிலே இருக்கிறது? அதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா? நிறைவேற்றுவதற்கான எண்ணம் உண்டா? தீவிரப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

கள் வசம் இருந்த ஏரி, குளங்கள் ஆகியவற்றை மீண்டும் சர்வே செய்து செப்பனிடுவதற்கான முயற்சிகளை இந்த அரசினர் மேற்கொண்டிருக்கிறார்களா என்பதற்கு பதில் சொல்லும்பொழுது அது பரிசிலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை முடிந்து விட்டதா? அப்படியென்றால் அதன் மீது என்ன நடவடிக்கைகளை அரசினர் மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று கருதுகின்றேன். இப்படிப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு அண்டை மாநிலங்களிடம் பெறுகிற வாய்ப்புக்களை அதிகப்படுத்துவதற்கான முறையில் அதிகமான மானியத் தொகையை இந்தியப் பேரரசிடம் பெறுவதற்கான முயற்சியை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன வசதியை வளர்ப்பதற்காக இந்தியப் பேரரசு 381 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். அதிலே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் 12 கோடி 33 லட்சம் ரூபாய் வந்திருக்கிறது. சதவிகித கணக்குப் போட்டு, மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தோமானால், தமிழக மக்களுக்கு 7.67 சதவிகித அளவுக்குக் கிடைக்க வேண்டிய அளவு இருந்தாலும், நீர்ப்பாசனத்திற்காக நமக்குக் கிடைக்கும் தொகை 3.24 சதவிகித அளவுக்குத்தான் இருக்கிறது. எனவே அதிக மானியத் தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்பதற்கு நியாயம் இருக்கிறது என்பதற்காகத்தான் இந்தப் புள்ளி விவ்ரத்தை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 600 கோடி ரூபாய் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு ஒதுக்கப்படுகிறது மத்திய அரசினரால். தமிழக மாநில சர்க்காருக்கு 27 கோடி 41 லட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது. சதவிகிதக் கணக்குப் போட்டுப் பார்த்தால் 4.5 சதவிகித அளவுக்குத்தான் வருகிறது. அதிகமான மானியத் தொகை கேட்டு வாங்குவதற்கு வாய்ப்புக்கூறுகள் அதிகமாக இருக்கின்றன என்று தெரிவிப்பதற்கும், சிறிய நீர்ப்பாசன திட்டங்களை இன்னும் அதிகமான அளவுக்கு விரைவாக நிறைவேற்றுவதற்குக் கூறுபாடுகள் இருக்கின்றன. விளைநிலமாக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி, தென் மண்டலக் குழுவில் அதிகமாக முயற்சி எடுத்து நிறைவேற்றுவதற்கும் இந்தியப் பேரரசினுடைய மானியத் தொகையை அதிகமாக பெறுவதற்குமான முயற்சி எடுக்க வேண்டும். அந்தக் கூறுபாடுகளை விரைவில் நிறைவேற்றுவதற்கான எல்லா முயற்சிகளும் அரசினர் எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி, வெட்டுப் பிரேரணையை வலியுறுத்துகிற முறையில் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் விவாதத்திலே 35 கனம் அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்

இன்னும் நேரம் கொடுத்திருந்தால், அனேகமாக எல்லாக் கனம் அங்கத்தினர்களுமே இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டிருக்கக்கூடும். இந்த இலாகாவில் நடக்கக்கூடிய வேலைகளுக்கும் கனம் அங்கத்தினர்களுக்கும் அதிக சம்பந்தம் இருக்கிறது. நேரடியாகப் பொது மக்களிடத்தில் அந்த வேலைகளைக் காட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும், எல்லா கனம் அங்கத்தினர்களும் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே பேச முடியாமற்போய்விட்டாலும்கூட, ஒவ்வொரு அங்கத்தினருடைய கருத்தையும் தெரிந்து கொள்ளுவதற்காக நான் முயற்சி எடுப்பது பல ஜில்லாக்களைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியும். இந்த வருஷம் நான்கைந்து ஜில்லாக்களுக்குச் சென்று, சட்ட சபை அங்கத்தினர்களுடைய ஆலோசனைகளை மட்டுமல்ல, இன்னும் பொறுப்புள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு, இந்த இலாகாவில் இன்னும் அதிகமான வேலை நடப்பதற்குத் திட்டங்களை உருவாக்கவேண்டும் என்பதற்கான முயற்சிகளை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அது போலவே, வரக்கூடிய வருஷத்திலும், மற்ற ஜில்லாக்களுக்கும் சென்று, டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்களில் குறிப்பிடக்கூடிய தேவைகளை மேலும் பரிசீலனை செய்வதற்கு நான் தயாராயிருக்கிறேன்.

அந்த நிலை இருக்கும்போது, நான் இன்று ஆரம்ப உரையாகக் கொடுத்த அறிக்கையில், எல்லா கனம் அங்கத்தினர்களுடைய கவனத்தையும் ஈர்க்கும் முறையில், ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறேன். இந்த மாநிலத்திலிருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதியை நினைத்துப்பார்த்தால், எல்லா வேலையுமே பூர்த்தியாகிவிட்டதோ என்ற சந்தேகம் ஏற்படக்கூடிய ஒரு கருத்தை நான் சொல்லியிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு நடந்த விவாதத்தைப் பார்த்தால், நான் சொன்ன கருத்து சரியானது அல்ல என்று நிரூபிக்கக்கூடிய முறையில்தான், மிக வரண்ட பிரதேசமாகிய சேலத்திலிருந்து வந்திருக்கும் கனம் அங்கத்தினர் திரு. குழந்தைசாமி கவுண்டரிலிருந்து கடைசியாகப் பேசி முடித்த கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த திட்டங்களை நினைத்துப் பார்த்தோமானால், இன்னும் எத்தனை வருஷங்கள் ஆனாலுங்கூட, இன்றைக்கு ஆலோசனை சொன்ன திட்டங்களைப் பூர்த்தி செய்யமுடியுமா என்று நினைக்கவேண்டியிருக்கிறது. குறைந்தது, ஐந்து அல்லது பத்து வருஷங்கள் ஆகலாம் என்று நான் நினைக்கிறேன். இதல்லாமல் இன்னும் ஏராளமான திட்டங்கள் அமையவேண்டும்.

காரியம், இதற்கு மேல் காவிரியைப் பயன்படுத்த முடியாது' என்று நினைத்திருக்க முடியும். ஆனால், கல்லணை இருக்கும் இடங்களைப் பார்த்தால்,

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அவர்கள் ஆரம்ப காலத்திலே கல்லணையை அமைத்த நிலையையும் இன்று அது கொடுக்கும் தோற்றத்தையும் பார்க்கும்போது, ஒரே இடத்தில் எவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து நமக்கெல்லாம் வியப்பாக இருக்கிறது. அங்கு இப்பொழுதிருக்கும் தோற்றத்தைப் பார்த்துப் பலருக்குச் சந்தேகம் வந்துவிடுகிறது. அங்கே வெண்ணாற்றுக்குத் தண்ணீர் விடக்கூடிய அமைப்பு, காவிரி-மேட்டூர் ப்ராஜெக்ட் தண்ணீரை வெட்டாற்றுக்குத் திருப்பிவிடக்கூடிய அமைப்பு இதெல்லாம் கரிகால் சோழன் காலத்திலேயே அமைந்துவிட்டதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் அங்கு ஒரு பொம்மையை அமைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்தவுடனே, எவ்வளவு அற்புதமான வேலைப்பாடுகளை 100 வருஷங்களுக்கு முன்பே அமைத்துவிட்டார்கள் என்று தவறாகக் கருதக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அந்த இடத்தில் மட்டும் அது எவ்வளவு வளர்ந்திருக்கிறதோ, அது போலவே, காவிரி நதியை மட்டும் எடுத்துக்கொண்டால், கரிகால் சோழன் காலத்திற்குப் பிறகு இன்னும் எத்தனையோ பாசனத் திட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, லோயர் அணைக்கட்டு பல நூறு வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டது. பின்பு அப்பர் அணைக்கட்டு ஏற்பட்டது. ஒரு சில வருஷங்களுக்கு முன்பு ஜேடர்பாளையம் பெட்ரொருவேடருக்கு ஏற்பாடு செய்து அதிலிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். அதற்குச் சற்று முன்பு மேட்டூர் அணை ஏற்பட்டது. அதற்கு கொஞ்ச காலம் கழித்து, கீழ் பவானித் திட்டம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு அமராவதித் திட்டம். இப்பொழுது அமைந்திருக்கும் குந்தாத் திட்டம் அதோடு இணைக்கப்பட்ட திட்டமாக அமையும். குந்தாத் திட்டத்தைப் பார்த்தால், ஏறத்தாழ மூன்று, நான்கு ரிசர்வாயர்கள் வருகின்றன. அதில் கிடைக்கும் தண்ணீர் காவிரி நதியைப் பலப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. அது இன்னும் அதிகமான அளவுக்குக் காவிரி தீர்த்திற்கு லாபமாக இருக்கும். அதோடு கனம் அங்கத்தினர் திரு. சதாசிவம் அவர்கள், 'இப்பொழுதிருக்கும் அமராவதி அணையை இன்னும் சற்று உயர்த்தக் கூடாதா? அல்லது, வேறு இடத்தில் மேலும் ஒரு அணை கட்டிப் பயன்படுத்தக் கூடாதா?' என்று கேட்கக் கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. ஒரே ஒரு ஆற்றைக் குறித்து நான் சொல்வதற்குக் காரணம், நாம் முயற்சி எடுக்க எடுக்க, புது வழிகளெல்லாம் கண்டுபிடித்தாக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்போது, நமது மாநிலத்திலுள்ள தண்ணீரையெல்லாம் பயன்படுத்திவிட்டோம், இனிமேல் வேறு வழி

என்று கையைக் கட்டிக்கொண்டு இருக்க இந்த அரசாங்கம் தயாராயில்லை. புது முயற்சி எடுத்தால் இன்னும் அதிகமாகக் கண்டுபிடிக்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

அந்த கருத்தின் அடிப்படையில், பல கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். ஏராளமான ஓடைகளைச் சொன்னார்கள். நான் சற்று முன்பு சொன்னதுபோல், நான் ஒவ்வொரு ஜில்லாவுக்கும், வேறு வேலை ஒன்றுமில்லாமல், நீர்ப் பாசனத்தை மட்டுமே கவனிக்கவேண்டுமென்ற நினைப்பில் செல்லும்போது, ஐந்தாறு தினங்கள் ஒரே ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்தாலும், அங்கிருக்கும் அத்தனை கோரிக்கைகளையும் பூராவாக என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. காரணம் அவ்வளவு காட்டாறுகள், ஓடைகள் ஓடுகின்றன. திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தால், ஐந்தாறு தினங்களும் ஓடைகளாகவே இருக்கும். அதே போல், கோயம்புத்தூர் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தால், அங்கெல்லாம் பள்ளங்களாகவே இருக்கும்—குரங்கம் பள்ளத்திலிருந்து மோசக்காரம்பள்ளம் வரை. மற்ற ஜில்லாக்களிலும் இதுபோன்ற கோரிக்கைகள் வருகின்றன. இதெல்லாம் ஒரு முக்கியமான பிரச்னை, கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, மற்ற முன்னேற்றங்களுக்கெல்லாம் அடித்தளமாக, அஸ்திவாரமாக இருப்பது நீர்ப்பாசனம் என்றால், அது மிகையாகாது. அந்த முறையில்தான் இதை இன்னும் நுணுக்கமாக மேலும் மேலும் கவனம் செலுத்தி, நல்ல விதமாக இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்த இலாகா முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகையால், அந்த அறிக்கையில் கொடுத்த வார்த்தையின்படி, இனி வேறு வழி இல்லை, வேறு இடங்களுக்கு நாம் திரும்ப வேண்டும் என்ற கட்டம் இருக்கிறதா என்று பார்த்தால், வேறு இடங்களுக்கு நாம் திரும்பத்தான் வேண்டும். வேண்டாம் என்று சொல்வதற்கு நான் தயாராயில்லை. ஆனால், ராஜ்ய எல்லையை விட்டு, மற்ற ராஜ்ய எல்லையை ஒட்டிப் பார்க்கத் தொடங்கும்போது, நமது ராஜ்ய எல்லைக்குள் இருக்கும் அத்தனையையும் சரியாகப் பயன்படுத்துவதற்கான சூழ்நிலையை உண்டுபண்ணிவிட்டோமா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்காமல், எங்களுக்கு பக்கத்து மாநிலங்களின் தண்ணீர்தான் வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினால், அகில இந்திய ரீதியாகப் பார்க்கும்போது, அவர்களுக்கு என்னால் சரியாகப் பதில் சொல்ல முடியாமற் போகும். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மற்ற மாநிலங்களிலிருக்கும் ஜீவநதிகளைப் பயன்படுத்துவதற்காக, மின்சார விநியோகத்திலே எப்படி ஒரு இன்டர்-ஸ்டேட் க்ரிட் வந்துவிடும் என்ற நம்பிக்கை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறதோ, அதுபோல, நதித் தண்ணீரைப் பயன்படுத்துவதற்காகவும் ஏன் ஒரு இன்டர்-ஸ்டேட் க்ரிட் ஏற்படுத்தக் கூடாது, என்று கேட்டார்கள். இதே கருத்தை நான் சென்ற

என்னைப் பொறுத்தவரையில், இந்த சென்னை ராஜ்யத்தில் இருக்கும் அத்தனை பாசனத் திட்டங்களையும் முதல்படியாக ஒரு 'க்ரிட்'டாகக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது. நமது மாநிலத்திலே கிடைக்கும் தண்ணீரை முறையாகப் பயன்படுத்திவிட்டோம் என்ற சூழ்நிலையை நாம் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டக்கூடிய தைரியம் வந்துவிட வேண்டும். மின்சார இணைப்பை நினைத்துப் பார்க்கும்போது, இந்த நினைப்பு சாத்தியமா என்ற சந்தேகம் அகில இந்திய ரீதியில் பத்து, பதினைந்து வருஷங்களுக்கு முன்பு இருந்தது. ஆனால், இது சாத்தியம் என்பதற்கு அகில இந்தியாவுக்கும் நமது சென்னை ராஜ்யம்தான் எடுத்துக்காட்டாக இருக்கிறது என்று சொன்னால் மிகை அல்ல. முதன் முதலாக சென்னை ராஜ்யத்திலிருக்கும் அத்தனை மின்சார நிலையங்களையும் இணைத்தோம், அதுபோலவே, நமது ராஜ்யத்திலிருக்கும் சாத்தியமான எல்லா நீர்ப்பாசனத் திட்டங்களையும் ஒன்றாக இணைக்கக்கூடிய சூழ்நிலையை உண்டு பண்ணிவிட்டால் அதற்கடுத்தபடியாக மற்ற இடங்களில் விரயம் ஆகும் தண்ணீரைப் பயன்படுத்துவது பற்றிய முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

சென்ற வருஷம் நான் பேசினதற்குப் பிறகு, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது நல்லதொரு வழியைத்தான் பின்பற்றியிருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய விருப்பம்—சென்ற தடவை நான் சொல்லியதுபோல—மற்ற மாநிலங்களில் ஓடும் தண்ணீரைக் கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டும். எந்த எந்தத் திட்டங்களை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும், எந்த எந்தத் திட்டங்களைக் கொஞ்ச காலத்திற்குத் தள்ளிப் போடவேண்டும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும். இந்தப் பொறுப்பை முதலில் நிபுணர்களிடம் நாம் விட்டுவிடவேண்டும். அவர்கள் சொல்கிற முடிவை அரசியல் ரீதியாகவும் மாநில ரீதியாகவும் நாம் பிறகு பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரலாம். முதலில் தென்னக மாநிலங்களில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்கிற புள்ளி விவரத்தைச் சேகரம் செய்யவேண்டும் என்கிற கருத்தை சென்ற தடவை நான் வலியுறுத்திச் சொன்னேன். அதற்கு முன்பே மத்திய அரசாங்கமும் ஒரு கமிஷனை நியமித்திருந்தார்கள். இன்றைக்கு அந்தக் கமிட்டியினரும் தங்கள் முடிவைச் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் செய்திருக்கக்கூடிய ஆராய்ச்சி எல்லாம் கிருஷ்ணா, கோதாவரி போன்ற நதிகளில் மொத்தம் எவ்வள்வு தண்ணீர் கிடைக்கும் அது என்ன என்ன அளவில் பயன்படுத்தப்படுகிறது, மேலும் எவ்வளவு தண்ணீர் உபயோகத்திற்குக் கிடைக்கலாம் என்பது பற்றியது தான். அதற்குப் பிறகு அந்தத் தண்ணீரை யார் யார் எப்படி, எவ்வளவு பயன்படுத்திக்கொள்ளலாம் என்று பரிசீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும். அதுபற்றிய பேச்சு வார்த்தை இப்பொழுதே நடந்துகொண்டிருப்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆகவே இதுபற்றிய விஷயத்தை நான் இப்போது அதிகம் பேச விரும்பவில்லை.

மற்றொரு விருப்பம் கூட எனக்கு உண்டு. மத்திய சர்க்கார் அமைத்த கமிட்டி மதிரியே தென்னகத்திற்கு என்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அது மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்ற அத்தனை நதிகளின் தண்ணீர் வளத்தையும் பற்றி விரிவான ஆராய்ச்சி ஒன்று நடத்தவேண்டும் என்பது. யார் யார் எவ்வளவு தண்ணீர் உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பது இப்போது பிரச்சனை அல்ல. மொத்தத் தண்ணீர் எவ்வளவு கிடைக்கும், இப்போது பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுவது எவ்வளவு, வீணாகிக்கொண்டிருக்கும் தண்ணீர் எவ்வளவு என்பதைப்பற்றியெல்லாம் கணக்குப் போடவேண்டும் என்பது என் விருப்பம். அதை மாகாண ரீதியாகச் செய்வது என்றால் ஒரு மாகாணம் செய்யும். இன்னொரு மாகாணம் செய்யாமல் போகலாம். அதை விட்டுவிட்டு சென்டர் வாட்டர் கமிஷனே அதைச் செய்வது நலமாக இருக்கும் என்றே நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

கனம் கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். முன்பு திரு. நம்பூதிரிபாட் அரசாங்கம் இருந்தபோது கேரளாவுக்கு ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரித்தார்கள், அதில் அவர்கள் தங்கள் பிரதேசத்திலுள்ள நதிகளின் தண்ணீர் உதவி கொண்டு மின்சாரம் தயாரித்துக்கொள்ளவும், பாசனத்திற்குத் தண்ணீரை நமக்குக் கொடுக்கவும் வகை செய்திருந்தார்கள் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்களுக்கு நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த மாநிலத்தவர் மாஸ்டர் ப்ளான் தயாரித்தாலும் தங்கள் தங்கள் மாநில அபிவிருத்தி சம்பந்தமாகத் தான் திட்டம் வகுப்பார்கள். நாம் ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரித்தாலும் நம் மாநில சம்பந்தமாக மட்டும்தான் தயார் செய்வோம். மற்ற மாகாணங்களின் அபிவிருத்தியைப் பற்றி நம்முடைய மாஸ்டர் ப்ளானில் இருக்காது. அதுபோல அவர்கள் தயாரித்த மாஸ்டர் ப்ளானில் நம் மாநிலத்திற்கு பாசன வசதிக்காக தண்ணீர் கொடுப்பதாகிய திட்டம் ஒன்றும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆகவேதான் நான் முன்பே சொன்னேன். இனி நாம் எந்த ஆராய்ச்சியை நடத்தினாலும் அது மாகாண ரீதியில் இல்லாமல், பிராந்திய ரீதியில், அகில இந்திய ரீதியில் அமையவேண்டும் என்று. அவர்களுக்கு வேண்டுமானாலும் நாம் உதவிசெய்யலாம். நமக்கு வேண்டுமானாலும் அவர்களிடம் இருந்து எடுத்துக்கொள்ள அப்போது அவர்கள் ஆட்சேபிக்க முடியாது. ஆகவே தான் இப்போது நமக்கு குறுகிய மாவட்ட ரீதியான நினைப்பு, அல்லது மாகாண ரீதியான நினைப்பு எல்லாம் நீங்க வேண்டும். இதை ஒரு அகில இந்திய பிரச்சனையாகக் கருத வேண்டும். கேரளா தண்ணீர் எல்லாம் நமக்கு வந்துவிடவேண்டுமென்ற எண்ணமோ, ஆந்திரத் தண்ணீர் எல்லாம் நமக்கு வந்துவிடவேண்டுமென்ற எண்ணமோ எனக்குக் கிடையாது. அங்கங்கே உள்ள தண்ணீர் நல்ல முறையில் கொஞ்சம் கூட விரயமாகாதபடி உபயோகிக்கப்படுவதற்கு வேண்டிய வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுதான் நம் நோக்கம்.

குறிப்பாக கனம் உறுப்பினர் ஒருவர் கீழ்பவானி நீர்த்திட்டத்தைப் பற்றி எழுந்த ஒரு கேள்வியில்—தஞ்சை மாவட்டத்திற்கு இப்போது கொடுக்கப்பட்டுவரும் தண்ணீர் உறுதி செய்யப்படுமா? இந்த திட்டங்களினால் அது பாதிக்கப்படாது என்று உறுதியளிக்க முடியுமா என்று கேட்டபோதே நான் இதுபற்றி சொன்னேன். நான் அளித்த பதில் தஞ்சை உறுப்பினர்கள் பலருக்கும் என்பேரில் வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கும் என்றால் அது மிகையாகாது. இதுபற்றி வெளியில் உள்ள பலருக்கும், இங்குள்ள உறுப்பினர்கள் பலருக்குமே—குறிப்பாக தஞ்சை மாவட்டத்தினர்களுக்கு என் பேரில் காரணம் இல்லாமல் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி எனக்கே ரிப்போர்ட்டுகள் வருகின்றன. கனம் தியாகராஜன் அவர்கள் கூடச் சொன்னார்கள், "புதுக்கோட்டை, கிழக்கு ராமநாதபுரம் ஆகியவற்றின் நிலைமை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா? நீங்களே மனது வைத்து காவேரியில் இருந்து இந்தப் பகுதி வளம்பெறச் செய்யத்தக்க ஒரு கால்வாயை அமைக்க முயற்சி செய்யவேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள்.

நான் இந்தச் சமயத்தில் தஞ்சை மாவட்ட பிரமுகர்களுக்கு மட்டும் அல்ல, காவேரிப் பகுதியில் உள்ள அத்தனை விவசாயிகளுக்கும் ஒரு உறுதி அளிக்க விரும்புகிறேன். அவர்களுக்கு நான் அளிக்கக்கூடிய உறுதி இதுதான். காவேரிப் பாசனப் பகுதி பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பது அவர்கள் கோரிக்கை. அந்தப் பகுதி அவர்களுக்கு மட்டும் சொந்தம் என்று நான் நினைக்கவில்லை. இந்த ராஜ்யத்திற்கே அது ஒரு பெரும் சொத்து என்று சொன்னால் அது மிகையில்லை. அற்புதமான பாசனம் அமைந்திருக்கக் கூடிய ஒரு பகுதி அது. ஏறக்குறைய 12 லட்சம் ஏக்கரா ஒரேயடியாக நஞ்சை பயிர் செய்யக் கூடிய பகுதி. வெளி நாட்டில் இருந்து வருகிறவர்கள் விமானத்தில் இருந்து பார்க்கும்போது அந்த நஞ்சைப் பகுதி காடுகளைக் கண்டு வியப்பெய்தி விடுகிறார்கள். இந்தமுறையில் அங்கங்கே கால்கள் அமைத்து ஒரேயடியாக பச்சைப் பசேல் என்று நஞ்சைப் பயிர் வைத்திருக்கக்கூடிய பகுதி வேறு எந்த இடத்திலுமே பார்த்ததில்லை என்று சொல்கிறார்கள். இப்படி ஒரேயடியாக 12 லட்சம் ஏக்கராவுக்கு மேல் சாகுபடியாகிக்கொண்டிருக்கிற காவேரிப் பாசன நஞ்சை நிலங்களுக்குப் பாதகம் ஏற்படக்கூடிய வகையில் எந்த ஒரு திட்டமும் மேற்கொள்ளப்படமாட்டாது என்கிற உறுதியை நான் அளிக்கிறேன். அதுமட்டுமல்ல. இன்றைய தினம் அந்தப் பகுதியில் சில இடங்களில் விவசாயம் பாதிக்கப்படுகிறதா என்றால் அதற்குக் காரணம் பலகாலமாக வாய்க்கால் மராமத்து எல்லாம் செய்யப்படாத காரணத்தினால் மணல் மேடிட்டு இருக்கிறது. இன்னும் காவேரியே கூட மணல் மேடாகியும், குறுகியும் வந்துவிட்டிருக்கிறது. மாயவரம் பக்கம் பார்த்தால் காவேரியே அடையாளம் தெரியாது. இப்படி மராமத்து செய்யப்படாதிருக்கும் நிலைமையும் மாற்றி அமைக்கப்படவேண்டும். அங்கங்கே வாய்க்கால்கள் ஒழுங்குபடுத்தப்படுவதும், பாசனம் தடையின்றி நடைபெற மதகுகள் அமைக்கப்படுவதும் முக்கியமாக கவனம் செலுத்தப்படவேண்டியிருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இதற்காகத்தான் தஞ்சாவூர் மாவட்டம் சம்பந்தப்பட்டமட்டில் ஒரு திட்டம் தயாரிக்கச் சொன்னேன். அதற்கு 17 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் உருவாகியிருக்கிறது. ஒரேயடியாக இந்த 17 கோடி ரூபாயும் செலவு செய்யப்படவேண்டுமென்பதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்யலாம். இன்னும் காவேரி பாயக்கூடிய தஞ்சையை எடுத்துக் கொண்டாலேயே அங்கே தண்ணீர் வசதி கிடையாது. பலயிடங்களில் காவேரிக்கு ஒரு பக்கம் நஞ்சையாகவும், இன்னொரு பக்கம் புஞ்சையாகவும்கூட இருந்து வருகிறது. ஆகவே காவேரிப் பாசனப் பகுதிகள் இப்போது இருப்பதைவிட இன்னும் சிறப்பான முறையில் பாசன வசதி பெறவேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எங்களுக்குப் பயன்படாவிட்டாலும் போகிறது, கடலில் போய் கலக்கட்டும் என்றுமட்டும் அவர்கள் சொல்லக்கூடாது. அப்படிச் சொல்லமாட்டார்கள் என்றே நினைக்கிறேன்.

இப்போது அந்தப் பகுதிகளில் மின்சார விஸ்தரிப்புக்கான 1-30 p.m.
முயற்சிகள் எடுக்கப்பட்டு ஏராளமான பம்ப் ஸ்கீம்கள் கொடுத்திருக்கிறோம். திருத்துறைப் பூண்டி தாலூகாவில் நாலைந்துதான் கொடுத்திருக்கிறோம். அதிகமாகக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும். இவ்வளவு கஷ்டம் இருக்கும்போது 1961-இல் ஏற்பட்ட வெள்ளத்தின்போது ஏற்பட்ட கொடுமைகளையும் மனதில் வைத்து, அதுபோன்ற வெள்ளம் வரும்போது தஞ்சை ஜில்லா பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் இருக்கிறது. அதற்குத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதற்காக விசேஷ அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சூப்பரின்டெண்டிங் இஞ்சினியர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது இப்போது பிரதம இஞ்சினியர் பார்வையில் இருந்து வருகிறது. அது விரைவில் அரசாங்கத்துக்கு வந்து முடிவு எடுக்கப்பட்டு விடும். அந்த முறையில் பார்த்தால் காவேரியில் கிடைக்கக் கூடிய உபரித் தண்ணீரை வரண்டிருக்கக்கூடிய பகுதிகளுக்குப் பயன்படுத்தச் சர்க்கார் முயற்சி எடுத்தால் அந்த ஜில்லாவைச் சேர்ந்த சட்டசபை பிரதிநிதிகளுக்கோ, விவசாயிகளுக்கோ கோபம் வரவேண்டிய அவசியம் இல்லை. தஞ்சை ஜில்லாவில் இருந்து வரக்கூடியவர்களுக்கு நான் திரும்பவும் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் எந்த ஒரு முயற்சியை எடுத்தாலும், வீணாக விரயமாகிக் கொண்டிருக்கும் தண்ணீரைப் பயன்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் வரண்ட பகுதிகளுக்கு அதைக் கொடுக்கிறோம். லோயர் அணைக்கட்டுக்குக் கீழே பத்து தினங்கள் தண்ணீர் போனாலும் அது வீணாகக் கடலில் போய் விழும் தண்ணீர்தான். நல்ல மழைக்காலத்தில் 10, 15 தினங்கள் லோயர் அணைக்கட்டை மீறித் தண்ணீர் போகும் காட்சியைப் பார்க்கிறோம். இந்த விரயத்தை நாம் ஏன் தடுக்கக்கூடாது? இந்த மாகாணத்தைப் பொறுத்தவரை பாசன வசதி பெருக

வேண்டும், இருக்கக்கூடிய பாசன வசதிகள் சரிப்படுத்தப்படவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அந்த முறையில் மாநிலத்தில் இருக்கக்கூடிய பல பாசனத் திட்டங்களையெல்லாம் போய்ப் பார்த்திருக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till the Hon. Minister finishes his reply and voting on the Demands takes place.

கனம் திரு. வெ. ராமைய்யா : காவேரியில் இருக்கக்கூடிய பிரச்னைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக தஞ்சை ஜில்லாவுக்குச் சென்று பார்த்ததுபோல், தாம்பிரபரணி சிஸ்டத்தையும் நேரிலே போய்ப்பார்த்தேன். சுதந்திரக்கட்சித் தலைவர் அவர்கள் அந்த சிஸ்டத்தைப் போய்ப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இராமநாதபுரத்தில் எப்படிக் கண்மாய்கள் அமைந்திருக்கின்றனவோ அந்த அடிப்படையில் இன்னும் கொஞ்சம் முன்னேற்றமான முறையில் தாம்பிரபரணி நதியைப் பயன்படுத்திருக்கிறார்கள். அங்கு நதியிலிருந்து நேரடிப் பாசனம் என்பது மிகக்குறைவு. எல்லாம் ஒரு ஏரியிலிருந்து மற்றொரு ஏரிக்குச் சென்று அந்த அடிப்படையிலே கிடைக்கக்கூடிய தண்ணீரை அவர்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு அற்புதமான சிஸ்டம் என்று சொன்னால் மிகையாகாது.

லோயர் பவானி சிஸ்டத்தை எடுத்துக்கொண்டால் அந்தத் திட்டம் ஆரம்பமானபோது ஒரு நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு அது மற்றொரு போக்கில் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த மாநிலத்திலே நல்ல மழை பெய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏராளமான தண்ணீர் இருக்கிறது. இந்தத் தண்ணீரை முறையாக பயன்படுத்த முயற்சி செய்யவேண்டும். எப்படி காவேரிக்குக் குறுக்கே நல்ல பல திட்டங்களை அமைத்திருக்கிறோமோ அது போன்று மேலும் மேலும் ஆராய்ந்து பார்த்துத் திட்டங்களைப் போடவேண்டும். நான் ஆரம்பத்திலேயே சொன்னது போல் யாருக்கும் பாதகம் இல்லாத முறையிலே அமைய வேண்டுமென்பதிலே கவனமாக இருக்கவேண்டும். லோயர் பவானித் திட்டம் வந்தது என்றால், அதனால் தஞ்சை ஜில்லாவாசிகளுக்கு நன்மைதான் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் நெருக்கடி ஏற்பட்டு தண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டது என்று சொன்னால் யாருக்கு ஹை ப்ரையாரிடி என்று சொன்னால், ஆயக்கட்டுதாரர்களுக்கு அல்ல, தஞ்சை ஜில்லாவாசிகளுக்குத்தான். அமராவதி சிஸ்டத்தை எடுத்துக்கொண்டாலும் தஞ்சை ஜில்லாவாசிகளுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. அது போலவே சமீபத்தில் தாம்பிரபரணி சிஸ்டத்திலே நல்ல ஒரு பெரிய அணையைக் கட்டினோம். மணிமுத்தாறு திட்டத்தை நிறைவேற்றினோம். கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள், அந்தத் திட்டத்தை

நிறைவேற்றத் திட்டமிட்டபோது, 'அந்த சிஸ்டத்தை நிறைவேற்றுகிறவர்கள் தாம்பிரபரணி சிஸ்டத்துக்குத் துரோகம் இழைத்தவர்கள்' என்று சொல்வார்கள். அந்த சிஸ்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு தாம்பிரபரணி சிஸ்டத்துக்குப் பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையல்ல. இந்த வருஷம் போதுமான பருவ மழை இல்லாத காரணத்தால் தாம்பிரபரணி சிஸ்டம் பாதிக்கப்படுமோ என்ற அச்சம் இருந்தது. எதிர்பாராத முறையில் மூன்று தினங்கள் நல்ல மழை பெய்தது. இப்போது அங்கே பார்த்தால் மணிமுத்தாறு சிஸ்டம் இணைந்திருக்கக்கூடிய காரணத்தால் தாம்பரபரணி சிஸ்டம் மட்டுமல்ல, விவசாயம் இல்லாத நாவகுநேரி பகுதிகளில்கூட விவசாயம் செய்யக்கூடிய நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் முறையாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய தீவிர நினைப்பு. அந்த அடிப்படையில்தான் இப்போது இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள்களை அமைத்திருக்கிறோம். அவர்கள் முதலில் காவேரி சிஸ்டத்தைப் பற்றிப் பரவலாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடுத்தபடியாக, பெரியாறு சிஸ்டத்தைப் பார்க்க வேண்டும். இந்த இன்வெஸ்டிகேஷனை மொத்தமாக ஒரு வருஷம் இரண்டு வருஷத்தில் செய்து முடித்து விடுவது லாபமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏராளமாக வேலை நடக்கவேண்டும்.

இந்த விவாதத்திலே பங்கெடுத்துக் கொண்டவர்கள் அவர்களுடைய கருத்தைச் சொல்லும்போது இர்ரிகேஷன் முறையிலே இருக்கக் கூடிய பல கஷ்டங்களை பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஒருசில வேலைகளை அரசாங்கமே நேரடியாகப் பார்க்கிறது. சில வேலைகளை, ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் வேலைகளை உணவு இலாகாவினர் பார்க்கிறார்கள். சில வேலைகளை ரெவின்யூ இலாகாவில் கவனித்து வருகிறார்கள். சிறு சிறு வேலைகள் இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் இருந்த கஷ்டம் இப்போது இல்லை. முன்பு ஒவ்வொரு பிரிவையும் தனித் தனியாக இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டிய கஷ்டம் இருந்தது. மூன்று, நான்கு வருஷங்களுக்கு முன்பு, அறந்தாங்கியில் 'புட் புரொடக்ஷன் டிப்பார்ட்மெண்டார்' இன்வெஸ்டிகேஷன் செய்தார்கள். அந்த இன்வெஸ்டிகேஷன் முடியக்கூடிய நிலையில் அது வேறொரு இலாகாவுக்கு மாற்றப்பட்டது. அதனால் முன்பு செய்த வேலையையே மறுபடியும் செய்தார்கள். அதன் காரணமாக இன்வெஸ்டிகேஷன் எப்போது முடியும் என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டதாகச் சொன்னார்கள். அந்த நிலைமை இப்போது இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்படுவதற்கு முன்கூட்டியே இந்த இன்வெஸ்டிகேஷன் சர்க்கிளை ஏற்படுத்தினால் நஷ்டம் இருக்காது. வரக்கூடிய ஒரு சில வாரத்தில் இது சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் கலந்து பேசி இன்வெஸ்டிகேஷன் பூராவையும் மொத்தமாக எடுத்து முடிப்பதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பிராஜக்டுகளை

பணச்செலவு செய்கிறோம். லோயர் பவானி திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, அமராவதித் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, வைகைத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, எல்லா புது பிராஜக்டுகளையும் பல கோடி ரூபாய் செலவு செய்து நிறைவேற்றி இருக்கிறோம்.

பிராஜக்ட் முடிகிற வரை எல்லோருடைய நினைவும் அதில்தான் இருக்கிறது. பிரதம என்ஜினியர் முதல் அமைச்சர் வரை அதை விரைவாக முடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அது முடிந்தவுடன் அது யாரோ ஒருவர் பார்வையின்கீழ் போய் விடுகிறது. ஒரு சாதாரண என்ஜினியரிடம் போய் விடுகிறது. அதிலுள்ள சிக்கல்களை பூர்த்தி செய்யவும் ஒரு சூழ்நிலை இருக்கிறதா என்றால் இல்லை. ஆகவே நல்ல பலம் பொருந்திய ஒரு அமைப்பு இருக்குமானால் அதில் ஏற்படுகிற சிக்கல்களை உடனுக்குடன் நீக்கி விட முடியும். லோயர் பவானி சிஸ்டத்தை எடுத்துக் கொண்டால் ஆரம்ப கட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டபோது, ட்ரை க்ராப்ஸ்க்கு தண்ணீர் கொடுப்பது என்றிருந்தது. அதாவது பருத்தி, நிலக்கடலை, மில்லட்ஸ் போன்ற தானியங்களை உற்பத்தி செய்வது என்று இருந்தது. கசிவு நீர் எங்கு அதிகமாக இருக்கிறதோ அங்கு நஞ்சை பயிர் செய்து கொள்ளலாம் என்று இருந்தது. திட்ட ரீதியில் பார்த்தால் இந்த அமைப்பு அற்புதமான அமைப்பு. மாநிலத்தில் உள்ள பல பற்றாக்குறைகளைப் போக்க வேண்டுமென்றால் இந்தக் கொள்கையை தீவிரப்படுத்தியாக வேண்டும். ஆனால் அந்தக் கொள்கை இன்று நடைமுறையில் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. லோயர் பவானி சிஸ்டத்தைப் பார்த்து வந்த போர்ட் மெம்பர் கூறிக் கொண்டிருந்தார். அது வருவதற்கு முன்பு எவ்வளவு பருத்தி உற்பத்தியானதோ அது இப்போது மிகவும் குறைந்து விட்டது, அதனால் நெருக்கடி ஏற்பட்டு விடுமோ என்று அச்சம் இருக்கிறது என்று சொன்னார்கள். புள்ளிவிவரங்களும் அப்படியே இருக்கிறது. அந்த சர்ச்சையில் நான் போக விரும்பவில்லை. இது ஒரு கஷ்டமான பிரச்னை. அந்த நிலை ஏன் ஏற்பட்டது என்றால் லோயர் பவானி சிஸ்டம் முடிந்த பிறகு அதை சக்தியுள்ள ஒரு அதிகாரி பார்த்துக் கொண்டிருந்தால் அதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன, அதை எப்படி எப்படி தீர்ப்பது என்று பார்த்து செய்யலாம், அப்படியில்லாததினால்தான் இந்நிலை ஏற்பட்டது. அதை எப்படியாவது நஞ்சை விவசாயத்திற்கு கொண்டுவரத்தான் விவசாயிகள் விரும்புகிறார்கள். காவேரி பாயும் பகுதிகளில் இருப்பதுபோல் இங்கும் ஏற்படவேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆகவே நான் சொல்வது "கிராப் பாட்டேர்னை" விட்டு விட்டால் மாநில பொருளாதார வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படும் என்பதுதான். கோவை மாவட்டத்தின் முன்னேற்றத்தை அது தடை செய்து விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். ஆகவே இதை மறுபரிசீலனை செய்யவேண்டும். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அந்த வட்டாரத்தில் இதுவே ஒரு போராட்டமாக இருந்து வந்தது. நல்லசிவம் போன்றவர்களுக்கு போராட்டம் நடத்த அது வசதியாக இருந்தது. அவர்களுக்கு அது பலன் தந்தது. குறுக்கு வழியில்,

க்ராப் பாட்டேர்னை விட்டு விட்டு நஞ்சைக்கு தண்ணீர் கொடுத்து விட வேண்டும் என்று விவசாயிகள் சொன்னார்கள். நிபுணர்கள் சொல்லவில்லை. முதல் சாகுபடிக்கு நாலு மாத தண்ணீர், இரண்டாவது சாகுபடிக்கு மூன்று மாதத் தண்ணீர் என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு முடிவிற்கு வரலாம் என்று வந்தார்களே தவிர நாலு மாதத்திற்குள் விவசாயம் செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சியில் போகவில்லை. நடைமுறைக்கு வந்த பின்னர் பார்த்தால் முதல் சாகுபடி நாலு மாதங்களில் நிற்கவில்லை. ஒரு மாதம் நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. இரண்டாவது சாகுபடி நான் நிச்சயமாக சொல்ல முடியும், 3½, 4 மாதங்களில் முடியவில்லை. அந்த வட்டார அங்கத்தினர்கள் நேற்று எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். கண்டிப்பாக ஏப்ரல் முடிகிற வரையிலாவது தண்ணீர் கொடுத்து விடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் அணையில் இருக்கிறது, கொடுக்கிறோம். அதல்ல பிரச்னை. வரண்ட பகுதிகள் எவ்வளவோ இருக்கின்றன, திட்டங்களை நிறைவேற்றும் போது இருக்கிற பகுதிகளுக்கு அதிகமாக கொடுக்க வேண்டும், ராமநாதபுரம் போன்ற பற்றாக்குறைப் பகுதிகள் அப்படியே இருக்கட்டும் என்று சொன்னால் அதை என்னால் ஒப்புக்கொள்ளமுடியாது. ஆகவே கிராப் பாட்டேரியனில் அக்ரிக்கல்ச்சர் டிப்பார்ட்மெண்ட் தீவிர கவனம் செலுத்தி இவ்வளவு மாதங்களில் போடும் பயிர்கள் தான் அதில் சாகுபடி செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல வேண்டும். அதை மீறக்கூடாது. அப்படி மீறினால் எல்லா சிஸ்டமும் காவேரி சிஸ்டமாகிவிடும். நல்லசிவம் போன்றவர்கள் நாலு மாதங்களில் பயிர் எடுக்கிறோம், காவேரியில் இருப்பவர்களுக்கு ஏன் எட்டுமாதங்கள் கொடுக்கிறீர்கள் என்று கேட்கலாம். அவர்கள் ஒரு பழக்கத்தில் இருப்பவர்கள். இங்கு ஐந்து வருடத்திலேயே ஒரு பழக்கத்திற்கு வர முடியவில்லையே. திருமங்கலம் வாய்க்காலை எடுத்துக் கொண்டால் அந்த சிஸ்டத்தில் நான்கு மாதங்கள்தான் கொடுப்போம் என்று திட்ட அறிக்கையில் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அத்திட்டம் செயல்படத் தொடங்கியதில் இருந்து இதுவரை எக்ஸ்டென்ஷன் இல்லாத வருஷமே கிடையாது. நல்ல "ஃபாலோ அப்" வேண்டும். இதைப் பார்த்த பிறகு மின்சார இலாகாவில் திட்டம் பூர்த்தியானதும் எப்படி பிரத்தியேக என்ஜினியரைப் போட்டு கண்காணிக்கிறார்களோ அதேபோன்று ஒவ்வொரு திட்டமும் சயல்படத் தொடங்கிய காலம் முதற்கொண்டு குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் வரையாவது மாகாண ரீதியாக இருக்கக்கூடிய விவசாய இலாகா டைரக்டர் அல்லது அவர் உதவியாளர், நீர்ப்பாசன இலாகா பிரதம என்ஜினியர் அல்லது அவர் உதவியாளர், அதேபோல் ரெவின்யூ இலாகாவில் உள்ளவர் ஒருவர் என்று ஒரு குழு அமைத்து ஐந்து ஆண்டுகளாவது கண்காணிக்க வேண்டும். அதிலுள்ள பிரச்னைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். நீண்டகால முடிவு எப்படி இருக்கவேண்டும் என்று அவர்கள்தான் சொல்ல வேண்டும். அப்பொறுப்பை விவசாயிகளுக்கு விட்டால் லோயர் பவானியில் ஏற்பட்டது மாதிரி கஷ்டங்கள், கொடுமைகள்தான் ஏற்படும். நல்லசிவம் அவர்கள் அங்கு முன்பு [illegible]

சண்டை சச்சரவுகளைப் பற்றி சொல்லவில்லை. அடி தடி, தலையைச் சீவி தண்ணீரில் விட்டது போன்ற நிகழ்ச்சிகள் நடந்தன. இதைக் கூறும்போது பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் உருவாக்கியிருப்பது க்ராப் பாட்டேரினில்தான். ஆனால் க்ராப் பாட்டேர்ன் நடைமுறைக்கு வருமா என்ற சந்தேகத்தை இப்போதே சொல்லிவிட்டார்கள். அதை ஆரம்பிக்கும்போதே அடி மடியில் இருப்பவர்கள் சொன்னார்கள் நாங்கள் அற்புதமான விவசாயிகள், எங்களுக்கு க்ராப் ரெஸ்ட்ரிக்ஷன் இருக்கக் கூடாது, தாராளமாக கொடுக்கவேண்டும். அற்புதமாக நாங்கள் நெல்லை சாகுபடி செய்வோம் என்று சொன்னார்கள். எப்படி தாராபுரத்திற்கு போய் சேருமோ தெரியவில்லை. லோயர் பவானியில் டேர்ண் சிஸ்டம் சக்ஸஸ்ஃபுல் என்றால் கணக்குப்போட்டு அனுமதிட அதிகமாக இருப்பதால் கொடுக்கிறோம். ஆனால் பரம்பிக்குளம்—ஆளியாற்றில் அப்படி ஏற்படுமா என்பது சந்தேகம். க்ராப் பாட்டேர்ன் என்று சொன்னால் அதை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். இன்வெஸ்டிகேஷன் சர்க்கிளை குறிப்பிட்டுப் பேசும்போது இந்த மாகாணத்திலுள்ள சிறிய ஓடைகள், காட்டாறுகள், பாசனவசதி உள்ள எல்லாவற்றையும் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் பாசன இலாகாவே முறையாக செய்யும் பட்சத்தில் இதை ஒரு க்ரிட் சிஸ்டமாக அமைக்க முடியாவிட்டாலும் ஒரு சிஸ்டத்தின் தண்ணீர் மற்றொரு சிஸ்டத்திற்கு கிடைக்கும் சூழ்நிலையை உண்டு பண்ணி அந்த அடிப்படையில் தொடர்ந்து இன்வெஸ்டிகேஷன் நடத்த என்ன முயற்சி எடுக்கவேண்டுமோ அதை எடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள், அவர்களுடைய ஜில்லாவில் இருக்கக்கூடிய பிரச்னைகள் குறித்துப் பேசும் போது, எனக்கு ஒன்றை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்த ஜில்லாவை பொறுத்த வரையில் சில பகுதிகள் அதிகமாக மழை பெய்யக் கூடிய பகுதியாக இருக்கின்றன. ராம நதி, கடனு நதி ஆகிய இது போன்ற பகுதிகளுக்குப் போய்ப் பார்க்கும் போது அங்கே ஏராளமாகத் தண்ணீர் வருகிறது. இது வரையிலும் எந்த ஒரு சிறு அணையைக் கட்ட வேண்டுமென்றாலும் இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டின் நினைப்பு எப்படி இருந்தது என்றால், அந்த அணையைக் கட்டினால் கீழே இருக்கக்கூடிய பெரிய பாசனத்தைப் பாதித்து விடுமோ என்று இன்வெஸ்டிகேஷனை செய்யாமல் இருப்பார்கள். தாம்பரபரணி சிஸ்டம் மாத்திரமல்ல, சேலம் ஜில்லாவில் போய்ப் பார்க்கும்போது—நான் ஹோசூர் தாலூகா என்று நினைக்கிறேன், அங்கு சென்றபோது பார்த்தேன்—பல கட்டாறுகள் போகின்றன. அந்த ஆற்றில் குறுக்கே ஒரு சிறு அணைகட்டவேண்டுமென்றால், அது சாத்தனூரை பாதிக்கும், கிருஷ்ணகிரியை பாதிக்கும், ஆகையால் ஒன்றுமே செய்யக் கூடாது என்று சொல்லுவார்கள். அதனால் விவசாயிகளுக்கு கஷ்டம் இருக்கிறது. மணிமுத்தாறு அணைத் திட்டத்தைப் [illegible] வரையில் லோயர் பவானி கிட்டத்தைப் பொறுத்த

அணைகளைப் பொறுத்த வரையில் இது போன்ற சிறு சிறு அணைகள் அமைவது பெரிய சிஸ்டத்தை பாதிக்கவேண்டாம், அதையே சப்ளிமெண்ட் சிஸ்டமாக மாற்றிக் கொள்ள முடியும். அந்த முறையில் ராம நதி குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் பிரதம என்ஜினியரிடம் சொல்லியிருக்கிறேன். சிறு திட்டமாக அமைந்தால் லாபமாக இருக்கும். அது நல்ல முறையில் அமையும் என்று அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். செங்கோட்டை தாலூகாவுக்குப் போய்ப் பார்க்கும்போது ஏராளமாக மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வரும் தண்ணீர் பல பள்ளத்தாக்குகளிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சரியான முறையில் பயன்படுத்தினால் தாம்பரபரணி சிஸ்டத்திற்கே லாபமாக இருக்கும். அதையும் இன்வெஸ்டிகேஷன் செய்யவேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறேன். கனம் அங்கத்தினர் கோசல்ராம் சொன்னார், தாம்பரபரணி ஏற்பட்ட காலத்திலிருந்து அங்கு நடந்துவந்துள்ள விவசாயத்தைப் பற்றிக் குறிப்பிட்டு சமீபத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டத்தைச் சொன்னார். குறிப்பாக பாபநாசம் சிஸ்டம் ஏற்பட்ட பிறகு கொஞ்சம் அதிகமாக அந்த சிஸ்டத்திற்கு தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி அவர்கள் விவசாயம் செய்கிறார்கள். நல்ல விவசாயம் செய்து வருகிறார்கள். கார், அட்வான்ஸ் கார் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்குக் கிடைப்பதெல்லாம் நல்ல வார்த்தைக்கு பதில் தண்டத் தீர்வை கட்டவேண்டும் என்று சொல்லப்படுவதுதான் 20 மடங்கு கட்டவேண்டும். இதை ஒரு சமயத்தில் அரசாங்கம் பரிசீலனை செய்து 20 என்பதை 2 மடங்கு என்று குறைத்திருக்கிறது. அதைப் பார்த்துக்கூட அந்த ஜில்லா விவசாயிகளுக்குக் கோபம். (திரு. கே. டி. கோசல்ராம்: தண்டம் என்பதே கூடாது.) அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குச் சொல்லி வந்த உறுதியெல்லாம் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது, எல்லா அதிகாரிகளையும் அழைத்துப் பேச அரசாங்கம் தயாராக இருக்கிறது, அதை விரைவிலே செய்ய முடியும் என்ற உறுதியைச் சொல்லி வந்திருக்கிறேன். அந்த உறுதியைப் பொறுத்த வரையிலே நான் கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது எல்லாம், வேண்டிய நடவடிக்கைகளெல்லாம் எடுத்தாகிவிட்டது, முடிவை இன்றைக்கு சொல்லக்கூடிய நிலையில் இல்லை, 25-ம் தேதி சொல்லிவிடலாம் என்று எதிர்பார்க்கிறேன். இல்லையானால் இன்னும் ஒரு வாரம் ஆகலாம். அது வரையிலும் கொஞ்சம் பொறுத்து இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தண்டத் தீர்வை என்பதே கூடாது என்று அந்த முடிவை எடுத்து விட முடியாது. அது இருக்கத்தான் வேண்டும். இதைப் பொறுத்த வரையில் எங்கள் பகுதிக்கு இல்லையா என்று யாரும் கேட்டுவிட வேண்டாம். கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள் சொல்லக்கூடிய பகுதியில் கீழே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, மற்றவர்கள் தண்ணீர் எடுத்துக் கொள்வதால் பாதகம்

கிருர்கள். மற்ற பகுதிகளில், லோயர் பவானி ஸிஸ்டத்தை எடுத்துக்கொண்டாலும், வேறு எந்த ஸிஸ்டத்தை எடுத்துக்கொண்டாலும் ஆக்கிரமித்து தண்ணீர் எடுத்துக்கொண்டார்களென்ருல், 'நீங்கள் பயிர் செய்தால் போதும்' என்று பரிசு கொடுக்க முடியாது. அவர்கள் மற்றவர்களுடைய உரிமையை பாதிக்கிருர்கள். அப்போது அவர்களுக்கு தண்டத் தீர்வை போடத்தான் வேண்டும். நாங்கள் சொல்லாவிட்டாலும், அந்த வட்டாரத்திலுள்ள மக்கள், விவசாயிகள் சொல்லுகிருர்கள். திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த வரையில் யாரும் அந்த மாதிரி சொல்லவில்லை. ஆகையால் மற்ற பகுதிகளில் இந்த தண்டத் தீர்வையை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு என்னிடம் வந்துவிடக் கூடாது. அரசாங்கம் ஒவ்வொரு இடத்திற்கும் தகுந்த முறையில் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாகப் பேசிய கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள், இந்த நெருக்கடி காலத்தில் அதிகமாக உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்ற முறையில் ஏராளமாக மத்திய அரசாங்கத்திலிருந்து பணம் வாங்கவேண்டும், சிறு சிறு திட்டங்களைப் பூர்த்தி செய்ய முயற்சி எடுக்கவேண்டும் என்று சொன்னுர்கள். அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதோடு அல்லாமல் நம் மாகாணம் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் சிறு பாசனத் திட்டங்களை அமைப்பதிலே முன்னேடியாக நிற்கிறது என்று நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன். அந்த வேலைகள் நல்ல முறையில் துரிதமாக நடக்கத் தொடங்கியிருக்கிறது. இன்னும் ஏராளமாக நடக்கவேண்டும். சிறு திட்டங்கள் நடக்கும்போது ஆரம்பத்தில் கருத்து சொன்னதைப் போல பெரிய திட்டங்களோடு இணையும் முறையில் இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்படுகிறது.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிருர்கள். கிழக்கு ராமநாதபுரம் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிருர். அதற்குத் திட்டங்கள் உருவாகவேண்டுமென்று சொல்லியிருக்கிருர். கிழக்கு இராமநாதபுரம் பகுதியைப் பொறுத்த வரையில் எஸ்.எம்.ஐ.பி., டிவிஷன் நல்ல திட்டங்களை உருவாக்கி, இப்போது ஆர்.எஸ். மங்கலம் கண்மாய்க்குத் தண்ணீர் வரக் கூடிய முறையில் 18 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் உருவாக்கியிருக்கிருர்கள். அது நடைமுறைக்கு வந்து விடும். எங்கெங்கே ஜமீன் இருந்ததோ அங்கு விசேஷ கவனம் செலுத்தி நல்ல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிருர்கள். இப்பொழுது, ஒரு பக்கத்தில் இருக்கக் கூடிய திட்டங்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கவேண்டும். அதே நேரத்தில், மற்றவர்கள் வலியுறுத்திச் சொல்லுவதைப்போல், ஒருசிலரை குறிப்பிடவேண்டாம் என்று நினைத்தாலும்கூட பாசன வசதியில் கனம் அங்கத்தினர்களுக்கு அக்கரை இருப்பது போல பத்திரிகை நிருபர்களுக்கு இருக்கிற அக்கரை காரணமாக, ஒரு மாதத்திற்கு முன் ஒரு நாள் என்னுடைய அறைக்குள் நுழைந்தார்கள். ஏதோ ரொம்ப கவனம் செலுத்திக்கொண்டிருப்பதாகவும், கிழக்கு இராமநாதபுரம், அறந்தாங்கி தாலுகா, புதுக்

கோட்டை போன்ற வறண்ட பிரதேசங்கள் விஷயத்தில் கவனஞ் செலுத்தப் போவதாகச் சொன்னீர்களே, என்ன செய்தீர்கள் என கேட்டார்கள். அவர்களுக்கு அந்த நேரத்தில் பதில் சொல்ல முடியவில்லை. ஒரு மணி நேரம் இருக்கக்கூடிய பிரச்சனைகளைச் சொன்னுல் தான் புரிந்துகொள்ள முடியும். விவாதத்தின்போது சொல்லுவதாகச் சொல்லியிருந்தேன். மாகாணத்தில் எல்லோருக்கும் இந்த கஷ்டம் நீங்கவேண்டும். குறிப்பாக, கஷ்டத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள், இங்கே கனம் அங்கத்தினர் குழந்தை அம்மாள் அவர்கள் எவ்வளவு அழுத்தமாகச் சொன்னுர்கள் பார்த்தீர்களா? அந்த நேரத்தில் கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்கள் எழுந்து வெட்டுப் பிரேரணை ஓட்டுக்கு விடப்படும்போது எங்களோடு ஓட்டு அளிக்கிறீர்களா என்று கேட்பார் என்று கூட நான் நினைத்தேன். அப்போது கனம் அங்கத்தினர் இங்கே இல்லை போல் இருக்கிறது. (திரு. மு. கருணாநிதி: நான் இங்கு தான் இருந்தேன்.) பெண் என்ருல் பேயும் இரங்கும் என்ற முறையில் கேட்கவில்லை போல் இருக்கிறது. நானே அதிர்ச்சி அடைந்து போய்விட்டேன். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை மட்டும் எடுத்துக் கொண்டு கனம் அங்கத்தினர் கோசல்ராம் போன்றவர்கள் கூறும் குற்றச்சாட்டு ஒதுக்கியிருக்கக் கூடிய பணத்தில் 80, 85 சதவீதம் கோயம்புத்தூர் ஜில்லாவிற்கே ஒதுக்கியிருக்கிறீர்களே, வேறு எங்கு இருக்கிறது என்பது. (திரு. கே. டி. கோசல்ராம்: குற்றம் சாட்டவில்லை, இங்கேயும் வேண்டுமென்று தான் சொன்னேன்.) அவர்கள் சொல்லக் கூடிய முறை வேருக இருந்தாலும், பாணி வேருக இருந்தாலும், அது குற்றச்சாட்டு தான். அவர்கள் குற்றச்சாட்டை எடுத்துச் சொன்னுர்கள். ஒவ்வொரு இடத்திலும் பாசன வசதி செய்துகொடுக்க முடியாது. எல்லா இடத்திற்கும் கால் வெட்ட முடியாது. கனம் அங்கத்தினர் சீமைசாமி அவர்கள் கால் வெட்டவேண்டுமென்று சொன்னுர், அப்போது காலை வெட்டினுல்தான் தண்ணீர் வரும் என்று கூட நான் சொன்னேன். எல்லா இடத்திலும் ஒரே வித பாசன வசதி உண்டுபண்ணிக் கொடுக்க முடியாது. கிழக்கு இராமநாதபுரம் போன்ற பின் அடைந்த பகுதிகளுக்கு நிச்சயமாக நல்லது செய்ய முயற்சி எடுக்கவேண்டும். அதற்கு கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் பல ஆலோசனைகள் சொன்னுர்கள். ஏராளமாக குழாய் கிணறுகள் அமைக்கவேண்டும். அதோடு இல்லாமல் நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் இப்படி பெரிய பெரிய பாசனத் திட்டங்களாகப் பயன் உள்ளதாக இருக்கும் கண்மாய்கள் மட்டும் இருபது லட்சம் ஏக்கர் சாருபடிக்கு உதவுகின்றன. அதற்குத் தண்ணீர் கண்டு பிடித்துக் கொடுக்க வேண்டும். கனம் அங்கத்தினர் தியாகராஜன் அவர்களுக்கும் தெரியும், காவேரி வருவது சாத்தியம் இல்லை என்று. ஆனுலும் நிச்சயமாகப் 2-00
பரிசீலனை செய்ய வேண்டும் என்கிருர்கள். கண்மாய் பாசனம் மூலம் மூன்று, நான்கு மாதத்திற்கு தண்ணீர் பெறலாம். ஆனுல் அது எந்த நாளிலிருந்து எந்த நாள் வரை என்று திட்டவட்டமாகச் சொல்லும் [illegible] இல்லை. [illegible] பகுதிகளுக்கு [illegible]

வேண்டுமென்றால், அது வடகிழக்கு பருவ மழையால்தான் கிடைக்கும். ஆனால், அந்தப் பருவ மழை எப்பொழுது வரும், எப்பொழுது தண்ணீர் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. அந்த மக்கள் சொல்கிறார்கள், கண்மாய்க்கு பக்க பலமாக பொதுக் கிணறுகள் போட்டுத் தாருங்கள், அதைக் கொண்டு ஒன்று, இரண்டு முறை தண்ணீர் விட்டு பயிரைக் காத்துக் கொள்ள முடியும் என்று. இது புதுக்கோட்டை ராமநாதபுரம் மக்கள் கோரிக்கை.

நான் மூன்று வருஷங்களுக்கு முன்பு திருப்பத்தூர் பகுதியில் தீவிர சுற்றுப்பயணம் செய்தேன். முதல் நாள் பிரயாணத்தின் போது சில மக்கள் தண்ணீர் வேண்டும் என்று கேட்டார்கள். கிணறு ஊற்று சமீபத்தில் இருப்பதாகவும் சொன்னார்கள். நான் சொன்னேன், நீங்கள் ஒரு சோதனைக் கிணறு போட்டு தண்ணீர் இருக்கிறதா, எப்படி இருக்கிறது என்று காட்டுங்கள், அதற்கு மேல் என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்கிறேன் என்று அந்த முறையிலே எனக்குக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப் பட்டன. முதலில், ஊருக்குள் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப் பட்டு வந்தது. ஆனால், இந்த கோரிக்கைக்குப் பிறகு, கண்மாய் உள்வாயிலேயே ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கெல்லாம் சோதனைக் கிணறுகள் வெட்டி இருப்பார்கள். அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துத்தான்—நீர் பாசன இலாகா என் பொறுப்பில் இல்லாவிட்டாலும்—அந்த இலாகா அதிகாரிகளிடம் இது சம்பந்தமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னேன். திருப்பத்தூரில் 5, 6 மாதிரிக் கிணறுகள் போட்டு இருக்கிறார்கள். புதுக்கோட்டைப் பகுதியில் எஞ்ஜினியர்களுக்கு ஒரு சந்தேகம் உண்டு. கண்மாயில் கிணறுகள் தோண்டினால், கண்மாயில் தண்ணீர் வரும்போது, தோண்டிய கிணற்றின் ஊற்றுக்கால் வழியே தண்ணீர் எங்காவது வெளிப்புறத்திற்குப் போய் விடுமோ என்று ஒரு ஐயம். அது ஆராயவேண்டிய விஷயம் தான். ஆனாலும் வறண்ட பகுதியில் இருப்பவர்கள் கண்மாய் கிணறுகள் மூலமோ, ஜீவ நதிகளிலிருந்தோ உபரித் தண்ணீரை திருப்பி விட வேண்டும் என்றும் அப்பொழுதுதான் தாங்கள் பஞ்சத்திலிருந்து பாதுகாக்கப்படுவார்கள் என்றும் சொல்கிறார்கள். இன்றைக்குப் பார்த்தால், ஆந்திராவில், சில பிராந்தியங்களை பஞ்சப் பிரதேசம் என்று குறிப்பிட்டு, அதற்கு விசேஷ சலுகைகள் கொடுக்கிறார்கள். இங்கே அப்படி இராமநாதபுரம் ரொம்ப பஞ்சப் பகுதிதான் லோயர் பவானிக்கு முன்பு காங்கேயம் அப்படிப்பட்ட பகுதியாகத்தான் இருந்தது. இப்பொழுது அப்படி இல்லை. நஞ்சைப் பயிருக்கு இல்லாவிட்டாலும், கால் நடை அபிவிருத்திக்காவது உபயோகமாக இருக்கும். அப்படி இன்றைக்கு செட்டிநாட்டில் ஒரு கால்நடை பண்ணை இருக்கிறது. புதுக் கோட்டையில் ஒன்று இருக்கிறது.

கன்யாகுமரி ஜில்லாவைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அந்த பகுதி அங்கத்தினர்கள், எவ்வளவு செய்தாலும், ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் எப்பொழுதும் சொல்கிறார்கள். முன்பிருந்த திருவாங்கூர்-கொச்சி நினைக்கா[illegible] நாம்

அவர்களுக்குச் செய்திருக்கிறோம். ஐம்பது வருஷமாக நடக்காததை நாம் இன்றைக்குச் செய்திருக்கிறோம். குறிப்பாக செங்கோட்டைப் பகுதியில் நடந்திருப்பதை குறிப்பிடவேண்டும். நம் மாகாண ரீதியில் செய்வதானால் இன்னும் 5, 6 ஆண்டுகளாவது ஆகும். ஆனால், அப்படியெல்லாம் இல்லாமல், முதல் அமைச்சர் விசேஷ அக்கறை காட்டவேண்டுமென்று விரும்பியதால், போதுமான புள்ளிவிவரங்கள் இல்லாமல் இருந்தாலும், அங்கே 15 லட்ச ரூபாய் செலவழித்துக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். மூன்றாவது திட்டத்தைப் பார்த்தால் கூட, வேறு எங்கும் நடைபெறாத முறையில் அங்கு வேலைகள் நடந்திருக்கின்றன. அப்படி இருக்க ஒன்றுமே நடக்கவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு என்ன தான் சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை. அப்படிபட்ட மனப்பான்மை அவர்களுக்குப் போகவேண்டும். தவறாக சொல்லவேண்டும், குற்றமாகச் சொல்லவேண்டும் என்ற மனப்பான்மை போக வேண்டும். குறைகளைச் சொல்லட்டும். கன்யாகுமரியில்தான் இரண்டாவது, மூன்றாவது திட்டங்களில் அதிகமான நீர்ப்பாசன வேலைகள் நடந்திருக்கின்றன. ஆகவே, அவர்கள் குற்றச்சாட்டிற்கு கொஞ்சம்கூட ஆதாரம் இல்லை.

ஸ்ரீமதி குழந்தை அம்மாள் கவலை, அவனாசி தாலூகாவிற்கு தண்ணீர் கொண்டுபோகும்போது, தங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான். கனம் அமைச்சர் மன்றாடியார் கூறுவது போல, தண்ணீர் இருந்து, பாயும் வாய்ப்பும் இருந்தால், அவர்களுடைய தொகுதிக்குக்கூடக் கொடுக்கலாம்.

கடைசியாக அங்கத்தினர்களுடைய மரியாதையையும், நல்ல வார்த்தைகளையும் பெற ஒத்துழைப்புக் கொடுத்த அந்த இலாகா செக்ரடரி முதல், பிரதம எஞ்ஜினியர் முதல் எல்லா அதிகாரிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தை ரூ. 100 குறைக்க வேண்டுமென்கிற வெட்டுப் பிரேரணை வேண்டாம் என்றும் சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : சர்க்காருடைய கொள்கை, ரெம்யூனரேடிவாக இருந்தாலும், அன்ரெம்யூனரேடிவாக இருந்தாலும், அதற்காக திட்டத்தை விட்டுவிடமாட்டோம் என்று சொன்னார்கள். கிரியார் திட்டம் 3 வருஷத்திற்கு முன்னால் பரிசீலனை செய்யப் பட்டு, 1 கோடி 90 லட்ச ரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டது. அது அன்ரெம்யூனரேடிவ் என்று எண்டார்ஸ்மெண்டு போடப் பட்டு, எனக்கே அந்த எண்டார்ஸ்மெண்டு வந்தது. அன்ரெம்யூனரேடிவ் என்று சொல்லப்பட்டு அந்தத் திட்டம் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது அரசாங்கத்தின் கொள்கைப்படி அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொண்டு நிறைவேற்ற முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றி. நான் முன்பே அவருக்குப் பதில் சொல்லவேண்டுமென்று நினைத்தேன். எப்படியோ விட்டுப்போய்விட்டது. எதிர்க்கட்சித்

தலைவர் அவர்களும் இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். ஏதோ அரசாங்கம் வட்டிக் கணக்குப் பார்த்து திட்டங்களை விட்டு விடுமோ என்று ஒரு சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கம் அம்மாதிரி வட்டிக் கணக்குப் பார்ப்பதில்லை. ஐந்து சதவிகிதம், ஆறு சதவிகிதம் வருமானம் வரவேண்டும், அப்பொழுதுதான் திட்டங்களை நிறைவேற்றுவோம் என்பதில்லை. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து உருவாகியிருக்கக்கூடிய திட்டங்களைப் பார்த்தால், அரசாங்கம் வட்டிக் கணக்குப் போட்டால் ஒரு திட்டம் கூட நிச்சயமாக வந்திருக்காது. நான்கு சதவிகிதம் வட்டி வர வேண்டும் என்று நினைப்பதே இல்லை. வட்டி வரட்டும், வராது போகட்டும்; மக்கள் நலனுக்காக திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கருதி பல சிறிய நீர்ப்பாசன திட்டங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். கிரியார் திட்டத்தை வட்டி கட்டுபிடியாகாத காரணத்தினால் மட்டும் தள்ளி வைத்திருக்க மாட்டார்கள். அதற்கு மற்ற பல காரணங்களும் இருக்க முடியும். ஒரு கோடி அல்லது 2 கோடி ரூபாய் திட்டம் என்றால், கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் பார்த்து பரிசீலனை செய்ய வேண்டும். வட்டிக் கணக்கு பார்த்து மட்டும் அந்தத் திட்டத்தை தள்ளிப் போட்டிருக்கமாட்டார்கள். வேறு காரணங்களும் இருக்கும். அதையெல்லாம் நான் பரிசீலனை செய்துதான் சொல்ல முடியும். இந்தப் பிரச்சனையை தனியாக எழுதி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் பரிசீலனை செய்து பார்த்துச் சொல்லலாம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: நமது அரசாங்கம் நம்முடைய மாகாணத்தில் பல திட்டங்களைக் கொண்டுவந்ததற்காக நாம் பாராட்டுகிறோம். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த அளவில் அந்தத் திட்டங்களின் காரணமாக தஞ்சை ஜில்லாவுக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு பாதிக்கப்படுமோ என்று சந்தேகம் இருந்தது. கனம் அமைச்சர் அவர்கள் லோயர் பவானி, அமராவதி திட்டங்களை விளக்குகையில், தஞ்சை ஜில்லா பாதிக்கப்படமாட்டாது, தஞ்சை ஜில்லா அயக்கட்டுதார்களுக்கு முதல் பாத்தியதை கொடுக்கப்படும் என்று உத்திரவாதம் அளித்ததற்காக, தஞ்சை ஜில்லாவாசிகளின் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம்: கீழ் பவானிப் பிரதேசத்தில் ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. இதை. இலாகாமூலம் பரிசீலனை செய்து நம்முடைய ராஜ்யத்தில் நெல்லுக்குக் குறைந்த அளவில் தண்ணீர் கொடுக்கலாம், நெல்லுக்கு கொடுக்கும் தண்ணீரை சர்க்கார் குறைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையயா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் நல்லசிவம் அவர்களுக்கு பதில் சொல்லுவதற்குக் கொஞ்சம் அதிக நேரம் எடுத்துக்கொண்டேன். அந்தச் சர்ச்சைக்கே நான் போக விரும்பவில்லை. புது அனுபவம்,

லாபம், நஷ்டம் அந்தப் பிரச்னைக்கே வரவில்லை. நான்கு மாதம் ஐந்து மாதம், ஆறு மாதம் ஆகி இப்படி போய்க்கொண்டே இருக்கும். அரசாங்கத்தில் கொடுத்த முடிவின்படி 4 மாதங்களில் முதல் கட்டத்தைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறோம். மூன்று மாதத்தில் இரண்டாவது "டர்னை" முடித்துக்கொள்கிறோம் என்று லோயர் பவானிப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் உறுதியாகச் சொல்லிவிடுவார்களேயானால், இவர்கள் கண்டிருக்கிற வெற்றியை வைத்துக்கொண்டு, இதை மற்ற இடங்களிலும் புகுத்தி வெற்றி காணலாமா என்பதைப் பார்க்கலாம். ஆனால் அந்த வெற்றிக்கே இன்னும் அவர்கள் வரவில்லை. மூன்று மாதம், நான்கு மாதம், ஐந்து மாதம் என்று ஆகி கடைசி கட்டத்தில் தஞ்சாவூர் ஜில்லா வாசிகள் நிலைமைக்குப் போய்விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 5,24,89,300 under Demand No. XXVI—Irrigation, be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,24,89,300 under Demand No. XXVI—Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 7,39,35,300 under Demand No. XLI—Capial Outlay on Irrigation, be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Govvernment be granted a sum not exceeding Rs. 7,39,35,300 under Demand No. XLI—Capital Outlay on Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 2-15 p.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

135. *Notification issued with G.O. No. 40, Revenue, dated 2nd January 1963, amending the Revenue Department Notification S.R.O. No. A-1796 of 1959, dated the 23rd March 1959, published at page 454 of Part I of of the Fort St. George Gazette, dated the 25th March 1959. [Laid on the table of the House, under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

136. *Notification issued with G.O. No.* 4441, *Revenue, dated* 29*th December* 1962, *amending Rule* 208 *of the Madras Motor Vehicles Rules*, 1940, *in so far as it relates to the inclusion of additional vehicles in the existing permits.* [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

B. Reports, Notifications and other papers.

79. *Notification issued with G.O. Ms. No.* 543, *Industries, Labour and Co-operation (Labour), dated* 28*th January* 1963 *amending Rule* 25 (*b*) *of the Madras Plantations Labour Rules*, 1955, *published with the Industries, Labour and Co-operation Department Notification, dated the* 28*th December* 1955, *at pages* 1-30 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the* 4*th January* 1956, *the same having been previously published as required by sub-section* (1) *of section* 43 *of the Plntation Labour Act*, 1951 (*Central Act LXIX of* 1951).

* 80. *Note on the Development of Fisheries in Madras State (in Tamil).*

* 81. *A Review of Progress made in the Department of Handloom Industry (in English and Tamil).*

* 82. *Speech of the Hon. Minister for Works while moving Demand Nos. XXVI—Irrigation and XLI—Capital Outlay on Irrigation (in English and Tamil).*

*83 . *Review of the Progress made in Co-operative Development Schemes for* 1962-63 (*in English and Tamil*).

---

* Circulated to members on 20th March 1963.

APPENDIX.

[*Vide* **answer to starred question No. 337, on page 197**].

***List of municipalities wherein accounts were found to be not satisfactory during the audit for* 1958-59 *and* 1959-60.**

1958-59.

Madurai district	1	Bodinayakanur.
Tirunelveli district ..	2	Melapalayam.
	3	Tirunelveli.
South Arcot district ..	4	Tindivanam.
	5	Cuddalore.
Tiruchirappalli district ..	6	Pudukkottai.
Thanjavur district	7	Nagapattinam.
Chingleput district	8	Tiruvallur.
North Arcot district ..	9	Ambur.
	10	Tiruvannamalai.
Coimbatore district	11	Erode.
	12	Pollachi.
	13	Kurichi (Defunct).
	14	Gobichettipalayam.
The Nilgiris district.. ..	15	Coonoor.

1959-60.

Madurai district	1	Madurai.
	2	Palani.
Tirunelveli district	3	Palayamkottai.
	4	Tirunelveli.
Ramanathapuram district ..	5	Srivilliputhur.
	6	Ramanathapuram.
	7	Karaikudi.
Kanyakumari district .	8	Nagercoil.
	9	Kuzhithurai.
	10	Shencottah.
	11	Colachel.
	12	Padmanabhapuram.
South Arcot district .	13	Cuddalore.
	14	Tindivanam.
Tiruchirappalli district ..	15	Tiruchirappalli.
	16	Pudukkottai.
Thanjavur district	17	Nagapattinam.
	18	Thanjavur.
	19	Tiruvarur.
Chingleput district	20	Chingleput.
	21	Tiruvottiyur.
North Arcot district ..	22	Ambur.
Coimbatore district ..	23	Gobichettipalayam.
	24	Erode.
	25	Pollachi.
	26	Mettupalayam.
	27	Kurichi (Defunct).

அட்டவணை

[197-ம் பக்கத்திலுள்ள 337 எண்ணுள்ள (*) நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

1958-59, 1959-60 ஆண்டுகளில் தணிக்கை செய்தபொழுது கணக்குகள் சரியாக இல்லாத முனிசிபாலிட்டிகளின் பட்டியல்.

1958-59.

மதுரை மாவட்டம்	.. ..	1	போடிநாயக்கனூர்.
திருநெல்வேலி மாவட்டம்	..	2	மேலப்பாளையம்.
		3	திருநெல்வேலி.
தென் ஆர்க்காடு மாவட்டம்	..	4	திண்டிவனம்.
		5	கடலூர்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்	..	6	புதுக்கோட்டை.
தஞ்சாவூர் மாவட்டம்	.. ..	7	நாகப்பட்டினம்.
செங்கல்பட்டு மாவட்டம்	.. ..	8	திருவள்ளூர்.
வட ஆர்க்காடு மாவட்டம்	..	9	ஆம்பூர்.
		10	திருவண்ணாமலை.
கோயம்புத்தூர் மாவட்டம்	..	11	ஈரோடு.
		12	பொள்ளாச்சி.
		13	குறிச்சி (இப்பொழுது இல்லை).
		14	கோபிச்செட்டிப்பாளையம்.
நீலகிரி மாவட்டம்	.. ..	15	குன்னூர்.

1959-60.

மதுரை மாவட்டம்	.. ..	1	மதுரை.
		2	பழனி.
திருநெல்வேலி மாவட்டம்	..	3	பாளையம்கோட்டை.
		4	திருநெல்வேலி.
ராமநாதபுரம் மாவட்டம்	..	5	ஸ்ரீவில்லிபுத்தூர்.
		6	ராமநாதபுரம்.
		7	காரைக்குடி.
கன்னியாகுமரி மாவட்டம்	..	8	நாகர்கோயில்.
		9	குழித்துறை.
		10	செங்கோட்டை.
		11	குளச்சல்.
		12	பத்மநாபபுரம்.
தென் ஆர்க்காடு மாவட்டம்	..	13	கடலூர்.
		14	திண்டிவனம்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்	..	15	திருச்சிராப்பள்ளி.
		16	புதுக்கோட்டை.
தஞ்சாவூர் மாவட்டம்	.. ..	17	நாகப்பட்டினம்.
		18	தஞ்சாவூர்.
		19	திருவாரூர்.
செங்கல்பட்டு மாவட்டம்	.. ..	20	செங்கல்பட்டு.
		21	திருவொற்றியூர்.
வட ஆர்க்காடு மாவட்டம்	..	22	ஆம்பூர்.
கோயம்புத்தூர் மாவட்டம்	..	23	கோபிச்செட்டிப் பாளையம்.
		24	ஈரோடு.
		25	பொள்ளாச்சி.
		26	மேட்டுப்பாளையம்.
		27	குறிச்சி (இப்பொழுது இல்லை).

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 23rd March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: Question Nos. 343 and 344 have been postponed.

மீனவர்களுக்கான வீடுகள் (தஞ்சை மாவட்டம்)

*545 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் வாழுகின்ற மீனவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டமுண்டா?

(இ) 1962-ல் எத்தனை குடும்பங்களுக்கு மீன்பிடித் தொழிலுக்காக 'நைலான்' வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கடலோர மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 1959-60 முதல் 1961-62 வரை கீழே கண்டவாறு 51 வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது:—

1. கரையூர் தெரு மீனவர் கூட்டுறவு சங்கம்	..	12 வீடுகள் 1959-60
2. எரிப்புறக்கரை மீனவர் கூட்டுறவு சங்கம்	..	8 வீடுகள் 1959-60
3. காவேரிப்பட்டினம் மீனவர் கூட்டுறவு சங்கம்	..	9 வீடுகள் 1960-61
4. மல்லிப்பட்டினம் மீனவர் கூட்டுறவு சங்கம்	..	12 வீடுகள் 1961-62
5. கரையூர் தெரு மீனவர் கூட்டுறவு சங்கம்	..	10 வீடுகள் 1961-62
மொத்தம்:		51 வீடுகள்

அம்மாப்பட்டினத்தில் மீனவர்களுக்காக 200 வீடுகளுடன் கூடிய ஒரு காலனியும், ஒரு சமுதாய அரங்கமும் பள்ளிக்கூடமும கட்டும் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைபவர்கள் இதற்குக் கொடுக்கவேண்டிய பங்கினை அவர்கள் இன்னும் கொடுக்காததால், திட்டம் இன்னும் நிறைவேறவில்லை.

தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக, 1962-63-ல் வீடுகள் கட்ட மீனவர்களுக்கு உதவித் தொகையும் கடனும் வழங்கும் திட்டம் தள்ளிப்போடப்பட்டது.

(இ) 1962-ல் தமிழ் நாட்டில் 64 மீனவர் குடும்பங்களுக்கு 'நைலான்' வழங்கப்பட்டது. வாடகை கொள்முதல் திட்டத்தின் கீழ் படகுகளை வழங்கும்போது நைலான் நூலும் சேர்த்து வழங்கப்படுகிறது. 64 குடும்பங்களில், 4 குடும்பங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மொத்தம் 5,400 கிலோ நைலான் நூல் வழங்கப்பட்டது. இதில் 300 கிலோ தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 4 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

திரு. சி. பொன்னுசாமி : தூத்துக்குடி துறைமுகத்தில் 20,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அதிலிருந்து மீனவர்களுககாக இடம் ஒதுக்கி, வீடு கட்டும் திட்டம் இருக்கிறதா ? அப்படியானால் எத்தனை வீடுகள் கட்டுவதற்கு திட்டம் இருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : என்னிடம் தகவல் இல்லை. அதைச் சார்ந்த அமைச்சரிடம் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. நாராயணன் : கிராமப் புறங்களிலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலைகள் வழங்குவதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : நான் முக்கிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே சொன்னேன், நைலான் நூல்களும், வலைகளும், பாப்லோ போட்டுகள் கொடுக்கப் பட்டவர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : அதிராமப்பட்டினம், முத்துப் பேட்டை, நாகை போன்ற இடங்களில் மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அடிக்கடி, காற்று, வெள்ளம் ஏற்பட்டு குடிசைகள் பாதிக்கப்படுகின்றன. அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : மீனவர்களுக்குப் பொதுவாக வீடு கட்டும் திட்டத்தை விளக்கிச் சொன்னேன். வீடுகள் என்று சொன்னால், உடனடியாக எல்லா வீடுகளையும் கட்ட முடியாது. ஒரு குப்பத்திற்கு 6 வீடுகள் என்ற அடிப்படையில் கட்டுவதாக இருக்கிறது. அதுவும்கூட நெருக்கடியின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. பொன்னுசாமி : நைலான் நூல் இப்பொழுது இந்தியா விலே தயாரிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இந்தியாவிலே தயாரிக்கப்பட்ட நூல் மீனவர்களுக்குப் போதுமானதாக இருக் கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப் பொழுது இந்தியாவிலே செய்யப் படுகின்ற காரணத்தால், இனி மேல் அது தாராளமாகக் கிடைக்குமென்ற நம்பிக்கை அரசாங் கத்திற்கு இருக்கிறது.

Sugarcane (price)

* 346 *Q*—SRI K. R. NALLASIVAM (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the proposal to re-fix the price for sugarcane supplied to sugar factories in the State?

THE HON. SRI P. KAKKAN: The question of fixation of sugarcane prices is a matter which is dealt with by the Government of India. The sugarcane prices announced by the Government of India in respect of the sugar factories in this State for the current year i.e., 1962–63 have been republished at page 7474 of Part III in the *Fort St. George Gazette*, dated the 31st November 1962.

Proposals to refix the sugarcane prices for the year 1963–64 are for the consideration of the Government of India.

கரும்பு விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு இந்திய அரசாங் கத்தைச் சேர்ந்தது. நடப்பு ஆண்டில் (அதாவது 1962-63-ல்) இம் மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்காக இந்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ள கரும்பு விலைகள், 1962 நவம்பர் மாதம் 21-ம் தேதி யுள்ள செய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட், மூன்றும் பாகத்தின் 7474-ம் பக்கத்திலே (ஆங்கிலத்தில்) வெளியாகியுள்ளன.

1963-64-ம் ஆண்டிற்காக, கரும்பு விலைகளை மீண்டும் நிச்ச யிப்பது, இந்திய அரசாங்கத்தின் ஆலோசனைக்குரிய விஷய மாகும்.

திரு. க. ர. நல்லசிவம் : நமது ராஜ்ய அரசாங்கம் கரும்பு விலை யை மேலும் உயர்த்துவதற்கு மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரி ஆலோசனை கூறியிருப்ப தாக எனக்கு ஞாபகம் இல்லை.

சாராயம்

* 347 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சர்க்கரை ஆலைகளில் கழிவுப் பொருளாக இருக்கும் வெல்லப்பாகினை (molasses) , நாட்டுச் சாராயம் காய்ச்ச உப யோகப் படுத்தப்படுவது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

(இ) அதனை தடைப்படுத்தும் யோசனையுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) திருட்டுச் சாராயம் காய்ச்சுவதற்கு வெல்லப்பாகினைப் பயன்படுத்துகிறார்கள் என்று போலீஸ் இலாகாவிற்குத் தெரிய வந்திருக்கிறது. இத்தகைய நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

(*a*) & (*b*) Instances of misuse of molasses for illicit distillation of arrack have come to the notice of the Police Department and action has been taken for prosecuting such persons.

திரு. சோ. ஆறுமுகம் : திருட்டுச் சாராயம் வெல்லக் கூழிலிருந்து காய்ச்சப்படுகிறது என்பது உண்மையா? வெல்லக் கூழை வெளியே விடாமல் இருக்க சர்க்கார் முயற்சி செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : வெளியே விடாமலிருக்க அரசாங்கம் முயற்சி செய்தால், அரசாங்கத்திற்குக் கிடைத்துக்கொண்டிருந்த வருமானம் சிறிது குறையக்கூடும். சில மருந்துகள் செய்வதற்கு அது பயன்படுகிறது.

திரு. சி. பொன்னுசாமி : கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் என்னென்ன பொருள்கள் சேர்க்கப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அந்தப் பொருள்கள் எல்லாவற்றையுமே தடை செய்ய சர்க்காருக்கு யோசனை உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : திருட்டுச் சாராயம் காய்ச்சுவதிலே வாழைப் பழம் கூடச் சேர்ப்பதாகச் சொல்கிறார்கள். அதையெல்லாம் கட்டுபடுத்த முடியாது. திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் மீது எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுத்துத் தண்டிக்க வேண்டுமோ அந்த அளவுக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது. 'மொலாஸஸ்' உபயோகப்படுத்துகிறார்கள் என்றால், என்னிடம் இருக்கும் தகவல்படி, கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களில்தான் அதைப் பயன்படுத்துகிறார்கள், கேஸ்கள் போடப்பட்டு, நடவடிக்கை எடுத்து, தண்டனையும் கொடுக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் 348, 349, 350 ஒத்திவைக்கப் படுகின்றன.

ஒதுக்கக் காடு (புதுக்கோட்டை)

*351 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள (R.F.) காடுகளில் கால்நடைகளை மேய்ப்பதற்குக் கட்டுப்பாடுகள் உள்ளனவா?

(இ) ஆம் எனின், அவற்றைத் தளர்த்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம். புதுக்கோட்டை ரேஞ்சில் ஒரு சிறிய பகுதியில் மேய்ச்சலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்கு திட்டமிட்டபடி

மரங்கள் வளர்க்கப்படுகின்றன. மரங்கள் நட்டுக் காடுகள் வளர்ப்பதற்காகவும் இப் பகுதியில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(இ) செடிகள் சுமார் 5 அல்லது 6 அடி உயரம் அடையும் போது இப் பகுதி மேய்ச்சலுக்காக விடப்படும். அதாவது, இப் பகுதியில் மேய்ச்சல் தடை செய்யப்பட்ட பிறகு 5-ம் ஆண்டில் இங்கு மேய்ச்சல் அனுமதிக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : வேதாரண்யம் காட்டில் தனி நபர்கள் தங்களுடைய மாடுகளை மேய விடுகிறார்கள். அந்த மாடுகளைத் திரும்பி ஓட்டிக்கொண்டு வரும்போது சர்க்காருக்குச் சொந்தமான கால்நடைகள் சிலவற்றையும் சேர்த்து ஓட்டிக் கொள்ளுகிறார்கள். வேதாரண்யம் காட்டில் தனி நபர்களின் மாடுகள் மேயாத அளவுக்குத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் அங்கத்தினர் முதல் தடவையாக இந்தத் தகவலைச் சொல்கிறார். அம்மாதிரி ஏதாவது இருக்குமானால், அதை உடனடியாகக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பி. முருகையன் : புதுக்கோட்டை பகுதியிலுள்ள காட்டுப் பாதுகாவலர்களில் சமஸ்தான காலத்தில் நியமிக்கப்பட்டவர்களுக்கும் தற்போது நியமிக்கப்பட்டவர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து, அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. பரிசீலனை செய்து, அரசாங்கப் பணியில் உள்ளவர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும், அவர்களுக்கு எப்படிச் சம்பளம் கொடுக்க வேண்டுமோ அப்படி ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சி. ம. அம்பிகாபதி : செடிகள் ஐந்தடி உயரத்திற்கு மேல் வளர்ந்திருக்கும் காடுகளில் மாடுகளை மேய்ப்பதற்கு அனுமதிப்பதாகச் சொன்னார்கள். அப்படியென்றால், அதற்கு வாடகை உண்டா? லைசென்ஸ் பெற்றுக்கொண்டுதான் மாடுகளை மேயவிட வேண்டுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : பர்மிட் பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு ஒரு தொகை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. எருமைகள், பசுக்கள் முதலியவற்றை மேய்க்கலாம். ஆனால், எக் காரணத்தைக் கொண்டும் வெள்ளாடுகள் அனுமதிக்கப்படமாட்டா.

திரு. கோ. சி. மணி : மேய்ச்சல் தரைக்காகத் தனியாக ஒதுக்கப்படும் நிலம் புறம்போக்கு நிலமாக இருக்குமா? பட்டா நிலமா?

[23rd March 1963

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: மேய்ச்சலுக்காக ஒதுக்கப்படும் சர்க்கார் நிலத்தில் எல்லோரும் மேய்க்கிறார்கள். புறம்போக்கு நிலமாக இருந்தால் அதற்கு எந்தவிதமான அரசாங்க அனுமதியும் தேவை இல்லை.

திரு. சா. கணேசன்: "காடுகளில் வெள்ளாடுகளை அனுமதிக்கப்படாது" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற உரைப் புத்தகத்தில் பொதுவாக 'ஆடு' என்றே போடப்பட்டிருக்கிறது. 'ஆடு' என்பது வெள்ளாடு அல்லாத ஆடு என்பதைத்தான் குறிக்கிறதா? ஆட்டிற்கு 12 ந.பை., பசு முதலிய மாடுகளுக்கு 25 ந.பை., எருமைக்கு 50 ந.பை. என்று போட்டிருக்கிறது . . . .

கனம் சபாநாயகர்: ஒரு சமயத்தில் ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். ஒரே கேள்வியில் ஐந்தாறு பிரச்னைகளைச் சொல்லிக்கொண்டே போனால் 'கன்ஃப்யூஷன்' ஆகப் போய்விடும்.

கனம் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: 'ஆடு' என்றால் செம்மறியாடு என்ற முறையில்தான் விளக்கம் கொடுத்திருக்கிறோம். வெள்ளாட்டைத் தனியாக விடுவதில்லை என்கிறதைப் பற்றி நான் பேசும்போது குறிப்பாகச் சொல்லப் போகிறேன்.

திரு. ம. கமலநாதன்: ரிசர்வ் காடுகளுக்குள் மேய்ச்சல் நிலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் கைவிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற முயற்சி இருந்துகொண்டுதான் இருக்கிறது.

திரு. சி. பொன்னுசாமி: இந்தக் காடுகளில் மேய்ச்சல் காடுகளை வைப்பதைவிட, சர்க்காருக்கு அதிக வருமானம் உள்ள மரங்களை வைக்க வசதி இருக்கிறதா என்று கவனிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ஆங்காங்கு மரங்களை வைத்து வளர்ப்பதற்கான ஒரு திட்டமும் இருக்கிறது. மேய்ச்சலுக்கான வசதி செய்யவேண்டும் என்றும் அரசாங்கம் கருதுகிறது. எதையெதை எங்கெங்கே செய்ய வேண்டுமோ அதைச் செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஊருக்குப் பக்கத்தில் காடுகளினுடைய எல்லை வந்துவிடுகிறது. ஆனால், அங்கே இருக்கக் கூடியவர்கள் மாடுகளை அவிழ்த்துவிட்டால் அவை காட்டுக்குத்தான் போகவேண்டும் என்ற அளவுக்கு காட்டின் எல்லைப் பக்கத்தில் இருக்கிறது. அங்கிருக்கும் சிப்பந்திகள் பத்து, ஐந்து வாங்கிக்கொண்டு விட்டுவிடுகிறார்கள். சர்க்கார் இதைக் கவனித்து, மேய்ச்சலுக்கென்று சில புறம்போக்கை ஒதுக்க முன்வருமா?

23rd March 1963]

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் அங்கத்தினர் சொல்வதை நான் இந்த விதமாகப் புரிந்துகொள்கிறேன். சர்க்காருடைய ரிசர்வ் காடுகளாக இருந்தால் பர்மிட் வாங்கி மேய்க்கவேண்டும். யாராவது திருட்டுத்தனமாக மேய்க்கிறார்கள் என்றால், கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் அவர்களுக்கிருக்கும் இத்தகைய தகவல்களை எங்களைப் போன்றவர்களிடம் உடனடியாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு, விவசாயிகளின் கால்நடைகளுக்குக் கட்டணம் விதிக்காமல் காடுகளில் மேய்க்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கட்டணம் விதிக்காமல் விடுவதில்லை. கட்டணம் விதிக்காவிட்டால்கூட சர்க்காருக்கு ஒன்றும் பெரிய நஷ்டம் வந்துவிடாது. ஏதோ விசேஷம் என்றால், அதற்கென்று டிக்கட் வைத்துவிட்டால் ஆவலோடு அதற்குப் போகிறோம். அதுபோல் தனியாகக் கட்டணம் என்று வைத்துவிட்டால், அதற்கு ஒரு பாதுகாப்பு இருக்கும் என்ற முறையில் மிகக் குறைந்த கட்டணத்தை நாங்கள் விதித்திருக்கிறோம்.

திரு. ம. கமலநாதன்: நான் முன்பு கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'மேய்ச்சல் நிலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் இருக்கிறது' என்று சொன்னார்கள். ஆனால், வெளியிடப்பட்டிருக்கும் புத்தகத்தில், அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முரண்பட்ட கருத்து இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்பொழுதுகூட எனது ஜில்லாவில் மேய்ச்சல் காடுகளை இன்னும் வைத்துக்கொண்டுதான் இருக்கிறோம் என்பதைக் கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

திரு. ஆ. துரை அரசன்: சொந்த நிலங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்காகக் காட்டிலாகாவைச் சேர்ந்த இடங்கள் வழியாக ஓட்டிக்கொண்டுவரும் காரணத்திற்காக, வழக்கு தொடரப்படுகிறது. இனிமேல் அம்மாதிரி நடைபெறாமலிருப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் சபாநாயகர்: மாடு போகும்போதே மேய்த்துக்கொண்டே போகும் அல்லவா? (சிரிப்பு.)

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கேள்வியை மறுபடியும் போடவேண்டும்.

திரு. ஆ. துரை அரசன்: சொந்த நிலங்களிலே ஆடு மாடுகளை மேய்த்துவிட்டு, காட்டிலாகா வழியாக ஓட்டிக்கொண்டு கிராமங்களுக்கு வருகிறார்கள். அப்பொழுது காட்டிலாகாவினர் அவர்களைப் பார்த்து, " இந்த வழியாக ஏன் ஓட்டிக்கொண்டு வந்தாய்?

இங்கே நான் மேய்த்தாய்" என்று சொல்லி வழக்கு தொடரப் படுகிறது. இனிமேல் அம்மாதிரி நிகழ்ச்சி நடைபெருமலிருக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : சொந்தக் காடுகள் இருக்கும்போது அரசாங்கத்தின் காடு வழியாக அவர்கள் போகவேண்டிய அவசியம் இருக்காது. அரசாங்கக் காடுகளிலும் ஒரு அடிப் பாதை ஒதுக்கப்படுகிறது. அந்தப் பாதையில் ஒழுங்காக ஓட்டிக்கொண்டு வந்தால், அப்படிப்பட்ட பிரச்னைக்கே இடம் இருக்காது.

திரு. ஆர். ரங்கசாமி : ஜமீன் பிரதேசமாக இருந்த இடத்தில் உள்ள விவசாயிகளின் மாடுகளை ஜமீன்தார்கள் கட்டணம் இல்லாமல் காடுகளில் அனுமதித்துவந்தார்கள். அந்தப் பிரதேசங்கள் இப்பொழுது காட்டிலாகாவின் கீழ் வந்து, அங்கே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஜமீன் காலத்திலிருந்த மாதிரி கட்டணம் இல்லாமல் அனுமதி கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : ஜமீன் கொடுத்த உரிமை ரொம்பப் பெரிய உரிமை. நூறு ஏக்கர் கூட உழுது கொண்டிருந்தார்கள். அதெல்லாம் இப்பொழுது அரசாங்கத்திற்கு வந்ததன் காரணமாக, கட்டணம் விதிக்கப் படுகிறது. இதிலுள்ள பிரச்னைகளையெல்லாம் பார்க்கும்போது, இதை எப்படியாவது எளிதாக்கவேண்டும் என்கிற திட்டம்தான் அரசாங்கத்திடம் இருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் கிராமத்தின் அருகாமையிலேயே இந்தக் காடுகளை வளர்ப்பதற்கு இந்த அரசாங்கம் ஊக்குவித்துக்கொண்டிருக்கிறது. அதனுல், காட்டு விலங்குகள் பயிர்களை அணுகுகின்றன. கிராமத்திலிருந்து இரண்டு மைல், மூன்று மைலுக்கு அப்பால் காடுகளை வளர்க்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நீலகிரி ஜில்லாவிலுள்ள பிரச்னை ஒரு தனிப் பிரச்னை கனம் சபாநாயகர் அவர்களுக்கும் தெரியும். நான் சொல்லத் தேவையில்லை. 'வீடுகளுக்குப் பக்கத்திலிருக்கும் காடுகளில் கூட மரங்களை வைத்து நடுகிருர்கள்' என்று கனம் அங்கத்தினர் சொல்கிருர்கள். நல்ல மரங்கள் வரக்கூடிய இடத்தில், மேய்ச்சலுக்காக விடப்பட்டிருக்கும் நிலத்தில்கூட, சிலர் ஆக்கிரமித்துக்கொண்டு உருளைக் கிழங்கு சாகுபடி செய்துவிட்டார்கள். புறம்போக்கு ரெவினியூ நிலத்தில் அப்படிச் செய்துவிட்டார்கள். வீட்டுப் பக்கத்தில் இருக்கும் காடுகளில் மரம் நடும்போது இந்தப் பிரச்னைகளெல்லாம் வந்துகொண்டிருக்கின்றன.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், அமைச்சர் அவர்கள் உரையில் அவர்களுடைய பகுதியில் காட்டுவெளியில் விளையக் கூடிய புற்கள் மிகவும் விசேஷமானது எனக் கூறியிருக்கிருர்கள். அதை மற்றப் பகுதிகளுக்கும் அனுப்பி வளர்க்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அதை எல்லாப் பகுதிகளிலும் வளர்ப்பதற்கு காட்டிலாகாவினர் முயற்சி செய்தார்கள். என் ஊரிலிருந்து விதைகள் கூட அனுப்பி வைத்தோம். அது ஒருசில இடங்களில் நன்ருக வந்தது ; மற்ற இடங்களில் வரவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து 'பர்மிட்' வாங்கித் தான் ஆடு மாடுகளை மேய்க்க வேண்டுமென்று தெரிகிறது. ஆனுல், கிராமங்களிலுள்ள மக்கள் இதைத் தெரிந்துகொண்டு செய்ய முடியாமல் நாகரிகமற்றவர்களாக இருக்கிருர்கள்.

கனம் சபாநாயகர் : கிராமத்திலுள்ள மக்களை நாகரிகமில்லாதவர்கள் என்று சொல்லக்கூடாது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : விவரம் தெரியாதவர்களாக இருக்கிருர்கள் என்பதற்காகத்தான் சொன்னேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கிராமத்திலுள்ளவர்கள் நாகரிகம் இல்லாமல் இல்லை.

Harbour (Cuddalore)

* 352 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to improve Cuddalore Harbour; and

(*b*) if so, the total amount allotted?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Government of India have made a provision of Rs. 50 lakhs for the grant of loan assistance to the State Government for the execution of the scheme.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், இது வரையில் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிருர்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கடலூர் துறைமுக அபிவிருத்தி விஷயமாக, நான் இரண்டொரு தினங்களுக்கு முன் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறேன். அதைப் படித்துப் பார்த்தால் நாம் இது வரைக்கும் செய்தது என்ன, இனிமேல் செய்ய வேண்டியது என்ன என்பது எல்லாம் பூராவாக இருக்கும்.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக தேசியப் பாதுகாப்பிற்காக கப்பற் படை பெருகவேண்டுமென்று சொல்வதனுல் இந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அரசாங்கத்திடம் திட்டமிருக்கிறதா ? அது நமது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : கப்பல் படையைப் பெருக்குவதற்கு மட்டுமல்ல. தேசத்திலிருக்கும் வியாபார சுபீட்சத்தை அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசாங்கம் இதில் அதிகக் கவனம் செலுத்தி துறைமுகங்களையெல்லாம் அபிவிருத்தி செய்யத் தொடங்கியுள்ளது. மாநில அரசாங்கமும் சிறு சிறு துறைமுகங்களையெல்லாம் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறது என்பதைக் கனம அங்கத்தினர் அறிவார்கள்.

பாசன வசதிகள் (உடையார்பாளையம் வட்டம்)

* 353 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், பெரிய திருக்கோணம், முனியங்குறிச்சி, சின்னேரி, பெரிய ஏரி, பாப்பா ஏரி, கட்டி உடையான் ஏரி, சங்கிலியான் ஏரி, கட்டி உடைப்பு ஏரி ஆகிய எட்டு ஆயக்கட்டு ஏரிகளுக்கும் அரி ஓடையில் வரும் தண்ணீரை மொட்டணைக்கட்டி, ஏரிகளை மராமத்து செய்து மேற்படி மொட்டணையின் வழியாக தண்ணீரை வாய்க்கால் வழியாக ஏரியை நிரப்பி விவசாய அபிவிருத்தி செய்யும்படி அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

(இ) அப்படியானால், அவை பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) No such representations have been received by the Government. However, preliminary investigation is being carried out to form a new tank across Uppu odai near Reddipalayam village, Udayarpalayam taluk, Tiruchirappalli District. The Pudu eri, Chinneri, Peria eri, Kattu Udaippu eri and Chaklian eri referred to will also be supplied from this new tank.

MR. SPEAKER : Questions 354 and 355 are postponed.

Agricultural commodities (prices)

* 356 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to set up an Advisory Committee to study the prices of Agricultural Commodities in relation to the market prices of other commodities?

THE HON. SRI P. KAKKAN : No.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பொருட்களுடைய விலைகள் குறைந்து வருகிற காரணத்தினால் மற்றப் பொருட்களுடன் இந்த விலையைச் சரிபடுத்த அரசாங்கம் ஒரு அட்வைசரி கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று சென்ட்ரல் பிளானிங் கமிஷன் கூறிய கருத்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அதைப்பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கெனவே அதைப் பரிசீலனை செய்து தான் ஒரு கமிட்டியை நியமித்திருந்தோம். இதனால் அதிக பலன் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது. அதோடு ஒவ்வொரு ஜில்லாவிலும் டெவலப்மெண்ட் கவுன்ஸில் இருக்கிறது. நாங்களும் அடிக்கடி இதைப்பற்றிக் கூடிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகையால், வேறொரு கமிட்டிக்கு அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : தலைவர் அவர்களே, நெல் விலையைக் கொஞ்சமாவது உயர்த்துவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அறுவடைக் காலத்தில் கொஞ்சம் விலை குறைந்திருக்கும். ஆனால், போகப் போக விலை ஏறிக் கொண்டேயிருக்கும்.

Cooum River

* 357 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state the present stage of the proposal to deepen the Cooum River and make it useful for transport?

THE HON. SRI V. RAMAIAH : The Government have decided to carry out the Cooum Improvement Scheme in a phased programme of about 5 years. The scheme can be put into execution only if a dredger is secured. The Government of India have been addressed to release foreign exchange required for the purchase of dredger and their reply is awaited.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இந்தத் திட்டத்தை அமுல் படுத்தும்போது திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையார் ஆகிய பகுதிகளை கிண்டி புகைவண்டி நிலையம் வரையில் இணைக்கும்படியாக ஒரு வாய்க்கால் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு புதுக்கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதைத் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இப்போது போக்குவரத்துப் பிரச்னை வளருகிற சென்னை நகரத்தில் ஜன நெருக்கடியின் காரணமாக மிக அவசியமாக இருப்பதனால் இந்தக் கருவிகளை விரைவாகப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

னேன். ஆனால், இப்போது தேசத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக இதை வலியுறுத்துவது நியாயமாக இருக்காது என்ற காரணத்திற்காக ஒத்திப் போட்டிருக்கிறோம். விரைவிலே இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்தால்தான் நன்மை ஏற்படும் என்ற காரணத்தினால் சந்தர்ப்பம் ஏற்படும்போது அரசாங்கம் முயற்சிகள் செய்யும் எனச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு நல்ல திட்டமாக இருப்பதாலும், மேலும் இப்போது இந்திய நாட்டிலிருந்து 600 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுவதாலும், அதிலும் 200 கோடி ரூபாய் அளவுக்கு நம் மாகாணத்திலிருந்து ஏற்றுமதியாவதாலும், இந்தக் காரணத்தை எடுத்துச் சொல்லி அத்திட்டத்திற்குப் பணம் பெற சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் 600 கோடி, 200 கோடி என்று சொல்லுகிறார்கள். அது எனக்கு ஒன்றும் புரியவில்லை. சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் இது ஒரு முக்கியமான திட்டம் என எண்ணுகிறேன். இது போக்குவரத்துக்கு பயன்படுவதோடல்லாமல், அதனால் ஏற்படக் கூடிய கெட்ட நாற்றம் இல்லாமல் இருக்கும். இதைப்பற்றி நிபுணர்கள் ஆராய்ந்து ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

இது போக்குவரத்துக்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை அறிவதற்கு ஸ்டேட் அட்வைசரி கமிட்டியினர் பரிசீலித்து அவர்களும் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது போக்குவரத்துக்கு எப்படிப் பயன்படும் என்று ஆராய்ச்சி செய்யப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையார் வழியாக கிண்டி புகை வண்டி நிலையம் வரையில் இணைக்கும்படியான ஒரு கனாலை அமைக்கலாம் என்று. அதற்கு 'ராமைய்யா கனால்' என்று பெயர் இடலாம்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் முதலில் போட்ட கேள்வியையே திரும்பவும் போட்டுக்கொண்டிருக்கிறார். அதைத் தனியாக எழுதிக் கொடுத்தால் பரிசீலனை செய்வதாக கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினருக்குப் பதில் அளிக்க நான் அனுமதி கோருகிறேன். முன்பு சொன்னபோது அது எனக்குப் புரியவில்லை. இப்போது நன்றாகப் புரிகிறது. இப்போது இருக்கக்கூடிய கால்வாயை அபிவிருத்தி செய்வது பற்றித்தான் திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. புதிதாகக் கால்வாயோ, கனாலோ வெட்டுவதற்குத் திட்டம் ஒன்றும் இல்லை.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

*357-A கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவேரி தீரத்தில் தஞ்சை மாவட்டப் பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) எந்த ஊர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Establishment of oil refineries is a matter within the competence of the Union Government. They are examining the suitability of various locations in South India for the establishment of an oil refinery. This Government have been urging the Union Government from time to time to set up this plant in Madras State.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, தஞ்சை 9-00 a.m.
மாவட்டத்தில் 'ஆயில் ரிபைனரி' ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'ரிபைனரி' வேறு, 'ஆயில் எக்ஸ்ப்ளோரேஷன்' வேறு. தஞ்சை மாவட்டத்தில் நடப்பது 'ஆயில் எக்ஸ்ப்ளோரேஷன்'. அங்கு எண்ணெய் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்கு வேலை நடக்கிறது. 'ரிபைனரி' என்பது வெளியிலிருந்து எண்ணெயைக் கொண்டுவந்து சுத்திகரிப்பதாகும்.

திரு. சி. எஸ். பொன்னுசாமி : தலைவர் அவர்களே, ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன்னால் இரண்டு நிபுணர்கள் தூத்துக்குடிக்கு வந்து இடத்தைப் பார்த்துவிட்டு, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தூத்துக்குடியில் வைப்பதா, அல்லது கொச்சியில் வைப்பதா என்று யோசனை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தூத்துக்குடியில் அந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை வைப்பதற்கு வசதி இருக்கிற காரணத்தால், அங்கேயே ஏற்படுத்த வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிபுணர் குழு கேரளம், மைசூர், சென்னை ஆகிய மூன்று ராஜ்யங்களுக்கும் வந்து பார்த்தார்கள். இரண்டு மூன்று இடங்களை ஒவ்வொரு ராஜ்யத்திலும் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்த இடங்களில் தூத்துக்குடியும் ஒன்று. ராஜ்ய சர்க்கார், அதைத் தூத்துக்குடியில் அமைப்பதில் பல நன்மைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக்கூறியிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எண்ணெய் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க இரண்டு, மூன்று பூர்வாங்க ஆராய்ச்சிகள் நடத்தவேண்டும். முதலில் 'ஏரோ-மாக்னடிக் சர்வே' செய்வார்கள். இரண்டாவது, 'சீஸ்மிக் சர்வே' செய்வார்கள். அந்த இரண்டும் முடிந்துவிட்டன. மூன்றாவதாக 'டிரில்லிங்' செய்து எண்ணெய் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதை இப்போது மேற்கொண்டிருக்கிறார்கள்.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலே மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்குப் பயன்படும் எண்ணெய் மாத்திரம் சுத்திகரிக்கப்படுமா அல்லது இன்ஜினியரிங் வேலைகளுக்கான எண்ணெயும் சுத்திகரிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கோழி இன்னும் முட்டை இடவில்லை. (சிரிப்பு.) எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் வைப்பதாக இருந்தால் என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றிப் பின்பு பரிசீலிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆயில் ரிபைனரியைத் தென் மாநிலங்களில் எந்த மாநிலத்தில் வைப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறதா ? அல்லது தமிழ்நாட்டில் எந்த இடத்தில் வைப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'ரிபைனரி'-யைப் பொறுத்தவரையில், தென் மாநிலத்தில் எந்த இடத்தில் வைப்பது என்பதைப் பற்றிய பரிசீலனைதான் நடந்து கொண்டிருக்கிறது. 'ஆயில் எக்ஸ்ப்ளோரேஷனை'ப் பொறுத்தவரையில், தஞ்சை ஜில்லாவில் 'பெல்ட்' என்று சொல்லப்படும் பகுதியிலே வைக்கலாம் என்பது யோசனை.

திரு. இராம. அரங்கண்ணல் : பாண்டிச்சேரியிலிருந்து கந்தர்வக்கோட்டை வரையிலுள்ள பகுதியில் எண்ணெய் கிடைக்குமென்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்த திட்டத்தைச் சேர்க்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமாக இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாண்டிச்சேரியிலிருந்து கந்தர்வக்கோட்டை வழியாக கிழக்கு இராமநாதபுரம் வரையில் ஒரு கோடு போட்டால் அந்தப் பகுதியில் எண்ணெய் இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. 'டிரில்லிங்' செய்து பார்த்தால்தான் எண்ணெய் இருக்கிறதா, இல்லையா என்று தெரியும்.

திரு. சா. ராமசாமி : பூர்வாங்க சோதனையின் விளைவாக நமது மாநிலத்தில் எங்கெங்கு எண்ணெய் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் சொன்னேன். பாண்டிச்சேரியிலிருந்து கிழக்கு இராமநாதபுரம் வரை வளையமான கோடு போட்டால் அந்தப் பகுதியில் எண்ணெய் இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : 'ஆயில் ரிபைனரி' யை எங்கே வைப்பது என்பது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டதா ? அதைக் கொச்சியில் வைக்க முடிவு செய்யப்பட்டுவிட்டதாகப் பேப்பரில் பார்த்தேன். அவ்வாறு முடிவு செய்யவில்லை என்றால் தமிழ் நாட்டில் வைக்க ஏது இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த இடத்தில் ரிபைனரியை வைப்பது என்ற முடிவு அதிகார பூர்வமாக இன்னும் வரவில்லை. பத்திரிகையில் போட்டிருந்தால், கேள்விகளைப் பத்திரிகைகளுக்கே போடலாம்.

Price control

* 357-B *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken for holding the price line?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

சட்டமன்றத்தின் முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது ?

* 357-C *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps already taken and proposed to be taken for effectively checking speculation, hoarding and profiteering in foodgrains and essential commodities in the State during the Third Plan period?

THE HON. SRI P. KAKKAN : A statement has already been placed on the table of the House in reply to starred Question No. 357-B.

நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 357-(பி) க்கான பதிலுக்கு ஏற்கெனவே ஓர் அறிக்கை சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, மிளகாய் விலை ஒரு மணு 22 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 35 ரூபாயாக ஏறியிருக்கிறது. மிளகாய் விலையைக் கட்டுப்படுத்த ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : மிளகாய் விலை சில இடங்களில் இறங்கியிருக்கிறது, சில இடங்களில் ஏறியிருக்கிறது. எந்த இடத்தில் மிளகாய் விலை ஒரு மணு 22 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு அவர்கள் எழுதி அனுப்பினால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்கள் பதிலிலே நியாய விலைக்கடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். நீலகிரி மாவட்டத்தில் அரிசி உற்பத்தி செய்யப்படுவதில்லை. கீழே இருந்துதான் அரிசி மேலே வரவேண்டும். அங்கு ஏற்கனவே இருந்த 75 நியாய விலைக் கடைகள் 50 ஆகக் குறைக்கப்பட்டு விட்டன. ஆகவே நியாய விலைக் கடைகளை மேலும் திறக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

---

a Printed as Appendix on pages on 414–417.

கனம் திரு. பூ. கக்கன் : பல நியாய விலைக் கடைகள் இருந்ததை இப்போது 200 ஆகக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். அறுவடை காலமானதால் நெல் வாங்குவதில் கஷ்டம் இருக்காது. அதற்குக் கஷ்டம் வரும்போது மேலும் நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரை, கூடுமானவரை நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு முறையிலே கடைகளை வைக்க முன்வந்தால் அரசாங்கம் உதவி செய்யும்.

திரு. ஜே. மாதா கவுடர் : அறுவடைக் காலத்திலே நெல்லைச் சுலபமாக வாங்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நீலகிரியில் நெல் அறுவடை செய்யப்படாத காரணத்தால் அங்கு நியாய விலைக்கடைகளை நிரந்தரமாக்குவதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் பதில் சொல்லும் போது மற்ற மாகாணங்களின் நிலைமையை வைத்துச் சொன்னேன். நீலகிரிக்கு அதிகமான அளவுக்கு நியாய விலைக் கடைகள் கொடுத்திருக்கிறோம். அங்குள்ள சில கடைகளில் பிளாக் மார்க்கெட்டில் விற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. நல்ல முறையில் மக்களுக்கு அரிசி கிடைக்க வேண்டுமென்றால் கூட்டுறவு முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அதிகமான அளவில் அமைக்க முன்வந்தால் அரசாங்கம் அது பற்றி அதிகக் கவனம் செலுத்தும் என்று கூறிக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : நியாய விலைக்கடைகள் வைத்து அரிசியைக் குறைந்த விலைக்குக் கொடுக்கவேண்டுமென்பதை வரவேற்கிறேன். ஆனால் உணவு உற்பத்திக்கு மூலகாரணமாக இருக்கக் கூடிய புண்ணாக்கு, உரப் பொடி முதலியவற்றையும் நெல்லின் விலைக்குத் தகுந்தபடி கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : புண்ணாக்கு அதிக அளவில் கிடைப்பது நமது மாநிலத்தில் கடலை உற்பத்தியைப் பொறுத்திருக்கிறது. உரப்பொடி ஏற்கனவே அதிக அளவில் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி சி. குழந்தையம்மாள் : மக்கள் மண்ணெண்ணெயை அடுப்பு எரிப்பதற்காக உபயோகப்படுத்தி வருகிறார்கள். மண்ணெண்ணெய் விலை இப்போது அதிகமாகிவிட்டது. அதே சமயத்தில் விறகு விலையும் ஒரு மணுவுக்கு இரண்டணா ஏறியிருக்கிறது. ஏழை, நடுத்தர வகுப்பினர்களான ஆசிரியர்கள், போலீஸ்காரர்கள் போன்றவர்களும் இதனால் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவு சொசைடிகள் ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் குறைந்த விலையில் விறகு கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கிராமங்களில் இருப்பவர்கள் காடுகளுக்குச் சென்று விறகு பொறுக்கிக் கொள்ளுகிறார்கள். நகர மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்பதற்காகத்தான், 25 கிலோ கிராம் ரூபாய் 1-75 ந. பைக்குக் கிடைக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் எட்டு 'ஃபயர் உட்' டெப்போக்கள் அமைக்கப்பட்டு, அந்த விலைக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : மூன்று மாதங்களுக்கு முன்புகூட இம்மாதிரித்தான் மிளகாய் விலை ஏறியது, பின்னர் குறைந்து விட்டது. கன்ஸ்யூமர் சொஸைட்டிகளில் எந்தெந்த சாமான்களை விற்க வேண்டுமென்று இருக்கிறது ? அதில் மிளகாய் இல்லை என்று அறிகிறேன். ஆகவே, மிளகாயையும் நியாய விலையில் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதுபற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : விறகுக்கான நியாயவிலைக் கடைகள் எட்டு இருப்பதாகச் சொன்னார்கள். 1¾ ரூபாய்க்கு விற்பது உண்மையாக இருந்தாலும், வேறு கடைகளில் 3 ரூபாய் அளவில் கூட விற்பதால் இந்த எட்டு நியாயவிலைக் கடைகள் கடலில் கரைத்த காயம் போல் இருக்கிறது. ஆகவே ஏழை, நடுத்தர மக்களின் வசதியை முன்னிட்டு, இன்னும் ஏராளமான நியாய விலைக் கடைகள் திறக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு வைத்தாலும் கடலில் கரைத்த பெருங்காயம் போல் இருக்கிறது என்றுதான் சொல்வார்கள். இப்படி நியாயவிலைக் கடைகள் இருப்பதால் மற்றவர்கள் விலையை ஏற்றமாட்டார்கள். அதன் விலையைக் கட்டுப்படுத்தவே அவற்றை வைத்திருக்கிறோம். சமீபத்தில்கூட மதிப்பிற்குரிய கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்கள் அந்த நியாயவிலைக் கடை ஒன்றை ஆரம்பித்து வைத்தார்கள். தேவையானால் பரிசீலிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிகளை அந்தந்த ஊரில் பொதுவாக ஒரு இடத்தில் நிறுத்தி வைத்து கசை அடி கொடுக்கிற அளவிற்குத் தண்டனையை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : அம்மாதிரி சட்டம் கிடையாது. அவர்களுக்கு புத்தி சொல்லி மனம் மாறியிருக்கிறது.

கனம் சபாநாயகர் : 'பில்' கொண்டுவரவேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்களும் புத்தி சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : தஞ்சை மாவட்டத்தில் சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலையில் இந்த ஆண்டு 1,800 மூட்டை நெல் கொள்முதல் செய்து மற்ற இடங்களைவிட படிக்கு 1¼ அணா

குறைந்து விற்கிறார்கள். அதேபோன்று மற்ற கூட்டுறவு பண்டக சாலைகளும் குறைந்த விலைக்கு வாங்கி குறைந்த விலைக்குக் கொடுக்க பொது உத்தரவு ஒன்றை இடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவுப் பண்டக சாலைகள் பொதுவாக நல்ல முறையில் நடக்கின்றன. கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

திரு. கே. ஏ. மதியழகன் : நம் மாநிலத்திற்கு வேண்டிய உளுந்து, துவரை போன்ற தானியங்கள் . . .

கனம் சபாநாயகர் : ஒவ்வொன்றாகச் சொன்னால் டைம் இருக்காது.

திரு. கே. ஏ. மதியழகன் : அவை வட இந்தியாவிலிருந்து வர வேண்டியிருப்பதால் அதற்கு வாகன் வசதி சரியாகக் கிடைக்காமல் இருப்பதால் விலை உயருகிறது. ஆகவே வாகன்கள் விரைவாகக் கிடைக்க சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : வாகன் வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுத்திருப்பதால்தான் இப்போது பருப்பு போன்றவை அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் தக்க கவனம் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. ஈ. ர. நல்லசிவம் : ரைஸ் மில்களிலிருந்து 100-க்கு 10 மூட்டை வசூல் செய்யப்படுகிறது. அதற்கு நேரடியாகப் பணம் கொடுக்காமல் பாண்டு கொடுப்பதாகப் புகார் சொன்னார்கள். அது பற்றி விண்ணப்பங்கள் வந்தனவா ? அப்படியானால் பணமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பணம் கொடுக்கவேண்டுமென்றுதான் ஏற்பாடு செய்தோம். கனம் அங்கத்தினர் சொல்லும் தகவல் என்னிடம் இல்லை. அது பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஒரு காலத்தில் ஏறுவதும் ஒரு காலத்தில் இறங்குவதுமாக இருக்கிறது ஆகவே, நிலையான விலையை நிர்ணயம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : விலையைக் கட்டுப்படுத்த நான் முன்பு சொன்ன ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிகமாக இருந்தால் விலைகுறைவாகவும், குறைவாக இருந்தால் விலை கூடுதலாகவும் இருக்கிறது. பண்டங்கள் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது, விலை.

திரு. கே. மூக்கையா தேவர் : அரிசி, விறகு இவற்றிற்கெல்லாம் நியாயவிலைக் கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் மிளகாய், உப்பு, புளி போன்ற பண்டங்கள் ஆகியவற்றிற்கு நியாய விலைப் பல சரக்குக் கடைகள் வைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : 'கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ்ஸ்' என்று சென்னையில் பரிட்சார்த்தமாக வைத்திருக்கிறோம். நியாய விலைக் கடைகளில் எல்லாம் வைக்க முடியாது. இன்னும் சில இடங்களிலும் நீடித்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட இடங்களில் இப்படிக் கொடுக்கப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : நெல் விலையை மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்கிறது என்று முன்னால் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்தார்கள். விவசாய உற்பத்தி இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. செலவுகளும் வேறுபடுகின்றன. ஆகவே, நம் மாநிலத்தைப் பொறுத்தவரை, நெல்லின் விலையை, அதன் செலவிற்கு ஏற்ற வகையில் நிர்ணயம் செய்ய ஒரு போர்டு அமைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்யும் போது இங்கு எப்படி ஒரு போர்டு அமைப்பது ?

திரு. இரா. நெடுஞ்செழியன் : இன்றியமையா உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயம் செய்ய வல்லுநர் குழு ஒன்றை அமைக்க அரசினர் முன்வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த ஆலோசனை அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவில் உற்பத்தியாகும் பயறு, உளுந்து, புளி போன்றவற்றை உற்பத்தியாகும் சமயத்தில் குறைந்த விலைக்கு வாங்கி அவற்றைக் கல்கத்தாவிற்கு அனுப்புகிறார்கள், 27 ரூபாய்க்கு வாங்கியதை 75 ரூபாய்க்கு அனுப்புகிறார்கள் ; அதனால்தான் விலை ஏறுகிறது. ஆகவே, கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் அவற்றை வாங்கி, ஸ்டாக் செய்து, குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தமாதிரி அதிக லாபம் அடிக்கிறார்கள். சிலவிடங்களில் குவித்து வைத்து விலையை ஏற்றுகிறார்கள் என்பதற்காக ரிசர்வ் பாங்கிலிருந்து பணம் கொடுப்பதைக் கட்டுப்படுத்துகிறோம். கிராமங்களில் கோடவுன்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தானியங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும்போது வாங்கி பின்னர் கொடுத்து மக்களுக்கு உதவி செய்யலாம் என்பதற்காகத்தான் இந்தக் கோடவுன்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கிராம மக்கள் பயன் படுத்திக்கொள்ளலாம்.

திருமதி சி. குழந்தையம்மாள் : காய்கறி, வெங்காயம் போன்றவை செய்தித் தாள்களில் இருக்கிற விலைக்கு மார்கட்டில் கிடைப்பதில்லை. ரேடியோவில் சொல்கிற விலைக்கும் கிடைப்பதில்லை. ஆகவே, எங்கே கோளாறு இருக்கிறது என்று கவனிக்க வேண்டும். என் தொகுதியில் வெங்காயம் உற்பத்தி செய்கிறார்கள்.

அதன் பலன் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, கூட்டுறவு சொஸைட்டிகளின் மூலம் இம்மாதிரி அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களை விற்க ஆலோசனை செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: எல்லா இடங்களிலும் வைக்க முடியாது. சென்னையில் பரிட்சார்த்தமாக வைத்திருக்கிறோம், உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள், மற்ற ஏழை மக்கள் இவர்களுக்கு உதவி செய்வதற்காக பெரிய நகரங்களில் வைத்திருக்கிறோம். காய்கறி விஷயத்திலும் கவனம் செலுத்தப்படுகிறது. 30 மைல்களுக்குள்ளே உற்பத்தி செய்யவேண்டும். பாதி விலைக்கு விதை, பூச்சி மருந்து இவை பெற்றுக் கொள்ளலாம். உற்பத்தி செய்ய 120 ரூபாய் கடன் கொடுக்கிறோம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: சென்னையில் கன்ஸ்யூமர் சொஸைட்டிகளில் அரிசி படி என்ன விலைக்கு விற்கப்படுகிறது? நெல் விலை இறங்கியிருக்கிற அளவிற்கு அரிசி விலை குறைத்து விற்கப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: ப்ரோக்ராம்படி விற்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் கேட்கும் தகவல் என்னிடம் இல்லை, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஆர். ரங்கசாமி: ஸார், விவசாயப் பொருள் விலை ஏறியவுடன் பெரிய கூக்குரல்கள் கிளம்புகின்றன. அதே நேரத்தில் விவசாயிக்குக் கிடைக்கிற பொருட்கள் சரியான முறையில் கிடைப்பதில்லை. இந்த நிலையில் பழைய பண்டமாற்று முறையைக் கொண்டுவந்தால் நலமாக இருக்குமல்லவா?

கனம் திரு. பூ. கக்கன்: ஆங்காங்கு கிராமங்களில் அல்லது நகரங்களில் விவசாய மக்களே பார்த்து ஒரு பண்டத்தைக் கொடுத்து ஒரு பண்டத்தை வாங்கிக் கொள்வதற்கு ஒன்றும் தடை இல்லை.

திரு. சி. பொன்னுசாமி: சபாநாயகர் அவர்களே, உணவுப் பொருள்கள் பொறுத்த வரை, உற்பத்தியாளர்களுக்கு விலைகள் கட்டுபடியாகக் கூடிய நிலையில் இருப்பதற்கும், அதே சந்தர்ப்பத்தில் உபயோகப்படுத்துகிறவர்களுக்கும் கட்டுபடியாகக் கூடிய நிலைமையிலும் விலையைத் தெரிந்து நிர்ணயம் செய்வதற்காக, பொருளாதார நிபுணர்களைக் கொண்டு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அறிக்கை வெளியிட்டால் மக்களுக்கு நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதைப் பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: அரசாங்கத்திலே நிபுணர்கள் இருக்கிறார்கள். அதைப் பற்றித் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டே இந்த ஏற்பாடு எல்லாம் செய்யலாம். ஏதாவது கஷ்டம் வந்தால் அப்போது இதைப் பற்றிக் கவனிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பற்றி மக்களுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது. அரிசி குறைந்த விலையில் இருக்கிறது என்று சந்தோஷப்படுகிறார்கள். அதே நிலைமையில் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் அரிசி மிகவும் தரம் கம்மியாக இருக்கிறது, ஆகையால் உயர்ந்த ரக அரிசியாக கூட்டுறவு பண்டகசாலைகளில் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: கூட்டுறவுப் பண்டகசாலைகளில் அப்போதைக்கப்போது ஒரு சமயத்தில் நல்ல அரிசி வரும், ஒரு சமயத்தில் கொஞ்சம் தரக் குறைவானதாக இருக்கலாம். தரக் குறைவான அரிசியாகக் கொடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம் இல்லை.

திரு. சா. கணேசன்: விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்பதற்காக பாங்குகள் நெல் போன்றவற்றிற்குக் கடன் கொடுக்கப்படாது என்று விதி இருப்பதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் விவசாயிகள் படு மோசமான விலைக்கு விற்பதற்கு நிர்ப்பந்தம் ஏற்படாமல் இருக்க, அறுவடைக் காலங்களில் ஒன்றிரண்டு மாதங்களுக்கு விவசாயிகளுக்கு நேரடியாக அவர்கள் உற்பத்தி செய்கிற தானியங்கள் மீது கடன் கொடுக்க வழி வகை செய்ய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: நிச்சயமாக அதையெல்லாம் குறித்துத் தான் கோடவுனில் கொண்டு வந்து கொடுத்து, அப்போது மூட்டைக்கு இவ்வளவு என்று கொஞ்சம் கொடுத்து, பிறகு நல்ல விலைக்கு விற்றுக்கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: உணவுப் பதுக்கல்காரர்கள், நெருக்கடி நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு யாரேனும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்கள் தொகை என்ன? இல்லாவிட்டால் உணவுப் பதுக்கல்காரர்களே இந்த மாநிலத்தில் இல்லை என்று பொருளா?

கனம் திரு. பூ. கக்கன்: மாநிலத்திலேயே உணவுப் பதுக்கல்காரர்கள் இல்லை என்று யாரும் சொல்ல மாட்டார்கள். எத்தனை பேர்கள் என்று கேட்கிறார்கள். அந்தத் தகவல் இப்போது இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. அ. ராகவ ரெட்டி: தற்போதுள்ள நிலைமையிலே நெல் விலையே குறைவாக இருக்கிறது என்று சொல்லும்போது சர்க்கார் அதிகாரிகள் மில் முதலாளிகளையும், விவசாயிகளையும் கூப்பிட்டு ஒரு விலை சொல்லி நிர்ப்பந்தமாகக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்களே, அந்த மாதிரி சர்க்கார் ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறார்களா? அப்படிப் போட்டிருந்தால் அதன் விவரம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: நிர்ப்பந்தம் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆ. தங்கவேலு: பிண்ணாக்கு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் விலை உயர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி குறைந்த விலையில் பிண்ணாக்கு கொடுக்க ஆவனசெய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. அ. தியாகராஜன்: மேல் நாடுகளில் பொருள் விலையை நிர்ணயித்து ஒவ்வொரு பொருளுக்கும் எவ்வளவு விலை கொடுக்க வேண்டும் என்று போர்டு எழுதிப் போட்டிருக்கிறார்கள். அது போல நம் இந்திய நாட்டில் இருக்கிற கடைகளில் இன்னின்ன அத்தியாவசியப் பண்டங்களை இன்னின்ன விலைக்கு விற்க வேண்டுமென்று நிர்ணயித்து கடைகளில் விலை போர்டு தொங்க விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: நாம் விலையை நிர்ணயம் செய்யவில்லை. விலைவாசியெல்லாம் ஜனங்களுக்கே தெரியும். குறிப்பாக காய்கறி விலையைப் பொறுத்த அளவில் பத்திரிகைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். வீட்டிலேயே உட்கார்ந்து கேட்கிற விலையைக் கொடுத்து விட்டு, அதிகமாக வாங்கிக் கொண்டு விட்டார்கள் என்று சொல்லக்கூடாது. அவர்களாகவே தெரிந்து கொள்ளவேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி: மதிப்புக்குரிய பெண் அங்கத்தினர்கள் எல்லோருமே சேர்ந்து இந்தக் கேள்வியில் அக்கறை செலுத்திக் கேட்பதால் . . .

MR. SPEAKER: Next Question, Question No. 375-D.

Relief to goldsmiths

*357-D Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether there is any proposal to start Co-operative Institutions for goldsmiths, as a measure of relief to them; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes.

(b) Government have sanctioned a scheme for the organisation of four Industrial Co-operative Societies for Goldsmiths at Madras, Tiruchirappalli, Madurai and Coimbatore. The societies will be organised as multi-metal workers societies manufacturing not only gold ornaments but also silver vessels and precision parts in metal. Each of the four societies will be given a loan of Rs. 1,14,500 and a subsidy of Rs. 26,800 besides the free services of the following staff:

One Master Craftsman on Rs. 225-15-375 p.m.

One Design Assistant on Rs. 180-5-200-10-300 p.m.

One Industrial Co-operative Officer-Secretary on Rs. 200-5-240-10-270 p.m.

Two Unskilled Assistants on Rs. 60 p.m. each.

One Watchman.

The societies will be registered and started on work shortly.

திரு. எஸ். மாதவன்: தலைவர் அவர்களே, இந்தத் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் வேலையில்லாமல் இருந்து தற்கொலை செய்து கொண்டவர்களின் வீட்டுக்காரர்களுக்கு உதவித் தொகை கொடுக்க சர்க்காரிடம் ஏதாவது திட்டம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரியான தகவல் எவ்வளவு தூரம் சரி என்றே தெரியாது. அதனால் 'ஹைப்பாத்தெடிகல்' கேள்விக்கு பதில் சொல்ல முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன்: நேற்றைய தினம் நம்முடைய கனம் முதல் அமைச்சரைச் சந்திக்கப்போன பொற்கொல்லர் ஒருவர் திருச்சியில் ஊர்வலத்தில் போனபோது வேலையில்லாத் திண்டாட்டத்தினால் இறந்திருக்கிறார். இந்த முறையில் பல பேர் பரிதாபமான நிலைமையில் இருக்கிறார்கள். மேலும், இந்த நிலையங்களை அதிகப்படுத்தி விரிவுபடுத்துவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நேற்று ஒருவர் இறந்து போனார் என்று செய்திப் பத்திரிகையில் பார்த்தோம். இறந்தவர்கள் எல்லாம் பொற்கொல்லர்கள் என்றோ, பொற்கொல்லராக இருக்கிறவர்களெல்லாம் இறக்க மாட்டார்கள் என்றோ சொல்ல முடியாது. என்ன நோய் இருந்ததோ, என்ன உடல் நிலை இருந்ததோ. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து உடனே பொற்கொல்லர் இன்ன காரணத்தினால் இறந்தார் என்று சொல்லுவது அவ்வளவு சரியாக இருக்காது. பொற்கொல்லர்கள் இறக்காமல் இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று சர்க்கார் முயற்சி செய்கிறது. இதற்குத்தான் இந்த மாதிரி சொஸைட்டிகளெல்லாம் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

திரு. சி. பொன்னுசாமி: குறிப்பாக, நம் மாகாணத்தில் பொற்கொல்லர்கள் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கணக்கிட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு பசு மாடு வாங்கிக் கொடுக்க மத்திய சர்க்காரிடமிருந்து பணம் கேட்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ரீஸ் ஆக்ட் பிரகாரம், பொற்கொல்லர்கள் ஏதாவது தனியாகத் தொழில் செய்ய முன்வந்தால் அவர்களுடைய சொந்த ஜாமீனில் 500 ரூபாய், 1,000 ரூபாய் கடன் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், இப்போது ஏற்படுத்தப் போகிற கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளையெல்லாம் முக்கிய தலைநகரங்களில் 4 இடங்களில் ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. தாலூக்காக்களில் இருக்கும் பொற்கொல்லர்களுக்கும் ஏதாவது வழி வகை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் சொன்னேன். வேறு தொழில் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட்டின் கீழ் உதவி கொடுக்கப்படும்.

திரு. எஸ். மாதவன் : இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்டில் ஷார்ட் கோர்ஸ் கொடுத்து வேலை பார்க்க விரும்புகிறவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதத் திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கிறது. என்ன ட்ரெயினிங் என்பதெல்லாம் இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேருகின்ற பொற்கொல்லர்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய பங்குத் தொகையைச் சர்க்கார் கடனாகக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஓரளவு கடனாகக் கொடுக்கும்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, பொற்கொல்லர்களுக்கு வேறு தொழில் செய்வதற்கு உதவியாக 500 ரூபாய், 1,000 ரூபாய் அளிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்கள். எந்தத் தொழிலைச் செய்தாலும், கடை வைத்தாலும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜில்லாக்களில் இருக்கிற அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸைப் போய்ப் பார்த்தால் இந்த விவரங்களையெல்லாம் அவர்கள் சொல்லுவார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார். பொற்கொல்லர் திருச்சியில் இறந்தார் என்பது பற்றி, திருச்சி பெரிய கடை . . .

கனம் சபாநாயகர் : (மணியடித்து) அடுத்த கேள்வி. கேள்வி 357-இ.

Overbridge on the Thirupparankundram Road

* 357-E Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to State :

(a) whether overbridges are proposed to be built at the Railway level crossings near the Power House and the Meenakshi Mills Gate on the Thirupparankundram Road, Madurai; and

(b) if so, when the works are expected to commence?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) Consideration of proposals for the construction of overbridges at the existing level crossings at mile 300/2 of National Highways 7 on Tirupparankundram Road near Subramaniyapuram and at mile 300/7 of National Highways 7 on Tirupparankundram Road near Meenakshi Mills at Madurai, besides certain other similar schemes within Municipal limits outside Madras City has been deferred in view of the National Emergency.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, இந்த மேம்பாலமும், அடுத்து திண்டுக்கல் ரோடுக்குப் போகிற வழியில் அங்கு ஒரு மேம்பாலமும் அமைக்கவேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு முன்பே எஸ்டிமேட் தயார் செய்து, சாங்ஷன் ஆயிற்று. இருந்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : நான் என்னுடைய பதிலில் பின் பாகத்தைப் படிக்கிறேன். "இது போன்ற இன்னும் சில திட்டங்களும் தேசிய நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன".

விற்பனைப் பொருள்கள் வரிவிதிப்பு

* 357-F கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விற்பனைப் பொருள்கள் வரி விதிப்புபற்றி ஆராய்ந்து யோசனைகள் கூற அரசு நிபுணர் யாரையாவது நியமனம் செய்ய உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI. R. VENKATARAMAN : In view of the emergency, the Government have deferred for the present the proposal for appointment of an expert to review the working of the Madras General Sales Tax Act, 1959.

திரு. எஸ். முருகையன் : ஸார், உணவுப் பொருட்களையாவது இந்த வரி விதிப்பிலிருந்து நீக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வருகிற 28-ம் தேதி இந்த மானியக் கோரிக்கை வரும்போது, இதைப் பற்றிப் பேசலாம்; அப்பொழுது பதிலளிக்க முடியும்.

நில உச்சவரம்புச் சட்டம்

* 357-G கேள்வி.—திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நில உச்சவரம்புச் சட்டத்தை அமல் படுத்தல் சம்பந்தமாக இதுவரை எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, was first published in the *Fort St. George Gazette* on 2nd May 1962. The rules necessary

for the implementation of the Act were issued on 29th September 1962. The second October 1962 was specified as the 'notified date' for the purposes of this Act. The period for filing the returns under the Act is to be reckoned from the notified date. The last date for filing returns under sections 8 (1) and 61 (1) of the Act, in respect of persons other than members of the Armed Forces expired on 31st December 1962. About 2,273 persons have filed returns under the various provisions of the Land Ceiling Act up to 20th January 1963. The returns received are being scrutinized by the Authorized Officers and notices are being issued to those who have not furnished returns

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், நில உச்ச வரம்பு அதிகாரிகள் எல்லா இடங்களிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? எத்தனை பேர்கள்? எங்கெங்கே?

கனம் திரு. வெ. ராமையா : ஆதரைஸ்டு ஆபிசர்கள், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் அல்லது எங்கெங்கே தேவையோ அங்கங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. நா. ராஜாங்கம் : ஸார், நில உச்ச வரம்புச் சட்டம் வரப் போகிறது என்று 30 ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்கள், சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா, தெரியாதா?

கனம் திரு. வெ. ராமையா : இவையெல்லாம் சட்டம் வரும் முன்பே பேசப் பட்டவை, இந்தச் சட்டம் சட்ட சபையில் வந்த காலத்திலும் பேசப் பட்டவை. இன்றைக்கு இருக்கும் நிலையில் யார் யார் சட்டத்திற்கு உட்பட்டவர்களோ, அவர்கள் சம்பந்தமாக என்ன செய்யவேண்டுமோ, அப்படிச் செய்கிறோம்.

திரு. கோ. சி. மணி : இந்தச் சட்டப்படி கணக்குக்கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது; அப்படிக் கணக்குக் கொடுக்காமல் இருந்தவர்கள் எத்தனை பேர்கள்? எத்தனை பேர்கள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்கிற தகவலாவது இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : கணக்குக் கொடுக்காதவர்கள் பற்றித் தகவல் இல்லை. யார் யாரை இந்தச் சட்டம் கட்டுப் படுத்துமோ, அவர்களுக்கெல்லாம் ஆதரைஸ்டு ஆபிசர் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.**]

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

DEMAND NO. XIX—CO-OPERATION.
DEMAND NO. XVII—FISHERIES.
DEMAND NO. XXXV—FOREST DEPARTMENT.
DEMAND NO. XLIV—CAPITAL OUTLAY ON FORESTS.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,63,56,100 under Demand No. XIX—Co-operation.'

Sir, with your permission, I will move other Demands also.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 71,68,100 under Demand No. XVII—Fisheries.'

On the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 91,27,800 under Demand No. XXXV—Forest Department.'

On the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 62,05,000 under Demand No. XLIV—Capital Outlay on Forests.'

SRI M. P. VADIVELU : Mr. Speaker, Sir, I move—

'That the allotment of Rs. 2,63,56,100 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100."

SRI T. P. ALAGAMUTHU : Mr. Speaker, Sir, I move—

'That the allotment of Rs. 71,68,100 under Demand No. XVII—Fisheries be reduced by Rs. 100.'

திரு. சா. கணேசன் : என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 91,27,800 under Demand No. XXV—Forest Department—be reduced by Rs. 100."

திரு. ம. கமலநாதன் : என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 62,05,000 under Demand No. XLIV—Capital Outlay on Forests—be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

எல்லாவற்றையும் ஒன்றாக விவாதிப்பது என்பது அவ்வளவு சரியாக இராது. ஆகவே, இவற்றைத் தனித்தனியாக விவாதிப்பது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. கூட்டுறவுக்கு மூன்று மணி நேரமும், மற்ற இரண்டுக்கும் ஒரு மணி நேரமும் ஒதுக்கலாம். முதலில் கூட்டுறவு இலாகாபற்றியும், அதன் பிறகு வன இலாகாபற்றியும், அதற்குப் பிறகு மீன் இலாகாபற்றியும் விவாதிக்கலாம். தாங்களும் கனம் எதிர்க்கட்சித் தலைவரும் சம்மதித்தால்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, இம்மன்ற முதல்வர் கூறுகிறபடியே முதலில் கூட்டுறவுத் துறையையும், பிறகு வனத் துறையையும், அதன் பிறகு மீன் துறையையும் எடுத்துக்கொள்ளலாம்.

MR. SPEAKER : I have no objection if both the Hon. the Minister and the Leader of the Opposition agree.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That three hours for Damand No. XIX—Co-operation and an hour for the remaining Demands be allotted."

The motion was put and carried.

MR. SPEAKER : The Demand relating to Co-operation and the cut motion under it are before the House for discussion.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் சபாநாயகர் அவர்களே, முதலாவதாக கூட்டுறவு மானியத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுகிறோம். கனம் அங்கத்தினர்களுக்கு இந்தக் கூட்டுறவு பற்றிய அறிக்கையில் எல்லா விளக்கமும் கொடுத்திருக்கிறது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ளுகிறேன். இங்கு இருக்கக்கூடிய கனம் அங்கத்தினர்கள் எல்லோருமே கூட்டுறவு ஸ்தாபனங்களில் தொடர்பு கொண்டு இருக்கிறவர்கள். அறிக்கையில் கொடுத்திருக்கும் விவரங்களைப் புரிந்துகொண்டு, கனம் அங்கத்தினர்கள் முக்கியமான விஷயங்களையும், நல்ல யோசனைகளையும் சொல்லுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

இன்றைக்குக் கிராமங்களைப் பார்த்தால், அநேகமாக எல்லா கிராமங்களும் கூட்டுறவு ரீதியில் கூட்டுறவு முறையில் வந்துவிட்டன என்று சொல்லலாம். வாஸ்தவம், குக்கிராமங்கள் இருக்கின்றன அங்கங்கே. ரெவின்யூ கிராமங்கள் என்ற முறையிலே நான் சொல்லுகிறேன். 100-க்கு 100 கிராமங்களில் கூட்டுறவு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் அங்கங்கே இருக்கின்றன. கிராம ரீதியாகப் பார்த்தால், மக்களில் 75 அல்லது 76 சதவிகிதம் கூட்டுறவு முறையின் கீழ் வந்து விட்டார்கள். மூன்றாவது திட்டம் முடியும் காலத்தில் குறைந்தது 80 சதவிகித மக்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களின் கீழ் வந்து விடுவார்கள். இங்கே இருக்கும்

கனம் அங்கத்தினர்களுக்குக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அதிகமாகத் தொடர்பு இருக்கிறது என்கிற காரணத்தினால், அவர்கள் மக்களுக்கு அதிகமாகக் கூட்டுறவு பற்றிச் சொல்லி மக்களை அந்தத் துறையில் ஊக்குவிப்பார்கள் என்று நம்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் சொல்லப் போகும் யோசனைகள் மிக்க நல்ல முறையிலும், சர்க்காருக்கு உதவியாகவும், பிரயோஜனம் உள்ளவைகளாகவும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும், இந்த நெருக்கடி நேரத்திலும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் நல்ல முறையிலே இயங்கி வருகின்றன என்பது. கோடௌன்கள் ஆங்காங்கே கட்டிவைக்கப் படுகின்றன. கனம் அங்கத்தினர்கள் நல்ல பல யோசனைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

***திரு. மு. பொ. வடிவேல் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டுக்கான கூட்டுறவு அபிவிருத்தித் திட்ட முன்னேற்றம் பற்றிய ஆய்வுரையின் மீது நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரபணையை வலியுறுத்தி, என்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். கூட்டுறவு இயக்கம் நமது நாட்டிலே தோன்றி சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது என்றாலும், கூட்டுறவு இயக்கம் புகாத துறையே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு வாணிபம், கைத்தொழில், விவசாயம், போக்குவரத்து முதலிய எல்லா துறைகளிலும் கூட்டுறவு இயக்கம் ஆக்கிரமித்திருக்கிறது. இருந்தாலும் கூட, 50 ஆண்டு முடித்துவிட்டது என்பதற்காக கூட்டுறவு இயக்கம் தன்னுடைய பொன் விழாவைக் கொண்டாடிவிட்டது என்றாலும் கூட, கிராம மக்கள் உள்ளத்தில் கூட்டுறவு இயக்கமானது நல்ல முறையில் தெளிவுபடுத்தப்படவில்லை. அப்படித் தெளிவு படுத்தாததன் காரணமாக, கூட்டுறவு இயக்கத்தில் மக்கள் சேருவதற்கு பின் அடைகிறார்கள். கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் இயங்கவேண்டுமானால், 50 ஆண்டுகள் கழித்துக் கூட இந்த நாட்டில் நல்ல முறையிலே மக்கள் போதிய அளவுக்கு கூட்டுறவு இயக்கத்தில் சேர முன்வரவில்லை என்றால், அதற்குப் போதிய பிரசாரம் இல்லை என்று தான் சொல்லவேண்டும். கிராம மக்களில் படிக்காதவர்கள் கூட ராம கதையும், பாஞ்சாலி சபதத்தையும் பற்றிக் கேட்டால், நன்றாக அந்தக் கதைகளை எடுத்துச் சொல்லுகிறார்கள். அது மட்டுமல்ல. யமனுக்கு என்ன வாகனம் என்று அவர்களைக் கேட்டால், டக் என்று எருமைக் கடா என்று சொல்லக் கூடிய அளவிலே கதைகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ராம கதைகள் போன்ற கதைகள் பிரசாரம் செய்வதினால் எப்படி படிக்காத கிராம மக்களுடைய மனதில் நன்றாகப் பதிந்திருக்கிறது என்பதற்காகத் தான் இதை எடுத்துச் சொல்லுகிறேன். இயல், இசை, நாடகம் முதலியவைகள் மூலம் நல்ல பிரசாரம் செய்யப்படுவதால், படிக்காத கிராம மக்கள் கூட நல்ல முறையில் கதைகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

சங்கங்கள் மூடப்படாமல் அவைகளுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நாட்டிலே விவசாயிகளுக்கு வேண்டிய இரும்புக் கட்டு, அச்சு முதலியவைகளெல்லாம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் அல்லது பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு வேண்டிய அத்துணை உரம் முதல் கொண்டு வண்டிக்கட்டு போன்ற முக்கியமான இரும்புச்சாமான்கள் சப்ளை செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும். சங்கங்கள் விவசாயிகளுக்கு ஏதோ கடன் கொடுக்கிறோம் என்ற பெயரில் மட்டும் இருந்து விட்டால் பயன் கிடைக்காது, அவர்கள் பயன் அடைய முடியாது. கிராமச் சங்கங்கள் தனி நபர் ஜாமீன் பேரில் ரூ. 500 வரையில்தான் கடன் கொடுக்கிறார்கள். ரூ.1,000 வரையில் அடமானம் இல்லாமல், சொந்த ஜாமீன் பேபலேயே கடன் கொடுக்க இந்தச் சங்கங்கள் முன்வந்தால்தான் விவசாயிகளுக்குப் பயன் கிடைக்கும். ஏனென்றால், இப்பொழுது கொடுக்கும் ரூ. 500 விவசாயிகளுக்குப் போதுமானது அல்ல. ஒரு ஜோடி மாடு வாங்கவேண்டியிருந்தாலே ரூ. 500, 600 வேண்டியிருக்கிறது. ஆகவே, ரூ. 1,000 சொந்த ஜாமீன் பேரில் கடன் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் 3 வருடத் தவணை கொடுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் 6 மாதம், ஒரு வருடம் தான் தவணை கொடுக்கிறார்கள். அந்தத் தவணையை மாற்றி, 3 வருஷத்தில் அல்லது 5 வருஷத்தில் 5 பாகமாகப் பிரித்துத் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்ற முறையில் விதிகளைச் சற்று தளர்த்திவிட்டால், கிராம மக்கள் போதிய ஆர்வம் காட்டி, பணத்தைச் சுலபமாகத் திருப்பிக்கொடுப்பார்கள். அவர்கள் இப்பொழுது அம்மாதிரி திருப்பிச் செலுத்த இயலாததன் காரணமாக, ஒரு சிலர் பணத்தைக் கட்டாமல் பாக்கி ஆகிவிட்டால், அந்தக் கூட்டுறவு இயக்கத்தில் உள்ள மற்றவர்கள் எல்லோரும் அந்த சங்கத்திலிருந்து கடன் பெறமுடியாத நிலை ஏற்படுகிறது. மேலும், ரூ. 3,000 வரை கடன் கொடுக்கலாம் என்ற புதிய விதி ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், நடைமுறையில் அவ்வாறு கடன் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே, அந்த விதியை உடனே கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 1,000 கோடவுன்கள் கட்டப்படவேண்டும் என்ற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது கட்டப்பட்ட கோடவுன்கள் நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்பதை நாம் முதலில் கவனிக்கவேண்டும். சேரன், சோழன், பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் என்று சொல்லுவதுபோல, இந்த அமைச்சர் காலத்தில் கட்டப்பட்ட கோடவுன்கள் என்று

நிலைக்கு வந்துவிடாமல், இது வரைக்கும் கட்டப்பட்ட கோடவுன்கள் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பார்க்கவேண்டும். பல கோடவுன்கள் இன்னும் காலியாகக் கிடக்கின்றன. அந்த கோடவுன்கள் நல்ல முறையில் இயங்கிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். அந்த கோடவுன்களுக்கு செலுத்தவேண்டிய கடனுக்காகவும், வட்டிக்காகவும்தான் சம்பாதிக்கிற அத்தனை தொகையையும் கொடுத்துவிட்டு, நஷ்டத்தில் வேலை செய்யவேண்டிய அளவுக்கு கோடவுன்களை சங்கங்கள் வைத்துக்கொண்டிருந்தால் என்ன செய்வது, இதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பரிசீலனை செய்து, அந்த கோடவுன்கள் நல்ல முறையில் இயங்குகின்றனவா என்று கவனித்துப் பார்க்கவேண்டும்.

விவசாயிகளுக்கு நேரடியாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகப் பணம் கொடுப்பதற்கு ஏதேனும் திட்டம் வகுக்க வேண்டும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஏற்படுத்துவதன் நோக்கம் விவசாயிகள் விளைவிக்கக்கூடிய பொருள்களை நல்ல விலைக்குச் சரியான அளவில் விற்றுக் கொடுக்கவேண்டும் என்பது தான். ஆனால், அந்த முறையில் விவசாயிகள் முன்வருவதில்லை. முன்வராததற்குக் காரணம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நேரடியாக விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதில்லை. கடன் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட கிராமச் சங்கங்களின் மூலம் அந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கும்பொழுது விவசாயிகள் தானியங்களைக் கொடுக்கவேண்டும் என்று ஒரு கண்டிஷன் வைக்கப்படவில்லை. அவர்கள் தான்யம் கொடுப்பதற்குத் தவறினால் 10 ரூபாய் அபராதம் விதிக்கலாம் என்ற விதி இல்லாத காரணத்தினாலே, அவர்கள் பணமாகவே கட்டிவிடுகிறார்கள். இதனால் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குத் தானியங்கள் வருவதில்லை. தானியங்கள் வராத காரணத்தினால், இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் வெறும் உரங்களை மட்டும் விநியோகம் செய்து கொண்டு எத்தனை நாட்களுக்கு நிலைக்க முடியும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

சிமெண்டு, கொலின், இரும்பு, விவசாயிகளுக்கு வேண்டிய உபகரணங்கள், மற்றும் சாதாரணமாக கிடைக்க முடியாத எல்லா பொருள்களும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு அரசாங்கம் வழிவகைகள் செய்ய வேண்டும்.

சர்க்கரை ஆலைகள் ஆங்காங்கு செயல்பட்டுவருகிறது என்றாலும், வெல்லத்தின் விலை ஏறிவிட்ட காரணத்தினால், 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் இவ்வளவுதான் கரும்பு விளைந்தது என்று குறைந்த அளவில் சப்ளை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதை நல்ல முறையில் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் டைரக்டர்களை அரசாங்கம் நியமிக்கும்பொழுது, அவர் விவசாயியா, ஆலையில் மெம்பரா என்று கவனித்து நியமிக்கவேண்டும். அதை விட்டுவிட்டு அரசியல் நோக்கத்துடன் விவசாயி இல்லாத, உறுப்பினரல்லாத ஒரு நபரை அரசாங்கம் நாமினேஷன் செய்வது தவறு என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நில அடமான பாங்குகளினால் தற்சமயம் பல கஷ்டநஷ்டங்கள் இப்பொழுது நிவாரணம் செய்யப்பட்டிருந்த போதிலும், அவைகளை விரைவிலே இன்னமும் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆம்பூர் கூட்டுறவு நில அடமான பாங்கு நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. மூன்று தாலுகாவைக் கொண்டதாக இருந்தது. இப்பொழுது இரண்டு தாலுகாக்களும் தனித்தனியே பிரிந்துவிட்டது. அதனால், இதனுடைய பராமரிப்பு கடினமான நிலையில் இருக்கிறது. அதிலுள்ள மெம்பர்கள் மேற்கொண்டு அங்கேயே கடன் வாங்கக்கூடிய அளவுக்கு சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு ஸ்தாபனம் நல்ல முறையில் இயங்குவதற்குப் பிரசாரம் செய்யப்பட வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே நல்ல பயிற்சி பெற்றவர், போதிய அனுபவம் வாய்ந்தவர், விஷயங்கள் நன்கு தெரிந்தவர். ஆகையால், அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(திரு. எம். டி. தியாகராஜ பிள்ளையை கனம் சபாநாயகர் பேசுவதற்குக் கூப்பிட்டார். கனம் அங்கத்தினர் இடத்தில் இல்லாததால், கனம் சபாநாயகர் திரு. கே. என். பி. என்று கூப்பிட்டார். இதற்குள் திரு. தியாகராஜ பிள்ளை சபைக்கு வந்துவிட்டார்.)

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I want to raise a point of procedure and it is based on the procedure of the British House of Commons also. When an hon. Member is called and he is in his seat and rises to speak, then that person has got the right of audience.

கனம் சபாநாயகர்: நான் "கே. என். பி." என்றுதான் சொன்னேன். முழுப் பெயரையும் சொல்லவில்லை. அதற்குள்ளாக திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை வந்து விட்டார்.

ruled that the person who had started to speak would have the precedence. Therefore, Mr. Speaker, since the hon. Member, Sri K.N. Palaniswamy Goundar has been called, I think it is proper that he must be allowed to speak.

MR. SPEAKER: I did not finish my statement. Now the hon. Member, Sri M. D. Thiagaraja Pillai will speak.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: கனம் சபாநாயகர் அவர்களே, நல்ல அனுபவம் கொண்ட நமது அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவை ஏற்ற பிறகு, கூட்டுறவு அபிவிருத்தி சம்பந்தமாக பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். எப்படி கிராமங்களின் முன்னேற்றத்திற்காகப் பஞ்சாயத்து ராஜ்யம் நடைபெற்று வருகிறதோ, அதுபோல பொருளாதாரத் துறையில் நாம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், கூட்டுறவுத் துறை மூலமாகத் திட்டங்களை நிறைவேற்றி கிராம மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அந்த முறையிலே வேண்டிய உதவிகளைச் செய்து வருவது பாராட்டத் தக்கது. நிலச் சீர்திருத்தம் வருவதற்கு முன்னர் அங்குள்ள விவசாயத் தொழிலாளிகளுக்கு நிலம் கிடைப்பதே அரிதாக இருந்தது. ஆனால், நிலச் சீர்திருத்தத்தின் காரணமாக, கூட்டுறவு முறையில் அரசாங்கப் பண்ணைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சுமார் 70 பண்ணைகளில் தஞ்சை ஜில்லாவில் மட்டும் 64 கூட்டுறவுப் பண்ணைகள் இருக்கின்றன. இவைகளுக்கு ஆரம்ப காலத்தில் உதவி செய்வதற்காக அரசாங்கம் மானியமாகவும், கடனாகவும் கொடுத்து வருகிறார்கள். இப்பொழுது கூட்டுறவுப் பண்ணைகளை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். இப்பொழுது சிறிய சங்கங்களுக்கு கோடவுன் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதுபோல் இந்த விவசாயப் பண்ணைகளுக்கும் கோடவுன் வசதி செய்து கொடுத்தால் நல்லது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை ஸ்டாக் செய்வதற்கு கோடவுன் வசதி செய்து கொடுக்க வேண்டும். 1,000 ஏக்கர் உள்ள திருப்பலூர் தேவஸ்தானத்தில் டிராக்டர்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக விவசாயிகள் நவீன முறையில் உற்பத்தி செய்து நெல் மகசூலைப் பெருக்க முடியும். இந்த டிராக்டர்களை வைத்துக் கொண்டு இயங்குவதற்கு இன்னும் அதிகமாகப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அங்கு இருக்கிற விவசாயிகள் இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பணத்தை வசூல் செய்ய முடியாது என்று மற்றவர்கள் சந்தேகப்படுகிறார்கள். அதே கிராமத்தில் விவசாயப் பண்ணையில் ஒருவர் 75 கலம் வரையிலும் சாகுபடி செய்கிறார். அடுத்த மிராசுதார் 15 அல்லது 20 கலம்தான் சாகுபடி செய்கிறார். இதற்குக் காரணம் என்னவென்றால், கூட்டுறவுப் பண்ணைகளுக்காக கொடுக்கிற வசதிகள் எல்லாம் நேரடியாக நிலத்திற்குப் போய்ச் சேராமல் இருக்கிறது. நான் இதைப் பற்றி ரிஜிஸ்ட்ரார் அவர்களிடம் சொன்னேன். உத்தியோகஸ்

தர்கள் எல்லாம் விவசாயிகளுடன் நல்ல தொடர்பு வைத்துக் கொண்டு, கொடுக்கிற பணமெல்லாம் விவசாயத்திற்குப் போகும்படி செய்தால் நல்ல பிரயோசனமாக இருக்கும்.

கடைக்கோடியில் உள்ள இடங்களில் பம்பு செட்டுகள் வைத்துக் கொடுத்தால் நல்ல முறையில் சாகுபடி செய்ய முடியும். எத்தனையோ இடங்களில் கேணியிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொடுத்து நாற்று நட்டதன் காரணமாக உடனே சாகுபடி செய்ய முடிந்தது. ஆகவே, பம்பு செட்டுகள் அதிக அளவுக்குக் கொடுப்பது அவசியமாகும்.

இப்பொழுது ஸீனியர் இன்ஸ்பெக்டர், பீல்டுமென் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லாமல் இருப்பதால், அவர்களால் எந்தவிதமான உதவியும் இல்லாமல் இருக்கிறது. பள்ளிக்கூடத்திலிருந்து புதிதாகப் படித்து வந்த மாணவர்களை பீல்டுமென்னாகப் போடுகிறார்கள். அதனால் எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. அதைத் தகுந்த முறையில் மாற்றி அமைக்க வேண்டும். இன்றைய தினம் செய்தித்தாளில்கூட மத்திய அரசாங்கம் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ரூ. 6 கோடி செலவழிக்கப்போவதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். விவசாயப் பண்ணைகளுக்கு அதிகமாக உதவி செய்து கொடுத்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். ஏழை விவசாயிகள் முன்னேறுவதற்கும் வசதியாக இருக்கும்.

உற்பத்தியாகிற நெல்லை விற்பனை செய்வதற்கு மார்க்கெட்டிங் சொஸைடிகள், விற்பனைச் சங்கங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். சில சங்கங்களுக்குத்தான் கோடவுன் வசதிகள் இருக்கின்றன. எல்லா மார்க்கெட்டிங் சொஸைடிகளுக்கும் கோடவுன் வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படி கோடவுன் வசதி இல்லாததினால் உற்பத்திப் பொருள்களை விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. உதாரணமாக, பயர், உளுந்து, போன்ற தானியங்களை வியாபாரிகள் மகசூல் காலத்தில் ஒரு மூட்டை ரூ. 25 வீதம் வாங்குகிறார்கள். பிறகு அதை பெங்கால் போன்ற மாகாணங்களுக்கு அனுப்பித்து, ஒரு மூட்டை ரூ. 75 வீதம் விற்கிறார்கள். இதனால் அதிகமாக விலை ஏறிவிடுகிறது. இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது, பால்பண்ணைகள் அதிகமாக நடந்து வருகின்றன. எங்கள் பகுதியாகிய தஞ்சை ஜில்லா டெல்டா ஏரியாவாக இருப்பதால் மேய்ச்சல் தரை குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கூட்டுறவு முறைகளை நல்ல விதமாகப் பிரசாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜில்லா மார்க்கெட்டிங் சொசைடி, பெடரேஷன் இவைகளுக்கு கொடுக்கிற உரங்களை இந்த சங்கங்கள் மூலமாக குறைந்த கமிஷனில் கொடுத்தால், நல்ல முறையில் உரங்கள் கிடைக்க ஏது வாக இருக்கும். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் விலைவாசி ஏற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஜில்லா விற்பனைச் சங்கங்கள், உற்பத்தி காலத்தில் விளை பொருள்களை வாங்கி, அவை களை ஸ்டாக் செய்து வைத்து, வியாபாரிகள் அதிக விலைக்கு விற்காமல், தக்க விலையில் விற்பதற்கு ஏற்பாடு செய்தால் விலை உயராமல் இருக்கும். . . (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்: கனம் சபாநாயகர்
10·00 am அவர்களே, இன்றையதினம் கூட்டுறவு மானியத்தை நான் பூரண மாக ஆதரிக்கின்றேன். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத் தினரைப் பேசக் கூப்பிடுவதற்கு முன்பு என்னைத் தாங்கள் பேச அழைத்தீர்கள். அப்பொழுது கனம் தொழில் அமைச்சர் அவர் கள், தங்களுடைய ஜில்லா அங்கத்தினர் என்ற முறையில் கனம் அங்கத்தினர் திரு. தியாகராஜ பிள்ளை அவர்களைப் பேச அனுமதிக் கும்படித் தங்களிடம் கேட்டுக்கொண்டார்கள். இம்மாதிரியாக அமைச்சர் அவர்கள் தங்களுடைய அதிகாரத்தில் தலையிடுவது சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்த மானியத்தை நான் பூரணமாக வரவேற்கிறேன். மற்ற ராஜ்யங்களைவிட நமது ராஜ்யத்தில் கூட்டுறவுத் துறை நல்ல முறை யில் வளர்ச்சியடைந்திருக்கிறது. மற்ற ராஜ்யங்களுக்கும் வழி காட்டக்கூடிய முறையில் நல்லவிதமாக இயங்கிக்கொண்டிருக் கிறது. சென்ற ஐம்பதாண்டுகளில் கூட்டுறவுத் துறை நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டு தலை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சென்ற ஆண்டில், நமது கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும், கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அவர்களும், மற்றும் இலாகா வில் உள்ள அனைவரும் நல்ல முறையில் பணியாற்றி, இந்த இயக் கத்தை வளர்ச்சியுறச் செய்திருப்பதற்காக நான் அவர்கள் எல்லோ ரையும் பெரிதும் பாராட்டுகின்றேன்.

கூட்டுறவு இயக்கத்தில் சில மாறுதல்களைச் செய்யவேண்டு மென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். கோயமுத்தூர் ஜில்லாவில், உடுமலைப்பேட்டையில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்கும், ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கும் தெரியும். சென்ற மூன்று, நான்கு ஆண்டுகளாக அது நல்ல முறையில் நடத்தப்படாததன் காரணமாக, சர்க்காருக் கும் அதில் பங்குத் தொகை போட்டவர்களுக்கும் நஷ்டம் ஏற் படக்கூடிய நிலை இருந்து வருகிறது. அதற்கு நிர்வாக

கோளாறோ என்னவோ தெரியவில்லை. மூன்று வருஷங்களில், பாதி நாட்களுக்கு மேல் அது மூடப்பட்டிருக்கிறது. அந்த ஆலையை நல்ல முறையில் நடத்த சர்க்காருக்கும் பொறுப்பு இருக் கிறது. காரணம், அதற்கு மத்திய சர்க்காரும், சென்னை சர்க் காரும் நிறைய பங்குத் தொகை கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆலைக்குத் தேவையான கரும்புகளை பங்குதாரர்கள் அனுப்ப முடியாத நிலை இருந்து வருகிறது. பல மைல் தூரம் சென்று, ஆலைக்கு வேண்டிய கரும்பைக் கொண்டுவருவதற்கு லாரி வசதி இல்லாததால் அங்கங்கேயே விற்று விடுகிறார்கள். இந்த வருஷம் சர்க்கரை விலை ஏறியதால், அங்கங்கே வெல்லம் காய்ச்சப்பட்டதன் காரணமாக, கரும்பாலைக்குக் கரும்புகள் வராததன் காரணமாக, அந்த ஆலை மூடப்படக்கூடிய நிலையில் இருப்பதால், கனம் அமைச்சர் அவர்களும், ரிஜிஸ்ட்ரார் அவர்களும் ஒத்துழைத்து, அந்த ஆலை நல்ல முறையில் நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவுத் துறையில் பல சங்கங்களின் மூலம் பலவிதமான கடன்கள் கொடுக்கப்படுகின்றன. கிராம மக்களுக்கு கிராம சொஸைட்டி மூலமாகவும், ஜில்லா மத்திய பாங்கு மூலமாகவும் கடன் கொடுக்கப்படுகிறது. தாலுகா சொஸைட்டி மூலமாக வும் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது. இப்படிப் பல துறைகள் மூலமாகக் கொடுக் கப்படும் கடன்களும் விவசாயிகளுக்குப் போதாத நிலையில்தான் இருக்கிறது. வருஷத்தில் பத்தாயிரம் ரூபாய் செலவாக வேண்டு மென்றால், பல சங்கங்கள் பல இலாகாக்கள் மூலம் கொடுக்கப் பட்டும் பற்றாக்குறையாக இருக்கிறது. காலா காலத்தில் கடன் தொகையைப் பெற முடியாமலும் இருக்கிறது.

ரூரல் பாங்கு ஏற்படுத்தியது போல், தாலுகாவில் அல்லது யூனியனில் ரூரல் பாங்கு ஏற்பாடு செய்யப்பட்டு, எல்லாக் கடன் களையும் நகரங்களில் வியாபாரிகளுக்குச் சரக்குகளின் பேரில் கடன் கொடுப்பது போல, விவசாயிகளுக்கும், அவர்களுடைய பூமியின் மதிப்பில் 60 சத விகிதம் அளவுக்குக் கடன் வருஷம் பூராவும் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால், பருத்தி போன்ற கமர்ஷியல் க்ராப்பை அறுவடை செய்யும்போது, வருஷம் ஒரு முறை தங்களுடைய வருமானத்தை வைத்துக் கடனைக் கட்ட முடியும். இப்படிக் கடன் கொடுப்பதை ஒருமுகப்படுத்தி விட்டால், இந்த இலாகாவை மேலும் மேலும் விரிவாக்க வேண்டிய அவசியம் இருக்காது. அடுத்த ஆண்டிலாவது விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் கிடைக்கும் ஏற்பாட்டை கூட்டுறவு அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் சேர்ந்து செய்துகொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு, தவிடு போன்றவற்றை வாங்க வேண்டுமென்றாலும், அவற்றின் விலை ஏறிக்கொண்டு போகின்றது. பால் பண்ணைகளுக்கும் சர்க்கார் நிறைய உதவி கொடுக்கிறார்கள். மாட்டுக்குத் தேவையான தீவனத்தையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டால், நலமாக இருக்கும். பால் உற்பத்தி செய்கின்றவர்கள் என்ன விலைக்குப் பால் விற்றாலும் அது அவர்களுக்குக் கட்டுப்படியில்லாத நிலை இருக்கிறது. ஆகவே, மாட்டுத் தீவனங்களையும் குறைந்த விலையில் இத்தகைய சங்கங்கள் மூலம் அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தால், மனிதனுடைய நிரந்தரத் தேவையாக இருக்கும் பால் உற்பத்தி சிறந்த முறையில் நடக்க ஏதுவாக இருக்கும். பால் பண்ணைகளுக்கு அரசாங்கம் மேலும் வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிமெண்ட் பல தனிப்பட்டவர்களால் வினியோகிக்கப்படுவதால், ப்ளாக் மார்க்கெட்டுக்குக் கொண்டுபோகக்கூடிய நிலைமை இருக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்டை ஆங்காங்கு இருக்கும் கூட்டுறவு பண்டகசாலைகளில் வைத்து, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நல்ல முறையில் விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வீடு கட்டும் திட்டத்தைச் சர்க்கார் இப்பொழுது யுத்த நெருக்கடி காரணமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். முக்கியமாக பெரிய நகரங்களில் வீடுகள் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். வீடு கட்டும் திட்டத்திற்கு முதல் இடம் கொடுத்து அதை நிறைவேற்றவேண்டும். சென்னை நகரத்தில் மட்டுமல்லாமல், மற்ற நகரங்களிலும் வீடு கட்டும் திட்டத்தை விஸ்தரித்து நல்ல முறையில் வீடு கட்டுவதற்கான வசதிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய ராஜ்யத்தில் கூட்டுறவுப் பண்ணைகளுக்குப் போதிய ஊக்கம் அளிக்காததன் காரணமாக கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பிப்பதை நிறுத்திவைத்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

கட்டப்பட்ட கோடௌன்கள் தற்பொழுது சும்மா இருக்கின்றன. அங்கு தானியங்கள் செல்வதில்லை. மேலும் கோடௌன்கள் கட்டுவதை நிறுத்தி வைத்து, தற்போதிருக்கும் கோடௌன்களை நல்ல முறையில் பிரயோஜனப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பொறுத்த வரையில், நிர்வாகச் செலவு வளர்ந்துகொண்டே போகிறது. பல உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே போகிறது. கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களும், ரிஜிஸ்ட்ரார் அவர்களும் இதைப் பரிசீலனை செய்யவேண்டும். யுத்த நெருக்கடி காரணமாக இதில் சற்று சிக்கனத்தைக் கையாளவேண்டும். மற்ற

இலாகாக்களைப் போன்றதல்ல இந்த இலாகா. போலீஸ் இலாகாவை எடுத்துக்கொண்டால், அது அவசியம் செயல்படவேண்டிய ஒன்று. கூட்டுறவு இலாகாவிலுள்ள ஜீப்களைப் போலீஸ் இலாகாவுக்கு கொடுத்தால்கூட நலமாக இருக்கும் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

* **திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன். இந்த இயக்கம் நம் மாநிலத்தில் நல்ல மகத்தான முன்னேற்றமடைந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதற்காக, கனம் அமைச்சர் அவர்களையும், இந்த இலாகாவின் ரிஜிஸ்திரார் அவர்களையும் அதிகாரிகளையும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரபற்றற்றவர்களையும் நாம் பாராட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் சிறந்த முறையில் கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களை பிரசாரம் மூலம் பரப்பி வருகிறது. அதற்காக தமிழ்நாடு கூட்டுறவு யூனியனுக்கு நல்ல ஊக்கம் அரசாங்கம் அளிக்க வேண்டும். தமிழ்நாடு கூட்டுறவு யூனியனுக்குச் சென்னையில் ஒரு கட்டடம் கட்டுவதற்காக மூன்று லட்சம் ரூபாய் நன்கொடை கொடுப்பதற்கு அரசாங்கம் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. அதை அரசாங்கம் புனராலோசனை செய்து, அந்தத் தொகையைக் காண்ட்ரிப்யூஷனாகக் கொடுக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மத்திய பாங்குகளுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் தொகை மிகவும் குறைவாக இருப்பதால், சங்கங்களுக்கு மத்திய காலக் கடன் கொடுக்க முடியாத நிலை இருந்துவருகிறது. ஆகையால், மத்திய பாங்குகளுக்குத் தொகை அதிகமாகக் கொடுத்து உதவி, சங்கங்களுக்கு மத்திய காலக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக நில அடமான பாங்குகள் நல்லபடியாக சேவை செய்து வருகின்றன. இந்த பாங்குகள் விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயனளித்து வருகின்றன. இதிலுள்ள சில குறைபாடுகளை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நில அடமான பாங்குகளில் பணிபுரியும் பணியாளர்கள் சில நிபந்தனைகளினால் மற்ற கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்பவர்கள் பெறும்படியான போனசைப் பெற முடிவதில்லை, இதற்குக் காரணம் என்னவென்றால் சங்கத்தின் மூலதனம் சங்கம் பெறும் கடனில் 12-ல் ஒரு பாகம் இருக்கவேண்டுமென்ற நிபந்தனைதான். அதனால் பல பேர் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் இந்த நிபந்தனையை எடுத்துவிட்டு லாபத்தில் போனஸ் கொடுக்கலாம்.

அடுத்து, நில அடமான பாங்குகள் கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கத்தில் மானியம் கொடுத்துதவ வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1906-க்குப் பின்னல் சர்வே செய்யப்படாத கிராமங்களில் அதிக பல கூட்டுப்பட்டாக்கள் இருப்பதினுல் விவசாயிகளுக்குக் கடன் பட்டுவாடா செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது, எனவே 1906-ம் வருஷத்திற்குப் பின்னல் சர்வே செய்யப்படாத கிராமங்களில் சர்வே செய்வதற்கு உத்தரவு போடவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு போவதால் இப்போது போடப்பட்டிருக்கும் ஆடிட்டர்கள் போதவில்லை. இன்னும் அதிகப்படியான ஆடிட்டர்களை நியமித்து அவைகளை நல்ல முறையில் ஆடிட் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தாற்போல் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஆடிட் செய்வதற்காக 10 சத விகிதம் கட்டணம் வசூல் செய்கிருர்கள். இவைகளை இலவசமாக ஆடிட் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அநேகமாக நன்ருகப் பணிபுரிந்து வருகின்றன. அவைகளுக்கு நமது அரசாங்கம் இப்போது பல சலுகைகள் கொடுத்திருக்கிருர்கள். இப்போது நெசவாளர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு 24 வருஷங்களுக்கு மாதம் 22 ரூபாய் வீதம் கொடுக்கவேண்டுமென்று ஒரு நிபந்தனை இருக்கிறது. அதை 40 வருடங்களாக நீடித்துக் கொடுத்தால் சுலோ சுலோவாக எளிதாகக் கட்டுவதற்கு நெசவாளிகளுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அதோடு அவர்களுக்கு செஸ் பண்டிலிருந்து இப்போது வாங்கித்தரும்படியான சாமான்கள் (மெடீரியல்ஸ்) அவர்களுக்கு உபயோகப்படுவதாக இல்லையென்று கேள்விப்படுகிறேன். அதற்குப் பதிலாக மேற்படி தொகையை அவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒரு பவர் லூம் அமைத்துக் கொடுத்தால் பயன்படும் என்பது என்னுடைய கருத்து. 40 கவுண்ட் நூலும் அதற்குக் கீழும் உள்ள கவுண்ட் நூல்கள் வேலை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35 ரூபாய்கள்தான் கிடைக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அத்தகையவர்களுக்குப் பவர் லூம் போட்டுக் கொடுத்தால் அவர்கள் முன்னேற முடியும் என்று கருதுகிறேன்.

அடுத்து, சிமெண்டு டிஸ்டிரிபூஷனை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செய்தால் நல்ல விதமாக அது எல்லோருக்கும் போய்ச் சேரும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே சிமெண்ட் டிஸ்டிரிபூஷனை, பூராவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கும்

படியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு என து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் : கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து நல்ல முறையிலே பணியாற்றி வருவதை யொட்டி இந்த இலாகாவைப் பரிபாலித்து வரும் அமைச்சர் அவர்களையும், இந்த இலாகாவின் ரிஜிஸ்டிரார் அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

சாதாரணமாக கூட்டுறவு இயக்கம் ஒவ்வொரு ஆண்டிலும் எந்த அளவிற்கு விருத்தி அடையவேண்டுமென்று நாம் திட்டமிட்டிருக்கிருேமோ அந்த லட்சியத்திற்கு மாத்திரமல்ல, அந்த லட்சியத்திற்குச் சற்று அதிகமாகவே நாம் முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிருேம் என்பது உண்மையில் பாராட்டத்தக்க விஷயம். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலும், மற்ற எல்லா ராஜ்யங்களையும் விட பணம் கொடுக்கல் வாங்கல் அதிகமாகச் செய்துகொண்டிருக்கிருேம். நம் ராஜ்யத்தில் இருக்கக் கூடிய கஷ்டம்—இப்போதுள்ள பிரச்சனை—விவசாயிகளுக்குக் கொடுக்ககூடிய பணத்தின் அளவு போதவில்லை என்பது தான். நான் சொல்வதில் மிகை இல்லவேயில்லை. ரிசர்வ் பாங்கிலிருந்து குறிப்பிட்ட தொகைக்கு மேல் அதிகமாகவே நாம் பணம் பெற்றிருக்கிருேம். இதற்கு அரசாங்கமே டிபாஸிட்டு காரண்டி கொடுத்திருக்கிறது. பணம் போதிய அளவுக்கு இருக்கிறதா என்று பார்த்தால், போதிய அளவுக்குப் பணமில்லை என்பதைத் தான் காண்கிருேம். இதற்கு அரசாங்கம் உடனடியாக ஒரு வழி வகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் கருதுவது அரசாங்கம் கடன்கள் எழுப்புவது போல், மூன்ருண்டு, ஐந்தாண்டுக் கடன்கள் எழுப்பி அதைக் கூட்டுறவு இயக்கத்திற்குக் கொடுத்தால், நாம் எந்த அளவிற்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிருேமோ அந்த அளவிற்கு நிச்சயமாகக் கொடுக்க முடியும். அரசாங்கமே கடன் கொடுப்பதில் கஷ்டம் இருக்குமானுல் லாண்டு மார்ட்கேஜ் பாங்கு மூலம் டிபெஞ்சர் எழுப்புவது போல், ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்கு எழுப்பிக் கொடுக்கலாம். வேறு வகையிலும் செய்யலாம். அவ்வாறு ஒரு ஏற்பாட்டைச் செய்யாவிட்டால், நாம் இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு எந்த அளவிற்கு கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கப்போகிருேமோ அந்த அளவிற்குப் பணம் போதுமா என்பதை ஆராயவேண்டும். அரசாங்கம் இதற்கு

ஆடிட்டரைப் பொறுத்தவரையில், கிராமாந்திரச் சங்கங்கள் 40 சங்கங்களுக்கு ஒரு ஆடிட்டரை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. சாதாரணமாக சேலத்திலுள்ள ஒரு கூட்டுறவுச் சங்கத்தை எடுத்துப் பார்த்தால், 90 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லேவாதேவி செய்து இருப்பார்கள். அப்படி இருக்கும்போது 40 சங்கங்களுக்கு ஒரு ஆடிட்டர் என்று போட்டால் சரியாக இருக்குமா என்பதை அரசாங்கம் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். இதைப் பற்றி நான் பல தடவைகள் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். இந்த விஷயத்தில் அரசாங்கம் சிக்கனம் பார்க்கவே கூடாது. ஆடிட் எவ்வளவுக்கெவ்வளவு திறம்பட இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நிர்வாகம் நன்றாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாற்பது சங்கங்களுக்கு ஒரு ஆடிட்டர் என்றிருப்பதை மாற்றி குறைந்தது 15 சங்கங்களுக்கு ஒரு ஆடிட்டர் என்றாவது ஏற்படுத்தினால்தான் ஆடிட் நல்ல முறையில் நடப்பதற்கு வழியேற்படும். அது தொடர்ந்து கன்கரண்டு ஆடிட்டாராகவும் இருக்கவேண்டும். அதுமாத்திரமல்ல, கிராமாந்திரச் சங்கங்களுக்கு இலவச ஆடிட்டாக இருக்கவேண்டும். இதைப்பற்றி அப்பொழுது கூட்டுறவு அமைச்சராக இருந்த கனம் திரு. வெங்கட்டராமனிடம் பல தடவை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். இவ்வாறு கிராமாந்திரச் சங்கங்களிடமிருந்து ஆடிட்டிற்காகக் கட்டணம் வாங்குவதைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் அதிகம் வந்துவிடாது. இதனால் முடிவாக வரக்கூடியது சொற்பத் தொகையாகத்தான் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு இலாகாவில் வேலை செய்யக்கூடிய அதிகாரிகளுக்கு முன்பு டெபுடேஷன் அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது நிரந்தரமாக இருக்கக்கூடியவர்களுக்கு டெபுடேஷன் அலவன்ஸ் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதை மாற்றி எல்லோருக்கும் டெபுடேஷன் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தால் தான் அந்த இலாகா அதிகாரிகள் வேறு கூட்டுறவு ஸ்தாபனங்களில் வேலை செய்வதற்குப் பிரியப்பட்டு நல்ல முறையில் ஊக்கமாக வேலை செய்ய முன் வருவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைடிகளில் இருக்கக்கூடிய சேல்ஸ் டாக்ஸ் தொந்திரவை ஓரளவுக்கு நீக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதை அமைச்சரவை பூரணமாக ஆராய்ந்து எந்த அளவிலே கூட்டுறவு மார்க்கெட்டிங்கை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமோ அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்குத் தொடர்ந்து நல்ல முறையிலே பணம் அதிகமாக ரிசர்வ் பாங்கியிலிருந்து கிடைக்க வேண்டும். இப்போது 'ஓல்டு பண்டை' வைத்துப் பணம் கொடுக்கிறார்கள். இவ்வாறு கொடுப்பதிலே ஷேர் காபிடல் பிரதம நாணயச் சங்கங்களிடம் இருக்க சென்ட்ரல் பாங்குகளிடம் பணத்தைச் சேர்க்கிறோம். அதே போல் 'மாச்சிங் அமவுண்ட்' ஆக ஸ்டேட் ஷேர் காபிடலைக் கொண்டு ரிசர்வ் பாங்கியில் லாங்டர்ம் ஆப்பரேஷனில் இருந்து கொடுக்கிறார்கள். இந்த ஆண்டு 105 லட்சம் ரூபாய் சென்ட்ரல் பாங்குக்கு ஸ்டேட் ஷேர் காபிடல் வேண்டுமென்று கேட்டிருந்தோம். நம்முடைய ராஜ்ய சர்க்கார் என்ன காரணத்தினாலோ சிபாரிசு செய்யாமல் விட்டு விட்டார்கள். திரும்பவும் இந்த ஆண்டுக்குள்ளாவது ரிசர்வ் பாங்குக்குச் சிபாரிசு செய்து 105 லட்சம் ரூபாயை ஸ்டேட் ஷேர் காபிடலாக சென்ட்ரல் பாங்குக்கு வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நூற்று ஐந்து லட்சம் ரூபாய் ஷேர் காபிடல் இருந்தால் நான்கு மடங்கு ரிவால்விங் கிரேடிட் வாங்க முடியும். அதன் காரணமாக அடுத்த ஆண்டிலே 4 கோடி 20 லட்சம் ரூபாய் வருகிற ஆண்டிலே ஷார்ட் டர்ம் லோனாக விவசாயிகளுக்குக் கொடுக்க வழி வகை இருக்கிறது. இந்த ஆண்டிலே என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வது நலம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

டெபுடி ரிஜிஸ்ட்ரார் ஆபீசுகளில் ஜில்லா ஹெட்குவார்டர்சில் இருக்கக் கூடியவர்களுக்கு டெலிபோன் வசதி இல்லை. எல்லா ஆபீசுகளுக்கும் டெலிபோன் வசதி மிகமிக அவசியம். ஒரு சிறிய விஷயத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னாலும் டெபுடி ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குப் போய்த் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. டெலிபோன் இருந்தால் டெலிபோன் மூலமாகவே கேட்டுக் கொள்ளலாம். அங்கெல்லாம் டெலிபோன் வைக்க அரசாங்கத்திற்கு 400, 500 ரூபாய் விதம் செலவானாலும் கூட, டி.ஏ. வுக்காகச் செலவாகும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மிச்சமாகும் என்று சொல்ல முடியும்.

கொடவுன்களைப் பொறுத்த அளவில் சொல்லும்போது, கனம் வடிவேல் அவர்களும், பழனிசாமி அவர்களும், 'அந்த கொடவுன்கள் எல்லாம் காலியாக இருக்கின்றன' என்று சொன்னார்கள். அவர்கள் அதைப் பற்றிச் சரியாகச் சொல்லவில்லை. அவர்கள் கொடவுன்களின் அவசியத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளவில்லையென்று சொன்னாலும் அவர்கள் மன்னிக்கவேண்டும். விவசாயிகளின் சவுகரியத்தை முன்னிட்டுத்தான் கிராமாந்திரங்களிலே கொடவுன்கள் கட்டப்படுகின்றன. நகரங்களிலே கோடவுன்களைக் கட்டினால் அது வியாபாரிகளுக்குத்தான் பயன்படுமே தவிர, விவசாயிகளுக்குப் பயன்படாது. விவசாயிகளுக்குப் பயன்படவேண்டுமென்ற முறையிலேதான் கிராமாந்திரங்களிலே கோடவுன்கள் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தக் கோடவுன்கள் கட்டப்படுவது இன்னும் விரிவான அளவிலே கட்டப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. அ. அப்பாலு தேவர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டு கூட்டுறவு மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பெருகி வரும் நம் நாட்டுப்

பொருளாதாரத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியத்துவத்தை மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி விஷயத்திலும், விற்பனை தொழில், வீட்டு வசதிகள் முதலியவற்றுக்கும் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மிக உபயோகமாக இருந்து வருகின்றன. நடுத்தர மக்களுக்கு வீடு கட்டும் வசதியானது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செய்யப்பட்டு வருகிறது. அப்படி இருந்தும் இன்னும் வீட்டு வசதிகள் போதாமல்தான் இருக்கின்றன. அதையும் அரசாங்கம் உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆயிரம் ஜனத்தொகையுள்ள கிராமாந்திர ஜனங்களுக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், அதற்கு மேற்பட்ட கிராமங்களில் தனிக் கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பிளாக்கிலும் பலவகைகளிலும், உற்பத்தி, விற்பனை வசதி ஆகியவற்றைப் பெருக்க விற்பனைச் சங்கங்களை துவக்கி அங்கு இரண்டு ட்ராக்டர்கள் வாங்கி வைத்து வாடகைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தால் ஏழை விவசாயிகளுக்கு மிகச் சௌகரியமாக இருக்கும்.

கிராமங்களில் பால் வசதி மிகக் குறைவாக இருக்கிறது. கூட்டுறவு மூலம் பால் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. ஆர். பெரியண்ணன்:** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது கூட்டுறவுச் சங்கங்களே இல்லாத கிராமம் இல்லை என்ற அடிப்படையிலே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கம் என்ற முறையிலே அமைக்கப்பட்டிருந்தாலும் கூட, இன்னும் சில கிராமங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் இல்லையென்ற புகார்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. கடந்த பல ஆண்டுகளாக இரண்டு மூன்று கிராமங்கள் ஒன்றாக சேர்ந்த ஒரு பஞ்சாயத்தாக இருந்த நேரத்தில் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் ஒரு கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டு அது நடந்துகொண்டிருந்தது. நாளடைவில் அந்தக் கிராமங்கள் தனிப் பஞ்சாயத்துக்களாகப் பிரிந்த நேரத்தில் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டுமென்று அந்தக் கிராம மக்கள் கேட்கிறார்கள். அது போன்ற கிராமங்களுக்கு அந்த ஊராட்சியின் எல்லைக்குள்ளேயே கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல ஆண்டுகளாக கடனுக்குக் குறைந்த வட்டி விகிதம் இருந்து, இப்போது ஏதோ காரணத்தினாலே விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கு வட்டி விகிதத்தை உயர்த்தியிருக்

கிறார்கள். மத்திய பாங்குக்கு ரிசர்வ் பாங்கு பணம் கொடுக்கும் போது வட்டியை உயர்த்தி விட்டார்கள் என்ற காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரிசர்வ் பாங்கு கடந்த பல ஆண்டுகளாகக் குறைந்த வட்டிக்குக் கொடுத்துக் கொண்டிருந்து விட்டு இப்போது திடீரென்று ஏன் வட்டியை உயர்த்தவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டது என்பது எனக்குத் தெரியவில்லை. மற்ற மாகாணங்களை விட நம்முடைய மாகாணத்தில் பல ஆண்டுகளாகக் குறைந்த வட்டி விகிதத்திலே கடன் கொடுக்கப்பட்டு வந்தது. ஆகவே, மீண்டும் விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய கடனுக்கான வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு விவசாயக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் தனியாக ஒரு கோடவுன் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நெருக்கடியின் காரணமாக அவற்றைக் கட்டுவதை ஒத்தி வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய நன்மையை முன்னிட்டு கோடவுன்கள் கட்டப்படுவதை நிறுத்தி வைக்காமல் கட்டிக் கொடுக்கும்படி உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சொசைடிகள் மூலம் கோடவுன்கள் கட்டுவதற்குப் போதிய அளவில் சிமெண்ட் கிடைப்பதில்லை. டெபுடி தாசில்தார், கலெக்டர் அலுவலகத்தில் கேட்டால், 'உங்கள் டிப்பார்ட்மெண்டுக்குத் தனியாக சிமெண்ட் கோட்டா வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு சிமெண்ட் அலாட்மெண்ட் செய்திருக்கிறார்கள், கலெக்டர் ஆபீஸ் வேலைகளுக்கு சிமெண்ட் அலாட்மெண்ட் செய்திருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவு ஸ்தாபனத்துக்கு மட்டும் சிமெண்ட் அலாட்மெண்ட் செய்யப்படவில்லை. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை டிபுடி ரெஜிஸ்ட்ராருக்கு சிமெண்ட் அலாட்மெண்ட் வராத காரணத்தால் அங்குள்ள கோடவுன்கள் கட்டி முடிக்கப்பட முடியாத நிலைமையிலே இருந்து கொண்டிருக்கின்றன. உடனடியாக அந்த டெபுடி ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு சிமெண்ட் அலாட்மெண்ட் கொடுத்து அந்தக் கோடவுன்களை சீக்கிரமாகக் கட்டி முடிப்பதற்கு வழி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய பாங்கிலே விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கக் கூடிய அளவுக்குப் போதிய பணம் இல்லை. அங்குள்ள விவசாயிகளிடம் டெபாசிட் வசூலிக்கவேண்டுமென்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள்.

பெறுபவர்கள் 100-க்கு 5, 10 என்று கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு எவ்வளவு கடன் வேண்டுமோ அந்த அளவிற்கு இந்த மத்திய பாங்குகளுக்கு தொகை அளிக்கப்பட வேண்டும். சிலர் பாங்க் இன்ஸ்பெக்டர் பயிற்சி பெற்று சில சங்கங்களில் அட்டன்டர்களாக வேலை செய்கிறார்கள். பிறகு அவர்கள் நல்லமுறையில் வேலை செய்வதால் இன்ஸ்பெக்டர்களாக மாற்றப்படுகிறார்கள். ஆனால் அவர்களை இன்ஸ்பெக்டர்களாகப் போடுவதில்லை, அட்டன்டர் இன்ஸ்பெக்டர்களாக போடுகிறார்கள். இன்ஸ்பெக்டர்கள் செய்யக்கூடிய வேலையைத்தான் இந்த அட்டன்டர் இன்ஸ்பெக்டர்களும் செய்கிறார்கள். இப்படி இவர்கள் அட்டன்டர் இன்ஸ்பெக்டர்கள் என்று வைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் உற்சாகமாக வேலை செய்யமுடியவில்லை, ஆகவே நான் சொல்வது இந்த அட்டன்டர் பாங்க் இன்ஸ்பெக்டர் என்பதை எடுத்து விட்டு அவர்களையும் பாங்க் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலத்தில் நெசவாளர் முன்னேடித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பித்து இரண்டு மூன்று மாதங்களாகின்றன என்று கேள்விப்படுகிறேன். அதற்கு ஒரு டெபுட்டி ரிஜிஸ்ட்ராரை நியமிக்காமல் இருப்பதால் அங்கு வேலை தொடர்ந்து நடை பெறுவதற்கு முடியாமல் இருக்கிறது. அங்கு உடனடியாக ஒரு டெப்டி ரெஜிஸ்ட்ராரை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களுக்காக பால் வழங்கும் சங்கங்கள் நிறுவிக் கொண்டிருக்கிறார்கள். எந்தளவிற்கு அப்படி மேலும் பால் வழங்கும் சங்கங்கள் வேண்டுமென்று அவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வருகின்றனவோ அதற்கு வேண்டிய தொகை ஒதுக்கி அந்த சங்கங்களை திறக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது விண்ணப்பங்கள் வருகிற அளவு பணம் ஒதுக்குவதில்லை, ஆகவே விண்ணப்பங்கள் வருகிற அளவிற்கு அவை உடனடியாக திறக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து, நெசவாளர் சங்கங்கள் ஆரம்பிக்கும் நிலையில் உள்ள கிராமங்கள் இருக்கின்றன. அங்கு தனிப்பட்டவர்களிடம் இருந்து நூல்வாங்கி நெசவுத் தொழில் செய்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சங்கம் நிறுவவேண்டுமென்று யூனியன் கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி ஷேர் காப்பிட்டல் கலெக்ட் செய்கிறார்கள். அதுபற்றி ப்ரபோசல் அனுப்பி உடனடியாக பதிவு ஆவதில்லை. சங்கம் பதிவுஆக இருக்கிறது என்று அறிந்தவுடன் தனிப்பட்டவர்கள் நூல் கொடுக்காமல் விட்டு விடுகிறார்கள். ஆக இப்படி முதலாளிகள் கொடுக்கும் நூலை நிறுத்திவிடுவதால் நாலு மாதங்கள் அவர்கள் வேலை இன்றி இருக்க வேண்டியிருக்கிறது—இப்படியே என்னுடைய சேந்தமங்கலம் தொகுதியில் பலகிராமங்களில் நெசவாளர் சங்கம் ஆரம்பிக்க தடை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சங்கம் தேவை என்றவுடன் உடனடியாக அதிகாரிகளை அனுப்பி ஷேர் கலெக்ட் செய்து சீக்கிரம் பதிவு செய்து கொடுத்தால் அவர்கள் இந்த முதலாளிகளிடம் இருந்து தப்பித்துக் கொள்ளமுடியும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. நெ. சா. ராமலிங்கம்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுப்பதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு பட்ஜெட்டில் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எங்கள் சென்னை மத்திய நில அடமான பாங்குக்கு எங்கள் பணத்தில் கட்டிடம் வாங்க அனுமதி தருவதாக சொல்லிய பிரகாரம் அனுமதி தந்ததற்கு அவர்களுக்கு என் வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அதை நாங்கள் வாங்கி விட்டோம். பதிவாளர் அவர்கள் ஆதரவும், ஆசியும் இல்லாவிடில் அது கிடைத்திருக்காது, ஆகவே அவர்களுக்கும் என் வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய நில அடமான பாங்க் கடன் வாங்க வேண்டுமென்றால் இதுவரை ரிசர்வ் பாங்க், சென்னை அரசாங்கம் இவர்கள் அனுமதி பெறவேண்டும். புதியதாக மத்திய சர்க்காரிடமும் அனுமதி பெறவேண்டும். வருடத்திற்கு ஒரு முறைதான் வரவேண்டுமென்ற நிபந்தனை போட்டார்கள். நிதி அமைச்சர் அவர்கள் கனம் மொரார்ஜி தேசாய் அவர்களோடு பேசி அந்த நிபந்தனை வேண்டாமென்ற முறையில் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என் வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற சில ஆண்டுகளில் நீண்ட காலக் கடனுக்கு பணம் திரட்டுவது கஷ்டமாக இருக்கிறது. குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடனுக்கு ரிசர்வ் பாங்க் விகிதத்திற்கு 2 சத விகிதம் குறைத்துக் கொடுக்கிறார்கள். முன்பு நில அடமான பாங்குகள் விருத்தி அடையாமல் இருந்திருக்கலாம். பிரியாத சென்னை, பம்பாய், மைசூர் போன்ற இடங்களில்தான் இருந்தன. இப்போது தேசம் பூராவும் இருக்கின்றன. முன்பு நில அடமான பாங்குகள், பழைய கடனைத் தீர்க்கமட்டுமே கொடுத்து வந்தார்கள். இப்போது நிலச் சீர்திருத்தம், உற்பத்திப் பெருக்கு இவற்றிற்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன் போன்றவற்றிற்கு வட்டி விகிதத்தை குறைத்துக் கொடுப்பதுபோல் நீண்ட காலக் கடன்களுக்கும் வட்டி விகிதத்தைக் குறைத்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை நிதி அமைச்சரும் கூட்டுறவு அமைச்சரும் மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லி பாங்கு விகிதத்திற்கு 2 சத விகிதம் குறைத்துக் கொடுக்க வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேத்தா கமிட்டி "லாங் டர்ம் ஆப்பரேஷன்ஸ் பண்டு" க்கு 15 கோடி கொடுக்கவேண்டுமென்று கூறினார்கள். ரிசர்வ் பாங்கும் ஒப்புக்கொண்டது. ஆனால் மத்திய சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதையும் வற்புறுத்தி ஒதுக்கச் செய்யவேண்டும். தக்காலி கமிட்டியும் இதை வற்புறுத்தியிருக்கிறார்கள். டிபஞ்சருக்கு வட்டியைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்கிறார்கள். அரசாங்க டிபன்ஸ் சர்டிபிகேட் 4½ சத விகிதம் வட்டி கொடுத்து வருமான வரி இல்லாதபடி பணம் வாங்குகிறார்கள். இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் 5½ சத விகிதம் கொடுத்து வாங்கு

கிறார்கள். இவைகள் ஐந்து, பத்து ஆண்டுகள் என்ற நிலையில் திருப்பிக் கொடுக்கப்படுபவைகள். அவற்றிற்கே இப்படியிருக்கிறது. ஆனால் மக்கள் அங்குதான் போகிறார்கள். அதனால் நில அடமான பாங்க் 20 வருடக் கடன்களை 4¾ சத விகிதத்திற்கு வாங்குவதில் கடஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே வட்டி விகிதம் மார்கட் நிலைமைக்குத் தக்கவாறு கொடுக்க அமைத்துக் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர் எல்.ஐ.சி. பற்றி ஒரு வார்த்தை. அதன் 1961-ம் வருட ரிப்போர்டை கொடுத்திருக்கிறார்கள். அதன்படி 42 சத விகிதம் கிராமங்களில் பாலிசி செய்திருக்கிறார்கள். அப்படி 42 சத விகித பாலிசி கிராமங்களில் வாங்கியிருந்தும் கூட ஒரு நயா பைசா கூட இந்த நில அடமான பாங்க் டிபஞ்சரில் போடவில்லை. அது வருந்தத்தக்கதாகும். வட்டி குறைவாக இருக்கிறது, ஈல்ட் சரியாக இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் சராசரி ஈல்ட் பார்த்தால் 4.80-க்கு வருகிறது. நம் டிபஞ்சர்கள் ஈல்டே 4.85-ஆக யிருக்கிறது. ஆகவே எல்.ஐ.சி. கட்டாயம் இதில் ஒரு பகுதியை (டிபஞ்சரில்) வாங்கவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்.ஐ.சி. இன்வெஸ்ட்மெண்ட் கமிட்டி இருக்கிறது. அதில் அங்கத்தினர்கள் தொழில் அதிபர்களாக இருக்கிறார்களே தவிர விவசாயப் பிரதிநிதிகளோ அல்லது கூட்டுறவு பிரதிநிதிகளோ அதில் இல்லாதிருப்பதால் இவர்கள் ஒருவிதச் சலுகையும் பெற முடிவதில்லை. ஆகவே அந்தக் கமிட்டியில் விவசாய அல்லது கூட்டுறவுப் பிரதிநிதியைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்க சிப்பந்திகள் மத்திய நில அடமான பாங்குகளில் சம்பளம் பெறுகிறார்கள், இது நியாயமில்லை. அதை அரசாங்கமே கொடுப்பதாக அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. அதையும் கவனிக்கவேண்டும்.

அதோடு இப்போது தக்காவிக் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். அதிலே பல நல்ல யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். தக்காவிக் கடன் கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்க வேண்டும், அப்படிச் செய்யும்போது அதை பட்ஜெட்டில் ப்ரொவைட் செய்யவேண்டும் என்றும், வட்டி வீதத்தைக் குறைத்துக் கொடுக்கவேண்டுமென்றும், சப்ஸிடி கொடுக்கவேண்டும் என்றும், சிபாரிசு செய்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் சர்க்கார் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நமது கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன்.

நமது நாட்டிலே கூட்டுறவு முறையைப் பெருக்க வேண்டும், அதன் மூலமாக ஏழைகள், விவசாயிகள், நெசவுத் தொழிலாளர்கள் அத்தனை பேர்களும் பயன் அடையவேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பதற்காக இந்தக் கூட்டுறவு முறையானது நமது நாட்டிலே கொண்டுவர முயற்சி செய்து அதில் வெற்றி பெற்றிருப்பதைப் பார்த்து நாம் அனைவரும் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். இந்த முறையை இன்னும் கிராமங்களிலே விஸ்தரிப்பு செய்வதற்கு நான் தீவிரமான கவனம் செலுத்த வேண்டும். ஏற்கெனவே 75 சத விகிதம் கிராமங்கள் இந்தக் கூட்டுறவில் வந்திருந்தாலும் இன்னும் மற்றவர்களையும் கூட்டுறவில் கொண்டுவருவதற்கு கவர்ச்சிகரமான முறையில் விளம்பரம் செய்ய, விளம்பர இலாகா மூலமாகவோ அல்லது டிபார்ட்மெண்ட் மூலமாகவோ விளம்பரம் செய்து, எல்லா கிராமங்களும் கூட்டுறவில் சேர வழிவகை செய்யவேண்டும்.

இப்போது புதியதாக, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த கன்ஸ்யூமர்ஸ் சொஸைட்டிகளை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். முதலாவது 1 லட்சம் ஜனத் தொகை கொண்ட இடங்களில் அதை ஏற்படுத்துவது, அதன் பிறகு 50,000 ஜனத்தொகை கொண்ட இடங்களில் அதை ஏற்படுத்துவது என்று, அதன் மூலமாக, விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் ஏற்படுத்தியிருக்கிறோம். மதுரையிலும் இது போன்ற 6 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற கடைகள் வார்டு ஒன்றுக்கு ஒன்று திறக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மதுரையில் திறக்கப்பட்டிருக்கிற கன்ஸ்யூமர்கள் சொஸைட்டிகள் ஏற்கெனவே இருந்த மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலமாக அதற்கு உட்பட்டுதான் இந்த சொஸைட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அது அல்லாமல் அந்தப் பகுதி மக்களே அந்த சொஸைட்டிகளை நடத்துவதற்கு முன் வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட அவர்களுக்கு அனுமதி கொடுக்காமல் மார்கெட்டிங் சொஸைட்டியே இதை நடத்துவது அவ்வளவு உசிதமல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அர்பன் வீட்டு அடமான பாங்குகள் பல இடங்களில் இருக்கின்றன. மதுரையிலும் இருக்கிறது. அதிலே உச்ச பட்சமாக 5,000 ரூபாய்தான் கடன் பெற முடியும் என்று அந்த பைலாவில் கண்டிருக்கிறது. ஆனால் அதைத் திருத்தி 10,000 ரூபாயாகக் கொடுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதில் அமைச்சர் அவர்கள் ரிப்பேர் செய்வதற்கு 5,000 ரூபாய் போதாதா என்று கூறினார்கள். இப்போது இருக்கிற விலைவாசிக்கு ரிப்பேர் செய்வதற்கு மட்டுமல்லாமல் முதல் மாடி கட்டவேண்டுமென்று சொன்னாலும்கூட அதை உபயோகப் படுத்தவேண்டும். வீட்டின் தரத்தைப் பார்த்துத்தான் கடன் கொடுக்கிறோம். வீட்டின் தரம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அதிகமாக, உச்ச பட்சம் 10,000 ரூபாய் கொடுப்பதால் எந்த விதக் கஷ்டமும் வராது என்று சொல்லிக்கொண்டு 10,000 ரூபாய் உச்ச பட்சமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நெசவாளர் சொஸைட்டிகளுக்கு வீடு கட்டும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும் நல்ல முறையில் பரிசீலித்து, மதுரை போன்ற இடங்களில் வீடுகளுக்குப் படுகிற கஷ்டம் பலருக்கும் தெரியும், அந்த மாதிரி நகரங்களில் கஷ்டப்படுகிறவர்களுக்குமட்டுமாவது உடனடியாக இந்தத் திட்டத்தின் கீழ் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கும் சொஸைட்டிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க முன் வர வேண்டுமென்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

க்ஷவரத் தொழிலாளர்கள் தங்கள் வேலைக்கு உரிய ஆயுதங்கள், தளவாடங்கள் வாங்க, கூட்டுறவு சொஸைட்டி அமைத்து, அவர்களுக்குக் கடன் வசதி செய்வதற்கும் சாங்ஷன் ஆகியிருக்கிறது. அதுவும் இந்த நெருக்கடியின் காரணமாக சாங்க்ஷன் ஆன தொகையைக் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. குறைந்த தொகைதான், 12,000 ரூபாய் தான் கொடுப்பதாக இருக்கிறது. ஆகவே சாங்க்ஷன் செய்த தொகையை மீண்டும் பரிசீலித்து அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க கனம் அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கூட்டுறவு சொஸைட்டிகளில் பொறுப்பேற்றுக்கொள்ளும் டைரக்டர்களுக்கோ அல்லது தலைவருக்கோ பெரிய பொறுப்பு இருக்கிறது. தவிர அந்த சொஸைட்டிகளில் எந்த வித சங்கடங்கள் ஏற்பட்டாலும் அந்த சங்கடங்களில் டைரக்டருக்கோ தலைவருக்கோ பொறுப்பு இருக்கிறது. அதிலே லிமிட்டெட், அன்லிமிட்டெட் என்று பாகுபடுத்தியிருக்கும் முறை இருக்கிறது. அன்லிமிட்டெட் என்பதை எடுத்து விட்டு லிமிட்டெட் மட்டும் இருந்தால் போதும் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு அதையும் அமைச்சர் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிமெண்ட் விநியோகத்தில் இப்போது இருக்கின்ற முறையை மாற்றியமைக்க வேண்டும். ஒரு சில அங்கத்தினர்கள் கூறினார்கள், சிமெண்ட் விநியோகிப்பதை கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுத்து விடவேண்டுமென்று. அது அவ்வளவு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நகரங்களைப் பொருத்த வரையிலும் P.A.. to the Collector இடமோ ஜெனரல் பி.ஏ.-யிடமோ அல்லது ப்ளானிங் பி.ஏ.-யிடமோ கொடுப்பது நல்ல முறையாகும் என்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நெசவாளர் சொஸைட்டிகளில் இப்போது தேங்கியிருக்கிற துணிகளுக்கு பொருட்காட்சி அமைத்து, விசேஷ ரிபேட் எல்லாம் கொடுத்து நமது சர்க்கார் வேண்டிய கவனம் செலுத்தி அதற்கு நல்ல பரிகாரம் தேடிக்கொண்டு வருகிறார்கள். அதிலே ஒரு பாகுபாடு முறை என்ன என்றால், காட்டனுக்கு மட்டும்தான் ரிபேட் கொடுக்கப்படுகிறது. அதிலே பம்பர் கலந்த துணிக்கு ரிபேட் கொடுப்பதில்லை. வருகிறவர்கள் இது கைத்தறி இல்லையா என்று

கேட்கிறார்கள். நல்ல வசீகரமாக, கவர்ச்சியாக இருந்தாலும் ரிபேட் இல்லை என்றால் அந்தத் துணிகள் விற்பனை ஆகாமல் இருக்கிறது என்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டாம், டைரக்டர் அவர்களும், ரிஜிஸ்ட்ரார் அவர்களும் சென்று பார்த்திருக்கிறார்கள். விற்கப்படும் துணிகளில் காட்டனுக்குத் தான் ரிபேட் கொடுக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் சொல்லியிருந்தாலும்கூட நமது சர்க்கார் விசேஷ ரிபேட் கொடுத்து, பம்பர்-மிக்ஸ்ட் துணிக்கும் சில்க்-மிக்ஸ்ட் துணிக்கும்கூட ரிபேட் கொடுத்து உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துணிகள் தேங்கி கிடைக்கும் பட்சத்தில் சர்க்காரே முழுத் தொகை கொடுத்து வாங்க ஏற்பாடு செய்கிறோம். அதற்கு பதில் 10 நயா பைசா அல்லது 5 நயா பைசா ரிபேட் கொடுத்தால் மூக்கால்வாசி பணத்தை, விற்பனை ஆவதன் மூலமாக பொது மக்களிடத்திலிருந்தே நாம் பெற்று விட முடியும்.

கடைசியாக, இப்போது பரீட்சார்த்தமாக இருக்கும் 32 கதிர் கொண்ட சிறு சிறு யூனிட் இருக்கிறதே, அது சீக்கிரமாக பரீட்சை முடிக்கப் பெற்று நெசவாளர் சங்கங்களுக்கு அவைகளைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அம்பர் சர்க்கா மூலமாக உற்பத்தி செய்யப்படும் நூல்கள் நெசவாளர் சங்கங்களுக்கு உபயோகப்படும் என்று பார்த்தோம். ஆனால் அது உபயோகப்படவில்லை. நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நூல் கஷ்டத்தைத் தீர்த்து, நெசவாளர் சங்கங்களுக்கும் மார்க்கெட்டிங் சொஸைட்டிகளுக்கும் கொடுத்து நூல் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் மாடு வாங்க இப்போது கொடுக்கப்படும் பணம் போதாது. அதிகமான பணம், குறைந்தது 500 ரூபாயாவது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சமூகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதல்களை அனுசரித்து இந்தக் கூட்டுறவு இயக்கத்தையே மாற்றி அமைத்தாகவேண்டும். இன்றைக்கு எடுத்துக்கொண்டால் அரசாங்கத்தைப் பொருத்த வரையில், இந்தக் கூட்டுறவு முறையை மக்கள் மத்தியில் புகுத்தி அந்த அளவுக்கு அதிக காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நடைமுறையில் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் விரிவடைவதில், பொது மக்களிடத்தில் கீழே இருக்கக்கூடிய எல்லா மக்களிடமும் போய்ச் சேர முடியாமல் ஒரு சிலர் ராஜ்யம் பூராவிலும் தடையாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக அவர்கள் குடும்பச் சொத்துப் போலவே, தந்தை, தந்தைக்குப் பின் மகன் அதற்குப் பின் அவர் மகன் என்ற முறையில் வாரிசு பாத்தியதையாக வந்துக்கொண்டிருக்கிறது. அந்த முறையை மாற்றுவதற்கு சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். அதிகாரிகளுக்கும் இடைஞ்சல்கள் நிறைய ஏற்படுகின்றன. அதிகம் தொகைகள் மக்களுக்

குப் போய் சேரவேண்டும் என்று சர்க்கார் நினைத்தாலும், அந்த விதமாக மக்களுக்குப் போய்ச்சேருவதில்லை. ஆகவே, அதை மாற்றி அமைத்தால்தான் சர்க்கார் கோரும் பலன் கிடைக்கும்.

அடுத்தபடியாக, கோடவுன்கள் கட்டுப்பட்டு வருகின்றன, கிராம மக்களின் நன்மைக்காக. ஆனால், நடைமுறையில் விவசாயிகள் தங்கள் பொருள்களையும், தானியங்களையும் அங்கே வைப்பது இல்லை. அவர்களுக்கும் அவற்றுடன் தொடர்பும், அதில் நம்பிக்கையும் ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே, அந்த கோடவுன்கள் பயன்படுவது இல்லை. இதையெல்லாம் மனதில் வைத்து, அடிப்படையில் மாறுதல் செய்ய புதிய அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும். இந்தத் துறையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைச் செய்ய அமைச்சர் முயற்சி எடுக்க வேண்டும்.

கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையில், கட்டுப்பாடு விலையில் கொடுக்கப்படும் அத்தனை சாமான்களையும், கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவேதான் வினியோகிக்கவேண்டும். அதே நேரத்தில் ஏகபோகக்காரர்களை மாற்றி அமைக்க நடவடிக்கையும் எடுக்க வேண்டும். திருமதி லக்ஷ்மீகாந்தம் அம்மாள் ஏன் அப்படிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை; ஸெமெண்ட் முதலிய எல்லாமே கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும். ஸெமெண்ட், உரம், மற்ற எல்லா சாமான்களையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமே வினியோகிக்க வேண்டும்; சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தால்தான் கொடுக்கப்படும் என்று வரையறை செய்து விட்டால், மக்கள் கூட்டுறவு இயக்கத்தின் தத்துவத்தைப் புரிந்து கொள்வார்கள்.

எங்கள் தொகுதியில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது. கூட்டுறவு யூனியன் சம்பந்தப்பட்டவரை லிட்டருக்கு ஒரு பைசா வீதம் பெறுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே 4, 5 கிராம சங்கங்கள் சேர்ந்து யூனியனை அமைவதற்கு ஆக்கம் அளிக்கப்படவேண்டும். அப்படி யூனியனை இருந்தால், லிட்டருக்கு ஒரு பைசா வீதம், மாதம் ரூ. 10,000 கிடைக்கும் என்று அங்குள்ள மக்கள் சொன்னார்கள். அம்மாதிரி செய்வது, இன்றைக்கு பஞ்சாயத்து யூனியனிடம் கொடுக்கப்பட்டுள்ள பல புதிய அபிவிருத்தி வேலைகள் நன்றாக நடைபெற ஆதாரமாக இருக்கும். இன்றைக்கு நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரை, கூட்டுறவு முறையில் ஒரு பத்திரிகை நடத்தப்படுகிறது. அதற்கு சர்க்கார் ஆதரவு குறைவு என்று அறிகிறேன். தனிப்பட்டவர்கள் கூட்டுறவு முறையில் பத்திரிகை நல்ல முறையிலே நடைபெறுகிறது. தனிப்பட்டவர்கள் நடத்தும் பத்திரிகைகள் எந்தவிதத்திலல்லாமோ இருக்கும். ஆனால் இது சிறந்த முறையில் இருப்பதால், பத்திரிகை என்ற அடிப்படையில் அதற்கு சர்க்கார் நல்ல உதவி செய்தால், வசதியாக இருக்கும். ஆகவே, அந்தப் பத்திரிகைக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

திரும்பவும் சொல்ல ஆசைப்படுகிறேன், இந்த கூட்டுறவுத் துறையில் இருக்கும் ஏகபோகக்காரர்கள் கையில் இருந்து இந்தக் கூட்டுறவு இயக்கத்தை விடுவிக்க வேண்டும்; அதற்கான நல்ல

தொரு திட்டத்தை அமைச்சரவர்கள் தீட்டவேண்டும். அது பெரும் புரட்சியாகவே இருக்கும், அது அமைச்சருக்கும் மாபெரும் சாதனையாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

திரு. க. மாரப்ப கவுண்டர்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இந்த சபையில் சமர்ப்பித்து இருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகளுக்கு கடன் கொடுக்க வசதிகள் செய்து கொடுக்க என்று ஏற்பட்ட ஒரு நல்ல இயக்கமாகும். இந்த இயக்கம் மற்ற காரியங்கள் போலவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இவைகளில் திட்டங்களை வகுத்து, முக்கியமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடைசி வருஷம் ஆகிய 1964-65-ம் வருஷத்தில் செய்யவேண்டிய காரியங்களை குறிப்பாக இந்த வருஷத்திலேயே செய்து முடிக்க உண்டான ஏற்பாடுகள் செய்து இருப்பது பற்றி, நமது அமைச்சர் அவர்களுக்கும், கூட்டுறவு பதிவாளர் அவர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் நான் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன். குறிப்பாக கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இப்பொழுது விவசாயிகளின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய சில வட்டாரங்களில் முழுக் கடன் வசதித் திட்டம் என்று ஒரு திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கிறது. இந்தத் திட்டம் சென்ற வருஷம் 46 வட்டார வளர்ச்சி ஏரியாவிலும் இந்த வருஷம் 57 வட்டார வளர்ச்சி ஏரியாவிலும் ஏற்படுத்தி இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையில் காணப்படுகிறது. குறிப்பாக என் தொகுதியாகிய அவனாசி வட்டாரத்தில், இந்த முழுக் கடன் வசதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்திருந்தாலும், கடந்த 5, 6 மாதங்களாக கோயம்புத்தூர் ஜில்லா பாங்கு ஏதாவது மக்கள் குறைகளைத் தீர்க்கின்றதா, அவர்கள் கோரும் கடன்களைக் கொடுக்கிறார்களா என்றால், இல்லவே இல்லை. கிராம சங்கங்கள் கொடுக்கும் கடன்களை மக்கள் விவசாய உற்பத்திக்காகவே கோருகிறார்கள், இந்த விவசாயத்தைச் செய்வதற்கும், அதற்குண்டான காலங்கள், நேரங்கள் உண்டு. அவனாசியைப் பொறுத்த வரை முக்கியமாக பணம் கொடுக்கக் கூடிய பயிர் பருத்தி. 'பணம் தரக் கூடிய வெள்ளாமைகள் பருத்தி, புகையிலை, கரும்பு இந்த மூன்றும் தான். இதற்கு ஆடி, ஆவணி மாதங்களில், எரு வாங்க, உழவு அடிக்க, விதை வாங்க, மற்ற தானியங்கள் வாங்க கிராம மக்கள் கூட்டுறவு சொஸைடிகள் மூலம் கடன் கோருகிறார்கள். ஆனால் அந்தக் கடன்களை கோயம்புத்தூர் ஜில்லா பாங்கி கட்டி வைத்து விடுகிறது. கட்டி வைத்து விட்டு, எந்த விதமான பதிலும் இல்லாமல், இரண்டு மூன்று மாதங்கள் கழித்த பிறகு சாங்ஷன் செய்கிறார்கள். அந்த நிலைமை மக்களுக்குத் தெரிவதில்லை. அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு வேண்டிய கடன்களைத் தருவதாகச் சொல்லுகிறார்கள். அந்த நிலை

யில் இப்பொழுது கடன் கொடுக்க உண்டான வசதி ஏற்படவில்லை. ஆகையினால் அம்மாதிரியான பாங்குகளின் நிலைமையை நன்கு பரிசீலித்து விவசாயிகளின் கடன்களைச் சீக்கிரம் கொடுக்க கூடிய வழிவகைகளை செய்யும்படி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷத்தில் அவினாசி நில அடமான பாங்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த பாங்கு இரண்டு வருஷத்திற்குள் கூடுமான வரை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் வேலை செய்து வருகிறது. இப்பொழுது என்ன நிலைமை என்று பார்க்கவேண்டும். அவினாசி இன்னும் இரண்டு பிர்க்காக்கள் திருப்பூர் பாங்கியில் இருந்தது. மற்ற இரண்டு பிர்க்காக்கள் பீலமேடு பாங்கியில் இருந்தது. இப்பொழுது இந்த ஐந்து பிர்காக்களையும் சேர்த்து பாங்கி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த பாங்கிகள் பழைய ரிக்கார்டுகளைக் கொடுக்க ஒரு வருஷத்திற்கு மேல் ஆகிறது.
11-00 a.m. அதுமட்டுமல்லாமல் அவினாசி ஒரு வரண்ட பிரதேசம். 2, 3, கடன் கள் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்த நிலையிலே 2 பாங்குகள் தீர்மானம் போட்டு பழைய கடன்களைத் தீர்த்தாலும்கூட 2, 3-வது கடன்கள் கொடுப்பதற்கு வசதி இல்லா மல் இருந்து வருகிறார்கள். ஆகையால் நமது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. தியாகராஜன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சிக்காரர்கள் கொண்டு வந்திருக்கிற வெட்டுப் பிரேரபணைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். இந்தக் கூட்டுறவு மான்யக் கோரிக்கையை அமைச் சர் அவர்கள் இங்கு சமர்ப்பிக்கும் பொழுது சொன்னார்கள். இந்த மாநிலத்திலுள்ள அத்தனை கிராமங்களுக்கும் கூட்டுறவு வசதிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன, அவைகள் நல்ல முறையில் செயல்பட்டுவருகின்றன என்று கூறிக்கொண்டார்கள். எல்லா கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன. அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. இருந்தாலுங் கூட, பல இடங்களில் ஊழல்கள் அதிகமாக நடந்துகொண்டிருக் கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

புதுக்கோட்டைப் பகுதியைப் பொறுத்த மட்டில் ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், புதுக்கோட்டைப் பகுதியிலே கூட்டுறவுத் துறையிலே எவ்வளவு சட்டங்கள் எவ்வளவு விதிகள் இருக்கின்றனவோ அத் தனையும் மீறப்பட்டு, அங்குள்ள சென்டிரல் பாங்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் அத்தனையும் நடந்து கொண்டி ருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்ப

கிறேன். புதுக்கோட்டை டிவிஷனில் உள்ள அத்தனை
கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் இம்மாதிரியான ஊழல்
கள் நடந்துகொண்டிருக்கின்றன. சட்டத்தைப் பற்றி
அவர்கள் பார்ப்பதே இல்லை. சட்டத்திற்கு புறம்பாகத்
தான் அங்கே எல்லாவிதமான ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்
கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமங்களில் பல சொஸைடிகள் மூலம் கிராம வாசிகளுக்குக்
கடன் கொடுக்கிறார்கள். அப்படி கடன் கொடுக்கிற நேரத்திலே,
2 பாரத்தில் கையெழுத்து வாங்கிக்கொள்கிறார்கள். ஒரு பாரத்
தில் ரூ. 100 என்று எழுதி கிராமவாசிக்குக் கடன் கொடுக்கிறார்
கள். இன்னொரு பாரத்தில் ரூ. 500 என்று எழுதி சொசைடித்
தலைவர் அந்தப் பணத்தை தான் எடுத்துக்கொள்கிறார். ஆகவே,
விவசாயி உண்மையிலேயே பெற்றுக்கொண்ட கடன்தொகை
ரூ. 100, தலைவர் எடுத்துக்கொண்டது ரூ. 500 ஆக இரண்டிற்கும்
சேர்த்து ரூ. 600-க்கு விவசாயிக்கு டிமாண்டு நோடீஸ் விடுகிறார்கள்.
அப்பொழுதுதான் விவசாயிக்கு ரூ. 100-க்கு பதிலாக ரூ. 600-க்கு
நோடீஸ் விடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதற்குப்
பிறகு அவன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் முறையிட
ஆரம்பிக்கிறார்கள். இப்படி முறைப்படுகிற காலத்தில் ஒரு சில
சமயத்தில் சில அரசியல் கட்சிக்காரர்கள் கூட அங்கு விவசாயி
களையெல்லாம் கூட்டிக்கொண்டு, கோஷம் போட்டுக்கொண்டு
புதுக்கோட்டை நகரத்திற்கு வரக்கூடிய நிலைமை கூட ஏற்படு
கிறது. மதியநல்லூர் என்ற கிராமம் இருக்கிறது. அதைச் சுற்றி
13 கிராமங்கள் இருக்கின்றன. வாகைபட்டி சொசைடியில்
ரூ, 6,000; 7,000 வரையில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்
பட்டிருக்கிறது என்று சொல்லி அந்த சொசைடி தலைவர் அந்தப்
பணத்தைக் கையாடியிருக்கிறார்கள். அதுகுறித்து ரிஜிஸ்டிரார்
அவர்களுக்கும் தாக்கீது கொடுத்திருக்கிறேன். அது விஷயத்தில்
எந்த விதமான நடவடிக்கையும் சென்டிரல் பாங்கு எடுக்கவில்லை.
அப்படி நடவடிக்கை எடுக்காவிட்டாலும்கூட நான் வாகு
பட்டி சொசைடி தலைவரைக் கூப்பிட்டு, அவருக்கு இருந்த
வீட்டை விற்கச் சொல்லி, அதன் மூலம் கிடைத்த பணத்தை
ரூ. 4,000 சென்டிரல் பாங்குக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்
திருந்தேன். அதைக் கூட பல மாதங்களுக்கு வாங்கிக்கொள்ள
வில்லை. இப்பொழுது அரசாங்கம் நியமித்திருக்கிற புது செக்ரடரி
யிடம் சொன்ன பிறகு, 4, 5 மாதங்களுக்கு முன்பாக அந்த
ரூ. 4,000-த்தை வாகைபட்டி சொசைடி தலைவரிடமிருந்து பெற்றுக்
கொண்டிருக்கிறார்கள் புதுக்கோட்டை பூராவிலும் இருக்கிற பல
சொசைடிகளில் பல லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்
பட்டிருக்கிறது. தெம்மாவூர் கோரக்குரிச்சி, நார்த்தாமலை, வைத்
தூர், மழையூர், வாகைபட்டி, வாகைக்கம்பட்டி ஆகிய இடங்களில்
உள்ள சொசைடிகளில் பல லட்சக்கணக்கான ரூபாய் மோசடி
செய்யப்பட்டிருக்கிறது. டெம்பரரி மிஸ்அப்ரோப்பிரியேஷன் நடந்
திருக்கிறது. அதைக் குறித்து எந்த விதமான நடவடிக்கையும்
எடுக்கப்படவில்லை என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்

குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பேர்பட்ட காரியங்களெல்லாம் நடப்பதற்குக் காரணம் அங்கே இருக்கிற தலைவர் ஒருவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். அவர் தலைவராக இருந்து கொண்டு, அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு கடனைக் கொடுத்து, அதன் மூலம் சொசைடி தலைவர்களுக்கும், இவருக்கும் உறவு ஏற்படுத்திக்கொண்டு, அங்கு இம்மாதிரி ஊழல்கள் நடந்து கொண்டு வருகின்றன. இப்பேர்பட்ட நிலைமையிலே அண்மையிலே அங்கே ஒரு எலக்ஷன் நடந்தது. வம்பன் ஹாண்டு பவுண்டு சொசைட்டிக்குத் தலைவராக இருக்கவேண்டுமென்று சொன்னால், வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் ஆபீசர்தான் அவரை நியமனம் செய்ய வேண்டுமாம். அப்படி ஒருதரம் நியமனம் செய்தால், 5 வருஷத்துக்கு வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் ஆபீசர்தான் நியமனம் செய்யவேண்டுமென்று நியதி இருக்கிறதாம். வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் ஆபீசர் நியமனம் செய்யாமல் ஏற்கனவே இருந்த தலைவரே ஜெனரல்பாடியை கூட்டிக்கொண்டு, தான் ஒரு டெலிகேட் என்று சொல்லிக்கொண்டு, தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார். டிபங்க்ட் சொசைடியிலிருந்து இவர் டெலிகேட்டாக வந்திருக்கிறார். சொசைடியில் டிபால்டர்ஸ்-ஆக இருப்பவர்கள் வோட்டு போடக்கூடாது என்ற நிலைமை இருந்தும், அவர்களெல்லாம் வோட்டுப் போட்டு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதை குறித்து ஆர்பிட்ரேஷனுக்காக ரூ. 100 கட்டி திருச்சி டெப்யூடி ரிஜிஸ்டிராரிடம் மனு செய்துகொண்டிருக்கிறேன். மூன்று தடவைகளாக அது ஒத்திப்போடப்பட்டு இன்னும் தீர்ப்பு அளிக்கப்படவில்லை. அதைக்குறித்து நான் எதுவும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். நல்ல முறையில் இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, சீர்திருத்தம் செய்து இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூறுகிறேன். சென்டிரல் பாங்குத் தலைவர் இம்மாதிரி 17 கூட்டுறவு ஸ்தாபனங்களில் பணம் புழங்கக்கூடிய இடத்தில் தலைவராகவும், மெம்பராகவும் இருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல கூட்டுறவு விவசாயப் பண்ணைக்காக ரூ. 8000-க்கு ஒரு நிலத்தை வாங்கி அதைரூ. 4200க்கு அரசாங்கத்திற்கு விற்றிருக்கிறார் இந்தத் தலைவர் என்றால் இவையெல்லாம் அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு இயக்கம் புதுக்கோட்டையில் நல்ல முறையில் செயல்பட வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கவேண்டும். புதுக்கோட்டை பகுதிக்கும் வீட்டு அடமான பாங்கு ஏற்படுத்தித்தரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ரா. ராஜகோபாலசாமி நாயக்கர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் இந்தச் சபையிலே சமர்ப்பித்திருக்கும் கூட்டுறவு மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் கூட்டுறவுத் துறையானது திட்டப்படி நல்ல முறையில் செயல்

பட்டுவருகிறது. குறியீடுகளையெல்லாம் நாம் நல்ல முறையில் நிறைவேற்றியிருக்கிறோம். இருந்தாலும், நண்பர் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொன்னதுபோல், நமது ராஜ்யத்தில் எந்த முறையில் கூட்டுறவுத் துறையானது கிராமங்களில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டம் வகுத்தோமோ, அந்த முறையில் சரியானபடி நிறைவேற்ற முடியவில்லை. காரணம், பணம் போதாதது தான். ரிசர்வ பாங்கிலிருந்தும், மற்றபடி அரசாங்கத்தின் மூலமும் கூட்டுறவுத் துறைக்குக கொடுக்கப்படும் பணமானது பெரிய பாங்குகளுக்கே சரியாகப் போய்விடுகிறது. பெரிய பாங்குகள், மற்ற பாங்குகள் என்று நான் ஒன்றும் வித்தியாசமாகச் சொல்லவில்லை. பெரிய பாங்குகள் பற்றிக் குறையாகச் சொல்லவில்லை. கிராமச் சங்கங்களை சரியானபடி பயன்படுத்தப்பட முடியவில்லை, கிராமங்களுக்கு இன்னும் நல்ல முறையில், கூட்டுறவு துறையை விஸ்தரிக்கவேண்டும். கிராம சங்கங்களில் அங்கத்தினர்கள் சார்பில் கடன் மனுக்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய பாங்குக்கு அனுப்பப்பட்டாலும், கடன் கிடைப்பதற்கு காலதாமதம் ஆகிறது. காரணம், பணம் பற்றாக்குறை தான். கிராம சங்கங்கள் மூலமாக ஆங்காங்கு கோடவுன்களை சில இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கிற விலைவாசிக் குறைவினால், நெல்லுக்கு விலை குறைவாக இருப்பதினால் மற்ற விவசாயப் பொருள்களையும் கிராம சொசைடிகளிலுள்ள கோடவுன்களில் வைத்து விவசாயிகள் பண உதவி பெறுவதற்கு வசதி செய்யப்படவேண்டும். பல சங்கங்களுக்கு கோடவுன்கள் இருந்தும், அவை இன்று செயலற்று இருக்கிறது. அதற்குப பண வசதி மத்திய பாங்கிலிருந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய பாங்கில் பண வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். இதற்கு நல்லபடியாக அரசாங்கம் முயற்சி செய்து, ரிசர்வ் பாங்கு, மற்ற இதர வகைகளிலும் இருந்து கூட்டுறவுத் துறைக்கு அதிக பண வசதி கிடைப்பதற்கு ஏற்பாடு செயய வேண்டும். அதன் மூலம் கிராம சங்கங்களுக்கு நல்ல முறையில் பண வசதி கிடைக்கும். குறிப்பாக நெல், மற்ற சிறு தானியங்களில் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. பண வசதி இல்லாததினால், விவசாயிகள் எந்த விலைக்கு வந்தாலும் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை அனுசரித்து வியாபாரிகளும் மிகவும் குறைவான விலைக்குக் கேட்கிறார்கள். கிராம விவசாயிகள் கிராம சங்கங்களின் மூலம் கோடவுன்களில் தானியங்களை வைத்து ஓரளவுக்கு நிதி உதவி பெற்றால் தான் அவர்கள் தங்களுடைய வேலைகளை திருப்திகரமாகச் செய்ய முடியும் என்பதை மனதில் கொண்டு, அமைச்சர் அவர்களும் சர்க்காரும் நல்ல முறையில் கிராம சங்கங்களுக்கு உதவி கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முழு நிதி உதவி திட்டத்தை புதிதாக பல இடங்களில் புகுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், அந்தந்த வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேண்டிய பண உதவியை நல்லமுறையில் தேவைக்கு ... கொடுக்கவேண்டும் என்பதுதான். ஆனால், பணப்

பற்றுக் குறை காரணமாக, நிதி உதவி சரிவரக் கிடைப்பதில்லை. முன்பு கொடுத்து வந்த அளவுக்குக்கூட இப்பொழுது கடன் கிடைக்கவில்லை. இந்தக் குறையைப் போக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில அடமான பாங்குகளிலிருந்து விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. கடன் மனுக்கள் துரிதமாக பைசல் செய்யப்பட வேண்டும். ஒரு விவசாயி கடனுக்காக நில அடமான பாங்கிற்கு விண்ணப்பம் செய்து கொண்டால் கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும்.

இப்பொழுது, கூட்டுறவுத் துறையில் பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன, பல நூற்பு ஆலைகளும் இருக்கின்றன. மூன்று சர்க்கரை ஆலைகளும் வேலை செய்து வருகின்றன. என்னுடைய பகுதியிலே அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. இந்த ஆலை லாபகரமாக செயல்பட வில்லை. குறிப்பாக, கேன் செக்ஷன் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டும். அதற்கு தகுந்த நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து, நல்ல அனுபவம் உள்ள அதிகாரிகளைக் கொண்டு இயங்கும்படி செய்ய வேண்டும். விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்து ஆலைக்கு கொடுக்க தயாராய் இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் மீது கரும்பு கொடுக்க வில்லை என்ற பழியைச் சுமத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜில்லா விவசாய அதிகாரியின் கிரேடுக்குக் குறையாமல் ஒரு கரும்பு டெவலப்மெண்ட் அதிகாரியை நியமித்து. கரும்பு உற்பத்தியைப் பெருக்கியும் நல்ல திட்டமிட்டும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கரை ஆலைகளின் போர்டு ஆஃப் மானேஜ்மெண்ட் நல்ல படியாகச் செயல்பட அரசாங்கம் ஆவன செய்யவேண்டும். இங்கே பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு என்னுடைய நன்றியைச் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் கூட்டுறவு துறை நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்ததற்காக நமது சர்க்காரையும், கனம் அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறியீடுகள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றப் பட்டுள்ளன. முழு நிதி உதவித் திட்டத்தின் மூலம், ஓரளவுக்கு நிலம் உள்ளவர்களுக்கும், நிலமற்ற குத்தகைக்காரர்களுக்கும் கடன் உதவி அளிக்கப்படுகிறது. ஆனால், இந்த முழு நிதி உதவித் திட்டத்தின்படி நல்ல முறையில் விவசாயிகளுக்கு பண வசதி கிடைப்பதில்லை. ஏனென்றால், வட்டார வளர்ச்சியின் மூலமாக அந்த உதவி வழங்கப்படுகிறது. அப்படி இருப்பதினால், அந்த வட்டார வளர்ச்சிக்கே இந்த நிதி சரிவ

ஒரு விவசாயி உரம் வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டால், ஏதோ சிலருக்குத்தான் அந்த நிதி உதவி கிடைக்கிறது. அதற்குமேல் போய்க் கேட்டால், எங்களுக்கே நிதி உதவி வந்து சேரவில்லை வந்து சேர்ந்த பிறகு தான் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள், அதனால், இந்த உரம் எந்த வேளாண்மைக்குத் தேவைப்படுகிறதோ, அந்த வேளாண்மைக்குக் கிடைக்கவில்லை அதற்குப் பிறகு கிடைக்கிறது. ஆகவே, காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நில அடமான பாங்குகளுக்கு கடன் விண்ணப்பங்கள் கொடுத்தால், 6 மாதம் அல்லது 1 வருஷம் ஆகிறது. சீக்கிரத்தில் கிடைப்பதில்லை. விவசாயிகள் அடிக்கடி நில அடமான பாங்குகளுக்குச் சென்று போய்ப் பார்க்க வேண்டியிருப்பதால், அதிகமாக கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கூடிய சீக்கிரத்தில் விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நில அடமான பாங்குகளில், ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ரூ. 10,000-ம் அதற்கு மேல் பம்பு செட்டு வாங்குவதற்காக ரூ. 5,000 என்ற அளவிலே இருக்கிறது. முன்பு கொடுத்த தொகைக்கு குறைவாகவே இருக்கிறது. இதையும் குறைத்து விட்டால், விவசாயிகளுக்கு நன்மை இருக்காது. பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட பூமிகளெல்லாம் அதிகமான விலையில் விற்கின்றன. ஆனால், குறைந்த அளவில்தான் கடன் கொடுக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் மதிப்பீட்டை போட்டுப் பார்த்தால், 5 மடங்கு அல்லது 6 மடங்கு அதிகமாக இருக்கிறது. அதே முறையில் நில அடமான பாங்குகளிலிருந்து விவசாயிகளுக்கு அதிகமான தொகையை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

வட்டார வளர்ச்சியிலுள்ள சொசைடிகளிலிருந்து கடன் வாங்கினால், நில அடமான பாங்கியிலிருந்து கடன் வாங்க முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆனால், பூமியின் மதிப்பைக் கொண்டு, தாராளமாகக் கடன் கொடுக்கலாம். நில அடமான பாங்கிலிருந்து விவசாயத்திற்கு கடன் வாங்குவது என்றால் அது நீண்ட கால கடனாகை இருக்கும். ஆகவே, கிணறு வெட்டுவதற்கோ, மாடுகள் வாங்குவதற்கோ, உரம் வாங்குவதற்கோ அந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வாங்குவதற்கு நீண்ட காலமாகும். ஆகவே, பூமியின் பொறுப்பை வைத்து, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராம கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்தவரையில், சில இடங்களில் மட்டும் கோடவுன்கள் கட்டுவதற்கும், கூட்டுறவு சங்கங்களின் மூலமாக உர விநியோகம் செய்வதற்கும் ஏற்பாடு செய்திருக்

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

கிறார்கள். இப்பொழுது ஒரு இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு, 15 அல்லது 20 மைல் தூரம் வந்து, வாங்க வேண்டியிருப்பதால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கிராம கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த உரத்தைக் கொடுத்து விட்டால், கிராமத்திலுள்ளவர்களுக்குக் கிடைப்பதற்கு சௌகரியமாக இருக்கும். கறவை மாடுகள் வாங்குவதற்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் பணம் கொடுக்கிறார்கள். இப்பொழுது விலைவாசிகள் அதிகமாக இருப்பதால் ரூ. 500 க்குக் குறைந்து மாடுகள் வாங்க முடியாது, ஆகவே, அதற்குக் குறையாமல் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டி, எனது கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்த கூட்டுறவு இயக்கம் கம்யூனிசத்திற்கும், காபிடலிசத்திற்கும் இடையிலே இருக்கிற ஒரு வழி, இடைத் தரகர்களை அகற்றுவதற்கு ஒரு சிறந்த சாதனம் என்று கூறலாம். இருந்தாலும், இந்த இயக்கம் நம்முடைய நாட்டிலே பரவ வேண்டிய அளவுக்குப் பரவி இருக்கிறதா என்றால், கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். கடன் வசதியை செய்து தருகிற சாதனமாக இயங்கி வருகிறது. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களையும், வாங்குவோர் கூட்டுறவு சங்கங்களையும் அமைத்து உற்பத்தி செய்த பின்னர் மார்கெட்டு செய்வதற்கும், இடையிலே தானியங்களை ஸ்டாக் செய்து வைப்பதற்கும், பரவலான முறையிலே ஏற்பாடுகள் செய்தால், நிச்சயமாக முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு ஒரு சாதனமாகவும், அதே நேரத்தில் கம்யூனிசத்தைத் தீவிரமாக பரப்பாத அளவுக்கு ஒரு சாதனமாகவும் இந்த இயக்கம் இயங்குவதற்கு வழிவகை ஏற்படும். அந்த முறையிலே இந்தத் துறை செயல்பட வேண்டும்.

அடுத்தாற்போல், இந்த இயக்கத்தில் அடைய வேண்டிய பலனை அடையாமல் இருப்பதற்கு காரணம், க்ரூபிஸம் அண்டு பாலிடிக்ஸ் தான் என்று சொல்லிவிடலாம். அரசியலும் கட்சிப் பாகுபாடும் இந்த இயக்கத்தில் இருக்கும் காரணத்தால், ஒரு சாராருக்குத்தான் அந்தச் சங்கங்கள் பயன்படவும், மற்றொரு சாராருக்குப் பயன்படாமலும் பேய்விடுகின்றன. 'வல்லவன் வகுத்ததே வாய்க்கால்' என்று சொல்லுவது போல, அந்தச் சங்கத்தில் வல்லவரும், அவரை சார்ந்தவர்களும் தான் கடன் வசதிகளையோ மற்ற வசதிகளையோ அடைவதை நாம் காண்கிறோம். கூட்டுறவு சங்கங்களில் அரசியலும், கட்சிப் பாகுபாடுகளும் எந்த அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும் என்பதை நல்ல முறையில் ஆராய்ந்து, அவற்றைத் தவிர்க்க அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துகொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEMAND NO. XIX—CO-OPERATION, DEMAND NO. XVII—FISHERIES, DEMAND NO. XXXV—FOREST DEPARTMENT AND DEMAND NO. XLIV—CAPITAL OUTLAY ON FORESTS

 [திரு. எம். வி. கரிவேங்கடம்]

கடன் வசதிகளைப் பொறுத்த வரையில், எப்பொழுது கடன் தேவையோ அப்பொழுது கடன் கிடைப்பதில்லை. கடனுக்கு மனுப் போட்டு, ஆறு மாதங்கள் ஆகியும் கூட, சில சந்தர்ப்பங்களில் கடன் கிடைப்பதில்லை. 'ஆபத்துக்கு உதவாப் பிள்ளை, அரும் பசிக்கு உதவா அன்னம்' என்று சொல்வதைப் போல, எந்தக் கஷ்டத்தை சமாளிப்பதற்காக கடன் கேட்கப்பட்டதோ அந்த கஷ்டத்திற்கு கடன் உதவி கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, புரட்சிகரமான மாறுதலை இந்த இயக்கத்தில் செய்ய வேண்டுமென்றால், ஒரு திட்டவட்டமான வழி வகையை நாம் கடைப்பிடித்தாகவேண்டும்.

முழுக் கடன் உதவித் திட்டத்தை (ஃபுல் ஃபினான்ஸ் ஸ்கீம்) 103 வட்டார வளர்ச்சி மன்றங்களுக்கு நாம் பரப்பியிருப்பதாகச் சொல்கிறோம். கிராமக் குடிகளின் அத்தனை தேவைகளையும் அந்த முழுக் கடன் உதவித் திட்டம் தீர்த்து வைக்கிறதா என்றால் நிச்சயமாகக் கிடையாது. இந்தத் திட்டம் எந்த எந்த இடங்களில் அமுலில் இருக்கிறதோ அந்த இடத்திலே கூட, கிராம மக்கள் மாதத்திற்கு இரண்டு ரூபாய் வட்டிக்குக் கடன் வாங்கிற நிலைமையைப் பார்க்கிறோம். முழுக் கடன் உதவித் திட்டத்தில் கூட, கேட்ட நேரத்தில் கடன் கிடைப்பதில்லை பல சந்தர்பங்களில் தேவைக்கு வேண்டிய கடன் இந்தத் திட்டத்தின் மூலம் கிடைப்பதில்லை. ஆகவேதான் அதற்கு இன்னும் அதிகமாக தொகை ஒதுக்கி, குறித்த நேரத்தில் குறிப்பிட்டவர்களுக்குக் கடன் தொகை சேரும் முறையில் வழிவகையை நமது அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வாங்குவோர் கூட்டுறவு சங்கங்கள் பத்தாயிரம் மக்கள் உள்ள நகரங்களுக்கு எல்லாம் விஸ்தரிக்கப்பட வேண்டும். நெஸஸரீஸ் ஆஃப் லைஃப் என்று சொல்லக்கூடிய, வாழ்க்கைகுத் தேவையான அத்தனை பொருள்களையும், கலப்படம் இல்லாத உணவுப் பொருள்களையும், மக்களுக்கு நியாய விலைக்கு அந்தச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்க கூட்டுறவு இயக்கம் முயற்சி செய்யவேண்டும்.

அடுத்தாற்போல், 1961-62-ம் ஆண்டில் 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 6 லட்சம் 78 ஆயிரம் ரூபாய் கூட்டுறவு பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1962-63-ம் ஆண்டில் 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதில், டிசம்பர் வரையில் 5 லட்சம் 51 ஆயிரம் ரூபாய் தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. சற்றேறக்குறைய ஓராண்டுக்கு முன் செய்தித்தாளில் பாத்தாலும், அல்லது எங்கு பேசினாலும், கூட்டுறவுப் பண்ணைகள் வேண்டுமா, வேண்டாமா என்ற சர்ச்சை இருந்தது. அப்பொழுது அரசாங்கம் கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படுத்துவதில் முழு ஆதரவு அளிப்பதாகவும், எல்லா இடங்களிலும் ஏற்படுத்தப்போவதாகவும் சொல்லி, அதற்கேற்ற முயற்சிகளை அரசாங்கம் செய்துகொண்டிருந்தது. இருந்தாலும், கூட்டுறவுப் பண்ணைகளை எந்த அளவு பரப்பவேண்டுமோ அந்த அளவு பரப்பவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1962-63 ம் ஆண்டில், 44 கூட்டுறவு பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பது நம்முடைய இலக்காக இருந்திருக்கிறது. ஆனால், டிசம்பர் 1962 வரையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது 24 தான். மற்ற சங்கங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. குறித்த இலக்கை அடையாததன் காரணம் என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தம்முடைய முடிவுரையில் குறிப்பிடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமானால், டென்மார்க், ரஷ்யா போன்ற நாடுகளுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்று, அங்குள்ள முறைகளைக் கண்டறிந்து, எந்த முறை நம் நாட்டுக்கு உகந்தது என்பதை ஆராய்ந்து, கூட்டுறவு இயக்கத்தில் அரசியலும், கட்சிக் கண்ணோட்டமும் புகுந்து விடாமல் நல்ல முறையில் அமுல் நடத்தினால், நம்முடைய மக்களுடைய வாழ்க்கையில் நல்ல வளம் பெருகும் என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து சில வார்த்தைகள் கூறிக்கொள்ளுகிறேன். நம்முடைய நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், தனிப்பட்டவர்களிடத்தில் கடன்பட்டு, அந்தக் கடன் பளுவைத் தாங்க முடியாமல் மக்கள் தங்களிடம் இருக்கும் சொத்து சுகமெல்லாம் கடன் கொடுத்தவர்களுக்கே உடமையாக்கி விடாமல் பாதுகாப்பதற்கும் இப்பொழுது கூட்டுறவு முறையை நாம் மிகவும் தீவிரமாக நாட்டில் அமுல் நடத்திக்கொண்டிருக்கிறோம்.

பல நண்பர்கள் சொல்லிவிட்டார்கள். அதுபோன்று, என்னுடைய தொகுதியில் கூட, முழுக் கடன் திட்டம் இரண்டு யூனியன்களில் கொண்டுவரப்படவேண்டுமென்று சென்ற ஐந்தாண்டுகளில் சொல்லி, இப்பொழுது அந்தத் திட்டம் என்னுடைய தொகுதிக்கு வந்திருக்கிறது. அந்தத் திட்டம் வந்தால் மிகவும் நன்றாக இருக்கும், மக்கள் கஷ்டப்படமாட்டார்கள் என்று தான் நாங்கள் நினைத்தோம். ஆனால், அது வந்த பிறகு இப்பொழுது அவர்கள் கேட்கும் போதெல்லாம், 'பாங்கில் பணம் இல்லை, இத்தனை பேருக்குத்தான் கொடுக்க முடியும், ஐம்பது பேருக்கு மேல் கடன் கொடுக்க முடியாது' என்று சொல்கிற சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றியமைத்து, எங்கெங்கெல்லாம் முழுக் கடன் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் மக்களுக்குத் தேவைப்படுகிற அளவுக்கு கடன் கொடுக்க வழிவகை செய்தால், இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெற முடியும், ஏழை விவசாய மக்களுக்கு நல்ல பலனை அளிக்கமுடியும் என்று நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு விவசாய பாங்க் மூலம் நாம் குறுகிய காலக் கடன் கொடுக்கிறோம். இவர்கள் மனுப் போட்டு பரிசீலனை செய்து, பிறகு சென்ட்ரல் பாங்குக்குப் போய் சாங்ஷன் ஆகி வருவ

தற்குக் கிட்டத்தட்ட ஆறு மாதமாகிறது. பிறகு ஆறு மாதங்களுக்குள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால், விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கக்கூடும். ஒரு போக வெள்ளாமை சரியாக வராமலிருந்தால், அல்லது மழை காரணமாக பயிர்கள் அடித்துச் செல்லப்பட்டால், அத்தகைய நிலைமைகளில், ஆறு மாதங்களுக்குள் வாங்கிய கடனை, அதாவது 500 ரூபாய் தொகையைக் கட்ட முடியாமல், ஆயிரம் ரூபாய்க்கு யாருக்காவது வட்டிக்கு எழுதிக் கொடுத்துவிட்டு, 500 ரூபாய் வாங்கிவந்து கடனைக் கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, குறுகிய காலக் கடனை ஒரு வருஷம், அல்லது ஆறு மாதங்களுக்குள் திருப்பிக்கொடுக்கவேண்டும் என்று இருப்பதை மாற்றி, குறைந்தது மூன்று வருஷத் தவணைகளில் கடனைத் திருப்பிக் கொடுத்தால் போதும் என்ற நிலையை ஏற்படுத்தினால், மிகவும் நன்றாக இருக்கும். (கனம் அமைச்சர் தலையசைத்தார்) நான் ஏழை எளியவர்களைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், அவர்களுக்கு இது சௌகரியமாக இருக்கும். ஆகையால், அமைச்சர் அவர்கள் தலையாட்டாமல், என்னுடைய யோசனையை அவர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்வார்களானால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

பம்ப் செட்டுக்காக நாம் கடன் கொடுக்கிறோம், பம்ப் செட்டுக்காகக் கொடுத்த கடனைக் கூட, ஐந்தாண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஏழை விவசாய மக்கள் இரண்டாயிரம் ரூபாயை ஐந்தாண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து, ஏழு ஆண்டுகளில் கடனைத் திருப்பிக்கொடுக்கலாம் என்ற நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துங் கொள்ளுகின்றேன்.

அம்மையார் அவர்கள் கூறியதுபோன்று, நில அடமான பாங்குகளிலிருந்து கடன் பெறுவதில் சிரமங்கள் இருக்கின்றன. நான் கூட கடன் வாங்க முடியவில்லை. கடந்த ஐந்தாண்டுகளில் நான் முயற்சி செய்தும், நில அடமான பாங்கிலிருந்து கடன் வாங்க முடியாத நிலை இருப்பதற்குக் காரணம், பல தொந்தரவுகள் சச்சரவுகள் இருந்துகொண்டிருக்கின்றன. நில அடமான பாங்கு கடன் கொடுப்பதற்கு இத்தனை வருஷங்களுக்கு வில்லங்க சர்டிபிகேட் வாங்கவேண்டுமா என்பதை நாம் சற்றுப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் நில அடமான பாங்கில் கடன் வாங்கும் போது, நெல் விளையக்கூடிய நிலமாக இருந்தாலும், தோட்டக்கால் நிலமாக இருந்தாலும், ஒரே அடிப்படையில்தான் கடன் கொடுப்பதில்லை. நெல் விளையக் கூடிய நிலத்தைக் காட்டிலும், கரும்பு விளையக் கூடிய நிலம் ஏக்கருக்கு அதிகப் பலன் தரக் கூடியது. திராட்சை பயிர் செய்தால் ஏக்கருக்கு பத்தாயிரம், பன்னிரண்டாயிரம் ரூபாய் நிகர வருமானம் தரக்கூடியது இருந்தாலும், நெல் விளையக்கூடிய நிலத்தின் மதிப்பை விட மற்ற நிலங்களுக்கு கடன் கொடுக்க மறுக்கிறார்கள். பக்கத்தில்

நிலம் என்ன விலைக்கு விற்றதோ அந்த விலையைப் பத்திரத்திலிருந்து தெரிந்துகொண்டு, அந்த அடிப்படையில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முன்வருகின்றார்கள் அந்நிலையை மாற்றி இதற்கென்று ஸ்பெஷல் ஸ்டாம்ப் போட்டு, நிலத்தின் மதிப்பு எவ்வளவு, வருமானம் எவ்வளவு வருகிறது, நிலத்தின் ஈட்டின் பேரில் எவ்வளவு பணம் கொடுக்கலாம் என்பதை நிர்ணயித்தால் கூட நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு மேஜர் பஞ்சாயத்திலும் வீட்டு அடமான பாங்கின் பிராஞ்சு ஒன்று ஏற்படுத்தினால் விவசாயிகள் தங்களுடைய வீட்டின் பேரில் பணம் வாங்கி விவசாயத் தொழிலை நல்ல முறையில் செய்ய முடியும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கிற நிலைமையில் விவசாயி
11-30 a.m. கள் ஆறு மாதம் விவசாயம் செய்து விட்டு பாக்கி ஆறு மாதம் வேலை இல்லாமல் கஷ்டப்படும் நிலைமையில் இருக்கிறார்கள். அவ்வாறு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஏழை விவசாய மக்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும் கூட்டுறவு முறையிலே தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அவர்களுக்குத் தொழில் வாய்ப்பு கிடைப்பதற்கான திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்ற உத்திரவை ஒவ்வொரு யூனியன்களிலும் இருக்கின்ற வி. எஸ். ஆர்-களுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் தொழில் அமைச்சர் அவர்களும், டைரக்டர் அவர்களும் இருக்கின்ற இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியில் காட்டுப்பட்டியில் இருக்கக்கூடிய ஏழை கைத்தறி நெசவாளர்களின் நிலைமை பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அங்கு ஆயிரம் தறிகள் ஓடுகின்றன. மூவாயிரம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். காட்டுப்பட்டியில் 32 கதிர் கொண்ட நூற்பு ஆலையை பரீட்சார்த்தத் திட்டமாக ஆரம்பித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆலையை அமைப்பதற்கு நாங்கள் 5 ஏக்கர் நிலம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அந்தப் பகுதியில் கருங்கண்ணிப் பருத்தி விளைவதில்லை. லண்டன் பருத்தியும் அமெரிக்கன் பருத்தியும் தான் விளைகிறது. பக்கத்தில் ஒரு ஜின்னிங் பாக்டரி இருக்கிறது. ஆகவே அங்கு பரீட்சார்த்த ஸ்கீமாக அதை ஆரம்பித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களுக்குப் பொருளாதாரத் துறையில் . . .

(மணியடிக்கப்பட்டது.)

* திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டிலே கூட்டுறவு இயக்கம் 1875-ம் ஆண்டிலே பம்பாய் மாகாணத்தில் விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கிளர்ச்சியின் காரணமாக ஏற்பட்டு இன்று நாட்டிலே, குறிப்பாகத் தமிழ் நாட்டிலே, விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்படும்

முதல் முதலாக 1879-ம் ஆண்டிலே அக்ரிகல்சரிஸ்டு ரிலீப்ஃ ஆக்ட் என்ற சட்டமாகக் கொண்டுவரப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை கூட்டுறவுச் சட்டம் என்ற சட்டத்தின் மூலமாக பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்துகொண்டு வருகிறோம்.

நான் முக்கியமாகக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை பற்றி மட்டிலும் கூற விரும்புகிறேன். கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது அன்லிமிடட் லயபிலிடியாக இருந்துகொண்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வேலை செய்யும் விவசாய பாங்குகள் லிமிடெட் லயபிலிடி உள்ளவையாக அமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த இரண்டுவகையான சங்கங்களை உற்று நோக்கினால் லிமிடட் லயபிலிடியாக உள்ள விவசாய பாங்குகள் கூட்டுறவுச் சங்கங்களை விட செம்மையாக நடைபெறுகின்றன என்பது மன்ற அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். அந்த அபிப்பிராயம் மக்களிடையே பொதுவாக இருந்து வருகிறது. ஆகவே கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் லிமிடட் லயபிலிடி உள்ளவையாக மாற்றும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது மாநிலத்திலுள்ள விவசாய பாங்குகளை மேற்பார்வை செய்வதற்கு ஆங்காங்குள்ள மத்திய பாங்குகளிலிருந்து சூபர்வைஸர்களை நியமித்திருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அரசாங்கமே ஒரு ஜூனியர் இன்ஸ்பெக்டரையோ அல்லது சீனியர் இன்ஸ்பெக்டரையோ அந்த பாங்குகளை மேற்பார்வை செய்வதற்கு போட்டுவிட்டால் சிறுசிறு ஊழல்கள் ஏற்படுவதை ஓரளவிற்குத் தவிர்க்க முடியும்.

கூட்டுறவுக் கடன்களை பொறுத்தளவில் முக்கியமாக கிராமச் சங்கங்களுக்குக் குறுகிய கால கடன்கள் வழங்கப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கு உருளை கிழங்கு 'லேட் பிளைட்' என்ற கொடிய வியாதியால் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். அதன் காரணமாக ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய் மத்திய பாங்கிலிருந்து கடன் வாங்கியதைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான காலத்தை மூன்று அல்லது ஐந்து வருஷமாக மாற்றும்படி ஏற்கெனவே அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்களும் பதிவாளர் அவர்களும் அனுதாபத்துடன் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் (Full Finance Scheme) திட்டத்தின் கீழ் 300 ரூபாய் வரை தனிப்பட்ட மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. அந்தத் திட்டம் இல்லாத இடங்களில் அரசாங்கம் தக்காவிக் கடன்களையும் விவசாயக் கடன்களையும் வழங்கிவருகிறார்கள். ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் (Full Finance Scheme) ஏரியாவில் இல்லாத

வர்கள் அதிகக் கடனை அடைகிறார்கள். ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் ஏரியாவில் இருப்பவர்களுக்குத்தான் 3,000 ரூபாய்தான் கடன்கொடுக்கப்படும் என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு 'இகானமிக்' சர்வே செய்து, ஆஸ்தி என்ன, மதிப்பு என்ன, கடன் என்ன, தேவை என்ன என்பதையெல்லாம் பற்றி ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோடவுன்கள் கட்டுவதற்கு 'ஸப்ஸிடி' மூன்றில் ஒரு பங்கு கொடுக்கிறார்கள், 'ஸப்ஸிடி' 5,000 ரூபாய் கொடுத்தால் கடனாக 10,000 ரூபாய் வரைக்கும் கொடுக்கிறார்கள். அதை மாற்றி 7,500 ரூபாய் ஸப்ஸிடி 7,500 ரூபாய் கடன் என்ற விதத்தில் கொடுக்கவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்காகக் கொடுக்கப்படுகிற கடன்களுக்கான வட்டி விகிதம் மேலும் ஒரு சதவிகிதம் அல்லது இரண்டு சதவிகிதம் அதிகமானாலும் கூட அவர்களுக்கு போதிய அளவு கடனைக் காலாகாலத்தில் கொடுப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக முயற்சிக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய பாங்கிலிருந்து கடன் வாங்க லோன் அப்பிளிகேஷனைத் தயாரித்து யூனியன் மூலமாக அனுப்ப வேண்டியிருக்கிறது. அதனால் பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. கூட்டுறவு இயக்கத்திலே யூனியன்களுக்குச் சம்பந்தம் இருக்க வேண்டுமா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடிட் பிரிவையும் சங்கத்தின் நிர்வாகத்தையும் தனித்தனியாக பிரித்திருந்தாலும் அநேக சங்கங்களுக்கு ஆடிட் ரிபோர்ட் கிடைக்காமல் ஒரு வருஷம், இரண்டு வருஷம் காலதாமதம் ஆகியிருக்கிறது. ஆடிட் ரிபோர்ட்டுகள் உடனடியாக அந்தச் சங்கங்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஸேல்ஸ் டாக்ஸ் விஷயத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் விற்பனைவரி வாங்குகிறார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தளவில் எடுத்துக்கொண்டு பார்த்தால், வியாபாரம் செய்யாத 'கிரெடிட்' ஸேல்ஸ் டாக்ஸ் கேட்கிறார்கள். அவ்வாறு கேட்பது சரியா? இதனால் 'நான் கிரெடிட்' சங்கங்களுக்கு மட்டும் விற்பனைவரி கட்ட வேண்டும் என்று மாற்றினால் சங்கங்களுக்கு அது நன்மையாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றே ஒன்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

திரு. முனு. ஆதி: மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் கூட்டுறவு மான்யத்தின் மீது கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல

விரும்புகிறேன். கூட்டுறவானது நாட்டுறவுக்கு மூலகாரணமாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அந்தக் கூட்டுறவு இயக்கங்கள் எல்லாம் மாடி வீட்டு ரோஜாவாகத்தான் இருக்கின்றன என்று சொன்னால் அது எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

இன்றைக்கு ஏழைகள் எல்லாம் கூட்டுறவு ஸ்தாபனங்களிலே பங்கு பெற முடியாமல் இருப்பதற்குக் காரணம், அங்கே முக்கியஸ்தர்களாக இருப்பவர்கள், செல்வாக்குப் பெற்றவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களின் டைரக்டர் பதவியை தங்களுடைய பரம்பரைச் சொத்தாக வைத்துக் கொண்டிருப்பதுதான். ஒரு முறை டைரக்டராக இருந்தவர்கள் மறு முறை டைரக்டராக இருக்கக் கூடாது என்ற விதியைப் போட்டால் கூட்டுறவு ஸ்தாபனங்களிலே ஏழை மக்கள் பங்கு பெற வாய்ப்பு ஏற்படுவதன் காரணமாக ஏழை மக்கள் கூட்டுறவு முறையினால் பயன் பெற முடியும். ஆகவே, ஒரு ஆண்டு டைரக்டராக இருந்தவர் மறு ஆண்டிலே டைரக்டராக இருக்கக் கூடாது என்ற விதியினைக் கண்டிப்பாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று கூட்டுறவு ஸ்தாபனங்களிலே பணியாற்றுகின்ற சப்-ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு தாசில்தாருக்கு இருக்கக் கூடிய அதிகாரம் இருந்தும் அவர்களுடைய சம்பளம் டெபுடி தாசில்தார் சம்பளம் அளவுக்குத்தான் இருக்கிறது. அந்த அதிகாரிகளுக்கு உண்மையிலேயே கூட்டுறவுப் பணிகளிலே அக்கறை வளர வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய சம்பளத்தை தாசில்தார் சம்பளத்தின் அளவுக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று வயதை நிர்ணயிக்கின்றபோது, 53 என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகப் பின்னால் வருகிறவர்கள் சப்-ரிஜிஸ்ட்ராராக வரச் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகிறது. அதை 50 ஆகக் குறைத்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது தொழில் அமைச்சர் அவர்கள் நேற்று முன் தினம் பேசுகின்ற நேரத்தில், "நாட்டிலே அவசர நிலை இருப்பினும் கூட, ஏழைகளுக்கான வீட்டு வசதி திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட மாட்டாது; மேலும் தீவிரப்படுத்தப்படும்" என்று அழகாகச் சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் கூட்டுறவு முறையிலே ஏழைகளுக்காக நிலம் வாங்கிக் கொடுப்பது தேசிய நெருக்கடி நிலைமையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு முறையிலே ஏழைகளுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதை நிறுத்தி வைக்காமல் தீவிரப்படுத்த வேண்டுமென்று அமைச்சர் மன்றாடியார் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

சில புகார்களை நான் அப்போது எடுத்துக் கூறினேன். இப்போது அந்த யூனியனிலுள்ள பல தொழிலாளர்களைப் பழி வாங்கும் திட்டம் உருவாகிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த நிலைமைகளைப் பற்றிச் சுருக்கமாகவும், அதே நேரத்தில் விளக்க மாகவும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அங்கு ஊழல்கள் இன்று நேற்று அல்ல—பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன. அங்கே கடன் வாங்குகிறவர்கள், கொடுக்கிறவர்கள் இருந்தாலும், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமல் 'டிபால்டர்ஸ்' ஆக இருப்பவர்களுக்கு மேலும் மேலும் கடன் கொடுக்கப் படுகிறது. 14-9-1961-ல் அந்தத் தொழிற்சங்கத்தின் உள்ளே நுழைந்து, இருக்கின்ற ஊழல்களை எல்லாம் நன்ருகப் பரிசீலனை செய்து பெரிய மெமோராண்டம் தயாரித்துக் கொடுத்தோம். இது வரை அதன்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல். அப்படியே வைத்திருக்கிருர்கள். அந்த மெமொராண்டத்திற்கு என்ன கதி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும். அந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தைச் சர்க்காரே எடுத்துக்கொண்டால் சென்னை நகர வாசிகளுக்கும், சுற்றுப்புற கிராமங்களுக்கும் நல்ல பாலாவது வழங்க முடியும். இப்போது அந்த சொசைடியில் ஆண்டு ஒன்றுக்கு லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த முறையில் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் அதிலே பல ஊழல்கள் இருப்பதுதான். ஆகவே, நம்முடைய அரசாங்கம் அதனைத் தனிப்பட்டவர்கள் கையிலே விடாது அரசாங்கமே எடுத்து நடத்துவதன் மூலம் நஷ்டத்தைப் போக்குவதுடன் நல்ல பாலையும் வழங்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த யூனியனை அரசாங்கம் எடுத்துக்கொள்கிற வரையில் அந்த யூனியன் டைரக்டர்களாக இதுவரை இருந்தவர்கள் மீண்டும் வரமுடியாத நிலையை உருவாக்கி, புது டைரக்டர்கள் வருவதற்கு வழி செய்ய வேண்டும். புதிது புதிதாக டைரக்டர்கள் வரக் கூடிய நிலைமை இருந்தால் அவர்கள் உற்சாகத்துடனும், நல்ல பெயர் எடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடனும் பொறுப்புடனும் பணியாற்ற முடியும். (மணி அடிக்கப்பட்டது.)

* திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாடு முழுவதும் பல்வேறு துறைகளிலே ஈடுபட்டிருக்கக் கூடிய பொது மக்களுக்கு நன்மை புரியக்கூடிய முறையிலே கூட்டுறவுத் துறையானது மக்களுக்கு பணி செய்து வருவதற்காக நான் மக்கள் சார்பாக நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு சொசைடியினர் பால் வாங்குகின்றனர். விவசாயிகளிட மிருந்து பாலை வாங்கும்போது அவர்களுக்குக் கொடுக்கும் விலைக்கும், நகரத்தில் உபயோகிக்கக் கூடியவர்களுக்கு அவர்கள் விற்கும் விலைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளிடமிருந்து பால் வாங்கும்போது இப்போது கொடுக்கும் விலையைவிட ஒரு அணு அல்லது ஆறு நயா பைசா அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்பதை இந்தச் சபை முன் சமர்ப்பித்துக்கொள்கிறேன். விவசாயிகள் மாடுகளுக்குத் தீனி வாங்குவதற்கும் பராமரிப்பதற்கும் அதிகச் செலவு செய்யவேண்டி யிருப்பதன் காரணமாகவும், நகரத்தில் இருப்பவர்களுக்கு அதிக விலைக்குப் பாலை விற்பதன் காரணமாகவும், விவசாயிகளுக்கும் கூடுதல் விலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டிலே பால் வளம் அதிகரிக்கவேண்டு மென்று சொன்ஞல், உலக நாடுகளிலே பால் மிகுதியாக இருக்கக் கூடிய டென்மார்க் நாட்டுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அறிந்து அந்த முறைகளை நம்முடைய நாட்டிலும் கைக்கொள்ள வேண்டும். பால் உணவால் பலம் அதிகமாகும் என்பதை ஏழை எளிய மக்களிடையே பரப்புதல் வேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சொசைடிகள் அதிகமாகக் கடனைக் கொடுக்கக்கூடிய ஸ்தாபனமாக இருக்கின்ற காரணத்தால், டெபாசிட்டுகள் வாங்கக் கூடிய முறையைத் தீவிரப்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல பெரியவர்கள் பூமிதான இயக்கத்திற்கு நிலம் கொடுத் திருக்கிருர்கள். அந்த நிலங்களைக் கொண்டு கூட்டுறவு விவசாயப் பண்ணையை ஏற்படுத்தி நல்ல முறையிலே விவசாயத்தைப் பெருக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று இந்தச் சபை முன்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே 32 கதிர்கள் கொண்ட நூற்பு இயந்திரம் பரிட்சார்த்தத் திட்டமாக சென்ற ஆண்டிலே சர்க்கார் ஒத்துழைப்பால் அமைக்கப்பட்டு அது நல்ல முறையிலே நடந்து வருகிறது. இந்தத் திட்டத்தைப் பல ஊர்களுக்கும் விஸ்தரித்தால் ஏழை மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அங்கு ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் வரை கூலி கொடுத்திருக்கிருர்கள் என்பது பாராட்டத்தக்க ஒன்ருகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வகையில் அந்த அரசாங்க ஊழியர்கள் ஏற்படுத்திய விவசாயச் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமானது இன்னும் தாராளமாக்கப்படவேண்டும். யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனிலிருந்து நல்ல தொகையைக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒருசில ஆசிரியர்கள்தான் அதனால் பயன் அடைகிறார்கள். பிராவிடண்ட் பண்ட் நிதியிலிருந்து அதிகத் தொகையை எடுத்து வீடு கட்டுவதற்கு ஏற்ற முறையில், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் உதவி செய்யவேண்டும். நகரத்திலே வீட்டு வாடகை அதிகமாக இருக்கிறது. அதற்குத் தக்க நடவடிக்கைகளைக் கூட்டுறவு வீடு கட்டும் சொசைடியாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹையர் பர்சேசிங் ஸ்கீம்படி லாரிகள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு ஒரு ரூபாய் பத்தணா வட்டியாகிறது. கூட்டுறவு முறையில் லாரிகளை வாங்கி சொசைடிகள் விட்டால், சொசைடிகளுக்கு அதிகமாகச் செலவாவதைத் தடுக்கச் சாதகமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய நிலம் ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமானதாகயிருப்பினும் அந்த நிலத்தின் பேரில் ஐயாயிரம் ரூபாய் தான் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் வியாபாரிகளுக்கோ செக்யூரிடி இருந்தாலும் இல்லாவிட்டாலும் 20,000, 30,000 என்ற அளவிற்குக் கடன் கொடுக்கிறார்கள். அதே போன்று விவசாயிகளுக்கும், அவர்களுடைய நிலம் 50,000 பெறுமானமுள்ளதாக இருந்தால், 15,000 அல்லது 20,000 வரையாவது அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு வழி செய்யும் வகையில் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கூட்டுறவுத் துறையானது மக்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லிக்கொள்வதோடுகூட, இன்றைக்கு விவசாய மக்கள் இந்தக் கூட்டுறவுத் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள், மேலும் இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் படக் காட்சிகள், விளம்பரங்கள் மூலம் கூட்டுறவின் நன்மையை மக்களுக்கு உணர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. எல்லம்ம நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையானது இந்த நாட்டிலே நல்ல முறையிலே விவசாய மக்களும், சாதாரண மக்களும் பயன்பெறக்கூடிய அளவிலே அமைந்திருக்கிறது என்று

ரவையும், திறமையான அதிகாரிகளும் இந்த நாட்டிலே கூட்டுறவுத் துறைகளை நல்ல முறையிலே வளர்த்து வருகிறார்கள். அதற்காக நாம் எல்லோரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதோடு சில கருத்துக்களையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும், நீண்ட காலக் கடன்களையும் வழங்குகின்றன. மத்திய காலக் கடன்களையும், நீண்ட காலக் கடன்களையும் கொடுக்கும்போது சொத்தை அடமானமாக எழுதி வாங்கிக் கொள்ளுகிறார்கள். மூன்று ஆண்டுகள், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை விவசாயிகள் பத்திரப் பதிவு காரியாலயங்களுக்குச் சென்று மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடமானம் இல்லாமல் கூடுமான வரையில் அவர்களுக்குக் கடன் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. அதற்காக குறிப்பிட்ட அளவு தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு மேல் கொடுக்க முடியாது என்று மறுக்கப்படுகிறது. இந்தத் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் சுமார் 2,000 கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் குறையைச் சொல்லிக் கொண்டிருப்பதால் நான் இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அடுத்தபடியாக, முழுக் கடன் உதவித் திட்டம். 103 வட்டாரங்களில் கொண்டுவரப்பட்டது. அடுத்த ஆண்டு 70 வட்டாரங்களில் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த 103 வட்டாரங்களில் அவை நன்கு இயங்க வழிவகையில்லை. கோவை கூட்டுறவு மத்திய பாங்கு தலைவர் அவர்கள் சென்ற 25-ம் தேதி கூட டி.டி.சி. கூட்டத்தில் மத்திய பாங்கில் பணம் இல்லை. முழுக் கடன் உதவித் திட்டம் என்று ஒதுக்கிவிடுகிறீர்களே, அதை ஏற்று அதிகாரிகள் வட்டார அளவில் வற்புறுத்துகிறார்களே, அதற்குப் பணம் கொடுக்க வகையில்லை என்று தெரிவித்தார்கள். இதை அமைச்சர் அவர்களிடமும் எடுத்துச் சொன்னேன். ஆகவே கலெக்டர் இந்த ஆண்டு மீண்டும் தக்காவிக் கடன்கள் வழங்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. அம்மாதிரி வசதி கிடைப்பதற்கேற்ற முறையில் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் கோடவுன் வசதி, விவசாயப் பண்ணை போன்றவற்றைப் பற்றி கூறினார்கள். கோடவுன் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் விவசாயிகளின் விளைபொருள்களை வாங்கி வைக்கவும் நல்ல விலை வரும்போது அவற்றை விற்கவும் வசதியிருக்காது. ஆகவே கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கோடவுன்கள் கட்டும் முறையை ஊக்குவிக்கவேண்டும். பின்னர், கூட்டுறவு விவசாயப் பண்ணைகளைப் பொறுத்த வரையில், நம் தமிழ் நாட்டில்

விவசாயப் பண்ணைகள் திட்டமிட்டபடி வளரவில்லை. அதற்குரிய வழிவகைகள் வன் செய்யவில்லை என்று கனம் மெம்பர் கரிவேங்கடம் அவர்கள் கேட்டார்கள். கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை ஆரம்பித்தபோது நல்ல முறையில் பிரசாரம் நடைபெற்று வந்தது உண்மையே. ஆனால் கூட்டுறவு விவசாயப் பண்ணை முறை வெற்றி பெருது. அது பலன் தராது, அது இந்த நாட்டிற்கு உகந்ததல்ல என்றெல்லாம் சொல்கிற நண்பர்கள் பலர் இந்த நாட்டில் இருந்தார்கள். அதனால்தான் இதில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. அது நல்லமுறையில் ஊக்குவிக்கப்பட்டால் நன்கு நடைபெறும். நானே ஒரு சங்கத்தை ஆரம்பித்து நடத்தி வருகிறேன். அது நல்ல முறையில் நடைபெறுகிறது. அது மக்களுக்கு நல்ல முறையில் பலன் அளிக்கிறது. அதற்கு அரசாங்கம் ஆதரவு கொடுத்து அதிகாரிகள் நல்லமுறையில் ஊக்குவிக்கிறார்கள். ஆரம்பத்திலேயே பலன் காண்பது என்பது கஷ்டமே, அதற்காக நல்ல நல்ல வேலைகளை எல்லாம் கைவிடுவது சரியல்ல. அடுத்தபடியாக கிராம வீட்டு வசதித் திட்டத்தை ஹரிஜனங்களுக்கு அவசியம் நீடிக்கவேண்டும். கிராம வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஹரிஜனங்களுக்கு மனைக் கட்டுகள் கொடுப்பதோடு கூட வீடுகள் கட்டிக் கொடுக்கவும் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நம் முன்னே சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிற கூட்டுறவு மான்யத்தின்மீது என் கருத்துக்களை புலப்படுத்தி விரைவிலே முடிக்க எண்ணுகிறேன். கோவாப்பரேஷன் என்பதின் அடிப்படைத் தத்துவங்களை எல்லாம் நாம் இப்போது விவரித்துப் பேசிக் கொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஓரளவு அது நம் எல்லோருக்கும் தெரிந்ததே. அது இப்போது போய்க் கொண்டிருக்கிற முறையில் அந்த இலட்சியத்தை முற்றிலும் அடைவதற்குள்ள நெறியில் செல்லவில்லை என்று சொன்னால் அது வீண் குற்றச்சாட்டு என்று கொள்ளமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். கன்ஸ்யூமேர்ஸ் சொஸைட்டி என்று சொன்னால் யார் யார் வாங்கி துய்ப்பவர்களோ, பெற்று அனுபவிக்கிறவர்களோ, அவர்கள் அதில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். உறுப்பினராக உள்ள அவர்களுக்கே அங்கிருக்கிற பண்டங்கள் எல்லாம் விற்கப் பெறவேண்டும். வருகிறவர்கள், போகிறவர்களுக்கெல்லாம் விற்கக் கூடிய ஒரு ஷாப் மாதிரி அதை ஆக்கிவிடுவது என்றால் அடிப்படைத் தத்துவத்திற்கே அது முரண். அப்படி இருப்பதினால்,நான் இந்த முறை எல்லாவிடங்களிலும் வளர்ந்து செழிக்கமுடியாமல் போய்விடுகிறது என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேமாதிரி ப்ரொடியூசேர்ஸ் சொஸைட்டி என்று சொன்னால் உற்பத்தி செய்கிறவர்கள் எல்லாம் அதில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். உறுப்பினராய் உள்ள உற்பத்தி செய்கிறவர்களின் பண்டங்களை மட்டுமே அந்த சொசைட்டி வாங்கி அதை எப்படி விற்று அவர்

களுக்கு முதலாக்கிக் கொடுக்கவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு எங்கு விலை குறைவாக இருக்கிறதோ அங்கு வாங்குவது என்றால் அது இந்தத் திட்டத்தின் லட்சிய அடிப்படைக்கே விரோதமானது. அதேபோல் விவசாயிகளுக்கு வேண்டிய வாய்ப்பு, வசதிகள் செய்வதெற்கென்றே அகரிகல்சரல் கோவாப்பரேடிவ் சொஸைடிகள் அமையவேண்டும், முற்றிலும் அப்படி அமையவில்லை என்று சொல்லவில்லை. ஆனால் தேவையான அளவிற்கு, தக்க அளவிற்கு, பயன்தரக்கூடிய அளவிற்கு அவை இயங்கவில்லை. அதேமாதிரி மார்க்கட்டிங்க் சொஸைட்டிகளும் செயல்படவேண்டும். ட்ரேடிங் சொஸைட்டிகள் என்றும் வைத்துக் கொள்ளலாம். கண்டவற்றை எல்லாம் வாங்கி வேண்டியவர்களுக்கு எல்லாம் கொடுப்பதற்குக்கூட நெறிமுறைகளுக்கேற்ப இடம் இல்லாமல் இல்லை. பல்நோக்கு கூட்டுறவு முறையில் செய்வதற்குரிய எல்லாவற்றையும் வகைப்படுத்தி விட்டால், அந்தந்தத் துறையில் வேறு விதமாகச் செய்யக்கூடாது என்ற நிலை இருக்குமானால் செம்மையாக இருக்கும். அமெரிக்காவிலிருந்து கூட அரிசி வாங்கி வருகிறார்கள். எங்கும் அது விற்கப்படுகிறது. யார் போய்க் கேட்டாலும் ஒரு ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். நேற்றுமுன்தினமும் இதைப் பார்த்தேன். இவையெல்லாம் கூட்டுறவு தத்துவத்தை கொலை செய்யும் நெறியே தவிர அதை வளம் செய்வதற்குரிய முறை அல்ல. ஆகவேதான் கூட்டுறவுத் துறையில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்று சொல்லப்படுகிற உண்மையான குற்றச்சாட்டு நிவர்த்திக்கப்படாமல் போய் விடுகிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் புலப்படுத்திக்கொள்கிறேன். அதற்கு மேலே, பெயர் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அட்வான்சிங் சொஸைட்டி, லோன் சொஸைட்டி என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். விவசாயிகள் உற்பத்தி செய்கிற உணவு தான்யங்களை தேவையை முன்னிட்டு அழி விலைக்குக் களத்தில் விற்கும் நிர்ப்பந்தம் ஏற்படாதபடி அவர்களுக்கு தேவையான அளவுக்கு வேண்டிய பணத்தை கொடுத்து உதவி செய்வதற்கென்றே அது அமைய வேண்டும். அப்படியானால்தான் விவசாயிகள் அங்கு கடன் வாங்கவேண்டும், இங்கு கடன் வாங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் இருக்கும். அவை அந்தந்த வட்டாரத்திற்குள்ளேயே, சிறிய சிறிய எல்லைக்குள் உள்ள விவசாயிகளைக் கொண்டதாக அமையவேண்டும். அந்த விவசாயிகளுக்கு மட்டும் தான் அங்கு கடன் கொடுக்கவேண்டும். இதுபோன்று நிர்ணயம் செய்யவேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எங்கள் கோடவுனில் நெல் அல்லது வேறு தானியத்தை வைத்தால் 30 சதவிகிதம் கடன் கொடுக்கிறோம் என்று. அது போதாது. சாதாரண பாங்குகள் கூட கீ லோன் கொடுக்கும்போது, மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற அரசாங்கம், தாங்களே அமைத்துச் செயல்படுகிற கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு, கோடவுன் கட்டியிருக்கிற இடத்தில் மூட்டைகளை கொண்டு அடுக்கிவிட்டு பணம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றால் எவ்வளவு வீண்

விரயம்? அவ்வளவு இடங்கள் இருந்து வருகின்ற தானியங்களை எல்லாம் வைத்து எடுத்துப் போகவேண்டுமென்றால் மேலும் எவ்வளவு உழைப்பும் பணமும் செலவாகின்றன? அதோடு இவற்றை கண்காணித்து அவை பாழ்படாமல், கெட்டுப்போகாமல் காப்பதற்கு அனாவசியமாக உத்தியோகஸ்தர்களை வேறு போட வேண்டியிருக்கிறது. அப்படிப் போடுகிறவர்கள் அதை நிச்சயமாக காப்பதில்லை. நெல மூட்டைகள் எல்லாம் முளை மூட்டைகளாக மாறுவதைப் பார்க்கிறோம். ஆகவே இந்தமாதிரி நெறிமுறை இழிவுபடாமல் இருக்க, வீண் விரயம் ஏற்படாமல் இருக்க ஆங்காங்கு போட்டு சீல் வைத்து 50 மூட்டை ஒரு வீட்டில் என்று போட்டு உடையவரையே பார்த்துக்கொள் என்று சொன்னால்
12-00 noon வேலை முடிந்துவிடும். காவல், பராமரிப்பு போக்குவரத்துச் செலவு ஆகியவை மீதமாகும். இப்போது பெட்ரோல் விலை வேறு ஏறியிருக்கிறது. ஆக இப்படியெல்லாம் போய்கொண்டிருப்பது பொருத்தமல்ல. நான் கூறியது போன்று செய்தால் பணமும் மிச்சம், பண்டமும் கெடாது, மக்களுக்கு பலனும் அதிகமாகும். இதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்கிறேன். அதற்கு மேலே நாம் பத்திரிகைகளில் படிக்கிறோம். அங்கு மோசடி, இங்கு மோசடி, அங்கு திருட்டு இங்கு பித்தலாட்டம் என்றெல்லாம். அதற்காக நான் இந்தத் துறையை பழித்துச் சொல்லவில்லை. துறையின் நன்மையை நான் பழிக்கவில்லை. துறை பலன் தரக்கூடிய நிலையை மறந்துவிடவில்லை. பிறவேறு துறைகளில் அன்னியர் ஆட்சி காலத்தில் கூட மேற்கொண்ட சட்ட வரம்புகளை இந்தத் துறையில் நாம் கையாள வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுந் துறையாக இருக்கிற ஒன்றிலே, இது கிட்டத்தட்ட பொதுப் துறை, இன்னும் சொல்லப் போனால் கோவிலைப் போன்ற பொதுத் துறை, இங்கே யாரோ ஒரு குறிப்பிட்ட ஒருவர்தான் அந்த கேஸை நடத்தலாம், குறிப்பிட்ட ஒருவரைப் ப்ளீடராக நியமனம் செய்து விடுகிறது அரசாங்கம், அவருக்கு எவ்வளவு திறமை இருக்கிறதோ—அதெதற்கெல்லாம் நான் போகவில்லை. எதிர்த்து வருகிறவர்கள், மோசம் செய்தவர்கள், லட்சக் கணக்காகச் சாப்பிட்டவர்கள், நல்ல திறமையுள்ள வக்கீலை வைத்துக்கொண்டு, சட்டத்தின் அடியில் புகுந்துகொண்டு, தனக்கு சாதகமாக வழக்கைத் திருப்பி காரியங்களைச் செய்து கொள்ளக்கூடிய முறையில் வசதி இருக்கிறது. இந்த மாதிரி நிலைமையில் தனிப்பட்ட ஷேர் ஹோல்டர்களும் இதிலே பார்ட்டியாகச் சேர்ந்துக்கொண்டு, நம்பிக்கையுள்ள, திறமையான, தகுதியான வக்கீல் வைத்து இந்த கேஸை நடத்த வழிவகை இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டாமா? கோவில்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு சூட் நடக்கிறது என்றால், பக்தன் என்ற முறையில், அந்த வழக்கில் வாதியாகவோ பிரதிவாதியாகவோ சேர்ந்துகொண்டு வழக்காட, எதிர் வழக்காட உரிமை இருக்கிறது யாருக்கும். அதைப் போல இந்தத் துறையிலே ஷேர்ஹோல்டர்ஸ் பார்ட்டி

யாகச் சேர்ந்துக்கொண்டு வழக்காடுவதற்கு வழிவகை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமை, முறைமை, அதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று அழுத்தமாக விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டிலே நான் சிலவற்றைச் சொன்னேன். அதாவது கானிங் தொழில் எல்லாம் செய்யவேண்டுமென்று சொன்னேன். பொதுவாக, ராமநாதபுரம், நெல்லை, குமரி பகுதிகள் பனை நிரம்பிய பகுதிகள். பனை நுங்குகளை எடுத்து, கானிங் செய்து ஐஸ் ஆப்பிள் என்று பெயர் போட்டு பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம், அதனால் நிறைய வருமானம் வரும். ஜீரா காய்ச்சக்கூட பனங் கற்கண்டுகளையே உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அதை நடத்துவதற்கும் அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்குத் தொழில் நடத்துவதற்கு கோவாப்பரேடிவ் சொஸைட்டி ஏற்படுத்தி, சங்குகளை சங்கு வளையல், சங்கு மோதிரம் என்று தயார் செய்து, துண்டு-துக்கடாக்களைக்கூட முத்துப் போன்ற மணி மாலைகளாகச் செய்ய முடியும். அப்படிச் செய்தல் நமது மனப்பாங்குக்கு ஏற்ற முறையாகவும் இருக்கும். அதை நாம் ஏற்றுமதி கூடச் செய்ய முடியும்.

அதேபோல பனை. அதிலிருந்து பதனீர் இறக்கிப் பனை வட்டு, பனங்கற்கண்டு முதலியவற்றை நல்ல முறையில் செய்ய வேண்டும். பனை மட்டையிலிருந்து கயிறு, ப்ரஷ் முதலியவற்றைத் தயார் செய்ய நாம் ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு உரிய திட்டங்களை நாம் வகுக்கவேண்டும். அந்தந்தத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, அவர்களைக் கொண்டே பகுதிப் பொருளாகச் செய்து கொண்டுவரச் சொல்லலாம்—அதாவது ஸெமி-ப்ராஸெஸ்ட் பொருள்களாக. அவர்களைக்கொண்டு பனங்கற்கண்டுகளைச் செய்து கொண்டு வாருங்கள் என்று சொன்னால் அவர்கள் நல்ல முறையில் செய்துகொண்டு வருவார்கள். அதன் பிறகு அதை ப்ளீச் செய்து, வெள்ளை ஆக்கி, கவர்களில் போட்டு பாக் செய்து வெளியே விற்பனைக்கு அனுப்பலாம். காப்பிக்கு பனங்கற்கண்டு போடுவது சுவை அதிகமாக உள்ளது என்பது கனம் அமைச்சருக்குக்கூட தெரியும் என்று நினைக்கிறேன்; அவர்கள் அதை நீலகிரியில் கண்டிருப்பார்கள் என்றும் கருதுகிறேன். இதையெல்லாம் ஊக்குவிக்கவேண்டும். அந்தத் துறைக்கு நல்ல வளமான வருமானம் பெற வாய்ப்பு அளிக்கவேண்டும். என்ற நிலையில் இருக்கும்போது அந்தத் தொழிலாளர்களுக்கு 2 ரூபாய், 3 ரூபாய் லைசென்ஸ் ஃபீஸ் என்று வைத்திருப்பது பாபம். அது வளராமல் செய்வதற்காகச் செய்யப்படுகிற காரியம். பனைவட்டு முதலியவற்றைக் காய்ச்சுகிறவர்களுக்கு காடுகளில் சுள்ளி-சுப்பிகளை எடுத்துக்கொள்ள உரிமை கொடுக்கவேண்டும் . . .

திரு. சா. கணேசன் : இவைகளையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த கோவாப்பரேடிவ் முறையிலே அமைக்கப்படுகிற தொழிலுக்குள் வருகிற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் ஆனதால் பரிபூர்ணமான தொடர்பு இல்லாவிட்டாலும், ஒரு அளவுக்குத் தொடர்பு இருக்கிறது என்ற பொருளில் இதுவும் வரும் என்று சொல்லிக்கொண்டு, நேரமின்மையால் இதோடு முடிக்கின்றேன், வணக்கம்.

* **திரு. மு. கருணாநிதி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று கூட்டுறவு மான்யத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பிலே எனது நண்பர் வடிவேலு அவர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையில் நீண்ட நெடுங்காலமாக நல்ல அனுபவம் பெற்றவர்கள் அந்த கூட்டுறவுத் துறையிலே மேலும் நல்ல முன்னேற்றம் காணவேண்டும் என்கிற நோக்கத்தோடோ என்னவோ, அண்மையிலே ஆளும் கட்சியோடு கூட்டுறவு கொண்டு, இன்றைய தினம் அமைச்சராகப் பணி புரிந்து இந்தத் துறையை மேலும் மேலும் வளர்ப்பதற்காக நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக இந்த நேரத்திலே அவருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலம் கூட்டுறவுத் துறையில் வேறு மாநிலங்களை விட உயர்ந்து விளங்குகிறது என்றும், மேம்பட்டு இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆனால் அத்தகைய ஒப்பிட்டுப் பார்க்கிற தன்மை, உயர்ந்து விளங்குகிறது என்று குறிப்பிடுகிற விமர்சனம், கூட்டுறவுத் துறையினுடைய திறமையைப் பொறுத்ததாக இருக்கிறது என்று என்னால் கூற முடியுமே தவிர, அதே நேரத்தில் திறமைக்கும் நேர்மைக்கும் இடையிலே இருக்கிற வேறுபாட்டையும் நான் இங்கே உணர்த்தாமல் இருக்க முடியாது. இங்கு பேசிய பல உறுப்பினர்கள் நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டுறவுத் துறையில் எங்கெங்கே தவறுகள் விளைகிறது, எங்கெங்கே பொல்லாச் செயல்கள் நடைபோடுகின்றன என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஏழை எளியவர்கள் வாழ்விலே நிம்மதி பெறவும், அவர்களுக்கும் செல்வர்களுக்கும் இடையிலே இருக்கிற இடைத் தரகர்கள் முறை ஒழிக்கப்படவும், அவர்கள் வேளாண்மைத் துறையிலும், வேறு பல துறைகளிலும், வாழ்வில் வளம் பெறவும் இந்தத் துறை ஒரு காலத்திலே மிகப் பெரியவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு 1904-ம் ஆண்டில் ஜெர்மனி நாட்டிலே இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய தந்தை என்று கூறப்படுகிற ரைஃபிஸன் என்பவர் முயற்சி பின்பற்றப்பட்டு, இந்தியாவிலே 1904-ல் கூட்டுறவு முறையில் கடன் வழங்குவது என்ற நிலையில் சட்டம் உருவாக்கப்பட்டு, 1912-ம் ஆண்டு கடன் வழங்குவதற்கு மாத்திரம் இல்லாமல், அதைப் போலவே பண்டங்களை உற்பத்தி செய்தல். வாங்குதல்.

அவைகளை விற்பது, வீடு கட்டுவது, இன்ஷ்யூரன்ஸ் முதலிய எல்லாத் துறைகளிலும் இந்தக் கூட்டுறவு முறையை விரிவுபடுத்த வேண்டுமென்று அந்தச் சட்டம் உருவெடுத்தது. ஏறத்தாழ 50-வது ஆண்டு விழாவைக் கொண்டாடி நடைபோட்டுக்கொண்டிருக்கிற இந்தத் துறை மேலும் வளரவேண்டும் என்பதற்காக நாங்கள் எடுத்துச் சொல்லுகிற யோசனைகளை இந்தத் துறையின் அமைச்சர் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பயன்படுத்துவோர் கூட்டுறவு சங்கம் என்கிற நிலைமையில் 50,000 மக்கள் கொண்ட நகரங்களில் இன்றைய தினம் பயன்படுத்துவோர் கூட்டுறவு சங்கம் அமைகிறது என்றும், அதனுடைய முக்கிய நோக்கம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசினர் இந்தத் துறையிலே மேற்கொண்டிருக்கிற முயற்சிக்கு நான் பாராட்டுதலைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. ஆனால் 50,000 மக்கள் கொண்டிருக்கிற நகரத்தில் தான் இந்த பயன்படுத்துவோர் கூட்டுறவு சங்கம் இருக்க முடியும் என்கிற நிலைமையிலிருந்து, மேஜர் பஞ்சாயத்து போன்ற இடங்களில் கூட, 50,000-க்கும் குறைந்த அளவில் மக்கள் இருக்கிற இடங்களில்கூட, விலைவாசியை கட்டுப்படுத்துவதற்காக இந்தப் பயன்பெறுவோர் கூட்டுறவு சங்கங்களை அமைக்கவேண்டுமென்ற முறையில், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபடத் தொடங்குவோருக்கு ஆதரவு நல்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரிடமிருந்து, மத்திய அமைச்சர்களிடமிருந்து மாநில சர்க்காருக்கு ஒரு வேண்டுகோள் வந்தது. அந்த வேண்டுகோள் பெட்ரோல் பம்ப்களும், சர்வீஸ் ஸ்டேஷன்களும் கூட்டுறவு முறையில் இயங்கிட வகை செய்யவேண்டுமென்ற முறையில் மாநில சர்க்காருக்கு அறிவுறுத்துகிற வேண்டுகோள். அதை இந்த அரசினர் எந்த அளவு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கு இந்த அரசு ஆக்கமும் ஊக்கமும் தர முன்வர இருக்கிறார்களா என்கிற விவரங்களை அறிவதற்கு ஆவலாக இருக்கிறோம். அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையில் வேறு மாநிலங்களோடு நம் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் திறமை மிகுந்தது என்று எடுத்துச் சொன்னாலும், எண்ணிக்கை அளவில் இந்த மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்கள் குறைவாகத் தான் இருவுக்கின்றன. ஆந்திர மரநிலத்தில் 1 லட்சம் மக்களுக்கு 63 சங்கங்கள் என்றும், அஸ்ஸாம் மாநிலத்தில் 1 லட்சம் மக்களுக்கு 59 கூட்டுறவு சங்கங்கள் என்றும், பீஹார் மாநிலத்தில் 1 லட்சம் மக்களுக்கு 62 சங்கங்கள் என்றும், பஞ்சாபில் 1 லட்சம் மக்களுக்கு 158 சங்கங்கள் என்றும், மத்தியப் பிரதேசத்தில்

1 லட்சம் மக்களுக்கு 82 சங்கங்கள் என்றும், உத்திரப் பிரதேசத்தில் 1 லட்சம் மக்களுக்கு 91 சங்கங்கள் என்றும் இருக்கிற நிலைமையில் தமிழகத்திலே 1 லட்சம் மக்களுக்கு 45 சங்கங்கள் தான் இருப்பதாக 1958-59-ம் ஆண்டு புள்ளிவிவரம் கூறுகிறது.

அது மாத்திரமல்ல. கிராம கூட்டுறவு சங்கங்கள் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், கடன் வழங்குகிற கிராம கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை, ஆந்திராவில் 12,527; பீகாரில் 16,222; மத்திய பிரதேசத்தில் 20,629; பஞ்சாபில் 17,107; உத்தர பிரதேசத்தில் 57,136; மேற்கு வங்கத்தில் 13,000 சொச்சம். ஆனால், தமிழ் நாட்டில் 9,500 என்ற நிலையிலே புள்ளிவிவரம் இருக்கிறது. இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இன்னும் இங்கே 9,000 கூட்டுறவு சங்கங்கள்தான் இருக்கின்றன, அவைகளை ஏன் விரிவுபடுத்தக்கூடாது என்பதைக் காட்டுவதற்குமட்டுமல்ல; 1958-ல் தேசீய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமத்திற்கு ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கவேண்டும் என்று ஒரு யோசனை இருந்தும், அது அமல் நடத்தும் நேரத்தில் சில இடையூறுகள் ஏற்பட்ட காரணத்தினால், 1959-ல் மேதா குழுவினர் சமர்ப்பித்த யோசனைகளுக்கு இணங்க 3,000 மக்களுக்கு ஒரு கிராம கூட்டுறவு சங்கம் என்ற நிலைமையில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அது 3,000 மக்களுக்கு ஒரு கிராம கூட்டுறவு சங்கம் என்ற முறையிலே 9,500 சங்கங்கள் என்ற அளவோடு நின்று இருக்கலாம். அதற்கு மேல் யோசித்து கிராம மக்கள் நலன் பெறவேண்டும் என்று 3,000 க்குப் பதிலாக 2,000-க்கு ஒரு சங்கம் என்ற அளவிலாவது சங்கங்கள் நிறுவ வேண்டும், கிராம மக்கள் நல்ல பயன் பெறுவதற்கு ஆக்க பூர்வமான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதை வலியுறுத்தவே சொல்லுகிறேன். கூட்டுறவு சங்கங்கள் அதிகமாகத் தோன்றாததற்குக் காரணம், எனக்கு முன் பேசியவர்கள் சிலர் குறிப்பிட்டது போல, பிரசாரங்கள், நல்ல விளம்பரங்கள் கிராம மக்களை ஈர்க்கும் அளவுக்கு இங்கே நடைபெறாததுதான். அந்த முறையில் நாம் முன்நின்று கிராம மக்கள் போராதரவு தரும் வகையில் அவர்களை ஈடுபடுத்த முனையவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிலாளிகளுடைய நலனுக்காக நன்கொடை அளித்து வீடு கட்ட கடன் வழங்கும் திட்டம் இருக்கிறது. அது மத்திய அரசு நன்கொடை கொடுப்பதால் செயல்படும் திட்டம். தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம், அவர்களுக்கு வீடு கட்ட தரப்படுகிற தொகை, 65 சதவிகிதம் கடன் ஆகவும், 25 சதவிகிதம் நன்கொடையாகவும், 10 சதவிகிதம் தொழிலாளியே ஏற்கவேண்டும் என்ற நிலையிலே இருக்கிறது. அந்த கடன் உதவி எப்பொழுது தரப்படுகிறது? வீடு கூரை மட்டம் கட்டின பிறகு முதலில் 50 சதவிகிதமும், பிறகு மீதமுள்ள 50 சதவிகிதம் வீடு கட்டி முடித்த பிறகும் கொடுக்கப்படுகிறது. தொழிலாளிகளுக்கு ஏற்படுகின்ற சங்கடம் என்னவென்றால், மனை விலை ஏறி இருப்பதால், கட்டட சாமான்கள், செங்கல் மற்ற

வேண்டிய 10 சதவிகித பங்கை செலுத்த முடியாமல், அந்த அளவிலே தொழிலாளிகளுக்கு வீடு கட்டும் இந்த திட்டம் வெற்றிகரமாக இல்லை. கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தில் மனை நீங்கலாக ஆகிற செலவில் 80 சதவிகிதம் கடன் ஆகவும் தரப்படுகிறது. விளை நிலத்தை ஈடாகத் தந்தால், 87½ சதவிகிதம் கடனாகத் தரப்படுகிறது. இதற்குப் பதிலாக வீடு கட்டும் திட்டத்திலே, வாடகைக்கு காலனிகளைக் கட்டி, கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு வீடுகளைச் சொந்தமாக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். கடனைப் பெறுவதற்கு ஈடாக மனைகளையோ அல்லது வேறு சொத்துகளையோ, விளை நிலங்களையோ காட்ட வேண்டிய நிலைமையில் மாறுதல் ஏற்படவேண்டும். நடுத்தர வர்க்கத்தினர் ஆனாலும் சரி, அதற்குக் குறைந்த நிலையில் இருக்கிறவர்களானாலும் சரி, அவர்களுக்கு வீடு கட்டும்போது அவர்களுக்கு தரப்படும் கடன் உதவி விஷயத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையைப் பின் பற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களில் ஆகட்டும், சிறு நகரங்களிலாகட்டும், இந்தக் கடன் உதவி பெற்று கட்டப்படுகிற வீடுகளெல்லாம் நகரப் புரத்தின் எல்லையில், அதன் ஓரத்தில்தான் அமைகின்றன. உள்ளே நகரத்தின் நடுவே அல்லது கிராமத்தின் நடுவே அதற்கு போதுமான இடம் இல்லாத காரணத்தினால் அப்படி ஓரங்களில் வீடுகள் கட்டப்படுகின்ற காரணத்தினால் வெளியிலே பார்வைக்கு அழகாக கிராமத்தில் கட்டப்படுகின்ற புது வீடுகள் இருக்கின்றனவே தவிர, கிராமங்களின் உள்ளே இருக்கும் வீடுகள் பொலிவு இழந்தும் இடிபாடு உள்ளதாகவும் காட்சி அளிக்கின்றன. ஆகவே புதிய வீடுகள் கட்டுவதற்கு மட்டுமல்லாமல், பழைய வீடுகளைப் புதுப்பிக்கவும் இந்தக் கடன் உதவி திட்டம் அமல்படுத்தப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வேன். "அதற்கு பாங்குகள் மூலம் அத்தகைய கடன்களைப் பெற்றுக் கொள்ளலாம்" என்று அமைச்சர் சொல்லலாம்; ஆனால் இந்த முறையில்தான் 20 ஆண்டு காலத்தில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் ஆக அந்தக் கடனைத் திருப்பித்தரும் சூழ்நிலையும் அப்படிப் பட்ட வாய்ப்பும் சலுகையும் இருக்கிறது. ஆகவே இந்தக் கடன் உதவித் தொகை புது வீடு கட்டுவதற்கும் பழைய வீட்டை பழுது பார்க்கவும் அளிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் கிராமம் பொலிவு கெடாமல் புதுக்கோலம் பூணும். அதை ஆழ்ந்து சிந்தித்து இந்த நல்ல முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. அதை நான் சொல்லும்போது அமைச்சரவர்கள் அதை நிலாவில் உள்ள களங்கம் என்று வருணித்தாலும் வருணிக்கலாம்; ஆனால் என்னைப் பொறுத்த வரையில், அது அழகான உடலில் உள்ள புண் என்பேன்; அழகான உடலில் சிறு புண் வந்தாலும் அது புற்றோடும் அளவுக்குப் போய் விடக்கூடாது என்ற எச்சரிக்கையோடு இந்தக் குறைபாடுகளை அணுகவேண்டும் என்று

தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைய தினம் கூட்டுறவு நிறுவனங்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு பல சந்தர்ப்பங்களில் அணுகப்படுகின்றன. இல்லை என்று கூற முடியாது. உதாரணமாக ஒரு நகரத்தில் நெசவாளர்களுக்கான கூட்டுறவு அமைப்புகள் இரண்டு இருந்தன. அந்த நகரத்தில் மூன்றாவது கூட்டுறவு அமைப்பு ஒன்று தேவை என்று பல காலமாக முயன்றார்கள். அப்பொழுது அவர்களுக்குச் சொல்லப்பட்ட பதில் என்ன வென்றால் "இரண்டு அமைப்பிலே ஏதாவது ஒன்றில் சேருங்கள்" என்று உபதேசிக்கப்பட்டது. இதில் ஒரு அமைப்பு காங்கிரஸ் கட்சி சார்புடையது; மற்றொன்று கம்யூனிஸ்ட் கட்சி சார்பு உடையதாக இருந்தது. ஆகவே, அந்த மக்கள் கட்சி சார்பு இல்லாத ஒரு புது அமைப்பில் நாங்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நெடுங்காலத்திற்குப் பிறகு அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அப்படி அங்கீகாரம் அளிக்கப் பட்ட பிறகு, இப்பொழுது உள்ள முறையில் முதல் ஆண்டில் இந்த கூட்டுறவு நிறுவனத்திற்கான டைரக்டர்களை நியமிக்கும் முறையில் யாரை நியமிக்கலாம் என்று ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு சிபாரிசு செய்து ஒரு பத்துப் பெயர்களைத் தந்தார்கள். அதை ரெஜிஸ்ட்ரார் பார்த்துவிட்டு, குறிப்பிட்ட ஒரு பெயரை அடித்து விட்டு—அவர் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணமோ என்னவோ எனக்குத் தெரியவில்லை, அந்தக் குறிப்பிட்ட பெயரை அடித்துவிட்டு—அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. பெயரை இணைத்துவிட்டார். ஆனால் அந்த தொகுதி எம்.எல்.ஏ. "நான் டைரக்டராக இருக்கமுடியாது" என்று மறுத்துவிட்ட பிறகுகூட முதலில் அடிக்கப்பட்ட பெயர் சேர்க்கப்பட்டதா என்று பார்த்தால், சேர்க்கப்படவில்லை. வேறொரு நபரை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் கூறினார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், இப்படிப்பட்ட கட்சிக் கண்ணோட்டத்தோடு கூட்டுறவு சங்கங்கள் செயல் படக்கூடாது என்பதை சுட்டிக்காட்டத்தான். கட்சிக் கண்ணோட்டத்தோடு நடைபெறுகிறது என்பதற்கு நான் இன்னும் பல உதாரணங்களை கொடுக்கக்கூடும், அதை மெய்பிக்க முடியும். அதிகாரிகள் மட்டுமல்ல, அமைச்சர்களே கூட சில நேரங்களில் பலியாகிவிடக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை வருத்தத்தோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எதிர்க் கட்சிக் கூட்டங்களில் ஆளும் கட்சிக் காரர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்று கட்சி அறிக்கை ஒன்று வெளியிட்டிருப்பது எனக்குத் தெரியும். உதாரணமாக அண்மையில், இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன்பு, கள்ளக் குறிச்சிக்கு அருகே நெசவாளர்களின் காலனி திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நெசவாளர்களின் காலனி திறப்பு விழாவில் மதிப்பிற்குரிய அமைச்சர், கூட்டுறவுத் துறைக் காகப் பாடுபடும் அமைச்சர் கனம் மன்றாடியார் அவர்கள், கலந்துகொள்வதாக இருந்தது. அதே நெசவாளர் காலனி திறப்பு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் கலந்துகொள்வதாகவும்

இருந்தது—இந்த மன்றத்திலே இருப்பவர் அல்ல, வெளியே உள்ள எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர். ஆனால் அவர் அந்த காலனி திறப்பு விழாவிற்கு என்று புறப்பட்டுப் போய் பாதி வழி சென்ற பிறகு, அவருக்கு தந்தி வருகிறது, "வரவேண்டாம்; மந்திரியவர்கள் தன் சுற்றுப்பிரயாணத்தை ரத்து செய்துவிட்டார், விழாவிற்கு அவர் வரவில்லை" என்று. என்ன காரணம்? அதுவரையில் வந்தவர், பக்கத்து ஊர் வரை வந்தவர், எதிர்க் கட்சிக்காரர் கலந்துகொள் கிறார் என்ற ஒரு காரணத்திற்காக—அந்தத் தலைவர் அவர்களுக்கு நீண்ட நெடுங்காலமாக, புதிய தொடர்பு ஏற்படுவதற்கு முன்பே, அவர் இவருடைய பழம்பெரும் நண்பராக இருந்தாலும் கூட, கட்சியின் உத்தரவை நிறைவேற்றவேண்டும் என்ற காரணத் தினால்—அந்த இடத்திற்கு வர அச்சப்பட்டு, அமைச்சரவர்கள் கள்ளக்குறிச்சிக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது. இந்த அளவில் கட்சிக் கண்ணோட்டத்தோடு கூட்டுறவு அமைப்புகள் இயங்கக் கூடாது. அதிலும் மந்திரிகள் அதில் தங்களுடைய செயல்களை ஈடுபடுத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு அமைப்பில் இன்றைய தினம் இப்படிப்பட்ட கட்சி வேறுபாடு களும், கட்சி மாச்சரியங்களும் ஏற்படுவதற்குக் காரணம், அங்கு இருக்கும் தலைவர்கள், அங்கே இருக்கிற அங்கத்தினர்கள் தங்களை யாரும் அசைக்க முடியாது என்ற எண்ணத்தில் இருப்பதினால் தான். இன்றையதினம் அவர்கள் அசைக்கப்படுவதற்கு சட்ட மில்லாத காரணத்தினால்தான், 3 வருடங்களுக்கு மேல் ஒருவர் தொடர்ந்து தலைவராக இருக்கக்கூடாது என்ற சட்டம் இந்த மன்றத்தில் வந்து, அது நிறைவேற்றப்படாத நிலைமை ஏற்பட்ட காரணத்தினால், யாரும் தங்களை அசைக்க முடியாது என்ற அளவில் உடும்புப் பிடியாக அந்த ஸ்தாபனத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால்தான் அவர்கள் எதையும் செய்ய முடிகிறது. வேறு யாருக்கும் அங்கே வழி விடுவதில்லை. கூட்டுறவு இயக்கம் ஜனநாயகத்திலே அமைந் திருக்கிற முறையிலே செயல் படாத அளவுக்கு நிலைமை முற்றி விட்டது. ஆகவே, மீண்டும் இந்த மன்றம் புனராலோசனை செய்து அப்படிப்பட்ட தலைவர்கள் 3 தடவைக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்ற நிலைமையில், 3 தடவைக்கு மேல் பதவி வகிப்ப வர்கள் தொடர்ந்து இருக்கக்கூடாது என்ற அளவில் சட்டம் இயற்றுவதற்கு மீண்டும் யோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கட்சி மாச்சரியங்களுக்கு கடைசியாக ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். அரக்கோணம் தாலுகாவில் பணப்பாக்கம் பிர்க்காவில் கூட்டுறவு விவசாய பாங்கில் கடன் தருவதற்காக கடன் கேட்டவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு, கையெழுத் திடவேண்டிய நிலையில், தலைவர் 'யார், இவருக்கா கடன்' என்று புருத்துவதை நெறித்து, 'இவர் தேர்தலில் எனக்கு எதிராக இருந் தாரே' என்று கேட்டு, கையெழுத்திட மறுத்துவிட்டதாகச் செய்தி வருகிறது. இவைகளெல்லாம் கூட்டுறவு ஸ்தாபனத்தில்

புரையோடக்கூடிய புண்களாக ஆகிவிடாமல் எச்சரிக்கையோடு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நல்ல நோக்கத்தோடு தொடங்கப்பட்ட, இன்றையதினம் வேறு மாநிலங்களை விட விசேஷமாக நடைபெறுகிறது என்று பாராட்டப்பட்டிருக்கிற, கூட்டுறவு இயக்கம் மேலும் மேலும் வளத்தோடும், நல்ல பெயரோடும், சீரோடும், சிறப்போடும், புகழோடும், பொலிவோடும் வளர்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கை விவாதிக்கப்பட்டபொழுது கட்சிச் சார்பின்றி எல்லோரும் பலவிதமான யோசனைகளைச் சொன்னார்கள் என்பது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நான் முன்பே சொன்னேன், கூட்டுறவு முறை என்பது கட்சி சார்பிலே இருக்கவேண்டாம் என்று? அந்த முறையில் எல்லோரும் பேசினது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் அதைப் பற்றி நல்ல முறையில் சொல்லிவிட்டார்கள். சமீபத்தில் நடந்த ஒரு விழாவைப் பற்றியும் அவர்கள் சொன்னார்கள். அந்த விழா ஆரம்பிப்பதுபற்றி எனக்கு சந்தேகம் இருந்தது. அந்த விழாவை ஆரம்பிக்கவேண்டுமென்று என்னிடம் சொல்லிக்கொண்டு வந்தார்கள். நான் சேலத்திற்குச் சென்றிருந்தேன். சில மாறுதல்கள் இருப்பதாகவும், அதற்குப் பிறகு தாங்கள் பத்திரிகை போடுகிறோம் என்றும் 2 நாட்களுக்கு முன்பாகச் சொன்னார்கள். ஒரு வாரத்திற்கு முன்பே சொல்லக்கூடாதா, இவ்வளவு குறுகிய காலத்தில் சொல்லுகிறீர்களே என்று நான் அவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். பிறகு அவர்கள் எப்படியும் நாங்கள் விழாவை நடத்துகிறோம், அதற்கு நீங்கள் வழிவகை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். 'உங்கள் இஷ்டம்' என்று நான் சொல்லி வைத்தேன். பிறகு திருவண்ணாமலைக்குச் சென்று, அங்கு அடுத்த விழாவுக்குச் போகவேண்டியிருந்தது. அவர்கள் பத்திரிகை கைக்கு வரவில்லை. விழா நடக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை. அதற்குப் பிறகு கூட விழா இருக்குமா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்தேன்.

பிறகு திருவண்ணாமலையில் அந்தத் தொகுதி அங்கத்தினர் பழனிப் பிள்ளை அவர்கள் இறந்துவிட்டதால், பிரேத ஊர்வலத்தில் கலந்துகொள்ளவேண்டுமென்று நான் அங்கேயே இருந்துகொண்டேன் . . . .

திரு. மு. கருணாநிதி : இங்கிருந்து அனுப்பப்பட்ட அமைச்சர் அவர்களின் சுற்றுப்பிரயாண அறிக்கையிலே இந்த விழா பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. திருவண்ணாமலை நண்பர் இறப்பதற்கு முன்பே அமைச்சர் அவர்கள் வரவில்லை என்ற தந்தி அவர்களுக்குக் கிடைத்துவிட்டது என்ற தகவல் இருக்கிறது.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ப்ரோகிராமில் நான் போட்டிருந்தேன். சேலத்தில் அவர்கள் கேட்டார்கள். அதற்குப் பிறகு எனக்கு அழைப்பு வரவில்லை நான் ஏன் அதைச் சொல்லுகிறேன் என்று கேட்டால் கனம் அங்கத்தினர் அவர்கள் அதைப் பற்றி இந்த மன்றத்தில் குறிப்பிட்ட காரணத்தினால் சொல்லுகிறேன். நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவுத்துறையை நல்லமுறையிலே இயங்க வைக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் உருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த எண்ணத்திலே தான் நானும் சொல்லுகிறேன். மற்ற விஷயங்கள் பற்றி சில விளக்கங்கள் கொடுத்தார்கள். நமது சென்னை ராஜ்யத்தில் கூட்டுறவுத் துறை நன்றாக இயங்கிக்கொண்டிருக்கிறது, கூட்டுறவு ஸ்தாபனங்கள் நன்றாக நடந்துகொண்டிருக்கின்றன என்று சமீபத்தில் கூட எனக்கு மத்திய சர்க்காரிடமிருந்து வந்த ஒரு கடிதத்தில் புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி நான் பெருமைப்படுகிறேன். நமது மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்களின் வொர்கிங் காபிடலை எடுத்துக்கொண்டால் 100 கோடி ரூபாய்க்கு மேலாக அதில் புழங்கிக்கொண்டிருக்கிறது. அதே மாதிரி 50 லட்சம் மேம்பர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள். பல அங்கத்தினர்கள் கோளாறுகள் இருப்பதைப் பற்றி பேசினார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசினார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் அதைப்பற்றி பேசினார்கள். கோளாறுகள் இருப்பதை கவனிக்கவேண்டுமென்று யோசனை சொன்னார்கள். கோளாறுகளை கவனிக்கவேண்டுமென்ற யோசனையை ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும், மொத்தமாக கோளாறு எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால், 'ஃப்ராடு' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், 'ஃப்ராடு' எவ்வளவு நடந்திருக்கிறது என்று மொத்தமாகக் கணக்குப் பார்த்தால், நம்முடைய மாநிலத்தில் மிகவும் குறைந்த சதவிகிதம் தான் என்று சொல்லவேண்டும். நான் இதைச் சொல்லவில்லை. மத்திய சர்க்கார் சமீபத்தில் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை எல்லாவற்றையும் சொல்லவேண்டுமென்றால் ஒரு மணி நேரத்திற்கு மேலாகும். குறிப்பாக ஒன்றை மாத்திரம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை நாம் எடுத்துக்கொண்டு பார்க்கும்பொழுது, 'ஃப்ராடு' மொத்த அளவு எவ்வளவு என்று பார்க்கும்பொழுது, 0.03 சதவிகிதம் தவறுதல் இருக்கிறது என்ற கணக்கு இருக்கிறது. இவ்வளவு பேர்களும் ஒன்றாகச் சேர்ந்து இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்கிற நேரத்தில் இதை ஒரு பெரியதாக எண்ண வேண்டியது அவசியமில்லை.

• இன்னும் எவ்வளவோ சங்கங்களை அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். இந்த விரிவுரையிலே கண்டிருப்பதைப் பார்த்தால், போன ஆண்டில் அதிகமாக சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன, இந்த ஆண்டில் குறைவாக இருக்கிறது என்ற எண்ணத்திலே

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]
[23rd March 1963

சொல்லலாம். வைக்கவேண்டிய இடங்களிலெல்லாம் சங்கங்கள் வைத்தாகிவிட்டது கிராமப்புறங்களில். அநேகமாக 100-க்கு 100 எல்லா கிராமங்களிலும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அநேகமாக எல்லா இடங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் நிறுவிவிட்டோம். இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கு பேர்கள் கூட்டுறவு சங்கங்களில் டைரக்டர்களாகவோ அல்லது தலைவர்களாகவோ இருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்ல, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அதுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். ஆகையால் அவர்கள் அதை விட்டுக்கொடுத்து பேச முடியவில்லை. கோளாறு இருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. ஏனென்றால் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் அந்த ஸ்தாபனங்களில் தலைவர்களாகவும், டைரக்டர்களாகவும் இருக்கிறார்கள். மொத்தத்தில் கணக்குப் பார்த்தால், இங்கு இருக்கக்கூடிய 206 மெம்பர்களில் மந்திரிகள், ஸ்பீக்கர் இவர்களைத் தவிர அநேகமாக எல்லோருமே இந்த ஸ்தாபனங்களில் ஏதாவது ஒரு விதத்தில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது ஒரு நல்ல உற்சாகத்தைக் கொடுக்கிறது. அங்கத்தினர்களே கிராமங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பாவவில்லை என்று மக்களிடையே சொல்லிக்கொண்டிருப்பது நல்லது அல்ல என்று நினைக்கிறேன். இதைப்பற்றி விளக்கம் கொடுக்கக்கூடியவர்கள் அங்கத்தினர்கள்தான். அந்த மக்கள் வோட்டுப் போட்டுத்தானே உங்களை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்தில் நடக்கின்ற நல்ல காரியங்களை கனம் அங்கத்தினர்களும் எடுத்துச் சொல்லி விளம்பரப்படுத்தவேண்டும். அது அவர்களுக்கும் பெருமையும் கூட. அந்தப் பெருமையில் உங்களுக்கு சேரக் கூடிய விகிதாசாரத்தை நீங்கள் அடையவேண்டும். மக்களுக்கு அங்கத்தினர்கள் எல்லோரும் எடுத்துச் சொல்ல வேண்டும். கூட்டுறவுத்துறை நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது, மக்களுக்காக நல்ல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று கிராம மக்களிடம் சொல்லவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கும் ஊக்கம் ஏற்படும். இந்த சங்கங்களெல்லாம் நல்ல முறையில் நடக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் 'பாட் டெட் ரிசர்வ் பண்டு' என்று 80 லட்சம் ரூபாய் வரைக்கும் நாங்கள் ஒதுக்கி வைத்திருக்கிறோம். எந்தெந்த சங்கங்களுக்கு எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து நாங்கள் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அது மாத்திரமல்ல. விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்க பல இடங்களில் கோடவுன்களைக் கட்டிக்கொடுத்திருக்கிறோம். கோடவுன்களில் தானியங்களை வைக்கவில்லை, பூட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள் சில அங்கத்தினர்கள். இரண்டு தரப்பிலும் உள்ள அங்கத்தினர்கள் அவ்வாறு சொன்னார்கள். எப்பொழுதுமே கோடவுன்களில் தானியங்களை வைத்துக் கொண்டிருக்க முடியாது. திரு. கணேசன் அவர்கள் கோடவுன்களில் தானியம் முளைத்துவிடும் என்று சொன்னார்கள். வீட்டிலே

[திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார்]
23rd March 1963]

வைத்திருந்தாலும் தானியம் முளைக்கலாம். வீட்டிலே தானியங்களை வைத்துவிட்டால் குடியிருப்பதற்கு வெளியே இடம் தேட வேண்டிய நிலைமை ஏற்படலாம். கிராமங்களிலுள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்யவேண்டுமென்றுதான் கோடவுன்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த கோடவுன்கள் நல்ல முறையில் உபயோகப்பட்டு வருகின்றன. ஒவ்வொருவராக பெயரைச் செல்லுவதற்கு எனக்கு நேரமில்லை. பொதுவாக எல்லோரும் ஒரு விஷயத்தைப் பற்றி சொன்னார்கள். கோடவுன்கள் ஊருக்குப் பக்கத்தில், கிராமத்திற்குப் பக்கத்தில் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஊருக்குள்ளேயே இடம் கிடைத்தால் அங்கே கோடவுன் கட்டுகிறோம். வெளியே நிலம் கிடைத்ததென்றால் வெளியே கட்டுகிறோம். சில நண்பர்கள் தாங்கள் இலவசமாக நிலம் கொடுக்கிறோம் என்று சொன்னால், அந்த இடங்களிலே கோடவுன்கள் கட்டுகிறோம். ஆகவே, இந்த கோடவுன்கள் கட்டுவதினால் எல்லா இடங்களுக்கும் பிரயோசனம் ஏற்படுகிறது எப்பொழுது பார்த்தாலும் கோடவுன்களிலே தானியங்கள் இருக்கவேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். அப்படி இருந்தால் விவசாயிகள் கஷ்டப்பட வேண்டியிருக்கும். அந்தந்த தானியங்கள் கைக்கு வரும்பொழுது கோடவுன்களில் வைக்கிறோம். நல்ல விலை கிடைக்கும்போது, அவற்றை விற்பனை செய்து, பணத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம். அந்த முறையில்தான் கோடவுன்கள் இருந்து கொண்டிருக்கின்றன. திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் இதைப் பற்றி மிகவும் விளக்கமாகச் சொன்னார்கள். ஒரு கோடவுன் இருக்கிற இடத்திலே இரண்டு, மூன்று கோடவுன்கள் கட்ட வேண்டுமென்று நினைக்கிறார்கள். விரிவு படுத்த வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கோடவுன்களிலே தானியங்களை வைப்பதற்குப் பயப்படுகிறார்கள், சந்தேகப்படுகிறார்கள் என்றெல்லாம் சிலர் சொன்னார்கள். அப்படி ஒரு பயமும் இல்லை. பல இடங்களிலே கோடவுன்களைக் கட்டி, அவற்றில் தானியங்களை வைத்து, நல்ல விலை வரும்போது விற்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தானியங்களை வைப்பதற்கு விவசாயிகள் பயப்படுகிறார்கள் என்றால், அங்குள்ள தலைவர்கள் அல்லது டைரக்டர்கள், அல்லது அங்கத்தினர்களைப் பொறுத்து ஏதாவது கோளாறு இருக்கலாம் என்று நினைக்கிறேன். அவ்வாறு கோளாறு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நம் எல்லோரிடத்திலும் இருக்கிறது.

கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்கு உபயோகப்படக்கூடிய வகையில் நல்ல காரியங்களைச் செய்து வருகிறோம். நெசவாளர்களுக்கான நூலை ஆங்காங்கு ஜில்லாக்களிலே கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்பொழுது இரண்டு, மூன்று மில்கள் ஓடுகின்றன. இன்னும் இரண்டு, மூன்று மில்களைப் புதிதாகக் கட்டிக்கொடுக்க முடியும். ஜில்லாவிற்கு ஒன்று என்ற கணக்கில் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. அதே பிரகாரம் சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்டால், கரும்பு விளைகிற

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

இடங்களில் சர்க்கரை ஆலைகள் வைத்துக்கொண்டு வருகிறோம். இப்பொழுது இரண்டு, மூன்று ஆலைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. சேலத்தில் ஒரு ஆலை இயங்குவதற்குத் தயாராக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது ஒன்றிரண்டு ஆலைகளில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்திலிருந்து என்ன செய்ய வேண்டுமோ அதை உடனடியாகச் செய்துகொண்டு வருகிறோம். இந்த ஆலைகளிலே அரசாங்கம் பங்குகள் கூட எடுத்துக்கொள்ளுகிறார்கள். இவற்றை நல்ல முறையில் நடத்துவதற்கு அரசாங்கத்தில் பொறுப்பான ஆட்கள் இருக்கிறார்கள். பொறுப்பான டைரக்டர்களையும் நியமித்திருக்கிறார்கள்.

பல விஷயங்களைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்ட பால் பண்ணைகளைப் பற்றிச் சொன்னார்கள், ஃபார்மிங் சொஸைடிகளைப் பற்றிச் சொன்னார்கள். இவற்றில் இரண்டு, மூன்று இனங்கள் இருக்கின்றன. இவைகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. இன்னும் அதிகமாக கூட்டுறவு ஃபார்மிங் சொஸைடிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கூட ஒரு அங்கத்தினர் தெரிவித்தார். எவ்வளவு வேண்டுமானாலும் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிறோம். ஆனால், விவசாயிகள் முன் வர வேண்டும். நிலங்களை கொடுக்க வேண்டும். சர்க்கார் நிலங்களைக்கூட ஹரிஜன மக்களுக்கு கொடுத்து, அங்கே இந்த சொஸைடிகளை ஏற்படுத்தி வருகிறோம். கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் டெனன்ட் ஃபார்மிங் சொசைடிகள் ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். இந்த வருஷத்திலே அதிகமாக 30 பண்ணைகளுக்கு மேலாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் முயற்சி எடுத்து வருகிறார்கள். இப்பொழுதுதான் இம்மாதிரி சொசைடிகள் வேண்டும், வேண்டுமென்று கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. அவற்றை உடனடியாக கவனித்துக் கொண்டு வருகிறோம்.

மற்றும், நில அடமான பாங்குகள் மூலம் கடன் கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். காலதாமதம் ஏற்படாத வகையில் அவர்களே ஒரு தொகையைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். ஸ்டேட் பாங்கிற்கு வந்து உத்தரவு ஆக வேண்டும் என்பதல்ல. பிரைமரி பாங்குகள் ரூபாய் 3,000 வரையிலும் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். நீண்ட காலக் கடன்கள், குறுகிய காலக் கடன்கள், இவைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். குறுகிய காலக் கடன்கள்தான் அதிகமாகக் கொடுக்க வேண்டும். அதுதான் மக்களுக்கு வசதியாக இருக்கும். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஒருவருக்குக் கொடுக்கும் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அதிகமான பேர்களுக்குக் கொடுக்க முடியாது. விரிவாகக் கொடுக்க முடியாமல் போய்விடும். இன்றைய நிலையில் ஒவ்வொருவரும் கூட்டுறவுத் துறையில் எவ்வளவு வாங்கியிருக்கி

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

றார்கள் என்ற புள்ளி விவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில் அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 212 சராசரியாகக் கொடுத்திருக்கிறது. கடன் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் அதைத் திருப்பி வாங்குவதிலே தாமதம் ஏற்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய மாகாணத்திற்கும், மற்றைய மாகாணங்களுக்கும் கணக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்பொழுது, அகில இந்திய சராசரி கணக்கைப் பார்த்தால், 'ஓவர்டியூஸ்' 21 சத விகிதம் என்று சொல்லுகிறார்கள். சென்னையிலே 8 சத விகிதம் தான் இருக்கிறது. மற்றைய இடங்களில் எல்லாம் அதிகமாக இருக்கிறது. இது பெருமைப்படக்கூடிய, மகிழ்ச்சிக்குரிய ஒரு விஷயம். சர்க்காருக்கு மட்டுமல்ல, இதிலே ஈடுபட்டுள்ள எல்லாருக்கும் பங்கு உண்டு. அவரவர்களுடைய கிராமங்களிலே எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதிலே எந்தவிதமான அரசியல் கட்சிகளுக்கும் இடம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திரு. முனு ஆதி அவர்கள் ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு நீண்ட புகாரைக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒருவருக்கும் தெரியாமல் அந்த இடத்தை நேரில் சென்று பார்த்தேன். அவர் சொன்னதற்குப் பின்னர் என்று நினைக்க வேண்டாம். அதற்கு முன்பேதான் சென்றேன். எனக்கு ஒரு பெரிய சந்தோஷம். ஒரு விடுமுறை நாளன்று சென்றேன். யார் இருந்தார்களோ, இல்லையோ, எங்கள் இலாக ஆபீசர் அவருடைய வேலையை கவனித்துக் கொண்டிருந்தார். எல்லோரும் இருப்பார்கள், ஒருவேளை இலாகா ஆபீசர் இருக்க மாட்டரோ என்று நான் நினைத்தேன். நான் வந்தது அவருக்கே தெரியாமல் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். யாருமே ஒரு தவறும் செய்யாமல் காரியங்களைச் செய்துவிட முடியாது. நமக்குத் தெரியாமல் சில தவறுகளைச் செய்து விடுகிறோம். அதற்குப் பிறகுதான் அதைப்பற்றி உணர்கிறோம். இந்த இலாகாவைச் சார்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்களது கடமைகளைச் சரிவரச் செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு அங்கத்தினரும் பல விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள். நமக்குக் கிடைக்க வேண்டிய ஸ்டேட் ஷேர்காபிடல் தொகையிலே சில கோளாறுகள் இருக்கின்றன, அதை நல்ல முறையில் கவனித்திருந்தால் இன்னும் அதிகமாகத் தொகை கிடைத்திருக்குமென்று சொன்னார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சென்ற வருஷக் கணக்கைப் பார்த்தால் நாம் என்ன கேட்டோமோ, அவர்கள் அப்படியே கொடுத்து விடவில்லை. அதைவிடக் குறைவாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். வங்குகிற சக்தி நமது பாங்கில் குறை

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]
]22nd March 1963

வாக இருக்கிறது என்பதல்ல. கிடைத்த தொகையை நல்ல முறையில் செலவழித்தோமா, எல்லோருக்கும் கொடுத்தோமா என்று பார்க்கும்பொழுது, அதிலும் ஒருசில குறைபாடுகள் இருக்கின்றன. அதை நிவர்த்திப்பதற்கு முயற்சி எடுக்கலாம். மேலும் ஷேர் காபிடல் தொகையை ரிசர்வ் பாங்கிலிருந்து அதிகமாகக் கொடுப்பதற்கு முன்வருவார்கள் என்றால், அதற்கு வேண்டிய முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். ஆடிட்டர்கள் விஷயத்தில் சில முக்கியமான சங்கதிகளைச் சொன்னார்கள். செகரடரி, ஆர். ஸி. எஸ். எல்லோரும் யோசித்து வருகிறார்கள். எதாவது ஒரு நல்ல முடிவு எடுத்து, நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. வடிவேல் அவர்கள், இந்த மானியத்தின் மீதான விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், சில விஷயங்களைச் சொன்னார்கள். நான் முதலில் பொதுவாகச் சொன்ன விஷயத்திலேயே, அவர்கள் குறிப்பிட்டதற்கும் அனேகமாகப் பதில் கிடைத்திருக்குமென்று நான் நினைக்கிறேன். அந்த ஒரு முயற்சியையும் நாங்கள் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

விவசாயத்தைப் பெருக்குவதற்கான சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கனம் அங்கத்தினர் திரு. தியாகராஜ பிள்ளை அவர்கள் சொன்னார்கள். அதுவும் நல்ல முறையில் அரசாங்கத்தால் கவனிக்கப்பட்டு வருகிறது. அது மாத்திரமல்ல. சென்ற வாரத்திலேகூட, அதற்கென்று ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றிக்கூட, நாங்கள் பத்து நாட்களுக்கு முன்பு பேசினோம். நான் மாத்திரமல்ல. எனது தலைமையில் இரண்டு, மூன்று கனம் அமைச்சர்களும் அதில் இருக்கிறார்கள். தலைமை அதிகாரிகள் சிலரும் அதில் இருக்கிறார்கள். நாங்களெல்லோரும் கூர்ந்து கவனித்து, உடனடியாக என்ன என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று தீவிரமாக அந்தக் காரியத்தில் இறங்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனது பகுதியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் சில விஷயங்களைச் சொன்னார்கள். ஈரோட்டிலிருந்து சென்னைக்குப் பால் வந்துகொண்டிருக்கிறது. 'அங்கேயே பக்கத்தில் பல சங்கங்களை ஏற்படுத்தினால் நல்லது' என்று அவர்கள் சொன்னார்கள். ஈரோட்டிலே ஒரு யூனியன் இருக்கிறது. இருபது மைல் சுற்றளவில் கிடைக்கும் பால் அத்தனையும் அந்த யூனியன் மூலமாகவே கொடுக்கவேண்டும் என்று ஒரு முடிவு செய்திருக்கிறோம். பலப் பல சின்னச் சின்ன சங்கங்களை வைத்து, அதற்கு ஒரு போட்டியை உண்டாக்க வேண்ண்டாம், யூனியன் நல்ல முறையில் வளர்ந்து, அதிகமாகப் பால் வந்தால், பிறகு யோசிக்கலாம் என்று இருக்கிறோம்.

23rd March 1963]
[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

சங்கங்களை ஏற்படுத்துவதென்றால் அதில் ஒன்றும் கஷ்டம் இல்லை. அதற்காகத்தான் கூட்டுறவு இலாகா அதிகாரிகள் இருக்கிறார்கள். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களிலே கூட எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் அதற்கென இருக்கிறார்கள். எந்த இடத்தில் எந்த சங்கம் அமைக்கவேண்டுமென்றாலும், அதற்காகத் தலைமை அதிகாரியிடம் போகவேண்டியிருக்காது. ஆங்காங்கு பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரியே முயற்சி எடுத்து சங்கங்களை ஏற்படுத்த உதவுவார்கள். ஆக, சங்கங்களை ஏற்படுத்துவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் திருமதி குழந்தையம்மாள் அவர்கள் கூட, 'பால் வாங்கும்போது ஒரு விலையும், மக்களுக்கு விற்கும்போது இன்னொரு விலையும் வைக்கிறார்கள், இதிலே அதிக வித்தியாசம் இருக்கிறது' என்பதைப் பற்றிச் சொன்னார்கள். நேரடியாகக்கூட அவர்கள் என்னிடம் அதுபற்றிச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் கூட, குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இதுபற்றி இரண்டு, மூன்று நாட்களுக்கு முன் நான் அதிகாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, 'இதற்கு ஒரு வழி செய்தால் நல்லது, அதிக வித்தியாசம் இருக்கக் கூடாது' என்று சொன்னேன். அவர்கள் 'படிக் (மெஷர்) கணக்கில் வாங்குகிறார்கள், லிட்டர் கணக்குப் போட்டு கொடுக்கிறார்கள், இதிலே ஏதோ வித்தியாசம் இருக்கிறது, அதனால், விலை உயர்ந்துவிடுகிறது' என்று சொன்னார்கள். உடன்டியாகக் கவனிப்பதில் அக்கறை எடுத்துக் கொள்வதாகவும் சொன்னார்கள். இதை எல்லாம் கவனிப்பதற்கு மில்க் கமிஷனர் இருக்கிறார்கள். அவருடைய கவனத்திற்கு இது கொண்டுவரப்படும். நல்ல முறையில் அவர்கள் கவனித்துக் கொள்ளுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சில கனம் அங்கத்தினர்கள் பேசும்போது, 'நிலமில்லாத ஏழைகளுக்குக் கடன் கொடுப்பதில்லை' என்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு நான் கணக்கு வேண்டுமானாலும் கொடுக்க முடியும். இன்று எவ்வளவு தொகை மொத்தமாக நாம் கடன் கொடுத்திருக்கிறோமோ அதில் பத்திலொரு பங்கு ஏழை மக்களுக்கு என்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், வரிசையாக என்றால் சொல்வதற்கு முடியும். சென்னை நகரத்தை விட்டுவிட்டு, ஜில்லாக்களினுடைய கணக்கை மட்டும் பார்த்தால், நிலமில்லாத ஜனங்களுக்கு நாம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கடன் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். 'நிலமில்லாதவர்களுக்கு ஒன்றுமே கடன் கொடுக்கவில்லை, சங்கத்திலே அவர்களைச் சேர்த்துக்கொள்வது இல்லை' என்றெல்லாம் சொல்வது சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நிலமில்லாதவர்களைக் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்த்

[திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார்]

துக் கொள்வதில் கஷ்டம் இல்லை. யாராவது அங்கத்தினராக வேண்டுமென்று கோரி, அவரை அங்கத்தினராகத் தலைவரோ, மற்றவரோ சேர்த்துக்கொள்ளவில்லை என்ற புகார் சர்க்காருக்கு வந்தால், உடனடியாக அதைக் கவனித்து, கண்டிப்பாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசாங்க அதிகாரிகள் கொஞ்சங்கூடத் தயங்கமாட்டார்கள் என்று நான் இங்கே உறுதியாகக் கூற விரும்புகிறேன். ஆனால், இது பலருக்குத் தெரியவில்லை. நிலமில்லாவதர்களுக்குக் கடன் கொடுக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில்தான் பல பேர்கள் இருந்துவிடுகிறார்கள். எல்லோருக்கும் கடன் கிடைக்கும் என்ற நிலையை அவர்களுக்குக் கனம் அங்கத்தினர்களும் எடுத்துச் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நான் சொல்லும்போது, ஒன்று சொல்ல விரும்புகிறேன். 'இவ்வளவு சொல்கிறீர்களே, கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக மக்களுக்குத் தெரியவில்லையே, அதற்காக நீங்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?' என்ற முறையில் கூடச் சில கனம் அங்கத்தினர்கள் இங்கே பேசினார்கள். யூனியன் மூலமாக ஆங்கிலப் பத்திரிகையொன்றும், தமிழ்ப் பத்திரிகையொன்றும் நடத்தப்படுகின்றன. கூட்டுறவு விஷயமாக அன்றாடம் நடக்கும் விஷயங்களைப் பற்றியும், கூட்டுறவுத் துறையில் என்னென்ன நன்மைகள் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் விரிவாக அந்தப் பத்திரிகைகளில் வெளியிடப் படுகின்றன. மிகவும் அக்கறை கொண்டு, யூனியனில் பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

யூனியன் கட்டடத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிடப் பட்டது. 'மூன்று லட்சம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி, பிறகு ஏன் அதை நிறுத்திவிட்டீர்கள்?' என்று இங்கே கேட்கப்பட்டது. இப்பொழுது நாட்டிலிருக்கும் நெருக்கடி நிலைமையை நான் இங்கே எடுத்து விளக்கத் தேவை இல்லை. அது தான் காரணம். ஆனால், யூனியனுக்குக் கீழ் பல பாங்குகள் இருக்கின்றன. அவற்றிடமிருந்தே இந்த மூன்று லட்சம் ரூபாயையும் வாங்கிக்கொண்டு கட்டடத்தைக் கட்டிவிடலாம். 'சர்க்கார் தொகையை கொடுக்காமல் நிறுத்திவிட்டார்கள்' என்று சொல்லி, கட்டடத்தை அப்படியே நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. கூவம் ஆற்று ஓரத்தில் அந்தக் கட்டடம் அமைவது நன்றாகத்தான் இருக்கும். நானும் கூடக் கூவம் ஆற்றங்கரை ஓரத்தில்தான் வசித்துக்கொண்டிருக்கிறேன். சென்னைக்கு வருகிற கூட்டுறவாளர்கள் தங்குவதற்கு அப்படிப் பட்ட கட்டடம் நல்ல முறையில் வசதியாகத்தான் இருக்கும். அந்தக் கட்டடத்திற்கு வேண்டிய தொகையை யூனியனின் கீழிருக்கும் சங்கங்களைக் கேட்டால் அவர்கள் அதைச் சுலபமாகக் கொடுத்துவிடுவார்கள். கூட்டுறவு பாங்குகளில் ஆங்காங்கு சௌகரியங்கள் இருப்பதுபோல, அவர்களே அந்தக் கட்டடத்திற்கு வேண்டிய தொகையைக் கொடுத்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திரு. நல்ல ல்பனுபதி சர்க்கரை மன்றாடியார்]

சென்னை ராஜ்ய நில அடமான பாங்கின் தலைவர் என்ற முறையில், கனம் அங்கத்தினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சில விஷயங்களைப்பற்றிச் சொன்னார்கள். அந்த விஷயங்களைக் குறித்தெல்லாம். இப்பொழுது நல்ல முறையில் நாங்கள் கவனித்து வருகிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறியைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சக அமைச்சர் அவர்கள் என்னையே இதைக் குறித்துப் பேசுமாறு சொல்லியதன் பேரில் நான் பேசுகிறேன். புகத்தறியை எடுத்துக்கொண்டால் நல்ல முறையில் விரிவாக பல சங்கங்கள் இயங்கி வருகின்றன. அதைக் குறித்து சர்க்கார் உள்ளபடியே பெருமைப் படலாம். சமீபத்தில் கண்காட்சி வைத்து நல்லமுறையில் காரியங்கள் செய்கிறார்கள். அதற்கு வேண்டிய ரிபேட் சென்னை சர்க்காரும் மத்திய சர்க்காரும் நல்ல முறையில் கொடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் திருமதி லக்ஷ்மீ காந்தம்மாள் அவர்கள் 'ஆர்ட் ஸில்க்குக்கு ரிபேட் கொடுக்கப்படவில்லை, அதனால், துணிகள் தேக்கமாக இருக்கின்றன' என்று சொன்னார்கள். இப்பொழுது தேக்கம் ஒன்றும் இல்லை. தேக்கம் இருக்கும் துணிகளை நாம் நல்ல முறையில் விற்பனை செய்ய வேண்டும் என்றுதான் ரிபேட் கொடுக்கிறோம். அவர்களுக்கு நல்ல உதவி செய்யப்படுகிறது. ஆர்ட் ஸில்க் துணிகளைப் பொறுத்தவரையில் அவை தேக்கமாக இல்லை, தேக்கம் ஏற்பட்டதனால் காரியம் கெட்டுவிட்டது என்ற நிலை ஏற்படக் கூடுமானால், அதை உரிய சமயத்தில் நன்றாகப் பரிசீலனை செய்து, அதற்கும் தக்க பாதுகாப்பைக் கொடுக்க இந்த சர்க்கார் தயங்காது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விசைத் தறிகள் (பவர் லூம்ஸ்) மறைந்து கொண்டிருக்கும் நேரத்தில், அவற்றை விஸ்தரிக்கவேண்டாம் என்பது உத்தேசம். பல்லடத்திலும், சோமனூரிலும் 73 விசைத் தறிகள் இருக்கின்றன. திருப்பூரில் ஐந்து விசைத் தறிகள் இருக்கின்றன. ஆக மொத்தம் 78 விசைத் தறிகள் இருக்கின்றன. இது எங்களுக்குத் தெரிந்த புள்ளி விவரம். எங்களுக்குத் தெரியாமலேயே யாராவது விசைத் தறிகள் வைத்திருக்கலாம். அதற்குக் கணக்கு என்னிடம் இல்லை. 'விசைத் தறிகளை அதிகமாக விரிவு படுத்த வேண்டாம், விசைத் தறி வைப்பதற்கு உற்சாகம் கொடுக்க வேண்டாம்' என்று மத்திய அரசாங்கம் இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். என்றாலும், இதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது விஷயம் இப்பொழுது அந்தக் கமிட்டியின் பரிசீலனையில் இருக்கிறது. அவர்கள் இதைப்பற்றி ஆலோசனை செய்து, வேண்டுமா, வேண்டாமா என்று சொல்வார்கள். கமிட்டியின் யோசனை

[திரு. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

குப் பிறகுதான் அரசாங்கம் முடிவெடுக்கப் போகிறார்கள். அதற்குப் பிறகு ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று நான் நினைக்கிறேன்.

என்னுடைய சகா அமைச்சர் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் அன்றொரு நாள் பேசும்போது, 'ஒரு நாளைக்கு இரண்டு தொழிற்சாலைகள் வீதம் நமது தென்னகத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன, அந்த அளவுக்கு அன்றாடம் ஏற்படுத்துகின்ற ஒரு முறையில் நாம் செய்கின்றோம்' என்று பெருமையாகச் சொன்னார்கள். அதைப் போலவே, ஒரு நாளைக்கு ஐந்து வீடுகள் கட்டி முடித்து புண்ணியாவசனம் செய்து குடியேறிக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள், 'இரண்டு' என்று சொன்னார்கள், நான் 'ஐந்து' என்று சொல்கிறேன். ஆனால், அவர்கள் சொல்லியது பெரிய விஷயம். என்றாலும், நான் 'ஐந்து' என்று இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், 'வீடு கட்டும் திட்டத்திலே சோம்பல் இல்லை' என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான். ஆக, ஒரு நாளைக்கு ஐந்து வீடுகள் வீதம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வருஷம் இந்தக் கணக்கு சரியாக இருக்கும். ஆனால், வருகிற ஆண்டில், நாட்டில் இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையை ஒட்டி, கன்ஸ்ட்ரக்ஷன் முறையை நாம் சற்றுக் குறைத்துக்கொண்டிருக்கிறோம். அடுத்த ஆண்டு புள்ளி விவரத்தில் இது குறையுமோ என்னவோ, அதற்கெல்லாம் என்னென்ன முறையில் செய்யலாமோ அதைச் செய்து கொள்ளலாம்.

இன்னும் பல விஷயங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம் என்றால், நேரம் இல்லை. இதை அடுத்து இன்னும் இரண்டு மானியக் கோரிக்கைகள் வர இருக்கின்றன என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அவற்றின் மீதும் ஒருசில கனம் அங்கத்தினர்கள் பேசவேண்டியிருப்பதால், இதில் நான் அதிக நேரம் பேச விரும்பவில்லை.

பொதுவாக, கூட்டுறவு இயக்கம் நம் ராஜ்யத்தில் நல்ல முறையில் வளர்ந்துகொண்டு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் இதில் கட்சி மனப்பான்மை தேவை இல்லை. எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவு பெற்றுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், எல்லோரும் அக்கறை கொண்டு, அதிகப்படியானவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேரும் நிலைமையை நாம் ஏற்படுத்த வேண்டும். 100 சத விகித அளவுக்கு இல்லாவிட்டாலும், குறைந்தது 90 சத விகித அளவிற்காவது மக்கள் இந்த இயக்கத்தில் சேருவதற்கான முயற்சியை கனம் அங்கத்தினர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அரசாங்கமும் அதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளும். அரிய யோசனைகளைத் தெரிவித்த கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்து, நான் சொன்ன விவரத்தை வைத்து, வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்த கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய வெட்டுப்பிரேரணையை வாபஸ் பெற்றுக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையுடன் உரையை முடிக்கிறேன்.

DEMAND NO. XIX—CO-OPERATION, DEMAND NO. XVII—
FISHERIES, DEMAND NO. XXXV—FOREST DEPARTMENT
AND DEMAND NO. XLIV—CAPITAL OUTLAY ON FORESTS

23rd March 1963]

[திரு. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 2,63,56,100 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,63,56,100 under Demand No. XIX—Co-operation.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: The Demand relating to Fisheries and the cut motion under it are before the House for discussion.

* **திரு. ஆ. துரை அரசன்**: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் நம்முடைய மாநிலத்திலே மீன் வளம் பெருகி இருக்கிறது. கடல் மீன்களும் உள்நாட்டு மீன்களும்கூட அபிவிருத்தி அதிகரித்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்திலே வாழ்கின்ற லட்சக்கணக்கான மீனவர் குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் மேலும் உயருவதற்கான நல்ல பல திட்டங்களை ஏற்படுத்தி தரவேண்டுமென்று மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களை, கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அறந்தாங்கி வட்டத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் கட்டுமாவடி, அம்மாபட்டினம், கோட்டைப்பட்டினம், மீமிசல்புதூர், புத்துக்கிடா போன்ற இடங்களில் நூற்றுக் கணக்கான மீனவர் குடும்பத்தினர் வாழ்கின்றார்கள். அவர்களுடைய பொருளாதார நிலைமை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற இந்தச் சமயத்திலும், மிக மிக மோசமாக இருக்கின்றதென்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மீனவர்களுக்காக பல இடங்களில் வீடு காட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வந்தது. ஆனால் தற்போது தேசிய நெருக்கடியை முன்னிட்டு அறந்தாங்கி வட்டத்தில் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த வீடுகட்டும் வேலைகள் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூறினார்கள். ஆயினும் அந்த மீனவ மக்கள் வீட்டு வசதி இன்றி கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதன் காரணமாக வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவ மக்கள் தாங்கள் பிடித்த மீனை 50, 100 மைல்களுக்கு மேல் உள்ள இடங்களுக்கு எடுத்துச்சென்று விற்கவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். என்னுடைய வட்டத்தில் அவ்வாறு மீன்களை விற்பதற்காக சைக்கிள் மூலம் எடுத்துச்செல்லும் தொழிலாளர்கள் 300-க்கு மேல் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்கு நம்முடைய அரசாங்கம் எந்த அளவிற்கு சலுகைகளைக் கொடுத்திருக்கிறதென்று பார்த்தால் எந்தவித சலுகையும் இந்த நாள்வரை அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த மீன்பிடித் தொழிலிலேயும் சைக்கிள் மூலம் விற்பனையிலும் ஈடுபட்டிருக்கின்றவர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்களுடைய குடும்பத்தினர் அந்த சமயத்தில் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய குடும்பம் பாதிக்கப்படாத அளவுக்கு அரசாங்கம் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீனவர்களுக்கு நைலான் வலைகள் கொடுப்பதற்காக சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வலைகளைப் பெறுவதற்கான நடைமுறைகள் என்னென்ன என்பதை கிராமப்புறங்களிலே இருக்கின்ற மீனவ மக்கள் சரியானபடி புரிந்துக்கொள்ள முடியவில்லை. அங்கு இருக்கின்ற மீனவ மக்களுக்கு என்னென்ன சலுகைகளை அரசாங்கம் கொடுக்கிறதென்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ஆகவே அரசாங்கமே நேரடியாக அவற்றை எல்லாம் கவனித்து மீனவ மக்கள் உண்மையிலேயே பயனடைகிற அளவுக்கு காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ மக்களின் வீடுகள் கடலரிப்பின் காரணமாக பழுதடைந்துவிடுகிறபடியால் கடலரிப்பைத் தடுப்பதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களுடைய சமூக பொருளாதார நிலைமை, கல்வி நிலைமை, ஆகியவற்றை உயர்த்துவதற்கு முன்வரவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்** : கனம் சபா நாயகர் அவர்களே: மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மீன் இலாகா மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மேட்டூரிலே வருஷத்திற்கு 300 டன்னிலிருந்து 400 டன்வரை மீன் பிடிக்கப்படுகிறது. ஆனால் சர்க்காருக்கு அந்த இலாகாவிலிருந்து வரக்கூடிய வருமானம் கிட்டத்தட்ட 26,000 ரூபாய்தான். மீன் பிடிப்பதற்காக அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு 100 ரூபாய் விதம் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளைப் பற்றி

தேதி அங்கு நேரிலே வந்திருந்தபோது நல்ல முறையிலே பரிசிலனை செய்தார்கள். அதற்காக எங்கள் தொகுதியின் சார்பிலே நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்., மீன் பிடிக்கக்கூடிய மீனவர்கள் ஒரு கிலோ கிராம் மீனை 71 ந.பை-வுக்கு சொசைட்டிக்குக் கொடுக்கிறார்கள். அதை அந்த சொசைட்டி 81 ந.பை-வுககு காண்டிராக்டருக்கு விற்கிறார்கள். அவர்கள் அதை கல்கத்தாவிற்கு அனுப்பி ஒரு கிலோ கிராமிற்கு கிட்டத்தட்ட ரூ. 2.50 ந.பை பெறுகிறார்கள். இந்த நிலையை அமைச்சர் அவர்கள் நேராகவே பார்த்தார்கள் அவ்வாறு கல்கத்தாவுக்கு அனுப்புகிற வியாபாரிகள் ஒரு வருஷத்திலே குறைந்தது மூன்று லட்ச ரூபாய் லாபமடைகிறார்கள் என்பதை உணர்ந்து கூட்டுறவு முறையிலே சொசைட்டியின் மூலமாக நேரடியாகவே கல்கத்தாவிற்கு அனுப்பி அந்த லாபத்தை மீனவர்கள் அடையச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேட்டூரைப் பொறுத்தவரையில் அங்கு பிடிக்கப்படுகிற மீன்கள் சேலத்திலோ அல்லது நம்முடைய மாகாணத்திலோ விற்கப்படுவதில்லை. குறிப்பாக, அங்கு பிடிக்கப்படுகிற மீன்களைச் சேலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்ற உத்தரவை உடனடியாகப் போட்டு சரியான முறையில் உத்தியோகஸ்தர்களைப் போட்டுக் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கிருக்கக் கூடிய மீனவ மக்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வீட்டு வசதியைச் செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டூர் அணையைச் சுற்றியும் நல்ல ரஸ்தா இல்லாததன் காரணமாக அங்கு இருக்கக்கூடிய மீனவர்கள் பிடித்த மீன்களை படகில் கொண்டுவரவேண்டியிருக்கிறது அதனால் காலதாமதம் ஆகிறது. உடனடியாக மேட்டூர் அணையைச் சுற்றிலும் நல்ல ரஸ்தாவை அமைத்துக்கொடுத்தால் அவர்கள் மார்க்கட்டுக்கு மீன்களை கொண்டுவர வசதியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக; மேட்டூரிலே மீன்களை குளிர்பதன சாதனத்தில் வைப்பதில்லை. அதற்குக் காரணங்கேட்டால் மீன்கள் குறைவாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அந்த குளிர்பதன சாதனத்தை பரீஸிங் பிளாண்ட்டாக மாற்றி அமைக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு இருக்கக்கூடிய மீனவர்கள் நல்ல லாபம் பெறவேண்டுமென்றால் தனிப்பட்டவர்களிடம் மீன் விற்கும் பொறுப்பை கொடுக்காது கூட்டுறவு முறையிலே நடத்த வேண்டுனெ்மறு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

1-00 p.m. * **திரு. ஏ. சுவாமிநாதன் :** மதிப்பு மிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குப்பகுதி முழுவதும் கடற்கரை பகுதி. கிட்டத்தட்ட ஒரு லட்சம் மீனவர்கள் அங்கு வாழ்கிறார்கள, என்று குறிப்பிட்டால் மிகையாகாது. ஒரு ஆண்டில் எட்டு மாத காலம் அவர்களுக்குப் பஞ்சம்தான். முன்னால் அவர்களுக்குக் கிடைத்த மீன் இன்று அவர்களுக்குக் கிடைப்பதில்லை. கடலில் வேலை செய்துவிட்டு அவர்கள் மீன் கிடைக்காமல் வாட வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். அவர்கள் "கடலில் மீன்வளமும் இல்லை, அதற்கு காரணமும் புலப்படவில்லை" என்று சொல்கிறார்கள். ஒருவேளை இலங்கையிலிருந்து வருகிற மீன்பிடிக்கும் கப்பல்காரர்கள் அந்தப் பகுதியிலுள்ள மீன்களை எல்லாம் பிடித்து விடுகிறார்கள். அதனால் தான் மீன் கிடைப்பதில்லை; என்றும் சொல்கிறார்கள். விசைப்படகைப் புகுத்துவதினால் கட்டுமரத்தை வைத்துக்கொண்டு மீன் பிடித்தால் அதிகமான மீன் கிடைப்பதில்லை என்று இன்னொரு காரணத்தைச் சொல்கிறார்கள். இன்னும் பல காரணங்களையும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். உண்மையில் அங்கு மீன்வள்ம் குறைந்து கடலிலே மீன் வள்ம் இல்லாமல் போய் விட்டதா என்பதைப் பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்து நல்ல குறிப்பாகச் சொல்லப்போனால் நார்வே, ஜப்பான் நாட்டிலுள்ளவர்கள் மீன் பிடிப்பதிலும் மீன் வளர்ப்பதிலும் சிறந்து விளங்குகிறார்கள். அங்கு நிபுணர்களை அனுப்பி எந்தெந்த முறையில் மீன் பிடிக்கிறார்கள், எவ்வாறெல்லாம் மீன் வளர்க்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

ஜப்பானிலே பார்த்தால் சுறா, பாரை போன்ற இனங்களில் பெரிய மீன்களைத்தான் அவர்கள் பிடிக்கிறார்கள். சிறிய குஞ்சுகளைப் பிடிப்பதில்லை. ஆனால் இங்குள்ளவர்கள் கையில் அகப்பட்ட மீன்களைப் எல்லாம் பிடித்துக்கொண்டு வருகிறார்கள். இன்னின்ன பருவத்தில் உள்ள மீன்களைத்தான் பிடிக்கவேண்டும், இன்னின்ன உருவத்திலுள்ள மீன்களைத்தான் பிடிக்கவேண்டுமென்று ஒரு வரையறையிருக்கவேண்டும். அப்படியில்லாமல் சிறு குஞ்சுகளையும் பிடித்தால் மீன் வளம் குன்றி விடுகிறது. ஜப்பானில் உள்ளதைப் போல இங்கும் இன்னின்ன பருமனுள்ள சுறா மீனைத்தான் பிடிக்க வேண்டும், இன்னின்ன பருமனுள்ள பாரை மீனைத்தான் பிடிக்க வேண்டும் என்று கட்டுப்பாடு இருந்தால் எப்போதும் மீன் கிடைக்க வசதியாக இருக்கும். ஆகவே ஜப்பான், நார்வே போன்ற பகுதிகளுக்கு இங்குள்ள நிபுணர்களை அனுப்பிப் பரிசிலனை செய்யவேண்டும்.

மீன் அதிகமாகப் பிடிப்பதற்கு விசைப் படகுகளை வழங்கியிருக்கிறார்கள். அது எல்லோருக்கும் கொடுக்க முடியாது. ஆழ்கடல் மீன்பிடிப்பு (Deep see fishing) க்காக விசைப் படகுகள் வழங்கப்படுகின்றன. இன்றைக்கு கொடுத்திருக்கக் கூடிய இந்த விசைப்படகுகளை வைத்துக்கொண்டு ஆழ்கடலில் மீன் பிடிக்க முடியாது.

அரபிக்கடலைப் பொறுத்தவரையில் அங்கு புயல் அதிகமாகும். அங்கு பெரிய அலைகளாக வீசும். கடந்த ஆண்டில் கூட ஒரு சில படகுகளை கரையோரத்தில் இந்தமாதிரியான அலைகள் அடித்துச் சென்று மூழ்கடித்து விட்டன. ஒருசில படகுகள் காணாமலே போய்விட்டன. அந்தப்படகுகளை (விசை படகுகளை) அலைகள் அடித்துச் சென்று இலங்கைக் கடற்கரையோரத்தில் ஒதுக்கி விடுகின்றன. இப்பொழுது கொடுக்கப்படுகிற விசைப்படகுகளினால் பெரிய பலன் இல்லை என்றுதான் தோன்றுகிறது.

அலைகளுக்குப் பயந்து ஆழ்கடலுக்குப் போகாமல், கரையோரமாகவே விசைப்படகு உள்ளவர்கள் மீன்பிடிப்பதால் கட்டுமரம் வைத்துக்கொண்டு மீன் பிடிப்பவர்களுக்கு மீன் கிடைக்காமல் போய்விடுகிறது என்பதை மனதில் வைத்து இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்யவேண்டும்.

கன்னியாகுமரியில் ஒரு கூட்டுறவு மீனவர் சங்க பெடரேஷன் இருக்கிறது. அதைப்பற்றிப் பேச கொஞ்சம் கூடுதல் அவகாசம் கொடுக்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : அதையும் இருக்கக்கூடிய அவகாசத்தில் தான் சொல்லி முடிக்கவேண்டும்.

Only half-an-hour has been set apart for the Demand. Therefore, the hon. Member, Sri A. Swamidas may finish his speech quickly.

திரு. ஏ. சுவாமிதாஸ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இதரத்துறைகளில் ஒவ்வொரு இடத்தில் தனித்தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களை வைத்துப்பயன் அடைகிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் சேர்த்த ஒரு பெடரேஷன் இருக்கிறது. அந்த பெடரேஷனில் சில கட்டுப்பாடுகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். யாராவது கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடியவர்கள் என்று சந்தேகம் இருந்தால் அப்படிப்பட்டவர்களை சேர்க்கக்கூடாது என்று சட்டத்தை வைத்துக்கொண்டு ஒரு சிலர் அந்த பெடரேஷனில் இருந்துகொண்டு பிறருக்கு வாய்ப்பில்லாமல், பிறருக்கு இடமில்லாமல் தங்கள் மனம்போல் அந்த பெடரேஷனை நடத்தி வருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதை மனதில் வைத்துக்கொண்டு பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே.ஆர். ஆர்.எம், .கரியமாணிக்கம் .அம்பலம் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, சபையின்முன் கொண்டு வந்துள்ள மீன் இலாகா மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையை வலியுறுத்தி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கே.ஆர் ஆர்.எம் கரியமாணிக்கம் அம்பலம்]

மீன் துறையிலே எனது தாலுக்காவை பொறுத்தவரைக்கும் தொண்டிக் கடற்கரைப் பிராந்தியம் மீன் கிடைக்கக் கூடிய இடம். அங்கு நல்ல ருசியுள்ள மீன்கள் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அதை நான் என்னுடைய தொகுதி என்பதற்காக சொல்வதாக நினைக்கவேண்டாம். பரிட்சார்த்தமாகவே பார்க்கலாம். மெட்ராஸ் மீன்கள் நன்றாக இருக்குமென்று சொல்கிறார்கள். ஆனால், இந்த மீனுக்கும் என்னுடைய தொகுதியில் கிடைக்கக் கூடிய மீனுக்கும் வித்தியாசம் இருக்கிறது. வேண்டுமென்றால் என்னுடன் வந்து எங்கள் கடற்கரையிலுள்ள மீன்களைச் சாப்பிட்டுப் பார்க்கலாம். (சிரிப்பு).

MR. SPEAKER: The hon. Member, Sri KR. RM. Kariamanikkam Ambalam may arrange for a dinner for the hon. Members.

திரு. கே.ஆர் ஆர்.எம். காரியமாணிக்கம் அம்பலம்: இப்போது மற்ற இடங்களிலெல்லாம் மீன்பிடித் துறைமுகங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப்போல தொண்டியிலும் ஒரு மீன்பிடித் துறைமுகத்தை ஏற்படுத்தினால் அங்கேயுள்ள மீனவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். அவர்களுக்கு விசைப்படகுகளைக் கொடுக்கவும் நைலான் வலைகளை இன்னும் அதிகமாக கொடுத்து உதவவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டிக் கரையிலிருக்கும் மீனவர்கள் வாழும் குடிசைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. கடற்கரையோரத்தில் இருக்கும் பல குடிசைகள் வருஷா வருஷம் கடல் அலைகளால் அடிபட்டு சேதமாகிக் கொண்டு இருக்கின்றன. அவைகளை எல்லாம் பாதுகாப்பதற்கு கடலோரக் கரையிலிருக்கும் வீடுகளுக்கு முன்பு மதில்கள்கட்டி அவர்களுடைய குடிசைகள் பாதிக்கப் படாமலிருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலே மீன் பண்ணைகளை வளர்ப்பதற்கு ஒரு திட்டத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அதையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு ஏரியை எடுத்துக்கொண்டு நன்றாக ஆழப்படுத்தி நான்கு புறமும் கரைகளை ஏற்படுத்தி தண்ணீர் வெளியே போகக்கூடிய இடங்களிலெல்லாம் சல்லடைகளை அமைத்து மீன் வெளியே போகாதவண்ணம் செய்து அதனாலே மீன் பண்ணைகளை வளர்த்து ஒரு பஞ்சாயத்து ஏரியாவிலே எவ்வளவு மீன் வேண்டுமோ அது கிடைக்கக்கூடிய அளவிலே செய்யலாம். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒவ்வொரு ஊருணியை எடுத்துக்கொண்டு தண்ணீர் வரும் இடங்களிலே எல்லாம் வலைகளை வைத்து மீன் வெளியே போகாமல் செய்து மீன் பண்ணைகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்

DEMAND NO. XIX—CO-OPERATION, DEMAND NO. XVII—
FISHERIES, DEMAND NO. XXXV—FOREST DEPARTMENT
AND DEMAND NO. XLIV—CAPITAL OUTLAY ON FORESTS

[திரு. கே.ஆர் ஆர்.எம் கரியமாணிக்கம் அம்பலம்]

இந்த மீன் பண்ணைகளை கிராமங்களில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தால் நல்ல உதவியாகவும் அங்கே நல்ல வியாபாரமும் செய்யலாம். இதனாலே பஞ்சாயத்துகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கக் கூடிய நிலையும் ஏற்படும். இதை பரிக்ஷார்த்தமாக செய்து பார்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இன்றையதினம் மீன்வளத் துறையைக் குறித்து அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் மானியக்கோரிக்கையின் மீது நான் தந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக மீன்வளத்துறையை எடுத்துக்கொண்டால் உள்நாட்டு மீன்வளம், கடல் மீன்வளம், என்று இரண்டாக நாம் பிரித்துப் பார்த்தால், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்த அளவிலே கடல் வளம் ஏராளமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இங்கே உள்நாட்டிலும் மீன் பிடிப்புக்குத் தகுதிபடைத்த ஏரிகள், குளங்கள், ஆறுகள், கால்வாய்கள் ஏராளமாக இருக்கின்றன. மீனை வளர்ப்பதற்காகவும், அதிகப்படியான மீனை சேகரிப்பதற்காகவும் மீன் இலாகா நல்லபடியாக பயன்பட்டு வந்தாலும் உள்ளபடியே மீனை வளர்க்க எந்த அளவு முயற்சிக்கிறோமோ அதைவிட இன்னும் அதிகமாக மீனவர்களை வளர்க்க அருள்கூர்ந்து நடவடிக்கைகள் கொஞ்சம் அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

கடற்கரைப் பகுதியை எடுத்துக் கொண்டால், தரங்கம்பாடி, பொறையாறு போன்ற கடலோரப் பகுதிகளில் உள்ள வீடுகளை எடுத்துக்கொண்டால் 25 கீற்றுகள்கூட இல்லாத அவல நிலையில் தான் அங்கு வீடுகள் காட்சியளிக்கின்றன. உள்நாட்டு மீன் பிடிப்பவர்களை எடுத்துக் கொண்டால் என் தொகுதியில் அணைக்கரை என்ற ஊர் இருக்கிறது. அது மீனவர்கள் வசிக்கும் இடம், அதன் இரண்டு பக்கங்களிலும் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இரண்டு கொள்ளடத்திற்கும் நடுவில் 150 குடிசைகள் இருக்கின்றன. எந்த நேரத்தில் தண்ணீர் வந்தாலும் அவர்கள் வெள்ளத்திற்கு இரையாகும் நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே அந்த மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம். கூட்டுறவு மீன்பிடிப்பவர் சங்கம் சார்பில் மகஜர் தந்திருக்கிறோம். மணல்மேடு என்ற சிற்றூரில் 50-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கிறார்கள். உள்நாட்டு மீன் பிடிப்போர் சங்கம் நசுங்கிக் கொண்டிருக்கும் நிலையைத்தான் நாம் இன்று காண்கிறோம். மீன்பிடிக்கும் உரிமையை ரெவன்யூ இலாகா பகிரங்க ஏலத்தில் விடுகிறார்கள். சென்ற ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டும் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டன. தனிப்பட்டவர்களுக்கும் சொஸைட்டிக்கும் இடையே உள்ள விரோதம் காரணமாக சங்கம் அதிக விலை கேட்க

முடியாத அளவிற்கு போட்டி ஏற்பட்டு ஒரு வருடம் ஒரு சில பகுதிகளில் விலையை உயர்த்தி விட்டார்கள். சில பகுதிகளில் கேட்கமுடியாமல் விடப்பட்டு அதனால் ரெவன்யூ இலாகாவிற்கு நஷ்டம் வந்திருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். பாபநாசம் தாலுகாவில் உள்ள ஆறுகளை சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு ஏலம் விட்டார்கள். சொஸைட்டி ரூபாய்க்கு 7,000-க்கு கேட்டது, ஆனால் குத்தகை 23,000 ரூபாய்க்கு மேல் போய்விட்டது. அதே ஆறுகளை அதே தாலுகாவில் அதே ரெவின்யூ இலாகா சென்ற ஆண்டும் ஏலம் விட்டது. அப்போது அது 5,800 ரூபாய்க்கு போயிருக்கிறது. ஆகவே போட்டியை வைத்துத்தான் போகிறது. ஆனால் இவைகளினால் பாதிக்கப்படுபவர்கள் மீனவ சமுதாயத்தினர்தான் என்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். இதனால் கும்பகோணம் மீன்பிடிப்போர் சங்கத்திற்கு கடன் ஏற்பட்டு பாதிக்கப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அக்கடனை வஜா செய்யவோ அல்லது தவணையைக் கூட்டிக் கொடுக்கும் அளவில் அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களின் பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி வசதி அளித்து . . (மணி அடிக்கப்பட்டது)

* திரு. இராம. அரங்கண்ணல் : கனம் சபாநாயகர் அவர்களே, பசியான நேரம் ; சுவையான மானியம் ; அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும் மீனவ சமுதாயத்தினர் இன்று எந்த அளவிற்கு ஆழ்கடலையும், அலைகளையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், நமக்கு எப்படி மீனைத் தேடித் தந்து கொண்டிருக்கிறார்கள், என்பதைப் பற்றி எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். இந்தத் துறையை நாம் அலட்சியமாக கருத முடியாது. ஏனெனில் மீனில் சுவை இருப்பது மட்டுமல்ல, நல்ல புரத சத்தும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எதிர்காலத்தில் மீன்வளத்தைப் பெருக்கவேண்டுமென்றால் இன்று சமுதாயத்தில் பரதவ மக்கள் இருக்கும் நிலையை மாற்றியமைக்கவேண்டும். சேர, சோழ, பாண்டியர் காலத்தில் அவர்கள் எப்படி வாழ்ந்தார்களோ அதேபோல் இன்றும் அவர்கள் மரக்கலங்களையும், கட்டுமரத்தையும் கட்டி வாழ வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அந்நிலையை மாற்ற அவர்களுக்கு பாய்லோ போட்கள் வழங்குவது என்று முடிவு எடுத்திருந்தாலும் அதிகமாக இயந்திரப் படகுகள் வழங்க வசதியில்லாமல் இருக்கிறது. விஞ்ஞான முறையில் அவர்கள் வாழ்க்கையை சீர்திருத்தியமைத்தால் ஒழிய நாம் நல்ல பலனைப் பெறமுடியாது. கடலுக்குச் சென்று திரும்பி வரும்போது அவன் உயிர் இருக்குமா, கணவன் திரும்பி வருவாரா என்ற கவலையோடு பல சகோதரிகள் இன்று வாழவேண்டியிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு இலவச கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்தால் நல்லது. நம் நாட்டில் சங்கு எடுத்து அதிலிருந்து சோடா ஆஷ் தயாரித்தல், முத்து எடுத்தல் போன்ற தொழில்கள் இருக்கின்றன. தங்கத்திற்கு மதிப்பு போய்க் கொண்டிருக்கும் இக்காலத்தில் இப்பொருள்

களுக்கு எதிர்காலத்தில் கிராக்கி ஏற்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் எடுக்கும் சில மணிகளைப் பார்க்கும்போது அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நல்ல வருமானம் வரும் என்று நம்பக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்படவேண்டும். அடுத்து, கோவாவிலிருந்து கிடைக்கக் கூடிய தவளை வற்றலுக்கு அமெரிக்காவில் கிராக்கி இருப்பதாக ஏடுகளில் படிக்கிறோம். ஏராளமான தவளைகளை நாம் ஏற்றுமதி செய்தால் நல்ல டாலர் வருமானத்தை நாம் பெற முடியும். கருவாட்டிற்கு இலங்கையில் நல்ல கிராக்கி இருக்கிறது. இங்கிலாந்தில் கூட கருவாட்டிற்கு கிராக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். கருவாட்டை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நல்ல வருமானம் கிடைக்கும். ஆகவே மீன்களைப் பிடிக்கக் கூடிய வசதிகளையும் அதைப் பதப்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் நாம் பெறவேண்டும். இதுபற்றிக் கூறும்போது, சென்னை நகர சுகாதார அதிகாரி ஒருவர் மலேயா சென்றிருந்தபோது அங்கு ஒரு முறையைக் கண்டு வந்தார்களாம். மீனை சமைத்து, சமைத்த மீனை பக்குவப்படுத்தி டின்களில் அடைத்துவிட்டால் அதன் வாசனை கெடாமல், அதன் புரத சத்து கெடாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். நாமும் புதிய இதுபோன்ற மார்க்கங்களைக் காணலாம். அதோடு மீனைப் பாதுகாக்க "ஐஸ் ப்ளாண்ட்" வசதி செய்து கொடுத்தல் வேண்டும். அடுத்து, மீனைக் கொண்டு நல்ல புதுப் புதுப் பலகாரங்கள் செய்யும் முறையை விளம்பரப்படுத்த வேண்டும். மைசூர் உணவு அமைச்சர் ஒரு இடத்திற்கு சென்றிருந்தபோது அங்கு மீன் வடை செய்து வைத்திருந்தார்களாம். மீன் வடை என்று தெரியாமல் அதை அவர் சாப்பிட்டு விட்டாராம். பிறகு அது மீன் வடை என்று சொன்னபோது அவர் ஆச்சரியப்பட்டாராம். ஆகவே நம் மீன் இலாகா அமைச்சர்—அவர் சைவம்—உட்பட அனைவரும், மீன் தின்ன விரும்பாதவர்கள் கூட தின்கிற அளவிற்கு எல்லோரும் ஆசைப்படுகிற அளவிற்கு நல்ல புதுப் புதுப் பதார்த்தங்களைக் கண்டுபிடித்து நன்கு விளம்பரப்படுத்தி இந்த மீன் வளத்தை பெருக்கவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. பி. ஏழுமலை : கனம் சபாநாயகர் அவர்களே, மீன் வள அபிவிருத்தி மான்யத்தை ஆதரித்து சில அபிப்பிராயங்கள் கூற ஆசைப்படுகிறேன். என் தொகுதியில் அதிகமாக மீனவர்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் தேசிய சர்க்கார் ஏற்பட்டு நல்ல நிலைமை ஏற்பட்டு இருந்தாலும் மேலும் அவர்களுக்கு செய்ய வேண்டிய வசதிகள் நிறைய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக மீன் பிடிப்பதற்கு வேண்டிய நல்ல வசதிகளைச் செய்தாலும் மீன்களை நல்ல விலைக்கு விற்று லாபம் அடைவதற்கு வேண்டிய நிலையை நாம் உண்டு பண்ணவேண்டும். என் பகுதியில் பல குப்பங்களில் ரோடே கிடையாது. எல்லா வசதிகளும் செய்திருந்தாலும் ரோடு வசதி இல்லாததால் பிடிக்கும் மீன்களை [illegible] கொண்டு போய் விற்று லாபம் அடைய முடி

யாத நிலை இருக்கிறது. கள்ளூர், மாங்கோடு பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு 20 குப்பங்களுக்கு மேல் இருக்கின்றன. அங்கு ரோடு வசதி கிடையாது. எனவே வெளியில் இருப்பவர்கள் வேறு வசதிகளை செய்து கொண்டு அங்கு போய் குறைந்த விலைக்கு மீனை வாங்கி வெளியே நல்ல விலைக்கு விற்று நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள் அந்த லாபம் ஏழை மீனவர்களுக்கு கிடைப்பதில்லை. இதனால் இந்த குப்பங்களுக்கு ரோடு வசதி செய்து தரவேண்டும். பஞ்சாயத்து யூனியன் மூலம் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். யூனியன்கள் உடனடியாக அந்த மக்களுக்கு ரோடுகள் போடுவதில்லை. எனவே இந்த ரோடு போடும் வேலையை இந்த மீன் இலாகாவே எடுத்துக் கொண்டு வேலை செய்து யூனியனிடமிருந்து இதற்கு மான்யமாக பணம் வாங்கி இந்த முறையில் ரோடுகள் போடும் பொறுப்பை இந்த இலாகாவினரே மேற்கொள்ள வேண்டும். நைலான் வலை கொடுக்கிறார்கள். அதை உபயோகித்து பிடித்தால், மீனுக்கு காயம்பட்டு ரத்தம் சிதறுவதால், பரவல் என்று சொல்கிற இடத்தில் மீன் தங்குவதில்லை. எல்லாயிடங்களிலும் மீன் இருப்பதில்லை. பரவல் என்று குறிப்பிடப்பட்ட இடத்தில்தான் மீன் தங்கி இருக்கின்றன. நமக்கு நிலம் இருப்பது போல் பரவல் என்ற குறிப்பிட்ட இடத்தில்தான் மீன் பிடிப்பார்கள். அங்கு மீன் தங்குவதில்லை என்று நினைக்கிறார்கள், இந்த வலை உபயோகிப்பதால். ஆகவே இதுபற்றி அவர்களிடம் விளக்கி பிரசாரம் செய்ய வேண்டும். இன்று கடலோரங்களில் பல தொழிற்சாலைகள் வருகின்றன. இதனால் இந்த மீனவ மக்கள் இருக்கும் இடங்களை அந்த அந்த கம்பெனிகளுக்கு ஜாரி செய்யும்போது இந்த மீனவ மக்கள் வெளியேற்றப்படுவார்கள். அப்படிச் செய்யும்போது அவர்களுக்கு வேறு நிலம் கிடைக்கும் வகையில், சர்க்காரில் ஒரு திடமான திட்டம் இல்லாமல் இருக்கிறது. ஆகையால் மீனவ மக்களுடைய நிலங்களை ஜாரி செய்து மற்ற தொழிற்சாலைகளுக்காக எடுத்துக்கொள்ளும்போது வேறு நிலத்தை அவர்களுக்குக் கொடுத்த பிறகுதான் கம்பெனிகளுக்கு ஜாரி செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரி தொகுதியில் பழவேற்காடு என்பது ஒரு புனிதமான கிராமம். டச்சுக்காரர்கள்கூட அங்குதான் வந்து இறங்கினார்கள். பெரிய கோட்டையும் இருக்கின்றது. அப்பேர்ப்பட்ட குப்பத்தில் மக்கள் நாட்டுப் படகு கட்டும் தொழிலை நடத்தி வந்தார்கள் இப்போது நாட்டுப் படகுக்கு கிராக்கி கிடையாது.. விசைப் படகு கட்டும் தொழிலை அந்தப் பகுதியில் வைத்தால், அந்தத் தொழிலைச் செய்வதிலே பழக்கமுள்ளவர்களாக இருப்பதால், அந்த மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட வசதி ஏற்படும். இதை ஆராய்ந்து பழவேற்காடு கிராமத்தில் விசைப் படகுத் தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இங்கு படகு தங்கும் துறைமுகம் ஒன்றும் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றேன். மேலும் வீடு

கொடுத்து வருகிறார்கள். இன்னும் அதிகமான வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும். மேலும் ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கிற சலுகைகளைப் போல இவர்களுக்கும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி சில குறைகளைச் சொல்லுகிறேன் என்றாலும், சர்க்கார் செய்துள்ள காரியங்களுக்காக செய்ய வேண்டிய நன்றியை மறக்க முடியாது. பத்து-பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இன்றைக்கு அவர்கள் நல்ல நிலையில் முன்னேறி வந்திருக்கிறார்கள். உதாரணமாக—எல்லோரும் பின்தங்கிய மக்களிடத்தில் சென்று, பிரசாரம் செய்தால்—பதவியும் மற்றவைகளும் கிடைக்கும் என்று எண்ணுகிற நிலையில் அவர்களை நாடிப் போகிற நிலைமைக்கு அவர்களை சர்க்கார் உயர்த்தியிருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்றுதான் அமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். நேரடியாகக் குறைகளைக் கேட்டு நிவர்த்திக்கிற முறையில் அவர்களுடைய கடமை இருந்துகொண்டிருக்கிறது. மேலும் அவர்கள் இந்த இலாகாவிலே அதிகமாக கவனம் செலுத்தவேண்டுமென்றும் சொல்லிக்கொள்கிறேன். நாம் இப்போது பசியோடு இருக்கிறோம். பசி நேரத்தில் இந்த மான்யம் வந்திருக்கிறது. பசிக்கு உணவு முக்கியம். உணவு உற்பத்தி செய்கிற மான்யம் இது. எனக்குக்கூட மூன்று நிமிஷம்தான் பேசுவதற்கு என்று சொன்னார்கள். இதனால் அமைச்சர் அவர்களும், இந்த இலாகா அதிகாரிகளும் பசியை நீக்க உழைக்கின்ற இவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமாக, இந்த இலாகா ஆபீசுகளுக்கு மீனவர்கள் வந்து அலைந்துதான் உதவி பெறுகிற ஒரு முறை இருக்கக் கூடாது. அதிகாரிகளே சென்று, கேட்டு அறிந்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் எவ்வளவு திட்டம் போட்டு வேலை செய்தாலும், 10 தடவை அவர்கள் ஆஃபீசுக்கு வந்து, அதிகாரிகளைப் பார்த்து, அமைச்சரைப் பார்த்து, அதன் பிறகு அவர்களுடைய குறை நிவர்த்திக்கப்பட்டால், அவர்கள் எடுத்துக்கொண்ட சிபார்சு முயற்சியால் நிவர்த்தி ஆயிற்று என்று நினைக்கக் கூடிய நிலைமை வரும். அவர்கள் இருக்கிற இடங்களுக்குச் சென்று, குறைகளை அறிந்து உடனுக்குடன் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, குறிப்பாக என்னுடைய பொன்னேரி தாலூகாவில் பழவேற்காடு கிராமத்தில் மீனவ மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அங்கு தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று மேலும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இதைக் கவனிக்க வேண்டும். மேலும் மீனவ குப்பங்களின் ஓரமாகவே பல தொழிற்சாலைகள் (சைதாப்பேட்டை தாலூகாவில்) நான் இருக்கக் கூடிய திருவொற்றியூர் சமீபமாகக்கூட, குப்பத்தின் அருகாமையில் வேலி போட்டுக் கம்பெனிகள் கட்டுகிறார்கள். மீனவர்களை வெகு

தூரத்துக்கு அனுப்பிவிடுகிறார்கள். அவர்களுக்கு வலைகளைக் காயப்போடுவதற்குக் கூட இடம் இல்லாமல் இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

* **கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பு சொன்னது போல, விரிவாக இந்த விஷயத்திலே நான் கொடுத்திருக்கிற குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இருந்தும் சில கனம் அங்கத்தினர்கள் சில நல்ல விஷயங்களை இங்கே சொன்னார்கள். இதிலே மேட்டூரைப் பொருத்த வரையிலும் அங்கு மீன்கள் இப்போது கிடைக்கின்றன. மேட்டூர் மாத்திரமல்லாமல், எல்லா அணைகளிலும் சர்க்காரின் சார்பிலே அங்கு மீன் குஞ்சுகளை வளர்த்து பல இடங்களுக்கு விரிவு படுத்த 'ஸீட் ஃபார்ம்ஸ்' போல ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பல இடங்களில் புதிய அணைகள் கட்டப்பெற்று இருக்கிற இடங்களிலும், புதிதாக அணைகள் கட்டிக் கொண்டிருக்கும் இடங்களிலும், எல்லா இடங்களிலும் வளர்க்கவேண்டுமென்று இதைச் செய்துகொண்டிருக்கிறோம். மேட்டூரிலே நல்ல முறையில் ஏராளமான மீன்கள் கிடைக்கின்றன. அங்கு இருக்கக் கூடிய மீனவ மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள் சொன்னார்கள், அங்கு ஐஸ் ப்ளாண்டை, ஃப்ரீஸிங் மெஷின் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஃப்ரீஸிங் மெஷின் வைக்கவேண்டுமென்று சொன்னால், வெளியில் அதிகமாக அனுப்ப வேண்டியிருக்கிறது என்று சொன்னால் வைக்கவேண்டும். அப்போதுதான் கெடாமல் இருந்து அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். அந்த நிலை இப்போது இல்லை. அன்றாடம் கிடைக்கும் மீன் உடனே போய்க்கொண்டிருக்கிறது. சமீபத்தில் நான் அவர் சொன்னது போல சென்று பார்த்தேன். அங்கிருந்து கல்கத்தாவுக்கு மீன் செல்லுகிறது. கோவாப்பரேட்டிவ் மூலமாக, அதற்கு தனியாக கண்ட்ராக்டர் இருக்கிறார்கள். அந்த முறையில் கல்கத்தாவுக்கு அனுப்புகிறார்கள். ஐஸ் ப்ளாண்டில் தயார் செய்கிற ஐஸைப் போட்டு பக்குவப்படுத்தி அனுப்புகிறார்கள். போகும்போது நடுவில் 2-3 இடங்களில் புதிதாக ஐஸ் போட்டு அனுப்புகிறார்கள். சொஸைட்டி மூலமாக நன்றாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதிகமாக வெளியில் போவதைவிட நம்மவர்களுக்கு உபயோகப்படவேண்டுமென்று அதைச் சார்ந்த உறுப்பினராக இருக்கிற காரணத்தினால் அதைப் பற்றி வற்புறுத்திச் சொன்னார்கள். அதற்காக நான் சென்று பார்த்தேன். அதற்குப் பிறகு இப்போது சேலத்திற்குக் கூட அனுப்புகிறோம். நூறு கிலோ கிராம் இப்போது அனுப்பிக் கொண்டிருக்கிறோம். சேலத்திற்கு சென்ற நான்கு நாட்களாகப் போய்க்கொண்டிருக்கிறது. அங்கே நல்ல கிராக்கி, நன்றாக விற்பனை ஆகிறது. சேலத்திற்குக்கூட இதற்கு முன் பக்கத்திலுள்ள இடங்களிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது. மேட்டூரிலிருந்து

செல்லவில்லை. நேற்று டி.எஃப். சொன்னார்கள், மேட்டூருக்கு அனுப்பப்பட்டு நன்றாக விலை ஆகிறது என்று சொன்னார்கள், லாபம்கூட கிடைக்கிறது என்று சொன்னார்கள். அதைத்தான் அவர்கள் வற்புறுத்திச் சொல்லுகிறார்கள் என்று எண்ணுகிறேன். இந்த ஏற்பாடு இரண்டுமே நடந்துகொண்டு, இன்னும் நல்ல முறையில் யோசனை செய்து, அதிகமான விற்பனை ஆகும்போது, சொஸைட்டி மூலமாக உள்நாட்டிலேயே விற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனை இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்த வருஷத்திலிருந்து இன்னும் அதிகமாக நடைபெறவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். அதையும் செய்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் துரையரசன் அவர்கள் சொன்னார்கள் சில விஷயங்களைப் பற்றி. இதிலே இரண்டு விதம் இருக்கிறது. உள்நாட்டு மீனவர்கள், கடற்கரை ஓரத்தில் இருக்கிற மீனவர்கள் என்று இரண்டு விதங்களில் செயல்பட்டு வருகிறது. உள்நாட்டு மீனவர்களுக்கு ஆங்காங்கு முடிந்த வரையிலும் இடங்கள் இருக்கின்றன, குடியிருப்பு வசதிகள் இருக்கின்றன. கடலோரத்தில் இருக்கிற மீனவர்கள் என்று எடுத்துக்கொண்டால் பல குப்பங்களுக்கு ரோடுகள் போடவேண்டிய நிலை இருக்கிறது. அதற்கு அரசாங்கத்தில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதை நான் சொல்லத் தேவையில்லை. ஆங்காங்கு யூனியன்கள் செயல்படும் காரணத்தினால் யூனியன்கள் அல்லது பஞ்சாயத்துக்கள் மூலமாக ரோடு போடவேண்டுமென்றால் சர்க்காரிலிருந்து 40 சதவிகிதம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். எந்த யூனியனோ அல்லது பஞ்சாயத்தோ அந்தப் பகுதியில் ரோடுகள் அமைக்கத் தயாராக இருக்கிறதோ அவர்களுக்கு எங்கள் தொகையிலிருந்து 40 சதவிகிதம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், கொடுப்பதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். சுவையான உணவுகள் என்று சொன்னார்கள். எனக்கு நேரடியாகச் சாப்பிட்டு சுவை தெரியாது. இருந்தாலும் சொல்லும்போது, இவ்வளவு பேர்கள் சொல்லும்போது, இல்லை என்று மறுக்க முடியாது. நல்ல முறையில் பதனிட்டு சாப்பிடுவதற்கு வெளி நாட்டுக்கு அனுப்புவதில் மிகவும் சந்தோஷம் கூட. நல்ல முறையில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றுதான் புதிதாகக்கூட ஒரு திட்டத்தை டைரக்டர் ஆஃப் ஃபிஷரீஸ் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். வெளி நாட்டுக்குச் செல்லுவதற்குக் கூட, அதுவும் சிலோனுக்குப் போக அவர்களுக்கு உத்திரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலோனுக்குச் சென்று இன்னும் கருவாடு என்று சொல்லக்கூடிய வகையை அதிகமாக விற்பனை செய்ய வழி செய்யவேண்டுமென்று அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் உடனடியாக முடியும் என்று நான் எண்ணுகிறேன்.

விசைப் படகுகளைப்பற்றி கனம் சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். இப்போது விசைப் படகுக்கு முடிந்த வரையில் மெஷீன் கூடப் பொருத்திவிட்டு அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். அநேகமாக அது தங்குவது இல்லை. விசைப் படகுகளை மெஷீன் வைத்தவுடனே, இவ்வளவு தொகை கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம், அந்தத் தொகையைக் கட்டினால் உடனே கொடுத்து விடுகிறோம். மீனவர்களுக்கு நைலான் வலைகளும் கொடுக்கிறோம். நைலான் வலைபற்றி கனம் அங்கத்தினர் திரு. ஏழுமலை குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னார்கள், 1-30 p.m. நைலான் வலையில் மீன்களுக்குக் காயம் ஏற்படுகிறது, அதனால் ரத்தம் வருகிறது, அதைக் கண்டு மற்ற மீன்கள் பயந்து வலைக்கு வருவதில்லை என்று. நாங்கள் எல்லா டெஸ்டுகளும் பார்த்து விட்டோம். அதற்குப் புள்ளி விவரங்களும் இருக்கின்றன. நாங்கள் கண்டிருப்பது, நைலான் வலையால் மீனவர்களுக்கு அதிகமான மீன் கிடைக்கிறது. மேலும், நைலான் வலையென்றால், அதிக ஆட்கள் தேவை இல்லை. நாலு பேர்கள் இருந்தால் போதும். நூல் வலையாக இருந்தால், அதிகமாக ஆட்கள் வேண்டியிருக்கும். அப்படி அதிக ஆட்கள் சேர்ந்து பிடித்த மீன்களை பங்கு போடும்போது, தலைக்குக் கிடைப்பது குறைவாகத்தான் இருக்கும். ஆனால், ஆட்கள் குறைவாகத் தேவைப்படும் நைலான் வலைகளானால், அதிக லாபம் கிடைக்கும், சிரமமும் குறைவு. பல இடங்களில், பழைய வலை வைத்திருப்பவர்களுக்கும், புதிதாக நைலான் வலை வைத்திருப்பவர்களுக்கும் தகராறுகள் ஏற்படுகின்றன. ஒரு ஊரில் 30 குடும்பங்கள் இருப்பதாக வைத்துக் கொண்டால், அதில் நான்கு குடும்பத்தினருக்கு நைலான் வலையும், மற்ற 26 குடும்பங்கள் பழைய நூல் வலையும் வைத்திருந்தால், இவர்கள், நைலான் வலைக்காரர்கள் அதிகமாக மீன்களைப் பிடித்து விடுகிறார்கள் என்று தகராறு செய்கிறார்கள். இம்மாதிரியான சங்கடங்களைத் தீர்க்க சமீபத்தில் ஒரு ஏற்பாடு செய்து இருக்கிறோம். அதன்படி, ஒரு குப்பம் என்று எடுத்துக் கொண்டால், அங்கே உள்ள எல்லாக் குடும்பத்தினருக்கும் நைலான் வலைகளைக் கொடுப்பது என்பது. அப்படி அங்குள்ள எல்லோருக்கும் கொடுத்த பிறகு, அடுத்த ஊருக்கு வழங்குவது. இதன்படி, பல ஊர்களில் ஊருக்குச் சிலர் என்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஊரிலும் எல்லோருக்கும் என்று நைலான் வலைகளை வழங்க முடியும். இது நல்ல முறையிலே நடைபெறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மணி அவர்கள் பேசும்போது வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். நிலங்கள் இருந்தால், சொசைடிகள் மூலம் பணம் கொடுக்கப்படுகிறது. மீனவர் சொசைடி மூலம் மாத்திரம் அல்ல, மற்ற சொசைடியிலும் கொடுக்கப்படுகிறது. ஆனால், வீடு கட்டும் நிலையைப் பார்த்தால், அது போதாது தான். ஒரு வருஷத்திற்கு ஒரு குப்பம் என்று எடுத்துக் கொண்டாலும், அங்கே 100 வீடுகள் கட்ட வேண்டுமென்றால், 6 வீடுகள்தான் அமைக்க முடிகிறது. இன்னும் விரைவாகச் செய்ய வேண்டும்.

ஆனால், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கத்தினர்களுக்குத் தெரியும், ஸான்தோமில் மீனவர்களுக்கு என்று குறைந்த வாடகையில், மாதம் ரூ. 7 வாடகையில், வீடுகள் கட்டப்பட்டன. அவர்கள் சொன்னார்கள், எங்களுக்கு ரூ. 7 வாடகைக்கு வீடுகள் தேவையில்லை என்று. எவ்வளவோ சொன்னோம், அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பொழுது அந்த வீடுகள் அரசாங்க பணியாளர்களுக்கு மாதம் ரூ. 30, 35 என்று வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் வருகிறது. இப்பொழுது மீனவர்கள் வருந்துகிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள், எங்களை சில தலைவர்கள் கெடுத்து விட்டார்கள்; எங்களுக்கு வீடுகள் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இப்பொழுதும், கார்ப்பொரேஷன் வடக்குப் பகுதியில் வீடுகள் கட்டி வைத்திருக்கிறார்கள். அதைக் கொடுக்க நாங்கள் தயாராக இருந்தாலும், மீனவர்கள் கடலோரத்திலிருந்து அந்த ஸ்லம் ஏரியாவை ஒழித்துவிடச் சம்மதிக்க மாட்டோம் என்கிறார்கள். குடிசை அங்கே இருக்கவேண்டும், அதில் வலை, கட்டைகள் போட்டு வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு என் சகா அமைச்சர் கனம் வெங்கட்டராமன் சொன்னது போல, அவர்கள் பழைய வீட்டிலேயே இருந்து கொண்டு புது வீட்டை வாடகைக்கு விடலாம் என்று எண்ணுகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு ரூ. 7-க்குக் கொடுக்க விருந்த வீடுகளுக்கு ரூ. 30, 40 என்று வருகிறது என்று அமைச்சர் சொல்கிறார்கள். அப்படி அதிகப்படியாக வரும் தொகையை மீனவர்களுக்கு என்று செலவழிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார்: அந்தப் பணம் அரசாங்கத்திற்கு அதிக வருவாயாக இருக்கும். நல்ல காரியத்திற்குத்தான் பயன்படுத்தப்படும். தனியாக மீனவர்களுக்கு என்று அதைச் செலவு செய்ய வேண்டியதில்லை. நல்ல வழியிலேயே செலவழிக்கப்படும் என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவிக்கிறேன்.

கனம் சபாநாயகர்: அந்தப் பணம் மட்டும் போதாதே!

கனம் திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார்: இந்த நைலான் வலைகூட வெளிநாட்டிலிருந்து வருவதால், நமக்குச் சில சிரமங்கள் இருக்கின்றன. இப்பொழுது, அதை பம்பாயிலேயே செய்ய வசதி இருக்கிறது. அதை நாம் ஏராளமாக வாங்கி மீனவர்களுக்குக் கொடுக்க வசதி இருக்கிறது என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

அப்படி இல்லை அது. கிராமப்புற மக்களெல்லாம் [illegible]த்தில் இருப்பவர்களுக்கு ரோடு அதிகமாகப் போடவேண்டியிருக்கிறது. இப்பொழுது யூனியன்கள் ஏற்பட்டுவிட்டன, ரோடுகளெல்லாம் போடுவதில் தயக்கம் இல்லை. அப்படி அவர்கள் ரோடுகள் போட முன் வந்தால், எங்கள் பக்கத்திலிருந்து 40 சதவிகிதம் கொடுக்கத் தயார். மீன் வளர்ச்சிக்காக ஒரு யூனியனுக்கு ரூ. 54,000 வரை ஒதுக்கி வைத்திருக்கிறோம். இந்தத் தொகையை செலவழிக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏனென்றால், நீர் நிலையங்கள் இல்லை என்கிறார்கள். குளங்கள் ஏரிகள் இருக்கும் பிராந்தியங்களில் நன்றாகச் செய்யலாம், அவர்களாகவே செய்யலாம். அங்கங்கே ஆபீசர்கள் இருக்கிறார்கள். சிறிய கிராமத்தில் கூட மீன் வளர்க்க வேண்டும் என்று ஒவ்வொரு யூனியனுக்கும் தொகை ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யோசனைகள் தேவையென்றால், டிபார்ட்மெண்ட் மூலம் யோசனைகள் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

பழவேற்காடு திட்டம்பற்றி திரு. ஏழுமலை குறிப்பிட்டார்கள். அது பெரிய திட்டமாகச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தின் கருத்தில் இருக்கிறது. தனியார் துறையிலிருந்துகூட ஒருவர் முயற்சி செய்கிறார். அதற்கும் அரசாங்கம் ஆதரவு கொடுக்கும். அந்த திட்டம் உருவானால், வருவாய் நிறையக் கிடைக்கும், வேலை வசதியும் இருக்கும். அது சம்பந்தமாக யாரோனும் முயற்சி எடுத்துக் கொண்டால், அதற்கு அரசாங்கம் உதவி செய்யத் தயாராக இருக்கிறது. கடலோரம் சம்பந்தப்பட்டவரை ஒரு பெரிய திட்டம் போட்டு இருக்கிறோம். அதற்கு ஆங்கிலத்தில் "ட்யூனா ஃபிஷிங்" என்று சொல்வார்கள். அதற்கு 30, 40 லட்சத்திற்கு வேலாகச் செலவு செய்யவேண்டியிருக்கும். அது பரிசீலனையில் இருக்கிறது. நமக்கு வேண்டிய மெஷின்களும் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்துவிட்டால், ஏராளமாக மீன்கள் பிடிக்க வசதி ஏற்படும். நமக்கும் கிடைக்கும், வெளியேயும் அனுப்ப வசதி இருக்கும். எவ்வளவு நல்ல முறையிலே தொகைகளைச் செலவு செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து கொண்டு இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, அங்கத்தினர்கள் நல்ல யோசனைகள் சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கும் கனம் அங்கத்தினர் அதை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், மெரினாவில் அக்வேரியம் ஏற்படுத்தப் போவதாக அமைச்சரவர்கள் சொன்னார்களே, அது எவ்வளவு சீக்கிரம் நடைபெறும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அது இப்பொழுது எமர்ஜென்ஸி காரணமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. இல்லையென்றால், நிச்சயமாக அது வெகு விரைவில் நடைபெறும்.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 71,68,100 under Demand No XVII—Fisheries be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 71,68,100 under Demand No. XVII—Fisheries.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: I think I can put to vote the other two Demands.

SRI SAW GANESAN: I may not require more than five minutes.

SRI A. THIAGARAJAN: I may be allowed five minutes, Sir.

MR. SPEAKER: All right. The two Demands relating to Forests and the cut motions under them are before the House for discussion.

* **திரு. அ. தியாகராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் காட்டிலாகா மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரபணையின் மீது ஒரு சில கருத்துக்களை மாத்திரம் கூறிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இந்தக் காட்டிலாகாவில் வன விலங்குகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கு சில திட்டங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக வேடந்தாங்கலில் பறவைகளுக்கு ஒரு சரணாலயம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நீலகிரியில் மிருகங்களுக்கு ஒரு சரணாலயம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுபோலவே கொடைக்கானலிலும் பெரிய பாரெஸ்டு இருக்கிறது. கொடைக்கானலில் இம்மாதிரி ஒரு சரணாலயம் ஏற்படுத்துவதற்கு எந்த விதமான ஒரு திட்டமும் இந்த அறிக்கையில் காணப்படவில்லை என்பது குறித்து வருந்துகிறேன். இதை அமைச்சர் அவர்கள் சீர்தூக்கிப் பார்த்து இதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும். கொடைக்கானலிலும் புலி, கரடி, யானை, மான், காட்டு எருமை, கேளை ஆடு, வரை ஆடு, இம்மாதிரி மிருகங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே கொடைக்கானலிலும் ஒரு சரணாலயம் ஏற்படுத்தித்தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக, பலதரப்பட்ட மரங்களை வளர்ப்பதற்கு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, கொடைக் கானலில் ஏலம், தேக்கு, ரப்பர் போன்ற மரங்களை உற்பத்தி செய் வதற்கு சரியான இடம் இருக்கிறது. அங்கும் வளருகிறது. இப் பொழுது இங்கு வாழை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. காப்பி,

தேயிலையும் அங்கே பயிரிடப்படுகிறது. ஆகவே, கொடைக்கானலையும் இம்மாதிரி மரங்களை நடுவதற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

என்னுடைய பகுதியில் புதுக்கோட்டையில் அதிகமான காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளையெல்லாம் வெட்டுக்கு விட்டு, இப்பொழுது ஒரு சில இடங்களில் மாத்திரம் முந்திரி, கற்பூரம் முதலிய மரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. காட்டி லுள்ள மரங்களை வெட்டிக்கொண்டே போனால், அதன் காரணமாக மழையே பெய்யக்கூடாத ஒரு நிலை ஏற்படக்கூடும். ஆகவே, இந்த நிலையை நீடித்துக்கொண்டு போகாமல், காடுகளை இன்னும் அதிக மாக வளர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் எங்கள் புதுக்கோட்டைப் பகுதியில் இருக்கிற காடுகளில் வேலை பார்ப்பவர்களுக்கு சமஸ்தானமாக இருந்தபொழுது கொடுத்த சம்பளத்தைத் திருத்தி சம்பளச் சலுகை கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. கவர்ன் மெண்டில் கொடுக்கப்படுகிற சம்பளம் அவர்களுக்கும் கொடுக்கப் படவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், புதுக்கோட்டை பகுதியிலே காடுகளை சர்வே செய்யும் பொழுது, கிராமங்களிலுள்ள வீட்டின் நடுவேகூட சர்வே கல்லை நடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காட்டு இலாகாவைச் சேர்ந்த இடங்கள் கிராமங்களில் இருந்தால், அவைகளை ஒதுக்கித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்த காலத்தில் மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக விடப்பட்டிருந்தன. சர்வே செய்யப்பட்ட பிறகு, மேய்ச்சல் காடுகளெல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக, மேய்ச்சலுக்கு வசதி வாய்ப்பு இல்லாமல், அங்கே இருக்கிற மக்களும் மிகவும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கு மேய்ச்சல் நிலம் கொடுப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்யவேண்டும். கொடைக்கானலில் இருக்கிற சில மலை களைப் பயன்படுத்திக்கொண்டு அதேபோல் ஏற்காடு போன்ற மலைப் பகுதிகளிலும் ரப்பர், தேக்கு போன்ற மரங்களை பயிரிட முன்வர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தோல் பதனிடுவதற்கு கடுக்காய் மரங்களை பயிரிடுவதற்கு வழிவகை காணவேண்டும். கொடைக்கானல் ரோடில் பார்த்தால் வழி நெடுகிலும் கடுக்காய் மரங்கள் நிறைய இருக்கின்றன. கடுக் காய் மரங்களை அங்கெல்லாம் அதிகமாகப் பயிரிட வாய்ப்பு

இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி செலுத்திக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நமது முன்னிலையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற--- வன இலாகா என்று சொல்லுவதா, காட்டு இலாகா என்று சொல்லு வதா என்றுகூட சிரமம் இருக்கிறது ; அப்படி பொருள்படுத்தப் பட்டிருக்கிறது—வன இலாகா மான்யத்தின்மீது எங்களுக்கு மிக மிக இன்றியமையாத கருத்துக்களை புலப்படுத்த முன்வந்திருக் கிறேன். பொதுவாக, ராமநாதபுரம், புதுக்கோட்டைப் பகுதி களிலே காடு என்ற வரையறைக்கு இப்பொழுது உட்படுத்தப் பட்டிருக்கிற பிராந்தியங்கள் உண்மையிலேயே காடு அல்ல, அதாவது வனம், 'பாரெஸ்டு' அல்ல. அவற்றையெல்லாம் இப் பொழுது வனம், வனப்பிராந்தியம் என்று வரையறை செய்யப் பட்டிருக்கிறது. அந்தப் பிராந்தியங்களில் காணப்படும் மகா விருக்ஷங்கள் எவை என்று பார்க்கப்போனால், விளாரி, எருக்கு, கொட்டை, ஆவாரை ஆகியவைதான் அங்கு காணப்படுகிற விருக்ஷங்கள். அங்கே இதற்கு மேலே எதுவும் வேர் ஓடாது. அங்கு எத்தனை உலகங்களுக்கு வேண்டுமென்றாலும் ஏற்றலாம். "கிராவல்" அதாவது சரளை, "லாட்ரைட்" செம்பாராங்கல். அந்தப் பிராந்தியத்தை காடு என்று பெயர் சூட்டி, அதற்கு வேலிகளை அமைத்து, இதற்கு காவலாளியும் போடுவது பலன் அல்லாதது மட்டுமல்ல, அரசாங்கத்திற்குக் கண்கண்டது பெரிய நஷ்டம். மக்களுக்கு ஏற்பட்டிருப்பது பெரிய கஷ்டம் (குறுக்கீடு) விவசாயிகளுக்கு நஷ்டம். அதைப்பற்றி பின்னாலே சொல்ல இருக்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆவாரை போன்ற தழைகள் விவசாயத்திற்கு மிகவும் இன்றியமை யாதது. வெறுமனே வைக்கவில்லை. அந்த வட்டாரத்திலுள்ள விவசாய மக்கள் அதை நல்ல முறையில் சேகரித்து, உரம் இட்டு, அதிக லாபம் பெற்று, அதிக உற்பத்தி செய்வதற்கு பயன்படுகிறது.

திரு. சா. கணேசன் : கனம் அமைச்சர் அவர்களது குறுக்கீடு மிக்க நன்றியோடு ஏற்றுக்கொள்ளப்பெறுகிறது. ஆனால், நிலைமை முற்றிலும் மாறுபட்டது. விளாரி, எருக்கு இலை முதலியவை தழை உரம் அல்ல என்று நான் சொல்லவில்லை. அதை யாரும் வளர்ப்பது இல்லை. தண்ணீர் ஊற்றுவது இல்லை. அதைப் போய் ஆடுகூட மேய்வதில்லை என்பதை மறந்துவிடக்கூடாது. வேறு காடுகளில் இருக்கிற செடிகளை தின்பதுபோல், எருக்கு இலை, கொட்டையை ஆடு சாப்பிடாது. அந்த விஷயத்திற்குப் பின்னால் வருகிறேன். நேரம் மிகக் குறைவு. நீட்டிக்கொண்டே போவது நாகரிகம் அல்ல. இதை முடித்துக் கொள்கிறேன்.

இதனால் விவசாயிகளுக்கு என்ன பெரிய கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லுகிறேன். முதலாவதாக, இதை வேலி போட்டு அடைத்துவிட்டதனால், மாடு ஆடுகள் உள்ளே செல்லமுடியவில்லை. அப்படி மாடுகள் உள்ளே சென்றாலும், பாரெஸ்டுக்கு உள்ளே வந்துவிட்டது என்று அதைப் பிடித்து வைத்துக்கொண்டு, அபராதம் விதிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. மேய்ச்சலுக்கு வழி செய்வதற்குக்கூட இல்லாத நிலை ஏற்பட்டுவிட்டது எங்கள் பகுதியிலே. இரண்டாவதாக, இதை பாரெஸ்டு என்று சொல்லிவிட்டதனாலே, அங்கு தழை உரம் அறுப்பதற்குக்கூட யாரையும் அனுமதிப்பதில்லை, இதையும் மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும். ஒருவர்கூட உரம் அறுத்துக் கொள்ளுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அந்தப் பிராந்தியங்கள் காடுகள் என்று வரையறைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதினாலே, யாரும் உள்ளே செல்லுவதற்கோ, அல்லது தழை உரங்கள் அறுத்துக்கொள்வதற்கோ அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கும் மேலாக, கூலித் தொழிலாளர்கள் போன்றவர்கள், ஏழைக் கிராம மக்கள் போன்றவர்கள் அங்கு காட்டில் விழுந்து கிடக்கின்ற சுள்ளி கப்பிகளைக்கூடப் பொறுக்க அனுமதிக்கப்படுவதில்லை. இம்மாதிரி ஏழைகள், விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் போன்றவர்கள் இவர்களுக்கெல்லாம் மிக இன்றியமையாத, வேண்டியிருக்கிற பண்டங்களைப் பெறுவதற்கு, யாருக்கும் நஷ்டம் இல்லாமல், அவர்கள் பயன் அடைவதற்கு ஒரு பெரிய தடையாக குறுக்கீடாக இது அமைந்திருக்கிறது. உடனடியாகச் செய்யவேண்டியதாவது ஒரு இடத்தை வழியாக 'காரிடார்' மாதிரி விட்டுவிட வேண்டும். முன்பெல்லாம் ஒரு விவசாயி குடியிருப்பிலிருந்து வயலுக்குப் போக வேண்டியிருந்தால் கால் மைல் தூரம் போகவேண்டியிருக்கலாம். ஆனால், இப்பொழுது வேலி போடப்பட்டுவிட்டதால், நான்கு மைல் சுற்றி வரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் நேரிலே வந்து பார்க்கிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் நேரில் வந்து பார்த்தால்தான் உண்மையான நிலை தெள்ளெனப் புலப்படும். அந்தப் பிராந்தியங்களை அப்படிச் செய்யத்தான் வேண்டுமென்றால் காட்டு இலாகா, பனை இலாகா என்று வையுங்கள். அதற்கும் ஒரு யோசனை சொல்லுகிறேன். கண்டதையெல்லாம் வைத்தால் அங்கே வராது. இப்பொழுது அற்றுப்போய்விட்ட ஒரு ஜாதி விருக்ஷம், அந்த ஜாதி இப்பொழுது இல்லவே இல்லை என்று சொல்லவில்லை. அவ்வளவு குறைந்து போய் விட்டது, எங்கள் பகுதியிலே ஏராளமான பனை இருந்தது. அவ்வளவு பேர்களுக்கும் குடியிருப்பதற்கு அருமையான வீடுகளைத் தந்தது. இப்பொழுது பல காரணங்களால் பனைகளெல்லாம் வெட்டப்பட்டு, அவை காளவாய்க்குப் போனவை பல. கால்களாகவும், உத்திரங்களாகவும் பல இடங்களுக்குச் சென்றவை பல. இப்படி ஆயிரம் பனை இருந்த இடத்தில் இப்பொழுது 5 பனை காணப்படுகிறது. இம்மாதிரி காடுகளில் பனையை ஏராளமாகப் பயிர் செய்துவிடுங்கள். ஒரு வருஷத்

தில் தானாகவே மழையில் வளர்ந்துவிடும். கவர்ன்மெண்டு பாரெஸ்டு என்பதற்காகக் காவல்கூட போடவேண்டியதில்லை. ஒருவர் கூட இதைத் தொடமாட்டார்கள். அது நாட்டிற்கு வளம் தரும். அதோடுகூட, பனையிலிருந்து நுங்கு போன்ற பலன்களும் கிடைக்கும். இவற்றை எல்லாம் மனத்தில் கொள்ளவேண்டும். இந்த மாதிரி இன்றியமையாத துறையாக இருக்கிற இது விவசாயத்திற்கு எவ்வளவு தீமையை உண்டு பண்ணுகிறது என்பதைப் பரிவோடு, வேறு கண்ணோட்டம் இல்லாதபடி, வெறும் ரிகார்டுகளைப் பார்த்து செய்யமுயலாமல் கவனித்து, இந்த "ஃப்ராஸ்ட்" பகுதிகளை எல்லாம்—அவற்றை ஃபாரஸ்ட் என்று நான் ஒப்புக் கொள்ள முடியாது—மேய்ச்சல் பூமிகளாக உபயோகப்படக்கூடிய நிலங்களாக ஆக்கி, பனை மரங்கள் வைத்தால் நன்றாக வளரும், அதன் மூலமாக நாட்டிற்கும் ஆட்சிக்கும் நல்ல பலன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டு கனம் அங்கத்தினர்கள் இந்த பாலியத்தைப் பற்றிப் பேசினார்கள். காடு என்று சொன்னால், எனக்கும் சொந்த முறையிலே தெரியும். "மேய்ச்சல் தரை, மேய்ச்சல் தரை" என்று சொன்னால், அங்கு எங்கே புல் இருக்கிறது? எங்கள் பகுதியிலே "புரை" என்று சொல்லுவார்கள். திரு. சா. கணேசன் அவர்களும், திரு. தியாகராஜன் அவர்களும் சொல்லுகின்ற நிலைமையைப் பார்த்தால், அங்கு எப்படி புல் வளரும்? அங்கே எப்படி மாடு மேயும், எப்படி மாட்டை வளர்க்க முடியும் என்பதே சந்தேகமாக இருக்கிறது. இருந்தாலும், அதில் என்ன புல் விளையும் என்பதை பரிசீலனை செய்து பார்க்கலாம். ராமநாதபுரம் பகுதியிலே சர்க்கார் கால் நடைப்பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி புதுக் கோட்டையிலும் இருக்கிறது. பக்குவப்படுத்திச் செய்தால் நன்றாக இருக்கும். எங்களுடைய பகுதியிலே கொழுக்கட்டைப் புல்லைப் போட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் இருக்கிற மாடுகளைப் போல அங்கேயும் பளபளப்பாக இருக்கின்றன. புதுக் கோட்டைப் பகுதியிலே, நல்ல மரங்கள் வளர்வதிலே எந்த விதமான தடங்கலும் இருக்காது. அங்கே இருக்கும் நிலத்தினுடைய வளம் எனக்கு நன்றாகத் தெரியும். வெட்டாமல் இருந்தால்தான் மரங்கள் நன்றாக வளரும். எல்லோரும் மரங்களை வெட்டுவது என்று சொன்னால், திரு. கணேசன் அவர்கள் குறிப்பிட்டது போல், முள் செடிதான் இருக்கும். புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில், அந்தக் காலத்தில் ஜமீன் நிலமாக இருந்து, அதை சர்க்கார் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும்போதே மரங்களை வெட்டி விட்டார்களா அல்லது கொடுத்த பிறகு மரங்களை வெட்டினார்களா என்பது தெரியவில்லை. நல்ல முறையில் காவல் இருக்க வேண்டும். காவல் இல்லை என்றால், சுள்ளிகூட இல்லாமல் போய்விடும். ஆகவே இதையெல்லாம் மனதில் கொண்டு, நல்ல முயற்சி செய்து வைக்கவேண்டும். புதுக்கோட்டைப் பகுதியில்

9,000 அல்லது 10.000 ஏக்கர் இருப்பதாக என்னுடைய கணக்கு. பிளான்டேஷனுக்காக எடுத்துக் கொண்டதெல்லாம் 2,000 ஏக்கருக்குள் இருக்கும். மற்ற இடத்திலே மாடுகளை மேய்ப்பதிலே தடை இல்லை. இப்பொழுதும் மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நல்ல மரங்களை வைத்து வளர்ச்சி செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். ஹைப்ரிட் யூகலிப்டஸ் மரங்களைப் பல இடங்களிலே இப்பொழுது வைத்திருக்கிறோம். நன்றாக வளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறது. அது விறகுக்கும் உபயோகப்படுகிறது. கற்பூர எண்ணெய் (யூகலிப்டஸ் ஆயில்) எடுப்பதற்கும் வசதியாக இருக்கும். மலைப் பிரதேசங்களில்தான் மூங்கில் வளரும் என்ற எண்ணம் முன்னர் இருந்தது. ஆனால் சமுத்திர மட்டத்தில் இருக்கக்கூடிய நிலங்களிலும் மூங்கில் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது தெரிந்து, ஒரு தனி ஜாதியைக் கண்டு பிடித்து நாங்கள் நட்டுக்கொண்டு வருகிறோம். அந்த மூங்கில் பேப்பர் மில்களுக்குப் பயன்படும்.

கனம் சுதந்திரா கட்சித் தலைவர் திரு. கணேசன் அவர்கள் குறிப்பிட்ட பல பகுதிகளுக்கு நான் போய் இருக்கிறேன். மந்திரி என்ற முறையில் மாத்திரம் அல்ல. தக்க பாதுகாப்புக் கொடுத்து, நல்ல மரங்களை வைக்கலாமா என்று முயற்சி செய்து பார்க்கலாம். ஆனால் நான் ஒன்றை மட்டும் ஒப்புக் கொள்ள முடியாது. மேய்ச்சல் தரை கெட்டுவிட்டது என்று அவர்கள் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. மேய்ச்சல் தரை என்றால், அதிலே புல் இருக்கவேண்டும். மாடுகள் மேய வேண்டும். அவைகள் கெட்டு விட்டதினால் மாடுகள் வீட்டிற்கு திரும்பி வந்து விடுகின்றன. அதனால், கால்நடை வளர்ச்சி போய்விடும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. நல்ல வகையில் முயற்சி எடுத்துத்தான் இந்தக் காரியங்களிலே அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. அதற்கு எல்லா அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பும் தேவை. கிராம மக்களைத் தள்ளி விட்டு, அங்கே இருக்கக்கூடிய காட்டிலாகா அதிகாரிகள் மட்டும் ஒரு காரியத்தையும் செய்துவிட முடியாது. அவர்களே இரவு பகலாக காவல் காக்க முடியாது. உள்ளூரிலேயே இருக்கின்றவர்களை காவலுக்குப் போட வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளூரில் இருக்கிறவர்களை போட்டால் திருட்டு அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். உள்ளூர்க்காரராக இருந்தாலும் சரி, வெளியூர்க்காரராக இருந்தாலும் சரி, பொது மக்களுடைய ஆதரவு இல்லை என்றால், எந்த வேலையும் தடைப்படும். இந்த இலாகாவிலிருந்து இப்பொழுது அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் வந்து கொண்டிருக்கிறது. இரும்பு போதுமான அளவு கிடைக்காத காரணத்தால் நல்ல மரங்களை வைத்து வெட்டிக் கொடுக்கிறோம். விறகும் கிடைக்கிறது. இப்பொழுது நாட்டிலே விறகுப் பஞ்சம் இருக்கிறது என்று சொல்லுகிறோம். இதற்கெல்லாம் காடுகள் உதவியாக இருக்கின்றன. சென்னைக்குப் பக்கத்திலே 100 மைல்களுக்கு எத்தனை ஆயிரம் ஏக்கர் வேண்டுமானாலும், அதிலே விறகுக்கான மரங்களை வைப்பது என்ற திட்டம்

DEMAND NO. XIX—CO-OPERATION, DEMAND NO. XVII—
FISHERIES, DEMAND NO. XXXV—FOREST DEPARTMENT
AND DEMAND NO. XLIV—CAPITAL OUTLAY ON FORESTS

இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களுக்கு இது மிகவும் உபயோகமாக இருக்கும். அதே சமயத்தில் வெளியிலே இருக்கிற விறகின் விலையைக் குறைப்பதற்கும் வசதியாக இருக்கும். இன்று காலை ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது, கனம் விவசாய அமைச்சர் அவர்கள் ஒரு குண்டு விறகு ரூ. 1·75-க்கு விற்கப் படுகிறது என்று தெரிவித்தார்கள். இப்பொழுது காட்டிலிருந்து மரங்களை வெட்டி விறகு சப்ளை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு காட்டிலாகா மூலம் 8 டெப்போக்கள் நடத்தவிருக்கிறோம். இவற்றில் ஒன்றிரண்டு டெப்போக்கள் திறந்தாகிவிட்டது. இன்னும் இரண்டு, மூன்று நாட்களிலே எல்லா இடங்களிலும் டெப்போக்களை ஏற்படுத்த முடியும். வெளியிலே இதைவிட இரண்டு மடங்கு விலையில் விற்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த மாதிரி நல்ல வளர்ச்சி அடைந்து வரும் நகரங்களுக்கு விறகு சப்ளை செய்ய வேண்டுமென்றால், காட்டு வளத்தை அதிகமாக்க வேண்டும். வளம் இருக்கிற இடங்களில்தான் காடுகள் வளரும் என்ற எண்ணத்தை விடவேண்டும். எங்கள் பகுதியில் வெறும் கல்தான் இருந்தது. அப்படியிருந்தும், நல்ல மேய்ச்சல் தரையை உண்டாக்கி, கால்நடையை வளர்க்கும் முயற்சியை எங்களுடைய பெரியோர்கள் எடுத்துக் கொண்டார்கள். அதன் காரணமாக எங்கள் பகுதியிலே கால்நடை வளர்ச்சியடைந்திருக்கிறது. மக்கள் ஒத்துழைப்பு இருந்தால்தான் எதையும் நல்ல முறையில் செய்ய முடியும்.

சென்னையிலுள்ள வன வளத்தைக் கணக்கிட்டால், 17 சதவிகிதம் காடுகள்தான் இருக்கின்றன என்று தெரிகிறது. அதுவும் நல்ல காடுகள் என்று சொல்ல முடியாது. 32 அல்லது 33 சதவிகிதம் காடுகள் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்பொழுதுதான் நிறைய மழை பெய்யும் என்று சொல்லுகிறார்கள். திரு. கணேசன் அவர்கள் இந்தக் காடுகள் இருப்பதால், மக்கள் ½ மைல் போவதற்கு 4 மைல் தூரம் சுற்றிப்போக வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். கேள்வி முறை இல்லாமல் இருந்த காலத்திலே, குறுக்கேயும் போகலாம், நெடுக்கேயும் போகலாம். இதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு சொந்தக் காடு இருக்கிறது என்றால், அதில் யாராவது குறுக்கே போகிறார்கள் என்று சொன்னால், பிரச்னை ஏற்படுகிறது. அரசாங்கக் காடுகளையும் சொந்தக் காடுகளாக பாவித்து காரியங்களைச் செய்தால்தான் நல்ல முறையில் வளர்ச்சி ஏற்படும். அப்பொழுதுதான் வன வளத்தைப் பெருக்க முடியும். வன வளத்தைப் பெருக்கினால் நிறைய மழை கிடைக்கும். அப்பொழுதுதான் விவசாயத்தைப் பெருக்கி பொருளாதார நிலையை உயர்த்த முடியும்.

திரு கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் ஸார். கன்னியாகுமரி வட்டத்தில் வன இலாகா அதிகாரிகள் இந்தப் பிராந்தியத்திலே நுழைகிறார்கள் என்பதற்காக அவர்கள் மீது அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள்—

MR. DEPUTY SPEAKER: Is the hon. Member Sri K. A. Mathialagan introducing a new point?

SRI K. A. MATHIALAGAN: I am only seeking elucidation on a point. It is a matter pertaining to opening of fire by Forest Rangers in Kanaykumari district. One Rajamani of Paramakudi had been shot dead.

கனம் திரு. பூ. கக்கன்: *கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் மீது ஏதாவது குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காகத் தான் இந்தப் ஆரச்சனையை இப்பொழுது எழுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.*

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister may continue his speech.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: *கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எல்லோருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் நாம் நல்ல முறையில், ஒழுங்காக வன வளத்தைப் பெருக்க முடியும். ஆங்காங்கு இருக்கும் எங்களுடைய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு மக்களுடைய ஒத்துழைப்பு சிறந்த முறையில் இருக்குமானால், அவர்கள் தங்களுடைய வேலைகளை இன்னும் திறம்படச் செய்வார்கள். அவர்கள் காட்டுக்குள்ளே போகும்போதெல்லாம் துப்பாக்கியை வைத்துக்கொண்டே போக வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை. எல்லா நேரங்களிலும் துப்பாக்கி கொண்டு போகவேண்டாம் என்றுதான் அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. துப்பாக்கி கொண்டுபோவது என்பது அனேகமாகக் குறைவாகத்தான் இருக்கும். துப்பாக்கியை வைத்துக்கொண்டுதான் காட்டுக்குள்ளே போகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. துப்பாக்கி கொண்டுபோகக்கூடாது என்று தான் சொல்லியிருக்கிறோமே தவிர, எப்போதும் துப்பாக்கியைக் கையில் வைத்திருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் அரசாங்கம் செய்யவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த மானியத்திலே நல்ல யோசனைகளைத் தெரிவித்த கனம் அங்கத்தினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்தவர்கள் தங்களுடைய வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று கேட்டு, எல்லோரும் மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையில் நான் உட்காருகின்றேன்.*

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 91,27,800 under Demand XXXV—Forest Department be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 91,27,800 under Demand XXXV—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 62,05,000 under Demand XLIV—Capital outlay on Forests be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 62,05,000 under Demand XLIV—Capital outlay on Forests.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 25th March 1963.

The House then adjourned.

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

137. *Notification issued with G.O. No. 4794, Revenue, dated 31st December 1962 amending the Notification II-1 No. 5660 of 1962, dated 19th November 1962, published at page 2398 of Part II—Section 1 of the* Fort St. George Gazette, *dated the 28th November 1962. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959)].*

B. Reports, Notifications and other papers.

* 84. *Policy note on Demand 1—Land Revenue (in Tamil).*

* 85. *Speech of the Hon. Minister for Co-operation while moving Demand No. XXXV—Forest (in Tamil).*

* Circulated to Members on 21st March 1963.

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 357-B on page 311]

Subject.—Prices—Holding the price line—Steps taken.

The policy in respect of price control is laid down by the Centre. Besides the action that is taken by the Government of India, the following steps have been taken by this Government for holding the price line :—

(i) Fair Price Shops for the supply of rice to the poor at cheap prices are opened wherever and whenever necessary. Rice for these Fair Price Shops is supplied from the Central reserves. The Government of Madras are procuring on behalf of the Government of India one lakh tons of rice in this State.

(ii) Wheat is being sold at fair price through the shopkeepers authorised by the District Revenue Officers and Collectors. These shops get their supplies from the Central reserves. With a view to popularise the consumption of wheat in the place of rice, all the quantitative restrictions in the release of wheat from the Central reserves and in the sale of wheat from the approved shops have been lifted.

(iii) Government have sanctioned the opening of eight Fair Price Shops for sale of firewood in Madras City to the poor. Firewood will be sold in these shops at Rs. 1.75 per gundu of 25 kilograms.

(iv) Government have sanctioned a scheme for the organisation of a large number of Consumer Co-operative Stores for the sale of essential commodities. The scheme in its first phase has been implemented in nine towns, viz., Madras City, Madurai, Thanjavur, Tuticorin, Vellore, Salem, Coimbatore, Nagercoil and Tiruchirappalli towns. The retail units so far opened have been able to sell essential commodities at prices lower than the market rates keeping only the minimum profit required for their working expenses. Apart from this, another scheme for the organisation of about 150 Co-operative Consumer Stores for the benefit of employees of the industrial establishments and plantations has been sanctioned.

(v) Following the declaration of Emergency a tendency for a spurt in prices of vegetables in the City was noticed. After a good deal of discussion with representative wholesale and retail dealers an agreement was reached for the retailers to charge not more than 20 per cent over the rates obtaining in Kothwal Bazaar. Publicity is being given to the prices prevailing in Kothwal Bazaar so that there will be effective consumer resistance to an increase in prices.

As a long term measure, Government have sanctioned a scheme for production of more vegetables in and around Madras City and in the towns of Madurai, Coimbatore, Tiruchirappalli and Tirunelveli.

(iv) Although our food position is quite satisfactory, a watch over the trading on foodgrains is kept. Under the Madras Foodgrains Dealers/Licensing Order, 1958 those who deal in foodgrains exceeding 19 quintals at a time have to take out a licence from the Commercial Tax Officers. The licencees are required to submit fortnightly reports about the arrivals, stock position of foodgrains, etc., and have to issue bills for sale. The business premises are subject to inspection by Civil Supplies authorities.

(vii) Similarly, it is considered necessary to keep a watch over the purchases and sales of sugar although there is surplus sugar in the Country. Government have therefore issued the Madras Sugar Dealers' Licensing Order, 1962 providing for licensing the dealers engaged in sugar trade in quantities exceeding 50 quintals at a time.

(viii) Pulses like Blackgram, Toor Dhall, etc., required in this State was generally imported from the North Indian Centres. Due to lack of wagons for transport, there was occasional scarcity and a slight increase in prices. Prompt action is taken for allotment of adequate number of wagons for the movement of pulses to the South.

(ix) Hoarding of stocks by trade reduces availability of commodities in the market and this affects adversely the prices of foodgrains. As an anti-hoarding measure, the hoarding capacity of the trade is regulated by credit control. The Reserve Bank regulates advances by scheduled banks.

A close watch is maintained over the trend of prices and supply position of essential commodities. The provisions of the Essential Commodities Act and the Defence of India Rules will be invoked if and when necessary.

311-ம் பக்கத்திலுள்ள 357 (பி) எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.

பொருள்.—விலைவாசி—விலைவாசியைக் கட்டுப்படுத்துதல் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை.

விலைவாசியைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான கொள்கையை மத்திய அரசாங்கம் வகுத்துள்ளது. இத்துடன் மாநில அரசாங்கமும் விலைவாசியைக் கட்டுப்படுத்தப் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளது :—

(1) அவசியம் நேரும்போது, அவசியமான இடங்களில், ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்காக நியாயவிலைக் கடைகள் திறக்கப்படுகின்றன. இந்த நியாய விலைக் கடைகளுக்கு மத்திய சேமிப்பிலிருந்து அரிசி வழங்கப்படுகிறது. இந்திய அரசாங்கத்தின் சார்பாகத் தமிழ்நாடு அரசாங்கம் இந்த மாநிலத்தில் ஒரு லட்சம் டன்கள் அரிசியைக் கொள்முதல் செய்து வருகிறது.

(2) மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், கலெக்டர்கள் ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கடைகளில் கோதுமை நியாய விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. மத்தியச் சேமிப்பிலிருந்து இந்தக் கடைகளுக்குக் கோதுமை வழங்கப்படுகிறது. அரிசிக்குப் பதிலாகக் கோதுமை உணவைப் பிரபலப்படுத்தும் நோக்கத்தோடு, மத்தியச் சேமிப்பிலிருந்து கோதுமையை வழங்குவதற்கும், அங்கீகரிக்கப்பட்டுள்ள கடைகளில் கோதுமையை விற்பனை செய்வதற்கும் அளவுக் கட்டுப்பாடுகள் முழுவதும் நீக்கப்பட்டுள்ளன.

(3) சென்னை நகரில் ஏழை மக்களுக்கு நியாயவிலையில் விறகு விற்பனை செய்வதற்காக எட்டு நியாயவிலை கடைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. இந்தக் கடைகளில் 25 கிலோகிராம் கொண்ட குண்டு ஒன்றுக்கு ரூ. 1.75 வீதம் விறகு விற்கப்படும்.

— (4) அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்ய ஏராளமான பயன்படுத்துவோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இந்தத் திட்டம் முதல் கட்டத்தில் சென்னை, மதுரை, தஞ்சை, தூத்துக்குடி, வேலூர், சேலம், கோவை, நாகர்கோயில், திருச்சி ஆகிய ஒன்பது நகரங்களில் அமலாக்கப்பட்டிருக்கிறது. இதுவரை திறக்கப்பட்டுள்ள சில்லறை விற்பனைக் கடைகள் அத்தியாவசியப் பொருள்களை மார்க்கட் விலைக்குக் குறைவாக விற்று வருகின்றன; நடைமுதல் செலவுக்கான குறைந்த அளவு லாபமே வைக்கின்றன. இதைத் தவிர, தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நன்மையளிக்கும் 150 பயன்படுத்துவோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(5) தேசீய நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டதை யொட்டி, சென்னை நகரில் காய்கறிகளின் விலைகள் அதிகரிக்கும் போக்கு காணப்பட்டது. காய்கறிகள் மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் ஆகியோரின் பிரதிநிதிகளுடன் விரிவாக விவாதம் நடத்தியதன் விளைவாக, சில்லறை விற்பனையாளர்கள் கொத்தவால் சாவடி விலையில் 20 சதவீதத்துக்குமேல் கூட்டுவது இல்லையென்று ஒரு உடன்பாடு ஏற்பட்டது. பயன்படுத்துவோர் நியாயவிலை கொடுத்துக் காய்கறிகள் வாங்குவதற்கு வசதியாகக் கொத்தவால்சாவடி விலைகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

நீண்டகால ஏற்பாடாகச் சென்னை நகரின் சுற்றுப் புறங்களிலும், மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி நகரங்களிலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

(6) நம்முடைய உணவு நிலை திருப்திகரமாக இருந்த போதிலும், உணவுப் பொருள்களின் வியாபாரம் கண்காணிக்கப் பட்டு வருகிறது. 1958-ம் ஆண்டு சென்னை உணவுப் பொருள்

வியாபாரிகள் உத்தரவின்கீழ், ஒரு தடவையில் 19 குவின்டால்களுக்கு அதிகமாக உணவுப் பெருள்களை விற்பனை செய்பவர்கள் வாத்தகவரி அதிகாரிகளிடமிருந்து லைசென்சு பெறவேண்டும். இவ்வாறு லைசென்சு பெற்றவர்கள் உணவுப் பொருள்களின் கொள் முதல், இருப்பு முதலியவற்றைப் பற்றிப் பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். அத்துடன், விற்பனைக்கு பில் தரவேண்டும். மேலும் வியாபார இடங்களைச் சிவில் விநியோக அதிகாரிகள் பார்வையிடலாம்.

(7) நாட்டில் சர்க்கரை உபரியாக இருந்தபோதிலும், சர்க்கரைக் கொள்முதல், விற்பனை பற்றி இவ்வாறு கண்காணித்து வருவது அவசியம் எனக் கருதப்படுகிறது. எனவே, அரசாங்கம் 1962-ம் ஆண்டு சென்னை சர்க்கரை வியாபாரிகள் லைசென்சு வழங்கும் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதன்படி, ஒரு தடவையில் 50 குவின்டால்களுக்கு அதிகமாக விற்பனை செய்யும் வியாபாரிகள் லைசென்சு பெறவேண்டும்.

(8) நமது மாநிலத்திற்கு தேவைப்படும் உளுந்து, துவரை போன்ற பருப்பு வகைகள் பொதுவாக வட இந்தியப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. சரக்குப் போக்குவரத்துக்குப் போதுமான வாகன்கள் இல்லாத குறையினால், சில சமயங்களில் இந்தப் பொருள்களுககுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. விலை ஓரளவு கூடியது. இந்தப் பருப்பு வகைகளைத் தென்பகுதிக்குக் கொண்டு செல்லப் போதுமான அளவில் வாகன்களை ஒதுக்கச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.

(9) வியாபாரிகள் உணவுப் பொருள்களை அதிக அளவில் சேமித்து இருப்பு வைத்து விடுவதால், மார்க்கட்டில் இவற்றின் விநியோகம் குறைந்துபோய், விலையும் அதிகமாகிறது. இவ்வாறு சேமித்து வைப்பதைத் தடுக்கும் பொருட்டுச் சேமிப்பு அளவானது கடன் கட்டுப்பாடு மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஷெட்யூல்டு பாங்குகள் கொடுக்கும் முன் பணங்களை ரிசர்வ் பாங்கு ஒழுங்குபடுத்துகிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி, விநியோக நிலை ஆகிய நிலவரங்கள் கவனமாகக் கண்காணிக்கப் பட்டு வருகின்றன. அவசியம் நேரும்போது அத்தியாவசியப் பொருள்கள் சட்டவிதிகளும், இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளும் பயன்படுத்தப்படும்.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 25th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

ஹோமியோபதி மருத்துவம்

* 343 கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. இராம. அரங்கண்ணல் சார்பாக): கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா?

ஹோமியோபதி மருத்துவ முறை வளர்ச்சிக்கு அரசாங்கம் அளித்து வரும் சலுகைகள் யாவை?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்பொழுது சலுகைகள் ஒன்றுமில்லை.

* 344 *Q.*—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a college for Homoeopathic system of medicine with a hospital attached; and

(*b*) if so, when and where?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: அமெரிக்கா போன்ற இடங்களில்கூட ஹோமியோபதிக்கு கல்லூரிகள் இருப்பதாகச் சொல்கிருர்கள். ஹோமியோபதி முறைக்கு ஊக்கம் அளிக்க நமது மாநிலத்திலும்கூட ஒரு ஹோமியோபதி கல்லூரியை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், கல்லூரி முறையிலே ஹோமியோபதி வைத்தியத்தைக் கற்பிப்பதற்காக வேண்டி ஏற்கனவே நான் சொன்னதுபோல் ஒரு பில் லா டிப்பார்ட்மெண்டில் இருக்கிறது. அது டிராப்ட் ஆகி ஆக்ட் ஆக பாஸான பிறகு இதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

Family Planning

* 348 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to divert the funds allotted for the family planning programme towards defence expenditure in view of the present emergency?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No.

*349 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 1962–63-ல் மேலும் எத்தனை குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஏற்படுத்த உத்தேசம் ?

(இ) இக் குடும்பக் கட்டுபாடு நிலையத்தின் தலைமை அதிகாரி யார் ?

(உ) இந்தப் பதவிக்கு அவர் எவ்வாறு எந்த யோக்யதாம்ச அடிப் படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார் ?

(எ) தற்சமயம் எத்தனை குடும்பக் கட்டுபாடு அதிகாரிகள் தமிழ் நாட்டில் உள்ளனர் ?

(ஐ) இதில் பெண்கள் எத்தனை பேர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) There are no proposals for the opening of additional Family Planning Clinics in Chingleput district during 1962–63.

(b) & (c) The Family Planning Clinics are functioning under the control of the Medical Officers of the institutions in which they are located. The Medical Officers are qualified doctors borne on the Madras Medical Service.

(d) There are twelve posts of District Family Planning Officers of which three are vacant at present. There is also a State Family Planning Officer under the control of the Director of Medical Services.

(e) The State Family Planning Officer is a woman and the District Family Planning Officers are all men.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, யுத்த காலத்தில் மக்கள் தொகையைக் குறைப்பது சரியல்ல என்ற காரணத்தினால் நெருக்கடி நிலைமை நீங்கும்வரை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறுத்தி வைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஃபாமிலி பிளானிங் திட்டத்தை பொறுத்தமட்டில் நெருக்கடி நிலைமையையொட்டி ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கிராமப் புறங்களிலே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வரவேற்கிறார்கள். தலைமை ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று வருவது அசௌகரியமாக இருப்பதால் கிராம மக்களுக்கு வசதியாக "மொபைல் யூனிட்"-கள் ஏற்படுத்தப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், ஹெட்குவார்டர்ஸ் ஹாஸ்பிடலிலும், தாலூகா ஆஸ்பத்திரிகளிலும் அதற்கான நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மொபைல் யூனிட்டில் போய் "வாசக்டமி" செய்ய முடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டு வருகிறது.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது ஆப்பரேஷன் சிஸ்டம் இருக்கிறது. அதனால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அமெரிக்காவில் இருப்பது போல் "பில்ஸ்" முறைத் திட்டம் இங்கும் கொண்டுவரப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பில்ஸ் சிஸ்டமும், மற்ற சிஸ்டங்களும் இங்கும் இருக்கின்றன. அவைகள் எல்லாம் சக்ஸஸ்புல் முறையாக இல்லாத காரணத்தால் ஆப்பரேஷன் செய்து கொள்கிறார்கள்.

திரு. சா. ராமசாமி : அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் சிறிது தூரம்கூட நடக்கக்கூடாது என்ற நிலைமை இருப்பதால் கிராமங்களிலுள்ளவர்கள் வெளியூர் சென்று சிகிச்சை செய்து கொண்டதின் காரணமாக

அவர்கள் ஆப்பரேஷன் செய்து கொண்டபிறகு நடந்து வரக்கூடிய நிலைமை இருப்பதால், அவர்கள் இரண்டொரு நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கிச் செல்ல வழிவகை செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தூரத்திலிருந்து வருபவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தால் அவர்களை ஒரு நாள் ஆஸ்பத்திரியில் தங்க வைத்துத்தான் அனுப்புகிறார்கள். கிட்டே இருந்து வருகிறவர்களை அறுவை சிகிச்சை முடிந்தவுடன் ஒருசில மணி நேரங்களிலே அனுப்பி வைக்கிறார்கள்.

திரு. ஆர். ரங்கசாமி : குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட குடும்பத்தில் இருக்கக்கூடிய குழந்தைகள் இறந்து போகாமல் இருக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒருவருடைய உயிருக்கு அரசாங்கம் காரணமாக இருக்க முடியாது.

திரு. ஜே. மாதா கவுடர் : குடும்பக் கட்டுப்பாட்டுக்காக சட்டம் கொண்டு வரும்போது, சட்ட மன்ற அங்கத்தினர்களும் அமைச்சர்களும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் கண்டிப்பாக ஆப்பரேஷன் செய்து கொள்ள வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அமைச்சர்களுக்கெல்லாம் ஒரு கட்டுப்பாடான குடும்பம்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன் (சிரிப்பு).

* 350 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR :
SRI C.M.AMIKAPATHI : } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to defer the Family Planning Scheme in view of the emergency; and

(b) if so, the amount that could be saved out of this Scheme?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தத் திட்டம் அமலுக்கு வந்த பிறகு குழந்தைகள் பிறப்பது குறைவாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு தெரியுமா ? ஆம் எனில், அது பரிசீலிக்கப்பட்டுச் சொல்லப்படுகிறதா அல்லது உத்தேசத்தில் சொல்லப்படுகிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குழந்தைகள் பிறப்பது குறைவு என்று சொல்லமாட்டேன். பெரிய குடும்பங்களில் ஒரு கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி : சார், குடும்பக் கட்டுப்பாடு என்பது ஆங்கிலத்தில் "ஃபாமிலி பிளானிங்" என்று இருப்பதால் "கட்டுப்பாடு" என்றால் பொருளாதாரத் துறையிலும் கட்டுப்பாடு செய்வது என்று அர்த்தமா ?

கனம் சபாநாயகர் : இதுவரை கனம் அங்கத்தினர் என்ன புரிந்து கொண்டார்கள் ?

திரு. டி. கார்ச்சா கவுடர் : இளம் வயதிலே ஆண்களும் பெண்களும் கல்யாணம் செய்து கொள்வதன் காரணமாகத்தான் குழந்தைகள் அதிகமாக பிறக்கின்ற காரணத்தால் கல்யாணம் செய்து கொள்ளும் வயதை ஆண்களுக்கு 30 என்றும், பெண்களுக்கு 25 வயது என்றும் நிர்ணயித்து ஒரு சட்டம் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா ?

Erskine Hospital (Madurai)

* 354 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to establish a steam-laundry in Government Erskine General Hospital at Madurai?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No.

Electric motors.

* 355 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether it is a fact that the Government have permitted the installation of motors up to 3 horse-power in residential areas for domestic and other purposes?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Electrical appliances intended to be used for purely domestic or personal purposes or comfort need no permission. Electric motors for drawing water from wells in lodging houses, restaurants and hotels are treated as those intended for personal purposes and comfort.

Installations of electric motors up to 3 horse-power have been made permissible in notified residential areas for running cottage industries notified by Government under section 92 of the Madras Public Health Act, 1939.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : மூன்று ஹார்ஸ் பவருக்கு மேல் 10 ஹார்ஸ் பவர் வரை ரெசிடென்ஷியல் ஏரியாக்களில் மோட்டார் வைக்க அனுமதிக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், "பர்சனல் பர்ப்பசுக்காக" மூன்று ஹார்ஸ் பவர் வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஹார்ஸ் பவர் வைக்க அரசாங்கத்தினுடைய உத்தரவு தனியாகத் தேவை இல்லை. அந்த முறையில் 10 ஹார்ஸ் பவர் வைக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : குடியிருப்புப் பகுதிகளில் இருக்கின்ற வீடுகளை குடியிருப்பு அல்லாத பிராந்தியங்களாக மாற்றி விடுகிறார்கள். அப்போதும் தொடர்ந்து மூன்று பக்கமும் வீடுகள் இருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றன. அவ்வாறு குடியிருப்புப் பகுதிகளை குடியிருப்பு அல்லாத பிராந்தியமாக மாற்றுவதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடியிருப்பு வீடுகளில் மூன்று ஹார்ஸ் பவர் வரை வைத்துக்கொள்ள பர்மிஷன் கொடுத்து இருக்கிறோம். குடியிருக்கும் பகுதிகளில் இருப்பவர்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லையென்று சொன்னால் அங்கு 10 ஹார்ஸ் பவர் வைக்க அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆனால் கண்டிப்பாக உத்தரவு போடும்போது, குடியிருக்கும் இடங்களில் 10 ஹார்ஸ் பவர் வைக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் உத்தரவு.

பொதுமக்களுக்கு அக்கஷ்டம் தெரிவதில்லை. அதற்கு சம்மதம் கொடுத்து விடுகிறார்கள். அப்படி மாற்றிய பிறகு அங்கு தொழிற்சாலை ஆரம்பித்தவுடன் மீண்டும் இடைஞ்சல் இருக்கிறதென்று மனு செய்கிறார்கள். ஆகவே குடியிருப்பு அல்லாத பிராந்தியமாக மாற்றும்போது தீர ஆலோசித்து மாறுதல் செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தீர ஆலோசனை செய்துதான் செய்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : தீர ஆலோசித்தாலும்கூட திருப்பியும் வருவார்கள்.

போலீசாருக்கு வீடுகள்

* 358 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னை நகர பஸ் ஸ்டாண்டு சமீபமுள்ள இடத்தில் போலீசாருக்கு வீடு கட்டப்படுவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் எந்த நிலையில் உள்ளன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்டிட வேலை முடிந்து, பூச்சு வேலையும் தளவரிசை வேலையும் நடந்து வருகின்றன. 1963 ஏப்ரல் மாதத்திற்குள் வேலை பூர்த்தியடையலாம்.

The building work is completed and the work relating to plastering and flooring, etc., is in progress. The work is expected to be completed by about April 1963.

திரு. இராம. அரங்கண்ணல் : சட்டக் கல்லூரியின் எதிரில் இருந்த போலீஸ் ஸ்டேஷன் இடிக்கப்பட்டு அங்கு 30 லட்சம் ரூபாய் செலவில் 5 மாடி கதர் எம்போரியம் வைக்கப்படுவது உண்மையா ? அங்கு கட்டப்பட இருந்த போலீஸ் க்வார்ட்டேர்ஸ்க்காக பக்கத்தில் பஸ் ஸ்டாண்ட் அருகிலிருந்த 50 குடிசைகள் அகற்றப்பட்டு அங்கு இப்போது போலீஸ் வீடுகள் கட்டப்படுவது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கதர் எம்போரியம் கட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அதை உத்தேசித்து குடிசை போட்டிருப்பவர்களை வெளியேற்றுகிறார்கள் என்று சொல்வது சரி அல்ல. குடிசை வாழ்வோர் இடங்கள் சுகாதாரமாக இருக்கவேண்டும், சரிய வகையில் இடம் அளிக்கவேண்டும். மாற்ற வேண்டிய அவசியம் இருந்தால் மாற்ற வேண்டும். எந்தெந்த இடங்களில் எந்தெந்த கட்டடங்கள் கட்டவேண்டுமோ அதை எல்லாம் பரிசீலனை செய்து கட்டப்படுகிறது. ஏற்கனவே அங்கு குடியிருப்பு வசதியில்லை. இப்போது குடியிருப்பு வசதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : ப்ராட்வே பஸ் ஸ்டாண்ட் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை அடுத்திருக்கிற இடங்களில் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கவனித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

* 359 கேள்வி.—**திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா, சத்தியமங்கலம் கிராமத்தில் போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

(இ) காலதாமதமாவதற்கு காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) சத்தியமங்கலம் கிராமத்தில் போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டும் திட்டம் தேசிய நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) The construction of quarters for police subordinate staff at Sathiamangalam has been deferred due to National Emergency.

(*b*) Does not arise.

சுண்ணும்புக் கற்கள் (திண்டிவனம் வட்டம்)

* 360 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்தில், கடப்பேரி குப்பம் கிராமத்தில் சுண்ணும்புக் கற்கள் அதிக அளவில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அங்கு ஒரு சிமிண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) தென் ஆற்காடு ஜில்லாவில் கடப்பேரி குப்பத்திலும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் சுண்ணும்புக் கற்கள் கிடைக்கின்றன. ஆனுல் அவற்றில் சுமார் 3½ மிலியன் டன் கற்கள்தான் சிமெண்ட் தயாரிப்பதற்கு தகுதிவாய்ந்தவையாக இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றவை மட்ட ரகத்தைச் சேர்ந்தவையாகும்.

(இ) இங்கு கிடைக்கும் சுண்ணும்புக்கல் ஒரு சிறிய சிமெண்ட் தொழிற் சாலேக்குக்கூட போதுமானதாக இல்லே.

தொழில்கள் (கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம்)

* 361 கேள்வி—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் தொழில் முன்னேற்றத்துக்காக தனி சலுகை காட்டப்படுகிறதா ?

(இ) ஆம் என்ருல், சலுகைகள் யாவை ?

(உ) அதன்படி ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) & (*c*) Licences have been issued for the establishment of four Spinning Mills in the Private Sector, one each at Manamadurai, Paramakudi, Tiruvadanai and Ramanathapuram with 12,000 spindles each. To provide employment to the loomless weavers, the Government have also sanctioned assistance by way of loans and grants for setting up of Industrial Co-operatives, one each at Aruppukkottai, Paramakudi and Karaikudi.

திரு. கே. ஏ. மதியழகன் : சிவகங்கையில் தொடங்கப்பட இருக்கும் தொழில்பேட்டை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் சாங்க்ஷன் செய்திருக்கிருர்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : ராமேஸ்வரத்தில் சங்கு குளிப்பு வேலே ஆரம்பமாகி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலே செய்கிருர்கள். அங்கு எடுக்கப்படுகிற சங்கு கல்கத்தாவிலுள்ள தொழிற்சாலேக்கு அனுப்பப்பட்டு அங்கு வளேயல்கள், மோதிரங்கள் செய்யப்பட்டு அவற்றிற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கிராக்கி இருக்கின்றன. ஆகவே ராமேஸ்வரத்தில் ஒரு தொழிற்சாலே ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

புலவர் கா. கோவிந்தன் : வட ஆற்காடு பின்தங்கிய மாவட்டம். வந்தவாசியில் இருந்த கூட்டுறவு நூற்பாலே வேலூருக்கு சென்றிருக்கிறது. ஆகவே மற்றெரு நூற்பாலேயை வந்தவாசிப் பகுதிக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இக் கேள்வி கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றியது.

எண்ணெய் ஆராய்ச்சி (காவிரி வட்டம்)

* 362 கேள்வி.—**திரு. ஆ. துரை அரசன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், மத்திய அரசினரால் காவிரி வட்டத்தில் எண்ணெய் ஆராய்ச்சி நடத்தப்படுகின்றதா ?

(இ) ஆமென்ருல், விபரமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) காவேரி நதி பிராந்தியங்களில் மத்திய எண்ணெய் வள ஆராய்ச்சியாளர்களால் Seismic Survey நடந்து கொண்டிருக்கிறது. அது இன்னும் சில காலத்துக்கு நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில், பட்டுக்கோட்டை பிராந்தியத்தில் மேலும் தீவிர ஆராய்ச்சி செய்ய மேற்கண்ட ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டிருக்கிருர்கள்.

பிறநாடுகளில் தமிழ் இலக்கிய வளர்ச்சி

* 363 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் இலக்கியப் பெருமையை, உலக நாடுகள் எல்லாம் உணர்ந்து பாராட்டுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தமிழக அரசு மேற்கொண்டிருக்கும் திட்டங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No special schemes have been formulated.

புலவர் கா. கோவிந்தன் : பிற நாட்டு அறிஞர்கள் தமிழின் பெருமையை அறிந்து நம் நாட்டில் அதைக் கற்க வந்திருக்கிருர்கள். இந்நிலேயில் உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் தமிழின் பெருமையை அறிய இங்கிருந்து தமிழ் அறிஞர்களே அனுப்பி தமிழ் இலக்கியப் பெருமையைப் பரப்ப இந்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது தமிழின் பெருமையை உணர்ந்து அதைக் கற்றுக் கொள்ளவும் அனுபவிக்கவும் முற்படுகிருர்கள். தமிழ் அறிஞர்கள் பிற நாடுகளுக்கும் அனுப்பப்படுகிருர்கள். இதற்காக பிரத்தியேகமாக அரசாங்கம் ஒரு திட்டத்தை உருவாக்கவில்லே. அப்படி உருவாக்க வேண்டிய அவசியம் இல்லே என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : வடநாட்டில் அலகபாத் போன்ற இடங்களிலுள்ள கல்லூரிகளில் தமிழுக்கு பணம் ஒதுக்கிக் கொடுப்பது போன்று நம் தூதுவராலயங்கள் மூலம் தமிழைப் பரப்ப ஏதாவது முயற்சி செய்யப்படுமோ ?

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தி மொழி வளர்ச்சிக்கு என்று இந்தியப் பேரரசினர் நிதி ஒதுக்கியிருப்பதுபோல் தமிழ் வளர்ச்சிக்கும் இந்தியப் பேரரசினர் நிதி ஒதுக்குகின்றனரா ? இல்லையெனில் அப்படி ஒதுக்குமாறு இந்த அரசாங்கம் மத்திய அரசினரைக் கேட்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் வளர்ச்சிக்கும் மத்திய ஆட்சியினர் உதவி அளித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அதன் விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. தனியாக விவரங்கள் கேட்டால் சொல்லுகிறேன். ஆனால் அவர்கள் உதவி அளித்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : உலகப் புகழ் பெற்ற திருக்குறளை ஆங்கிலத்தில் பலர் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அதில் எது நல்லதாக இருக்கிறதோ அதை எடுத்து நம் சர்க்காரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகமெல்லாம் பரப்ப முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலத்தில் மட்டும் அல்ல, பல மொழிகளில் குறள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே, தனியாக இந்த ஆட்சியினர் ஒரு பதிப்பு போட வேண்டுமென்று கருதவில்லை.

Madras Legislative Assembly (increase of seats)

* 364 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to make representations to the Delimitation Commission suggesting increase of seats for the Madras Legislative Assembly;

(*b*) if so, whether a copy of the memorandum will be placed on the Table of the House ; and

(*c*) whether the Government propose to convene a conference of all the Leaders of Political Parties, to consider these suggestions?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal before the Government at present.

(*b*) & (*c*) Do not arise.

திரு. கே. ஏ. மதியழகன் : அப்படி வருகிற நேரத்தில் ஏழு அங்கத்தினர்களுக்கு ஒரு பார்லிமெண்ட் தொகுதி அமைக்கவேண்டுமென்று இந்த அரசாங்கம் வற்புறுத்துமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி இது சம்பந்தமான விவாதத்தில் கூறினேன். இப் பிரச்னை வரும்போது என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் யோசித்து முடிவு செய்யும்.

திரு. எஸ். முருகையன் : ஆந்திராவில் ஒரு லட்சம் மக்களுக்கு ஒரு சட்டசபை அங்கத்தினர் வீதம் இருக்கிறார்கள். இங்கு $1\frac{1}{2}$ லட்சம் மக்களுக்கு ஒரு அங்கத்தினர் என்று இருக்கிறது. ஆகவே இதை மாற்றி ஒரு லட்சம் மக்களுக்கு ஒரு அங்கத்தினர் வீதம் ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆந்திராவில் என்ன வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து அப்படியே காப்பி அடிக்கவேண்டிய அவசியமில்லை. முன்பு கூறியதுபோல் இப்பிரச்னை வரும்போது நாம் ஏதாவது மாற்றவேண்டுமோ, எப்படி மாற்றுவது என்று யோசித்து முடிவு செய்யப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : பார்லிமெண்ட் தொகுதி ஒதுக்கும்போது எந்த பார்லிமெண்ட் தொகுதியில் இரண்டு அசெம்பளி சீட்டுகள் ரிசர்வ் சீட்களாக இருக்கின்றனவோ அங்கு பார்லிமெண்ட்டுக்கான ரிசர்வ் சீட்டு ஒதுக்கும் முறை இருப்பதாகச் சொல்கிறார்கள். அம்முறைப்படி வேலூருக்கு வர வேண்டிய ரிசர்வ் தொகுதி செய்யாறுக்கு வந்திருக்கிறது. இதை மாற்றியமைப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் டிலிமிட்டேஷன் கமிஷன் யோசிக்க வேண்டிய விஷயம்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், சாதாரணமாக எடுத்துப்பார்த்தால் மலைப் பிராந்தியங்களுக்கு ஐந்து சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஒரு பார்லிமெண்ட் சீட் என்று இருக்கிறது. அதை மாற்றி இம்மாதிரியான மலைப் பிராந்தியங்களுக்கு இரண்டு மூன்று சட்டசபை அங்கத்தினர்கள் இருந்தால்கூட ஒரு பார்லிமெண்ட் சீட் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் தமது கருத்தை டிலிமிட்டேஷன் கமிஷனுக்கு எழுதி அனுப்பலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது ரிசர்வ் சீட்டுகளுக்கு தனியாக ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஜெனரல் சீட்டுடன் சேர்த்து அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கிற அரசியல் சட்டம், தேர்தல் சட்டம் இவைகளின்படி எல்லாம் அமைக்கப்படுகிறது.

கைத்தறி நூல்

* 365 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) கைத்தறிக்கு உபயோகமாகும் 40, அதற்கு குறைந்த எண்ணுள்ள நூல் அதிக விலைக்கு விற்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அதனை நிவர்த்திக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) It has been brought to the notice of Government that cotton yarn of 40 counts and less is being sold in the market sometimes at prices higher than the " ex-mill rates ".

(இ) From 1st November 1962 the Textile Commissioner has brought into force the All India Cotton Yarn Distribution Scheme and yarn is being supplied to the Weavers Co-operative Societies and associations of weavers outside the co-operative fold at fair prices.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், நூல்களுக்கு எக்ஸ் மில்ரேட் நிர்ணயிக்கும்போது வியாபாரிகளைக் கலந்து செய்தார்களா ? அப்படி செய்யாவிட்டால் இனிமேல் செய்ய மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உற்பத்திச் செலவின் அடிப்படையில் தான் நூல் விலை நிர்ணயிக்கப்படுகிறது. டீலர்ஸ்களை கலந்து கொண்டு நூல் விலை நிர்ணயிக்கப்படுவதில்லை. அந்த விதமான சிபாரிசு செய்ய இந்த சர்க்காருக்கு உத்தேசமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்போது நூல்கள் விலையை அந்தக் கட்டின்மேல் போடப்பட்டிருக்கும் விலைக்குத் தகுந்த மாதிரி பில் போடுகிறார்கள். ஆனால் பில்லில் போடுவதற்குமேல் ஏதாவது தொகையை தனியாக

வாங்குகிறார்கள். அவ்வாறு வாங்குவது ஏன் என்று கேட்டால் ஹோல் சேலிலும் அவ்வாறுதான் வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். இதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுமக்கள் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் நாம் என்றைக்கும் இதைத் தடுக்க முடியாது. பில்லிற்கு மேல் அதிகமாகப் பணம் வேண்டுமென்று கேட்டால் கொடுக்காமல் இருக்க வேண்டும். அவசரம் என்ற காரணத்திற்காக நாமும் பில்லுக்கு மேல் பணம் கொடுத்து வாங்குகிறோம். அதை எப்படி சர்க்கார் கண்காணிக்க முடியும்.

திரு. து. ப. அழகமுத்து : ஸார், கூட்டுறவுச் சங்கங்களில் உட்படாத தனிப்பட்ட நெசவாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நூல் குறைவாக இருப்பதால் அதை அதிகப்படுத்த சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினருக்கு இன்றைய நிலை தெரியாது என்று நினைக்கிறேன். தற்போது ஒதுக்கியிருக்கக் கூடிய நூலை எடுக்கவே ஆள் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், மில் அதிபர்கள் எக்ஸ் மில் ரேட்டுக்கு அதிகமாகவே பணம் 'premium' என்ற பெயரால் வாங்குகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி வாங்கினால் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* 366 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to make yarn available to handloom weavers at a fair price?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், பட்டுத் தறியாளர்கள் தங்களுக்கு தேவையான ஜரிகை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜரிகை மார்க்கொன்றுக்கு 80 ரூபாயிலிருந்து 100, 125 ரூபாய் வரையில் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. அதோடு கூட 100 ரூபாய் கட்டி லைசென்ஸ் வாங்கவேண்டிய நிர்பந்தமும் இருக்கிறது. கிட்டத்தட்ட 26,000 தொழிலாளர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்கக் கட்டுப்பாட்டினால் ஜரிகை வியாபாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால் அவர்கள் கட்டவேண்டிய லைசென்ஸ் கட்டணம் 100 ரூபாயிலிருந்து 50 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. மேலும் ஜரிகை கிடைப்பதற்கு ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி இருக்கிறது. இதைப் பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டவுடன் மற்ற விவரங்களைப் பற்றித் தெரிவிக்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : அந்தத் தறியாளர்கள் 50 ரூபாய் கட்டணம் கூட கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை. எம்.எல்.ஏ. போன்றோரிடம் பெற்ற பொறுப்புள்ள அத்தாட்சிப் பத்திரங்களை காண்பித்தால் போதும் லைசென்ஸ் தரப்படும் என்று உத்திரவிட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த சர்க்கார் உத்திரவிட முடியாது. இந்தச் சர்க்கார் இந்தக் கஷ்டத்தைப் போக்க டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் (Director of Handlooms) மூலம் இதை வாங்கி

[a] Printed as Appendix on page 507.

விநியோகம் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. முடிவு இன்னும் தெரியவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், ஜரிகை மார்க்குக்கு விலை நிர்ணயம் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ? அந்த விதமான விலைகளை நிர்ணயிக்கவில்லை என்றால் ஜரிகை உற்பத்தியாளர்கள் சமயத்திற்குத் தகுந்தாற்போல் விலைகளைக் கூட்டி விற்பதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விலை நிர்ணயித்து விட்டால் மட்டும் அதே விலைக்குக் கிடைக்குமென்று சொல்லிவிட முடியாது. பொதுவாக சப்ளை, டிமாண்டைப் பொறுத்து விலை ஏறுவது இறங்குவதாக இருக்கும். கம்ப்ளீட் கன்ட்ரோல் கொண்டுவரவேண்டுமென்றால் ஜரிகை முதலியவற்றை சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்கார் கார்டு வழங்கி விநியோகம் பண்ணவேண்டும். இதில் அனுபவித்த கஷ்டங்கள் தறியாளர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் அதை விரும்பவில்லை.

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், சில கைத்தறியாளர்கள் கட்டுப்பாடு செய்யப்பட்ட விலையில் நூல்களை வாங்கி நெசவு செய்யாமல் வெளியே அதிக விலைக்கு விற்கிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லாபம் சம்பாதிப்பது மனித இயல்பு. அதைத் தடுப்பது மிகவும் கஷ்டம்.

Technical Education

* 367 *Q* —SRI S. MADHAVAN :- Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce short-term courses in Technical Education to increase the number of Technical personnel; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) In view of the national emergency, short-term courses of three to six months duration have been started in Engineering Colleges for the training of craftsmen and wireless operators. Schemes to accelerate the production of large number of B.E. Degree holders by curtailing the periods of vacation, conducting separate three year B.E. degree courses for Science graduates and to start two year diploma courses, are now being drawn up.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, பி.யூ.சி. படித்தவர்களுக்கு டெக்னிஷன் கோர்ஸ் ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ? விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எஸ். எஸ். எல். சி. எலிஜிபிளாக இருக்கிறவர்கள் எல்லோரும் பாலிடெக்னிக்கில் சேரலாம். பி.யூ.சி. படித்தவர்களும் சேரலாம். பி.யூ.சி. படித்தவர்களுக்கு ஒரு வருஷம் குறைவாக பயிற்சி கொடுத்தால் போதும் என்று சொன்னால் சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. அ. தியாகராஜன் : மூன்றாவது பாரம், நான்காவது பாரம் படித்தவர்களுக்கு ஜூனியர் பாலிடெக்னிக் அமைத்திருக்கிறார்கள். அது அரசாங்க அமைப்பிலிருக்கிறதா ?

ராஜ்யத்தில் உள்ள பாலிடெக்னிக்களில் அவற்றுடன் சேர்த்து ஜூனியர் டெக்னிகல் ஸ்கூலும் அமைக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் ஆறு பாலிடெக்னிக் ஸ்கூலில் ஜூனியர் டெக்னிகல் ஸ்கூலும் ஆரம்பித்தோம். மேற்கொண்டு நான்கு இடங்களில் ஆரம்பிக்கப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை பெருகியிருப்பதால் தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஷிப்ட் முறையைக் கொண்டு வர அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக உத்தேசம். இப்போது எஞ்சினியரிங் கல்லூரிகளில் 120 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதை 180 ஆக உயர்த்தியிருக்கிறோம். ஷிப்ட் முறையில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. பிராக்டிகல் சம்பந்தமான கஷ்டங்கள் இருப்பதால் ஷிப்ட் முறை சாத்தியமல்ல என்று கருதுகிறேன்.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, பி.யூ.சி. படித்தவர்களுக்கு இரண்டாண்டு டெக்னிஷன் கோர்ஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று 'Southern Regional Committee of All India Council of Technical Education' யோசனை கூறினார்களா ? அதன்பேரில் நம்முடைய அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த ஆலோசனையை இந்த ராஜ்ய சர்க்கார் நிராகரித்து விட்டது. காரணம் என்னவென்றால் மூன்று வருஷம் பாலிடெக்னிக்கில் படித்தவர்களுக்கே பயிற்சி போதாது என்று இருக்கும் போது இரண்டு வருஷம் டெக்னிகல் ஸ்கூலில் படித்து விட்டு வந்தால் பயிற்சி எந்தளவுக்குப் போதும் என்று புரியவில்லை. ஆகவே இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் முறைப்படி மூன்று வருஷ பயிற்சியாகவே இருக்கலாமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. அ. தியாகராஜன் : கனம் சபாநாயகர் அவர்களே, சீனியர் பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் பி.ஈ.-யில் சேர அனுமதிக்கப்பட்டிருப்பது
9-00 a.m. போல ஜூனியர் பாலிடெக்னிக்கில் படித்தவர்களும் பி.ஈ.-யில் சேர அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பி.ஈ.-யில் சேர அதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் இருக்குமானால் ஜூனியர் டெக்னிக்கல் ஸ்கூலில் படித்தவர்களும் சேரலாம். ஆனால் அவர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்க முடியாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும் ஜூனியர் பாலிடெக்னிக்குகள் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை.

Southern Zonal Common Police Force

* 368 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the object of creating the Southern Zonal Common Police Force ; and

(*b*) the anticipated extra expenditure Madras State will have to incur towards this?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In cases of emergencies in any of the States in the Southern Zone, the entire personnel of the Common Police Reserve Force will become available to supplement the Armed Reserve of that State and this will

ease the burden of that State in respect of keeping an armed reserve in sufficient strength to meet an emergency.

(*b*) No extra expenditure is involved for the Madras State at present as two of the existing Companies of the Special Armed Police, Avadi, have been earmarked for the Common Police Reserve Force and as they are doing duty in Madras City.

(அ) தென் மண்டலத்தைச் சேர்ந்த எந்த மாநிலத்திலாவது நெருக்கடி நிலைமை ஏற்பட்டால், பொதுப் போலீஸ் ரிசர்வ் படைகள் அனைத்தும் அந்த மாநிலத்தின் ஆயுதம் தாங்கிய போலீஸ் படைகளுக்கு உதவி புரியும். இதனால் நெருக்கடி நிலையைச் சமாளிக்க ஆயுதம் தாங்கிய படைகளை போதிய அளவில் வைத்து வரும் பொறுப்பு அந்த மாநிலத்திற்கு கொஞ்சம் குறையும்.

(இ) இதனால் தமிழ் நாட்டிற்கு தற்போது உபரிச் செலவு எதுவும் ஏற்படாது ; ஏனென்றால் ஆவடியிலுள்ள எஸ். ஏ. பி. படைகளில் இரண்டு கம்பெனிகள் இந்த பொதுப் போலீஸ் ரிசர்வ் படைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன படையினர் சென்னை நகரில் அலுவல் பார்த்து வருகின்றனர்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இந்த தென் மண்டல போலீஸினுடைய பணியினால் வருகின்ற வருஷங்களில் நம்முடைய போலீஸ் மான்யத்தில் கோரப்படும் தொகை குறையுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதை பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த பொது போலீஸ் படைக்குப் புதிதாக ரெக்ரூட்மெண்ட் செய்யக் கூடிய ஒரு திட்டம் உண்டா ? ரெக்ரூட்மெண்ட் செய்யும்போது பிற மாநிலங்களிலிருந்தும் இதற்கு ரெக்ரூட் செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அவ்வாறு இல்லை என்று கூறினேன். இருப்பதில் இரண்டு கம்பெனி வைத்து, அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவசரத் தேவைக்குப் பயன்படுவார்கள். எந்த மாநிலத்துக்குப் போகவேண்டுமென்றாலும், அந்த மாநில சர்க்கார் இந்தச் செலவை ஏற்றுக்கொள்ளும். அதுதான் இப்போது ஏற்பட்டிருக்கிற முறை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தென் மண்டல போலீஸ் படையின் தலைமை ஸ்தலம் எங்கே அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தென் மண்டலத்தில் இருக்கக் கூடிய சில மாநிலங்களுக்காக இந்த போலீஸ் படை என்பதால் அது அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும். ஏதாவது ஒரு மாநிலத்தில் இருக்கும்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், நெருக்கடி என்பது பற்றிய விவரம் என்ன என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நெருக்கடி என்ற வார்த்தைக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் அரசியல் வகையிலே கூட நன்றாக தெரிந்து கொண்டிருப்பார்கள். ஏதாவது ஒழுங்கு, அமைதி குலைக்கப்பட்டு, அமைதியை நிலை நாட்ட வேண்டிய நிலை ஏற்படுவதுதான் நெருக்கடி நிலைமை.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மலபார் போலீஸ் துறை இருந்து அது மலையாள மக்கள் மீது வெறுப்பு அடையக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியது என்ற காரணத்தினால், பொது

போலீஸ் படைத் திட்டத்தின்கீழ் வேறு மாநிலங்களுக்குச் சென்றால் தமிழ் மக்கள் மீது வெறுப்பு ஏற்பட இடம் இருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் யோசித்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி வெறுப்பு உணர்ச்சியை நாம் புதிதாகத் தூண்ட வேண்டியதில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : பொது போலீஸ் படையினர் என்று ஒதுக்கி வைக்கிற எண்ணிக்கை எல்லா மாநிலங்களிலேயும் ஒரே எண்ணிக்கையா ? அல்லது அந்தந்த மாநிலத்தின் நிலைமைக்கும் அவர்கள் சக்திக்கும் ஏற்பவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அநேகமாக ஒரேமாதிரிதான் இருக்கும். ஆனால், தாரதம்மியமாக இருந்தாலும் அதனால் பாதகம் இல்லை. ஒதுக்கி வைக்கிறோமே தவிர அதற்காகத் தனியாகச் செலவு செய்வதில்லை. ஒதுக்கி வைக்கப்படுகிற போலீஸ் படை எந்த மாநிலத்திற்குத் தேவைப்படுகிறதோ அப்போது அனுப்பப்படும். அப்போது அதனுடைய செலவை அந்த மாநிலம் ஏற்றுக்கொள்ளும். பொது போலீஸ் படை என்று பெயருக்கு ஒதுக்கி வைக்கப்படும். அவர்களுக்கு இங்கே பயிற்சி அளிக்கப்படும். அளிக்கப்படுகிற பயிற்சி அந்தந்த மாநிலங்களுக்குக் கூட பயன்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தென் மண்டலம் பூராவிலும் நெருக்கடி வந்து விட்டால் அப்போது என்ன செய்வது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைச் சமாளிக்கக் கூடிய ஆற்றல் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதைப் பற்றி கனம் அங்கத்தினர் அச்சப்படவேண்டியதில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ் நாட்டு அரசாங்கம் தற்போது செய்ய வேண்டிவரும் செலவுகளில் வருகிற ஆண்டில் அதிகப்படியான செலவுகளை ஏற்க வேண்டி வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதை வருகிற ஆண்டில்தான் பார்க்க வேண்டும். அதைப் பற்றி அரசாங்கம் எதிர்பார்த்துக் கூற முடியாது.

திரு. எஸ். மாதவன் : போலீஸ் துறையை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற யோசனை மத்திய சர்க்காருக்கு இருப்பது உண்மையா ? பொது போலீஸ் துறையை அவர்கள் எடுத்துக்கொள்ள வாய்ப்பு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் அம்மாதிரியாக ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினருக்கு ஏதாவது தகவல் தெரிந்திருந்தால் அதைப்பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கலாம்.

திரு. ஆர். ரங்கசாமி : பொதுப் போலீஸ் படைக்கு தலைமை அதிகாரியை நியமிப்பது மத்திய சர்க்காரா அல்லது இந்த மாநில சர்க்காரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்கார் அமைப்பது இதில் ஒன்றும் இல்லை. தென் மாநிலங்களைச் சேர்ந்தது தான் இந்தப் போலீஸ் படை. இதற்கு விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சம்பந்தப்பட்ட மாநிலங்களின் போலீஸ் அதிகாரிகள், அரசாங்கங்கள் எல்லாம் சேர்ந்து கலந்துதான் விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விதிகளின்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் ஒன்றும் வித்தியாசம் இருப்பதற்கில்லை. தேவைப்பட்டால், எந்த மாநிலத்திற்குத் தேவைப்படுகிறதோ அந்த மாநிலம் பயன்படுத்தும். அதுதான் வித்தியாசம். அதற்குப் பொதுவாக ஒதுக்கப்பட்டிருப்பதுதான் இது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த பொதுப் போலீஸ் படையினால் எந்த விதமான ரசாபாசமும் ஏற்படாமல் இருக்க, சாதாரணமாக இருக்கும் போது அவர்களுக்கு ஏதாவது ஒரு தொழில் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சற்று முன்புதான் கூறினேன். இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற படைகள் இப்போது பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. அவைகளை ரிஸர்வாக வைத்துக்கொள்ளவில்லை. அதனால் ரசாபாசப் பேச்சுக்கு அவசியம் இல்லை.

மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளிகள்

* 369 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளிகளை கலெக்டர் மேற்பார்வையிலிருந்து தனிப்பட்ட நிர்வாகத்திற்கு மாற்றும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர் நிலைக் கல்வி போர்டு ஒன்றைச் சட்டப்படி அமைக்கும் திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாநிலக் கல்வித் துறை அதிகாரிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட விசேஷ கல்வி அதிகாரிகள் பழைய ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளிகளை நிர்வகிப்பர்.

The proposal to set up a Statutory Secondary Education Board has been deferred. The former District Board Secondary Schools will be administered by Special Education Officers under the administrative control of the Director of Public Instruction.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, மாவட்ட குழுக்களின் நிர்வாகத்தின்கீழ் நடந்துகொண்டு வருகிற பள்ளிகள் ஸ்பெஷல் ஆஃபீசர் கீழ் நடத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கனவே அதன்கீழ் வேலை பார்த்துள்ள பணியாளர்கள் இப்போது எந்தத் துறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கனவே மேல் பார்வை பார்த்து வந்த அதிகாரிகள், அவர்களுடைய தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களிலே சிலர் இந்த உயர் நிலைப் பள்ளிகளைப் பார்ப்பதற்காக அமைக்கப்படுகிற கல்வி அதிகாரிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் அதே வகையிலே மேற்பார்வை செய்கிற வேலையைச் செய்வார்கள். அவர்கள் இப்போது எந்த முறையில் செய்கிறார்களோ அதைச் செய்வார்கள். ஒரு சிலர் தலைமை ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படுவார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : மாவட்டத்திற்கு 7, 8 என்ற அளவில் பள்ளிகள் இருந்தபோது ஆட்சிப் பொறுப்பு மாவட்ட குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்போது பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற நேரத்தில் ஆட்சிப்பொறுப்பை தனி ஒருவர் இடத்தில் ஒப்படைப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது என்ற காரணத்தினால் அதை ஒரு குழுவிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதை அரசாங்கம் ஆராய்ந்து குழு அமைக்க வேண்டியதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அதிகமான உயர்நிலைப் பள்ளிகள் இருப்பதால் கலெக்டர் அவர்களை ஸ்பெஷல் ஆஃபீ

ஸ்ராக்ப் போதிய கவனம் செலுத்த முடியாது என்று உணர்ந்து அதற்கென்று பிரத்யேகமாக ஜில்லா கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. பொன்னையா : ஸார், பஞ்சாயத்தினால் நடத்தப்பட்டு வரும் ஹைஸ்கூல்களை பஞ்சாயத்துக்கள் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறதே, அதையும் சர்க்கார் எடுத்துக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துக்களின் பொறுப்பு தொடக்கப் படிப்பை கவனிக்கவேண்டுமென்பது தான். ஏதாவது ஒரு பஞ்சாயத்து, கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற முறையில், உயர்நிலைப் பள்ளி நடத்தி வந்து, அவர்களால் முடியவில்லை என்றால், அரசாங்கம் மேலும் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. தியாகராஜன் : சபாநாயகர் அவர்களே, சென்ற ஆண்டு ஆசிரியர்களுக்கு பேஸிக் ட்ரேயினிங் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டும் கொடுக்கப்படாவிட்டால், அரியநாயகம் ரிப்போர்ட் படி பேஸிக் ட்ரெயினிங் கொடுத்ததாகாது. ஆகவே, இந்த ஆண்டாவது அந்த ட்ரெயினிங் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய பயிற்சி எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. ம. கமலநாதன் : மாவட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்பளத்திற்கும் அரசினர் நடத்தும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் கொடுக்கும் சம்பளத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. இது அதிகமாக இருப்பதால் அரசினர் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உற்சாகம் குன்றி இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் சம்பளத்தையும் உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சம்பளம் பற்றிய தகவல் என்னிடம் இல்லை, தனிக்கேள்வி போட்டால், விவரம் கொடுக்கப்படும்.

திரு. எஸ். மாதவன் : ஸார், கல்லூரிகளைப் கட்டுப்படுத்த பல்கலைக் கழகத்தை நிறுவி இருக்கிறோம். அதே மாதிரி, செகண்டரி கல்வியைப் பொறுத்த வரை செகண்டரி போர்டை நிறுவ வேண்டியிருக்கும் போது, அதை ஒத்திவைக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது அவசியமா இல்லையா என்று பரிசீலனை செய்து, வேண்டாம் என்று தீர்மானித்து வேறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், பழைய ஜில்லா போர்டு காரியதரிசி, பணியாளர்கள் போன்றவர்கள் வேறு எங்கெங்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மூலக்கேள்வி கல்வி விஷயம் பற்றியது. ஜில்லா போர்டு செக்ரட்டரி முதலியவர்கள் பற்றி நான் விடை அளிக்க முடியாது.

திரு. அ. தியாகராஜன் : கனம் சபைத் தலைவர் அவர்களே, ஹையர் கிரேட் பிஸிகல் எஜுகேஷன் ஆசிரியர்களுடையவும், டைப்பிஸ்டுகளுடையவும் சம்பளம், ரிவிஷன் ஆப் ஸ்கேல்ஸ் ஆப் பே, அரசாங்கத்தில் பெண்டிங்காக இருப்பதால், அதைச் சீக்கிரத்தில் நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : பொதுவாக பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பட்டியல் தயாரிக்கும் போது தமிழ் ஆசிரியர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவதில்லை. ஆங்கில அறிவு உள்ள தமிழாசிரியர்களும் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் ஆசிரியர்கள் கல்லூரித் தலைவராகக்கூட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக ஹெட்மாஸ்டர், பிரின்ஸிபால் போன்ற தலைவர் ஸ்தானத்திற்கு எல்லாத் தகுதிகளையும் பார்த்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பழைய ஜில்லா போர்டு பணியாளர்களுக்கு அரசாங்கப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுக்கப்பட்டதா ? இல்லையென்றால் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், மாவட்ட கலெக்டர் நிர்வகிக்கும் போது இருந்த டிஸ்ட்ரிக்ட் போர்டு எஜுகேஷன் ஆபீசர்களுக்கு, ஸ்பேஷல் டி.இ.ஓ.க்கள் நியமிக்கும் போது முதலிடம் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே சொன்னேன். மாவட்ட கல்வி அதிகாரிகளில் சிலர் இந்த விசேஷ கல்வி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள், வேறு சிலர் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று.

திரு. சா. ராமசாமி : உயர் நிலை பள்ளிகளில் ஆசிரியர்களிடையே ஏதாவது குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டால், விவரமாக கலெக்டரிடம் குறைகளை எடுத்துப் பேச சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எப்பொழுதும் சட்டமன்ற உறுப்பினர்கள் கல்வி அதிகாரிகளிடமும் கலெக்டர்களிடமும் பொதுவான கருத்துக்களை, குறைபாடுகளை தெரிவிக்கலாம். ஆனால், குறிப்பிட்ட அதிகாரியை இங்கே மாற்றவேண்டும்,, அங்கே மாற்றவேண்டும் என்று கோரக் கூடாது. பொதுவாகச் சொல்லலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத் திரும்பவும் கலெக்டர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மன்றம் இயற்றிய சட்டப்படி ஆரம்பப் பள்ளிகளில் மேற்பார்வை பார்க்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம் இருக்கிறது. அதை மாற்ற முடியாது.

புலவர் கா. கோவிந்தன் : பானல் ஆப் ஹெட்மாஸ்டர்ஸ் தயாரிக்கும் போது, மாவட்டக் கழகப் பள்ளி எஸ்.டி.கள் மட்டும் எடுக்கப் படுகிறார்கள். தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் சேர்க்கப்படுவதில்லை. ஆகவே, அவர்களையும் சேர்க்கும் முறையில் எல்லா பள்ளிகளுக்கும் பொதுவான பேனல் தயாரிக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் சொல்லும் முறையை ஏற்றுக்கொள்வது முறையல்ல என்று கருதுகிறேன்.

ஆயுள் தண்டனை குறைப்புப் பரிசீலனை குழு

* 370 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆயுள் தண்டனைப் பெற்ற கைதிகளுடைய தண்டனையைக் குறைக்கப் பரிசீலனை செய்யும் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

பாதுகாப்பு நிதி

* 371 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறையில் பாதுகாப்பு கைதியாக வைக்கப் பட்டிருந்தவர்கள், பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்ததைச் சிறை அதிகாரி வாங்கி அனுப்ப மறுத்துவிட்டார் என்று புகார் வந்ததா ?

(இ) வந்திருந்தால், அந்தப் புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No;

(b) Does not arise.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், மதுரை மத்திய சிறை கைதிகள் சிலர் தங்களுக்கு மாதாமாதம் கொடுக்கும் ஸ்மோகிங் அலவன்சிலிருந்து பாது காப்பு நிதிக்கு இவ்வளவு ரூபாய் எடுத்துக்கொள்ளுங்கள் என்று எழுதிக் கொடுத்திருந்தும், அந்த சிறை சூபரிண்டெண்டன்ட் அதை வாங்க மறுத்து விட்டார். காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படியெல்லாம் பொதுவாக எழுதிக் கொடுத்தால் போதாது. "என்னுடைய க்ரடிட்டில் இருக்கிற இந்தப் பணத்தை பாதுகாப்பு நிதிக்கு கொடுக்கிறேன்" என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அந்த சிறையிலிருந்தே ஸ்டாப் இன்னும் மற்ற சில கைதி கள் சேர்ந்து ரூ. 1,501 கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையில் கொடுக்க தயார் என்று தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், பாதுகாப்பு நிதிக்காக கனம் உறுப்பி னர் திரு. எஸ் எஸ். ராஜேந்திரன் மதுரை, தேனீ போன்ற இடங்களில் நாடகம் நடத்தி ஒரு லட்ச ரூபாய் வசூலித்துத் தருவதாக ஏற்பாடு செய்து, கலெக்டர் அனுமதி கொடுத்தும், அமைச்சர்கள் தலைமை தாங்குவதாக இருந்தும் அதை பின்னால் மறுத்து விட்டார்கள். விவரம் தெரிவிக்கமுடி யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது மதுரை சிறை பற்றிய கேள்வி. சிறையில் பாதுகாப்பு நிதிக்குக் கொடுப்பது என்பது பற்றி இருப்பதால், அங்கத்தினர் இந்த உபகேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நாடகம் நடத்த அனுமதி கொடுக்கப்பட்டது என்றாலும், அரசாங்கம் எல்லாவற்றையும் பரி சீலனை செய்து பிறகுதான் அனுமதியை ரத்து செய்திருப்பார்கள். இது பற்றித் தனிக்கேள்வி போட்டால் எந்த சூழ்நிலையில் மறுக்கப்பட்டது என்று தெளிவாகச் சொல்ல முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அமைச்சரவர்கள் கூறியபடி, 26 நபர்கள் கூடி ரூ. 52-யை தங்கள் கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதை அதிகாரி வேண்டுமென்றே மறுத்திருக்கிறார். அது பற்றி விசாரணை செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பாக தங்களுடைய கிரெடிட்டில் இருக்கும் பணத்தைக் கொடுத்தார்கள் என்பது பற்றி என்னிடம் தகவல் இல்லை. சாப்பாட்டுக்காக கொடுக்கும் பணத்தில் எடுத்துக் கொள்ளுங்கள், நாங்கள் கொஞ்சம் குறைவாகச் சாப்பிடுகிறோம் என்று சொன்னால், அதில் அதிகாரிகளுக்கு அச்சம் ஏற்படுகிறது. ஆதாரம் இல்லாமலே எவ்வளவோ புகார்கள் வருகின்றன. கட்டாயமாக, நிர்ப்பந்தமாகச் செய்தார்கள் என்ற குறைபாடுகள் வரலாம். இங்கேயும், பத்திரிகைகளிலும் அம்மாதிரி வரு கிறது. ஆகவே, இந்த விஷயத்தில் அதிகாரிகள் கொஞ்சம் ஜாக்கிரதை யாக நடக்கப் பார்க்கிறார்கள்.

Village Officers

* 372 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that a Cabinet Sub-Committee was constituted to examine the grievances of the village officers;

(*b*) if so, whether a copy of the report of the Sub-Committee will be placed on the Table of the House; and

(*c*) the action taken on the recommendations of the Committee?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The report of the Cabinet Sub-Committee, being a confidential one, cannot be placed on the Table of the House.

(*c*) In its interim report submitted to Government in November 1956, the Sub-Committee made recommendations for the grant of educational and medical concessions to village officers and servants and grant of Travelling Allowance to village officers for their journeys to the taluk headquarters. The recommendations were accepted by the Government and orders were issued in G.O. Ms. No. 4732, Revenue, dated 31st December 1956. The Sub-Committee subsequently submitted its final report which contained the Committee's recommendation for the reorganization of village establishment. They were examined by the Government but were not pursued further. The question will, however, be taken up for further examination aagin in April 1964.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்தக் கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நாளுக்குநாள் வேலை பளுவை அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுத்து விட்டு, அவர்களுக்கு சம்பளத்தை குறைவாகக் கொடுப்பதன் காரணமாக அவர்களுக்கு சர்க்கார் பேரில் வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் ஒன்று அவர்களுக்கு அதிகப்படியான சம் பளம் அளிக்கவேண்டும். இல்லையென்றால், இந்த அமைப்பையே மாற்றி விட்டு கிராம உத்தியோகஸ்தர்களே இல்லாமல் செய்துவிடுவது பற்றி யோசிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது அபிவிருத்தித் திட்டங் களின் வேலை சம்பந்தமாக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய வேலை பளுவைப் பற்றியெல்லாம் இந்த காபினட் சப் கமிட்டி முழுக்க ஆராய்ந்து ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறது. அவர்கள் செய்திருக்கக் கூடிய சில சிபார்சுகளைப் பற்றி இந்த அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது என்று மூல கேள்விக்கு பதில் சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறேன். மேலும் இருக்கக் கூடிய பிரச்னைகளை அடுத்த வருஷம் பரிசீலனை செய்யவேண்டும் என்று இருக்கக் கூடிய காரணத்தினால், இப்பொழுது தனியாக ஒவ்வொரு பிரச்னைக்கும் நான் பதில் சொல்லத் தயாராக இல்லை. இப்பொழுது சில நிமிஷங்களில் ரெவின்யூ மான்யக் கோரிக்கையின் மீது விவாதம் நடக்க இருக்கிறது. அப்பொழுது கனம் அங்கத்தினர்கள் இதையும் மனதில் வைத்து என்னென்ன பொதுவாக மாறுதல் செய்யவேண்டுமோ அதைப் பற்றியும் சொன்னால், அதை பரிசீலனை செய்து வரக்கூடிய வருஷத்தில் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

திரு. ம. கமலநாதன் : கிராம அதிகாரிகள் கிராம பஞ்சாயத்துடன் அதிக தொடர்பு கொண்டிருக்கிறார்கள். ஆணையாளர்கள் அவர்களை அழைப்பதற்கு என்றால் கூட, அதிகாரம் அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களை பஞ்சாயத்து யூனியன் கட்டுப்பாட்டுக்கும், ஆணையாளரின் அதிகாரத்திற்கும் உட்படுத்த அரசினர் தனியாக உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது நான் தெரிந்துகொண்ட வரையில் அந்த ஒத்துழைப்பு சரியாகத்தான் இருக்கிறது என்பதுதான் எனக்கு வந்திருக்கக்கூடிய தகவல். இதில் ஏதேனும் கஷ்டங்கள் இருந்தால் கனம் அங்கத்தினர் மான்யத்தை விவாதிக்கும்போது விரிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள் இம்முறையிலே நியமிக்கப்படுகிறார்களே, அதை ஏதாவது நீக்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாது.

சிறுவர்களுக்கான பொருட்காட்சி

* 373 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை எழும்பூரில் உள்ள அரும் பொருட்காட்சி சாலையில் **(Museum)** சிறுவர்களுக்கென தனியாக ஒரு பொருட்காட்சி நிலையம் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்கார் அரும் பொருட்காட்சிசாலையில் குழந்தைகள் பிரிவு ஒன்று தனியாக தற்பொழுது இருக்கின்றது. குழந்தைகள் அரும்பொருட்காட்சிசாலைக்காகத் தனியாக கட்டடம் கட்டுவதைப் பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

There is a separate Children's section in the Government Museum, now. The question of construction of a separate building for the Children's Museum is under the consideration of Government.

திரு. இராம. அரங்கண்ணல் : 1956-ல் கவர்னராக இருந்த பிரகாசா அவர்கள் குழந்தைகள் மியூஸியத்திற்கு கல்நாட்டு விழா செய்தார்கள். இப்பொழுது 1963-ல் அந்தக் கல் இருக்கிறதே ஒழிய கட்டிடம் எதுவும் இல்லை. அந்தக் கல்லையே ஒரு மியூஸியமாக வைக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு எண்ணமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லையும் அப்படியே வைக்கலாம். ஆனால் இப்பொழுது ரூபாய் 6 லட்சத்திறகு மேலே செலவாகிறது, பணம் தேடித் தான் கட்டிடம் கட்ட வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : ரூ. 13, 14 லட்சம் செலவில் சிறுவர்களுக்கு என்று தனிக்காட்சி சாலை எழுப்புவதாக திட்டம் இருந்தது. மத்திய அரசாங்கம் தலையிட்டதால் அது ..கவிடப்பட்டு ஒரு தனிப் பகுதி மட்டும் ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லப்படுவது உண்மையா ? சிறுவர்களுக்கு என்று தனியாகவே ஒரு சாலை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது மதிப்புப் போட்டதில் ரூ. 10,62,000 ஆகிறது. இதற்கு மத்திய அரசாங்கம் உதவி பெற்று கட்டடத்தைக் கட்டவேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் உத்தேசம். மத்திய அரசாங்கத்தின் உதவியும் கோரப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இதற்காக ரூ. 7 லட்சத்தில் திட்டம் போட்டு உதவி கோரி டெல்லி கலாசார மந்திரியாலயத்திற்கு இந்த அரசாங்கம் எழுதியதாகவும், ஒரு ஆண்டு கழித்து அந்த மந்திரியாலயம் இது தங்களுக்கு சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல, கல்வி இலாகாவுக்கு எழுத வேண்டும் என்று நமது மாநில அரசாங்கத்திற்கு தாக்கீது அனுப்பியதாகவும், அதற்குள் போட்ட திட்டம் ரூ. 10 லட்சத்திற்கு உயர்ந்துவிட்டதாகவும், டெல்லியில் உள்ள கல்வி இலாகா அதை மறுத்துவிட்ட காரணத்தினால் நம்முடைய மாநில அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தயங்கிக்கொண்டிருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி வேண்டும் என்பதுதான் எப்பொழுதுமே அரசாங்கத்தின் கருத்து. முன்பு இருந்த அரசாங்கம் அவ்வாறு மதிப்பீடு போட்டு, மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருந்தது. இந்தப் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று இது தள்ளிப்போடப்பட்டது. மேலும் இதெல்லாம் விரிவாக பரிசீலனை செய்யப்பட்டு, இந்த மதிப்பீடு போடப்பட்டு, மேலும் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியை நாடி, அதைப் பெற்றபிறகு இதை எடுத்து நடத்தலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

Prisoners (Classification)

* 374 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) on what basis prisoners are classified in Jails; and

(*b*) whether there is any proposal to abolish such classification?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Prisoners are placed in 'A' or 'B' class in jails on the basis of their character, social status, mode of living and nature of the offence committed. Class 'C' consists of prisoners who are not classified in classes 'A' or 'B'.

(*b*) There is no such proposal.

திரு. எஸ். மாதவன் : இந்த விதிகளெல்லாம் வெள்ளையர் காலத்தில் இயற்றப்பட்ட விதிகளா ? எந்த அடிப்படையிலே இந்த விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ? பொருளாதார அடிப்படையில் இருந்தால் இதை ஜனநாயக நாட்டில் மாற்றி அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கத்தின் நிர்வாக அமைப்பே வெள்ளையர் கால்த்தில் இருந்த அடிப்படையிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் நடந்துவருவதில் ஒன்றும் தவறு இல்லை. விதிகளும் வெள்ளையர் காலத்தில் இயற்றப்பட்டவைதான். ஆனால், அவ்வப்பொழுது மாற்றப்பட்டு வருகிறது. அவர்கள் எந்த வாழ்க்கையில் உள்ளவர்களோ, எத்தகைய ஒரு நிலைக்கு, அந்தஸ்துக்கு பழக்கம் உள்ளவர்களோ, அதுதான் அடிப்படை. அதற்கும் குறைக்கக் கூடாது. அப்படிக் குறைத்தால் வேண்டுமென்றே அதிகமாக தண்டனை கொடுப்பதாகும். முன்பு நடந்த சிறைச்சாலை மான்ய விவாதத்தின்போது அரசாங்கத்திற்கு தண்டிக்கும் எண்ணம், பழிக்குப் பழி வாங்கும் எண்ணம் கூடாது என்று சொன்னார்கள். அதுதான் அரசாங்கத்தின் கருத்தும். ரெபர்மேடரியாக இருக்க வேண்டுமென்பதுதான் எண்ணம். அந்த அடிப்படையிலேதான் பாகுபாடுகள் இருக்கின்றன.

திரு. எஸ். மாதவன் : அமைச்சர் அவர்கள் அந்தஸ்து என்று குறிப்பிட்டார்கள். இதைத்தான் நான் கேட்கிறேன். வெள்ளையர் காலத்தில்

பொருளாதார அடிப்படையில் இந்த அந்தஸ்து நிர்ணயிக்கப்பட்டது. ஜன நாயக நாட்டில் பொருளாதார அடிப்படையில் அந்த நிர்ணயத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரூ. 50 செலவிலும் வாழ்க்கை நடத்துகிறவர்களும் உண்டு. ரூ. 500 செலவிலும் வாழ்க்கை நடத்துகிறவர்களும் உண்டு. ரூ. 50 செலவில் வாழ்க்கை நடத்துபவர்கள் ரூ. 500 செலவில் சிறையிலே வைக்கப்பட்டால் நான் முன்பு கூறியது போல், சிறை சொர்க்க உலகம் ஆகிவிடும், இன்னொரு முறை சிறைக்குப் போகலாம் என்று தோன்றும். ரூ. 500 வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு ஓரளவுக்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன. இல்லையென்றால் பழிக்குப் பழி வாங்குவது ஆகிவிடும். அது தான் அடிப்படை.

Pre-University Course

* 375 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of seats available in the Pre-University Course (i) in Government Colleges and (ii) other Colleges;

(*b*) whether there is any proposal to increase the number of seats in Government Colleges; and

(*c*) if so, to what extent?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) (i) 2,720.

(ii) 20,523.

(*b*) & (*c*) Government proposes to start a separate College for Girls in Kumbakonam from the next academic year and this may result in an increase in the number of seats. The exact extent to which there will be increase cannot be stated now.

(அ) (i) 2,720, (ii) 20,523.

(இ) and (உ) வருகிற கல்வியாண்டிலிருந்து கும்பகோணத்தில் பெண்களுக்காகத் தனியாக கல்லூரி ஒன்று அமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதனால் அரசாங்கக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் மொத்த இருக்கை அதிகரிக்கலாம். ஆனால் இந்த அதிகரிப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்று இப்போது கூற இயலாது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆண்டு தோறும் எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பில் தேறுகிறவர்கள் பல ஆயிரக் கணக்காக இருக்கிற காரணத்தினால் புகுமுக வகுப்பில் இருக்கிற இடங்களுக்கும், வருஷம் தோறும் பாஸ் செய்கிற மாணவர்களுக்கும் இருக்கிற வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் இருப்பது போல் இருக்கிற காரணத்தினால், இதைப்பற்றி ஒரு விரிவான திட்டம் ஏதாவது யோசிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இடத் தேவைக்குத் தக்கவாறு புதிய கல்லூரிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இயன்ற அளவுக்கு இருக்கிற ஸ்தானங்களும் அதிகப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. ம. கமலநாதன் : கும்பகோணத்தில் ஒரு கல்லூரி ஆரம்பிப்பது போலவே, அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், கிருஷ்ணகிரியிலும் ஆரம்பிப்பதாக இருந்தது. தேசீய நெருக்கடி காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றும், கட்டிட வசதி, மற்ற வசதிகள் செய்து கொடுத்தால், அதையும் கவனிப்பதாக அமைச்சர் அவர்கள் அவரிடம் சென்ற தூதுகோஷ்டியினரிடம் சொன்னதாகத் தெரிகிறது. அது எந்த நிலையில் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிருஷ்ணகிரி என்று நான் கூற முடியாது. வடக்கு சேலத்தில் ஒரு கல்லூரி அமைக்க பொதுமக்கள் முன்வரவில்லை என்ற காரணத்தினால் அரசாங்கமே ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் எனக்கு இருந்தது, அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனால், நெருக்கடி நிலையிலே அது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. என்னிடம் வந்திருந்த தூதுகோஷ்டியினரிடம் சொன்னேன். மக்கள் முன்வந்து கட்டிடம் கட்டுவதற்கும், மற்றவைகளுக்கும் நன்கொடை அளித்தால், அரசாங்கத்தில் இந்த ஆண்டிலாவது செலவு இல்லாமல் ஒரு கல்லூரி அமைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், மேலும் அரசாங்கம் இதுபற்றி யோசிக்கும் என்று சொன்னேன். அதற்குப் பிறகு இந்தத் தூதுகோஷ்டியினருடைய பிரதிநிதியோ அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களோ என்னிடம் இதுபற்றி வரவில்லை.

திரு. எஸ். மாதவன் : பெண்களுடைய கல்வியில் நமது அமைச்சர் அவர்கள் அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய பதவிக் காலத்திலேயே மாவட்டத்திற்கு ஒரு பெண்கள் கல்லூரி திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு செய்ய வேண்டுமென்றால், அமைச்சர் மட்டும் அக்கரை எடுத்துக்கொண்டால் போதாது. கனம் அங்கத்தினர்களும் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும்.

Conscription (College Students)

* 376 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to introduce conscription for College students?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The State Government are not aware of any such proposal.

திரு. எஸ். மாதவன் : பல்கலைக் கழகம் ஒவ்வொரு கல்லூரியிலும் என். ஸி. ஸி. டிரையினிங் கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதற்காக திருத்தமும் வந்திருக்கிறது. அப்படிக் கொண்டு வந்தால் அரசாங்கம் ஒத்துழைப்பதற்கு திட்டம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிகளிலே என்.ஸி.ஸி. பயிற்சி கட்டாயமாக அளிப்பது வேறு விஷயம். அதற்கு " கான்ஸ்கிரிப்ஷன் பார் காலேஜ் ஸ்டூடென்ட்ஸ் " என்று அர்த்தம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : ராணுவம் எதிர் காலத்தில் இன்றியமையாததாக ஆகிவிட்டது. அறிவை வளர்ப்பதுபோல, ராணுவப் பயிற்சியையும் வளர்ப்பது முக்கியம் என்று கருதி, ராணுவப் படிப்பைக் கட்டாயமாக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த அடிப்படையிலேதான் அடுத்த ஆண்டிலே என். ஸி. ஸி. பயிற்சி கல்லூரி மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

Educational reforms

* 377 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) when the proposals for the reorganisation of education at Secondary and Collegiate level will be finalised; and

(*b*) how far the Education Minister's preparatory discussions and conferences with Headmasters of High Schools, Principals of Colleges and Vice-Chancellors have progressed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The State Education Consultative Committee have discussed the various

questions and based on their recommendations, the proposals have been finalised and they are embodied in the note placed on the table of the House.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE HARDSHIP CAUSED BY THE TANNERY AT CHELANAICKENPATTI

திரு. சோ. ஆறுமுகம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, சேலம் தாலுகா சேலநாயக்கன்பட்டி கிராமத்தில் தனியார் துறையில்
9-30 a.m இயங்கும் தோல் பதனிடும் தொழிற்சாலை பொது மக்களுக்குக் கேடு பயக்கும் முறையில் உள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, it is found that the tannery in Chelanaickenpatti in Salem district has been in existence for the last 12 years and over. The tannery effluents contain abnoxious ingredients which are dangerous to public health if it is not disposed of satisfactorily. Since it came into being, the underground water table and sub-soil water have been polluted by the tannery effluents with the result that the neighbouring wells and irrigation wells have become brackish and useless for drinking, domestic and irrigation purposes. This is especially evident in the case of the wells and irrigation wells close to the tannery. The wells which have been used in the past before the coming up of the factory have now become useless and the villagers are now resorting to far off distant places to get their drinking water supply and for bathing purposes, etc. The nature of the soil is loose and porus up to the Paranattamangalam tank through which the effluent water percolates and contaminates the underground water table and sources of water-supply below. The damage done is due to the inefficient method of disposal of the tannery effluents.

On receipt of complaints from the villagers of Chelanaickenpatti and also also a reference from the Board of Revenue, the tannery premises and its neighbourhod were inspected by one of the Assistant Directors of Public Health on 11th November 1962. The Director of Public Health has now suggested that the factory management should provide and realign the entire drainage system within the tannery into two separate systems of drainage. The Assistant Director of Public Health has instructed separately the District Health Officer, Salem, to select a suitable site so that the tannery can dispose of this effluent by and treatment. This effluent can be disposed of in lagoons which can be frequently changed at intervals of a fort-night or a month.

By the disposal of the saline waste as suggested by the Health authorities, there is very little likelihood of the sub-soil water getting brackish and thereby causing nuisance to the neighbours

residing in the neighbouring villages. The District Health Officer, Salem, has been instructed to see that the tannery owners adopt the methods suggested.

III.—PRESENTATION OF THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1962–63.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, 1962–63-ம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை நான் சமர்ப்பிக்கிறேன். பற்பல மானியங்களின் கீழ் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 21·62 கோடி ரூபாய் இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 8·82 கோடி ரூபாய் ரெவின்யூக் கணக்கிலும், சுமார் 5·82 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், எஞ்சிய சுமார் 6·98 கோடி ரூபாய் பொதுக் கடனைத் திருப்பித்தரும் கணக்கிலும் அடங்கும். ஜனவரி மாத இறுதியில் நான் சபையில் சமர்ப்பித்த முதல் துணை மதிப்பீடுகளில் கோரிய தொகைகள் பெரும்பாலும் புதுப் பணித் திட்டங்களைப் பற்றியவைகளாகும். அதற்குப் பிறகு இன்னும் சில புதுப் பணித் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காகவும் நிதி ஒதுக்கம் செய்ய இப்போது உங்கள் அனுமதியைக் கேட்கிறேன். ஆனால், இப்போது கேட்கப்படும் துணை மதிப்பீட்டில் பெரும்பாலான தொகை, 1962-63-ம் ஆண்டின் பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகைகளைவிட பற்பல தலைப்புக்களில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகச் செலவைச் சரிக்கட்டுவதற்காகும். மற்ற பட்ஜெட் வெளியீடுகளுடன் ஏற்கனவே சட்டசபையில் சமர்ப்பித்துள்ள 1962–63 திருத்த மதிப்பீடுகளிலிருந்து, இவ்வாறு பல தலைப்புகளின்கீழ் செலவினம் அதிகரித்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். பற்பல இலாகாக்களின் வேலை திட்டங்களின்கீழும் எவ்வளவு தொகை செலவழிந்து இருக்கிறதென்பதையும் இறுதியாகப் பரிசீலனை செய்து, அச் செலவிற்கு வழிவகை செய்ய இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

பொதுக் கடனைத் திரும்பிச் செலுத்துவதற்கு அதிகமான தொகை ஒதுக்கும்படிக் கேட்கப்பட்டிருக்கிறது. இதன் காரணத்தை எளிதில் விளக்க முடியும். பற்பல மாநில வரிகளிலிருந்து வசூலாக்கும் தொகைகள், ஆண்டு முழுவதிலும் ஒரே சீராக வசூலாவது இல்லையென்பது சபையினருக்குத் தெரியும். இதனால் ரெவின்யூ வரவினங்களுக்கும், செலவினங்களுக்குமிடையே ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை அவ்வப்போது ரிசர்வ் பாங்கிலிருந்து தாற்காலிகமாக வழிவகை முன்பணத் தொகைகளைப் (ways and means advance) பெற்று ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. வரித் தொகைகள் வசூலாகி, அரசாங்கத்தின் ரொக்க இருப்பு நிலை அபிவிருத்தியடைந்தவுடன், இந்த முன்பணத் தொகைகள் திருப்பிச் செலுத்தப்படுகின்றன. அரசாங்கம் அவ்வப்போது இவ்வாண்டில் வாங்கித் திருப்பிச் செலுத்திய அத்தகைய முன்பணத்தொகைகளுக்காக, மொத்தம் 6·98 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் துணை மதிப்பீட்டில் வகை செய்திருக்கிறோம்.

மூலதனக் கணக்கில் செலவினத்திற்காக அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். (State Trading Schemes) அரசாங்க வர்த்தகத் திட்டங்களுக்கு மூலதன முதலீட்டின்கீழ் 4·67 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்திருப்பது விசேஷ கவனத்திற்குரியது. இந்திய அரசாங்கம் இந்த ஆண்டு நம் மாநிலத்திற்குக் கூடுதலாக அனுமதித்துள்ள உர வகைகளுக்காக தொகைகள் செலுத்துவதற்கென்றே இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் உர வகைகளின் இருப்பு நிலைமை வெகுவாக அபிவிருத்தி அடைந்திருப்பதைக் குறித்து நான் எனது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருந்தேன். இந்த உர வகைகள் சம்பந்தமாக நமது முதலீடு வெகுவாக அதிகரித்திருப்பதை இப்போது கேட்கப்படும் கூடுதல் நிதி ஒதுக்கம் நன்கு எடுத்துக் காட்டுகிறது. இதற்காக நாம் ஒதுக்கம்

அதிகத் தொகைக்கேற்ப, இந்த உர வகைகளைக் குடியானவர்களுக்கு வழங்க கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களுக்கு விற்பதன்மூலம் கிடைக்கும் தொகையும் உயரும்.

மூலதனச் செலவு அதிகரித்துள்ள மற்ற முக்கிய செலவினங்களிலே, சிறுபாசனத் திட்டங்களுக்காக இப்போது 40 லட்சம் ரூபாய்க்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்திருப்பதைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். நடப்பு ஆண்டில் நம்முடைய மாநிலத்தில் சிறுபாசன வேலைகளுக்காகத் திட்டத்தில் ஒதுக்கியிருந்த உச்சத் தொகைக்கும் மேல் இந்திய அரசாங்கம் 60 லட்சம் ரூபாய் கூடுதலாக நிதி உதவி அளிக்க முன்வந்தது. இந்திய அரசாங்கம் வழங்கிய இந்த உதவியை நாம் முற்றிலும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். சிறுபாசன வேலைகளுக்காக நாம் இப்போது கேட்கும் கூடுதல் நிதி ஒதுக்கம் அனுமதிக்கப்படுவதன்மூலம், மத்திய உதவி முழுவதையும் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். தமிழ்நாடு கூட்டுறவு பாங்கு, மத்தியக் கூட்டுறவு பாங்குகள், விவசாய பாங்கு ஆகியவற்றின் பங்குத் தொகையில் முதலீடு செய்வதற்காகவும் அதிகமாக ரூபாய் 28·5 லட்சம் ஒதுக்கும்படிக் கேட்கிறோம். இதற்கான பணம் முழுவதும் ரிசர்வ் பாங்கின் நீண்டகாலப் பணிகள் நிதியிலிருந்து (Long-Term Operations Fund) நமக்குக் கடனாகக் கிடைக்கும். இந்த உதவி நாட்டின் கூட்டுறவு ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரிசர்வ் பாங்கு வகுத்துள்ள திட்டத்தின்கீழ் கிடைப்பதாகும்.

ரெவின்யூக் கணக்கில் எழுந்துள்ள கூடுதல் செலவினங்களைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். நீர்ப்பாசன ஆதாரங்களின் பராமரிப்புச் செலவு வெகுவாக அதிகரித்துள்ளது. இதில் பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்ட பாசன ஆதாரங்களின் பராமரிப்பிற்காகக் கொடுக்கப்படும் மானியங்களும் அடங்கும். தவிர, 1961 ஜூலையில் ஏற்பட்ட பெரிய வெள்ளத்தினால் சேதமடைந்த பாசன ஆதாரங்களின் சீரமைப்புச் செலவும் வெகுவாக அதிகரித்துள்ளது. இந்த இனங்களின்கீழ் கூடுதலாக ஏற்பட்டுள்ள செலவையொட்டி 1·47 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கும்படி கேட்கிறோம்.

தொழிற் துறையின்கீழ் 1·30 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யும்படி கோரியுள்ளோம். திட்டத்தின்கீழ் துவக்கப்பட்டுள்ள பற்பல தொழில் நிலையங்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களின் (Raw Materials) கொள்முதல் செலவிற்கே இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கத்தில் பெரும் பகுதி பயன்படும். உதாரணமாக, மேட்டூர் கால்வனைசிங் தொழிற்சாலைக்கு 24·53 லட்சம் ரூபாயும், கிண்டி டெக்ஸ்விசிங் கார்ப்பொரேஷனுக்கு 41·70 லட்சம் ரூபாயும் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிருக்கின்றோம். மூலப்பொருள்களின் கொள்முதல் அதிகரித்திருப்பது இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி அளவு உயர்ந்திருப்பதைக் காட்டுகிறது. இதற்கேற்ப, தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விற்பனை மூலம் அதிக வருவாய் கிட்டும். மற்றச் செலவினங்கள் பெரும்பாலும் கல்வி (1,17·05 லட்சம் ரூபாய்), மருத்துவம் (89·71 லட்சம் ரூபாய்), ஹரிஜன நலம் (41·63 லட்சம் ரூபாய்) போன்ற அபிவிருத்தித் துறைகளிலேயே அதிகரித்துள்ளன. பொது நிர்வாகம் சம்பந்தமாகச் செலவினம் 99 லட்சம் ரூபாய் அளவிற்கு அதிகரித்திருப்பது கணிசமாகத் தோன்றினும், நடப்பு ஆண்டில் ஏற்படும் உத்தேசச் செலவு 1961-62-ல் ஏற்பட்ட செலவைவிட 20 லட்சம் ரூபாய் மட்டுமே அதிகமாயிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளும்படி இச் சபையைக் கேட்டுக்கொண்டு என். சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

IV.—ANNOUNCEMENT.

FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1962–63.

MR. SPEAKER: Under Rule 159 (2) of the Madras Legislative Assembly Rules, I have waived the time-limit and have allotted two hours on the 27th March 1963 for discussion on the Final Supplementary Statement of Expenditure for 1962–63 and one hour on the 28th March 1963 for voting on the Demands for Grants for Supplementary Expenditure.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963–64—*cont.*

DEMAND No. I—LAND REVENUE DEPARTMENT.

DEMAND No. IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 88,18,100 under Demand No. I—Land Revenue Department.'

Sir, on the recommendation of the Governor, I also move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,31,42,500 under Demand No. IX—District Administration and Miscellaneous.'

SRI S. MADHAVAN: Sir, I move—

'That the allotment of Rs. 88,18,100 under Demand No. I—Land Revenue Repartment, be reduced by Rs. 100.'

SRI P. MURUGAIYAN: Sir, I move—

'That the allotment of Rs. 5,31,42,500 under Demand No. IX—District Administration and Miscellaneous be reduced by Rs. 100.'

MR. SPEAKER: The Demands and the cut-motions are before the House for discussion.

பின்னாலே கூட காங்கிரஸ் கட்சி நில வரியை உயர்த்திக்கொண்டே போவது உண்மையிலேயே எப்படி பொருத்தமாக அமையும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். நிலத்தின் மீது உள்ள வரியை உயர்த்திய போதிலும், சம்பந்தப்பட்ட நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறதா, ஏழை விவசாய மக்கள் பயன்படத்தக்க வகையிலே தொல்லைகள் கொடுக்காது நடைப் பெறுகின்றதா என்பதை நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

1954-ம் ஆண்டு மாவட்ட நிர்வாகத்திற்கு மூன்று கோடியே 98 லட்சம் ரூபாயாக இருந்தது இன்றைக்கு இந்த மானியத்திலே ஐந்து கோடியாக உயர்ந்து இருக்கிறது. இதைப் போலவே வருமானத்துறை நிர்வாகத்திற்கும் 1954-லே 76 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு 88 லட்சமாக உயர்ந்து இருப்பதையும் பார்க்கிறோம். ஆகவே நிர்வாகச் செலவு உயர்ந்து இருக்கிறது. அதே சமயத்தில் இந்த நிர்வாகத்தில், சாதாரண விவசாயிகள் தொல்லைப்படக்கூடிய நிலையிலேதான் இன்றைக்கும் இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்துக்காக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏழை விவசாயிகள் தாங்கள் உழக்கூடிய நிலத்தைப் பற்றிய உரிமைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு இந்த இரு துறைகளும் முக்கிய இலாகாக்களாக இயங்கி வருகின்றன. ஆனால் இந்தத் துறையிலே இருக்கக் கூடிய ஊழல்களின் காரணமாக, நல்ல முறையில் செயல்படாததன் காரணமாக ஏழை விவசாயிகள் எவ்வளவு பெரிய கஷ்டங்களுக்கு உட்படுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்த கிராம ரெக்கார்டுகளை (வில்லேஜ் அக்கவுண்ட்ஸ்), என்று சொல்லப்படுபவை ஒழுங்காக வைக்கப்படாத காரணத்தால் சரியான முறையிலே இன்று விவசாயிகள் வாழ முடியாமல், கோர்ட்டுகளில் ஏறி இறங்கக் கூடிய சூழ்நிலை இன்றைக்கும் இருந்துவருகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு விவசாயி 20 ஆண்டுகளாக நிலத்தை உழுது பயிரிட்டு வந்தாலும்கூட, திடீரென்று ஒருவன் வந்து அந்த நிலத்தின்மீது "எனக்குத்தான் பாத்யம் இருக்கிறது, உரிமை இருக்கிறது" என்று சொன்னால், உடனே அவன் நீதி மன்றத்திற்குச் செல்கிறான். விவசாயியும் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே சென்று தன்னுடைய பாத்தியதையை நிர்ணயிக்கக்கூடிய உரிமையை பெற விவசாயிக்கு இருக்கிற ரெக்கார்டு எல்லாம், கர்ணம் கொடுக்கக்கூடிய ரெக்கார்டு அல்லது அரசாங்கம் கொடுக்கக்கூடிய ரசீதுகள்தான்.

அண்மையில் மூன்று ரசீதுகளை தயார் பண்ணவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது. அந்த உத்திரவிற்காக உண்மையிலேயே விவசாயிகள் நன்றி கூறுகின்றார்கள். ஆனால் அந்த ரசீதிலே எந்த நிலத்திற்கு வரி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காண்பதற்கு சர்வே நெம்பரைப் போடுவது இல்லை. அதன் விளைவு என்ன? 20 ஆண்டுகளாக வரி கட்டியிருக்கிறேன் என்பதைக் காட்ட வரி கட்டிய ரசீதுகளைக் காண்பிக்கிறான். நீதி மன்றத்தில் எதிர் தரப்பு வழக்கறிஞரின் முதல் கேள்வி, "இந்த ரசீதுகளின் மூலம் செலுத்தப்பட்டிருக்கும் வரி எல்லாம் தாவா நிலத்திற்குத்தான் கட்டப்பட்டது என்பதற்கு என்ன ஆதாரம்?" என்பதுதான். அந்த ரசீது அதைக் காண்பிக்காது. இன்றைக்கு இருக்கக்கூடிய அந்த முறையிலே ரசீதுகள் எந்த எந்த நிலங்களுக்கு விவசாயி வரி கட்டியிருக்கிறான் என்பதைக் காட்டுவதற்கு வழிவகை செய்யப் படவில்லை. இதன் விளைவு என்ன? ஏழை விவசாயிகள் 20 ஆண்டுகளாக தாங்கள் அனுபவித்து வந்த நிலத்தைக்கூட தங்களுடைய நிலம் என்று நீதி மன்றத்திலே நிரூபிக்க முடியாத சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை அரசாங்கம் உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரிதான் ஹெரிடிட்டரி வில்லேஜ் ஆபீஸர் என்று சொல்லப்படுகிற பரம்பரை பாத்தியதை உள்ளவர்களைத்தான் கிராமாதிகாரிகளாக நியமிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலே இருந்து வந்தது. இன்றைக்கும் நம்முடைய அரசாங்கம் இதைப் பின்பற்றி வருகிறது. 1950-லே காங்கிரஸ் அரசாங்கத்தின் சார்பிலே நியமிக்கப்பட்ட லேண்ட் ரிபாம்ஸ் கமிட்டி

தன்னுடைய தெளிவான கருத்துக்களைக் கூறி இருக்கிறது. இந்தப் பரம்பரைப் பாத்தியம் இருக்கிற காரணத்தால் ஊழல்கள் மலிந்து இருக்கின்றன. இதை மாற்றுவதற்கு நம்முடைய அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது? மாற்றினால் என்ன குறை ஏற்பட்டுவிடும்?

கிராம கர்ணத்திற்கு 30 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். கிராம முன்சீபுக்கு அதைவிடக் குறைந்த சம்பளம் கொடுக்கிறார்கள். ரூபாய் 25 தான் கொடுக்கிறார்கள். இதன் விளைவு என்ன? இந்த அரசாங்கம் மறைமுகமாக லஞ்சம் வாங்கலாம் என்று ஆதரிக்கின்றதா? இவர்களிடம் ஏராளமான அதிகாரங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். இவர்களுக்குப் பரம்பரை பாத்தியதை என்று சொல்லக்கூடிய காரணத்தாலும். சம்பளம் குறைவாக இருககிறது என்ற காரணத்தாலும் எவ்வளவு ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன? 1950-ல் இதை மாற்றுவதற்கு யோசனை சொன்ன கமிட்டியின் சிபாரிசுகள் ஏன் புறக்கணிக்கப்பட்டன? மாற்றுவதற்கு தயங்குவதற்கு காரணமென்ன?

அண்மையிலே இந்தியத் தலைமை நீதி மன்றம் இந்தப் பரம்பரை பாத்தியதைத் தத்துவம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அதன்படி, 1949-ஆம் ஆண்டுக்குப் பின்னால், பரம்பரை பாத்தியத்தின் அடிப்படையில், எந்தக் கிராம அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தாலும், அந்த உத்தரவு சொல்லாது என்ற முடிவுதான் இந்தியத் தலைமை நீதி மன்றத்தினுடைய தீர்ப்பிலிருந்து தெரிய வருகிறது. இந்த உத்தரவைப் பெற்ற பின்னராவது, நீதி கிடைத்த பின்னராவது, பரம்பரை பாத்தியத்தை நீக்கிவிட்டு, முழு நேர ஊழியர்களாக கிராம அதிகாரிகளை நிர்ணயிப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துவிட்டது, எடுக்க முயற்சிக்கிறது என்று பார்த்தால், "மீண்டும் இதே பரம்பரை உத்தியோகத்தை வேறு முறையில் அமைக்கலாமா என்று யோசிக்கிறோம்" என்ற குறிப்பைத்தான் காண்கிறோம். இந்த உத்தியோக முறையை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாக புதிய ஒரு அமைப்பை, புதிய ஒரு மெஷினரியை ஏற்படுத்தவேண்டும் என்று 1950-ஆம் ஆண்டில் அரசாங்கம் நியமித்த கமிட்டி கூறியும்கூட, அந்த யோசனையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாமலிருப்பதால் எவ்வளவு பெரிய சங்கடம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் உணர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ந. சண்முகசுந்தரம் தலைமை.)

1950-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட லாண்டு ரிபார்ம்ஸ் கமிட்டி இன்னொரு கருத்தைக் கூறியிருக்கிறது. புதிய முறையில் கிராம அதிகாரி அமைப்பை நிர்மாணிப்பதற்கு முன்னால், அந்த அமைப்பை முழுவதுமாகப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறது. அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஏன் ஏற்கத் தயங்குகிறது? பஞ்சாயத்து மன்றங்கள் இன்றைக்கு ஏராளமான வரிகளை வசூலிக்கின்றன. அதேபோல, இந்த நில வரியையும், அவர்களே வசூலித்து, நிலங்கள் சம்பந்தப்பட்ட அத்தனை ரிகார்டுகளையும் பஞ்சாயத்துக்களின் பொறுப்பில் கொடுக்க ஏன் இந்த அரசாங்கம் முயலக்கூடாது? அதனால் என்ன பாதகம் வந்து விடும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது? பஞ்சாயத்து மன்றங்களிலே இந்த அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால் ஒரு நன்மை கூட உண்டாகும். அதாவது, ஒவ்வொரு ஊருக்கும் ஒரு வரைபடம் (ஸர்வே மேப்) தயாரிக்கும் உரிமை பஞ்சாயத்துக்குக் கிடைக்கும். ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்த ஒரு ஊரிலுள்ள ஒவ்வொரு சிறு நிலம்கூட யார் யாருக்குப் பாத்தியம் என்பதை ரிகார்டு பூர்வமாகத் தயாரித்துவிடலாம். அப்படித் தயாரித்துவிட்டால், சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு இந்த நிலம் எனக்குத்தான் பாத்தியம் என்று உரிமை பெறக் கூடிய சூழ்நிலை ஏற்படும். அந்தச் சூழ்நிலை இல்லாவிட்டால், ஒவ்வொன்றுக்கும் நீதிமன்றம் ஏறி இறங்கும் சூழ்நிலை இந்த நாட்டில் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அதை உணர்ந்தாவது இதை மாற்றியமைப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும்.

இந்த மானியத்தின் மீதுள்ள குறிப்பில், வரி பாக்கிகள் அதிகமாக நிற்கின்றன என்று காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன ? இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு முறை இங்கே பேசும்போது, "திருப்பத்தூர் தாலூகாவில் ஏராளமான வரி பாக்கிகள் இருக்கின்றன, இதற்குக் காரணம் அந்தப் பகுதி மக்கள் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி வரி கட்டுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள்" என்ற கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகள் கொடுத்த தகவலை வைத்து அமைச்சர் அவர்கள் அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கருத்திலே எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கவனித்துப் பார்க்க வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பாக்கி உயர்ந்திருக்கக் காரணம் என்ன என்பதைத் தனியாக ஆலோசிக்க வேண்டும். பல காரணங்களை நான் கூற முடியும். ஆனால், ஒரே ஒரு காரணத்தை மட்டும் நான் இங்கே சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் அடிக்கடி பருவ மழை தவறியிருக்கிறது. அதனால் யார் எந்த பசலிக்கு வரி கட்டுவது என்ற நிர்ணயம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. காரணம் என்னவென்றால், எங்கே வரி வஜா செய்யவேண்டுமோ, அங்கே வரி வஜா செய்யக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. அந்த அதிகாரத்தைக் கலெக்டர் பயன்படுத்துகிறார். அவர்கள் எப்படிப் பயன்படுத்துவது, எங்கே பயன்படுத்துவது என்பதில் கொள்கைக் குழப்பம் இருக்கிறது. ஓர் ஊரில் பருவ மழை தவறியது என்றால், அந்த ஊர்க் கர்ணம்தான் எங்கே பருவ மழை தவறியது, எந்த சர்வே நம்பரில் உள்ள நிலங்களில் விளையவில்லை என்கிற குறிப்பைக்கொடுக்க வேண்டும். குறிப்புக் கொடுத்தால்தான் அரசாங்கம் வரி வஜா செய்ய வேண்டும் என்கிற உத்தரவைப் பிறப்பிக்கிறது. இந்த முறை வெள்ளையன் ஆட்சியில் கொண்டுவந்தது. இதை இன்றைக்காவது மாற்றியமைக்க வேண்டாமா ? எந்த நிலம் விளையவில்லையென்றாலும், அந்த நிலச் சொந்தக்காரர் "விளையவில்லை" என்று நிரூபித்து வரி வஜா செய்துகொள்ளக்கூடிய உரிமையைச் சட்டரீதியாக மக்களுக்கு ஜனநாயக ஆட்சியிலாவது கொடுக்க வேண்டாமா ? ஸ்கீம் ஆஃப் ரெமிஷன் வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்டது. அந்தக் காரணத்தால் அதை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அன்றைக்கு அரசாங்கத்திற்கு வரி வஜா செய்யும் உரிமை கொடுக்கப்பட்டது. ஜனநாயக ஆட்சியிலாவது அந்த நிலை மாற்றியமைக்கப் படவேண்டாமா ? பருவ மழை தவறியதன் காரணமாகவோ அல்லது வேறு காரணமாகவோ ஒரு விவசாயினுடைய நிலத்தில் விளைச்சல் ஏற்படவில்லை என்றால், தனக்குச் சட்ட ரீதியாக உள்ள உரிமையைப் பிரயோகப்படுத்தி, வரி வஜா கிடைப்பதற்கு ஒவ்வொரு விவசாயிக்கும் நாம் உரிமை கொடுக்க முன்வர வேண்டாமா ? 1950-ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சியின் சார்பில் நியமிக்கப்பட்ட லாண்டு ரிபார்ம்ஸ் கமிட்டி தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறது. ஸ்கீம் ஆஃப் ரெமிஷன் சட்டபூர்வமாக (ஸ்டாசுடரி பேஸிஸ்) கொண்டுவரப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். அப்படிக் கொண்டுவந்தால்தான் நாட்டு மக்களுக்கு அதிலே கிடைக்கும் பலன் அதிகமாகும். யாராவது ஒரு அதிகாரியைப் பொறுத்து வரி வஜா செய்யக் கூடிய சூழ்நிலை இருக்குமானால், அதனால் மக்களுக்குத் தொல்லைதான் ஏற்படும் என்பதை அந்தக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளாக அந்தக் கமிட்டியின் சிபார்சை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம் என்ன? அதனால் என்ன தவறு ஏற்படும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்றுகூறி என் உரையை முடித்துவிடுகிறேன். விவசாயிகளுக்கு நன்மை செய்வதகாகச் சொல்லிப் பல சட்டங்களை உருவாக்கி இருக்கிறோம். ஆனால், அந்தச் சட்டங்கள் செயல்படும் முறையில் நாம் கண்காணிப்பாக இருக்கவேண்டும். அந்தச் சட்டங்களினால் ஏழை விவசாய மக்களுக்குத் தீமை ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். சட்டங்கள் இந்த மன்றத்தில் இயற்றப்பட்டதற்குப் பின், நீதி மன்றங்களுக்கு நிலச்சுவான்தார்கள் செல்கிறார்கள். நீதி

மன்றத்தில் அவர்கள் ஒரு "லீகல் இன்டர்ப்ரடேஷன்" வாங்கி விடுகிறார்கள். சட்டங்கள் விவசாயிகளின் நன்மைக்காக வந்தபோதிலும், நிலச்சுவாந்தார்கள் நீதி மன்றங்களில் வெவ்வேறு லீகல் இன்டர்ப்ரடேஷன் பெற்றுவிடுவதன் காரணமாக, விவசாயிகள் பாதிக்சப்படுகிறார்கள். ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட் 1947-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. "ஒரு கிராமம் ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டின் கீழ் கொண்டுவரப்படும்" என்று அரசாங்கம் நோடிபிகேஷன் செய்கிறது. அந்த ஊரிலுள்ள "விவசாயிகள் நம்முடைய அரசாங்கம், காங்கிரஸ் அரசாங்கம், மக்கள் அரசாங்கம் நமக்காக இந்த வரிக் குறைப்புச் சட்டத்தை இந்தக் கிராமத்தில் கொண்டுவந்துவிட்டது" என்று சந்தோஷப்படுகிறார்கள். ஆனால், உடனே நிலச்சுவான்தார்கள் நீதி மன்றத்திறகுச் செல்கிறார்கள. "1947-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் அரசாங்கம் நோடிபிகேஷன் செய்தது தவறு" என்று நீதி மன்றத்தில் "ஸ்டே" வாங்கிவிடுகிறார்கள். குறைந்த பட்சம் 12 ஆண்டுகளுக்கு உயர் நீதி மன்றம் வரை நிலச்சுவான்தார் செல்கிறார். இதனுடைய விளைவு என்ன ? அரசாங்கத்தினுடைய நோடிபிகேஷன் ஸ்டே செய்யப்படுகிறது. வரிக் குறைப்புச் சட்டத்தின் கீழ் விவசாயிகள் வந்தபோதிலும், நீதி மன்றத்தின் உத்தரவு காரணமாக, அந்தச் சட்டம் செயல்படாத சூழ்நிலை ஏற்படுகிறது. 10, 12 ஆண்டுகளுக்குப் பின்னால், "அரசாங்கம் நோடிபிகேஷன் செய்தது தவறு" என்று உயர்நீதி மன்றம் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறது. உடனே என்ன நடக்கிறது ? அந்த நிலச்சுவான்தார் சிவில் கோர்ட்டுக்குப் போகிறார். "12 ஆண்டுகளாகத் தனக்கு வரவேண்டிய பாக்கி வரவில்லை" என்று சொல்லி கோர்ட்டில் தாவா போடுகிறார். "லிமிடேஷன் ஆக்ட்" படி மூன்று ஆண்டுகளுக்குத்தான் பழைய பாக்கியை வசூலிக்க முடியும். ஆனால், நம்முடைய அரசாங்கம் வரிக் குறைப்புச் சட்டத்திற்கு 1956-ஆம் ஆண்டு ஒரு திருத்தம் கொண்டுவந்ததன் காரணமாக லிமிடேஷன் ஆக்டை ஓவர்-ரூல் செய்யும் அளவுக்கு அனுமதி தரப்படுகிறது. வரிக் குறைப்புச் சட்டத்தின்கீழ் 1947-ஆம் ஆண்டில் நோடிபிகேஷன் செய்தபோதிலும், லிமிடேஷன் சட்டம் பயன்படாது என்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கிற நிலை இருக்கிறது. அதன் விளைவாகவும், பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக சர்க்காருடைய கவனக் குறைவின் காரணமாகவும், பழைய வாரப் பாக்கிகளைக் கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. ஜயராஜ் :** தலைவர் அவர்களே, இன்று வருவாய்த் துறை அமைச்சர் அவாகள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியத்தை வரவேற்று நான் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே கூற முன்வந்துள்ளேன். குறிப்பாக, ரெவின்யூத் துறை மூலமாகத்தான் நம்முடைய அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் வருகிறது. இத்தகைய வருமானம் எந்த அடிப்படையில் அரசாங்கத்திற்கு வருகிறது. அதனால் நாட்டுக்கு என்ன நன்மை என்பதைப்பற்றி நாம் புரிந்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறோம். அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிற வரிகளெல்லாம் .கிராமங்களிலிருக்கும் கிராம அதிகாரிகளால் நல்ல முறையில் வசூல் செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு வந்து சேருகிறது. இந்தக் கிராம அதிகாரிகள் என்று சொல்லக்கூடிய வில்லேஜ் ஆபீசர்கள் அன்னியர் காலத்திலோ அல்லது அதற்கு முன்னாலோ இருந்த சட்ட திட்டங்களின் அடிப்படையில் அமையப்பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை அதிகமாக இருப்பினும் அதற்கேற்ற வகையில் சம்பளம் அமையாமல், அவர்களுக்குச் சம்பளமும் மற்ற வருவாயும் மிகக் குறைவாக இருக்கின்றன. குறிப்பாக முன்பெல்லாம், அதாவது நில உச்ச வரம்புச் சட்டம் வராததற்கு முன்னால், மிராசுதார்கள் ஓரளவு அவர்களுக்கு மறைமுகமாக ஏதாவது தந்துகொண்டிருந்தார்கள். ஆனால், இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததற்குப் பிறகு, கிராம அதிகாரிகளுக்கு வருவாய்க் குறைவு ஏற்பட்டிருக்கிறது. கிராமத் தலைவருக்கு அரசாங்கம் கொடுக்கும் சம்பளம் 17 ரூபாயாகவும், பஞ்சாயத்து வேலைக்காகக் கொடுக்கப்படும் ஊதியம் 7 ரூபாயாகவும், ஆக மொத்தம் 24 ரூபாயாக இருக்கிறது. இதோடு [illegible]திற்கு 18 ரூபாயோடு 15 ரூபாய் சேர 33 ரூபாய் வரு[illegible]

இதர படிகளைக் கணக்கிட்டால், கிராமத் தலைவருக்கு 32 ரூபாயும், கர்ணத்திற்கு 45 ரூபாயும் கிடைக்கிறது. கிராமாதிகாரிகளுக்கு இந்த சம்பளம் போதுமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கிற இந்த அதிகாரிகள் மிராசுதார்களிடமோ மற்றவர்களிடமோ வருவாய்க்குப் போய் நிற்கவேண்டிய அவசியம் இருக்கலாமா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். கிராமாதிகாரிகளுக்கு நல்ல முறையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும். இந்த அரசாங்கம் நல்ல முறையில் நடப்பதற்கு அடிப்படைக் காரணம் கிராமாதிகாரிகள்தான். சர்க்காருடைய முக்கிய காரியங்களைக் கவனிக்கக்கூடிய பொறுப்பில் கிராமாதிகாரிகள் இருக்கிறார்கள்.

10-10 a.m. அத்தகைய கிராமங்களில் இருக்கக்கூடிய கிராமாதிகாரிகளுக்கு நல்ல வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே, வரப் போகிற மசோதாவின் மூலம் கிராமாதிகாரிகளுக்கான நல்ல பல வசதிகள் செய்து கொடுப்பதற்கான வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். லோயர் டிவிஷன் கிளார்க் அளவுக்கு அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்படலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் கிராமாதிகாரிகளின் எண்ணிக்கையும் ஓரளவு குறைக்கப்படலாம் என்று தெரிகிறது. அவ்வாறு எண்ணிக்கையை குறைப்பதன் காரணமாகப் பாதிக்கப்படாத முறையில், அவர்களுக்கும் அங்கு இருக்கின்ற கடைநிலை ஊழியர்களுடன் இணைத்து வேலை கொடுப்பது பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்று நில உச்ச வரம்புச் சட்டம், தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் பண்ணையாட்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஓரளவு நன்மை ஏற்பட்டிருக்கின்றது. இருந்தாலும் தஞ்சாவூர் ஜில்லாவில் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்தால் ஓரளவுக்கு நன்மை இருந்தாலும், மிராசுதார்கள் நினைத்தால், விரும்பினால், பண்ணையாட்களுக்கு 150 ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டு அவர்களை நீக்கி விடலாம் என்ற ஷரத்து இருக்கிறது. இந்த ஷரத்தின் காரணமாகப் பண்ணையாட்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. இந்த ஷரத்தை வைத்துக்கொண்டாலும் கூட, பண்ணையாட்களை அவ்வாறு நீக்கும்போது கொடுக்கப்படுகிற தொகையை 300 ரூபாய் அல்லது 400 ரூபாய் அளவுக்கு உயர்த்தினால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள், குத்தகைதாரர்கள், சாகுபடியாளர்கள் 60—40 சட்டத்தின் காரணமாக நன்மை அடைந்திருந்தாலும்கூட, தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயிகளும், குத்தகைதாரர்களும் ஏராளமான அளவில் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். நெல்லை அளந்து கொடுத்த பிறகு ரசீது தருகிறேன் என்று சொல்லி, பின்னால் அவர்களுக்கு ரசீதைக் கொடுக்காமல் நயவஞ்சகமாக, சூழ்ச்சியாக அவர்களை அப்புறப்படுத்தி விடுகிறார்கள். ஆகவே, விவசாயிகளை அப்புறப்படுத்தாமல் சட்டம் அமைய வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அரசாங்கம் அது பற்றிக் கவனித்து அந்தப் புறம்போக்கு நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்** : தலைவர் அவர்களே, நில வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரை மாவட்ட அதிகாரிகள் பொது ஜனங்களிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட அதிகாரிகள் சுற்றுப் பயணம் செய்யும் காலங்களில் சட்டசபை அங்கத்தினர்கள் சந்திக்க வாய்ப்பு இருக்க வேண்டும் என்னும் காரணத்தினால் அவர்களுடைய நாள் குறிப்பை சட்டசபை அங்கத்தினர்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக்

கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று வட்ட அதிகாரிகளும் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள். அவர்கள் பணி செய்ய வேண்டிய பரப்பளவு வேலைகளின் ஜவாப்தாரிதனம் அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு வாகன வசதி (ஜீப் வசதி) செய்து கொடுத்தால் அவர்களுடைய பணிகளை நல்ல முறையில் புரிவார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக தர்மபுரி வட்டத்தில் இவ்வாண்டு வேர்க்கடலை, . நெல் பயிர் களுக்கு நோய் விழுந்து மிகவும் சேதமேற்பட்டிருக்கிறது. ஆகவே, விவ சாயிகளுக்கு அரசாங்கம் கொடுத்துள்ள கடன்களை வசூலிப்பதைத் தள்ளி வைப்பதோடு வரி வஜா செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், கிராமாதிகாரிகள் கௌரவ உத்தியோகஸ்தர்களாக அரசாங்கம் கருதி வருகிறார்கள். அவர்கள் ஊதியத்திற்காக வேலை செய்யவில்லை என்பது அரசாங்கம் நன்கு அறியும். அப்பேர்ப்பட்டவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருந்தும் கௌரவமான முறையில் அவர்கள் நடத்தப்படுவதில்லை என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இம்மாதிரி நேராத வண்ணம் அதிகாரிகளுக்கு அரசாங்கம் அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

கிராமாதிகாரிகளின் நிலைமையைப் பற்றி இது வரையில் அரசாங்கத்தில் ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே அவர்களுடைய நிலைமையைப்பற்றி 1964-ஆம் வருஷத்திலே நிர்ணயிக்கப் படும் என்று கூறியுள்ளார்கள். அச்சமயத்தில் நல்ல முறையில் அவர் களுக்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமாதிகாரிகளும், சிப்பந்திகளும் சேர்ந்து சுமார் 50,000-க்கு மேல் இம்மாநிலத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்காகச் சட்டசபையில் ஒரு ஸ்தானம்கூட ஒதுக்கப்படவில்லை. அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல யாரும் முன் வருவதில்லை. அவர்களுக்குச் சட்டசபையில் ஒரு ஸ்தானம் ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

கிராமாதிகாரிகள் குறைகளில் சிலவற்றை அரசாங்கம் நிவர்த்தித் திருப்பதாகத் தெரிய வருகிறது. இன்னும் பல குறைகள் இருக் கின்றன. அவர்களுடைய முக்கியமான குறைகளைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்து அவற்றை நிவர்த்திப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஹிந்து ரிலிஜியஸ் சேரிடபிள் என்டௌமென்ட் துறையைக் குறித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் சிறு வருமானமுள்ள கோயில்கள் அநேகம் இருக்கின்றன. அந்தக் கோயில்கள் எல்லாம் படு மோசமான நிலையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதைப் பற்றி சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளுக்கு எத்தனையோ முறை புகார் செய்தும் விசாரிக்காமலேயே விட்டு விட்டார்கள். நீதி நிர்வாகம் இரண்டும் அறநிலைய ஸ்தாபனத்தாரிடம் இருப்பது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஏனெனில் இரண்டு அதிகாரங் களும் ஓரிடத்தில் இருப்பதால் பொதுஜனங்களுக்குக் கோவில்களின் சொத்து விஷயமாய் நிதி கிடைக்காது என்று ஜனங்களிடையே பரவி இருக்கிறது. அதோடு கோவை, சென்னை, மதுரை இம் மூன்று இடங்களுக்கும் பொது மக்கள் போய் கோவில்களின் விஷயமாய் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ளவோ, அல்லது டெபுடி கமிஷனர்களிடம் கோவில்களுக்கு சம்பந்தப்பட்ட கேஸ்களை நடத்த முடியாத நிலையில் இருப்பதால் நீதித் துறையை அந்தந்த ஜில்லா முன்சிப் கோர்ட் களுக்குக் கொடுத்தால் பொது மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். கோவில்களுக்கு தர்ம கர்த்தாக்கள் நியமனம் செய்கிறார்கள். எந்த முறையில் செய்கிறார்கள் என்றால் இன்ஸ்பெக்டர் யாரைச் சிபார்சு செய் கிறாரோ அவரை ஏரியாக் கமிட்டியில் நியமனம் செய்கிறார்கள். இம் முறையை மாற்றி தர்மகர்த்தாக்களை நேரடியாக மக்கள் தேர்ந்தெடுக்கப்

பட வேண்டும். அல்லது கோவில் பரிபாலனத்தை பஞ்சாயத்துக்களிடம் ஒப்பு
விக்க முன்வரவேண்டும். மோட்டார் வண்டிகளின் பராமரிப்பு நிலையம் சேலத்
தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் அரசாங்க வண்டிகளை
ரிப்பேர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் காலதாமதம் ஏற்படுவ
தோடு அது நல்ல முறையில் சேவை செய்யவில்லை என்ற புகார்கள்
வந்திருப்பதால் இது நல்ல முறையில் இயங்க அரசாங்கம் நடவடிக்கைகள்
எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை
முடிக்கிறேன்.

*திரு. எ. கூ. காளியப்ப கவுண்டர் : தலைவர் அவர்களே, இப்போது
கொண்டு வரப்பட்டிருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில
வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எங்கள் ஜில்லாவில் கோபி தாலூகா
ஒரு டிவிஷன், ஈரோடு தாலூகா ஒரு டிவிஷன். இரண்டிற்கும் சேர்த்து
டெவலப்மென்ட் தாசில்தார், ரீஹாபிலிடேஷன் தாசில்தார்
போடப்பட்டிருக்கிறார்கள். ஹரிஜன இலாகா தாசில்தார் கோவையில்
இருக்கிறார். இவர்களுக்கு இந்த டிவிஷன்கள் பூராவும் சுற்ற வேண்
டுமானால் சுமார் 80 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எங்கள்
ஜில்லாவில் நாலைந்து டிவிஷன்கள் இருக்கின்றன. அங்கு இதுமாதிரி
9 தாசில்தார்களுக்கு குறைவில்லாமல் இருக்கலாம். ஆகவே ஒவ்வொரு
தாலூகாவிற்கும் ஒரு தாசில்தாரை நியமித்து அவர்களின் கீழ் ஒரு
ரெவினியு இன்ஸ்பெக்டரைப் போட்டு டெவலப்மெண்ட் வேலை,
ரீஹாபிலிடேஷன் வேலைகள், ஹரிஜன இலாகாவின் வேலை இவற்றை அவர்
களிடம் கொடுத்தால் யூனியன் சேர்மன், சட்டமன்ற அங்கத்தினர்கள்
இவர்கள் அவர்களிடம் சென்று வேலைகளைச் சீக்கிரத்தில் செய்யச்
சொல்லலாம். தூரத்தில் இருப்பதால் அவர்கள் ஒரு தடவை வர மூன்று
நான்கு மாதங்கள் ஆகின்றன. ஒரு தாலூகாவிற்குள் இருந்தால் 30
மைல்களுக்குள்ளே இருக்கும். அதற்குள் சுற்றி வரலாம். அதன் கார
ணமாக அவர்களை அடிக்கடி சந்தித்து வேலைகளை சீக்கிரத்தில் செய்யச்
சொல்ல வசதியாக இருக்கும். அவர்களும் அடிக்கடி வந்து பார்த்து
காரியங்களை விரைவில் செய்யவும் ஏதுவாக இருக்கும். அதோடு டி. ஏ.
போன்றவைகளும் அதிகமாகாது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள்
யோசித்து ஒவ்வொரு தாலூக்காவிற்கும் இந்த அடிப்படையில் ஒரு தாசில்
தாரை நியமிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது சிறு நீர்பாசன
திட்டங்களை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். பஞ்
சாயத்து யூனியன் ஆவதற்கு முன்பு பிளாக் டெவலப்மெண்டு ஆபீசாக
இருக்கும்போது ஆண்டுக்கு சுமார் 60,000 ரூபாய் வரையில் தான் செலவு
செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது யூனியன் ஆன பிற்பாடு 4 லட்சம்
ரூபாய் வரை ஆண்டு தோறும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.
இப்போது ஹைவேஸ் சூப்பர்வைசர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அதற்குக்
கீழ் மைனர் இர்ரிகேஷன் ஓவர்சியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். இந்த
மைனர் இர்ரிகேஷன் ஓவர்சியர்களுக்குப் பதிலாக யூனியனில் இருக்கிற வேலை
களை இரண்டாகப் பிரித்து இரண்டு சூப்பர்வைசர்களைப் போட்டால் சீக்கிரம்
வேலைகள் நடக்கும். அப்போது அவர்கள் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்
கீழ் நன்கு வேலை செய்ய முடியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் ஏழை விவசாயிகள் கர்ணத்திடம்
சென்று உரம் I.M.S. லோன் போன்றவைகளை வாங்க சர்டிபிகேட்
வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. இப்போது கிராம சேவக்குகளுக்கு
சர்வே ட்ரெய்னிங் கொடுக்கப்படுகிறது. அவர்களை அஜ்மாஷ் ரெவின்யூ
இன்ஸ்பெக்டர்களாக போட்டால் சாகுபடி ரிஜிஸ்டர் உரம் வாங்க வைத்துக்
கொள்ளவும் சர்டிபிகேட் போன்றவை கொடுக்கவும் வசதியாக இருக்கும்.
அதோடு அஜ்மாஷ் டெப்டி தாசில்தாரை யூனியனோடு இணைத்தால் ஒவ்
வொரு கிராமத்திலும் தண்ணீர் பாய்ச்சுவதில் தகராறு ஏற்படும்போது
அவற்றைத் தீர்த்து வைக்க வசதியாக இருக்கும். கிராம சேவக்ஸ் மேல்
அஜ்மாஷ் டெப்டி தாசில்தார் இருந்தால் அவர்களிடம் வேலை வாங்கவும்
சௌகரியமாக இருக்கும். அடுத்தபடியாக, 1961 ஜூலை மாதத்தில்
எங்கள் தாலுகா வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. லோயர் பவானி வாய்க்
காலில் வருகிற தண்ணீருடன் பக்கத்திலுள்ள பெரும் பெரும் பள்ளங்
களிலுள்ள தண்ணீரும் வந்து சேரும் போது வெள்ளத்தால் பெரும்

பாதகம் ஏற்படுகிறது. ஆகவே அப்பள்ளங்களை குளங்களாக கட்டினால் வெள்
ளத்தால் ஏற்படுகிற சேதம் குறைய வாய்ப்பு ஏற்படும். ஷெட்யூல் வகுப்
பினருக்கு கொடுக்கும் மதிப்புள்ள பூமிகளை மார்க்கட் மதிப்பு அனுசரித்து
வசூலிக்கலாம் என்றிருக்கிறது. ஷெட்யூல் வகுப்பினர் கந்தாயம், தண்
ணீர் தீர்வை கட்ட கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு இதை
இனமாகக் கொடுக்கும்படி இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்பு
கிறேன். அடுத்தபடியாக, எங்கள் லோயர் பவானியில் இருக்கும், லஸ்கர்
களை யூனியனோடு இணைத்து விட்டால் சௌகரியமாக இருக்கும். ஹை
வேஸ் சூப்பர்வைசர்களை யூனியனோடு இணைத்திருப்பது போல் இந்த லஸ்கர்
களையும் யூனியனோடு இணைத்து விட்டால், எங்களைப் போன்ற சேர்மன்கள்
தண்ணீர் சரியானபடி விநியோகிக்கச் சொல்ல சௌகரியமாக இருக்கும்.
உதாரணமாக நாலைந்து மாதங்களுக்கு முன்னர் எங்கள் லோயர் பவானியில்
உள்ள அஸிஸ்டெண்ட் என்ஜினியர், எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர் இவர்கள்
ஊட்டியில் ஒரு கான்பரன்ஸ் இருப்பதாகச் சொல்லிப் போய்விட்டார்கள்.
அப்போது லஸ்கரால் தண்ணீர் சரியானபடி விடப்படவில்லை. அஸிஸ்டெண்ட்
என்ஜினியர் வந்த பிறகு அவரிடம் சொல்லி பின்னர் தண்ணீர்
விடப்பட்டது. அப்படி சரியானபடி காலத்தில் தண்ணீர் விடாததால் சில
இடங்கள் வரண்டு போய்விட்டன. இப்போது புறம்போக்கு நிலங்கள்,
கிராமச்சாலைகள் இவைகள் சரியானபடி இல்லாது தனியார் அனுபவித்து
வருகிறார்கள். அவற்றை சர்வே செய்ய ஆறு மாதம் அல்லது ஒரு வருடம்
யூனியனோடு இணைத்து ஒரு சர்வேயரைப் போட்டால் அந்தந்த இடங்களில் உள்ள
இட்டேரிகள், புறம் போக்குகளை அளந்து கல் நட்டு கிராமப்-பஞ்சாயத்தினிடம்
ஒப்படைக்க வசதியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு என் உரையை
முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. வெ. எல்லம நாயுடு : கனம் தலைவர் அவர்களே, இன்று
நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள
மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களை தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

ஜில்லா மட்டத்திலே நமது ரெவின்யூ அதிகாரிகளும், தாலூகா மட்டங்
களிலேயுள்ள அதிகாரிகளும் பொதுமக்களோடு நல்ல முறையிலே
தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய பணியைச் செய்து வருவதைக்கண்டு
மகிழ்ச்சியடைகிறேன். அந்த முறையிலே ரெவின்யூ இலாகாவிலே கீழ்
மட்டத்திலேயுள்ள கிராமப் பணியாளர்களிடத்தில் நாம் சற்று கவனம்
செலுத்தவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமத் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் தற்போது கொடுக்கப்படும்
ஊதியம் மிக மிகக் குறைவென்று சொல்லப்பட்டது. அதைத்தான்
நானும் சொல்ல விரும்புகிறேன். கிராமத் தலைவர்களுக்கு 25 ரூபாயும்,
கர்ணத்திற்கு 30 ரூபாயும், கிராம ஊழியர்களுக்கு 22 ரூபாயும் கொடுக்கப்
பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்
கிறது. இதோடு பஞ்சாயத்து வேலைகளுக்காக ஓரளவு சிறிய தொகை
கொடுக்கிறார்கள். இந்தத் தொகையை வைத்துக் கொண்டு கிராமத்
தலைவர்களாக இருந்தாலும் சரி, கிராம ஊழியர்களாக இருந்தாலும் சரி,
அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு நடத்த முடியுமென்பதை யோசித்
துப்பார்த்தால், அதை எந்த முறையில் யோசித்தாலும், சரியானதாகத்
தென்படவில்லை. அவர்களை ஒன்று முழு நேர ஊழியர்களாக மாற்றி விட
வேண்டும், அல்லது அவர்களின் சம்பளத்தையாவது அதிகப்படுத்திக்
கொடுக்க வேண்டும். அதோடு அவர்களுக்கு கொடுக்கப்படும்—ஆண்டொன்
றுக்கு என்று நினைக்கிறேன்—பயணப்படியை எடுத்துக் கொண்டால்,
12 மைல் வரையிலும் 15 ரூபாயும், 20 மைல் வரையிலும் 20 ரூபாயும்
20 மைல்களுக்கு மேற்பட்டால் 25 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. இதையும்
யோசித்து அதிகப்படுத்துவது நலமாக இருக்கும்.

அவர், கிராம ஊழியர்களின் பிள்ளைகளுக்குப் படிக்க விருப்பம் இருந்தால் கல்லூரி வரையில் இலவசமாகக் கல்வி சலுகை அரசாங்கம் கொடுப்பது நலமாக இருக்குமென்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள். அந்த வகையிலே மற்றெல்லா கிராம ஊழியர்களுடைய குழந்தைகளும் நன்குபடித்து உயர்தர அதிகாரிகளாகவும் இந்த நாட்டை ஆளக்கூடிய அமைச்சர்களாகவும் வரவேண்டுமென்பதுதான் நமது அரசாங்கத்தின் நோக்கம். அந்த நோக்கம் சீரிய முறையில் நடைபெற அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாவட்டக் கலெக்டர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் யுக்கதானுசார மானியங்கள் ஆண்டொன்றுக்கு எல்லா ஜில்லாக்களுக்கும் சேர்த்து 35,000 ரூபாய் என்று இருக்கிறது. இதைச் சற்று அதிகப்படுத்தி 50,000 ரூபாயாக கொடுத்தாலும்கூட நல்ல முறையிலே கிராமங்களிலே அவர்களுடைய பணியைச் செய்வதற்கும் வசதியாக இருக்கும். அதையும் யோசிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவு உற்பத்தித் திட்டத்திலே புதிய கிணறுகள் வெட்ட உதவித்தொகை கொடுப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2,000 ரூபாய் கொடுக்கப்பட்டு அதிலே 500 ரூபாய்க்கு மேற்படாமல் உதவித் தொகையாக கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மீதித் தொகை கடனாகக் கொடுக்கப்படுகிறது. இத் தொகை குறுகிய காலத்தில் வசூலிக்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடனை உபயோகித்து வெட்டப்படும் கிணறுகளால் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர்கள் பயனை அடைய முடியும். ஆகையால் கிணறுகள் வெட்டுவது போன்றவைகளுக்காகக் கொடுக்கப்படும் கடன்கள் பத்தாண்டுகளில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிப்பது நலமாக இருக்கும்.

"அதிகக் கிணறுகள் வெட்ட மானியம்" என்ற தலைப்பில் துளைக் கிணறுகள் (துணை ஊற்றுக் கிணறுகள்) ஒன்றுக்கு 6,000 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது. அந்தச் செலவில் 10 சதவிகிதம் மானியத் தொகை யாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மானியத்தைக் குறைந்த பட்சம் 1,000 ரூபாயாகக் கொடுத்து அல்லது செலவில் 15 சத விகிதம் உதவித் தொகையாக கொடுத்தால் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வடி முனைக் கிணறுகள். இந்த முறை அதிகமாக இயங்குவதாகத் தெரியவில்லை. இந்தத் துறையிலும் அதிகமாகக் கவனம் செலுத்தி அதிகப்படி கிணறுகளை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குழாய்க் கிணறுகள். இந்த முறை மிகச் சிறந்த முறை. இது செயல் முறையில் மிகவும் தாமதமாக இயங்கி வருகிறது. இக்கிணறுகளில் நீரைப் பயன்படுத்தும் ரயத்துக்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 22.50 வீதத்தில் வசூலிக்கப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையானது ஆண்டு ஒன்றுக்கா அல்லது ஒரு போக விவசாயத்திற்கா என்பது சரியாகத் தெளிவு படுத்தப்படவில்லை.

அங்குள்ள விவசாயிகள் அதிகமான பணம் வருகிறது என்ற காரணத் திற்காக நிலத்தை விற்பதற்குத் தலையிட்டு விற்று வருகிறார்கள். இப் படிப்பட்ட நிலங்களை குடியானவர்களும் கூட விற்காமல் இருப்பதற்குச் சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயத்தை வளர்க்க ஊக்க மளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என்னு டைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, இன்று கொண்டுவரப் பட்டிருக்கும் மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இன்று கொடுக்கப்பட்டிருக்கும் மானியமானது மிக மிகத் தேவைப் படக்கூடியதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமாக நம் நாட்டிலே கருதப் படுகிறது. இப்படிப்பட்ட மானியத்தின் மீது நடை பெறுகிற விவாதத்திலே கிராமத் தலைவர்கள் செய்கிற சில தகராறுகளை எடுத்துக் காட்ட நான் ஆசைப்படுகிறேன். குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்திலே திண்டி வனம் தாலூகா பகுதியில் ஒலக்கூர் என்ற ஊரில் ஒரு கிராமத் தலைவர் இருக்கிறார். அவர் 1370-ம் பசலிக்கு ஒரு பெண்ணிடம் நிலவரியாக 15 ரூபாய் வசூல் செய்து அந்த 15 ரூபாய்க்கு ரசீது கொடுக்காமல் 10 ரூபாய்க்கு மட்டுமே ரசீது கொடுத்து விட்டு மீதமுள்ள 5 ரூபாய்க்கு ரசீது அவர் கொடுக்க மறுத்திருக்கிறார். பின்பு தகராறு ஏற்பட்டதன் மேல் அந்த 5 ரூபாயை எந்த சர்வே நெம்பருக்கு வரவு வைக்க வேண்டுமோ அதற்கு வரவு வைக்காமல் வேறொரு சர்வே நம்பருக்கு வரவு வைத்திருக்கிறார். இதற்கெல்லாம் காரணம் கிராமத் தலைவர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப் படாததுதான் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 10-30 கிராமத் தலைவர்களை முழு நேர ஊழியர்களாக்கி அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட a.m. சம்பள விகிதத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியை பொறுத்த வரையில் சில கிராமங் களில் கிராமத் தலைவர்கள் சென்று நிலவரி வசூலிக்கும் நேரத்தில் பட்டா ஒன்றுக்கு இரண்டு அணா வாங்கக் கூடிய நிலையில் அப்பகுதி மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். இரண்டணா வாங்கப்படுகிறதே அல்லாமல் தனியாக அவர்களுக்குப் பட்டா செய்து தருவது இல்லை. ஜமாபந்தி அல்லது வேறு சில இடங்களிலோ அல்லது தாலூகா அலுவலகங்களிலோ சென்று கேட்டால் அவர்களுக்கு உடனடியாக கூட்டுப்பட்டாவிலிருந்து பிரித்துத் கொடுக்கப்படுவதில்லை. இதனை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் பரி சீலனை செய்து, கூட்டுப் பட்டா இருப்பதைப் பிரித்து தனி நபர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்பவர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கைக்கு ஆவன செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டை ஒரு தனி நிர்வாகமாக, தனி சமஸ் தானமாக இருந்து நிர்வாகம் நடந்து கொண்டிருந்தது. அங்கே எல்லா அலுவலகங்களும் இருக்கிற காரணத்தினால் அதைத் தனி மாவட்டமாக ஏற்படுத்த வேண்டுமென்று செட்டி நாட்டு ராஜா, திரு. முத்தையா செட்டியார், அவர்கள்கூட அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் புதுக்கோட்டை புறக்கணிக்கப்படுகிறது. புதுக்கோட்டையிலே கல்வி, ரிஜிஸ் ட்ரேஷன், போலீஸ் போன்ற. மாவட்டத்திற்கு எது எது தேவையோ, அதெல்லாம் இருந்தும் இன்றுவரையில் அது தனி மாவட்டமாக ஆக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கிற காரணத்தினால் நான் அவரை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டைப் பகுதியை அவர்கள் காலத்திலாவது தனி மாவட்டமாக ஆக்கி, புதுக்கோட்டையை மாவட்டத் தலைநகராக ஆக்கித் தர வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

புதுக்கோட்டை பகுதியில் வெட்டன்விடுதிக்கு பக்கத்தில் பொன்னன்
விடுதி என்ற ஊரில் மணியக்காரர் வேலை காலி இருந்தது. அதற்குப் பலர்
மனுப் போட்டார்கள். அப்போது ஒரு ஹரிஜனனும் மணியக்காரர் வேலைக்கு
மனுப் போட்டிருந்தார். அவருக்கு புதுக்கோட்டை உதவிக் கலெக்டர்
உத்திரவு போட்ட பிறகு, அந்த ஹரிசன் வேலையை ஏற்றுப் பார்த்து வந்
தார். அவ்வாறு வேலை பார்த்து வந்த நேரத்தில் புதுக்கோட்டை சப்
கலெக்டர் ஆபீஸ் சூப்பரிண்டெண்டண்ட் அந்த உத்திரவை ரத்து
செய்து, "உமக்குக் கொடுக்க முடியாது" என்று மறுத்து விட்டார்.
இதை நான் என் கூறுகிறேன் என்றால், உதவி கலெக்டருக்கு அதிக்
அதிகாரமா அல்லது சூப்பரிண்டெண்டெண்டுக்கு அதிக அதிகாரமா
என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதை நான் இம்மன்றத்தில்
கூறுகிறேன்.

அடுத்தபடியாக இன்னும் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்ட விரும்பு
கிறேன். எங்களுடைய பகுதியிலே காட்டாத்தி என்று ஒரு கிராமம் இருக்
கிறது. அந்த கிராமத்திற்குக் கணக்குப் பிள்ளை நியமிக்க வேண்டி
யிருந்தது. மாவட்ட ரெவின்யூ அதிகாரி நியமிக்கிற நேரத்திலே அங்கு
இருக்கிற தாலூகா தலைவர் அந்த உத்திரவை அவர்களிடத்தில் கொடுக்
காமல் நியமனத்தை நிறுத்தும் அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்.
அத்துடன் மாவட்ட ரெவின்யூ அதிகாரியிடமே மீண்டும் அப்பீல் போட்டு
பின்பு வேலை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை, நான் என்
குறிப்பிடுகிறேனென்றால், இதிலே மாவட்ட ரெவின்யூ அதிகாரிக்கு
அதிகாரம் அதிகமா அல்லது தாலூகா தலைமை அதிகாரிக்கு அதிகாரம்
அதிகமா என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் இதை நான்
கூறுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் அங்கே நடந்து கொண்டிருக்கின்
றன. இதை அமைச்சர் நன்றாகக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க
வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்திற்கு நாங்கள் செல்லும்
நேரத்தில் வினாக்களுக்குத் துணைக் கேள்விகள் எழுப்பினால், மாவட்டக்
கலெக்டர் அவர்கள் அவைகளை மறுத்து விடுகிறார், மாவட்ட கலெக்டரைப்
போய்ப் பார்க்க வேண்டுமானால், பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.
எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டிருக்
கிறது என்றால் மற்றவர்களுக்கு என்ன நிலை ஏற்படும் என்பதைப் பற்றி
நான் கூற வேண்டிய அவசியம் இல்லை என்று கூறிக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

அடுத்தபடியாக அங்கு நிலங்களை சர்வே செய்கிற நேரத்திலே, சில
தவறுகள் ஏற்படுகின்றன. இப்போது செட்டில்மெண்ட் செய்து பட்டாக்கள்
கொடுக்கப்பட்டிருக்கின்றன. பட்டாக்கள் கொடுக்கப்படும் நேரத்திலே, ஒருவ
ருக்கு 3, 4 ஏக்கர்கள் இருந்தால் கொடுக்கப்படும் பட்டாக்களில் 2½ ஏக்கர் தான்
இருக்கிறது. அதைக் குறித்து கேட்டால், சர்வே செய்கிற போது ஏற்படுகிற
தவறு, இதனைத் திருத்துகிறோம் என்று மேலதிகாரிகள் கூறுகிறார்கள்.
இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி மேலும் இந்த தவறுகள் செய்யாமல்
இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக புதுக்கோட்டைப் பகுதியினைத் தனி மாவட்டமாகச் செய்து,
புதுக்கோட்டையை மாவட்ட தலை நகரமாக ஆக்கி கொடுக்கவேண்டுமென்று
மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்
கொள்கிறேன்.

* **திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்:** தலைவர் அவர்களே,
இன்று ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மான்யக்
கோரிக்கைகளை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

"முறை அறிந்து அவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறை அறிந்து உயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன் காக்க"

என்று கம்பராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு அரசாட்சியானது
பேராசையைப் போக்கி, ஆனால் வாங்க வேண்டியவர்களிடத்தில் வரியை
வாங்கி, அவற்றைத் தொகுத்து, ஒன்றுமற்ற ஏழைகளுக்கு வளப்பத்தை
ஏற்படுத்தக்கூடிய பலவழி வகைகளைச் செய்வதுதான் அரசாட்சியின் கடமை
என்பது பாட்டின் பொருள்.

வள்ளுவப் பெருந்தகையார்—

"இயற்றலும் ஈட்டலும் தொகுத்தலும் தொகுத்த வகுத்தலும்
வல்லதரசு"

என்று கூறுகிறார். வருமானம் வரக்கூடிய வழி வகைகளைச் செய்து, அந்த
வாய்ப்புக்களிலேயிருந்து வரிகளை வாங்கி, அவற்றைத் தொகுத்து, அந்த
தொகுத்த நிதியை ஊதாரிச் செலவு செய்யாமல் நல்ல பல வழிகளிலே
செலவு செய்வது அரசாட்சியின் கடமை என்று வள்ளுவர் கூறுகிறார்.
அதுவும் அல்லாமல்—"ஆறில் ஒன்று கொற்றவர் கடமை கொள்ள"
என்று சேக்கிழாரும் கூறுகிறார். ஆக, இவைகளை எல்லாம் நாம் உற்று
நோக்கும்போது, நிலவரி என்று சொல்லக் கூடிய ஒரு வரி இன்றி
யமையாத ஒரு அம்சம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.
வரியில்லாமல் ஒரு அரசாட்சி நடத்துவது என்பது இறந்த காலத்திலும்,
நிகழ் காலத்திலும், எதிர் காலத்திலும் கூட கண்டிப்பாக முடியாது என்
பதை இந்த மன்றம் ஒப்புக்கொள்ளும். அதுவுமல்லாமல் போடுகிற வரி,
நிலத்திற்குப் போடுகிற வரி அதிகமா, குறைவா என்பது அது வேறு
விஷயம். அது நாம் கூடி ஆலோசித்துச் செய்யக்கூடிய ஒரு காரியம்
ஆனால் நிலத்திற்கு வரியே வேண்டாம் என்று சொல்லுவதை நான்
விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக, கண்டிப்பாக அதை நான்
மறுக்கிறேன். காரணம் என்ன என்றால், உதாரணமாக கிராமப் பகுதி
களில் கிராம தேவதைகள் என்று ஒவ்வொரு கிராம மத்தியப் பகுதி
யிலேயும் கோவில்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்; அந்தக்
கோவில்களிலே ஆண்டுக்கு ஒரு தரம் திருவிழா வரும்; அந்தத் திரு
விழாக்களுக்கு அந்தக் கிராம பகுதியில் வாழுகிற ஒரு ஏழையாக இருந்
தாலும் சரி, 4 அணு கொடுத்து விட்டால், அந்தக் கோவிலிலே தனக்கு
ஒரு பாத்தியம் இருப்பதாக அவர்கள் கருதுவது வழக்கம்; அந்த
நிலையை இப்போதும் பார்க்கலாம்; அதே மாதிரி, விவசாயப் பெருங்குடி
மக்கள் அரசாங்கத்திற்கு ஒரு வரியைக் கொடுத்துவிட்டால் அசாங்கத்
தினிடத்தில் தங்களுக்கு ஒரு பாத்தியம் இருக்கிறது, தங்களுக்கு ஒரு
பங்கு இருக்கிறது, அந்த வகையிலே, தன்மான உணர்ச்சியை அது காப்பாற்
றுகிறது என்று நினைக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின்
முன்பு விவசாயி என்ற முறையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
குறைவா, அதிகமா என்பது வேறு விஷயம். வரியே கூடாது என்பதை
எதிர்க்கின்ற முறையில் இதைக் கூறிக் கொள்கிறேன்.

அதற்குமேல் நிர்வாகத் துறை என்ற ஒரு அம்சம் இருக்கிறது. அந்த
நிர்வாகத் துறை அம்சத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், ஆங்கிலேய
அரசாட்சியால் நாம் அடைந்திருக்கிற நல்ல பலன் என்னவென்றால் இந்த
இலாகா அமைப்பு என்று நான் நினைக்கிறேன். அதிலே சிவப்பு நாடா
என்ற முறையில் மிதமாக இயங்குகிறது என்று குறிப்பிடப்படுகிறது.
அது உண்மைதான். இன்னும் கொஞ்சம் சூட்டிப்பாக, விரைவிலே
இயங்க வைப்பது அரசாங்கத்தின் கருத்தாகக் கூட இருக்கும் என்று
நினைக்கிறேன். அதற்காக இந்த இலாகா இயங்குகிற முறையை மாற்றி
அமைப்பது என்றால், இப்போது கல்வியிலே கூட வேறு ஒரு கருத்தைப்
புகுத்தலாம் என்று ஆரம்பித்து அந்தக் கல்வியினுடைய சீர்கேடான
நிலைமையைப் பிரத்யட்சத்தில் அனுபவிப்பது போல, யோசிக்காமல் சீர்
திருத்தம் செய்ய முனைந்தால் பாதகமாக விளையக் கூடிய ஆபத்தும் இருக்
கிறது என்பதை இந்த மன்றத்தின் முன்பு தெரிவித்துக் கொள்ள ஆசைப்
படுகிறேன். சுதந்திரம் கிடைத்த பின்பு இந்த இலாகாவின் நிர்வாகத்தில்
செய்த புதுமையான ஒன்று பஞ்சாயத்து யூனியனுடைய அமைப்பு.
அதாவது சர்க்கார் இலாகாவிற்கும், பொதுமக்களுடைய பிரதிநிதிகளுக்கும்
அன்றாடச் செயல் முறைகளிலே ஒரு இணக்கத்தை ஏற்படுத்தி அதன்
வழியாகக் கிராமப் பகுதிகளில் இருக்கிற உண்மையான நிலையை அனு
சரித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்க
இலாகாக்களையும், யூனியன்களையும் ஒன்றாக இணைத்து இப்போது நல்ல
முறையில் செயல்பட்டுக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். அந்த அளவிலே
கவனிக்கும்போது என்னுடைய சிறிய கருத்து என்னவென்றால்,
நாளாவட்டத்தில் தாலூகா ஆபீஸ்களையே ஒழித்துவிட்டு பஞ்சாயத்து
யூனியன்களிடம் அந்த கிஸ்தி வசூல் செய்யும் அதிகாரத்தையும் கொடுத்து

விட்டால் மிகவும் நல்ல அமைப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கொஞ்ச நாட்களுக்கு முன்பு நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நிலவரி வசூல் பூராவாகவும் பஞ்சாயத்து யூனியன்களுக்கே கொடுக்கப்படும் என்று. அப்படி வரும்போது தாலூகா ஆபீஸ் என்று ஒரு தனியான ஒரு நிறுவனம் இருக்க வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். சாதாரணமாக பஞ்சாயத்து யூனியன்கள் ரெவின்யூ அதிகாரம் இல்லாததால், அவர்களுக்கு ஒதுக்கியிருக்கும் சில புறம்போக்கு நிலங்களின் கிஸ்தி வசூல் செய்வதில் கூட மிக மிக கஷ்டமாக இருக்கிறது. இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு முழு அதிகாரத்தையும் கொடுப்பதுதான் நல்ல முறையாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்குக் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் திரு. கவுண்டர், வரி போடாமலே அரசை நடத்த முடியும் என்பதை எதிர்க்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், விவசாயிகள் பேரில், வரி போட்டுத்தான் ஆட்சி நடத்த வேண்டுமா? விவசாயிகள் பேரில் சுமத்தப்பட்டிருக்கும் வரி கடுமையான வரி, அநியாயமான வரி என்று காங்கிரஸ் கண்டித்தது. ஆனால், காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்தில் இருக்கும்போது எந்த விதமான மாறுதலையும் செய்யவில்லை. உலகத்தில் நாகரீக நாடுகளில் நில வரி கிடையாது. சாதாரணமாக 3,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரி என்றால், விவசாயிகளுக்கு 100 ரூபாய் வருமானம் ஆக இருந்தாலும் நிலவரி கொடுக்க வேண்டும். இது ஒரு பத்தாம் பசலிக் கொள்கை. இதை அடியோடு ஒழித்து விட வேண்டும். சாதாரணமாக நிலங்களுக்கு வரியானது திருவிதாங்கூரில் சர். ஸி. பி. போட்ட முறையில் இருக்க வேண்டும். அந்த முறையை நான் ஆதரிக்கிறேன். ஆனால், அந்த நல்ல முறை கன்யாகுமரியில் இப்பொழுது ஒழிக்கப்படுகிறது என்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம். இப்பொழுது சொல்கிறார் மத்திய மாஜி அமைச்சர் திரு. கிருஷ்ண மேனன்: ஐந்து ஏக்கருக்குள்ளே இருக்கும் நிலத்திற்கு வரி விலக்கு கொடுக்க வேண்டும் என்று. அப்படி வரி விலக்கு அளிக்கப்படுமேயானால், இந்திய தேசியநெருக்கடியில் அவர்கள் நல்ல முறையில் உணவு உற்பத்தி செய்ய முடியும். கமர்ஷியல் க்ராப்ஸ் மேல் வரி போட்டாலும் பரவாயில்லை. ஆனால், இந்த நில வரியைச் செலுத்திக் கொண்டு விவசாயிகள் ஈடுகொடுக்க முடியாமல் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். இந்த நாட்டிலே ஜனத்தொகையின் உயர்வு 30 சதவிகிதம். அதே சமயத்தில் உணவு உற்பத்தி 7 சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது. ஜனத்தொகையின் பெருக்கத்திற்கு ஏற்ப உற்பத்தி பெருகவில்லை. தேசிய வருமானமோ கடந்த இரண்டு வருஷங்களாக குறைந்து வருகிறது. இந்த சர்க்கார் போடும் வரிப்பளுவினால், விவசாயிகளின் வாங்கும் சக்தி குறைகிறது. வாங்கும் சக்தி குறைவதால், தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. தொழில்கள் பாதிக்கப்படுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் வருகிறது. அதன் காரணமாக எகனாமிக் டிப்ரெஷன் ஏற்படுகிறது. வர்த்தக மந்தம், வியாபார மந்தம் ஏற்படுவதால், கஷ்டமான சூழ்நிலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள். அவனுடையநஷ்டம் இன்றைக்குத் தெரியாது. இன்னும் சில வருஷங்களிலே அது பெருத்த அளவிலே தெரியும். 1929–30-ல் வியாபார மந்தம் ஏற்பட்ட காலத்தில் விவசாயிகள் தங்கத்தை வைத்து சமாளிக்க முடிந்தது. இன்றைக்கு தங்கத்திற்கு கட்டுப்பாடு வந்திருப்பதால், அந்த விதமாக கஷ்டத்தை அவர்கள் சமாளிக்க முடியாது. ஆகவே, இன்றைக்கு மக்கள் முக்கியமாக ஜீவ மரண போராட்டத்தில் இருக்கிறார்கள். விலைவாசியை நிர்ணயம் செய்வது ஒரு அரசாங்கத்தின் கடமை, மிக முக்கியமான கடமை. இன்றைக்கு அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், விலைவாசியை நிர்ணயிக்க ஒரு போர்டை வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக விலைவாசிகளை நிர்ணயிப்பது மத்திய சர்க்கார். நாங்கள் கேள்விகள் கேட்கும் காலத்தில், மாகாண அரசாங்கமே விலைவாசி ஏற்பாட்டைச் செய்யும் என்ற கருத்தினை சொல்லுகிறார்கள். ஆனால் ஒன்றும் நடைபெறுவதில்லை. இதனாலெல்லாம், விவசாயிகள் எந்த

ரெவின்யூ இலாகாவில் தாசில்தார் அளவிலே இந்த சிமெண்டு விநியோகம் செய்யும் பொறுப்பைக் கொடுத்திருப்பதை மாற்றிவிட்டால் நலம். இந்த இலாகாவுக்கு நல்ல பெயர் வருவதற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன். இந்தப் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் களுக்குக் கொடுத்துவிடலாம். அவர்கள் பொது ஜனங்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட தலைவர்களாதலால், ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலும், அது இலாகாவை பாதிக்காது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. சர்க்கார் இலாகாவிலுள்ள அதிகாரியின் பொறுப்பிலே அதை விநியோகம் செய்வதிலே ஏதாவது ஒரு சிறிய தவறு ஏற்பட்டு விட்டாலும்கூட, அதை பெரிய தவருக எடுத்து விளம்பரம் செய்யக்கூடிய அரசியல் கட்சிகள் இருப்பதன் காரணமாக, பஞ்சாயத்து யூனியனுக்கே இந்தப் பொறுப்பைக் கொடுத்து விடுவது நலம் என்று கருதுகிறேன். இதைப் பரிசீலனை செய்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவின்யூ புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து விட்டோம் என்று நாம் எழுதிவைத்திருக்கிறோம். ஆனல், கொடுத்துவிட்டோமோ இல்லையோ என்பதைப் பற்றி அதிகார பூர்வமாக அவர்களுக்கு ஒரு அறிக்கையும் இல்லை. எதற்கெடுத்தாலும் அவர்கள் ரெவின்யூ இலாகாவைக் கேட்டுத்தான் செய்யவேண்டிய நிலைமை ஏற்படு கிறது. இந்த நிலைமையை மாற்றி அமைத்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு எந்தப் புறம்போக்கு நிலங்களைக் கொடுத்து விட்டோம் என்பது பற்றி தாலூகா மாப்பில் அதைக் காண்பித்து, ரெவின்யூ இலாகாவிலிருந்து ஒரு மாப் தயார் செய்து பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்துவிடலாம். புறம் போக்கு நிலங்களுக்காக விண்ணப்பங்கள் வந்தாலும், பஞ்சாயத்து யூனி யன்கள் அவைகளைக் கவனிப்பதற்கு அது ஏதுவாக இருக்கும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனின்யனுக்கும் ஒரு மாப் ரெவின்யூ இலாகா தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எம். பி. முத்துகருப்பண்ணசாமி கவுண்டர்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக் டிருக்கிற ரெவின்யூ மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நிலவரி வசூல் ஆவதைப் பொறுத்துத்தான் இந்த அரசாங்கம் நடக்கவேண்டும். இந்த மன்றத்தில் சில பேர்கள் நிலவரி வேண்டாம் என்று பேசினார்கள். சில பேர்கள் வேண்டும் என்று பேசினார்கள் என்னுடைய அபிப்பிராயத்தில் தோன்றுவது என்னவென்றால் நில வரி இல்லாமல் நாம் அரசாங்கத்தை நடத்தமுடியாது. நில வரி இருந்துதான் தீரவேண்டும். ஆனல் இந்த அளவுக்குப் இருந்தால் மட்டும் போதும். இதற்கு மேல் நிலவரியை இன்னும் அதிகப்படுத்திக் கொண்டே போனல் விவசாயிகளுக்கு அதிக கஷ்டம் ஏற்படும் என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகளுக்கு நமது அரசாங்கம் நல்ல முறையில் சலுகைகளைச் செய்து கொண்டு வருகிறது. அதை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனல், அந்தச் சலுகைகள் உடனுக்கு உடன் தேவையான பொழுது கிடைப்பதில்லை. கிணறு வெட்டுவதற்கு மான்யம் கொடுப்பது போன்று விவசாயிகளுக்கு பல நன்மைகள் செய்து வந்தாலும்கூட, இன்னும் விவசாயிகள் நாளடைவிலே 4, 5, ஆண்டுகளுக்கு மேலும் விவசாயத்தை நல்ல முறையிலே சீர்படுத்தி, அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. அதனல் வருஷா வருஷம் நில வரியை அதிகரித்துக் கொண்டே போனல், விவசாயிகள் மிகவும் பாதிக்கப் படுவார்கள், கஷ்டப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரி வித்துக்கொள்கிறேன்.

மற்றும் வேண்டிய சௌகர்யமும் இருக்கிறது. அதோடுகூட விடுமுறை
நாட்களும் இருக்கிறது. ஆனால், கிராம உத்தியோகஸ்தர்களுக்கு விடுமுறை
நாட்கள் என்பதே கிடையாது. அடிக்கடி மேலதிகாரிகளால் நிர்ப்பந்தப்
படுத்தப்படுகிறார்கள் சாதாரணமாக என்னுடைய தொகுதியை எடுத்துக்
கொண்டால், 8 மைல், 10 மைல் தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்
கிறது கிராம அதிகாரிகள். பஸ் போக்குவரத்து கிடையாது. மிகவும்
சிரமப்படுகிறார்கள். நடந்தே போகவேண்டியிருக்கிறது. இதை நான்
என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன். அல்லது ஒரு வாடகை வண்டி
வைத்துக் கொண்டு போகலாம் என்றால் அதுவும் சிரமமாக இருக்கிறது.
வாடகை வண்டிக்கு ரூபாய் 5-க்கு குறைவில்லாமல் கொடுக்க வேண்டி
இருக்கிறது. இந்தப் பணத்திற்கு அவர்கள் என்ன வழி செய்வார்கள்?
கிராம ஜனங்களைப் பிடித்துக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகளை
செய்து கொடுப்பதற்கு சாமர்த்தியமான முறைகளை கையாளுகிறார்கள்.
இம்மாதிரி முறைகளைக் கையாண்டு போக்குவரத்து வசதி செய்துகொண்டு
மறை முகமாக ஊதியத்தைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது.
ஆகவே, அவர்களுக்கு ரூபாய் 100-க்கு குறைவில்லாமல் சம்பளம் கொடுக்க
வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படு
கிறேன்.

அதோடு தாலுகா ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ் ஆகிய இடங்களுக்கு விவ
சாயிகள் போவது என்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனக்கு
முன்பு பேசிய அங்கத்தினர் திரு மாதா கவுடர் அவர்கள் சொன்னது
போல, சிமெண்டு பெர்மிட்டுக்கு தாசில்தார் ஆபீசுக்குப் போனால், தாசில்
தார் அங்கே இல்லாவிட்டால் காலதாமதம் ஆகிறது. ஒருவர் குறைந்தது
அதற்காக நான்கு தடவையாவது போகவேண்டிய நிலைமை ஏற்படு
10-00 a.m. கிறது. அவரிடம் போய் சிமெண்ட் பர்மிட் வாங்கிக் கொண்டு வருவது
என்றால் ரொம்பவும் கஷ்டமான நிலைமையாக இருக்கிறது. அதனால்
கிராமமக்கள் எல்லாம் அரசாங்கத்தின்மீது குறை சொல்ல ஆரம்பித்து
விட்டார்கள். ஆகவே பஞ்சாயத்து யூனியன்மூலம் இந்த சிமெண்ட்
மூட்டைகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், மிகவும் நலமாக இருக்கும்.

விவசாயிகளுக்கு பஞ்சாயத்து யூனியன்மூலமாக பம்பு செட்டுகள்
கொடுத்து வருகிறார்கள். அப்படி கொடுக்கும் பொழுது 3 வருஷ காலத்
திற்குள் தொகையை கட்ட வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.
இதை 10 வருஷமாக நீடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுப் பட்டாக் கொடுப்பதற்காக ஒருவர் விண்ணப்பித்துக் கொண்டால்,
4 அல்லது 5 வருஷங்கள் ஆகின்றன. ஜமாபந்திக் காலத்தில் மனுக்கள்
கொடுத்தால், பிறகு கவனிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். கூட்டுப்
பட்டாக் கொடுத்தால்தான் கடன் வாங்குதற்கு வசதியாக இருக்கும்.
கூடிய வரையில் சீக்கிரமாக கூட்டுப்பாட்டாக்கள் வழங்குவதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்
துக் கொள்கிறேன்.

***திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : தலைவர் அவர்களே, இன்று விவாதத்
திற்கு வந்திருக்கும் இரண்டு மானியங்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்
திருப்பது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. இந்த இரண்டு
மானியங்களும் முக்கியமான மானியங்களாக இருப்பதால், அவற்றின்மீது
கருத்துக்களைத் தெளிவுபடச் சொல்ல வேண்டியிருக்கிறது. இரண்டையும்
ஒன்றாகச் சேர்த்துவிட்ட காரணத்தால், எதைச் சொல்லுவது, எதை
விடுவது என்றே புரியவில்லை. இருந்தாலும் தொட்டுப் பார்ப்பது போல்,
ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே, நிலவரி கட்டிக்கொண்டு வந்த விவசாயிகள், இன்று
சட்டமன்ற உறுப்பினர் தங்களது தொகுதிகளைப் போய் பார்க்கின்ற நேரத்
திலே, மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் மகிழ்ச்சி
யோடு நிலவரி கொடுக்கிறார்கள் என்று இங்கே சொன்னதை நான் ஒப்புக்
கொள்ள முடியாது. "காங்கிரஸ்காரர்கள் வரி போட்டால், நீங்களாவது
அதைத் தடுப்பீர்கள் என்று எதிர்பார்த்தோம், நீங்களும் விட்டுவிட்டீர்
களே" என்று எங்களைப் பார்த்து மக்கள் கேட்கிறார்கள். மெஜாரிட்டி

பார்டியாக காங்கிரஸ் இருப்பதால், மைனாரிட்டி பார்ட்டியாகிய நாங்கள் ஒன்
றும் செய்யமுடியாத நிலையில் இருக்கிறது என்கிற சமாதானத்தைத் தவிர
வேறொன்றும் எங்களால் சொல்ல முடியவில்லை.

தென் ஆற்காடு மாவட்டத்தில், திண்டிவனம் தாலுகா ஒரு பாலைவன
மாக காட்சியளிக்கிறது. அங்கே முக்கியமான விவசாயம் மணிலாக்கொட்
டைப் பயிர். பருவ மழை தவறி விட்டதால் அந்தப் பயிர் நாசமாகி
விட்டது. சர்க்கார் தீர்வையைக் கட்டுவதற்கு வழியில்லாத நிலைமை ஏற்
பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால் வரி கட்டுவதற்குகூட முடியாமல்
வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வானூர்ப் பகுதியிலுள்ள ஏரி
களில் தண்ணீர் இல்லை. விட்ட நாற்றுகள் நாற்றங்கால் வளராமலேயே
இருக்கின்றன. நஞ்சைப் பயிர், புஞ்சைப் பயிர், இரண்டுமே கெட்டு
விட்டன. இந்த நேரத்தில் வரியை அதிகப்படுத்தி இருக்கிற காரணத்தால்,
விவசாயிகள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெந்த புண்ணில்
வேல் எறிவதுபோல சீனாக்காரர்கள் வேறு பயம் காட்டி வருகிறார்கள்
அதற்கு ஒருபுறம் நிதி திரட்டுகிறார்கள். யுத்த நிதிக்காக பணம் கொடுக்க
வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் வரியையும் உயர்த்
தியிருக்கிறார்கள். "நாங்கள் எதை என்று கொடுப்பது, எங்களை பக்கத்தி
லிருக்கிற கடலில் தூக்கிப் போட்டுவிட்டாலும் நலம்" என்று விவசாயி
மக்கள் சொல்லுகிறார்கள். திண்டிவனம் தாலுகாவைப் பொறுத்தவரை
யில் மணிலாக் கொட்டைப் பயிர் நாசமடைந்து விட்டது. குறிப்பிட்ட சில
கிராமங்களிலே நெல் பயிரும் பூச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏரி
யிலும் தண்ணீர் இல்லாததால் பயிர் எல்லாம் கெட்டுவிட்டது. இந்த நிலை
யில், நாங்கள் சொல்லுவதை நம்பினாலும், நம்பாவிட்டாலும், அங்குள்ள
அதிகாரிகளைக் கலந்து ஜரிவஜா செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் சொல்லுவதற்காகவே ஆட்சியாளர்
ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்களாகவே பார்த்து ஒரு நல்ல காரியத்
தைச் செய்தால், உண்மையிலேயே என்னுடைய தொகுதியிலுள்ள மக்கள்
போற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள்
சொல்ல விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த
வரையில், மாவட்ட நிர்வாகம் நல்ல முறையில்தான் நடக்கிறது. ஆனால்,
கலெக்டர் அவர்களுக்குக் கீழே இருக்கிற ஒரு சில உத்தியோகஸ்தர்கள்,
பழைய நிலைமையை மனதில் கொண்டு, துரிதமாக வேலைகளைச் செய்
யாமல், தயக்கம் காட்டுகிறார்கள். நாங்கள் நெருங்கிக் கேட்கும்பொழுது,
உடனடியாகச் செய்துவிடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நாங்
கள் வந்த பிறகு, அவர்கள் இஷ்டம் போல் தாமதம் செய்கிறார்கள்.
பொது மக்கள் அவர்களை அணுகிக் கேட்க முடியாத நிலையில் இருக்கிறார்
கள். இப்பொழுது பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையில் நடக்கிறது
அதிலும், சில குறைகள் இருக்கின்றன. அதை மட்டும் சொல்ல விரும்பு
கிறேன். பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாகம் வந்த பிற்பாடு, பொது மக்கள்
ஓரளவுக்கு நெருங்கி குறுகிய காலத்தில் வேலைகளைச் செய்யக் கூடிய
நிலைமை இருக்கிறது. இப்பொழுது சிறு நீர்ப்பாசன வேலையையும் பஞ்சா
யத்திலே சேர்த்துவிட்டார்கள். அப்படிச் சேர்த்துவிட்டால் மட்டும் போதாது
போதுமான தொகை ஒதுக்காத காரணத்தினாலே, திண்டிவனம் தாலுகா
வில் எதிர்பார்க்கிற அளவுக்கு குளங்கள் வெட்டவோ, ஏரிகள் தூர்
எடுக்கவோ, அல்லது புதுக் கிணறுகள் வெட்டுவதற்கோ வாய்ப்பும், வசதி
யும் இல்லாமல் இருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறை
வேற்றி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் இருந்தபோதி
லும், நீர்ப்பாசனத்திற்காக கோடிக்கணக்கான பணத்தை நமது சர்க்கார்
செலவிட்ட போதிலும், கல் தோன்றி மண் தோன்றி மனிதன் தோன்றிய
அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை திண்டிவனம் தாலுகா
பாலைவனமாகவே காட்சியளிக்கிறது. ஆகவே திண்டிவனம் தாலு
காவைப் பொறுத்தவரையில், சிறிய பாசனத் திட்டங்களுக்காக அதிக
தொகை ஒதுக்கி, சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளு
கிறேன்.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய ரெவின்யூ இலாகாவானது மற்ற எல்லா இலாகாக்களுக்கும் தந்தையாகவும், தாயாகவும் விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. நம்முடைய நாட்டிலே பல புதிய திட்டங்களை நிறைவேற்றுகின்ற நிலைமையில், இந்த ரெவின்யூ இலாகாவினுடைய துணையைப் பெற்றுத் தான் பல காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. குறிப்பாக சொல்லவேண்டுமானால், 10, 15 வருஷங்களுக்கு முன்பு இருந்த திட்டங்களுக்கும், இப்பொழுது நிறைவேற்றப்படுகிற திட்டங்களுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. இப்பொழுது அதிகமான திட்டங்களைப் போட்டு கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்கிறோம். கிராமப் புறங்களிலே இந்த மாதிரி திட்டங்களை நிறைவேற்றும்பொழுது, பல அதிகாரிகள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஒத்தாசையாக இருப்பவர்கள் ரெவின்யூ அதிகாரிகள் என்று சொன்னால் மிகையாகாது. அப்படிப்பட்ட ரெவின்யூ இலாகாவிலே கிராமாந்திர அடிப்படையில் நிர்வாகத் துறையில் முக்கியமானவர்கள் மணியக்காரர், கர்ணம், தலையாரி, வெட்டியான் — நீர்க்கட்டிகள் என்றும் சொல்லுகிறார்கள்—போன்றவர்கள். அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இவர்களுக்கு பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இவர்கள் வெள்ளைக்காரர்கள் காலத்தில் உத்தியோகஸ்தர்களை எல்லாம் பார்த்து பேசுவதை ஒரு மதிப்பு எண்ணி, சேவை செய்து வந்தார்கள். இப்பொழுது நம் நாட்டிலே பல மாறுதல்கள் ஏற்பட்டு ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. பஞ்சாயத்து ஆட்சி நடந்து வருகிறது. பஞ்சாயத்து தலைவராக யார் வேண்டுமானாலும் இப்பொழுது வரக்கூடிய நிலைமை இருக்கிறது.

அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் நாங்கள் செய்ய வேண்டி இருக்கிறதே என்று வேதனைப்படுகிறார்கள். கலெக்டர் உத்தரவு போட்டார்கள், செய்து வந்தோம், இப்போது பஞ்சாயத்து போர்டு தலைவர் இந்தப் பணத்தை எல்லாம் வசூல் செய்து கொடுங்கள் என்று சொல்லுகிறார்களே என்று வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னிடத்தில் பல மணியக்காரர்கள், லீவு போட்டுவிட்டு நாங்கள் வேலையைகூட விட்டு விடுவோம் என்று சொன்னார்கள். அந்த அளவு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே துரிதமாக காரியங்களை செய்கின்ற முறையை நமது அமைச்சர்கள் கையாண்டு வருகிறார்கள். பல காரியங்களை துரிதமாக செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். மாவட்ட ரீதியிலே அவர்கள் வருகின்ற போது எல்லா அதிகாரிகளையும் கூட, பொதுமக்களுடைய பிரதிநிதிகளையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரத்திலே கூடி பல குறைகளையும் பிரச்சினைகளையும் பேசித் தீர்க்கிறார்கள். அந்த முறையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்கூட பாராட்டி இருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற இந்தக் காரியத்தை மற்ற அமைச்சர்களும் செய்ய வேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளச் சலுகை, கல்விச் சலுகை மருத்துவச் சலுகை, பிரயாணப்படிச் சலுகை எல்லாம் கொடுக்கிறார்கள். அதற்காக அவர்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள்.

மதிப்பிற்குரிய சுயேச்சை அங்கத்தினர் திரு. வீரப்ப செட்டியார் குறிப்பிட்டது போல—அவர்களும் மணியக்காரராக இருந்திருக்கிறார்கள்—கிராம உத்தியோகஸ்தர்களுடைய சார்பாக மேல் மன்றத்திலே ஒரு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு வழிவகை மென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், மத்திய சர்க்காரில் பணி புரிகின்ற உத்தியோகஸ்தர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்கப்படு கிறது. அவர்கள் ரூ. 300, ரூ. 400 என்று வாங்குகிறார்கள். அதே சமயத்தில் இவர்கள் ரூ. 100, ரூ. 200 என்று பெறுகிறார்கள். ஒரே ஊரில் இருக்கிறோம், ஒரே கடையில் சாமான்கள் வாங்குகிறோம், என் எங்களுக்கு இவ்வளவு வித்தியாசம் என்று வேதனைப்படுகிறார்கள். ஆகவே இந்த மாறுபாட்டைப் போக்கவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாலுகாவிலே இப்போது தாசில்தார்கள் ரொம்பவும் முக்கியமான உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். யார் யாருக்கோ எல்லாம் ஜீப்பு கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த தாசில்தார்களுக்கு மட்டும் ஜீப்பு கிடையாது. அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிடம் பிச்சை கேட்டு ஜீப்பு வாங்க வேண் டிய நிலையில் இருக்கிறார்கள். என் இந்த நிலையில் அவர்களை வைக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். தாசில்தார்களுக்கு ஜீப்புகள் அவசி யம் கொடுக்கவேண்டும். மேலும் அவர்களை கெஜெட்டெட் உத்தியோகஸ் தர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. வி. அருணாசலம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்று ரெவின்யூ இலாகாவானது விவசாயிகளுக்குப் பெரிதும் நன்மை அளிக்கக்கூடிய இலாகாவாகும். விவசாயிகளிடத்திலே மிகவும் நல்ல முறையில் நடந்துக்கொண்டு இருக்கிறார்கள். விவசாயிகள் தங்களுடைய நலன்களுக்கு இந்த இலாகாவை நம்பிக்கொண்டு இருப்ப தால் அரசாங்கம் அவர்களுடைய நலனிலே முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் தங்களுடைய அன் ருட வேலைகளை நடத்துவதற்கு இந்த ரெவின்யூ இலாகாவை நம்பி வாழ்ந்து வருகிற நிலையில் இருப்பதால் விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை மனுவின் மூலம் இந்த ரெவின்யூ இலாகாவிற்கு அனுப்பினால், அவர்கள் அதற்கான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற காலம் அதிகமாக இருக்கிறது. அவ்விதம் அனுப்பும் மனுக்களின்மீது இந்த சர்க்கார் சீக்கிரமாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கர்ணீகர் களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு வேலை அதிகமாகவே இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் வரி, இன்னும் இப்படிப் போன்ற பிற வரிகளை இவர்கள் வசூல் செய்ய வேண்டிய நிலைமை இருக்கின்ற காரணத்தால் சம்பள உயர்வு கொடுத்து, மாவட்ட அளவிலே மாற்றுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். செட்டில்மெண்ட் ஆன கிராமங்களுடன் இன்னும் பல கிராமங்கள் சேர்ந்து பெரிய வட்டங்களாக இருக்கின்றன. வசூல் செய்வதற்கு கஷ்டமான நிலையில் இருக்கின்றன. ஆகவே அந்தக் கிராமங் களை 10 ஆயிரம் ரூபாய் அளவிலுள்ள வட்டமாக பிரித்துக் கொடுத்தால் அவர்கள் தங்கள் வேலைகளை நல்ல முறையிலே கவனிப்பதற்கும், இன்னும் கிராமத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி அளிக்க முடியும் என்று கூற விரும்புகிறேன்.

போன்றவற்றை வாங்க முடிவதில்லை. கடன் வாங்குவதில் பல தொந்தரவுகள் இருப்பதால் தனிப்பட்டாக்களாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பேராவூருணியில் ஒரு சப்தாலூகா ஆபீசும் இருக்கிறது. அதை ஒரு தனித் தாலூகாவாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நூறு கிராமங்களுக்கு மேல் இருக்கிற இந்த சப்தாலூகாவிலுள்ள விவசாயிகளும், மற்றவர்களும் பட்டுக்கோட்டைக்கும், மற்ற இடங்களுக்கும் செல்லவேண்டி இருக்கின்ற காரணத்தால் இந்த சப்தாலூகாவை ஒரு தனித் தாலூக்காவாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர் :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக நமது ஜில்லா பரிபாலனத்திலே அடிப்படையாக இருப்பவர்கள், அதாவது பவுண்டேஷன் என்று சொல்லுவார்களே—கிராம உத்தியோகஸ்தர்கள்தான். கலெக்டர் அவர்கள் எல்லோருக்கும் மேற்பார்வையாளராக இருந்து நிர்வாகம் நடந்து வருகிறது. ஆனால் இன்று நடைமுறையை எடுத்துக்கொண்டால் கிராம அதிகாரிகளை நாம் ஒழுங்காகப் பார்த்துக் கொள்கிறோமா, சம்பளம் கொடுக்கிறோமா என்று பார்த்தால், பல இடங்களிலே, மலைப்பிராந்தியங்களிலே குறிப்பாக நீலகிரி ஜில்லாவிலே அவர்களுக்கு பெரிய அதிருப்தி ஏற்பட்டு இருக்கிறது.

இப்போது இவர்களை பார்ட்-டைம் அதிகாரிகள் என்று சொல்லுகிறோம். இவர்கள் ஏறக்குறைய 365 நாட்களுக்கும் ஒவ்வொரு வீடாக போய் ஹவுஸ் டாக்ஸ் வசூலிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். அவர்களை முழுநேர ஊழியர்களாக்க அரசாங்கம் ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 25 ரூபாய், 20 ரூபாய் அவர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு அவர்களிடம் எப்படி உண்மையான வேலையை எதிர்பார்க்க முடியும் என்று ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்குப் பிறகு என்னுடைய பிராந்தியத்திலே கூடலூர் பிராந்தியம் இருக்கிறது. போன பட்ஜெட் பேச்சிலே குறிப்பிட்டு இருக்கிறேன். அங்கு ஜென்மி ஸிஸ்டம் இருக்கிறது. அந்த ஜென்மி முறையை ஒழிப்பதற்கு அதிகாரிகளை நியமித்து இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ரிப்போர்ட்டை அரசாங்கத்துக்கு அனுப்பிவிட்டதாக அறிகிறேன். அந்த ஜென்மி ஸிஸ்டத்தை ஒழிப்பதற்காகவென்று தனியாக ஒரு சட்டம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் ஜில்லாவில் அனேகமாக எல்லாப்பட்டாக்களும் கூட்டுப்பட்டாக்களாகத்தான் இருக்கின்றன. ஒரு பட்டாவில் 50, 60 பேர்கள் முதல் 150 பேர்கள் வரையிலும் அடங்கியிருக்கும். இதனால், சர்க்கார் அளிக்கும் எந்த விதமான சலுகைகளையும் அங்குள்ளவர்கள் அனுபவிக்க முடியாத நிலை இருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கடன் வாங்குவதற்கும் இது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, எங்களுடைய நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் உடனடியாக ரீ-செட்டில்மெண்ட் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. நீலகிரி ஜில்லாவில் ரீ-செட்டில்மெண்ட் கொண்டுவந்து, எல்லாப் பட்டாக்களையும் தனி பட்டாக்களாக மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீலகிரி ஜில்லாவிலுள்ள கெஜட் பதிவில்லாதவர்களைக் குறித்து ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் மூன்று ரூபாய்தான் வீட்டு வாடகை அலவன்ஸ் அங்கே கொடுக்கப்படுகிறது. ஆனால், உதகை முனிசிபாலிடியில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு மாதம் 12 ரூபாய் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஒரே இடத்தில் முனிசிபாலிடியில் உள்ளவர்களுக்கு 12 ரூபாய் வீதமும், ரெவின்யூ, மற்ற இலாகாக்களில் வேலை செய்கிறவர்களுக்கு 3 ரூபாய் வீதமும் கொடுப்பது நியாயமா என்பதை அமைச்சர் அவர்கள் யோசனை செய்து பார்க்கவேண்டும்.

எங்கள் நீலகிரி ஜில்லாவில் லேட் ப்ளைட் வியாதியினால் உருளைக் கிழங்குப் பயிர் சேதம் அடைந்திருக்கிறது. அங்குள்ள மக்கள் அவதிப் படுகிறார்கள். பஞ்ச நிலை நீலகிரியில் நிலவுகிறது என்று அமைச்சர் அவர்களுக்கு நான் இந்த மன்றத்தில் பல தடவை கூறியிருக்கிறேன். டைதேன் மருந்து அமெரிக்காவிலிருந்து வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு அன்னியச் செலாவணி தேவைப்படுகிறது. இவற்றையெல்லாம் உடனடியாகக் கவனித்து, நீலகிரி ஜில்லாவுக்கு 200 டன் டைதேன் மருந்து வாங்கிக் கொடுக்க என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை ஆராய்ந்து இந்த விஷயத்தில் கூடியவரையில் அவசரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

* **திரு. ஆ. துரை அரசன் :** தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கைமீது எங்களுடைய கட்சிக்காரர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாவட்ட வட்டார நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரைக்கும் இங்கே பேசிய கனம் உறுப்பினர்கள் பலர், பல நிலைமைகளைச் சுட்டிக்காட்டினார்கள். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், மாவட்டத்திலுள்ள எல்லா அதிகாரிகளும் சிறப்பான முறையில் பணியாற்றுகிறார்கள் என்பதைக் குறித்து இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் மூலமாக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வட்டாரங்களைப் பொறுத்த வரையில், ஒரு சில அதிகாரிகள் நடந்து கொள்ளும் முறைகளைப் பார்த்தால், பொது மக்களை அவர்கள் மிகவும் மரியாதைக் குறைவான முறையில் நடத்துகிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இவைகளை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம்—பொது மக்களிடத்தில் நல்ல மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்ற விளக்கம் இங்கே தரப்பட்டிருக்கிறது. ஆனால், எங்களுடைய வட்டார ஆட்சித் தலைவர் சாதாரணமாக அலுவலகத்திற்கு வருகின்ற எந்த ஒரு குடிமகனிடமும் மரியாதையாக நடந்துகொள்வதே இல்லை. இது சம்பந்தமாக எல்லாத் தரப்பட்ட அதிகாரிகளுக்கும் புகார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனாலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இனிமேலாவது இதுபோன்ற குறைபாடு நிகழாமல் கண்காணித்துக் கொள்ளவேண்டுமென்று நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த வரையில் இந்த விள்க்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கிருக்கும் வேலைப் பளுவைப்பற்றியும் இங்கே பலர் எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன். பெரிய வட்டங்களாக இருப்பதைச் சிறு சிறு வட்டங்களாகப் பிரித்து வேலைப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். கிராம உத்தியோகஸ்தர்களுடைய குழந்தைகளுக்கு எட்டாவது வரை இலவசமாகப் படிப்பதற்காக கல்விச் சலுகை இருப்பதை கல்லூரிப் படிப்பு வரையிலும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வசூலிக்கச் செல்லும்போது, சில கிராம அதிகாரிகள் பல இடங்களில் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அவைகளையெல்லாம் கண்காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[திரு. ஆ. துரை அரசன்] [25th March 1963

கிராமதிகாரிகளின் குழந்தைகளுக்குள்ள படிப்புக்கு அவர்களுடைய ஆண்டு வருமானம் பொதுவாக 1,500 ரூபாய் என்று உயர்த்தியிருப்பதை இரண்டாயிரம் ரூபாய் வரை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும், எங்களுடைய வட்டத்திலிருக்கும் கிராமங்களில் நூற்றுக்கு 75 கிராமங்கள் சாதாரணமாக ஜமீன் கிராமங்களாக இருந்தன. ஜமீன் ஒழிக்கப் படுவதாகச் சொல்லப்பட்ட நேரத்தில் விவசாயிகளுக்கிருந்த மகிழ்ச்சி இன்றைய தினம் இல்லை. காரணம், ஜமீன்தார்கள், இனாம்தார்கள் இப்படிப்பட்ட வர்களின்கீழ் இருந்த விவசாய மக்கள் மிகவும் கசக்கிப் பிழியப்பட்டார்கள்—ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், ரெண்ட் ரிடக்ஷன் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, சாதாரணமாக எக்கர் ஒன்றுக்கு மூன்று, நான்கு ரூபாய் வரி செலுத்திவந்த விவசாயிகள் இன்றையதினம் எக்க ருக்கு 10, 20 ரூபாய் வரி செலுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறார் கள் என்றால், விவசாயிகளின் வாழ்க்கையில் எப்படி மகிழ்ச்சியை எதிர் பார்க்க முடியும். இதற்குக் காரணம், ஜமீன்தார்களுக்குத் தரப்படும் நஷ்டஈட்டுத் தொகை அந்த விவசாயிகளுடைய தலையில் வரியாகச் சுமத் தப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நஷ்டஈடு ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட நேரத்தில், (அட்வான்ஸ் காம்பென் ஸேஷன்) அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்று சொல்லி, இப்பொழுது அந்தத் தொகையை திருப்பி வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். இது நிர்வாகத்திலிருக்கும் ஊழலைக் காட்டுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

எங்களுடைய வட்டத்தில் இன்னும் மாஜி இராணுவத்தினர் ஏராள மானவர்கள் மனுப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலங் களைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஹரிஜன நல இலாகாவில் வட்டத்திற்கு ஒரு தாசில்தாரை நியமிக்க வேண்டும். ஆவுடையார் கோவில் வட்டத்திலிருக்கும் கிராமங்களிலுள்ள ஏரிகளையெல்லாம் அரசாங்கம் மேற்கொண்டு, மராமத்து செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புதுக்கோட்டைப் பகுதியில் பருவ மழை தவறியதன் காரணமாகவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சில இடங்களில் பருவ மழை தவறியதன் காரணமாக 1962–63-ம் ஆண்டுக் கடன் வசூலை ஒத்திவைத்ததுபோல், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை தாலுகாக்களுக்கும் சலுகை காட்டாதது ஏன் என அறிய விரும்புகிறேன்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 170-க்கும் மேற்பட்ட கோயில்களை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. ஐம்பதாண்டுகளாக அந்தக் கோயில் களில் பணியாற்றியவர்கள் இன்றையதினம் வேலையிலிருந்து நீக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு நிவாரணம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக நூலைக் கிணறுகள் திட்டம், வடி முனைக் கிணறுகள் திட்டம், குழாய்க் கிணறுகள் திட்டம் ஆகியவற்றையும் அறந்தாங்கி வட்டத்திற்கு விஸ்தரிக்க வேண்டும். ஐந்து ஆண்டுகள், ஏழு ஆண்டுகள் தவணையில் கடனைத் திருப்பித் தரவேண்டுமென்று இருப்பதை மாற்றி, பத்தாண்டுத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பால் பவுடர் விநியோகம் ஒழுங்காக நடக்காமல் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. அதைக் கண்காணிக்கவேண்டும்.

25th March 1963] [திருமதி எ. எஸ். பொன்னம்மாள்]

மான விஷயம் என்றும் குறிப்பிட்டு, விவசாய மக்களைப் பார்த்துப் பரிதாபப்படக்கூடியவர்கள் போன்று சில கனம் அங்கத்தினர்கள் இங்கே பேசினார்கள். விவசாய மக்கள் இந்தச் சிறிய வரியைக் கொடுக்க ஒரு பொழுதும் அஞ்சுவது கிடையாது. வரி கொடுக்கத் தயாராயிருக்கிறார் கள். சிறு துளி பெரு வெள்ளம் என்று சொல்லுவது போல, நாட்டில் 80 முதல் 85 சத விகிதம் உள்ள விவசாய மக்களிடம் சிறிது வரிப்பணம் வாங்காமலிருப்போமானால், குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய முன் னேற்றத்தை நாம் அடைந்திருக்க முடியாது என்பதும் கனம் அங்கத் தினர்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும், ஏதோ விவசாயிகளுக்கு வரி போட்டு, பளுவைச் சுமத்துகிறோம் என்று சொல்வது அவர்களுக்கே ஒரு கெடுதல் செய்யக்கூடிய முறையிலே நான் பேசப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு கனம் அங்கத்தினர் பேசும்போது, "இராமநாதபுரம் மாவட்டத்தில் வரிப் பாக்கி இருப்பதற்குக் காரணம் என்ன? அதற்கு அரசாங்கத்தின் குறைதான்" என்று சொன்னார்கள். இங்கே வந்து, வரி வசூல் பண்ணாமல் இருப்பதற்குக் காரணம் கேட்கிறார்கள். ஆனால், அங்கே சென்று, ஏழை விவசாய மக்களைப் பார்த்து, "பாட்டாளி விவசாய மக்களே! நீங்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் இந்த வரியைக் கொடுக்காதீர்கள்" என்று சில இடங்களில் எதிர்க் கட்சியைச் சார்ந்த சிலர் துஷ்பிரசாரம் செய்ததை நாங்களே கண்ணாரப் பார்த்திருக் கிறோம். விவசாயிகளைப் பார்த்து, வரி "கொடுக்காதீர்கள்" என்று சொல்லி விட்டு, இங்கே வந்து, "ஏன் வரி வசூல் செய்யாமல் இருக்கிறீர்கள்" என்று சில கனம் அங்கத்தினர்கள் கேட்பதைப் பார்க்கும்போது, இந்த நாட்டின் எதிர்காலம் என்ன நிலைமைக்கு வரும், நாம் போட்டிருக்கும் திட்டங்கள் எப்படி நிறைவேற முடியும் என்பதைப் பொறுப்புள்ள கனம் அங்கத் தினர்கள் சற்று நன்றாக உணர்ந்து பேசினால் நன்றாக இருக்கும்.

புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. இவைகள் ஏழை எளிய நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் கனம் அமைச்சர் அவர்கள் மிகத் துரிதமாக, நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஏழை எளிய மக்களிடத்தில் அக்கறை உள்ள அமைச்சர் என்ற முறையில் அவர்கள் இதில் மிக்க கவனத்தோடு காரியங்களைச் செய்து வருகிறார் என்பதும் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். சில ஏழை எளிய மக்கள் இப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களை நல்ல முறை யில் உழுது பயிரிட்டு வந்திருந்தாலுங்கூட, நிலம் படைத்த சிலர், தங்க ளுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, சினிமாக் கொட்டகை வைத் திருப்பவர்கூட அந்த நிலத்தை பட்டா வாங்கிவிடுகிறார்கள். இதுபோன்ற நிலைமை என்னுடைய பகுதியில் ஏற்பட்டு, பெருமுயற்சியின் காரணமாக அதை மாற்றியாகிவிட்டது. இம்மாதிரி சில இடங்களில் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அது கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்கும் வந்திருக்குமென்று நான் நினைக்கிறேன். இம்மாதிரி காரியங்கள் மாகாணத்தில் எங்கிருந்தாலும், துரிதமாக நடவடிக்கை எடுத்து, யார் உழுது வந்தார்களோ, அந்த நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கே புறம் போக்கு நிலம் கொடுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

இன்றைக்கு கண்மாய்ப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. என் னுடைய தொகுதியில் வடகரைக் கண்மாய், தென்கரைக் கண்மாய் என்று இருக்கின்றன. வெளியிலிருந்து வந்து, மதுரை ராமநாதபுரம் பகுதியில் இருப்பவர்கள் விவசாயம் செய்து விடுகிறார்கள். கண்மாய்த் துரித மாக ஆக்கிரமித்து கொண்டிருக்கிறார்கள். கலெக்டர் எவிக்ஷன் ஆர்டர் 11-30
போட்டாலும் ஸ்டே ஆர்டர் வாங்கி விடுகிறார்கள். போர்டிலே எவிக்ஷன் a.m.
ஆர்டர் போட்டால் எங்களுக்கும் தெரியாமல் எப்படியோ அமைச்சர் அவர் களைக் கண்டு தங்களுக்குச் சாதகமாக ஆர்டர் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறார்கள்.

கனம் மாதா கவுடர் அவர்கள் கூறியது போல் சிமெண்ட் கொடுக்கும் முறையை முழு கடன் திட்டம் (ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம்) உள்ள பகுதிகளிலாவதும் கமிஷனரிடம் பொறுப்பைக் கொடுக்கவேண்டும். தாசில்தாரிடம் அந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதை மிக மிக வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தாசில்தாருக்கு ஜீப் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த நெருக்கடி நிலைமையில் தாசில்தாருக்கு ஜீப் வேண்டுமென்ற அவசியமில்லை. ஒவ்வொரு யூனியனிலும் ஜீப் இருக்கிறது. அந்தந்த யூனியனுக்குத் தாசில்தார்கள் போகும்போது அங்குள்ள கமிஷனரைக் கலந்து அங்குள்ள ஜீப்பை ஓரிரு நாட்களுக்கு எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு என்று தனியாக ஜீப் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. காஞ்சி மணிமொழியார் :** தலைவர் அவர்களே, இன்றையதினம் ரெவின்யூத் துறை மானியத்தின் மீது வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த இலாகா உண்மையிலேயே மிக முக்கியமான இலாகாவாகும். ஏழைகளாக இருந்தாலும் பணக்காரர்களாக இருந்தாலும், கிராம மக்களாக இருந்தாலும், நகர மக்களாக இருந்தாலும் அத்தனைபேரும் அடிக்கடி இந்த இலாகாவுக்குச் சென்று தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலேயே வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால் அந்த வெற்றி இந்த இலாகாவினுடைய நல்லெண்ணத்திலே, நல்ல பணியிலேதான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட நல்ல உயர்ந்த இலாகா இன்றையதினம் மிக மிக மந்தமாக, நிதானமாக நடைபெறுகிறது என்று பலரும் குறை கூறினார்கள். அது மட்டுமல்ல, இன்றைக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே வேறு எந்த மானியத்திலும் சொல்லப்படாத ஒரு விஷயம் இந்த இலாகாவைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. " லஞ்சப் பழக்கமும் முறைகேடான நிர்வாகமும் " என்ற தலைப்பிலே, லஞ்ச ஊழலை ஒழிப்பதற்காகச் சில துறையினர் வேலை செய்து வருவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே இந்த இலாகாவிலே அதிகமாக லஞ்ச வழக்கம் இருக்கிறதோ என்ற ஐயப்பாடு எல்லோருக்கும் ஏற்படுவது இயற்கை. அதற்காக மூன்று துறைகள் செயல்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. " பத்தாவது பிரிவு போலீஸ் படை, ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம் என்ற நியாய மன்றம், தமிழ்நாடு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகம் ஆகியவை இதற்காக இயங்கி வருகின்றன " என்று கூறப்பட்டிருப்பதைப் பார்த்தால் லஞ்சம் மிக அதிகமாக இந்த இலாகாவிலே நடமாடுகிறதோ என்ற அச்சம் எல்லோருக்கும் ஏற்படுவது இயற்கை. பாரதியார் இதைப் பற்றித் தெளிவாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

" நீதி நூறு சொல்லுவாய் காசொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ "

என்று பாரதியார் சொன்னார். போய் நிற்கிற நேரத்தில் எவ்வளவு தூரம் இடைஞ்சல்களைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து விட்டு, காசைக் கையிலே நீட்டின நேரத்திலே கையெடுத்துக் கும்பிடும் வழக்கம் எல்லாத் துறைகளிலும் அதிகமாக இருந்து வருகிறது. அதை ஒழிக்க வேண்டியது மிக மிக இன்றியமையாதது. ஒரு கடிதத்திற்குப் பதில் பெறவேண்டுமென்றால் பல மாதங்கள் ஆகின்றன. இதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோடம்பாக்கத்திலே புலியூர் சுரோத்திரியத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நிலங்கள் சர்வே செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சர்வே செய்யப்பட்டுள்ள அந்த நிலங்களுக்கு செட்டில்மெண்ட் ஆகி பட்டா கிடைக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். பட்டா கிடைக்காத காரணத்தால் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பாங்கியில் பணம் வாங்க வேண்டு

மென்றால் பட்டா கேட்கிறார்கள். பட்டா இல்லாத காரணத்தால் கடன் கிடைப்பதில்லை. விரைவிலே அவர்களுக்குப் பட்டா கொடுக்க முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக ரெவின்யூ அதிகாரிகள் அடிக்கடி மாவட்ட ரீதியில் சென்று இவற்றையெல்லாம் தணிக்கை செய்வார்களானால் இந்தக் குறைபாடுகள் பெரும்பாலும் களைந்தெரியப்படும். ஆண்டுக்கு ஓரிரு முறை இன்ஸ்பெக்ஷன் செய்தால் போதாது. அடிக்கடி மாவட்ட ரீதியிலே இன்ஸ்பெக்ஷன் செய்து குறைபாடுகளைக் களைய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரெவின்யூ இலாகாவிலே நிர்வாகம் சரியாக நடக்க அடிப்படை யூனிட்டாக இருப்பது கிராமங்கள். அந்தக் கிராமங்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்கள் கிராம முன்சீப்புகள். அவர்களுக்கு நிறைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட ரீதியில் எப்படி கலெக்டர் அரசாங்கப் பிரதிநிதியாக இருக்கிறாரோ, அந்த முறையிலே கிராம ரீதியிலே முன்சீப்புகள் அரசாங்கப் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கிராம முன்சீப்புகளுக்கு சிவில் அதிகாரங்கள் இருக்கின்றன. கிராம போலீஸ் தலைவரும் அவர்தான். ஆனால், அவருக்குக் கொடுக்கப்படுகிறது சம்பளம் 17 ரூபாய். அலவென்ஸ் சேர்த்து 25 ரூபாய் கிடைக்கிறது. அவருக்குக் கீழே இருக்கும் கர்ணத்திற்கு 30 ரூபாய் கொடுக்கிறார்கள். கர்ணம் வேறு வகையில் வெளிப்படையாகச் சொல்ல முடியாத வகையில் எவ்வளவோ சம்பாதிக்கிறார். அந்தக் கிராமத்திலே என்ன வேண்டுமென்றாலும் கர்ணம் தான் முடித்து வைக்கக் கூடியவராக இருக்கிறார். கோர்ட் வரை போகக்கூடிய வகையில் என்னென்ன ஜோடிக்க வேண்டுமோ அவ்வளவையும் செய்ய கர்ணத்தைப் போன்று சிறந்தவர்கள் இந்த நாட்டிலே ஒருவரும் கிடையாது. அந்தக் கர்ணத்திற்கு 30 ரூபாய். தலைவர் என்ற பெயரோடு இருக்கும் முன்சீப்புக்கு 25 ரூபாய் சம்பளம் என்று சொன்னால் கர்ணம் தலைவரை மதிப்பாரா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, கர்ணத்தின் சம்பளம் அளவுக்குகாவது கிராம முன்சீப்புகளின் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கர்ணங்கள் கோர்ட் வரை போக வழி வகுப்பது கூட்டுப்பட்டா முறை இருந்து வருவதுதான். கூட்டுப்பட்டாவே இல்லாமல் செய்ய வேண்டும். நூறு ஏக்கர் நிலம் உள்ள கிராமத்தில் கூட 20-க்கு மேல் கூட்டுப் பட்டாக்களாக வைத்துக் கொண்டு என்ன என்னவோ செய்கிறார்கள். ஆகவே, கூட்டுப் பட்டா முறையைப் போக்கவேண்டும்.

பொதுவாக நில ஆர்ஜிதம் விஷயத்திலே சென்னையைப் பொறுத்த வரையிலே மிகத் தாமதம் ஏற்படுகிறது. விரைவிலே நில ஆர்ஜிதம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

ரோடுக்காக நில ஆர்ஜிதம் செய்யும்போது ரோடின் தேவைக்கு மேல் இந்தப் பக்கம் 100 அடி, அந்தப் பக்கம் 100 அடி என்று அதிகமாக எடுக்கிறார்கள். பொதுக் காரியத்திற்கு எந்த அளவு தேவையோ அந்த அளவுக்கு மட்டும் நிலத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. அ. சேனாபதி கவுண்டர் :** தலைவர் அவர்களே, நிலவரித் துறை மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலம் நிர்வாகத் துறையிலே, எல்லா மாநிலங்களையும் விட அதிலும் குறிப்பாக நிலவரித் துறையிலே மிகத் திறமையோடு பணியாற்றிக் கொண்டு வந்தார்கள் என்று ஒரு காலத்திலே பெயரும் புகழும் பெற்றிருந்தது. இப்போது வர வர, அது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதை போல் ஆகிவிட்டது. நிலவரியைப் பொறுத்தவரை ஒரு காலத்தில் விவசாயிகளிடம் இருந்து ஒரு குறிப்பிட்ட நில வரியை வசூல் செய்து வந்தார்கள். இப்போது அந்த ஒரு வரியின் மேல் பல வரிகள் ஏற்பட்டு ரூபாய்க்கு 10 பைசா, பின்னர் 20 பைசா, பின்னர் 70 பைசா என்று போடப்படுகிறது. ஆக, கணக்குகளைப் பெருக்கிக் குழப்பி அடுத்த ஆண்டு மணியக்காரர் எவ்வளவு வரி கேட்பாரோ என்று விவசாயிகள் அஞ்சுகின்ற நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே இம்முறையை மாற்றி [illegible] கூட்டிப் பெருக்கிப் போட்டு அடுத்த ஆண்டு இவ்வளவுதான் வரும் [illegible]

என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக போராட்டமோ அல்லது சட்ட மாற்றமோ செய்யவேண்டிய அவசியம் இல்லை. அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கும் பதில் சொன்னபோது குறிப்பிட்டதைப்போல் இதுபற்றி துரிதமாக ஒரு முடிவிற்கு வரவேண்டும். அவர்களை 50, 60 ரூபாய் கொடுத்து முழு நேர ஊழியர்களாக ஆக்கிவிட்டால் பல கிராமங்களில் ஜனநாயகம் பரவ முடியாது முட்டுக்கட்டையாக இருக்கும் நிலை மாறிவிடும். பத்து ஆண்டுகளாக கிராம அதிகாரிகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு அங்கத்தினரும் இதுபற்றி பேசுகிறார்கள். ஆகவே ரெவன்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து வருகிற ஆண்டில் நிச்சயமாக அவர்களின் நிலையை மாற்றியமைக்கவேண்டும். ஈரோடு தாலுக்காவில் ஐந்தாறு கிராம அதிகாரிகள் அதிகமாக தேவைப்பட்டனர், அதற்காக பல விண்ணப்பங்கள் போட்டார்கள். ஆனால் முடிவு செய்ய முடியவில்லை. அதிகாரிகளிடம் பல பெரியவர்கள் இதற்காக போய் சிபார்சு செய்வதால் கலெக்டர் அல்லது ஆர். டி. ஓ. ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதிலிருந்து கிராம அதிகாரிகள் பதவிக்கு எந்தளவு முக்கியத்துவம் இருக்கிறது என்று நாம் உணரலாம். இதை உடனடியாகச் செய்யவேண்டும். இது இருக்கிறவரை கிராமங்களில் ஜனநாயகம் செழிப்படையாது. கடந்த ஆண்டுக்கு முந்திய ஆண்டு காவேரியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வீடு இழந்தவர்களுக்கு வீட்டு வசதி இன்னும் நிரந்தரமாகச் செய்து கொடுக்கப்படவில்லை.

கனம் திரு. வெ. ராமைய்யா : வெள்ளம் வரும்போது வீடுகள் சேதம் அடைந்தால் சர்க்காரிலிருந்து கட்டிக் கொடுக்கவேண்டுமா ?

திரு. க. ர. நல்லசிவம் : புறம்போக்கு நிலங்களில் இன்று குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா அல்லது டெம்பர்ரி பட்டா கூட கிடையாது. எப்போது வேண்டுமானாலும் ரெவன்யூ இலாகா நினைத்தால் அவர்களை வெளியேற்றலாம் என்ற நிலைதான் இருக்கிறது. அந்நிலை இருக்கக்கூடாது. கோவை, ஈரோடு போன்றயிடங்களில் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஏழை எளியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கு குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு, பட்டா அல்லது டெம்பரரி பட்டா கொடுக்கவேண்டும். இதுபோன்ற சில நகரங்களில் ஒரு சில பெரிய வசதி படைத்தவர்கள் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து இன்று கூட வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக கலெக்டருடைய யுக்தானுசாரப்படி மான்யம் என்ற பகுதி இருக்கிறது அதிலுள்ள ஜாபிதா பெரிதாக இருக்கிறது. ஆனால் ஒதுக்கியிருக்கிற தொகையோ குறைவு. அந்த ஜாபிதா மிகவும் அவசியமானதுதான். ஆகவே அத்தொகையை அதிகரிக்கவேண்டும். பின்னர் அந்தமான், நிக்கோபர் தீவுகளுக்கு குடியேற்றுவது சம்பந்தமாக சொல்லப்படுகிறது. நம் சர்க்காரைப் பொறுத்தவரையில் அவர்கள் ஏனோதானோ என்று இருப்பதாக எனக்கு சந்தேகம். அங்கு குடியேற ஒவ்வொரு ராஜ்யத்திலிருந்தும் எடுக்கப்படுகிறார்கள். நம் மாநிலத்தைப் பொறுத்தவரை 1955–62 வரை 136 பேர்களுக்குத்தான் அங்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ஆனால் 42 பேர்கள்தான் குடியேறியிருக்கிறார்கள், என்று சொல்லப்படுகிறது. 1961–62–ல் எவ்வளவு ஒதுக்கப்பட்டன, எவ்வளவு பேர்கள் போனார்கள் என்ற புள்ளி விவரம் இல்லை. அந்தத் தீவுகள் அழகானவை. இங்கும் நிலம் குறைவாக இருப்பதால் அந்தமானுக்கும், நிக்கோபருக்கும் எவ்வளவு தூரம் நாம் அனுப்பமுடியுமோ அந்த அளவு அனுப்ப சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, செய்தித்துறை மாகாண அடிப்படையில் இருக்கவேண்டுமென்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஜில்லா அடிப்படையில் இந்தசெய்தித் துறை அதிகாரிகள் என்ன செய்கிறார்கள், என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. அவர்களை நான் பார்த்ததே கிடையாது. அது என் குற்றமாகவும் இருக்கலாம். பஞ்சாயத்து யூனியன் இப்போது பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே மாகாண ரீதியில் உள்ள இத்துறை அவர்களுடன் நேரடியாக தொடர்பு வைத்துக்கொள்ளலாம். ஆகவே ஜில்லா அதிகாரிகள் [illegible] அவர்களிடம் [illegible] சிப்பந்திகள் தேவையா என்று [illegible]

இப்போது விவசாயிகளெல்லாம் பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட வரை அந்த அமைப்பின் கீழே வந்துவிட்டார்கள். மற்றுமுள்ள தாலூகா ஆபிஸ் போன்ற இடங்களில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களுடைய அதிகாரங்கள் போய்விட்ட காரணத்தால் விவசாயிகளை திருப்பி திருப்பி வரக்கூடிய நிலைமையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசின கனம் அங்கத்தினர்களெல்லாம் சொன்னதைப்போல் சிமெண்ட் லைசென்ஸ் போன்றவைகளைப் பெற வேண்டுமென்றாலும், பம்பு செட்டு வைக்க பர்மிஷனுக்கு சர்டிபிகேட் வாங்கச் சென்றாலும் அவர்கள் மிக மிக அல்லலுக்கு உட்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த முறைகளையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து நடவடிக்கைகளை கனம் அமைச்சர் அவர்கள் எடுத்து வந்திருக்கிறார்கள். நேரடியாகவும் கவனித்து வருகிறார்கள். விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை யெல்லாம் நல்ல முறையில் செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : தலைவர் அவர்களே, ரெவின்யூ இலாகா இந்த அரசாங்கத்தின் முதுகெலும்பு போன்ற ஒரு இலாகா. எத்தனையோ இலாகாக்கள் இருந்தாலும் அந்த இலாகாக்கள் செய்யவேண்டிய எல்லா விதமான காரியங்களையும் ரெவின்யூ இலாகா மூலமாகத்தான் இந்த அரசாங்கம் முடித்துக்கொள்ளுகிறது. துர்பாக்கியவசமாக என்றுகூட சொல்வேன்—பல வருடங்களாக ரெவின்யூ இலாகா ஸ்தம்பிக்கக்கூடிய நிலையில் கூட போய்விட்டது என்பது அங்கத்தினர்களின் கருத்து, பொதுமக்களின் கருத்து. இந்தக் கருத்தை அமைச்சர் அவர்களிடம் நான் பல முறை சொல்லியிருக்கிறேன். அதிர்ஷ்டவசமாக சில மாறுதல்களின் பயனாக கனம் அமைச்சர் ராமைய்யா அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பை எடுத்துக்கொண்டது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இந்த இலாகாவின் நிலைமை எவ்விதமோ, எப்படியோ போய் ஸ்தம்பித்துவிடுமோ என்ற நிலைமை வந்து இப்போது ஸ்தம்பிக்காமல் ஓடலாம் என்று நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இன்றைக்கு நாம் எத்தனையோ இலாகாக்களை புதிது புதிதாக சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறோம். புதிய புதிய சிறந்த கட்டிடங்களையெல்லாம் எழுப்புகிறோம். யார், எங்கே, எதைச் செய்தாலும் கடைசியாக ரெவின்யூ இலாகா போய் சாதிக்க வேண்டும். தப்பை கண்டு பிடித்து ரிபோர்ட்டு எழுதவேண்டியது ரெவின்யூ இலாகாவாக இருக்கிறது.

தாலூகா ஆபீசில் உட்காருவதற்கு நாற்காலிகள் கிடையாது. அப்படி நாற்காலி இருந்தால் அதுகூட கையொடிந்தோ அல்லது காலொடிந்தோ தான் இருக்கும். ரெவின்யூ இலாகாவின் நிலைமையில் அரசாங்கம் எவ்வளவு கவனக்குறைவாக இருக்கிறது என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டு. ரெவின்யூ இலாகாவை அரசாங்கம் இத்தகைய சூழ்நிலையில் வைத்திருந்தாலும்கூட எல்லா வேலையையும் அது நடத்தித்தான் வருகிறது. ரெவின்யூ இலாகாவில் உள்ளவர்களை ஏதாவது ஒரு காரணத்திற்காக யாராவது பகைத்துக்கொண்டால், அது சட்டசபை மெம்பராக இருந்தாலும் கூட, காரியம் நடக்காது. கனம் அமைச்சர் ராமைய்யா அவர்களேகூடச் சொன்னார்கள். "கிராம உத்தியோகஸ்தர்களையோ அல்லது லஸ்கர்களையோ யாராலும் ஒன்றும் செய்யமுடியாது" என்று. அந்த இலாகா அத்தனை பலம் பொருந்திய இலாகா. அந்த இலாகாவில் அரசாங்கத்தின் கண்காணிப்பு இல்லாத நிலைமை நிவர்த்திக்கப்பட்டு இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. நான் இதிலே பேசக்கூட முன்வந்திருக்கமாட்டேன். பேசிப் பேசி சலித்துப்போனவன். 1946-ம் வருஷத்திலிருந்து 1963-ம் வருஷம் வரை ரெவின்யூ இலாகாவைப்பற்றி சொல்லாத குறை பாக்கியே யில்லை. அவற்றில் ஒன்று, இரண்டு, மூன்று பர்சண்ட்கூட குறையவில்லை. ஆனாலும் இப்போது எனக்கு சிறிய நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தால்தான் இந்த முறை பேசவேண்டும் என்று நினைத்தேன்.

மேலே இருக்கிறவர்கள் சரியானபடி கவனம் செலுத்தியிருப்பார்களானால் இந்த அலங்கோல நிலை இருந்திருக்க முடியாது. தாலூகா ஆபீஸில் ஒருவன் மனு கொடுக்கிறான். மனு கொடுத்தவுடன் "உன்னுடைய மனுவின் மீது இன்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்" என்று எண்டார்ஸ்மெண்ட் அனுப்பவேண்டும். அந்த மனுவின் மீது எடுக்கப்பட்ட முடிவை பதினைந்து நாள் அல்லது ஒரு மாதம், அல்லது இரண்டு மாதம், அல்லது மூன்று மாதத்திற்குள்ளாவது தெரிவிக்கவேண்டும். அமைச்சர் ராமையா அவர்கள் மனுவை ரிஜிஸ்டர் செய்து என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறார். பெரும்பாலும் மந்திரிகளாக வருகிறவர்
12.00 noon
களிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்தால், அதனுடைய ரிஸல்ட் 3 வருஷங்களுக்கு அப்பால், 4 வருஷங்களுக்கு அப்பால், என்ன நினைத்தாரோ அதற்கு மாறுபட்ட அபிப்பிராயம் யாரோ ஒருவர் சொல்லுவார், அதுவும் எழுத்து மூலமாக இருக்காது. யாரிடத்தில் மனு கொடுத்தாலும், அவனுக்கு கொடுத்த 4-வது நாள் அக்னாலெட்ஜ்மெண்ட் போகவேண்டும், இத்தனை நாட்களுக்குள் அதற்கு முடிவு சொல்லவேண்டும் என்று இப்படியாக வரையறுத்தாக வேண்டும். நல்ல பல காரியங்களை இந்த தேசத்தில், உலகமே பிரமிக்கும் வகையில் செய்துகொண்டு வருகிறோம். செய்யக்கூடிய காரியங்களை நடைமுறையிலே காட்டும்போது, செயல்படுத்தக்கூடியவர்கள் ரெவின்யூ இலாகா. அந்த இலாகாவிற்கு நிச்சயமாக, திட்டவட்டமாக பொது மக்களுக்கு இவ்விதம் எல்லாம் சொல்லவேண்டும், இவ்விதம் எல்லாம் பதில் சொல்லவேண்டும் என்று வரையறுத்துச் சொல்லிவிட்டால், கிராம மக்கள் அன்றுதான் அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள். சாதாரண மக்கள், "மந்திரியைப் பார், காங்கிரஸின் யோக்கியதையைப் பார், இங்கு இருக்கிற காமராஜருக்கு ஏதாவது தெரியுமா, அங்கே இருக்கிற நேருவுக்கு ஏதாவது தெரியுமா, அமைச்சர் ராமையாவுக்கு ஏதாவது தெரியுமா" என்று உங்களைத்தான் குறை கூறுகிறார்கள். எங்களையும் குறைகூறுகிறார்கள். பொது மக்கள் பிரதிநிதிகளைக் குறைகூறுகிறார்கள். தாலூகா நிர்வாகத்திலிருந்து கலெக்டர் ஆஃபீஸ் வரையில் தவறுகளை உடனடியாகக் கண்காணிக்காவிட்டால் இந்த நிலைமை மாறாது.

அடுத்தபடியாக, நண்பர் அமைச்சர் ராமையா அவர்கள் ரெவின்யூ இலாகாவையும், பி. டபிள்யூ. இலாகாவையும் இரண்டையும் சேர்த்து வைத்துகொண்டிருக்கிறார். 25-ம் தேதியன்று எங்களுக்கு அரசாங்கத்தின் முடிவைப் பற்றிச் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அந்த சப்ஜெக்ட் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். நிலத்தைப் பயிர் செய்யுங்கள், க்ரோ மோர் ஃபுட், ஏராளமான நிலத்தை விவசாயம் செய்யுங்கள் என்று ஒரு புறத்தில், தண்ணீர் கொடுக்கிறேன் என்று மறுபுறத்தில்; ரெவின்யூ இலாகாவின் தண்டம் போடுகிறேன் என்று ஒரு புறத்தில். இரண்டையும் அவரே செய்கிறார். மற்றவர்களுக்கு எங்காவது உபத்திரவம் இருக்கிறதா என்றால், அமைச்சரே ஒத்துக்கொள்கிறார் இல்லை என்று. மற்றவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கும்போது, திருநெல்வேலி ஜில்லா பூராவிலும் தண்டத் தீர்வை போடப்படுகிறது. தண்டம் என்ற வார்த்தையை எடுத்துவிட வேண்டுமென்று கனம் தூத்துக்குடி அங்கத்தினர் சொன்னார்கள். அரசாங்கம் விவசாயம் செய்வதற்கு சுமையாக இருக்கக்கூடிய காரியத்தைச் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை. அங்கு யாராவது பாதிக்கப்பட்டு இன்னொருவருக்குக் கொடுத்தால் அர்த்தம் இருக்கிறது. நெல்லை ஜில்லாவில் யாரும் பாதிக்கப்படவில்லை. 20-25 வருஷங்களாக 30,000 ஏக்கர்கள் சாகுபடி செய்துக்கொண்டிருக்கிறார்கள். தினம் தினம் தண்டத் தீர்வை என்று போட்டுக்கொண்டிருந்தால் எத்தனை நாள் செலுத்துவது ? இங்கே நிலத்திற்கு வரி போடுகிறோம். மத்திய அரசாங்கத்திலிருந்து கம்பல்சரி சேவிங்ஸ் போடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். எத்தனை எத்தனை வரிகள் ? பஞ்சாயத்து யூனியன் வேறு வரிகள் போடுகின்றன. விவசாயியின் தலைமேல் தினம் தினம் சுமையை ஏற்றிக்கொண்டிருக்கும் நேரத்தில் மேலும் தண்டம், தண்டம் என்றால் என்ன அர்த்தம்? அபராதம் என்றால் என்ன அர்த்தம்? இவ்வளவு செய்கிறோமே, ஜனநாயகம் தழைக்கவேண்டுமானால், இன்றைய தினம் பஞ்சாயத்து யூனியன்கள் அமைத்திருக்கிறோம், பஞ்சாயத்து போர்டுகள்

அமைத்திருக்கிறோம், ஆனால் துர்ப்பாக்கியவசமாக, பஞ்சாயத்து போர்டுகள் வைத்து, யூனியன்கள் வைத்து, ரெவின்யூ இலாகாவுக்கு அடிமையாக்கி விட்டிருக்கிறோம். ரெவின்யூ இலாகாவிற்கு, பஞ்சாயத்து போர்டு பிரெஸிடெண்ட் தலையாரி மாதிரி இங்கே வந்து ஆஜராகவும் என்று சொல்லக்கூடிய முறையில் அதிகாரத்தைக் குவியல் முறையில் ரெவின்யூ இலாகாவிடத்தில் கொடுத்து, ஜனங்களுடைய பிரதிநிதிகளை அவர்களின் அடிமைகளாக ஒப்படைத்திருக்கிறோம். இதைப் படிப்படியாகக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. சா. ராமசாமி :** தலைவர் அவர்களே, இந்த ரெவின்யூ, நிலவரி வருவாய்த் துறை மான்யக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகள் மீது சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நில வருவாய்த் துறை எந்த அளவுக்கு நமக்கு மிகவும் பயன் தரக்கூடிய இலாகாவாக இருக்கிறதோ அதே இலாகாத்தான் மற்ற எல்லா இலாகாக்களை விட அதிகமான அளவில் ஊழல் மலிந்துள்ளதாக இன்றைய தினம் காணப்படுகிறது. இதை நிரூபணமாக ஆதாரங்களோடு என்னால் காட்ட முடியும். நிலவருவாய்த் துறையில் கீழ்மட்டத்தில் இருக்கிற கிராம அதிகாரிகள், எப்படி நாட்டின் முதுகெலும்பாக விவசாயிகள் இருக்கிறார்களோ அது போல ஆட்சியினருக்கு முதுகெலும்பாக கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்த கிராம அதிகாரிகளுடைய வாழ்க்கைத் தரத்தைச் சரியான முறையில் வரையறுத்து வைக்காத காரணத்தினால் விவசாயிகள் பல வழிகளில் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு உர அனுமதிச் சீட்டு வாங்குவதற்கு, அல்லது நிலத்தை விற்க வேண்டியோ அல்லது வாங்கவேண்டியோ நிலத்தினுடைய சர்வே எண்ணை பெறவேண்டிய நேரத்தில் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையைச் சீர் செய்யாத நிலையில், கிராம அதிகாரிகளுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கொடுத்திருக்கிற காரணத்தினாலும், இது போன்று லஞ்ச அடிப்படையில் வாங்கிக்கொண்டாலும் அதற்கான வழிவகை இல்லாத காரணத்தினாலும், விவசாயிகளிடத்தில் அதிகமான அளவில் எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலையைச் சீர் செய்யாத வரையில் இந்த இலாகா நிர்வாகம் சரியாக இருக்க முடியாது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சென்ற கூட்டத்தில் எடுத்துக் காட்டிய மாதிரி அரசாங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படும் ரெவின்யூ சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்கள் சரியான முறையில் அமையவில்லை என்று நான் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல முடியும். அமைச்சருக்கு வேண்டுமானால் நான் இதை நிரூபித்துக் காட்ட முடியும். அவர் என்னுடன் வந்தால் அத்தகைய நிலைமையை எடுத்துக்காட்ட முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1,000 அல்லது 2,000 ஏக்கர் நிலங்கள் உள்ள கிராமங்களில் உள்ள சாகுபடியைப்பற்றி பார்க்கவேண்டும். போதிய நேரம் இல்லாத காரணத்தினால் அவர்கள் சரிவரச் செய்வதில்லை. இதைப் பற்றி நான் சென்ற கூட்டத்தில் பேசியிருக்கிறேன். அந்த முறையில் அவர்கள் சாகுபடிக் கணக்கில் தவறு செய்து விடுகிறார்கள்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டரை எடுத்துக்கொண்டால் அவர் 24 ரெவின்யூ வட்டாரங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அத்தனை கிராமங்களின் கணக்குகளையும் தணிக்கை செய்ய முடியாது. ஒரு கிராம சாவடியில் உட்கார்ந்து அந்தந்தத் தேதியில் ஊருக்கு வந்ததாகக் கையெழுத்துப் போட்டுவிடுகிறார்கள். தாசில்தார் அவர்கள்கூட ஜமாபந்தி சமயத்தில்தான் கணக்கை வீட்டுக்கோ அல்லது ஆஃபீஸுக்கோ கொண்டுவரச் சொல்லி கையெழுத்துப் போட்டு விடுகிறார்கள். இந்த முறையில் வருகிறபோது மாநில வாயிலாக அறிவிக்கப்படுகிற கணக்குகள் சரியான நிலைமையில் இல்லை என்று சுட்டிக் காட்டுகிறேன்.

வோடு சேர்த்திருக்கிறார்கள். வரி விதிப்புகளில் உள்ள வேறுபாடு காரணமாக அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு இரண்டொரு கிராமங்களைப் பற்றி எடுத்துச் சொல்லுகிறேன்.

இனும் நிலங்களின் சர்வேப்படி என் தொகுதியைச் சேர்ந்த ஓரியூர் என்ற ரெவின்யூ கிராமத்துடன் கோமான் என்ற கிராமத்தையும் சேர்த்துள்ளார்கள். ஓரியூர், அரியலூர் பஞ்சாயத்து யூனியனில் சேர்ந்துள்ளது. கோமான், திருமானூர் பஞ்சாயத்து யூனியனில் சேர்ந்திருக்கிறது.

இதேபோல திருமானூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மல்லூர் கிராமத்தையும் அரியலூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள [illegible] கிராமத்தையும் ஒன்றாக இணைத்து ஓர் ரெவின்யூ கிராமமாக சேர்த்திருக்கிறார்கள். திருமானூர் பஞ்சாயத்து யூனியனில் ஒரு ரூபாய்க்கு செஸ் 30 பைசாவும், அரியலூர் பஞ்சாயத்து யூனியனில் ஒரு ரூபாய்க்கு செஸ் 50 பைசாவும் விதிக்கப்பட்டுள்ளது. இதை கணக்கீடு செய்ய மிகவும் சிரமம் ஏற்படுவதுடன் மக்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். கடன், உரம் போன்றவைகளைப் பெற இரு பஞ்சாயத்து யூனியனுக்குச் செல்ல நேரிடுகிறது. இதனால் சிறு நிலச்சுவான்தார்கள் எவ்விதச் சலுகைகளும் பெற வாய்ப்பில்லாது போகிறது. இதை உடனடியாக பரிசீலித்து ஆவன செய்ய கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஜமீன்தாரி ஒழிப்பு காரணமாக, காடுவெட்டாங்குறிச்சியைச் சேர்ந்த நல்லணம், சிங்கராயபுரம் ஆகியவைகள் டி. பழூர் பிர்க்கா, டி. பழூர் பஞ்சாயத்து யூனியனுடன் சேர்ந்தது. இது ஜெயங்கொண்டம் பிர்க்கா, ஜெயங்கொண்டம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த டி. சோழங்குறிச்சியின் கிராமமாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே ரெவின்யூ நிலைமையைச் சீர்படுத்த முடியவில்லை. இது சம்பந்தமாக பஞ்சாயத்து மூலமாகவும் மக்களாகவும் அமைச்சரிடத்தில் நேரிலேயே விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாலூகா அலுவலகங்களுக்கு விவசாயிகள் சென்றால் உட்காருவதற்கு வசதி செய்து தரவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் மேலதிகாரிகளைக் காணச் சென்றால் சீட் இருக்கிறது. எழுத்தர்களிடத்தில் சென்றால் உட்காரச் சீட் கிடையாது.

வாய்தா ரசீது இப்பொழுது கஷ்டமான முறையில் இருக்கிறது. கூட்டுப் பட்டாவாக இருக்கும் காரணத்தால், சிறிய விவசாயிகள் இவ்வளவு நிலம் தனக்கு இருக்கிறது, இவ்வளவுதான் கிஸ்து என்று கண்டுபிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. அதை சீர்திருத்த வேண்டும். மேலும், செட்டில்மெண்ட் முறையை உடனடியாக எல்லா கிராமங்களுக்கும் அமுல் நடத்த வேண்டும். கூட்டுப்பட்டாக்களை உடனடியாக மாற்றி தனிப்பட்டாக்கள் செய்து அதனால், கிராம விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் அளவில் செய்ய வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

12-10 p.m. * **திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, இன்று நம் ரெவென்யூ அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முன்னால் பேசிய சுதந்திரா கட்சி அங்கத்தினர் தங்கக் கட்டுப்பாட்டினால் கிராம விவசாயிகள் எல்லாம் "ஜீவ மரண போராட்டத்தில் பாடுபடுகிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். கிராமப்புறத்தில் ஒரு பழமொழி உண்டு "தன்னைப் பெற்ற தாய் அன்னப் பிச்சை எடுக்கிறாள் தங்கை தங்க சாம்போடச் சொல்லி கொஞ்சி கொஞ்சி அழுகிறாள்" அதுபோல இருக்கிறது இவர்கள் கூற்று. இந்த நாட்டின் சுதந்திரத்தை பாதுகாக்க அங்கே தாயும், தந்தையும் போன்ற நேருஜி எல்லைப் புறத்தில் ஏறியுள்ள சீனாக்காரனை துரத்தி அடிக்க பாடுபடும்பொழுது இவர்கள் இங்கே இல்லாததை பேசிக்கொண்டு இருக்கிறார்கள். தங்கக் கட்டுப்பாட்டினால், எவ்வளவு தூரம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் எவ்வளவு தூரம் அதை நிறைவேற்ற தயாராக இருக்கிறார்கள் என்று இன்றைக்கு தாய்மார்களைவிட இவர்களுக்கு அதிகமாக, நிச்சயமாகத் தெரியாது. அவர்கள்

கூறும்படியான அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே கிடையவே கிடையாது. நிலைமை அப்படி இருக்கும்பொழுது விவசாயிகள் ஜீவ மரண போராட்டத்தில் பாடுபடுகிறார்கள் என்று சொல்லும்பொழுது, அது ரொம்ப உண்மைக்கு பொருத்தம் இல்லாத கருத்து என்றுதான் சொல்ல முடியும். இன்றைக்கு சுதந்திரம் பறிபோகாமல் காப்பதற்கு அரசாங்கத்துடன் எந்த வகையிலும் ஒத்துழைக்க பொதுமக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த சபை முன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முன்னேற்ற நாடுகளில் விவசாயிகளுக்கு வரியே இல்லை என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். நமது நாடு முன்னேற்ற நாடா? நம் நாடு ஒரு ஏழை நாடு. நாம் இப்பொழுதுதான் மூன்றாவதுத் திட்டத்தைப் போட்டிருக்கிறோம். 100 ஆண்டுகளாக திட்டங்களைப் போட்டுப் போட்டு முன்னேறி வந்திருக்கிறது அமெரிக்கா. அதே போல பல ஆண்டுகளாக பல திட்டங்களை போட்டு வேலை செய்து வந்திருக்கிறது ரஷ்யா. நம்மை எப்படி அமெரிக்காவோடும், ரஷ்யாவோடும், இங்கிலாந்தோடும் ஒப்பிட்டுச் சொல்ல முடியும்? இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் முன்னேற்றம் அடைந்த பிறகு நாம் நிமிர்ந்து மேலை நாடுகளோடு நம்மை ஒப்பிட்டுக் கொள்ளலாம். சாதாரணமாக, 8-வது வரை படிக்கும் பையனுக்கு ஒரு டெஸ்டில் பாஸ் செய்தால் சர்டிபிகேட் கொடுக்கப்படுகிறது. அதைக் கொண்டு அவன் வேலைக்குப் போகிறான். விவசாயிகளுக்கு, நில வரி கொடுப்பதால் மதிப்பு ஏற்படுகிறது. ஆகையினால், இன்றைக்கு இருக்கும் நிலையில் விவசாயிகளுக்கு வரி அடிப்படையில் எந்த போராட்டமும் இல்லை. வரி அதிகமா, குறைவா என்பது அல்ல பிரச்னை. அது வேறு பிரச்னை. அவர்களுக்கு சில சௌகரியங்களை செய்ய வேண்டியது அவசியம்தான். இங்கிலாந்திலே போல அவர்களுக்கு ஒரு பாஸ் புக் கொடுக்க வேண்டும். அவர்கள் பல வழிகளிலும் கடன்கள் வாங்க வேண்டி இருக்கிறது. எந்த கடனாக இருந்தாலும் அவர்கள் பல ஆண்டு வரையில் சால்வன்ஸி சர்டிபிகேட்டுகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பல தொந்தரவுகளும் அதிகப்படியான செலவுகளும் ஏற்படுகின்றன. இங்கிலாந்தில் போல ஒரு விவசாய பாஸ் புக் கொடுத்து விட்டு, அதில் விவசாயின் நிலம் எவ்வளவு, அதன் மதிப்பு என்ன, ஒவ்வொரு ஐந்தாண்டிலும் அது குறைந்திருக்கிறதா, உயர்ந்திருக்கிறதா என்று இந்த விவரங்களைக் குறித்திருந்தால், அது விவசாயிக்கு எவ்வளவோ மதிப்பாக இருக்கும். சௌகரியமாகவும் இருக்கும். அப்படி எல்லாம் செய்தால்தான் அரசாங்கம் விவசாயிகளை நல்ல நிலைமைக்கு கொண்டு வந்திருக்கிறது என்று உணர்வு வரும்.

ரெவென்யூ இலாகா அலுவல்கள் தீவிரமாக தமிழில் நடக்க வேண்டும், படிப்படியாக ஆட்சி மொழி தமிழாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட பிறகும் இன்றைக்கு ஒரு கலெக்டர் ஒரு பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் அவர்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதுகிறார். இவர் ஆங்கிலம் படித்தவரை தேடி ஓடவேண்டிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, தீவிரமாக கடிதப் போக்குவரத்துக்கள் தமிழிலேயே நடைபெற கலெக்டர் ஆபீஸ்களில் தமிழ் டைப்பிஸ்டுகளையும், டைப்ரைட்டர்களையும் அதிகப்படுத்த வேண்டும். இதை துரிதப்படுத்தவேண்டும்.

கூட்டுப் பட்டா முறையை ரத்து செய்து விட்டு அவரவர்களுக்குத் தனிப் பட்டா அளிக்க வேண்டும். ஜில்லா வாரியாக எடுத்துக்கொண்டு இந்த வேலையை தீவிரமாகச் செய்ய வேண்டும்.

என்.ஜி.ஓ.க்களுக்கு மருந்து தந்து உதவுவது என்பது தர்மத்திற்கு செய்யப்படும் வகையில் அவர்களுக்கு உதவியாக இல்லாமல் இருக்கிறது. அவர்களும் நல்ல முறையில் வைத்திய உதவி பெற முடிவதில்லை. ஒரு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போய் ஒரு பில் வாங்கி வருவதற்குள் அவர்களுக்கு பொழுதெல்லாம் போய்விடுகிறது. அவர்கள் எப்படி 11 மணிக்கு ஆபீஸ் செல்ல முடியும். ஆகவே, அந்த முறையை மாற்றி அவர்கள் நல்ல டாக்டர்களிடம் உடனுக்குடன் சிகிச்சை பெறும் வாய்ப்பை அளிக்கப்பட வேண்டும்.

கிராம கர்ணத்திற்கும், மணியக்காரருக்கும் கமிஷன் பேசிசில் சம்பளத்தை உயர்த்தவேண்டும். இன்றைக்கு இருக்கும் சம்பளம் அவர்களுக்கு போதாது என்பதை இந்த சபை முன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கலெக்டர் ஆபீஸ்களில் பணியாளர்கள் உட்கார்ந்து சாப்பிடுவதற்குக் கூட இடம் இல்லை. அவர்கள் மரத்தடிகளில் கையில் வைத்துக்கொண்டு தான் சாப்பிட வேண்டியிருக்கிறது. அங்கெல்லாம் கக்கூஸ் வசதிகள் கிடையாது. லைட் வசதி கிடையாது, சுத்தம் செய்ய ஆட்கள் கிடையாது. ஒவ்வொரு தாலூகா ஆபீஸாக எடுத்துக்கொண்டு இட வசதி, லைட் வசதி, கக்கூஸ் வசதி இவைகளை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். முன்பு அமைச்சர் எதையும் நேரில் போய் பார்த்து வந்தார்கள், ஆனால் இந்த மந்திரி சபைக்குப் பிறகு அவர்கள் அப்படிச் செய்வதில்லை. ஜில்லா தாலூகா ஆபீஸ்களில் உள்ள குறைபாடுகளை தீவிரமாக, துரிதமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ப்யூன்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்காததால் அவர்களுக்கு மிக்க கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் ஏற்பாட்டை துரிதப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மானியத்தை ஆதரித்து இத்துடன் என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நாராயணன் :** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் மாவட்ட நிர்வாகத்திற்காக கொண்டுவரப்பட்டிருக்கும் மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். மாவட்ட நிர்வாக அமைப்பில் கலெக்டர் அவர்களுடைய கையிலே பெரிய அளவிலே அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், அவர்கள் அந்த அதிகாரத்தை பரவலாக எந்த வழியிலும் பயன்படுத்தி, மக்களுக்கு நல் வாழ்க்கை ஏற்படுத்த வசதிகளை செய்து கொடுக்க உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்காக. ஆனால், சாதாரணமாக மாவட்ட கலெக்டர் தாசில்தாருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கிறார். தாசில்தார் ரெவென்யூ இன்ஸ்பெக்டருக்கும், அவர் தன் கீழுள்ள கிராம அதிகாரிகளுக்கும் கொடுக்கிறார்கள். ஆக ஒவ்வொருவரும் அதிகாரத்தை பிரித்து, பிரித்து கொடுத்து கடைசியாக கிராம அதிகாரிகளுக்கு அதிகாரம் வருகிறது. இதனால், விவசாயிகள் படக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இதை எதற்காக சொல்லுகிறேன் என்றால், விவசாயிகளுக்கு இந்த கிராம அதிகாரிகள் தொந்தரவு கொடுக்கும் முறையில் நிர்வாகத் துறை இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் இந்த கிராம அதிகாரிகள் ஹரிஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும் முடிப் போட்டு ஒருவருக்கொருவர் சண்டைப்போட்டுக்கொள்ளும் நிலைமையும் கோர்ட்டுக்கும் போகும் நிலைமையையும் உண்டாக்குகிறார்கள். அந்த அளவுக்குக் கிராம அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, வெள்ளூர் என்ற கிராமத்தில் ஹரிஜனங்களுக்காக என்று 13 ஏக்கர் நத்தம் ஒதுக்கப்பட்டு இருந்தது. செட்டில்மெண்ட் ரெஜிஸ்டரிலும் அதற்கு கணக்கு இருக்கிறது. ஆனால், அந்த ஊர் கர்ணம் ஹரிஜனங்களை முடித்து விட்டு பிறகு கோர்ட்டு வரையில் போகும் நிலைமையை உண்டாக்கினார். பஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலே தீர்ப்பாகி யிருக்கிறது. செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் இனும் நத்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்ணத்தின் சொந்த இடம் என்று எந்தவித ஆதாரமும் இல்லை. 4, 5 வருஷத்திற்கு முன்பு தன் பங்காளியிடம் கிரயம் வாங்கியது போல சோடனை செய்து கொண்டு அது நத்தம் இல்லை, தன் சொந்த அனுபோகத்தில் இருந்தது என்று சொல்லுகிறார். கலெக்டரும், தாசில்தாரும் அதை நல்லபடி ஆராய்ந்து பார்ப்பதில்லை. அந்த இடத்தில் இவ்வளவு நாட்களாக எந்த வீடும் அவருக்கு இல்லை. நத்தமாக இருந்தால் அது யாருக்கும் சொந்தமில்லை என்று சட்டம் இருக்கும்பொழுது, பல ஆண்டுகளாக அங்கு வீடு எதுவும் இல்லாமல் இருக்கும்பொழுது அவருக்கு அந்த நிலத்தில் பாத்தியம் எப்படி வந்தது? அதையெல்லாம் கலெக்டர் ஊன்றி பார்க்காமல் இருக்கிறார் என்று தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுது கனம் அமைச்சர் கக்கன் அவர்களிடம்கூட அந்தக் குடியானவர்கள் 8 நாட்களாக இங்கு வந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி கிராம மக்கள் திண்டாடக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள்.

நான் இன்னொன்று சொல்லிக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்துப் போர்டுகளுக்கு சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கிராம முன்சீப் வரி வசூல் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு வரி வசூல் செய்வதற்காக அவர்களுக்கு ஊதியத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். கர்ணத்திற்கும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கர்ணம் பஞ்சாயத்து போர்டு வேலை ஒன்றுமே செய்வதில்லை. அவர்களுக்கு இந்தப் பணம் கொடுக்கத் தேவையில்லை. கர்ணத்தை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு வேலையில்லாத டிபார்ட்மெண்டே கிடையாது. ஆகவே, பஞ்சாயத்து போர்டு கணக்கையும் கர்ணமே செய்து கொடுக்க வேண்டும் என்ற முறையை மாற்றியமைக்க வேண்டும். அந்தப் பஞ்சாயத்து போர்டுகள் அதற்கு வேண்டிய கிளார்க்குகளைப் போட்டுக் கொண்டு இந்த வேலையைச் செய்து கொடுக்கச் சொல்ல வேண்டும். வரி வசூல் கிராம அதிகாரிகள் செய்தாலும், கிராமக் கர்ணமே பஞ்சாயத்துக் கணக்கையும் முடிக்க வேண்டும் என்ற விதியைத் திருத்தி, பகுதி நேர குமாஸ்தாக்களையோ, முழுநேர குமாஸ்த்தாக்களையோ பஞ்சாயத்து போர்டுகளே நியமனம் செய்துகொண்டு இந்த வேலையைச் செய்து கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு :** கனம் தலைவர் அவர்களே, இன்றைய 12–30 p.m.
நிலைமையில் பரிதாபத்துக் குரிய ஒரு உத்தியோகஸ்தர் இருக்கிறார் என்றால் அது ஜில்லா கலெக்டர் என்றுதான் சொல்ல வேண்டும். பாஞ்சாலி 5 பேருக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. இன்றைய கலெக்டர் எத்தனைபேர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறது என்பது தெரியவில்லை. ரெவின்யூ மந்திரி அவர்கள் தனக்குக் கீழுள்ள முக்கியமான உத்தியோகஸ்தரை, யார், எந்தவிதமான வேலையை வாங்குகிறார், யாருடைய போற்றுதலுக்கும், யாருடைய கண்டனத்திற்கும் ஆளாகிறார் என்பது தெரியாமல், தன்னுடைய முக்கியமான சிப்பந்தி தனக்குத் தெரியாமலே மற்றவர்களால் ஆக்கப்படுவதையும், அழிக்கப்படுவதையும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டிய பரிதாபகரமான நிலையில் இருக்கிறார். இந்த நிலைமை மாற வேண்டும் என்பது என்னுடைய ஆசை. எப்படி மாற்ற வேண்டும், எவ்வாறு மாற்றலாம், எப்படிச் செய்தால் கலெக்டருக்கு முன்பிருந்த ஒரு மதிப்பும் கௌரவமும் ஏற்படும், அவர் நல்ல முறையில் செயல்படும் சக்தி ஏற்படும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியது கனம் மந்திரி அவர்களுடைய பொறுப்பு என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ரெவின்யூ இலாகாவிலுள்ள பல குறைகளைப் பற்றிச் சொன்னார்கள். ரெவின்யூ இலாகா செய்யவேண்டாத பல வேலைகளையும் ரெவின்யூ இலாகாவைச் செய்யச் சொல்லிவிட்டு, அவர்கள் சரியான முறையில் செயல்படவில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருக்கும் நேரமாக இருக்கிறது இது. ஆராய்ந்து பார்த்தால், ரெவின்யூ இலாகாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பல பொறுப்புகளை அவர்களிடமிருந்து எடுத்துவிட்டு, அவர்களுக்குக் குறிப்பிட்ட வேலைகளை மட்டும் கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் செயல்படக்கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இது பற்றியும் சிந்திக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கலெக்டர் அவர்கள் ஆங்கிலேய அரசு காலத்தில் கவர்னர் அவர்களுடைய பிரதிநிதியாக இருந்தார். அவர் என்னென்ன வேலை செய்யவேண்டும், அவரை யார், யார் வந்து பார்க்கவேண்டும், அவர் எப்படியெல்லாம் செயல்பட வேண்டும் என்றெல்லாம் முறை வகுக்கப்பட்டிருந்தது. இன்றைக்குக் கலெக்டர் அவர்கள் ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாய அதிகாரிகள், என்ஜினியர்கள், மற்றவர்களையும் கூட்டிவைத்துக் கொண்டு பேசுவதால், அவர்களுக்கு தான் ஒரு மேல் அதிகாரிபோல பாவனைக்குக் காட்டிக்கொண்டு இருப்பதினால், சந்தோஷமாக ஜில்லா கலெக்டர் நல்ல முறையில் வேலை செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த அதிகாரம் இல்லாவிட்டாலும் அந்த பாவனையாவது இருப்பதினால்தான் இம்மாதிரி நடக்கிறது என்று எண்ணுகிறேன். ஜில்லாவில் இருக்கக்கூடிய மற்ற அதிகாரிகள்

25th March 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்

பழுதுண்டு வேறோர் பணிக்கு.

என்று ஔவையார் பாடியிருக்கிறார்.

ஓதுவான் எல்லாம் உழுவான் தலைக்கடைக்கே என்றிருந்த நிலைமாறி இன்று உழுபவனெல்லாம் ஓதுவாருடைய தலைக்கடைக்கு தினம்தினம் அலையவேண்டிய நிலையிருக்கிறது. விவசாயத் துறையும், வருவாய்த் துறையும் ஒரு அமைச்சரிடமே இருந்தால், இரண்டையும் பற்றி ஒருவரைக் கேட்டால் சரியான பதில் கிடைக்காது என்ற காரணத்தினால் வருவாய்த் துறைக்கு ஒரு தனி அமைச்சரும், விவசாயத் துறைக்கு ஒரு தனி அமைச்சரும், இரண்டாகப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டியது எங்களுடைய வேலை என்று விவசாய அமைச்சர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் கால்வாய் வெட்டப்பட வேண்டும், குளங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், வருவாய்த் துறை அமைச்சரைக் கேளுங்கள் என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக எங்கள் பகுதியில் இருக்கிற நிலைமையைச் சொல்லுகிறேன். 1942-ல் லால்குடி வட்டம் காட்டூரில் சிறுமாங்குடி என்ற கிராமத்தில் 100 ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யக் கழிவுத் தண்ணீரை நாங்கள் உபயோகப்படுத்திக் கொள்கிறோம் என்று மனுக்கள் போடப்பட்டும், 1963-லும் அது தீர்வு காணாத நிலைமை இருக்கிறது. அதுவும் எங்கள் செலவில் நாங்களே செய்து கொள்ளுகிறோம் என்று கூறியும் கவனிக்கப்படவில்லை. அப்படி யாராவது பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் இறைத்தாலும் அதற்காகத் தண்டவரி வாங்குகிறார்கள். வாங்கிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், சில நிலங்களில் "யார் உனக்கு அனுமதி கொடுத்தது ?" என்று கேட்டு, அந்தப் பம்பு செட்டுகளை பிடுங்கிக் கொள்ளக்கூடிய நிலைமையும் இருக்கிறது. 100 ஏக்கருக்கு வாய்க்கால் வெட்டுவதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, இப்பொழுது இடை- 12-30 p.m.
ரென்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. யுத்த நெருக்கடியின் காரணமாக இல்லை ; வேறு என்ன காரணத்தினாலோ தெரியவில்லை. பல மனுக்கள் கொடுக்கப்பட்டும், கவனிக்கப்படாமல் இருக்கின்றன. விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எப்படியாவது அதை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வரி வசூல் செய்வதிலே இருக்கின்ற கெடுபிடிகளைப் பற்றி சில அங்கத்தினர்களும், வரியை எதிர்க்கின்ற முறையிலே சில அங்கத்தினர்களும் பேசினார்கள். நாங்கள் ஏதோ வரியை விதிக்கக் கூடாது என்று சொன்னதாக எங்கள் மீது சிலர் குற்றம் சாட்டினார்கள். வரியே வேண்டாமென்று சொல்லி, வரி கொடா இயக்கத்தை ஆரம்பித்தவர்கள் நாங்கள் அல்ல. வரியே கேட்கக் கூடாதென்று நாங்கள் சொல்லவில்லை. "வானம் பொழியுது பூமி விளையுது உனக்கு ஏன் கப்பம்" என்று கேட்பவர்கள் நாங்களல்ல. வரி வசூலிக்க வேண்டியதுதான். யாரால் தாங்க முடியுமோ, அவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டும். இப்பொழுது சர்க்கார் கொடுத்த கடன்களை வசூலிப்பதில் பல கெடுபிடிகள் ஏற்படுகின்றன. விவசாயிகளுக்கு உதவி செய்வோம் என்று சொல்லிவிட்டு, அந்த உதவியை விவசாயிகள் பரவலாக அனுபவிக்க வருகிற நேரத்திலே, கொடுத்திருப்பதை வசூலிப்பதில் இப்பொழுது கெடுபிடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒருகால் இனிமேல் விவசாயிகள் சர்க்காரிடமிருந்து கடன்களை வாங்கக் கூடாது என்ற எண்ணத்தால் இப்படிச் செய்யப்படுகிறதோ, என்னவோ தெரியவில்லை. நேற்று முந்தின நாள் என்னுடைய தொகுதிக்கு கனம் விவசாய அமைச்சர் அவர்கள் வந்தார்கள். அவர்களிடமும் நான் குறிப்பிட்டேன். சாத்தமங்கலம் விவசாயிகளுக்கு உழவு, மாடு, உரம், மற்றவைகளுக்காக கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நெல் அறுவடை ஆகிறது. அப்படி அறுவடையான நெல்லை களத்திலிருந்து கொண்டு போக விடாமல் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பல கெடுபிடிகள் நடைபெற்று வருகிறது. சாத்தமங்கலத்திலே மட்டுமல்ல மேலும் பல இடங்களிலேயும் தொடர்ந்து இம்மாதிரியான கெடுபிடிகள் நடைபெற இருக்கின்றன. அதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எந்த அளவுக்கு வரி வசூல் செய்வதிலே அக்கறை காட்டுகிறார்களோ

அந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பல வாய்க்கால்கள் வெட்ட வேண்டுமென்று திட்டங்கள் போட்டிருக்கலாம். ஆனால் அந்தத் திட்டங்களை நிறைவேற்றும்பொழுது தனிப்பட்டவர்கள் நிலத்தில் வெட்ட வேண்டிய காரணத்தால் ஹைகோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள் என்ற காரணத்தை அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்திலே, விவசாயிகளுக்கு எல்லாவிதமான சலுகைகளையும் அளிக்கிறோம் என்று சொல்லுகிற நேரத்திலே, புதிய வாய்க்கால்களை வெட்டித் தருவதிலே அமைச்சர் அவர்கள் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கனம் அங்கத்தினர் திரு. மாதா கவுடர் அவர்கள் தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசினார்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்த சிலர், தங்கக் கட்டுப்பாடு வந்த காரணத்தால், விவசாயி தன்னிடத்தில் இருக்கிற இரண்டு, மூன்று பவுன் நகைகளை வைத்துச் சிறிய கடன்கள் கூட வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அதற்கு கனம் அங்கத்தினர் அந்தக் காலத்திலே பத்தரை மாற்றுத் தங்கத்திலே தான் பாவைகளை வருணிப்பார்கள் என்று சொன்னார். தங்கம் போன்ற குணம் உடையவர்கள் என்று ஆண்களைக் கூட வருணிப்பது உண்டு. பத்தரை மாற்றுத் தங்கம் 14 காரட் தங்கத்தைவிட குறைந்தது என்று பொருள்படும்படிச் சொன்னார்கள். பத்தரை மாற்றுத் தங்கத்திற்கு எத்தனை காரட் இருக்க வேண்டுமென்பதைப் புரியாமல் பேசியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். பத்தரை மாற்றுத் தங்கம் என்று சொன்னால், 26 காரட் இருக்க வேண்டும். இப்பொழுது 14 காரட்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் குறிப்பிட்ட பத்தரை மாற்றுத் தங்கம் 14 காரட்டைவிட உயர்ந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுடைய நிலை எப்படி புறக்கணிக்கப்பட்டு வருகிறதோ, அதைப்போலதான் அதன் நிர்வாகத்தையும் அரசாங்கம் புறக்கணிக்கிறதோ என்று நான் எண்ணுகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதிக வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் கலெக்டரிடமிருந்து கொஞ்சம் அதிகாரத்தை எடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும், டி.ஆர்.ஓ. என்ற ஒரு அதிகாரியை வரி வசூல் செய்வதைக் கவனிக்க நியமித்திருக்கிறார்கள். அப்படி நியமித்திருந்தாலும் கூட, எந்த வேலையும் சரிவர நடைபெறவில்லை. தாலுகா ஆபீசுக்குப் போன பேப்பர் திரும்பி வருவதே கிடையாது. கலெக்டர் ஆபீசுக்குப் போன பேப்பர் கண்ணில்படாது என்ற நிலைதான் இன்னும் இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் காலத்திலே "ரெட் டேப்பிசம்" என்று இருந்தது. இப்பொழுது நம்முடைய சர்க்கார் காலத்திலே "கதர் டேப்பிசம்" ஆக இருக்குமோ என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. அந்தத் துறையிலே வேலை செய்கின்றவர்களுக்குச் சரியான வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எல்லாச் சர்க்கார் அலுவலகங்களுக்கும் மின் விளக்கு, மின் விசிறி வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த ரெவின்யூ இலாகாவைப் பொறுத்தவரையில் கலெக்டர் ஆபீசில் கூட மின் விசிறி கிடையாது. வெள்ளைக்காரர்கள் காலத்தில் அதிகாரிகள் வேலை செய்யமாட்டார்கள் என்று நினைத்து, மின் விசிறி போடாமல் இருந்திருக்கலாம். ஆனால் நம்முடைய சர்க்காரின் பணியாற்றுகின்றவர்களைப் பற்றி நாம் அவ்வாறு நினைக்கக் கூடாது. எல்லோரும் நன்கு வேலை செய்வார்கள். சில இடங்களில் போதுமான இட வசதி இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் இட வசதி செய்து கொடுத்து, மின் விசிறி வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல தாலுகா ஆபீஸ் கட்டடங்கள் இடிந்து விழக் கூடிய நிலையில் இருக்கிறது. கீழே உட்கார்ந்திருக்கும் அதிகாரி எப்பொழுது இடிந்து விழும் என்று பயந்து கொண்டே, வேலை செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டும். தாலுகா ஆபீசுகளிலும், கலெக்டர் ஆபீசுகளிலும் நல்ல முறையில் மின் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன், என்னுடைய பகுதியை இரண்டு மாவட்டங்களாகப் பிரிப்பதற்குத் தயாராகப் புதுக்கோட்டைப் பகுதியும், திருச்சிப் பகுதியும் இருக்கிறது. புதுக்கோட்டையை திருச்சி மாவட்டத்தோடு இணைக்கின்ற காலத்தில், அதைத் தனி மாவட்டமாகச் செய்ய வேண்டும் என்ற நிலைமை இருந்தது. திருச்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி இருந்தபோதிலும், புதுக்கோட்டை டிஸ்ட்ரிக்ட் காங்கிரஸ் கமிட்டி என்று இருக்கிறது. புதுக்கோட்டை கல்வி இலாகாவுக்குத் தனியாக ஒரு டி.இ.ஓ. இருக்கிறார். போஸ்டல் டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டாலும், அது மத்திய சர்க்காரின் பொறுப்பில் இருந்தாலும்கூட, தனி ஜில்லாவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலத்தான் அங்கே இருக்கிற ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்டுமெண்டைப் பொறுத்த வரையிலும் தனி மாவட்ட அலுவலகம் இருக்கிறது. அப்படியிருந்தும், என்ன காரணத்தினாலோ அது இன்னும் ஒரு தனி மாவட்டமாகப் பிரிக்கப்படவில்லை. இப்பொழுது ஒரு அஸிஸ்டெண்ட் கலெக்டர் இருக்கிறார். அங்கு ஒரு கலெக்டரை நியமித்தால் நிர்வாகம் இன்னும் நல்ல முறையில் இயங்கும். புதுக்கோட்டைப் பகுதி திருச்சியோடு இணைக்கப்பட்ட காலத்தில், காடாரம்பப் பகுதிகளெல்லாம் கழனிகளாக மாறிவிடும் என்று மக்கள் நினைத்தார்கள். இப்பொழுது முன்பு இருந்த நிலைமைதான் நீடிக்கிறது. புதுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு மந்திரி அங்கே இருந்தாலும்கூட, நிலைமை அப்படியேதான் இருக்கிறது. கனம் அமைச்சர் இதில் அக்கறை காட்டினால், சுயநலவாதி என்று சொல்லுவார்களோ என்று நினைக்கிறாரோ, என்னமோ தெரியவில்லை. ஆகவே, புதுக்கோட்டைப் பகுதியை ஒரு தனி மாவட்டமாக ஆக்கி, ஒரு தனி கலெக்டரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலில் கூட வடக்கு மாவட்டம், தெற்கு மாவட்டம் என்று பிரித்து, திருச்சியைச் சார்ந்தவை ஒரு பகுதியாகவும், கரூர், குளித்தலை, புதுக்கோட்டைப் பகுதிகள் தனிப் பகுதியாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. குளித்தலையைவிட மற்றப் பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருப்பதால், அவற்றைக் குறித்து தனி அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கேஷூர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பேசும்பொழுது பல அங்கத்தினர்கள் வரி விதித்தால்தான் நாட்டை ஆள முடியும் என்று பேசினார்கள். அதிகபட்சமாக எவ்வளவு வரி விதிக்க வேண்டுமோ, அவ்வளவும் விதித்தாகிவிட்டது. கடன் எவ்வளவுக்கு வாங்க முடியுமோ அந்த அளவுக்கு வாங்கியிருக்கிறோம். அப்படியிருந்தும் ஏன் நல்ல முறையிலே அபிவிருத்தி ஏற்படவில்லை என்றால், அதற்குக் காரணம் நிர்வாகத்திலே இருக்கிற ஊழல்கள்தான். இந்த இலாகாவிலுள்ள ஊழல்களைப் பற்றி கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள் நன்றாக எடுத்துச் சொன்னார்கள். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், இந்த நிர்வாகத்திலுள்ள ஊழலைப் பற்றிச் சொன்னதிலிருந்து, இந்த நிர்வாகம் எப்படி இருக்கிறது என்பது நன்கு தெரிகிறது.

தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றி கனம் அங்கத்தினர் அம்மையார் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசுவது ஊருக்கு உபதேசம் செய்வதுபோல இருக்கிறதே தவிர அவர்கள் கழுத்திலேயும், கைகளிலேயும் பத்தரை மாற்றுத் தங்கத்தைத்தான் அணிந்துகொண்டிருக்கிறார்கள்.

திருமதி சி. குழந்தையம்மாள் : நாங்கள் ஒன்றும் ஊருக்கு உபதேசம் பண்ணவில்லை. ஜோடி ஜோடியாக வளையல்களை கழற்றிக் கொடுத்திருக்கிறோம். பிற ஆபரணங்களையும் கழற்றிக் கொடுத்துவிடுங்கள் என்று சுமங்கலிகளைப் பார்த்து குடும்பத்துப் பெரியவர்கள் சொல்லமாட்டார்கள்.

கனம் திரு. வெ. ராமையயா : இந்த ரெவின்யூ இலாகாவிலே ஊழல்கள் இருப்பதாக கனம் அங்கத்தினர்கள் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொன்னால் லாபமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ போய்விட்டார்கள். அவர்கள் உண்மையிலேயே இந்த இலாகாவிலே உள்ள ஊழல்களை எடுத்துப் பேசினால் அதற்குப் பதில் சொல்ல முடியும். ஆகவே தங்கத்துக்குப் போய்விடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : மற்ற அங்கத்தினர் ஒருவர் சொன்னதால்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது. அதற்காகத்தான் சொன்னேன். நிர்வாகத்தில் இருக்கிற ஊழல்களைப் பற்றிச் சொல்வதற்குத்தான் வருகிறேன். வரி பாக்கிக்காகக் கதிர்களை ஜப்தி செய்து வருகிறார்கள். ஒரு விவசாயி கதிர்களை அறுவடை செய்தால் தான் அவனுடைய கஷ்டங்கள் நீங்கும். வரியைக் கொடுக்க முடியும். வரி கட்ட ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே கதிர்களை ஜப்தி செய்துவிட்டால் எப்படி அந்த விவசாயி வரிகளைக் கட்ட முடியும்? தங்கம் ஒன்று இருந்தது. அதற்கும் மாசு ஏற்பட்டு விட்டது. இந்த நிலையினால் விவசாயி மிக மிகக் கஷ்டப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே விவசாயிகள் கட்ட வேண்டிய வரிக்காக கதிர்களை ஜப்தி செய்கின்ற முறையை எடுத்துவிட வேண்டும்.

விவசாயிகள் மீது உள்ள வரிப்பளுவைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அயல் நாட்டைப் பாருங்கள். நன்றாகச் தெரியும். அவர்கள் நிலவரி போடாமல் அரசாங்கம் நடத்தவில்லையா? நமக்குப் பக்கத்திலே இருக்கின்ற சிலோனைப் பாருங்கள். அங்கேயும் நிலத்துக்கு வரி இல்லை. நமது நாடு சுதந்திரம் அடைந்த பின்புதான் அந்த நாடும் சுதந்திரம் அடைந்தது. ஆகவே விவசாயிகள் மீது போடுகின்ற வரிப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அப்படி இருக்கும்போது அவர்களுக்குப் போடுகின்ற வரியை ஏன் குறைக்கக் கூடாதென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜமாபந்தி நடக்கிறது. அதற்காகக் கிராமத்திலிருந்து கர்ணங்களே புத்தகங்களையும் மற்ற ரெக்கார்டுகளையும் தங்கள் சொந்த செலவிலேயே லாரியிலே ஏற்றுக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதற்காக அவர்கள் வாடகை தரவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு குரூப்பும் இவ்வளவு தர வேண்டுமென்று திட்டம் இருக்கிறது. அதைக் கொடுத்தால்தான் அவர்களுடைய ஜமாபந்தி நடக்கின்றது. ஜமாபந்தி நடந்தால், அதனால் அவர்கள் அடையும் நஷ்டத்தை ஈடு செய்வதற்குச் சாதாரண ஏழை எளிய விவசாயிகளிடம் பணத்தை எந்த வழியிலேயாவது பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆகவே இந்த நிலையெல்லாம் மாற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கடம்பூர் குரூப் என்று ஒரு குரூப் இருக்கிறது. அந்த கிராமத்து ஹெட்மேன் அதைச் சேர்ந்த மூன்று நபர்களுக்கு மாட்டு லோன் கொடுப்பதற்கு சர்டிபிகேட் செய்து இருக்கின்றார். அந்த சர்டிபிகேட் செய்த நபர்களுக்கு அந்த மாட்டு லோன் கொடுக்கப்படவில்லை. காரணம் இரண்டு நபர்கள் பேர் மாறாட்டம் செய்து பணத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் இது விஷயமாக மனுக் கொடுத்தும் கூட—மந்திரி அவர்களுக்கு மனு கொடுத்தும்கூட மூன்று வருஷங்களாக எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அறந்தாங்கி தாலூக்காவிலே போதமங்கலம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு ஒரு வருஷமாக ஒரு ரைஸ் மில் ஓடிக் கொண்டிருக்கிறது. அதுவும் லைசென்ஸ் இல்லாமலேயே ஓடிக் கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட நபர்கள் தாசில்தாருக்கு மனுச் செய்தார்கள். மனுச் செய்தும் கூட எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்குப் பிறகு மனுச் செய்ததின் பேரில் தாசில்தார் அவர்கள் அந்த மில் லைசென்ஸ் இல்லாமல் நடக்கக் கூடாது என்று சொல்லி சீல் போட்டுவிட்டு வந்தார்கள். ஆனால் கொஞ்ச தூரம் வந்ததும் அந்த ரைஸ் மில்

சொந்தக்காரரின் கையிலே சாவியைக் கொடுத்துவிட்டு வந்துவிட்டார்கள்.
அந்தக் கிராமவாசிகள் எவ்வளவோ முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு
மனுச் செய்தும் கூட, இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்
கொள்ளப்படவில்லை. அந்த ரைஸ் மில் இன்னமும் ஓடிக் கொண்டிருக்
கிறது. ஆகவே......(மணி அடிக்கபப்பட்டது).

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் தலைவர் அவர்களே,
மாவட்ட நிர்வாகத்தைப் பற்றிய மானியக் கோரிக்கையிலே நகரத்தின்
பிரதிநிதியாக இருக்கின்ற எனக்கு இடமில்லை என்றாலும் மாகாணத்தினு
டைய நிர்வாகத்திலே நமக்குப் பங்கு உண்டு என்ற காரணத்தினாலே
நான் ஒருசில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பேசியவர்களெல்லாம் விவசாயிகளுக்கு வரி கூடாது என்றெல்லாம்
பேசினார்கள். கடந்த கால சரித்திரத்தைப் பார்த்தாலே தெரியும், விவ
சாயிகள் தங்கள் நிலத்தின் விளைச்சலிலே 6-ல் ஒரு பங்கை வரியாகக்
கொடுத்துத்தான் நிர்வாகம் நடந்து வந்திருக்கிறது என்றால், க்ஷேமநல
அரசாங்கமாகிய நம் சர்க்கார், எல்லா மக்களும் முன்னேறிக் கொண்டு வரு
கிற நிலையிலே ஆட்சியை நடத்த வரி வாங்காமல் முடியுமா என்பதை
யோசிப்பார்களேயானால், இப்படிப் பேசமாட்டார்கள். வரிகொடா இயக்கம்
ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள் அல்லவா? அந்தத் தென்றல் வீசுவ
தன் காரணத்தாலோ என்னவோ இப்படி எல்லாம் பேசுகிறார்கள்.

மாவட்ட அளவிலே உள்ள குறைப்பாடுகளை எப்படியெல்லாம் குறைத்
தால் ஆட்சி நல்ல முறையிலே நடந்து மக்கள் பயனடைய முடியும் என்ற
காரணத்தாலே ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முதலில் போர்டு ஆப் ரெவின்யூவை எடுத்துக் கொள்வோம். அங்குள்ள
அலுவலர்களுக்கு வசதிகள் சரியாக அளிக்கப்படவில்லை. காரணம் அபி
விருத்தித் திட்ட வேலைகள் அதிகரித்து வருவதால் அவர்களுக்கு வேலை
பளு அதிகமாகிறது. அவர்களுடைய வேலை பளுவைக் குறைக்க வேண்டு
மென்று சொல்லுவது வரவேற்கத் தக்கதுதான்.

போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் என்ற ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்
டிருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டுதான் பல காரியங்களைச் செய்து
வருகிறார்கள். அதில் வேண்டாத பல விஷயங்கள் இருக்கின்றன. அந்த
வேண்டாத ஆர்டர்களெல்லாம் வேதனை தருவதைப் பார்க்கிறோம். வெள்ளை
யர் காலத்திலே போடப்பட்ட ஆர்டர்கள் அவை. அவர்கள் வேண்டுபவை,
வேண்டாதவை எல்லாவற்றையும் அதில் சேர்த்திருக்கிறார்கள். ஆகையி
னாலே எனக்கு முன் பேசிய திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னதுபோல
அவற்றைத் தீவிரமாக ஆராய்ந்து, எவை நமக்குத் தேவை, எவை
நமக்குத் தேவையில்லை என்பதைப் பார்த்து, வேண்டாதவற்றை எடுத்து
விட்டு, இன்னும் எளிய முறையிலே அமைத்துத் தர வேண்டுமென்று
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ரெவின்யூ இலாகா வரியை வாங்கித் தருகிற இலாகா. இந்த
இலாகாவைச் சேர்ந்த ஆபீஸ்களில் பார்த்தால் உடைந்த நாற்காலி
களையும், உடைந்த மேஜைகளையும் வைத்துக் கொண்டுதான் வேலை பார்த்து
வருகிறார்கள். இந்த இலாகாவில் வேலை துரிதமாக நடக்க வேண்டுமென்
றால் மேஜை நாற்காலிகள் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும். நல்ல
இடத்தில் அமர்ந்து நல்ல மேஜை நாற்காலிகளில் உட்கார்ந்து வேலை
பார்த்தால்தான் உற்சாகம் இருக்கும். உடைந்த நாற்காலிகள், உடைந்த
மேஜைகளை வைத்துக் கொண்டு வேலை பார்த்தால் வேலை செய்கிறவர்களுக்கு
முழு உற்சாகம் இருக்காது. வேலை செய்யும் சூழ்நிலையை சிருங்காரமாக
வைத்துக்கொண்டு இருந்தால் தான் வேலை செய்கிறவர்கள் விருவிருப்புடன்
வேலை செய்வார்கள். அமைச்சர் அவர்கள் தன்னுடைய இலாகாவாகிய
இந்த இலாகாவிலே இப்படி உடைந்த நாற்காலிகளும், உடைந்த மேஜை
களும், எந்தெந்த மாவட்டங்களிலே இருக்கின்றன என்று பார்த்து,
அவற்றை எப்படி எப்படிச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமோ அதை எல்லாம்
செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட நிர்வாகம்
இல் பல [illegible] துறைகளில் இன்றைக்குக் கால தாமதம் ஏற்படுவதை [illegible]

'க்வாஸி ஜுடிஷியல்' முறையில் நீதி நிர்வாகத்தில் இருக்கும் அதிகாரியாக மாவட்ட கலெக்டர் உட்கார்ந்து பல காரியங்களைக் கவனிக்கும்போது, 6 மாதம், 9 மாதம் ஆகியும் கூட, ஆர்டர் எழுதாமல் இருக்கிறார்கள். கால தாமதத்திற்குக் காரணம் என்ன? 'க்வாஸி ஜுடிஷியல் பாடி'யாக மாறி, கேசை விசாரித்து, அதற்கென்று பல வக்கீல்கள் வாதித்தும்கூட, உத்தரவு போட ஒரு கலெக்டருக்கு ஏன் இவ்வளவு தாமதம் ஆகிறது என்பதை விசாரிக்க வேண்டும். அதற்குத் தக்க பதில் கொடுக்கத் தவறிவிட்டால், அவர் கலெக்டராகவே இருப்பதற்கு லாயக்கில்லை என்று அவரை மாற்றிவிட வேண்டும். எதற்காக இதை நான் கூறுகிறேன் என்றால், மாவட்ட நிர்வாகத்தில் அமைந்திருப்பவர்கள் எவ்வளவு துரிதமாக நன்மை செய்து கொடுக்கிறார்களோ, அந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு நல்ல பெயர் இருக்கும். அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு தாமதமாகக் காரியங்கள் செய்கிறார்களோ, எவ்வளவுக் கெவ்வளவு மக்களுக்குச் சிக்கல்களைக் கொடுக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கெட்ட பெயர் தான் நமக்குக் கிடைக்கும். ஆகையால், மாவட்ட அதிகாரிகளை நாம் போடும்போது நல்ல உற்சாகம் உடையவராகவும், ஊக்கத்தோடு உழைப்பவராகவும், துரிதமாக வேலை செய்பவராகவும் பார்த்துப் போட வேண்டுமே தவிர, எதற்கெடுத்தாலும் காலதாமதத்திலேயே ஒரு களிப்புள்ளம் அடைகிறவர்களைப் போட்டால் அது நிர்வாகத்தையே பாதித்து விடுகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சில தலைமை ஆபீசுகளுக்குப் போனால், கலெக்டர் எட்டு மணி நேரம், 9 மணி நேரம் வரையில் இரவில் வேலை செய்வதைப் பார்க்கிறோம். ஒரு தலைமை அதிகாரி இரவு எட்டு மணி வரையில் உட்கார்ந்து ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தால், அவருக்குக் கீழ் வேலை செய்யும் கிளார்க்குகள், மற்றவர்கள் ஆபீசைவிட்டுப் போகப் பயப்படுகிறார்கள். எட்டு மணி வேலைத் திட்டம் என்று வைத்துவிட்டு, இரவு எட்டு மணி வரையில் கலெக்டர், ஆபீசில் வேலை செய்யும் காரணத்தால், அவருக்குக் கீழிருக்கும் ஊழியர்கள் வீட்டுக்குப் போக முடியாமல் அவதிப்படுகிறார்கள். அவர்கள் எப்பொழுது வீட்டுக்குப் போவது? பிள்ளை குட்டிகளைப் பார்ப்பது ஆங்கிலேயரிடம் சில நல்ல பழக்கங்கள் இருந்தன. மாலை 5 மணி அடித்தவுடனே ஆங்கிலேய அதிகாரிகளாக இருந்தவர்கள் ஆபீசைவிட்டு வெளியே போய்விடுவார்கள். ஃபைல் பார்க்க வேண்டுமானால், பாக்கியுள்ளவற்றை வீட்டுக்குக் கொண்டுவரச் சொல்லி அங்கே அவற்றைப் பார்ப்பார்கள். ஐந்து மணிக்குமேல் ஆபீசில் என்ன வேலை என்று நான் கேட்கிறேன்.

சாதாரணமாக ரிடையர் ஆவதற்குச் சில வருஷங்களுக்கு முன்னால் கடைசி காலத்தில் கலெக்டராகப் போடுகிறோம். அதனால், அவர்களுக்கு உற்சாகம் இருப்பதில்லை. நடுத்தர வயதுள்ளவர்களாகப் போட்டால் நல்ல வேலை செய்தால் ப்ரொமோஷன் கிடைக்கும் என்ற எண்ணத்தில் உற்சாகத்தோடு, விருவிருப்போடு வேலை செய்வார்கள். 52, 55 வயதுள்ளவர்களைக் கலெக்டராகப் போட்டோமானால், "நாம் தான் வீட்டுக்குப் போகப் போகிறோமே, ஏன் இதைப் பற்றிக் கவலை" என்ற நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலை இருக்கக் கூடாது. ஓரளவுக்கு நடுத்தர வயதில் உள்ள, அனுபவம் வாய்ந்தவர்களைக் கலெக்டர்களாகப் போட்டால், காலதாமதம் இல்லாமல் இன்னும் சற்றுத் துரிதமாக வேலை பார்க்க வழி இருக்கும்.

தங்கக் கட்டுப்பாட்டின் காரணமாகக் கிராமத்திலுள்ள விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நேரத்தில் பணம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தேவையான சமயங்களில் தங்க நகைகளை அடகு வைத்துக் கடன் பெற்று விவசாயத்திலே ஈடுபடுவது வழக்கம். அந்த வசதிகளை முழுக் கடன் உதவித் திட்டத்தின் மூலம் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள், எல்லாக் கிராமங்களிலும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜப்பான் நாட்டில் என்ன செய்கிறார்கள் என்றால், விவசாய வேலை ஆரம்பிப்பதற்கு முன்பே, அரசாங்கம் விவசாயிகளுக்குத் தேவையான செலவுத் தொகையைக் கடனாகக் கொடுத்து, அறுவடையானபிறகு திரும்பவும் வாங்கிக்கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்துவிட்டால், விவசாயிகள் வட்டிக் கடைக்காரர்களிடம் கடனுக்காகக் காத்து நிற்க வேண்டாம். தங்கத்தை வைத்துக் கடன் பெறும் வசதியும் இப்பொழுது குறைந்துவிட்டதால், முழுக் கடன் உதவித் திட்டத்தை (ஃபுல்

பினான்ஸ் ஸ்கீம்) எல்லாக் கிராமங்களுக்கும் விஸ்தரித்து, தனி நபர் ஜாமீனில் விவசாயத்தைப் பொறுத்துக் கடன் அளித்து, அறுவடை காலத்தில் திருப்பிக் பெற்றுக் கொள்ளலாம். இதனால் வட்டியும் குறைவாக இருக்க முடியும். விவசாயமும் ஓரளவுக்கு ஒழுங்காக நடக்கும். இந்த முக்கியமான சீர்திருத்தங்களைக் கனம் அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்த்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகம் ரெவின்யூ மானியம் ஆகிய இந்த மானியங்களின்கீழ் இறுதியாகக் கனம் உறுப்பினர்கள் கூறியதைத் தொடர்ந்து சில கருத்துக்களைச் சமர்ப்பிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

இந்த மானியத்தின் மீது நடைபெறுகிற விவாதத்தில் பேசிய பல் நண்பர்களும், ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் வித்தியாசம் இல்லாமல், பொதுவாக இருந்து வரக்கூடிய சில சூழ்நிலைகளை, தங்களுடைய அனுபவத்தில் கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதைக் குறித்து மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நானும் அவைகளையெல்லாம் மீண்டும் வற்புறுத்திச் சொல்லாமல், அதனைத் தொடர்ந்து கோடிட்டு சில விவரங்களை மட்டும் கூறுகிறேன்.

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பில், "மாவட்ட அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையே இருக்க வேண்டிய உறவு நிலை" என்ற பகுதியில்.

> "அரசாங்க ஊழியர்கள் தங்கள் அலுவல் காரணமாகப் பொது மக்களிடம் பழகும்போது சுமுகமாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்; அரசாங்கம் மக்களின் நன்மைக்காக இருக்கிறது, அவர்களுக்குப் புறம்பானதல்லவென்பதைப் பொது மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். இவ்வாறு அரசினர் தங்கள் ஊழியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருந்தனர். அரசாங்க ஊழியர் மக்களிடம் அலட்சியமாகவோ பொறுப்புணர்வின்றியோ நடப்பதாகத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டால், அரசினர் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அவர்கள் ஆதரவுள்ள அரசாங்கம் இப்போது இயங்கி வருவதால், அரசாங்க ஊழியர்கள் பொது மக்களிடம் அலட்சியமாகவோ பொறுப்புணர்வின்றியோ நடப்பார்கள் என அஞ்சத் தேவையில்லை."

என்று உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். ஆனால், இங்கே பேசிய கனம் உறுப்பினர்களுடைய உரைகளில்—அவர்கள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—இழையோடிய ஒரு விவரத்தை கனம் அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து கவனித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் இதிலே குறிப்பிட்டிருக்கின்ற பொறுப்புணர்ச்சி அதிகாரிகளிடத்திலே இருக்கிறதா என்று பார்த்தால், இன்றைக்குச் சுருக்கமாகச் சொல்வதானால், ஊழலே, உதாசீனமே, தாமதமே, உன் பெயர்தானா சென்னை சர்க்கார் என்று கேட்கவேண்டிய நிலையில் உள்ளது; நாம் . . . எவ்வளவோ சொல்லலாம், உரைகளிலும் வாதாடலாம். ஆனால், தாலூக்கா அலுவலகங்களிலோ, மற்ற அலுவலகங்களிலோ ஏழை சாதாரண விவசாயி ஒருவன் தனக்கு வேண்டிய ஏதாவதொரு வேலையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று சென்றால், அவனுடைய வேலை மிகவும் தாமதமாவதைத்தான் நாம் பார்க்கிறோம். இரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ரயில் டிக்கட் வாங்குகிற மாதிரியும், சினிமாக் கொட்டகைக்குச் சென்று சினிமா டிக்கட் வாங்குகிற மாதிரியும் தபாலாபீசில் கார்டு வாங்குகிற மாதிரி ஏழை விவசாயி சுலபமாகக் காரியங்களைப் பெறவேண்டும். சாதாரண ஏழை விவசாயினுடைய காரியங்கள் அலுவலகங்களில் விரைவில் நடைபெறச் செய்யவேண்டும் என்பது இந்தச் சர்க்காரின் லட்சியமாக இருக்க வேண்டும். கலெக்டரும், மற்ற அதிகாரிகளும் ஏழை மக்களிடம் நல்ல விதமாகப் பழகவேண்டும் என்றெல்லாம் சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், ஆங்காங்கே நடைபெறும் நிலையைக் காண நான் வருந்துகிறேன்.

கிறேன். எதிர்க் கட்சியினர் சொல்வதை மந்திரிமார்களும், ஆளும் பொறுப்பிலிருக்கிறவர்களும் நல்ல அக்கறையோடு கவனிப்பார்களானால், நிச்சயமாக அவர்களுக்குக் கீழிருக்கும் சர்க்கார் ஊழியர்களும் பின்பற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த நிலை மேல் மட்டத்தில் இன்றைய தினம் இல்லை என்று நான் மிகவும் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

லஞ்சப் பழக்கங்களைப்பற்றி இங்கே பல கனம் உறுப்பினர்கள் எடுத்துரைத்தார்கள். லஞ்சப் பழக்கத்தைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் பற்றியெல்லாம் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்களிடம் நான் இங்கே சில நாட்களுக்கு முன் ஒரு கேள்வி கேட்டேன். "லஞ்சப் பழக்கம் எப்படி இருக்கிறது ?" என்று நான் கேள்வி கேட்டதற்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "லஞ்சப் பழக்கம் எங்கேதான் இல்லை ? எல்லா இடங்களிலும்தான் லஞ்சப் பழக்கம் இருக்கிறது என்பதைக் கனம் உறுப்பினரே ஒத்துக் கொள்ளுவார்கள்" என்ற வகையிலே அவர் பதில் சொன்னதைக் கேட்க உண்மையிலேயே எனக்கு வருத்தமாக இருந்தது. ஆனால், ஆந்திர மாநில முதல் அமைச்சர் திரு. சஞ்சீவரெட்டி, அவர்கள் சொல்லியது என்ன என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் கடந்த ஆண்டு ஆந்திர சட்ட மன்றத்தில் பேசும் போது, "ஆந்திராவில் சர்க்கார் ஊழியர்களிடத்திலே லஞ்சப் பழக்கம் இருக்கிறது என்பதை நான் பகிரங்கமாக இந்த மன்றத்தில் ஒத்துக்கொள்ளுகிறேன்" என்று ஒத்துக்கொண்டு "அதை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வேன்" என்கிற உறுதிமொழியையும் அளித்தார்கள். ஆந்திர முதல் அமைச்சர் கூறியிருக்கும் பதிலுக்கும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கும் இருக்கும் தாரதம்மியத்தை இந்தச் சர்க்கார் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். விவரம் இல்லாமல் இப்பொழுது அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று ஆண்டுகளாக எத்தனை அதிகாரிகள் லஞ்சம் வாங்கியதற்காகத் தண்டிக்கப்பட்டார்கள் ? எவ்வளவு பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள் ? எத்தனை அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது ? இவற்றைப் பற்றிய விவரங்களையெல்லாம் இந்தச் சபை அறிவதற்கு உரிமை இருக்கிறது என்ற இந்தச் சர்க்கார் கருதவில்லையா ? மொத்தமாக நீங்கள் (சர்க்கார்) சொல்லுகிறீர்களே தவிர, விவரம் தரவில்லை. விவரங்களை இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருந்தால் இன்னும் தவறான வழியில் போகிறவர்கள்கூட திருந்துவதற்கு ஒரு மார்க்கமாக இருந்திருக்கும். பாதுகாப்பு விஷயங்களைத் தவிர மற்றதையும் ரகசிய விஷயமாக வைக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது ? எல்லாவற்றையும் அறிய இந்த மன்றம் உரிமைப்பட்டிருக்கவில்லையா ?

கோயில்களைப்பற்றி ஒரு வார்த்தை நான் சொல்ல வேண்டும். பல கனம் உறுப்பினர்களும் கோயில்களைப்பற்றிச் சொன்னார்கள். கோயில்களின் நிர்வாகம், குறிப்பாக அற நிலையங்களின் நிர்வாகம், உண்மையிலேயே இன்றைய தினம் நல்ல வகையிலே நடைபெறுகிறது என்பதை ஆட்சேபிக்கத் தேவையில்லை. ஆனால், ஒன்றே ஒன்று. நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் நெடு நாட்களாக இந்த அற நிலையத் துறைப் பணியிலே திறமையோடு நல்ல காரியங்களைச் செய்தவர்கள். முன்பெல்லாம் ஆலயங்கள் ஆண்டவனை வழிபடுகிற இடங்களாக மட்டுமல்லாமல், நலந்தா, தக்ஷசிலம், காஞ்சீபுரம் பல்கலைக் கழகம் போன்றவைகளெல்லாம் பூசைக்குரிய இடங்களாக மட்டுமல்லாமல், கலாசார நிலையங்களாகவும், கல்வி நிலையங்களாகவும், சமுதாயக் கேந்திரங்களாகவும் இருந்தன என்பதையும் நாம் அறிகிறோம். திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் "கோயில் பெருச்சாளி" என்று வருணித்ததைப்போல முன்பிருந்த நிலைமைகள் மாறி, இன்றைக்குப் புது முறையிலே கோயில் நிருவாகங்கள் நடக்கின்றன என்றாலும், இன்றைக்கு இருக்கும் ஆலயங்கள் கலாசார நிலையங்களாகவும், கல்விக்கூடங்களாகவும், சமுதாயத்தின் கேந்திரங்களாகவும் அமைக்கப்பட வேண்டும் என்கிற கொள்கையை, இந்தச் [illegible] வருக்கத் தவறிவிட்[illegible].

திருவரங்கத்தில் இருக்கக்கூடிய ஆயிரங்கால் மண்டபங்கள், மதுரை 1-00 p.m.
யில் இருக்கிற ஆயிரங்கால் மண்டபங்கள், சிதம்பரத்தில் உள்ள மண்டபங்கள் எல்லாம் என் சமுதாய மக்கள் கூடுகின்ற இடமாக ஆக்கப்படக் கூடாது ? ஏசுநாதருடைய சீடர்களின் கல்விப் பணியினால் நாம் இன்றைக்கு மனிதர்களானோம். அவர்களுக்கும் முன்னாலே நாலாந்தாவிலே, காஞ்சீபுரத்திலே நம் முன்னோர்கள் அவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள். மீண்டும் கோவில் பணம் கல்விக்குத் திருப்பப்படவேண்டும். திராவிடச் சிற்பங்களான.........

கனம் திரு. வெ. ராமைய்யா : இடி இடிக்கிறது. (அப்போது இடி இடித்துக் கொண்டிருந்தது).

திரு. கே. ஏ. மதியழகன் : திராவிடச் சிற்பங்களான மாமல்புரத்துச் சிற்பங்கள், மதுரைக் கோயிலிலுள்ள சிற்பங்கள், மற்றும் பல இடங்களிலுள்ள சிற்பங்கள் எல்லாம் உலகத்திலேயே மகோன்னதமான சிற்பங்களாகும். இவற்றைப் போற்றி கலையின் உறைவிடமாக்க வேண்டும்.

அடுத்து மடாதிபதிகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். மடாதிபதி என்று சொல்லுகிற நேரத்தில் தஞ்சை புயல் நிதிக்காக நிதி திரட்ட நண்பர் கருணாநிதி ஏற்பாடு செய்த அண்ணா எழுதிய நாடகத்திலே நான் மடாதிபதி வேடம் போட்டது என் நினைவுக்கு வருகிறது. அந்தக் காட்சி இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. அந்த மடாதிபதி கூறுகிற வாசகங்களை இங்கே கூறுகிறேன்.

"எவன் ஒருவன் இந்திரியங்களென்னும் துட்டக் குதிரைகளுக்கு, அறிவென்னும் கடிவாளமிட்டு, அடக்கி, நன்னெறியெனும் பாதை வழியே செலுத்துகிறானோ அவனே அரனடி எனும் திருத்தலத்தை அடைவான். இடையே இச்சை என்ற நச்சுக்கொடி கிடக்கும். பச்சென்றிருக்கிறதே என்று பார்த்தாலே சிக்கினோரை சீரழிக்கும். அதைக் கடக்க வேண்டும். அதற்கு நிராசை என்ற சாட்டை கொண்டு குதிரையைத் தட்ட வேண்டும். மெய்யன்பர்களே ! பரமனருள் பெற்றோர் எல்லோரும் அங்ஙனம் செய்தே முக்தி பெற்றனர். பொன்னார் மேனியனைப் போற்று ! போகபோகாதிகளிலே லயிக்கும் சுபாவத்தை மாற்று. பார் பிறகு பாரிலே இன்பம், பரமபதத்திலே எல்லையில்லா ஆனந்தம் காண்பாய்." என்று நானே அந்த மடாதிபதி வேடத்திலே சொல்லி இருக்கிறேன். (சிரிப்பு) அந்த மாதிரியான போகபோகாதிகளிலே லயிக்கும் சுபாவத்தை மாற்ற வேண்டிய மடாதிபதிகளுக்கு ஆயிரக்கணக்கான நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏன் ? நில உச்சவரம்புச் சட்டத்திலே அவர்களுக்கு ஏன் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறீர்கள் ? அவர்களுக்குக் கொடுத்திருக்கும் விதிவிலக்கை நீக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கவில்லையா என்பதை இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு மடாலயங்களில் இருக்கிறவர்கள் மடச் சொத்துக்களை தங்களுடைய பூர்வ ஆஸ்ரம குடும்பங்களுக்குப் பாராதீனம் செய்கிற காட்சியையும் பார்க்கிறோம். அமைச்சர் அவர்களும் அதைப் பற்றி நன்றாக அறிவார்கள். அவர்களுக்குக் கிடைக்கின்ற நன்கொடைகள் எல்லாம் கூடத் தவறான வழியிலே போய்விடுகின்றன. ஒரு மடாதிபதி........

திருமதி டி. என். அனந்தநாயகி : அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்திலே பேச வேண்டிய விதமெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் இதிலே பேசிக்கொண்டிருப்பது சரியா ?

திரு. கே. ஏ. மதியழகன் : வக்கீல் உறுப்பினர் அவர்களுக்கு இது கூடத் தெரியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அப்படி ஒன்றும் தெரியாத வகையிலே கூறவில்லை. தர்மகர்த்தா நியமனத்தைப்பற்றி மட்டும்தான் இந்த மானியத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. விரிவான பேச்சுக்களெல்லாம் அந்தச் சட்டம் விவாதிக்கப்படும்போதுதான் கூறப்படவேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : மோட்ச சாம்ராஜ்யத்திற்கு வழிகாட்ட
வேண்டிய மடாதிபதிகள் மடங்களை காமவேள் நடனசாலை ஆக்கிக் கொண்
டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலபுலன்கள் ஏன்? சொத்து சுகங்கள்
ஏன்?

அடுத்தபடியாக, மாநில வீட்டு வசதிக் குழுவினர் நிலங்களை ஆர்ஜிதம்
செய்து கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து
கொடுப்பதற்காக அவ்வாறு நிலங்களை ஆர்ஜிதம் செய்வதை நான் பாராட்டு
கிறேன். அவர்கள் தற்போது செய்து வரக்கூடிய காரியம் மிகக் குறை
வாக இருக்கிறது. இந்தக் காரியத்திலே நாம் பெருமளவுக்கு ஈடுபட
வேண்டுமென்பதை நான் அமைச்சர் அவர்களிடம் எடுத்துரைக்க விரும்பு
கிறேன். ''நிலத்தின் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்காகவும், பல்வேறு
வீட்டு வசதித் திட்டங்களுக்காக நிலம் நியாயமான விலையில் கிடைப்பது
சாத்தியமாக இருப்பதாகவும், பெரிய நகரங்களில் நெரிசலைத் தவிர்ப்பதற்
காகவும் நிலங்களை முன்னதாகவே ஆர்ஜிதம் செய்வதே இத் திட்டத்தின்
நோக்கமாகும்'' என்று அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தின் நோக்
கங்களைப்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்தப் பெரிய காரியத்தை
நிறைவேற்றுவதற்காகக் கோடம்பாக்கம்—புதூரிலும், தென் சென்னை, வட
சென்னையிலும், மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலும் நிலங்
களை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நிலங்களை ஆர்ஜி
தம் செய்வதை வரவேற்கிறேன். என் பக்கத்திலே இருப்பவர்கள் இங்கு
இல்லை. சுதந்திராக் கட்சியைச் சார்ந்த அவர்கள் திட்டமிட்ட பொருளாதார
முன்னேற்றத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அல்ல. ஆனால் நான் பிரதிநிதி
யாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் திட்டமிட்ட பொருளாதாரத்
தில் நம்பிக்கை கொண்டதாகும். இருபது வருஷங்களுக்குப் பிறகு,
முப்பது வருஷங்களுக்குப் பிறகு சென்னை நகரமோ, கோவை நகரமோ,
மதுரை நகரமோ எந்த அளவுக்குப் பெருகும் என்பதைக் கணக்கில்
கொண்டு அந்த வகையிலே நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.
நான் பொதுத்துறை அமைச்சர் அவர்களிடம் ஒன்று சொல்வேன்—
வளருகின்ற சென்னை நகரத்திலே புற நகரங்களை ஏற்படுத்தலாம். கொத்த
வால் சாவடியை வெளியே கொண்டு போய் வைத்து கமர்ஷியல் நகர
மாக்கலாம். அதேபோன்று தொழிற்துறை நகரம் என்ற புற நகரங்களை
அமைக்கலாம். நம்முடைய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தொகு
தியிலே அரசாங்க அச்சுக்கூடம் இருக்கிறது. பி.டபிள்யூ.டி. ஒர்க்ஷாப்
இருக்கிறது. அங்கு ஜன நெரிசல் அதிகமாக இருப்பதைத் தவிர்க்க
அவற்றையெல்லாம் நகருக்கு வெளியே கொண்டுபோய் வைக்கலாம். அற
நிலையப் பாதுகாப்புத் தலைமை நிலையத்தை என்னுடைய ஆயிரம் விளக்குத்
தொகுதியிலே வைத்திருக்கிறார்கள். அதை மதுரையிலே வைக்கலாம்.
இப்படிப்பட்ட முறைகளிலே அலுவலகங்களை யெல்லாம் அமைத்துப் புற
நகரங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தமானில் குடியேறுகிறவர்களைப் பற்றி சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்
திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள். 1955-ல் இருந்து 1962 வரை
இத்தனை விவசாயிகளை அல்லது கைவினைஞர்களை அந்தமானில் குடியேற்ற
வேண்டுமென்று ஒதுக்கிய எண்ணிக்கை 136. ஆனால் அங்கே உண்மை
யாகக் குடியேறியவர்கள் 42 பேர்தான். ஆயுட் கைதிகள்தான் அந்தமா
னுக்குப் போகிறார்கள் என்ற மனோபாவம் மக்களிடத்திலே இன்னும்
இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடம் மிகச் செழிப்பான இடம், ரமணீ
யமான இடம், ஐந்து ஏக்கர் நஞ்சை நிலம் கொடுத்திருக்கிறார்கள்,
இன்னும் பல வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள்; குடியிருப்பு வசதிகளைச்
செய்து கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் தீவிரமாகப் பிரசாரம்
செய்து பொதுமக்கள் கவனத்தைக் கவரவேண்டும். அந்தக் காரியத்தைச்
சர்க்கார் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. இதிலே அரசாங்கம் கவனம்
செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்
துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : தலைவர் அவர்களே, இந்த இரண்டு
மானியக் கோரிக்கைகள்மீது 26 அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்
டிருக்கிறார்கள். அதைவிட முக்கியமானது, இந்த இரண்டு மானிய

கோரிக்கைகளின் மீதும் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணை
களின் எண்ணிக்கையைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் இந்த வருஷம்
அதிகமான வெட்டுப் பிரேரணை வந்திருப்பது இந்த இரண்டு மானியங்
களுக்குத்தான். ஒரு பக்கத்தில் அதற்காகச் சந்தோஷப்படுகிறேன். இந்த
வாதம் இன்றைக்கு இங்கே நடந்த முறையைப் பார்த்தோமானால் அங்கத்
தினர்கள் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற முறையிலே
பேசினாலும், பேசப்பட்ட கருத்துக்கள் இந்த ரெவின்யூ இலாகா இன்னும்
திறமையாக நடைபெறுவதற்கு வழிவகை காண வேண்டுமென்ற முறை
யிலேதான் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

இதில் எந்தவிதமான கோபமோ அல்லது ஆவேசமோ எதுவுமே இல்லை.
கடைசியாகப் பேசிய மதியழகன் அவர்கள் கூட இந்த மான்யத்தின் மீது
அவர்களுக்கு ஆவேசமான வார்த்தை வர முடியவில்லை. ஆனால் அவர்
பேசிக் கொண்டிருக்கும்போது திருமதி அனந்தநாயகி அவர்கள் குறுக்கிட்ட
தால் அவர்களுக்குச் சிறிது ஆவேசம் வந்தது, அவ்வளவுதான். பல
அங்கத்தினர்கள் பேசியதற்குத் தகுந்த முறையில் இது அரசாங்கத்தின்
முதுகெலும்பைப் போன்ற மான்யமாக இருப்பதாலும் அங்கத்தினர்கள்
குறைகளை நிதானமாகவே பேசினார்கள் என்று நினைக்கிறேன். இதை
முடிக்கும்போது இயற்கையைப் பயப்படுத்தும் முறையில் இடி இடித்தது.
ஆனால் நான் சந்தோஷப்படும் முறையில் இப்போது மழை பெய்கிறது....

திரு. கே. ஏ. மதியழகன் : புயல் வரப் போகிறது என்று அறிவிப்பு
சொல்லப்பட்டிருக்கிறது.

கனம் திரு. வெ. ராமையா : இன்று இம்மாநில விவசாயிகளின்
நிலையைப் பொறுத்தமட்டில் புயல் இந்த நேரத்தில் வந்தாலும் லாபமாக
யிருக்கும் என்று நினைக்கிறேன். இந்த நேரத்தில் மழை வேண்டும்.
இந்த விவாதத்தில் சுருக்கமாகப் பேசிப் பல குறைபாடுகளை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். சில அங்கத்தினர்கள் எப்போது பேசினாலும்
திருவள்ளுவர் அல்லது மற்ற புலவர்களைக் காட்டிப் பேசுவது வழக்கம்.
எல்லா மான்யக் கோரிக்கை விவாதத்தின் போதும் நான் இந்த மாதம்
தொடர்ச்சியாக இருந்தேன். அங்கத்தினர்கள் பல கருத்துக்களை எடுத்துச்
சொல்லும்போது, திருவள்ளுவரை அல்லது மற்ற புலவர்கள் சொன்
னதை எடுத்துக் காட்டிப் பேசும்போது, எல்லாம் இந்த மான்யத்திற்குத்
தான் பொருத்தமாக இருக்குமோ என்று நினைக்கும்படி அவற்றை
எல்லோரும் திருப்பிச் சொல்லி விட்டார்கள். குறிப்பாக அதிகமாகப் புல
வர்களைச் சுட்டிக் காட்டிப் பேசாத தர்மலிங்கம் அவர்கள் கூட பேசிய ஐந்து
பத்து நிமிடங்களில் அந்தப் பக்கமே போய்விட்டார்கள். இன்றைய விவா
தம், வரக்கூடிய ஆண்டில் மேலும் இந்த இலாகா திறமையாக நடக்க
ஆலோசனை சொல்லக்கூடிய முறையில் இந்த விவாதம் அமைந்திருந்தது.
அதற்கு நான் என் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். ரெவின்யூ
அட்மினிஸ்ட்ரேஷனில் உள்ள கஷ்டங்களை நாம் எல்லோரும் மனதில்
வாங்கிக் கொள்ளும் முறையில் இந்த ஆண்டு அதிகம் பேசாத கனம்
அங்கத்தினர் ராமசாமி நாயுடு அவர்கள் பேசும்போது இதிலுள்ள கஷ்டங்
களை எடுத்துக் கூறினார்கள். ரெவின்யூ மானியக் கோரிக்கை வரும்போது
இதில் எத்தனை விதமான பிரச்னைகளைப் பற்றி பேசலாம், அதிலும் கார
சாரமாகப் பேசலாம் என்பதைக் கடைசியாகப் பேசிய மதியழகன் அவர்கள்
எடுத்துக்காட்டினார்கள். இந்த இலாகாவில் நேரடிப் பார்வையில் அரசாங்க
ரீதியாகச் சில அமைப்புகள் இல்லாவிட்டாலும் கூட மாவட்ட ரீதியாகப்
பார்க்கும்போது அரசாங்கம் செய்யக்கூடிய அத்தனை காரியங்களும் மாவட்ட
ரீதியாக ஒரு கலெக்டருடைய பொறுப்பிற்கு வந்துவிடுகிறது என்று சொன்
னால் அது மிகையாகாது. அதை மனதில் பதிய வைத்துக் கொண்டால்
இப்போது சொல்லக்கூடிய குற்றச்சாட்டுகளில் உண்மையில் ஏதேனும்
நியாயம் உண்டா என்று சீர்தூக்கிப் பார்க்க முடியும். இந்த ஆண்டு
வரவு செலவைப் பார்த்தால், நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள
படி நாம் 120 கோடி ரூபாய் செலவு செய்தாக வேண்டும். இது
தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இத் தொகையை ஒவ்வொரு
இலாகாவும் செலவு செய்வதற்குக் கடமைப்பட்டிருந்தாலும் கூட, [illegible]

ஒதுக்கியிருக்கும் நிதியை அந்தந்த இலாகா நேரடியாகச் செலவு செய்யக் கடமைப்பட்டிருந்தாலும்கூட ஒரு கட்டத்தில் ரெவின்யூ இலாகாவின் முழு ஒத்துழைப்பும் இல்லாதிருக்கும் பட்சத்தில் பல இலாக்காக்கள் தங்கள் காரியங்களை நடத்த முடியாத ஒரு கட்டம் வந்து விடுகிறது. ஆகவே ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷன் குறித்துப் பேசும்போது குறிப்பிட்ட ஒரு இலாகாவைக் குறித்துச் சொல்லப்படுகிறது என்று யாரும் அச்சப்பட வேண்டாம். மாவட்ட ரீதியாகப் பார்க்கும்போது, இந்த அறிக்கையில் எத்தனையோ விதமான நிர்வாகங்களை அரசாங்க ரீதியாகப் பார்க்க வேண்டும். மாவட்டரீதியாக எத்தனையோ காரியங்களின் பொறுப்பை மாவட்ட கலெக்டர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது நீண்ட பட்டியலாகப் போய்விடும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷன் மீது கொடுத்த புகார்கள் எவ்வளவு இருந்ததோ அதையும் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நான் தைரியமாகச் சொல்ல முடியும், எந்த ஒரு நேரத்திலும் இது ஸ்தம்பித்துப் போகவில்லை. மாநிலத்தில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் இந்த இலாகாவில் அதிக வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கிறது என்று நான் தைரியமாகச் சொல்லமுடியும். இன்று நமக்குள்ள ஆசை எல்லாம் இது இன்னும் அதிக வேகமாக நடத்தப்பட வேண்டுமென்பதுதான். அக் கருத்தை நான் ஆதரிக்கிறேன். ஆனால் இது ஸ்தம்பித்துப் போய்விட்டது என்று ஒரு சிலர் நினைப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். திட்டத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய மதியழகன் அவர்களைப் போன்றவர்கள் ஒன்றை ஞாபகத்தில் வாங்கிக் கொள்ள வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் முடிந்து, இன்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் இருக்கும்போது நாம் பெருமைப்படக் கூடிய முறையில் திட்டங்களை வெற்றிகரமாக முடித்திருக்கிறோம் என்று சொல்ல முடியும். அப்படிப் பார்க்கும்போது அதில் அதிகப் பங்கும் ரெவின்யூ இலாகாவிற்குத்தான் உண்டு என்று சொன்னால் மிகையில்லை. இவர்கள் ஒத்துழைப்பு சரியான முறையில் இல்லாதிருக்கும் பட்சத்தில் நாம் எதிர்பார்த்த வெற்றி திட்ட ரீதியாகக் கிடைத்திருக்க முடியாது. திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு நல்ல முறையில் இந்த இலாகா தன் ஒத்துழைப்பைக் கொடுத்து அந்த அளவில் செயல்பட்டிருக்கிறது. சமீபத்தில் இந்த ஆண்டு இதில் பெரிய உணர்ச்சி வந்திருப்பதாக யாராவது கருதினால் அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த இலாகா சரியாகத்தான் செயல்பட்டு வருகிறது. ஸ்தம்பித்துப் போய்விடவில்லை. மேலும் இவ்விலாகா நன்கு செயல்பட நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நல்ல முறையில் மக்களின் கஷ்டங்களைப் போக்கச் செயல்படுகிற ஒரு அமைப்பு இது என்று பலர் கூறியதுபோல் விவசாய மக்களுக்கு இந்த இலாகா நேரடியாகத் தொண்டு செய்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். பல அங்கத்தினர்கள் கூறியது போல் மற்ற இலாக்காக்களின் திட்டங்களை கிராமவாசிகள் புரிந்து கொள்கிறார்களோ என்னவோ; ஆனால் ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்ட மட்டில் அத்தனை அமைப்பையும் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் புரிந்து கொண்டிருப்பதால்தான் குறைபாடுகளை எடுத்துச் சொல்ல முடிகிறது. அப்படி எடுத்துக் கூறித் தீர்வு காணவும் முயற்சிக்கிறார்கள். இங்கு சொன்னது, இன்றைக்கு இருக்கக் கூடிய குறைபாடுகளைச் சொல்லவில்லை. 5, 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு கேள்விப்பட்ட குறைபாடுகளை இன்றுள்ள குறைபாடுகளாகவே நினைத்துக் கொண்டு பேசுவதற்கு நான் பதில் சொல்ல முடியாது. நான் சொல்லிக் கொள்கிறேன், இவ்விலாகா திறமையாகச் செயல்பட வேண்டுமென்ற அக்கறை அங்கத்தினர்களுக்கு எவ்வளவு இருக்கிறதோ அதே அக்கறை எனக்கும் உண்டு. என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டினால் அதற்குத் தீர்வு காண முடியும். இதை நான் தைரியமாகச் சொல்கிறேன். இங்கு சட்டசபை கூட்டங்களில் மட்டுமல்ல சொல்வது, எனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் இதைக் கூறுகிறேன். ஒரு பெண் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள், இப் பொறுப்பை நான் மேற்கொள்வதற்கு முன்பு மின்சாரம் அல்லது போக்குவரத்து [illegible] பொறுப்பில் இருந்தபோது நான் கிராமங்களுக்குப் போவதுபோல் இப்

போது போவதில்லை என்று சொன்னார்கள். அந்தக் குற்றச் சாட்டை ஒப்புக் கொள்ள நான் தயாராயில்லை. ஏனெனில் ரெவின்யூ வேலைகளைத் திட்டமுறையில், சரியான முறையில் இதிலுள்ள கஷ்டங்களைத் தெரிந்து கொள்ள நான் தீவிர முயற்சி எடுத்து வருகிறேன். சட்டசபை அங்கத்தினர்களிடமிருந்து குறைபாடுகளைத் தெரிந்து கொள்ள எப்படி முயற்சி எடுக்கிறேனோ அதேபோன்று மாவட்ட ரீதியாக இருக்கக்கூடிய ஒவ்வொரு டெவலப்மெண்ட் கவுன்ஸிலில் அங்கத்தினரையும் சந்தித்து அவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள முயற்சி எடுக்கிறேன். அப்படிப் பார்க்கும்போது இருக்கக்கூடிய சாதாரணக் குறைபாடுகளை விரைவாக நீக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எல்லாக் குறைபாடுகளையும் நீக்க வேண்டுமென்ற முறையில்தான் மாவட்ட ரீதியாக அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக பெரிய ஆக்க வேலைகள் நடக்கும்போது, கிராம அபிவிருத்தி வேலைகள் நடந்து கொண்டிருக்கும்போது ஏராளமான பொறுப்பை மாவட்ட அதிகாரிகளிடத்தில், குறிப்பாக ரெவின்யூ அதிகாரிகள் இடத்தில் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. இன்றைக்கு அவர்களுக்கு இருக்கக்கூடிய வேலைப் பளுவைப் பார்த்தோமானால், 10 வருஷங்களுக்கு முன்பு இருந்ததையும் இன்றைக்கு இருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இதை ஒரு அதிகாரி எப்படி இவ்வளவு திறமையாகச் செய்ய முடியும் என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. அப்படி இருந்தாலும் கூட அவர்களுக்குக் கொடுத்திருக்கும் பொறுப்பைத் திறமையோடும், உணர்ச்சியோடும், தேச பக்தியோடும் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மையில் நிர்வாகம் செய்யப்படுகிற காரணத்தால்தான் ஏராளமான வேலையை அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, மாவட்ட ரீதியாகப் பார்க்கும்போது ஒரு கலெக்டருடைய அதிகாரம் அல்லது அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பு பற்றி ஒரு பட்டியலே தயார் செய்துவிடலாம். ஒரு மாவட்டக் காரியாலயத்துக்கு நான் சென்று அங்கு கலெக்டர் அவர்கள் செய்யக்கூடிய வேலைகள் என்னவென்று தெரிந்துகொள்வதற்கு ஒரு பட்டியல் தயார் செய்து கொடுங்கள் என்று கேட்டேன். அப்படி ஒரு ஜில்லாக் கலெக்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மற்ற எல்லா வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, இன்றைக்கு நிர்வாக அமைப்பில் இருக்கக்கூடிய முடிவுப்படி அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்கள் என்னவென்று பார்த்தால் அவர் மாதம் ஒன்றுக்கு 35, அல்லது 40 கமிட்டிக் கூட்டங்களுக்குக் கட்டாயம் தலைமை தாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

அதே நேரத்தில் இப்போது இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் இணைப்பு நிலைமையிலும் பார்த்தால் அவர்கள் எத்தனை மணி நேரம் பஞ்சாயத்து யூனியன் வளர்ச்சிக்கான வேலைகளைப் பார்ப்பதற்குச் செலவு செய்தாலும் போதாது என்ற ஒரு காட்சியைத்தான் பார்க்கிறோம் அதல்லாமல் இன்னும் அதிகமாகப் பொறுப்பு அவருக்குக் கொடுத்திருக்கிறோம். இதையெல்லாம் தாங்கிக்கொண்டு நல்லபடியாக அவர்கள் செயல்படக்கூடிய காரணத்தால்தான் இந்த முன்னேற்றத்தை நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு அதிகமான ஒத்துழைப்புக்காகப் பல அதிகாரிகளை நமது அரசாங்கம் நியமனம் செய்திருக்கிறது. மாவட்ட ரீதியாக ஒவ்வொரு ஜில்லாக் கலெக்டருக்கும் எத்தனையோ உதவியாளர்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் நாம் உதவியாளர்களை நியமனம் செய்திருந்தாலும்கூட, இறுதி முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு கலெக்டரைச் சேர்ந்ததாகவே இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம் மாவட்ட ரீதியாகத் திட்டங்கள் நல்ல முறையிலே செயல்படக்கூடிய காரணத்தால் மேலும் மேலும் என்னென்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அரசாங்கம் செய்ய வேண்டுமென்ற முறையிலே நாம் தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். சில வெட்டுப் பிரேரணைகளைப் பார்க்கும்போது, இப்போது இருக்கக்கூடிய நிர்வாக அமைப்பை மாற்றி அமைப்பதற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைத்தால் நலமாக இருக்குமென்கிற முறையில் சில வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதைக் குறித்துச் சட்ட சபையில் பேசாவிட்டாலும் கூட இதை நான் திரும்பத் திரும்ப பரிசீலனை செய்து வருகிறேன். அப்படிப் பார்க்கும்போது மேலும் ஒரு குழு அமைத்து, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்

வேலைப்பளு, இன்னும் மற்றவற்றை யெல்லாம் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறதா என்று பார்த்தால் இதற்கு முன்பு அமைக்கப்பட்ட பல குழுக்களின் முடிவைப் பார்க்கும்போது—புதியதோர் குழுவை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் நிச்சயமாக உணருகிறேன். இந்த இலாக்காவிலே சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய அத்தனை பேரும் குறிப்பாக ரெவின்யூ போர்டு அங்கத்தினர்கள் செயல்படும் நிலையைப் பார்க்கும்போது, அவர்களைப் போல் அநுபவம் நிறைந்த அதிகாரிகள் இன்றைக்கு இந்த ஜில்லா ரீதியாக நடக்கும் நிர்வாகத்திற்குப் பக்கபலமாக இருக்கக்கூடிய முறையில், தங்களுடைய நேரத்தை அதிகமாக மாவட்டங் களில் செலவு செய்யத் தொடங்கும் பட்சத்தில் இன்னும் நிர்வாகம் சிறப்பாகவும், துரிதமாகவும் நடக்க அவர்கள் பெரிய உதவி செய்ய முடியும் என்ற கருத்தை சென்ற வருஷம் நான் இந்தச் சட்டமன்றத் திலே கூறியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து இந்த வருஷம் ரெவின்யூ போர்டு அங்கத்தினர்கள் மாவட்ட ரீதியாகச் சென்று நல்லதொரு உதவி கொடுத்திருக்கிறார்கள். அங்கு செயல்படக்கூடிய மாவட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்ந்து நீடிக்கும் பட்சத்திலே மாவட்ட ரீதியாக இருக்கும் பல சிக்கல்களைப் போக்க முடியும் என்பதோடல்லாமல் இன்னும் வேகமாக அவர்கள் செயல்படுவதற்கும் உதவி செய்ய முடியும்.

அதே போலவே தாலுகா ரீதியாகப் பார்த்தோமானால் ஏராளமான வேலை ஒரு தாலுகா காரியாலயத்துக்கு வந்திருக்கிறது. பல கனம் அங்கத்தினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்—குறிப்பாக எனக்குப் பக் கத்தில் அமர்ந்திருக்கும் கனம் அங்கத்தினர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பேசும்போது, அவர்களுக்குப் பஞ்சாயத்து ஆட்சியிலே ஏற்பட்டிருக்கும் புது நம்பிக்கையை நான் வரவேற்கிறேன். அவர்கள் அதை வலியுறுத்திச் சொல்லும்போது ஒரு காலத்தில் தாலுகா காரியா லயங்களே இல்லாமல் போய்விட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார் கள். தாலுகா காரியாலயங்கள் இருந்துதான் தீரவேண்டு மென்று நான் கூறத் தயாராயில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கும் நிர்வாக அமைப் பைப் பார்க்கும்போது—கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னார் என்று நினைக்கிறேன்—கடன் கொடுப்பதெல்லாம் ஒரு சாராராக இருந்தாலும், அதைத் திருப்பி வசூலிக்க வேண்டிய பூராப் பொறுப்பும் இன்றைக்கு ரெவின்யூ இலாகாவிற்குத் தாலுகா ரீதியாக அமைந்திருக்கிறது. ஆகவே கனம் அங்கத்தினர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் காணக்கூடிய கனவு இப்போது இருக்கக்கூடிய நிலையில் நனவு ஆகுமா என்பது சந்தேகமாய் இருக்கிறது. அது மறைவதற்குப் பதில், இப்போது அமைந்திருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் ஆட்சியைப் பார்த்தோமானால் ரெவின்யூ இலாக்காவை இன்னும் அதிகப் பலப்படுத்த வேண்டியதாக இருக் கிறது. அது அதிக அதிகாரம் பெற்றதாகவும், நேரடியாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அபிவிருத்தி வேலைகளை எல்லாம் இந்த இலாக்காதான் செய்ய முடியும் என்று சூழ்நிலை இருப்பதை இப்போது பார்க்கிறோம்.

இப்போது பஞ்சாயத்து ஆட்சி அல்லது கம்யூனிடி டெவலப்மெண்ட் வேலைகளைப் பார்த்தால் ரெவின்யூ இலாக்காதான் நேரடியாகப் பார்க்க வேண் டிய முறையை நடைமுறையில் பார்க்கிறோம். பஞ்சாயத்து யூனியன் சட்டம் நடைமுறையில் வருவதற்கு முன்பு ஆர்.டி.ஓ.-க்கள் அதிகமாக காலத் தையும் நேரத்தையும் தாலுகா ரீதியாகச் செயல்படக் கூடிய தாசில்தார், இன்னும் மற்ற ரெவின்யூ அதிகாரிகளின் வேலைகளில் செலவழிக்க வேண்டுமென்ற நிலை இருந்தது. இப்போது இருக்கக்கூடிய நிலைமை யைப் பார்த்தால் பெரும் பகுதி நேரம் கம்யூனிடி டெவலப்மெண்ட் பஞ்சாயத்து யூனியன் வேலைகளைக் கண்காணிப்பதிலேயே போய்விடுகிறது. அந்த ஒரு நிலையை, தாலுகா ரீதியாகப் போய் பார்க்கும்போது நான் நன்றாகத் தெரிந்து கொள்ளமுடிகிறது. ஆகையால் இந்த அதிகமான வேலைப்பளு ஏற்படக்கூடிய நேரத்தில் தாலுகா காரியாலயங்களை இல்லா மல் செய்துவிட முடியுமா என்று யோசிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை மாறி அது இன்னும் ஒரு சக்தியுள்ள அமைப்பாக மாறிக் கொண்டிருக் கூடிய காட்சியைத்தான் பார்க்கிறோம். அதற்காக இன்னும் ஏராளமாக அதிகாரிகள் நியமனம் செய்து அந்த இலாகா மூலமாகத்தான் பல திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

இன்றைக்கு அதிகமாக ஊழல்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அதிகமாகத் தாமதம் ஏற்படுவதாகவும் அதையெல்லாம் குறைக்க வேண்டுமென்றும் வலியுறுத்திச் சொல்லப்பட்டது. விவசாய மான்யக் கோரிக்கை வந்தபோது கூட ஒரு அங்கத்தினர்—கனம் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் என்று நினைக்கிறேன்—ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ரெவின்யூ இலாகா விலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுவதாகவும், அதை எடுத்துக் காட்ட வேண்டுமென்ற முறையிலே, ரெவின்யூ இலாக்கா அதனுடைய கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அப்போது தலைமை தாங்கிக் கொண்டிருந்த கனம் சபாநாயகர் அவர்கள் குறுக்கிட்டு "ரெவின்யூ இலாக்கா மீது குற்றம் சாட்டுகிறீர்களா ?" என்று கேட்டார்கள். அது ஏதோ தமாஷுக்காகப் பேசப்பட்ட வார்த்தை அல்ல. ரெவின்யூ இலாக்கா தன்னுடைய கடமையைச் சரியாகச் செய்யவேண்டு மென்றால் அவர்களுடைய பொறுப்பை உணர்ந்து அதற்குத் தகுந்த முறையில் உதவி கொடுத்தால்தான் அந்த இலாக்காவும் முன்னேற்றம் அடைய முடியும் என்ற சூழ்நிலையை எடுத்துக் காட்டுகிற முறையில்தான் அந்த வார்த்தைகள் அமைந்திருந்தன. அதற்குத் தகுந்த முறையில் தான் அந்த இலாக்கா செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் மேலும் மேலும் ஏராளமாகப் பொறுப்பை ரெவின்யூ அட்மினிஸ்ட்ரே ஷன் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. இன்றைக்கு அமைந் திருக்கிற அரசாங்க அமைப்பைப் பார்த்தால் எந்த ஒரு காரியம் நடக்க வேண்டுமென்றாலும் ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷனைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக நல்ல அதிகாரிகள் இந்த இலாக்கா விலே செயல்பட்டு இத்தனை பொறுப்புகளையும், அவர்கள் கேட்காமலேயே அவர்களிடத்திலே நாம் திணித்திருந்தாலும் கூட, அதை முறையாக நடத்துவதற்கு உண்மையிலேயே அவர்கள் முயற்சி எடுத்து நல்லவிதமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வருஷம் அவர்கள் ஒரு விசேஷ பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அனாதைகளுக்குப் பென்ஷன் கொடுக்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் அவர்களிடம் கொடுத்திருக்கிறது. அரசாங்கத்தினுடைய நினைப்பு, ஒரு நேரத்தில், அந்தத் திட்டத்திற்காக 30 லட்சம் அல்லது 40 லட்சம் ரூபாய் இருந்தால் போதும் என்பது. இந்த பொறுப்பை அவர்களுக்குக் கொடுக்கும்போது ரெவின்யூ இலாகா, மக்க ளுடைய, குறிப்பாக, ஏழை மக்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு நல்ல முறையிலே செயல்பட்டதன் காரணத்தினால்தான் இதிலே எந்த விதமான பெரும் புகார்கள் இல்லாமலும் ஏராளமானவர்களுக்கு அந்த உதவியைக் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சென்ற வருஷம் பார்த்தோமா னால் ரெவின்யூ இலாக்கா முக்கியமாக மாவட்ட ரீதியாக டிவிஷன் ரீதியாக, தாலுக்கா ரீதியாக எடுத்துக் கொண்டு மற்ற வேலைகளைச் சற்று தள்ளி வைத்து விட்டு, இதை நல்லபடியாகச் செய்து கொடுக்கவேண்டுமென்பதற் காக அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள். அதுபோல், ஒவ்வொரு விசேஷ வேலை செய்யும்போது மற்ற வேலைகளில் தாமதம்தான் ஏற்படு கிறது. அதிகமான வேலைகள் நடக்க வேண்டுமென்று நினைக்கும்போது அதுவும் உடனடியாக நடக்கவேண்டுமென்று நினைக்கும்போது, குறுகிய காலத்திலே நடக்க வேண்டுமென்று நினைக்கும்போது, சில நடைமுறை வேலைகள் கொஞ்சம் ஸ்தம்பித்து விடுகின்றன. அதுவே இல்லாமல் செய்யவேண்டுமென்பது தான் உண்மையிலேயே நமக்கு இருக்கக் கூடிய 1-30 p.m. முக்கியமான பொறுப்பு. ஒரு சில அதிகாரிகளிடத்தில், முன்பு இருந்த அநுபவமுள்ள அதிகாரிகளிடத்தில் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவர் கள் சொன்னார்கள், அவர்களைப் போல உள்ளவர்கள் இளைஞர்களாக இருந்த காலத்தில், ஜில்லாவில் செயல்படும்போது, எத்தனை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச வேண்டியிருந்தது என்றால், அன்றைக்கு எப்படி இருந்தது என்றால், ஒரு தாலுகாவிற்கு ஒரு தாசில்தாரைத்தான் பார்த்துப் பேச வேண்டி யிருந்தது. ஒரு ஜில்லா அதிகாரி 3 வருஷங்கள் ஒரு ஜில்லாவில் இருக்கும் பட்சத்தில் அந்த ஜில்லாவில் இருக்கிற அத்தனை தாசில்தார்களின் நிலை மையைப் பற்றிப் புரிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை இருந்தது. அது 15, 20 வருஷங்களுக்கு முன்பு—ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கு முன்பு: இன்றைக்கு ஏராளமான வேலைகளில் ஈடுபடும் போது அதற்காக ஏராள மான அதிகாரிகளை நியமிக்க வேண்டியிருக்கிறது. அப்படி இல்லாமல் முடியாது. இன்றைய நிலையில் ஒரு ஜில்லா அதிகாரிக்கு உதவியாக [illegible]

பார்க்கக்கூடிய அத்தனை பேர்களையும் நேரடியாகப் புரிந்துகொள்ள முடியாது. இன்றைக்கு அந்த முறையில் ஆக்க வேலைகளை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால் அத்தனை அதிகாரிகள் தேவையாக இருக்கிறது. எல்லோருடைய ஒத்துழைப்பும் சரியாக இருக்கிற காரணத்தினால் நடக்கக்கூடிய காரியங்கள் நல்ல விதமாக நடப்பதோடு, துரிதமாக நடக்கிறது. இப்போது பல கனம் அங்கத்தினர்கள் தாலூகாவில் இருக்கக் கூடிய பல கஷ்டங்களைக் குறித்து அதிகமாகப் பேசினார்கள். ஆனால் எல்லோருடைய கவனமும் கிராம ரீதியாகச் செயல்படக் கூடிய கிராம அதிகாரிகள் பக்கம்தான் அதிகமாக இருந்தது. மேலே இருக்கக் கூடிய ரெவின்யூ போர்டைக் குறித்து, பேசத் தொடங்கும் போதே கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், எனக்குப் பேச அதிகமாக இதிலே சம்பந்தம் இல்லாவிட்டாலும் கூடப் பேசுகிறேன், காரணம் வக்கீலாக இருப்பதால் ரெவின்யூ போர்டில் இருக்கும் கஷ்டங்களைத் தெரிந்துகொண்டிருக்கிற காரணத்தினால் பேசுகிறேன் என்று பேசிய ஒரு கனம் அங்கத்தினர் தவிர மற்றவர்கள் ரெவின்யூ போர்டு பற்றிப் பேசவில்லை. ஒன்றை கனம் அங்கத்தினர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிராம அதிகாரிகள் இந்த அமைப்புக்கு எவ்வளவு அவசியமோ, அதே போல ரெவின்யூ போர்டும் அவசியம். இருந்தாலும் எல்லா அங்கத்தினர்களும் குறிப்பிட்டுப் பேசிய கிராம அதிகாரிகள் குறித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

தொடங்கி வைத்துப் பேசும்போது கனம் அங்கத்தினர் மாதவன் அவர் கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கும் சம்பளம் குறித்து, மற்ற உதவிகள் குறித்து, அவர்கள் பாணியில், அவர்கள் பார்க்கக் கூடிய கண்ணோட்டத்தில் சொன்னார்கள். அதிகக் குறைவாகச் சம்பளம் வாங்கும் காரணத்தினால் இந்த அரசாங்கம் லஞ்சத்தை வளர்ப்பதற்குத் தூண்டுகோலாக இருக்கிறது, அல்லது ஆதரவு காட்டுகிறது என்று பேச்சைத் தொடங்கினார்கள். ஆனால் இதைக் கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிராம ரீதியாக இன்றைக்கு நல்ல ஒரு உதவி செய்துகொண்டிருக்கிற இந்தக் கிராம அதிகாரிகளைக் குறித்து நாம் பேசும்போது நாம் சொல்லக் கூடிய வார்த்தைகள் உண்மையிலேயே இருக்கிற அமைப்பைப் பாதிக்கக் கூடிய முறையில் அமைகிறதா, அல்லது செய்யக் கூடிய தொண்டுக்கு மரியாதை காட்டும் வகையில் அமைகிறதா என்று கொஞ்சம் சிந்தனை செய்ய வேண்டும். காரணம் இந்த ரெவின்யூ இலாகாவிலே அதிகப்பொறுப்போடு நடக்கக் கூடியவர்கள் கிராம அதிகாரிகள் என்று சொன்னால் அது ஒன்றும் மிகையில்லை. அவர்கள் அந்த உத்தியோகத்திலேயே ஈடுபட்டிருப்பதற்கு முக்கிய காரணம் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் என்ற காரணத்தினால் மட்டுமல்ல. அந்த முறையிலே பார்த்தால் அந்த உத்தியோகத்துக்கு அதிகப் பொறுப்புள்ளவர்கள் வந்திருக்க முடியாது.

(கனம் சபாநாயகர் தலைமை.)

ஆனால் கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்வார்கள். கிராமங்களில் செயல்படக் கூடிய கிராம முன்சிப், கர்ணம் ஆகியவர்களைப் பார்த்தால் அந்த உத்தியோகத்துக்கு வரக் கூடியவர்கள் யார் என்று பார்த்தால், யார் பொறுப்புள்ள நிலையில் இருக்கிறார்களோ அவர்கள் தான் அந்தப் பதவிக்கு வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையில்லை. ஏதோ சம்பளத்திற்காக வந்து சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. அரசாங்கத்திற்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசாங்க மான்யத்தை, ஏதோ குறைவாக இருக்கக் கூடிய மான்யத்தை—இதற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால் இன்றைய தினம் சட்ட சபையில் அங்கத்தினர்கள் செயல்படுகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஊதியம்—ஊதியம் என்று கூட நான் சொல்ல மாட்டேன்—கிடைக்கக் கூடிய அலவன்ஸ் 150 ரூபாய்தான். அத்தனை அங்கத்தினர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்களும், கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்களும்—என்னைப்போல் உள்ளவர்கள் 150 ரூபாய்க்காக வரலாம்—ஆனால் அவர்களெல்லாம் 150 ரூபாய் சம்பளத்திற்கு வருகிறார்கள்,

ஆகையால் அவர்களை அரசாங்கம் தவறான பாதையில் போக வழி காட்டுகிறது என்று சொன்னால், அதை உயர்த்திக் கொடுத்தால்தான் அந்தஸ்து வரும் என்று சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. ஆகையால் நாம் கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியம் ஏதோ அவர்கள் நிரந்தரமாக மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்கள்போல உத்தியோகஸ்தர்கள் என்ற நிலையில் அல்ல, அவர்கள் கௌரவ அதிகாரிகளாக, இப்போது இருக்கக்கூடிய நிலையில் பார்ட்-டைம் ஆஃபீஸர்களாகச் செயல்படுகிறார்கள். சாதாரணமாகத் தங்களுடைய பெரும் பகுதி நேரத்தில் தங்கள் தொழிலைப் பார்த்துக்கொள்ள முடியும். அவர்கள் விவசாயம் செய்ய முடியும். அல்லது மற்ற மற்றத் தொழில்கள் செய்ய முடியும். அரசாங்கம் அதற்குக் குறுக்கே நிற்க முடியாது. அவர்கள் அரசாங்கத்திற்கு உதவி செய்கிறார்கள். இப்போது இருக்கும் நிலையில் பார்த்தால், குறிப்பாக பல அபிவிருத்தி வேலைகள் நடக்கும்போது அவர்களுக்குக் கஷ்டங்கள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. முன்பு பலர் கூறியதைப் போல ஒரு தாசில்தாருக்குப் பதில் சொல்லவேண்டும், அல்லது அதிக பட்சம் இருந்தால் ஒரு கலெக்டருக்குப் பதில் சொல்ல வேண்டும். இன்றைய தினம் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டிருக்கும்போது எத்தனை அதிகாரிகளுக்குப் பதில் சொல்லவேண்டுமென்று அவருக்கே தெரியாத நிலை இருக்கிறது. எந்த அதிகாரியாவது எந்த வேலையையாவது செய்யவேண்டுமென்றால் கிராம அதிகாரிகள் மீதுதான் போட முடியும். அதனால் அவர்களுக்கு வேலை அதிகமாகப் போகிறது. கிராம அதிகாரிகளுடைய நினைப்புகூட அவர்களை முழு நேர அதிகாரிகளாகப் போட்டு விட்டால் மற்ற வேலைகளை விட்டு விட்டு, இவர்களுக்குப் பதில் சொல்லுவதிலேயே தங்கள் நேரத்தைச் செலவு செய்து விடலாம் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் பெரும்பாலோர், கௌரவ உத்தியோகமாகவே இருக்கவேண்டும், முழு நேர சிப்பந்தியாக ஆக்கவேண்டாம், இப்போது இருக்கும் நிலையிலேயே அரசாங்கத்திற்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த மாதிரி இரண்டு கருத்துக்கள் வில்லேஜ் ஆஃபீஸர்ஸ் மத்தியில் இருக்கிறது. அதையெல்லாம் பல தடவை திரும்பத் திரும்பப் பரிசீலனை செய்து, இன்றைய தினம் கேள்விக்குப் பதில் சொல்லக் கூடிய முறையில், இது பற்றி பல தடவைகள் பரிசீலனை செய்து இன்னும் இறுதியாக முடிவுக்கு வரவில்லை. இன்னும் ஒரு வருஷம் ஒத்திவைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இப்போது மட்டும் இல்லை 2—3 வருஷங்கள் முன்பே அப்படி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எப்போது பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமோ அப்போது தொடர்ந்து பரிசீலனை செய்வதில் கஷ்டம் ஒன்றும் இருக்காது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாகக் கனம் அங்கத்தினர் மாதவன் பாணியில் பேசக் கூடியவர்கள், குறைந்த சம்பளத்தினால்தான் கிராம அதிகாரிகள் மீது பல குற்றச்சாட்டுகள் ஏற்படுகிறன்றன என்று சொல்லக்கூடிய கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த மாகாணத்தை எடுத்துக்கொண்டால் கிராம அதிகாரிகள் என்ற முறையில் செயல்படக் கூடியவர்கள் கிராம முன்சீப், கர்ணம் ஆகியவர்கள் மொத்தமாகப் பார்த்தால் ஏறத்தாழ 21,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஏதோ ஒரு சதவீதம் குற்றம் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால் எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள் எல்லோருமே பல பழக்கங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் செய்யும் நல்ல தொண்டைப் பாராட்டாமல் இருந்தவர்களாக ஆவோம். கிராம அதிகாரிகள் பிரச்னையை இந்த அரசாங்கம் நல்ல முறையில் தீர்த்து வைக்க எல்லா முயற்சியும் எடுக்கும். குறிப்பாக அபிவிருத்தி வேலைகள் அதிகமாக நடக்கிற காரணத்தினால் பஞ்சாயத்துச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு அவர்களுக்குத் தக்க இடம் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே, கிராம அதிகாரிகள் பஞ்சாயத்து ஆட்சியோடு இணைந்து செயல்பட அவர்களுக்கு வழிவகை செய்ததோடு அல்லாமல் பொருள் உதவி கொடுக்க வேண்டுமென்று உத்திரவு போட்டிருப்பது கனம் அங்கத்தினர்களெல்லோருக்கும் தெரியும். இன்னும் அவர்கள் என்னென்ன ஆக்க வேலைகளில் ஈடுபடுகிறார்களோ, அவர்களுக்கு இன்னும் என்ன விசேஷ உதவி கொடுக்க வேண்டுமென்று நான் பரிசீலனை செய்து பார்க்கத் தயாராக இருக்கிறேன்.

இன்னொரு தவறான கருத்து. அதைக்கூடக் கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். நான் பல இடங்களில் சொல்லி வருவதைப்போல இந்த அட்மினிஸ்ட்ரேஷனுக்குப் பலமாக இருக்கக் கூடிய அதிகாரிகள் இரண்டு பேர்கள். ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷனில் கிராம அதிகாரிகள், பாசன வசதியை எடுத்துக்கொண்டால் லஸ்கர்கள். நான் இதைக் குறைந்த நினைப்போடு சொல்லவில்லை. அவர்கள்தான் மக்களுக்கு நேரடியாக உதவி செய்யக் கூடியவர்கள். மற்ற அதிகாரிகளை எடுத்துக் கொண்டாலும், கலெக்டரை எடுத்துக்கொண்டாலும், எடுத்ததற்கெல்லாம் கிராம அதிகாரிகளைத்தான் நம்பிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. கிராம மக்கள் இத்தகைய கிராம அதிகாரிகளை நம்பி இருப்பதில் தவறு இல்லை. இருந்தாலும் அவர்களைக் கவனிக்க வேண்டும். அவர்களுக்குப் பல உதவிகள் செய்ய வேண்டும். பலர் கருதுகிறார்கள் அவர்களை முழு நேர அதிகாரிகளாகப் போட்டு விட்டால், எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என்று. என்னைப் பொறுத்தவரையில் படித்த இளைஞர்களைப் போட்டு விட்டால் கிராமங்களில் முன்னேற்றத்தைப் பெருக்க முடியுமா என்றால், சந்தேகம்தான். படித்திருக்கிற காரணத்தினால் சட்ட திட்டங்களை அவர்கள் புரிந்து கொள்ள முடியும் என்றாலும் நடைமுறையில் மற்றப் பணிகள் பொறுத்தவரை அவர்கள் எவ்வளவு தூரம் பயன்படுவார்கள் என்பதில் சந்தேகம்தான் வருகிறது. ஏனென்றால், மற்ற இலாகாக்களில் இளைஞர்களைப் போட்டு இருக்கிறோம். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், தங்களுக்கு வேண்டிய தகவல்களைச் சேகரிக்க கிராம அதிகாரிகள் வீட்டுக்குப் போய் தன் காரியத்தை முடித்து விட்டு வருகிறார்கள். மக்களுடைய ஆதரவு பெறத் தகுதி உள்ளவர்களும், அவர்களுடைய சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்கக் கூடியவர்களும் பஞ்சாயத்து போர்டார்தான். பஞ்சாயத்து யூனியன் ஆட்சியில்தான் அதைச் செய்ய முடியும். கனம் அங்கத்தினர் தசுஷிணாமூர்த்தி கவுண்டர் சொன்னதுபோல தாலுகா ஆபீஸ் இல்லாமல், பஞ்சாயத்து யூனியன் ஆட்சியே என்று வரும்பொழுது—அவர்களுக்கு அந்தத் தகுதி ஏராளமாக இருப்பதால்—மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட சபைகள் கிராமத்திலிருந்து மாகாணம், மாகாணத்திலிருந்து தேசம் என்று படிப்படியாக நிர்வாகத்தை அமைக்க நினைக்கும்பொழுது எல்லாவற்றையும் பரிசீலனை செய்து, என்னென்ன மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று யோசிக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் இந்த இலாகாவில் இருக்கக் கூடிய பல குறைபாடுகளைப் பல அங்கத்தினர்கள் எடுத்துக் கூற முயற்சி செய்தார்கள். அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதெல்லாம் அங்கத்தினர்களில் சிலர் தங்கள் குறைபாடுகளைக் கோடிட்டுத்தான் காட்ட முடியும் என்று சொன்னதுபோல நடைமுறையில் இருப்பவற்றைக் கோடிட்டுத்தான் காட்டியிருக்கிறோம். ஏறத்தாழ 53 பக்கம் கொண்டது இந்த அறிக்கை. இதில் இந்த ரெவென்யூ அட்மினிஸ்டிரேஷன் பற்றிக் கோடிட்டுத்தான் காட்ட முடிந்தது. இன்னும் பல பக்கங்கள் சேர்த்தாலும் பூரணத்தையும் எடுத்துக் காட்டிவிட முடியாது. கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் லஞ்சக் குற்றத்திற்குத் தண்டிக்கப் பட்டவர்கள் பட்டியலை ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். கொடுக்க வேண்டாம் என்பது அல்ல எங்கள் நினைப்பு. அவசியம் இருந்தால், அங்கத்தினர்களுக்கு ஆறுதல் தரும் என்றால் இப்பொழுதும் கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், சில நேரங்களில் சில விவரங்களைக் கொடுத்தால், அது வேறு விதமான கெடுதலை உண்டுபண்ணுகிறது.

கனம் அங்கத்தினர் காஞ்சி மணிமொழியார் பேசும்பொழுது லஞ்சம் பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது பற்றிச் சொன்னார்கள். அவர்கள் கூறினார்கள், இந்த இலாகாவில் தண்டிக்க என்னென்ன ஏற்பாடுகள் என்று கூறியிருப்பதுபோல மற்ற இலாகாக்களில் என்ன ஏற்பாடு என்று சொல்லவில்லை. இதனால் இந்த ரெவென்யூ இலாகாவில் ஏகப்பட்ட லஞ்சம் இருப்பதால்தான் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; ஆகவே, இந்த இலாகாவில் ஏராளமாகக் குற்றங்கள், குறைபாடுகள், இருக்கின்றன; லஞ்சம் மலிந்திருக்கிறது என்ற ஒரு கருத்தைத் திரும்பத் திரும்ப அவர்கள் சொன்னார்கள். கொடுத்திருக்கும் விவரத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பேசிவிட்டார்கள் என்று நினைக்கிறேன், காஞ்சி மணிமொழியார்

போன்றவர்களே இப்படிப் பேசுகிறார்கள் என்றால், நான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. கொடுத்திருக்கும் விவரத்தையே குற்றமாக வைத்துப் பேசிவிட்டார்கள். ஆனால், நான் எந்தப் புள்ளி விவரங்களையும் கொடுக்காமல் மறைக்க விரும்பவில்லை. நான் நினைக்கிறேன், அவர்களுக்கு வேறொன்றும் குறைபாடுகள் இல்லை, இதையே குறைபாடாகக் கூறி விடலாம் என்று சொல்லிவிட்டார்கள். இந்த ஏற்பாடுகள் ரெவென்யூ இலாகாவிற்கு மட்டும் என்பது அல்ல. எல்லா இலாகாக்களுக்கும் சம்பந்தப்பட்ட பொது ஏற்பாடுகள்தான். எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்து லஞ்சப் புகார்கள் இல்லாமல் நடத்த இந்த இலாகாவிலும் எச்சரிக்கையாக இருக்கிறோம்.

பிறகு, தாலுகா காரியாலயங்களைப் பற்றிப் பேசப்பட்டது. திருமதி குழந்தையம்மாள் பேசும்பொழுது அது பற்றி சிங்காரமாகவும் பேசினார்கள். திரு. கோசல்ராம் அது பற்றிப் பேசினார்கள். அங்குள்ள குறைபாடுகளை ஓரளவுக்கு நான் ஒப்புக் கொள்ளுகிறேன். நான் சில அலுவலகங்களைப் போய் பார்த்திருக்கிறேன். அந்த நினைப்பும் வருகிறது. அவர்கள் அங்கே ஓட்டை நாற்காலிகளையும், உடைந்த மேஜைகளையும் வைத்து பணியாற்று கிறார்கள் என்றால், காரியங்கள் நன்றாக நடைபெறாது. அங்கே உள்ளே நுழைந்ததுமே கஷ்டமாக இருக்கிறது. அந்தக் குறைபாடுகளைச் சீர்திருத்த வேண்டியது அவசியம்தான். பல அங்கத்தினர்கள் சொன்னதுபோல, இது ஒன்றும் புது இலாகா அல்ல. இது ஒரு பழைய நிறுவனம். இன்றைக்கு அவர்கள் மீது அதிகமான பொறுப்புகள் சுமத்தப்பட்டு இருக்கின்றன. அவர்களுக்கு நல்ல வசதிகளை உடனடியாகச் செய்ய வேண்டியதுதான். ஆனால் முடியவில்லை. பல கட்டடங்கள் மின்சாரம் இல்லாமல் இருக்கின்றன. நல்ல காற்று வசதி இல்லை. இவற்றைக் கொஞ்சம் சீர் செய்யலாம் என்று தொடங்கினபொழுது முட்டுக் கட்டையாக இந்த நெருக்கடி வந்து சேர்ந்தது. இந்த நெருக்கடி காலத்தில் பல நல்ல காரியங்களையெல்லாம் ஒத்திப்போட வேண்டுமென்ற ஒரு முடிவுதான் எடுக்க வேண்டி வந்தது. இருந்தாலும், சிறிய அளவிலாவது இந்தக் கஷ்டங்களைத் தீர்க்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. அவைகள் நல்ல முறையிலே செயல்படக் கவனம் செலுத்த வேண்டும். மின்சாரம் கொடுக்க வேண்டும். மற்ற வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படும். இவையெல்லாம் தேச நெருக்கடி தீர்ந்த பிறகு செய்ய வேண்டுமென்றாலும், இப்பொழுதே அதற்கு வேண்டிய விவரங்கள் சேகரிப்பது போன்ற காரியங்களை ஒரு "பேஸ்டு ப்ரோக்ராமாக" போட்டு அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் கோசல்ராம் திருநெல்வேலி ஜில்லா நீர்ப்பாசனம் பற்றிச் சொன்னார்கள். நானும் இரண்டு, மூன்று தடவை போய்ப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு என் மீது கொஞ்சம் நல்ல எண்ணம். அதனால், சற்று மிகைப்படுத்தியே சொன்னார்கள். பாசனத் திட்டங்களைப் பார்க்கும்பொழுது விவசாயிகளின் கஷ்டத்தைக் காண்கிறேன். அரசாங்கத்தின் கஷ்டமும் தெரிகிறது. ஒரு சில விவசாயிகள் உற்சாகத்தோடு விவசாயம் செய்யப் புகுந்து மற்றவர்களுடைய தண்ணீரை மறித்து எடுத்து விடுகிறார்கள். இது கனம் அங்கத்தினர் நல்லசிவத்திற்குத் தெரியும். கஷ்டத்திற்கு முடிவு காண வேண்டும். அபராதம் போடுகிறோம். அதற்குத் திரு. கோசல்ராம் ஆட்சேபிக்க மாட்டார்கள். இந்தத் தாம்பரபரணி ஸிஸ்டத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. மற்றவர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். செட்டில்மென்ட் அடிப்படையில் இவர்களுக்குத் தண்ணீர் எடுக்க உரிமை கிடையாது. அதனாலே உரிமை இல்லாத காரணத்தினாலே, ஒருவருடைய உரிமைக்குப் பங்கம் வரக்கூடிய முறையில் ஆக்கிரமிப்பு செய்யக்கூடியவர்களுக்கு என்ன தண்டத் தீர்வை போடுகிறார்களோ அதே போல இங்கே போடுகிறார்கள். இதை ஒரு சில வருஷங்களுக்கு முன்பு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த காரணத்தினால், மற்ற இடங்களில் அனுஷ்டிக்கிற முறை இல்லாமல், தாம்பரபரணி ஸிஸ்டத்தில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்குக் கீழ் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு தண்டத் தீர்வை 20 மடங்கு போடாமல், 18 மடங்கைக் குறைத்துவிட்டு, 2

மடங்காகப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நான் போய் பார்த்தபொழுது, நான் தெரிந்துகொண்டதெல்லாம் இந்தத் தண்ணீரை மற்றவர்களுக்குப் பாதகம் இல்லாமல் அந்த விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். கனம் கோசல்ராம் அவர்கள் அந்தவிதமாகப் பயன்படுத்திக் கொண்டு வரக்கூடிய விவசாயிகளுக்கு ஏன் தண்டத் தீர்வை விதிக்கப்பட வேண்டும் என்ற ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். சென்ற வருஷத்தில் இந்த மான்ய விவாதத்தின்போது அதிக வேகத்தோடு பேசியவர்கள் திருநெல்வேலி ஜில்லா அங்கத்தினர்கள்தான். திரு. எ. பி. எஸ். வீரபாகு அவர்கள், அம்மையார் அவர்கள், செல்வராஜ் அவர்கள் ஆகியோர் பேசினார்கள். இப்பொழுது அந்த அங்கத்தினர்களைக் காணவில்லை. அவர்களுக்கு என்ன ஒரு நம்பிக்கை வந்தது என்று தெரியவில்லை. திரு. கோசல்ராம் அவர்கள் தொடர்ந்து இப்பொழுதும் பேசினார்கள். மற்றவர்களெல்லாம் பேசாமல் இருந்துவிட்டார்கள். அவர்கள் பாராட்டக்கூடிய முறையில், அவர்களுடைய கஷ்டங்களைப் போக்கக் கூடிய முறையிலே கார் விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கு இப்பொழுது இரண்டு மடங்கு போடக்கூடிய அந்தத் தீர்வையை ஒரு மடங்காகக் குறைத்துவிடலாம் என்ற ஒரு முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. ஒரு சில நிபந்தனைகளெல்லாம் போட்டிருக்கிறோம். அதையெல்லாம் இப்பொழுது படிக்கத் தயாராக இல்லை. இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்னையைப் பொறுத்த வரையில், இந்தத் தீர்வை ஒரு மடங்காகக் குறைய வேண்டுமென்பதுதான் கருத்து. இது சம்பந்தமாக திடீரென்று ஒரு முடிவுக்கு வந்துவிடவில்லை. சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள், ரெவின்யூ போர்டு அங்கத்தினர், சீப் என்ஜீனியர், மற்றவர்களையும் அழைத்து வைத்துப் பேசி, அதன் காரணமாகத்தான் இதில் ஒரு முடிவுக்கு வந்தோம். இது சம்பந்தப்பட்ட உத்தரவை விரைவிலே ஜில்லாக் கலெக்டருக்கு அரசாங்கம் அனுப்பி வைக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் நேரடியாகப் பார்த்த காரணத்தினால் மட்டுமல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சீப் என்ஜீனியர், ரெவின்யூ போர்டு இவர்களெல்லாம் இதை உணர்ந்த காரணத்தினால்தான் இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் சொன்னது ஒரு முக்கியமான முடிவு. அதைத் தொடர்ந்து இன்னும் பல வசதிகள் ஏற்பட இருக்கிறது. அதையெல்லாம் பற்றி அரசாங்கம் விரிவாக அந்த ஜில்லாக் கலெக்டருக்கு அறிக்கை அனுப்பும். இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிற முடிவு வரக்கூடிய விவசாய வருஷத்திலிருந்து அமுலுக்கு வரும். அதாவது, இந்தப் பசலி ஜூலையில் முடியப் போகிறது. அடுத்த பசலியிலிருந்து இது நடைமுறைக்கு வரும். கனம் கோசல்ராம் அவர்களுடைய ஒத்துழைப்பைக் கேட்பதெல்லாம், இதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு இன்னும் 2, 3 மாதங்கள் காத்து இருக்கவேண்டும் என்பதுதான். இந்த வருஷத்தைப் பொறுத்தவரையிலே கிஸ்தி வசூல் நடந்து கொண்டிருக்கிறது. இடையே போய் குழப்பம் ஏற்படுத்தக்கூடாது என்பதை உத்தேசித்துதான் சர்க்காரின் இந்த முடிவு அடுத்த பசலியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. அடுத்த பசலியிலிருந்து இது அமுலுக்குவரும் என்பதைத் திரும்பவும் சொல்லிக் கொள்கிறேன்.

இன்னும் பல மாவட்டங்களுங்களுக்குப் போக வேண்டும். ஜில்லா அபிவிருத்திக் குழுவில் சொல்லப்படும் பிரச்னைகள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லக்கூடிய பிரச்னைகள் எல்லாவற்றையும் முறையாகப் பரிசீலனை செய்து குறைகளைத் தீர்த்து வசதி செய்து கொடுப்பதற்கு வரக்கூடிய ஆண்டில் நானும், இந்த இலாகாவும் முயற்சி எடுப்போம்.

கனம் முருகையன் அவர்களுக்கு ஒரு ஆசை. புதுக்கோட்டையை ஜில்லாத் தலைநகரமாக்க வேண்டுமென்பது அவருடைய ஆசை. அந்தக் கருத்திலே வேறுபாடு கிடையாது. ஆனால், நிர்வாக அமைப்பைப் பொறுத்து இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. திரு. தர்மலிங்கம் அவர்கள் திருச்சியை டெவலப்மெண்டு டிஸ்டிரிக்டாகப் பிரித்திருப்பதுபோல், அப்படியே பிரித்து அமைத்துவிடலாம் என்று சொன்னார்கள். அதிலும் பல சிக்கல்களும், கஷ்டங்களும் இருக்கின்றன. இதையெல்லாம் தொடர்ந்து ஆராய்ந்து பார்த்து நல்லதைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

அறந்தாங்கியைச் சேர்ந்த திரு. துரையரசன் அவர்கள் ஒரு அற்புதமான கருத்தைச் சொன்னார்கள். அவர் பேசும்பொழுது நுணுக்கமாகக் கவனித்துப் பார்த்தேன். அவருடைய வார்த்தைகள் எப்படி அமைந்திருக்கின்றன என்றால், ஜமீன் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் ஜமீன்தார்கள் இருந்தபொழுது அதிகக் கஷ்டப்பட்டார்கள் என்ற காரணத்தினால் ஜமீனை ஒழித்துவிட்டோம். இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்க்கும் பொழுது, அவர்கள் ஜமீன்தார்கள் காலத்தில் அதிகமான சந்தோஷத்துடன் இருந்தவர்கள், இப்பொழுது அம்மாதிரி இல்லையே என்ற ஒரு கருத்துப்படும்படி அவர்கள் வார்த்தைகள் அமைந்திருந்தன. திரு. சீமைச்சாமி அவர்கள் கிழக்கு ராமனாதபுரம் பின்தங்கிய வட்டாரம் என்று மிகவும் வற்புறுத்திப் பேசினார்கள். அதுபோலவே பலரும் சொல்லுகிறோம். இருக்கக்கூடிய நிலைமையும் அப்படித்தான். கிழக்கு ராமனாதபுரம் வட்டாரம் அறந்தாங்கி தாலுகா, புதுக்கோட்டை வட்டாரம், மருங்காபுரி, உடையார் பாளையம் ஆகிய பகுதிகளெல்லாம் பின்தங்கிய பெல்ட். ஜமீன்தார் பகுதி. ஜமீன்தார்கள் பேரில் எனக்குத் தனிப்பட்ட முறையில் கோபமோ, வருத்தமோ கிடையாது. இருந்தாலும், இருக்கக்கூடிய கஷ்டங்களை மிகைப்படுத்தி ஒரு அமைப்பே தவறு என்ற முடிவுக்கு வருவது நியாயம் இல்லை. கனம் அங்கத்தினர் சீமைச்சாமி அவர்கள் புள்ளி விவரம் கொடுப்பதிலே கொஞ்சம் ஆராய்ச்சி செய்து இப்பொழுது புது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் மீது அதிகமான வரி போடுகிறோம், தாங்க முடியாத அளவுக்குப் போய்விட்டது என்று அவர் சொல்லக்கூடிய கருத்தை, அந்த முறையை நாம் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இப்பொழுது எல்லோருமே ஸ்தம்பித்துப் போய்விடுவார்கள். அவர்கள் அழிந்தே போய்விடுவார்கள் என்று சொன்னார்கள். தயவு செய்து 20 வருஷங்களுக்கு முன்பிருந்த நிலைமையையும், இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தாங்கமுடியாத நிலையிலே வரி போடுகிறோமா, தாங்கக் கூடியவர்கள் மீது வரி போடுகிறோமா என்று பார்த்தால், விவசாயிகளே ஒப்புக்கொள்வார்கள், நிலைமை அப்படி இல்லை என்பதை. விவசாயிகளுக்குக் குறைபாடுகள் இருக்கின்றன. 15 வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலையை, விவசாயிகள் அன்று இருந்த நிலையையே பார்த்துக்கொண்டு நாங்கள் தாங்க முடியாமல் வரி போடுகிறோம், அழிந்து விடக்கூடிய நிலைமையில் வரி போடுகிறோம் என்றெல்லாம் சொல்லுவது உண்மை நிலையை மறைப்பதாகத்தான் இருக்கும். விவசாயிகளிடம் அதிக வரி வாங்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு நோக்கம் கிடையாது. எந்த வரி போட்டாலும் விவசாயிகள் மீது போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அரசாங்கம் எத்தனையோ திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வருகிறது. எந்தத் திட்டத்தைப் பார்த்தாலும் விவசாயிகள் பக்கத்தில்தான் இருக்கிறது. யாருடைய நன்மைக்காக இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகிறோம் ? திட்டம் வளர வளரத்தான், அவர்களுடைய வாங்கும் சக்தி உயரும். வாங்கும் சக்தி உயர்ந்தால், கொஞ்சம் அதிகமாக வரி கொடுப்பதற்கு எந்த விதமான குறையும், கஷ்டமும் யாருக்கும் கிடையாது. கஷ்டம் இருக்கக்கூடிய பகுதிகளில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் எண்ணம். கிழக்கு ராமனாதபுரம், புதுக்கோட்டை, திருப்பத்தூர் ஆகிய பகுதிகளில் அடிக்கடி ரெமிஷன் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும். எல்லாப் பகுதிகளிலும் சிரமம் இல்லாமல் வரி கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டும். அதற்குப் பல பாசனத் திட்டங்களைக் கொண்டு வரவேண்டும். விவசாயிகளுக்குப் பல உதவிகள் செய்ய வேண்டும். ரெமிஷன் கொடுப்பது என்பது ஒரு சந்தோஷமான காரியம் அல்ல. ரெமிஷன் கொடுப்பதென்றால், அரசாங்கத்திற்கு அதனால் ஒரு லட்சம் ரூபாய் கூட நஷ்டம் வரும். ஆகவே, விவசாயிகளுக்கு நிரந்தரமான பாதுகாப்புக் கொடுத்து, நிரந்தரமாக அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வழிவகை காண வேண்டும். பாசனத் திட்டங்கள் வர வேண்டும். கிழக்கு ராமனாதபுரம் போன்ற பாசன வசதிகள் இல்லாத பகுதிகளுக்குப் புதிய முயற்சி எடுத்து புதிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதையெல்லாம் எடுக்க அரசாங்கம் தயக்கம் காட்டக் கூடாது என்பதுதான் என்னுடைய துணிவான முடிவு. இப்பொழுது ரெமிஷன் கொடுக்கக்கூடிய காலத்தில்கூட, இராம அதிகாரிகள் எழுதி வைத்து

காரியாலயங்களுக்குப் போனுல், தீர்க்க முடியாத, தேங்கிக் இடக்கும்
பிரச்னைகளை யெல்லாம் நிவர்த்தி செய்ய முடியும். தாலூகா காரியாலயங்
களுக்குப் போகும்பொழுது நான் என்னுடைய விருப்பத்தைப் பல இடங்
களிலே சொல்லியிருக்கிறேன். ஒரு தாசில்தார் தன்னுடைய காரியால
யத்திலுள்ள ஒவ்வொரு செக்‌ஷனுக்கும் அடிக்கடி போனுல், பல பிரச்னை
கள் தீர்ந்துவிடும். வருகிற ஆண்டிலும் இந்த நிர்வாகம் மேலும் நல்ல
முறையில் செயல்பட்டு இருக்கக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு
முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த மானியத்தை
எல்லா அங்கத்தினர்களும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு
கிறேன். மேலும் இந்த இலாகா இன்னும் நல்ல முறையில் செயல்
படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுமாதலால், வெட்டுப் பிரேரணைகளை
கனம் அங்கத்தினர்கள் வலியுறுத்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.
அப்படி வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்
கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : லஞ்ச ஊழல் சம்பந்தமாக மூன்று
வருஷங்களில் சர்க்கார் ஊழியர்கள் எவ்வளவு பேர் குற்றம் சாட்டப்பட்
டிருக்கிறுர்கள், அவர்களில் எத்தனை பேர் உயர்தர அதிகாரிகள், எவ்வளவு
பேர் தண்டனை பெற்றிருக்கிறுர்கள், எவ்வளவு பேர் மீது நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கிறது என்று மாவட்டவாரியாக எப்ரல் மாதம் 2-ம்
தேதிக்குள் இந்த மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள்
உறுதி கூற முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : உறுதி ஒன்றும் கூற வேண்டாம்.
கனம் அங்கத்தினர் கேள்வி கொடுத்தால், எவ்வளவு விரைவாகத் தகவல்
களை சேகரம் செய்து சொல்ல முடியுமோ, அப்படிச் சொல்லுவதற்குத்
தயாராய் இருக்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் அமைச்சர் அவர்கள் தாம்பிரபரணி
விஸ்டத்தில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்குக் கீழே உள்ளவற்றிற்குத்
தான் தண்டத் தீர்வையை ரத்து செய்து, ஒரு மடங்காகப் போடப்படும் என்று
சொன்ஞர்கள். அம்பாசமுத்திரத்திலிருந்து தாம்பிரபரணி விஸ்டம்
முழுவதுக்குமே இந்தத் தண்டத் தீர்வை இருக்கிறது; அது அத்தனைக்கும்
கனம் அமைச்சர் சொன்னது பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.
பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது ஒரு தாலூகாவிற்கு மட்டுமல்ல.
இந்த விஸ்டம் பூராவிலும் இருக்கிறது. எப்படிப் போக்கலாம் என்பதைப்
பற்றி முயற்சிக்கலாம்.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 88,18,100 under Demand No. I—Land Revenue Department be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 88,18,100 under Demand No. I—Land Revenue Department".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 5,31,42,500 under Demand No. IX—District Administration and Miscellaneous be reduced by Rs. 100".

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 5,31,42,500 under Demand No. IX—District Administration and Miscellaneous ".

The Demand was put and carried and the Grant was made.

2-06 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Wednesday, the 27th March 1963.

The House then adojurned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

138. *Notification issued with G.O. Press No. 439, Revenue, dated 30th January 1963 exempting the sale of goods by any dealer to bona fide foreign tourists from the tax payable under the Madras General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]*

139. *Notification issued with G.O. Ps. No. 494, Revenue, dated 4th February 1963 exempting the Khadi Department of the Madras State Khadi and Village Industries Board from the tax payable under the Madras General Sales Tax Act, 1959 in respect of the purchases of cotton made for distribution to the spinners attached to the Khadi Department and for supply to the Education Department. [Laid on the table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

140. *Notification issued with G.O. Ms. No. 141, Industries, Labour and Co-operation (Labour), dated 8th January 1963 amending the Madras Industrial Establishments (National and Festival Holidays) Rules, 1959, published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A 1931 of 1959, dated the 19th March 1959, at pages 219 to 224 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the table of the House under section 12 (3) of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958 (Madras Act XXXIII of 1958).]*

B. Reports, Notifications and other papers.

*86. *A sort review of the activities of departments under the administrative control of Home Department for the half year ending 30th June 1962.*

†87. *Speech of the Hon. Minister for Works and the Policy Note on Demand No. 1—Land Revenue and No. IX—District Administration and Miscellaneous (in Tamil).*

APPENDIX

[*Vide* answer to starred question No. 366 on page 428.]

Steps taken to make yarn available to Handloom Weavers at reasonable prices.

The increase in the prices and scarcity of certain counts of yarn is a problem which has been facing the handloom industry for some time past. The major factors contributing to the present situation are listed below :—

(1) Shortage of raw cotton.

(2) Consumption by the decentralised powerlooms in other States.

(3) Uneven quality of yarn and preference by the Handloom Weavers for the products of particular mills.

Government of India after considering all the aspects of the problems have referred the question of devising a formula for fixing the fair ex-mill and retail prices of yarn to the Tariff Commission. The Commission has not yet made its report. The Government have been watching the situation and have been taking all possible steps to ensure the supply of yarn to weavers at reasonable prices. Conferences of mill owners and handloom interests have been convened from time to time to discuss the problem and to resolve difficulties. The last conference was held on 30th April 1962 at Coimbatore and it was decided that the Voluntary Distribution Scheme should be extended to coton yarn of counts 60s and above also.

From 1st November 1962 the Textile Commissioner has brought into force the All-India Cotton Yarn Distribution Scheme to make yarn available to weavers at fair prices.

The scheme covers—	*Number of bales allotted.*
(1) Handloom Weavers' Co-operative Societies;	6,225 bales per mensem.
(2) Exporters of handloom fabrics and	2,000 bales per mensem (expected).
(3) Handloom manufacturers outside the co-operative fold.	4,000 bales per mensem.

Under this scheme yarn is supplied to weavers at the prices fixed by the Indian Cotton Mills' Federation for the various counts. The allottees will also bear excise duty, sales tax, insurance, transport and other incidental charges.

As far as possible, allotments are being made from the nearest production centres.

The scheme is working fairly and satisfactorily.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 27th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S CHELLAPANDIAN) in the chair.

I.--QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

இராமக் கோர்ட்டுகள்.

* 378 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

Panchayat Court-கள் இருப்பதுபோல் பொது சிறு நகரங்களில் வழக்குகளை தீர்வு காண்பதற்கு எல்லா இராமங்களிலும் **Village Court**-கள் ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டம் எப்போது அமுலுக்கு வரும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை ஏற்படுத்திய பிறகு இராமப் பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளின் கடமையைச் செய்யக்கூடாது என்று அச்சட்டம் நிபந்தனையேற்படுத்துகிறது. பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்துள்ள பகுதிகளில் சென்னை 1888-ம் ஆண்டு இராமக் கோர்ட்டுகள் சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் இராமக் கோர்ட்டுகளை ஏற்படுத்துவதற்கும், அச்சட்டத்தின் 7-வது பிரிவின் கீழ் இராம முன்சீப் கோர்ட்டுகளை ஏற்படுத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி ரெவின்யூ போர்டை கேட்டிருக்கிறோம். இந்த ஏற்பாடுகளைக் குறித்து ரெவின்யூ போர்டு இன்னும் பதில் அனுப்பவில்லை.

[The Madras Panchayat Act, 1958, provides that after the Panchayat Union Councils are constituted under the Act, the Village Panchayats shall cease to perform functions of Panchayat Courts. The Board of Revenue has been asked to take necessary steps to establish Village Courts under section 6 of the Madras Village Courts Act, 1888, and to create Courts of Village Munsifs under section 7 of the Act in the areas where the Madras Panchayats Act, 1958, has come into force. The consolidated proposals from the Board of Revenue in this regard are awaited.]

திரு. எஸ். முருகையன் : ஸார், இப்போது இரண்டாண்டு காலமாக ரூ. 100-க்கு குறைந்து தாவா போடவேண்டுமென்றாலும் இராமங்களிலே முன்சீப் கோர்ட்டுக்கு சென்று ஏராளமாக செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதை உடனடியாக கவனித்து ஆங்காங்கே பஞ்சாயத்து கோர்ட்டுகள் நிறுவ ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இராம முன்சீப் கோர்ட்டுகளையே பஞ்சாயத்து கோர்ட்டுகளாக அமைத்துவிட வேண்டுமென்பதுதான் யோசனை.

திரு. முனு. ஆதி : ஸார், வில்லேஜ் கோர்ட்டுகளில் முன்சீப் நிலையிலே உள்ள, உள்ளூரில் உள்ள பஞ்சாயத்து உறுப்பினர்கள், தலைவர்கள் கடமை யாற்ற உத்தரவிடும் எண்ணம் அரசாங்கத்துக்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே தெரிவித்ததுபோல தேர்ந்து எடுக்கப்பட்டவர்களுக்கு இம்மாதிரியான அதிகாரம் கொடுக்கப்படுவ தற்கில்லை என்றுதான் இந்த அரசாங்கம் கருதுகிறது. அகில இந்திய ரீதியிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அவர்கள் இதை பரிசீலனை செய்து

கொண்டு இருக்கிறார்கள். கிராமக் கோர்ட்டுகள் எப்படி அமைப்பது என்பதைப் பற்றி இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்கள். வேறு மாநிலங்களையும் அபிப்பிராயம் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை இன்னும் வரவில்லை.

திரு. புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து கோர்ட்டுக்கு முன்பு எல்லாம் தனியாகவே தேர்தல் நடத்தி உறுப்பினர்களை தேர்ந்தெடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த முறை இப்போதும் பின் பற்றப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் ஏற்கனவே கூறியதுபோல் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களைக் கொண்டு இம்மாதிரி விவகாரங்களை நடத்துவது முறையல்ல என்பதுதான் இப்போது அரசாங்கத்தின் அபிப்பிராயம். இந்த அடிப்படையிலேதான் இந்த மன்றத்தில் சட்டம் செய்யப்பட்டு, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் இந்த பஞ்சாயத்து கோர்ட்டுகளின் அதிகாரம் எடுக்கப்பட்டுவிட்டது.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த வில்லேஜ் கோர்ட் ஆக்டின்கீழ் ஒரு நீதி மன்றத்தை உருவாக்கும்போது, அவர்களுக்கு சிவில் ஜூரிஸ்டிக்ஷன், கிரிமினல் ஜூரிஸ்டிக்ஷன் இரண்டையும் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ? அல்லது சிவில் ஜூரிஸ்டிக்ஷன் மட்டும் கொடுக்க உத்தேசித்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அதைப்பற்றி எல்லாம் முடிவு ஏற்படவில்லை. இப்போது ரெவின்யூ போர்டினுடைய அறிக்கை எதிர்ப்பார்க்கப்படுகிறது. அவர்களுடைய சிபாரிசுகள் வந்த பிறகுதான் இதை எல்லாம் கவனிக்கவேண்டும்.

திரு. ஆர். ரெங்கசாமி : ஸார், கிராமப் புறங்களிலே முன்சீப் கோர்ட்டு இருப்பதற்குப் பதிலாக, கிராம முன்சீப்களுக்கு ஏராளமான வேலைகள், பஞ்சாயத்து யூனியன் சார்பாகவும் பஞ்சாயத்து போர்டு சார்பாகவும் பார்க்க வேண்டுமென்று இருப்பதால், மேலும் கிராம கோர்ட்டுகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இந்த அதிகாரங்களை கொடுப்பது முறை அல்ல என்று. ஆனால் கிராம முன்சீப் இந்த அதிகாரத்தை வகிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் இருக்காது என்றால், நகரங்களில் ஆனரரி மாஜிஸ்டிரேட், கௌரவ மாஜிஸ்டிரேட் இருப்பது போன்று வேண்டுமானால் அவ்வாறு நியமிக்கலாமா என்பதை யோசிக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது கிராமத்திலே முன்பு இருந்த பஞ்சாயத்து கோர்ட்டுகளில் டிகிரி ஆன தொகை டிகிரி நிறைவேற்றப்படாமல் அப்படியே இருக்கிறது. உடனடியாக டிகிரியை நிறைவேற்றவேண்டுமென்று சர்க்கார் ஒரு உத்திரவு போட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கு தனிக் கேள்வி போட்டால் பார்த்து விவரங்கள் சொல்ல முடியும்.

Basin Bridge

* 379 *Q.*—SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state the steps taken to renovate the Basin Bridge?

THE HON. SRI S. M. A. MAJID : It is not proposed to renovate the Basin Bridge.

[பேசின் பிரிட்ஜ் பாலத்தை புதுப்பிக்க உத்தேசம் இல்லை.]

எம்.சி. ராஜா விடுதி (சென்னை)

* 380 கேள்வி.—**திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையிலுள்ள எம்.சி. ராஜா விடுதியில் தங்கி இருக்கும் பல்வேறு கல்லூரி மாணவர்களுக்கு அவர்கள் படிக்கும் கல்லூரிகளுக்குச் செல்லவும், திரும்பி விடுதிக்கு வரவும் ஆகும் செலவினைச் சர்க்காரே ஏற்றுக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : சென்னை நகரில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கான அரசாங்க ஹாஸ்டலில் தங்கியிருப்போர் தங்கள் தங்கள் கல்லூரிகட்கு போய்வருவதற்கு ஆகும் வண்டிச் செலவுக்கென அரசாங்கம் 1962–63-ல் ரூ. 9,900-க்கு மேற்படாமல் தொகை அனுமதித்தது.

[The Government sanctioned an expenditure not exceeding Rs. 9,900 during 1962–63 towards conveyance charges for the boarders of the Government hostel for College Boys, Madras, studying in different Colleges in the Madras City.]

பெருமழை (நிவாரண நடவடிக்கை)

* 381 கேள்வி.—**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் அக்டோபர் மாதம் பெய்த பருவமழை காரணமாக சென்னை மாநகரத்திலும், மாநிலத்தில் பல்வேறு பகுதியிலும் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பென்ன ?

(இ) சர்க்கார் எடுத்துக்கொண்ட நிவாரண நடவடிக்கை யாது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) சேதத்தின் உத்தேச மதிப்பு பின்வருமாறு :—

		ரூ.
(i)	அரசாங்கச் சொத்து	5,20,416
(ii)	வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம்	9,330
(iii)	பயிர்களுக்கும், நிலத்திற்கும் ஏற்பட்ட சேதம்	26,598

(இ) சேதமடைந்த அல்லது இடிந்துபோன வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ரூ. 3,105 வரையில் ரொக்க நிவாரணம் அளிக்க அரசினர் அனுமதியளித்தனர். நிலங்களைச் சாகுபடிக்கேற்றவையாக்க ரூ. 31,150 கடனாக அனுமதிக்கப்பட்டது.

திரு. க. ர. நல்லசிவம் : பரவலாக இதனால் பயிர்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் பாதிக்கப்படுகிறது என்று சர்க்காருக்குப் புகார் வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : பயிர்களைக் குறித்து என்னிடம் இப்போது தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சொல்லலாம்.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், மழையின் காரணமாக அல்லது மழை இன்மையின் காரணமாக பயிர்களுக்கு முக்கியமாக பாதகம் ஏற்படுகிறது. இதற்காக நிரந்தரமான நிவாரணம், அதாவது பயிர்கள் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் (கிராப்ஸ் இன்ஷூரன்ஸ் திட்டம்) ஏதாவது கொண்டுவர உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த முக்கிய கேள்வியே ஒரு ஸ்பெஸிபிக் கேள்வி. அதாவது 1962-ல் ஏற்பட்ட வெள்ளத்தால் உண்டான சேதம் பற்றியது. கனம் அங்கத்தினர் கேட்பது இதிலிருந்து எழவில்லை. தனியாக கனம் அங்கத்தினர் விவசாய அமைச்சருக்கு இந்தக் கேள்வியைப் போட்டால், அவர்கள் விவரம் சொல்லுவார்கள்.

* 382 கேள்வி.—**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963, ஜனவரி மாதத்தில் பெய்த மழையால் நெல்லை தாலுகாவில் ஏற்பட்ட சேதங்கள் யாவை ?

(இ) அவைகளின் நிவாரணத்திற்காக அரசாங்கம் செலவழித்த பணம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) There were two minor breaches in the Tirunelveli Channel which were closed immediately by the Public Works Department. Fifty five houses collapsed. One child died and two sustained injuries as a result of house collapse.

(இ) A sum of Rs. 1,590 was spent by way of cash relief to the victims whose huts were collapsed due to the heavy rains.

எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு

* 383 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எம்.பி.பி.எஸ். பாஸ் செய்த பிறகு "இண்டர்னீ"யாக ஓராண்டும் "ஹவுஸ் சர்ஜனாக" இன்னோராண்டும் பயிற்சி பெறவேண்டும் என்ற முறை மாற்றப்பட்டு உத்தரவிடப்பட்டிருக்கிறதா ?

(இ) எந்தத் தேதியில் ? என்ன அவசியத்தால் ?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) 1962-ம் ஆண்டு டிசம்பரில் எம்.பி.பி.எஸ். இறுதியாண்டுத் தேர்வில் தேர்ச்சியடைந்த மாணவர்கள் தொடங்கி இம்மாற்றங்கள் அமுலுக்கு வந்துள்ளன. பாதுகாப்புப் பணிக்கு ஏராளமான மருத்துவ அதிகாரிகள் தேவையாயிருப்பதைச் சமாளிப்பதற்காக இம்மாற்றங்கள் செய்யப்பட்டன.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பு கல்லூரிகளின் டீன்களோ அல்லது உயர்தர டாக்டர்களோ கலந்து ஆலோசிக்கப்பட்டனரா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : யுனிவர்சிடியையும், இந்திய மெடிகல் கவுன்சிலினுடைய ஆலோசனைகளையும் கேட்ட பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் ஹவுஸ் சர்ஜனாக இருக்கும்போது, அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தை அதிகரிப்பதற்கு ஏதாவது உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே கொடுக்கிற ஊதியத்தை அதிகரிப்பதற்கு உத்தேசமில்லை. அன்–பெய்டு ஹவுஸ் சர்ஜன்கள் இந்த ஆண்டு 'பெய்டு'–ஆக கருதப்பட்டு, அவர்களுக்கும் ஊதியம் கொடுக்கப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : ஹவுஸ் சர்ஜன்களாக வேலை பார்ப்பவர்களுக்கு இரண்டு, மூன்று மாதங்களாக ஸ்டைபண்டு வரவில்லை என்று கூறப்படுவது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி தகவல் அரசாங்கத்திற்கு ஒன்றும் வரவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இண்டர்னீ–ஹவுஸ் ஸர்ஜன்ஸ் பயிற்சி பெறுகின்ற ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் தற்காலிகமானதா ? நிரந்தரமான மாறுதலா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டது நிரந்தரமாய்விடும் என்று நினைக்கிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள் : இப்பொழுது தற்காலிகமாக ஏற்பட்டிருக்கிற இந்த மாறுதலினால் டாக்டர்களுக்குத் தரக் குறைவு ஏற்படும் என்கிற ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தரக் குறைவு ஏற்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஈக்வல் ஸ்டாண்டர்டுதான். இண்டர்னீஷிப்பை அபாலிஷ் செய்துவிட்டபிறகு, கம்பல்ஸரி ஹவுஸ்மென்ஷிப் ஒரு வருஷம் இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஹவுஸ் சர்ஜனாக வேலை பார்க்கக்கூடியவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 100 ரூபாய் ஸ்டைபண்டு கொடுக்கிறோம்.

திரு. ஆ. துரையரசன் : "ஹவுஸ் சர்ஜனாக வேலைபார்ப்பவர்களுக்கு ஸ்டைபெண்டு கொடுக்கப்படவில்லை என்கிற புகார் வரவில்லை" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சையில் திரு. ராதாகிருஷ்ணன் என்கிற ஒரு ஹவுஸ் சர்ஜனுக்கு மூன்று நான்கு மாதங்களாக ஸ்டைபண்டு வரவில்லை என்று எழுதி எழுதிப் பார்த்து அலுத்துப்போய்க் கடைசியாக....

கனம் சபாநாயகர் : தனிப்பட்ட நபரைப்பற்றிக் கேட்காமல் பொதுவாக கேட்கலாம். பிரசங்கம் மாதிரிச் சொல்லிக் கொண்டே போகக் கூடாது. பொதுவாகக் கேள்வி கேட்கலாம்.

திரு. ஆ. துரையரசன் : ஸ்டைபெண்டு வரவில்லை என்பதற்காக அவர் வேலையை விட்டே போய்விட்டது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசாங்கத்திற்கு அம்மாதிரி தகவல் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : ஹவுஸ்-ஸர்ஜன் பயிற்சி முடிந்ததற்குப் பிறகு ஓராண்டுகாலம் சிற்றூரில் கட்டாயமாகச் சேவை செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிற எண்ணம் அரசினருக்கு உண்டா ?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி எண்ணம் இருக்கிறது. காரணம் என்னவென்றால், ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு டாக்டர்கள் போகவேமாட்டேன் என்கிறார்கள். அந்தக் காரணத்தினால் அவர்களுக்கு அபாயிண்டுமெண்ட் கொடுப்பதற்கு முன்பாக அவர்கள் கம்பல்சரியாக கிராமப்புறங்களில் பணிபுரியச் செய்யலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு, ஆங்காங்கு இண்டர்னீகளாக இருக்கும் டாக்டர்களையும் ஹவுஸ் சர்ஜனாக இருக்கும் டாக்டர்களையும் நான் கலந்தேன். இண்டர்னீயாக இருக்கக்கூடியவர்களும்கூட, 'இது மிகமிக அவசரப்பட்ட உத்தரவு, நல்ல பயிற்சி இல்லாமல், உயிருடன் விளையாடும் இந்தத் தொழிலைக் கவனிக்க முடியாது, ஓராண்டு இண்டர்னிஷிப், ஓராண்டு ஹவுஸ்-சர்ஜன்ஷிப் இருந்தால்தான் நல்லது' என்ற அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட அபிப்பிராயம் இருப்பதால், இந்த உத்தரவை அரசாங்கம் புனராலோசனை செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இண்டர்னிஷிப்பை அபாலிஷ் செய்யும் காரணத்தால் கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்விக்குச் சாத்தியம் இல்லை. ஏற்கனவே ஒரு வருஷம் இண்டர்னீயாக இருந்தவர்கள், கம்பல்சரி ஹவுஸ்மென்ஷிப் ஒரு வருஷம் செய்ததாகக் கருதப்பட்டு சர்விசுக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கிராமப் புறங்களில் மருத்துவ சேவைகளைக் கவனிக்கவேண்டும் என்கிற ஒரு கண்டிஷனை வைத்து மருத்துவக் கல்லூரிக்கு அட்மிஷன் கொடுக்கும் முறையை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அட்மிஷன் செய்யும்போது அம்மாதிரி கண்டிஷன் ஒன்றும் இல்லை. ஹவுஸ் சர்ஜன்ஷிப் முடிந்ததற்கு பிற்பாடுதான் கம்பல்சரி சர்விஸ் பற்றிக் கவனிக்கவேண்டும்.

திருமதி. பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : இதுகாறும் ஒரு வருஷம் இன்டர்ன்ஷிப், ஒரு வருஷம் ஹவுஸ்-சர்ஜன்ஷிப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இரண்டுவருஷப் பயிற்சியை ஒரு வருஷமாகக் குறைத்து விடுவதனால், ஹவுஸ்சர்ஜன் பயிற்சியில் இரண்டு வருடத்திற்கும் சேர்த்துப் பயிற்சி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இன்டர்ன்ஷிப்பில் என்ன கற்றுக்கொடுக்கிறார்களோ, அது ஒரு வருஷத்தில் ஹவுஸ்-சர்ஜின் பயிற்சியின்போதே கற்றுக்கொடுக்கப்படுகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஹவுஸ்-சர்ஜன் பயிற்சியை முடிக்காமலேயே இராணுவ சேவைக்கு நமது மாநிலத்திலிருந்து டாக்டர்கள் போயிருக்கிறார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதுவரை அம்மாதிரி யாரும் 'ஆஃபர்' செய்யவில்லை.

Regional Workshops

* 384 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) how many Regional Workshops are there under the Control of the Board of Revenue; and

(*b*) where are they located?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There are 3 Regional Workshops under the control of the Board of Revenue.

(*b*) They are located at Thanjavur, Salem and Madurai.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி ரிப்பேருக்கு அனுப்பப்படும் கார்கள் மாதக்கணக்கில் கிடக்கின்றன. போதுமான வசதிகளோடு ஷெட் கிடையாது. ரிப்பேருக்குப் போகும் கார்களுக்கு கெட்டுப்போகும் நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே, ஷெட்களை அதிகமாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : பொதுவாக, அந்த ஒர்க்ஷாப்புக்கு வேண்டிய கட்டடங்கள் எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்பொழுது அமைந்திருக்கும் கட்டடங்கள் போதாது என்பதற்காக அவற்றையெல்லாம் விரிவுபடுத்தவேண்டும் என்கிற ஆலோசனையும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஒர்க்ஷாப்புக்குச் செல்லும் கார்கள் விரைவில் ரிப்பேர் செய்யப்பட்டு அனுப்பப்படுவதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதிசீக்கிரத்தில் கார்கள் ரிப்பேர் செய்யப்பட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. வெ. ராமையா : ஒவ்வொரு ரீஜினல் ஒர்க் ஷாப்பிலும் எத்தனை ஜீப்கள், கார்கள் ரிப்பேர் செய்யப்படவேண்டும். சர்விஸ் செய்யப்படவேண்டும் என்ற முறை இருக்கிறது. அதற்கு தகுந்த முறையில் அந்த ஒர்க்ஷாப்பில் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி ஒர்க்ஷாப்களுக்குப் பக்கத்தில் ஐந்தாறு மைல் சுற்றளவில் வரும் கார்களுக்குப் பெட்ரோல் சப்ளை செய்யப்படுவது உண்மையா ? அது சம்பந்தமாகச் சில கம்ப்ளெய்ன்ட்கள் வந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த ஒர்க்ஷாப்பில் எண்ணெய் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடும் இருக்கிறது. பக்கத்திலிருக்கும் வண்டிகளுக்கெல்லாம் கொடுக்கிறார்கள். ஆனால், அது சம்பந்தமாக எந்த விதமான புகாரும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சிறிய சிறிய ரிப்பேர்களுக்குக் கூட ஜில்லா தலைநகரங்களிலுள்ள ஜீப்கள் சென்ட்ரல் ஒர்க்ஷாப்புக்கு வரவேண்டியிருக்கின்றன. அதனால் பெருத்த செலவு ஏற்படுகிறது. பெரிய ரிப்பேராக இருந்தால், சென்ட்ரல் ஒர்க்ஷாப்புகளிலும் சிறிய ரிப்பேராக இருந்தால் மாவட்டங்களிலுள்ள ரிஜிஸ்டர்டு ஒர்க்ஷாப்களிலும் ரிப்பேர் செய்து கொள்ளலாம் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. வெ. ராமையா : சில அங்கீகரிக்கப்பட்ட, தனியார்த் துறையில் நடக்கும் ஒர்க்ஷாப்புக்கும் வண்டிகளை அனுப்பி ரிப்பேர் செய்து கொள்ளுவதற்கான அனுமதியை அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

Kist Remission

* 385 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal for the remission of kist in the flood affected villages in Tiruchirapalli and Thanjavur, in respect of lands submerged by sands?

THE HON. SRI V. RAMAIAH : Yes.

திரு. ஆ. கு. சுப்பையா : வெள்ளத்தினால் மண் மேடிட்டு அகற்றப்படாமலிருக்கும் நிலையில் கிஸ்தி கொடுக்க விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களைப் பொறுத்தவரையில் உடனடியாக கிஸ்தி வஜா செய்ய உத்தரவிடப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கிஸ்தி நிவாரணம் கொடுப்பதுதான் திட்டம். அதனால்தான், 'ஆம்' என்று முதல் கேள்விக்குப் பதிலளித்தேன்.

திரு. க. ர. நல்லசிவம் : கிஸ்தி நிவாரணம் கொடுத்தாலும், மண்ணை எடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் கடனுதவி செய்துகொண்டிருப்பது கனம் அங்கத்தினருக்கு நன்றாக தெரியும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தஞ்சை ஜில்லாவில் கிஸ்தி வஜா செய்யப்பட்ட கிராமங்கள் எவை என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கிராமங்களின் பெயர்கள் என்னிடம் இல்லை. ஆனால், பாதிக்கப்பட்ட தாலூகாக்களும், விஸ்தீரணமும் சொல்ல முடியும். பாபநாசம் தாலூகாவில் பத்து ஏக்கரும், நன்னிலம் தாலூகாவில் 21·65 ஏக்கரும், தஞ்சாவூர் தாலூகாவில் 76 ஏக்கரும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

முந்திரிப் பருப்பு (ஏற்றுமதி)

* 386 கேள்வி —**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

முந்திரிப்பருப்பு ஏற்றுமதி (**Export**) செய்கின்ற வியாபாரிகளுக்கு கடனாக முன் பணம் கொடுக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : எங்களுடைய பகுதியிலிருந்து முந்திரிப் பருப்பு அமெரிக்க நாட்டுக்கு ஏராளமாக ஏற்றுமதி ஆகிறது. ஆனால் அமெரிக்க நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முந்திரிப் பருப்புக்கு அங்கிருந்து பணம் வர இரண்டு மூன்று மாதங்கள் ஆகின்ற காரணத்தினால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற தொழில் நசித்து விடாமல் இருக்க சிறிய ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் தொழில்துறை இயக்குநர் மூலமாகக் கடன் வசதி செய்து தர முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழில் வளர்ச்சி ஏற்பட ஸ்டேட் எய்டு இண்டஸ்ட்ரிஸ் சட்டம் மூலம் உதவி அளிக்கப்படுகிறது. வியாபாரம் சம்பந்தப்பட்ட வரையில் கமர்ஷியல் பாங்குகள் மூலம் பணம் கொடுத்து உதவப்படுகிறது. "பில் ஆப் லேடிங்" கொடுத்து பாங்குகளை சாதாரணமாக டிஸ்கவுண்ட் செய்து உதவி செய்கிறார்கள். இதற்குச் சர்க்கார் தனியாக உதவி செய்வதாக உத்தேசம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : கைத்தறி ஜவுளியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளுக்கு (கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இது முந்திரிப் பருப்பு பற்றிய கேள்வி) எக்ஸ் போர்ட் சம்பந்தம் இருக்கிறது. அரசாங்கம் கடன் கொடுத்து உதவ முன் வருமா ?

பதில் அளிக்கப்படவில்லை.

Natural Gas (Avadi)

* 387 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that Natural gas has been located near Avadi; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) It would be very premature to say that Natural gas has been located in Avadi. Some emanation which may perhaps be Natural gas has been detected. This occurrence is being investigated by the Oil and Natural Gas Commission.

புதுக்கோட்டைக்குக் காவிரி நீர்

* 388 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

புதுக்கோட்டைப் பகுதிக்குக் காவேரித் தண்ணீரைக் குழாய்கள் மூலம் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : A very preliminary examination was made for suppyling water to meet the needs of Pudukkottai Division by pumping from the Cauvery, but it was not pursued in view of the high cost and foreign exchange difficulties.

திரு. ஆ. துரை அரசன் : சபாநாயகர் அவர்களே, சுமார் 55 லட்சம் ரூபாயில் புதுக்கோட்டை, அறந்தாங்கி பகுதிகளுக்குக் காவேரி நீரைக்கொண்டு வர அண்மையிலே திட்டமிடப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அப்படி எதுவும் திட்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை பகுதியை ஒட்டியுள்ள கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்கும் காவிரி நீரைக் கொண்டு வரும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ? அதனுடைய விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பம்பிங் ஸ்கீம் சம்பந்தமாக இப்போது சாத்தியம் இல்லை என்று சொல்லிவிட்டேன். மற்ற முறையில் தண்ணீர் கொண்டு வருவதைப் பற்றி பரிசீலனை செய்யும்போது, அது புதுக்கோட்டை பகுதியோடு மட்டும் நின்றுவிடாது. கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்கு மட்டுமல்லாமல் வேறு எந்தெந்தப் பகுதிக்குப் போகவேண்டுமென்றாலும் அரசாங்கம் கவனிக்கும் என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், அமைச்சர் அவர்கள் "ஹை காஸ்ட்" என்று சொன்னார்கள். அந்தத் தொகை எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சில நாட்களுக்கு முன் நான் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டேன். அவர்கள் இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஆரம்பிக்கும்போதே, இந்தத் திட்டத்தைக் குறித்து நினைக்க முடியாத அளவுக்கு ஆரம்ப மதிப்பீடு இருந்தது. அதனால் இந்தத் திட்டம் இப்போது சாத்தியமில்லை என்பது இப்போது இருக்கக்கூடிய நிலை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, காவேரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று திட்டம் இருந்தது. அது இப்போது எந்த நிலையில் உள்ளது.

கனம் திரு. வெ. ராமைய்யா : காவேரியிலிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டுவர பல திட்டங்களைப் பற்றிப் பரிசீலனை செய்தார்கள். அந்தப் பரிசீலனை பல கட்டத்தில் இருக்கிறது. அதற்கிடையில், சமீபத்தில் குல்ஹாத்தி கமிஷன் ஆராய்ச்சிப்படி மத்திய அரசாங்கம் எடுத்திருக்கும் நல்ல முடிவை எடுத்துக்கொள்வது பற்றி அங்கத்தினர்கள் அறிந்திருப்பார்கள். ஆகையால் காவேரித் திட்டத்தை இதையெல்லாம் மனதில் கொண்டுதான் முடிவு செய்யவேண்டும்.

திரு. க. ர. நல்லசிவம் : புதுக்கோட்டை பகுதியில் பம்பிங் ஸ்கீம் வைப்பதனால் அதிகப்படியான தொகை செலவாவதாக இருப்பினும், சேலம், திருச்சி மாவட்டத்தில் பம்பிங் ஸ்கீம் ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பம்பிங் ஸ்கீம் பெரிய அளவில் செய்வது என்றால் கஷ்டம். அந்தப் பம்புகள் எல்லாம் வெளிநாடுகளில் இருந்து வரவேண்டும். பெரிய பாசனப் பொறுப்பை எடுத்துக்கொள்ளும் போது பம்பிங் ஸ்கீம் மூலமாகப் பெரிய பிராந்தியத்துக்குத் தண்ணீர் கொடுக்க முடியுமா என்பது இப்போது இருக்கக்கூடிய சிக்கல். இருந்தாலும் முயற்சி எடுத்துப் பார்க்கவேண்டும். ஆனால், காவேரியில் எங்கு பார்த்தாலும் பம்பிங் ஸ்கீம் கொண்டுவந்து விட்டால் நிரந்தரமாகப் பாசன வசதிபெறும் பகுதிகளுக்குப் பாதகம் ஏற்படும். இதிலே மிக ஜாக்கிரதையாகக் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : புதுக்கோட்டை இராமநாதபுரம் பகுதிக்குக் காவேரி மூலம் தண்ணீர் கிடைக்க ஏதாவது சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை யென்று நான் இப்போது சொல்லிவிடத் தயாராக இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : காவேரியிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரப்படும் தண்ணீர் சென்னைக்கு மட்டும் பயன்படுமா ? அல்லது மற்ற மாவட்டங்களுக்கும் பிரயோசனப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கேள்வி அந்தத் திட்டம் உருவாகி நடைமுறைக்கு வரும்போது எழவேண்டிய கேள்வி. இப்போது இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : காவேரியின் குறுக்கே கட்டப்படும் ஹொகனேகல் திட்டத்தினால் தேக்கப்படும் நீரைக் கிருஷ்ணகிரி தேக்கத்திற்கும், சாத்தனூர் தேக்கத்திற்கும் விடும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கேள்வி இப்போது எழா விட்டாலும் கூட, கனம் அங்கத்தினருக்குச் சொல்ல விரும்புகிறேன். ஹொகனேகல் திட்டம் வரும் பட்சத்தில் அது வெறும் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டமாகத்தான் இருக்கும். ஆகவே, வேறு பிராந்தியங்களுக்கு நீரை எடுத்துச் செல்லும் நினைப்பு இருந்தால் அதை இப்போதே விட்டுவிட வேண்டும்.

திரு. ஆர். வி. சாமிநாதன் : காவேரியில் ஓடும் தண்ணீரில் எவ்வளவு விவசாயத்திற்காகப் பயன்படுகிறது. கடலில் போய் எவ்வளவு தண்ணீர் வீணாக விரயமாகிறது ?

கனம் திரு. வெ. ராமையா : காவேரித் தண்ணீர் ஏராளமாக விவசாயத்திற்குத்தான் பயன்படுகிறது. வருஷத்தில் ஒரு சில தினங்களில் அதிகமாக வெள்ளம் வரும்போது தண்ணீர் கடலில் போய்ச் சேர்ந்து விடுகிறது. அப்படிக் கடலில் போய் விழுகிற தண்ணீரைக் கூடத் தடுப்பதற்கு ஒரு மாஸ்டர் பிளான் ஆராயப்பட்டு வருகிறது. அதெல்லாம் சீப் இன்சினியர் கட்டத்தில் பரிசீலனையில் இருக்கிறது. அவர்கள் பரிசீலனை முடிந்து அரசாங்கத்திற்கு வரும்போது அரசாங்கம் அந்தத் தண்ணீர் வீணாகாமல் இருப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளும். இப்போது எவ்வளவு தண்ணீர் கடலில் போய் வீணாகிவிடுகிறது என்ற விவரம் இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, புதுக் கோட்டைப் பகுதிக்குக் காவேரித் தண்ணீரை பம்பிங் ஸ்கீம் மூலமாகக் கொடுக்க காவேரியில் எந்த இடத்திலிருந்து எடுப்பதாக உத்தேசம் ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த 'ஹைபாதடிகல்' கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். ரங்கசாமி : காவேரி ஆற்றில் ஓடக்கூடிய தண்ணீர் அந்த ஆற்றிலிருந்து மட்டும் வரக்கூடிய தண்ணீரா, அல்லது வேறு உபநதிகளில் இருந்தும் கலக்கக் கூடிய தண்ணீரா ?

கனம் திரு. வெ. ராமையா : எல்லா நதிகளிலிருந்தும் தண்ணீர் வரும். ஸ்பெசிபிக்காக இதற்கு ஒரு பதில் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடும் பட்சத்தில் அதற்குத் தனி ஆராய்ச்சி ஒன்றையே செய்து பதில் சொல்ல முடியும்.

திரு. ப. க. முத்துவேலப்ப கவுண்டர் : காவேரி ஆற்றுத் தண்ணீர் தங்கச் சத்துள்ளது என்று சொல்கிறார்களே, உண்மையா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த ஆராய்ச்சிக்குள் நாங்கள் இன்னும் புகவில்லை.

திரு. ஆ. துரை அரசன் : சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் காலத்திற்குள்ளாகவே (சிரிப்பு)—பதவிக் காலத்திற்குள்ளாகவே புதுக் கோட்டை, அறந்தாங்கி, கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டுவர முயற்சிப்பார்களா ?

கனம் சபாநாயகர் : அவருடைய பதவி காலத்தை கனம் அங்கத்தினர் முடிவு செய்து விட்டார்களா ? (சிரிப்பு)

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் காரியம் தனிப்பட்ட ஒரு அமைச்சர் காலத்திலோ தனிப்பட்ட அதிகாரி காலத்திலோ நடந்துவிடும் என்று சொல்ல முடியாது. பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் நிபுணர்களின் ஆராய்ச்சிக்குத் தகுந்தவாறு திட்டங்கள் நிறைவேற்றப்படும். இன்றைக்குச் சாத்தியமில்லாது இருக்கக் கூடிய திட்டங்கள் சில வருஷங்களுக்குப் பிறகு சாத்தியமாகக்கூடிய நிலைமைகள் ஏற்படலாம். ஆகவே, இன்னுருடைய காலத்திலேயே செய்து முடித்துவிட வேண்டுமென்று நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அணுகுவது சரியல்ல.

திரு. இராம. அரங்கண்ணல் : தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற பெரும்பாலான நதிகள் மண்மேடிட்டு வருகின்றன. அதை எல்லாம் போக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : நீர்ப்பாசன மானிய விவாதத்தின் போதே இதைப்பற்றி யெல்லாம் விவரமாகச் சொல்லியிருப்பதாக ஞாபகம். தஞ்சை ஜில்லாவிலுள்ள பாசன வசதிக் கால்வாய்கள், ஆறுகள் எல்லாம் தக்க பாதுகாப்பு இல்லாத காரணத்தால் நீண்டகாலமாக மண்மேடிட்டுப் போய் இருக்கின்றன. அதற்காக விசேஷ கவனம் செலுத்த வேண்டிய முறையில் இன்வெஸ்டிகேஷன் பிரிவை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்கள் அதைப் பற்றிப் பரிசீலனை செய்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் 17 கோடி ரூபாய் செலவு செய்தால்தான் இந்த நிலைமை சீர்பெறும் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் காரியத்தைச் செய்வது பற்றி அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

தையற்கலை தொழில் பயிற்சிப் பள்ளிகள்.

*389 கேள்வி.—**திரு. எஸ். ராமசாமி :** கனம் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— 9-00 a.m.

(அ) இம்மாநிலத்தில் தையற்கலை தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கு உள்ளன ?

(இ) இதுவரை எத்தனை மாணவர்கள் பயிற்சி பெற்று உள்ளனர் ?

(உ) இதுவரை எத்தனை பேர்களுக்கு வேலை வாயப்பு தரப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) விவரங்களடங்கிய ஓர் அறிக்கை (a) சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

(உ) தேசிய வேலை தேடித்தரும் ஸ்தாபனம் மூலம் 1962-ம் ஆண்டில் 127 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : மேஜை மீது வைக்கப்பட்டுள்ள குறிப்பில் 1959-60-ல் 221 பேர்களும், 1960-61-ல் 247 பேர்களும், 1961-62-ல் 274 பேர்களும் இதில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தையல் தொழில் முக்கியமான, உடை விஷயம் சம்பந்தப்பட்ட தொழிலாக இருந்தும்கூட அதிகப்படியான பேர்கள் இந்த பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறாமல் இருக்கக் காரணமென்ன ? உற்சாகக் குறைவால் அவர்கள் சேரவில்லையா ? அதை நிவர்த்திக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் சபாநாயகர் : பெரிய "ஸ்பீச்" மாதிரியே போய்விடுகிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டில் இதை கல்லூரிக்கு அல்லது பள்ளிகளுக்குப் போய் படித்துக்கொள்ளவேண்டும் என்ற நிலை இல்லை. எவ்வளவோ பேர்கள் தையல் தொழில் நடத்துகிறார்கள்.

---
a Printed as Appendix on pages 592-594.

பக்கத்தில் உள்ளவர்களிடம் கற்றுக்கொள்கிறார்கள். பள்ளிக்கூடத்திற்குச் சென்று பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையைத்தான் கொடுத்திருக்கிறேன். இதைவிட பன்மடங்கு வேறு வகையில் பயிற்சி பெறுகிறார்கள்.

திருமதி சி. குழந்தையம்மாள் : இந்தத் தையல் பள்ளிகளிலிருந்து மலேயா நாட்டிற்கு துணிகள் தைத்து அனுப்பப்படுகிறதா ? அதற்காக எவ்வளவு தொகை அந்த நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு கொண்டுவரப் படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் இக் கேள்வியில் எழவில்லை.

திரு. சா. ராமசாமி : உயர்நிலைப் பள்ளிகளில் இதுபோன்ற பயிற்சி பெற்றவர்களை வேலையில் அமர்த்தும் உத்தேசம் உண்டா ? அப்படியானால் இதுவரை எவ்வளவு பேர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் வேலையில் அமர்த்துவதில்லை. எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ச் மூலம் எந்தெந்த இடத்தில் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு இவர்கள் பெயர்களை சிபார்சு செய்கிறார்கள். சர்க்கார் எந்தவித வேலையிலும் அமர்த்த யோசனை இல்லை.

திருமதி சி. குழந்தையம்மாள்: பெரும்பாலான பள்ளிகள் சென்னையில் இருப்பதாகத் தெரிகிறது. கோவையில் உள்ள தையல்கள் இந்தத் தையலை விரும்பவில்லையா ? [சிரிப்பு]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு கனம் அங்கத்தினர் தான் பதில் சொல்லவேண்டும்; ஏன் அங்கு பள்ளிக்கூடம் வைக்கவில்லை என்று.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தையல் பயிற்சி எவ்வளவு ஆண்டு கொடுக்கப் படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பன்னிரண்டு மாதம்.

மாநில குடும்பக் கட்டுப்பாடுக்குழு.

* 390 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு குழுவிற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இதுவரையில் எத்தனை மெம்பர்களை நியமனம் செய்திருக்கிறார்கள் ?

(இ) அப்படி நியமனம் செய்யப்படும் மெம்பர்கள் எந்தத் தகுதியின் பேரில் செய்யப்படுகிறார்கள் ?

(உ) அவர்களின் அலுவல்கள் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 21 மாவட்ட அபிவிருத்தி மன்றங்களும் மாநிலக் குடும்பக்கட்டுப்பாடுக் குழுவிற்கு ஒவ்வொரு உறுப்பினரை நியமனம் செய்து அனுப்பியுள்ளன.

(இ) மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் அடியிற்கண்ட தகுதிகளுடைய உறுப்பினர்களைத் தங்களது பிரதிநிதிகளாக நியமனம் செய்யலாம்; அவை யாவன :—சம்பந்தப்பட்ட உறுப்பினர் அவரது பிரதேசத்தில் செல்வாக்கு உள்ளவராக இருக்க வேண்டும் ; தமிழ்நாடு குடும்பக் கட்டுபாடுத் திட்டத்தின் அவசியத்தையும், உபயோகத்தையும் நன்கு உணர்ந்தவராக இருக்க வேண்டும் ; இத் திட்டம் வெற்றிகரமாக முன்னேற, மாவட்டங்களில் உற்சாகத்துடன் தீவிரமாகச் செயல்படுபவராக இருக்கவேண்டும்,

(உ) உறுப்பினர்கள் மாநிலக் குடும்பக் கட்டுப்பாட்டுக் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் ; மேலும் அவர்கள், குடும்பக் கட்டுப்பாடுத் திட்டப் பிரசாரத்திற்காக தங்கள் பிரதேசங்களில் சுற்றுப் பயணம்

திரு. வி. எஸ். எஸ். மணி : குடும்பக் கட்டுப்பாடு நல்லமுறையில் வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால் காந்தியார் சொன்னபடி உண்மையான பிரம்மச்சரிய தத்துவத்தை கடைப்பிடிக்குமாறு மக்களிடம் பரப்ப வெளியீடுகள், பிரசாரம் மூலம் செய்ய முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கெனவே செய்துகொண்டு தான் இருக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : குடும்பக் கட்டுப்பாடு பற்றி வெளியில் எடுத்துச் சொல்ல நியமிக்கப்படுகிறவர்கள் தங்கள் மனைவிகளுடன் பெருவாழ்வு வாழ்ந்து பதினாறும் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்து ரசித்ததைச் சொல்லுகிறார்களா ? அல்லது தாங்கள் அனுபவித்த பிறகு மற்றவர்கள் அனுபவிக்கக்கூடாது என்பதை சொல்லி வருகிறார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பெருவாழ்வு வாழ்ந்து பதினாறும் பெறுவது என்பது 16 குழந்தைகள் அல்ல. பதினாறு பெரும் செல்வங்களைப் பெறுவது என்பது தான்.

திரு. கே. ஏ. மதியழகன் : சுகாதார மான்யத்தின் போது அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் எல்லா மாவட்டங்களிலும் எவ்வளவு பேர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள் என்று மொத்தக் கணக்கு பார்த்தால் சென்னையில், எல்லா ஜில்லாக்களையும் சேர்த்து அந்தளவு இருப்பதாக குறிப்பிட்டார்கள். ஆகவே மாவட்டங்களில் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டை அமுல் நடத்த உறுப்பினர்கள் செல்வாக்கைப் பயன்படுத்த அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அங்கத்தினர் ஏதாவது ஆலோசனை கூறினால் யோசிக்கலாம்.

திரு. க. ர. நல்லசிவம் : இந்தக் கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் ஆப்பரேஷன் செய்து கொண்டவர்களாக இருக்கவேண்டுமென்ற நியதி ஏதாவது உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி நியதி ஒன்றுமில்லை.

திரு.. எஸ். ஜே. ராமசாமி : இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் தரகர்கள் ஆட்களை அழைத்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் கல்யாணம் ஆகாதவர்களை அழைத்து வந்து பணம் சம்பாதிக்க முன்வருகிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அங்கத்தினர் சொல்வது ஓரளவு உண்மைதான். இதை எல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து, பாமிலி ப்ளானிங் க்ளினிக்குகளில் தனிப்பட்ட ஆபீஸர் வாஸக்டமி செய்யவருகிறவர்களை பார்த்து, அவர்கள் விவாகம் ஆகாதவர்களாக இருக்கிறார்களா என்றெல்லாம் பார்த்து தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். கல்யாணம் ஆகாதவர்கள் யாரையோ மனைவி என்று சொல்லி அழைத்துக் கொண்டு வருகிறார்கள். இதற்கெல்லாம் அரசாங்கம் பொறுப்பு எடுத்துக் கொள்ளமுடியாது.

திரு. ம. கமலநாதன் : குடும்பக் கட்டுப்பாடு நிமித்தம் அறுவை சிகிச்சை மேற்கொண்ட ஆண்களில் யாராவது ஆண்மை இழந்திருக்கிறார்களா ? அப்படிப்பட்ட பிரசாரம் பத்திரிகைகளில் வருகிறது. அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

திரு. செ. கோ. விஸ்வநாதன் : "ஸோஷியல் வொர்க்கர் .•.பார் பாமிலி ப்ளானிங்" என்ற திட்டம் அமுலில் இருக்கிறதா ? அந்தப் பயிற்சித் திட்டம் எந்தளவில் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சோஷியல் வொர்க்கர்ஸ்-ஐ எடுக்கவேண்டுமென்று இருந்தது. தற்போதைய அவசர நிலையை உத்தேசித்து அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் நம்பிக்கை இல்லாதிருக்கிறவர்கள், அதற்கு நேர் விரோதமாக பேசும் அதிகாரிகள் இருக்கிறார்கள், அங்கத்தினர்களும் இருக்கிறார்கள், என்று இதுபற்றி எதாவது குற்றச்சாட்டு வந்திருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நம்பிக்கையில்லாதவர்களிடம் நம்பிக்கை ஏற்படுத்துவது கடினம்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னையில் பல தவறுகள் நடக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அத்தவறுகள் இனிமேல் நடைபெறாமல் இருக்க இதற்கு ஆசைப்பட்டு வருகிறவர்கள் அந்த வட்டார கவுன்சிலிடம் அல்லது எம்.எல்.ஏ.-யிடம் அல்லது பொறுப்புள்ள ஒருவரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்று வரவேண்டுமென்று உத்தரவிடப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தத் தரகர்களினால்தான் இந்தக் குழப்பம் ஏற்படுகிறது. அவரவர்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ள இஷ்டப்பட்டு, மனப்பூர்வமாக வரலாம். இந்தத் தரகர்களை ஒரு வழியாக நிறுத்திவிடலாம் என்ற ஆலோசனை இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை கல்லூரி மாணவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாணவர்களாக இருப்பவர்களுக்கு இதைக் கற்றுக் கொடுப்பது நன்றாகயிருக்காது.

திரு. கே. ஏ. மதியழகன் : குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் தமிழ் நாட்டில்தான் இவ்வளவு சிரத்தை காட்டப்படுகிறது, வேறு மாநிலங்களில் அப்படி காட்டப்படுவதில்லை என்பது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆம். உண்மைதான்.

SRI R. V. SWAMINATHAN : Sir, in view of the Chinese threat and also in view of the need for armed forces, may I know whether the Government have got any proposal to relax this scheme?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, it will take some years for the future generation to join the Army and we do not expect any war. So I do not think that there is any necessity for it.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, இந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதனால் குறிப்பிட்ட சமயங்களில் தாமதம் ஏற்படுகிற காரணத்தினால் தனிப்பட்ட டாக்டர்களுக்கும் அனுமதி வழங்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது அரசாங்கத்தின் திட்டம். தனிப்பட்ட டாக்டர்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்காது. ஒரு மாதத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்று கண்டிப்பான விதி இருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், மாவட்டங்களிலிருந்து அங்கத்தினர்களெல்லாம் கலந்து கொண்ட மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனி கேள்வி போட வேண்டும்.

திரு. ப. கா முத்துவேலப்ப கவுண்டர் : ஸார், கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கிறவர்களுக்கு சர்க்கார் ஏதாவது பரிசு கொடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : If I may be permitted to say Sir, கல்யாணம் ஆகாதவர்களுக்கும் குழந்தை பிறக்கலாம் !

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், சில இடங்களில் அறுவை சிகிச்சை செய்வதற்கு டாக்டர்கள் இல்லாமலே இருக்கிறது. அந்தமாதிரி இருக்கக் கூடிய இடங்களில் தனிப்பட்ட டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்வதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பிரைவேட் டாக்டர்கள் பலர் குடும்பக் கட்டுப்பாட்டிற்காகச் செய்யப்படும் 'வாசக்டமி' ஆபரேஷனில் டிரெயினிங் பெற்ற பிறகு அங்கு உதவி டாக்டர்களாகப் போடப்படுகிறார்கள்.

திரு. வி. ராமநாதன் : ஸார், பஞ்சாயத்து யூனியன் முறை நாட்டில் ஏற்பட்ட பிறகு இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கிராமங்களிலே வெற்றி பெற்று இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியுமென்று நினைக்கிறேன்.

திரு. எம். குழந்தைசாமி கவுண்டர் : ஸார், ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொண்டவுடன் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு வேறொரு பெண்ணை கல்யாணம் செய்துகொள்வதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்கெல்லாம் தனிப்பட்ட சென்ஸஸ் எடுக்க வேண்டுமென்பது சிரமம்.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, "ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, மூங்கில் போல் கிளை கிளைத்து முசியாமல் வாழ்ந்திருக்க" என்று திருமணச் சடங்குகள் போது ஆசீர்வாதம் பண்ணுகிறோம். அப்படி இருக்கும்போது குடும்பக்கட்டுப்பாடு திட்டம் எதற்கு ? ஒன்று குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை எடுத்துவிடுமா ? அல்லது ஆசீர்வாதம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கையாவது எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடும்பக் கட்டுப்பாட்டின்படி மூன்று நான்கு பிள்ளைகள் பெற்ற பிறகு கட்டுப்படுத்த வேண்டுமென்று இருக்கிறது. அந்தப் பிள்ளைகளை நன்றாக வளர்த்தால் போதும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், குடும்பக்கட்டுப்பாடு பற்றிய பிரச்சார படங்களில் மூன்று பிள்ளைகள் தான் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கும் மூன்று குழந்தைகள் என்று . . . .

[மணியடிக்கப்பட்டது.]

Government Estate (Quarters)

* 391 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of houses in the Government Estate, Madras;

(b) the number of houses allotted to Members of the Legislative Assembly and Members of the Legislative Council;

(c) the number of houses allotted to Government Officials;

(d) whether houses are allotted to out-siders and if so, the number allotted;

(e) the number of houses vacant at present; and

(f) whether any applications have been received for the occupation of these houses?

THE HON. SRI V. RAMAIAH: (a) 228 houses.

(b) 7 houses.

(c) 213 houses.

(d) Yes, 8 houses.

(e) 1 house.

(f) Yes. The one vacant quarters is reserved for allotment to Members of the State Legislature and the matter of allotment is under consideration of the Government.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இப்போது அநேக வீடுகள் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருந்தால் அவைகளைக் காலி செய்து அந்த வீடுகளை சட்டசபை அங்கத்தினர்களுக்கு கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனியார் யாரும் அந்த வீடுகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், சட்டசபை அங்கத்தினர்களுக்கு வீடு கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நேற்று ஒரு அங்கத்தினர் இடமில்லாமல் வெளியே சென்று தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே போதிய ஏற்பாடுகளைச் செய்து எல்லோருக்கும் வீடு கிடைக்க வசதி செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்தினுடைய முயற்சி சட்டசபை அங்கத்தினர்களுக்கு தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பதுதான். சமீபத்தில் எடுத்த முயற்சியால் கூட நியூ ப்ளாக்கில் நான்கு ரூம்கள் காலி செய்யப்பட்டு சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய பெரிய கட்டிடங்களிலுள்ள அலுவலகங்களை எல்லாம் மாற்றி அவைகளை சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுவது பற்றிய பரிசீலனையை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுகிற வீடுகள் கட்சி வாரியாகக் கொடுக்கப்படுகிறதா ? அப்படியானால் எத்தனை வீடுகள் ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இருக்கக்கூடிய வீடுகள் மிகவும் குறைவு. கட்சிவாரியாகக் கொடுக்கும் உத்தேசமில்லை. அங்கத்தினர் இந்த மாதத்தில் நடைபெற்ற "ஹவுஸ் கமிட்டி" கூட்டங்களுக்கு வந்திருந்தால் தெரிந்திருக்கும். அங்கத்தினர்கள் எல்லோரையும் ஒரு அமைப்பாக வைத்துத்தான் வீடுகளை அவர்களுக்குக் கொடுக்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சென்னையில் சொந்த வீடு கட்டிக்கொண்டிருக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அரசாங்க வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ? அப்படியானால் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை.

துவக்கப் பள்ளிகள் [பஞ்சாயத்து யூனியன்கள்]

* 392 கேள்வி.—**திரு. சி. மா. அம்பிகாபதி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து கூட்டுமன்றங்கள் அமைந்ததற்கு பின் ஆரம்பப் பள்ளிகளில் கல்வித்தரம் குறைந்துள்ளதா ? அல்லது உயர்ந்துள்ளதா ?

(இ) கல்வி நிர்வாகத்தை பஞ்சாயத்து நிர்வாகத்தில் இருந்து பிரித்து முன்னர் இருந்ததுபோல் கல்வித்துறையினரிடமே விட்டுவிடும் நோக்கம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இதைப்பற்றிய மதிப்பீடு ஒன்றும் செய்யப்படவில்லை.

(இ) இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No assessment has been made.

(b) No.

Bye-Elections (Madras Legislative Assembly)

* 393 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Election Commission have consulted the State Government regarding the programme for holding the bye-elections to the Assembly seats rendered vacant recently;

(b) if so, the views offered by the Government; and

(c) the reasons for not suggesting the abeyance of these bye-elections for the period of National Emergency?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) and (b) The Election Commission has, after consulting the Government of India, decided that it is no longer necessary or desirable to hold up the bye-elections in view of the improvement in the emergency situation. The State Government was not consulted in the matter. The Election Commission is the final authority under the electoral law in deciding the issue.

(c) Does not arise.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இப்போது உபதேர்தலில் எல்லா சுதந்திரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பாதுகாப்புச் சட்டத்தைத் தளர்த்த முடியாது என்று நம்முடைய உள்துறை அமைச்சர் திரு. லால்பஹதூர் ஸாஸ்திரி அவர்கள் கூறியிருப்பது முரண்பாடாக இல்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிலே முரண்பாடு ஒன்றும் இல்லை. உபதேர்தலில் நிற்கின்றவர்களுக்கு எல்லா பேச்சு சுதந்திரங்களும் உண்டு. பாதுகாப்பு விதிகளுக்கு முரண்பாடாகப் பேசவேண்டிய அவசியம் இல்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்துத் தலைவர்கள் இடம் காலியானால் அதற்கும் தேர்தல் நடத்தக் கூடாது என்று அரசாங்கம் மெமோராண்டம் அனுப்பி இருக்கிறதா ? அப்படி இருந்தால் பஞ்சாயத்துக்களில் உபதலைவர்கள் வேலை செய்யும் போது அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களிலே அங்கத்தினர்களாக இருக்க முடியாத நிலைமை இருப்பதால் அதற்கும் எலெக்ஷனை நடத்த அரசாங்கம் உத்திரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தலைவர் பதவியில் காலி ஸ்தானம் ஏற்பட்டால் தேர்தல் நடத்தக்கூடாது என்று விதி இல்லை.

திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : உபதேர்தல்களிலே அரசாங்கத்தை அவதூறாகப் பேசினால் அதற்கு தகுந்தவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் சட்டங்கள் இருக்கின்றன. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உபதேர்தல்களை மே திங்களில் நடத்தலாம் என்று நம்முடைய அரசாங்கம் கேட்டுக்கொண்டிருப்பதாகப் பாராளு மன்றத்தில் தெரிவித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் வந்திருக்கின்றன. அது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மே திங்களில் தேர்தலை வைக்கலாமென்று இந்த மாநில அரசாங்கம் அபிப்பிராயம் தெரிவிக்கிறது. தேதிகள் நிர்ணயிக்கும்போது மாநில அரசாங்கத்தின் யோசனையைக் கேட்டுக்கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த அரசாங்கம் சில தேதிகளை குறிப்பிட்டனர். எலெக்ஷன் கமிஷன் பரிசீலனை செய்து தேர்தல் நடத்தவேண்டிய தேதிகளை மேற்கொண்டு நிர்ணயிக்கும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலை நடத்தக்கூடாதென்று உத்திரவு பிறப்பிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் டிவிஷனில் உள்ள பஞ்சாயத்து யூனியன் ஆபீசர் பொதுவான ஒரு முடிவை வைத்துக்கொண்டு தேர்தல் நடத்துவதற்கான ஒரு தேதியைக் குறிப்பிடாமல் இருக்கிறார். ஆகவே தனியாக ஒரு உத்திரவை அனுப்பி தலைவர் ஸ்தானத்துக்குத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் இதைப்பற்றி குறிப்பாக எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், திருவண்ணாமலைத் தொகுதி உப தேர்தலைக் குறித்து, தேர்தல் குழு நம்முடைய அரசாங்கத்தைக் கலந்து ஆலோசித்ததா ? எப்போது இந்த உப தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசாங்கம் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த உப தேர்தலைப் பற்றி என்ன தேதிகள் வைத்துக்கொள்வது என்று–நியமனம் தாக்கல் செய்வது போன்றவைகளுக்கு என்ன ப்ரோக்ராம் வைத்துக்கொள்வது என்பது பற்றி இந்த அரசாங்கத்தின் யோசனை கோரப்பட்டது. அதைப் பற்றி இந்த அரசாங்கம் யோசனை தெரிவித்திருக்கிறது. தேர்தல் கமிஷன் அது பற்றி முடிவு தெரிவிக்கும் வரையில் இந்த அரசாங்கம் என்ன தெரிவித்தது என்று சொல்வதற்கில்லை. இந்த அரசாங்கத்தின் யோசனை இறுதியானது அல்ல. எலெக்ஷன் கமிஷன் தான் எல்லாவற்றையும் நிர்ணயிக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இடைத் தேர்தல்களை நடத்துவது, என்ற முடிவையொட்டி, நகராட்சி மன்றத் தேர்தலையும் நடத்த அரசினருக்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் எந்தத் திங்களில் அது நடைபெறும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி முன்பே தெரிவித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். இப்போது இடைத் தேர்தல்களை நடத்துவது பற்றி எலெக்ஷன் கமிஷன் மத்திய அரசாங்கத்தினுடைய யோசனையைக் கேட்டு இப்போது எலெக்ஷன் கமிஷன் முடிவு செய்திருக்கிறது. இங்கே நம் மாகாணத்தைப் பொறுத்த வரையில் நாம் ஒரு சட்டம் செய்திருக்கிறோம். மேற்கொண்டு இதை மாற்றவேண்டுமா என்பது

அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்த பிறகுதான் தேர்தல் வைத்துக் கொள்ளப் போகிறோமா, எப்போது வைத்துக் கொள்ளப் போகிறோம் என்றெல்லாம் தகவல் கொடுக்க முடியும்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், பஞ்சாயத்து தலைவர் ஸ்தானம் காலியாக இருக்கும்போது, பஞ்சாயத்து அங்கத்தினர்களும் உப தலைவரும் மீட்டிங் கூடி தலைவர் தேர்தல் நடத்தலாமா ? அல்லது அரசாங்கத்தின் உத்திரவு வேண்டுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விதிகளின்படி உப தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. மூக்கையா தேவர் : இந்த உப தேர்தல்களில், எந்தெந்த கட்சிக்காரர்கள் ஜெயித்து இருந்தார்களோ அவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, அது தேர்தல் கமிஷனுக்குத் தெரிவிக்கப்பட்டதா ? அதன் விவரம் என்ன ?

கனம் திரு. கு. காமராஜ் : அதைப் பற்றித் தேர்தல் கமிஷனுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. இங்குள்ள கட்சிகள் ஒத்துக்கொள்ளலாம். இங்கு இருக்கிற கட்சிகள் ஒத்துக்கொள்ள வேண்டியதே தவிர, இதில் தேர்தல் கமிஷனுக்குச் சம்பந்தமில்லை. இப்போது தேர்தல் கமிஷன் என்ன செய்திருக்கிறது என்றால், ஒரு இடம் காலி ஏற்பட்டால், தேர்தல் நடத்துவதை 6–7மாதங்களுக்கு மேல் தள்ளிப் போடக்கூடாது என்று இருக்கிற காரணத்தினால், அதைப் பற்றி கவர்ன்மெண்ட் ஆஃப் இண்டியாவைக் கேட்டார்கள். நீங்கள் 'சட்டத்தைத் திருத்தப் போகிறீர்களா அல்லது தேர்தலை வைத்துக்கொள்ளலாமா' என்று கேட்டார்கள். அவர்கள் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். தேர்தலை வைத்துக்கொண்டால் நாம் எப்படி நடந்துகொள்ளலாம் என்று தான் யோசனை சொன்னேன். அது இன்னும் இருக்கிறது. அதன்படி நடப்பதாக இருந்தால் இப்போதும் அதைப் பற்றி முடிவு செய்துகொள்ளலாம்.

திரு. மு. கருணாநிதி : காலி ஆகும் இடங்களில் ஏற்கனவே இருந்த கட்சிக்கே அந்த இடத்தை விட்டு விடலாம் என்ற முதல் அமைச்சர் அவர்களுடைய யோசனைப்படி, ஒரு சுயேச்சை இடம் காலியாகி விட்டால், அந்த இடத்தை எந்தக் க்ட்சிக்கு விடுவது என்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. கு. காமராஜ் : யாராவது சுயேச்சையாக நிற்கட்டும்.

அரசாங்க மருத்துவ மனை [பண்ணுருட்டி]

394 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பண்ணுருட்டி அரசாங்க மருத்துவ மனையில் உள்ள ஆண்களுக்கான படுக்கைகள் எத்தனை ?

(இ) அவற்றின் எண்ணிக்கையினை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Two.

(b) No.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், அமைச்சர் அவர்கள் பட்ஜெட் விவாதத்திற்கு பதிலளிக்கும்போது கூட, பண்ணுருட்டி அரசாங்க மருத்துவ மனைக்கு எக்ஸ்பான்ஷன் ப்ரோக்ராமுக்கு எஸ்டிமேட் தயாராகிவிட்டது, ஆனால் எமர்ஜென்ஸி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் வேறு விதமாக பதில் அளிக்கிறார்கள். அந்த மருத்துவ மனைக்கு நாள் ஒன்றுக்கு 300–க்கு மேற்பட்ட நோயாளிகள் வருவது உண்மையா ? அப்படி இருந்தால் அதற்கு அதிகமானபடி வசதி ஏற்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், என்னுடைய பதிலில் வேறு விதமாகச் சொல்லவில்லை. எக்ஸ்டென்ஷன் அண்ட் இன்க்ரீஸ் ஆஃப் பெட் ஸ்ட்ரெங்த் தற்போது அவசர நிலைமையை உத்தேசித்து ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று தான் தெரிவித்தேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : பெரிய பெரிய டவுன் பஞ்சாயத்திலேகூட மருத்துவ வசதி இல்லாமல் இருக்கிறது. கட்டாயமாக, டவுன் பஞ்சாயத்தில் ஒரு (Primary Health Centre) ப்ரைமரி ஹெல்த் செண்டராவது ஏற்படுத்த அரசாங்கத்தார் முன் வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புதுக் கட்டடங்கள் கட்ட வேண்டாமென்று யோசனை செய்திருக்கிறோம். ரொம்பவும் அவசியமாக இருக்கிற இடத்தில் அதைப் பற்றி யோசனை செய்து ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வரும்.

Irrigation Schemes

* 395 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to establish investigation units for conducting investigation before taking up irrigation schemes for execution?

THE HON SRI V. RAMIAH : The Government have sanctioned the creation of an Irrigation Planning Circle with necessary staff for drawing up schemes for the most effective tapping and utilisation of all available sources of water, after a thorough research on a statewide basis.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை எடுப்பதற்கு முன் ஒரு யூனிட்டிடம் பரிசீலனைக்கு விடவேண்டுமென்று செண்ட்ரல் வாட்டர் அண்ட் பவர் கமிஷன் ஆலோசனை கூறியிருக்கிறதா ? அதைப்பற்றி நம் அரசாங்கத்தின் கருத்து என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் யோசனை வரும் வரையில் நாம் காத்திருக்கவில்லை இன்வெஸ்டிகேஷன் செய்யவேண்டியது முறை என்ற காரணத்தினால், யூனிட் என்ற முறையில் இல்லாமல் மாகாணத்தில் இருக்கிற எல்லா நீர்ப்பாசன சோர்ஸ்களை முறையாகப் பரிசீலனை செய்யக் கூடிய முறையில் இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் அமைத்திருக்கிறோம். மாகாணத்தில் பல இடங்களில் அவர்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். பட்ஜெட் விவாதத்தின்போதுகூட நான் அதைப் பற்றி வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஒரு சர்க்கிள் போதவில்லை என்றால் மேலும் ஒரு சர்க்கிள் போட அரசாங்கம் தயாராக இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : பெரிய ஏரிகளிலிருந்து பிரியும் கால்வாய்கள் பல ஊர்களுக்குத் தண்ணீர் பாயக் கூடிய முறையில் இருக்கும் போது குடி மராமத்து வேலை நடைபெறாமல் இருக்கிற காரணத்தினால், கால்வாய்களை ஒப்படைக்கும்போது அப்-டு-டேட்டாக ஆக்கி புதுப்பித்துப் பின்னர்க் குடிமராமத்துக்கு ஒப்படைக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் கேட்கக்கூடிய விவாதத்திற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்போது சிறு பாசனத் திட்டங்கள் என்ற முறையில் ஆங்காங்கு வேலை செய்ய விட்டு விடுகிறோம். சில இடங்களில் வேலையைச் செய்வதற்கு நாமினேட் செய்து விடுகிறார்கள். சில இடங்களில் காண்ட்ராக்டுக்கு விடுவதற்கு டெண்டர் விடுகிறோம்.

நாமினேட் செய்வதில் பல தவறுகளும் குறைபாடுகளும் இருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்த மாதிரி நாமினேஷன் முறையை எடுத்துவிட்டு டெண்டர் கோர அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : பரிசீலனை செய்ய சர்க்கிள்கள் போடப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கெங்கு அம்மாதிரியான சர்க்கிள்கள் போடப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சர்க்கிள் ஒன்றுதான் மாகாணம் பூராவுக்கும். அவர்கள் எந்தெந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமோ அந்த இடங்களுக்கு அதிகாரிகளை அனுப்பி பரிசீலனை செய்கிறார்கள். ஆகையால் இது எந்த இடத்தில் இப்போது வேலை செய்கிறது என்று என்னால் சொல்ல முடியாது.

திரு. க. ர. நல்லசிவம் : இந்த இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் ஏதாவது ஒரு பெரிய திட்டம் சம்பந்தமாக இன்வெஸ்டிகேஷன் வேலையைச் செய்து முடித்திருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை ஜில்லா காவிரி டெல்டா பாசனத்தைப்பொறுத்த வரையில் ப்ரிலிமினரி ரிப்போர்ட் முன் கொடுத்தது. பல இடங்களில் ப்ரிலிமினரி ரிப்போர்ட் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அதனுடைய ஸ்ட்ரெங்த்தை அதிகப்படுத்தவேண்டுமென்று என்னுடைய நினைப்பு. சென்னை ராஜ்யத்தில் உள்ள பெரிய பாசனத் திட்டங்களையெல்லாம், காவிரி டெல்ட்டா, தாம்பரபரணி, வைகை இது போன்ற எல்லாத் திட்டங்களையும் பரிசீலனை செய்யவேண்டும். அதைச் சரிப்படுத்துவதற்காக இன்வெஸ்டிகேஷனை வகைப்படுத்தவேண்டுமென்பது தான் என்னுடைய எண்ணம்.

Health Inspectors (Pay)

* 396 Q.—SRI K. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any request was made to the Government by the Health Inspectors through a resolution passed by the Conference of the Health Inspectors for the enhancement of their pay; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) and (*b*) Yes, the matter is under consideration.

மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வழங்குதல்.

* **397.** கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க மருத்துவ மனைகளில் காலத்தில் Indent போட்டு அனுப்பியும் மருத்துவமனைக்கு மருந்துகள் தாமதித்து வருகிறதாக புகார்கள் வந்தனவா ?

(இ) அப்படி என்றால், இந்த குறையை தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Dose not arise.

MR. SPEAKER : Questions are over.

[27th March 1963

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

II.—CALLING ATTENTION TO THE NON-AVAILABILITY OF SILVER LACE PLATED WITH GOLD TO THE SILK WEAVERS.

MR. SPEAKER : The hon. Member, Sri S. Madhavan will now call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, viz., the non-availability of silver lace plated with gold to the silk weavers.

திரு. எஸ். மாதவன் : *மதிப்பிற்குரிய சட்ட மன்ற தலைவர் அவர்களே, அண்மையில் மத்திய சர்க்காரினால் கொண்டுவரப்பட்ட தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால், பட்டு நெசவாளர்களுக்குத் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிச் சரிகை கிடைக்காத நிலைமை ஏற்பட்டு, ஆயிரக் கணக்கான பட்டு நெசவாளர்கள் நெசவு வேலையில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டு அந்தத் தொழிலில் தேக்கம் ஏற்பட்டிருக்கிற நிலைமையை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement. The entire requirements of Zari of this State are met by the Zari making factories in Surat as there are no zari making factories in this State. It is not correct to say that silver lace plated with gold has become unavailable following the enforcement of Gold Rules. The Government of India have authorised the use of gold for zari industry among others. The Collector of Central Excise has authorised the Superintendent of Central Excise to issue permit for bona fide users of gold for not exceeding half the proved quantity used in the corresponding period in the previous year, subject to a maximum of 500 grams in each case.

These instructions will, for the present, remain in force till May 1963. While there has been a certain amount of scarcity of gold lace in the market due to the impact of Gold Control Rules particularly before the present concession was announced, the situation is not irremediable. As there is bound to be some reduction in production, consumption to that extent will have to be reduced. However, arrangements are being made to obtain Zari in bulk purchased from Surat to meet the demand so that it can be distributed equitably at regulated prices. As Gold lace is an ancillary material used in pure silk weaving of luxury-fabrics in certain parts of the State, the difficulties if any will only be temporary and localised and will not lead to distress among workers as such.

III.—GOVERNMENT MOTION

ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

11-30 a.m. 'That, with reference to Rule 183 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1963–64.'

27th March 1963]

MR. SPEAKER : The question is—

'That, with reference to Rule 183 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1963–64.'

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 1 p.m. on the 28th March 1963 as the time within which nomination papers of candidates for election to the Committee of Privileges should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary. The nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on the 28th March. I also fix 3 p.m. on the 29th March as the last hour and date for the withdrawal of candidature. If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely 15, a poll will be taken on the 30th March 1963 between the hours of 9 a.m. and 1p.m.

IV.—ANNOUNCEMENT.

THE MADRAS GENERAL SALES TAX BILL, 1963.

MR. SPEAKER : I have also to announce that the Legislative Council has passed the Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) without any recommendation.

V.—GOVERNMENT BILL.

THE INDUSTRIAL DISPUTES (MADRAS AMENDMENT) BILL, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I beg leave to introduce the Industrial Disputes (Madras Amendment) Bill, 1963.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Industrial Disputes (Madras Amendment) Bill, 1963.'

The motion was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VI.—GENERAL DISCUSSION ON THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1962—63.

MR. SPEAKER : The hon. Member, Sri Govindan, will now speak.

*** புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, சபை முன் கொடுத்திருக்கிற இறுதித்துணை மானிய கோரிக்கை மீது கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு

கிறேன். பாசன வசதி பற்றாக்குறையாக இருப்பதைப் போலவே, பாசனத்திற்காக ஒதுக்கப்பட்ட காலமும் பற்றாக் குறையாக இருந்த காரணத்தினால், அப்பொழுது கூறமுடியாத கருத்துக்களை இப்பொழுது தெரிவிக்கிறேன். அன்றைக்கு திருவந்திபுரத்திற்குப் பக்கத்தில் செய்யாற்றில் நீர் தேக்கம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற முயற்சி நீண்டகாலமாக இருந்து வந்தது. அந்த முயற்சியை செயல் படுத்தும் முறையில், அப்பொழுது ரெவின்யூ அமைச்சராக இருந்த கனம் மாணிக்கவேலர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்து இப்பொழுது விவசாயத் துறை அமைச்சராக இருக்கும் கனம் கக்கன் அவர்களும் அங்கே வந்து இடத்தைப் பார்வையிட்டு, திட்டத்தைத் தீட்டினார்கள். அந்த திட்டத்தை உருவாக்க இப்பொழுது இம்மன்ற உறுப்பினராக இருக்கும் திரு. ஸ்ரீனிவாச ரெட்டியார் தலைமையில் நீர் தேக்க குழு நீண்ட நெடுங்காலமாக பணியாற்றி வந்தது. நீர் தேக்கம் கட்டினால், ஆற்றின் கீழே உள்ள நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று கூறி வந்திருக்கிறார்கள். தலைவர்களும், பொறிஇயல் அறிஞர்களும் அந்த திட்டத்தை ஆராய்ந்து பார்த்து, நீர் தேக்கமாக இருப்பது அவ்வளவு பயன் படக்கூடியதாக இருக்காது. அதை ஒரு அணைக்கட்டாகக் கட்டினால், ஏராளமாக வரும் வெள்ளம் நீரைத் தடுத்து பல கால்வாய்களுக்கும் நீர் பாய்ச்சும் ஒரு திட்டத்தை மேற்கொண்டார்கள். சர்க்கார் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத் தில்திட்டங்களை எடுத்து இரண்டு வகையாகப் பிரித்தார்கள், "ஏ" ப்ரையாரிடி திட்டங்கள் என்றும், "பி" ப்ரையாரிடி திட்டங்கள் என்றும். செய்யாறு அணைக்கட்டு திட்டம் "ஏ" ப்ரையாரிடி திட்டத்தில் இணைக்கப் பட்டிருந்தது. அதற்கு இந்த ஆண்டு ரூ. 20 லட்சமும், அடுத்த ஆண்டில் ரூ. 40 லட்சமும், 65–66 ஆண்டில் ரூ. 17 லட்சமும் ஆக ரூ. 77 லட்ச செலவில் அந்த திட்டத்தை நடத்துவதாக இருந்தது. ஆனால், இப்பொழுது இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில், அந்த திட்டம் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்று அறிகிறோம். அது அந்த பகுதி மக்களுக்கு மெத்த வருத்தத்தைக் கொடுத்திருக்கிறது, என்பதை இந்த சபையில் தங்கள் மூலம் தெரிவிக்கிறேன். அது மட்டுமல்ல, உடனடியாக எடுக்க வேண்டிய திட்டம் இம்மாதிரி கைவிடப் பட்டிருக்கும் போது, "பி" ப்ரையாரிடி திட்டங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே கூட..

MR. SPEAKER : According to Rule 160 of the Madras Assembly Rules, the discussion on a Supplementary Grant or additional grant shall be confined to the details of which it is composed. Therefore, let not the hon. Member speak in a general way but refer only to the matters contained therein.

புலவர் கா. கோவிந்தன் : பாசனத் திட்டத்திற்கும் இந்த துணை மானியத்தில் தொகை கேட்டு இருப்பதால், இந்தக் கருத்துக்களை கூற விரும்புகிறேன். ஆகவே, அந்த திட்டத்தை உடனடியாக ஏற்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஏரிகளின் கீழ் இருக்கும் கால்வாய்கள், குடிமராமத்தின் கீழ் வரும்; ஆனால், 4, 5 ஊர்களுக்கு ஒரே கால்வாய் இருப்பதால், குடிமராமத்து நன்றாக நடைபெறுவதில்லை. அவர்கள் தூர் எடுக்க சௌகரியமில்லாமல் இருப்பதால், அதை அரசாங்கமே தூர் எடுத்துப் பிறகு குடிமராமத்தில் ஒப்படைக்கவேண்டும். அறிஞர்கள் இந்த ஒரு கருத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று அறிகிறோம். அந்தக் கருத்தை அமைச்சரவர்கள் நல்ல முறையிலே ஆராய்ந்து, அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. எஸ். முருகையன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த துணை மானிய கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். காட்டு வளம் என்ற பகுதியிலே சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் வடஆற்காடு ஜில்லாவில், சாத்தனூர் ரேஞ்சிலேயும், சேலம் ஜில்லா

வில் அரூர் ரேஞ்சிலும், செங்கம் ரேஞ்சிலும், காட்டுப் பகுதிகளில் ஏராளமான காய்ந்த மரங்கள் விழுந்து கிடக்கின்றன. அந்த மரங்களைச் சேகரித்து, நியாய விலைக் கடைகளில் மக்களுக்கு விற்கலாம். காய்ந்து விழுந்து இருக்கக்கூடிய மரங்களைச் சற்று ரோடு வசதிகள் செய்து, நல்ல முறையிலே அவற்றைக் கொண்டு வந்தால், சென்னை மக்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு எவ்வளவு விறகு தேவைப் படுகிறதோ, அதை சப்ளை செய்ய முடியும். அவ்வளவு மரங்கள் காய்ந்து விழுந்து கிடக்கின்றன. ஒவ்வொரு பகுதியிலும் சுமார் லட்சகணக்கான டன்கள் விறகு கிடைக்கிறது. காடுகளை ஏலத்திற்கு விட்டுவிடுகிறார்கள். ஏலத்தில் எடுத்தவர்கள் எந்த விதமான செலவும் இல்லாமல் அந்த மரங்களையெல்லாம் நல்ல விலைக்கு விற்கிறார்கள். சர்க்கார் நியாய விலை விறகுக் கடைகளை சென்னையிலே ஆரம்பித்திருப்பதின் காரணமாக, காட்டு இலாகாவிலேயே அந்தத் திட்டத்தை மேற்கொண்டால், ஒரு ஐந்து ஆண்டு காலத்திற்கு சென்னையில் நல்ல விறகை குறைந்த விலையிலேயே ஏழைகளுக்கு சப்ளை செய்ய முடியும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் ஜில்லாவில் ஏராளமான சந்தனக் கட்டை கிடைக்கிறது. வருஷம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 80 லட்சத்திற்கு மேல் அதிலே சர்க்காருக்கு வருமானம் கிடைக்கிறது. சந்தன மரங்களுக்கு இப்பொழுது நோய் ஏற்பட்டு பல இடங்களில் அது சரிவர நிவர்த்தி செய்யப்படாமல் இருந்துவருகிறது. அதை நல்ல முறையில் நிவர்த்தி செய்தால், சர்க்கார் வருமானம் மேலும் கூடும். ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வருஷத்திற்கு வருவாயை உயர்த்த முடியும். ஏதோ காட்டிலே தானாக வளரக்கூடிய மரங்களை மட்டும் இப்பொழுது கண்காணித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதிகமான மரங்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுவது பல இடங்களில் நல்ல முறையில் செயல்படவில்லை. ஏராளமான ரூபாய் வருமானம் வரக்கூடிய முறையில் சந்தன மரங்களை வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள காடுகளில் வைத்து, நல்ல முறையில் பயிர் செய்யவேண்டும்.

விறகு சம்பந்தப்பட்டவரையில் உடனே காட்டு இலாகா அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி எந்த அளவுக்கு விறகு தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு விறகைக் கொண்டு வர முயற்சி எடுத்தால், இப்பொழுது சென்னையிலே ரூ. 1·75 விலைக்கு நியாய விலைக் கடையில் விறகு விற்கப்படுவது, இன்னும் கூட குறைந்த விலைக்கு விற்கலாம். அங்கு இருந்து எடுத்து வரும் செலவுதான் சர்க்காருக்கு ஏற்படும். விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து சப்ளை செய்வதைவிட, காட்டுப் பகுதிகளில் தானாகவே விழுந்து கிடக்கிற விறகுகளை எடுத்துக்கொண்டு வந்து ஏழைகளுக்கு குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1962–63-ம் ஆண்டுக்கான இறுதித்துணை மதிப்பீடுகளைக் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கிறார்கள். அதுபற்றிச் சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையின் அடிப்படையிலே ரூ. 21 கோடி 62 லட்சம் மொத்தத்திலே கோரப்படுகிறது. ரெவின்யு கணக்கு அளவில் ரூ. 8 கோடி 82 லட்சமும், மூலதனக் கணக்கில் ரூ. 5 கோடி 82 லட்சமும், கடனுக்காக திருப்பிக் கொடுக்கிற வகையிலே ரூ. 6 கோடி 98 லட்சமும் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. ரெவின்யூக் கணக்கையும், மூலதனக் கணக்கையும் மட்டும் எடுத்துக்கொள்வோமானால், ஏறத்தாழ ரூ. 14 கோடி சில்லரை துணை மதிப்பீட்டு அளவிலே கோரப்படுகிறது. மூலதனச் செலவு எதிர்பாராத வகையிலே வளர்வதற்கான வழிகள் இருக்கின்றன. அதுவும் அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றும்பொழுது எதிர்பாராத செலவுகள் ஏற்படும் என்பது உண்மை. அவற்றை ஈடுபடுத்துவதற்குத் துணைமதிப்பீடு சமர்ப்பிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பது உண்மை. ஆனால், ரெவின்யூ கணக்கில் ரூ. 8 கோடி 82 லட்சம் இரண்டாவது துணைமதிப்பீட்டிலே கோரப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலேயே மதிப்

பீடுகள் போடப்படும்பொழுது, ஏற்படுகிற செலவு எந்த அளவுக்கு ஏற்படக்கூடும் என்று ஆலோசித்து மதிப்பிடக்கூடும். ரூ. 8 கோடி 82 லட்சம் என்பது கொஞ்சம் அதிகமான தொகை என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. எனவே, இந்தப் மதிப்பீடுகள் முதலிலேயே சரியாக எதிர்பார்க்கப்படாமல் போனதற்கான காரணங்களை அறிய நான் விரும்புகிறேன். அதுவும் ரூ. 8 கோடி 82 லட்சம் செலவு துணைமதிப்பீட்டில், அதிலும் முதல் துணைமதிப்பீடு அளிக்கப்பட்டபிறகு, இரண்டாவது மதிப்பீடாக அளிக்கப்படவேண்டிய வகையிலே அமைந்திருக்கிறது.

அதிகமாக நீர்ப் பாசனத்திற்காக ரூ. 1 கோடி 46 லட்சம் சில்லறையும், தொழிலுக்காக ரூ. 1 கோடி 30 லட்சமும், கல்விக்காக ரூ. 1 கோடி 17 லட்சமும், மருத்துவத்திற்காக ரூ. 89 லட்சம் சில்லறையும் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் துணைமதிப்பீட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி, தொழில், மருத்துவம், ஆகியவற்றிற்காக ஏற்படுகிற எதிர்பாராத செலவுகள் முன்கூட்டியே முதல் மதிப்பீட்டிலேயேகூட கண்டிருக்கக்கூடும். மூலதனச் செலவு என்ற வகையிலே வர்த்தகத் திட்டங்களில் ரூ. 4 கோடி 67 லட்சம் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையிலே கோரப்படுகிறது. அதுவும் எதற்கு என்ற விளக்கம் தருகிறபொழுது, உரத்தை அதிகமாக வாங்கி விநியோகிக்கின்ற வகையிலும், அதனை வாங்குவதற்கு வழிசெய்கின்ற வகையிலும் இந்தப் பெரும் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. உர விநியோகத்தில் எப்படிப்பட்ட குறைபாடுகள் ஆங்காங்கு நிலவுகின்றன என்பதை இந்த மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பல பேர்களும் எடுத்துக் கூறினார்கள். ரூ. 4 கோடி 67 லட்சம் உர விநியோகத்தைத் தாராளமாகவும், நல்ல முறையிலும், வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கும்பொழுது, வழங்கப்படுகிற உரம் மிக நல்ல முறையில், சரியான முறையில், செவ்வனே உழவர் பெருங்குடி மக்களுக்குப் போய்ச் சேருகிற வகையிலே கண்காணிப்பும், நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதை உறுப்பினர்கள் வலியுறுத்திக்கூறினார்கள். அதையே நானும் மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக உர விநியோக நோக்கம் நல்ல முறையில் நிறைவேறுவதற்கான வழி வகைகளைக் காணவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரிகளுக்குப் புதிய ஜீப் கார்கள் என்ற முறையில், 10 புதிய ஜீப் கார்கள் வாங்கப்படுவதற்காகத் துணைமதிப்பீட்டில் தொகை கோரப்படுகிறது. அதுவும் இப்பொழுதிருக்கிற நெருக்கடி காலத்தில் தேவை இல்லாத சில பல துறைகளில், இருக்கிற ஜீப் கார்களைத் தேவையான துறைகளுக்கு மாற்றி அமைப்பதின் மூலம், இப்படிப்பட்ட செலவு தவிர்க்கப்படக்கூடும். இந்த நெருக்கடியான நேரத்தில் அனாவசியமான செலவுக்கு நாம் ஆளாகக்கூடாது. புதியதாக 10 ஜீப் கார்களுக்கு பணத்தை செலவழிப்பதை விட, ஜீப்கார்களை ஏற்கனவே கொண்டிருக்கிற துறைகளிலே எவ்வெற்றை எடுத்துக்கொள்ள முடியும் என்று கண்டு அறிந்து, அந்த முறை மேற்கொள்ளப்படுமானால், புதிய ஜீப் கார்களுக்காகப் பெருந் தொகையை செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

காவல் துறையைப் பொறுத்தவரையிலே, செலவினம் வளர்ந்து கொண்டு வருகிறது. வளர்ந்து வருகிற செலவினங்களை ஈடுபடுத்துவதற்காகத் துணை மதிப்பீட்டுத்தொகை கோரப்படுகிறது. அந்தத் தொகை வளர்வதற்கு ஒரு காரணம், பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு அஸ்ஸாம் பகுதிக்கு நமது மாநில காவல் படையினரை அனுப்பி வைக்கின்ற வகையிலே ஏற்பட்ட செலவு என்று கூறப்பட்டிருக்கிறது. அஸ்ஸாம் பகுதிக்கு அனுப்பி வைக்கின்ற வகையிலே ஏறத்தாழ ரூ. 7,40,000 அதிகமாக நாம் செலவழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தியப் பேரரசின் ஆதரவிலே நடைபெறுகிற பாதுகாப்புக்காக நம்முடைய மாநிலத்திலிருந்து காவல் படையினர் அனுப்பப்படுவதன் காரணமாக, அந்தத் தொகையை இந்தியப் பேரரசிடமிருந்து நாம் பெற்று, அந்த உதவியை நாம் செய்வதற்கு வழிவகை இருக்கக்கூடுமா ? என்பதை கண்டறியும்படி நான் அரசி-

னரைக் கேட்டுக்கொள்கிறேன். அஸ்ஸாம் பகுதிக்கு இந்தியப் பேரரசின் பாதுகாப்பு முயற்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற வகையிலே நம் காவல் படையினரை அனுப்பி வைப்பதின் காரணமாக நமக்கு ஏற்படுகிற அதிகச் செலவுத்தொகை ரூ. 7,40,000 ஆகும். இதனை இந்தியப் பேரரசிடமிருந்து பெறுவதற்கு தக்க முயற்சியினை மேற்கொள்ளுமாறு அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், "விவசாயத் துறைக்குச் சொந்தமாக 142 இயந்திரக் கலப்பைகளும், புல்டோசர்களும் இருந்தன. இவற்றில் பெரும்பாலும் உபயோகமற்றுப் போய்விட்டன. இவற்றில் எவற்றை வைத்துக்கொள்ளலாம், எவற்றைத் தள்ளிவிடலாம் எனக் கண்டறிவதற்கு அரசினர் தனி அதிகாரி ஒருவரை நியமித்தனர். அவரது சிபார்சுப்படி அரசினர் 16 புல்டோசர்களையும், 23 இயந்திரக் கலப்பைகளையும் உபயோகமற்றவை எனத் தள்ளிவிட்டனர். அவரது சிபார்சுப்படி, வைத்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்த இயந்திரக் கலப்பைகளையும் புல்டோசர்களையும் பழுது பார்ப்பதற்காக அடியிற்கண்ட பணியாளரை அரசினர் நியமித்தனர்" என்றுகூறப்பட்டிருக்கிறது. 142 இயந்திரக் கலப்பைகளும், புல்டோசர்களும் பெரும்பாலும் உபயோகமற்றுப் போய்விட்டன என்று ஒதுக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ? அப்படி உபயோகமற்ற நிலைமையில், அதற்காக ஒரு தனி அதிகாரியை நியமிக்கவும், அதிலும் 16 புல்டோசர்களும், 23 இயந்திரக் கலப்பைகளும் பயன்படுத்துவதற்கு தகுதியற்றவை என்று ஒதுக்கப்பட்டு, மீதம் இருக்கின்றவை பழுது பார்க்கப்படுவதற்கு, சரி செய்யப்படுவதற்கு என்று புதியதாகச் சில பல அதிகாரிகளை நியமிக்கவும் ஆன நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயப் பொறியாளர் ஒருவர், விவசாயப் பொறியியல் மேற்பார்வையாளர் இருவர், முதல்வர் மூவர், மேல் பிரிவு எழுத்தர் ஒருவர், பண்டசாலைப் பாதுகாவலர் (கிரேடு 1) ஒருவர், தட்டெழுத்தர் ஒருவர், கடை நிலை ஊழியர் ஒருவர் ஆகியோர்களை அரசினர் நியமிப்பது என்று முடிவு செய்து, நியமித்துள்ளனர். இவ்வளவு இயந்திரக் கலப்பைகள், புல்டோசர்களுக்குப் பழுது ஏற்பட்டதற்குப் பிறகு அவைகளைப் பழுதுபார்ப்பதற்கென்று ஒரு தனி பிரிவினரை ஏற்படுத்திப் பழுதுபார்க்கும் முறையைக் கொண்டுவருவதற்கு முன்னால், முன்கூட்டியே ஓரளவுக்கு ஏற்பாடு செய்வதன்மூலம், இயந்திரக் கலப்பைகள், புல்டோசர்களுக்குப் பழுது ஏற்படாமல் பாதுகாத்திருக்க இயலாதா ? ஆகவே முன்கூட்டியே பழுது பார்ப்பதற்கு இப்படிப்பட்ட அலுவலர்கள் அமர்த்தப்படாத காரணத்தினால்தான் 16 புல்டோசர்களுக்கும் 32, இயந்திரக் கலப்பைகளுக்கும் பழுது ஏற்படும் நிலைமை ஏற்பட்டதா ? என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமையில், முன்கூட்டியே அரசினர் இவைகளைப் பழுதுபார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பார்களானால், இவ்வளவு பெரிய அளவுக்கு சேதம் ஏற்படுகின்ற அளவுக்கு, இயந்திரங்கள் பழுதுபடுகின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருந்திருக்கமுடியாது. அதுபற்றியும் நான் விளக்கம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

கதர் அபிவிருத்திக்காக இந்தத் துணைமதிப்பீட்டில் ரூ.2,33,800 ஒதுக்கும்படியாகக் கோரப்படுகிறது. கதர் மானியக்கோரிக்கை விவாதத்திற்கு வந்தபோதே நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். அதன் மூலமாக ஏழை எளியவர்கள் வேலை செய்வதற்கு வழி ஏற்படுகிறது என்றாலும், கதர் தொழிலிலிருந்து எதிர்ப்பார்க்கிற வருமானம் அதிகமாக இல்லாத காரணத்தால், அந்த ஏழை எளியவர்களுக்கு இதைவிட அதிக வருமானம் தரக்கூடிய வேறுபல தொழில்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் ஒப்படைப்பதின்மூலம் அவர்களுடைய வருமானத்தை அதிகரிக்க வழிவகைகள் ஏற்படக்கூடும் என்ற வகையிலே நான் எனது கருத்தைத் தெரிவித்தேன். அதை மீண்டும் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்தி, அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதன்மூலம், ஒதுக்கப்படுகின்ற மூலதனத்தின் மூலம் செய்யப்படுகின்ற தொழில்களில் அதிக வருமானம் கிடைப்பதற்கான வாய்ப்பையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்போமேயானால், எந்த அளவுக்கு இந்த ஏழை எளியவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று நாம் நினைக்கிறோமோ, அந்த அளவுக்கு இந்த ஏழை எளியவர்களின் நிலைமை வளர்வதற்கு சிறிது வசதிகள் ஏற்படும் என்று நம்புகிறேன்.

ஜெர்மனி, ஸ்வீடன், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இரும்புக் கனியை அனுப்பி, அதனைப் பரிசீலனை செய்யும் வகைக்காக ரூ. 4,76,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரையில் ஏற்பட்ட செலவை இது குறிக்கிறதா? அல்லது இனிமேல் அந்தக் கனிகளைப் பரிசீலனை செய்வதற்குச் செலுத்த வேண்டிய கட்டணமாக இந்தத் தொகை அமைந்திருக்கிறதா? என்பதை நான் அறிய விரும்புகிறேன். இனிமேல் இரும்புக் கனியைக் கொடுத்து, அதனைப் பரிசீலனை செய்வதற்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், அந்த வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னென்ன என்பதையும், எதிர்பார்க்கிற விளைவுகள் என்னென்ன என்பதையும் கனம் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்களுடைய நலனைக் கவனிப்பதற்குப் புதிய பணியாளர்களை நியமிப்பதன் மூலம் அவர்களுக்கான சம்பளம், படிகள் வகையிலே, ரூ. 3,54,400 மேற்கொண்டு ஒதுக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி காலத்தில் ஏற்படுகின்ற செலவினங்களைக் குறைப்பதற்கான முயற்சியை அரசினர் தீவிரமாக மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பல்வேறு துறைகளில் அலுவலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற அலுவல்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன, எந்த அளவுக்கு அலுவலாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்று கணக்கெடுத்து, வேறு துறைகளிலே, அரசினர் அலுவலகங்களில் அதிக வேலை இல்லாமல் இருப்பவர்களை ஈர்த்துக்கொள்வதன்மூலம், இந்தத் துறையின் பணிகளை நிறைவு செய்ய இயலாதா? என்பதை அரசினர் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துணை மதிப்பீட்டில் புதிய புதிய பணிகளை நாம் பெரும் அளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்ற காலத்தில் மேற்கொண்டு பணியாளர்களை அரசினர் நியமிக்கின்ற வகையில் செலவினங்கள் வளர்ந்து கொண்டுவருகின்றன என்றும் கூறப்படுகின்றன. இப்பொழுது ஒரு கணக்கெடுத்து எந்தெந்தத் துறைகளில் தேவைக்கு மேற்பட்டு அலுவலாளர்கள் இருக்கிறார்கள் என்பதையும், தேவைப்படாத பலரைத் தேவைப்படும் வேறு பல துறைகளுக்கு ஈர்த்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பும் வசதிகளும் இருக்கின்றனவா? என்பதையும் கண்டறிந்து, இப்படிப்பட்ட செலவுகளைத் தவிர்ப்பதற்கு அரசினர் முன்வர வேண்டும். அப்படி எடுத்துக் கொள்ளும் முயற்சியைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்பதையும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

நெருக்கடி காலத்தில் செலவினங்களைக் குறைக்கின்ற முறையிலே அமைச்சர்களுடைய சுற்றுப்பிரயாணத்தைக் கூடுமான அளவுக்குக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோமென்று, கனம் அமைச்சர் அவர்கள் ஒரு வினாவுக்கு விடை அளிக்கும்பொழுது கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே முதல் துணைமதிப்பீட்டில் சுற்றுப்பிரயாணத்திற்கு என்று கோரப்பட்ட தொகை ஒதுக்கப்பட்டிருந்தும், இரண்டாவது துணைமதிப்பீட்டிலும் மேற்கொண்டு ரூ. 15,900 கோரப்பட்டிருக்கிறது. உள்ளபடியே சிக்கன முயற்சிகளை மேற்கொண்டு செலவைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டிருப்பார்களேயானால், இந்தத் தொகை தேவைப்பட்டிருக்காது. இந்தத் துணைமதிப்பீட்டிலும் அதிகத் தொகை கேட்கிற அளவுக்குச் சுற்றுப்பிரயாணங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றை மேலும் குறைப்பதற்கு முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றியமையாத சுற்றுபிரயாணங்கள் ஏற்படுவதையும், இன்றியமையாத நிலைமையில் அமைச்சர்கள் சென்று நேரடியாக நிலைமைகளைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்க முயற்சிப்பதையும் நான் குறை சொல்லவோ அல்லது தேவையில்லை என்றோ சொல்லவில்லை. பொதுவாகச் செலவினத்தைக் குறைப்பதற்கான முயற்சிக்கு, எடுத்துக்காட்டாக இந்த மதிப்பீடு அமையவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மேலும், ரூ 15,900 துணைமதிப்பீட்டில் கோருகிற அளவுக்குச் சுற்றுப்பயணங்கள் மிகவாக ஏற்பட்டிருக்கின்றன. இந்த வகைகளில் செலவைக் கனிசமான அளவுக்கு குறைப்பதன்மூலம்

அதிகமான வசதிகளும் வாய்ப்புகளும் பிற துறைகளில் ஏற்படக்கூடும். துணைமதிப்பீட்டில் ரெவின்யூக் கணக்கில் இவ்வளவு பெருந்தொகை கோருகின்ற நிலைமை இல்லாமல், வருங்காலத்தில் மதிப்பீடு கேட்கிற பொழுது நல்ல, திண்மையான செவ்வையான மதிப்பீட்டை முதலிலேயே கொடுக்க அரசினர் முன்வரவேண்டும். விரிவான விவாதங்களை நடத்தி, உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, நல்ல பல முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சரவையை கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் துணைமதிப்பீட்டை இந்த மன்றத்திலே சமர்ப்பித்த போது என்னென்ன இனங்களில், எவ்வாறு அதிகச் செலவுகள் ஏற்படுகின்றன என்பதை நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். அதைக் குறிப்பிட்டுத்தான் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். ஒரு பகுதி வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதைக் குறிக்கிறது. அதைப் பற்றி யாரும் குறை சொல்லுவதற்கு இல்லை. ஒன்றில் ரெவின்யூ அக்கவுண்டிலும், மற்றொன்றில் முதலீட்டு வகையிலும் எதிர்பாராத செலவுக்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்பொழுது அதற்கு அனுமதி கோர வேண்டி இருக்கிறது. முதலீட்டுச் செலவைப் பற்றி கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உரங்களை அயல்நாடுகளிலிருந்து வாங்குவது மாத்திரமல்ல, நம்முடைய நாட்டிலே உற்பத்தியாகும் உரங்களையும் நாம் வாங்கித்தான் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிக்கிறோம். முன்பெல்லாம் உரங்கள் போதிய அளவுக்கு கிடைக்கவில்லை, பற்றாக்குறை இருக்கிறது என்று கூறப்பட்டு வந்தது. அந்தப் பற்றாக்குறை காரணமாக ஒரு புறத்திலே விவசாயிகளுக்கு போதிய அளவு உரம் காலாகாலத்தில் கிடைக்காமல் இருந்தது. மற்றொரு புறத்திலே கள்ள மார்க்கெட்டும், மற்ற தவறுகளும் ஏற்பட்டுக் கொண்டு வந்தன. இவற்றை எல்லாம் தவிர்க்கக் கூடிய வகையில் உர இருப்பு அதிகப்பட்டிருக்கிறது. விவசாயிகள் மேலும் மேலும் ஏராளமான உரத்தைக் கோருகிறார்கள். அந்த உரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது அவர்களுக்குத் திருப்தி அளிக்கும். காலாகாலத்தில் உரம் கிடைப்பதில்லை என்ற புகார் இப்பொழுது எங்குமே இல்லை. அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தால் அதை வாங்கி விநியோகிப்பதற்கு முதலீட்டுச்செலவு ஏற்பட்டிருக்கிறது. அது முக்கியமான செலவு. கனம் எதிர்க் கட்சித் தலைவர், புல்டோசர்கள், டிராக்டர்கள் இவ்வளவு தூரம் பழுது பார்க்க வேண்டிய நிமித்தம் ஏற்பட்டிருக்கிறதே, இதை முன்னதாகவே பரிசீலனை செய்து ஏற்பாடு செய்யக் கூடாதா என்று கேட்டார்கள். இந்த புல்டோசர்கள், டிராக்டர்கள் எல்லாம் நீண்ட காலத்திற்கு முன்பு வாங்கப்பட்டவை. நீண்ட காலமாக உபயோகத்தில் இருக்கின்றன. அப்போதைக்கப்போது மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மாற்றிக்கொள்ளுவதற்கு அந்நிய நாட்டுச் செலவாணி தேவையில்லை. எப்படி உரத்தை விவசாயிகள் கோருகிறார்களோ, அதே போல் புல்டோசர்களையும், டிராக்டர்களையும் கேட்கிறார்கள். இந்த இயந்திரங்கள் அவசியமாக இருக்கின்றன. சிறிய விவசாயிகள் கூட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நிலத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னாலும், இந்த இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. கலப்பைகளைக் கொண்டு திருத்த முடியும் என்பதற்கில்லை. அப்படிச் செய்யக்கூடியவர்களும் போதிய அளவில் இல்லை. ஆகவே, இந்த இயந்திரங்கள் மிகவும் தேவையாக இருக்கின்றன. புதிய இயந்திரங்களுக்கு அந்நிய நாட்டுச் செலாவணி தேவைப்படுகிறது. பழைய இயந்திரங்களை எது எதை எந்த அளவுக்குப் பழுது பார்த்து வேலைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நன்றாகப் பரிசீலனை செய்து, அந்த நோக்கத்துடன் தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

போலீஸ் இனத்திலே செலவு அதிகரிப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டது போல், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையை ஒட்டி, வேறு மாகாணங்களுக்கும், எல்லைப் புறங்களுக்கும் போலீஸ் படை அனுப்பப்பட்டு வருகிறது. அப்படி அனுப்பப்பட்டு வரு

வதிலே செலவு ஏற்பட்டால், அந்தச் செலவை மத்திய அரசாங்கமும், மற்ற மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளும். முதலிலேயே அவர்கள் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்ல முடியாது. முதலில் நாம் செலவு செய்கிறோம். பின்னர் எந்தெந்தச் செலவை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களோ, அதை ஏற்றுக் கொள்ளுவார்கள். அந்தப் பணம் நமக்கு திரும்ப வந்து விடும். முதலிலே செலவு செய்வதற்கு சட்ட மன்றத்தின் அனுமதி வேண்டியிருக்கிறது. இந்த மாநில ஆட்சிக்கும் செலவு ஏற்படுகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருகிறார்கள் என்று நினைக்கிறேன். எதிர்பாராத செலவு ஏற்படுகிறது. புதிதாக போலீசாருக்கு பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஆகும் செலவை எல்லாம் இந்த மாநிலம் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த வகையிலேயும் செலவு ஏற்படுகிறது.

ஜீப் கார்கள் உபயோகிப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வேலை செய்ய வேண்டுமென்றால் ஜீப்புகள் வேண்டியிருக்கின்றன. இப்பொழுது பல இடங்களில் ஜீப் உபயோகித்துக் கொண்டு இருந்தவர்களுக்குக் கூட ஜீப்புகள் போதிய அளவு கொடுக்க முடியவில்லை. இந்த நெருக்கடி நிலைமையினால் கொடுக்கப்படவில்லை. வேறு வகையிலே அவற்றை எடுத்துக்கொண்டு வேறு இடங்களிலே உபயோகிக்க வேண்டியிருக்கிறது. அப்படி எடுத்துக் கொள்ளும்பொழுது வேலை பாதிக்கப்படும் என்று தெரிய வருகிறது. இருந்தாலும் பாதகமில்லை என்று மாற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு புதிய ஜீப்புகள் வேண்டுமென்றால் வாங்க வேண்டியிருக்கிறது. வேலை செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். புதிய ஜீப்புகள் இப்பொழுது கிடைப்பது அரிதாக இருக்கிறது. எந்த அளவுக்கு அத்தியாவசியமாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு ஜீப்புகள் வாங்குவதற்குத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

10-00 a.m. சர்க்கார் சிப்பந்திகள் செலவைக் குறைப்பதிலும் அரசாங்கம் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. ஓரளவுக்கு செலவு குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. புதிதாகச் சிப்பந்திகள் நியமிக்கப்படுவதும் குறைக்கப்பட்டு வருகிறது. சிக்கனமும் கையாளப்பட்டு வருகிறது. அமைச்சர்களுடைய சுற்றுப் பிரயாணம் பற்றிச் சொன்னார்கள். சுற்றுப்பிரயாணம் கூடிய வரையில் குறைக்கப்பட்டுத்தான் வருகிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது கோரப்பட்டுள்ளது 15 ஆயிரம் ரூபாய்தான். அந்த அளவு தான் கோரப்பட்டுள்ளது.

கதர் பற்றி முன்பு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததற்கு, நான் நிலைமையை எடுத்து விளக்கினேன். நாட்டின் இன்றைய பொருளாதார நிலையிலே கதர் தொழிலிலே ஏதோ வேலை கொடுத்து ஓரளவு குடும்பத்திற்குள்ள வருமானத்தை அதிகப்படுத்த, இது வகை செய்கிறது. எந்தத் தொழிலையும் செய்யத் தகுதி இல்லாத பெண்மணிகள் இதில் ஈடுபட்டுத் தங்களுடைய வருவாயை உயர்த்திக் கொள்ளும் வகையில் இது இருக்கிறது. இன்று தெரிவித்தது போல் வருகிற ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் 15 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடியே 76 லட்சம் இதில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு காதி கமிஷன் மூலமாக நமக்குக் கிடைக்கிறது. பெரும்பாலும் இந்த வேலை எல்லா வட்டாரங்களிலும் பகிர்ந்து நிறைவேற்றப்படுகிறது. வட்டாரங்களிலே செய்யப்படுகிற வேலைகளுக்கு வட்டாரங்கள் பூராவிலும் இந்த ஆட்சியே கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு நூல் அதிகமாக இருக்கிறது என்பதால் ஒரு முறை நூல் வாங்குவதை நிறுத்தினோம். கதர் தேக்கம் இருந்தது என்று நிறுத்தினோம். அப்போது புகார் வந்தது. நூலை நிறுத்திவிட்டார்களே, நூலை நூற்று எங்களுக்கு 'வருமானம் வந்து கொண்டிருந்தது. இப்போது அதனால் பாதகம் ஏற்பட்டுவிட்டது. நீங்கள் மறுபடி நூற்கிற நூலை வாங்கவேண்டும் என்று எங்கு பார்த்தாலும் அப்போது கோரிக்கை வந்து கொண்டிருந்தது. இதனால் வேலை இழந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அந்த

அளவில் ரூபாய் 15 லட்சம் தான் செலவு செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் வட்டார வளர்ச்சிக்காகவும் சேர்ந்து 2 லட்சம் ரூபாய் அதிகம் கோரி இருக்கிறோம்.

மற்றபடி இந்த இரும்புக்கனி பரிசீலனை செய்வதற்கு ஏற்பட்ட செலவைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு வேண்டிய வேலை செய்யப்பட்டு வருகிறது. செலவு இன்னும் முழுதும் செய்யவில்லை. ஓரளவு ஏற்பட்ட செலவுக்குப் பணம் கொடுத்திருக்கிறோம். மேலும் பணம் கொடுக்கவேண்டும். அதற்கு ஒப்புக் கொண்டும் இருக்கிறோம். வேலை நடந்துக் கொண்டிருக்கிறது. கொடுக்க வேண்டியதைக் கொடுக்கத்தான் இந்த மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

புலவர் கோவிந்தன் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றிக்கூட சொல்ல விரும்புகிறேன். வாய்க்கால்கள் மராமத்து வேலைகளை பஞ்சாயத்து யூனியன் மூலமாக இப்போது கவனிக்க வேண்டியிருக்கிறது. அதோடு முன்பு மத்திய அரசாங்கம் எவ்வளவு அனுமதித்து இருக்கிறார்களோ அதற்கு மேலும் அவர்கள் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். முக்கியமாக நெருக்கடி நிலையை ஒட்டி, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பெருக்க ஒதுக்கிய பணத்திற்கு மேலும் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. முன்பே நாம் ஓரளவு எதிர்ப்பார்த்துப் பணம் ஒதுக்க வில்லை என்றாலும் மேலும் செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இப்போது நீர்ப்பாசன இனத்திலும் பணம் கோரியிருக்கிறோம்.

புலவர் கோவிந்தன் அவர்கள் செய்யாறு அணையப்பற்றிச் சொன்னார்கள். அது வேறு விஷயம். அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இப்போது மானியம் கோரப்படுகிற மதிப்பீடுகளைப் பொறுத்த மட்டில் இதெல்லாம் அவசியமான செலவு. மேலும் மேலும் மக்கள் நலன்களைப் பெருக்கக்கூடிய செலவு. நெருக்கடி நிலைமையை சமாளிக்கும் செலவு. எதிர்ப்பாராத செலவு என்றாலும அவசியமான, அவசரமான செலவு என்பதை நான் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

VII.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1662-63—*cont.*

DEMAND NO. XXX. ROAD TRANSPORT SCHEMES, DEMAND NO. XLIII. CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move :—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,61,90,700 under Demand No. XXX Road Transport Schemes."

SRI RAMA ARANGANNAL : Sir, I move the following cut motion :—

"That the allotment of Rs. 4,61,90,700 under Demand No. XXX—Road Transport Schemes be reduced by Rs. 100."

THE HON. SRI R. VENKATARAMAN : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,33,82,000 under Demand No. XLIII—Capital Out lay on Road Transport Schemes."

SRI V. KRISHNAMOORTHI : Sir, I move the following cut motion—

"That the allotment of Rs. 1,33,82,000 under Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

* **கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை ரோடு போக்குவரத்துத் துறை சம்பந்தமான அறிக்கை ஒன்று கனம் அங்கத்தினர்கள் முன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே போதுமான அளவு விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பொதுவாக சில விளக்கங்களை ஆரம்பத்திலேயே கூறிவிட்டால் பல தவறான அபிப்பிராயங்கள் சொல்வதற்கு இடமில்லாமலிருக்கலாம் என்ற எண்ணத்தினால்தான் ஆரம்பத்திலேயே சில விளக்கங்கள் கொடுக்க விரும்புகிறேன்.

சர்க்கார் துறையிலே நடத்துகின்ற இந்தத் தொழிலுக்கும் தனியார் துறையிலே இந்தத் தொழிலை நடத்துவதற்கும் கணக்குகள் வைப்பதிலே பல வித்தியாசங்கள் இருக்கின்றன. அந்த வித்தியாசங்களைப் புரிந்து கொள்ளாத காரணத்தினால்தான் ஓரளவு குழப்பங்கள் உண்டாகின்றன. சென்னை ராஜ்யத்திலே, முதலாவதாக சென்னை நகரத்திலே இருக்கின்ற பஸ்களை மாத்திரம் தேசிய மயமாக்கினோம். அதன் பிறகு அவற்றைப் பழுது பார்க்க வேண்டும், பராமரிக்க வேண்டும் என்பதற்காக ஒர்க்ஷாப் ஒன்று வைத்தோம். அந்த ஒர்க்ஷாப்பை இன்னும் பாடிகள் கட்ட உபயோகப்படுத்த வேண்டுமென்று விரிவுபடுத்தினோம். முதலிலே தேசிய மயமாக ஆக்கிய பஸ்களுக்கெல்லாம் கணக்கு வைத்திருக்கிறோம். மேலும் சில பஸ்கள் 1956-ம் வருஷத்தில் ஸ்டேட் இன்டகிரேஷன் ஆனபோது நமக்குக் கிடைத்தன. கன்னியாகுமரியிலிருந்து சில பஸ்கள் கிடைத்தன. அதிலிருந்து ஏற்பட்ட லாப நஷ்டக் கணக்குகளைத் தனியாக வைத்திருக்கிறோம். காரணம் என்னவென்றால், பலவிதமான கணக்கு மாறுபாடுகள் எல்லாம் இன்றைக்குச் சர்க்கார் செய்யவேண்டியிருக்கும். அதனால் இதையும் தனியாக வைத்திருக்கிறோம். ஆனால் சர்க்கார் துறையை எடுத்துக் கொண்டால் வரவு செலவு கணக்குப் பூராவும் ஒன்றுதான். லாப நஷ்டக் கணக்கு என்று பார்க்கும்போது, சர்க்கார் பஸ் துறையிலே எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது, எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது, நிகர வருமானம் என்ன என்றுதான் நாங்கள் பார்ப்பது. அதிலும் புதிதாக லாங் டிஸ்டன்ஸ் பஸ்களெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சென்னையிலிருந்து ஆரம்பித்து ஓடுகிற லாங் டிஸ்டன்ஸ் பஸ்களின் கணக்குகளை சென்னையில் ஓடும் பஸ்களின் கணக்குகளுடன் சேர்த்திருக்கிறோம். கன்னியாகுமரியிலிருந்து கோயம்புத்தூர் போகிற பஸ்களை கன்னியாகுமரியில் ஓடும் பஸ்களின் கணக்குகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். சொல்லப்போனால், கணக்கு வேறுபாடு ரெவின்யூ கணக்கு 'Booked in different heads' என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தத் துறையில் பார்த்தால் நம்முடைய மொத்த வரவு செலவுகள் நன்றாக, விவரமாகப் புரியும். இரண்டாவது தனியார் துறையிலே லாபம் வந்தால் அந்த லாபத்தை கம்பெனியே வைத்துக்கொண்டு, மற்ற செலவுகளைச் செய்யலாம். உதாரணமாக ஒரு மோட்டார் கம்பெனிக்கு ஒரு வருஷத்தில் 20 லட்சம் ரூபாய் அல்லது 10 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது என்று சொன்னால் அந்தக் கம்பனி அதை வைத்துக் கொண்டு புதிதாக மோட்டார் வாங்குவதற்கோ மற்றவைகள் வாங்குவதற்கோ உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் சர்க்கார் துறையிலே லாபம் வந்தால் அதை சர்க்காரிடத்தில் கொடுத்துவிடவேண்டும். அது ராஜ்ய வருமானத்துடன் சேர்ந்துவிடும். புதிதாக 10 பஸ்கள் வாங்க வேண்டு

மென்று சொன்னால் கடன் வாங்குவது மாதிரி **capital at charge**-ஐ அதிகரித்து அதற்கு நாம் வட்டி கொடுக்க வேண்டும். இந்தக் கணக்கு கொடுத்து இருப்பதைப் பார்ப்பீர்களானால்- இந்த டீடயில்டு பட்ஜெட் எஸ்டிமேட்ஸ் கமர்ஷியல் அண்டர்டேகிங்ஸ்—அதில் பத்தாவது பக்கத்தில் வருஷா வருஷம் எவ்வளவு ரூபாய் நிகர லாபம் வந்திருக்கிறது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் பூராவையும் சர்க்கார் பஸ் துறையிலேயே வைத்துக்கொள்ள முடியாது. கார்ப்பரேஷனாகவோ, கம்பெனியாகவோ இருந்தால் அது பஸ் துறையிலேயே இருக்கும். இந்தப் பணமெல்லாம் நம்முடைய ராஜ்ய வருமானத்துடன் நான்-டாக்ஸ் ரெவின்யூவாக சேர்த்துக்கொள்ளப்படும். புதிதாக பஸ்கள் வாங்கவேண்டுமானால், சர்க்காரிடத்திலிருந்து கடன் வாங்கவேண்டும். காபிடல் அட் சார்ஜ்ஜிலிருந்து நாம் வாங்குகிற பணத்திற்கு 5 சத விகிதம் வட்டியும் கொடுக்கவேண்டும். இது ஒரு முக்கியமான விஷயம். இதைத் தெரிந்து கொண்டுவிட்டால், லாப நஷ்டம் எவ்வளவு என்பதைப் பற்றித் தெரிந்துக்கொள்ள வசதியாக இருக்கும்.

இந்த விதமாகக் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது, 1962-63-ம் வருஷத்தில் நம்முடைய நிகர லாபம் 11 லட்சம் 82 ஆயிரம் ரூபாய் என்பதை இந்தப் புத்தகத்திலிருந்து கனம் அங்கத்தினர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். சென்ற வருஷம் மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸ், எல்லா மோட்டார் வாகனங்களுக்கும் விதித்தோம். அவ்வாறு விதித்த போது, தனிப்பட்ட பஸ் ஆபரேடர்கள் எல்லாம் தங்களுடைய கட்டணத்தை உயர்த்தினார்கள். ஆனால், இந்த ராஜ்ய சர்க்கார் நடத்தும் இந்த பஸ் ட்ரான்ஸ்போர்ட்டைப் பொறுத்த வரையில், கட்டணத்தை உயர்த்தாமலேயே, ஒரு வருஷம் பரீட்சை செய்து பார்ப்போம், என்று இந்தச் சட்ட சபையில் நாங்கள் அப்பொழுதே சொன்னோம். கட்டணத்தை உயர்த்தாமலேயே 1962-ம் வருஷத்தில் மாத்திரம் 16 லட்சம் ரூபாய் இந்த வரி செலுத்தியிருக்கிறோம். சர்க்கார் பஸ் நடத்தினால் அவர்கள் வரி கட்டுவதில்லை என்று சில பேர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தனி நபர்கள் என்னென்ன வரிகளைக் கட்டுகிறார்களோ அத்தனையும் நாம் கட்டுகிறோம். உதாரணமாக, 68 லட்சம் 45 ஆயிரம் ரூபாய் வரையில் நாம் சர்க்கார் பஸ்களுக்கு மாத்திரம் சர்க்காருக்கு மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸாகக் கட்டிக்கொண்டிருக்கிறோம். சொல்லப்போனால், நாம் தான் பெரிய பஸ் ஆபரேட்டராக இந்த ராஜ்யத்தில் 825 பஸ்கள் வைத்து ஓட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த ராஜ்யத்தில் வேறு யாருக்கும் 825 பஸ்கள் கிடையாது. (திரு. மு. கருணாநிதி : இன்னும் பெரிய ஆபரேட்டராக ஆக வேண்டும்). ஒத்துழைப்பு இருந்தால் இன்னும் பெரிய ஆபரேட்டராகலாம். அதைத் தவிர, தொழிலாளர்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் பஞ்சப் படியை நாம் உயர்த்திக் கொடுத்தோம். அந்த வகையில் ஏற்பட்ட செலவு இரண்டு லட்சம் ரூபாய். மோட்டார் வாகன வரிக்கு 16 லட்சம் ரூபாயும், தொழிலாளர்கள் பஞ்சப் படிக்கு இரண்டு லட்சம் ரூபாயும் ஆக 18 லட்சம் ரூபாய் ஆகிறது. அதைத் தவிர 11 லட்சம் 82 ஆயிரம் ரூபாய் நிகர லாபம் நமக்கு வந்திருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய பஸ் ஆபரேஷன் சம்பந்தமாகப் பார்த்தால், இதற்குமுன் பல குறைபாடுகளெல்லாம் இருந்தன. அந்தக் குறைபாடுகளெல்லாம் இப்பொழுது நிவர்த்தி செய்யப்பட்டு, 85 சத விகிதம், 87 சத விகிதம் வண்டிகள் ப்ரேக்டௌன் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. எண்பத்தைந்து சத விகித பஸ்கள் 'ஆபரேஷ'னில் இருக்கின்றன. இதற்கு நான் நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கப்போவதில்லை. எஸ்டிமேட் கமிட்டி அதைக் கொடுத்திருக்கிறார்கள். எஸ்டிமேட் கமிட்டியின் 1963-ம் வருஷத்திய முதல் ரிப்போர்ட்டைப் பார்த்தால், அதில் அவர்கள்,

'In paragraphs 16, 17, 20, 37 and 107, the Committee stressed the need for reducing the percentage of vehicles off the road and also the necessity for the weekly and monthly maintenance. The

Committee is glad to note that the Department had reached 85 per cent average on certain days in respect of the vehicles put on the road. The Committee observed that this efficiency should be maintained as far as possible. This will be possible only if the repairs are attended to then and there.'

என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். எஸ்டிமேட் கமிட்டியினரே பரிசீலனை செய்து, ஆபரேஷன் ரேஷியோ அதிகரித்திருக்கிறது என்று ஒத்துக்கொண்டிருக்கிருர்கள். பொதுவாக, எஸ்டிமேட் கமிட்டியினரின் சிபாரிசுகள் எல்லாவற்றையும் நிறைவேற்றிய இலாகா ஒன்று உண்டென்ருல் அது இந்த இலாகாதான் என்ருல் அது மிகையாகாது. அந்த ரிபோர்ட்டின் ஐந்தாவது பக்கத்தில் பார்த்தால்,

"The Committee has accepted the replies of the Government on the various recommendations subject to the remarks in the preceding paragraphs."

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். இந்த இலாகா நல்ல முறையில் நடந்திருக்கிறது என்பதையும் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிருர்கள்.

எஸ்டிமேட் கமிட்டியினர் கொடுத்த சிபார்சுகளில் முக்கியமானது பல இடங்களில் டெப்போக்கள் வைக்கவேண்டும் என்பது. இதுபற்றி 1957–58-ம் ஆண்டிலேயே முடிவு எடுக்கப்பட்டது. அப்படி முடிவெடுத்ததன் பேரில், தண்டையார்பேட்டையில் ஒரு டெப்போ திறக்கப்பட்டு அது நடந்து கொண்டிருக்கிறது. இம் மாதம் 29-ம் தேதியன்று அடையாரில் ஒரு டெப்போ திறக்கப்பட இருக்கிறது. அதையடுத்து, ஐயனுவரம், வட பழனி ஆகிய பகுதிகளிலும் டெப்போக்கள் திறப்பதற்கு நாம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருேம்.

இந்த இலாகாவின் நிதி நிலைமை (ஃபினுன்ஷியல் பொஸிஷன்) மிகச் சிறப்பாக இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு ஓரிரண்டு விவரங்கள் கொடுத்தால் நன்ருக விளங்கும். இந்த இலாகாவை நடத்துவதற்கு 'காபிடல் அட் சார்ஜில்' (Capital at charge) கனம் நிதி அமைச்சர் அவர்களிடமிருந்து வாங்கிய கடன் ஐந்து கோடி ரூபாய் ஆகும். ஆனல், இந்த இலாகாவில் இருக்கக்கூடிய பூஸ்திதி எவ்வளவு என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நிலம், கட்டடங்கள் முதலியவை 50 லட்சம் ரூபாய் அளவுக்கு இருக்கின்றன. பஸ்களின் மதிப்பீடு 350 லட்ச ரூபாய் ஆக இருக்கிறது. டிப்ரிஸியேஷன் ரிசர்வ் பண்டு, டெவலப்மெண்ட் பண்டு, பாசஞ்சர் அமெனிடீஸ் பண்டு, ஹௌசிங் பண்டு ஆகிய இனங்களில் தனித்தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்ற வகையில் 254 லட்சம் ரூபாய் இருக்கிறது. இதை யெல்லாம் பார்க்கும்போது, ஐந்து கோடி ரூபாய் கனம் நிதி அமைச்சரிடம் கடன் வாங்கிேனும் என்ருல், இந்த இலாகாவில் பூஸ்திதி (அஸெட்ஸ்) யாக 6 கோடி 50 லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொதுவாக, தொழிலாளர்களுக்கு என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கு ஒரு கமிட்டி அமைத்து, அவர்களுடைய குறைகளைப் போக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 1961-62-ம் வருஷத்தில் அவர்களுக்கு இன்ஸெண்டிவ் போனஸ், அடெண்டென்ஸ் போனஸ் என்கிற வகையில் 1 லட்சம் 60 ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தோம். 1962–63-ம் வருஷத்தில் 2 லட்சம் 53 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிருேம்.

பொதுவாக, இந்த இலாகாவைப்பற்றிய குறையெல்லாம் பிரயாணிகளிடமிருந்து வரும் கம்ப்ளெயின்ட்கள்தான். தொழிலாளர்கள் பிரயாணிகளிடம் தவருக நடந்து கொண்டதாகச் சொல்லி வருகிற முறையில், அதாவது 'மிஸ்பிஹேவியர்' என்கிற முறையில் 1962-63-ம் வருஷத்தில்

231 புகார்கள் வந்திருக்கின்றன. சில்லரை கொடுத்து வாங்குவதில் (கம்ப்ளெயின்ட்ஸ் ஆஃப் சேஞ்ச் ட்யூ) 67 புகார்கள் வந்திருக்கின்றன. இதற்கு முன் வருஷத்தில் இதே வகையில் 182 புகார்கள் வந்திருந்தன. வழியில் நிறுத்தாமல் பஸ்களை விட்டுக்கொண்டே போவதாகச் சொல்லி 90 புகார்கள் வந்திருக்கின்றன. நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தாமல் போய்விடுகிருர்கள் என்று சொல்லி 100 புகார்கள் வந்திருக்கின்றன. அவைதான் பெருவாரியான குற்றச்சாட்டுக்கள்.

தொழிலாளர்கள் நல்ல முறையில் பணியாற்றவேண்டும், பிரயாணிகளிடம் மரியாதையுடனும், கௌரவமாகவும் பழகவேண்டும் என்பதில் யாரும் மாறுபட்ட கருத்து வைத்திருக்க முடியாது. அதைச் செய்வதற்கு சர்க்கார் தங்களாலான எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். அதே சமயத்தில், பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் சற்று இருக்குமாஞல் நாம் செய்யும் வேலையை இன்னும் திறம்படச் செய்ய முடியும். உதாரணமாக, எவ்வளவு கட்டணமோ அந்தக் கட்டணத் தொகை அளவுக்குக் கொடுத்துவிட்டால் பாதி சண்டைகள் குறைந்துவிடும். ஆனல், நம்முடைய மக்கள் பஸ்ஸைத்தான் பாங்காக நினைத்துக் கொள்ளுகிருர்கள். ஐந்து ரூபாய் நோட், ஒரு ரூபாய் நோட் கொடுத்து சில்லரை கேட்கும் பழக்கம் ரொம்ப அதிகமாக இருக்கிறது. நான் வெளி நாடுகளில் பஸ்களில் ஏராளமாகப் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கெல்லாம் அவர்களுக்கு என்ன குறிப்பிட்ட கட்டணம் உண்டோ அந்தக் கட்டணத்தை மாத்திரம் வைத்துக் கொண்டிருந்து அதற்குரிய பெட்டியில் போட்டுவிட்டு உள்ளே போய்விடுவார்கள். கட்டணம் எவ்வளவு உண்டோ அதைச் சரியான முறையில் கொடுத்தால், இப்பொழுதுள்ள புகார்களும் நிச்சயமாகத் தீர்ந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. அதைக் கொடுக்காமல், பஸ்ஸுக்குள் வந்து, நெருக்கடியான நேரத்தில் சில்லரை மாற்றுவதனுல் இந்தவிதமான தகராறுகள் ஏற்பட்டு, பிரயாணிகளுக்கும் நிர்வாகத்திற்கும் கஷ்டத்தை விளைவிக்கிறது.

குறிப்பிட்ட கட்டணம் அளவுக்குச் சில்லரையாகப் பிரயாணிகள் கொடுப்பதுடன், அவர்கள் பஸ்ஸில் ஏறும்போது க்யூ வரிசையில் நின்று ஏறினுல், முழுச் சங்கடமும் தீர்ந்துவிடும். பிரயாணிகளே க்யூ வரிசையைக் கடைப்பிடித்து பஸ்களில் ஒழுங்காக ஏருவிட்டால், க்யூ வரிசையை அமல் நடத்துவதற்காக ஒரு கண்டக்டரைப் போடவேண்டியிருக்கிறது. அதற்காக 100, 150 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாமாகச் செய்யக்கூடிய ஒரு விஷயத்திற்குக் கூட செலவு செய்ய வேண்டுமென்று சொல்வது சரியல்ல, க்யூ வரிசையைச் சரியாகக் கண்காணிப்பதற்கு அதிகாரியைப் போடுவதோ, கண்டக்டர்களைப் போடுவதோ சரியல்ல. இம்மாதிரி ஓரிரண்டு விஷயங்களில் பிரயாணிகளும் ஒத்துழைப்பார்களானுல், அது மிகவும் திருப்திகரமாகவும், நல்ல பலனை அளிக்கக்கூடியதாகவும் இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

'லாங் டிஸ்டன்ஸ்' பஸ்களைப் பொறுத்தவரையில் நல்ல முறையிலே நடந்துகொண்டு வருகிறது என்பதற்கு ஒரு அத்தாட்சி கூட வந்திருக்கிறது. அது நம்முடைய ராஜ்யத்திலிருந்து கூட வந்ததல்ல. ஒரு ரிடையர்டு இன்கம் டாக்ஸ் கமிஷனர் சென்னை ராஜ்யத்திலே நம்முடைய லாங் டிஸ்டன்ஸ் பஸ்ஸிலே பிரயாணம் செய்துவிட்டு அவருடைய ராஜ்ய முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிருர். "சென்னையைப் பின்பற்றி அந்தவிதமான நல்ல முறையிலே நம்முடைய ராஜ்யத்திலும் கூட லாங் டிஸ்டன்ஸ் பஸ்ஸை நடத்திஞல் மிகவும் நன்ருக இருக்கும்" என்று அவருடைய ராஜ்ய முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிருர். 'லாங் டிஸ்டன்ஸ் டிராவலை' பொறுத்தவரை வெகு சிறப்பாக நடக்கிறது என்பதை அகில இந்தியாவில் இருப்பவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

கடைசியாக, வருங்காலம் எப்படி இருக்கும் என்பதைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கூடுமான அளவுக்கு நம்முடைய ராஜ்ய சர்க்கார் போக்கு வரத்து இலாகாவின் செலவை எவ்வளவு தூரம்

கட்டுப்படுத்தமுடியுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்தி வந்திருக்கிறோம். 1947-ம் வருஷத்தில்தான் இப்போது இருக்கின்ற பஸ் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு பஸ் கட்டணமானது உயர்த்தப் படவில்லை. ஆனால் அதே நேரத்தில் பஸ்களைப் பராமரிக்கும் செலவுகள் மிகவும் உயர்ந்து விட்டன. உதாரணமாக, 1947–48-ம் வருஷத்தில் ஒரு மைல் பஸ் ஓட 0.69 ந.பை. செலவு ஆயிற்று. 1961–62-ல் ரூபாய் 1–34 ந.பை. செலவாகியிருக்கிறது. அதற்குக் காரணம் பெட்ரோல், டீசல் ஆயில், ஸ்பேர் பார்ட்ஸ் ஆகியவற்றின் விலை உயர்ந்து விட்டதும், தொழிலாளர் சம்பள விகிதங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களுந்தான். இப்போது புதிதாக மத்திய சர்க்கார் விதித்திருக்கிற வரிகளின் காரணமாக இன்னும் செலவு அதிகமாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1963–64-ம் வருஷத்தில் மைல் ஒன்றுக்கு ரூபாய் 1–44 ந.பை. அளவுக்குச் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இப்போது இருப்பதை விட ஏறக்குறைய 30 லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவாகும். ஆகவே, நல்ல முறையிலே ட்ரான்ஸ்போர்ட் நடக்கவேண்டுமென்று நாம் நினைப்போமானால், இப்போது இருக்கின்ற விகிதத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். மொத்தமாக எவ்வளவு செலவாகிறது என்பதையெல்லாம் கணக்குப் பார்த்து பரிசீலனை செய்து மாற்றியமைக்கவேண்டிய நிலைமை இருந்தால் மாற்றவேண்டுமென்பதை மாத்திரம் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி சர்க்கார் துறையிலே நடக்கின்ற பஸ் போக்குவரத்து சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பஸ் போக்குவரத்தைப்பற்றிய கருத்துக்களைச் சொல்லுகின்ற நேரத்தில், குறைபாடுகளை எடுத்துக் காட்டுகின்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தான, பஸ் தொழிலைத் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் கூறுகிறோமே தவிர, சுதந்திரக் கட்சியினரைப்போல் சர்க்கார் துறையை எடுத்துவிட்டு எல்லாவற்றையும் தனியார் துறையே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே கருத்துக்களைச் சொல்லவில்லை என்பதை முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே பஸ் தொழிலைப் பற்றிய கேள்வியைக் கேட்ட சமயத்தில், ' பஸ் தொழிலில் லாபந்தான் ஏற்பட்டிருக்கிறது, நஷ்டம் ஏற்படவில்லை ' என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கம் கொடுத்திருக்கும் 1963–64–ம் ஆண்டுக்கான புள்ளி விவரத்தைப் பார்த்தால், மொத்தமாக வருமானம் வரக்கூடியது 3 கோடி, 40 லட்சம் என்றும், அதற்குச் செலவிடக் கூடிய தொகை 3 கோடி 46 லட்சம் என்றும், ஆகவே நெட் ரெவின்யூ என்று சொல்லும் இடத்தில் " மைனஸ் " 5.86 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காகத்தான் நான் முதலிலேயே விளக்கம் கூறினேன். மூன்று பக்கத்தில் கணக்கு இருக்கும் போது, ஒரு பக்கத்து டோடலைப் பார்த்து லாப நஷ்டம் என்று சொல்லக் கூடாது. கணக்கிலே இறுதியில் என்ன இருக்கிறது என்பதைப் பார்த்துச் சொல்லவேண்டும். தவறாகத்தான் சொல்வேன் என்றால் சொல்லிக் கொள்ளட்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சென்னையிலே நடத்துகின்ற பஸ் சர்வீஸ் சம்பந்தமான முறைகளிலே இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றித் தான் கூற விரும்புகிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஒன்றை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தனியார் துறையிலே நடத்தப்படுகிற பஸ்களில் " ஓவர்லோடு " அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் சென்னையில் ஓடுகின்ற சர்க்கார் பஸ்களில் இந்த ரெஸ்ட்ரிக்ஷன் கிடையாது. பாசஞ்சர்கள் தொங்கிக்கொண்டு போகும் நிலைமையைப்

பார்க்கலாம். தனியார் துறையினர் இன்கம்டாக்ஸ் கட்டுகிறார்கள். சர்க்கார் துறையிலே 800 பஸ்களை ஓட்டுகிறார்கள். ஆனால் இன்கம்டாக்ஸ் கிடையாது. தனியார் துறையிலே இருப்பவர்கள் எவ்வளவு ரூபாய் இன்கம்டாக்ஸ் கட்டுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நான் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் முருகன் டிரான்ஸ்போர்ட் என்று இருக்கிறது. அந்த ஸ்தாபனத்திலே 16 பஸ்கள் ஓடுகின்றன. சென்ற ஆண்டு அதிக வரி விதிக்கப்பட்ட பிறகும் கூட அவர்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தவில்லை. அவ்வாறு பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் இருந்தும்கூட அந்த ஸ்தாபனத்தார் 1 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய், 16 பஸ்களுக்கு இன்கம்டாக்ஸ் கட்டியிருக்கிறார்கள். டிப்ரிசியேஷன் போக, தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளுக்கான செலவு போக, லாபத்திலே 1,67,000 ரூபாய் இன்கம்டாக்ஸ் கட்டுகிறார்கள் என்றால், 800 பஸ்களை நகரத்தில் ஓட்டுகிற சர்க்கார் எத்தனை லட்சம் இன்கம்டாக்ஸ் கட்டவேண்டும் என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். " நான்–டாக்ஸ் " ரெவின்யூவையும் சேர்த்து லாபத்திலே கொண்டுபோய்க் காட்டக்கூடாது என்றுதான் சொல்லுகிறேனே தவிர, வேறு எதையும் நான் குறையாகச் சொல்லவில்லை.

இரண்டாவதாக, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய பட்ஜட்டில், சென்னையில் ஓடுகின்ற பஸ்களின் மூலம் வரக்கூடிய ரெவின்யூ இடங்களில் 17 லட்சம் துண்டு விழுவதாகக் காட்டியிருக்கிறார்கள். எப்படித் தனிப்பட்டவர்களுக்கு லாபம் வருகிறது ? ஓவர்லோடு ஏற்றுகின்ற சர்க்கார் துறையிலே ஏன் லாபம் வரவில்லை? அவர்கள் இன்கம்டாக்ஸ் கட்டியும் அவர்களுக்கு எப்படி லாபம் வருகிறது ? இதை நான் கேட்கின்ற காரணத்தால் சர்க்கார் துறையில் நடத்தும் பஸ்களைத் தனியார் துறையில் விட வேண்டுமென்பதற்காக சொன்னதாகக் கருதக்கூடாது.

பாசஞ்சர்கள் அமெனிடீஸ் பொறுத்தவரை வசதிகள் செய்து கொடுக்கப் படுகிறது என்றும், தொழிலாளர்களைப் பொறுத்தவரை வீடு கட்டிக் கொடுப்பது, பிராவிடண்ட் பண்ட், கிராசுவிடி முதலிய வசதிகள் எல்லாம் கொடுக்கிறோம் என்றும், அந்த வசதிகள் தனியார் துறையிலே அளிக்கப் படுவதில்லை என்றும் கூறுகிறார்கள். அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் ? மொத்தமாக ஒதுக்கியிருக்கும் பணம் ஏறக்குறைய 5,59,000 ரூபாய். சென்னையிலே ஓடக்கூடிய பஸ்களின் மூலம் வரக்கூடிய வருமானக் கணக்கைக் கணக்கிடும்போது ஏற்கெனவே விற்றிருக்கக்கூடிய பஸ்களின் விலையையும்—காபிடல் அஸெஸ்மெண்ட்—சேர்த்து வருமானமாகக் காட்டியிருக்கிறார்கள். சென்ற ஆண்டில் மட்டும் ஏழு லட்சம் ரூபாய் அளவுக்குப் பஸ்கள் விற்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தொகை வருமானக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து வரக்கூடிய வட்டித் தொகையான 10 லட்சம் ரூபாயையும் சேர்த்து வருமானம் 3 கோடி 40 லட்சம் என்று சொல்லுகிறார்கள். இந்த 10 லட்ச ரூபாயைக் கழித்து, பஸ்கள் விற்ற தொகையான 7 லட்சத்தைக் கழித்து விட்டு சென்னையில் மட்டும் எத்தனை லட்சம் நஷ்டம் என்பதைப் பார்க்கவேண்டும். அடுத்த ஆண்டு பட்ஜட்டிலே வட்டியிலிருந்து வரும் 11 லட்சத்தைச் சேர்த்து, பஸ் விற்று வரக்கூடிய ஆறு லட்சத்தையும் சேர்த்து செலவான தொகையைக் கழித்த பிறகு மீண்டும் 17 லட்சம் துண்டு விழுகிறது என்று சொல்கிறார்கள்.

கட்டணத்தை உயர்த்தாமல் தனியார் துறைக்கு எப்படி அதிக லாபம் வருகிறது ? சென்னையில் ஓடும் பஸ்களில் ஓவர்லோட் அனுமதிக்கப்படு 10-1
கிறது. தனியார் துறையில் ஓடும் பஸ்களில் ஓவர்லோடு அனுமதிக்கப்படுவ a.m.
தில்லை. அங்கு ஓவர்லோட் இல்லை. இப்படியிருந்தும் இந்த இலாகாவிற்கு எப்படி லாபம் வராமல் இருக்கிறது ? ஒருவேளை இந்த இலாகாவில் உள்ள பண முதலைகள் பணத்தை விழுங்கி விடுகிறதா ? அல்லது அங்கு ஏதாவது திமிங்கிலங்கள் இருக்கின்றனவா ? அல்லது சோஷியலிசத் தத்துவத்தை எதிர்க்கக்கூடிய கூட்டம் ஏதாவது அங்கிருக்கிறதா என்று நான் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். சர்க்கார் எடுத்து நடத்தும் இந்த பஸ்

தொழிலில் நஷ்டக் கணக்கைக் காட்டினால் பொது மக்கள் அபிப்பிராயம் உருவாகி அதற்குப் பிறகு இத்துறையை மீண்டும் தனியார் துறைக்குக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்தில் இந்த இலாகா சரியாக வேலை செய்து வருகிறதா என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கும் இடங்களிலும், மற்றவைகள் வாங்கும் இடங்களிலும் ஊழல்கள் எவ்வளவோ இருக்கின்றன. சட்டமன்றக் கமிட்டி ஒன்றை அமைத்தால் அந்த ஊழல்களை வெளிப்படுத்த நான் தயாராயிருக்கிறேன். வெளியிலிருந்து வாங்கும் பொருள் எவ்வளவு, உள்ளே வரும் பொருள் எவ்வளவு, இருக்கிற ஸ்டாக் எவ்வளவு என்று துருவித் துருவிப் பார்த்தால் அங்குள்ள குறைபாடுகள் தெரியுமே தவிர ஆடிட்டர்களுக்கோ மற்றவர்களுக்கோ அது தெரியாது. எவ்வளவோ பேர்கள் பஸ்களில் ஏறுகிறார்கள், அவர்கள் டிக்கட் வாங்காமலே ஏறுகிறார்கள். இல்லை. டிக்கட் வாங்கித் தான் செல்கிறார்கள். கூட்டம் கூட்டமாகச் செல்கிறார்கள். ஆடிக்கொண்டே செல்கிறார்கள். இவ்வளவு கும்பல் இருந்தும் இவ்வளவு வருமானம் வந்தும் அவை எங்கே செல்கிறது. 16 பஸ்கள் வைத்திருப்பவர் 1,67,000 ரூபாய் வருமான வரி கட்டுகிறார்கள் என்றால் இது தனிப்பட்டவர்களிடம் இருந்தால் எவ்வளவு கோடி ரூபாய் வருமான வரி கட்டியிருக்கக் கூடும். இதை நான் சொல்வதால் இதை தனிப்பட்டவர்களிடம் விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை. 47 ரூட்களில் வருமானம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். எந்தெந்த ரூட்கள் அவை ? அங்கு என் வருமானக் குறைபாடு ஏற்பட்டது ? என் அதைப் புனர்பரிசீலனை செய்யவில்லை ? வருகிற வருமானத்தை விட்டு என் இந்த இலாகாவை நஷ்டத்தில் நடத்துகிறார்கள் ? அந்த ரூட்களில் போகிற பஸ் ட்ரைவர்களையும் கண்டக்டர்களையும் நன்கு கண்காணித்தீர்களா ? அங்கு வருமானம் கூடினால் உங்களுக்கு இவ்வளவு பெர்சண்ட், வருமானத்தில் 20 சதவிகிதம் தருகிறோம் என்று சொல்கிறீர்களா ? அடுத்து தனியார் துறையில் ஓடுகிற பஸ்களில் உள்ள நல்ல முறைகளையும், அரசாங்கத் தரப்பில் ஓடுகிற பஸ்களின் நிலைமையையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் நல்ல சீர்த்திருத்தம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சென்னையில் ஓடும் பஸ்கள் பல ஆபாசமாக, அழுக்காக இருக்கின்றன. தனியார் துறையில் இருப்பதுபோன்று ட்ரைவர்கள், கண்டக்டர்கள் நல்லபடி சீர்படவில்லை. எங்கள் இலாகாவில்தான் ட்ரைவர்களுக்கு நல்லபடி வசதிகள் செய்து கொடுக்கிறோம் என்று ஒரு புறம் சொல்கிறார்கள். இன்னொருபுறம் ட்ரைவர்கள் வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்ற கேவலமான நிலையை சொல்கிறார்கள். 300-க்கு மேற்பட்ட கத்துக்குட்டி ட்ரைவர்கள் இன்று சென்னை நகரத்தில் பஸ்களை ஓட்டுகிற அளவிற்கு இன்னும் எவ்வளவோ ட்ரைவர்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். உள்ளபடியே ட்ரைவர் பற்றாக்குறை இருக்கிறதா ? அவர்களுக்கு நல்ல நல்ல சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படுவது என்பது உண்மையாக இருக்குமானால் எதற்காக அவர்கள் தனியார் துறைக்கு ஓடவேண்டும். அப்படியிருந்தால் அவர்கள் என் அரசாங்கத் துறைக்கு வரமாட்டேன் என்று சொல்லவேண்டும் ? ஆகவே தொழிலாளர்களுக்கு நன்மை செய்கிறோம் என்று சொன்னால் என் இவர்கள் வரமாட்டேன் என்று கூறுகிறார்கள். அடுத்து, 1956–57-ல் ஏறக்குறைய 26 லட்சம் ரூபாய் லாபம் காட்டப்பட்டது. அப்போது சென்னையில் எவ்வளவு பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. அப்போது 26 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. இன்று அது எப்படி கிடைக்காமல் போகலாம் ? இன்று ஏறக்குறைய அன்றிருந்ததைவிட இரண்டு மடங்கு பஸ்கள் அதிகப்படுத்தியிருக்கிறோம். இருந்தும் என் நஷ்டக்கணக்கில் ஓடுகிறது ? ஓட்டு மொத்தமாக கன்னியாகுமரியில் உள்ள வொர்க்ஷாப்பைச் சேர்த்து, விற்கிற பஸ்களையும் சேர்த்து கணக்குப் போட்டு நஷ்டம் இல்லை என்று சொல்கிறார்களே தவிர, நீதித்துறையில் இருக்கிறவர்கள் எடை போட்டுப் பார்ப்பது போன்று இதையும் பார்க்கவேண்டும். லாபமா நஷ்டமா என்று சொல்வது கமர்ஷியல் பட்ஜெட். பி. டபிள்யூ.டி. இலாகாவைப் பற்றி சொல்வது போல் அல்ல இது. நாம் நிறைய செலவு செய்கிறோம். தனிப்பட்டவர்கள்

2 வட்டி, மூன்று வட்டி, என்று பணத்தை மார்வாடிகளிடம் வாங்கிக்கூட அவர்களால் லாபம் சம்பாதிக்க முடிகிறது. அவர்களால் இன்கம் டாக்ஸ் கட்ட முடிகிறது. ஆனால் ½ வட்டிக்கு வாங்கி சென்னையில் ஓட்டுகிற இந்த பஸ்களில் மட்டும் என் லாபம் வருவதில்லை என்று கூறிக்கொண்டு, அரசாங்கத் தரப்பில் உள்ளவர்கள் இக்குறைகளை சீர்த்திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் சொற்பொழிவை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இ. நாராயணசாமி பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே, இத்துறை நம் சர்க்காருக்கு வருவாய் தரும் ஒரு துறையாகும். அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று நம் மாநிலத்தில் உள்ள பெரிய ப்ளீட் ஓனர் நம் அரசாங்கம்தான். 770 பஸ்களாக இருந்தது இன்று 825 என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறது. அதோடு நாம் அநேக பெரிய நெடுந்தூர ரூட்களையும், நம் சென்னை நகரில் பல ரூட்களையும் ஏற்படுத்தியிருக்கிறோம் என்பது போற்றத்தக்கதாகும். பீக் ஹவர்ஸில் அதிக பஸ்கள் விட்டு, ஷட்டில் சர்வீஸ் விட்டு போக்குவரத்து வசதி ஏற்படுத்தியிருப்பதும் போற்றத்தக்கதே. தனியார் துறையில் இருப்பது போன்ற லாபம் சர்க்கார் துறையில் இல்லை என்று சொன்னார்கள். அதை நான் முழுதும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் சென்ற ஆண்டு ரெவின்யூவைப் படித்துப் பார்த்தால் எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது என்பது புலனாகும். அதோடு நம் அரசாங்கத்தில் பல பண்ட்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். டிப்ரீசியேஷன் ரிசர்வ் பண்ட் பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுக்க பாசஞ்சேர்ஸ் அமினிட்டீஸ் பண்ட், பின்னர் பஸ்களை அபிவிருத்தி செய்ய டெவலப்மெண்ட் பண்ட் என்றெல்லாம் இருக்கின்றன. அதோடு இவ்விலாகாவில் வேலை செய்கிறவர்களுக்கு வீடு கட்டித் தர வொர்க்கர்ஸ் ஹௌஸிங் பண்ட் என்றெல்லாம் பல பண்ட்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். தனியார் துறையில் இருப்பதைவிட அதிகப்படி சௌகரியங்கள் அரசாங்கத் துறையில் இருக்கின்றன. அதோடு பஸ்கள் எல்லாம் நல்ல முறையில் கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. நெடுந்தூரம் செல்லும் பஸ்களில் பிரயாணிகளுக்கு நல்ல பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு தனியார் துறையில் கொடுப்பதைவிட இங்க்ரீஸ்ட் பாட்டா, அதிக வேலை செய்தால் அதிகப்படி பாட்டா கொடுக்கிறோம். தனியார் துறையில் இரண்டு செட்ஸ்தான் ட்ரெஸ் கொடுக்கிறார்கள், நாம் மூன்று செட்ஸ் கொடுக்கிறோம். தனியார் துறையில் செருப்பு கொடுத்தால் அரசாங்கத் துறையில் பூட்ஸ் கொடுக்கப்படுகிறது. அதோடு அரசாங்கத் துறையில் வேலை செய்பவர்களின் குழந்தைகளுக்கு எஜுகேஷன் கன்செஷன் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு ஆண்டுதோறும் லீவ் கொடுக்கப்படுகிறது. பின்னர் வருடத்திற்கு ஒரு மாதம் என்று கணக்குப் போட்டு கிராசுடியும் கொடுக்கப்படுகிறது. இப்போது அவர்களுக்கு பஞ்சப்படி ஐந்து ரூபாய் அதிகப்படுத்தியிருப்பதால் அதற்கு 2 லட்சம் ரூபாய் செலவாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை எல்லாம் பார்த்தால் நமக்கு லாபம் அதிகமாகத்தான் வருகிறது என்று சொல்லலாம். லேலண்ட் டைகர், "வொரல்ட் மாஸ்டர்" போன்ற பஸ்களை நம் அரசாங்கம் டெல்லி ட்ரான்ஸ்போர்டுக்கு விற்று விட்டார்கள். இப்போது லேலண்ட் காமட், டாட்டா மெர்ஸிடிஸ் பென்ஸ்தான் அநேகமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு வேறு பல நன்மைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. தியாகராய நகரில் ஒரு பஸ் ஸ்டாண்ட் நல்ல முறையில் கட்டப்பட்டு அங்கு ஸ்டால்கள், வாட்டர் கூலர் போன்றவை வைத்து, ஹோட்டல்கூட வைத்திருக்கிறார்கள்.

(திரு. ந. சண்முகசுந்தரம் தலைமை.)

நெடுந்தூரபஸ்களை அதிகமாக விடவேண்டும். இரவு நேரங்களில் நெடுந்தூர பஸ்கள் விட்டால் நலமாயிருக்கும்.

சென்னையில் டாக்ஸி கஷ்டம் அதிகமாக இருக்கிறது. இரவில் டாக்ஸிகள் கிடைப்பதே இல்லை. டாக்ஸி ஓட்டுபவர்கள் பிரயாணிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுவதில்லை. ஆகவே டாக்ஸிகளை நம்முடைய சர்க்கார் ஏற்று நடத்தினால் நலமாக இருக்கும்.

பிள்ளைகள் பள்ளிக்கூடம் சென்று வருவதற்கு என்று தனியாக பஸ்கள் விடப்படுகின்றன. சீஸன் டிக்கட்டுகளும் கொடுக்கப்படுகின்றன. திருவிழா காலங்களில் பெரியமணி போன்ற இடங்களுக்குச் செல்வதற்குக் கூட ஸ்பேர் பஸ்களை நம்முடைய அரசாங்கம் விட்டு வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் இந்தத் துறையில் ஊழியர்களையும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். முன்பு 3,234 பேர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். இப்போது 3,524 பேர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். டெப்போக்களும் அநேக இடங்களில் வைத்திருக்கிறார்கள். தொண்டையார்ப்பேட்டையில் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அடையாறில் 29-ந்தேதி ஒரு டெப்போவைத் திறக்க இருக்கிறார்கள். சப்-டெப்போக்களையும் பல இடங்களில் திறக்க நம்முடைய அரசாங்கம் முன்வந்திருக்கிறது. தனியார் துறையில் வேலை செய்கிறவர்களை விட இந்தத் துறையில் வேலை செய்கிறவர்களுக்கு அதிகமான வசதிகள் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி வசதி போன்றவைகள் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையில் வேலை செய்கின்ற பெண்மணிகளுக்குப் பிரத்தியேகமான உடைகள் • கொடுத்து வருகிறார்கள். இன்னும் வேண்டிய வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள தொழிலாளர்கள் சாமான்கள் வாங்குவதற்கு கூட்டுறவு சொஸைட்டி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ரெக்ரியேஷன் கிளப், ரேடியோ வசதி முதலியவற்றை எல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க பஸ்களிலே ஓவர் லோடு ஏற்றுவதாகக் குறை சொல்லுகிறார்கள். அது சரியல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சட்ட திட்டங்களின்படிதான் அரசாங்க பஸ்கள் ஓட வேண்டிய நிலைமை இருக்கிறது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு லாபம் சற்று அதிகம் வருமென்று நினைக்கிறேன். எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்பட்டு சென்ற ஆண்டு பஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அது இனிமேல் நடக்காது என நினைக்கிறேன்.

தஞ்சாவூர் செல்லும் பஸ் நெய்வேலி, விருத்தாசலம் வழியாக செல்கிறது. நெய்வேலியில் ஒரு பஸ் ஸ்டாண்ட் கூட கிடையாது. பிரயாணிகள் வெய்யிலிலும் மழையிலும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அங்கே பஸ் ஸ்டாண்டும், காத்திருப்பதற்கு இடமும் (**waiting shed**) ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கடலூரிலிருந்து சேலத்திற்கு ஒரு நெடுந்தூர பஸ் விடப்போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த பஸ் எந்த வழியாகச் செல்லுமென்று தெரியவில்லை. இப்போது நெய்வேலித் திட்டம் நடந்துவருவதால் கடலூரிலிருந்து சேலத்திற்கு விடக்கூடிய பஸ்ஸை நெய்வேலி, விருத்தாசலம் வழியாக விடவேண்டுமென்றுகேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. அ. தங்கவேலு :** தலைவர் அவர்களே, அரசாங்க போக்குவரத்து மானியத்தின்மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

கனம் தொழிலமைச்சர் அவர்கள் இந்தப் போக்குவரத்துத் துறையிலே வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே நடக்கக்கூடிய பல போக்குவரத்து அனுபவங்களையெல்லாம் நேரில் கண்டு இந்தத் தொழில் துறையை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய எண்ணம். அவர்கள் நம்முடைய மாநிலத்தில் 825 பஸ்களுக்கு ஒரு பெரிய முதலாளியாக இருக்கிறார் என்றும் அவர்கள் கூறினார்கள். நாங்கள் விரும்புவது போல இந்த பஸ் தொழிலை தேசிய மயமாக்கவேண்டுமென்ற கருத்தைக் கொண்டு இந்த மாநிலத்தில் 8,000 பஸ்களுக்கு அவர்கள் பெரிய உரிமையாளராக இருந்து பெருவாரியான வருமானத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று

நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அரசாங்கப் பஸ் போக்குவரத்தில் வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஓவர் லோடு, அதிகமாக ஏற்றப்படுகிறது என்று கூறினார்கள். அதுமட்டுமல்ல, லாரிகளில் மூட்டைகளை ஏற்றுவதுபோல் அரசாங்க பஸ்களிலும் அதிக மூட்டைகளை ஏற்றப்படுகிற நிலையையும் நான் பார்த்திருக்கிறேன். குறிப்பாக சென்ற 15-ம்தேதி கனம் முதலமைச்சர் அவர்கள் எங்களூருக்கு—திண்டிவனத்திற்கு—வருவதாக இருந்தது. அதற்காக நான் 14-ந்தேதி சட்டசபை முடிந்து பிற்பகல் 1-50 மணிக்கு பிராட்வே பஸ் ஸ்டான்டிற்கு சென்றபோது அங்கே அரசாங்க பஸ் சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லக்கூடிய எம்.எஸ்.வி. 3614 நம்பருள்ள பஸ்ஸில் 15 நெத்திலி கருவாடு மூட்டைகளை ஏற்றி வந்தார்கள். அரசாங்க பஸ்ஸில் இவ்வளவு மூட்டைகள் ஏற்றப்படுகிறதே என்று கவனித்து அந்த பாசஞ்சரை அணுகி நீங்கள் எவ்வளவு லக்கேஜ் கட்டணம் கொடுத்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஏதாவது டிக்கட் இருக்கிறதா என்று கேட்டதற்கு இல்லை என்று சொல்லி அவர்கள் சில்லரை டிக்கட்டுகளாக 75,80 காசுக்கு தனித்தனியாக நிறைய டிக்கட்டுகளைக் கிழித்துக் கொடுத்தார்கள். அவற்றை எங்கேயோ தவறிவிட்டுவிட்டேன் என்று சொன்னார். இதைச் சொல்ல வேண்டிய நிலைமை வந்தது ஏனென்றால் நாற்றம் அடிக்கக்கூடிய பொருள்களை பஸ்களில் ஏற்றக்கூடாது என்ற விதி இருக்கிறது. அதிகமான மூட்டைகளை ஏற்றக்கூடாதென்றும் விதி இருக்கிறது. இருந்தாலும்கூட லாரிகளில் ஏற்றுவதைப்போல அரசாங்க பஸ்களில் அதிகமான மூட்டைகளை ஏற்றி அதிகவருமானத்தை அடையக்கூடிய நிலை இருக்கிறதென்றால் வருமானம் குறைவாகக் காட்டப்படுவது எதனால் என்றுதான் தெரியவில்லை.

அடுத்தபடியாக தனியார் நடத்தும் பஸ்ஸிலே அதிகமான வருமானம் வருகிறதென்பது அரசாங்கத்துக்குத் தெரியும். 10 வருஷங்களுக்கு முன்பு ஒரு பஸ் வைத்திருந்த தனியார் எல்லாம் இன்றைக்கு ஐந்து அல்லது ஆறு பங்களாக்களாகப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்க்கு முதலாளியாகவும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. பல வீடுகளையும் பல பங்களாக்களையும் நிலங்களையும் வாங்கி பெரிய முதலாளிகளாக இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அரசாங்கம் நடத்தக்கூடிய பஸ் தொழிலிலே குறைந்த வருமானம் வருவதற்கு என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து அவற்றைக் களைந்து அதிகமான வருமானத்தைக் கண்டுபிடிப்பதற்கு வழி வகைகள்செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பல வெளியூர்களுக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடப்படுகின்றன. அந்த பஸ்களை ஓட்டக்கூடிய தொழிலாளிகளுக்கு ஒரு நாளைக்கு சாப்பாட்டு படியாக ரூ 2·25 கொடுக்கப்படுகிறது. இப்பொழுது இருக்கும் விலைவாசி, சாப்பாட்டு விலை எல்லோருக்கும் தெரிந்ததே. 300, 400 மைல்கள் பஸ் ஓட்டும் தொழிலாளர்கள் அவர்களுடைய உடல் நலனை நல்ல முறையில் கவனித்துக்கொள்ள வேண்டுமானால் இந்த 2.25 ரூபாய் கொடுப்பது போதாது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் உணர்ந்து அதை உயர்த்துவதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலாளர்களின் உடுப்புக்காக ஆண்டு ஒன்றுக்கு 3 செட்டுகளுக்கு ஏழரை ரூபாய் தையற்கூலி கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஏழரை ரூபாய் கொடுப்பது என்ற முறை 1946 அல்லது 1950 ஆண்டிலே ஏற்பட்ட முறை என்று நான் கருதுகிறேன். மூன்று செட்டுகளுக்கு ஏழரை ரூபாய் என்றால் ஒரு செட்டுக்கு இரண்டரை ரூபாய் ஆகிறது—ஒரு செட் என்பது ஒரு கோட்டு, ஒரு புல் பேண்ட். எங்கள் ஊர் போன்ற சிறிய நகரத்தில் கூட ஒரு செட் தைப்பதற்கு எட்டு முதல் பத்து ரூபாய் வரை கூலி வாங்கப்படுகிறது. அதற்குக் குறைந்து கிடையாது. ஆனால் இந்த இலாகாவிலே ஒரு செட்டுக்கு இரண்டரை ரூபாய் கொடுக்கு

பளவு இருக்கிறது. சென்னையில் இப்படி இரண்டரை ரூபாய்க்குத் தைக்கக் கூடிய ஜோடுகள் எங்கே இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களேயானால் என்னைப் போன்றவர்கள் இங்குகொண்டு வந்து தைத்துக் கொள்ளுவதற்கு வசதியாயிருக்கும்.

இப்போது அரசாங்கப் போக்குவரத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு 2 வருஷத்திற்கு ஒரு முறை ஒரு ஜதை பூட்ஸ் கொடுக்கிறார்கள். வருஷத்திற்கு ஒரு ஜதையாவது அவசியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது இங்கு போனஸ் கொடுக்கப்படுவதில்லை. போனஸ் கொடுக்கப்பட வேண்டும். பஸ் ஓட்டுவதற்கு அதிகமான ஆட்கள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் தனியார் நடத்தும் இடங்களில் ஒவ்வொரு பஸ் கம்பெனியிலும் தினம் 10, 15 டிரைவர்கள் வந்து, எனக்கு வேலை, உனக்கு வேலை என்று கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இங்கே டிரைவர்கள் கிடைக்கவில்லை, அதற்குப்பயிற்சி நடத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. டிரைவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்காத காரணத்தினால்தான் டிரைவர்கள் போதிய அளவு கிடைக்காத நிலை இருக்கிறது. மேலும், 10, மணி 11 மணி நேரம் அவர்கள் இங்கு வேலை செய்கிறார்கள். காலை 4½ மணிக்கு வண்டியை எடுத்து மத்தியானம் 2 மணிக்கு விட வேண்டிய நிலை அவர்களுக்கு இருக்கிறது. பெரிய வண்டிகளை அதிக ஜன நெரிசல்களுக்கிடையே சமாளிக்க வேண்டிய கஷ்டமும் இருக்கிறது. இந்தக் கஷ்டங்களோடு அவர்களுக்குச் செய்து தரப்படும் வசதியும் குறைவாக இருப்பதால் அரசாங்க பஸ் ஓட்டுவதற்கு டிரைவர்கள் வரமுடியாத நிலை இருக்கிறது. ஆதலால் அவர்களுக்கு அதிகப்படியாக 6 மணிக்கு மேல் வேலை கூடாது என்ற விதியை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால் அதிகமான பேர்கள் இங்கே வருவதற்கு வசதியாக இருக்கும். சர்க்காருக்கு ஏராளமான டிரைவர்களும், கண்டக்டர்களும் கிடைப்பார்கள்.

இந்த அரசாங்க பஸ் போக்குவரத்தில், வெளியூர்களுக்குச் செல்லக் கூடிய பஸ்கள், சென்னையிலிருந்து தஞ்சை, சென்னையிலிருந்து திருச்சி, சென்னையிலிருந்து சேலம் போகிற பஸ்கள் திண்டிவனம் வழியாகப் போகின்றன. திண்டிவனம் ஒரு ஜங்க்ஷனாக, ஒரு சென்டராக இருக்கிறது. அந்த இடத்திலே அரசாங்க பஸ்களிலே ஏறுவதற்கு வரக் கூடியவர்கள் தங்குவதற்கு ஷெட் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய யோசனை. நீண்ட தூரம் ஓடும் பஸ்களுக்கு ரிப்பேர் செய்ய மெக்கானிக்குகள் சென்னையிலும் திருச்சியிலும் இருப்பதாகத் தெரிகிறதே தவிர, இடையில் ஆபத்து ஏற்பட்டால், சிறு ரிப்பேர் வந்தாலும் கவனிக்க இடமில்லாமல் இருப்பதால் வழியில் வண்டி நின்றால் அதனால் பல தொல்லைகள் ஏற்படும். ஆகையால் சென்டராக இருக்கக் கூடிய திண்டிவனத்தில் மெக்கானிக்குகளையும் ஃபிட்டர்களையும் வைத்தால் ஏதாவது தவறுகள் ஏற்படுமானால் அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்து வண்டிகள் உடனே ஓடுவதற்கு வசதியாக இருக்கும். ஆகையால் அந்த மாதிரியான இடங்களில் அவசியம் மெக்கானிக்குகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது வெளியூர்களுக்குச் செல்லக்கூடிய பஸ்களில் ஸ்பேர் டயர்—ஸ்டெப்னீ—இல்லை என்று கேள்விப்படுகிறேன். இல்லாவிட்டால் இம்மாதிரி 250 மைல்கள் அல்லது 300 மைல்கள் பஸ்கள் ஓடும்போது பங்சரே ஆகாது என்று அரசாங்கம் கருதுகிறதா ? நல்ல டயர் போட்டு அனுப்பினாலும், வழியில் லாடம் அடித்து திடீரென்று நிற்கக் கூடிய நிலைமை ஏற்படலாம். சாதாரண தனிப்பட்டவர்கள் கூட பஸ்களில் ஸ்டெப்னீ வைக்கிறார்கள். ஆகையால் ஸ்பேர் டயர் கண்டிப்பாக வைக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மேலும், இப்போது எக்ஸ்பிரஸ் சர்வீஸ்கள் திண்டிவனம் வழியாக எத்தனை வண்டிகள் வந்தாலும், ஏறுவதற்கு இடம் கிடைக்கவில்லை. ஆகையால் 120 மைல்களுக்குத் தான் எக்ஸ்பிரஸ் வண்டிகள் விடுவது என்ற முறையை மாற்றி 75, 100 மைல்களுக்குக் கூட எக்ஸ்பிரஸ் சர்விஸ்களை விடுவது அவசியம் என்று சொல்லிக்கொள்கிறேன். திண்டிவனத்திலிருந்து சென்னைக்கு வருவதற்கு ½ மணி அல்லது ¼ மணிக்கு ஒரு பஸ் இருந்தாலும், ஏராளமான கூட்டம் இருக்கிற காரணத்தினால் இடம் கிடைக்காத நிலை இருக்கிறது. திண்டிவனத்திலிருந்து சென்னைக்கு எக்ஸ்பிரஸ் பஸ்விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி பாண்டிச்சேரியிலிருந்து சென்னைக்கு வர முடியாமலும் இருக்கிறது. பாண்டிச்சேரியிலிருந்து கிளியனூர், திண்டிவனம் வழியாக சென்னைக்கும், கடலூரிலிருந்து திண்டிவனம் வழியாக சென்னைக்கும் எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எ. சுவாமிதாஸ் :** கனம் தலைவர் அவர்களே, மோட்டார் போக்குவரத்து மான்யக் கோரிக்கை மீது நடக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு ஒரு சில கருத்துக்களை இந்தச் சபையின் முன்னால் வைக்கலாம் என்று ஆசைப்படுகிறேன்.

சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து சென்னை நகரத்திலே தனி யூனிட்டாக இயங்கிக்கொண்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தனி யூனிட்டாக இயங்கிக்கொண்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில்,கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிற அரசாங்க மோட்டார் போக்குவரத்து நல்ல நிலையில் நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அங்குள்ள பொது மக்கள் அரசாங்க மோட்டார் போக்குவரத்தைத் தான் அதிகமாக விரும்புகிறார்கள். தனியார் நடத்துகிற பஸ்களைவிட அரசாங்க பஸ்களைத் தான் மக்கள் அதிகம் விரும்புகிறார்கள். ஏனென்றால் நாங்கள் திரு-கொச்சியில் இருக்கும்போது அரசாங்க பஸ் போக்கு வரத்து நடந்துகொண்டிருந்தது. அன்று நடந்து வந்த போக்குவரத்தை விட, இப்போது நன்முறையில் நடக்கிறது. அன்று இருந்த பஸ்களை விட இன்று நல்ல பஸ்களைப் பார்க்கிறார்கள். குறித்த நேரத்தில் பஸ் புறப்பட்டு குறித்த இடங்களை குறித்த நேரத்தில் சென்று அடைகின்றது. நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. தங்குவதற்குரிய வெய்ட்டிங் ஷெட்டுகள் நன்றாக அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். எனவே தான் அரசாங்க பஸ்களை இன்று மக்கள் விரும்பி, கன்னியாகுமரி முழுவதுமே அரசாங்க பஸ் ஓடவேண்டுமென்று மக்கள் ஆவலோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் பஸ் போக்குவரத்து நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருப்பதால், அரசாங்கத்திற்கு நாங்கள் நன்றி சொல்லக்கடமைபட்டிருக்கிறோம்.

அதோடு சீர்திருத்தத்திற்குரிய ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்கலாம் என்று நான் ஆசைப்படுகிறேன்.

திரு-கொச்சி அரசாங்கப் போக்குவரத்து பஸ்களில் வேலை செய்கிற ஊழியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளை நம்முடைய சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து ஊழியர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று அங்குள்ள ஊழியர்கள் ஆசைப்படுகிறார்கள். கண்டக்டர்களை எடுத்துக் கொண்டால், அதிலே ஃபர்ஸ்ட் க்ரேடு, செகண்ட் க்ரேடு, தேர்ட் க்ரேடு என்று நிலை அமைத்திருந்தால் அனுபவத்தைப் பொறுத்து பதவி உயர்வு கிடைக்கிறது. அதோடு சம்பள உயர்வும் கிடைக்கிறது. அதனால் ஊழியர்கள் ஆர்வத்தோடு வேலை செய்ய வாய்ப்பு இருக்கிறது. வருமானத்தைப் பொருத்த வரையில் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் மிக மிகத் தேவை. சென்னை அரசாங்க பஸ் துறையை எடுத்துக்கொண்டால் செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ் அதிகம் இல்லை. அப்படி செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ் அதிகம் இல்லாத காரணத்தினால், கனம் அங்கத்தினர்கள் முன்பு குறிப்

டிக்கட்டைப் போல, கண்டக்டர்ஸ் பணத்தை எடுத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அடிக்கடி பஸ்களை செக் செய்வதற்கு உரிய இன்ஸ்பெக்டர்ஸ் அதிகமாக இருந்தால் அந்த மாதிரி வாய்ப்பு ஏற்படாமல் தடுக்க முடியும். அதைத்தான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆகவே கூடுதலாக செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நியமிக்கப்படும் போது, அனுபவ வாயிலாக கண்டக்டர்களாக இருக்கிறவர்களுக்கு அந்த செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ் பதவியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அவர்களுக்கு இன்று கொடுத்துக்கொண்டிருக்கிற பாட்டா போதாது என்று கருதுகிறேன். அதையும் அரசாங்கம் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அதோடு எக்ஸ்ட்ரா டைம் வேலை செய்தால், கூடுதலாக வேலை செய்தால், கூடுதல் சம்பளம் கொடுக்கவேண்டும். குறிப்பாக, திருவிழாக் காலங்களில் கூடுதலாக வேலை செய்யவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு அதற்காக பாட்டா அதிகமாகக் கொடுத்து உதவவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ரொமோஷன் பொருத்த வரையில் நன்முக கவனித்தால் அவர்கள் உற்சாகமாக வேலை செய்வார்கள். கண்டக்டர்களாக இருக்கின்றவர்கள் 15 வருஷங்கள் கண்டக்டர்களாகவே வேலை செய்து கொண்டிருந்தால் அவர் கள் உற்சாகம் குன்றி விடுகிறது. அவர்களுக்கு செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ், டைம் கீப்பர் போன்று ப்ரொமோஷன் கொடுத்தால் அவர்கள் உற்சாகமாக வேலை செய்வார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு ஏர்-கண்டிஷன்ட் பஸ் விடுவதாக இந்தச் சபையிலே தெரிவித்தார்கள். அதையும் உடனடியாக அமலுக்குக் கொண்டு வரவேண்டும். ஒரேயடியாக நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு பஸ் விடுவது சாத்தியமாயிருக்காது என்று நினைத்தால் முதலில் நாகர்கோவிலிலிருந்து திருச்சிக்கு விட்டு, பின்னர் திருச்சியி லிருந்து சென்னைக்கு வர வசதி செய்து கொடுத்தால் மிகவும் பயனுள்ள தாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு கன்னியாகுமரி மாவட்டத்தில் பீக் அவர்ஸில், காலையிலும் மாலையிலும் மக்களுக்குக் குறித்த நேரத்தில் பஸ் கிடைக்க வசதி இல்லை. வருகிற பஸ்கள் நிரம்பி இடமின்றி வருகின்றன. ஆகவே, சென்னை நகரத்தில் ஓவர்லோடிங், ஸ்டாண்டிங் ஸிஸ்டம் இருப்பதைப் போல 25 சத வீதம் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பஸ்களில் ஓவர் லோடிங் இருக்க அனுமதி கொடுத்தால், பள்ளி மாணவர்களுக்கும், வேறு பிரயாணிகளுக்கும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கத் துறையில் ஒரு நல்ல வொர்க் ஷாப் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கு வசதிகளெல்லாம் இருக்கின்றன. அந்த வொர்க்ஷாப்பில் பாடி பில்டிங் செய்வதற்கு முக்கிய வசதிகளெல் லாம் இருக்கின்றன என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பாடி செய்வதற்கு உரிய நல்ல மரங்கள், தேக்கு மரங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கிறது. ஆகையால் அந்த வொர்க்ஷாப்பில் பாடி பில்டிங் செய்யலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

சென்னையைப் பொருத்த வரையில் என்னுடைய ஒரு சில அபிப் பிராயத்தைக் கூற ஆசைப்படுகிறேன். நான் பல தடவைகள் இந்த பஸ்களிலே ஏறிச் செல்லுகிறேன். அப்படி ஏறும்போதும், இறங்கும் போதும், கண்டக்டர்கள், அது சென்னை நகரத்தின் முறையோ என்னவோ எனக்குத் தெரியாது, பிரயாணிகளை "உள்ளே தள்ளிப்போ, சீக்கிரமாக ஏறு, உள்ளே போ" என்று அவர்கள் ஒருமை வசனத்தில் கூறுகிறார் கள். அது இங்குள்ள முறை என்று நினைக்கிறேன். அதோடு அவர்கள் டிக்கட் கிழித்துக் கொடுக்கிறார்கள். 10 பைசா, 16 பைசா டிக்கெட் வாங் கிக்கொண்டு பிரயாணிகள் ஏறினாலும், இறங்கினாலும் இறங்காவிட்டாலும்

அதைப் பற்றி கண்டக்டர்கள் கவனிக்கக் கூடிய நிலைமை இல்லாமல் எங்கெல்லாம் பஸ் செல்லுகிறதோ அங்கெல்லாம் போக வாய்ப்பு இருக் கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் டிக்கெட் கொடுக்கும் முறைக்கு சென்னை முறை வேறுபட்டிருக்கிறது. கன்னியாகுமரியில் ஒரு ஸ்டாண்டி லிருந்து டிக்கெட் பஞ்ச் செய்து கொடுத்தால் அடுத்த ஸ்டாண்ட் போவ தற்கு முன் யார் யார் எங்கு இறங்க வேண்டுமென்பது தெரியும். அந்த ஸ்டாண்டில் எத்தனை பேர்கள் இறங்கவேண்டும், பாக்கி பஸ்ஸில் எத்தனை பேர்கள் இருக்கவேண்டும் என்று அவர்கள் கையில் இருக்கக் கூடிய **way bill**-லிருந்து தெரியும். யாரும் கண்டக்டர்களை அங்கே ஏமாற்ற முடியாது. இங்கே ஏமாற்றி விடலாம். ஆகவே அந்த முறையை இங்கே புகுத்த வேண்டும். டிக்கட்டுகளில்கூட, 13 பைசா, 16 பைசா, 22 பைசா என்று இருக்கிறது. அது பாஸஞ்ஜர்களுக்கும் சரி, கண்டக்டர்களுக்கும் 11-(சரி மிக்க தொந்தரவாக இருக்கிறது. அதை மாற்றி 10, 15, 20, 25, 30 a.m பைசா என்று மாற்றி அமைத்தால் மிக்க சௌகரியமாக இருக்கும். பிரயாணிகள் சில்லரை கொண்டு போவதற்கும் எளிதாக இருக்கும். கண்டக்டர்களுக்கும் பாக்கி கொடுக்க கஷ்டம் இருக்காது. ஆகவே கட்டாய மாக டிக்கட்டுகளை மாற்றி அமைக்கவேண்டும்.

பொதுவாகப் பார்க்கும் போது மாநில பஸ் போக்கு வரத்தையும், தனியார் பஸ் போக்கு வரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதிக வித்தியா சம் இருக்கத்தான் செய்கிறது. தேசியம் ஆகிவிட்ட படியால், வருமானம் அவ்வளவாக இருக்காது தான். ஏனென்றால், இதிலே வேலை பார்க்கிற வர்கள், இது அரசாங்கத்திற்குத்தானே சொந்தம், எப்படி நடந்தால் நமக்கு என்ன என்கிற மனப்பான்மையோடு தான் இருக்கிறார்கள். அது போகவேண்டும்; இது நமக்கும் சொந்தம், நம் தேசத்திற்குச் சொந்தம் என்று அவர்கள் மனதில் படவேண்டும். அப்பொழுதுதான் இது நல்ல முறையில் இயங்க முடியும். திரு. கொச்சி வண்டிகளில் மலையாளத்தில் ஒன்று எழுதி இருப்பார்கள்: "ஈவாகனம் நிங்களுடேது என்று கருதுகா" "இந்த வண்டி உங்களுக்குச் சொந்தம் என்று கருதுங்கள்" என்று எழுதி இருக்கும். அப்படி வேலை செய்கிறவர்களும், பிரயாணம் செய்கிற வர்களும் இவைகள் நமக்கும் சொந்தம், நம் நாட்டுக்குச் சொந்தம் என்று கருதவேண்டும்; இதில் வரும் வருவாய் நமக்கும் சொந்தம் என்கிற எண்ணம் எல்லோருக்கும் வரவேண்டும். பொதுவாக நம் பஸ் போக்கு வரத்து துறை நல்ல முறையிலே பணியாற்றி வருகிறது என்பதை எண்ணி நாம் அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இத்து டன் என் பேச்சை முடிக்கிறேன்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர்**: கனம் சபைத் தலைவர் அவர்களே, கனம் கைத்தொழில் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த இலாகா விலே 825 பஸ்களுடன், சுமார் 5,966 பணியாட்களுடனும் சீறிய முறையில் சர்க்கார் மக்களுக்குப் பணியாற்றி வருகிறது. தனியார் துறையையும், பொதுத் துறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சர்க்கார் பஸ் துறையில், 825 பஸ்ஸுக்கு 5,966 பேர்கள் என்றால், ஒரு பஸ்ஸுக்கு ஏழு பேர்கள் வீதம் வேலை செய்கிறார்கள். ஆனால், தனியார் துறையில் 3 பேர்கள் தான் இருப்பார்கள்; அப்படியிருந்தும், இவ்வளவு பெரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கும் போது, நமது லாபம் வருடா வருடம் அதிகரித்து வரு கிறது என்பதை கொடுக்கப்பட்டுள்ள ஸ்டேட்மெண்டிலிருந்து அறிகிறோம். இந்த அறிக்கையின் 13-ம் பக்கத்தில், உற்று நோக்கினால், லாபங்கள் வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பதை நாம் உணரு கிறோம். 1957–58-ல் ரூ. 226·39, 1958–59-ல் ரூ. 244·08, 1959–60-ல் ரூ. 266·53, 1960–61-ல் ரூ. 316·27, 1961–62-ல் ரூ. 391·65 என்றும், 1962–63-ல் எதிர் பார்க்கப்படுவது ரூ. 462·14 இலட்சம் என்றும் இருக் கிறது. ஆனாலும், நெட் ப்ராபிட் என்கிற இனத்தில் பார்க்கும் போது, இந்த ஆண்டு ரூ. 11·82 லட்சம் என்று தான் காட்டுகிறார்கள். அறிக்கை யில் பார்க்கும் போது, பண்டுகள் என்று 82·86 லட்சம் ஒதுக்குகிறோம்.

பண்டுகளைப் பற்றிப் பேசும் போது, டிப்ரிசியேஷன் பண்டு, ரிஸர்வ் பண்டு, டெவலப்மெண்ட் பண்டு, ரெனைவிங் பண்டு என்று பல பண்டுகள் இருக்கின்றன. இந்த பண்டுகளுக்கு மொத்தமாக ரூ. **254·5** லட்சம் ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்பதைக் கண்டு பெருமையுடன் பாராட்டுகிறேன். நம் மாநிலத்து பஸ்களையும், மற்ற மாநிலத்து பஸ்களையும் பார்த்தால், நம்முடையது, சீருக, செம்மையாக நடக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. நான் மைசூர் மாநிலத்தில் சென்றிருந்த போது, அந்த மாநில பஸ்களில் பிரயாணம் செய்தேன்; இங்கேயும் நம் மாநில பஸ்களில் பிரயாணம் செய்கிறேன். மைசூர் பஸ்களைவிட நம் பஸ்கள் மிக்க செம்மையாக நடைபெறுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த அறிக்கையில் ஸ்பெஷல் அட்வைசரி கமிட்டி என்று இரண்டு போட்டு இருப்பதாகவும், அவற்றில் ஒன்று சென்னையிலும், மற்றது கன்யாகுமரியிலும் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது கோவையிலிருந்து திருச்சிக்கும், கோவையிலிருந்து சேலத்திற்கும், மதராஸுக்கும், மதுரையிலிருந்து உதகை போகும் பஸ்கள் கோவை வழியே போவதாலும், இன்னுமொரு அட்வைசரி கமிட்டியை அமைத்து அதைக் கோவையில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அமைத்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

சென்னையிலே ஓடும் பஸ்களிலே இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. எத்தனை பேர்கள் வந்தாலும், முட்டியடித்துக் கொண்டு ஏறிக் கொள்ளும் நிலையைத்தான் பார்க்கிறோம். ஒரு கண்டக்டரால் டிக்கட்டு கொடுக்க முடியவில்லை. முன்னால் சென்றவர்களுக்கு டிக்கட்டு கொடுப்பதற்குள் அடுத்த ஸ்டாப் வந்து விடுகிறது. அப்படி ஏறி முன்னால் நகர்ந்து சென்றவர் அடுத்த ஸ்டாப்பில் இறங்க வேண்டி இருந்தால், டிக்கட்டு வாங்காமலே இறங்கிப் போகும் வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து, சென்னை நகரத்திலாவது, இரண்டு கண்டக்டர்களைப் போட்டு, முன்னால் ஒருவரும் பின்னால் ஒருவருமாக டிக்கட்டு கொடுக்க வசதி செய்து கொடுத்தால் டிக்கட்டு வாங்காமலே போகும் நிலையைத் தடுக்க முடியும். பெண்களுக்கு சென்னை பஸ்களிலே மிக்க நெருக்கடியாகவும், சங்கடமாகவும் இருக்கின்றன. ஆண்கள் அவர்களை இடித்துக் கொண்டு ஏறிச் செல்லும் நிலைதான் இருக்கிறது. அதைத் தவிர்க்க "லேடீஸ் பஸ்" என்று குறிப்பிட்ட நேரங்களிலாவது, எந்த எந்த பிராந்தியங்களில் அதிகமாகப் பெண்கள் பிரயாணம் செய்கிறார்களோ அங்கெல்லாம்—கல்லூரி, அலுவலகம், பள்ளி இவைகளுக்குச் செல்லும் பெண்கள் அதிகமாக இருக்கும் இடங்களில்—"லேடீஸ் பஸ்" விட்டால் சௌகரியமாக இருக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் துறையில் இப்பொழுது **120** மைல்களுக்கு அதிகமாக இருக்கும் ரூட்டுகளை மட்டும் எடுத்திருக்கிறோம். எக்ஸ்ப்ரஸ் பஸ் போட வேண்டிய அநேக திட்டங்கள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாஸிஸ் கிடைக்கும் அளவுக்காவது, கூடிய விரைவில் எங்கெங்கு எக்ஸ்ப்ரஸ் பஸ்கள் விட வேண்டுமோ அங்கெல்லாம் உடனடியாக விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. எஸ். ஜே. ராமசாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ட்ரான்ஸ் போர்ட் டிமாண்டு வெட்டுப் பிரேரணை மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் கொண்டுவந்திருக்கும் டிரான்ஸ்போர்டு விஷயத்தில் நல்ல பல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும், லாபம் என்கிற விஷயத்திலே பார்த்தால், நமது அரசாங்கம் சரியான கொள்கைகளை அனுஷ்டிக்காமல், அது காரணமாக அதிக லாபம் அடையாமல் இருந்து வருகிறது. இந்த லாபத்தில், தனியார் பஸ் துறைக்கும், சர்க்கார் பஸ் துறைக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கிறது. அதைப் போக்க நல்ல ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று

கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் கண்டக்டர்களை நியமிக்கும் விஷயத்
யத்தில்—எங்களிடமும் கண்டக்டர்கள் அப்படி பட்ட குறைகளைச் சொல்லு
கிறார்கள்—குறைபாடுகள் இருக்கின்றன. ஊழல்கள் தாண்டவம்
ஆடுகின்றன. அவற்றைப் போக்க வேண்டும். ஒரு கண்டக்டர் நியமனம்
என்றால் அவர்கள் **100, 50** என்று கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்
கிறது. அதைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக திருவண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு சர்க்கார்
எடுத்துக் கொண்டு பஸ் விடுகிறது. அந்த ரூட் எப்படித்தான் எடுக்கப்
பட்டதோ. சர்க்கார் சரியாகக் கவனம் செலுத்தவில்லை என்று தான்
தோன்றுகிறது. சேலம் கோயம்புத்தூர் எக்ஸ்ப்ரஸ் பஸ் ராணிப் பேட்டை
யில் நிற்பதில்லை. ராணிப்பேட்டை தொழில் ஸ்தாபனங்கள் நிறைந்த
இடம். அங்கே பாரி கம்பெனியாரின் தொழில்கள் இருக்கின்றன. ஆகவே
அங்கேயும் அந்த பஸ் நின்று அங்கு வரும் பிரயாணிகளையும் ஏற்றிச்
செல்ல வசதி செய்ய வேண்டும்.

சென்னையிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் பஸ்கள் திருவள்ளூர் வழி
யாகவும், மற்ற வழியாகவும் செல்லுகின்றன. ஆனால் அரக்கோணம்
வழியாக எதுவும் செல்வதில்லை. அந்தப் பகுதியிலிருந்தும் திருப்பதி
போக பிரயாணிகள் நிறைய இருக்கின்றார்கள்.

கனம் அங்கத்தினர் சுவாமிதாஸ் சொன்னது போல, உண்மையிலேயே
கண்டக்டர்கள் மரியாதைக் குறைவாக நடந்து கொள்கிறார்கள். சாதாரண
மாக ஒரு ரூபாய் கொடுத்து **13** பைசா டிக்கட்டு வாங்கினால், சில்லரை
இருந்தால் ஏறுங்கள், இல்லாவிட்டால் கீழே இறங்கிப் போ என்று
மரியாதையற்ற முறையில் பேசுகிறார்கள். மரியாதையாக அவர்கள்
சொல்லுவது கிடையாது. இதையெல்லாம் சர்க்கார் கண்டக்டர்கள் நியமிக்
கும் விஷயத்தில் கவனிக்க வேண்டும். அவர்களுடைய நடத்தை என்ன
என்பதை விசாரித்து, அதற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுத்துக்கொள்ள
வேண்டும். எல்லாத் துறைகளிலும் சட்ட மன்றத்திலே தமிழிலே அறிக்
கைகள் வந்திருக்கின்றன. ஆனால், இந்தத் துறையிலே மட்டும் என்
ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.
மற்ற துறைகளிலே அறிக்கைகள் வெளி வரும் பொழுது தமிழிலும்
அச்சடிக்கப்படுகிறது. இதில் ஆங்கிலத்தில் மட்டும் தான் அச்சடிக்கப்பட்டு
விநியோகிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தத் துறையிலும் தமிழி
லும் அறிக்கையைத் தயார் செய்து, ஆங்கில அறிக்கையுடன் அதையும்
விநியோகிக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாமல்லபுரத்திற்கு சென்னையிலிருந்து பஸ்
போகிறது. இந்த பஸ்ஸானது சென்னையிலிருந்து புறப்பட்டு மாமல்ல
புரத்திற்குப் போய், அங்கிருந்து காஞ்சி வந்து, திருவத்திபுரம் வழியாக
செஞ்சி சென்று, அங்கிருந்து திருவண்ணாமலை போய், அங்கிருந்து சாத்த
னூர் டாம் வரையிலும் போகலாம் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

மீதியிருக்கக்கூடிய தனியார் துறையிலே ஓடிக் கொண்டிருக்கிற ரூட்
களையும் சர்க்கார் மேற்கொள்ள வேண்டும். **825** பஸ்களை வைத்துக்கொண்டு
இவ்வளவு குறைந்த லாபம் வருகிறது என்று கருதிவிடாமல்,
மற்றும் இருக்கக்கூடிய பஸ் ரூட்களையும் சர்க்கார் மேற்கொள்ள வேண்டும்
என்று கூறிக் கொண்டு, எனது உரையை இத்துடன் முடித்துக் கொள்
கிறேன். வணக்கம்.

திரு. இர. பொன்னப்ப நாடார்: கனம் தலைவர் அவர்களே,
கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மான்ய
கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு முற்
படுகிறேன். இந்த தேசியமாக்கப்பட்ட பஸ் போக்குவரத்து சீரிய முறை
யிலே நடக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அதற்குச்

சான்றாக நமக்கு அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் படித்தால் அது எவ்வளவு நல்ல முறையிலே செயல்படுகிறது என்பது கண்கூடாகத் தெரியும். குறிப்பாக ஒருவிஷயத்தை நான் முக்கியமாக எடுத்துக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். இந்த அறிக்கையில் நமது பஸ்களுடைய ஆபரேஷனல் எபிஷியன்ஸி 85 சதவிகிதம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "ப்ளீட் ஸ்ட்ரெங்க்த்"-க்கு 85 சதவிகிதம் என்று சொன்னால், அது ஒரு நல்ல எண் என்று நான் கருதுகிறேன். தனியார் துறையிலே இயங்குகிற எந்தக் கம்பெனி ஆனாலும் சரி, இதற்கேற்ற முறையிலே நடந்து கொள்ளுமா என்று நினைக்கும் பொழுது, இல்லை என்றுதான் துரிதமாகச் சொல்லுவதற்கு முன் வர வேண்டும். குறிப்பாக, நமது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சீரிய முறையில் சென்னை நகரிலும், கன்யாகுமரியிலும் நடக்கிறது என்பதைக் காணும் பொழுது மட்டிலா மகிழ்ச்சி ஏற்படுகிறது. கேரள ராஜ்யத்தில் ஓடுகிற டிரான்ஸ்போர்ட் கம்பெனிகளைவிட நமது சென்னை மாநில அரசாங்கம் ஓட்டுகிற பஸ்ஸில் கட்டணம் குறைவாக இருக்கிறது என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால், நமது அமைச்சர் அவர்கள் 1963–64-ல் ஒரு மைலுக்கு ரூபாய் 1.41 செலவாகும் பஸ் ஓட்டுவதற்கு என்றும், சுமார் ரூபாய் 30 லட்சம் கூடுதல் செலவாகும் என்றும் கூறினார்கள். சூசகமாக ஒரு வேளை நமக்கு இருக்கிற பஸ் கட்டணம் உயரக்கூடும் என்று அவனூர் தெரிவித்திருக்கிறார்கள் என்று கருதலாம். அப்படி உயர்த்தினாலும் கூட, மக்களுக்கு ஏற்ற முறையில், மக்களை அதிகமாக பாதிக்காத முறையில் அதைச் செய்ய வேண்டும் என்று பணிவோடு இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

விசேஷமாக பஸ் டிரான்ஸ்போர்ட் இலாகாவிலிருந்து பாஸெஞ்சர்களுக்கு பலவிதமான அமெனிடீஸ் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால், பல இடங்களில் இன்று செய்யப்பட்டிருக்கிற அமெனிடீஸ் போதாது என்றுதான் நான் சொல்ல முற்படுகிறேன். குறிப்பாக, நாகர்கோவில் நகரத்தில் டவுன் பஸ் ஸ்டாண்டில் இருக்கிற வசதிகள் போதாது என்று பணிவுடன் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பாஸெஞ்சர்கள் அங்கு தங்கியிருப்பதற்கும், அவர்கள் யூரின் பாஸ் பண்ணுவதற்கும் பெஸிலிடீஸ் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, நமது தாய்மார்களும், சகோதரிகளும் அதிகமாகப் பிரயாணம் செய்கின்ற நேரத்தில் அவர்கள் தங்கியிருப்பதற்குப் போதிய வசதிகள் நாகர் கோவில் பஸ் ஸ்டாண்டில் ஏற்படுத்தப்படவில்லை. அதை துரிதப்படுத்த வேண்டும். ஒரு வேளை இப்பொழுது ஒரு சிறிய ஷெட் இருந்தாலும், அதை விஸ்தரித்து நல்ல முறையில் வசதி செய்து கொடுப்பது நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிப்பந்திகள் தங்குவதற்கு போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சென்னை நகரத்தில் சில கண்டக்டர்கள் தங்குவதற்குப் போதிய வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பட்டணத்துக்கு வெளியிலிருந்து பல பேர்கள் இன்று சென்னையில் வந்து கண்டக்டர்களாக அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வழி வகைகள் செய்யப்பட்டிருந்தாலும், நெருக்கடி நிலைமை காரணமாக அதைச் சிறிது தள்ளி வைத்திருப்பதாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி அத்தியாவசியமான காரியங்களுக்கு விதிவிலக்கு அளிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்து கவனிக்க வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ்களில் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் குறைவு, அதனால் கண்டக்டர்களைக் கண்காணிப்பது மிகவும் குறைவாக இருக்கிறது என்று மதிப்பு மிக்க திரு. சுவாமிதாஸ் அவர்கள் இங்கு எடுத்துக் கூறினார்கள். அதுவும் கன்யாகுமரி மாவட்டத்தில் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் வழி வகை செய்ய வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்

பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிக் கூடுதலாக செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் ஏற்படுத்தினால், வருவாயும் அதிமாகப் பெருகும் என்று நான் கருதுகிறேன்.

நீண்ட தூரம் எக்ஸ்பிரஸ் பஸ்கள் நல்ல முறையிலே விடப்பட்டிருக்கிறது. அது சீரிய முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்காக நமது டைரக்டர் அவர்களையும், குறிப்பாக நமது அமைச்சர் அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். கன்யாகுமரிக்கு இங்கிருந்து நேரடியாக ஒரு பஸ் விடுவதாக முன்பு கூறப்பட்டது. ஆனால், இப்பொழுது அது பரிசீலனை செய்யப்பட்டு, கைவிடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பகுதிக்கு நேரடியாக போவதற்கு ரயில் வசதி இல்லாத காரணத்தினால், நேரடியாக அங்கு செல்வதற்கு வசதி மிகக் குறைவாக இருப்பதினால், நேரத்தையும் சற்றுக் குறைக்க முடியும் என்பதனால், அதைப் புனர் பரிசீலனை செய்து, நேரடியாக கன்யாகுமரிக்கு பஸ் விடுவதற்கு வசதி ஏற்படுத்தித் தாவேண்டும். இதை அரசாங்கம் புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் அநேகமாக பல இடங்களுக்கு அரசாங்க பஸ்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் நோடிபிகேஷன் ஆன பல ரூட்களில் பஸ்கள் விடப்படாமல் இருக்கின்றது. அதையும் துரிதப்படுத்த வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாகர்கோவிலிலிருந்து விரிவிளைக்கு மங்காடு வழியாக ஒரு பஸ் விடுவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாகர்கோவிலிலிருந்து விரிவிளைக்கு சர்க்கார் பஸ் விட்டிருக்கிறார்கள். ஆனால் அது வேறு வழியாகச் செல்லுகிறது. அதற்கு அரசாங்கத்திற்கு நன்றி உடையவர்களாக நாங்கள் இருக்கிறோம். இது ஒரு முக்கியமான ரூட் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொண்டு, உடனடியாக பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாகர்கோவிலில் இயங்குகிற ஸென்டிரல் ஒர்க்ஷாப் சீரிய முறையிலே நடந்து வருகிறது. ஆனால் முழுமையான அளவுக்குச் செயல்படவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, அதிகமாக பாடிகளைக் கட்டுவதற்கும், மற்ற ரிப்பேர்கள் செய்வதற்கும் அதை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், அங்குள்ள மக்கள் தேசீயமயம் ஆக்கிய பஸ் போக்குவரத்தைத்தான் அதிகமாக விரும்புகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல ரூட்கள் எடுக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. குறிப்பாக நாகர் கோவில்—திருநெல்வேலி ரூட்டை எடுக்கப் போவதாக இருந்தது. என்ன காரணத்தினாலோ கைவிடப் பட்டிருக்கிறது. அதை புனர் பரிசீலனை செய்து, அந்த ரூட்டை எடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தனியார் துறையிலே நடப்பதைப் பார்க்கும்பொழுது, இன்று இந்த இலாகா சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது என்பது தெரியவரும். அதற்காக எங்களுடைய ஜில்லா மக்கள் இந்த இலாகாவிற்கு பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். சிப்பந்திகளுக்கு அதிக ஊக்கம் அளிக்கக்கூடிய வகையிலே பிரமோஷனுக்கு ஏற்பாடு செய்து கொடுத்து, செக்கிங் இன்ஸ்பெக்டர்களாகவும், டைம் கீப்பர்களாகவும் நியமிப்பதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேசீயமயம் ஆக்கியுள்ள போக்குவரத்து ஸ்தாபனங்களிலே முதன்மையாக நடந்து வருகிற இந்த ஸ்தாபனத்தின் மீது பல குறைகளைக் கூறுகிறார்கள். போதிய அளவிலே வருவாய் கிடைக்க வில்லை என்று கூறப்

பட்டது. தேசியமயமாக்கிய இந்த ஸ்தாபனங்களின் வருவாயை மட்டும் அரசாங்கம் பார்ப்பதில்லை. பொதுமக்களுடைய நன்மையையும் அதிகமாக கவனிக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். வருவாயை மட்டும் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. தனியார் துறை பஸ்களிலே பிரயாணம் செய்கிறவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தந்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். நடத்துவதற்கு போதுமான வசதிகள் இல்லாத முறையிலேதான் தனியார் துறையில் பல இடங்களில் இந்த பஸ் போக்கு வரத்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், சர்க்கார் இலாகா அப்படி நடக்கவில்லை. பிரயாணிகளுக்கு பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் விஸ்தரிப்பதற்கு பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் விரைவிலே நிறைவேற்றப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே, இந்த மாதிரி நல்ல முறையில் இயங்குகிற இந்த இலாகாவிற்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. து. ப. அழகமுத்து:** கனம் தலைவர் அவர்களே, நமது நாட்டில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள அரசாங்க போக்கு வரத்து இலாகா மானியத்தின்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டி ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில், பிரயாணிகளின் வசதி, தேவை ஆகியவைகளை முதலாவதாகவும், வருமானத்தை இரண்டாவதாகவும் வைத்துத்தான் இந்த இலாகா பணியாற்றுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். பிரயாணிகள் வசதி, தேவையைப் பற்றிக் கூறும் பொழுது, அமைச்சர் அவர்கள் வேறு மாநிலத்திலிருந்து வந்த ஒரு என்ஜினியர் எக்ஸ்பிரஸ் பஸ்களுக்குக் கொடுத்த சர்டிபிகேட்டைப் பற்றிக் குறிப்பிட்டார். ஓரளவுக்குக் எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று கூறுவதற்கு நானும் ஆசைப் படுகிறேன். ஆனால், நகரங்களிலே ஓடுகின்ற பஸ்கள் எப்படி ஓடுகின்றன, அன்றாடம் பஸ்களுக்காக காத்திருந்து மக்கள் தாங்கள் படும் கஷ்டத்தினால், மனவேதனையில் கொடுக்கும் சர்ட்டிபிகேட்டுக்கள்தான் என்ஜினீயர் சர்டிபிகேட்டைவிட உண்மையிலேயே இந்த இலாகாவிற்குப் பொருந்தும் என்று நான் நினைக்கிறேன். நகரங்களில் ஓடுகின்ற பஸ்கள் பற்றிய அபிப்பிராயங்களை மக்கள், பத்திரிகைகளில் ஆசிரியர்களுக்கு எழுதும் கடிதங்களிலும், தெரிவிப்பதை அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே அதைப்பற்றி நான் அதிகம் கூறவேண்டாம். இந்த அரசாங்க பஸ் துறை எப்படிப் பணியாற்றுகிறது, கிடைக்கிற வருமானம் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இந்த பஸ்கள் எவ்வளவு மைல்கள் ஒரு ஆண்டிற்கு ஓடுகின்றன என்றும், ஒரு மைலுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்றும், ஒரு மைலுக்கு எவ்வளவு செலவாகிறது என்றும், ஒரு மைலுக்கு எவ்வளவு மிச்சமாகிறது என்றும் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்கும் பொழுது அரசாங்கம் கணக்கு வைத்துக் கொள்ளுகிற முறை வேறு, தனியார் கணக்கு வைத்துக் கொள்ளுகிற முறை வேறு என்றும் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில் அரசாங்கம் கொடுத்திருக்கிற கணக்கை ஒரு புறம் வைத்துவிட்டு, தனியார் கொடுக்கும் கணக்கு முறையிலே இதை அணுக விரும்புகிறேன். 1961–62-ல் அரசாங்கம் 825 பஸ்களை வைத்திருந்தாலும், 635 பஸ்களை நாள் தோறும் ஓட்டுவதாக கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 635 பஸ்களை ஓட்டியதினால், 1961–62-ல் கிடைத்த வருமானம் (கன்யாகுமரி உட்பட) ரூபாய் 391 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு, ஒரு நாளைக்கு ஒரு பஸ்ஸுக்கு எவ்வளவு சராசரி வருமானம் கிடைத்தது என்று கணக்குப் பார்த்தால் ரூ. 143 தான் வருகிறது. இவ்வாறு நான் குறிப்பிடும் பொழுது, குறைந்த வருமானமுள்ள ரூட்டுகள் இருக்கின்றன. அதிக வருமானமுள்ள ரூட்டுகளும்

இருக்கின்றன என்று பதில் சொல்லுவார்கள். குறைந்த வருமானம் எவ்வளவு, கூடிய வருமானம் எவ்வளவு என்ற கணக்கு நமக்குத் தரப் படவில்லை. எப்படியிருந்தாலும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 143-க்குக் குறைந்த வருமானமுள்ள பஸ்ரூட் இருக்க முடியாது. ஏனெனில் அரசாங்க பஸ்களிலேயுள்ள ஸீட்டிங் கபாஸிட்டியை வைத்துப் பார்க்கும் பொழுது, இதற்கும் குறைவாக வருமானம் கிடைக்க முடியாது. ஆகவே சராசரி வருமானத்தைத் தனியார் துறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தனியார் துறையில் ஒரு பஸ்ஸுக்கு கிடைக்கின்ற வருமானத்தைவிட மிகக் குறைந்த அளவிலே கிடைக்கிறது. கலெக்ஷன் சைடில் இவ்வளவு குறைவாக வருமானம் கிடைப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

1961–62 லாபக் கணக்கைப் பார்த்தால், கன்னியாகுமரி உட்பட, நிகர லாபம் என்ற வகையில் ஒரு பஸ்ஸுக்கு ரூ. 3,245 தான் கிடைத்திருக்கிறது. வட்டிக்கு என்று சர்க்காருக்குக் கொடுப்பதையும் சேர்த்துக் கணக்கிட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறுவார்கள். வட்டியை நிகர லாபத்தோடு சேர்த்துப் பார்த்தாலும் ரூபாய் 6,221 அளவிலேதான் லாபம் கிடைக்கிறது. அது மட்டுமல்ல. இன்னும் டெவலப்மெண்ட் வேலைகளுக்கும் பிரயாணிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையையும் லாபத்தோடு சேர்த்துப் பார்த்தாலும்கூட பஸ் ஒன்றுக்கு ரூபாய் 7,000 தான் கிடைக்கிறது. இது மிகவும் குறைந்த வருமானம். தனியார்களுக்கு இன்கம் டாக்ஸ் இலாகாவிலே வட்டி முதலிய எல்லாச் செலவும் போகத்தான் ரூ. 6,000 நிகர லாபமாகக் கணக்கிடுகிறார்கள். பொதுவாக வட்டியைப் பொறுத்த மட்டில் தனியாருக்கு பெர்மிட் கிடைத்து விட்டது என்றால், மூலதனமே தேவை இல்லை, அந்த பெர்மிட்டை நம்பியே கடன் கொடுப்பதற்கு தாராளமாக முன் வருகிறார்கள். 12 சத விகிதத்துக்கு மேலும் வட்டி கொடுக்கக்கூடிய நிலையில் இருந்தும், அவர்களுக்கு லாபம் அதிகமாக வருகிறது. ஆனால் அரசாங்க பஸ்களின் கணக்கைப் பார்த்தால் லாபம் மிகவும் குறைவாக இருக்கிறது. இப்படி குறைவதற்கு ஏதோ தவறு நடக்கிறதென்றுதான் கொள்ளவேண்டும். அரசாங்க பஸ் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு நிகர லாபம் 10,000 கிடைக்க வேண்டும், மிகமிகக் குறைவாகத்தான் இந்த இலாகாவிற்கு லாபம் கிடைத்திருக்கிறது என்று கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. இது ஒரு தேசிய நஷ்டம் என்றுதான் நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த முறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி லாபக் கணக்குக் குறைவாக இருப்பதன் காரணமாக வேறு ஒரு தவறும் ஏற்படுகிறது. அது என்னவென்றால் அதிக வருமானம் சம்பாதிக்கக்கூடிய முதலாளிகள் சர்க்கார் காட்டுகிற கணக்கை வைத்துத் தங்களுக்கும் அப்படித்தான் லாபம் வருகிறது என்று வருமான வரி அதிகாரிகளிடத்திலே காட்டி தப்பித்துக் கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். எஸ்டிமேட் இன்கம் கணக்குக் கொடுப்பதற்கும் இது பயன்படுகிறது. ஆகவே இந்த பொது ஸ்தாபனம் குறைவான லாபத்தோடு நடப்பதால், தனியார் லாபம் தேடிக் கொள்வதற்கு பயன் படுத்திக் கொள்ளக்கூடிய அளவிலே செய்யக்கூடாது என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 11-30 a.m.

பொதுவாக இதிலே மற்ற கணக்குகளைப் பார்க்கும்போது தனியார் துறையிலே என்ன செலவாகிறது என்பதற்குத் தகுந்தாற் போல இந்தத் துறையிலேயும் செலவாகிறது என்பதைக் காட்ட முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் வருவாயைப் பார்க்கிறபோது தனியாரைவிட மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட திறமைக் குறைவான நிர்வாகம் மேலும் மேலும் நீடித்துக் கொண்டேபோனால் பொது மக்கள் பயனடைய முடியாத ஒரு சூழ்நிலையில் கிடைக்கவேண்டிய வருமானம் கிடைக்காமல் போய்விடும் என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன். ஆகவே இதற்கான நடவடிக்கை எடுத்து நல்ல முறையிலே நிர்வாகம் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

ஒரு 10 நாட்களுக்கு முன்புகூட நான் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது இரண்டொரு பெண்மணிகள் பஸ்ஸில் ஏறினார்கள். அவர்கள் ஏறுவதற்கு முன்பே கண்டக்டர் விசில் அடித்து விட்டதன் காரணமாக ஒரு பெண்மணி தரையிலே ஒரு காலும், படியிலே ஒரு காலும் வைத்துக்கொண்டு ஒரு ஆபத்தான நிலை ஏற்பட்டது. ஆனால் நாங்கள் சத்தம் போட்டதன் பின்பு வண்டி நிறுத்தப்பட்டு அவர்கள் ஏறிக்கொண்டார்கள். இம்மாதிரியான விஷயங்களிலெல்லாம் நாம் கவனம் செலுத்தவேண்டும். ஏற்கனவே இம்மாதிரியான குறைகள் நடந்து ஓரிரண்டு பெண்கள் கால் முறிந்து கஷ்டப்பட நேர்ந்ததென்பதை இந்த இடத்திலே கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இவற்றை எல்லாம் அமைச்சர் அவர்கள் போக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நீண்ட தூர பஸ் சென்னைக்கு வரும்போது தியாகராயநகர் ஸ்டாபிங்கிலே நிற்கிறது. அதற்குப் பிறகு ஹைக்கோர்ட்டுக்குப் பக்கத்தில் தான் போய் நிற்கிறது. இரவு வேளைகளில் தி. நகர் வந்திறங்குகிற பிரயாணிகள் அங்கு டாக்ஸி கிடைக்காமல் சிரமப்படவேண்டிய நிலை ஏற்படுவதால், தி. நகரைத் தவிர, மவுண்ட் ரோடிலே ஒரு ஸ்டாபிங்கும், செண்ட்ரல் ஸ்டேஷன் அருகே ஒரு ஸ்டாபிங்கும், அதன் பிறகு ஹைகோர்டிலே ஸ்டாபிங்குமாக அமைத்துதரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் இரவில் வருகிற பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும். பஸ் ரூட் நெம்பர்களையும் புறப்படுகின்ற காலத்தையும் அச்சடித்து பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்தால்தான் எந்த பஸ் எந்த நேரத்திலே எங்கிருந்து புறப்படுகிறதென்பதை பொது மக்கள் கவனித்துத் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னையிலேயிருந்து தஞ்சாவூருக்கு ஒரு நீண்டதூர பஸ் விடப்படுகிறது. அது தஞ்சாவூருடன் நின்று விடுகிறது. அதற்கு அடுத்து 32 மைல் தூரத்திலுள்ள அதிராமபட்டிணத்துக்குச் செல்ல வசதி செய்யப்படவில்லை. அதிராமபட்டிணத்துக்குப் போகவேண்டியவர்கள் சென்னை நகரத்திலே அதிகம் பேர் வசிக்கிறார்கள். ஆகவே இந்த பஸ்ஸை தஞ்சாவூரிலேயே நிறுத்திவிடாமல். அதிராமபட்டிணம் வரையிலும் நீட்டி விட்டால் வசதியாக இருக்குமென்று தஞ்சாவூர் அங்கத்தினர்களெல்லாம் என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். அந்த பஸ்கூட அமைச்சர் அவர்களுடைய தொகுதியாகிய பட்டுக்கோட்டை வழியாகத்தான் செல்கிறது. அந்த பஸ்ஸை தஞ்சாவூரிலிருந்து அதிராமபட்டிணம் வரை நீட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்டதூர பஸ்களை ஏர் கண்டிஷன் செய்தால் மிகவும் வசதியாக இருக்கும். வெயில் காலங்களில் நீண்ட தூரம் பஸ்களில் செல்லவேண்டியிருக்கும் போது பஸ்கள் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டதாக இருக்குமானால், பிரயாணிகளுக்குக் கஷ்டம் இல்லாமலும் வசதியாகவும் இருக்கும். ஆகவே நீண்ட தூரம் செல்லும் பஸ்களையெல்லாம் ஏர் கண்டிஷன் செய்யவேண்டும். அதற்காகக் கட்டணம் சிறிது அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை.

1947–48-ம் ஆண்டில் ஒரு மைல் பஸ் ஓட்டுவதற்கு 69 ந.பை. செலவு ஆயிற்று என்றும், 1960–61-ம் ஆண்டில் 1.34 ந.பை. ஆக இருந்தது என்றும் 1963–64-ம் ஆண்டில் 1.44 ந.பை. செலவாகும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் குறிப்பிட்டதன்மூலம் பஸ் கட்டணத்தை உயர்த்துவதற்கு விரும்புகிறார்கள் என்பது எனக்கு [illegible]மாக விளங்குகிறது. மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் கட்டணம் குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே ஒரு சிறிது கட்டணத்தை ஏற்றினாலும் பரவாயில்லை என்றுதான் நான் [illegible]

வரி போட்டதற்குப் பின்னால், தனியார்த் துறையில் பஸ் டிரான்ஸ்போர்ட் நடத்துகிறவர்கள் பஸ்ஸை நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால், நம்முடைய சர்க்கார் நடத்தும் பஸ் டிரான்ஸ்போர்டில் லாபம்தான் வருகிறது. நஷ்டம் இல்லை என்று காண்பித்தால், தனியார்த் துறையில் பஸ் ட்ரான்ஸ்போர்ட் நடத்துகிறவர்களும் சுணங்காமல் வரி கட்டுவார்கள் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபைத் தலைவர் அவர்களே, தற்சமயம் விவாதத்தில் இருந்து கொண்டிருக்கக் கூடிய மானியத்தின் மீது என்னுடைய யோசனைகளைச் சொல்வதற்கு நான் விரும்புகின்றேன்.

இன்றையதினம் நமது அரசாங்கம் போக்குவரத்து பஸ் தொழிலை மேற்கொண்டு நல்ல முறையில் நடத்திக்கொண்டிருகிறது. பொதுத் துறைக்கும் தனியார்த் துறைக்கும் எப்போதுமே போட்டி ஏற்படத்தான் செய்யும். பொதுத்துறையை எந்த அளவுக்கு பலவீனப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குத் தனியார்த் துறையில் உள்ளவர்கள் பலவீனப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பொதுத் துறையின் நோக்கத்தைப் பாழ்ப்படுத்துவதற்காகவே சில பத்திரிகைகளும், இதர தேசவிரோதச் சக்திகளும் இருந்துகொண்டு இதை எதிர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் "ஆதாயத்தோடு இந்த தொழில் நடத்தப்படுகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மிகவும் வரவேற்கத்தகுந்த ஒரு தொழிலாக நாம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அந்த முறையிலே பார்த்தால், மற்ற மாநிலங்களிலே இருக்கக் கூடியவர்களும் நமது சர்க்கார் பஸ் டிரான்ஸ்போர்ட்டைப் பாராட்டியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு பஸ் டிரான்ஸ்போர்ட் லாபகரமாக நடக்கும்போது, தனியார்கள் நடத்தும் பஸ் டிரான்ஸ்போர்ட்டில் லாபம் வரவில்லை, நஷ்டம்தான் வருகிறது, வரி செலுத்தக்கூட முடியவில்லை என்று சிலர் ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி நஷ்டம் வருவதாகச் சொல்லிகொண்டு பஸ் தொழிலைத் தனியார் நடத்தவேண்டிய அவசியம் இல்லை. இப்போது தனியார் நடத்துகிற வரையில் அவர்களுக்கு விட்டுவிட்டு, மேலும் புதிய ரூட்கள் வழங்கும்போது தனி நபர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டியதில்லை என்று நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்குப் பதிலாக புதிய ரூட்கள் கொடுக்கும்போது, நகர சபைகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அனுமதி கொடுக்கலாம். கிராமப்புறங்களில் 20, 25 மைல் ஓடக்கூடிய பஸ் ரூட்களையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கலாம். இம்மாதிரி கொடுத்தால் அவர்களுக்குப் போதுமான நிதி உதவி கிடைக்கும். அந்த ஆதாயங்களை வைத்து, நாம் போட்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். அந்த முறையில் அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டும். கூட்டுறவு முறையில் இருக்கக்கூடியவர்களுக்கும் புதிய ரூட்கள் கொடுக்கலாம் அல்லது, நகர சபைகள், பஞ்சாயத்து யூனியன்கள் இவற்றுக்கும் கொடுக்கலாம்.

நம்முடைய மாநிலத்தில் சர்க்கார் நடத்தும் துரித பஸ்கள் நல்ல முறையில் ஓடிக்கொண்டிருக்கின்றன. துரித பஸ்களில்தான் அதிகமானவர்கள் பிரயாணம் செய்வதற்கு ஆசைப்படுகிறார்கள். ரயிலைவிட பஸ்ஸில் போவதுதான் சௌகரியமாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை இருப்பதால் துரித பஸ்களை அதிகமான ரூட்களில் விடவேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

80 மைல் தூரமுள்ள மதுரைக்குச் செல்ல வேண்டுமென்றால், தனியார்த் துறை பஸ்களைத்தான் தேடிப்பிடிக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லாத அளவுக்கு சென்னையிலிருந்து திருச்சி வழியாக மதுரைக்கு அந்த பஸ்ஸை விடவேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டும்.

பட்டுக்கோட்டையிலிருந்து முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மாயவரம் வழியாக ஒரு துரித பஸ் விடுவார்களானால் சென்னைக்கு வரக்கூடிய மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும். ரயிலில் வருவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ரயிலில் ஒரே ஒரு காரேஜ்தான் இணைப்பதால் புளி மூட்டை மாதிரி அடைய வேண்டியிருக்கிறது. ஜனங்கள் சௌகரியமாகப் பிரயாணம் செய்ய முடிவதில்லை. ஆகவே, துரித பஸ்ஸை இந்த மார்க்கமாக விடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அப்படியெல்லாம் செய்தால், நம்முடைய பொதுத் துறை லாபகரமானதாக இருக்கமுடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்தத் துறையில் இருக்கும் குறைப்பாடுகளைப் போக்கி, வருமானத்தை அதிகரிக்கவேண்டுமென்றால், இந்தத் துறையிலுள்ள அலுவலர்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளுகிறார்களா என்று அரசாங்கம் கவனித்துக் கொள்ளவேண்டும். அப்படிக் கவனிக்கவில்லையென்றால், அவர்களே பொதுத் துறைக்கு விரோதமாக இருந்துகொண்டு, இம்மாதிரி செய்கிறார்களோ என்னவோ என்கிற ஒரு ஐயப்பாடு எழக்கூடிய நிலைமை ஏற்படும். நாம் ஒரு தொழிலை நடத்தும்போது, அந்தத் தொழிலுக்குப் பெரிய அளவுக்கு எதிர்ப்பு இருக்கக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில், அந்தத் தொழிலுக்கு விரோதமானவர்கள் நிர்வாகத்திலோ அல்லது வெளியிலோ இருக்கக் கூடியவர்கள் எந்த அளவுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிறார்கள் என்று பார்த்து, ஜாக்கிரதையாக அதைக் கண்காணித்து நல்ல முறையில் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் மீண்டும் அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். புதிய ரூட்களைத் தயவு செய்து தனி நபர்களுக்குக் கொடுக்கவேண்டாம். நாமே அதை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும். நகரசபைகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், கூட்டுறவு முறையில் நடத்த முன்வருகிறவர்களுக்கும் புதிய பஸ் ரூட்களைக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. முனு. ஆதி : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மோட்டார் போக்குவரத்து மானியத்தின் மீது தரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகின்றேன்.

நாட்டிலே இன்றைக்கு நெருக்கடி அதிகமாக இருக்கும் காரணத்தால் ரயிலுக்குச் சமமாக மோட்டார் போக்குவரத்து, மக்களுக்கு வசதிசெய்து தருகிறது. அந்த மோட்டார்ப் போக்குவரத்தை அரசாங்கம் முழுக்கமுழுக்க தேசியமயமாக்க வேண்டும் என்பதிலே முனையவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

தனிப்பட்டவர்கள் பஸ் ரூட் வாங்கி, ஆறு மாதம், ஒரு வருஷம் கழித்து, ஐம்பதாயிரம், ஒரு லட்சம் ரூபாய்க்கு அதை மற்றவருக்கு விற்றுவிடுகிறார்கள். வாங்கும் சக்தி முதலாளிகளுக்கு இருக்கும் காரணத்தால், அந்தத் துறையில் அதிக மூலதனம் போட்டு நடத்தக் கூடிய வசதி செல்வந்தர்களுக்கு இருக்கும் காரணத்தால், மேலும் மேலும் தனியார்த் துறை வளரக்கூடிய நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, ரூட்டைக் கொடுத்த பிறகு, வேறொருவருக்கு மாற்றும் அதிகாரத்தைத் தனியாருக்குக் கொடுக்காமல், ரூட்டை ரத்து செய்யும் அதிகாரத்தை அரசாங்கமே வைத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய சொந்தக் கருத்தைக்கேட்டால் ரூட்களை ஏலம் விட்டுவிடலாம் என்பேன். ரூட் கான்ஃபரன்ஸ் போட்டு, யார் யாருக்கு ரூட் கொடுக்கலாம் என்பதற்கு முதலாளிகளை வரவழைத்துத் தீர்மானிப்பதைவிட, பஸ் ரூட்டை ஏலம் விட்டால் அதிகத் தொகை சர்க்காருக்குக் கிடைக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

சென்னையிலிருந்து தாம்பரத்திற்குப் பஸ் புதிதாக விடப்போகிறோம் என்று மாவட்டக் கலெக்டர் விளம்பரப்படுத்தி, தனிப்பட்ட பஸ் முதலாளிகளை உட்கார வைத்து, முடிவு செய்யாமல், ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்து, அதற்குக் குறையாத தொகைக்கு ஏலத்திற்கு விடப்போகிறோம் என்று சொல்லிவிட்டால், அதிகமான தொகை அரசினருக்கு வர வாய்ப்பு இருக்கும். ஆகையால், யாருக்குக் கொடுப்பது என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பைக் கலெக்டரிடம் விடுவதைவிட, ரூட்டை ஏலத்திற்கு விட்டால் அதிக வருவாய் கிடைக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நாம் அடிக்கடி பஸ்களுக்கு வரி விதிக்கும்போது, தனியார்த் துறையில் இருப்பவர்களெல்லாம் திடீர் என்று கட்டணத்தை உயர்த்திவிடுகிறார்கள். அந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அப்படிப்பட்ட கட்டுப்பாடு இல்லாத நிலையில், கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டது போல—சென்னையிலிருந்து காஞ்சீபுரம் போக ஒரு ரூபாய் கட்டணம் இருந்ததை ரூ. 1–6–0 அளவுக்கு உயர்த்தியது எல்லோருக்கும் தெரிந்த விவரமாகும். அப்படி கட்டணத்தை ஏற்றும் அதிகாரத்தைத் தனியாருக்கு விடாமல், அதைக் கட்டுப்படுத்த வேண்டும். எப்பொழுது வரி போட்டாலும், "இந்த அளவுக்குத்தான் கட்டணத்தை ஏற்றவேண்டும், இதற்கு மேல் ஏற்றக்கூடாது" என்றுதெளிவான விதியை நிர்ணயித்து விடுவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுப்பதில் இறங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோன்று பஸ் போக்குவரத்து மூலம் கிராமங்களுக்கும் நல்ல பயன் ஏற்படவேண்டுமென்ற நல்ல நோக்கம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது, நமக்கெல்லாம்கூட இருக்கிறது. அடித்தட்டில் வாழும் மீனவ மக்கள் 10,000 பேருக்கு மேல் திருவான்மியூரிலிருந்து முடிக்காடு வரையில் மணல் பரப்பில் நடந்துவரும் கோரக் காட்சியைப் பார்க்கிறோம். அந்த வட்டாரப் பஞ்சாயத்து போர்டு தீர்மானம் போட்டும், மனு அனுப்பியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்தப் பகுதியிலே ஒரு பஸ் ரூட்டை ஆரம்பிக்க தீவிர அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலும் சிறு சிறு கிராமங்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கின்றன. அதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் மிகுந்த அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். சென்னையிலிருந்து பல்லாவரத்திற்கு பஸ் செல்கிறது, பல்லாவரம் பஸ்ஸில் ஒன்றையோ இரண்டையோ, வேளச்சேரி, மேடவாக்கம், சந்தோஷபுரம், ஆதம்பாக்கம் வழியாக ஆலந்தூருக்கு வரவிட்டால் ஆலந்தூருக்கு மக்கள் வர வசதியாக இருக்கும். அதே போன்று சென்னையிலிருந்து பல்லாவரம் போகும்போது சந்தோஷபுரம், மேடவாக்கம், வேளச்சேரி வழியாகச் சென்றால் மக்களுடைய போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும். அந்த முறையில் பஸ் ரூட்டை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலிருந்து திருப்போரூருக்குச் செல்லுகின்ற பஸ்ஸை மேடவாக்கம், வேளச்சேரி, சிதளப்பாக்கம், மதுரப்பாக்கம், மாம்பாக்கம் வழியாகச் செல்லும் வகையில் அமைத்தால் 20, 25 கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி கிடைக்கும்.

அண்மையில் கவர்ன்மெண்ட் பஸ்ஸானது செண்ட்தாமஸ் மவுண்ட் வரை விடப்பட்டிருக்கிறது. அங்கு நந்தம்பாக்கம் என்ற கிராமம் இருக்கிறது. அந்த பஸ்ஸை நந்தம்பாக்கம் வரை விட அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையை அடுத்து இருக்கக் கூடிய பல பகுதிகளில் இன்றைக்குக் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அவர்கள் பல மைல் தூரம் நடந்து ரயிலையோ, பஸ்ஸையோ பிடிக்கவேண்டியிருக்கிறது. அங்கெல்லாம் புதிய பஸ் ரூட்டுகளை அமைத்து, மக்களுக்குப் போக்கு வரத்து வசதி செய்து கொடுக்க வழி வகுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்து கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. ஸ்ரீனிவாசன் : கனம் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிறுவனம் சுதந்திரம் பெற்ற காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை 16 ஆண்டு ஆகிறது என்பதை நினைக்கும்போது நாம் பெருமிதம் கொள்ளாமல் இருக்க முடியாது. இந்த நிறுவனம் என்றும் 16 வயதோடு இளமையோடு இருந்து நல்ல முறையில் மக்களுக்குச் செயல்பட வேண்டுமென்ற வாழ்த்த சக மெம்பர்களோடு சேர்ந்து தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிறுவனத்திற்கு அமைச்சராக அமர்ந்திருப்பவர்கள் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவர்கள். அவர்களுடைய திறமையான மேற்பார்வையின் கீழ் இந்த இலாகாவில் பணி இயங்கி வருகிறது என்பதை நினைக்கும்போது உண்மையிலேயே பூரிப்பு அடையவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இருந்தாலும் ஒரு சில அபிவிருத்திகளைப் பற்றி மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

லாங் டிஸ்டன்ஸ் பஸ் ரூட்டுகளில் ஒன்று இராமநாதபுரத்திலே இருந்து தஞ்சாவூருக்குச் செல்லுகிறது. கன்னியாகுமரியிலிருந்து இராமநாதபுரத்திற்கு வருகிறது. இராமநாதபுரத்திலேயே இந்த பஸ்களை எல்லாம் ஏன் நிறுத்தி விடுகிறார்கள் என்றுதான் தெரியவில்லை. பிற மாகாணங்களில் இருந்து வருகிறவர்கள் இராமேஸ்வரம் வரை போகவேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்கள் ரயிலில்தான் போக முடியுமே தவிர, பஸ்ஸில் போக முடியாது. இது பற்றி நான் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எழுதியிருக்கிறேன். மண்டபம் வரையிலாவது பஸ் போனால் அங்கிருந்து **Ferry** சர்விசில் இராமேஸ்வரம், தனுஷ்கோடி போகச் சவுகரியமாக இருக்கும். இராமநாதபுரத்திலிருந்து தஞ்சாவூர் போகிற பஸ் பாம்பு போல் வளைந்து, காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் என்று ஊர்களையெல்லாம் சுற்றிக் கொண்டு செல்கிறது. ஏதோ ஊர் சுற்றிப் பார்க்கிற பயணம் மாதிரி இருக்கிறதே தவிர, பஸ்ஸில் போவது மாதிரித் தெரியவில்லை. இதைப் பற்றியும் நான் எழுதியிருக்கிறேன். தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டால், புதுக்கோட்டை, திருப்பத்தூர், சிவகங்கை, பரமக்குடி வழியாக இராமநாதபுரம் வந்து சேர்ந்து விடலாம். ஷார்ட்டேஜ் ஆப் மைல்ஸ் இருந்தால் மண்டபம் வரை கூட எக்ஸ்டெண்டு பண்ணலாம். பஸ்கள் மத்தியானம் 12 மணிக்குப் புறப்படுகிறது. "அரைவல்" டைம் பார்க்கிறபோது இரவு எட்டு மணியாக இருக்கிறது. அதை விட்டு நாலு மணிக்கு போட் மெயிலில் ஏறினால், 9 அல்லது 10 மணிக்குத் தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறார்கள். இந்த நிலைமையில் இந்த பஸ்ஸில் யார் ஏறுவார்கள்? ஆகவே, காலையில் பஸ் புறப்படும் வகை

நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை, நடவடிக்கை எடுத்தார்களா இல்லையா என்று கூட எனக்கு தெரிவிக்கவில்லை. என் போன்ற இம்மன்ற உறுப்பினர்களுக்கே இந்த கதி என்றால் சாதாரண பாமர மக்கள் எந்தளவு பாதிக்கப்படுவார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். சர்க்கார் பஸ்கள் எந்தளவில் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் மிகவும் மோசமான நிலையில் தான் பஸ்கள் இருக்கின்றன. அதுபற்றி விசாரிக்கும் போது, சர்க்கார் பஸ்களை சுத்தம் செய்ய இப்போதிருக்கிற டிப்போக்களில் தண்ணீர் வசதி இல்லாததால் பஸ்கள் சுத்தம் செய்யப்படுவதில்லை, வாரக் கணக்கில் அவை சுத்தம் செய்யப்படாமல் தூசு படிந்திருக்கிறது என்று அறிகிறேன். பின்னர், மழை காலத்தில் பஸ்க்குள் தண்ணீர் புகுந்து விடுகிறது. ஜன்னல்கள் சரியாக அமையவில்லை. அதோடு படுதாக்கள், பஸ்கள் வந்தபோது இருந்ததுதான் இப்போதும் இருக்கின்றன. மழை காலத்தில் பிரயாணிகள் சீட்களில் உட்கார முடியவில்லை. இரண்டு பேர்கள் அமரும் சீட்களில் ஒருவர் அமர்வதற்குத்தான் முடிகிறது என்ற நிலை தான் இருக்கிறது. ஆகவே மழை காலத்தில் பிரயாணிகள் வசதியோடு அமர ஜன்னல் வசதியை மாற்றியமைத்து, படுதாக்களை மாற்றியமைத்து வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நெடுந்தூர பஸ்கள், எட்டு டன் சுமை தாங்கக் கூடிய லேலண்ட் வண்டிகள்தான் ஓடுகின்றன. சாதாரணமாக 50 பிரயாணிகளை ஏற்றிச்செல்வது என்றால் அதிகப் பளு உள்ள வாகனத்தில் குறைந்தளவு பளு இருக்கும் விதத்தில் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதால் அதிர்ச்சி ஏற்படும் அளவிற்கு சீட்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற குறைபாடும் இருக்கிறது. உட்காருகிற இடத்தில் காலை வைக்கக்கூட கஷ்டமாக இருக்கிறது. சாய்ந்து உட்கார்ந்தால் தலைப்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஸிஸ்டம் போகிற போக்கில் தலை ஆடிக்கொண்டுதான் செல்லும். அந்தளவு இருக்கின்றன சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ்கள். ஆகவே சீட் அமைப்பில் தக்க மாறுதல்கள் செய்து நீண்ட தூரம் செல்லும் பிரயாணிகள் வசதியாக களைப்பு இல்லாமல் செல்வதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஸ் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, பிற வசதிகள் செய்து கொடுக்க சர்க்கார் முன் வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்திட்டங்களை உடனடியாக நிறைவேற்றி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்வார்கள் என்று கருதுகிறேன். அடுத்து, பலர் ஓவர் டைம் ட்யூட்டி செய்ய முன் வருகிறார்கள். ஆனால் அப்படி ஓவர் டைம் செய்ய சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கவில்லை. இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பஸ்களை அப்படி ஓவர் டைம் செய்ய முன் வருகிறவர்களைக் கொண்டு ஓட்டினால் சர்க்காருக்கும் அதிக வருமானம் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. கோ. சி. மணி : மன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிற மான்யக் கோரிக்கை மீது தரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூறலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக சென்னை நகரத்தில் ஓடுகிற பஸ்களையும், அதற்கு மேல் நீண்ட தூரம் பயணம் செய்யும் பஸ்களையும் ஏற்று நடத்துகிற பெரும் பொறுப்பை இன்றையதினம் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக அமைச்சர் அவர்கள் இங்கு கூறுகிறபோது இன்றையதினம் தமிழ் நாட்டில் இருக்கிற பஸ் ஓனர்களில் மிகப் பலம் வாய்ந்தவர்களும், அதிகப்படி அரசாங்கத்திற்கு வரி செலுத்துபவர்களாக நாம் இருக்கிறோம் என்று பெருமையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வலுப் பெற வேண்டும், நாம் தான், நாம் மட்டும்தான் இம்மாநிலத்தில் பஸ் நிறுவனத்தை நடத்துகிறவர்கள் என்ற முறையில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த பஸ்களை, இத்துறையை தேசிய மயமாக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். அதையொட்டி நீண்ட தூர பஸ்களை ஓட்டிச் செ-

லும் ட்ரைவர்களையும், கண்டக்டர்களையும், அவர்கள் நிலை இன்று எப்படியிருக்கிறது என்பதை அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சென்னையை விட்டுப் புறப்படுகிற பஸ் தஞ்சை போய்ச் சேர வேண்டுமென்றால் காலையில் 9-30-க்கு புறப்படும் பஸ்ஸை தஞ்சைக்கு மாலை 4-30-க்கு கொண்டு போய் விட்டு விட்டு, மறுநாள் காலை புறப்பட்டு ராமநாதபுரம் போகிற பஸ் வழி போய் மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு திருச்சி வந்து இப்படி ஏறத்தாழ ஒரு வார காலத்திற்கு திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் சுற்றி அங்கு பணிபுரிந்து எட்டாம் நாள் அவர்களுக்கு இரண்டாம் ஷிப்ட் கிடைக்கும் அளவில்தான் இன்று இந்த போக்குவரத்து முறை அமைந்திருக்கிறது. ஆக இப்படி ஏழு நாட்கள் சென்னையில் குடியிருக்கும் ட்ரைவர், கண்டக்டர் நாலைந்து மாவட்டங்களைத் தாண்டி 7, 8 நாட்கள் தங்கி தங்கள் இரண்டாம் முறைப் பயணத்தைச் சென்னை வந்து முடிக்கிறார்கள். பிறகு ஆறு நாட்கள் லீவ் கிடைத்து பிறகும் அதேபோல் தான். இப்படி அமைகிறது அவர்கள் வாழ்க்கை. இந்நிலை நிச்சயமாக இருக்கக் கூடாது. சென்னையில் இருந்து புறப்பட்டுச் செல்கிற ட்ரைவர், கண்டக்டர் எல்லா மார்க்கங்களையும் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற நியதி இருந்தாலும் கூடவே துணையாக வேறு ஒரு ட்ரைவரையும், கண்டக்டரையும் அழைத்துச் சென்று எல்லாச் சாலைகளையும், போக்குவரத்தையும் வேண்டுமானால் பார்வையிட்டு தேவை என்று ஏற்பட்டால் அவர்களை மாற்றலாம். ட்ரெயினிங் கிடைத்த பிறகு அவர்களை அங்கு போடலாம். இல்லை, அவர்கள் மீது குறை இருந்தால் இன்னொரு லைனுக்கு மாற்றலாமே தவிர அந்தந்த மாவட்டங்களில் அவர்களை வைத்துக் கொண்டிருப்பதுதான் சிறந்தது. அடுத்து, நீண்ட தூர பஸ்களில் போகும்போது பிரயாணிகள் கையில் எடுத்துச் செல்லும் சாமான்களுக்கு லக்கேஜ், ரெயில்வே கட்டணத்தை விட, தனியார் துறைக் கம்பனிகள் நடத்தும் பஸ்களில் வாங்கப்படும் கட்டணத்தை விட ஒரு பங்கு அல்ல, மூன்று பங்குக்கு மேல் இந்தக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு பை, இன்னொரு மூன்று பொருள்களை எடுத்துக் கொண்டு போனால் லக்கேஜ் ஒரு டிக்கட்டின் கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி சென்னையிலிருந்து தஞ்சைக்கு செல்லும் பிரயாணிகளிடம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால் இரண்டு சாமான்களை எடுத்துச் சென்றால் லக்கேஜ் அதிகம் போடுவார்களே என்று மக்கள் அஞ்சி சர்க்கார் பஸ்களில் ஏறாமல் வேறு பஸ்களில் இறங்கி ஏறி, இறங்கி ஏறியாவது போகலாம் என்று எண்ணி சர்க்கார் பஸ்ஸைப் புறக்கணிக்கிறார்கள். இதனால் நம் வருவாய் ஓரளவு குறையும் என்று கூட நான் கருதுகிறேன். அதோடு தனியார் நடத்தும் பஸ்கள் அரசாங்க பஸ்களை விடத் தேவலை, அரசாங்கப் பஸ்ஸில் கட்டணம் அதிகமாகயிருக்கிறது என்று மக்கள் பிரசாரம் செய்கிற அளவிற்கு இன்று சர்க்கார் பஸ்களில் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே பிரயாணிகள் எடுத்துச் செல்லும் பொருள்களுக்கு உள்ள கட்டணத்தைக் குறைக்கத்தான் வேண்டும். அமைச்சர் அவர்கள் இறுதியில் குறிப்பிடுவார்கள் என்று கருதுகிறேன். அதிகப்படியான பளுவைக் கொண்டு செல்வதைத் தடுக்கவே இப்படிக் கட்டணம் விதிக்கிறோம் என்று அவர்கள் சொன்னாலும் சொல்லலாம். எந்தளவிற்குப் பொருள்களைக் கொண்டு செல்லலாம் என்ற நியதி மக்களுக்குப் புரிந்திருக்கிறது, அந்த அளவிற்குத்தான் அவர்கள் பொருள்களைக் கொண்டு செல்வார்கள். எந்த அளவு ஏற்ற முடியுமோ அந்த அளவிற்குத்தான் கொண்டு செல்வார்கள். ஆகவே கட்டணத்தைக் கூட்டுவதால் அவர்கள் பொருள்கள் கொண்டு செல்வதைத் தடுத்து விடலாம் என்று சொல்வதற்கில்லை. நீண்ட தூரம் செல்லும் பஸ்களில், அவை நிற்கிற இடங்களில் எல்லாம் பொது கக்கூஸ் இருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. நான் ஒன்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் இருந்து நீண்ட தூரப் பஸ்ஸில் செல்லும் பிரயாணிகள் விருத்தாசலம் போய் அங்கு ஏதாவது மலஜலம் கழிக்க நினைத்தால் பஞ்சாயத்தில் இருக்கிற பொதுக் கக்கூஸ் குறிப்பிட்ட

இடத்தில் இல்லை ஒரு கோவில் பக்கத்திற்குப் போய்தான் பிரயாணிகள் எது செய்ய வேண்டுமானாலும் செய்யலாம். அங்கு மூன்று நிமிடங்கள் தான் நிற்கிறது. ஐந்து நிமிட நேரம் இன்னொரு வண்டி நிற்கிறது. ஏறத்தாழ பத்து மணி நேரத்திற்கு மேல் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் நிலை எப்படியிருக்கும். ? அவர்கள் எப்படி பொறுத்துக் கொள்ள முடியும் ? இப்படிப்பட்ட பஸ்களில் சாதாரண சிறு கக்கூஸை இணைத்து அந்தந்த ஸ்டேஷன்களில், பஞ்சாயத்துக்களிலுள்ள அல்லது முனிசிபாலிடிகளிலுள்ள தொட்டிகளை வைத்து, இருக்கிற தட்டை எடுத்துவிட்டு வெறொரு தட்டை மாற்றுவதற்கு உண்டான நிலைமைகளைச் செய்யலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம் கும்பகோணத்தில் ராம விலாஸ் கம்பெனியார் டூரிஸ்டு வண்டி ஒன்றைக் கட்டி இருக்கிறார்கள். அதிலே இப்படிப் பரிட்சார்த்தமாக முகங்களை அழகு செய்வதற்கும், டிரெஸ்களை மாற்றுவதற்கும், மலஜலம் கழிப்பதற்கும் வசதி செய்திருக்கிறார்கள். அந்த முறையில் அரசாங்க பஸ்களிலும் பரிட்சார்த்தமாகச் செய்யலாம்.

அதை அடுத்து பஸ் போய்க்கொண்டிருக்கும் நேரத்தில் எந்த இடத்தில் மதிய உணவு அருந்துவது, எந்த இடத்திலே மாலைத் தேனீர் அருந்துவது என்பதெல்லாம் வரையறுக்கப்படாமல் இருக்கிறது. ஒரு நாளைக்குக் கடலூரிலே மதிய உணவு சாப்பிடலாம் என்று சொல்கிறார்கள். இன்னொரு நாள் விருத்தாசலத்திலே சாப்பிடலாம் என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம், கண்டக்டர்கள் புதிது புதிதாக மாற்றப்படுவதுதானா என்று தெரியவில்லை.

தனியார் துறையில் இல்லாத ஒரு ஏற்பாட்டைச் சர்க்கார் பஸ்ஸிலே செய்திருக்கிறோம். அடுத்து இன்ன ஊர் வருகிறது, இத்தனை மணிக்கு அங்கு போய்ச் சேரும், அங்கிருந்து இத்தனை மணிக்குப் புறப்படும் என்பதையெல்லாம் காட்டும் ஒரு போர்டை வைத்திருக்கிறார்கள். வேறு எந்த பஸ்ஸிலும் இல்லாத முறை இது. அதேபோன்று இத்தனை மணிக்கு இன்ன ஊரில் சாப்பிடலாம் என்பதற்கும் ஒரு போர்டை வைத்தால் பிரயாணம் செய்கிறவர்களுக்கு வசதியாக இருக்கும். இந்த நிலைமைகளையெல்லாம் உள்ளபடியே மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்துத்துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த அறிக்கையைப் படித்தபோது உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தேன். 1962-63-லே அதிகமான பஸ்களைப் போட்டு பல நல்ல வசதிகளை எல்லாம் பிரயாணிகளுக்குத் தந்து தொழிலாளர்களுக்கும் வசதிகளைச் செய்து தரவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு முயற்சி எடுத்திருப்பது பற்றிப் பாராட்டுகிறேன். இன்னும் இந்த நிர்வாகத்தைத் திறமையோடு நடத்துவதற்கு எவ்வளவு ஊக்கத்தைத் தரமுடியுமோ அவ்வளவுக்குத் தேசிய மயமாக்கப்பட்ட தொழில்களில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும், அப்போது தான் மக்கள் சோஷலிஸ சம தர்ம சமுதாயத்தை அமைக்க ஆதரவு தருவார்கள். அந்த வகையிலே முதலிலே போக்குவரத்துத் துறையிலே ஈடுபடுத்தப்படுகின்ற வேலை ஆட்கள் தேசிய மனப்பான்மை படைத்தவர்களாக முடிந்த வரை இருப்பது மிக மிக அவசியம் என்று நினைக்கிறேன். சாதாரணமாகச் சிறு குறைகள் இருந்தாலும் கூட பஸ்களில் போகும்போதும் வரும்போதும் "உங்கள் அரசாங்கத்தைக் கேளுங்கள், உங்கள் மந்திரிகளைப் போய்க் கேளுங்கள்" என்று மிகச் சுலபமாகச் சொல்கிறார்கள். அதைக் கேட்கும்போது ஆத்திரம் பொங்குகிறது. அரசாங்கத்துக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அந்த அளவுக்குப் பொறுப்பு தொழிலாளர்களுக்கும் இருக்கிறது என்ற உணர்ச்சி அற்றவர்களை இந்தப் பணியிலே ஈடுபடுத்தி விடுகிறார்களே என்ற வேதனைப் பட

வேண்டியிருக்கிறது. ஆகவே இதிலே ஈடுபடுத்தப் படுகிறவர்களுடைய மனப்பான்மையைப் புரிந்துகொண்டு நல்ல மனப்பான்மை உள்ள தொழிலாளர்களை மட்டும் இந்தத் துறையிலே ஈடுபடுத்த வேண்டுமென்பதில் அக்கறை காட்டுவது மிக மிக அவசியம் என்று முதலிலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இந்த நிர்வாகத்தை இன்னும் சற்றுத் திறம்பட நடத்த வேண்டுமென்றால் நம்முடைய அரசாங்கத் துறையிலே சூபர்வைசரி ஸ்டாப், டெக்னிகல் ஸ்டாஃப், என்று இருப்பவர்களில் சூபர்வைசரி ஸ்டாஃப் அதிகமாக இருப்பதைக் குறைக்கவேண்டும். சூபர்வைசரி ஸ்டாபை அதிகமாக வைத்துக்கொள்ளாமல், டெக்னிகல் ஸ்டாபை (நுண்கலைப் பயிற்சி பெற்றவர்களை) அதிகமாக ஈடுபடுத்தினால் துரிதமாகச் செல்லும் பஸ்களை எல்லாம் நன்றாகக் கண்காணிப்பதற்கு வேண்டிய வழி ஏற்படலாம். இவ்வளவு திறம்பட இந்தத் தொழிலை நடத்தியும் கூட நூற்றுக்கு எண்பத்தைந்து பஸ்கள்தான் ஓடுகின்றன. சில பஸ்களை 10, 11 மணிவரையில் டிரிப்புக்கு அனுப்பி விட்டு ஷெட்டுக்குள்ளே கொண்டுபோய் விட்டு விடுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது தனியார் துறைக்கும் நம்முடைய சர்க்கார் துறைக்கும் ஒரு சில வேறுபாடுகள் இருப்பதைக் காண முடியும். தனியார் துறையில் ஒரு பஸ் பழுது ஆகிவிட்டால் இரவோடு இரவாக ரிபேர் செய்து மறுநாள் ரோட்டிலே விட்டால் தான் அவர்களுக்கு கட்டுப்படியாகும். அவர்களுக்கு அதிலே கவலை இருப்பதால் துரிதமாக வேலை நடக்கிறது. நமது சர்க்கார் துறையிலே எவ்வளவோ முயற்சிகள் செய்தும் கூட இது போன்ற குறைகள் நிறைய இருக்கின்றன.

இப்போது தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு அட்டெண்டன்ஸ் போனஸ் என்று கொடுக்கிறார்கள். அது போன்று யார் அனுவசியமாக டிரிப்புகளைக் குறைக்காமல் பஸ்களை ஓட்டுகிறார்களோ அந்த டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் பரிசுகள் கொடுத்தால், அவர்கள் இன்னும் சற்று கண்காணிப்புடன் இருந்து தாங்கள் ஓட்டும் பஸ்களில் சிறு சிறு ரிப்பேர்கள் ஏற்பட்டாலும் அதை உடனடியாகச் சீர் செய்து செம்மைப்படுத்தி ஓட்டுவார்கள்.

தற்போது ஜனத்தொகைப் பெருக்கத்தினால் ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடியின் காரணமாக இருக்கின்ற சங்கடங்களை ஓரளவு சமாளிக்க வேண்டும். இவ்வளவு பஸ்கள் போட்டும்கூட சென்னையில் மணிக்கணக்கில் பஸ் ஸ்டாண்டில் காத்துக்கொண்டு இருககவேண்டியிருக்கிறது. ஆகவே, இன்னும் துரிதப்படுத்த, நிர்வாகத்தைச் செம்மைப் படுத்த வேண்டுமானால் பஸ்களில் ரிப்பேர் ஏற்பட்டால் அதிக நாளைக்கு ஒர்க்ஷாப்பில் தங்க வைக்காமல் வெகு சீக்கிரத்தில் அவைகளைச் சரிப்படுத்தி அவைகளை வெளியே கொண்டு வரவேண்டும். அதுபோன்று பஸ்களுக்கு பிரேக் சர்ட்டிபிகேட் கொடுப்பதையும் காலாகாலத்தில் செய்யவேண்டியது மிக மிக அவசியம். இப்போது அதற்கு ஓரளவிற்குத் தக்க முயற்சியை எடுத்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. பிரேக் சர்ட்டிபிகேட்டுக்காக அதிக காலத்தை எடுத்துக் கொள்ளாமல் எவ்வளவு துரிதமாகச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மக்களின் பாராட்டை அரசாங்கம் பெற முடியும். 1960–61லிருந்து பேசஞ்சர், அமெனிட்டீஸ் பண்ட் டெவலெப்மெண்ட் பண்ட் ஆகியவற்றை ஏற்படுத்தி நல்ல முறையில் பாடுபட்டு வருகிறது, அதற்காக உண்மையிலேயே இந்த இலாகாவைப் பாராட்ட வேண்டும். அந்த முயற்சியின் விளைவாக மாம்பலத்தில் அழகான ஒரு பஸ் ஸ்டாண்டை இன்றைய தினம் பார்க்கிறோம். அதற்காக உண்மையிலேயே நான் பொறாமைப் படுகிறேன். தென் சென்னையில் வைத்தார்களே, வட சென்னையில் வைக்கவில்லையே என்று பொறாமைப் பட்டேன். அந்தக் குறையை இந்த இலாகா தீர்த்துவிடுமென்று நம்புகிறேன். திருவொற்றியூரில் அல்லது தங்கசாலையில் அதுபோன்று ஒரு பஸ் ஸ்டாண்டை அமைக்கவேண்டும். சென்னை நகரைப் பொறுத்தவரையில் தெற்கு வாழ்கிறது வடக்கு தேய்கிறது என்று நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அடுத்து

பஸ் ஸ்டாண்ட் மந்தவெளியில் வைக்கப்போவதாகக் கூடத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளெல்லாவற்றையும்விட வட சென்னைப்பகுதி ஜன நெருக்கமான பகுதி. ஆகவே துரிதமான முறையிலே எங்கள் பகுதியிலே ஒரு பஸ் ஸ்டாண்டை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கண்டக்டர்களுக்கும், டிரைவர்களுக்கும் பிரமோஷனே இடையாது. ஒருதரம் டிரைவராக அல்லது கண்டக்டராகப் போய் சேர்ந்து விட்டால் கடைசி வரையில் அதே நிலைமையில்தான் இருக்க வேண்டும், ஆகவே அவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில் முதல் கிரேடு, இரண்டாவது கிரேடு, மூன்றாவது கிரேடு என்று வைத்து, ஐந்து வருஷம் சர்வீஸ் போட்டால் இரண்டாவது கிரேடு 10 வருஷம் சர்வீஸ் போட்டால் முதல் கிரேடு என்ற முறையில் அவர்களுக்குப் பிரமோஷன் கொடுத்து அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான் அவர்களுக்கும் வேலையிலே சற்று அக்கறை காட்டவேண்டுமென்று எண்ணம் பிறக்கும். இப்போது கண்டக்டர்கள் பெரும்பாலும் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் கிளெரிகல் ஸ்டாப்ஃ ஆக வருவதற்கு லாயக்கானவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் உத்தியோக உயர்வுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இப்போது ஏதோ பரிட்சை வைத்துத் தேர்ந்து எடுக்கிறார்கள், அவர்களுக்குப் பரீட்சை தேவையில்லை. எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் பயிற்சிக்குப் பிறகு அவர்களுக்கு உத்தியோக உயர்வுக்காக சில பர்சண்டை ஒதுக்கிவைத்தால் தான் வேலை செய்வதில் அவர்களுக்கு ஊக்கம் இருக்கும். அதுபோன்று டெக்னிகல் ஸ்டாப்ஃகளிலும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் க்ளீனர்களாகக் கூட வந்து சேர்கிறார்கள். வேலையில்லாத திண்டாட்டத்தின் காரணமாக எந்த வேலையையும் செய்ய சம்மதித்து வந்து சேருகிறார்கள். அவர்கள் மேலே படித்து முன்னுக்குவப வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் க்ளீனராக இருப்பவர்கள் ஆட்டோமோபைல் என்ஜினீயரிங் படிப்பதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது மிகவும் குறைவாக இருக்கிறது. அதை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக க்ளீனராக இருக்கக் கூடியவர்கள் போர்மென் (Foreman)· ஆக வரக் கூடிய வாய்ப்புக் கொடுத்தால் அவர்களுக்கு வேலையில் சற்று ஊக்கம் பிறக்கும். அந்த வசதிகளை நாமும் செய்து மகிழ்ச்சி அடையலாம். இதற்கெல்லாம் வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு அம்பத்தூர், ஆவடி, பூழலேரி போன்ற இடங்கள், வடக்கே திருவொற்றியூர், எண்ணூர் போன்ற இடங்கள் எல்லாவற்றிலும், நகரத்தைச் சுற்றிப் பெரிய பெரிய தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த ரூட்டுகளில் பஸ்கள் குறைவாக இருக்கின்றன. ஆகவே, ஆவடி, அம்பத்தூர் பக்கம், இந்தப் புறத்தில் திருவொற்றியூர், எண்ணூர் போன்ற இடங்களுக்கு அதிக பஸ்களை விட்டு, அதிகமாகத் தொழிலாளர்கள் சென்று இறங்க ஸீஸன் டிக்கட் வசதி கொடுத்து உதவி செய்தால் உண்மையிலேயே தொழிலாளர்களுக்குப் பயன் உள்ளதாக இந்த இலாகா இருக்கிறது என்று வாழ்த்துவார்கள்.

இங்கே வேலை செய்கிற பல தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி குறைவாக இருக்கிறது. இதற்காகப் பணத்தை ஒதுக்கிவைத்தாலும் கூட, அதை இன்னும் அதிகப்படுத்தி, அவர்களை உற்சாகப்படுத்தும் முறையில் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது அவசியம். இப்போதே அவர்களில் சிலர் புறம்போக்கு இடங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுத்து அங்கேயே இருக்க வசதி செய்து கொடுத்தால், அப்படிச் செய்வதானது அரசாங்கத்தின் பளுவைக் குறைக்கும். அவர்களுக்கு நல்ல முறையில் வீட்டு வசதி செய்து கொடுப்பதில் அரசாங்கம் அக்கறை எடுக்கவேண்டும். அதற்கென்று ஒரு லேபர் ஹவுஸிங்

சீட்டுகளைக் குறைத்தாவது இடைவெளியை அதிகப்படுத்தினால் நீண்ட
தூரப் பிரயாணத்தில் வசதியாக இருக்கும். இதைக் கட்டாயமாக இந்த
இலாகா கவனிக்கும் என்று நினைக்கிறேன்.

அதே போன்று இந்த இலாகா பல நன்மைகள் செய்து இருப்பதைப்
பாராட்டுகிறேன். குறிப்பாக, நைட்டில் வேலை செய்யும் ஸ்டாஃபுக்கு இலவச
மாக டீ கொடுக்கப்படுகிறது. தொழிலாளர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து
செய்துகொண்டிருக்கிறோம். நோயாளிகளாக இருக்கிற சிலரை இரவு
வேளைகளில் போட்டு வேலை செய்யச் சொல்வதால் அவர்கள் கஷ்டப்படு
கிறார்கள். டாக்டர் சர்டிஃபிகேட் வாங்கி வந்து, உண்மையிலேயே உடல்
நிலை சரியில்லை என்றால் அவர்கள் பகலில் வேலை செய்ய வசதி செய்து
தரவேண்டியது அவசியம். பல பேர்களுக்கு இதன் மூலமாகத் தொல்லைகள்
ஏற்படுகின்றன. இந்த முறையில் தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும்
செய்துகொண்டுபோனால், அவர்களின் திறமையைப் பொறுத்துதான் எதிர்
காலத்தில் சமதர்மக் கொள்கை தொக்கி நிற்கிறது. இவ்வளவு திறமையாக
நடத்துவதைப் பாராட்டுகிறேன். இன்னும் திறமையாக நடத்த அவர்
களுக்கு வசதிகளை அளிக்கவேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை
முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின்
மீது கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில
கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் நல்ல முறையிலே வளர்ந்திருக்
கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். உள்ள
படியே நானும் அதை வரவேற்கிறேன். பஸ் எண்ணிக்கையிலே நாம்
வளர்ந்திருக்கிறோம். மற்ற எல்லா வகையிலும் நாம் வளர்ந்திருக்கி
றோம். ஆனால், லாபத்தில் நாம் மிக மிகக் குறைந்திருக்கிறோம் என்ப
தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1959–60–ம் ஆண்டிலே ஸ்டேட்
ட்ரான்ஸ்போர்ட்டிலே பிரயாணம் செய்த பிரயாணிகளின் எண்ணிக்கை
1,566 லட்சம். அது ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டே போய் 1961–
62–லே 2,066 லட்சமாக உயர்ந்திருக்கிறது—பிரயாணிகள் எண்ணிக்கை
மட்டும். அதைப்போல 1959–60–ம் ஆண்டிலே ஓடிய பஸ்கள் 561;
இன்றைய தினம் 1962–63–ல் ஓடுகிற பஸ்களின் எண்ணிக்கை 825–ஆக
உயர்ந்திருக்கிறது. வருமானத்தை எடுத்துக்கொண்டாலும் 1959–60–லே
266 லட்சம் ரூபாய் மொத்த வருமானம் வந்திருக்கிறது. 1960–61–ல்
அது 316 லட்சமாக உயர்ந்திருக்கிறது. 1961–62–ல் அது 392
லட்சமாக உயர்ந்திருக்கிறது. இந்த 1962–63–ல் 462 லட்சமாக உயர்ந்
திருக்கிறது வருமானம் மட்டும். ஆனால் லாபத்தை எடுக்கும்போது 1959–
60–ல் 27 லட்சமாக இருந்தது, 1960–61–ல் 15 லட்சமாகக் குறைந்து,
1961–62–ல் 18 லட்சமாக இருந்து 1962–63–ல் 11 லட்சமாக ஆகி
யிருக்கிறது. இதற்குக் காரணம் அநேக வரிகள் கட்டியது என்று அமைச்
சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் நாம் வரி கட்டு
கிறோம். ஆனால் லாபம் குறைந்ததற்கு என்ன காரணம் என்று கண்டு
பிடிப்பதில் சற்று அக்கறை காட்டவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்
படுகிறேன்.

1962–63–ல் லாப சதவீதம் வருமானத்தில் 2½ சதவீதமாகக்
குறைந்திருப்பது ஏன்? அதற்கான காரணம் என்ன? நிர்வாகத்
திறமை இல்லாதது காரணமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அதை
எண்ணிப் பார்க்கும்போது ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன்.
1960–61–ல் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் ஏற்பட்ட விபத்துக்கள் 762.
1961–62–ல் ஏற்பட்ட விபத்துக்கள் 896. இப்படி ஆண்டுக்காண்டு விபத்
துக்கள் உயர்ந்திருக்கக் காரணம் என்ன? பஸ்களின் எண்ணிக்கை
உயர்ந்திருக்கிற காரணத்தினால் விபத்துக்களின் எண்ணிக்கை
உயர்ந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லலாம்.

அது அல்ல காரணம். 1962–லே நம்மிடம் இருந்த பஸ்கள் 770. அவைகளை ஓட்டக்கூடிய டிரைவர்கள் எத்தனை பேர்கள் தேவை ? அதற்கு இரண்டு ஷிப்டுக்கும் 1,540 டிரைவர்கள் வேண்டும். அதோடு 1,540 கண்டக்டர்கள் தேவை. அவர்களுக்கு வாரம் ஒரு நாள் ரெஸ்ட் கொடுக்க வேண்டுமானால் 256 டிரைவர்களும், 256 கண்டக்டர்களும் கூடுதலாக இருந்தாக வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, செக்கிங் இன்ஸ்பெக்டர்களையும் சேர்த்துக் கணக்குப் போட்டால் 3,800 பேர்கள் இருந்தால்தான் இந்தக் கம்பெனியை ஒழுங்காக, நிறுத்தாமல் ஓட்ட முடியும்.

12-30 p.m. ஆனால் இன்றையதினம், இருக்க வேண்டிய எண்ணிக்கை 3,209 என்றால், நம்மிடம் உள்ளவர்கள் 591 பேர்கள்தான். ஆகவே, இந்த டிரைவர்களும், கண்டக்டர்களும் பல பஸ்களை ஓட்ட முடியாமல் இருக்கிறது. அப்படி அவர்கள் எண்ணிக்கை குறையக் காரணம் என்ன ? கண்டக்டர்கள் டிரைவர்கள் அரசாங்கப் பணிக்கு வரப் பயப்படுகிறார்கள். அரசாங்க உத்தியோகம் என்றால், விருப்பத்தோடு வருவதற்குப் பதிலாக அவர்கள் தனியார் துறைக்கு அதிகமாகப் போகிறார்களே தவிர, சர்க்கார் துறைக்கு வருவதில்லை. அதற்குக் காரணம் இங்கே இருக்கும் வேலைப் பளுதான். வேலைப் பளு இங்கே அதிகமாக இருக்கிறது. ஒரு திருச்சி தனியார் ட்ரான்ஸ்போர்டைப் பார்த்தால், அங்கே டிரைவர், கண்டக்டர்கள் 15 தினங்கள் வேலை செய்தார்கள் என்றால், 15 தினங்கள் ரெஸ்ட். இங்கே நாம் வாரம் ஒரு நாள் ரெஸ்ட் என்று சொல்லுகிறோம். ஆனால் நடைமுறையில், ரெஸ்டின் போதும் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வேலை வாங்குகிறோம். 8 மணி நேரம் வேலை என்று பெயர். ஆனால், அவர்கள் 9 மணிக்கு மேல் வேலை செய்கிறார்கள். நிகர லாபத்தில் போனஸ் என்று இல்லாததால் அரசாங்க பஸ்களுக்கு டிரைவர்களும் கண்டக்டர்களும் வரப் பயப்படுகிறார்கள். வேலைப் பளுவும் அதிகமாக இருக்கிறது. வேலைப் பளு அதிகம். அதனால் ஆட்கள் கிடைப்பதில்லை ; ஆட்கள் இல்லாததால், பஸ்கள் ஓடவில்லை. பஸ்கள் ஓடாததால், வருமானம் குறைகிறது. ஆகவேதான் லாபமும் குறைகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, 9 மணி நேர வேலை என்றால், ரிலீப் கொடுப்பதில்லை. டிபனுக்குக் கூட ஒரு அரை மணி கிடைப்பதில்லை. ஒரு ஸ்டாண்டிலிருந்து இன்னொரு ஸ்டாண்டுக்குப்போய் 10 நிமிடங்கள் வண்டி நிற்கிறது என்றால், அது வேலை செய்யப்பட்ட நேரம் என்று கருதப்படுவதில்லை. அந்த இடைவெளி ட்யூடி ஆகக் கருதப்படுவதில்லை. தனியார் துறையில் அவன் ட்ரிப் ஷீட்டை எடுத்ததிலிருந்து திரும்பும்வரை வேலை செய்ததாகக் கொள்கிறார்கள். இதெல்லாம் அமைச்சருக்குத் தெரியாததல்ல. அவர் தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றியவர்கள். இன்றைக்கு மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்ட் இருக்கிறது. அதில் ஐந்து மணி நேரம் வேலை என்றால், அரை மணி நேரம் ரெஸ்ட் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த சட்டம் இந்த இலாகாவிலே ஏன் அமல் செய்யவில்லை. எங்கே ரெஸ்ட் கொடுக்கப்படுகிறது. அதைப் பற்றித் தொழிலாளர்கள் கேட்டால், அவர்கள் வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கப்பட்டு பழி வாங்கப்படுகிறார்கள். இவ்வித இன்னல்களைத் துடைக்க அமைச்சர் முன்வர வேண்டும்.

அடுத்து, கூடுதலாக சலுகைகள் கொடுக்கிறோம் என்கிறார்கள். பாட்டாவை எடுத்துக்கொண்டால், 4 மணி நேரம் தொடர்ந்து வேலை செய்தால், ஒரு ரூபா பத்து நயாபைசா கிடைக்கும். இதன் நடுவே, மூன்றே முக்கால் மணிக்குப் பிறகு ப்ரேக் டவுன் ஆகிவிட்டால், அவர்களுக்கு அதுவும் கிடைக்காது. ஆறு மணி நேரம் என்றால், ஒரு ரூபாய் இருபது பைசா கிடைக்கும். அவன் எட்டு மணி நேரம் வேலை செய்தால், ஒரு ரூபாய் இருபத்தைந்து நயாபைசா கிடைக்கும். நடுவே ப்ரேக் டவுன் ஏற்பட்டால், இதற்குக் கண்டக்டரா பொறுப்பு ? ட்ரைவரா பொறுப்பு ? மெயின்டினன்ஸ் சரியாக இல்லாததால் வண்டி நின்று போகிறது. அவன் வீட்டிலிருந்து வேலை செய்ய 7, 8 மைல்கள் வந்து விட்டான். அவன் எப்படித் திரும்பி வீட்டிற்குப் போகமுடியும் ? அவன் எங்கே சாப்பிடுவான் ? புாட்டா

அவனுக்கு இல்லை என்றால், அவன் என்ன செய்யமுடியும் ? அ ன் ரோஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டான் என்றால், அந்த நாளை ட்யூடியாகத்தான் கருதவேண்டும். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் தனியார் துறையில் சண்டைபோட்டு எவ்வளவு அவார்டுகள் வாங்கி இருக்கிறோம். இதெல்லாம் அமைச்சருக்குத் தெரியும். தொழிலாளிகளுக்கு நல்ல முறையில் இவற்றையெல்லாம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும். இந்தக் குறைகளைப் போக்க வேண்டும்.

அடுத்து, எக்ஸ்ப்ரஸ் பஸ் பற்றி பேசினார்கள். 125 மைல் ஓடினால் பாட்டா ஒரு ரூபாய் இருபது பைசாவும், 125 முதல் 175 மைல் வரை ஓடினால் ஒரு ரூபாய் 75 பைசா. அதற்கு மேல் ஓடினால், ரூபாய் 2-25 பைசா கிடைக்கும். ஒரு வண்டி சென்னையிலிருந்து திருச்சிக்குப் போனால், அவர்களுக்கு ரூபாய் 2-25 பைசா கிடைக்கிறது. கிளம்பியவர்கள் திரும்பி வர ஆறு நாட்கள் ஆகின்றன. அவர்கள் திருச்சியிலிருந்து கோவைக்கும், ராமநாதபுரம் முதலிய இடங்களுக்குப் போக வேண்டும். அப்படி ஆறு நாட்கள் கழித்துத்தான் அவர்கள் திரும்பி வந்து மனைவி மக்களைப் பார்க்க வேண்டும். இந்த ரூபாய் 2-25-பைசாவிலே தன்னுடைய சாப்பாட்டை முடித்துக் கொள்ள முடியுமா ? 10 மணி நேரம் உட்கார்ந்து வண்டியோட்டும், மனிதனின் உடல் சூட்டைப்பற்றி என்ன சொல்வது ? அவன் உடம்பைத் தொட்டுப் பார்த்தால், எவ்வளவு சூடாக இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அவன் உடம்பில் கையை வைத்துப் பார்த்தால், மின்சாரம் தாக்கியது போல இருக்கும். ட்ரைவராக இருப்பவன் தினம் கால் படி, அரைப் படி பால் சாப்பிட வேண்டும் ; அடிக்கடி எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டும் ; சத்துள்ள பொருள்களைச் சாப்பிட வேண்டும். அப்படி இருக்க அவனுக்கு இந்த ரூபாய் 2-25 நயா பைசாவை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் ? இதை எப்படிப் பெருமையாகச் சொல்ல முடியும் ? அவன் சற்றுக் கண் அயர்ந்தால், வண்டியில் உள்ள 34 பேர் உயிருக்கும் ஆபத்துதான் ; லட்ச ரூபாய் பெறுமானமுள்ள வண்டிக்கும் ஆபத்து. மற்ற உத்தியோகம் போல அல்ல இந்த டிரைவர் வேலை. ஒரு கிளார்க் என்றால், அவன் மூளையையும், கையையும் உபயோகித்தால் போதும். ஆனால், ஒரு ட்ரைவருக்குக் கண் பார்க்க வேண்டும், முன்னால் பின்னால் பக்கத்தில் என்ன வருகிறது என்று ; காது கேட்க வேண்டும், பின்னால் வேறு வண்டிகள் வருகிறதைக் கவனிக்க ; திடீரென்று திருப்பங்கள் வந்தால் திருப்ப வேண்டும். ஓவர்டேக் செய்யும் போதும் இரண்டு கைகளும், கால்களும் துரிதமாக வேலை செய்ய வேண்டும். ஆக உடம்பிலே ஒவ்வொரு அங்கமும் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்படி இருப்பவர்களுக்கு இந்த பேட்டா போதுமா ? இதே தொழில் அமைச்சர் அமைச்சராக இல்லாமல் இருந்தால், இது சம்பந்தமாக ஒரு போராட்டத்தை அவரே நடத்தியிருப்பார், நாங்கள் அவர் பின்னால் அணிவகுத்திருப்போம். இன்றைக்கு அவர்கள் அமைச்சராக இருப்பதால், ஒன்றும் சொல்ல முடியாமல் இருக்கிறார் என்று கருதுகிறேன். அவர்கள் இப்பவும் இதிலே கவனம் செலுத்தினால், நலமாக இருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கண்டக்டர் நடத்தையைப்பற்றிக் குறை சொன்னார்கள். வண்டியில் போகிறவர்கள் ஐந்து ரூபாய் நோட்டு, ஒரு ரூபாய் நோட்டு என்று எல்லோரும் கொடுத்தால், அதற்கெல்லாம் சில்லரை கொடு என்றால், அவன் என்ன செய்வான் ? அவனுக்குக் கொடுத்தனுப்புவது ஐந்து ரூபாய் சில்லரை தான். வண்டியிலுள்ள 70, 80 பேர்களுக்கு டிக்கட்டு கொடுத்தாக வேண்டும். இவர்களுக்கெல்லாம் சில்லரை கொடுத்துக்கொண்டே இருந்தால் எப்படி அவன் எல்லோருக்கும் கொடுத்து முடிக்க முடியும் ? முன்பெல்லாம் 24 பேர்கள் கொண்ட ஒரு பஸ்ஸுக்கு ஒரு கண்டக்டர் இருந்தார். இன்றைக்கு 70 பேர்கள் ஏறும் ஒரு வண்டிக்கு ஒரு கண்டக்டர் தான். ஒவ்வொருவருக்கும் டிக்கட்டு கொடுக்க வேண்டும் ? சில்லரையும் கொடுக்க வேண்டுமென்றால், அவன் என்ன செய்வான் ? பொறுங்கள் என்றால், பொதுமக்களுக்குக் கோபம் வருகிறது. அவ்வளவு பேர்களுக்கும் அவன் பொறுமையாக பதில் சொல்லவும் வேண்டியிருக்கிறது.

நான் சமீபத்தில் திருச்சியிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். மழை பெய்து வண்டி ஒழுகிக் கொண்டு இருந்தது. அதில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒரு பிரயாணி, படித்தவர், பட்டதாரி சொல்கிறார், "இது என்ன லக்ஷரி பஸ்ஸா? என்ன லக்ஷரி இருக்கிறது? எவ்வளவு கேவலமாக இருக்கிறது?" என்று கண்டக்டரிடம் கேட்டார். அதற்குக் கண்டக்டர் என்ன செய்வான்? "என்னை ஏன் கேட்கிறீர்கள், அரசாங்கத்தைக் கேள்" என்றார். இதிலே என்ன தப்பு இருக்கிறது.? வேறு யாரைக் கேட்கச் சொல்ல முடியும்? இதில் ஏதோ தவறு இருப்பதாக எண்ணிக் கொண்டு கண்டக்டர்மீது புகார் செய்தால் என்ன செய்ய முடியும்.? கண்டக்டரா பொறுப்பு? இதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிச் சொல்பவர்களை, ஒரு அரை மணி நேரம் இரண்டு கையையும் விட்டு விட்டு பஸ்ஸில் நிற்கச் சொல்லுங்கள். பாலன்ஸில் நிற்கட்டும் பார்க்கலாம். இந்த கண்டக்டர் ஓடும் வண்டியில் எல்லோருக்கும் டிக்கட்டு கொடுத்தாக வேண்டியிருக்கிறது. இவ்வளவு தொந்தரவில் வேலை செய்யும் ஒருவருக்கே இன்னும் கொஞ்சம் அதிகமாக சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். அதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

போனஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள். தனியார் துறையில் ஐந்து மாத போனஸுக்கு இந்த ஆண்டு ஒப்பந்தம் செய்து இருக்கிறோம். சென்ற ஆண்டு ஆறு மாத போனஸுக்கு ஒப்பந்தம் செய்திருந்தோம். இங்கே என்ன போனஸ்? அட்டன்டன்ஸ் போனஸ்தான். அதுவும் ஒழுங்காக, மாதம் இரண்டு நாளுக்கு மேல் லீவு எடுக்காமல் சரியாக வந்திருந்தால் தான். 12 மாதம் அப்படி வந்திருந்தால், அட்டன்டன்ஸ் போனஸ் ரூபாய் 60 கிடைக்கிறது. இம்மாதிரி சரியாக எத்தனை பேர்கள் வாங்குகிறார்கள்? அவ்வளவு பேருக்குமா இதெல்லாம் கொடுக்கப்படுகிறது? இல்லையே. இரண்டு நாளுக்கு மேல் லீவு எடுத்தால் போச்சு. அதுவே மெடிகல் லீவாக இருந்தால், அதையாவது ட்யூடியாகக் கருத வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொரு போனஸ், இன்ஸென்டிவ் போனஸ். ஸிடி பஸ்ஸில் எட்டு மணி ஓட்டினால், 25 பைசா; மொபசல் பஸ்ஸாக இருந்தால் அதே 8 மணிக்கு 15 பைசா கொடுக்கப்படுகிறது. இதில் கூட ஏன் வேற்றுமை இருக்கவேண்டும்? இதை ஒருவன் ஒழுங்காகச் செய்வதாக வைத்துக் கொண்டால், ஒரு வருஷத்திற்கு அவனுக்குக் கிடைப்பது ரூபாய் 75 ஸிடியிலும், ரூபாய் 45 மொபஸலிலும். அமைச்சருக்கு இதெல்லாம் தெரியாதா? ஆகவே, அவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எதற்காக தேசீயமயமாக்கி இருக்கிறோம்? தனியார் என்றால் அவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது, அந்த லாபத்தை அரசாங்கம் அடைந்து தொழிலாளிகளுக்கும், மக்களுக்கும் அதிகப்படியான சௌகரியங்களைச் செய்துகொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான். இன்றைய தினம் தேசீய மயமாக்கப்பட்ட பஸ் டிரான்ஸ்போர்ட் இலாகாவிலிருந்து வேலை செய்ய விரும்பாமல் ஓடி விடுகிறார்கள் என்று சொன்னால், இதில் ஏதோ குறை இருக்கிறது. அதைக் களைந்தெறிய வேண்டும் என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, லாபத்தில் போனஸ் கொடுக்கக்கூடாதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் இதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் இன்னும் ஊக்கம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டிரஸைப் பற்றிச் சொன்னார்கள். வெளியிலே 2 ஸெட் ட்ரஸ் கொடுக்கிறார்கள், இங்கு 3 ஸெட் ட்ரஸ் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், வாட்ச்மென்களுக்கு 3 செட் டிரஸ் கொடுப்பது கிடையாது. அவர்களுக்கு 2 செட் டிரஸ்தான் கொடுக்கப்படுகிறது. டிரைவர், கண்டக்டர்களுக்குத் தான் 3 செட் டிரஸ் கொடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்

பிட்டதுபோல, தையற் கூலிக்காக ரூபாய் 7½ கொடுத்தால், அதை வைத்துக் கொண்டு எப்படி 3 செட் டிரஸ் தைத்துக் கொள்ள முடியும்? தனியார் துறையிலே நாங்கள் ரூபாய் 6 தையல் கூலி வாங்குகிறோம். துணி வாங்கிக் கொண்டு, ஒரு ஃபுல் பேண்டு, ஒரு புஷ் கோட் எங்கே ரூபாய் 2½-ல் தைக்க முடியும்? யுத்த நெருக்கடி காலத்தில் விலை வாசி ஏறியிருக்கிற காலத்தில், எங்கே ரூபாய் 2½-க்குத் தைக்க முடியும்? ஆகவே, தயவுசெய்து தையற் கூலியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காலணி, அதாவது பாதரட்சை 2 வருஷத்திற்கு ஒரு ஜதை கொடுக்கிறார்கள். தனியார் துறையில் ஆண்டுக்கு ஒரு ஜதை கொடுக்கிறார்கள். வெய்யிலில் கடுமையாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, கால் வழியாக உஷ்ணம் ஏறாமல் இருப்பதற்குத் தனியார் துறையில் கொடுப்பது போல், அரசாங்கமும் ஆண்டுக்கு ஒரு ஜதை காலணி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

லீவைப் பொறுத்த வரையில், இந்த இலாகாவிலுள்ள ஸ்டாபுக்கு எவ்வளவு லீவ் கிடைக்கிறதோ, அதைப்போல தொழிலாளர்களுக்கும் கிடைக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் அவர்களுக்கு லீவ் வசதி செய்து கொடுத்தால்தான், அவர்கள் நல்ல நிலைமையில் பஸ்களை ஓட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு என்று தொழிலாளர்களிடமிருந்து பணத்தை வாங்கி மோசடி செய்யப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் துரிதமாக அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க பஸ் போக்கு வரத்து இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு பாமிலி பாஸ் கிடையாது. ரயில்வேயில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு அவர்களுடைய மனைவி, மக்களுடன் நாடு பூராவும் சுற்றி வருவதற்கு மத்திய சர்க்கார் பாஸ் கொடுக்கிறார்கள். அதுபோல இந்தத் தொழிலாளர்களுக்கும், உடனடியாக பாமிலி பாஸ் கொடுப்பது பற்றிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல சட்ட மன்ற உறுப்பினர்கள் விரும்பினால் அவர்களுக்கும் ஒரு பாஸ் கொர்டுக்க வேண்டும். அவர்களுக்கும் அந்தமாதிரி பாஸ் கொடுத்தால்தான் தமிழ் நாடு பூராவும் போகிறபொழுது, அதிலுள்ள குறைகளையும், பொது மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதையும் அறிந்து இங்கு சட்டமன்றத்தில் வந்து சொல்வதற்கு வாய்ப்புகள் இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

கண்டக்டர்கள் வேலை செய்கிறபொழுது பொதுமக்கள் ரூபாய் 5, 10 கொடுக்கிறார்கள். அவர்கள் வேலை செய்யும்பொழுது ரூபாய் 2, 1, 8 அணு, 4 அணு ஈயப்பணம் அல்லது செல்லாத நோட்டு வந்துவிடுகிறது. மூன்று தடவை ஷார்ட்டேஜ் ஏற்பட்ட பிறகு, நான்காவது முறையாக ஷார்டேஜ் ஏற்பட்டால், அதற்காக அந்தத் தொகையை மாதக் கடைசியில் அவர்களுடைய சம்பளத்தில் பிடிக்காமல், அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்படுகிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு அந்த வேலையில் நல்ல ஊக்கம் ஏற்படுமா என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சாதாரணமாக ஷார்ட்டேஜ் எதனால் ஏற்படுகிறது என்றால், ஈயக்காசு வந்து விடுகிறது, செல்லாத நோட்டைக் கொடுத்துவிடுகிறார்கள், அல்லது சில நேரத்தில் ஏமார்ந்து பணத்தைத் தொழிலாளி விட்டுவிடுகிறார் என்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, ஷார்ட்டேஜ் ஏற்படும்பொழுது அதன் காரணமாக அவர்கள் வேலையை விட்டு நீக்கப்பட வேண்டும் என்ற நிலைமை இல்லாமல், அந்தத் தொகையை அவர்கள் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம் என்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். லாபம் கிடைக்காததற்கு என்ன காரணம் என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, பஸ் பாடிகளைக் கட்டுவதில், இவ்வளவு பெரிய வொர்க் ஷாப்பை நாம் வைத்துக் கொண்டு, தனியார் துறையிலே இருக்கிற ஒரு கம்பெனியில் எதற்காக பஸ் பாடிகளைக் கட்டவேண்டும்? நம்மிடத்தில் தொழிலாளிகள் இல்லையா? பாடி கட்டுகிற காரணத்தினால் எவ்வளவு பணம் விரயம் ஆகிறது? பாடிகள் கட்டப்படுவதற்கு டெண்டர்கள் கோரப்படுவதில்லை. இதில் என்ன கமிஷன் வேலை நடக்கிறது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் பாடி கட்டும் வேலை தனியார் துறைக்குச் செல்லக்கூடாது. தனிப்பட்ட கம்பெனிக்கு அந்த வேலையைக் கொடுக்கக்கூடாது. நாமே நம்மிடத்திலுள்ள ஆட்களை வைத்துப் பாடிகளைக் கட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

டிரைவர்கள் வண்டிகளை ஓட்டும்பொழுது குறுக்கே ஒரு சங்கிலியைப் போட்டு, அவர்கள் வேகமாக ஓட்டுகிறார்கள் என்று போலீஸார் கேஸ் போட்டு அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. பஸ்களில் ஸ்பீடா மீடர்கள் இருந்தால் இந்தத் தொந்திரவு இருக்காது. வண்டிகளில் இருந்த ஸ்பீடா மீடர்கள் என்னவாயின? எங்கே போயிற்று அவைகள்? ஏன் வண்டிகளில் அவைகள் வைக்கப்படவில்லை? இந்த விஷயங்களில் எல்லாம் நாம் துரிதமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

அதைப் போலத்தான் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதும். வெளியிலே இருந்து லட்சக் கணக்கான ரூபாய்க்கு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிறோம். அந்த ஸ்பேர் பார்ட்ஸ் உள்ளே வந்தனவா என்று பார்க்க வேண்டும். உள்ளே கணக்கில் வரலாம். ஆனால் ஸ்பேர் பார்ட்ஸ் உள்ளே இருக்கின்றனவா என்ற விஷயத்தில் ரொம்பவும் கவனம் செலுத்த வேண்டும். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்கு ஒரு கமிட்டி இருக்க வேண்டும். எங்கே வாங்குகிறோம், கணக்கு வந்திருக்கிறதா, சாமான் உள்ளே வந்திருக்கிறதா என்பதையெல்லாம் சரிவரக் கண்காணிக்க வேண்டும். குறிப்பாகச் சொல்லுகிறேன். ஒரு புதிய சாமான்களை வண்டியில் போட்டு வெளியே அனுப்பினால், 4, 5 நாட்கள் கழித்து திரும்பவும் வண்டி உள்ளே வந்த பிறகு, அந்த வண்டியில் ஸ்பேர் பார்ட்ஸ் இருக்கிறதா என்பதைக் கண் காணிக்கக் கூடிய முறை இருக்கிறதா என்று பார்த்தால், உண்மையிலேயே இல்லை என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் மிகவும் கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மகாபலிபுரத்தையும், சென்னை நகரத்தையும் காட்டுவதற்கு ஒரு டூரிஸ்ட் பஸ் இருக்கிறது. அந்த பஸ்ஸில் சமீபத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அந்த நேரத்தில் நமது தொழில் அமைச்சர் டெல்லியில் இருந்ததால், நிதி அமைச்சர் அவர்களிடத்தில் நான் சூசகமாகக் குறிப்பிட்டேன். இப்படி ஒரு தவறு ஏற்படுகிறது. அரசாங்கத்திற்குப் பண விரயம் ஏற்படுகிறது. இதிலே கவனம் செலுத்த வேண்டும. தொழில் அமைச்சர் அவர்கள் ஊரில் இல்லை என்ற காரணத்தினால், நிதி அமைச்சர் அவர்களிடம் நான் நேரிடையாகச் சொல்லியிருக்கிறேன். அடுத்து என்ன நடந்தது என்று பார்த்தால் சம்பந்தப்பட்ட தொழிலாளி வேறு இடத்திற்கு மத்திய சர்க்காரில் வேலைக்குப் போய்விட்டார். ஏதோ ஒரு காரணம் காட்டி அந்த தொழிலாளியை வேலையை விட்டு நீக்கியிருக்கிறார்கள். இது பற்றி பொதுக் கமிட்டி ஏற்படுத்தி விசாரணை செய்ய வேண்டும். இல்லையென்றால், இவ்வளவு லாபம் எங்கே போய்விடுகிறது? வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் தொழில் திறமை வாய்ந்தவர்களையும், தொழிலாளர் பிரதிநிதிகளையும், மற்றும் அமைச்சர் அவையிலுள்ள சிலரையும் சேர்த்து ஒரு கமிட்டி அமைத்துப் பார்க்கட்டும். நான் வேண்டுமானால் 4, 5 மாதங்களுக்குச் சம்பளம் வாங்காமல் அங்கே பணியாற்றுகிறேன். அங்கு நடக்கிற அவ்வளவு திருட்டுகளை

யும் நாங்கள் அம்பலம் ஆக்கத் தயாராக இருக்கிறோம். இதிலே அரசாங்கம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அட்வைசரி கமிட்டி ஒன்று அவசியம் இருக்கவேண்டும். அட்வைசரி கமிட்டியில் இங்கு இருப்பவர்களும் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். அதுபோல அபிவிருத்திக் கமிட்டி என்று ஒரு கமிட்டியைச் சர்க்கார் நியமித்து, நம்முடைய பஸ் ட்ரான்ஸ்போர்ட்டை எப்படி விருத்தி செய்ய வேண்டும் என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அதில் திறமை வாய்ந்தவர்கள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட திறமை வாய்ந்தவர்கள் அதில் இருந்தால்தான், உள்ளபடியே பஸ் நிர்வாகத்திற்கு நல்ல பெயர் ஏற்படும். குறிப்பாக, தனியார்க் கம்பெனியைப் பற்றி சொல்ல வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு பெரிய கம்பெனி தமிழ் நாட்டிலே இதைப்போல செக்கிங் இன்ஸ்பெக்டர்களை மட்டும் நியமிப்பதில்லை. ஆனால், அவர்கள் ஸ்பெஷல் ஸ்குவாட் என்று வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு டிரஸ் கிடையாது. சாதாரண உடையிலே பாஸஞ்சர் போல டிக்கட் வாங்கிக் கொண்டு ஏறுவார்கள். அப்படிப் பிரயாணம் செய்யும்பொழுது கண்டக்டர்கள் என்ன தவறு செய்கிறார்கள், பொது மக்களிடம் எப்படி கண்டக்டர்கள் நடந்து கொள்கிறார்கள், கண்டக்டர்களுக்கும், பொது மக்களுக்கும் என்ன தகராறுகள் ஏற்படுகின்றன, ஓவர் லோட் ஏற்றுகிறார்களா, ஸ்பீட் அதிகமாகப் போகிறார்களா என்பதையெல்லாம் அவர்கள் கண்காணிக்கிறார்கள். அதைப்போல நாமும் ஒரு ஸ்பெஷல் ஸ்குவாட் ஏற்படுத்தி தொழிலாளர்களுக்குத் தெரியாமலேயே அவர்களைக் கண்காணிக்க வேண்டும். அப்படிக் கண்காணித்தால், ஒரு நண்பர் இங்கு குறிப்பிட்டதுபோல், 3 மூட்டை கருவாட்டை யாரும் பஸ்ஸில் ஏற்றமாட்டார்கள். யாராவது சாதாரணமாகக் கேள்வி கேட்டால்கூட ஸ்பெஷல் ஸ்குவாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ என்று கண்டக்டர்கள் பயப்படுவார்கள். ஆகவே, நாமும் அம்மாதிரி ஸ்பெஷல் ஸ்குவாட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக பஸ்களைத் தேசீயமயமாக்க வேண்டும் என்பதிலே நாங்கள் தீவிரமாக இருக்கிறோம். இதைச் சிறுகச் சிறுகத்தான் செய்ய முடியும் என்றால், இடைக்கால ஏற்பாடாக 60 மைலுக்கு ஓடுகிற பஸ்களையாவது தேசீயமயமாக்கவேண்டும். அப்படி ஆக்கினால், பல துறைகளிலிருந்து அதன் மூலம் வருவாய் கிடைக்கும். குறிப்பாகச் சொல்லப்போனால் ஒரு லேலண்டு பஸ்ஸை வைத்துக் கொண்டால் ரூபாய் 70,000, 75,000 பாடி கட்டுவது உள்பட செலவாகிறது. அந்த பஸ்ஸை ரூட்டில் விட்டு விட்டால், அந்த பஸ்ஸுக்காக வாங்கின கடனை $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள் அடைத்துவிடலாம். இது தனியார் துறையில் போடப்பட்ட கணக்கு, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு என்னைத் தனியாகக் கணக்குக் கேட்டால் அவர்களிடத்தில் நான் அந்தக் கணக்கை ஆதாரத்தோடு ஒப்புவிக்கத் தயாராக இருக்கிறேன். எனவே, 60 மைலுக்கு மேல் ஓடுகிற பஸ்களை தேசீயமயமாக்க வேண்டும்.

களுக்கும் நல்ல வருவாயையும், நல்ல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல அங்கு இருக்கிற பெரிய அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். படித்தவர்கள் இதற்குத் தேவை இல்லை. நல்ல முறையில் டிரைவ் பண்ணக்கூடியவர்கள், ஸ்பேர் பார்ட்ஸ் பற்றி நல்ல முறையில் தெரிந்தவர்கள், இப்படிப்பட்ட தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் அங்கு இருந்தால் போதும். இதற்காக ஆயிரக்கணக்கான ரூபாயைச் சம்பளமாகக் கொடுக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு வேறு இலாகாவில் வேலை கொடுத்து, அப்படிச் சம்பளத்தில் மிகுந்த தொகையைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால், அவர்கள் திருப்தி அடைந்து, நல்ல கவனத்தோடு, அரசாங்கம் முன்னுக்கு வர வேண்டுமென்ற அக்கறையோடு, வேலை செய்வார்கள் என்பதைக் கூறிக் கொண்டு, எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : சபைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே பங்கு எடுத்துக் கொண்டவர்களுக்கு முதன் முதலில் நான் எனது நன்றியைச் செலுத்திக் கொள்ளுகிறேன்.

இந்த விவாதத்திலே எல்லோருக்கும் ஒரு அக்கறை உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். பஸ் பிரயாணிகள் என்ற முறையிலே, சர்க்கார்த் துறையில் நடக்கிற இந்தத் தொழில் லாபகரமாக நடக்க வேண்டுமென்ற முறையில் அங்கத்தினர்கள் பலவித ஆலோசனைகளைச் சொன்னார்கள். அதற்கெல்லாம் நான் நன்றி செலுத்துகிறேன். குறிப்பாக, தவறுகள் இருக்கின்றன என்று சொன்ன சில விஷயங்களுக்கு மட்டும், அதற்கான பதிலை மாத்திரம் சொல்லிவிட்டு, மேற்கொண்டு எந்த விதமான முன்னேற்றங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்களோ, அவை எல்லாவற்றையும் சர்க்கார் நிச்சயமாகக் கவனித்து, ஆவன செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதன் முதலில் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டது இந்த ஸ்தாபனம் லாபகரமாக நடக்கவில்லை என்பது தான். சர்க்கார் நடத்துகிற இந்த ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் தொழில் லாபகரமாக நடக்கவில்லை என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கிறேன். ஒரு தொழில் லாபகரமாக நடக்கிறதா, இல்லையா என்பதை, அதனுடைய கணக்குகள் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தக் கணக்கைக் கனம் அங்கத்தினர்கள் பரிசீலனை செய்து பார்த்தால், சென்ற ஆண்டு திடீரென்று ரூ. 16 லட்சம் அதிகமாக வரி விதித்தும், சென்ற ஆண்டு அதிகப்படியாக ரூபாய் 2 லட்சம் அளவுக்கு பஞ்சப்படி உயர்த்தியும், அவ்வாறு அதிகச் செலவு ஏற்பட்டிருந்தும் கூட இன்னும் நமக்கு ரூ. 11,82,000 லாபம் கிடைத்திருக்கிறது என்பதே அவர்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டு தவறு என்பதற்குச் சான்று ஆகும். அடுத்து, இது தனியார் நடத்துகிற தொழிலைவிட லாபகரமாக இருக்கிறதா, இல்லையா என்ற பிரச்னை எழுப்பப்பட்டது. தனியார் நடத்துகின்ற தொழிலுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது என்பதற்காகத்தான் 'தனியார் வைத்திருக்கின்ற கணக்குகளுக்கும், நாம் வைத்திருக்கின்ற கணக்குகளுக்கும் பெரிய வித்தியாசங்கள் இருக்கின்றன. அவற்றைத் தெரிந்து கொண்டால் தான் நாம் இதைப் புரிந்து கொள்ள முடியும், என்று சொன்னேன். தனியார் துறையில் வைத்திருக்கின்ற கணக்கு முறைகள் வேறு, சர்க்கார் துறையில் வைத்திருக்கின்ற கணக்கு முறைகள் வேறு. இந்தப் புத்தகத்திலே கொடுத்திருக்கிறபடி ஒரு கோடியே 58 லட்சம் ரூபாய் சர்க்காருக்கு நாம் "நான்-டாக்ஸ்" ரெவின்யூவாகக் கொடுத்திருக்கிறோம். இதே தொழிலை தனியார் நடத்தியிருந்தால், 50 சதவிகிதம் குறைத்துக் கொண்டு, பாக்கி ரூபாய் 80 லட்சமும் தொழில் நடத்துகிறவர்கள் கையில் இருக்கும். இதை அங்கத்தினர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக; தனியார் நடத்துகிற தொழிலிலே 12 சதவிகிதம், 24 சதவிகிதம் வட்டி கொடுத்துப் பணம் வாங்குகிறார்கள், அப்படியிருந்தும் லாபகரமாக நடக்கிறது என்று சொன்னார்கள். அந்த வட்டியிலே பாதியைச் சர்க்கார் கொடுக்கிறது என்பதை இன்கம்

டாக்ஸ் சட்டம் தெரிந்திருந்தால் புரிந்து கொள்ள முடியும். எந்த அளவுக்கு வட்டி என்று கணக்கு எழுதுகிறோமோ, அது ரெவின்யூ எக்ஸ்பெண்டிசர். கம்பெனியாக இருந்தால் அதில் 50 சதவிகிதத்துக்கு வரி கிடையாது. உதாரணமாக ஒரு தனியார் நடத்தும் கம்பெனி ரூபாய் பத்து லட்சம் வட்டி கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தப் பத்து லட்சம் ரூபாயும் ரெவின்யூ எக்ஸ்பெண்டிசர். அதிலே ரூபாய் ஐந்து லட்சத்துக்கு வருமான வரியாக ரிபேட் கிடைத்து விடும், எனவே, தனியார் கணக்கையும், அரசாங்கத்தின் கணக்கையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அரசாங்கத் துறையில் இன்னும் பலவிதமான கணக்கு வித்தியாசங்கள் இருக்கின்றன. நம்மிடம் லாபம் வந்தால் கூட, அந்த லாபத்தை வைத்து நாம் மேற்கொண்டு பஸ்கள் வாங்க முடியாது. அந்த லாபத்தைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட வேண்டும். புதிய பஸ்கள் வாங்குவதற்கு அதைச் சர்க்காருடைய கடனாகப் பாவித்து, அதற்கும் வட்டி கொடுக்க வேண்டும். தனியார் துறையில் ரூபாய் 20 லட்சம் லாபம் கிடைத்தால் அதைக் கொண்டு புது பஸ்கள் வாங்கலாம். சர்க்கார் துறையிலே ரூபாய் இருபது லட்சம் வந்தது என்று சொன்னால், சர்க்காருக்கு "நான்-டாக்ஸ்" ரெவின்யூ கொடுக்க வேண்டும். மேலும் 50 பஸ்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு என்ன முதல் தேவையோ, அதைக் கடனாக வாங்கிக் கொள்ள வேண்டும். இதெல்லாம் கணக்கு முறைகளில் இருக்கக்கூடிய வித்தியாசங்கள். மேலும் சர்க்காரிடமிருந்து இந்த இலாகா கடன் வாங்கினால், $5\frac{1}{2}$ சதவிகிதம் கொடுக்க வேண்டும். இந்த இலாகாவிலிருந்து பணம் போட்டால், அதற்கு $4\frac{1}{2}$ சதவிகிதம் தான் கொடுப்பார்கள். அதிலே வேறு 1 சதவீதம் வித்தியாசம் இருக்கிறது. எனவே, இதை எப்படிக் கணக்குப் பார்க்க வேண்டுமென்றால், சர்க்கார்த் துறையிலே நடக்கிற தொழிலுக்கு இன்வெஸ்டுமெண்ட் எவ்வளவு, கிடைக்கக்கூடிய வருமானம் எவ்வளவு என்றுதான் பார்க்க வேண்டுமே ஒழிய, தனியார்த் துறையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை. அப்படி ஒப்பிட்டுப் பார்க்கவும் முடியாது.

மேலும், அக்கவுண்டண்ட் ஜெனரல் சர்க்கார்க் கணக்குகளைப் பரிசீலனை செய்வதுபோல், தனியார் துறையிலும் செய்தால், அவர்கள் கணக்கு எப்படி இருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. அவ்வளவு நுணுக்கமாக சர்க்கார் துறை கணக்குப் பரிசீலனை நடக்கிறது. ஸ்பேர் பார்ட்ஸ்களிலே தவறுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஒரு தவறும் இருக்க முடியாது. ஸ்டாக் வெரிபிகேஷன் இருக்கிறது. அக்கவுண்ட் செக்கிங் இருக்கிறது. பின்னர் ஆடிட் செக் வேறு இருக்கிறது. அது எல்லாவற்றையும் விட கஷ்டமான செக்கிங். இந்த மாதிரி சென்ற வருஷத்திய கணக்கைப் பரிசீலனை செய்ததில், வரவர இந்த இலாகாவில் வருமானம் குறைந்து கொண்டு வருகிறது. செலவுகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன, அப்படி வருமானம் குறைந்து கொண்டு வருவதற்குக் காரணம் கட்டணத்தை உயர்த்தாததுதான். செலவினங்களுக்குத் தகுந்தபடி கட்டணம் உயரவில்லை என்று அக்கவுண்டண்ட் ஜெனரல் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேறு விதமாக கனம் அங்கத்தினர்களிடம் சொல்லி இருப்பார்களேயானால், அதில் துளிக்கூட உண்மை இல்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஏன் லாபம் குறைந்துவிட்டது என்று பலர் கேட்டார்கள். அதற்குக் கூட நான் ஆரம்பத்தில் பதில் சொன்னேன். 1 மைல் ஓடுவதற்கு 1948-ல் 69 நயா பைசா ஆயிற்று. இன்று 1 மைல் ஓடுவதற்கு ரூ. 1.34 ஆகிறது. இது எப்படியாகிறது என்பதற்கெல்லாம் கணக்குகள் இருக்கின்றன. 1948-ம் வருஷத்தில் இருந்த மோட்டார் வெகிகிள் டாக்ஸேஷன், சென்ற வருஷத்திலே நாம் போட்டிருக்கிற மோட்டார் வெகிகிள் டாக்ஸேஷனைப் பார்த்தால், ஏறக்குறைய இரட்டிப்பு மடங்கு ஆகியிருப்பது தெரிய வரும். 1947-48-ல் தொழிலாளர்களுக்குக் கொடுத்த சலுகைகளையும், இன்று அவர்களுக்குக் கொடுத்துள்ள சலுகைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால்—திரு. மணி அவர்களே ஒப்புக்கொள்வார்கள்—இரண்டு மடங்கு ஆகியிருக்

கிறது. இன்னும் அவர்களுக்கு அதிகமாகச் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்பதிலே நான் மற்றவர்களுக்குப் பின்தங்கியவன் அல்ல. ஒன்றும் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் மறுக்கிறேனே ஒழிய, அவர்களுடைய நல்வாழ்வு சீரிய முறையில் அமைவதற்காக,
1-00 p.m. யாரும் என்னைவிட இன்னும் அதிகமான அளவுக்கு முற்போக்கான யோசனைகளைச் சொல்லுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. அப்படிச் சொன்னால் அதை வரவேற்பேன். அதற்காகக் கோபித்துக்கொள்ள மாட்டேன். ஆபரேஷன் காஸ்ட், பெட்ரோலின் விலை, டீசலின் விலை, சாஸிஸ் விலை, ஸ்பேர் பார்ட்ஸ் விலை, தொழிலாளர்களுடைய ஊதியம், படி, இன்னும் கொடுக்க வேண்டிய வரிகள், இவை எல்லாம் அதிகமாக இருப்பதால்தான், இன்றைக்கு ஆபரேஷன் செலவு ரூ. 1.34 ஆக உயர்ந்திருக்கிறது. மற்றவர்கள் செய்யவில்லையா என்று கேட்பார்கள். தமிழ் நாட்டில் எல்லா பிரைவேட் ஆப்பரேட்டர்களும் மாக்ஸிமம் எவ்வளவு சட்டப்படி வசூலிக்கலாமோ அதை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வருஷத்திலே அவர்கள் வசூல் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். கனம் அங்கத்தினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னபோது யாரோ ஒரு கம்பெனியார் கட்டணத்தை உயர்த்தாமலே லாபம் சம்பாதிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தக் கம்பெனியாருக்குக் கட்டணத்தை உயர்த்த வழி இல்லை என்பது திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரியாது. சட்டத்திலே மாக்ஸிமம் என்ன உண்டோ அதைத் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள அந்த பஸ் கம்பெனியார் வரி போடுவதற்கு முன்னாலேயே கட்டணத்தை உயர்த்திவிட்டார்கள். இது ஏதோ தனியார் துறையிலே திறமையாக நடத்தப்படுகிறது என்று அர்த்தமல்ல. நாம் வரி போட்டாலும்கூட அந்த வரியை நாம் சமாளிப்போம் என்று சொல்லி, சென்ற முறை சட்டசபையிலே அதற்காகக் கட்டணத்தை உயர்த்தவில்லை என்று சொல்லி அதன் பயனாக இன்றைக்கு வரக்கூடிய நிகர லாபத்திலே 18 லட்சம் ரூபாய் அங்கே ஒத்துக்கொண்ட பிறகுகூட அந்தவிதமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைவிட விளக்கமாகச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு சொல்லியும் சர்க்கார் நடத்துகிற தொழில் அவ்வளவு லாபகரமாக இல்லை என்று சொல்வார்களேயானால், ஒன்று அவர்களுக்குக் கொள்கை பூர்வமாக நம்பிக்கை இல்லை என்று சொல்ல வேண்டும். அல்லது எனக்கு விளக்கக்கூடிய சக்தி இல்லை என்று என்னைத்தான் குறை சொல்லிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் கணக்கைப் பார்க்கின்ற நேரத்தில் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் பார்ப்போமானால் சென்னை ராஜ்ய டிரான்ஸ்போர்ட் இத்தனை காலம் நடந்ததைவிட இந்த வருஷத்தில்தான் **Peak Efficiency**-லே நடந்து இருக்கிறது. இதற்கு இட்ட முதல் 5 கோடி ; வருமானம் சற்றேறக் குறைய 5 கோடி. எல்லாவிதமான தேவைகளையும் செய்து கொடுத்து நிகர லாபமும் எடுத்திருக்கிறோம்.

பஸ் கட்டணத்தை 16 ஆண்டுகளாக உயர்த்தாமல் இருப்பதை நினைத்துப் பார்க்கும்போது இதைவிட இப்போது இருக்கின்ற நிலைமையில் திறமையாக நடத்த முடியும் என்று யாராவது சொல்வார்களானால் அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

திருமதி அனந்தநாயகி அவர்கள் சொல்லும்போது இந்த வண்டிகள் 85, 87 சதவிகிதம்தான் ஓடுகின்றன, அதற்கு மேல் ஓடவில்லை என்று சொன்னார்கள். எனக்கு சற்று ஆச்சரியமாகவே இருந்தது. 87 சதவிகிதம் ஓடுகிறது என்று சொல்லும் போது எந்தக் கம்பெனியை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் அது **Highest figure** என்றுதான் சொல்ல வேண்டும். அதைவிட அதிகமாக ஓட்ட முடியாது. **Monthly Maintenance**-க்காக சில வண்டிகளை அனுப்ப வேண்டும். **Annual repairs**-க்காக **Brake Certificate**-க்காக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை **1/6th of the Vehicle**-களை வைத்துதான் தீரவேண்டும். இதையெல்லாம் பார்த்தால் 87 சதவிகிதத்துக்குமேல் யாரும் ஓட்ட முடியாது. இந்த அளவுக்கு ஓட்டுவதற்கு முக்கிய காரணம் **Unit Replacement System** என்று ஒன்று இருப்பதுதான்.

ஒரு வண்டி பழுது பார்க்கப்படுவதற்கு அனுப்பப்பட்டால் அதன் என்ஜின் மட்டும் ஒர்க்ஷாப்புக்குத் தனியாகக் கழற்றி அனுப்பி விடுவார்கள். அங்கே சம்பந்தப்பட்ட போர்ஷன் ஓவர்ஹால் ஆக வேண்டும். அதுவரை வண்டி அங்கே சும்மா இருக்காது. அந்த வண்டியிலே எஞ்சின் யூனிட் ஒன்றை எடுத்துப் பொருத்தியவுடன் அது ஓட ஆரம்பித்துவிடும். அந்த விதமான **Unit Replacement System** இருப்பதன் காரணமாகத்தான் மிக அதிகமாக வண்டிகள் ஓடும்படியான நிலைமையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

திரு அழகமுத்து அவர்கள் பேசும்போது ஏன் சர்க்கார் பஸ்களுக்கு வருவாய் குறைவாக இருக்கிறது என்று கேட்டார்கள். சர்க்கார் பஸ்களுக்கு வருவாய் ஒரு இடத்தில் குறைவாய் இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. ஸிடி ஆபரேஷனை மாத்திரம் எடுத்துக் கொண்டால் வருவாய் குறைவாகத்தான் இருக்கும். ஸிடி ஆபரேஷன்களை மட்டும் நடத்துகிறவர்கள் லாபத்திலே ஓட்டுகிறார்கள் என்று நான் எந்த இடத்திலும் பார்க்கவில்லை. அதற்காகத்தான் 1958-ம் வருஷத்திலே இந்த இலாகாவின் பொறுப்பு என்னிடம் வந்தவுடன் ஸிடியிலே இருக்கின்றவர்களுக்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று சொல்லி, **Long distance operation**-களை எடுத்துக்கொண்டால்தான் ஸிடி ஆபரேஷனில் அதிகமாகக் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்க முடியும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தேன். கோவையை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு இருக்கும் ஸிடி ஆபரேட்டர்கள் நகர பஸ்களை மாத்திரம் ஓட்டவில்லை. வெளியூர் பஸ்களையும் எடுத்து ஓட்டுகிறார்கள். மதுரையை எடுத்துக்கொண்டால் அங்கேயும் நகர பஸ்களை மாத்திரம் ஓட்டவில்லை. வெளியூர் பஸ்களையும் எடுத்து ஓட்டுகிறார்கள். வெளியிலே ஓட்டுகிற பஸ்களில் கிடைக்கிற வருமானத்தின் மூலம்தான் ஸிடி பஸ்களினால் ஏற்படுகின்ற நஷ்டத்தை ஓரளவு ஈடுகட்ட முடியும்.

அதைப்போல சென்னை நகரத்திலே இருக்கின்ற பஸ் போக்குவரத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, மற்ற இடங்களில் ஓடுகின்ற பஸ்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் இருந்தால் நிச்சயமாக லாபமாக ஓடாது.

சென்னையிலே 47 ரூட்கள் கட்டுப்படியாகாத ரூட்கள். தனியாராக இருந்தால் கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி பஸ்களை ஓட்டமாட்டார்கள். சர்க்காராக இருக்கும் காரணத்தால் மக்களுக்கு வசதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் 117 ரூட்டுகளில் 47 ரூட்டுகள் நஷ்டமாக இருந்தாலும், மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற காரணத்தினால் பஸ்களை ஓட்டுகிறோம். எந்தவிதமான கணக்குகளை எடுத்துப் பார்த்தாலும் சென்னை நகரத்தில் மாத்திரம் பஸ் ஓட்டுவதென்று சொன்னால் இந்தக் கட்டணத்திலே யாரும் ஓட்ட முடியாது.

அமெரிக்காவிலே **Fifth Avenue Coach Company** என்ற ஒரு பெரிய கம்பெனி இருக்கிறது. அங்கு அவர்கள் நடத்துகிற பஸ்களை நான் போய்ப் பார்த்திருக்கிறேன். சென்ற வருஷம் அவர்கள் நகர சர்வீஸை மாத்திரம் ஓட்டி அவர்களுக்கு கட்டுப்படியாகாமல் வேண்டாமென்று விட்டு விட்டு ஓடிவிட்டார்கள். இது உலகத்தில் இருக்கிற நிலைமை. நம்முடைய ராஜ்யத்தில் நகரத்தில் மாத்திரம் கட்டுப்படியாகக் கூடிய முறையில் ஓட்ட வேண்டுமென்று சொன்னால் மற்ற நாடுகளில் நடக்கும் முறையைத்தான் நாமும் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது **Single Fare System**. எங்கே ஏறினாலும், எங்கே இறங்கினாலும் 20 நயா பைசா என்று சொன்னால் கட்டுபடியாகும். அந்த மாதிரி செய்தால் **long distance**-க்கு கட்டணம் குறைவாக இருக்கும். அல்லது நம்முடைய கட்டண வீதங்களை உயர்த்தினால் கட்டுபடியாகும்.

ஆகவே சர்க்கார்த் துறையிலே நஷ்டம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. சர்க்கார் 10 வருஷங்களுக்குள்ளாக 2 தடவைக்கு ஒரு முறை 1 நயா பைசா வீதம் கட்டணத்தை உயர்த்தியிருந்தால்கூட இன்னும் லாபம் [illegible]

கும். **Efficient operation** இருக்கிறதா இல்லையா என்பதை வேண்டுமானால் குற்றச்சாட்டாகச் சொல்லலாமே தவிர, சர்க்கார்த் தொழிலில் லாபம் வந்திருக்கிறதா இல்லையா என்று கேட்பது அர்த்தமற்ற பேச்சு. சர்க்காருக்கு **monopoly** இருக்கிறது. கட்டணத்தை உயர்த்திவிட்டு லாபம் வருகிறது என்று சொல்லி மிகத் திறமையாக சர்க்கார்த் தொழிலை நடத்தினார்கள் என்று சொல்ல முடியாது. எதை நாம் சர்க்கார்த் தொழிலிலே கவனிக்க வேண்டுமென்று சொன்னால், கொடுத்த முதலீட்டை வைத்து எவ்வளவு வெற்றிகரமாக, லாபகரமாக நடத்தியிருக்கிறார்கள் என்பதைத்தான் பார்க்க வேண்டும். அந்தக் 'கணக்கீட்டைப் பார்க்கும் போதுதான் நான் ஆரம்பத்திலேயே சொன்னதுபோல நம்முடைய டிரான்ஸ் போர்ட்டானது இதுவரை இல்லாத அளவுக்கு **highest peak of efficiency**-யை அடைந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

மேற்கொண்டு நகரத்திற்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. அந்தப் பிரச்சினைகளின் காரணமாக சிலருக்குக் கோபம் வருகிறது. சர்க்கார் பஸ்கள் எல்லாம் மோசமாக இருக்கின்றன என்று சொல்வதற்கும் துணிந்து விடுகிறார்கள். பிரச்சினை என்னவென்று சொன்னால் நகரங்களிலே **peak hour traffic** இருக்கிறது. காலையில் 2 மணி நேரம், மாலையில் 2 மணி நேரம் பிரயாணிகள் அதிகமாக ஏறுகிறார்கள். ஒவ்வொரு வாரமும்—தனி முதலாளிகூட பார்ப்பாரோ மாட்டாரோ—தினம் கலெக்ஷன் எவ்வளவு, எவ்வளவு மைல் ஓடியிருக்கிறது என்பதற்கான கணக்குகளை எல்லாம் நான் பார்க்கிறேன். அந்த விதமாக ஏற்படுகிற கலெக்ஷனைப் பார்த்தால், காலையில் இரண்டு மணி நேரம், மாலையில் இரண்டு மணி நேரம் **peak hour traffic**-ஆக இருக்கக்கூடிய நிலைமை புலப்படுகிறது. இந்த **peak hour traffic**-ல் இருக்கிற நெருக்கடியைப் பார்த்துவிட்டு " நிற்கிறோம், தொங்குகிறோம் " என்று சொன்னால், அந்த நிலைமை நாள் பூராவும் இருந்தால் எவ்வளவு லாபமாக இருக்கும் என்று சொல்லவே முடியாது. இருக்கக்கூடிய கஷ்டமெல்லாம் அந்த 2 மணி நேரத்தில்தான். சென்னை நகரத்தில் மற்ற நகரங்களில் இல்லாத மாறுபாடான நிலைமை இருக்கிறது. இங்கே இருக்கின்ற **traffic** எல்லாம் **Uni-direction**-ஆகத்தான் இருக்கின்றன. காலையிலே எல்லோரும் பாரிஸ் கார்னருக்கு வருவார்கள், மாலையிலே எல்லோரும் பாரிஸ் கார்னரிலிருந்து போவார்கள். மற்ற நகரங்களில் எல்லா இடங்களிலும் பஸ்கள் நெரிசலாகப் போய்க்கொண்டு இருப்பதோடு திரும்பி வருகிறபோதும் சும்மா வராது. ஆவரேஜ் போட்டுப் பார்த்தால் கட்டுப்படியாகக் கூடியதாக இருக்கும். சிலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், " என்ன அநியாயம், என்ன அக்கிரமம், ஓவர்லோடு அதிகமாக இருந்தும் லாபம் அதிகமாக வரவில்லையே " என்று நினைக்கிறார்கள். **Uni-directional traffic**-ஆக இருப்பதால் திரும்புகிற பஸ்கள் காலியாக வருகின்றன. அதனால் நம்முடைய நகரத்திலே நமக்கு வருமானம் இந்தத் துறையிலிருந்து அவ்வளவு அதிகமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதையெல்லாம் மாற்ற பெரிய மாறுதல் செய்ய வேண்டும். ஆபீஸ்களைச் சென்னை நகரத்தின் பல பகுதிகளில் பரவலாக அமைக்க வேண்டும். அடையாரில் பத்து ஆபீஸ்களையும், தண்டையார்பேட்டையில் பத்து ஆபீஸ்களையும், ஷெனாய்நகரில் பத்து ஆபீஸ்களையும் இப்படிப் பல பகுதிகளில் ஆபீஸ்கள் பரவலாக வைக்கப்பட்டு, பல " டைரக்ஷன் " களில் பஸ்கள் போகும்போது, நமக்குச் சரியான வருவாய் கிடைக்கும். அப்படிப்பட்ட நிலை இப்பொழுது இல்லாமலிருப்பதால் நமக்குப் பல பிரச்னைகள் இருக்கின்றன. அவற்றை நாம் சமாளிப்பதற்கு முயற்சிகள் செய்யவேண்டும்.

நகரத்தில் பஸ்களை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது நாம் போட்டிருக்கும் திட்டப்படி ஓராண்டுக்கு நமக்கு மொத்தம் இருக்கும் பஸ்களின் எண்ணிக்கையில் ஐந்திலொரு பங்கு பஸ்களை நாம் **replacement** செய்கிறோம். 500 பஸ்

கள் இருந்தால், அவற்றில் 100 பஸ்களை, ஐந்து வருஷங்கள் ஆனவுடனே, **re-placement** செய்கிறோம். வளர்ந்து வரும் ஜனத்தொகையின் தேவையை அனுசரித்து, அவர்களுடைய போக்குவரத்துத் தேவையைச் சமாளிப்பதற்காக ஆறிலொரு பங்கு பஸ்களை நாம் அதிகரிக்கிறோம். இவ்விதமாக நாம் பஸ்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே போகும்போது, "ட்ராஃபிக் "கும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சென்னை நகரில் பல தொழில்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக, வட சென்னையில் அனேக தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. அங்கே பஸ் போதவில்லை என்று கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். நான்கைந்து வருஷங்களுக்கு முன்பு என்னூர்ப் பகுதியில் 150 பேர்கள்தான் தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருந்தார்கள். ஆறு பஸ்கள் போட்டோம். இப்பொழுது 9,800 தொழிலாளர்கள் என்னூர்ப் பகுதியில் மாத்திரம் பல தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். சற்றேறக்குறைய பத்தாயிரம் பேர்களுக்கு மாலை ஐந்து மணிக்கு ஒரே சமயத்தில், பஸ்கள் கொடுக்க வேண்டுமென்றால் யாராலும் முடியாது. பத்தாயிரம் தொழிலாளர்கள் உள்ள அந்த ஒரு பகுதிக்கு மாத்திரம் நாம் சற்றேறக்குறைய 200 பஸ்கள் விட்டால்தான் போதுமானதாக இருக்கும். இந்தவிதமாக நம்மால் சமாளிக்க முடியாத அளவுக்கு " ட்ராபிக் " வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது. மற்ற நாடுகளில் **Staggering** செய்து அலுவல் நேரங்களை மாற்றிக்கொள்ளுகிறார்கள். அதுபோல, நம்முடைய நகரத்திலும், தொழிலாளர்கள் தங்கள் தங்களுடைய கம்பெனிகளில் விவாதித்து அவர்களுடைய வேலை நேரங்களை " ஸ்டாகரிங் " செய்துகொள்ளலாம். ஒரு கம்பெனி 4–30 மணிக்கும் மற்றொரு கம்பெனி 5 மணிக்கும், இன்னொரு கம்பெனி 5-30 மணிக்கும் முடிவதாக வைத்துக் கொண்டு, இப்படி " ஸ்டாகரிங் " செய்துகொண்டால், நிலைமையை நாம் சமாளிக்க முடியும். பொதுவாக, பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முறையில்தான் நாம் திட்டங்கள் வகுத்திருக்கிறோம். நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் **(long term view)** பார்த்தால் நமக்கு ஏற்படும் பிரச்னைகள் எல்லாவற்றையும் நாம் சமாளிக்க முடியும்.

" என் பஸ்கள் வெளியிலே கட்டப்படுகின்றன ? " என்று இங்கே கேட்கப்பட்டது—இதை ஒட்டியிருக்கும் காரணத்தால் அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்—சாதாரணமாக பஸ் வெளியிலே கட்டப்படுவதில்லை. ஆனால், நம்முடைய தொழிலாளர்கள் எவ்வளவு கட்டமுடியுமோ அதற்கும் அதிகப்படியான எண்ணிக்கை பஸ்களைக் கட்ட வேண்டிய நிலைமை சில ஆண்டுகளில் ஏற்படுகிறது. உதாரணமாக எடுத்துக்கொண்டால், டெல்லி ட்ரான்ஸ்போர்ட்டுக்கு நாம் விற்ற பஸ்களுக்கு **replacement** செய்வதற்காகப் புதிதாக நாம் அதிகமான பஸ்கள் கட்டும்படியான நிலைமை ஏற்பட்டது. நம்முடைய ஒர்க்ஷாப்பில் நாம் 122 பஸ்கள் கட்டியிருக்கிறோம். நம்முடைய ஒர்க்ஷாப்பில் நாம் எவ்வளவு கட்ட முடியுமோ, அதைக் கட்டுகிறோம். அதற்கு மேல் கட்டவேண்டி யிருப்பதை வெளியில் தான் கட்டவேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும் நாமே கட்டும் வரையில் காத்திருக்கவேண்டுமென்றால், உடனடித் தேவைக்கு பஸ் இல்லாமல், இன்னும் மூன்று, நான்கு மாதங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். உபரி பஸ்களைக் கட்டுவதற்கென்று புதிதாகத் தொழிலாளர்களை வைத்தால், ஆறு மாதம் கழித்து அவர்களை " ரிட்ரென்ச்மெண்ட் " செய்யவேண்டியிருக்கும். " நார்மலாக " வருஷா வருஷம் எத்தனை பஸ்கள் கட்டவேண்டுமோ அந்தக் கணக்கின்படி நம்முடைய ஒர்க்ஷாப்பில் கட்டுவது, அதற்குமேல் அதிகமாக இருப்பதை வெளியிலே கட்டுவது என்கிற முறைதான் பொருளாதாரத் துறையில் கட்டுப்படியாகும் முறை. வேறு ஏதாவது முறை சொன்னால் நஷ்டம்தான் ஏற்படும்.

"டெண்டர் முதலியவை வாங்கப்படுகின்றனவா ?" என்று கேட்கப்பட்டது. டெண்டர் வாங்காமல் இருக்க முடியாது. டெண்டர் வாங்காவிட்டால் அகவுண்டண்ட்-ஜெனரல் கேள்வி கேட்கக்கூடிய அளவுக்கு விதிகள் இருக்கின்றன.

டெண்டர் வாங்கிதான் இதெல்லாம் நடைபெறுகின்றன. இதிலே எந்தவித
மான குற்றத்திற்கோ, தவறுதலுக்கோ இடமில்லை என்று நான் தெரிவித்
துக்கொள்ளுகின்றேன். வெளியிலே பஸ் கட்டும்போது, முக்கியமான
கம்பெனிகளிடமிருந்து டெண்டர் கோரப்படுகிறது. எந்தக் கம்பெனி கட்டும்
"பாடி" நன்றாக இருக்கிறது, எந்தக் கம்பெனியினுடைய "ரேட்"
"சீப்" ஆக இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் முடிவு செய்யப்படு
கிறது. இதற்கென்று ட்ரான்ஸ்போர்ட் கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டி
யில் சென்னை அரசாங்க நிதி இலாகாக் காரியதரிசி, இந்த இலாகாவின்
அடிஷனல் செக்ரடரி, இந்த இலாகாவின் மந்திரி, ட்ரான்ஸ்போர்ட் டைரக்
டர் ஆகியவர்கள் இருக்கிறார்கள். இத்தனை பேரும் உட்கார்ந்துதான்
"அப்ரூப்" செய்கிறோம். "யாராவது தவறு செய்துவிட்டார், யாரோ
ஒருவருக்குக் கொடுத்துவிட்டார்கள்" என்று சொல்வார்களானால், அவர்கள்
விஷயம் தெரியாதவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று மாத்திரம்
நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சர்க்கார் நடத்தும் இலாகாவைப்
பற்றிப் பொதுவாக, "அங்கே தவறு, இங்கே தவறு" என்று சொல்லிக்
கொண்டே இருப்பார்களானால், இது நம்முடைய விவாதத்திற்கு நல்ல
முறையல்ல. ஏதாவது ஒரு இடத்தில் . . . . . .

திரு. எம். எஸ். மணி : அன்றையதினம் கைத்தறி ரிபேட்டைப்பற்றி
எங்களுடைய தலைவர் பேசும்போது, '15 ந. பை. அங்கே ரிபேட் கொடுக்
கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது அமைச்சர் அவர்கள்,
'அது தவறான கணக்கு' என்று சொன்னார்கள். 'பில்'லைக் காட்டிய
பிறகு உண்மையை உணர்ந்து கொண்டார்கள். ஆகவே, நான் இப்
பொழுது சொன்னதை வைத்து, விசாரிக்கத் தயாராயிருந்தால் நானும்
தயாராயிருக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் ஏதாவது
ஒரு 'ஸ்பெஸிஃபிக் இன்ஸ்டன்ஸ்'ஸைச் சொன்னாரா? இதற்கு முன்பு
அப்படியிருந்தால், சட்டசபை முறைப்படி ஒரு கேள்வி போட வேண்டும்.
அந்தக் கேள்விக்கு நான் பதில் கொடுக்கிறேன். அதை வைத்து, இங்கே
இப்படிப்பட்ட மானியத்தின்மீது விவாதம் நடக்கும்போது, 'நான் கேட்ட
கேள்விக்குப் பதில் இம்மாதிரி கொடுக்கப்பட்டது; ஆனால் நிலைமை இப்படி
இருக்கிறது' என்று எடுத்துச் சொன்னால், அது விவாதத்திற்கு உபயோக
மாக இருக்கும். அப்படியில்லாமல், திடீர் என்று எனக்குத் தெரியாத
ஒரு விஷயத்தை—கனம் அங்கத்தினருக்கு அறைகுறையாகத் தெரிந்த
ஒரு விஷயத்தை—சட்டசபையிலே விவாதம் செய்து, இதுதான் உண்மை
என்று நினைக்கும்படியான நிலைமை உண்டாகுமானால், அது சட்டசபையை
நன்றாகப் பயன்படுத்தியதாக ஆகாது. நான் மீண்டும் திட்டவட்டமாகச் சொல்
கிறேன். பஸ் 'பாடி' கட்டியதிலே எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை.
ஒரே ஒரு சமயத்தில் ஐம்பது பஸ்கள் கட்டுவதற்கு டெண்டர் கேட்கப்பட்டது.
கமிட்டி பரிசீலனை செய்தபின்தான் வேலை ஒப்படைக்கப்பட்டது. இதற்கு
ஏதாவது வேறு விஷயங்கள் இருக்குமானால், கனம் அங்கத்தினர் அவர்
கள் எப்பொழுது வேண்டுமானாலும், அதைப்பற்றிக் கேள்வி போட்டு,
என்னிடத்தில் தெரிந்து கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள்
கின்றேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது, இன்னொரு குறையும்
சொல்லப்பட்டது. அதாவது; தொழிலாளர்கள் சம்பந்தமான குறைகள்.
தொழிலாளர்கள் சம்பந்தமான குறைகள் பொதுவாக நீக்கப்படவேண்டும்
என்று சட்டசபையில் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அந்தக்
குறைகளை நீக்குவதற்கு என்ன என்ன உதவி செய்ய முடியுமோ அதைச்
செய்வதற்கு நான் தயாராய் இருக்கிறேன். ஆனால், தனிப்பட்ட தொழிலா
ளருக்கு ஏற்படக்கூடிய தனித் தனிக் குறைகளைச் சொல்வதற்கு வேறு
வழிவகை வகுத்திருக்கிறோம். அவர்களுக்குச் சங்கங்கள் இருக்கின்றன.

அவர்களுடைய இரண்டு சங்கங்களின் இரண்டு பிரதிநிதிகளையும் அழைத்து,
அவர்களுடைய குறைகள் எல்லாவற்றையும் எழுதிக் கொடுக்கச் சொல்லி,
அவற்றைப் பரிசீலிப்பதற்கென்று ஒரு கமிட்டி நியமித்து, அந்தக் கமிட்டி
யிலே தொழிலாளர் பிரதிநிதிகளையும் வரவழைத்து, அவர்களையும் கலந்
தாலோசித்து, அந்தக் கமிட்டியினர் பல சிபார்சுகளைச் செய்தார்கள்.
அந்தச் சிபார்சுகளில் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியுமோ, அவை
யெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு இன்
னும் அதிகமான சலுகை கொடுக்க வேண்டுமென்று சொன்னால்—நான்
ஆரம்பத்தில் சொன்னது போல—அதைச் செய்து கொடுக்கவேண்டும்
என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், மற்ற இடங்களில் இருக்கும்
தொழிலாளர்களுக்கு இருக்கும் சலுகைகளைவிட சர்க்கார் பஸ் ட்ரான்ஸ்
போர்ட்டில் இருக்கும் தொழிலாளர்களுக்குச் சலுகைகள் குறைவாக இருக்
கின்றன என்று சொல்வதை நான் என்றும் ஏற்றுக்கொண்டதில்லை.
இன்றைக்கும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். தொழிலாளர்கள் தங்களுடைய
குறைகளைச் சொல்கிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களும் சொல்கிறார்கள்.
மொத்தத்தில் கணக்குப் போட்டுப் பார்த்தால், தமிழ்நாடு பஸ் ட்ரான்ஸ்
போர்ட்டில் இருக்கும் தொழிலாளர்களுடைய நிலைமை வேறு எந்த ப்ரை
வேட் ட்ரான்ஸ்போர்ட்டில் இருப்பவர்களுக்கும் கிடையாது. இதை நான்
இன்று நேற்று சொல்லவில்லை. நான்கு வருஷங்களுக்கு முன்பு அந்தத்
தொழிலாளர்களைக் கூப்பிட்டு, "நீங்கள் எந்தத் தனியார்த் துறையி
லிருக்கும் தொழிலாளர்களுடைய சம்பள விகிதம், லீவ் வசதி, ப்ராவி
டெண்ட் பண்டு, க்ராசுவடி போன்ற எல்லா வசதிகளும் வேண்டுமென்று
சொல்கிறீர்களோ, அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்"
என்று சொன்னேன். அவர்கள் திரும்பியே வரவில்லை. அவர்களுக்குத்
தெரியும் அவர்களுடைய லாபம் எந்த இடத்தில் இருக்கிறது என்று.

தொழிலாளர்களுக்கு ஒரு வருஷ சர்வீசுக்கு ஒரு மாதச் சம்பள வீதம்
கணக்கிட்டு, க்ராசுவடியாகக் கொடுக்கிறோம். தொழிலாளர்கள் குறைந்த
பட்சம் 30, 35 வருஷங்கள் ட்ரான்ஸ்போர்ட்டிலே வேலை செய்கிறார்கள்.
அவர்களுக்கு 35 மாதச் சம்பளம் க்ராச்சுவடியாக நாம் சர்க்கார் ட்ரான்ஸ்
போர்டில் கொடுக்கிறோம். தமிழ் நாட்டில் மாத்திரமல்ல, இந்தியாவி
லேயே வேறு யாராவது இம்மாதிரி கொடுக்கிறார்களா என்று பார்த்தால்,
யாரும் இம்மாதிரி கொடுப்பது இல்லை. வருஷத்திற்கு அரை மாதம்
என்று கணக்குப் போட்டு உச்ச வரம்பாக 15 மாதச் சம்பளம் க்ராசுவடி
யாகக் கொடுப்பார்கள். சர்க்கார்த் துறையில் நடக்கும் பஸ் ட்ரான்ஸ்
போர்ட்டில் கொடுக்கப்படும் சலுகைகள் மறைமுகமாகவே இருந்துவிடு
கின்றன. ஆனால், தனியார் நேரடியாக ரூபாயாகக் கொடுக்கிறார்கள்.
சர்க்கார் பஸ் தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி
எஸ்.எஸ்.எல்.ஸி. வரை கொடுக்கப்படுகிறது. ஒருவருக்கு மூன்று பிள்ளை
கள் படிக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும், மாதமொன்றுக்கு
15 ரூபாய் அந்தத் தொழிலாளிக்கு லாபம். இதெல்லாம் எந்தத் தனி
யார்த் துறையில் கொடுக்கப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

லீவ் வசதியை எடுத்துக்கொண்டாலும், சர்க்கார் ட்ரான்ஸ்போர்ட்டில்
கொடுப்பது போல எந்தத் தனியார்த் துறையிலும் கொடுப்பதில்லை.
வெளியில் கொடுக்கப்படுவதையும், சர்க்காரிலே கொடுக்கப்படுவதையும்
கணக்குப் போட்டுப் பார்க்கும்போது சர்க்காரில் தொழிலாளர்களுக்குக்
கொடுப்பது குறைவில்லை என்று தொழிலாளர்களுக்கே தெரியும். இதை
நான் சொல்லும்போது, அவர்களுக்கு வேண்டியதெல்லாம் செய்துவிட்
டோம், இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை என்று நான் சொல்லவில்லை.
அவர்களுக்கு இன்னும் என்னென்ன விதமான அதிகமாகச் சலுகைகள்
கொடுக்க முடியுமோ அதைச் செய்து கொடுக்கத் தயாராயிருக்கிறோம்.

ஆனால், அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் குறைவாக இருக்
கிறது என்ற காரணத்தினால் டிரைவர்கள் கிடைக்கவில்லை என்று சொன்
னால் அது சரியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சர்க்
காரிலே ஒரு டிரைவரை வைக்க வேண்டுமென்றால் 25 வயதுக்குள்ளாக

இருக்க வேண்டும். தனியார் துறையிலே எத்தனை வயதானாலும் அமர்த் திக் கொள்ளுகிருர்கள். மேலும் சர்க்காரில் டிரைவர்களாக இருக்கவேண் டும் என்ருல் அவர்கள் குறைந்தது மூன்ருவது பாரம் படித்திருக்க வேண்டும். தனியார் துறையிலே டிரைவர்கள் படித்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. எங்களுக்கு யோக்கியதாம்சமுள்ளவர்கள் போதிய அளவு கிடைக்கவில்லை என்பதற்காகத்தான் நாங்கள் டிரைவர்ஸ் டிரெயினிங் ஸ்கூல் வைத்திருக்கிருேம். நேஷனல் எமர்ஜன்சியின் காரண மாகவும் டிரைவர்கள் நிறையத் தேவைப்படுகிருர்கள். தனியார் துறையில் பெரிய அளவில் பஸ் போக்கு வரத்தை நடத்தும் ஒருவர் "நீங்கள் நடத்தும் டிரெயினிங் ஸ்கூலில் பயிற்சி பெற்ற டிரைவர்களை எங்களுக்கும் கொடுத்தீர்களானுல் நல்லது" என்று எங்களுக்கு எழுதியிருக்கிருர்கள். சர்க்கார் துறைக்கு மட்டுந்தான் டிரைவர் வேலைக்கு ஆள் வருவதில்லை என்று நினைப்பது சரியல்ல. நாங்கள் டிரைவர்களை எடுப்பதிலே கண் காணிப்பாக இருக்கிருேம் என்றுநான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : சர்க்கார் டிரெயினிங் ஸ்கூலில் பயிற்சி எடுத்துக் கொண்டு தனியார் துறையிலே போய் வேலையிலே சேர்ந்து விடுகிருர்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்னுடைய அபிப்பிராயத்தில் சர்க்கார் துறை வேறு, தனியார் துறை வேறு என்ற எண்ணம் கிடையாது. இரண்டு துறைகளும் சேர்ந்து நாட்டுக்கு எவ்வளவு அதிகமான பலனைக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் உடைய வன். சர்க்காரிலே டிரைவர்களுக்குப் பயிற்சி கொடுத்த பிறகு அவர்கள் தனியார் துறையிலே டிரைவர்களாகப் போய்ச் சேருவதைப்பற்றி எனக்கு வருத்தம் கிடையாது. அந்த அளவுக்குப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அதிகமாகிருர்கள். அந்தச் சேவையைச் சர்க்கார் செய்கிறது.

இந்தத் துறையிலே பலவிதமான சிறுசிறு குற்றங்கள் எல்லாம் சுட்டிக் காட்டப்பட்டது. 'ஓவர்லோடு' ஏற்றிஞர்கள், மீன் மூட்டையை ஏற்று கிருர்கள் என்றெல்லாம் கூறிஞர்கள். இவை எல்லாம் ஓரளவு இருக்கத் தான் செய்யும். இவை எல்லாம் இல்லாமலேயே டிரான்ஸ்போர்ட்டை நடத்த முடியுமா, முடியாதா என்பது எனக்குத் தெரியாது. ஓரிரு இடத்தில் சிறு சிறு தவறுகள் இருக்கலாம். அவற்றையெல்லாம் கண் காணிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிருேம். சர்க்காரைப் பொறுத்த வரை, புகார் எழுதி அனுப்பிஞல் எல்லாவற்றையும் பரிசீலனை செய் கிருேம். பரிசீலனை செய்து சில சமயங்களில் நேரடியாக விசாரணையும் செய்கிருேம். அவ்வாறு புகார் எழுதியவர்களைக் கூடக் கூப்பிட்டு விசாரிக்க வேண்டுமென்ருல் விசாரித்து, தவறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்கிருேம். ஆனல் சில சமயங்களில் புகார்கள் அட்ரஸ் இல்லா மலே வந்து விடுகின்றன. அட்ரெஸ் இல்லாததன் காரணமாக நாங்கள் அவர்களுக்குக் கடிதம் எழுதி என்ன நிலைமை என்பதை விளக்க முடியா மல் போயிருக்கலாம். யார் யார் பெயர், அட்ரெஸ் எல்லாம் கொடுத்து புகார் எழுதுகிருர்களோ அதன் பேரில் விசாரணைகள் நடத்தி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்திருக்கிருேம். கண்டக்டர்கள் பொது மக்களிடம் சரியாக நடந்து கொள்வதில்லை என்ற புகார் சொல்லப்பட்டது. அதற்குக் காரணம் சென்னை நகரத்தினுடைய பாஷையில் இருக்கக்கூடிய சிறு குறை பாடுதான். சென்னை நகரத்தில் இருப்பவர்கள் எல்லாம் சாதாரணமாக 'நீ, நீ' என்றுதான் பேசுவார்கள். அவ்வாறு பேசுவதால் அவர்களுக் குக் குறைவாகப் பேசவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது என்று அர்த்த மல்ல. ஊர் வழக்கமே அப்படி. இது நகர அங்கத்தினர்களுக்கெல்லாம் நன்ருகத் தெரியும். அது நமக்கும் கொஞ்சம் புதிதாக இருக்கிறது. அதஞல் கோபம் வருகிறது. அவர்கள் எப்படிப் பொது மக்களிடம் பழக வேண்டும், பேசவேண்டும் என்பதற்காகத் தனியாகவே புத்தகம் போட்டுக் கொடுத்திருக்கிருேம். கண்டக்டர்கள், டிரைவர்கள் எல்லாம் எப்படிப் பொதுமக்களிடம் நடந்து கொள்ள வேண்டுமென்பது எல்லாம் அந்தப்

புத்தகத்திலே கூறப்பட்டிருக்கிறது. பொதுவாக, எதுவும் ஒத்துழைப்பு இருந்தால்தான் நன்ருக நடக்கும். பாசஞ்சர் மாத்திரம் தங்கள் இஷ்டப் படி பேசலாம், கண்டக்டர் அதைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டு மென்று சொன்னுல் அதுவும் தப்பு. கண்டக்டர் எது வேண்டுமாஞலும் பேசலாம், பாசஞ்சர் பொறுத்துக் கொண்டு போக வேண்டுமென்று சொன் ஞல் அதுவும் தப்புதான். ஒருவர்க்கொருவர் பரஸ்பரம் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டால்தான் குறைபாடு நீங்கும். எங்களைப் பொறுத்த அளவில் கண்டக்டர்களுக்கு என்னென்ன விதமாகப் போதனைகள் கொடுக்க வேண்டுமோ அதைச் செய்யத் தயாராக இருக்கிருேம், செய்து கொண்டும் வருகிருேம். அவர்கள் தவருக நடந்து கொண்டார்கள் என்பதற்காக டிஸ்மிஸ் கூடச் செய்யப்பட்டிருக்கிருர்கள். அவர்களை டிஸ்மிஸ் செய்து விட்ட பிறகு கடுமையான தண்டனை கொடுத்துவிட்டீர்களே என்று சொல்லி அவர்களை மறுபடியும் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டு மென்று சொல்ல அங்கத்தினர்கள் வருகிருர்கள், மற்றும் பலரும் வருகிருர்கள். எந்த ஒரு குற்றத்தையும் நான் ஓரளவு பொறுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனுல் எஜமானர்களை அவதூருகப் பேசுவதை நான் பொறுத்துக் கொள்ள முடியாது. எஜமானர் என்ருல், நானே டைரக்டரோ அல்ல. பொதுமக்கள் தான் அவர்களுடைய எஜமானர் கள். அவர்களிடம் சரியாக நடந்து கொள்ளவில்லை என்ருல் மரியாதை காட்டவில்லை என்ருல், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும், அதற்குப் பிறகு, அவர்களுக்கு மன்னிப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னுலோ, வேறு சலுகை காட்ட வேண்டுமென்று சொன்னுலோ சர்க்கார் அதைச் செய்ய இயலாத நிலைமையில் இருக்கிறது என்று தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல ஊர்களுக்குப் பஸ் போக்கு வரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிருேம்.

இன்னும் கொஞ்சம் கட்டணத்தை உயர்த்திஞல் நீண்ட தூர பஸ்களை, மேல் நாடுகளில் ஓடும் பஸ்களின் அளவு செய்து விட முடியும். இப்போது அந்த பஸ்களில் 35 சீட்டுகள் இருக்கின்றன. அதை 30 சீட்டாகக் குறைத் தால் இன்னும் வசதியாக, ஏரோப்பிளேனில் சாய்ந்து கொண்டு உட்காருவ தற்கு அமைக்கப்பட்டிருக்கும் சீட்டுகளைப் போல் அமைக்க முடியும். ஒரு பஸ்ஸை அந்த மாதிரி செய்து வைத்திருக்கிருேம். அந்த பஸ்ஸைப் பார்த்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கிறதென்பது தெரியும். அதற் குச் சற்று அதிகமாகக் கட்டணம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் கட்டுப்படியாகும். சர்க்கார் தொழிலை நடத்தும்போது திறமையாக நடத்த வேண்டுமென்று நினைக்கிறதே தவிர, அதன் மூலம் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று நடத்தவில்லை. அந்த மாதிரி எபிஷியண்ட் ஆக நடத்த என்ன என்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய சர்க்கார் தயாராக இருக்கிறது. சர்க்காருக்கு ஐந்து சதவிகிதம் வட்டி கட்டி, ஏற்படுகின்ற செலவுகள், ஃப்யூச்சர் டெவலப்மெண்ட் ஆகியவற்றுக்குக் கட்டுப்படியாஞல் அதுவே நாம் செய்கிற பெரிய சேவையாகும். ஆகவே தான் இந்தக் கட்டண நிலைமையானது எனக்குக் கொஞ்சம் கவலையைத் தருகிறது. கட்டணத்தை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் இன்றைக்கு ஏற் பட்டிருக்கிறது. இருந்தாலும், எவ்வளவு செலவு, கட்டுபடியாவதற்கு எவ் வளவு வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நன்ருகப் பரிசீலனை செய்து, கட்டுப்படியாகும் அளவுக்கு மட்டும் கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்கிருேம்.

ல்லாவற்றையும் கட்டி முடித்து அவற்றையெல்லாம் வெகு சீக்கிரத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. மணி அவர்களும், ' இந்தச் சர்க்கார் பஸ் நிர்வாகம் சம்பந்தமாகப் பரிசீலிக்க சட்டமன்ற அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு குழுவை நிறுவ வேண்டும் ' என்று சொன்னார்கள். ஐந்து கோடி ரூபாய் மூலதனத்திலும், ஐந்து கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்கு வருமானமும் வருகிற அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகத்தைப் பற்றி ஆராய, அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் பொது மக்களாகிய எஜமானர்களின் சார்பில் அங்கத்தினர்கள் அடங்கிய குழுவை அமைக்க சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நான் கொடுத்திருக்கக் கூடிய கணக்குகளைப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், கமிட்டியில் கூட ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது, தனியார் துறையிலே பஸ்களை நடத்துகிறவர்கள் சட்டம் அனுமதிக்கின்ற வரையிலே கட்டணங்களை வசூலிக்கிறார்கள் என்று குறிப் பிட்டார்கள். ஆகவே, பொதுமக்களின் நன்மையைக் கருதி சர்க்கார் பஸ்களில் அந்த அளவுக்குக் கட்டணத்தை உயர்த்தாத காரணத்தால், கூடிய விரைவில் எல்லா பஸ்களையும் சர்க்கார்த் துறையில் மாற்றத் தீவிர மாக முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பல முறை விவாதிக்கப்பட்ட விஷயம். ஏறக்குறைய நம்முடைய மாநிலத்தில் 5,000 பஸ்கள் ஓடு கின்றன. அந்த 5,000 பஸ்களையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் குறைந்தது 250 கோடி ரூபாய் பணம் வேண்டும். அவ்வளவு பணத்தைப் போட்டு நாம் நடத்தி அவர்கள் கொடுப்பதைவிட நாம் அதிகமாகச் செலவு செய்து எதற்காக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று புரியவில்லை. நூறு மைல், இருநூறு மைல்களுக்கு மேல் உள்ள லாங் டிஸ்டன்ஸ் ரூட்டுகளைச் சர்க்கார் இப்போது எடுத்து வருகிறது. இந்த அரசாங்கத்தின் கொள்கை புரோகிரசிவ் நாஷனலிசேஷன் என்ற முறையில் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக பஸ் ரூட்டுகளைப் புதிது புதிதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது. அந்த முறையில் லாங் டிஸ்டன்ஸ் ரூட்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

11-30 p.m.

திரு. இராம. அரங்கண்ணல் : சாதாரணக் கோரிக்கையைக்கூட அமைச் சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிற காரணத்தால் என் வெட்டுப் பிரேரணையை நான் வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 4,61,90,700 under Demand No. XXX—Roard Transport Schemes be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 4,61,90,700 under Demand No. XXX—Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,33,82,000 under Demand No. XLIII—Capital Outlay on Roard Transport Schemes be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,33,82,000 under Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-34 p.m.

The House then adjourned.

VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. *Statutory Rules and Orders.*

141. *Government's review on the working of the Madras Industrial Investment Corporation Limited, Madras, for the year ended 30th June 1962 together with the Annual Report and Statement of Accounts.* [*Laid on the Table of the House in pursuance of section 639 (2) of the Companies Act, 1956 (Central Act 1 of 1956).*]

B. Reports, Notifications and other papers.

* 88. *Policy note under the Famine Relief (Demand No. XXXI) (in Tamil).*

† 89. *Speech of Hon. Minister for Finance on the Final Supplementary Estimates, 1962–63 (in English and Tamil).*

‡ 90. *Demands for Grants for further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1962–63 (in English and Tamil).*

‡ 91. *Notice of Demands for further Grants during the year 1962–63 (in English and Tamil).*

‡ 92. *Note on the Educational Pattern (in English).*

* Circulated to Members on 23rd March 1963.
† Circulated to Members on 25th March 1963.
‡ Laid on the Table of the House, on 26th March 1963.

APPENDIX

(Vide answer to Starred Question No. 389 on page 519.]

(a) and (b)—

Name of the institute with address.	Number of candidates trained during the last three years.		
	1959-60.	1960-61.	1961-62.
(1)	(2)	(3)	(4)
adras City—			
1 Seton School of Embroidery and Needle Work, 17, Ormes Road, Kilpauk, Madras-10.	10	16	14
2 St. Joseph's Industrial School for Girls, Madras-1	21	21	20
3 St. Joseph's Industrial School for Girls, Mylapore, Madras-28	4	4	4
4 St. Anne's Industrial School, Royapuram, Madras-13	9	8	9
5 Madras Seva Sadan Industrial School, Chetput, Madras-31	16	13	15
6 Rani Rajyalakshmi Industrial School, Mylapore, Madras-4	10	6	9
7 Madras Hindu Sevak Sangh, Industrial School, Madras-1	16	16	16
8 Thakkar Bapa Vidyalaya Industrial School, Madras-17	7	10	8
9 Industrial Training Centre for Women (Stree Seva Mandir), Madras-17 ..	25	33	59
Chingleput district—			
10 Church of South India Industrial School, Ikkadu	7	12	5
South Arcot district—			
11 St. Antony's Industrial School, Cuddalore N.T.	..	..	14
12 Sacred Heart's Technical School, Cuddalore, N.T.	19	19	17
Thanjavur district—			
13 St. Cecily's Industrial School, Kumbakonam.	14	14	
Tiruchirappalli district—			
14 Holy Cross Industrial School, Golden Rock.	20	20	20
15 St. John De Britto Industrial School, Tiruchirappalli	6	10	6

March 1963]

Name of the institute with address.	Number of candidates trained during the last three years.		
	1959-60.	1960-61.	1961-62.
(1)	(2)	(3)	(4)
durai district—			
16 Holy Family Industrial School, Madurai ..	16	13	11
unelveli district—			
17 R.C. Lace Industrial School, Vadakangulam.	3	..	2
18 Arts Industrial School, Nazareth	6	8	3
19 A.G. Industrial School, Kanakapillai-valasai	4	7	13
lem district—			
20 Kasturibai Gandhi Women's Tailoring Centre, Salem	8	17	17
Total ..	221	247	273

11-ம் பக்கத்திலுள்ள 389 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் ...ண்க.

(அ) & (இ) :

தொழிற்பயிற்சி பள்ளியின் பெயரும் முகவரியும்.	கடந்த மூன்றுண்டுகளில் பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை:		
	1959-60.	1960-61.	1961-62.
(1)	(2)	(3)	(4)
சென்னை நகரம்—			
1 சேட்டன் பின்னல், தையல் வேலைப் பள்ளி, கீழ்ப்பாக்கம், சென்னை-10.	10	16	14
2 செயின்ட் ஜோசப் மகளிர் தொழிற் பள்ளி, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, சென்னை-1.	21	21	20
3 செயின்ட் ஜோசப் மகளிர் தொழிற் பள்ளி, மயிலாப்பூர், சென்னை-28.	4	4	4
4 செயின்ட் அன்னி தொழிற்பள்ளி, சென்னை-13.	9	8	9
5 சென்னை சேவா சதனம், சென்னை-10.	16	13	15
6 ராணி ராஜலெட்சுமி மகளிர் தொழிற் பள்ளி, மயிலாப்பூர், சென்னை-4.	10	6	9
7 சென்னை இந்து சேவக் சங்கத் தொழிற் பள்ளி, சென்னை-1.	16	16	16

APPENDIX

தொழிற்பயிற்சிப் பள்ளியின் பெயரும் முகவரியும்.	கடந்த மூன்றாண்டுகளில் பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை.		
	1959–60.	1960–61.	1961–62.
(1)	(2)	(3)	(4)
8 தக்கர் பாபா வித்தியாலயம், சென்னை-17.	7	10	8
9 தொழிற்பயிற்சி நிலையம், ஸ்ரீ சேவா மந்திரம், சென்னை-17.	25	33	59
செங்கல்பட்டு மாவட்டம்—			
10 தென்னிந்திய சர்ச் தொழிற்பள்ளி, ஈக்காடு.	7	12	5
தென்னாற்காடு மாவட்டம்—			
11 செயின்ட் அந்தோணி தொழிற்பள்ளி, கடலூர்.	..	..	14
12 புனித இதயம் தொழிற்பள்ளி, கடலூர்.	19	19	17
தஞ்சை மாவட்டம்—			
13 செயின்ட் சிசிலி தொழிற்பள்ளி, கும்பகோணம்.	14	14	11
திருச்சி மாவட்டம்—			
14 புனித சிலுவை தொழிற்பள்ளி, பொன்மலை.	20	20	20
15 செயின்ட் ஜான்டி பிரிட்டோ தொழிற் பள்ளி, திருச்சி.	6	10	6
மதுரை மாவட்டம்—			
16 புனித குடும்பத் தொழிற்பள்ளி, மதுரை.	16	13	11
திருநெல்வேலி மாவட்டம்—			
17 ஆர். சி. மகளிர் பின்னல் தொழிற் பள்ளி, வடக்கன்குளம்.	3	..	2
18 கலைத் தொழிற்பள்ளி, நாசரத் ..	6	8	3
19 ஏ. ஜி. தொழிற்பள்ளி, கனகபிள்ளை வலசை.	4	7	13
சேலம் மாவட்டம்—			
20 கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் தையல் தொழிற்பள்ளி, சேலம்.	8	17	17
மொத்தம் ..	221	247	273

INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SECOND SESSION OF THE LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

20th 21st, 22nd, 23rd, 25th and 27th March 1963.

Volume XI (Nos. 1 to 6).

A

PAGES

ACCIDENT—
Fire accident, Sadayanpalayam, Salem district (C.A.) 209–210

ACT(S)—
General sales-tax — review of working 321
Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, implementation 321–322

AGRICULTURE—
Agricultural commodities, prices 306–307

ALAGAMUTHU, Sri T. P.—
Capital Outlay on public works—
Public Works — Establishment and Tools and Plant, ... 37–39
Public Works — Works—
Capital Outlay on Road Transport Schemes, Road Transport Schemes, ... 558–559
Fisheries 323

AMBIKAPATHI, Sri C. M.—
Elementary schools in Panchayat Unions, assessment of working — 525
Family Planning Scheme, deferring 421
Forests, Thiruthuraipundi taluk 1–3
Hospitals, delay in supply of medicines 529
Prohibition, implementation 96–97
Village courts, establishment 509–510

ANANDANAYAKI, Srimathi T. N.—
Basin Bridge, renovation 510

Budget, 1963-64, voting—
Capital Outlay on Road Transport Schemes, Road Transport Schemes .. ..

A—*cont.*

APPAVOO THEVAR, SRI A.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 221–223
Co-operation 339–340

ARANGANNAL, SRI RAMA.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 539, 590
Fisheries 396–397
Fishermen, Thanjavur district 297–299
Food poisoning, admission of pupils in the Government Hospital, Kumbakonam (C.A.) 17
General Sales Tax Act, review of working 321
Homeopathy, concessions 419
M.B.B.S. Degree course, 'internee' and 'House Surgeoncy' training 512–514
Oil refinery, Cauvery Basin 309–311
Police lines, Madras, construction 423

ARDHANAREESWARA GOUNDER, SRI K. S.—
Budget, 1963-64, voting—
Capital Outlay on public works — Public works — Establishment and Tools and Plant .. ..
Public Works — Works 45–47
Fisheries 390–392

ARUMUGAM, SRI A.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 255–257
District Administration and Miscellaneous Land Revenue Department 464–465
Bus-stand, Tiruvannamalai 3
Government hostel for college boys, Madras, conveyance to boarders. 511
Tribal blocks, establishment 97–98

ARUMUGAM, SRI R. S.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Industrial Development, Industries 122–123
Capital outlay on public works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 64–65
Rains, damages in Tirunelveli taluk 512

ARUMUGAM, SRI S.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 254–255
Tannery, Chelanaickenpatti, hardship (C.A.) 442–443

A—*cont.*

ARUNACHALAM, SRI V.—
Budget, 1963-64, voting—
District Administration and Miscellaneous, Land Revenue Department 465–466

ASSEMBLY—
Madras Legislative Assembly, increase of seats 426–427

B

BALAKRISHNAN, SRI A. G.—
Budget, 1963-64, voting—
District Administration and Miscellaneous, Land Revenue Department 462–463
Limestone deposits, Tindivanam 424

BAMBOO—
Kolli hills 14

BANANA—
See Plantations.

BASIN BRIDGE—
Renovation 510

BHAKTAVATSALAM, SRI M.—
B.O.H., change in order, ... 18
Budget, 1963-64, voting—
Administration of Justice and Jails 18, 29–36
Committee of Privileges, election 530–531
D.S.G. (Final), 1962-63—
Presentation 443–445
G.D. 537–539
Food poisoning, admission of pupils in Government Hospital, Kumbakonam (C.A. St.) 17
Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 Int. 531
Police firing in Urappanur, Tirumangalam (A.M. taluk) 15–16, 107, 108
Teacher-pupil ratio, hardships due to fixation (C.A. St.) 108–109

BILLS—
General Sales Tax Bill, 1963—
Message from L.C., agreeing without recommendation 531
Industrial Disputes (Madras Amendment) Bill, 1963, Int. 531

BOARD(S)—
Water and drainage, Board, establishment 185

BRIDGE(S)—
Basin Bridge, renovation, ... 510
Hale Dharmapuri Bridge, Salem district 196–197

C

CALLING ATTENTION—
Fire accident, Sadayampalayam, Salem district (C.A.) 209–210
Food poisoning, admission of pupils in Government Hospital, Kumbakonam 17
Tannery, Chelanaickenpatti, hardship 442–443
Teacher-pupil ratio, hardships due to fixation 108–109

CASHEWNUTS—
Loans to exporters 516
See Industries.

CEMENT—
Adulteration 104
Supply 103–104

CHAIR—
Rulings and Observations—
Adjournment motion *re*—
Police firing in Urappanur, Tirumangalam taluk—
RULED out of order on the ground that sufficient time had been allotted for a Short Notice Question on the same subject and the Members would have an opportunity to discuss the subject when the Appropriation Bill was considered 107
Debate—
Relevancy—
Members should confine their remarks to the subject under discussion 460
Members should not digress from the subject under discussion 221
Supplementary grants—
Discussion on a supplementary grant should be confined to the details of which it was composed 532
Time-limit—
Members should restrict their speeches to the time allotted for them 393
Decorum—
Clapping of hands — Deprecated 201
Objectionable expressions—
The expression 'uncivilized people' with reference to villagers—Deprecated 305
Procedure—
Right of audience—
On finding that a Member was not present in the House when called to speak, the Chair mentioned the initials of another Member. Just then, the Member whom the Chair originally called, entered the House. Immediately, a Minister rising on a point of procedure observed that according to the procedure followed by the British House of Commons, when a Member was in his seat and rose to speak when called

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Procedure—*cont.*
Right of audience—*cont.*
by the Chair, he had the right of audience and hence, the Member whose initials the Chair stated must be allowed to speak first. Thereupon, the Chair observed that inasmuch as he had just stated the initials of the Member and not his full name, the Member who was originally called by him would have precedence 329–330
Questions and Answers—
Supplementary questions—
Members should put only one question at a time 302
Should be general and should not refer to individuals 513
Should have a bearing on the subject-matter raised in the main question 90
Should not be based on the talks that the Members might have had with officers or on the opinion of the officers 186
Should not be a speech 513, 519
When a Minister was answering a supplementary question, Members should hear the answer fully instead of interrupting him in the middle of his answer 92

CHEEMAICHAMY, SRI K.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 243–245
District Administration and Miscellaneous, Land Revenue Department 458–459
Employment Exchange, Ramanathapuram district 3–4
Industries, East Ramanathapuram 424–425
Regional workshops, working 514–515
Swami Vivekananda's statute, erection 187
Vaigai Canal Scheme, re-investigation 208–209

CHINNASAMY, SRI T.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 229–231

CHINNAYAN, SRI S.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 246–247

COMMITTEE(S)—
Committee for reviewing life sentences, co-option of Members of Legislature 435
Committee of Privileges, election 530–531

CONSCRIPTION—
Introduction for college students 441

COURTS—
Additional Sub-Court, Erode 102–103

C—*cont.*

CYCLES—
See Industries.

D

DAIRY PLANT—
Madurai 189–191

DEFENCE FUND—
Refusal to receive contributions 436

DHAKSHINAMOORTHY GOUNDER, SRI A. S.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Industrial Development, Industries 127–129
Capital outlay on Irrigation, Irrigation 260–262
District Administration and Miscellaneous, Land Revenue Department 456–458

DHANDAYUTHAPANI, SRI M.—
Budget for 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 214–215
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 39–41

DHARMALINGAM, SRI A. P.—
Budget, 1963-64, voting—
Administration of Justice and Jails 18–23
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 37
District Administration and Miscellaneous Land Revenue Department 482–485

DISEASES—
Small-pox, Ramanathapuram district 196

DISTRICT DEVELOPMENT COUNCIL—
Tiruchirappalli North 104–105

DRAINAGE—
Water and Drainage Board, establishment 185

DRAMA(S)—
Organized by Information and Publicity Department, reduction in expenditure 9–13

DURAIYARASAN, SRI A.—
Budget, 1963-64, voting—
District Administration and Miscellaneous, Land Revenue Department 467–468
Fisheries 389–390
New bus routes, Arantangi taluk 5
Oil, Cauvery basin 425

E

EDUCATION—
Concessions to poor students 13–14
Secondary and Collegiate education, re-organization 441–442
Technical education, short-term courses 429–430

ELECTIONS—
Bye-elections, postponement due to National Emergency 525–527

ELECTRICITY—
Electric motors, installation 422–423

ELLAMMA NAIDU, SRI V.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 258–259
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 50–51
Co-operation 366–368
District Administration and Miscellaneous, Land Revenue Department 453–455

ELUMALAI, SRI T. P.—
Budget, 1963-64, voting—
Fisheries 397–400

EMPLOYMENT EXCHANGE(S)—
District-war details 4
Ramanathapuram district 3–4

F

FAMILY PLANNING—
Clinics, Chingleput district 420–421
Deferring 421
Diversion of funds 419–421
State Board, nomination of Members 520–523

FINANCIAL BUSINESS—
Budget, 1963-64, voting—
Administration of Justice and Jails 18–37
Capital outlay on Forests, Forest department 405–413
Capital outlay on Industrial Development, Industries 169–167
Capital outlay on Irrigation, Irrigation 210–293
Capital outlay on Public Works, Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 37–82
Capital outlay on Road Transport Schemes — Road Transport Schemes 539–591
Co-operation 322–389
District Administration and Miscellaneous, Land Revenue Department 445–506
Fisheries 389–405

D.S.G. (Final), 1962-63—
Presentation 443–445
G.D. 531–539

FISHERMEN—
Thanjavur district, housing 297-299

FLOODS—
Damages, Thanjavur and Tiruchirappalli, kist remission 515

FOODGRAINS—
Agricultural commodities, prices 306-307
Price control 311-318

FOOD POISONING—
Admission of pupils in Government Hospital, Kumbakonam (C.A.). 17

FOREST(S)—
Bamboo Forests, Kolli Hills 14
Reserve Forest, Pudukkottai 300-305
Thiruthuraipundi taluk 1-3
Vanamahotsava festival, inauguration 199-207

G

GANESAN, Sri Saw.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Forests, Forests 407-409
Capital outlay on Industrial Development, Industries 149-152
Capital outlay on Irrigation, Irrigation 264-268
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 37, 67-71
Co-operation 368-372
Forest Department 323
Police firing in Urappanur (A.M.) 107, 108

GOLD CONTROL ORDER—
Silk weavers, non-availability of silvered lace plated with gold (C.A.). 530

GOLDSMITHS—
Co-operative institutions 318

GOPALA GOUNDER, Sri K.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 228-229
Policemen, Sathiyamangalam, Gingee taluk, houses 423-424
Police station, Vallam 98

GOVERNMENT ESTATE—
Quarters, allotment 523-525

GOVINDAN, Pulavar K.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Industrial Development, Industriess 120-122
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 43-44
Children's Museum, construction 438-

GOVINDAN, Pulavar K.—*cont.*
Budget, 1963-64, voting—*cont.*
D.S.G. (Final), 1962-63—
G.D. 531-532
Panchayat unions, reduction in number 98-99
Tamil literature, Popularisation in foreign countries 425-426

H

HAJA SHERIFF, Sri K. S. G.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Industrial Development, Industries 133-136
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 55-57

HANDLOOM—
Yarn 427-429

HARBOUR—
Cuddalore harbour, improvement 305-306

HEALTH INSPECTORS—
Revision of pay 529

HOMOEOPATHY—
Concessions 419
Opening of college for—

HOSPITALS—
Erskine Hospital, Madurai, steam-laundry 422
Government Hospital, Panruti, bed-strength 527-528
Medicines, delay in supply 529

HOSTEL(S)—
Government (M. C. Raja) Hostel for College boys, Madras, conveyance to boarders 511

I

INDUSTRIAL SCHOOLS—
Schools for tailoring, working 519-520

INDUSTRIES—
Cashew Factory, Virudachalam 102
Cycle Assembly Unit, Thanjavur 99-101
East Ramanathapuram 424-425

INFORMATION AND PUBLICITY DEPARTMENT—
Dramas and Villupattu, reduction in expenditure 9-13

IRRIGATION—
Irrigation schemes, investigation 528-529
Vaigai canal scheme, re-investigation 208-209

J

JAGADAMBAL VELAYUDHAM, Srimathi—
Budget, 1963-64, voting—
Capital outlay on Irrigation, Irrigation 250-251

JAYARAJ, SRI P.—

Budget, 1963-64, voting—

District Administration and Miscellaneous, Land Revenue Department 449–450

Express Bus Service, Madras-Nagapattinam 5–7

JEEVARATHNAM, SRI R.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development and Industries 118–120

JOTHI VENCATACHELLUM, SRIMATHI—

Tannery, Chelannickenpatti — Hardship (C.A. St.) 442–443

K

KAKKAN, SRI P.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Forests — Forests 407

KALIAPPA GOUNDER, SRI A. K.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Irrigation — Irrigation 249–250

District Administration and Miscellaneous — Land Revenue Department 452–453

KALYANASUNDARAM, SRI M.—

Bye-elections, postponement due to National Emergency 525–527

District Development Council, Tiruchirappalli North, ... 104–105

Flood damages in Thanjavur and Tiruchirappalli, kist remission .. 515

Foodgrains and essential commodities, price control 311–318

Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, implementation 321–322

Madras Legislative Assembly, increase of seats 426–427

Municipalities, unsatisfactory accounting system 197–199

Price control 311–318

Stadiums, municipal towns 209

Sugarcane, price fixation 299

Water and Drainage Boards, establishment 185

Water-supply, assessment by Special Investigation Division 14

Water-supply, Tiruchirappalli Municipality 187–188

KAMALANATHAN, SRI M.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Forests 323

KANCHI MANIMOZHIYAR, SRI.—

Budget, 1963-64, Voting—

District Administration and Miscellaneous, Land Revenue Department 470–471

KARCHA GOWDER, SRI T.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 41–43

Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 553–554

Co-operation 360–362

District Administration and Miscellaneous, Land Revenue Department 466–467

KARIAMANICKAM AMBALAM, SRI KR. RM.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Public Works — Public Works — Establishment and ToolsandPlant — Public Works — Works 48–50

District Administration and Miscellaneous, Land Revenue Department 485–487

Fisheries 393–395

KARIVENGADAM, SRI M. V.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development and Industries 112–115

Co-operation 356–358

Salem-Bangalore railway line, handing over of land 7

KARUNANITHI, SRI M.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development and Industries 144–149

Co-operation 372–378

Fisheries 403

KOLANDAIAMMAL, SRIMATHI C.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development and Industries 143–144

Capital outlay on Irrigation — Irrigation 251–254

Co-operation 364–366

District Administration and Miscellaneous, Land Revenue Department 478–480

KOSALRAM, SRI K. T.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Irrigation — Irrigation 236–238, 291

District Administration and Miscellaneous, Land Revenue Department 475–477

KOTHANDARAMA BAGAVATHAR, SRI C.—

Bus-stand, Tiruvannamalai 3

Joint Regional Transport Officer — Tiruchirappalli and Madurai. 8

KRISHNAMURTHY, SRI M. R.—

Budget, 1963-64, Voting—

Administartion of Justice and Jails 18

PAGES

K—*cont.*

KRISHNAMURTHY, SRI M. R.—*cont.*

Budget, 1963-64, Voting—*cont.*

Capital outlay on Irrigation — Irrigation 262–263

Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 57–58

KRISHNAMOORTHY, SRI V.—

Arrack, illicit distillation 299–300

Budget, 1963-64, Voting—

Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 540, 544–547

Cashewnut exporters — Loans 516

Cycle Assembly Unit, Thanjavur 99–101

Government Hospital, Panruti, bed-strength, ... 527–528

Handloom yarn 427–428

Police firing, Mela Urappanur 85–96

KULANDAISWAMY GOUNDER, SRI M.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Irrigation — Irrigation 264

KUNJAN NADAR, SRI A.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Irrigation — Irrigation 220–221

L

LAKSHMIKANTHAM, SRIMATHI P. K. R.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development and Industries 123–125

Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 560–562

Co-operation 344–347

LAND CEILING—

Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, implementation 321–322

LAND REVENUE—

Kist remission, Thanjavur and Tiruchirappalli 515

LIFESENTENCE(S)—

Co-option of Members of Legislature in Review Committee 435

M

MADHAVAN, SRI S.—

Agricultural commodities, prices 306–307

Budget, 1963-64, Voting—

Administration of Justice and Jails 27–29

District Administration and Miscellaneous, Land Revenue Department 445–449

Industries 112

PAGES

M—*cont.*

MADHAVAN, SRI S.—*cont.*

Budget, 1963-64, Voting—*cont.* 441

College students — conscription 188–189

Community irrigation wells, Ramanathapuram district 419–421

Family planning, diversion of funds 318

Goldsmiths, co-operative institutions 528–529

Irrigation schemes, investigation 516

Natural Gas, investigation near Avadi 530

Non-availability of silver lace plated with gold to silk weavers (C.A.) 85–96

Police firing, Mela Urappanur 199

Police vaccine, manufacture 8

Primary Health Centre, Tirupathur, Ramanathapuram district .. 439–440

Prisoners, classification 429–430

Technical education, short-term courses 185–187

Tuberculosis Sanatorium, Amaravathi Pudur 101–102

Vyasarpadi police, alleged beating of a person .. .. ..

MAHALINGAM, SRI N.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development and Industries 115–118

MANI, SRI K. S.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Irrigation — Irrigation 210–214

Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 60–62

Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 567–569

Fisheries 395–396

MANI, SRI M. S.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development 112

Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 573–580

MANI, SRI V. S. S.—

College for Homoeopathy, opening 419

MARAPPA GOUNDER, SRI K.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Irrigation — Irrigation 227–228

Co-operation 349–350

M—*cont.*

MATHIALAGAN, SRI K. S.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Industrial Development and Industries 138-141
District Administration and Miscellaneous, Land Revenue Department 489-492, 493, 505
Fisheries 404
Cooum river, deepening 307-308
Cuddalore Harbour, improvement 305-306
Dairy Plant, Madurai 189-191
Pre-University Course, seats 440-441
Secondary and collegiate education, re-organization 441-442
Vanamahotsava festival, inauguration 199-207
Zonal Police Force, Southern Region 430-433

MEDICAL—
M.B.B.S. Degree, 'Internee' and 'House-surgency' training .. 512-514

MILK AND MILK PRODUCTS—
Dairy Plant, Madurai 189-191

MINES AND MINERALS—
Limestone deposits, Tindivanam 424

MOOKIAH THEVAR, SRI K.—
Police firing, Mela Urappanur 86-96
Police firing in Urappanur, Tirumangalam taluk (A.M.) 15, 107
Sethusamudram Project, investigation 192-194

MOTION(S)—
Ad. Motions—
Police firing in Urappanur, Tirumangalam taluk 15-17, 106-108
B.O.H.—Change in order 18

MUNICIPALITIES—
Municipal Chairman, Salem 104
Unsatisfactory accounting system 197-199

MUNIRATNAM, SRI K. R.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Public Works—Public Works—Establishment and Tools and Plant—Public Works—Works 65-67

MUNU ADHI, SRI.—
Avenue treess, leasing 207-208
Budget, 1963-64, Votng—
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 563-565
Co-operation 362-364
Family Planning Clinics, Chingleput district 420-421
Tuberculosis Sanatorium, Rehabilitation Centre, Tambaram 184, 194-196

M—*cont.*

MURUGAIYAN, SRI P.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Public Works—Public Works—Establishment and Tools and Plant—Public Works—Works 51-53
District Administration and Miscellaneous, Land Revenue Department 455-456
Cauvery water, supply to Pudukkottai 516-519
Employment Exchanges, district-war details 4
Former District Board Secondary Schools, administration 433-435
Reserve Forest, Pudukkottai 300-305

MURUGAIYAN, SRI S.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation—Irrigation 210
D.S.G. (Final), 1962-63, G.D. 532-533

MUSEUM—
Children's—construction 438-439

MUTHUKARUPPANNASAMY GOUNDER, SRI M. P.—
Budget, 1963-64, Voting—
Co-operation 354-356
District Administration and Miscellaneous, Land Revenue Department 461-462

NALLASENAPATHI SARKARAI MANRADIAR, SRI N.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Forests, Forest Department 323
Co-operation 323, 409-412, 378-389
Fisheries 323, 400-404

NALLASIVAM, SRI K. R.—
Budget, 1963-64, Voting—
Administration of Justice and Jails 18, 23-25
Capital outlay on Irrigation—Irrigation 239-241, 292
Co-operation 347-349
District Administration and Miscellaneous, Land Revenue Department 472-474
Rain havoc, relief measures 511

NARAYANAN, SRI R.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation—Irrigation 233-234
District Administration and Miscellaneous, Land Revenue Department 480-481

PAGES

N—*cont.*

NARAYANAN, Sri R.—*cont.*

Budget, 1963-64, Voting—*cont.*

Life sentences, Co-option of Members of Legislature in Review Committee 435

Tanks, Udayarpalayam taluk 306

NARAYANASWAMI PILLAI, Sri K.—

Budget, 1963-64, Voting—

Administration of Justice and Jails 25–27

Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 547–548

Cashew Factory, Virudachalam 102

NATURAL GAS—

Occurrence near Avadi, investigation 516

NEDUNCHEZHIYAN, Sri V. R.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Industrial Development and Industries 152–157

Capital outlay on Irrigation — Irrigation 268–274

D.S.G. (Final), 1962-63—

D.S.G. (Final), 1962-63, G.D. 533–537

Police firing in Urappanur (A.M.) 107

O—*cont.*

OIL—

Cauvery Basin 425

Refinery, Cauvery Basin 309–311

OVERBRIDGE—

Madurai, construction of 320–321

P—*cont.*

PALANISWAMY GOUNDER, Sri K. N.—

Budget, 1963-64, Voting—

Co-operation 332–335

PANCHAYAT(S)—

Lingampatti — bifurcation 7

Unions, reduction in number 98–99

PAPERS LAID ON THE TABLE—

Speech 294

Capital outlay on Irrigation and Irrigation Demands, Minister's Co-operative development scheme, review of progress 294

Co-operative development scheme, review of progress 294

Demands for grants for further expenditure and detailed supplementary estimates, 1962-63 591

Demands for further grants, 1962-63, notice 591

District Administration and Miscellaneous and Land Revenue Demands, Minister's speech and policy note 506

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Education pattern, note 591

Entertainments Tax Act, 1939 — notification 83

Famine relief, policy note 591

Fisheries development, note on 294

Forest demand, Minister's speech 413

General Sales Tax Act, 1959, notifications 293, 413, 506

Handloom Industry Department, review of progress 294

Hindu Religious and Charitable Endowments Act, 1959, notification. 82

Home Department, review of activities of departments under .. 506

'Housing in Madras State' 83

Industrial development, review 83

Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958 — notifications 506

Industrial Investment Corporation, annual report and review on working 591

Land revenue, policy note 413

Minor ports, Minister's supplemental speech on working of 168

Motor Vehicles Act, 1939, notification 294

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Rules, 1961, notification 167–168

Panchayats Act, 1958, notification 83

Payment of Salaries and Removal of Disqualifications Act, 1951, notification 83

Plantation Labour Act, 1951, notification 294

Private Forests (Assumption of Management) Rules, 1962, notificaiton 167

Public Works, etc., demands, Minister's speech 83

Public Works — Grants-in-aid Demand, Minister's speech 83

Registration Department Demand, Minister's speech 83

Small-scale and Cottage Industries, Loans and Subsidy Rules, 1956, notification 591

Supplementary estimates, 1962-63, Minister's speech 591

(Transferred Territory) Incorporated and Unincorparated Devaswoms Act, 1959, notification 83

PARVATHI ARJUNAN, Srimathi—

Additional Sub-Court, Erode 102–103

PERIANNAN, Sri V. R.—

Budget, 1963-64, Voting—

Co-operation 340–342

Information and Publicity Department, Drama and Villupattu, reduction in expenditure 9–13

PAGES

P—*cont.*

PLANTATIONS—
Banana Plantations, Dindigul, 'Wilt' disease 105-106

POLICE—
Police firing, Mela Urappanur 85-96
Police lines, Madras, construction 423
Policemen, Sathyamangalam, Gingee taluk, houses 423-424
Police station, Vallam 98
Vysarpadi Police, alleged beating of a person 101-102
Zonal Police Office, Southern Region 430-431

POLIO VACCINE—
Manufacture 199

PONNAMMAL, SRIMATHI A. S.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 234-236
Co-operation 358-360
District Administration and Miscellaneous, Land Revenue Department 468-470

PONNAPPA NADAR, SRI R.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 555-558

PRICE(S)—
Control 311-318

PRIMARY HEALTH CENTRE—
Tirupathur, Ramanathapuram District 8

PRISONERS—
Classification 439-440

PROHIBITION—
Arrack, illicit distillation 299-300
Implementation 96-97

PROJECT(S)—
Sethusamudram Project, investigation, ... 192-194

PUDUKKOTTAI—
Supply of Cauvery water 516-519

R

RAILWAYS—
Salem-Bangalore railway line, handing over of land 7

RAINS—
Damages in Tirunelveli taluk 512
Havoc, relief measures, ... 511

PAGES

R—*cont.*

RAJAGOPALASWAMY, SRI R.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 231-232
Co-operation 352-354

RAJANGAM, SRI M.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 225-227

RAJARAM, SRI G.—
Budget, 1963-64, voting—
Capital outlay on Industrial Development and Industries 136-138

RAJATHI KUNJITHAPATHAM, SRIMATHI—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 58-60

RAMACHANDRA RAYAR, SRI A.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 215-217
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 47-48

RAMAIAH, SRI V.—
Budget, 1963-64, Voting—
Capital outay on Irrigation — Irrigation 210, 239, 274-291, 292-293
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 37, 71-81
District Administration and Miscellaneous, Land Revenue Department 493-505
Fire accident in Sadayanpalayam, Salem district (C.A. St.) 209-210

RAMALINGAM, SRI N. S.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 62-63
Co-operation 343-344

RAMASAMY, SRI S.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 257-258
District Administration and Miscellaneous, Land Revenue Department 477-478
Industrial schools for Tailoring, working 519-520

R—*cont.*

RAMASAMY NAIDU, Sri S.—
Budget, 1963-64, Voting—
District Administration and Miscellaneous, Land Revenue Department 481-482

RAMASWAMI, Sri S. J.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 554-555

RANGASWAMI, Sri R.—
Budget, 1963-64, Voting—
District Administration and Miscellaneous, Land Revenue Department 474-475

REGIONAL TRANSPORT OFFICER (JOINT)—
Tiruchirappalli and Madurai 8

RIVER(S)—
Cooum river, deepening 307-308

S

SADASIVAM, Sri S.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 241-243

SAMBANDAM, Sri K. R.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Public Works — Public Works —Establishment and Tools and Plant — Public Works —Works 53-55

SAMPANGHI, Sri R.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Industrial Development and Industries 132-133

SANATORIUM—
Tuberculosis Sanatorium, Amaravathi Pudur 185-187
Tuberculosis Sanatorium, Rehabilitation Centre, Tambaram .. 194-196

SANKARAN, Sri V.—
Banana Plantation, Dindigul, 'Wilt' disease, ... 105-106
Budget, 1963-64, Voting—
Capital outlay on Industrial Development and Industries 129-132
Cement, supply 103-104
Educational concessions, poor students 13-14
Erskine Hospital, Madurai, steam-laundry 422
Handloom, yarn 428-429
Overbridge, Madurai 320-321
Small-pox, Ramanathapuram district 196
Vaigai Canal Scheme, re-investigation 208-209

S—*cont.*

SASIVARNA THEVAR, Sri T. L.—
Police firing in Urappanur, Tirumangalam taluk (A.M.), ... 16-17, 108

SCHOOLS—
Elementary schools in panchayat unions, assessment of working, .. 525
Elementary schools, teacher-pupil ratio, hardship due to fixation (C.A.) 108-109
Former district board secondary schools, administration 433-435

SENAPATHI GOUNDER, Sri A.—
Budget, 1963-64, Voting—
District Administration and Miscellaneous, Land Revenue Department 471-472

SENGOTTUVELU, Sri N. P.
Bamboo forests, Kolli Hills 14

SETHUSAMUDRAM PROJECT—
See Projects.

SMALL-POX—
Ramanathapuram district 196

SOUNTHARAPANDIAN, Sri N.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 217-220

SRINIVASAN, Sri C.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes, ... 565-566
Vaigai canal scheme, re-investigation 208-209

STADIUM—
Municipal towns 209

STATUE(S)—
Swami Vivekananda's statue, erection 187

STUDENTS—
College —, conscription 441

SUBBIAH, Sri A. K.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 260
Capital outlay on Public Works — Public Works — Establishment and Tools and Plant — Public Works — Works 63-64
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes, ... 562-563
Cement, adulteration, ... 104

S—*cont.*

SUBBIAH, SRI A. K.—*cont.*
Defence Fund, contribution, refusal to receive 436
Family Planning Board, nomination of members, ... 520–523
Lingampatti Panchayat, bifurcation 7

SUBRAMANIA GOUNDER, SRI K. S.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 223–225
Co operation 337–339
Fire accident in Sadayampalayam, Salem district (C.A.) 209–210

SUGARCANE—
Price fixation 299

SWAMIDHAS, SRI A.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Industrial Development — Industries, ... 125–127
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes, ... 551–553
Fisheries 392–393

T

TAILORING—
Industrial schools, working 519–520

TAMIL—
Popularisation in foreign countries 425–426

TANKS—
Udayarpalayam taluk 306

TANNERY—
Chelanaickenpatti, hardship 442–443

TEACHER-PUPIL RATIO—
See ' Schools '.

THANGAVELU, SRI A.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes, ... 548–551

THIAGARAJAN, SRI A.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Forests — Forest department 405–407
Capital outlay on Irrigation — Irrigation 247–249
Co-operation 350–352

THIAGARAJA PILLAI, SRI M. D.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Irrigation — Irrigation 292
Co operation 330–332

T—*cont.*

TRANSPORT—
Bus-stand, Tiruvannamalai, ... 3
Express bus service, Madras-Nagapattinam 5–7
New bus routes, Arantangi taluk 5

TREES— ..
Avenue trees, leasing 207–208

TRIBAL BLOCKS—
Establishment 97–98

U

UNIVERSITY—
Pre-University Course, seats 440–441

V

VADIVELU, SRI M. P.—
Budget, 1963-64, Voting—
Co-operation 323, 325–329

VAIGAI CANAL SCHEME—
Re-investigation 208–209

VANAMAHOTSAVA—
Manganallur 199–207

VEERAPPA CHETTIAR, SRI R. S.—
Bridge, Hale Dharmapuri, Salem district 196–197
Budget, 1963-64, Voting—
District Administration and Miscellaneous, Land Revenue Department 451–452
Co-operation 335–337
Drinking water-supply — Dharmapuri 14–15
Electric motors, installation 422–423
Family-Planning scheme, deferring 421
Government Estate Quarters, allotment 523–525
Health Inspectors, revision of pay 529
Municipal Chairman, Salem 104
Teacher-pupil ratio, hardships due to fixation (C.A.) 108
Village officers, grievances 437–438

VENKATARAMAN, SRI R.—
Budget, 1963-64, Voting—
Capital outlay on Industrial Development and Industries 109–112, 157–167
Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes 539, 540–544, 580–590

PAGES

V—*cont.*

VENKATARAMAN, SRI R.—*cont.*

Silk weavers, non-availability of silver lace plated with gold (C.A. St.) 530

VILLAGE COURTS—

Establishment 509–510

VILLAGE OFFICERS—

Grievances 437–438

'VILLUPATTU'—

Organized by Information and Publicity Department, reduction in expenditure 9–13

VISWANATHAN, SRI C. G.—

Budget, 1963-64, Voting—

Capital outlay on Road Transport Schemes, Road Transport Schemes, ... 566–567

W

WALK-OUT BY MEMBERS 108

WATER-SUPPLY—

Assessment by Special Investigation Division 14

Cauvery water, supply to Pudukkottai 516–519

Drinking water-supply, Dharmapuri 14–15

Tiruchirappalli Municipality 187–188

Water and Drainage Board, establishment 185

WATERWAYS—

Cooum river, deepening 307–308

WEAVERS—

Silk weavers, non-availability of silver lace plated with gold (C.A.). 530

WELLS—

Community irrigation wells, Ramanathapuram district 188–189

WORKSHOPS—

Regional—, working 514–515

D
V211,31 N63
N63.1
132884